# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-NINTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXXIX (Nos. 1 to 4)

25th and 27th to 29th April 1981.

©

GOVERNMENT OF TAMIL NADU
1982

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

PRICE *Rupees* 1

TAMIL NADU LEGISLATIVE COUNCIL
DEBATES.

---

TY-NINTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL
UNDER THE CONSTITUTION OF INDIA.

---

*25th and 27th to 29th April* 1981

---

VOLUME CLXXIX (Nos. 1 to 4).

TABLE OF CONTENTS.

*Saturday, the 25th April* 1981.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... | ix—xi |
| 1. Questions and Answers ... ... | 1—20 |
| 2. Felicitation to the Hon. Education Minister on his Birth-day ... ... | 20 |
| 3. Adjournment Motion *re*— | |
| (1) Clash among the general public in Vriddhachalam and non-plying of buses ... ... | 20—26 |
| (2) Demolition of the building of Kalaimani Middle School at T.B. Road, Madurai ... ... | 27—30 |
| 4. Government Motions— | |
| (1) Change in the order of business of the House | 30 |
| (2) Transaction of Government Business on a Private Members' Day ... ... | 39—40 |

| | PAGES |
|---|---|
| 5. Call Attention Notices— | |
| (1) Gutting of 100 huts in Alagiyanagar Harijan Colony, in Kanyakumari district and consequent loss of property ... ... | 31—32 |
| (2) Denial of rights to trained Graduate B.T. Teachers for appointment as Headmasters of the Middle Schools ... ... | 32—34 |
| (3) Demand Week observed by the Tamil Nadu Public Library Employees Union ... | 34—35 |
| (4) Strike and dharna by Handloom weavers of Sankarankoil in Tirunelveli district ... | 35—37 |
| 6. Announcement *re*— | |
| Rules relating to visit and accommodation in Legislators' Hostel ... ... ... | 37—38 |
| 7. Government Bill— | |
| The Tamil Nadu Town and Country Planning (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 36 of 1981) ... ... ... | 41—61 |
| 8. Papers laid on the table of the House ... | 61—62 |


*Monday, the 27th April* 1981.


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... | 73—84 |
| 2. Adjournment motion *re* collection of Co-operative loans ... ... ... ... | 85—95 |
| 3. Call Attention Notices— | |
| (1) Strike by the employees of the Tamil Nadu Dairy Development Corporation ... | 96—97 |
| (2) Non-payment of Christmas Advance to teachers and other employees of Aided Higher Secondary and High Schools in Virudhunagar Education district ... ... ... | 97—98 |
| 4. Government Motion— | |
| Policy Note on Education ... | 99—166 |
| 5. Papers laid on the table of the House ... ... | 166 |




*Tuesday, the 25th April* 1981.


| | PAGES |
|---|---|
| . Questions and Answers (unstarred) ... ... | 237—240 |
| . Government motion— | |
| Dispensing with Question Hour ... ... | 240 |
| . Adjournment Motion *re*— | |
| Clash between two groups of merchants at Kalugumalai ... ... ... ... | 241—242 |
| . Call Attention Notices— | |
| (1) Sudden dismissal of teachers from Bains Memorial Baptist Church Marticulation School | 243 |
| (2) Dharna before the Directorate of School Education by the Tamil Nadu Private School Teachers Association against victimisation of teachers by Minority schools and seeking redressal by Government according to law ... | 224—245 |
| 5. Discussion on the Policy Note on Education ... | 245—348 |
| 5. Papers laid on the table of the House ... ... | 349 |


*Wednesday, the 29th April* 1981.


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 355—379 |
| 2. Adjournment motion *re* Picketing by Balasevikas on 27th April 1981 ... ... ... ... | 379—382 |
| 3. Call Attention Notices— | |
| (1) Non-recovery of dues and loss incurred by the Chidambaram Co-operative Milk Supply Union ... ... ... ... | 383—385 |
| (2) Loss suffered by Aided School Teachers consequent on the delay in refixation of their pay ... ... ... ... | 385—386 |
| 4. Government motions— | |
| (i) Policy Note on Food situation in Tamil Nadu | 387—439 |
| (2) Policy Note on Labour in Tamil Nadu ... | 439—464 |
| 5. Papers laid on the table of the House ... ... | 464—465 |
| Index ... ... ... ... | 605—630 |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

Thiru SADIQ ALI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption and Planning.

2. THE HONOURABLE DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THE HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. THE HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. THE HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minster for Revenue, in charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THE HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Reigious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grant of Liquor Permits.

7. THE HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education and Official Language.

8. THE HONOURABLE THIRU K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. THE HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THE HONOURABLE THIRU P. KULANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HONOURABLE THIRU S. RAGHAVANDAM, Minster for Labour, in charge of Labour, Housing Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HONOURABLE DR. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. THE HONOURABLE THIRU K. RAJA MOHAMMED, Minister for Irrigation, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor-Irrigation and Wakf.

14. THE HONOURABLE THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. THE HONOURABLE THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. THE HONOURABLE THIRU S. N. RAJENDRAN, Minister for Handlooms and Khadi, in charge of Handlooms, Khadi, Prohibition excluding grant of liquor permits and passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. THE HONOURABLE THIRU M. VIJAYASARATHI, Minster for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THE HONOURABLE THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர்

### திரு. சாதிக் அலி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு மற்றும் திட்டம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—

நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

மின்சாரம், மற்றும் இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்ட வகிப்டார்—

கிராம, குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்கத் திட்டம், மற்றும் ஆவண பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை, மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலைய துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப் வகிப்பார்—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவிய திரைப்படச் சட்ட சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந் அறநிலையத் துறை, அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டுநிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மற்றும் கூட்டுறவு,

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் —

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார்—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.



14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

பெருந்தொழில்கள், சுரங்கமும்-கனிவளமும் மற்றும் தெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் (கைத்தறி மற்றும் கதர் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

கைத்தறி, கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித்துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்த மாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார் —

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால் நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள் வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்ட வர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

---

மாண்புமிகு மேலவைத் தலைவர்;

டாக்டர் ம.பொ. சிவஞானம்.

மேலவைத் துணைத் தலைவர்.

புலவர் புலமைப்பித்தன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. இராமமூர்த்தி.
2. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
3. திரு. க. அருணாசலம்.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

மேலவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்.

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்ஸி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தலைமை நிருபர்.

திரு.ச. சுவாமிநாதன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அருணாசலம், திரு. க. ... | நியமனம். |
| 2 ஆறுமுகம், திரு. சோ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இராகவானந்தம், திரு. எம். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6 இராசா முகமது, திரு. கா. (பாசனத்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 கண்ணப்பன், திரு. காடுவெட்டி | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 சங்கரலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12 சண்முகம், திரு. ப. உ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 14 சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 15 சிவஞானம், டாக்டர் ம.பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 17 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 18 சுவாமிநாதன், திரு. ஜி. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 19 தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 20 தாமோதரன், திரு. ஏ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 21 தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 22 தாஸ், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 துரைசாமி, திரு. ஓ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 24 நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25 நீலநாராயணன், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 26 புலமைப்பித்தன், புலவர் (துணைத் தலைவர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 28 மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 மியாகான், திரு. ஜே. எம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 30 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 31 முத்து, திரு. எஸ். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 32 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர் நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி |
| 33 முத்தையா செட்டியார், டாக்டர் ராஜா சர், எம். ஏ. | நியமனம். |
| 34 முனுசாமி, திரு. பி. .. | நியமனம். |
| 35 லீலாவதி, செல்வி. அ. | சென்னை-செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வடஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37 வசந்த பை, திரு. ஜி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 38 வள்ளிமுத்து, திரு ந.வெ.ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39 வீரப்பன், திரு இராம. (செய்தி—அறநிலையத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 40 வெங்கடேசன், ஈ. எஸ். | நியமனம். |
| 41 ஹண்டே, டாக்டர் எச்.வி. (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்). | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 42 ஜெப்பியார், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 43 வெற்றிடம் .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 டிை | டிை |
| 45 டிை .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 டிை .. | டிை |
| 47 டிை .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத்தொகுதி. |
| 48 டிை .. | டிை |
| 49 டிை .. | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 டிை .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 டிை .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 டிை .. | டிை |
| 53 டிை .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 டிை .. | டிை |
| 55 டிை .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 டிை .. | டிை |
| 57 டிை .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 டிை .. | டிை |
| 59 டிை .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 டிை .. | டிை |
| 61 டிை .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 டிை | டிை |
| 63 டிை .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் ஐம்பத்தொன்பதாவது கூட்டத்தொடர்.)

சனிக்கிழமை, 1981 ஏப்ரல் 25.

சித்திரை 13, துன்மதி, 2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தென்னாற்காடு மாவட்டத்தில் தீயணைப்புப் பொறிகள்.

* 249 வினா.—திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள தீயணைப்பு நிலையங்கள் ஒவ்வொன்றிலும் 1—6—1980 அன்றுள்ளவாறு தீயணைப்புப் பொறிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இவற்றில் நிரந்தரமாகப் பழுதடைந்து கிடப்பவை எத்தனை?

(உ) பழுதடைந்தவைகள் ஒவ்வொன்றும் சீராக்கப்படாமல் இருக்கும் கால அளவு யாது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்): (அ) 1—6—1980 அன்று தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூர் தீயணைப்பு நிலையத்தில் ஒரு ஜீப்பு, ஒரு மோட்டார் சைக்கிள் உட்பட ஏழு வண்டிகளும், பண்ருட்டி தீயணைப்பு நிலையத்தில் ஒரு வண்டியும், சிதம்பரம், கள்ளக்குறிச்சி, திண்டிவனம், விழுப்புரம் தீயணைப்பு நிலையங்களில் ஒவ்வொன்றிலும் நான்கு வண்டிகளும், திருக்கோயிலூர், செஞ்சி, விருத்தாசலம் தீயணைப்பு நிலையங்களில் ஒவ்வொரு வண்டியும் ஆக மொத்தம் 27 வண்டிகள் உள்ளன.

(இ) இவற்றில் நிரந்தரமாகப் பழுதடைந்து கிடப்பவை ஒன்றும் இல்லை.

(உ) கடலூர் தீயணைபபு நிலைய நோயாளி வண்டி எம்.எஸ்.ஆர். 3439 பழுதின் காரணமாய் சீராக்கப்பட்டு 7—1—1981 அன்று முதல் புழக்கத்தில் உள்ளது. தொடர் பம்பு எம்.எஸ்.ஆர். 233 பழுதின் காரணமாய் சீராக்கப்பட்டு 1—6—1980 அன்று புழக்கத்திற்கு விடப்பட்டது. ஆனால் சில கோளாறுகள் மீண்டும் ஏற்பட்டதால், 6—10—1980 முதல் ஓடாத நிலையில் உள்ளது.

**திரு. க. இராமமூர்த்தி:** நிரந்தரமாகப் பழுதடைந்து கிடக்கின்ற தீயணைப்புக் கருவிகள் அல்லது வாகனங்கள் என்ற அளவிலே இல்லாவிட்டாலும் கூட, ஒவ்வொரு முறையும் எங்காவது பெரிய அளவிலே தீ விபத்து ஏற்பட்டு அவர்களின் உதவியைக் கேட்கும்போது, ஒன்று அவர்களிடமிருந்து அவைகள் பழுதடைந்து கிடக்கின்றன என்ற பதில் வருகிறது அல்லது அவைகள் வந்தாலும் முறையாக வேலை செய்ய இயலாமல் அந்த வாகனங்களுக்கு வேண்டிய அந்தச் சாமான் இல்லை, இந்தச் சாமான் இல்லை என்ற குறை இருக்கிறது. இந்தக் குறைகளைப் பரிபூரணமாகப் போக்கும் வகையில் மெஷினரியிலே இருக்கும் குறையை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இவைகள் அப்படிப் பழுதடைந்து விடுவதற்குக் காரணம் ஒருவேளை நீண்டகாலமாக இவைகளைப் பயன்படுத்துவதுகூட இருக்கலாம். அப்படியொரு காரணம் இருந்ததை ஆராய்ந்து புதிய தீயணைப்பு நிலையங்களைத் திறப்பதற்கும், ஏற்கெனவே 'கன்டம்' (condemn) செய்யப்பட்ட ஊர்திகளைத் திரும்பத் திரும்ப ரிப்பேர் செய்து பயன்படுத்துவதற்குப் பதிலாக, புதிதாக வாங்கி ஏற்கெனவே 'கன்டம்' (condemn) செய்யப்பட்டவைகளை மாற்றியமைக்கலாம் என்ற கருத்துக்கும் அரசு வந்தது. 1980-81-லே 34 நீர்தாங்கி வண்டிகள் கட்டுமானம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** அரசினுடைய நடவடிக்கைக்கு நான் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதிருக்கும் அந்த வண்டிகளின் தண்ணீர் கொள்ளளவு மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. மேலும், அவைகளிலே நிரந்தரமாகத் தண்ணீர் நிரப்பி வைக்கும் நிலை இல்லை. அதைப்பற்றி அரசு சுற்றறிக்கை விட்டு அவைகள் எந்த நேரத்திலும் தண்ணீரோடு தயாராக இருக்கும் அளவுக்கு அறிவுறுத்தினால் மிகவும் நல்லது. ஒரு குறிப்பிட்ட இடத்திலே தீ பிடிக்கிறது என்று சொன்னால், சில நேரங்களிலே அந்த





இடத்திலிருந்து வெகு தொலைவிலேதான் தண்ணீர் கிடைக்கிறது. அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த இயலவில்லை. ஆகவே, இவற்றையெல்லாம் பரிசீலனை செய்து ஏற்றவகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இதுகுறித்து அரசு ஆவன நடவடிக்கை எடுக்கும்.

## கடம்பத்தூரில் துப்பாக்கிச் சூடு.

* 250 வினா—**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980, செப்டம்பரில், சென்னை அருகே கடம்பத்தூரில் திரைப்படக் கொட்டகையில் நடந்த தகராறில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதல் அமைச்சர் சார்பில்):** (அ) காவல் துறையினரால் துப்பாக்கிச் சூடு ஏதும் நடைபெறவில்லை. 12—9—1980 அன்று இரவு கடம்பத்தூர் திரையரங்கில் ஏற்பட்ட தகராறின் தொடர்பாக நடந்த கலவரங்களின்போது 14—9—1980 அன்று கடம்பத்தூரில் துப்பாக்கி வைத்துக்கொள்ள உரிமம் பெற்றுள்ள திரு. நடேச முதலியார் என்பவர் தனது துப்பாக்கியால் சுட்டிருக்கிறார்.

(இ) காவல் துறையினரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது

**திரு. ம. சங்கரலிங்கம்:** ஏதோ ஒரு தியேட்டரில் ஏற்பட்ட ஒரு தனிப்பட்ட தகராறு ஒரு சமூகக் கலவரமாக உருவாகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. இப்போது நம் நாட்டிலே ஏற்படுகிற சமூகக் கலவரங்கள் எல்லாவற்றுக்குமே தனிப்பட்ட இருவருக்கு இடையே ஏற்படுகின்ற சண்டைதான் காரணமாக இருக்கிறது. இதில் தக்க நடவடிக்கை எடுத்து தவறு செய்பவர்களைத் தண்டித்து தனிப்பட்ட இருவருக்கு இடையில் ஏற்படுகிற சண்டையை ஒரு சமூகக் கலவரமாக மாற்றி சாயம் பூசுகிற நிலையைத் தவிர்க்க என்னென்ன நடவடிக்கையை அரசு எடுக்க இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கும் இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் நேரிடையாகத் தொடர்பில்லை என்றாலும்கூட, நாட்டு நலனைக் கருதி ஒரு நிலையைக்

கேட்டிருக்கிறார்கள். சமீப காலத்திலே தமிழகத்திலே நடைபெறும் வகுப்புக் கலவரங்கள் அனைத்தும் ஜாதி உயர்வு தாழ்வின் அடிப்படையில், சில நேரங்களிலே நீ தாழ்ந்தவன், நான் உயர்ந்தவன், இல்லை நான் உயர்ந்தவன், நீ தாழ்ந்தவன் என்றெல்லாம் பேசி அதன் அடிப்படையில்தான் இந்தத் தகராறுகள் எல்லாம் நடந்ததாக, எந்தவிதமான தகவலும் இல்லை. தனிப்பட்ட முறையில் இரண்டு பேர்கள் தங்களுக்கிடையே உள்ள பழைய விரோதத்தின் காரணமாகவோ, வேறு பகையின் காரணமாகவோ மோதிக்கொள்கிறார்கள். அப்படி தனிப்பட்ட இருவர் மோத ஆரம்பித்து, அந்த இருவருக்கும் வேண்டியவர்கள்—நண்பர்களோ அல்லது உறவினர்களோ—அப்படி நெருக்கமாக அவர்களிடம் இருப்பவர்களும் இருவர் சார்பிலும் வந்து கலந்துகொண்டு அவர்களும் கலவரங்களிலே ஈடுபடும்போது அது இரண்டு கும்பல்களுக்கு இடையில் ஏற்படும் கலவரமாகிறது. பிறகு இந்தக் கலவரத்தினால் ஏற்பட்டுள்ள விளைவுகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக ஜாதியையோ அல்லது மதத்தையோ சொல்லி, இவர் இந்த ஜாதி அல்லது அவர் அந்த ஜாதி என்று சொல்லி, தங்களுடைய தவற்றை மறைப்பதற்கு ஜாதியைப் பயன்படுத்தி இந்த நிலைமைக்குக் கொண்டு போகிறார்கள். திரைப்பட அரங்கிலே ஏற்பட்ட கலவரத்துக்குக் காரணம்கூட, குடிப்பதற்குத் தண்ணீர் வைத்திருந்ததை எடுத்து ஒருவர் முகம் கழுவியிருக்கிறார். அதைப் பற்றிக் கேட்டபோது, திரைப்பட நிலைய அதிபருக்கும், தண்ணீர் எடுத்து முகம் கழுவியவருக்கும் இடையிலே தகராறு ஏற்பட்டிருக்கிறது. யார் முகம் கழுவினாரோ அவர் தனக்கு வேண்டியவர்களையும், வெளியிலே இருந்தவர்களையும் சேர்த்துக்கொண்டு கலவரம் செய்திருக்கிறார். சட்டத்தைக் கையிலே எடுத்துக்கொண்டு அவர்கள் கலவரத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆளும் கட்சியும், எதிர்க் கட்சிகளும் மேலும் இருக்கும் பல்வேறு அமைப்புகள் எல்லாம் ஒன்று சேர்ந்து அரசியல் காரணங்களுக்காக இதைப் பயன்படுத்தக் கூடாது என்று முடிவெடுத்து அந்த அடிப்படையிலே வகுப்புக் கலவரங்கள் தடுக்கப்பட வேண்டும் என்று நாம் முடிவெடுத்தால், இவைகளை நாம் தடுக்கலாம். மேலும் இந்த விஷயத்தில் அவர் தற்காப்புக்காகச் சுட்டிருந்தாலும், துப்பாக்கி கையிலே வைத்திருந்தாலும், அது தவறு என்ற அடிப்படையிலே அவர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அவர் 'பெயிலிலே' இப்போது வெளியே வந்திருக்கிறார். அவர் மீது வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இத்தகைய நிகழ்ச்சிகள் இப்போது பரவலாக நடைபெற்று வருவதையொட்டி ஒவ்வொரு மாவட்டத்திலும் எல்லாக் கட்சிகளுடைய மூத்த தலைவர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமித்து ஏதாவது ஒரு இடத்தில் இப்படியொரு சம்பவம் நடந்தால், உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்து, அந்தச் சம்பவம் என்ன காரணத்தினால்





நடைபெற்றது என்று பகிரங்கமாக அறிவித்தால், இவை ஓரிருவர் தங்களுடைய சொந்தக் காரணங்களுக்காகச் செய்த சில செயல்கள் என்று மக்கள் அறிவதற்குப் பயன்படுவதோடு, அந்த உணர்ச்சியால் மற்றவர்கள் அதிலே ஈடுபட்டுவிடாத அளவுக்கு நிலைமைகளை ஏற்படுத்தலாம். ஆகவே, எல்லா மாவட்டங்களிலேயும் இந்த நிலைமையை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இது ஒரு சிறந்த யோசனை. இப்போது இராமநாதபுரத்திலே நடைபெற்ற கலவரத்தையொட்டிக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த இடத்திற்குச் சென்று, அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து, ஒவ்வொரு பகுதியாகப் போய்ப் பார்த்து, இந்த அடிப்படையிலே எல்லோரையும் உள்ளடக்கிய ஒரு குழுவை நியமிக்க முடிவெடுத்திருக்கிறார்கள். இது அவசியமான ஒன்று. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து, நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இதுபோன்ற குழுக்கள் அமைக்கப்படும் போது, கட்சிச் சார்பு என்பதோடு மட்டுமல்லாமல், ஊரிலே இருக்கும் பெரியவர்களையும் உறுப்பினர்களாகச் சேர்க்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா ? அதோடு இந்தக் குறிப்பிட்ட சம்பவம் படக்கதையால் ஏற்பட்ட கோளாறால் நடைபெற்றதா அல்லது ஏற்கெனவே தகராறு உள்ளவர்கள் அங்கே சென்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** சமீபத்திலே வந்த திரைப்படம் எதிலேயும் குடிக்கிற தண்ணீரை முகம் கழுவப் பயன்படுத்தலாம் என்று சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லை. இது ஒரு குணக் கோளாறு. அது வகுப்புக் கலவரமாக மாறிவிடுகிறது. பொதுவாக இந்தக் குழு அமைக்கப் படும்போது, அரசியல் கட்சிகள் என்று மட்டும் கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. இப்போது வேறு பல பொது அமைப்புகள் இருக்கின்றன. இப்போது ஆசிரியர்கள் பிரதிநிதிகள் சார்ந்த அமைப்புகள் இருக்கின்றன, சமுதாய நலப் பணி மன்றங்கள் இருக்கின்றன, ரோட்டரி கிளப், லயன்ஸ் கிளப் போன்றவையெல்லாம் இருக்கின்றன. இந்தக் குழு அமைக்கப் படும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையையும் சேர்த்துப் பரிசீலிக்கலாம்.

### சிறப்பாசிரியர்களின் பணிகளை வரன்முறை செய்தல்.

* 251 **வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1970 அன்றும், அதற்குப் பின்னும் பணியில் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் ஆகியோரை, அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்தே பணிவரன்முறை செய்ததைப்போல, ஓவிய ஆசிரியர் மற்றும் தொழில் ஆசிரியர் போன்ற சிறப்பாசிரியர்கள் அனைவரின் பணியையும், அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்தே வரன்முறை செய்ய, அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுதிருந்து அமல் படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மற்றும் (இ). 1—4—1970 அன்றும் அதற்குப் பின்னும் பணியில் சேர்ந்தவர்களில் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் பணியினை, அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்தே வரன்முறை செய்ததுபோல, 1—4—1970 அன்றும் அதற்குப் பின்னும் பணியில் சேர்ந்த முழுத் தகுதியுடைய இடைநிலை ஆசிரியர்கள், இரண்டாம் நிலை தமிழாசிரியர், மற்றும் சிறப்பாசிரியர்கள் அனைவரது பணியினையும் அவர்கள் பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்தே வரன்முறை செய்ய வேண்டும் என்றும், வரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து அவர்களது ஊதிய உயர்வு நிலுவைத் தொகையையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் எனவும், அரசு ஆணை (நிலை) எண். 652, கல்வி நாள் 19—4—1979-ல் ஆணை வெளியிட்டுள்ளது. மேற்கூறிய அரசாணை ஏற்கெனவே அமல்படுத்தப்பட்டுள்ளது.

(முற்பகல் 9.40)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அரசு இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்கு நன்றி தெரித்துக்கொள்வதோடு, இவ்வினாவோடு தொடர்பில்லை என்றாலும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடம் ஒன்றைப்பற்றிக் கேட்க விரும்புகிறேன். அதாவது சிறப்பாசிரியர்கள் என்ற தலைப்பின் கீழ், ஓவிய ஆசிரியர்களுடைய நியமனம் எதுவும் அண்மைக் காலத்தில் செய்யப்படவில்லை. எனவே, சிறப்பாசிரியர்கள் என்ற தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்படும்போது, ஓவிய ஆசிரியர்களையும் நியமனம் செய்யும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பதற்கு முன்வருவாரா ?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சிறப்பாசிரியர்கள் என்ற பிரிவில் ஓவிய ஆசிரியர்கள் மற்றும் இசை ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்கிற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. எனவே இதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** 1—4—1970 அன்றும் அதற்குப் பின்னும் பணியில் சேர்ந்த முழுத் தகுதியுடைய இடைநிலை ஆசிரியர்கள், இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் அனைவரது பணியினையும் அவர்கள் பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்தே வரன்முறை செய்ய வேண்டும் என்றும், வரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்தே அவர்களது ஊதிய உயர்வு நிலுவைத் தொகையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் அரசு ஆணை எண் 652, கல்வி, நாள் 19—4—1979-ல் ஆணையிடப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் இங்கே பதிலளித்திருக்கிறார்கள். இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர்களை முதல் நிலைத் தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு செய்த நாளிலிருந்தே அவர்களின் பணி வரன்முறை செய்யப்பட வேண்டும் என்று முறையிட்டிருக்கிறார்கள். அதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அவர்கள் அனைவருக்கும் 1974 ஆம் ஆண்டிலிருந்துதான் பணி வரன்முறை செய்யப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, திருநெல்வேலி மாவட்டத்தில் 13 ஆசிரியர்களிடமிருந்து 'ரெக்கவரி' இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? இதனைப் போக்கும் வகையில் அரசு உரிய ஆணையைப் பிறப்பிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசின் ஆணைக்கு மாறாக, இந்தப் பதின்மூன்று ஆசிரியர்களின் பணி வரன்முறைப்படுத்தப்படாமல் இருக்குமானால், அரசு இது குறித்து விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** 1—4—1970 ஆம் ஆண்டிக்குப் பிறகு பணியில் அமர்ந்த பட்டதாரி ஆசிரியர்களின் பணியை வரன்முறைப்படுத்தும் வகையில் ஒரு சிறப்புத் தேர்வு நடத்தப்பட்டது. எனினும் அந்தத் தேர்வு குறித்த முடிவு இன்னும் அறிவிக்கப்படாமலேயே இருக்கிறது. இன்றைய தினம் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் பிறந்த நாளாக இருப்பதால், அத்தேர்வின் முடிவுகள் விரைவில் அறிவிக்கப்பட நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு இன்றைய தினம் பிறந்த நாளா ? அதுதான் விசேஷ அலங்காரத்தோடு இருக்கிறார் போலிருக்கிறது !

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பட்டதாரி ஆசிரியர்களின் பணி வரன்முறை செய்யப்படுகிற சலுகை இப்போது 1980 ஆம் ஆண்டு தேர்வாணைக் குழுவின் முன் சிறப்புத் தேர்வில் பங்கேற்றவர்களுக்கும் உண்டு என்ற விவரம் மட்டும்தான் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி தனிக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து சொல்ல முடியும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட அரசாணையைப் பொறுத்தவரையில், பட்டதாரி ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த தேதியிலிருந்தே அவர்களின் பணி வரன்முறைப்படுத்தப்படலாம் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அவர்கள் பணியில் சேர்ந்த தேதியிலிருந்தே ஆண்டு ஊதிய உயர்வு கணக்கிடப்பட்டு, நிலுவைத் தொகை கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை இருக்கிறது. ஆனால், அதற்கு இப்போது ஒரு புதிய விளக்கம் கொடுத்து, அதாவது அவர்கள் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற்றால்தான், நிலுவைத் தொகை வழங்கப்படும் என்று சொல்லி, அதற்கும் ஒரு முட்டுக்கட்டை போட்டு, ஆசிரியர்களுக்கு அந்தப் பலன் கிடைக்காதபடி செய்யப்பட்டிருக்கிறது. எனவே இந்த முட்டுக் கட்டையை நீக்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துறைத் தேர்வுகளில் தேற வேண்டும் என்ற நிபந்தனை மற்றவர்களுக்கு இருக்குமானால், இந்த ஆசிரியர்களுக்கும் அது பொருந்தவே செய்யும். எனவே இது குறித்து அரசு பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. ம சங்கரலிங்கம்: இரண்டாண்டுகளுக்குள் துறைத் தேர்வில் தேறினால்தான் ஆண்டு ஊதிய உயர்வு கொடுக்கலாம் என்று இருக்கிறது. ஆனால், சம்பளத் தொகைப் பாக்கியைத் தருவதை யாரும் தடுக்க முடியாது. எனவே இந்த வகையில் நிலுவையைக் கொடுக்காமல் இருக்கும் நிலையை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துறைத் தேர்வில் தேறினால்தான் இன்க்கிரிமெண்ட் கொடுக்கப்படும் என்பதனால், அதன் தொடர்பாக நிலுவை வருகிறது என்ற அடிப்படையில் அவர்கள் அவ்வாறு சொல்லியிருக்கக்கூடும். அது இல்லாமல் நிலுவையைத் தர முடியும் என்றால், நிச்சயமாகத் தந்துவிடுவார்கள்.





## தனியார் பள்ளிகளில் பள்ளிக் குழுக்கள்.

* 252 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : செல்வி அ. லீலாவதி : மற்றும் திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 1973 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) சட்டத்தில், தனியார் பள்ளிகளின் நிர்வாகத்திற்காக பள்ளிக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற விதிமுறை ஏதும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தமிழ்நாட்டில் அனைத்துத் தனியார் பள்ளிகளிலும் குழுக்கள் அமைக்கப்பட்டுவிட்டனவா ?

(உ) அமைக்கப்பட்ட குழுக்கள் விதிப்படி ஒழுங்காகக் கூடுவதில்லை என்பது உண்மையா ?

(எ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) சிறுபான்மையினத்தைச் சார்ந்தவை நீங்கலாக மற்ற பள்ளிகளில், இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(உ) & (எ) பள்ளிக் குழுக்கள் முறையாக கூடிச் செயல்படுகின்றன. ஒரு சில பள்ளிகளில் சரியாக செயல்படாத பள்ளிக் குழுக்களை நன்கு செயல்படச் செய்யுமாறு சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுரை அளிக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிச் சட்டத்தின் பிரிவுகள் 15, 17 படியும் 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார்ப் பள்ளிகள் சட்ட விதிமுறைகளின் பிரிவுகள் 12, 13, 14 படியும் இத்தகைய பள்ளிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவை மூன்று மாதத்திற்கு ஒருமுறையாவது கூட்டம் நடத்தி, அந்தக் கூட்டத்தினுடைய நடவடிக்கைக் குறிப்பைக் கல்வித் துறை அதிகாரிகளுக்குக் கூட்டம் நடைபெற்று 15 நாட்களுக்குள் அனுப்பப்பட வேண்டும் என்று மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், பல பள்ளிகளில் இதை அவமதிப்பது போல் அமுல்படுத்தப்படாத நிலை இருக்கிறது. எனவே இந்தச் சட்ட விதிகளை மதிக்காத தனியார் பள்ளிகளின் நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை. இத்தகைய தனியார் பள்ளிகளின் நிர்வாகங்கள் சட்டத்தை மதிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அப்படிப்பட்ட பள்ளிகளில் பள்ளிக் குழுக்கள் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.

**செல்வி. அ. லீலாவதி :** சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில்கூட இத்தகைய பள்ளிக் குழுக்கள் அமைக்கப்படவில்லை. எனவே இதுகுறித்தும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இது தனியார் பள்ளிகளுக்கு மட்டும்தான் பொருந்தும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** பள்ளிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவைகள் 3 மாதத்திற்கு ஒருமுறையாவது கூட்டம் நடத்தவில்லை என்றால், அத்தகைய பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சில பள்ளிகளில் இத்தகைய பள்ளிக் குழுக்கள் அமைக்கப் படாமலேயே இருக்கின்றன. அந்த வகையில் அடிப்படையையே எதிர்க்கிற வகையில் செயல்படும் பள்ளிகளின் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு முன்வருமா? அதோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையில் பதில் சொல்லும்போது, இவைகள் எல்லாம் சிறுபான்மையோர் நடத்தும் பள்ளிகளுக்குப் பொருந்தாது என்று அடிக்கடி சொல்லுகிற காரணத்தால், அந்தப் பட்டியலில் இதுவரை சேராதவர்கள் கூட இதில் சேர்ந்து அரசை எதிர்க்க உதவி செய்வதைப் போலாகிறது. எனவே, இனிமேலாவது இவ்வாறு அடிக்கடி சொல்லாமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவாரா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சிறுபான்மை இனத்தவர்கள் நடத்துகிற பள்ளிகளைப்பற்றிக் குறிப்பிடுவதற்கான காரணத்தையும் நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கும்போது, அதற்கான விடையை அரசின் சார்பில் அளிக்கும் நேரத்தில் அது கூடுமான வரையில் முறையாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் அவ்வாறு குறிப்பிடுகிறோம். அவர்களை எல்லாம் தூண்டிவிட வேண்டும் என்றோ, இந்தச் சலுகையைப் பெற வேண்டுமென்று மற்றப் பள்ளி களையும் தூண்டிவிட வேண்டுமென்றோ இதைக் குறிப்பிடுவதில்லை.

அதோடு, இத்தகைய குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமென்று சொல்லு வதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. இத்தகைய குழுக்கள் அமைக்கப்பட்டு அந்தப் பள்ளிகளில் நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். குழுக்கள் அமைப்பது ஏதோ நிருவாகத்தை



எதிர்ப்பதற்காக அல்லது அதற்கு ஒரு மாறுபாடான நிலையை உருவாக்கு வதற்காக அல்ல. பொதுவாக இத்தகைய குழுக்களை அமைப்பதன் மூலம் ஒரு ஜனநாயக முறைப்படியான காரியத்தைச் செய்வோமானால், இப்போது இருக்கிற பிரச்சினைகளில் பாதியாவது இல்லாமல் போய்விடும். இந்த நல் லுணர்வோடுதான் இக்குழுக்களை அமைக்கிறோம். எனவே இக்குழுவில் ஜனநாயக முறைப்படி எடுக்கும் முடிவுகளை அமுல் செய்ய வேண்டும் என்று அரசின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** இவ்வாறு அமைக்கப்படும் பள்ளிக் குழுக்களில் ஆசிரியப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைவிட, நிருவாகத்தின் பிரதிநிதித்துவ எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், குழுக் கூட்டம் கூட்டப்படாமலேயே, நிர்வாகத்தின் சார்பில் தீர்மானங்கள் போடப்பட்டு, ஆசிரியப் பிரதிநிதிகளின் கையொப்பத்தைப் பெறுகிற நிலை இருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த நிலைமையைப் போக்குவதற்கு உதவியாக கல்வித் துறையைச் சார்ந்த ஒரு சார்பு அலுவலரையும் அந்தக் குழுக் கூட்டத்தில் இடம் பெறச் செய்ய வேண்டும். அந்த முறையில் அரசு ஓர் ஆணை பிறப்பிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இத்தகைய குழுக்களில் ஆசிரியப் பிரதிநிதிகளும், நிருவாகத்தின் பிரதிநிதிகளும் இடம் பெற்று, அந்தப் பள்ளி சம்பந்தமான காரியங்களைப்பற்றிப் பேசி, பள்ளி நல்ல வகையில் நடைபெற வேண்டும் என்றுதான் விரும்பி அமைக்கிறோம். ஆனால், இந்த இரண்டு பிரிவினருக்கும் இது ஒரு சண்டை நடத்துவதற்கான ஒரு களமாக அமைக்கப்பட்டதாகக் கருதிவிடக்கூடாது. நமக்கு அதிகப்படியான ஆட்கள் இருந்தால், அந்தச் சண்டையில் நாமே வெற்றி பெறலாம் என்று நினைத்து அதிகமான பிரதிநிதித்துவம் கோருவது சரியல்ல. குழுவே அந்த அடிப் படையில் போடப்படுவதில்லை. அந்தக் குழுக்கள் சண்டை போடுமிடமாக இருந்தால், அதனால் பயன் ஏதுமிருக்காது. அதற்கு அரசுப் பிரதிநிதிகள் கூடத் தேவையில்லை. படித்த, விவரம் தெரிந்த நம்மாலேயே இவற்றைச் சரியாக நடத்த முடியவில்லை என்றால், நாம் படியாதவர்களைப் பார்த்து குறை சொல்லும் தகுதியைக்கூட இழந்துவிடுவோம். எனினும் இதில் அரசுத் துறையின் சார்பில் தக்க கவனம் செலுத்தப்படும் என்பதை மட்டும் தெரி வித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

**திரு. ம. சங்கரலிங்கம்:** இத்தகைய குழுக்கள் வருடத்திற்கு நான்கு முறையாவது கூட வேண்டும் என்பதற்காகத்தான் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே குழுக்களுடைய

கூட்ட அறிவிப்பைக் கல்வித் துறை அலுவலர்களுக்கு அனுப்ப வேண்டும் என்று ஒரு விதியைச் சேர்த்துவிட்டால், கல்வித் துறை அதிகாரிகள் வருடத்திற்கு ஒரு முறையாவது அங்கே சென்று மேற்பார்வையிட வாய்ப்புக் கிடைக்கும். அப்படி மேற்பார்வையிடுகிறபோது, அங்கே ஏதாவது தகராறுகள் இருந்தால், அதைப் போக்கி சுமுக நிலையை உருவாக்கப் பயன்படும். ஆகவே, அத்தகையதொரு விதியைச் சேர்க்க அரசு முன்வருமா ?

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிற செய்திகளின் அடிப்படையில், இந்தப் பிரச்சினைகளைப் பற்றி மேலும் பரிசிலித்து, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையின் அடிப்படையிலே, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:* பள்ளிக்கூட நிர்வாகத்தை "Educational Agency" என்று சொல்லுகிறோம். பள்ளிக்கூடத்தின் உள் நிர்வாகத்தைக் கவனிப்பதற்காக பள்ளிக் குழுக்களை ஏற்பாடு செய்திருக்கிறோம். பள்ளிக் குழுவின் செயலாளராக நிர்வாகத்தின் சார்பாக ஒருவரோ அல்லது தலைமை ஆசிரியரோ யார் வேண்டுமானாலும் இருக்கலாம் என்று இப்போது விதி இருக்கிறது. அதற்கு மாறாக பள்ளிக் குழுவின் தலைவராக நிர்வாகத்தின் சார்பாக ஒருவரும், செயலாளராகத் தலைமை ஆசிரியரும் இருக்க வேண்டும் என்ற விதியை நிர்ணயித்தால், தலைமை ஆசிரியர் உள் நிர்வாகப் பொறுப்பை தன் கையில் எடுத்துக்கொண்டு நிர்வாகத்தைச் செம்மையாக நடத்த உதவுக் கூடும். அந்த வகையிலே விதி திருத்தத்தைக் கொண்டுவர அரசு பரிசீலனை செய்யுமா ?

*மாண்புமிகு திரு. செ, அரங்கநாயகம்:* அந்தக் குழுக்கள் மட்டுமல்லாமல், பள்ளிக்கூடத்தில் கல்விப் பணி சரியாக நடைபெறுவதற்காக நான்கு குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னோம். தலைமை ஆசிரியர்கள் அதிலே அக்கறை காட்டவில்லை. அப்படிப்பட்ட குழுக்களை அமைத்தால், தங்களையும் கட்டுப்படுத்துமோ என்று அஞ்சுகிறார்கள் தலைமை ஆசிரியர்கள். குழுக்கள் என்றாலே அஞ்சுகிற சுபாவம் பள்ளிகளைப் பொறுத்த வரையிலே கீழேயிருந்து மேலே இருப்பவர்கள் வரையில் இருப்பது தெரிகிறது. தைரியமாகக் குழுக்களை அமைத்து, அவரவருக்குரிய பொறுப்புக்களை உணர்ந்து பேச வேண்டிய பிரச்சினைகளைப் பற்றிப் பேசி முடிவு செய்ய முடியும் என்ற பாவத்தை அவர்கள் பெற வேண்டும். பள்ளிக் குழுக்களின் செயலாளராகத் தலைமை ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்ற கருத்து நல்ல கருத்து. அதை நாம் பரிசீலிக்கலாம்.



## மேல்நிலை வகுப்பு பாடப் புத்தக ஆசிரியர்கள்.

* 253 வினா.—*திரு. ம. சங்கரலிங்கம்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேல்நிலைப்பள்ளி வகுப்பிற்குரிய பாடப் புத்தகங்களை எழுதும் ஆசிரியர்களில், ஆங்கிலத்தில் எழுதுவோருக்கு பக்கத்திற்கு பத்து ரூபாயும் தமிழில் எழுதுவோருக்கு பக்கத்திற்கு இரண்டு ரூபாயும் கொடுக்கப்படுகின்றது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது?

(உ) இந்த வேறுபாட்டினைக் களைய அரசு முன்வருமா ?

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* (அ) ஆங்கிலத்தில் மூலநூல்களை எழுதுவோருக்கு பக்கம் ஒன்றுக்கு ரூ. 10 வீதமும், அந்நூலை தமிழில் மொழி பெயர்ப்பு செய்வதற்கு பக்கம் ஒன்றுக்கு ரூ. 2.50 வீதமும் மதிப்பூதியம் அளிக்கப்பட்டு வந்தது. 13—9—1979-ல் இடப்பட்ட ஆணைப்படி, மூல நூலை ஆங்கிலத்தில் எழுதுவோருக்கு பக்கம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் ஒரு புத்தகத்திற்கு ரூ. 500-க்குக் குறையாமலும் ரூ. 3,000-க்கு மிகாமலும் வழங்கலாமெனவும், தமிழில் மொழி பெயர்ப்பதற்கு பக்கம் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் புத்தகம் ஒன்றுக்கு ரூ. 2.50-க்கு குறையாமலும், ரூ. 1,500-க்கு மிகாமலும் வழங்கலாமெனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) & (உ) மூலநூல் ஆங்கிலத்தில் எழுதப்பெற்று, தமிழில் மொழி பெயர்ப்புதான் செய்யப்படுவதால், மொழி பெயர்ப்புக்கு மதிப்பூதியம் பாதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதைத் தவிர தமிழில் எழுதுவோருக்கு குறைவாக கொடுக்கப்படுகிறது என்று ஆகாது.

*திரு. ம. சங்கரலிங்கம்:* தமிழில் மூல நூல் எழுதுகிறபோது, எத்தனை ரூபாய் கொடுக்கப்படுகிறது? அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கிறபோது எத்தனை ரூபாய் கொடுக்கப்படுகிறது?

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கிற நூல்களை அடிப்படையாக வைத்து பேராசிரியர்கள் ஆங்கிலத்திலேயே எழுதுவதால், இந்த நிலைமை ஏற்படுகிறது. தமிழிலே எழுதி, ஆங்கிலத்திலே மொழி பெயர்க்கும் நிலைமை ஏற்படவில்லை. ஒரு வேளை இரண்டு, மூன்றாண்டுகளுக்குப் பிறகு, மேல் நிலைப் பள்ளிகளில் தமிழிலேயே கற்றுக் கொடுக்கக்கூடிய ஆசிரியப் பெருமக்கள் புத்தகங்கள் எழுதுகின்ற நிலைமை வரும்போது, இந்தப் பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்படும் என்று நினைக்

கிறேன். அவர்கள் தமிழிலேயே மூல நூல்களை எழுதிவிடுவார்கள். தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் ஏற்பாடு இப்போதில்லை. அப்படி இருந்தால், அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** ஆங்கிலத்தில் எழுதுகிற நூலை அப்படியே தமிழில் மொழி பெயர்ப்பதைவிட, தமிழிலேயே வரலாறு, பூகோளம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு நூல்களை எழுதினால், பக்கத்திற்குப் பத்து ரூபாய் கொடுக்க அரசு முன்வர வேண்டும். அத்தகைய நிலைமையை உருவாக்கினால்தான், தமிழிலே எழுத அதிகமாக முன்வருவார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தமிழிலே மூல நூல் எழுதுபவர்களுக்கு அதிகம் கொடுக்க வேண்டும் என்பதிலே அபிப்பிராய பேதம் இல்லை. மொழி பெயர்ப்பு செய்பவர்களுக்கு, மூல நூல் எழுதுகிறவர்களுக்குத் தருவதைப்போல தர முடியாது என்று சொல்லுகிறோம். தமிழிலே எழுதுபவர்களுக்கு அதிகப்படியான பணம் தர அரசு முயற்சி செய்யும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இப்போது இருக்கிற விதிகளில் தமிழில் எழுதுபவர்களுக்குப் பத்து ரூபாய் கொடுக்கப்படும் என்று வைத்து விட்டால், தமிழில் எழுத எல்லோரும் முன்வருவார்கள். தமிழில் மொழி பெயர்க்க ஏற்கெனவே இரண்டரை ரூபாய் என்று இருந்ததை ஐந்து ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள். அதைப்போலவே தமிழில் எழுதுபவர்களுக்கு பக்கத்திற்குப் பத்து ரூபாய் அளிக்கப்படும் என்று அறிவித்தால், அத்தனை நூல்களும் தமிழிலே வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தமிழில் மூல நூல் எழுதுபவர்களுக்குப் பத்து ரூபாய் தர வேண்டும் என்பதிலே அரசுக்கு கருத்து வேறுபாடில்லை. அப்படித் தருவதற்கான ஆணையை அரசு வெளியிட முயற்சி செய்யும்.

**மதிய உணவுத் திட்டம்.**

* 254 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதிய உணவுத் திட்டத்தில், மத்திய சமையல் அறை-வினியோக முறை, எந்தெந்த மாவட்டங்களில் இப்பொழுது செயல்பட்டு வருகிறது ?

(இ) எந்தெந்த மாவட்டங்களில், எந்தக் காலத்திற்குள் விஸ்தரிக்க அரசு கருதியுள்ளது ?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) & (இ) செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் 97 மைய சமையற்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் 5 மைய சமையற்கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் ரூ. 49.70 லட்சம் செலவில் மைய சமையற்கூடங்கள் அமைக்க 1981-82-ல் அதில் 45 விழுக்காடு அளவுக்குக் கேர் (CARE) நிதி உதவி கோரப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மதிய உணவுத் திட்டத்தோடு சம்பந்தப்பட்ட மத்திய சமையல் அறைகளோடு, தொடர்பு கொண்ட தொழில்கூடங்கள் இருக்கின்றன. அந்தத் தொழிற்கூடங்கள் சரியாக இயங்கவில்லை என்று பரவலாகப் புகார்கள் இருக்கின்றன. அது குறித்து அரசுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். குறிப்பாக, விக்ரவாண்டியில் அப்படிப்பட்டதொரு தொழிற்கூடம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்கூடத்தில் இருக்கின்ற நிர்வாகம் செம்மையாக நடைபெறவில்லை என்றும், அங்கே தொடர்ந்து தகராறுகள் நடைபெற்று வருவதாகவும் புகார்கள் வந்திருக்கின்றன. ஆகவே அந்த நிர்வாகத்தைச் சீர்திருத்துகிற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மைய சமையற்கூடங்களில் உள்ள வேன்களைப் பழுதுபார்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது விக்கிரவாண்டியில் உள்ள தொழில்கூடம். ஆனால், இப்போது ஒரு புதிய முறையை நாம் கொண்டு வந்திருக்கிறோம். வேன் மூலமாகச் சாப்பாடு கொண்டு செல்வதன் மூலமாக விரைவாகக் கொண்டு செல்லப்படுகிறது என்றாலும், வேன்கள் கெட்டுவிட்டால், பத்துப் பதினைந்து நாட்களுக்கு பள்ளிகளுக்குச் சாப்பாடே இல்லையென்ற நிலைமை ஏற்படுகிறது. அப்படிப் பல வண்டிகள் பழுது பார்ப்பதற்காகக் கொண்டுபோய் நிறுத்த வேண்டிய நிலைமையில் இருக்கின்றன. ஆகவே, நண்பகல் உணவுத் திட்டம் ஏறக்குறைய தோல்வியடையக்கூடிய அளவுக்கு, அதனுடைய பயனைத் தர முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே, இதற்குப் பதிலாக ஒவ்வொரு பள்ளிக்கும் தனியாக வண்டி, சைக்கிள் மூலமாகக் கொண்டுபோய்ச் சேர்க்கும் அளவிற்கு, இப்போது புதிய முறையை ஏற்படுத்தியிருக்கிறோம். இதனால் ஒருவருக்கு வேலையும் கிடைக்கிறது. பள்ளிகளுக்கு உறுதியாகச் சாப்பாடு போய்ச் சேருகிறது என்ற நிலைமையும் ஏற்படுகிறது. இது வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைப் பல இடங்களுக்கு விரிவுபடுத்த முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, விக்கிரவாண்டி தொழிற்கூடத்தை இதற்கு நாம் பயன்படுத்தப் போவதில்லை என்று முடிவு எடுத்து அதை வேறு காரியத்திற்குப் பயன்படுத்தலாம் என்றும் அரசு முடிவு செய்திருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய விடையில், மூன்று மாவட்டங்களில் ஏற்கெனவே மத்திய சமையல் கூடம் முறையாக நடந்து வருவதாகவும், இரண்டு மாவட்டங்களில் இப்போது விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் தெரிவித்தார்கள். ஏனைய மாவட்டங்களிலே இந்த நடைமுறையை எந்த ஆண்டுக்குள்ளே கொண்டுவருவார்கள் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். நண்பகல் உணவுத் திட்டத்தின் கீழ் அரசு 10 பைசா மானியத் தொகை கொடுத்து வருவதை உயர்த்தி, சிறப்பான . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்த விஷயம் வேறு. எங்கேயோ துவங்கி மானியம் வரையில் போய்விட்டார்களே.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்த மத்திய சமையல் கூடங்களை அமைப்பதை கேர் நிறுவனத்தின் உதவியோடு தொடர்புபடுத்திச் செய்து கொண்டிருப்பதால், மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறவேண்டியிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஐந்து மைய சமையற்கூடங்கள் அமைக்க மத்திய அரசினுடைய அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கேற்ப சமையற்கூடங்கள் கட்டப்படுகின்றன. தர்மபுரி மாவட்டத்திற்கு அனுமதி கிடைக்கவில்லை. அதற்கு அனுமதி கேட்டுக்கொண்டிருக்கிறோம். அனுமதி கிடைத்தவுடன் விரைவாகக் கட்டப்படும். மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் எண்ணம் இருக்கிறது. இன்றைக்கு கேர் நிறுவனம் அதன் உதவியைக் குறைத்துக்கொண்டு வருகின்ற அளவில் மத்திய அரசு நடவடிக்கை எடுத்துவருவதுபோல் தெரிகிறது. எதிர்காலத்தில் முழுத் தொகையையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கின்ற நிலைமைகள் ஏற்பட்டால், அந்த வகையிலே தாமதம் ஏற்படாமல் செய்ய முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**செல்வி அ. லீலாவதி :** மதிய உணவுத் திட்டம் இப்போது தொடக்கப் பள்ளி குழந்தைகளுக்கும், நடுநிலைப் பள்ளி குழந்தைகளுக்கும் அமுல் செய்யப்படுகிறது. இந்தத் திட்டத்தை உயர் நிலைப் பள்ளிக் குழந்தைகளுக்கும் ஹையர் செகண்டரி பள்ளிக் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்துவதற்கும் அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதுகுறித்து தனிக் கேள்வி கேட்டால், பரிசீலித்துச் சொல்லலாம்.





### தஞ்சாவூர் மாவட்டத்தில் சர்க்கரை ஆலை.

*** 255 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் சர்க்கரை ஆலை அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** (அ) ஆம்.

(இ) மாயூரம் பகுதியிலோ அல்லது சீர்காழிப் பகுதியிலோ சிறு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாயூரம் அல்லது சீர்காழிப் பகுதியில் அமைக்கப்பட இருக்கும் இந்தச் சிறிய சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான முதலீடு, மதிப்பு எந்த அளவுக்கு அளிக்கப் பட்டிருக்கிறது ? இது சம்பந்தமான விவரங்களை நான் அறியலாமா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, சிறு சர்க்கரைத் தொழிற்சாலை, 500 டன் பிழிதிறன் உள்ள ஆலை அமைக்க ரூ. 2½ கோடி அளவுக்கு முதலீடு செய்ய வேண்டும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. தஞ்சையைப் பொறுத்த வரையில், பெரிய சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. முடியுமானால் 1,250 டன் பிழிதிறன் உள்ள சர்க்கரை ஆலைகளைப் போன்று பெரிய ஆலைகளை அமைக்கலாம். அப்படி இல்லாவிட்டால், 500 டன் பிழிதிறன் உள்ள சிறு தொழிற்சாலைகளை அமைக்க முடியும். அதுபோலவே சிறிய தொழிற்சாலைகள் புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களில் இரண்டு அமைக்க தமிழக அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த விவரங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கரும்பு உற்பத்தியில் போட்டி போட்டுக்கொண்டு விவசாயிகள் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் பல இடங்களிலே கரும்புச் சாகுபடி பரவலாக நடந்துவருகிறது. எங்கெங்கெல்லாம் கரும்பு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறதோ அங்கெல்லாம் சிறிய சர்க்கரைத் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டுமென்ற கொள்கையை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்

*மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:* சர்க்கரை ஆலைகள் ஆரம்பிக்க வேண்டுமானால், மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டும். நடப்பு ஐந்தாண்டுக்காக மத்திய அரசு ஒரு குறிப்பிட்ட தொகையைத்தான் நமக்கு ஒதுக்குகிறது. திருத்தணியிலே ஆலை ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். முன்பெல்லாம் சர்க்கரை ஆலை புதிதாக ஆரம்பித்தால், மத்திய அரசிலே இருந்து அதற்குத் தனியாக இன்சென்டிவ் வழங்கப்பட்டது. இதுகூட நிறுத்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசு தாராளமாக உதவி செய்ய முன்வருமானால், நாமே தமிழ் நாட்டிலே அப்படிப்பட்ட ஆலைகளை அமைக்கலாம். எங்கெல்லாம் கரும்பு அதிகமாகப் பயிரிடப்படுகிறதோ, அங்கெல்லாம் சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்த முடியும். அதனால் அரசுக்கும் வருமானம் வருகின்ற அளவுக்கு அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*டாக்டர் இரா. சனார்த்தனம்:* சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்தும்போது கரும்பு அதிகமாக உற்பத்தியாகின்ற மாவட்டத்திலே அமைப்பது என்ற அடிப் படையிலே இல்லாமல், கரும்பிலிருந்து அதிகமான அளவுக்குச் சர்க்கரை, பர்சென்டேஜ் அதிகமாகக் கிடைக்கின்ற அடிப்படையிலே, அப்படிப்பட்ட மாவட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா?

*மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:* அவைகளின் அடிப்படையிலே தான், அந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. க. இராமமூர்த்தி:* இப்போது பரிசீலனையில் இருக்கின்ற அல்லது தஞ்சையில் அமைய இருக்கின்ற சர்க்கரை ஆலை தனியார் துறையிலே அல்லது கூட்டுறவுத் துறையிலே அல்லது அரசு நிறுவனமாக அமைய வேண்டும் என்ற அளவிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா என்று அறிய விரும்புகிறேன். சர்க்கரை ஆலைகள் நிரம்ப லாபத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, இதற்கு ஊக்க போனஸ் என்ற அளவில் ஊக்கம் அளிக்கின்ற போனஸ் தேவைதானா என்பதைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:* நம் அளவில் சொல்வதாக இருந் தால், சிறிய சர்க்கரை ஆலை என்றாலும், பெரிய சர்க்கரை ஆலை என்றாலும், ஆலைகளைக் கூட்டுறவுத் துறையிலே எடுத்து நடத்துவதற்குத்தான் அரசு முயற்சி எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சர்க்கரை ஆலைகள் லாபத்திலே நடக்கின்றன என்று சொல்கிறார்கள். இந்த ஆண்டும், சென்ற ஆண்டும் தற்காலிகமாக இருப்பது அந்த நிலைமைகள். அந்த நிலைமைகளே தொடர்ந்து எப்போதும் இருக்கும் என்று நம்மாலே





உறுதியிட்டுச் சொல்ல முடியாது. எனவே, மத்திய அரசு கொடுத்துக்கொண் டிருந்த ஊக்க போனசை, இன்சென்டிவ் தொகையைத் தொடர்ந்து கொடுக்கு மானால், அது நமக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக்கொள் கிறேன்.

## *Cement Transport Charges.*

* 256 *Q.*—THIRU A. R. DAMODARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that, under G.O. Ms. No. 1539, Industries, dated 29th November 1978, any transport charges for transporting cement from the production centres to the distribution centres, have been fixed by the Government;

(*b*) whether these transport charges have been revised, in view of the increase in Diesel prices amounting to approximate rate Re. 1 per litre in 1980-81; and

(*c*) if so, the details thereof?

*மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:* (அ), (ஆ), (இ) சிமெண்ட்டை தொழிற்சாலைகளிலிருந்து விநியோகம் செய்யும் இடங்களுக்கு எடுத்துச் செல் வதற்கான போக்குவரத்துக் கட்டணங்கள் அரசு ஆணை எண். 432, தொழில் துறை, நாள் 29—3—1979-ல் நிர்ணயித்துள்ளது. கட்டணங்களை மாற்றி யமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளது.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the rapid increase in the cost of fuel, there is considerable difficulty in transporting cement from the factories to the distribution centres, resulting in an expenditure of over Rs. 60 or 70 per tonne. May I know from the Government whether the decision will be announced soon and whether a meeting has been held with the cement factories so that a decision could be taken at an early date?

*மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:* இது போன்ற 'ரெப்ரசன்டேஷன்ஸ் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. எனவே, வெகு விரைவிலே அரசு இது சம்பந்தமான ஒரு முடிவை அறிவிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*டாக்டர் இரா. சனார்த்தனம்:* இந்த சிமெண்ட் விநியோகம் செய்யும் போது, சணல் பைகளில் போட்டுக் கொடுப்பதால் சிமெண்ட் வீணாகிவிடுகிறது. ஆகவே, அதை விநியோகம் செய்யும்போது, தொழிற்சாலையிலேயே பாலிதீன் பைகளில் அடைத்து விநியோகம் செய்வதற்கு அரசு வழிவகைகள் செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1981 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : இதற்குத் தனியாக ஒரு கேள்வி போட வேண்டும். எவ்வளவு வாங்குகிறோம், எப்படி மாற்றலாம் என்பது போன்ற விவரங்களை அறிந்து சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களுக்கு இன்று பிறந்த நாள் என்று உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் நினைவூட்டிவிட்டார்கள். இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இருக்கின்ற முக்கியத்துவம் கருதியும், எத்தனை வேலை நிறுத்தங்கள் என்று இருந்தாலும், கேள்வி நேரங்களில் அங்கத்தினர்கள் எழுப்புகின்ற துணைக் கேள்விகளுக்குப் பதில் சொல்லிப் பணியாற்றுகின்ற ஒருவர் நமக்குக் கிடைத்திருக்கிறார் என்ற அளவிலும், இந்த அவையில் அவருக்கு எல்லோருடைய சார்பிலும் பாராட்டுக் களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இநத அவையில் இன்று அவர் நுழைந்த போது 'பளிச்' என்று அவர் இருந்தது எனக்குப் பட்டது. அது ஏன் அன்று அப்போது எனக்குத் தெரியவில்லை. யாரோ அவருடைய நண்பர்கள் எல்லாம் சேர்ந்து அவரைக் கட்டாயப்படுத்தி அலங்காரப்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவருக்கு இந்த அவையின் சார்பில் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேலவையின் சார்பிலே தாங்கள் தெரிவித்த அந்தப் பாராட்டுதல் களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(1) விருத்தாசலத்தில் மக்களிடையே ஏற்பட்டுள்ள கலவரம் குறித்தும் அங்கு பஸ்கள் ஓடாது குறித்தும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் நல்லசிவன், சி. ரா. லெட்சுமிகாந்தன், க. இராமமூர்த்தி அவர்கள் விருத்தாச்சலத்தில் மக்களிடையே ஏற்பட்டுள்ள கலவரம் குறித்தும், அங்கு பஸ்கள் ஓடாதது குறித்தும் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்



கிறார்கள். அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இந்த விதிகளின்கீழ் எப்படி வருகிறது என்பதைச் சுருக்கமாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 23 ஆம் தேதி அன்று விருத்தாசலத்திலே வருந்தத்தக்க சம்பவம் நடந்திருக்கிறது. அதிலே இரண்டு திருவள்ளுவர் பஸ்கள், 4 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பஸ்கள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. 7 பஸ்கள் சேதப்படுத்தப்பட்டிருக் கின்றன. இதையொட்டி, போலீஸ் விருத்தாசலம் நகரத்திற்குள்ளே கடுமை யான அடக்குமுறையைக் கடைப்பிடித்தது மட்டுமல்ல, சம்பவம் நடந்த இடத்திற்குத் தூரத்திலே இருக்கும் புதுக்கோட்டை போன்ற இடத்திலேகூட, வீட்டுக்குள்ளே புகுந்து போலீஸ் பொதுமக்களை அடித்ததாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. கோர்ட்டுக்குப் போன திரு. சந்திரசேகரன் என்ற எங்கள் கட்சி வக்கீல் உட்பட 130 பேர்களைக் கைது செய்து வழக்கு போட்டிருக்கிறார்கள். எல்லாமே போலீஸினுடைய தவறான அணுகு முறையின் காரணமாக ஏற்பட்ட விளைவு என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். அங்கு காயமுற்றவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக போலீஸ்காரர்கள், தனியார் பஸ் கொண்டுவர வேண்டும் என்று சொன்னதாகவும், அந்த பஸ் டிரைவரும் கண்டக்டரும் முதலாளிகளின் சம்மதம் இல்லாமல் பஸ்ஸைக் கொண்டுவர முடியாது என்று சொன்னதாகவும், அதற்காக அந்த பஸ் டிரைவரையும் கண்டக்டரையும் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்று அடித்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. அதன் காரணமாகத்தான் இந்தக் கலவரம் ஏற்பட்டிருக்கின்றது. 144 பிரிவுப்படி ஆணை போடுகின்ற அளவுக்கு நிலைமைகள் மோசமாகியிருக் கின்றன. பல மாநிலங்களில் இப்படிப்பட்ட போலீஸ் அடக்குமுறைகள் நடந்து கொண்டிருப்பதாகச் சொல்கின்ற இந்த நேரத்தில், நம்முடைய மாநிலத்திலும் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. போலீசா ருடைய அணுகுமுறை சரியாக இல்லாமல் இந்தச் சம்பவங்கள் ஏற்பட்டிருக் கின்றன. பொதுமக்கள் இந்த மாதிரியான காரியங்களால் நொந்து போய் இருக்கின்றார்கள். அதன் காரணமாக அவர்கள் அதிருப்தி உற்றிருக்கி றார்கள். இதைப்பற்றி விரைவான முடிவு காண விவாதிக்க வேண்டும்.

(முற்பகல் 10-10)

இது ஒரு சிறிய சம்பவம் என்றாலும், பெரிய வெடிப்பாக மாறும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு உணர்ந்திருக்கும். இப்படிப்பட்ட நிலைமைகளை எப்படி 'ஹேண்டில்' செய்வது என்பதுபற்றி காவல் துறை

[திரு. ஆ. நல்லசிவன்] [1981 ஏப்ரல் 25

அதிகாரிகளுக்கு வகுப்புகள் நடத்த வேண்டியிருக்குமோ என்று நான் கருதுகிறேன். இவற்றையெல்லாம் பற்றி விவாதிக்க வேண்டியிருப்பதால், அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று, தலைவா வர்களே, கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டத்தில் உள்ள திட்டக்குடியில் இந்தக் கலவரம் 23 ஆம் தேதி நடைபெற்றது பற்றி மிக விரிவாகச் செய்திகள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. எல்லாப் பத்திரிகைகளிலும் ஒரு முகமாகத் தெரிவிக்கின்ற கருத்து, தனிப்பட்ட முதலாளியின் பேருந்துனுடைய டிரைவரை ஒரு காரியத்திற்காக, அந்தப் பேருந்தை எடுத்துச் செல்ல வேண்டுமென்று காவல் துறை அதிகாரிகள் கட்டாயப்படுத்தியதால், அவர் அதை மறுத்திருக்கிறார் என்றும், அதன் தொடர்பாக எழுந்த சம்பவங்கள்தான் இவை என்றும் பத்திரிகையில் கொடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக சுமார் 125 பேர்கள் கைது செய்யப்பட்டதாகச் செய்திகள் வந்துள்ளன. போலீசார் உட்பட 21 பேர்களுக்குக் காயம் பட்டதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. இன்னமும் அந்தப் பகுதியில் பதட்ட நிலை தொடர்ந்து நீடிக்கிறதென்று கவலைக்கிடமான செய்திகள் தெரிவிக்கின்றன. இப்படிப்பட்ட ஒரு சாதாரண விஷயம், இரண்டு பேருக்கிடையிலே நடந்த விஷயம், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டதுபோல, ஒரு சிறு தகராறு மிகப் பெரிய தகராறாக மாறி, அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான, லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள பஸ்கள் நொறுக்கப்பட்டு, அந்தப் பகுதியில் மக்கள் நடமாட முடியாமல், பீதி அடைந்துள்ள சூழ்நிலை உருவாகியிருப்பதைப் பொறுத்து விவாதிக்கவும், அங்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு காணவும், அங்கே அமைதியை நிலைநாட்ட உரிய நடவடிக்கைகளை எடுக்கவும், கருத்துக்களைத் தெரிவிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றிப் பேச அனுமதி வேண்டுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** 23-4-1981 அன்று, நேற்றைக்கு முன்தினம் விருத்தாசலம் பகுதியிலே நடைபெற்றிருக்கின்ற சில சம்பவங்கள் அந்தப் பகுதியிலே அமைதிக் குலைவு ஏற்படுத்தியதோடு, துப்பாக்கிச் சூடும் நடந்திருக்கிறது. திட்டக்குடியில் துவங்கி, விருத்தாசலம் நகருக்கு வந்து, இன்றைக்கு அந்தத் தாலுக்கா முழுவதும் அமைதி இழந்து, மக்கள் பயத்தில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இதனுடைய பின்னணியை அரசின் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். விருத்தாசலத்தைப் பொறுத்தவரை யிலும், ஒன்று சொல்ல விரும்புகிறேன். தென் ஆற்காடு மாவட்டம் எப்படிப்



1981 ஏப்ரல் 25] [திரு. க. இராமமூர்த்தி]

பட்ட மாவட்டமென்பது அரசுக்குத் தெரியும். அங்கே விருத்தாசலம் பகுதியிலே, பல ஆண்டுகளாக, இன்றைக்கு நேற்றல்ல, பல ஆண்டுகளாக எந்தச் சம்பவமும் சுலபமாகத் தீப்பற்றி எரிகின்ற அல்லது வேகப்படுத்துகின்ற அல்லது சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கின்ற சூழ்நிலைகள் பல்வேறு சமுதாய அரசியல் சூழ்நிலைகள் காரணமாக நிரந்தரமாக இருந்துகொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியைப் பொறுத்தவரையிலும், அதிகாரிகளுக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது. அங்கேயுள்ள கோட்டாட்சித் தலைவர், வட்டாட்சித் தலைவர் அல்லது இன்ஸ்பெக்டர் அல்லது டெபுடி சூப்பரின்டென்ட் போன்றவர்களுக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது. நடைபெற்றிருக்கிற சம்பவத்தைச் சொல் கிறேன். தனியார் பேருந்தை உடனடியாக எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி யிருக்கிறார்கள். அதை எடுத்துக்கொண்டு கடலூர் போக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். திட்டக்குடியிலிருந்து விருத்தாசலம் வந்தால், உடனடியாக ஒரு காரை எடுத்துச் செல்வது மிக மிகச் சுலபம். நிறைய டாக்சிகள் இருக்கின்றன. போலீஸ் வேன் இருக்கிறது. நான் இதை அரசியலாக்க விரும்பவில்லை. எங்களுடைய கட்சியைச் சார்ந்தவரின் பேருந்தாக இருந்தாலும், இதை அரசியலாக்க விரும்பவில்லை. தனியார் பேருந்தை எடுக்கவில்லை என்பதால், இரவிலே தங்குகின்ற அந்தப் பேருந்தை எடுக்க, காவல் துறையினர் நிர்பந்தப்படுத்தியிருக்கின்றனர். அந்தக் கண்டக்டரையும், டிரைவரையும் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றி ருக்கிறார்கள். அங்கே அவர்களை என்ன செய்தார்களென்று நான் சொல்ல விரும்பவில்லை. அப்படி அழைத்துச் செல்வதற்கு அவசியம் என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதன் காரணமாக, பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இரவு முழுவதும் 'டென்ஷன்' இருந்திருக்கிறது. அடுத்த நாள் காலையிலே மற்ற பேருந்துகள் ஓடவில்லை. இந்த மாதிரி நேரங்களில் அங்கேயுள்ள அதிகாரிகளுக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிற தென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த சம்பவத்தின் காரணமாக . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்போது நம்மைச் சுற்றிலும் கலவரம்தான் இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய கட்டாயம் வந்திருக்கிறது. அங்கே அர்.டி.ஓ. இருக்கிறார். அவர் முறையாகச் செயல் படாததன் விளைவை இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது அவசியமென்று கருதுகிறேன். பொதுவாக இன்றைக்கு தமிழகம் முழுக்க, இந்தியா முழுக்க என்றாலும், என்னைப் பொறுத்தவரையிலும் இந்த அவையிலே நமது மாநிலத்தோடு சுருக்கிக்கொள்கிறேன், பல்வேறு வன்முறைச்

[திரு. க. இராமமூர்த்தி] [1981 ஏப்ரல் 25

சம்பவங்கள் இயற்கையாக நடக்கிறதா அல்லது இயற்கையைத் தாண்டி ஒரு வன்முறை சதிக் கும்பல் கலவரங்களைத் தூண்டி விட்டுக்கொண்டிருக்கிறதா என்ற சந்தேகத்தை மறுத்துவிட முடியவில்லை. இதிலே அரசியல் பின்னணி இருக்கிறதா, சமுதாயப் பின்னணி இருக்கிறதா என்பதை அரசாங்கம் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். எனவே அரசு ஒத்துக்கொண்டு, அவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்தால், இதை மாத்திர மல்ல, இந்தப் பகுதியில் எப்படி அதிகாரிகளை நியமிக்க வேண்டும், அவர்கள் எப்படி இயங்க வேண்டுமென்பதில் அரசாங்கம் தனியாகக் கவனம் செலுத்த வேண்டும் என்பதைப்பற்றிச் சொல்ல முடியும். அதிகாரிகளுக்குப் பொறுப்பு அதிகமாக இருக்கிறது. அவர்கள் முறையாகச் செயல்படாததால், இப்படிப் பட்ட சம்பவங்கள் நிறைய நடக்கின்றன. நேரடியாக எனக்குக் கிடைத்த தகவல்களைச் சொல்லுகிறேன். இன்னும் நடவடிக்கை என்ற பெயரால், உள்ளூரிலே உள்ள அரசியல்வாதிகள் மற்றும் வேறு பலரைக் காவல் துறை யினர் தனியாக அழைத்து வந்து, அவர்களுடைய ஆலோசனையோடு பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல்களெல்லாம் வந்திருக்கின்றன. நான்கூட இன்றைக்குப் பிற்பகல் விருத்தாசலத்திற்குச் செல்ல இருக்கிறேன். அரசாங்கம் உடனடியாக இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். உரிய நம்பிக்கை தரவேண்டும். இதையெல்லாம் பரிசீலனை செய்ய, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிப்பதற்கு தலைவரவர்கள் இணங்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்,

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு தலைவரவர்களே, 22-4-1981 அன்று இரவு 10.30 மணியளவில் விருத்தாசலம் தாலூகாவைச் சார்ந்த திட்டக்குடி காவல் துறை ஆய்வாளர், மண்டையில் பலத்த காயமுற்ற திரு. வேலாயுதம் என்பவருக்கு உடனடிச் சிகிச்சையளிப்பதற்காக, பெண்ணா டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு வேறுவாகன வசதி கிடைக்காத காரணத் தினால், ஸ்ரீநாராயணன் பஸ் டிரான்ஸ்போர்ட் என்கிற தனியார் பேருந்து ஒன்றின் ஓட்டுநர் திரு. சுலைமான் என்பவரின் உதவியை நாடினார். ஆனால், ஓட்டுநர் திரு. சுலைமான், இரவு தங்களுக்கான பேருந்தை எடுத்து வர முடியாது என மறுத்ததுடன், பொறுப்பில்லாமலும் பேசியும் நடந்துமுள்ளார். அவரிடம், காவல் துறை ஆய்வாளர், ஓட்டுனருக்குரிய சான்றிதழைக் காட்டு மாறு கோரியுள்ளார். அதற்கு ஓட்டுநர் திரு. சுலைமான், தன்னுடைய ஓட்டுநர் சான்றிதழ் காலங்கடந்துவிட்டது என்றும், புதுப்பிக்கப்படவில்லை என்றும் கூறியுள்ளார். இதனால், காவல் துறை ஆய்வாளர், ஓட்டுநர்



1981 ஏப்ரல் 25] [திரு. கா. இராசா முகமது]

சான்றிதழை அடுத்த நாள் காலை 8 மணிக்குள் காட்டிவிட்டு, பேருந்தை எடுக்க வேண்டுமென்று மேற்படி ஓட்டுநரைப் பணித்தார். மேற்கண்ட நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஓட்டுநர் திரு. சுலைமான் மற்ற தனியார் பேருந்து களைச் சார்ந்த ஓட்டுநர்கள், நடத்துனர்கள் மற்றும் மோட்டார் தொழிலாளர்கள் சங்கத்தின் ஒத்துழைப்பையும் பெற்று, திரு. நாராயணசாமி என்பவர் தலைமையில் 23-4-1981 அன்று காலை 6 மணிக்கு விருத்தாசலத்தி லிருந்து கிளம்பும் அனைத்துப் பேருந்துகளையும் தடுத்துவிட்டனர். நிலைமையை அறிந்த விருத்தாசலம் கோட்டாட்சித் தலைவரும், துணைக் காவல் துறைக் கண்காணிப்பாளரும் அவ்விடத்திற்கு விரைந்து சமாதான உடன்படிக்கைக் கூட்டத்தினைக் கூட்டி, உண்மையாக நடந்தவைகளை எடுத்துக்கூறி, பேருந்தைத் தடுத்தவர்களுக்கு அறிவுரையும் உறுதிமொழியும் அளித்துள்ளனர். ஆனால், அவர்கள் அதனைச் செவிமடுக்கவில்லை. கோட்டாட்சித் தலைவரும், காவல் துறையினரும் பேருந்துகளைத் தடுத்து நிறுத்தியதால் ஏற்பட்ட போக்குவரத்துத் தடைகளை நீக்கி, மிகுந்த சிரமத்திற்கிடையே விருத்தாசலம் பாலக்கரை சந்திப்பை அடைந்தனர். கூட்டத்தினர் சுமார் 1,000 பேர்கள் திடீரென்று கற்களையும், சோடா பாட்டில்களையும் கொண்டு தாக்க ஆரம்பித்தனர். இதனால், காவல்

(முற்பகல் 10-20)

துறையினர் கூட்டத்தைக் கலைப்பதற்காக வேண்டி, கண்ணீர்ப் புகைக் குண்டுகளை உபயோகப்படுத்தினர். ஆயினும் எவ்விதப் பலனும் ஏற்படாமல் போகவே, முன் எச்சரிக்கை கொடுத்த பின்னர், குறைந்த அளவு தடியடிப் பிரயோகம் செய்தனர். ஆனால், வன்முறைக் கும்பல் தாக்குதலினின்றும் பின்வாங்காமல் முன்னேறி திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றிற்கும், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றிற்கும் தீ வைத்துவிட்டனர். நிலைமை மிகவும் மோசமாகிக் கொண்டிருப்பதை உணர்ந்து, வேறு வழியின்றி, முன்னெச்சரிக்கைகள் கொடுத்த பின்னர் வன் முறைக் கூட்டத்தினர் மீது சலைக் குண்டுத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பட்டது. தீயணைப்புப் படையின் உதவியும் நாடப்பட்டது. தீயணைப்புப் படைப் பிரிவினர் வந்து தீயை அணைப்பதற்குள் மேற்கண்ட இரு பேருந்து களின் பெரும் பகுதிகள் எரிந்துவிட்டன. சுமார் ரூபாய் 5½ லட்சம் மதிப்பிற்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மேற்கண்ட நிகழ்ச்சியில், காவல் துறையினர் 8 பேர்களுக்கும், கைது செய்யப்பட்ட 13 பேர்களுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. அனைவரும் புற நோயாளிகளாகச் சிகிச்சை பெற்றனர். இச்சம்பவம் தொடர்பாக, விருத்தாசலம் காவல் நிலையத்தில்,

**விருத்தாசலத்தில் மக்களிடையே ஏற்பட்டுள்ள கலவரம் குறித்தும் அங்கு பஸ்கள் ஓடாதது குறித்தும்**

[திரு. கா. இராசா முகமது] [1981 ஏப்ரல் 25

குற்ற எண் 245/81-ல் இந்தியத் தண்டனைச் சட்டம் 147, 148, 188, 341, 323, 427, 332, 336 மற்றும் 307 ஆகிய பிரிவுகளின்கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது. மொத்தம் இன்றுவரை 118 பேர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரும் காவல் துறைக் கண்காணிப்பாளரும் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து அங்கு அமைதியை நிலைநாட்டுவதற்காக பொது மக்கள் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் தனியார் பேருந்து உரிமையாளர்கள் கொண்ட அமைதிக் குழுக் கூட்டத்தைக் கூட்டியுள்ளனர். அனைவரும் அமைதியை நிலைநாட்டுவதற்கு ஒத்துழைப்பதாக உறுதி அளித்துள்ளனர். 24—4—1981 அன்று காலை முதல் பேருந்துகளின் போக்குவரத்து சுமுகமாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பதாக உறுதி அளித்துள்ளனர். அரசு போக்குவரத்துப் பேருந்துகள் 23—4—1981 அன்று மாலை 6 மணி முதல் சுமுகமாகச் சென்றுவருகின்றன. நகரில் தகுந்த காவல்துறை பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நடமாடும் ரோந்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 23—4—1981 அன்று மாலை முதல் குற்றவியல் விசாரணைச் சட்டம் 144 வது பிரிவின்கீழ் நகரில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது அங்கு நிலைமை அமைதியாக உள்ளது. எனவே இப்பிரச்சினை குறித்து விவாதிக்க சட்டமன்ற மேலவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : இந்தப் பிரச்சினையிலே போலீஸ்காரர்களே நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதால் அவர்களே கேஸ் நடத்தினால் என்ன நியாயம் கிடைக்க முடியும்? ஆகவே அரசால் இதுகுறித்து நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பிறகு இதுபற்றி விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லையென்று கருதுவதால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அனுமதியை மறுக்கிறேன்.



1981 ஏப்ரல் 25]

**(2) மதுரை வழிப்போக்கர் விடுதிச் சாலையிலுள்ள கலைமணி நடுநிலைப் பள்ளிக் கட்டிடம் இடித்துத் தள்ளி தரை மட்டமாக்கப்பட்டுள்ளது குறித்து.**

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மதுரை வழிப்போக்கர் விடுதிச் சாலையிலுள்ள கலைமணி நடுநிலைப் பள்ளிக் கட்டிடம் 18—4—1981 அன்று இடித்துத் தள்ளி தரை மட்டமாக்கப்பட்டதாகக் கூறி மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, மதுரை நகரிலே டி.பி. ரோட்டிலே எண் 27-வது கட்டிடத்திலே கடந்த 1—6—1956 முதல் கலைமணி நடுநிலைப் பள்ளி நடைபெற்று வருகிறது. அது 30 சென்ட் பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்திருக்கிறது. அந்த 30 சென்ட் பரப்பளவிலே ஏற்கெனவே அந்த நிர்வாகத்திற்கு உரிமையுள்ள இடம் 19 சென்ட். அந்த இடத்திலேதான் அவர்கள் கூரையாலும் ஓடாலும் கட்டிடங்களையெல்லாம் கட்டி அதிலேதான் வகுப்புகளை நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். 11 சென்ட் நிலம் காரைக்கால் அம்மையார் மட அறக்கட்டளை நிறுவனத்தாருக்குச் சொந்தமானதால் அவர்கள் அதிலே கடைகளைக் கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே தான் தலைமையாசிரியர் மற்றும் குடும்பத்தார் எல்லாம் வசித்துக்கொண்டிருந்திருக்கிறார்கள். அப்பள்ளியில் 30 ஆசிரியர்கள் பணியாற்றி வருவதுடன் 1,500 மாணவர்களும் கல்வி பயின்று வந்தார்கள். அதையொட்டி ஒரு நர்சரிப் பள்ளி இருக்கிறது. அதிலே 2 ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அறுபது பிள்ளைகள் படித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். அந்த 11 சென்ட் நிலமும் காரைக்கால் அம்மையார் மட அறக்கட்டளை நிறுவனத்தாருக்குச் சொந்தமானது என்கிற பிரச்சினை எழுந்து அதன் மீது எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் அவர்கள் 18 ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொண்டதற்கான ரெக்கார்டுகள் இருக்கின்றன. ஆனால் 18—4—1981 அன்று அங்கு பணியாற்றிக்கொண்டிருந்த தலைமையாசிரியர் இன்னும் ஆசிரியர்கள் போன்றவர்கள் எல்லாம் தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் சார்பில் நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்கு கொள்வதற்காக சென்னைக்கு வந்து விட்டார்கள். அந்த நேரம் பார்த்து அன்று காலை 5-30 மணிக்கு அருணாசலம்,

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1981 ஏப்ரல் 25

செட்டியார், ராஜாங்கம், காந்தி என்பவர்களும் இன்னும் அவர்களுடன் 1,000 பேருக்கு மேல் கும்பலாக வந்து அங்கிருந்த கட்டிடங்களையெல்லாம் இடித்துத் தள்ளி தரை மட்டமாக்கிவிட்டார்கள். அடி ஆட்களைப் போல் அவர்கள் வந்து பள்ளிக்கூடக் கட்டிடங்களையெல்லாம் இடித்துத் தள்ளி தரைமட்டமாக்கிவிட்டதுடன் அங்கு இருந்த பெஞ்சு நாற்காலி பீரோ போன்ற 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களையும் கொள்ளையடித்துச் சென்றிருக்கிறார்கள். இது குறித்து பள்ளியிலே பணியாற்றுகிறவர்கள் அன்றைக்கு பிற்பகலிலேயே காவல் துறையினரிடத்தில் புகார் செய்திருக்கிறார்கள். இது ஒரு சிவில் வழக்கு என்று காவல் துறையினர் கூறி திட்டமிட்டுக் கொள்ளையடித்தவர்களை, திட்டமிட்டு இச்செயலைச் செய்தவர்களை, பள்ளிக்கூடத்தை இடித்துத் தள்ளி தரை மட்டமாக்கியவர்களை வழக்கில் ஈடுபடுத்தி நடவடிக்கை எடுக்காமல் புகார் கொடுத்தவர்களையே மிரட்டுகின்ற பாணியில் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத வகையில் காவல் துறையினர் மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். இது கண்டிக்கத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் பின்னால் சொல்வதற்கு விஷயங்கள் இல்லாமல் போய்விடும். (சிரிப்பு)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஒத்திவைப்புத் தீர்மானத்தின்போது ஒரு முறை பேசிவிட்டால் பின்னால் பேச வாய்ப்பு கிடையாதே! (சிரிப்பு) மாணவர்கள் தேர்வு எழுத வேண்டிய நேரத்தில் இன்றைக்கு 1,500 மாணவர்கள் படிக்க முடியாதபடி, ஆசிரியர்கள் பணியாற்ற முடியாதபடி, நர்சரிப் பள்ளி நடைபெற முடியாதபடி, அங்கு படிக்கிற பிள்ளைகள் படிக்க முடியாதபடி, அந்த ஆசிரியர்களுக்கும் பணியாற்றுவதற்குரிய வாய்ப்பு இல்லாதபடி அங்கு நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே இந்த நிலைமைகளைப்பற்றி எல்லாம் விரிவாக விவாதித்து சீர்திருத்தம் செய்வதற்கான வழிவகைகளைக் காண வேண்டும். அந்தப் பகுதி எவ்வளவு சேதத்துக்கு ஆளாகியிருக்கிறது என்பதைக் காட்ட எடுக்கப்பட்ட புகைப்படங்களை நான் ஏற்கெனவே தலைவர் அவர்களிடத்தில் காட்டியிருக்கிறேன். இப்போது நான் அதை மாண்புமிகு தலைவர் அவர்களின் அனுமதியுடன் கல்வி அமைச்சர் அவர்களிடத்தில் வழங்குகிறேன்.

(இவ்வாறு சொல்லிவிட்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்தில் சில புகைப்படங்களை உறுப்பினர் வழங்கினார்)



1981 ஏப்ரல் 25] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

அங்கு மிகப் பெரிய கொடுமை நடைபெற்றிருக்கிறது. புகார் கொடுத்தும் இதுவரை பலன் ஏற்படவில்லை. பள்ளிக்கூடம் நடைபெறவில்லை. 3 லட்சம் ரூபாய் மதிப்புக்கு மேல் பொருள்களுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இது பள்ளிக்கூட மாணவர்கள் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருப்பதாலும் உடனடியாக விரிவாக இதுபற்றி விவாதித்து சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளைக் காண வேண்டியிருப்பதாலும் இந்த அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மதுரை கலைமணி நடுநிலைப் பள்ளி நிர்வாகிக்கும் இப்பள்ளி உள்ள நில உரிமையாளரான காரைக்கால் அம்மையார் மட அறக்கட்டளை நிறுவனத்தாருக்குமிடையே நீதிமன்றத்தில் நிலத் தகராறு இருந்தது. இதனிடையில் பள்ளி நிர்வாகி பள்ளி உள்ள 30 சென்ட் நிலத்தையும் விலைக்கு வாங்க உரிமையாளரிடம் ஏற்பாடு செய்தார். அந்த நிலத்திற்கருகிலுள்ளவர்களின் தூண்டுதலால் நில உரிமையாளராகிய டிரஸ்டியார் நிலத்தை விற்க மறுத்து காலியிடமான 11 சென்ட் நிலத்தை டிரஸ்டியாரிடம் ஒப்படைப்பதற்கான நீதிமன்ற ஆணையை 16—4—1981 ஆம் நாள் டிரஸ்டியார் பெற்றார்கள் என்றும் அந்த உத்தரவின் அடிப்படையில் அமீனாவும் மற்றும் மூவரும் பயங்கர ஆயுதங்கள் கொண்ட 200 பேருடனும் இரு போலீஸ்காரர்களுடனும் 18—4—1981 அன்று காலை 5-30 மணிக்கு வந்து மேசை நாற்காலி அலமாரி ரிக்கார்டுகள் முதலானவற்றை நாசமாக்கி 3,000 ரூபாயையும் எடுத்துச் சென்றுவிட்டனர் என்று பள்ளி நிர்வாகி மதுரை போலீஸ் கண்காணிப்பாளரிடம் புகார் செய்துள்ளார். மேலும் பள்ளிக் கட்டிடத்தை இடித்துத் தள்ளிவிட்டதால் தற்பொழுது பள்ளியை நடத்த முடியவில்லை என்றும் பள்ளி நிர்வாகி கூறியுள்ளார். 18—4—1981 லிருந்து இப் பள்ளி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. விரைவில் அந்த வட்டாரத்தில் பள்ளி நடத்த நிர்வாகி ஏற்பாடு செய்வதாகக் கூறுகிறார். ஆண்டுத் தேர்வு இனியும் நடத்தப்படவில்லை. எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிந்து விட்டது. கோடை விடுமுறை துவங்க வேண்டிய காலமிது. கோடை விடுமுறைக்குப் பின் பள்ளியைச் சீராக நடத்த நிர்வாகி ஏற்பாடு செய்து வருகிறார். மாவட்டக் கல்வி அலுவலர் இப்பள்ளியைச் சுமுகமாக நடத்தும் பொருட்டு பள்ளி நிர்வாகியிடம் தொடர்பு கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார். மேலும் மாவட்டக்

### மதுரை வழிபோக்கர் விடுதிச் சாலையிலுள்ள கலைமணி நடுநிலைப் பள்ளிக்கட்டிடம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது குறித்து



கல்வி அலுவலர் பள்ளியை சுமுகமான சூழ்நிலையில் நடத்துவதற்காக பாது காப்பு அளிக்குமாறு மதுரை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பள்ளி சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களையும் மாவட்டக் கல்வி அலுவலரே பள்ளி நிர்வாகியுடன் நேரடித் தொடர்பு கொண்டு கவனித்து வருவதால் இதன் பொருட்டு அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இதுபற்றி விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லையென்று கருதுவதால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அனுமதியை மறுக்கிறேன்.

### 4. அரசின் தீர்மானங்கள்.

#### (1) நிகழ்ச்சி நிரலில் மாறுதல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவரவர்களே,

"தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகள் 42-வது விதி அதன் (5) துணை விதியினால் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்படவேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகள் 42-வது விதி அதன் (5) துணை விதியினால் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்படவேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.



(முற்பகல் 10-30)

### 5. கவன ஈர்ப்பு.

#### (1) கன்னியாகுமரி மாவட்டம் அழகிய நகர் என்ற அரிசனக் கிராமத்தில் சுமார் 100 குடிசைகள் தீப்பற்றி எரிந்து பொருள் நஷ்டம் ஏற்பட்டது குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை தாலுகா ஆரல்வாய் மொழியை அடுத்து அழகியநகர் என்ற அரிசனக் கிராமத்திலுள்ள சுமார் 100 அரிசன மக்களின் வாழும் குடிசைகள் தீப்பற்றி எரிந்து சுமார் 2 இலட்சம் ரூபாய் அளவில் பொருள் நஷ்டம் ஏற்பட்டதுடன் 500-க்கு மேற்பட்டவர்கள் வீடின்றித் தவிப்பது குறித்து"
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் அந்தத் தீ எதிர்பாராத விதத்தில் ஏற்பட்டதாகவும் தீயினால் பாதிக்கப்பட்டு வீடிழந்த மக்களுக்கு அரசின் சார்பில் 200 ரூபாயும் மற்றும் 50 ரூபாயும் கொடுக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஓலைக் கீற்றால் கூரைகள் போடப்பட்டுள்ள அந்தக் குடிசைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அழகியநகரை அடுத்து இருக்கக்கூடிய அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய காலியிடத்தைக் கையகப்படுத்தி அரிசன நலத் துறையிலிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீப்பிடிக்காத வகையிலே ஓட்டு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் முறையீடு செய்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை அரசு பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, இந்தத் தீ விபத்தையொட்டி, அங்கே கொடுக்கப்பட்டிருக்கிற நிவாரணங்களைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆரல்வாய்மொழிக்குப் பக்கத்திலே இருக்கும் தரிசு நிலத்திலே நிரந்தரமாகத்

---

@ 63 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

### கன்னியாகுமரி மாவட்டம், அழகியநகர் என்ற அரிசனக் கிராமத்தில் சுமார் 100 குடிசைகள் தீப்பற்றி எரிந்து பொருள் நஷ்டம் ஏற்பட்டது குறித்து

[திரு. கா. இராசா முகமது] [1981 ஏப்ரல் 25

தீப்பிடிக்காத வகையிலே அரிசனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து தனியாக ஆதிதிராவிட இலாக்காவைக் கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இப்போதுகூட திரும்பவும் வீட்டைக் கட்டிக்கொள்ள தக்காவிக் கடனாக 2,000 ரூபாய் அவர்களுக்குக் கொடுக்கிறோம். அதை வைத்துக்கொண்டுகூட அவர்கள் தீப்பிடிக்காத அளவுக்கு வேறுபொருள்களைக் கூரையாகப் போடலாம். வட்டியில்லாத அளவில் கடன் வழங்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, தீப்பிடித்த பகுதிகளை நாங்கள் நேரிலே பார்த்து நிவாரணப் பணிகளிலே ஈடுபடுகிறபோது அரிசன நலத் துறையின் சார்பிலே தக்காவிக் கடன் கொடுக்கப்படுவதாகச் சொல்லப் பட்டது. அதில் ஒரு சதவீதம் இலவசமாகக் கொடுத்து தள்ளுபடி செய்கிறார்கள் என்றும் சொன்னார்கள். 81 வீடுகள் எரிந்து விட்டன. இந்த வீடுகளைப் பொறுத்தவரையில் தகப்பன் பெயரிலும் பாட்டன் பெயரிலும் பட்டாக்கள் இருக்கின்றன. இப்போது இருக்கும் மகனோ, பேரனோ அந்தப் பட்டாவை மாற்றவில்லை. ஆகவே அவர்கள் தக்காவிக் கடனுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்களாக இல்லை. ஒரு அரிசனக் காலனி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை வேகமாக மற்ற துறையோடு கலந்து செய்தால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### (2) நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்களாக நியமிக்கப்படவேண்டிய பட்டதாரி ஆசிரியர் பயிற்சி பெற்று வேலையற்றிருப்பவர்களின் நியாயமான உரிமைகளைப் பறிப்பது குறித்து.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

“ நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டிய பட்டதாரி ஆசிரியர் பயிற்சி பெற்று வேலையற்றிருப்பவர்களின் நியாயமான உரிமைகளை 21—7—1979 ஆம் நாளிட்ட 1297, 1298 ஆம் எண் அரசாணை களின்படி பறிப்பது குறித்து ”

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1981 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர் களே, விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளிலே ஏற்கெனவே பல முதுநிலைத் தமிழாசிரியர்களுடைய பணியிடங்கள் வழங் கப்பட்டு தமிழாசிரியர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் பட்டதாரி ஆசிரியர் களுடைய ஊதியத்தைப் பெற்று வருகிறார்கள். அப்படிப்பட்ட பள்ளிகளிலே புதிதாகத் தலைமையாசிரியர் நியமனம் வருகிறபோது பணி மூப்பின் அடிப் படையிலே இடைநிலை ஆசிரியர்தகுதி பெற்று புலவர் பட்டம் அல்லது பி.டி. தகுதி பெற்றிருந்தால் இதிலே மூத்தவர் நியமிக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. அந்தச் சமத்தில் அங்கே வேறு ஒரு பட்டதாரி ஆசிரியர் இருந்தால் இவரைவிட அவர் இளமையாக இருந்தால் அவருக்கு அந்த வாய்ப்பு கொடுப்பதை மறுத்து இந்தத் தமிழ் ஆசிரியர் நியமிக்கப்பட்டு அதே பட்டதாரி ஆசிரியருடைய சம்பளம் பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதை நிவர்த்திசெய்து ஏற்கெனவே ஒரு முதல்நிலை ஊதியம் பெறக்கூடிய தமிழாசிரியர் இருந்தால் அவரை விட்டுவிட்டு இடைநிலை ஆசிரியராக இருக்கும் பட்டம் பெற்ற பி.டி. ஆசிரியர்களுக்கு அந்தத் தலைமையாசிரியர் பதவி வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை நடுநிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியரைத் தவிர்த்து மற்றவர்களில் ஒரு சாரார் இந்த பி.டி. சம்பளம் வாங்குவதனால் ஏற்படும் பிரச்சினை. அதுகுறித்து இப்போது நாம் பரிசீலிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதன்மீது பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்போது, இத்தகைய முரண்பாடுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளும் நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, தமிழாசிரியர்களுக்குப் போதுமான வேலை வாய்ப்பு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென்றால், புதிதாகப் பணியிடங்களை வழங்குவதன் மூலமாக அந்த வாய்ப்பை அளிக்கலாம். ஆனால், இப்போது நடுநிலைப் பள்ளிகளிலே புலவர் பட்டம் பெற்றவரும், பி.டி. பட்டம் பெற்றவரும் இல்லாவிட்டால், வெளியிலேயிருந்து தலைமையாசிரியரை நியமிக்க வேண்டும் என்று

@ 63-64 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இருக்கிறது. தமிழாசிரியர் ஒருவரைத்தான் நியமிக்க வேண்டும் என்று இருப்பது முறையா ? சமமான வாய்ப்பு பட்டதாரி ஆசிரியர்களுக்கு மறுக்கப் படுகிறது. தமிழாசிரியர்களுக்கு உரிமைகள் கொடுப்பதுபற்றி நான் மறுக்க வில்லை. தமிழ் அறிவும் பெற்று மேலும் ஏனைய பாடங்களிலேயும் நல்ல அறிவு பெற்றிருக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் இந்த வாய்ப்பை வழங்க வேண்டும். அதற்கு ஏதாவது இடையூறு இருந்தால், வேலை வாய்ப்பு நிறுவனங்களிலே பட்டதாரி ஆசிரியர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும் சமமான வாய்ப்பு வழங்கும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாகக் கவனித்து நிதியை வழங்கும் வகையிலே ஆணை வெளியிடப் படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தப் பிரச்சினையை பல நண்பர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

### (3) தமிழ்நாடு பொது நூலகத்துறை அலுவலர் ஒன்றியம் கோரிக்கை வாரம் அனுஷ்டித்தது குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

" தங்களது ஆறு அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு பொது நூலகத் துறை அலுவலர் ஒன்றியம் 24—3—1981 முதல் 31—3—1981 முடிய கோரிக்கை வாரம் அனுஷ்டித்ததால், ஊழியர்கள்-பொதுமக்களிடையே தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து "

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், நூலக ஆணைக்குழுக்களின் கீழ் இயங்கிவரும் நூலகங்கள் மற்றும் அவைகளின் ஊழியர்களின் பணியைப் பரிசீலித்து சீரமைக்க " நூலக சீரமைப்புக் குழு " ஒன்று அமைக்கப்பட்டதென்றும், அக்குழு அந்த நூலக ஊழியர்களை அரசு ஊழியர்களாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பரிந்துரை செய்ததாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தப் பரிந்துரையைச் செயல்படுத்தினால் ஏற்படும் விளைவுகளைக் கருத்தில் கொண்டு நூலக ஊழியர்களை அரசு ஊழியர்களாக எடுக்க வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டதாகவும் இருக்கிறது. அந்த முடிவு அரசால் செய்யப்பட்டது என்று கருதுகிறேன். முடிவு எடுக்கப்பட்டது யாரால்? அந்த முடிவை எடுத்தது அரசா? அல்லது அந்தக் குழுவே எடுத்ததா? அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதனால் ஏற்படும் விளைவுகள் என்ன, அரசுக்கு அதனால் என்ன சங்கடம் ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

@ 64-65 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நூலக ஆணைக்குழுக்கள் பெரும்பாலும் தங்களுடைய நிதியாதாரங்களை, லைப்ரரி செஸ் என்கின்ற ஸ்தல வரியை, அடிப்படையாக வைத்துக்கொண்டு இயங்கு கின்றன. அந்த அடிப்படையிலேதான் நாம் பரிசீலித்து இந்த முடிவை எடுத்திருக்கிறோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, சில்லறைச் செலவு பணியாளர்களை நிரந்தரம் ஆக்குதல் பற்றி செயற்குறிப்பு உள்ளதாகவும், இதிலே மாவட்ட நூலக ஆணைக்குழுக்களுள் போதுமான நிதி வசதி இல்லாத நூலக ஆணைக் குழுக்களுக்கு நல்ல நிதிநிலைமையுள்ள நூலக ஆணைக் குழுக்களின் உபரி நிதியிலிருந்து நிதி கொடுக்கப்படும் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. இது ஊதியப் பிரச்சினை. ஊதியம் கொடுக்காமல் இருக்கக் கூடிய ஒரு சூழ்நிலையிலேயிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்காக இந்தச் செயற்குறிப்புகளை விரைவுபடுத்தி விரைவில் ஆணை பிறப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பரிசீலனை செய்து விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

### (4) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோயில் நகரிலுள்ள கைநெசவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், தர்ணா நடத்தியது குறித்து.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, " திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் நகரில் உள்ள சுமார் 20 ஆயிரம் கைநெசவுத் தொழிலாளர்களின் சட்டப் பாதுகாப்பு மற்றும் பல கோரிக்கைகள் சம்பந்த

[திரு. ஆ. நல்லசிவன்] [1981 ஏப்ரல் 25

மாக, 1—6—1975-ல் தொழிலாளர் துறை துணை ஆணையாளர் முன் போடப்பட்ட ஒப்பந்தத்தை மீறி, மாஸ்டர் வீவர்கள் தொடுத்த ரிட் வழக்கில் 30—1—1980-லே உயர்நீதி மன்றத் திர்ப்பிற்கு பிறகும், தீர்ப்பை அமுல் நடத்தாமல் இருப்பதைக் கண்டித்து உண்ணாவிரதம், வேலை நிறுத்தம், தர்ணா நடத்தியதால் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து" மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, 8 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் ஒரு மாத காலமாக ஸ்டிரைக் செய்து வருகிறார்கள். நடுவர் திர்ப்பை அமுல்படுத்த வேண்டும் என்று ஸ்டிரைக் நடக்கிறது. கோர்ட்டுக்குப் போய் அந்த முதலாளி 'ரிட்' போட்டு 'ஸ்டே' வாங்கியிருக்கிறார்கள். அதுவும் அந்த கைத்தறி சம்பந்தப்பட்ட நடுவர் திர்ப்புக்கு 'ஸ்டே' போடவில்லை. 27—4—1981-லே நெல்லை கலெக்டர் அவர்கள் ஒரு சமரசக் கூட்டம் கூட்ட இருக்கிறார்கள். அதிலே லேபர் டிப்பார்ட்மென்ட் அதிகாரிகளும் பங்கு எடுத்துக் கொண்டு, மாஸ்டர் வீவர்களையும் வரவழைத்து ஒரு சுமுகமான உடன்பாடு காண அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 20-4-1981 அன்று மாவட்ட ஆட்சியாளர் ஒரு கூட்டத்தைக் கூட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்தார். அதில் விசைத்தறி உரிமையாளர்கள் யாரும் வரவில்லை. அதோடு அவ்வாறு கூட்டப்படுகிற கூட்டமே சட்டத்திற்குப் புறம்பானது என்று திரு. ஆர். எம். முகமது ஜெபிருல்லா என்ற வழக்கறிஞர் விசைத் தறி உரிமையாளர் சங்கத்தின் சார்பில் எழுதியிருக்கிறார். அதோடு அன்றைய கூட்டத்திற்கு மாஸ்டர் வீவர்ஸ் சார்பிலும் யாரும் வரவில்லை. எனவே கூட்டம் தள்ளிப் போடப்பட்டது. எனினும் மறுபடியும் கூட்டம் நடத்தப்பட்டு பேச்சு வார்த்தை நடத்தப்பட இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

---

@ 66-69 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1981 ஏப்ரல் 25]

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, இது குறித்து நடுவர் திர்ப்புக்கு 1975 ஆம் ஆண்டில் விடப்பட்டது. திர்ப்பு 1980 ஆம் ஆண்டு வந்தது. 1981 ஆம் ஆண்டு இது குறித்த ரிட் மனு போடப்பட்டது. இந்தப் பிரச்சினை வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள கைநெசவாளர்களின் பிரச்சினையாகும். சென்ற முறையே இவர்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில், நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்க என்று ஒரு மசோதா கொண்டு வரப்பட்டு அது செலக்ட் கமிட்டிக்கும் வந்து, பிறகு கைவிடப்பட்டது. எனவே, இப்போதுள்ள நிலைமையை உத்தேசித்து அந்த மசோதாவை விரைவுபடுத்தி, இந்தச் சட்டமன்றத் தொடர் கூட்டத்திலேயே சட்டமாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அந்தச் சட்டம் இந்தச் சட்டமன்றத் தொடர்க் கூட்டத்திலேயே கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

## 6. அறிவிப்பு.

**சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதிக்கு வரும் பார்வையாளர்களுக்கான நேரம், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதியில் தங்குதல் குறித்த முடிவுகள் குறித்து.**

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு கீழ்க்காணும் அறிவிப்பினை அவையில் தெரிவிக்க விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் உறுப்பினர்களின் வசதியைக் கருதி, கடைப்பிடிக்க வேண்டிய சில முறைகளைக் குறித்த முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவைகளைப்பற்றி மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(1) பேரவை, மேலவை கூடும் நாட்களில் உறுப்பினர்களைக் காண வரும் பார்வையாளர்கள், உறுப்பினர்களைக் காண்பதற்கு மாலை 3.00 மணியிலிருந்து 6-00 மணி வரையில் என்று நிர்ணயிக்கப்படுகிறது. பேரவை, மேலவை கூடாத நாட்களில் இந்நேரம் காலை 9.00 மணியிலிருந்து மாலை

6 மணி வரை என்று நிர்ணயிக்கப்படுகிறது. இம்மாதிரியான பார்வையாளர்கள் முதலில் வரவேற்பாளர்கள் மூலமாக, உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பெற்று, உறுப்பினர்கள் பார்வையாளர்களை அறைகளுக்கு அனுப்ப இசைவு தெரிவித்த பின்பே அவர்கள் உறுப்பினர்களது அறைகளுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படும். மற்ற நேரங்களில் பார்வையாளர்கள் உறுப்பினர்களைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(2) உறுப்பினர் அறையில் உறுப்பினருடன் குடும்பத்தினர் அன்றி மற்றவர்கள் தங்கக் கூடாது. குடும்பத்தினர் என்ற சொல்லில் தாய், தந்தை, துணைவியர், குழந்தைகள் மட்டும்தான் அடங்கும். அவர்களும் உறுப்பினர்கள் அறையில் தங்கியிருந்தாலன்றி தனியாகத் தங்க அனுமதிக்கப்படமாட்டார்கள். அவ்வாறு தங்குவதாக இருந்தால், ஐந்து நாட்களுக்கு மேல் தங்கக்கூடாது. இதற்கான கட்டணம் ஏதுமில்லை. மற்ற நாட்களில் அதாவது பேரவை, மேலவை மற்றும் குழுக்கள் கூடாத நாட்களில் தற்போதுள்ள விதிகளின்படி கட்டணம் வசூலிக்கப்படும்.

(3) குடும்பத்தினருடன் தங்குவதாக இருப்பின் முன்கூட்டியே தெரிவித்து, அதற்குண்டான பதிவேட்டில் பதிவு செய்து கையொப்பம் இடுதல் வேண்டும்.

(4) உறுப்பினர்களுக்கு அரசினால் வீடுகள் ஒதுக்கப்பட்டிருந்தாலும் அல்லது அவர்களுக்குத் தங்குவதற்கு சென்னையில் வீடுகள் இருக்குமானால் அவர்களுக்குத் தங்கும் விடுதியில் அறைகள் ஒதுக்கப்படமாட்டாது.

(5) உறுப்பினர்கள் சென்னையை விட்டு வெளியே செல்லும் நேரங்களில் அறைகளை அலுவலகத்தின் பொறுப்பில் பாதுகாக்க ஒப்படைத்துவிட்டுச் செல்லலாம். அவ்வாறு செய்யாவிடில் அதற்கான வாடகை தற்பொழுதுள்ள விதிகளின்படி வசூலிக்கப்படும்.

சில முக்கியமான விதிகள் மட்டுமே மேலே கூறப்பட்டுள்ளன. மற்ற விதிகள் உறுப்பினர்களுக்குச் சுற்றறிக்கை மூலம் அனுப்பப்படும்.

மேற்கண்ட விதிகள் 23-4-1981 முதல் அமுலுக்கு வரும். இதற்கென சட்டம் அல்லது அதற்குண்டான விதிகள் திருத்தப்பட வேண்டியிருப்பின், அவை தகுந்தபடி திருத்தியமைக்கப்பட்டு இந்தத் தேதியிலிருந்து அமுலுக்குக் கொண்டு வரப்படும்.



## 4. அரசின் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (2) தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை நடத்துவது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23 (1)வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

" தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23 (1)வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** " ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் " தலைவர் அவர்களே, மேலவை விதியில் சனிக்கிழமையன்று ஒவ்வொரு வாரமும் தனி நபர் அலுவல்கள் நடைபெற வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் அதை மாற்றுவதற்கான அனுமதியை மாண்புமிகு தலைவர் அவர்கள் தம் உசிதம்போல் வழங்கலாம் என்பதையும் நான் அறிந்திருக்கிறேன். அவ்வாறு சனிக்கிழமையன்று தனி நபர் அலுவல் நடைபெறவில்லை என்றால், அதற்கு மாற்றாக வேறு ஒரு கிழமையை அனுமதிக்கலாம் என்று இருக்கிறது. அவ்வாறு இதில் செய்யப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்பட்டது. அங்கே எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில்தான் இந்தத் தீர்மானம் இங்கே முன்மொழியப்பட்டிருக்கிறது. மாற்றுக் கிழமை ஒன்றில் தனி நபர் அலுவல் எடுத்துக்கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இதுவரை தொடர்க்கூட்டத்தின்போது மேலவை 2, 3 நாள் இடைவெளிக்குள்ளேயே கூடிக் கொண்டிருக்கிறது. அண்மையில் விடப்பட்ட மாதிரி 19 நாள் இடைவெளி எப்போதும் இருந்ததில்லை. இதன் காரணமாக அவையில் தனியார் அலுவல் நடைபெறுவதில் சங்கடம் ஏற்படுகிறது. நீண்ட கால இடைவெளி காரணமாக ஏற்படும் இந்தச் சங்கடத்தைப் போக்க வேண்டும் என்றுதான் நான் இதைச் சொல்கிறேன். அதோடு சாகா வரம் பெற்ற அவை இந்த அவை என்று சொல்லப்படுகிறது. * * *

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1981 ஏப்ரல் 25

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் வார்த்தைகள் மரபுக்கு உகந்தவை அல்ல. அவைக்கு என்று சில உரிமைகள் இருக்கின்றன. அவைகளை நாம் அனைவருமே மதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எனவே அவையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்ன வார்த்தைகள், அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இவை அவையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் 'சாகா வரம் பெற்ற அவை' என்று குறிப்பிட்ட சொற்றொடர் இருக்கலாம் என்று கூறிக்கொள்கிறேன். மற்றவைகளை வேண்டுமானால் எடுத்துவிடலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எனக்கு எடுப்பதற்குத்தான் அதிகாரம் இருக்கிறது . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** சாகா வரம் பெற்ற அவையாக இது இருக்கிறது என்று சொன்னேன். அதை ஏற்றுக்கொண்டு மற்றவற்றை வேண்டுமானால் நீக்கிவிடலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நானும் அதைத்தான் சொன்னேன். சாகா வரம் பெற்ற அவை என்று சொன்னதை நான் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கச் சொல்லவில்லை என்று நம்பலாம்.

அவைமுன் உள்ள பிரச்சினை—

" தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



1981 ஏப்ரல் 25]

## 7. அரசின் சட்ட முன்வடிவு.

**தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புறத் திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1981.)**

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புறத் திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புறத் திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற வளர்ச்சி சம்பந்தமான திட்டங்களை நான் படித்துப் பார்த்தேன். அதில் பல நல்ல அரிய திட்டங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது.

**மாண்புமிகு திரு. ஏ. ஆர். தாமோதரன் :** விவாதம் திட்டம்பற்றி இல்லை. மசோதாவைப்பற்றியது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் திட்டம் என்று சொல்லாமல், சட்டம் என்று பேசினால் சரியாகப் போய்விடும்.

**திரு. சி. இராமலிங்கம் :** சென்னை நகரத்தின் பல பகுதிகளில் சாலை மேம்பாடு, நீர் வழங்கல் போன்ற வசதிகள் செய்து தரப்பட இருக்கின்றன. நான் குடியிருக்கக்கூடிய பகுதியிலும், சென்னை நகரை ஒட்டிய பகுதியான அம்பத்தூர் பகுதியிலும் பல நல்ல காரியங்களைச் செய்ய இருக்கிறார்கள். எங்கள் மாவட்டமான செங்கை மாவட்டத்திற்குக் கிட்டத்தட்ட ரூபாய் 15 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

---

@ 70-71 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1981 ஏப்ரல் 25

திரு க. இராமமூர்த்தி : சட்ட முன்வடிவின்மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகர்ப்புறத் திட்டம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் . .

திரு. சி. இராமலிங்கம் : சென்னை நகரத்தினுடைய பல பகுதிகளில் செய்ய இருக்கும் வளர்ச்சிப் பணிகளோடு, எங்களுடைய பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், புழல் ஊராட்சி ஒன்றியம் ஆகியவை அடங்கிய சைதாப்பேட்டை தாலுக்காவையும் இணைத்துச் சேர்த்து, எங்களுக்குப் பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில் திருநீர்மலை, பம்மல், அனகாபுத்தூர், பொழிச்சலூர், மீனம்பாக்கம், அவல்பஜார் ஆகிய பகுதிகள் தனித்தனியாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு ஒரு பக்கம் தாம்பரம் நகராட்சியும், மற்றொரு பக்கம் பல்லாவரம் நகராட்சியும், இன்னொரு பக்கம் ஆலந்தூர் நகராட்சியும் இருக்கின்றன. இந்தப் பகுதிகளை இந்தத் திட்டத்திலே இணைத்துக் கொண்டு எங்களுக்குப் பல நல்ல காரியங்களைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை வரவேற்று அமைகிறேன்.

* THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI : Hon. Deputy Chairman, Sir, I am indeed happy to speak on the Tamil Nadu Town and Country Planning (Amendment) Bill. I think there has been some objection from the other side to our speaking about the Government's policy on the subject. The Bill is only in furtherance of the Government's policy and, as such, if we bring in certain points about the policy, I think there is nothing to be objected to about it.

When I was thinking of speaking on this subject, I was also having in mind the hon. Member Thiru Venkatesan who, I hope, would be considerate towards the retired people. I hope he will agree that all precaution and care is to be taken of retired people when persons who are employed are given houses at very nominal rates of rent. But, as soon as they retire they are thrown out of



1981 ஏப்ரல் 25] [Thirumathi Mandakini Krishnamurthi]

the houses. That is time when they really need accommodation at a cheaper rent. If they are thrown out at that time, sometimes they are affected by nervous breakdown. The Hon. Minister knows of a case about which I have represented to him. It is the case of a lady who has retired after having been an artiste in the All-India Radio. Her husband is a retired journalist. Both of them do not get any pension. They have got a physically handicapped son. Now, they have been asked to leave the house in which they are living. There are many such cases and those people come and approach us. The Hon. Minister is very sympatheic but there are certain rules which prevent even sympathy being extended. Therefore, I request the Hon. Minister at this juncture when he has brought forth tthe Town and Country Planning (Amendment) Bill, to please think of these people also. Even tre animals which become useless have got the 'Pinjrapoles' and other places to live in. But, for human beings, there is no place to live. I think that the time has come for us to think of all those who retire and to provide them some accommodation on an economic rent. The 'pugree' system which is very much prevalent in Bombay has now come here also and everybody asks for pugree's amounting to Rs. 3000 or Rs. 5000 and the rent also is very high. The retired people find it extremely difficult to pay these amounts. Hence, I request the Hon. Minister to provide some kkind of accommodation for these people. Morever, these old people are always very sensitive and they feel that their children do not care for them because they are not earning any more. On the other hand, they feel that the Government do not care for them because they have become useless. Therefore, this is a social problem. I hope that the Hon. Minister, who is very dynamic and who always keeps in his mind the welfare of Labour and he poor people, will think about this particular aspect also.

I would like to say a few words about slum welfare also. When late Hon. Anna of our revered memory became Chief Minister, he formed a Slum Welfare Committee bringing into it all voluntary organisations. I was one of the members and the then Finance Minister was the President of that Committee. Then, while we were thinking about slum development, I suggested, where they were Government lands, it would be very easy for the Government to plan these slums. But, there are very many private slums which are places of disease and infection. They

[Thirumathi Mandakini Krishnamurthi] [1981 ஏப்ரல் 25

are on private lands and those lands belong to private persons and the Government cannot do anything. If private people come forward to improve their slums there should be some kind of provision to give loans to them so that they may make those places better to live in. When a hut comes up, a person occupies it and after some time, we will find 10 people living in the same hut. In a small place a large number of people live and there are no sanitary conveniences. I think it is high time that private people are also drawn into this kind of schemes and they may be encouraged to beautify their own slums and to make the life of the people living there more happy. With these words, I conclude and I thank the Hon. Deputy Chairman for the opportunity given to me.

திருமதி தாரா செரியன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒன்றரை மணி நேரம் இருக்கிறது. ஆனால் நான் பேசுவதற்குச் சேர்மேனிடம் கேட்கவில்லை, ஆகவே மன்னித்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மழைலைத் தமிழில் பேசிய தற்கு நன்றி.

THIRUMATHI TARA CHERIAN : Sir, I have not bestowed my thought on the particular subject. Still, having had a little experience in the administration of the Municipal Corporation, I would like to say that once upon a time, we had a master plan and I do not know whether it is still in existence. My name had been included in the Committee for Planning of the City but I had no voice in it. We must have a proper master plan so that satellite towns coming around the City may be properly formed. They also add to the burden of the Municipal Corporation which cannot do anything because of the out-moded rules and regulations. Sir, a number of places like Villivakkam have come within the jurisdiction of the Corporation. Those places have not got any amenities whatsoever. I have my daughter living in Villivakkam and everyday I get a complaint from her that there is no water, no facilities and no drainage and, therefore, I appeal through you that the places that have been included within the municipal limits of Madras City should be given the amenities they need.

Coming to the slums, there are private slums, poramboke and Government slums. During my mayoralty, I broke through the rules and ordered construction of public conveniences because they needed them. Now as things stand, our problem of slum



1981 ஏப்ரல் 25] [Thirumathi Tara Cherian]

improvement will never be solved and it will be an eternal one because, when we have to face the people at the time of elections, we by-pass many rules and allow the growth of new slums. We have to see that the mushroom growth of slums is not allowed. It is very difficult to control them. Apart from that, we allow the huts to come on tank bunds and during monsoon time, all these people have to be accommodated in Corporation Schools. The rehabilitation of such pepole in the schools has to be done during rainy season and the school buildings become unhealthy

(முற்பகல் 11-00)

for the school children. Therefore, I would like to make an appeal that, in between two elections, proper measures should be taken to see that we do not allow new slums to come up. A flying squad is necessary so that whenever a slum springs up, it could be demolished. I find, from my experience, that a person occupying a piece of land in a slum is in a very strong position. He keeps one foot in a slum and places another foot in another slum. He occupies a space in a slum and charges an exorbitant sum of money for allowing another person to put up a hut there. I do not know what right anyone can have to take money and allow a person to put up a hut in a slum. I hope that the Chairman of the Slum Clearance Board will go into this in great detail so that, once and for all, we may solve the problem of slums. In the olden days, we made it possible to get a voluntary worker to live in one of the tenements for slum dwellers so that she could set an example and see also the place was kept clean Now, we have tenements galore but the way they are kept needs a lot of improvement. Steps should be taken, with the active participation of voluntary organisations, to keep the tenements clean.

Whenever a new residential area is created, provision should be made in the plan for locating market-places, playgrounds, etc. so that the new satellite town will have all the facilities. With these words, I thank you for the opportunity given to me.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புறத் திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவினை இங்கே வைத்திருக்கிறார்கள்.

[திரு. க. இராமமூர்த்தி] [1981 ஏப்ரல் 25

மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில், இந்தச் சட்ட முன்வடிவுக்கு முழுமையாக அவர்கள் பொறுப்பேற்க முடியாது. காரணம், சட்ட பூர்வமாக அல்லது இருக்கின்ற சட்டத்திற்கு மாறாக முன்னதாகவே, அதாவது நேற்று வரையிலும் என்று நினைக்கிறேன், நடைபெற்றிருக்கின்ற பல்வேறு தவறுகளுக்கு, சட்ட பூர்வமாக அங்கீகாரம் தருகின்ற ஒரு விருப்பம் இல்லாத பொறுப்பினை அவர்கள் ஏற்றிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வேறு வழியில்லாத நிலைமையில் என்று சொல்ல வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையிலே அவருக்கு வேறு வழியில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொல்கின்றார்கள். நாம் ஏற்கனவே முடிந்துவிட்ட காரியங்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது. ஏற்கெனவே அப்படிப்பட்ட கட்டிடங்கள் கட்டப்பட்டு விட்டன. அப்படிக் கட்டப்பட்ட கட்டிடங்களை அங்கீகரிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அது வேறு. அந்த அளவில் இந்தச் சட்ட முன்வடிவைப்பற்றி நான் இப்போது அதிகமான கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. இன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கெனவே இந்தச் சட்டம் இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சட்டத்திலுடைய அடிப்படையிலே மாநகராட்சி மன்றம் சிலவற்றை எதிர்பார்த்தது என்று சொன்னார்கள். இப்படி எதிர்பார்த்துச் செய்வதற்கு ஒரு வரைமுறை இருக்கிறது. அதற்கும் ஒரு நியாயம் இருக்கிறது.

இதைப் பொறுத்தவரையில், சென்னை மாநகராட்சியினுடைய அமைப்பு பற்றி நமக்கு நன்றாகத் தெரியும். இங்கே இருக்கின்ற பல்வேறு குடியிருப்புப் பிரச்சினைகளைப்பற்றி நமக்குத் தெரியும். எந்த அளவுக்குக் கட்டிடங்கள் நெருக்கமாக இருக்கின்றன, கன்ஜெஸ்ட்டாக இருக்கின்றன என்பது தெரியும். நாம் இப்போது ஏற்கெனவே கட்டப்பட்ட கட்டிடங்களை ஒழுங்குபடுத்த வேண்டுமென்ற அளவுக்கு பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இத்தனைக்கும் இடையிலே அனுமதியை எதிர்பார்த்து எதைச் செய்வது என்பதற்கும் ஓர் அளவு வேண்டாமா? அவசியமான எழுது பொருள்கள், பென்சில் இல்லை, பேனா இல்லை அதற்கு ஒரு ஆயிரம் ரூபாய் எதிர்பார்க்கப்பட்டு செய்வது என்பது வேறு. ஆனால் ஒரு நகரத்திற்குள்ளே



1981 ஏப்ரல் 25] [திரு. க. இராமமூர்த்தி]

புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு எதிர்பார்த்துச் செய்தார்கள் என்று சொன்னால் மாநகராட்சி ஒழுங்காகச் செயல்படுகிறது என்று பொருளா, அது மாநகராட்சி மன்றமா, அது நல்ல அதிகாரிகள் காரியமா என்று கேட்க விரும்புகிறேன். எதிலும் ஓரளவுக்குள் இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு ஞாபகம் இருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக என்று நினைக்கிறேன். சென்னை நகரத்திலே அண்ணா சிலைக்குப் பக்கத்திலே உள்ள கட்டிடம், பழைய உடுப்பி ஓட்டலுக்குப் பக்கத்திலே ஒரு கட்டிடம். அதைக் கட்டினார்கள். அந்தக் கட்டிடத்தை இடிக்க ஆரம்பித்தார்கள். அதுபற்றி பத்திரிகையிலேகூட செய்தி வந்திருக்கிறது. அது ஒரு நான்கு மாடிக் கட்டிடம். ஷாப்பிங் 'காம்ப்லெக்ஸ்'. 1976-லே கட்டினார்கள் என்று நினைக்கிறேன். அந்தக் கட்டிடத்தை இடிக்க ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகு நடவடிக்கைகள் நின்றுவிட்டன. அந்தக் கட்டிடம் அனுமதி வாங்காமல் கட்டப்பட்ட கட்டிடம் என்பது மட்டுமல்ல. அப்படி இடித்த பின்பும் 'நான் அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடித்துக் காட்டுகிறேன் பாருங்கள்' என்று 'சேலன்ஜ்' செய்வதுபோலக் கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்ட மீறல்கள், சட்டத்திற்குப் புறம்பாகக் கட்டிடம் கட்டுவது என்பது நடந்திருக்கின்றது. இது சட்ட விதிகளுக்குப் புறம்பாக எதிர்பார்ப்புகளுக்கு இடையே நடந்திருக்கிறது. இப்படி 'சேலன்ஜ்' செய்து கட்டியிருக்கிறார்கள். வசதி உள்ளவர்கள், வாய்ப்பு உள்ளவர்கள், சக்தி உள்ளவர்களுக்குத் துணை போகின்ற அளவுக்குத்தான் அமைந்திருக்கிறது. ஆக நான் வேறு வார்த்தைகளில் சொல்வதாக இருந்தால் அதனுடைய பொருள் வேறாக இருக்கும். அதிகாரிகள் சுயமாகச் செயல்படவில்லை. சுயமாகச் செயல்படுவதுபோலச் செயல்பட்டிருக்கிறார்கள். அதற்கு ஏற்றபடி அவர்களைச் செயல்படுத்த வைக்கின்ற வகையில் சுற்றுப்புறச் சூழ்நிலைகள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இது சட்டத்திற்கும் நல்லதல்ல, இந்த ஆட்சிக்கும் நல்லதல்ல. இதில் அமைச்சர் அவர்களுக்குப் பொறுப்பில்லை என்பதையும் நான் இப்போது ஒப்புக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் மீது குறை கூறவோ அவரைப் பொறுப்பாக்கவோ நான் விரும்பவில்லை. இதிலிருந்து நிர்வாக இயந்திரம் எப்படி இருந்துகொண்டிருக்கிறது என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். இந்தச் சட்ட முன்வடிவை அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டுவரும்போது எப்போதோ நடைபெற்ற தவறுகளுக்கு அவர்கள் பொறுப்பேற்கின்ற நிலைமை இருக்கிறது. இந்த நேரத்திலே அவர்கள் தவறுகள் செய்த அதிகாரிகளை அடையாளம் காட்ட

வேண்டும். அது அவருடைய பொறுப்பாகும். அவர்களின் மீது அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டின் நலன் கருதி, தமிழக மக்கள் நலன் கருதி இதைச் செய்யவேண்டியது கடமை என்று சொல்கிறேன். அதற்குக் காரணம் இதைச் செய்தவர்கள் சட்டமன்றத்தையே காலால் மிதித்திருக்கிறார்கள். நமக்கு என்ன அதிகாரம் இருக்கிறதோ, சட்டமன்றத்திற்கு என்ன அதிகாரம் இருக்கிறதோ, இந்த ஆட்சிக்கு என்ன அதிகாரம் இருக்கிறதோ, அந்த அதிகாரத்தை அவர்கள் மீறியிருக்கிறார்கள். ஆகவே அதற்கான நடவடிக்கைகளை எடுத்தால்தான் இதுபோன்ற அத்துமீறல்கள் இந்தத் துறையிலே மட்டுமல்ல, மற்ற எல்லாத் துறைகளிலும் தொடராமல் தடுக்க முடியும். எதைச் செய்தாலும் நிர்வாகத்தில் இருக்கின்ற நிர்வாக அதிகாரிகள் அரசாங்கம் அதை 'ரெகுலரைஸ்' (Regularise) செய்துவிடும் என்று கருதுகிறார்கள். அவர்கள் காப்பாற்றப்படுவதாகக் கருதுவதில்லை. இதை அரசாங்கம் செய்யவேண்டியது தலைவிதி என்று எண்ணி அவர்கள் செய்கிறார்கள். அரசாங்கமே சட்டபூர்வமாக்க வேண்டும் என்ற எண்ணத்திலேதான் செயல்படுகின்றார்கள். ஒரு பிரோகிராட்டிக் முறையில் செய்கின்றார்கள். இது தவறான ஒன்று. இது எப்படித் தெரிகிறது? மற்றவர்களுக்கு ஒன்றுமே தெரியாது, தங்களுக்குத்தான் தெரியும் என்ற அளவிலே அதிகமான சட்ட விரோதமான செயல்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அதிகார இயந்திரத்தையும் நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். எல்லா அதிகாரிகளும் அப்படி இல்லை என்றாலும் ஒரு சில அதிகாரிகள் நிர்வாகத்திலே வந்து உட்கார்ந்திருப்பவர்கள் அவர்களுக்கு இருக்கின்ற தேவைகளை, ஆசைகளை யார் பூர்த்தி செய்கின்றார்களோ அவர்களுக்கு ஏற்றபடி சட்டத்தைத் தளர்த்திவிடுகிறார்கள் என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சென்னை நகரத்திலே, நகர்ப்புறங்களிலே பல மாடிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு மனுக்களை அனுமதி பெறுவதற்கு அனுப்ப வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் இப்போதும் பல புதிய கட்டிடங்கள் எழுந்து கொண்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தகவலாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி அவர்கள் விவரங்கள் சொல்ல வேண்டும். இப்படிப் பல கட்டிடங்கள் வந்து கொண்டிருப்பதன் விளைவாக மக்களுடைய போக்குவரத்து எவ்வளவு அதிகமாகி இருக்கிறது, பஸ்களின் போக்குவரத்து எவ்வளவு அதிகமாகி இருக்கிறது, எந்த அளவுக்கு ஜன நெரிசல் அதிகமாகி இருக்கிறது என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தச் சட்டத்தின் மூலமாக மேலும் என்ன சங்கடங்கள் பொதுமக்களுக்கு ஏற்படும் என்பதையெல்லாம்



தெரிந்துகொள்ள வேண்டும். இதைத் தெரிந்துகொண்டு அந்த அடிப்படையிலே குறைகளை நிவர்த்திக்க வேண்டும். இதுவரையில் நடந்ததற்கு எந்த நிவர்த்தியும் செய்துவிட முடியாது. ஆனால் இனி மேலாவது எதிர்காலத்திலாவது இந்த மாதிரியான காரியங்கள் நடக்கக்கூடாது என்ற அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது குறைகள் சொன்னாலும் பரவாயில்லை என்ற அளவில் இதைச் சட்டமன்றத்திலே கொண்டுவந்து வைத்து நிறைவேற்ற வேண்டும் என்ற அளவில் அவருடைய மனச்சாட்சி உந்துதலில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்குக் கீழே இருக்கின்ற இயந்திரம் இப்படியெல்லாம் செய்ய முடியும் என்ற நிலை இருக்கிறது என்பதையும் அவருக்குச் சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் இந்தத் துறைக்கு அமைச்சராக இருக்கின்றார்கள். இந்த விஷயத்தில் அரசுக்குத் தொடர்பு இருக்கிறது. இந்த இலாகா எப்படிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைக் கவனிக்கும் பொறுப்பு அவருக்கு இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

எம்.எம்.டி.ஏ. (M.M.D.A.) -வைப் பொறுத்தவரையில் சொல்லிவிட விரும்புகிறேன். அது பொதுமக்களுடைய தொடர்பு இல்லாதவகையிலே இருக்கின்றது. அந்த இலாகா வேகமாக நடைபெறவில்லை என்ற அளவிலேதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது முழுக்கமுழுக்க நேரடியாக அதிகாரிகள் அளவில்தான் அமைந்திருக்கிறது. அதிலே கட்டிட வல்லுநர்கள் நகர்ப்புற அமைப்பு முறையிலே நிபுணத்துவம் பெற்றிருக்கின்ற நிபுணர்கள் எல்லாம் உறுப்பினர்களாகப் பங்கு ஏற்கின்ற வகையிலே செய்யவேண்டும். நாட்டு மக்களிடமும் நகர்ப்புற வளர்ச்சியிலும் அக்கறை கொண்டவர்கள், நிர்வாகத்திலே முதிர்ச்சி பெற்றவர்கள், மக்களுடைய பிரதிநிதிகள் எல்லாம் அடங்கிய ஒரு குழுவை அமைக்க வேண்டும். அந்தக் குழுவை முழுமைப் படுத்திச் செயல்படச் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்று நிறைவேற்றித் தருகின்ற நேரத்தில் நம்முடைய நிர்வாக இயந்திரம் எந்த அளவுக்குப் பழுதுபட்டிருக்கிறது என்பதையும் ஒரு எச்சரிக்கையாகச் சொல்லி அமைகிறேன்.

(முற்பகல் 11-10)

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்தச் சட்ட முன்வடிவினாலே ஏதோ புதிதாக சில தவறுகளுக்கோ அல்லது சில

இடையூறுகளுக்கோ வழி வகுக்கப்படுகிறதென்று யாரும் கருதத் தேவையில்லை. ஏற்கெனவே நடந்த ஒரு காரியத்தை ஏற்கெனவே மாநகராட்சியால் அனுமதிக்கப்பட்டு கட்டப்பட்ட அமைப்பு முறைகளுக்கு ஒரு ஏற்பாடு என்ற முறையிலேதான் இந்தச் சட்டமுன்வடிவு வருகிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இதிலே ஏதோ அதிகார இயந்திரத்தை . . . . .

திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவரவர்களே, I was very clear. இப்போது நடந்ததென்று நான் சொல்லவில்லை. எப்போதோ நடந்தது. இந்த ஆட்சிக்குச் சம்பந்தமில்லை என்று தெளிவாகச் சொன்னேன். இந்த ஆட்சி வந்தும் ஒரு வருடம் இரண்டு வருடங்கள் இருந்திருக்கிறது. ஆனாலும்கூட I have been generous enough to say that this government is not responsible. நான் தெரியாமல் சொன்னதாக நினைக்க வேண்டியதில்லை. எனக்குத் தெரியாமல் இருந்தால் உடனடியாக அவர்கள் விளக்கத்தை ஏற்கத் தயார். நான் சொன்னதைப் புரிந்து கொள்ளாமல் சொல்லிக் கொண்டிருக்கிறாரே என்பதுதான் என்னுடைய வருத்தம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: புரிந்து கொண்டுதான் சொல்லுகிறேன். 1974-லே இருந்து அரசாங்கம் அனுமதித்துவிடுமென்ற கருத்திலே மாநகராட்சி இயங்கி இருக்கிறது என்பதும் அதிகாரிகளுக்கு அப்படி உத்தரவிட்டார்களா என்று ஆராய்ந்து அந்தத் தவறு புரிந்தவர்களை இந்த அரசு தண்டித்தால் அது பாராட்டுக்குரிய விஷயம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் நியாயமென்று கருதுவார்கள். அப்போது இருந்த 'மாஸ்டர் பிளான்' வேறு, திட்டங்கள் வேறு. இப்போது நடைமுறைப் படுத்துவது வேறு. ஒரு 'சைட்' என்பது ஐந்து ஏக்கர் இருக்கலாம். அதிலே ஒரேயொரு கட்டிடம் என்று வரும்போது நகரத்திலே முடியாது. அதிலே மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்ற நியாயத்தை வலியுறுத்தியும் அப்போது இருந்தவர்கள் அதை அமல்படுத்தவில்லை என்பதாலும் இடைவெளியில் அதை அனுமதித்திருக்கிறார்கள் என்பதனால் அதை மாநகராட்சியின் சட்ட விதிகளுக்குட்பட்டு அனுமதித்து அந்தக் கட்டிடங்கள் இன்றைக்கு நடைமுறைக்கு வரத்தான் இந்தச் சட்ட முன்வடிவு என்ற முறையில் இதை வரவேற்கிறேன். இப்படிப்பட்ட தவறுகள் நேரிட்டதற்குப் பொறுப்பு ஆனவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகள் நிகழாமல் இருக்குமென்று கூறி இதை வரவேற்று அமைகிறேன்.





THIRU A. R. DAMODARAN: Sir, the amendment to the Tamil Nadu Town and Country Planning Act, 1971 seeks to regularise, legalise and legitimise certain irregular, illegal and illegitimate acts committed by the Corporation of Madras. While my hon. Friends have been generous to the Hon. the Labour Minister who is also the Minister in charge of Housing in that they have said that these acts were committed by the Corporation of Madras and that this Government are not responsible for such irregular acts, may I be permitted to point out both to Thiru K. Ramamoorthy and Dr. Janarthanam that this amendment seeks to regularise all building plans sanctioned during the period from 15th August 1974 to 1st October 1980. I am sure it is not the contention of my hon. Friend Dr. Janarthanam that Thiru Raghavanandam has not been in charge of Housing since April 1977 when he took charge and, therefore, Sir, to explain away these irregularities as having been committed during some previous regime and that this party is not responsible for these acts of irregularity is, in my opinion, inaccurate. As such, it is necessary that we must go deep into the problem. The problem has arisen because prior to 1972 Town and Country Planning Act, the Corporation of Madras had approached the Government for regularisation of certain proposals and has continued to do so even after the Act was implemented. The fact that the Government have sat on these files without taking action has not attracted the attention of the hon. Members of this House. My point is this. Why were the Government sitting idle on this for such a long period? If they did not agree with the Corporation of Madras regarding the regularisation of certain building proposals or leaving of open space, etc. that was prescribed by the Act, it was open to the Government to reject the proposals of the Corporation of Madras and to inform the Corporation of Madras accordingly as early as in 1974, 1975, 1976 and perhaps even in 1977 or 1978. In that case, all the irregularities would at least have stopped in 1978. But, that they have continued till 1980 shows that there is something wrong not only in the Corporation of Madras—I am not trying to protect them for the regularisation proposals—but also with the whole movement of files between the Corporation, the Madras Metropolitan Development Authority and the Government.

டாக்டர் இரா. சனார்த்தனம்: நான் தெரிவித்தது 1974லே இப்படி இருந்தபோது அன்றைக்கு மாநகராட்சியில் இருந்தவர்கள் முன்னுரிமை பெற்று

நடவடிக்கை எடுத்திருக்கலாம். அப்போது வேகமாகச் செயல்பட்டிருந்தால் இந்த நிலைமைகள் வந்திருக்காது. எனவே இப்போது செயல்படும் எங்களைப் பாராட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Better late than never, Sir. From that point of view, I certainly congratulate the Hon. Minister on having brought forth this Bill at least in April 1981. But, the point really is this. In some cases it may be entirely justified. It is not as if there is no justification in respect of all the buildings that have been constructed. Perhaps, even now, if the Government go case by case, they may find some exceptions and they may find that some of the irregularities have to be regularised. My point is that in the area of the Corporation of Madras we have created the Madras Metropolitan Development Authority which is in charge of the entire construction proposals in the sense that for zoning, etc. they have to say whether multi-storeyed buildings can be put up or whether they should not be put up. The real point is that there seems to be a lack of co-ordination between the Corporation and the M.M.D.A. which is now being felt by the citizens of Madras. When they submit building proposals for sanction, there is tremendous delay and it takes one year, 1 1|2 years or 2 years to clear a proposal. In these days when construction has to be done speedily, I would request the Hon. Minister kindly to expedite the procedures both in the MMDA as well as in the Corporation of Madras so that persons who submit these proposals are not put to unnecessary grief and harassment. This is one of the very important things that we have to attend do.

The other thing which I would like to mention here is that from 1974 the Corporation has had no elected representatives, fortunately. If we had elected representative, people would have said that elected representatives had been responsible for all these irregularities and some escape-clause would have been there. I would like to remind the Hon. Minister that right from 1974 when the Corporation was superseded, it has been run entirely by Special Officers. Therefore, whatever faults have occurred can only be attributed to the Special Officers appointed by the Government. From that point of view also, the Government are primarily responsible for all the lapses and irregularities that have occurred in the Corporation. I am glad that at



least now, the Government have set a date so that such irregularities cannot be continued to be done in future. But I would like also to add one point, I think that, in the Madras Metropolitan Development Authority, there is a Board where non-officials also are represented. I also hope that all the vacancies have been filled up in that Development Authority. I have always been pleading that instead of packing these boards with non-officials who have little or no experience of urban development, we should invite architects and those who are qualified in urban development to sit on these boards so that their suggestions may be usefully examined by the Government. I would like to take this occasion when an amendment to this Act is being moved by the Hon. Minister to request him to have more experts, non-official experts, on the Madras Metropolitan Development Authority Board or whatever central body is in charge of the MMDA so that their advice may also be taken by the Government because this is certainly a very complicated Act. The Town and Country Planning Act has been in existence for a number of years and in no Municipality is any development plan observed as marked out by the Town and Country Planning

(முற்பகல் 11-20)

Act. It is a great handicap in this Act. We have power to do certain things but in the implementation, there are enormous difficulties. We had it even in 1959 and I know in Cuddalore Municipality we were not able to keep up to the development plans that were then framed by the Town and Country Planning authorities. That is why an Act was brought at alater dates I hope that such irregularities will be avoided in future and the procedure should be simplified for sanction of building proposals, zoning proposals and relaxations. Only two weeks ago, I found that certain roads in Madras City had been excluded from certain development plans of the M.M.D.A. Because of new multi-storeyed buildings, there is tremendous pressure on certain roads. I would like the Hon. Minister to take a comprehensive view in considering these proposals, because permitting them to come up in certain crowded areas will create remendous problems for us in future. This is all that I wanted to say. I hope the Hon. Minister will consider these suggestions.

திரு. ம. சங்கரலிங்கம்: துணைத் தலைவரவர்களே, நகர நாட்டுப்புறத் திட்ட அமைப்பு திருத்தச் சட்ட முன்வடிவை மிக எளிதான ஒரு சிறிய சட்ட

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 ஏப்ரல் 25

முன்வடிவைப்போல் கருதி இங்கே மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் உண்மையில் பல சட்ட மீறல்களை ஒழுங்குபடுத்துகிற சட்ட முன்வடிவு இது. அதோடு நீதி மன்றத் தீர்ப்பு எப்படி இருந்தாலும்கூட அதையும் ஒழுங்குபடுத்துவதற்கான வழிவகையையும் உட்படுத்தி இங்கே இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கே முன்பு சொல்லியதுபோல எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அதாவது 1971 ஆம் ஆண்டில் தொடங்கி எங்கள் ஆட்சி 1½ ஆண்டும் இந்த ஆட்சி 3½ ஆண்டும் சம்பந்தப்பட்டிருக்கிறது. இதில் தொடக்கத்தை விட மத்திய காலத்தில்தான் மீறல்கள் அதிகமாக நடைபெற்றிருக்கலாம். எந்தெந்தக் கட்டிடங்கள் விதிக்கு மாறாக முறைகேடாகக் கட்டப்பட்டிருக்கின்றன என்கிற பட்டியலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தந்திருந்தால் மிகவும் பயனுள்ளதாக இருந்திருக்கும். முன்பிருந்த மாநகராட்சி புனரமைப்புச் சட்டத்திற்கு மாறாக, 1971 ஆம் ஆண்டைய சட்டத்திற்கு மாறாக, மாநகராட்சி அதிகாரிகள் அரசின் ஒப்புதலை எதிர்பார்த்து வழங்கிய அனுமதி குறித்து நீதிமன்றங்கள் எதிராகத் தீர்ப்புகள வழங்கியிருக்கின்றன. அவ்வாறு அனுமதியை வழங்கியது தவறு என்று தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யார் யார் இந்தச் சட்டத்தின் மூலம் நன்மை அடையப் போகிறார்கள் அல்லது விதிவிலக்குப் பெறப் போகிறார்கள் அல்லது யார் யாருடைய கட்டிடங்கள் எல்லாம் விதிவிலக்கு அடையப் போகின்றன போன்ற விவரங்களை இந்த அவைக்குத் தந்திருக்க வேண்டும். அப்படித் தந்திருந்தால் எப்படி எங்கே தவறு நடைபெற்றது என்பதைக் கண்டு பிடிக்கவும் இனிமேல் அவ்வாறு நடைபெறாமலிருக்கும் வகையில் பாதுகாப்பு அளிக்கவும் வாய்ப்பாக அது அமைந்திருக்கும். இப்போது தந்திருக்காவிட்டாலும்கூட இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே இந்தச் சட்டத்தின் மூலம் பயனடைகிற அல்லது நீதிமன்றத் தீர்ப்பினையே மிஞ்சி நன்மை பெறப்போகிற உரிமையாளர்கள் யார் யார்; கட்டிடங்கள் எவை எவை, மனைகளுடைய பரப்பளவு எவ்வளவு; பிளின்த் ஏரியா எவ்வளவு போன்ற விவரங்களை இந்த அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால் 1920-வது வருட நகர புனரமைப்புச் சட்டம் ஏற்கெனவே இருக்கிறது. 1920 ஆம் ஆண்டு சட்டத்தைப் பொறுத்தவரையில் நன்றாகத் திட்டமிட்டு மாநகராட்சியினுடைய புனரமைப்பு சம்பந்தப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் பிறகு 1971 ஆம் ஆண்டிலே சட்டம் கொண்டு வரப்பட்டு அது 1974 ஆகஸ்ட் மாதத்திலிருந்து அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.



1981 ஏப்ரல் 25] [திரு. ம. சங்கரலிங்கம்]

அதற்கும் மாறாக ஒரு கட்டிடம் கட்ட வேண்டுமென்று சொன்னால் எவ்வளவு ஓப்பன் ஸ்பேஸ் இருக்க வேண்டும், சாலையிலிருந்து எவ்வளவு உள்ளே தள்ளி கட்டிடம் இருக்க வேண்டும், எப்படி பொதுச் சுகாதாரத்திற்குப் பாதகம் ஒன்றும் இல்லாமல் அது அமைய வேண்டும் என்று இருக்கின்ற விதிமுறைகளை எல்லாம் மீறி கட்டிடங்களைக் கட்டியுள்ளார்கள். இதன் காரணமாகப் பக்கத்தில் குடியிருப்பவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். அதன் பிறகு மாநகராட்சியினர் அல்லது மாநகராட்சி ஆணையாளர் அல்லது அதற்குப் பொறுப்பானவர்கள் அவ்வாறு அனுமதி கொடுத்தது தவறு என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. யார் யாருக்கு நீதிமன்றம் அப்படித் தீர்ப்பு வழங்கியதோ அவர்களிடத்திலிருந்து எல்லாம் அரசாங்கம் ஏன் நஷ்ட ஈடு வாங்கக் கூடாது, அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றும் மாண்புமிகு அமைச்சரிடத்திலிருந்து நான் அறிய விரும்புகிறேன். அதற்கான புள்ளி விவரங்களையும் அமைச்சர் தந்திருக்கலாம். அது ஒன்றும் பெரிய காரியமல்ல. அது இல்லாமல் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அப்படியானால் சட்டத்தை மீறியவர்கள், சட்டத்திற்குப் புறம்பாகத் தவறுகளைச் செய்தவர்கள் இப்படிப்பட்டவர்களையெல்லாம் நல்லவர்களாக ஆக்க இச்சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்றுதான் பொருள். பொதுவாகவே சட்டத்தைக் கொண்டு வருவதே சட்டத்தைக் கண்டு பயப்படுபவர்களுக்காகத்தான். மீறுபவர்கள் எப்போதும் மீறிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படி மீறியதைப் பார்த்து பிறகு திருத்தச் சட்டம் கொண்டு வருகிறார்கள். இது எல்லாத் துறையிலும் இருக்கிறது. ஆகவே சட்டத்தைக் கொண்டுவரும்போது மீறல் இருக்காமல் இருக்கும் வகையில் சட்டங்கள் அமைய வேண்டும். வளர்ந்து கொண்டிருக்கிற அகில இந்தியாவில், அகில உலகிலேயே தலை சிறந்த அழகிய ஒரு நகரமாக சென்னை மாநகர் இருக்கிறபொழுது இதனுடைய அழகு கெடுகிற வகையில் பெரிய பெரிய கட்டிடங்களையெல்லாம் ரோட்டின் ஓரங்களில் கட்டுகிறார்கள். இன்னும் சில இடங்களில் பெரிய பெரிய கட்டிடங்களைக் காற்று வராமல் தடை செய்யும் வகையில், சுகாதாரக் கேடு ஏற்படும் வகையில் கட்டுகிறார்கள்.. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பொறுப்பில் இருப்பதால் இன்னொன்றையும் நான் சொல்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில்தான் டவுன் பிளானிங்கும் இருக்கிறது. அங்கேதான் இன்றைக்கு எதற்கும் ஒரு 'பிக்சட் ரேட்' இருக்கிறது. 'பிளான்' வரைய இவ்வளவு, 'அப்ரூவல்' பண்ண இவ்வளவு, 'ஆதரைஸ்' ஆக இவ்வளவு. 'அன்-ஆதரைஸ்ட் பீஸ்' இவ்வளவு என்று ஒவ்வொன்றுக்கும் 'பிக்சட் ரேட்' இருக்கிறது. இது நிரந்தரமான

ஒன்றாக நெறிமுறையாகி ஆகிவிட்டது. இந்த பிக்சட் ரேட்டை ஒருவன் கொடுக்காமல் விட்டால் அவனுக்குக் கிடைக்கின்ற பட்டம் அறிவில்லாதவன். கொடுப்பவன் அறிவுள்ளவன் என்று சொல்லுகிற நிலை இருக்கிறது. இப்படிப் பட்ட செயலைச் செய்கின்ற 'டவுன் பிளானிங் ஆபீசர்ஸ்' யார் யார் என்று அறிய வேண்டுமானால் அவர்களுடைய சொத்துக் கணக்கு எவ்வளவு என்று ஆராய்ந்து பார்த்தாலேயே முழு விவரங்களும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியவரலாம். இந்த நிலை இன்றைக்கு சென்னை மாநகரில் மட்டுமல்லாமல் எல்லா டவுன்களிலும், எல்லா வில்லேஜ்களிலும் இருக்கிறது. வில்லேஜ்களில்கூட 'எக்சிகியூட்டிவ் ஆபிசர்ஸ்' என்று இருக்கிறார்கள். அவர்கள் பேர்மிட் வழங்க வேண்டும். அவர்களிடம் ஒரு காம்பவுண்ட் சுட்ட வேண்டுமென்று மனு கொடுத்தால்கூட அதில் 2½ ரூபாய் மதிப்புள்ள ஸ்டாம்பு ஒட்ட வேண்டும் அதோடுகூட 50 ரூபாய் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் தான் பேர்மிட் வழங்குவார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, கொடுத்தால்தான் பேர்மிட் வழங்குவார்கள். ஒருவேளை அமைச்சர்களாக இருந்தால் அப்படி வாங்காமல் வழங்கலாம். விதிக்கு உட்படாத ஒன்றை இவர்கள் நாட்டிலே செய்துகொண்டே இருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். டவுன் பிளானிங், வில்லேஜ் பிளானிங், கண்ட்ரி பிளானிங் இவைகளில் நடைபெறுகிற ஒழுங்கீனங்கள் போக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டாக வேண்டும். எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் விதிவிலக்கே கொடுக்கக்கூடாது. அப்படி முறைகேடாகக் கட்டிடங்களைக் கட்டுகின்றவர்களுக்கு விதிவிலக்கு அளிப்பது தவறு. முறைகேடாகக் கட்டிடங்களைக் கட்டுவதைக் கட்டுப்படுத்த ஒழுங்குபடுத்த சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லிக்கொண்டு அதே நேரத்தில் விதிவிலக்கையும் அளித்தால் அநீதி வென்றது என்று பொருள். தொடர்ந்து இப்படிப்பட்ட ஒழுங்குபடுத்துகிற சட்டங்களைக் கொண்டு வந்து கொண்டே இருந்தோம் என்றால் பணம் வென்றது என்று பொருள். இவ்வளவு காலத்திற்குப் பிறகாவது கொண்டு வந்தார்களே என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். ஆனால், நான் அவ்வாறு பாராட்டவில்லை. நாங்கள் ஆட்சி நடத்திய காலத்தில் இந்த அரசு காலத்தைவிட அதிகமாக நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், நான் வெட்கத்தை விட்டு வருத்தப்படுகிறேன். அதுபோல் இந்த ஆட்சியில் எங்கள் ஆட்சியைவிட அதிகமாக நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், அதை இந்த அரசும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லி நான் சொல்லியுள்ள பட்டியலை விரைவிலே வெளியிட வேண்டுமென்று கேட்டு, அமைகின்றேன்.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவரவர்களே, நகர-நாட்டுப்புறத் திட்ட அமைப்பு திருத்தச் சட்ட முன்வடிவு மீது நடைபெற்ற விவாதத்திலே 7 மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்துகொண்டு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். வழக்கத்திற்கு மாறாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி பாராட்டினார். எப்போதும் போல் ஒளிவு மறைவு இல்லாமல் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் போகாமல் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். இறுதியாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் "எங்கள் ஆட்சிக் காலத்தை விட உங்கள் ஆட்சிக் காலத்தில் அதிகமாக சட்ட மீறல்கள் நடைபெற்றிருக்கின்றன என்றால் நீங்கள் வருத்தப்படுங்கள். எங்கள் ஆட்சிக் காலத்தில் உங்கள் ஆட்சிக் காலத்தை விட அதிகமாக நடைபெற்றிருக்கின்றன என்றால் நான் வருத்தப்படுகிறேன்" என்று சொன்னார்கள். யார் ஆட்சிக் காலத்தில் தவறு அதிகமாக நடைபெற்றிருக்கிறது, யார் ஆட்சிக் காலத்தில் தவறு குறைவாக நடைபெற்றிருக்கிறது என்கிற பார்வையில் அல்லது அதற்கு மேல் நடவடிக்கை எடுப்பது என்கிற நோக்கத்திலே நான் பேசுவதாக இல்லை. எக்சர்சைஸ் இன் பியுட்டிலிட்டி (Exercise in futility) என்று சொல்லுவார்களே அது போல் இந்த நேரத்தில் அது தேவையில்லாத ஒன்று. அதோடுகூட தனிப்பட்ட ஒருவர்கூட இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தவறு செய்யவில்லை. கார்ப்பரேஷனில் உள்ளவர்கள்தான் அரசின் அனுமதியை முன்கூட்டியே பெறாமல் அவர்களாகவே பில்டிங் கட்டுவதற்கான அனுமதியைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவேதான் தவறு செய்தவர்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இராமமூர்த்தி அவர்களும் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும் குறிப்பிட்ட மாதிரி கார்ப்பரேஷன் அபிசியல்ஸ்தான். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஆகவே தனிப்பட்டவர்கள் முறையாக பில்டிங் லைசன்ஸை வாங்கிக்கொண்டு தான் கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

1938 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் தேதி நம்முடைய கத்தீட்ரல் ரோடு ஏரியாவுக்கு South Planning Area என்ற ஒரு திட்டம் கொண்டு வந்தார்கள். தனிப்பட்ட site எவ்வளவு பெரியதாக இருந்தாலும், ஒரு dwelling house தான் கட்ட வேண்டும் என்று இருந்தது. நம்முடைய Town and Country Planning Act of 1920-லே இருக்கக்கூடிய செக்ஷனை

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 ஏப்ரல் 25

போட்டி 1938-லே அப்படிக் கொண்டு வந்தார்கள். Whatever may be the size of the house-site. ஒரு dwelling house தான் இருக்க வேண்டும் என்று திருத்தம் வந்தது. இதற்கிடையில் அதாவது அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட 1938-க்கும், 1978-க்கும் இடையிலே இருந்த காலத்தில் சென்னையிலே மிகப் பெரிய இடம் காலியாக இருந்து இருக்கிறது. ஒரு dwelling house தான் கட்ட வேண்டும் என்று சொல்கிறீர்கள். அப்படியில்லாமல் நல்ல முறையிலே சென்னையிலே இருக்கும் காலியிடத்தைப் பயன்படுத்த வேண்டுமென்றும் ஆகவே ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் கட்ட அனுமதிக்க வேண்டும் என்றும் சொல்லி கார்ப்பரேஷனுக்கு மனுக்கள் போடப்பட்டன. 1972 ஜூன் முதல் அவர்கள் அரசுக்கு regularization செய்ய வேண்டும் என்று கடிதம் அனுப்பினார்கள். 1972 ஜூனில் கடிதம் எழுதியவர்கள் 1975 ஜனவரியில்தான் reminder அனுப்பினார்கள். 1972 ஜூனில் letter எழுதி விட்டு 1975-ல்தான் the have again addressed the Government. இதற்கிடையில் in anticipation of Government's ratification அவர்கள் building licence ஐக் கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறார்கள். என்னுடைய பேச்சை இப்போது கேட்ட பிறகு, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் கலைக்க வேண்டாம் என்று சொன்னாலும் சொல்லிவிடுவார்கள். It would not be palatable. ஆனால், நான் அதற்குத் தயாராக இல்லை. My intention is not that. இதற்கிடையில் இரண்டு சட்டங்கள் அமுலுக்கு வந்துவிட்டன. 15—8—1974-Town and Country Planning Act அமுலுக்கு வந்தது. எம்.எம்.டி.ஏ 5—8—1975-லே வந்தது. உடனே, 5—8—1975-லே எம்.எம்.டி.ஏ.-வுக்கு இதை transfer பண்ணினார்கள். எம்.எம்.டி.ஏ. 1978 ஜனவரியிலே பதில் எழுதியிருக்கிறார்கள். அப்போது ஆர்.டி.எல்.ஏ.-ல் இருந்தது அந்த subject 1—7—1978 முதல் அது Housing and Urban Development Department க்கு வந்தது. ஆர் டி எல் ஏ இலாகா எம் எம் டி ஏ-யிலிருந்து letter வரவில்லை என்று சொன்னார்கள். 15—8—1974-ல் Town and Country Planning Act அமுலுக்கு வந்தது. 1—10—1980-லே Development Control Rules அமுலுக்கு வந்தன. இந்த இடைவெளியில் வீடு கட்டியிருக்கிறவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். அவர்களாக அந்த வீடுகளைக் கட்டவில்லை. ஆகவே, அவர்கள் மீது குற்றம் இல்லை. அவர்கள் கார்ப்பரேஷனிடத்திலேயிருந்து Building Licence வாங்கிக் கட்டியிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகத்தான் இந்தச் சட்டமுன்



1981 ஏப்ரல் 25] [திரு. எஸ். இராகவானந்தம்]

வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, யார் அரசு உத்தரவை மீறியிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்தத் தேவையில்லை. கார்ப்பரேஷன் அதிகாரிகள் கொடுத்த லைசென்ஸ் படிதான் அவர்கள் கட்டியிருக்கிறார்கள். The Corporation Officials did it without getting prior sanction of the Government. அரசின் அனுமதியில்லாமல் அவர்கள் அனுமதியளித்தார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. ஆகவே, அந்த Town and Country Planning Act of 1971 அமுலுக்கு வந்த 15—8—1974-லேயிருந்து, Development Control Rules of 1—10—1980 அமுலுக்கு வந்த நாள் வரையில் இந்த இடைவெளியிலே கட்டப்பட்ட வீடுகளையெல்லாம் regularise பண்ணுவதன் மூலமாக அவர்களது வீட்டை இடிக்காமல் இருக்கப் பாதுகாப்புத் தருகிறோம் என்று சொல்லி இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவரவர்களே, ஒரேயொரு க்ளாரிபிகேஷன். கட்டிடம் கட்டியவர்கள் லைசென்ஸ் வாங்கியிருக்கிறார்கள். கார்ப்பரேஷன் அதிகாரிகள் லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அரசிடமிருந்து அவர்களுக்கு விவரம் வரவில்லை. இந்த மூன்றுக்கும் இடையிலே in anticipation ஆக licence பெற்றிருக்கிறார்கள். அப்படி அனுமதியில்லாமலேயே licence பெறும் அளவுக்கு இடையிலே என்ன நடந்தது ? இடையிலே இருந்த அந்த gap எப்படிப் பூர்த்தி செய்யப்பட்டது என்பதிலேதான் விஷயம் இருக்கிறது. அங்கேதான் அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள். அங்கேதான் லஞ்சம்-ஊழல் ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு அவசியமான பிரச்சினையானதால், இதைப் பரிசீலித்து இனிமேல் இந்தமாதிரி தவறுகள் நடைபெறாமலிருக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது கூட சொன்னார்கள். 'ரேட்' இருக்கிறது என்று சொன்னார்கள். அது பற்றி 'யாம் அறியோம் பராபரமே'. 'ரேட்' எப்போது fix பண்ணினார்கள் என்று தெரியாது. எம்.எம்.டி.ஏ.-வை பொறுத்தவரையில் நான் அதில் சேர்மேன். சேர்மேன் என்ற முறையிலே நான் தலைமைதாங்கி நான்கு-ஐந்து நாட்கள் கூட்டம் போட்டு காரியங்கள் ஆற்றியிருக்கிறோம். மேலவை உறுப்பினர் டாக்டர் ராஜா சர் அவர்களும் பேரவை உறுப்பினர்கள் டாக்டர் சௌரிராஜன் மற்றும் திரு. இளைய

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 ஏப்ரல் 25

பெருமாள் அவர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். டெக்னிக்கல் கமிட்டியைப் பொறுத்தவரையில், நிறைய கமிட்டிகள் இருக்கின்றன. எல்லாம் fill up ஆகிவிட்டன. No vacancy. நலமுறையில் செயல்படுகிறது. ஏதாவது தவறு எங்காவது நடந்தால், என்னைச் சந்தித்துச் சொல்லலாம், அல்லது கடிதம் மூலம் தெரிவிக்கலாம். ஆனால், தண்டனை கொடுத்தால் மட்டும் தயவுசெய்து உறுப்பினர் தலையிடாமல் இருக்க வேண்டும். கடுமையான தண்டனை கொடுப்பேன். சிபார்சுக்குத் தயவுசெய்து வரவேண்டாம். அப்படி வரும்போது இந்த ஒரு தடவைதான் தவறு செய்திருக்கிறார் என்று சொல்கிறார்கள். என்னுடைய argument எல்லாம் அவர் இந்த ஒரு தடவை தான் சிக்கியிருக்கிறார். அதுதான் என்னுடைய approach. அவர்கள் இப்படியே பல ஆண்டு காலமாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். இப்போதுதான் செய்திருக்கிறார், விட்டுவிடுங்கள் என்று சொன்னால் ஏற்றுக் கொள்ள மாட்டேன். கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். Government sanction வாங்க வேண்டும் என்று தெரிந்தும், இடையிலே in anticipation ஆக sanction கொடுப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லை. ஆக்ட்-லே இடமில்லை என்று தெரிந்தும், எப்படி கொடுத்தார்கள் என்பது விசாரிக்கப்படவேண்டிய ஒன்றுதான். விசாரிக்க வேண்டும் என்று கருதுகிறேன். யார் யார், எந்த அதிகாரிகள் கொடுத்தார்கள் என்று விசாரிக்கலாம் என்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMATHI TARA CHERIAN : Mr. Deputy Chairman, I feel that it will not be very fair to put all the blame on the Municipality which gave the licences for buildings. During the Emergency, with the coming into force of the urban land ceiling which is now almost removed, naturally, the rules for building licences had to be relaxed. The rule for providing a spacing of five feet both in the front and the back of a building has been relaxed and permission has been given.

THE HON. THIRU S. RAGHAVANANDAM : This is concerned only with the Cathedral Road South Area and not the entire Corporation area.

THIRUMATHI TARA CHERIAN : Then, it has not been stated so.

THE HON. THIRU S. RAGHAVANANDAM. It is very clearly stated.



1981 ஏப்ரல் 25]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புறத் திட்ட அமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1981 ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.”

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவர் அவர்களே,

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புறத் திட்ட அமைப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1981) நிறைவேற்றப்பட வேண்டும் ”

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புறத் திட்ட அமைப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1981) நிறைவேற்றப்பட வேண்டும் ”

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் 27—4—1981, திங்கட்கிழமை, காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர். அவை ஒத்திவைக்கப்பட்டது.

(முற்பகல் 11-39)

8. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

252. Notification issued with G.O. Ms. No. 2357, Agriculture, dated the 11th December 1980 relating to the control over the purchase and sale of tapioca chips, tapioca flour and tapioca starch, tobacco, coconut and its by-products, tamarind, onion and redgram in South Arcot district under section 3 of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

253. Notification issued with G.O. Ms. No. 915, Housing and Urban Development, dated the 17th July 1980, in regard to the Detailed Development plan for Chepauk Area, Triplicane Planning Unit 11.2, Madras City approved under section 28 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. (Tamil and English). [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

### *B. Reports, Notifications and Other Papers.*

* 132. Policy Note on Education. (Tamil and English.)

* 133. Performance Budgets on School Education, Collegiate Education and Technical Education, 1981-82. (English.)

** 134. Policy Note on Urban Development in Tamil Nadu, 1981-82. (Tamil and English.)

** 135. The First Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee on Estimates contained in its report on Fire Service. (1980-81). (Tamil.)

---

* Laid on the Table of the House on 24th April 1981.

** **Circulated to all M.L.Cs. on 24th April 1981.**



## இணைப்பு I

[31 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலுக்கா, ஆரல்வாய்மொழி கிராமத்திலுள்ள அழகியநகர் அரிசனக் குடியிருப்பில் 5—3—1981 அன்று இரவு சுமார் 7-30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. 81 குடியிருப்புகள் முழுவதுமாகச் சேதமடைந்தன. 18 குடியிருப்புகள் பகுதியாகச் சேதமடைந்தன. மொத்தச் சேதமதிப்பு சுமார் ரூபாய் 1 இலட்சம். தீ விபத்து தற்செயலாய் ஏற்பட்டது. உயிர்ச் சேதமோ, கால்நடைச் சேதமோ இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு அருகிலுள்ள ஒரு பள்ளியில் தங்க இட வசதி செய்து கொடுக்கப்பட்டது. உள்ளூர் மக்கள் மனமுவந்து கொடுத்த அரிசியில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் காலை உணவு தயாரித்து வழங்கப்பட்டது. முழுவதும் சேதமடைந்த குடியிருப்புகளுக்குத் தலா ரூபாய் 200-ம் பகுதியாகச் சேதமடைந்த குடியிருப்புகளுக்குத் தலா ரூபாய் 50-ம் நிவாரணமாக வழங்கப்பட்டது. இதைத் தவிர பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றிற்கும் அரிசி, வேட்டி மற்றும் புடவைகள் வழங்கப்பட்டன.

## இணைப்பு II

[33 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அரசாணைகள் எண் 1297 மற்றும் 1298, கல்வி, நாள் 21—7—1979-ன்படி நடுநிலைப் பள்ளிகளில் செகண்டரி கிரேடு தலைமை ஆசிரியர் பதவிகள் காலி விழும்போது அப் பள்ளியில் செகண்டரி ஆசிரியர் அல்லது இதர பதவிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியராகப் பணி செய்வோருள் பி.எட்./தமிழ்ப் புலவர் தகுதி பெற்றவர்களில் யார் அதிக பணி மூப்புடையவரோ அவரை தலைமை ஆசிரியராக நியமித்து அவருக்கு பி. எட். சம்பள விகிதத்தின் சம்பளம் தர வேண்டும். அப்படி நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி நிரந்தரமாக காலி விழும்போது அந் நிர்வாகத்தின் கீழுள்ள ஆசிரியர்களுள் எவரும் பி.எட்./தமிழ்ப்புலவர் தகுதி பெற்றிராவிட்டால் அக் காலியிடத்தை முதல் நிலை தமிழ் ஆசிரியரைக் கொண்டு (வெளியிலிருந்து புது நியமனம் செய்தோ அல்லது வேறு நிர்வாகத்தில் இருந்து மாற்றுதல் மூலம் நியமனம் செய்தோ) நிரப்ப வேண்டும். அப்படி நியமனம் செய்பவர்களுக்கு பி.எட். சம்பள விகிதம் தரப்படும். வெளியிலிருந்து பி.டி./பி.எட். ஆசிரியர்களைக் கொண்டு இப் பணியிடங்களை நிரப்பக்கூடாது.

இத் திட்டம் தமிழ்ப் பண்டிதர் தகுதி பயின்றவர்களுக்கு வாய்ப்பளிக்கும் நன்னோக்குடன் ஏற்படுத்தப்பட்டது. இதனால் தமிழ்ப் பண்டிதர் தகுதி யுடைய பலர் பயனடைந்துள்ளனர். பொதுவாக, உயர்நிலைப் பள்ளிகளில் பி.டி. பணியிடங்கள் அதிகமாக வழங்கப்படுகின்றன. ஆனால், தமிழ் ஆசிரியர் கட்கு அதிக வாய்ப்பில்லை. எனவே, பி.ஏ., பி.டி. படித்தவர்களைக் காட்டி லும் தமிழ்ப் பண்டிதர்களுக்கு வேலை வாய்ப்பு குறைவே. இந் நிலையில் இவ் வாய்ப்பை பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அளித்தால் இத் திட்டத்தால் பயனடைய வேண்டிய தமிழ்ப் பண்டிதர் தகுதியுடையவர்கள் பலர் பாதிக்கப் படுவர். தவிர, உயர் ஆரம்பப் பள்ளிகளில் தமிழ் போதனைக்கு ஊக்கமும் ஆக்கமும் தரவே அரசு இம் முடிவை எடுத்துள்ளது. எனவே, தற்போதுள்ள முறையை தொடர்ந்து நீடிக்கச் செய்யலாம் என அரசு கருதுகிறது.

## இணைப்பு III

[34 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாடு பொது நூலக அலுவலர்கள் ஒன்றியத்தின் ஆறு அம்ச கோரிக் கைகளும், அதற்கான விளக்கங்களும் பின்வருமாறு :

**1. பொது நூலக ஊழியர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டும்.**

நூலக ஆணைக்குழுக்களின் கீழ் இயங்கிவரும் நூலகங்கள் மற்றும் அவை களின் ஊழியர்களின் பணியைப் பரிசீலித்து சீரமைக்க "நூலக சீரமைப்புக் குழு" ஒன்று அமைக்கப்பட்டது. அக் குழு நூலக ஊழியர்களை அரசு ஊழியர்களாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசுக்குப் பரிந்துரை செய்தது. அப் பரிந்துரையை செயல்படுத்தினால் ஏற்படும் விளைவுகளை கருத்தில் கொண்டு, நூலக ஊழியர்களை அரசு ஊழியர்களாக எடுக்க வேண்டாம் என முடிவு செய்யப்பட்டது. அம் முடிவை அரசு ஏற்றுக் கொண்டது. ஆனால் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் எல்லா சலுகைகளும் நூலக ஊழியர்களுக்கும் உடனுக்குடன் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

**2. தமிழ்நாடு பொது நூலகத்துறை அலுவலர்கள் ஒன்றியத்திற்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும்.**

தற்போதுள்ள நூலக ஆணைக்குழு அமைப்புப்படி ஒவ்வொரு மாவட்டமும் தனித்தனி அமைப்பாக செயல்பட்டு வருகிறது. ஆகையால் மாவட்ட அளவில் சங்கங்களை அமைக்கவும் அங்கீகாரம் அளிக்கவும் ஏற்கெனவே அர





சாணை வெளியிடப்பட்டுள்ளது. நூலக ஆணைக்குழு ஊழியர்களின் பணியை மாநில அளவில் ஒருமைப்படுத்தி செயல்படுத்தும்போது, மாநில அளவிலான சங்கத்திற்கு அங்கீகாரம் வழங்குவது குறித்து பின்னர் பரிசீலனை செய்யப் படும்.

**3. திரு. சீனிவாசன், இ.ஆ.ப. சீரமைப்பு கமிட்டியின் பரிந்துரைகளின்படி அரசு வெளியிட்டுள்ள அரசாணை (நிலை எண் 1408, நாள் 25—7—1980-ஐ பாதிப்பு இல்லாமல் அமுல்படுத்த வேண்டும்.**

திரு. சீனிவாசன், இ.ஆ.ப. அவர்களின் பரிந்துரையை செயல்படுத்தும் போது, தற்பொழுது பணியில் உள்ள நூலக ஆணைக்குழு ஊழியர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் பாதுகாப்பு வழங்குவதைக் குறித்து அரசு பரிசீலனை செய்து முடிவு செய்யும்.

**4. சில்லரைச் செலவு பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டும்.**

இதைக் குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

5. பணியில் சேர்ந்த நாள் முதல் பணியைக் கணக்கிட்டு மூன்றாம் நிலை நூலகங்களுக்குத் தேர்வு நிலை வழங்க வேண்டும்.

மூன்றாம் நிலை நூலகர்கள் எஸ்.எஸ்.எல்.சி.-யும் நூலகவியல் சான்றிதழ் படிப்பும் உள்ளவர்களுக்கு, அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்தே 10 ஆண்டுகள் கணக்கிடப்பட்டு தேர்வுநிலை வழங்கப்பட்டு வருகிறது. மேற் குறிப்பிடப்பட்டுள்ள நூலகவியல் சான்றிதழ் பெறாதவர்களுக்கு, அவர்கள் அந்தச் சான்றிதழ் தகுதி பெறும் நாளிலிருந்து 10 ஆண்டுகள் கணக்கிடப்பட்டு தேர்வுநிலை வழங்கப்படுகிறது.

**6. தர்மபுரி, தென்னாற்காடு, இராமநாதபுரம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங் களில் பணிபுரிவோருக்கு ஊதிய நாளில் ஊதியம் வழங்க வேண்டும்.**

மாவட்ட நூலக ஆணைக்குழுக்களுள் போதுமான நிதி வசதி இல்லாத நூலக ஆணைக்குழுக்களுக்கு நல்ல நிதிநிலைமைகளை நூலக ஆணைக்குழுக் களின் உபரி நிதியிலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை மாற்றுவதற்கும் அதற்கு மேல் தேவைப்பட்டால் அரசு நிதியிலிருந்து சிறப்பு மானியம் வழங்கு வதற்குமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## இணைப்பு IV

[36 ஆம் பக்கத்தில் இனம் 5 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

சங்கரன் கோவிலிலுள்ள கைத்தறி நெசவு நிறுவனங்கள் மற்றும் அதில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட ஊதிய உயர்வு மற்றும் இதர கோரிக்கைகள் பற்றிய தொழில் தகராறில் 24—5—1975 அன்று திருநெல்வேலி தொழிலாளர் துறை அலுவலரின் முன்பு தொழில் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தில் மேற்கூறிய ஊதிய உயர்வு மற்றும் இதர பிரச்சனைகளை மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையரின் முடிவிற்கு விட இருதரப்பினரும் சம்மதித்தனர். இது தவிர 23—3—1975 அன்று ஏற்கனவே கோவில்பட்டி கோட்ட ஆட்சியாளர் (ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்) மற்றும் கோவில்பட்டி காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர் முன்பு ஏற்கப்பட்ட ஒரு தீர்மானத்தின் படி சங்கரன்கோவிலிலுள்ள விசைத்தறி மற்றும் கைத்தறி நெசவு நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களின் ஊதிய உயர்வு மற்ற பிரச்சனைகளை மதுரை, தொழிலாளர் துறை துணை ஆணையரின் முடிவிற்கு விட ஒப்புக் கொள்ளப் பட்டது. இவ்விரு ஆதாரங்களையும் கருத்தில் கொண்டு, மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையர் 30—1—1980 அன்று விசைத்தறி மற்றும் கைத்தறி நெசவு தொழிலாளர் ஊதிய உயர்வு மற்றும் இதர கோரிக்கைகள் பற்றி தனது முடிவை அறிவித்தார்.

2. இதற்கிடையில் சண்முகம் அண்ட் கோ., என்னும் நிறுவனத்தார் சென்னை உயர்நீதி மன்றத்தில், ஒரு ரிட் மனு தாக்கல் செய்து, கீழ்க்கண்ட காரணங்களுக்காக மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையரின் முன்பு நிலுவையில் உள்ள நடுவர் நடவடிக்கைகளைத் தடை செய்ய வேண்டும் என்று கோரினர்.

(1) தொழிலாளி-முதலாளி உறவு இல்லை.

(2) முதலாளிகள் சங்கம் 24—5—1975 ஒப்பந்தத்தில் சேர அதிகாரம் இல்லை.

(3) தொழில் தகராறு சட்டம் பிரிவு 10-ஏ முறைகளைப் பின்பற்றவில்லை. ஆனால் இந்த மேல்முறையீட்டு மனுவை (ரிட்) சென்னை உயர்நீதி மன்றம் நிராகரித்து, மேற்கூறிய ஆட்சேபணைகள் நடுவர் முன்பு எழுப்பப்பட வேண்டியவை என்றும், அன்னார் இவற்றை முடிவு செய்வார் என்றும் குறிப்பிட்டு தீர்ப்பு கூறியது.



3. சங்கரன்கோவில் விசைத்தறி உரிமையாளர்கள் சங்கம், மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு மீண்டும் மனு செய்து அன்னாரது முடிவை மறு பரிசீலனை செய்யுமாறும் விசைத்தறி நிறுவனங்களை அன்னாரது தீர்ப்பிலிருந்து நீக்குமாறும் கேட்டுக் கொண்டனர். இம்மனுவின் மீது திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் மனுவில் கண்ட கோரிக்கையை, ஏற்க இயலாது என்று 25—3—1981 அன்று ஆணை பிறப்பித்தார்.

மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையரின் 30—1—1980 ம் தேதிய முடிவின்படி தொழிலாளர்கள் சாதாரண ரகம் தவிர மற்ற ரகங்களுக்கு 20 சதவீதம் ஊதிய உயர்வும் மற்றும் 4½ கஜம் சேலைகளுக்கு ஒரு சேலைக்கு 0.40 பைசா ஊதிய உயர்வும் பெறுவர். இந்த உயர்வுகள் 19—4—1979 லிருந்து ஒரு வருட காலத்திற்கு அமுலில் இருக்கும். ஊதிய பாக்கி 1—3—80 அல்லது அதற்கு முன்போ கொடுக்கப்பட வேண்டும்.

4. கைத்தறி நெசவு நிறுவனங்கள் மேற்கூறிய தீர்ப்பில் கண்டுள்ளவாறு ஊதிய உயர்வு கொடுப்பது சாத்தியமில்லை என்று கூறுகின்றனர். ஆனால் கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலாளர்கள் இத்தீர்ப்பை அமுல்படுத்த வேண்டும் என்று கோரி கீழ்க்கண்டவாறு நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் :—

(1) 9—3—1981 அன்று சங்கரன்கோவில் வட்டாட்சி அலுவலர் முன்பு ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம்.

(2) 16—3—1981 அன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மற்றும் ஊர்வலம், பொதுக்கூட்டம்.

(3) 19—3—1981 முதல் 25—3—1981 முடிய ஒவ்வொரு கைத்தறி மற்றும் விசைத்தறி நிறுவனங்கள் முன்பு மாலை 6-00 மணி முதல் 7-30 மணி வரை தர்ணா போராட்டம்.

(4) 26—3—1981 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம்.

(5) 30—3—1981 அன்று கைத்தறி மற்றும் விசைத்தறி உரிமையாளர்களின் சங்கங்களின் செயலர்களின் வீட்டின் முன்பு மறியல் போராட்டம்.

5. சுமார் 5,000 விசைத்தறித் தொழிலாளர்களும் சுமார் 3,000 கைத்தறித் தொழிலாளர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

6. தொழிலாளர்கள் கீழ்க்கண்ட சங்கங்கள் மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர் :—

(1) நெல்லை மாவட்ட பொதுத் தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யு.), சங்கரன்கோவில்.

(2) தொகுதி அண்ணா கைத்தறி நெசவாளர் சங்கம் (அண்ணா தொழிற் சங்கப் பேரவை), சங்கரன்கோவில்.

(3) கைத்தறி அண்டு விசைத்தறித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் (தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை) சங்கரன்கோவில்.

(4) எம்.எஸ்.டி.எஸ். பேக்டரி சங்கம், சங்கரன்கோவில்.

(5) சங்கரன்கோவில் தாலுக்கா கைத்தறி விசைத்தறி அண்ட் பொதுத் தொழிலாளர் சங்கம் (ஏ.ஐ.டி.யு.சி.), சங்கரன்கோவில்.

7. கைத்தறி மற்றும் விசைத்தறி உரிமையாளர்கள் கீழ்க்கண்ட சங்கங்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர்) :—

(1) கைத்தறி உற்பத்தியாளர்கள் சங்கம் (மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன்), சங்கரன்கோவில்.

(2) விசைத்தறி உரிமையாளர் சங்கம், சங்கரன்கோவில்.

8. 26—3—1981 அன்று திருநெல்வேலி தொழிலாளர் துறை அலுவலர் தொழிற்சங்கங்களைச் சந்தித்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டாமென்று அறிவுறுத்தியும் தொழிற்சங்கங்கள் ஏற்கவில்லை. 30—3—1981 அன்று இது சார்பாக திருநெல்வேலி தொழிலாளர் துறை ஆணையர் நடத்திய பேச்சு வார்த்தைகளினால் சமரசம் ஏற்படாததால் 6—4—1981ல் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் முன் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அந்தப் பேச்சு வார்த்தைகளும் வெற்றி பெறவில்லை. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் 8—4—1981 அன்று நெசவாளர்கள் சங்கரன்கோவில் நகரில் ளர்த்தால் அனுசரித்தார்கள் என்றும் எல்லாக் கடைகளும் மூடப்பட்டன என்றும், ஆனால் போக்குவரத்து பாதிக்கப்படவில்லை என்றும் மற்றும் சில நெசவாளர்கள் ஒன்று சேர்ந்து மாஸ்டர் நெசவாளர்களின் இல்லங்களைக் கற்களால் தாக்கினார்கள் என்றும், மேலும் சுமார் 500 ரூபாய் மதிப்புள்ள மூன்று வைக்கோல் போர்களுக்கும், ஒரு மோட்டார் சைக்கிளுக்கும் தீ வைத்தனர் என்றும் திரு. சுப்பிரமணிய முதலியார் சகோதரர்கள் அவர்களின் விசைத்தறித் தொழிற்சாலையில் வைக்கப்பட்டு இருந்த நூல்களுக்கும் தீ வைக்கப்பட்டது என்றும் கூறியுள்ளார். இதனால் நஷ்டம் ரூ. 10,000 இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இதே தொழிற்சாலையில் வைத்திருந்த சில நெல் மூட்டைகளும் நெருப்பினால் சேதம் விளைவிக்கப்பட்டன. காவல் துறை அதிகாரிகளும், வருவாய்த் துறை அதிகாரிகளும் அன்று ஸ்தலத்திற்கு வந்து மேலும் கலவரம் அதிகம் ஏற்படாமல் தடுத்தனர் என்றும், காவல் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைத் தேடிக்கொண்டு உள்ளார்கள் என்றும் கோயில்பட்டி துணை ஆட்சியாளரும், திருநெல்வேலி காவல் துறை தலைமை கண்காணிப்பாளரும் (Superintendent of Police) நிலைமையை கவனித்து வருகிறார்கள் எனவும் மூடப்பட்ட கடைகள் 8—4—1981ம் தேதி மாலையே திறக்கப்பட்டு நகரில் அமைதி நிலவி வருகிறது என்றும் நிலைமையை தான் உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் இப்பொழுது சங்கரன்கோவிலில் பதட்ட நிலை இல்லை என்றும் மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார்.

சங்கரன்கோவில் விசைத்தறி உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையரின் 30—1—1980-ம் நாள் தீர்ப்பிற்கு (Award) எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு (writ) தாக்கல் செய்துள்ளனர் என்றும் மேற்குறிப்பிட்ட மதுரை தொழிலாளர் துணை ஆணையாளரின் தீர்ப்பின் (Award) மீது சென்னை உயர்நீதி மன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் தொழிலாளர் நல ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும் இந்தத் தடை உத்தரவின்படி மேற்படி மேல் (writ) தனி நீதிபதி ஒருவரின் தீர்ப்பின் மீது, சங்கரன்கோவில் விசைத்தறி உற்பத்தியாளர்கள் சங்கத்தினால் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டு இருப்பதனால் இந்தத் தடை உத்தரவு விசைத்தறித் துறைக்கு மட்டுமே பொருந்தும். கைத்தறி உற்பத்தியாளர்கள் சங்கம் இந்த மேல் முறையீட்டு (writ) மனுவில் ஒரு கட்சியாகச் சேரவில்லை. இருந்த போதிலும் தொழிலாளர் நலத் துறை துணை ஆணையாளரின் தீர்ப்பை முதலாளிகள் ஒரு குழுவாக ஒன்று சேர்ந்து மேல் முறையீட்டு மனு மூலம் எதிர்ப்பதால் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு வரும்வரை துணை ஆணையரின் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதைத் தள்ளி வைக்கலாம் எனத் தொழிலாளர் ஆணையர் கருத்து தெரிவித்துள்ளார்.

இணைப்பு V

[41 ஆம் பக்கத்தில் இனம் 6-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

---

## L.A. BILL No. 36 OF 1981.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Town and Country Planning Act, 1971.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Town and Country Planning (Amendment) Act, 1981.

(2) Section 2 shall be deemed to have come into force on the 15th August 1974 and remained in force up to and inclusive of the 1st October 1980.

2. *Insertion of new section 34-A in Tamil Nadu Act 35 of 1972.*—After section 34 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972), the following section shall be inserted, namely:—

" 34-A. *Special provision for sanction of building plan in certain cases.*—Notwithstanding anything contained in this Act or in any other law relating to local authorities for the time being in force, or in any detailed development plan, made or deemed to be made under this Act, the Municipal Corporation of Madras may sanction any building plan,—

(i) providing for the construction of more than one dwelling house on any one site; or

(ii) providing for the construction of any building with variation in regard to requirement of plot extent or plot coverage or open space.".

3. *Validation of certain building plans sanctioned by the Municipal Corporation of Madras.*—Notwithstanding anything contained in the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972) (hereinafter referred to as



the said Act) or in any other law relating to local authorities for the time being in force, or in any detailed development plan, made or deemed to be made under the said Act, or in any judgment, decree or order of any court or other authority, any building plan, sanctioned during the period commencing on the 15th August 1974 and ending with the 1st October 1980, by the Municipal Corporation of Madras providing for the construction of more than one dwelling house on any one site or providing for the construction of any building with variation in regard to requirement of plot extent or plot coverage or open space shall be deemed to have been validly sanctioned by the said Municipal Corporation of Madras in accordance with law, as if section 2 of this Act had been in force at all material times and any building constructed or under construction in pursuance of such building plan shall not be deemed to have been or to be undertaken or carried out unlawfully, on the ground that such construction provides for more than one dwelling house or varies in regard to the requirement of extent of plot or plot coverage or open space.

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

திங்கட்கிழமை, 1981 ஏப்ரல் 27.

சித்திரை 15, துன்மதி—திருவள்ளுவராண்டு 2012.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில், முற்பகல் 9-30 மணியளவில், மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* வினா எண்கள் 257 மற்றும் 258 ஆகியவை இரண்டும் ஒத்தி வைக்கப்படுகின்றன.

### *Environmental pollution.*

* 259 *Q.*—Thiru K. ARUNACHALAM (on behalf of Thiru K. RAMAMOORTHY) : Will the Hon. the Minister for Health be pleased to state the action taken against the Sugar Industries, Breweries, Leather Tanneries and other Industries, the effluents of which pollute the nearby rivers, canals and the environments?

*மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :* பொதுச் சுகாதார அதிகாரிகள், தொழிற்சாலைகளை ஆய்வு செய்யும்போது, தவறு செய்யும் தொழிற்சாலைகளின்மீது, சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்கிறார்கள். மேலும் தொழிற்சாலைகளுக்கு, ஏற்கெனவே கொடுத்துள்ள சுகாதாரச் சான்றிதழ் (ஹெல்த் கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட்) நிறுத்தி வைக்கப்படுகிறது.

*திரு. ம. சங்கரலிங்கம் :* மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நாட்டிலுள்ள இத்தகைய பல தொழிற்சாலைகளிலிருந்து, கழிவுப் பொருள்களையும், கழிவு நீரையும், பக்கத்திலிருக்கும் கால்வாய்களில் விட்டுவிடுவதன் காரணமாக, அதன் தூய்மை கெட்டுவிடுவது மட்டுமன்றி, அந்த நீரை அருந்தும் கன்றுகாலிகள், மனிதர்கள் பாதிக்கப்பட்டு குடல் நோய்க்கு ஆளாகிறார்கள். சர்க்கரை ஆலைகள் மற்றும் தோல் பதனிடும் ஆலைகள் போன்றவை சுகாதார இலாக்காவின் விதிகளுக்கோ, சட்டத்திற்கோ கட்டுப்பட்டு நடப்பதில்லை. அவர்கள் எப்படியோ சரிக்கட்டிவிடுகிறார்கள். இதன்

காரணமாக, தூய்மைக் குறைவு அப்படி இருக்கின்றது. எனவே, இத்தகைய நிலையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? அதைப்போலவே சுகாதாரத்தைப் பாதுகாக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அவ்வப்போது கழிவு நீரை எடுத்துப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கழிவு நீரைச் சுத்தப் படுத்துவதற்கு முன்பு எப்படி இருக்கிறது என்றும், சுத்தப்படுத்திய பிறகு அரசாங்கம் நிர்ணயித்துள்ள ஸ்பெசிகேஷனுக்குத் தகுந்தபடி வந்திருக்கிறதா என்றும் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. தவறுகள் இருந்தால், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படுகிறது. அந்த அடிப்படையில் தவறு செய்கிற தொழிற்சாலைகள் என்று முடிவுசெய்யப்பட்டு, 31—12—1980 வரை பீனல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டவைகளின் எண்ணிக்கை 42 ஆகும். அதைப் போலவே தவறு செய்யும் தொழிற்சாலைகளில், இத்தனை நாட்களுக்குள் இதைச் சரி செய்யும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவகாசம் தரப்பட்ட தொழிற் சாலைகளின் எண்ணிக்கை 19 ஆகும். அதைப் போலவே லைசென்சைக் கேன்சல் செய்யச் சொல்லியும் இருக்கிறோம். வற்புறுத்தியும் செய்யாது இருக்கும் காரணத்தால் லைசென்ஸ் கேன்சல் செய்யப்பட்ட தொழிற்சாலை களின் எண்ணிக்கை ஏழு. இப்படி கடுமையான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டாக்டர் இரா. சனார்த்தனம்: கழிவுப் பொருட்கள் அல்லாமலும், மதுக்கரை ஏ.சி.சி. சிமிண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் தூசியின் காரணமாகவும் பெரும் துன்பம் ஏற்படுகிறது. அதற்கென்று தனியான இயந்திரத்தைப் பொருத்தி, தூசு விழாமல் செய்வதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது மிகவும் நல்ல யோசனை. இதற்காக என்று ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்தப் பிரிவின் கீழ் கீழ்க்காணும் ஆறு தொழில்கள் அடங்குகின்றன:—

The major industries which cause air pollution are:

1. Cement Factories; 2. Chemical Industries;- 3. Fertilizer industries; 4. Pulp and Paper Industries: 5. Thermal power stations and 6. Oil Refineries. All these six industries cause air pollution.



இவைகளுக்கான வகையில் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதோடு The fall out of ash வெளியே வரக்கூடாது என்று மதுக்கரை சிமிண்ட் தொழிற்சாலைக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். ராஜபாளையம் சிமிண்ட் தொழிற்சாலையில் அரசு சொன்ன யோசனையை ஏற்றுச் செயல் படுத்தி வருகிறார்கள். சிலர் தாமதம் செய்து வருகிறார்கள். உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அரசு சார்பில் வற்புறுத்தி வருகிறோம். அப்படியும் அவர்கள் அதைச் செய்யவில்லை என்றால், அவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம்: செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள சர்க்கரை ஆலைக்குப் பக்கத்தில் ரெயில் போகும்போது, துர்நாற்றம் வீசுகிறது. அதைப் போலவே பல்லாவரம், வாணியம்பாடி போன்ற பகுதிகளில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்குப் பக்கத்திலும் அதிகமான துர்நாற்றம் வீசுகிறது. இத்தகைய பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் காரணமாக, அந்தப் பகுதிகளில் நாற்றம் ஏற்படுவதைத் தடுக்கவும், அதோடு கழிவு நீர் காரணமாகச் சுகாதாரக் கேடுகள் ஏற்படாமல் இருக்கவும், அந்தக் கழிவு நீரை "டிரீட் பண்ணுவதற்கான பிளாண்ட்" அமைக்கப் பெரும் பொருள் தேவைப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. எனவே, உலக வங்கி அல்லது உலகச் சுகாதார ஸ்தாபனம் போன்றவற்றிலிருந்து அரசு கடன் பெற்று இத்தகைய தொழிற்சாலைகள் மேற்சொன்ன பிளாண்ட்களை அமைக்க உதவி செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: சர்க்கரைத் தொழிற்சாலையைப் பொறுத்த வரை, இது Liquiel based. The discharge from this industry is highly pollutional in character. அதுதான் மோசமாக இருக்கும். அதுவும் நவம்பர் முதல் ஏப்ரல் வரையான காலம் "பீக் சீசனாகும்". அந்தக் காலத்தில் நாற்றம் அதிகமாக இருக்கிறது என்பதற்காக நாம் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. அது பொல்யூஷனுக்குள் வரவில்லை. ஆனால், அவற்றிலிருந்து வெளிவரும் எஃப்ளுவெண்ட்டை டிரீட் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம். அதுதான் அதிகமான பாதிப்பை உண்டாக்கக் கூடியது. இதற்கு உலக வங்கியின் உதவி எதும் தேவையில்லை. இண்டியன் ஸ்டாண்டர்ட்ஸ் இன்ஸ்டிடியூஷன் என்ற ஓர் அமைப்பு இருக்கிறது. அது சில நெறிமுறைகளைத் தெரிவித்திருக்கிறது. அந்த நெறிமுறைகளை ஏற்றுக் கொண்டாலே போதும். எனவே, அந்த நெறிமுறைகளின்படி பல வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அத்தகைய தொழிற்சாலைகளுக்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது.

திரு. ஜே. எம். மியாகான் : ஏற்கெனவே அனுமதி அளிக்கப்பட்ட தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வருகிற கழிவு நீரைச் சுத்தப்படுத்துவது என்றால், அதற்குத் தொழிற்சாலையின் மூலதனத்தைவிட அதிகமான பொருள் தேவைப்படுகிறது. வாணியம்பாடி, மேல்விஷாரம், பல்லாவரம், குரோம்பேட்டை, இராணிப்பேட்டை போன்ற பகுதிகளில் உள்ள டேனரிகளிலிருந்து வெளிவரும் கழிவுப் பொருள்களைச் சுத்தப்படுத்துவதற்குச் சிரமமான நிலை இருக்கிறது. எனவே, அவைகளைக் குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? கழிவு நீரைச் சுத்தப்படுத்த முடியாமல் உள்ள அந்த டேனரிகள் அவற்றின் அருகில் அதைத் தேக்கி வைத்து, காய விட்டுவிடுகிறார்கள். அதற்குப் பிறகு அதை எருவாகப் பயன் படுத்துகிறார்கள். அதன் காரணமாகவும் பல நலக்குறைவுகள் ஏற்படுகின்றன. சில டேனரிகளில் கழிவுநீரைப் பக்கத்தில் உள்ள ஆறு அல்லது வாய்க்கால்கள் அல்லது குளங்களில் விட்டுவிடுகிற நிலை இருப்பதால், அங்கே உள்ள மீன்கள் கெட்டுப் போய்விடுகின்றன. இதன் காரணமாகவும் மக்களுக்குத் தொல்லை ஏற்படுகின்றது. எனவே, இந்தக் கழிவுநீரைச் சுத்தப்படுத்த, அத்தொழிற் சாலைகளுக்கு அதிகமான மூலதனம் தேவைப்படுவதால், இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு வகையான உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள் என்று கருதுகிறேன். கழிவு நீரின் காரணமாக தீமை ஏற்படுகின்றது என்ற கருத்தில் யாருக்கும் வேறுபாடு இல்லை. அது எல்லோருடைய ஏகோபித்த கருத்தாகும். அந்த நிலைமை இருக்கக் கூடாது என்பதற்காக இன்னொன்றையும் சொல்லுகிறார்கள். அதுபற்றித்தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். அந்த நெறிமுறைகளைக் கடைப்பிடித்தாலே போதும்.

தோல் தொழிலைப் பொறுத்த வரையில், "லெதர் எக்ஸ்போர்ட் புரமோஷன் கார்ப்பரேஷன்" என்று டெல்லியில் ஒரு அமைப்பு இருக்கிறது. அவர்களும் இதை நேரில் வந்து பார்த்தார்கள். அதற்கு நாங்கள் பணம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்றார்கள். ஆம்பூரில் பத்து, பன்னிரண்டு தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஒரே சாலையில் இருக்கின்றன. எனவே, அவற்றின் கழிவுநீரைப் பொறுத்தவரையில், ஒரே இடத்தில் டிரீட் செய்ய சௌகரியமாக இருக்கும். எனவே, ஒவ்வொரு தொழிற்சாலையும் கணிசமான தொகை ஒன்றைக் கொடுத்தால், அந்தத் தொகையையும் வைத்துக்கொண்டு டெல்லியில் உள்ள அந்த அமைப்பின் உதவியையும் பெற்று இதற்கு ஒரு வழிவகை காண உதவியாக இருக்கும். இதில் எந்த வகையான தாட்சண்யத்திற்கும் இடமிருக்கக் கூடாது. நாம் அனைவரும் ஒரு ஏகோபித்த கருத்தோடு இருக்க வேண்டும்.



அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறபோது, பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஏற்கெனவே, சிலர் மறுப்பு தெரிவித்தார்கள். அரசியல் சக்திகளைக்கூட சிலர் திரட்டினார்கள். எனவே இது மக்களைப் பாதிக்கக்கூடிய பிரச்சினை என்று நாம் திட்டவட்டமாக ஒரு முடிவு எடுத்தால், இனிமேல் இத்தகைய பிரச்சினைகளுக்கு இடமே இருக்காது. அதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். Where there is a will, there is a way

THIRU A. R. DAMODARAN : Sir, in view of the multiplicity of authorities which exercise control over pollution, may I know from the Hon. Minister whether he is actively pursuing the idea of establishing a Pollution Control Board in Tamil Nadu which will be able to expedite clearance of proposals from the industries in this regard?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஏற்கெனவே மானியக் கோரிக்கையின் மீது பேசுகிறபோது, அப்படி ஓர் எண்ணம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். 'டிராப்ட் பில்' ஒன்று தயாராகிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணத்தின் அடிப்படையிலேயும் அந்தச் சட்டம் வர வாய்ப்பு இருக்கிறது. The Bill is on the anvil என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : இப்போது சங்ககிரி தொழிற்சாலையை அடுத்துள்ள பகுதிகளிலே உள்ள விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். பல நேரங்களில் இதைப்பற்றி அவர்களுக்கு எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது போலவே மேட்டூரில் இருக்கக்கூடிய 'கெம்பிளாஸ்ட்' இரசாயனத் தொழிற் சாலையிலிருந்து வெளியாகின்ற வேஸ்டுகள் அந்தப் பகுதியில் குடிநீரைப் பாதிக்கின்றன. 10, 20 மைல்களில் இருக்கக்கூடிய குடிநீரும் பாதிக்கப்படுகிறது. அந்தப் பகுதி மக்கள் குடிநீர் கிடைக்காமல் மைல் கணக்கில் போகின்றார்கள். அந்த நிலைமைகள் அங்கே இருக்கின்றன. இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கும். அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஏற்கெனவே நான் பதில் கொடுத்த மாதிரி, 42 கம்பெனிகள் மீது நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். 19 பேர்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு 'டைம் எக்ஸ்டென்ஷன்' கொடுத்திருக்கிறோம். ஏழு கம்பெனிகளுக்கு லைசென்ஸை ரத்து செய்திருக்கிறோம். அப்படி படிப்படியாக

நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். உடனடியாக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பது என்றால், அதனால் இன்னொரு பிரச்சினையும் எழுகிறது. 'இன்டஸ்ட்ரீஸ்' பாதிக்கப்படும். அப்படி இன்டஸ்ட்ரீஸ் பாதிக்கப்படாத அளவுக்கு, without tears, without inconvenience நாம் செய்தாக வேண்டும். அந்த அளவில்தான் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தொழில் வளர்ச்சி மிக்க மேல்நாடுகளிலே இத்தகைய நிலைமைகளை அவர்கள் எப்படிச் சமாளிக்கிறார்கள்? தூய்மைப் படுத்துவதற்கு அவர்கள் கடைப்பிடிக்கின்ற முறைகள் என்ன என்பதைப் பற்றி, மாநில அளவில் அறிந்துகொண்டு, அதை நம் நாட்டிலும் கையாளலாம் அல்லவா? அதைப்பற்றி அமைச்சர் அவர்களின் கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இரண்டு மாதத்திற்கு முன்பு வெஸ்ட் ஜெர்மனியிலே 'போல்லுஷன் கண்ட்ரோல், ஆண்டி போல்லுஷன்' என்பதைப்பற்றி ஒரு கருத்தரங்கு நடத்தியிருக்கிறார்கள். அந்த மேல்நாடுகளிலேயும் கூட இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால், நமக்கு இப்போது சமாளிப்பதற்கு சௌகரியமான நிலைமைகள் இருக்கின்றன. மேல்நாடுகளில் உள்ளதுபோல் இங்கே 'இன்டஸ்ட்ரீஸ்' இன்னும் அதிகமாக ஆகவில்லை. ஆனால், அங்கே 'இன்டஸ்ட்ரீஸ்' அதிகமாக ஆகிவிட்டதால், அவர்கள் என்ன செய்வது என்று பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கு 'போல்லுஷன்' பூதாகாரமாக வளர்ந்திருக்கிறது. குறிப்பாக ஐரோப்பா கண்டத்திலே இந்த மாதிரி பிரச்சினை அதிகமாக இருக்கின்றது. அந்த அளவுக்கு அதிகமாகப் பிரச்சினை வளராமல் இருப்பதற்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மேல்நாடுகளிலும் அந்தப் பிரச்சினை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இது தொடர்பாக மத்திய அரசு மாநில அரசுக்கு என்ன அறிவுரைகளை அனுப்பியிருக்கிறது? ஏற்கெனவே அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதிலே காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது என்ற தகவல் இருந்துகொண்டிருக்கிறது. அது உண்மையா? சுற்றுப்புறச் சூழ்நிலைகள் பற்றிய ஆராய்ச்சிகள், மற்ற நடவடிக்கைகளுக்கு என்று தனியாக எந்த இலாகாவும் ஏற்படுத்தப்படவில்லை. அதற்கான வாய்ப்புகளும் அவசியமும் இருந்தும்கூட, இனிஷியல் நடவடிக்கைகூட எடுக்கவில்லை என்று தகவல் வந்திருக்கிறது. அது எப்போது தொடங்கப்படும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அங்கத்தினர் அவர்கள் கேட்கின்ற கேள்வியின் ஒரு பகுதிக்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதிலாக நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அந்தச் சட்டம் இப்போது உருவாகிக்கொண்டிருக்கிறது. 1974 ஆம் ஆண்டு மத்திய அரசுக்கு கருத்து அனுப்பப்பட்டிருக்கிறது. போல்லுஷன் கண்ட்ரோல் போர்டு மத்திய அரசினுடைய அமைப்பு. அதன் மூலமாக ஒரு சென்ட்ரல் ஆக்ட் போட்டுக் கொண்டு வந்தார்கள். அந்த ஆக்ட்-க்குள்ளேயே இந்தத் தமிழகமும் மற்ற எல்லா மாநிலங்களும் வர முடியுமா என்று கேட்டிருந்தார்கள். அதில் 2, 3 மாநிலங்கள் வரவில்லை. என் நினைவு சரியாக இருக்குமானால், அரியானா, மகாராஷ்ட்டிரா மாநிலங்கள் என்று கருதுகிறேன். அது Subject to correction 1974 ஆம் ஆண்டு தனியாக ஒரு சட்டம் நிச்சயமாகக் கொண்டுவரப்படும் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். தாமதம் ஓர் இடத்திலே முன்பு இருந்தது. தாமதத்திற்கு எந்தவிதமான காரணமும் இல்லை. சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும். இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தும்போது, சில பிரச்சினைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பிரச்சினைகளும் இல்லாமல் இருக்கின்ற அளவுக்கு ஒரு 'காம்ப்ரிஹென்சிவ்' அல்லது 'பிராப்பர் பில்' கொண்டுவர இருக்கின்றோம். அதற்கான குறிப்புகளை நாம் சேகரித்துக்கொண்டிருக்கிறோம். அந்த 'பில்' தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** திருச்சியிலே சர்க்கரை ஆலைகளை ஒட்டிய பகுதிகளிலே குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆலைகளால், அந்தப் பகுதியிலே உள்ள குடிநீர் கெட்டிருக்கின்றது. ஆடு, மாடுகள்கூட தண்ணீர் குடிக்கமுடியாத அளவுக்குக் கெட்டுப்போகிறது. அதுபோலவே சிமெண்ட் பேக்டரியை ஒட்டிய பகுதிகளிலும் விவசாயம் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பகுதியிலே 'காண்ட்ரிபியூட்டரி' (Contributory) அளவிலே, அந்தத் தொழிற்சாலைகள் இந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு தாமாகவே உதவி தரவேண்டுமென்ற அளவிலே, என்னென்ன நடவடிக்கைகளை அவர்களாகவே எடுக்க வேண்டும் என்ற அளவிலே, ஒரு குறிப்பிட்ட நிதியை ஒதுக்க வேண்டுமென்று அரசு சொல்லுமா? அந்த அளவிலே சட்டபூர்வமாக நடவடிக்கை என்பது மட்டுமல்லாமல், அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு ஏற்ற வகையிலே வேறு விதமான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, சிமெண்ட் பேக்டரிகளைப் பொறுத்த வரையிலே, ஏற்கெனவே அந்தமாதிரியான எகுவிப்மெண்ட் பொருத்த வேண்டுமென்று நாம் சொல்லியிருக்கிறோம். அதற்கு ஏறத்தாழ ரூ. 1½, 2 கோடி அளவுக்குச் செலவு ஆகும். சிமெண்ட் பேக்டரி கட்டுவதற்கு ஆகும் செலவில் நான்கில் ஒரு பங்கு அளவுக்குச் செல்வாகும். ஒரு காலத்தில் கட்டாயம் இல்லாத காரணத்தினாலே அவர் ஆரம்பிக்கட்டும், இவர் ஆரம்பிக்கட்டும் என்று உட்கார்ந்திருந்தார்கள். இப்போது அதைப் பொருத்தித் தான் ஆகவேண்டும் என்று கடுமையாகச் சொல்லியிருக்கிறோம். இரண்டு பேக்டரிகள் அதை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. இராசபாளையம் பகுதியில் 'ஆஷ் ஃப்ளை அவுட்' 80 சதவிகிதம் அளவுக்குக் குறைந்திருக்கிறது. மதுக்கரை பக்கத்திலே குறையவில்லை. உடனடியாகச் செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதிலே நாம் கடுமையாக இருப்போமானால், கட்டாயமாகச் செய்வார்கள். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய லாபத்தைப் "Flow back" செய்யக் கூடிய அளவுக்கு வசதிகள் இருக்கின்றன. அப்படிச் செய்ய இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாகச் சட்டம் கொண்டு வந்துவிட்டால், செய்துவிடுவார்கள். அது மட்டுமல்லாமல், அதற்கு 'கைட்லைன்ஸ்' கொடுக்க வேண்டும். அப்போது அந்த இண்டஸ்ட்ரீயில் அதைச் செய்வார்கள். தற்காலிகமாகச் செய்வதற்கு 'இன்டியன் ஸ்டான்டர்ட் இன்ஸ்ட்டிடியூஷன்' ஒரு நடைமுறை சொல்லியிருக்கிறது. அந்தத் தற்காலிக முறையை அவர்கள் நிச்சயமாகக் கையாள முடியும். இன்றைக்கு அந்த முறைகளைக் கையாளும்படி, அந்த கைட்லைன்ஸ்-ஐ உடனடியாகக் கையாளும்படி செய்தால், மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்ன பிரச்சினை ஓரளவுக்குக் குறையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### திண்டிவனம் அரசு மருத்துவமனை.

260 **வினா.—திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டிவனம் அரசு மருத்துவமனையை மேம்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், இரத்த சேமிப்பு நிலையத்தைச் செயல்படச் செய்தல், புதிய பிணப் பரிசோதனைக்கூடம் மற்றும் புறநோயாளிகள்கூடம் அமைத்தல் ஆகியவைகளும் அதில் அடங்கியுள்ளனவா ?





**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்வியைப் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். புதிய பிணப் பரிசோதனைக் கூடம், மற்றும் புற நோயாளிகள் கூடம் அமைப்பதற்கு மானியத்தின்மீது பதில் பேசும்போது உறுதி கொடுத்திருக்கிறார்கள். அவைகளை இயங்க வைப்பதற்குத் தண்ணீர் பற்றாக் குறைதான் இருக்கிறது என்று சொன்னார்கள். கடந்த ஒரு மாதத்திற்குள்ளாகவே பல்வேறு பகுதிகளிலே பல்வேறு ஆக்சிடெண்ட்டுகள் காரணமாக அந்த இரத்தச் சேமிப்பு நிலையத்தினுடைய அவசியம் பெருமளவுக்கு உணரப்பட்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இரத்தச் சேமிப்பு நிலயத்தைச் செயல்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இதிலே மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஏற்கெனவே ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார்கள். அப்போது அதிகாரிகள் கொடுத்திருக்கக்கூடிய தகவலை அப்படியே எழுத்திலே சொன்னதைச் சொல்லியிருந்தேன். அதற்குப் பிறகும் உண்மையான நிலைமைகளைப்பற்றி வற்புறுத்தியிருந்தேன்.

'A blood bank was sanctioned for the Hospital in 1974 itself and the same is ready for use. But the blood bank has not yet actually started functioning for want of water supply facilities.' என்று சொல்லியிருந்தார்கள். உடனடியாகச் செய்ய வேண்டும் என்பதற்கு எக்சிகியூட்டிவ் என்ஜினியர், விழுப்புரம் டிவிஷனுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய வாட்டர் சப்ளை செய்வதாக அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இரண்டு, மூன்று மாதத்திற்குள்ளே கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்த முடியும் என்று கருதுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இது போன்றே பிணப் பரிசோதனைக் கூடம், அதிலேயும் 'ரிப்பேர்ஸ்' இருக்கின்ற காரணத்தினாலே, சரியாக இயங்கவில்லை. இது திண்டிவனத்தில் மட்டுமல்ல. பல இடங்களில் இருக்கின்றது. ரோட் ஆக்சிடெண்ட்ஸ் மிக அதிகமான அளவுக்கு இருக்கின்றன என்ற தகவல் அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கும். அப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் சமாளிப்பதற்கு ஒரு காம்ப்ரிஹென்சிவ் (Comprehensive) நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 ஏப்ரல் 27

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இந்த 'ரோட் ஆக்ஸிடெண்ட்' விளைவுகளைச் சமாளிக்கும் காரியங்களுக்காக நாம் கிட்டத்தட்ட 1½ கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அதை மானியக் கோரிக்கையிலே பார்த்திருப்பார்கள். அந்தப் பணத்திலிருந்து ஓரளவுக்கு இந்தக் குறைகளைத் தீர்க்க முடியுமா என்று பார்க்க வேண்டும். இதில் நேஷனல் ஹைவேஸ் துறையும் செயல்படவேண்டியதாக இருக்கிறது. இப்போது விழுப்புரத்தையும் திண்டிவனத்தையும் இணைத்துச் செய்வதற்கு இந்தப் பணத்திலிருந்து ஒதுக்கி முக்கியமான காரியங்களுக்குப் பயன்படுத்த முடியுமா என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, I understand that blood can be stored only for a limited period of time in a blood bank. Would it be possible for the Hon. Minister to consider, in view of the number of accidents that take place and the requirement of blood, the opening of blood plasma unit in one of the hospitals in South Arcot, whether it is at Tindivanam or at Villupuram, wherever it is possible?

THE HON. DR. H. V. HANDE : Hon. Chairman, the blood plasma will have to be separated here in Madras and then we have to send it to other places. That is why we have planned to bring the whole State under one blood bank unit so that blood will be collected in one centralised place and then it will be sent to different places according to requirements and it may be either blood plasma or whole blood. If our plan to have one Centralised unit materialises, the problem raised by the hon. Member will be solved and I hope and I am sure it will be solved.

### *Professors in Siddha.*

* 261 *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether it is a fact that some posts of Professors in Siddha have not been filled up in the College of Indian Medicine, Palayamkottai;

(*b*) if so, the number of such posts; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter?



1981 ஏப்ரல் 27]

(முற்பகல் 9-50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(இ) இரண்டு பதவிகள் காலியாக உள்ளன.

(உ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : பாளையங்கோட்டை சித்த வைத்தியக் கல்லூரியில் இரண்டு சித்த மருத்துவப் பேராசிரியர்கள் பதவிகள் சில ஆண்டுகளாகக் காலியாக உள்ளன. அப்படியென்றால் அங்கு படிக்கும் மாணவர்கள் நல்ல முறையில் படிக்கும் வாய்ப்பை இழக்கிறார்கள். அங்கே சித்தா (எம்.டி.) வகுப்பு இருக்கிறது. அங்கே பேராசிரியர்கள் இல்லாததால், முதுகலை வகுப்பில் படிக்கிறவர்களுக்குப் பாடங்களை நல்லமுறையில் பயில வாய்ப்பில்லாமல் இருக்கிறது. இந்தப் பதவிகளை நிரப்புவதில் இவ்வளவு கால தாமதத்திற்குக் காரணம் என்ன? பரிசீலனையில் இருக்கும் சிக்கல் என்ன?

THE HON. DR. H. V. HANDE : Consequent on the starting of Post Graduate Courses in Siddha system of Medicine in G.O. Ms. No. 2064, Health, dated 6th February 1972, one post of Professor was sanctioned for each of the Departments of 'Marruthuvam' and 'Gunapadam' in the Government College of Indian System of Medicine, Palayamkottai. As qualified persons were not available for appointment to these posts, the Government thought of appointing visiting Professors, but this scheme was deferred since the Government of India did not agree to grant additional funds for appointment of visiting Professors. Therefore Dr. P. Gurusironmani, the then Principal of the College was asked to discharge the duties of the Professor in Gunapadam in addition to his normal duties as Principal. This arrangement continued till Dr. Gurusironmani was appointed as Director of Indian Medicine on 1st April 1976. Dr. M. V. Ramanan, Senior Physician (Siddha), Gujarat Ayurved University, Jam Nagar, on deputation to the Government of Tamil Nadu was appointed as Professor of Maruthuvam in the Government College of Indian System of Medicine, Palayamkottai. He held the post till 31st October 1977. The posts could not be filled up after Dr. Gurusironmani and Dr. Ramanan, as persons with requisite qualificaion and experience were not available.

படிப்படியாக ஒவ்வொரு கட்டத்திலும் முயற்சி எடுத்து வருகிறோம். ஆனால் வருகிறவர்கள், இன்னொரு உத்தியோகம் கிடைக்கும்போது, இதை விட்டுவிட்டுச் சென்று விடுகிறார்கள். அதனால்தான் இந்தப் பிரச்சினை. உடனடியாக இந்தப் பதவிகளை நிரப்பப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். விரைவில் அது முடியுமென்று கருதுகிறேன்.

**திரு. ம. சங்காலிங்கம் :** ஒரு குறிப்பிட்ட கல்வித் தகுதியையுடைய பேராசிரியர்கள் கிடைக்காவிட்டால், பல்கலைக் கழகத்தின் விதிகளைத் தளர்த்தி, இருப்பதற்குள் கூடுதல் தகுதி உடையவர்களைப் பேராசிரியர்களாகத் தற்காலிகமாக நியமிக்க விதி இருக்கிறது. சித்த மருத்துவத்தில் முதுகலைப் பட்டம்—சித்தா (எம்.டி.) எல்லாம் நாம்தான் முதன்முதலில் ஆரம்பித்தோம். எனவே, அதில் அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் கிடைப்பது கடினம்தான். எனவே, சென்னைப் பல்கலைக் கழகத்தின் எல்லையிலுள்ள, அனுபவமுள்ள சிலருக்கு விதிவிலக்கு கொடுத்து, அவர்களை நியமிப்பதில் அரசுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கருதுகின்றமாதிரி, இந்தப் பிரச்சினை இல்லை. இரண்டு பேராசிரியர்கள் இல்லையென்றாலும், பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரியின் முதல்வரும், சீனியர் பேராசிரியர்களும் அந்தப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். என்னவெல்லாம் சொல்லிக் கொடுக்க வேண்டுமோ, அதைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் அந்தப் பணியிலே எந்தவிதப் பாதிப்புமில்லை. இருக்கும் நிலைமை, இரண்டு பதவிகள் சாங்ஷனாகி, நிரப்பப் படவில்லை என்ற குறைதான் இருக்கிறது. அதற்குரிய தகுதி படைத்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து நிரப்ப வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறோம். அதற்காக முயற்சிகள் நடந்து வருகின்றன.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள் 262, 263, 264 ஒத்திவைக்கப் படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]





## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கூட்டுறவுக் கடன்கள் வசூலிக்கப்படுவது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ம. சங்கரலிங்கம் அவர்களும், திரு. க. இராமமூர்த்தி அவர்களும் கூட்டுறவுக் கடன்கள் வசூலிப்பது குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு அவ்விதிகளுக்கு உட்பட்டதென்பதைச் சுருக்கமாகச் சொல்லக் கோருகிறேன்.

* **திரு. ம. சங்காலிங்கம் :** தலைவரவர்களே, நமது மாநிலத்தில் இந்த மாதம் 2 ஆம் தேதிக்குமேல் கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்வதிலே பெரிய நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதுபற்றி பலர் அரசினுடைய கவனத்திற்கு எடுத்துக் கொண்டுவரும்போது, பெரிய நிலச்சுவான்தார்கள், 10 ஏக்கருக்கு மேலே நிலம் உள்ளவர்களிடம்தான் வசூல் செய்யச் சொல்லியிருக்கிறோம், 5,000 ரூபாய்க்குமேல் கடன் இருக்கிறவர்களிடம்தான் வசூலிக்கச் சொல்லியிருக்கிறோம் என்று அரசு சார்பில் சொல்லப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து, விளைவை அதிகப்படுத்தி, உற்பத்தியைப் பெருக்கி, நாடும் பலன் பெறுவதோடு, அவர்களும் பலன்பெற வழி செய்கிறோம். கூட்டுறவுக் கடன்களை, குறிப்பாக இந்தியாவிலேயே, வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டுகிறவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்தான். கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்று சொல்லிச் சொல்லி, கடன் வாங்குவதற்கும் அஞ்சுகிறார்கள். திருப்பிக் கொடுக்காமல் இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டால், கஷ்டப்பட்டு, பண்பில் ஊறியவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். அதிலும் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ரெவின்யூவிலே ஒரு அணாகூட பாக்கியில்லாத மாவட்டம் அது. கடன்களைத் திருப்பிக் கொடுக்கக்கூடாதென்று சொல்லுகிற விவசாயச் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கூட இல்லாத மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். அப்படிப்பட்ட மாவட்டத்தில் கடந்த 2 ஆம் தேதி முதல் பெரும் கெடுபிடிகளும், நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏப்ரல் இரண்டாம் தேதி முதல் 5, 6 நாட்களுக்கு சுமார் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் வீட்டுக்கு 50 ரிசர்வ் போலீசார், 20 முதல் 30 அதிகாரிகள் 10, 15 ஜீப்புகளிலே சென்று, வீட்டில் உள்ளவர்கள் அலறும்படி, அதிர்ச்சி அடையும்படி, வயது முதிர்ந்தவர்களுக்கு ஷாக் வரும் வகையில் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வயது முதிர்ந்தவர்களுக்கு ஷாக்தான் அடிக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** கெடுபிடிகள் நடந்துவருவதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஆனால் அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, ஒன்றைச் சொல்லலாம். விவசாயிகள் கடன் திருப்பிக் கொடுக்க வேண்டியதுதானே என்று சொல்லலாம். உண்மை. அவர்கள் திருப்பித் தர வேண்டும், தந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தாராமல் இருப்பதால்தானே நடவடிக்கை வந்தது என்று சொல்லலாம். உண்மையில் அப்படிப்பட்ட நிலை கன்னியாகுமரி மாவட்டத்தில் இல்லை. இன்றைய அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பு அ.தி.மு.க. சிறு விவசாயிகள் வாங்கிய கடனை ரத்து செய்வோம் என்று சொன்னதால், தேர்தலிலே தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறபோது, அண்ணா சிலைக்கு முன் வந்து, விவசாயிகளது கடனை ‘ரத்து செய்வோம், மத்திய அரசு தராவிட்டாலும் ரத்து செய்வோம்’ என்று சபதம் செய்ததைக் கேட்டு, சிறு விவசாயிகள் ‘கடன்கள் ரத்தாகும்’ என்று எண்ணி, ஒருவேளை காலம் கடத்தியிருப்பார்கள், கட்டாமல் இருந்திருப்பார்கள். எனவே அதற்குப் பொறுப்பு அரசேயாகும். விவசாயிகள் அல்ல. அமைச்சரவர்களின் கவனத்திற்கு மூன்று நிகழ்ச்சிகளைச் சொல்ல விரும்புகிறேன். எப்ரல் இரண்டாம் தேதி நடந்தது. கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் தாலூக்கா, தேரூர் பீ. தானம்மாள் என்பவருக்குச் சொந்த நிலம் 85 சென்ட்தான். ஆனால் கூட்டுறவுத் துறை சார்பிலும், ரெவின்யூ துறை சார்பிலும் சொல்லப்படுவது, சொந்த நிலமும், பட்டா நிலமும் 10 எக்கர் இருந்தால் பெரிய விவசாயி. இவருக்கு பட்டா நிலத்தைச் சேர்த்து 10 எக்கர் நிலமில்லை. 1979 டிசம்பரில்தான் 5,000 ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார். அதில் 4,000 ரூபாய் கடன் ரொக்கமாகக் கொடுக்கப்பட்டது. ஆயிரம் ரூபாய்க்கு இரசாயன உரமாகக் கொடுக்கப்பட்டது. அப்படி 5,000 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டது. இப்போது அவர் கட்ட வேண்டியது ரூபாய் 6,157.75—வட்டி, தண்ட வட்டி எல்லாம் சேர்ந்து. 12—3—1981-லே நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. உடனே கட்ட வேண்டும், இல்லையென்றால் ஜப்தி செய்யப்படுமென்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. நோட்டீஸ் கிடைத்த இரண்டாம் நாள், 14—3—1981-லே ரூபாய் 1,201.35 கட்டியிருக்கிறார்.

(முற்பகல் 10-00)

அவர் கட்டமுடியாது என்று சொல்லவே இல்லை. 2—4—1981-ல் ஆயிரம் ரூபாய் கட்டியிருக்கிறார். கூட்டுறவுத் துறை அதிகாரிகள், ரிசர்வ் போலீஸ் 50 பேர் வீட்டினுள் நுழைந்து எல்லாம் ஜப்தி செய்ய வந்த உடனே பக்கத்திலுள்ள வீடுகளில் இருந்ததையெல்லாம் வாங்கி அதைக் கட்டினார்கள். அதற்குப் பிறகும் அவருடைய வீட்டிலிருந்து 16 சாமான்கள் ஜப்தி செய்யப்





பட்டன. இ.பி.கோ. ரசீது எண் 1921-ல் ஜப்தி செய்யப்பட்டுள்ளது. ஒரு சாமான்கூட நல்ல சாமான் இல்லை. எடுத்திருப்பது 625 ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் என்று அவர்கள் அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். எல்லாம் பழைய பழுதடைந்த சைக்கிள்கள், பழைய பழுதடைந்த பித்தளைச் சாமான்கள், உடைந்த பழைய பழுதடைந்த சாமான்கள் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். அந்த விவசாயியிடமிருந்து இவ்வளவு பழைய பழுதடைந்த சாமான்களை ஜப்தி செய்திருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், 600 ரூபாய்க்கு மேல் அவரிடமிருந்து ஜப்தி செய்து எடுக்கப் பொருளே இல்லாத ஏழை விவசாயி தான் அவர் என்பது தெளிவாகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் விவாதிப்பதற்கு நான் உறுப்பினரை அனுமதிக்கவில்லை என்பதை நினைவூட்டுகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** விவாதத்திற்குள்ளே நான் இன்னும் போகவில்லை. (சிரிப்பு). இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விவாதத்திற்கு அனுமதிக்காமலேயே இவ்வளவு நேரம் பேசிக்கொடிருக்கிறார்களே, விவாதிக்க அனுமதித்தால் எவ்வளவு நேரம் எடுப்பார்களோ! (சிரிப்பு)

**திரு. ம. சங்கரலிங்கம் :** இன்னும் இதுபோன்று நான் 200 சம்பவங்கள் வைத்திருக்கிறேன். அழகினாபுரம் என்ற ஊரில் எஸ். பி. பெருமாள் வீட்டிலிருந்து 425 ரூபாய்க்குப் பொருள்கள் ஜப்தி செய்திருக்கிறார்கள். அவர் 1979 ஆம் ஆண்டு கடன் வாங்கினார். 26—5—1980 அன்று ஆயிரம் ரூபாய் கட்டியிருக்கிறார். பசு உட்பட 425 ரூபாய்க்கு 10 பொருள்கள் ஜப்தி செய்திருக்கிறார்கள். ஆனால் பசுவின் மதிப்பு 2 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கும். பசு உட்பட, பழைய பழுதடைந்த உடைந்த சாமான்களை எடுத்துச் சென்றிருப்பதாக, ஜப்தி ரசீது தரப்பட்டுள்ளது. இன்னும் ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதிர்ச்சியடையக் கூடாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நானா? அமைச்சரா? (சிரிப்பு)

**திரு. ம. சங்கரலிங்கம் :** அகஸ்தீஸ்வரம் தாலுகா நல்லூரில் ஒரு விவசாயி நில வள வங்கியிலிருந்து 1976 ஆம் ஆண்டு டிராக்டர் வாங்க, கடன் வாங்கியிருக்கிறார். அவர் நான் முன்பு குறிப்பிட்டவர்களைப் போல் அல்ல. அவர் ஒரு பெரிய விவசாயி. 58,700 ரூபாய், அவர் கடன் பெற்றிருக்கிறார். 37,979 ரூபாய் அவர் திரும்பக் கட்டியிருக்கிறார். இன்னும் 20,081 ரூபாய் தான் கடன் பாக்கி இருக்கிறது. அதற்குப் பிறகு கிணறு தோண்ட 1978 ஆம் ஆண்டில்

கடன் வாங்கியிருக்கிறார். கடன் 12,300 ரூபாய் தவணைகளாகக் கட்டியது போக, கட்டவேண்டிய பாக்கி 1,882 ரூபாய் தான் இருக்கிறது. அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர் போன்றவர்களுடைய அறிக்கையைப் படித்த அவர் பணத்தைத் திருப்பிச் செலுத்த தளர்ச்சி யடைந்திருக்கலாம். அவருக்கு 10 ஏக்கர் நிலம் இருக்கிறது. வாங்கிய கடனில் பெரும்பகுதியை திருப்பிக் கட்டி யிருந்தும் நோட்டீஸ் வந்தவுடன் வாரத்திற்கு இருமுறை தவணைகளில் கடனைத் திருப்பிக்கட்டி வந்தார். 416 எண்ணுடைய ரசீதில் 20—2—1981 அன்று 1,000 ரூபாய் கட்டியிருக்கிறார். காம்ப் கலெக்ஷன் ரசீது எண் 148-படி 27—2—1981 அன்று ஆயிரம் ரூபாய் கட்டியிருக்கிறார். அதற்குப் பிறகு 19—3—1981 அன்று ஆயிரம் ரூபாய் கட்டியிருக்கிறார். ரசீது எண் 476-படி 24—3—1981-ல் ரூபாய் 2,089.10 கட்டி யிருக்கிறார். ரசீது எண் 488-படி 28—3—1981-ல் ரூ. 600.75 பைசா கட்டியிருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கையில் அவ்வளவு ரசீதுகளையும் வைத்துக்கொண்டு படிக்கலாமென்று நினைக்கிறீர்களா ? அப்படிப் படிப்பது மரபா என்று மற்றவர்கள் கேட்கலாம் அல்லவா ?

**திரு. ம. சங்கரலிங்கம் :** பிப்ரவரி மாதத்திலிருந்து மார்ச் மாதம் வரை அவர் பல தவணைகளாகக் கடனைத் திருப்பி கட்டிக் கொண்டு தான் வந்திருக்கிறார். 28—3—1981 அன்று கூட ரூபாய் கட்டியிருக்கிறார். ஆனால் 2—4—1981 அன்று அவருடைய வீட்டில் 50 ரிசர்வ் போலீசார் போய் ஜப்தி செய்திருக்கிறார்கள். முழு விவரமும் என்னிடம் இருக்கிறது. மாண்புமிகு தலைவரவர்கள் அனுமதி மறுப்பதால், நான் அதை வாசிக்க விரும்பவில்லை. ஜப்தி செய்யப்பட்ட மொத்தமுள்ள வீடுகளில் இந்த ஒரு வீடு மட்டும் தான் பணக்கார வீடு. 90 தங்கக் காசுகள் கொண்ட மாலையை ஜப்தி செய்து 17,155 ரூபாய் மதிப்புள்ளது என்று ரசீது கொடுத்திருக்கிறார்கள். அவர் ஒரு பணக்காரர். பணத்தை வாரத்திற்கு இரண்டு தடவை ஒழுங்காகக் கட்டிக்கொண்டு வந்திருக்கிறார். பாக்கிப் பணத்தைக் கட்டு வதற்கு அவருக்கு மேலும் இரண்டு நாட்கள் கொடுப்பதற்குப் பதில் இப்படி ஜப்தி செய்வது முறைதானா ? 200 சம்பவங்களுக்கு மேல் இம்மாதிரி ஜப்தி நடவடிக்கை குறித்து கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்திரம் நடை பெற்றிருக்கின்றன. ஏர் நடந்தால் பார் நடக்கும். பார் நடந்தால் படை நடக்கும். விவசாயி வீட்டில் போய் படையை நடத்தினால், ஏர் எப்படி நடக்கும் ? இத்தகைய ஒரு நிலை, தமிழகம் பூராவும் இருப்பதால், விவசாயி களுக்கு இன்றைய தினம் ஏற்பட்டிருக்கக்கூடிய சிரமங்களைப் பற்றி விவாதித்து ஒரு தீர்வு காண வேண்டியிருப்பதால், இந்த அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



* **திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதைப் பொறுத்த வரையிலும், கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதைப் பொறுத்த வரையிலும், அவற்றைத் திருப்பிச் செலுத்தித் தான் ஆக வேண்டும் என்பதில் காங்கிரஸ் கட்சிக்கோ, அதனைச் சார்ந்துள்ள எனக்கோ கருத்துமாறுபாடு கிடையாது. ஆனால், இன்றைக்கு வறட்சியால் மாநிலம் பூராவும் பல்வேறு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு மாவட்டங்கள் என்று சொல்லும்போது, அரசாங்கத்தால் அறிவிக்கப்படாத பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்படவில்லை என்று அர்த்தமல்ல. மற்ற பகுதிகளில் ஏற்பட்டிருக்கிற வறட்சியின் பிரதிபலிப்பு அரசாங்கத்தால் வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப் படாத இடங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும். அந்தப் பகுதிகளில் இன்றைக்கு அரசாங்கம் வறட்சிப் பகுதி என்று அறிவிக்காத ஒரே காரணத்திற்காகக் கெடுபிடிகள் நடைபெறுகின்றன. 'ஏழை விவசாயியா, பணக்கார விவசாயியா, சிறிய நிலச்சுவான்தாரரா, பெரிய நிலச்சுவான்தாரரா என்பது அல்ல இப்போதிருக்கக்கூடிய பிரச்சினை. எல்லோருக்கும் பொதுவாக இன்றைக்கு வறட்சி ஏற்பட்டிருக்கிறது. எல்லோரும் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். ஆகவே எல்லாவற்றையும் தாண்டி தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் வேகத்தோடு செயல்பட்டாக வேண்டும். அப்படி இருக்கும்போது, சில இடங்களில் ஆபிசர்ஸ்-உடைய (Enthusiasm) ஆர்வம் காரணமாக அல்லது அவர்களுடைய அதிக அதிகாரம், ஆர்வம் காரணமாக அரசாங்கத்திடம் 'இவ்வளவு வசூல் செய்து விட்டேன்' என்று சொல்லுவதன் மூலம், கணக்கைக் காட்டுவதன் மூலம், அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விட்டேன் என்று மேலதிகாரிகளுக்கு அறிவிப்பதன் மூலம் தங்களுக்கு நல்ல பெயர் கிடைக்குமென்ற நோக்கத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படிச் செய்வது இன்றைக்கு பலவிதமான பிரச்சினைகளை நாட்டிலே ஏற்படுத்தியிருக்கிறது. பொதுவாக வறட்சிக் காலத்தில் தான் வன்முறைகள் நாட்டிலே அதிகமாகும். இன்றைக்கு நாட்டிலே சமீப காலத்தில் நடந்திராத அளவுக்கு ஜாதி, மத அடிப்படையில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் பொருளாதார நிலையையொட்டி நாட்டிலே வேறுவிதமான புதிய பரபரப்பும், புதிய வேகமும் எழக்கூடிய நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிலர் தாங்களாகவே உதவக் கூடிய நிலையில் கிராமங்களில் இருக்கிறார்கள். இந்நிலையில் பணக்காரன் கொடுத்தால் என்ன என்கிற பிரச்சினையும் எழுந்திருக்கிறது. கிராமப்புறங்களைப் பொறுத்தவரை, கொஞ்சம் சௌகரியமாக இருப்பவர்கள் தான் அவ்வாறு உதவக்கூடிய சூழ்நிலையிலும்

[திரு. க. இராமமூர்த்தி] [1981 ஏப்ரல் 27

இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அவர்களையும் நாம் கெடுபிடி செய்யும்போது, ஏழை பணக்காரன் என்கிற பிரச்சினை வரவில்லை. கிராமத்திற்கு எதிராக அரசாங்க அதிகாரிகள் கிராமத்திற்குச் சென்றால், கிராம மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக அதிகாரிகளிடம் ஒன்று திரண்டு எதிர்க்கிறார்கள். இப்படி மக்கள் அதிகாரிகளுக்கு எதிராக திரும்புகிற சம்பவங்கள் நாட்டிலே பல பகுதிகளில் நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாக சிதம்பரம் போன்ற பகுதிகளிலும் நடைபெற்றிருக்கின்றன. இதன் விளைவு என்ன ஆகுமோ என்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் அரசாங்கம் தவிர்க்க வேண்டுமேயொழிய இவற்றுக்குத் துணை நிற்கக் கூடாது. இவற்றைப் பற்றியெல்லாம் நான் ஏற்கெனவே பல தடவை சொல்லியிருந்தாலும் கூட, இப்போதாவது அரசாங்கம் தன் கவனத்தை இதில் திருப்பி ஆவன செய்ய வேண்டும். குறிப்பாக, இன்றைக்கு இம்மாதிரிச் சம்பவங்கள் தொடர்ந்து தென்னாற்காடு, வட ஆற்காடு, சேலம், தர்மபுரி போன்ற இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், இதைப்பற்றி இந்த அவையிலே விரிவாக விவாதித்து ஒரு முடிவுக்கு உடனடியாக வரவேண்டிய காரணத்தாலே, இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சங்கரலிங்கம் அவர்கள் பேசுகின்றபோது, விவசாயிகளிடமிருந்து அவர்கள் திருப்பித் தர வேண்டிய கடனை வசூலிக்க எடுக்கப்படுகின்ற நடவடிக்கையைப் பொறுத்தவரையிலும், இது திடீரென்று எடுக்கப்படுகின்ற நடவடிக்கையாக இருக்கிறது என்றும், எதிர்பாராமல் எடுக்கப்படுகின்ற நடவடிக்கையாக இருப்பதாகவும், அதன் காரணமாக சில இடங்களில் டி.பி., ஷாக்கு போன்ற நோய்கள் எல்லாம் விவசாயிகளுக்கு வந்து விட்டன என்றும் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில தவறான தகவல்களை இங்கே தந்திருக்கிறார்கள். போதிய கால அவகாசம் அவர்களுக்குத் தந்து தான் இத்தகைய நடவடிக்கையை எடுக்கிறோம். நோட்டீஸ் மூலம் அவர்களுக்குச் சொல்லி, அதற்குப் பிறகு விளம்பரம் செய்யப்பட்டு அதிலும் குறிப்பாக இன்னாரிடமிருந்து இவ்வளவு கடன் வசூலிக்கப்பட வேண்டுமென்று அவர்களுக்குத் தனித்தனியாக அறிவித்த பிறகு கூட, அவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தாவிட்டால் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கிறோம். அப்படி கொடுத்த காலம் முடிந்த பிறகு கூட, உடனடியாக நடவடிக்கை எடுக்காமல், இரண்டாம் தடவையாக இன்னும் ஒரு முறை அவர்களுக்குத் தெரிவித்து விட வேண்டுமென்ற நோக்கத்தோடு தெரிவித்து



1981 ஏப்ரல் 27] (திரு. சி. பொன்னையன்)

ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் தந்த பிறகும், அவர்கள் திருப்பித் தராவிட்டால்தான், நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட நிலை ஏற்பட்ட பிறகுதான், இப்படிப்பட்டவர்கள் மீது இன்றைக்கு தமிழ்நாடு பூராவும் உள்ள அனைத்துப் பகுதியிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், திடீரென்று எதிர்பாராமல் நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு டி.பி., ஷாக் போன்றவை வரக்கூடிய அளவில் என்றைக்கும் இந்த அரசு இல்லை. அப்படி திடீரென்று நடவடிக்கை எடுத்தால் கூட, அவர்களுக்கு அதிர்ச்சி தான் ஏற்படலாம். ஆனால் அப்படிக் கூட இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். கொஞ்சம் காலமல்ல, தேவைக்கு அதிகப்படியான கால அளவு

(முற்பகல் 10-10)

அவர்கள் பெற்றார்கள். கால அவகாசம் தேவைக்கும் மேல் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் முறைப்படி செய்யப்பட்டிருக்கிறது. அதனால்தான் அந்த நிலை இருக்கிறது. இதிலே அடங்கியிருக்கும் பிரச்சினை மிகவும் முக்கியமானது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகின்றபோது, கொள்கை அளவிலே வாங்கிய விவசாயக் கடனை அவர்கள் திருப்பிக் கட்ட வேண்டும் என்பதை, தான் ஒத்துக்கொள்வதாகவும், தன்னுடைய கட்சி ஒத்துக்கொள்வதாகவும், வறட்சிப் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் மீது நடவடிக்கை எடுக்கும்போது அந்தப் பகுதி வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்படாமல் இருந்தாலும் கூட இந்த வறட்சியினுடைய பாதிப்பு அங்கேயும் ஏற்பட்டிருக்கும் என்பதால், அவர்கள் பலவிதமான சோதனைகளுக்கு உள்ளாகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுடைய கடன் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், அரசே ஒரு தெளிவான நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் 'நீங்கள் தேர்தல் வாக்குறுதி தந்தீர்கள்' என்றும் 'ஒரு நீண்ட உறுதிமொழி தந்தீர்கள்' என்றும், உறுதிமொழி அவ்வாறு கொடுத்ததால்தான் விவசாயிகள் கடனைக் கட்டாமல் இருக்கிறார்கள் என்றும், சிறு விவசாயிகளுடைய கடனை ரத்து செய்வோம் என்று சொல்லிவிட்டு இப்போது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறீர்களே என்றும் கேட்டார்கள். சிறு விவசாயிகள் மீது நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. விவசாயிகளிலே பலதரப்பட்டவர்கள் இருக்கிறார்கள். சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், பெரும் விவசாயிகள் என்று விவசாயிகள் மூன்று கேடர்களாக இருக்கிறார்கள். அவர்களிலே குறிப்பாக ஐந்து ஏக்கருக்கும் கீழே வைத்துக்கொண்டிருக்கும் சிறு விவசாயிகள், அவர்கள் தரவேண்டிய 130 கோடி ரூபாய் கடன் பாக்கியைத் தரவில்லை என்று சொல்லி அவர்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்க

வில்லை. அதைவிட ஒருபடி மேலே சென்று ஐந்து ஏக்கர் முதல் பத்து ஏக்கர் வரை வைத்திருப்பவர்கள் நடுத்தர விவசாயிகள். அவர்கள் 99 கோடி ரூபாய் தரவேண்டியிருக்கிறது. அவர்கள் 99 கோடி ரூபாய் தரவேண்டியிருந்தால்கூட, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. பத்து ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள் அந்த நிலத்தோடு கூட வேறு தொழில்கள் செய்து வருமானத்தைப் பெறுகிறார்கள். அவர்களிடமிருந்து 68 கோடி ரூபாய் வரை வரவேண்டியிருக்கிறது. அந்த நிலுவைக் கடனைத் திருப்பித் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தேசித்திருக்கிறோம். இதற்குப் பின்னணி என்ன என்பதை இந்த அவை அறிய வேண்டும் என்று சிலவற்றை தான் சொல்கிறேன். இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முந்தைய காலத்திலேயும் கூட விவசாயிகளுக்குப் பலவிதமான சலுகைகளை நாங்கள் அளித்திருக்கிறோம். விவசாயிகளுடைய பிரச்சினைகளை இந்த அரசு சரிவர அணுகவில்லை என்ற நிலைமை இல்லை. கடந்த காலங்களிலே இல்லாத அளவுக்கு, அவர்களுடைய கோரிக்கை தார்மீகமானது என்ற அடிப்படையிலே, விவசாயிகளுடைய பொருளாதார வளர்ச்சி தான் ஒட்டுமொத்த நாட்டு வளர்ச்சிக்கு அச்சாணி என்ற அடிப்படையிலே பல சலுகைகளை நாங்கள் செய்திருக்கிறோம். கடந்த ஆண்டிலே 1979-லே ஐந்து கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கு வட்டிச் சலுகை அளித்தோம். அதற்குப் பிறகு 42 கோடி ரூபாய் அளவுக்கு அவர்களுக்குச் சலுகைகளைத் தந்தோம். அதற்குப் பிறகு, ஒட்டுமொத்தமாக தற்போது கூட, மேலும் 40 கோடி ரூபாய் பெருமானம் உள்ள சலுகைகளை அவர்களுக்கு அளித்து, மொத்தமாக 118 கோடி ரூபாய் அளவுக்குச் சலுகைகள், எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்திலே அளிக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் விவசாயிகளுடைய பிரச்சினைகளை இந்த அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது என்பதுதான்.

நிலவள வங்கிகள், மைய வங்கிகள் எல்லாம் விவசாயிகளுக்குக் கடன் தரக்கூடிய தகுதியினைப் பெற்றிருக்கின்றன. அவர்கள் ரிசர்வ் வங்கி விதித்திருக்கும் ஒருசில நிபந்தனைக்கு உட்பட்டுத்தான் தர வேண்டும். விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டாததால், ரிசர்வ் வங்கியிடமிருந்து இந்த நிலவள வங்கிகள் மீண்டும் பணம் பெற முடியாமல் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களும் நானும் பலமுறை அக்கறை எடுத்துக்கொண்டு ரிசர்வ் வங்கியோடு கலந்து பேசி, 40 விழுக்காடு அளவுக்காவது கட்டாயமாக வசூல் செய்தால்தான் அடுத்த கடனுக்கு ரிசர்வ் வங்கி உதவி செய்யும் என்று இருக்கும் நிபந்தனையைத் தளர்த்தி, அது 20 விழுக்காடு என்று இருந்தால் போதும்



என்று உத்தரவை வாங்கி, அதன் மூலமாக மைய வங்கிகள், நிலவள வங்கிகள் ரிசர்வ் வங்கியிடமிருந்து பணத்தைப் பெற்று விவசாயிகளுக்கு அடுத்த கடனைத் தரவேண்டும் என்று சலுகைகளையும் வாங்கித் தந்திருக்கிறோம்.

சில வங்கிகளிலே ஊழியர்களுக்கு ஊதியம் கூட கொடுக்கமுடியாத நிலை வந்தபோது, வழிவகைக் கடன்களாக நிலவள வங்கிகளுக்கு 33.50 கோடி ரூபாயும், மைய வங்கிகளுக்கு 45 கோடி ரூபாயும், வழிவகை முன்பணம் என்ற வகையிலே, விவசாயிகள் பாதிக்கப்படக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையிலே, அரசினுடைய நிதிப் பிரச்சினையைக்கூட பொருட்படுத்தாமல், இந்த அரசு 78 கோடியே 50 லட்சம் ரூபாய் இந்த வங்கிகளுக்கு வழங்கியிருக்கிறது. இத்தகைய நடவடிக்கைகளை எடுத்த பிறகும்கூட, நாம் கடனை மீண்டும் வசூல் செய்யாமல் இருக்கும்போது பலவிதமான பாதிப்புகள் நமக்கு ஏற்படுகின்றன. இருக்கும் கடன்களை நாம் உடனடியாக வசூல் செய்யாவிட்டால், புதிய விவசாயக் கடன், விவசாயிகளுக்குக் கிடைக்காமல் போகும் நிலை வந்துவிட்டால், விவசாயிகள் உணவு உற்பத்தி செய்யும் அளவு குறையும், விவசாயிகளும் இன்னலுக்கு ஆட்படுவார்கள். உலக வங்கியிடமிருந்து கடனை வாங்கி, உலக வங்கி ஏ.ஆர்.டி.சி. மூலமாக அந்தப் பணத்தை செகுலேட் செய்து, ரிசர்வ் வங்கி இடுகின்ற விதிகளுக்குட்பட்டு அந்தந்த மாநிலங்களுக்கு அந்தப் பணம் தரப்படுகிறது. அப்படி ரிசர்வ் வங்கி பணத்தைத் தரும்போது, அந்தப் பணத்தை ரிசர்வ் வங்கி உலக வங்கியிடமிருந்து கடனாக வாங்கித் தருகிறது. விவசாயிகளுக்கு அளிக்கப்படும் அந்தப் பணத்தை, மாநில அரசைப் பொறுத்த வரையில், விவசாயிகளிடமிருந்து வசூல் செய்து ரிசர்வ் வங்கிக்குத் தர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது, தமிழகத்திலே உள்ள விவசாயிகளைப் பொறுத்த வரையில், கடன் பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கைவேந்தன் என்ற அடிப்படையிலே வாங்கிய கடனைத் திருப்பித் தருவதில் விவசாயிகள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த உணர்வை நான் பாராட்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களின் எண்ண உணர்வுகள் எல்லாம் அந்தப் பகுதியிலே தான் தவழ்ந்தனவே தவிர, பிரச்சினையில் இல்லை. ஆனால், உண்மை நிலைமையைப் பார்த்தால், மிகவும் வேதனையாக இருக்கிறது. வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டாத அளவுக்கு பாரதத்திலேயே நிலுவைக் கடனை அதிகமான அளவுக்கு வைத்திருக்கும் மாநிலம் தமிழகம் தான் என்று எடுத்துச் சொல்லக்கூடிய அளவுக்கு 297 கோடி ரூபாய் அளவுக்கு நிலுவைக் கடன் இருக்கிறது. வாங்கிய கடனை விவசாயிகள் கட்டாமல் இருப்பதால், மத்திய அரசு ஆழ்ந்த கவலையைத் தெரிவித்திருக்கிறது. இந்தியாவிலே இருக்கும் அனைத்து விவசாயிகளுடைய கடன்களையும் ரத்து செய்தால், ஏழு ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே

கடனை ரத்து செய்யும் நிலை வரும் என்றும், அப்படிச் செய்தால் மத்திய அரசே காலியாகிவிடும் என்றும் அச்சம் இருக்கிறது. மேலும், மாநிலத்தைப் பொறுத்தவரையில், "அப்படி விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கும் கடன்களை ரத்து செய்யும் அளவுக்கு உங்களுக்கு வசதி வாய்ப்புக்கள் இருந்தாலும், அப்படி ரத்து செய்யும் நிலை ஒரு மாநிலத்திலே ஏற்பட்டால், அதன் விளைவாக பல மாநிலங்களிலே இந்தப் பிரச்சினை உருவாகிறது" என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. தமிழகத்திலே அப்படி ரத்து செய்தால், 'தமிழகத்திலே விவசாயிகளின் கடன்கள் அனைத்தையும் ரத்து செய்கிறார்கள், ஏன் எங்கள் மாநிலத்திலே ரத்து செய்யக்கூடாது என்று ஒவ்வொரு மாநிலத்திலும் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டால், இந்தியா முழுவதும் பிரச்சினைகள் உருவாகும்' என்ற அச்சத்தை மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. மஹாராஷ்ட்டிரா மாநிலத்திலேயும், தமிழகத்திலேயும் ரத்து செய்தது ஒரு சரியான நடைமுறை அல்ல என்று மத்திய அரசு சுட்டிக் காட்டி, இந்த முறையை மேற்கொள்ளக்கூடாது என்று அறிவுறுத்தியிருக்கிறது. இதைவிட வேதனையான சூழ்நிலை வேறு ஒன்று இருக்கிறது. உலக வங்கியின் தலைவர் திரு. மக்னமாரா அவர்கள் அண்மையில் தமிழகம் வந்திருந்தார்கள். சென்ற ஆண்டு அவர்கள் நம்மை எச்சரித்தார்கள். தமிழகத்துக்கு கொடுத்த கடனைத் திருப்பிச் செலுத்தாததால், தமிழகத்தை கடன் உதவி செய்வதற்கு 'ப்ளாக் லிஸ்ட்' செய்ய வேண்டி வரும் என்று எச்சரித்தார்கள். இந்த நிலைமை நீடித்தால், அந்த அளவுக்கு கட்டாய விளைவுகளை அது ஏற்படுத்தும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பின்னர் அடுத்த ஆண்டுக்குத் தரவேண்டிய கடனைத் தாருங்கள் என்று சொல்லி 55 கோடி ரூபாய் அளவுக்கு மாநில அரசு ரிசர்வ் வங்கி மூலமாக ஏ.ஆர்.டி.சி.-க்கு Guarantee தந்தது. அதற்குப் பிறகும் செலுத்தவேண்டிய கடனைச் செலுத்தாததால், 'ப்ளாக் லிஸ்ட்' செய்ய வேண்டி வரும் என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் 'ப்ளாக் லிஸ்ட்' செய்தால், தமிழகத்திலே இருக்கும் விவசாயிகளுக்கு உலக வங்கி மூலமாக, ஏ.ஆர்.டி.சி. மூலமாக சேனலைஸ் செய்யப்படும் விவசாயக் கடனில் சல்லிக் காசுகூடக் கிடைக்காது. உலக வங்கிக் கடனைத் திருப்பித் தர தவறி விட்ட மாநிலத்திற்கு மற்ற Developmental activities-க்குக் கொடுக்கப்படும் உதவிகளும் கிடைக்காது. ஒரு மாநிலம் தான் வாங்கிய ஒரு குறிப்பிட்ட

(முற்பகல் 10-20)

கடனைத் திருப்பித் தரவில்லை என்ற காரணத்திற்காக 'ப்ளாக் லிஸ்ட்' செய்யப்பட்டால், அந்த மாநிலத்திற்கு வேண்டிய மற்ற வளர்ச்சித் திட்டங்களுக்கான கடன்கள் எதையும் தரக்கூடாது என்று உலக வங்கியின் விதி இருக்கிறது. அதன் அடிப்படையில் பிரச்சினைகள் எழும்போது, அதிகமான



அளவுக்கு உலக வங்கியின் கடன் உதவியைப் பெற்று பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டிருக்கிற ஒரு மாநிலத்திற்கு அது எத்தகைய சிக்கல்களையெல்லாம் ஏற்படுத்தும் என்பதை நாம் உணர்ந்திட வேண்டும். எனவேதான் அதன் அடிப்படையில் மத்திய அரசும், உலக வங்கியும் ஏ.ஆர்.டி.சி.-யும் ரிசர்வ் வங்கியும் இட்ட கட்டளைகளின் அடிப்படையில் உடனடியாகக் கடன்களை வசூலிக்க வேண்டும் என்று இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. அதிலும்கூட சிறு விவசாயிகள் மற்றும் நடுத்தர விவசாயிகளுக்குத் தொல்லை அளிக்கக்கூடாது என்ற அடிப்படையில், அவர்களிடத்தில் வசூலிக்கப்படவில்லை. பெரிய விவசாயிகளிடம் மட்டுமே கடன் தொகைகளை வசூலித்துக்கொண்டிருக்கிறோம். அவர்களைக்கூட நாம் கொடுமைப்படுத்தி வசூலிக்கவில்லை. அவர்களுக்கு இருமுறை நோட்டீஸ் கொடுத்து, போதிய அவகாசம் கொடுத்து, ரிசர்வ் வங்கிக்கு உடனடியாகக் கொடுக்க வேண்டிய கடன் தொகையை மட்டும்தான் வசூலித்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது, நல்லூரில் ஒரு பெரிய விவசாயி ஒருவரிடமிருந்து 90 தங்கக் காசுகளை எடுத்து விட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். 90 தங்கக் காசுகளை வைத்துக் கொண்டிருக்கிற வசதி படைத்த விவசாயியே கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்றால், பிறகு நாம் யாரிடமிருந்துதான் வசூலிப்பது? சிறு விவசாயிகளிடமிருந்தும் வேண்டாம், நடுத்தர விவசாயிகளிடமிருந்தும் வேண்டாம் என்று சொல்லிவிட்டு, 90 தங்கக் காசுகளை வைத்துக் கொண்டிருக்கும் பெரிய விவசாயிகளிடமிருந்துகூட வசூலிக்கவில்லை என்றால், அதனால் என்னென்ன நிலைமைகள் ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? பாரதத்திலேயே தமிழ் நாடு முதன்முறையாக விவசாயக் கடன் பெறுவதற்கான வாய்ப்பில்லாத நிலையில் 'ப்ளாக் லிஸ்ட்' செய்யப்படுகிற நிலைமை ஏற்படும். அதன் காரணமாக, கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சியில் எத்தகைய நிலைமைகள் ஏற்படும் என்பதையும் இந்த அவை உணர வேண்டும். இதில் நமது அரசைப் பொறுத்த வரையில், மத்திய அரசின் உத்தரவைத்தான் அமுல்படுத்தி வருகிறோம். அவர்கள் கூறியிருக்கும் காரணங்களின் அடிப்படையில்தான் சில காரியங்களை நாம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கும் என்பதை மட்டும் இங்கே எடுத்துச் சொல்லி, இதன் காரணமாக அவையின் இன்றைய நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து இந்தப் பொருள் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்று தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

### 3. கவன ஈர்ப்பு.

**(1) தமிழ்நாடு பால்வள நிறுவன ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன் :—

"கடந்த பல நாட்களாகத் தொடர்ந்து தமிழ்நாடு பால்வள நிறுவன ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து".

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, 19—11—1980 முதல் வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது என்று அறிக்கையில் சொல்லப் பட்டிருக்கிறது. இப்போது பேச்சுவார்த்தையில் முறிவு ஏற்பட்டு அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனுடைய பின்னணி எதுவாக இருப்பினும், பாதிப்புக்கு உள்ளாகி யிருப்பவர்கள் பொதுமக்கள் என்ற அடிப்படையில், இந்த பாதிப்பை நீக்கும் வகையில் அரசு மீண்டும் ஒருமுறை ஊழியர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது முதலே பால்வளத் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுடைய நலனைப் பேணுவதற்காக என்று மிகுந்த அனுதாப உணர்வோடு பல சௌகர்யங் களையும் செய்து கொடுத்திருக்கிறது. கடந்த 1980 ஆம் ஆண்டு பிப்ரவரியில் பால்வளத் துறையில் 1972 ஆம் ஆண்டு முதல் கடந்த 8 ஆண்டுகளாகத் தற்காலிகப் பணியாளர்களாக இருந்து வந்த நிலைமையை மாற்றி, அவர்களை எல்லாம் நிரந்தரப் பணியாளர்களாக மாற்றியிருக்கிறோம். இதன் காரணமாக ஆண்டுக்கு 30 லட்சம் ரூபாய் அரசுக்குச் செலவாகி இருக்கிறது. பல பிரச்சினை

@ 167 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



களையும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று இருந்தபோது, அவர்கள் தற்போது நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். சென்னையில் 10 லட்சம் வாடிக்கையாளர்கள் சுமார் 2½ லட்சம் லிட்டர் பாலை நாள்தோறும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். வேலை நிறுத்தத்தில் சிலர் ஈடுபட்டிருந்தாலும்; வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பால் சீராகவும், சரியாகவும் போய்க் கிடைத்துக்கொண்டிருக்கிறது. அதோடு, நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, அரசு பரிவோடு இந்தத் தொழிலாளர்களின் பிரச்சினையைக் கவனித்துத் தீர்க்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**(2) விருதுநகர் கல்வி மாவட்டத்தில் மானியம் பெறும் உயர் நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஏனைய பணியாளர் களுக்கு கிருஸ்துமஸ் பண்டிகைக்கு முன்பணம் வழங்காதது குறித்து.**

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

"விருதுநகர் கல்வி மாவட்டத்தில், மானியம் பெறும் உயர் நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஏனைய பணியாளர்களுக்கு, கிருஸ்துமஸ் பண்டிகைக்கு முன்பணம் வழங்காததும், அதன் விளைவாக அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடு குறித்து."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், அரசு தன்னுடைய சொந்தப் பணத்திலிருந்து விழாக்கால முன்பணம் கொடுப்பது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. விருதுநகர் கல்வி மாவட்டத்தில் உள்ள விளாம்பட்டியில் ஏ. வி. எம். மரியமுத்து நாடார் உயர் நிலைப் பள்ளியில் பணியாற்றும் புலவர் மரியசந்தானம் என்பவர் தான் செலுத்தியிருக்கும் வைப்பு நிதியிலிருந்து இச்சலுகையைக் கோரியிருக்கிறார். ஆனால், இந்தச் சலுகை அந்தப் பள்ளியின் தாளாளரால் மறுக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பொதுவாக ஆசிரியர்கள் ஆறு காசுகள் என்றும் அரசு ஆறு காசுகள் என்றும் நிருவாகம் ஆறு காசுகள் என்றும் கொடுப்பது என்ற முறையில் அமுல்படுத்தப் பட்டு வந்தது. ஆனால் இந்தச் சலுகையை அந்தக் குறிப்பிட்ட பள்ளியின்

@ 168 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தாளாளர் மறுத்திருக்கிறார். அவர்மீது கல்வித்துறை ஏதேனும் நடவடிக்கை எடுக்க முன்வருமா? இது ஆசிரியரின் உரிமையாகும். எனவே ஆசிரியரின் உரிமையைப் பறிக்கும் முறையில் மாவட்டக் கல்வி அலுவலரும் உறுதுணையாக இருப்பது சரியல்ல. எனவே, புலவர் மரியசந்தானத்திற்கு முன்பணம் வழங்கிட அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இவ்வாறு முன்பணம் தருகிற உத்தரவு 8—1—1981-ல் தான் போடப்பட்டிருக்கிறது. எனவே சென்ற 1980 ஆம் ஆண்டு கிருஸ்துமஸ் பண்டிகைக்கு உரிய முன்பணம் தரப்பட்டிருக்காது. ஆனால் 1981 ஆம் ஆண்டு வருகிற கிருஸ்துமஸ் பண்டிகைக்கு முன்பணம் தரப்படும். அதை மாவட்டக் கல்வி அலுவலரும், பெண்கள் பள்ளிகளாக இருப்பின் மகளிர்ப் பள்ளி ஆய்வாளர்களும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். இதில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதன் மீது அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** சம்பந்தப்பட்ட ஆசிரியர் 17—11—1980 அன்றே மாவட்டக் கல்வி அலுவலருக்குத் தன்னுடைய விண்ணப்பத்தை அனுப்பியிருக்கிறார். அமைச்சர் அவர்களின் அறிக்கை, சமீபத்தில் அரசு அளித்துள்ள சலுகையைப் பொருத்தது. ஆனால் இந்தச் சலுகை, ஆசிரியர்கள் தொடர்ந்து பல ஆண்டுகளாகப் பெற்று வந்த சலுகையாகும். இதுகுறித்து ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு அலுவலருக்கும் கடிதம் எழுதப்பட்டு, இது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இதில் ஆசிரியரின் உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. தாளாளருக்கு இதில் எந்தவிதமான உரிமையும் இல்லை. 1964 ஆம் ஆண்டிலிருந்தே டிரிப்பிள் பெனிபிட் ஸ்கீமில் ஆசிரியரே முழுமையாகப் பணம் கொடுத்து வருவதால், தாளாளருக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை. எனவே இந்த வகையில் தாளாளர் ஆசிரியரின் உரிமையைப் பறித்துவிட்டார். எனவே பாதிக்கப்பட்ட ஆசிரியருக்கு மீண்டும் அந்தச் சலுகையை வழங்க அரசு ஆணையிடுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கவன ஈர்ப்புக்கும் இந்த வினாவிற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட நிகழ்ச்சியின் அடிப்படையிலே கேள்வி கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். அதுபற்றி அறிவதற்கு ஆர்வத்தோடிருந்தால், தனியாகக் கேள்வி கேட்டால் அல்லது வேறு வகையில் பிரச்சினையை எழுப்பினால் கேட்டுச் சொல்வதற்கு நலமாக இருக்கும்.



## 4. அரசின் தீர்மானம்.

### கல்விபற்றிய கொள்கைக் குறிப்பு குறித்து

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள கல்விபற்றிய கொள்கைக் குறிப்பு @ பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு, பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கல்வி பற்றிய மானியம் நம் நாட்டிலேயே அதி முக்கியத்துவம் வாய்ந்தது. அது எல்லோருக்கும் தெரியும். இதிலே இன்றைக்குப் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருப்பவர்கள் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, குறைந்த அளவுக்கு 10 நிமிடங்கள் அதிகபட்சமாக 15 நிமிடங்கள் என்ற அளவுக்குக் கொடுத்தாலும்கூட, இந்த இரண்டு நாட்களுக்குள் முடிப்பது என்பது மிகவும் கஷ்டமானதாக இருக்கும். எந்த அளவுக்குக் கட்டுப்படுத்திப் பேசவேண்டுமோ அந்த அளவுக்குப் பேச வேண்டும் என்பதை நினைவூட்டிக் கொள்கிறேன். ஆசிரியர்கள் தொகுதி, பட்டதாரிகள் தொகுதி உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள், இதர உறுப்பினர்கள் எல்லோரும் பேச வேண்டும். ஆசிரியர்கள் பிரதிநிதிகள் அனைவருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறோம். அந்த அளவுக்கு அவர்களுக்கும் ஒத்துழைப்புக் கொடுத்து குறைந்த அளவுக்கு 10 நிமிடங்கள் அல்லது அதிகமான அளவுக்கு 15 நிமிடத்திற்கு மேல் போகாமல் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடப்பு ஆண்டிலே

@ 169-236 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1,038 கோடி ரூபாய் அளவுக்குச் செலவினம் என்று ஒதுக்கி, அதில் கல்விக்காக என்று 249 கோடி தான் ஒதுக்கியிருப்பதாகவும், அது சென்ற ஆண்டினுடைய ஒதுக்கீட்டைவிட ஒரு விழுக்காடு குறைவாக இருக்கிறது என்பதையும் நாம் பார்க்கிறோம். சென்ற ஆண்டிலே மொத்தச் செலவினமான 967 கோடி ரூபாய் ஒதுக்கீட்டிலே கல்விக்காக 224 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. மொத்தத்திலே இந்த ஆண்டு 22 விழுக்காடு தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றாலும்கூட, மற்றவகையில் அதை ஒட்டிப் பார்க்கும்போது, உதாரணமாக சமூகப் பணித் திட்டங்கள், ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய மக்கள் நலன்கள் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதுபோலவே கால்நடைக் கல்வி, மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, நடுத்தரக் கல்வி என்று ஒதுக்கியுள்ள மொத்தத் தொகையைப் பார்க்கும்போது, இது ரூ. 332 கோடியாக உயர்ந்திருக்கிறது. 332 கோடி ரூபாய் நடப்பு ஆண்டிலேயும், சென்ற ஆண்டிலே 290 கோடி ரூபாய் என்றும் இருக்கிறது. இதை மொத்தமாக விழுக்காடு அடிப்படையில் பார்க்கும்போது, சென்ற ஆண்டு 29.9 கல்வி ஒதுக்கீடு என்றாலும், நடப்பு ஆண்டிலே 29.1 என்ற அளவிலே இருக்கிறது. 29.9 விழுக்காடு, 29.1 விழுக்காடு என்று பார்க்கும்போது, இதிலே 0.8 விழுக்காடு குறைவாக இருப்பதை நாம் பார்க்கிறோம். இப்படி குறைவதால், பொதுவாக ஒரு நாட்டினுடைய எதிர்காலம் எந்த அளவிலே பாதிக்கக்கூடிய நிலைமைகள் ஏற்படும் என்பது நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மையாகும். இந்த நாட்டினுடைய எதிர்கால வளர்ச்சி கல்விக்காக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டை, மூலதனத்தைப் பொறுத்துத்தான் இருக்கும் என்பதை நாம் உணர வேண்டும். எதிர்காலத்திலே நாட்டினுடைய வளமோ, சிறப்போ, தொழில் வளர்ச்சியோ இப்படி குறையக்கூடிய அளவிலே இருந்தால், எந்த அளவுக்கு நாட்டின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்பதை அறிய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வருகின்ற துணை நிதி ஒதுக்கீட்டிலாவது இந்தக் குறையை ஈடுசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நடப்பு ஆண்டிலே, 30—12—1980 முடிவடைந்த ஆண்டிலே பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள் என்று இந்த மாநிலம் முழுவதும் ஆரம்பிக்கப்பட்டு, நடத்தப்பட்டு, திரட்டப்பட்ட தொகை ரூ. 3.7 கோடி என்றிருக்கிறது. இது உண்மையாகவே நாம் பாராட்டவேண்டிய அம்சமாக இருக்கிறது. இதிலே பங்கு பெற்ற பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், குடிமக்கள் அனைவரையும் நாம் பாராட்டவேண்டியவர்களாக இருக்கிறோம். இதுபோல நடப்பு ஆண்டிலேயும் பள்ளிச் சீரமைப்பு மகாநாடு நடக்கும் என்றால், கல்வியின் தரம், கட்டிடங்கள், தளவாடங்கள், மாணவர்களுக்கு உதவக்கூடிய காரியங்கள் எல்லாம் நன்கு நடைபெறும். அதனால், நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். அவ்வாறு பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகளின் மூலம் பணம் திரட்டப்

 (திரு. பா. ரா. தாமஸ்)

NEP 3L.4 N82.17

படும்போது, குறைபாடுகள் ஏதும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற எச்சரிக்கையை முன் வைக்கிறேன். மேல் நிலைப் பள்ளிகள் வந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் காலத்தில், ஈட்டு மானியம் என்ற அளவிலே நூலகங்கள், கட்டிடங்கள், தளவாடங்கள் கொடுத்த வகையிலும், பொது மக்களிடம் வசூலிக்கப்பட்ட, ஏராளமான பணத்தையும் நிர்வாகங்களால் போடப்பட்ட பணத்தையும் கொண்டு நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம். இருந்தபோதிலும், ஒதுக்கீடு என்று பார்க்கின்றபோது, இந்த 0.8 விழுக்காடு குறைவை நிறைவு செய்ய வேண்டும். அப்படி நிறைவு செய்து பணியிடங்களை அதிகமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்கள் பணியிடங்களை அதிகப்படுத்துவதன் மூலமாக, கல்வியினுடைய தரத்தை, நிலையை நாம் உயர்த்த முடியும். பரவலான கல்வியை கிராமப்புறங்களுக்கும் எடுத்துச்செல்கின்ற நிலைமைகள் உருவாகும். பொதுவாக இந்த மாநிலத்திலே மூன்று ஆண்டுகளாக மேல் நிலைப் பள்ளிகளை ஏற்படுத்திய பிறகு, உயர் நிலைப் பள்ளிகள் 2,747 என்றும், அதிலே மேல் நிலைப் பள்ளிகள் 1,243 என்றும் ஆகியிருக்கிறது. இந்த 1,243 மேல் நிலைப் பள்ளிகளிலே படிக்கக்கூடிய மாணவர்கள் எண்ணிக்கை 2,57,588 ஆக இருக்கிறது. இதிலே ஆண் பிள்ளைகளினுடைய எண்ணிக்கை 1,63,967 என்றும், மாணவிகளுடைய எண்ணிக்கை 93,821 என்றும் இருக்கிறது. இதிலே 70 ஆயிரம் மாணவிகள் குறைவாக இருக்கிறார்கள். எண்ணிக்கையின் அடிப்படையிலே பார்க்கும்போது, மாணவர்களைவிட பெண்கள் குறைவாகவே படிக்கிறார்கள். இந்தப் பெண்களின் எண்ணிக்கையைப் பார்க்கிறபோது, அவர்களைச் சேர்க்கின்ற போதும் சரி, பள்ளியிலேயிருந்து விடுபடுகின்ற போதும் சரி, அதாவது 6 வயதிலிருந்து 11 வயது வரை, 11 வயது முதல் 14 வயது வரை, 14 வயது முதல் 17 வயது வரை உள்ள இந்தப் பருவங்களில் பார்க்கும்போது, முதலிலே 15 விழுக்காடு என்று சேர்க்கையிலே இருக்கிறது. அதைத் தொடர்ந்து 14-17 வயது என்று வரும்போது, 35 விழுக்காடு முதல் 45 விழுக்காடு வரை என்று வந்துவிடுகிறது. இப்படி குறைகிறது. ஆகவே பெண்கள் பள்ளியிலிருந்து விடுபடுகின்றபோது, 2/3 பங்கு பேர்கள்தான் இருக்கிறார்கள். பெண்கள் கல்வியைப் பொறுத்த வரையில், பள்ளிகளைப் பரவலாக ஆரம்பிக்க வேண்டும். கோ-எஜுகேஷன் முறை என்பது தவிர்க்கப்பட வேண்டும். பெண்களுக்குத் தனியாகக் கல்வி வசதிகள் உருவாகவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்திரிகையிலேகூடப் பார்த்தேன். மேல் நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கிறோமோ இல்லையோ என்பதுபோல, பல கருத்துக்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. நடப்பு ஆண்டிலே மேல் நிலைப் பள்ளிகள் எங்கெங்கே

தேவைப்படுகின்றனவோ அங்கே ஆரம்பிக்க வேண்டும். அப்படி ஆரம்பிக்கும் போது, நல்ல தரமான கல்வி அளிக்கக்கூடிய அளவில் அவைகள் பயன்பட வேண்டும். தேவையான அளவுக்கு வசதிகளையும் செய்துதர வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

---

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

இப்போது கிராமப்புறங்களிலே ஒரு புதிய உணர்ச்சி, கவர்ச்சி எல்லாம் உருவாகியிருக்கின்றது. கிராமப்புறங்களில் மேல் நிலைப் பள்ளி இருப்பதைப் பார்க்கிறோம். அருமையான தளவாடங்கள், வகுப்பறைகள் எல்லாம் இருக்கின்றன. மாணவர்களும் பெற்றோர்களும் அதிக அக்கறையும் ஆர்வமும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவைகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். 1978-ல் ஆரம்பிக்கப்பட்டு 1980-ல் வெளிவந்த மாணவர்கள், தேர்வு பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 59 விழுக்காடாக இருக்கின்றது. அந்த அளவுக்கு அதிகமாகத் தேறியிருக்கிறார்கள். நல்ல தேர்வு என்று சொல்லிக்காட்டியிருக்கிறார்கள். அதைப் பாராட்டியிருக்கிறார்கள். இந்தத் தேர்வை, ஹையர் செகண்டரி பள்ளிகள் செய்து காட்டியிருக்கின்றதைப் பாராட்டியிருக்கிறார்கள். அங்கே இயக்குநர் அவர்கள் கூட வந்திருக்கிறார்கள். இந்த பி.யூ.சி. மாணவர்களுடைய தரத்துடன் மேல் நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்து வந்த மாணவர்களுடைய தரம் ஒப்பிடக்கூடிய அளவிலே இருந்தது என்று அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக மேல் நிலைப் பள்ளிக் கல்வி நம் மாநிலத்தில் பெரும் வெற்றியைத் தந்திருக்கிறது. நம் மாநிலம் நல்ல முன்மாதிரியாக இருக்கிறது. தொழில் நுட்ப இயக்குநர் அவர்கள் 'இதைப்பற்றி நானே சொல்ல ஆசைப்படுகிறேன்' என்று சொன்னார்கள். அவர்கள் மாணவர்களை நேர்முகத் தேர்விற்கு அழைத்த போது பார்த்தேன். பி.யூ.சி. படித்த மாணவர்கள் கல்வித் தரத்தைவிட மேல் நிலைப் பள்ளியில் படித்த மாணவர்களுடைய கல்வித் தரம் சிறப்பாக இருந்தது, பொது அறிவுள்ளவர்களாக அவர்கள் திகழ்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, இந்தக் கல்வித் திட்டம் நல்ல முறையிலே வெற்றி பெற்றிருக்கிறது என்று பாராட்டியிருக்கிறார்கள். அண்மையிலே பிப்ரவரியில் சென்னைக்கு (National Association of Equal Opportunity என்ற சங்கத்தினுடைய தலைவர் திரு. லையன்ஸ் என்பவர் வந்திருந்தார்கள். அவர்கள் இந்த மாணவர்களுடைய கல்வித் திறன்பற்றி ஆய்வு செய்து வந்திருந்தார்கள். அவர்கள் தமிழக மாணவர்களுடைய கல்வித் தரம் தரமாக இருக்கிறது என்றும், அவருடைய நாட்டில் நிச்சயமாக இந்திய நாட்டு





மாணவர்கள், அதிலும் தமிழக மாணவர்கள் தேர்வுக்கு வந்தால், அவர்களைச் சோதனைக்கு உட்படுத்தாமலே சேர்த்துக்கொள்வேன் என்றும் பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள்.

மேல் நிலைப் பள்ளி ஆரம்பித்ததிலிருந்து, தொடர்ந்து மூன்று ஆண்டுக் காலத்தில், ஏராளமான பணியிடங்களை நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், கல்விச் செயலாளர் அவர்களும், கல்வி இயக்குநர் அவர்களும், ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் நிதித் துறையோடு போராடிப் பெற்றிருக்கிறார்கள் என்று கூற விரும்புகிறேன். அவர்களை நான் பாராட்டுகிறேன், முதல் ஆண்டில் 1,300 முதுகலைப் பணியிடங்களையும், 2-வது ஆண்டில் 2,490 என்றும், 3-வது ஆண்டில் 2,100 என்றும் ஆகமொத்தம் 5,590 பணியிடங்களையும் பெற்றிருக்கிறார்கள். இப்படி அவர்கள் செய்திருப்பது, கல்விப் பணி செம்மையாகவும், சீராகவும், சிறப்பாகவும் நடத்த வழிகாட்டியாக அமைந்திருக்கிறது என்று சொல்ல வேண்டும்.

அடுத்து, உடல்நலப் பயிற்சி ஆசிரியர்கள் பணியிடங்கள். அதன் இயக்குநர் அவர்கள் கடந்த ஆண்டில் 400 பணியிடங்கள் பெற்றிருக்கின்றார்கள். அந்தப் பணியிடங்கள் முழுவதும் நிரப்பப்பட்டு பயன்படுத்தப்படவில்லை. அதுபோல சென்ற ஆண்டு 200 உடல் நலப் பயிற்சி ஆசிரியர்கள் பணியிடங்கள் பெற்றும், அவைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. அந்தப் பணியிடங்கள் எல்லாம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டால், மேல் நிலைப் பள்ளியினுடைய தரம் இன்னும் உயர்வடையும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

நடப்பு ஆண்டிலே, நம்முடைய கல்வி விளக்கக் குறிப்பிலே முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. ஏனென்று விளங்கவில்லை. இப்போது பட்டதாரி ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் முதுகலைப் பட்டம் படித்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் அந்த வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்றால், முதுகலைப் பட்ட ஆசிரியர்களுக்கான பணியிடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். எனவே, முதுகலைப் பட்ட ஆசிரியர்கள் பணியிடங்களை ஏராளமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நடப்பு ஆண்டில் ஆய்வுக்கூட ஆய்வாளர்கள் பணியிடங்கள் 500 வழங்கியிருப்பதாக அறிகிறேன். ஏற்கெனவே 400 இடங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1,243 மேல் நிலைப் பள்ளிகளிலே சிறப்பான முறையிலே ஆய்வுக்கூடங்கள், அறிவியல் கூடங்கள் விளங்க வேண்டுமென்றால், செயல்பட வேண்டுமென்றால்,

அந்த ஆய்வுக் கூடங்களுக்கு ஆய்வுக்கூட அலுவலர்கள் தேவை. ஏற்கெனவே உயர் நிலைப் பள்ளியாக இருந்தபோது, சில பள்ளிகளில் மட்டும் ஆய்வுக்கூட அலுவலர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். ஆனால் மேல் நிலைப் பள்ளிகளான பிறகு, அந்தப் பள்ளிகளிலும் ஆய்வுக்கூடப் பணியாளர்கள் இல்லை. ஒருசில பள்ளிகளுக்குத்தான் இந்தப் பணியிடங்கள் கிடைத்திருக்கின்றன. பொதுவாக கல்லூரிகளிலே பி.யூ.சி. இருந்தபோது, எல்லாப் பிரிவுகளுக்கும் தனித் தனியாக ஆய்வுக்கூடப் பணியாளர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் அந்தக் கல்வியை மேல் நிலைப் பள்ளிகளிலே கொண்டுவந்த பிறகு, ஆசிரியர்களே ஆய்வுக்கூடப் பணிகளைச் செய்ய வேண்டிய அவல நிலை இருக்கிறது. அநேக மேல் நிலைப் பள்ளிகளிலே ஒரு ஆய்வுக்கூடப் பணியாளர்கூட இல்லாத நிலை இருக்கிறது. இப்போது 900 பணியிடங்கள்தான் இருக்கின்றன. மொத்தம் 1,243 மேல் நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இந்த நிலையில் 900 பணியிடங்களை எப்படி எல்லாப் பள்ளிகளுக்கும் தரப் போகிறார்கள் என்பது புரியவில்லை. சில பள்ளிகளில் கெமஸ்ட்ரி, பாட்டனி, ஜுவாலஜி என்று தனித் தனியாக ஆய்வுக் கூடங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பள்ளிகளில் ஒவ்வொரு ஆய்வுக்கூடத்திற்கும் தனித்தனியாக ஆய்வுக்கூடப் பணியாளர்கள் இருந்தால்தான், பணிகள் சிறப்பாக நடைபெறும். மேலும் ஷிப்ட் முறையில் சில பள்ளிகள் பணியாற்றுகின்றன. அங்கே ஆய்வுக்கூடப் பணியாளர்களுக்குப் பொறுப்பு அதிகமாக இருக்கிறது. காலையிலே இருந்து மாலைவரை இருக்க வேண்டியிருக்கிறது. கல்லூரிகளிலே டெமான்ஸ்டிரேட்டர்கள் என்று இருந்தார்கள். அப்படிப்பட்ட டெமான்ஸ்டிரேட்டர்கள்கூட இல்லாத மேல் நிலைப் பள்ளிகளிலே ஆய்வுக்கூடப் பணியாளர்களை நியமிக்க உடனடியாக ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல் நிலைப் பள்ளிகளிலே இரண்டு வகையான வேலைப் பளு இருக்கிறது. அறிவியல் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், டெமான்ஸ்டிரேட்டர்கள் இல்லாததால், குறிப்பிட்ட ஒரு வகுப்புக்கு ஆறு பாடவேளை வகுப்பு எடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு பாடவேளை என்பது 45 நிமிடங்கள். அப்படி 24 பாடவேளைகள்—அதாவது 17½ மணி நேரம் அல்லது 18 மணி நேரம் அவர்கள் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இதற்குப் பிறகு, அவர்கள் மாலையிலே ஷிப்ட் முறையிலே பிராக்டிகல் நடத்த வேண்டும். 'இன்டர்னல் அசெஸ்மென்ட்' செய்ய வேண்டும். எக்ஸ்டர்னல் அசெஸ்மென்டுக்கு மாணவர்களை ஆயத்தம் செய்ய வேண்டும். ரிகார்ட் நோட்டுகளைத் திருத்த வேண்டும். எனவே அவர்கள் 24 பாடவேளைகள் வகுப்புகள் நடத்த வேண்டு மென்பது முறையா? இந்தக் கட்டாயத்தைத் தளர்த்தி, 16 பாடவேளைகள் அவர்கள் வேலை செய்தால் போதும் அல்லது 18 பாடவேளைகள் வேலை செய்தால் போதுமென்று சொல்லி, அதற்கு வழிவகை செய்தால், நன்றாக



இருக்கும். கல்லூரிகளில் 8 மணி நேரம் வேலை செய்தால், போதுமென்ற நிலை இருந்தது. இங்கே குறைந்தது 18 மணி நேரம் வேலை செய்தால்தான் பாடங்களை முடிக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. இதை மாற்றி அமைக்க வேண்டும். மொழி ஆசிரியர்களுக்கு, வாரத்திற்கு வகுப்பிற்கு 4 பாடவேளை என்று 24 பாடவேளைகள் கட்டாயம் எடுத்தால்தான் ஊதியம் பெற முடியும். நாம் கட்டுரை நோட்டுகளை வைத்திருக்கிறோம். இப்படிப்பட்ட வேலைப்பளு இருந்தால், கட்டுரை நோட்டுகளை எப்படி உண்மையாகத் திருத்தி, முறையாக மாணவர்களுக்குக் கொடுக்க முடியும்? மொழியின் தரத்தை உயர்த்த இது போதுமா? அவர்களுக்கும் கட்டாயம் சலுகை காட்ட வேண்டும். அதாவது 24 பாடவேளைகள் என்பதை 18 பாடவேளைகள் என்று குறைக்க வேண்டும். மேல் நிலைப் பள்ளிகளில் டியூட்டர்கள் என்று வாய்ப்பை ஏற்படுத்தினால், மொழியின் தரத்தை நல்ல முறையிலே உயர்த்த முடியும். ஆங்கிலத்திலே, 11 ஆம் வகுப்பிலே 'பொயட்ரி' இல்லாமல் இருக்கிறது. பொயட்ரியை 'அப்ரிஷியேஷன் வேல்யூ' என்று சொல்லுகிறோம். அதை ஏற்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களின் வேலைப் பளுவைக் குறைக்க ஆவன செய்ய வேண்டும்.

பணியிடைப் பயிற்சி என்று அரசிலே நல்ல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேல் நிலைப் பள்ளிக் கல்வியானது திறம்பட நல்லமுறையிலே நடைபெறுவதற்கு முக்கியமான காரணமே அனுபவம் மிக்க பட்டதாரி ஆசிரியர்கள் அங்கே பணியாற்றுவதுதான் என்பதைத் திட்டவட்டமாக நாம் ஏற்றுக்கொள்கிறோம். தகுதியில்லாதவர்கள் தங்கள் தகுதியை உயர்த்திக் கொள்ளும் வகையிலே, இதைச் செய்திருக்கிறோம். நான் ஒரு ஆசிரியன் என்ற முறையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நமக்குத் தெரியாத பாடங்களைச் சிறப்பாகப் போதிப்போம், தெரிந்த பாடங்களைச் சிறப்பாகப் போதிக்க மாட்டோம். அதற்குக் காரணம் இருக்கிறது. நாம் அறியாத பாடத்தைக் கற்பிக்க வேண்டுமென்றால் ஆர்வத்தோடு, ஊக்கத்தோடு அந்தப் பாடத்தைப் படித்து, ஆழமான அறிவோடு சென்றால்தான், மாணவர்களின் கேள்விகளுக்கு நல்ல முறையிலே பதில் கொடுக்க முடியும். இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் பட்டதாரி ஆசிரியர் நன்றாக, ஆர்வத்தோடு படித்துவிட்டுச் சென்றதால் தான், சாதனை செய்ய முடிந்தது. மாணவர்கள் நல்ல முறையிலே தேர்வு எழுதி, தேர்ச்சி பெற முடிந்தது. அப்படிப்பட்ட இன்டர்மீடியட் ஆசிரியர்கள் தங்கள் தரத்தை உயர்த்திக்கொண்டு, முதுகலைப் பட்டம் பெற சில பயிற்சி முகாம்களை ஆரம்பிக்க அரசு எடுத்த முயற்சிக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வி அமைச்சரவர்கள், கல்விச் செயலாளர் அவர்களின் இந்த அணுகு முறையை ஆசிரியர்களும், ஆசிரியர் பிரதிநிதிகளும்

அடிக்கடி ஒன்றைக் கூறுகிறார்கள். ஆசிரியர்களின் பிரதிநிதிகளைப் பார்க்கிறோம், ஆசிரியர்களைப் பார்க்கிறோம், கல்வி அமைச்சரவர்களைப் பார்க்கிறோம், எவ்வளவோ தொல்லைகளைக் கொண்டுவருகிறார்கள், அமைச்சரவர்கள் பொறுமையோடு கேட்கிறார்கள் என்று சொன்னார்கள். பட்டதாரி ஆசிரியர்களானாலும், அல்லது எந்த ஆசிரியர்களானாலும் அவர்களின் நிலையைப் பாதுகாக்க வேண்டுமென்று, அவர்களுடைய நிலையை உயர்த்த வேண்டுமென்ற நிலையில், ஆசிரியர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி அல்லது வேறு ஏதாவது பயிற்சி கொடுத்து அவர்களுடைய தரத்தை உயர்த்த பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததற்குப் பாராட்டுகிறோம். எல்லா இன்டக்டட் ஆசிரியர்களுக்கும் இதை வழங்கி, எல்லோரும் முதுகலைப் பட்டம் பெற்று, அந்த ஊதியத்தைப்பெற வாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்டக்டட் ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்ச சிறப்பு ஊதியம் வழங்கப் படுகிறது. அதை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 25 ரூபாய் கொடுக்கப்படுகிறது. குறைந்தது அதை 75 ரூபாயாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்டக்டட் ஆசிரியர்கள் பல நிறுவனங்களில் செயல்படுகிறார்கள். கல்வித் துறையிலிருந்து ஒரு சுற்றறிக்கை வந்திருக்கிறது.

Wherever unqualified teachers are inducted, they should be replaced by qualified teachers and when replacing, prior concurrence of the Director of School Education should be obtained. ஆனால், அதே சமயத்தில் தகுதியில்லாத ஆசிரியர்கள் இருக்கும்போது அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று சொல்லிவிட்டு, தகுதியான ஆசிரியர்கள் . . .

(மாற்றுத் தலைவர் மணியடித்தார்)

மாற்றுத் தலைவரவர்களே, குறைந்தது 10 நிமிடங்கள் எனக்கு இன்னும் தேவை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்டக்டட் ஆசிரியர்களைத் தொடர்ந்து பணியாற்ற வைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கருதுகிறேன். 1978-லிருந்து நியமிக்கப்பட்ட அனைத்து ஆசிரியர்களும் தொடர்ந்து முதுகலைப் பட்டம் பெற வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்யாவிட்டால் பெருத்த முரண்பாடு உருவாகும்.

தொழிற் கல்விப் பிரிவைப் பொறுத்தவரையில், நம்முடைய மேல் நிலைக் கல்வி மாணவர்களில் 22 விழுக்காடு தொழிற் கல்வி கற்றுக் கொள்கிறார் களென்று பெருமைப்படுகிறோம். அகில இந்திய அடிப்படையிலே 57,000 மாணவர்கள் தொழிற்கல்வி படிக்கிறார்கள் என்று நமது மாநிலத்தைப்





பாராட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தொழிற் கல்வி கொடுக்க, சாதனங்கள் வாங்க நாம் ஈட்டு மானியம் 50 சதவிகிதம் தருகிறோம். அரசுப் பள்ளிகளுக்கு 5,000 ரூபாய் வழங்குகிறோம். மற்ற பள்ளிகளுக்கு 50 : 50 என்ற முறையில் உதவி வழங்கியிருக்கிறோம். ஆனால் இந்த உதவிகள் மூலமாக அந்தப் பள்ளிகளின் தரம் உயர்ந்திருக்கிறதா, அந்தப் பள்ளியிலுள்ள தொழிற் கல்விக் கூடங்களின் தரம் உயர்ந்திருக்கிறதா என்றால் இல்லை. இருகூறாக்கப்பட்ட பாடத் திட்டம் இருந்த பள்ளிகளிலே தொழிற் பிரிவுகள் இருந்தன. அந்தப் பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாகி, அங்கே தொழிற் கல்விப் பிரிவு இருந்தால், அங்கே தொழிற் கல்வி முறையாக, செம்மையாக மாணவர் களுக்குப் போதிக்கும் நிலை இருக்கிறது. ஆனால், மற்ற பள்ளிகளிலே தரத்தை உயர்த்த வேண்டுமென்றால், நாம் அதிகமாக மானியம் வழங்க வேண்டும். 5,000 ரூபாயோடு நிறுத்திவிடாமல் தொடர்ந்து 4 முறை இவ்வாறு ஈட்டு மானியம் வழங்கினால்தான், அந்தப் பள்ளிகளின் தரம் உயரும். 491 ஆசிரியர்கள் இருகூறாக்கப்பட்ட பிரிவுகளிலிருந்து வந்திருக்கிறார்கள். அவர்களின் பணிப் பாதுகாப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் சிறப்புப் பாடங்களை எடுத்துப் போதிக்கும்போது, 25 ரூபாய் சிறப்பு ஊதியம் வழங்குவதற்கு ஆணையிட்டதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

ஆனால், சிறப்பு ஊதியம் கொடுப்பதிலே ஒரு கோளாறு இருக்கிறது. குறைந்தது 24 பாடவேளை செய்ய வேண்டுமென்று இருக்கிறது. மற்றவர்கள் 6 பாடவேளை செய்து கொண்டு இதைப் பெற்றுக்கொண்டிருக்கும்போது, இவர்களுக்கு மட்டும் 24 பாடவேளை என்று இருப்பது முறை தானா? 4,324 பகுதி நேர ஆசிரியர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். அவர்கள் 150 ரூபாய்தான் மாதந்தோறும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். சில பள்ளி களிலுள்ளவர்கள் இதன் காரணமாக இரண்டு பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டு 300 ரூபாய் பெற்று வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் திருமணமானவர்கள். பி.ஏ., பி.டி., அதற்கு மேல் முதுகலைப் பட்டம் பெற்றவர்களும் இவர்களில் இருக்கிறார்கள். 11-வது வகுப்பிலே 20 பாட வேளையும், 12-வது வகுப்பிலே 20 பாடவேளையும் இவர்கள் செய்ய வேண்டும். முழு நேரமும் இவர்கள் இப்பணியைச் செய்தால்தான், நல்லமுறையில் பணியினை ஆற்ற முடியும். இப்படி பகுதி நேர ஆசிரியர்களாக இவர்கள் இருப்பதால், தொழில் கூடத்திற்கும், அதிலுள்ள தளவாடங்களுக்கும் யார் பொறுப்பேற்பது? அதற்கும் ஒருவர் தேவை. இவர்களை பகுதி நேர ஆசிரியர்கள் என்று நாம் போட்டிருப்பதால், அங்குள்ள தளவாடங்களைப் பாதுகாக்க யார் பொறுப்பேற்பது? ஆகவே, அனைவரையும் முழு நேர ஆசிரியர்கள் என்று அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்குத் தேர்வு முடிந்த பிறகு, மார்க் ஷீட்டுகளை வழங்குகிறோம். அதிலே பேப்பர் 1, பேப்பர் 2, பேப்பர் 3 என்று போடக் கூடாது. பேப்பர் 1 என்றால், அதிலே விவரமாக டைப்ரைட்டிங், அக்கவுண்டன்சி என்று போட்டுவிட்டால் நல்லது. அவ்வாறின்றி, இப்படிப் போடுவதால் அவர்கள் மேல் வகுப்புக்கு மனுச் செய்யும்போது, அங்குள்ளவர்கள் இவர்களுடைய தகுதியை அறியாமல் இடம் கொடுக்க மறுக்கிறார்கள். இன்னின்ன பாடங்களை அவர்கள் மேல் நிலைப் பள்ளியிலே படித்திருக்கிறார்கள் என்று விவரமாக மார்க் ஷீட்டிலே குறிப்பிட வேண்டும்.

அடுத்து, மாணிட்டர்களுக்கு 11-வது வகுப்பிலும், 12-வது வகுப்பிலும் 20 ரூபாய் வழங்கப்படும் என்று இருக்கிறது. இதற்கென்று போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாததால், இன்றைக்கு மாணிட்டர்கள் 10 ரூபாய் பெறக்கூடிய நிலை கூட ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அறிவித்துள்ள 20 ரூபாய் அவர்களுக்குக் கிடைக்கத் தகுந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் 11-வது வகுப்பிலும், 12-வது வகுப்பிலும் பயிலக்கூடிய மாணிட்டர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 200 ரூபாய் கிடைக்கும். என்னுடைய பள்ளிக்கூடத்திலேயே கூட விவசாய மாணவர்கள் தாங்களாகவே காய்கறி பயிரிட்டு 300 ரூபாய்க்கு மேல் வருமானத்தைத் தேடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு தொழில் பிரிவில் படிக்கின்ற மாணவர்கள் அவர்களுடைய பயிற்சியை முடித்தவுடன் தாங்களாகவே தொழில் நடத்தக்கூடிய அளவுக்கு 'கான்பிடன்ஸ்' அவர்களுக்கு இருக்கிறதா என்கிற கேள்வியைத்தான் எழுப்புகிறார்கள். 59 ஆயிரம் பேர் தொழில் பிரிவில் இன்றையதினம் படிக்கிறார்கள். பாதி பேர் இடையிலேயே வெளியேறிவிடுகிறார்கள். அதேபோல் வேளாண்மையை எடுத்துக்கொண்டால் கூட, எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள், எவ்வளவு மூலதனம் அவர்களுக்காகத் தேவை, எவ்வளவு பேர் தாங்களாகவே விவசாயம் செய்ய, தொழில் செய்ய, கிணறு வெட்ட பணம் கொடுத்தால், அத்தகைய வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ள தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள் என்கிற ஒரு புள்ளிவிவரத்தைத் தயாரிக்க வேண்டும். அதன்படி அவர்களுடைய படிப்பு முடிவடைந்தவுடன், அவர்கள் தாங்களாகவே தொழில் செய்து காலூன்றி நிற்கத்தக்க அளவுக்கு, உரிய ஏற்பாட்டினை அரசு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், அடுத்த ஆண்டு இந்தப் படிப்பு குறித்து பெருமைப்படுபவர்கள் அதிகமாவார்கள். நிறைய மாணவர்கள் தொழில் பிரிவில் படிக்க முன்வருவார்கள்.

இன்றைக்கு பள்ளிக்கூடங்களுக்கு தொழில் தளவாடங்களுக்கென்று அதிகமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். அப்படியும் 77 பள்ளிகள் இன்னும் இத்தகைய வசதி





இல்லாமல் இருக்கின்றன. இன்றைக்கு தனியார் பள்ளிகளைப் பொறுத்த வரையில், அரசு 40 விழுக்காடும், நிர்வாகம் 60 விழுக்காடும் என்று இருப்பதால், அரசு ஒரு லட்சம் ரூபாய் மானியம் அளிக்கிறது என்று சொன்னால் அந்தப் பள்ளியிலுள்ள தலைமையாசிரியரும் மற்ற ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து கிட்டத்தட்ட 1½ லட்சம் ரூபாயைத் திரட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டியிருக்கிறது. இதைப் பார்த்து மக்கள் அதிர்ச்சியடைகிறார்கள். அதோடு எந்த நேரமும் உங்களுக்கு வசூலிப்பது தான் வேலையா என்றும் கோபப்படுகிறார்கள். ஆகவே இந்த மானியத்தைப் பொறுத்தவரையில், அரசு 60 சதவிகிதம் என்றும் தனியார் 40 சதவிகிதம் என்றும் மாற்றம் செய்தால் நல்லது. 310 பள்ளிகளுக்குக் கட்டிட, தளவாடச் சாமான்கள் போன்றவைகளுக்கு மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அனைத்துப் பள்ளிகளுக்கும் இந்தச் சலுகையை அரசாங்கம் வழங்க வேண்டும். 43 லட்ச ரூபாய் செலவில் நூலகங்கள் நல்ல முறையில் செயல்பட வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அவற்றின் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அரசு ஏராளமான புத்தகங்களை நூலகங்களுக்கு வழங்கியிருக்கிறது. இன்னின்ன புத்தகங்களை வாங்க வேண்டுமென்று கல்வித் துறையிலிருந்து பட்டியல் போட்டிருக்கிறார்கள். அதன்படி புத்தகங்கள் வாங்குகிறார்கள். ஆனால், புத்தகங்களை மாணவர்கள் சரியாகப் பயன்படுத்துவதில்லை. அங்கே பணியாற்றுகிற ஆசிரியர்களை அல்லது ஓய்வு பெற்ற ஆசிரியர்களை நூலகங்களிலே போடுகிறோம். அவர்களுக்கு லைப்ரரி பற்றிய பயிற்சியே இல்லை. இப்போதுள்ள ஆசிரியர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சியையாவது கொடுத்து அவர்களை லைப்ரரியில் போட வேண்டும். அவர்கள் தூசைத் தட்டக்கூடிய நிலையில் கூட இல்லை. ஒவ்வொரு பள்ளிக்கும் 6 ஆயிரம் ரூபாய் விதம் ஏராளமான பணத்தை இதற்காக ஒதுக்குகிறோம்.

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி மணி அடித்தார்.)

இன்னும் ஐந்து நிமிடத்திற்குள் முடித்துவிடுகிறேன்.

VICE-CHAIRMAN (THIRUMATHI Mandakini Krishnamurthi): Hon. Chairman has given ten minutes' time and another five minutes' time has been given as grace time. But the hon. Member has taken already twenty minutes.

THIRU P. R. THOMAS: Madam, I shall finish in another five minutes.

VICE-CHAIRMAN (THIRUMATHI Mandakini Krishnamurthi): It will become very difficult for me if hon. Members do not finish their speeches in time.

THIRU P. R. THOMAS: If the hon. Vice-Chairman insists, I will have to end my speech abruptly. I will be very happy if you could extend the time by another five minutes. . . .
நிர்வாகம் 3,600 ரூபாய் ஒதுக்கினால் அரசு 2,400 ரூபாய் மானியமாகக் கொடுக்கிறது. இந்தச் சலுகையை எல்லாப் பள்ளிகளுக்கும் விரிவாக்க வேண்டும்.

அடுத்து, நாடு நலப் பணி என்கிற திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திலுள்ள 160 ஆண்கள் பள்ளிகளும், 40 பெண்கள் பள்ளிகளும் இத்திட்டத்தைப் பின்பற்றுகின்றன. இதன்மூலம் 200 பள்ளிகள் பயனடைகின்றன. உலகத் தமிழ் மாநாட்டில் அவர்கள் எல்லாம் கலந்து கொண்டு நல்லமுறையில் பணியாற்றினார்கள். இதையும் எல்லா இடங்களிலும் விரிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிட்கோ நிறுவனத்தின் துணை கொண்டு, ஆசிரியர்களின் துணை கொண்டு கூட்டுறவு முயற்சியில் சிக்கலான, சிரமமான ஆய்வுக் கூடக் கருவிகளை நம்முடைய தமிழகத்திலுள்ள பள்ளிகளுக்காக ஏன் நாமே உற்பத்தி செய்யக் கூடாது? அதற்கான முயற்சியில் கல்வித் துறை ஈடுபட வேண்டும். எப்படி தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான நூல்களை அச்சிட்டு வழங்குகிறதோ அதுபோல் பள்ளிக்கூடங் களுக்குத் தேவையான சிக்கலான, நுட்பமான, சிரமமான ஆய்வுக்கூடக் கருவிகளையும் உற்பத்தி செய்து வழங்க வேண்டும். இப்போது தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மிகவும் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. அவர்கள் மூலம் அறிவியல் நோட்டுப் புத்தகங்களைக் கூட அச்சடித்து வழங்க வேண்டும். பள்ளிக்கூட அலுவலகங்களைப் பொறுத்தவரையில், அங்கு பணியாற்றக் கூடிய தலைமையாசிரியர், ஜூனியர் அசிஸ்டென்ட் போன்றவர்கள் நான்-வெக்கேஷன் டிப்பார்ட்மெண்டைச் சேர்ந்தவர்கள் என்கிற அறிவிப்பை அண்மையில் அறிவித்திருக்கிறார்கள். இந்தச் சலுகையை மற்றவர்கள் அனைவருக்கும் வழங்கி ஈட்டிய விடுப்பை அளிக்க வேண்டும். 1—4—1974-க்கு முன்பு ஓய்வு பெற்றவர்கள் ஓய்வூதியம் தர வேண்டுமென்று கேட்டார்கள். அதை அவர்களுக்கு வழங்கியிருப்பதற்காக நான் அரசுக்குப் பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1—4—1974-க்கு முன்பு ஓய்வு பெற்றவர்கள் நன்மை பெற்றிருக்கிறார்கள். 'கன்டின்ஜென்சி ஸ்டாஃப்' ஆக 1—4—1974 அன்று ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்களின் பணியை வரன்முறை செய்திருக்கிறார்கள். கல்வியின் தரம் சிறப்பாக இருக்க 750 மாணவர்களுக்கு மேல் இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு ஒரு உதவித் தலைமையாசிரியர் என்று போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு 750- அதிக மாணவர்களுக்கும் ஒரு உதவித்





தலைமையாசிரியர் என்கிற வகையில் 1,500 மாணவர்களுக்குமேல் இருக்கிற பள்ளிகளுக்கெல்லாம் இரண்டு உதவித் தலைமையாசிரியர்களைப் போட வேண்டும். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்கிற கொள்கையைக் கொண்டிருக்கிற இந்த அரசு ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு தமிழ் தட்டச்சுப் பொறி வழங்கி அதற்குரிய வழிவகையினைச் செய்து தர வேண்டும். ஆசிரியர் களுக்குப் பணிப் பாதுகாப்பினை அரசு தர வேண்டும். முடிவாக அக்காடமிக் கவுன்சில் என்ற முறையிலே மாநிலத்திலேயுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களையும் கொண்ட பல மொழிப் பாட ஆசிரியர்களையும் பிரிவு ஆசிரியர்களிலிருந்தும் சிலரைத் தேர்ந்தெடுத்து, பாடத் திட்டத்தை மாற்றி சீர்திருத்தம் செய்யும்போது, அவர்களுடைய கருத்தையும் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காமர்ஸ் இருக்கும் க்ரூப்பிலே கணிதப்

(முற்பகல் 11-00)

பாடம் இருக்கிறது. ஏ-1 க்ரூப்பிலேயும் கணிதப் பாடம் இருக்கிறது. காமர்ஸ் படிப்பவர்கள் ஏ-1 க்ரூப்பிலே இருக்கும் கணிதப் பாடம் படிக்கத் தேவையில்லை. இத்தகைய முறையிலே அதை மாற்றியமைக்க வேண்டும் என்று சொன்னால், ஒரு அக்காடமிக் கவுன்சில் அமைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, முடிக்கிறேன், வணக்கம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கொள்கைக் குறிப்பின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் தொகை தமிழ் நாட்டின் மொத்த வருவாயில் 22 சதவீதம். இது நிச்சயமாகப் போதாது என்ற என்னுடைய கருத்தை முதலிலேயே தெரிவித்துக்கொள்கிறேன். கல்விக்காக குறைந்த அளவு 25 சதவீதம் மொத்த வருமானத்தில் ஒதுக்க வேண்டும். நீண்ட காலமாக கல்விக்கு என்று மொத்த வருமானத்தில் 25 சதவீதம் ஒதுக்கப்பட்டு வந்திருக்கும் நிலை மாறி, சென்ற ஆண்டு 23 சதவீதம் என்றும், இந்த ஆண்டு 22 சதவீதம் என்றும் குறைந்துகொண்டு வந்திருப்பது வேதனைக்குரியது. ஏன் இந்த அரசு கல்விக்காக அதிக நிதியை ஒதுக்கவில்லை? இப்போது நிதிநிலை அறிக்கையிலே மொத்த வருவாய் 1,138 கோடி ரூபாய் என்று காட்டப்பட்டிருந்தாலும், இன்றைக்கு மதுவிலக்கை கிட்டத்தட்ட நீக்கிவிட்ட நிலையில் நிச்சயமாக இன்னும் 15 கோடி ரூபாய் வருமானம் வர வாய்ப்பு இருக்கிறது. அப்படி அதிகப்படியான வருமானம் வரும்போது அப்படி வரும் நிதியிலிருந்து குறைந்தது 30 அல்லது 35 கோடி ரூபாயையாவது சேர்த்து 300 ரூபாய்க்குக் குறையாமல் கல்விக்கு ஒதுக்க வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை அரசுக்கு விடுக்கின்றேன். கல்வியை உதாசீனப்படுத்தக்

[திரு. செ. முத்துசாமி] [1981 ஏப்ரல் 27

கூடாது. அப்படி கல்வியை உதாசினப்படுத்தினால், அது நாட்டையே கெடுத்து விடும். ஆகவே, இந்த ஒதுக்கீட்டை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊதியத்திற்காக ஏற்பட்ட அதிகச் செலவு ரூ. 2.58 கோடி ரூபாய், மற்றும் தனியார் பள்ளிகளுக்கு மானியம் வழங்குவதில் ஏற்பட்டிருப்பது 10 கோடி ரூபாய் அதிகச் செலவு. மற்றச் செலவுகளைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு இருப்பதைப் போலவே இந்த ஆண்டுக்கும் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்தது, அளிக்கப்பட்டிருக்கும் புள்ளிவிவரங்கள் அவ்வளவு சரியான புள்ளிவிவரங்களாக இல்லை, என்னென்ன பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன, செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரங்கள் தெளிவாக இல்லை என்பதை கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கல்லூரி ஆசிரியர்களுக்கு 1971-72-லே Orientation Course நடந்தது. அதை இந்த ஆண்டு ரிப்போர்ட்டிலே சொல்லியிருப்பதனால், அதற்குப் பிறகு அது சம்பந்தமாக ஒன்றுமே இந்த இலாக்கா செய்யவில்லை என்றுதான் பொருள்படுகிறது. Nobel Prize யார் வாங்கினார்கள் என்று கேட்டால், சர் சி. வி. ராமன் என்று அப்பா காலத்திலும், பிள்ளை காலத்திலும் படிப்பதைப் போல, ஏற்கெனவே செய்த சாதனைகளை இந்தக் குறிப்பிலேயும் சொன்னால் எப்படி ? 1979 ஆம் ஆண்டிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழா நடந்தது. அதையும் இந்த ஆண்டு சாதனையாகக் காட்ட வேண்டும் என்று சொன்னால், கல்வித் துறைக்கு வேறு சாதனைகளே இல்லையா? கல்வித் துறையிலே இருக்கும் அதிகாரிகள் இந்த விவரங்களைக் கொடுத்தாலும், செயலகத்திலே இருக்கும் கல்வி இலாக்காவிலே இருப்பவர்கள் இதை எப்படி ஒப்புக்கொள்கிறார்கள் ? ஆகவே, இதையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அவையின் கவனத்திற்கும் நான் கொண்டு வருகிறேன்.

750 லட்சம் ரூபாய் கட்டிடங்கள் கட்டுவதற்கு என்று ஒதுக்கப்பட்டிருப்பதாகப் புள்ளிவிவரம் இருக்கிறது. சமுதாயத் திட்டங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் பட்ஜெட்டைப் பார்க்கும்போது—அது 'கோரிக்கை எண் 28—அதில் 1981-82-லே கட்டிடங்கள் கட்டுவதற்கான நிதியொதுக்கீடு ரூ. 550 லட்சம் என்று தான் இருக்கிறது. நிதியொதுக்கீடு அந்தத் துறையிலே ரூ. 550 லட்சம் தான், ஆனால் இங்கே அதை வழங்கும்போது, ரூ. 750 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதாக கல்விக் கொள்கையிலே சொல்கிறார்கள். இந்த ரூ. 200 லட்சம் அதாவது 2 கோடி ரூபாய் எப்படி வித்தியாசம் வந்தது? இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1981 ஏப்ரல் 27] [திரு. செ. முத்துசாமி]

இதற்கு சரியான பதில் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு கோடி ரூபாய்க்கான வித்தியாசம் எப்படி வர முடியும்? சமுதாய வளர்ச்சியினுடைய வரவு-செலவுத் திட்டம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் இருக்கிறது. வேண்டுமானால் இந்த நகலைக் கூட நான் கொடுக்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு கடன் தொகைகள் கொடுப்பதற்காக ஒரு லட்சம் ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 70 ஆயிரம், 80 ஆயிரம் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பிராவிடன்ட் ஃபண்ட், திருமணக் கடன், சைக்கிள் கடன் போன்றவைகள் வழங்க வேண்டியிருக்கின்றன. இந்தக் கடன்கள் எல்லாம் அவர்களுக்கு வழங்கப்படும் என்று அரசு உத்தரவாதம் அளித்துவிட்டு, அதற்கு ஒரு லட்சம் ரூபாய் தான் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருப்பது எப்படிப் பொருந்தும்? இந்த ஒரு லட்சம் ரூபாயை வைத்துக்கொண்டு அவர்களுக்கு என்னென்ன கடனுதவி அளிக்க முடியும்? சைக்கிள் கடன் கொடுக்க முடியுமா? வேறு எந்தக் கடனைக் கொடுக்க முடியும்? நூறு ஆயிரம் ரூபாய் தானே ஒரு லட்சம் ரூபாய் என்பது? நூறு ஆசிரியர்களுக்குந்தான் கொடுக்கிறார்கள் சைக்கிள் கடன். இவ்வளவு குறைவான பணத்தை வைத்துக் கொண்டு எந்த அடிப்படையிலே கொடுக்கப் போகிறார்கள்? இதையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். அரசாங்கத்தின் நோக்கத்திற்குத் தக்கபடி நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

பொதுவாக கல்வி வளர்ச்சி என்று சொன்னாலே, அதற்கு மிக மிக அவசியம் ஆசிரியர்கள். கல்விக் கொள்கைக் குறிப்பிலேகூட இது சொல்லப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நல்லமுறையிலே சொல்லித் தருவதற்கு ஏகப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். பெரும்பான்மையான ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வேலையில்லாமல இருக்கிறாகள என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆசிரியர்-மாணவர் விகிதம் 1964 ஆம் ஆண்டிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைப்படி அரசாணை எண் 250, கல்வித் துறையிலே போடப்பட்டிருக்கிறது. அந்த அரசாணை இன்னும் 'கேன்சல்' செய்யப்படவில்லை, அமுல்படுத்தப்படவும் இல்லை. ஆரம்பப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் ஆசிரியர்-மாணவர் ரேஷியோ எப்படி இருக்க வேண்டும் என்று அரசாணை 250-ல் சொல்லப்பட்டிருப்பதைப்போல செயல்படுத்தப்படவில்லை. அந்த ஆணையை அமுல்படுத்தினால, 20 ஆயிரம் ஆசிரியர்களுக்கு மேல், நியமித்திருக்க வேண்டும். ஆனால் அந்த ஆணை அமுல்படுத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படி இருந்தால், கல்வி எப்படி உருப்படும்? பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்-மாணவர்களுடைய விகிதம் 1 : 40 என்று இருக்கிறது. இந்த விகிதம் கூட

[திரு. செ. முத்துசாமி] [1981 ஏப்ரல் 27

கூடிவரும் நிலைதான் இப்போது இருக்கிறது. ஒரு ஆசிரியர் சில வகுப்புகளில் 50 அல்லது 60 பிள்ளைகளை வைத்துக்கொண்டு பாடம் சொல்லிக்கொடுக்கிறார் என்றால், ஆரம்பப் பள்ளிகளில் கல்வியின் தரம் எப்படி இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். வெள்ளையர் காலத்திலே கூட 1 : 20 என்ற அளவிலேதான் இந்த விகிதம் இருந்தது. சுதந்திரம் அடைந்த பிறகு தான் இது அதிகமாக்கப் பட்டிருக்கிறது. கோல்லிமலை மேலும் இதுபோன்ற பலவேறு மலைப் பகுதிகளிலே இருக்கும் பள்ளிக்கூடங்களில் இந்த ஆசிரியர்-மாணவர் விகிதம் மிகவும் உயர்ந்திருக்கிறது. இப்படி இருந்தால், கிராமத்து மக்கள் எப்படி முன்னுக்கு வர முடியும்? நகர்ப்புற மாணவர்களுக்கு நல்லமுறையில் வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. கிராமங்களிலே இருக்கும் மாணவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, கிராமப் பகுதிகளில் Pupil-teacher ratio மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்களின் பிரச்சினையும் இருக்கிறது. அதுவும் தனியார் பள்ளிகளிலே வேலை செய்பவர்களுக்கு ஒரு நிம்மதி இல்லை. நீண்ட காலத்திற்கு முன்னாலே திரு. எம். டி. பால் அவர்களின் தலைமையிலே பள்ளிகளின் நடைமுறையை ஒழுங்குபடுத்த ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டு, அந்தக் கமிட்டி ஆசிரியர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் வழங்கப்படவில்லை என்றும் ஆகவே, Direct payment for teachers through Bank பண்ணலாம் என்றும் சிபாரிசு செய்தது. இப்போது அந்த முறை கல்லூரி ஆசிரியர்களுக்கு அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. கல்லூரி ஆசிரியர்களுக்கு இதை அமுல்படுத்துவதற்கு முன்னாலேயே ஆராய்ச்சி செய்யப்பட்டு, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும், உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இந்த முறையை அமுல்படுத்த வேண்டும் என்று அந்தக் கமிட்டி சொல்லியிருப்பதை ஏன் அமுல்படுத்தவில்லை? ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு அதனுடைய ரிப்போர்ட் வருவது என்பது எவ்வளவு சிரமமான காரியம்? அந்த பால் கமிட்டியின் ரிப்போர்ட் இப்போது தூக்கியெறியப்பட்டிருக்கிறது. மீண்டும் அதை அமுல்படுத்த இந்த அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கல்லூரி ஆசிரியர்களுக்கு இதை அமுல்படுத்தியிருக்கிறார்கள். நான் மிகவும் பாராட்டுகிறேன். கல்லூரி மட்டத்திலே இதை அமுல்படுத்தி விட்டு கீழ்மட்டத்திலே இருப்பவர்களுக்கு ஏன் இதை அமுல்படுத்தவில்லை? இந்தப் பிரச்சினைக்கு நீங்கள் ஒரு விடிவு காண வேண்டும். அதற்கான உத்தரவாதத்தை இந்த அரசு அளிக்க வேண்டும். கோரிக்கைகளை வைத்து போராட்டங்கள் நடைபெற்ற பிறகுதான், சில சலுகைகளை அளிக்க வேண்டும் என்ற நிலையைத் தவிர்த்து, இந்த விவாதங்கள் நடைபெறும்போதே இவை களையெல்லாம் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 27] [திரு. செ. முத்துசாமி]

கல்லூரி ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் பல இன்னும் பேசி தீர்க்கப் படாமலேயே இருக்கின்றன. சொல்லப்பட்ட உத்தரவாதத்தையும், போடப் பட்ட உத்தரவுகளையும் அமுல்படுத்தவில்லை. அந்த அமைப்பு சரியில்லை, இந்த அமைப்பு சரியில்லை என்று சொல்கிறார்கள். இவ்வாறு ஒப்புக்கொண்ட

(முற்பகல் 11-10)

ஒரு கோரிக்கையில், இங்கே உள்ள பியூராக்கிரடிக் செட்-அப்பில் இருக்கிறவர்கள் அது சரியில்லை, இது சரியில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆட்சி செய்கிறார்கள் என்று சொல்லுவதிலே என்ன நியாயம் இருக்க முடியும்? மக்கள் நம்மை யெல்லாம் நம்பித்தானே தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பியிருக்கிறார்கள். இங்கே இருக்கிற சட்டங்கள் எல்லாம் மக்களுக்காகத்தானே தவிர, மக்கள் சட்டங்களுக்காக அல்ல என்பதை முதலில் இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். சட்டத்திற்காகத் தான் இந்த நாட்டிலே இருக்கிற அனைத்து மக்களும் இருக்கிறார்கள் என்ற கொள்கையைக் கடுமையாகப் பிடித்துக் கொண்டிருப்பார்களானால், இவர்களைச் சட்டம் விரைவில் நழுவவிட்டுவிடும் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஜனநாயகத்திற்கு விரோதமான இந்தப் போக்கை இந்தச் சமுதாயம் இனியும் அனுமதிக்காது. எனவே சமுதாயத்தின் கோபத்திற்கு தயவுசெய்து ஆளாகாதீர்கள் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேல் நிலைப் பள்ளிக் கல்வி முறை கொண்டு வரப்பட்டு இப்போது மூன்றாண்டுகள் முடிகின்றன. ஆனால் அங்கே பணியாற்றும் ஆசிரியர் களுக்கான சர்வீஸ் ரூல்ஸ் இன்னும் தயாரிக்கப்படவில்லை. தேர்ந்தெடுக்கப் பட்ட ஜனநாயக முறைப்படி அமைந்த ஒரு அரசில் இத்தகைய நிலைமை இருப்பது சரிதானா என்பதை எண்ணிப் பார்க்கக் கோருகிறேன். இங்கே இருக்கிற கல்வித் துறையால் மூன்று ஆண்டுக் காலமாக சர்வீஸ் ரூல்ஸ் கூட தயாரிக்க முடியவில்லையா? அதற்கான தன்னாண்மைகூட கல்வித் துறைக்கு இல்லையா? கல்வித் துறையின் * தான் என்ன? கல்வித் துறை என்பது மானேஜ்மெண்ட்டுக்குச் சலுகை செய்வதற்காகத்தான் இருக்கிறதா? கல்வித் துறைக்கு இந்த சர்வீஸ் ரூல்ஸைக் கூட தயாரிக்க முடியவில்லை என்றால், அதற்குத் தகுதியில்லை என்று பொருளா? எனக்குப் புரியவில்லை. எப். ஆர். 22-ன் அடிப்படையில் இதைச் செய்ய முடியவில்லை என்றால், மற்றவர்கள் இந்த மாநிலத்தில் உள்ள கல்வித் துறையைப் பற்றி என்னதான் எண்ணுவார்கள்? மற்ற மாநிலத்திலிருப்பவர்களிடம் இதைப்பற்றிச் சொன்னால், அவர்கள் சிரிப்பார்கள். பல விஷயங்களில் முன்னோடியாக

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

இருக்கும் தமிழகம் இதில் மட்டும் பின்தங்கியிருப்பானேன் ? இதிலே இவர்களுக்கு இருக்கிற சங்கடம்தான் என்ன ? எதுவானாலும் நாங்கள் இந்தக் கல்வித் துறையின் பின்னாலே நிற்கிறோம். விரைவிலே இந்த ரூல்ஸைத் தயாரித்து வெளியிடுங்கள் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர் போராட்டம் நடத்தியபோது, 10 நாட்களுக்குள் இது வெளியிடப்படும் என்று கல்வித் துறையின் இயக்குநரே நேரில் வந்து சொல்லிவிட்டுப் போகிறார். அப்படி அறிவிப்புச் செய்து 25 நாட்களாகியும்கூட அது இன்னும் வெளியிடப்படவில்லை என்றால், என்ன அர்த்தம் ?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** கல்வித் துறையின் * என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கல்வித் துறையில் ஆண்பால் பெண்பால் என்று உண்டா ? * என்ற சொல்லைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தன் * என்றுதான் நான் குறிப்பிட்டேன். தன்னுடைய நிர்வாகத்தை * இயக்குவது என்ற பொருளில் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆசிரியராக இருந்து ஆண்பால் பெண்பால் சொல்லிக் கொடுத்த காரணத்தால், இப்படிப்பட்ட சந்தேகம் வந்திருக்கிறதோ என்று நான் கருதுகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** * என்று குறிப்பிட்டதை நீக்கி விடுவது நல்லது. எதோ ஒரு காலத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகள் இன்றையதினம் பொருத்தமில்லாமல் இருக்கும் நிலையைக் காண்கிறோம். ஆண்களோடு பெண்களும் சமமான உரிமை கொண்டாடி, அப்படிக் கொடுக்கும் தன்மை மிகுந்த இந்தக் காலத்தில் * முன்னுரிமை வாய்ந்ததாக எப்படிச் சொல்ல முடியும் ? மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

VICE-CHAIRMAN (THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI) : I order the deletion of the word from the proceedings of the House.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் பெண்ணாக இருக்கிற காரணத்தால் அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதுபற்றி எனக்கு ஆட்சேபணையில்லை. என்றாலும் * என்ற சொல் சரியான சொல் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





ஆக, மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான சர்வீஸ் ரூல்ஸ் விரைவில் வெளியிடப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்டக்டட் ஆசிரியர்களுக்கு இப்போது என்.எஸ்.சி. கோர்ஸ் பயிற்சிகூட தரப்படுகிறது. உயர் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முதல் வகுப்பில் தேறிய பி.டி. ஆசிரியர்களை, ஆரம்பத்தில் மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றுவதற்காக 'செலக்ட்' செய்து பட்டியல்கூட தயாரித்தார்கள். அதன் அடிப்படையில் உத்தரவுகளும் வழங்கப்பட்டன. ஆனால் சங்கங்கள் அதனை 'சீனியாரிட்டி' அடிப்படையில்தான் செய்ய வேண்டும் என்று கோரியதற்கு இணங்க, அதை மாற்றினார்கள். அவ்வாறு 'செலக்ட்' செய்யப்பட்ட முதல் வகுப்பு பட்டதாரி ஆசிரியர்களுக்கு மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்ற ஒரு குறிப்பிட்ட சதவீத இடத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஹையர் செகண்டரி பள்ளிகளுக்காக தயாரிக்கப்பட்ட முதல் பட்டியலில் உள்ள முதல் வகுப்பில் தேறிய பட்டதாரி ஆசிரியர்களுக்கு இத்தகைய வாய்ப்பு அளிக்கப்படுவதன் மூலம் அவர்களுடைய ஆற்றல் பெருகுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தால், ஒரு குறிப்பிட்ட சதவீத அடிப்படையில் அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர் நிலைப் பள்ளிக்கூடங்களில் உள்ள தலைமை ஆசிரியர்களுக்கு நீண்டகாலமாக ஒரு பிரச்சினை இருந்து வருகிறது. அவர்கள் தங்களை நான்-வெக்கேஷன் டிபார்ட்மெண்ட் ஆக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். காரணம், தலைமை ஆசிரியர்தான் ரெக்கார்டு ஷீட் கொடுக்க வேண்டும், பேப்பர் திருத்திய பிறகு சரிபார்த்து 'ரிசல்ட்' போட வேண்டும். இப்படிப் பல வேலைகளை அவர் செய்ய வேண்டியிருக்கிறது. அவரிடத்திலே பணியாற்றும் கிளார்க்கைப் பொறுத்தவரை, அவர் நான்-வெக்கேஷன் டிபார்ட்மெண்ட் என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அவரோடு அமர்ந்துகொண்டு அவரை வேலை வாங்கிக் கொண்டிருக்கும் தலைமை ஆசிரியர்களுக்கு அவ்வாறு இதுவரை அறிவிக்கப்படவில்லை என்றால், அது என்ன நியாயம் என்று எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களே தலைமை ஆசிரியராக இருந்து பணிபுரிந்து வந்திருக்கிறார். அவர் காலத்திலேகூட இது செய்யப்படவில்லை என்றால் . . .

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு தகவல் தெரியாது என்று நினைக்கிறேன்; சமீபத்தில் பேரவையில் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, தலைமை ஆசிரியரையும் அவரிடம் பணியாற்றும் ஒரு இளநிலை ஆசிரியரையும் நான்-வெக்கேஷன் டிபார்ட்மெண்ட் ஆக அறிவித்திருக்கிறார்கள்.

[1981 ஏப்ரல் 27

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கல்வியமைச்சர் அவ்வாறு பேரவையில் அறிவித்திருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல், கல்வித் துறையில் எந்த அறிவிப்பு செய்யப் பட்டாலும், எந்த ஆணை வெளியிடப்பட்டாலும், அது சம்பந்தப்பட்டவர் களுக்கு உரிய நேரத்தில் வருவதே இல்லை. பேரவையில் இந்த அறிவிப்பை வழங்கியிருக்கிறார் என்றாலும், இங்கேயும் அதை வழங்குவார் என்று நான் நம்புகிறேன். சில நேரங்களில் அமைச்சர் அவர்கள் செய்யும் அறிவிப்புகள் ஆணைகளாக வெளியிடப்படுவதற்கு மிகுந்த காலதாமதம் ஆகிறது . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவையில் கல்வி மானியக் கோரிக்கையின் மீது பதிலளித்துப் பேசும்போது, நான் இத்தகைய அறிவிப்பைச் செய்தேன். அதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் கூட இல்லாத அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர் இருக்கிறார் என்பது உண்மையிலேயே வருத்தப்படக் கூடிய ஒன்றாகும். அதையெல்லாம் பார்த்து விட்டு அல்லது படித்துவிட்டு இங்கே வந்து பேசினால், அது விவாதத்திற்குக் கொஞ்சம் பயன் உள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** கல்வியமைச்சர் அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை மிகத் திறமையாகப் பயன்படுத்திக்கொண்டு எனக்குப் பதிலளித்திருக் கிறார்கள். நான் கடந்த இரண்டு நாட்களாக வெளியூர்ப் பயணம் சென்று வந்ததால், இது என் கவனத்திற்கு எட்டாமல் போய்விட்டது. அதை மிகச் சௌகரியமாகப் பயன்படுத்தி, பதிலளித்ததை நான் பாராட்டுகிறேன். அவருடைய அறிவிப்புக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அவையில் விவரம் இல்லாமல் பேசுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருதுவார்களானால், அதற்கு இன்னும் சில விவரங்களையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். படித்துவிட்டு வந்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னார்கள். அதையும் நான் வரவேற்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒன்றைச் சொன்னதற்குப் பிறகும், அதாவது பேரவையில் இத்தகைய அறிவிப்பைச் செய்திருக்கிறோம் என்று தெரிவித்த பிறகும், கல்வித் துறையைப்பற்றியும் அமைச்சரைப் பற்றியும் ஓர் உறுப்பினர் தன் இஷ்டப்படி பேசுகிறபோது, நாங்கள் இதைக்கூட சுட்டிக் காட்டக்கூடாது என்று எதிர்பார்க்கக்கூடாது. ஆகவே பேசுவது என்று ஆரம்பித்துவிட்டால், அதற்குப் பிறகு எப்படி வேண்டுமானாலும் பேசுவது என்று முனைந்துவிட்டால், அது எல்லோராலும் முடிகிற ஒன்று என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 27]

**திரு. செ. முத்துசாமி :** பேசுவதற்கு ஆரம்பித்துவிட்டால் எப்படி வேண்டு மானாலும் பேசுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களானால், அவரே பலமுறை எப்படிப் பேசியிருக்கிறார் என்ற விவரத்தைச் சொல்ல முடியும். என்றாலும் நான் அதை இங்கே எடுத்துக்கூற விரும்பவில்லை. ஒவ்வொரு பிரச்சினையிலும் கல்வி அமைச்சர் அவர்கள் எப்படியெல்லாம் திருப்பினார், என்னென்ன பேசினார் என்பதையெல்லாம்கூட என்னாலே தெரிவிக்க முடியும். என்றாலும் நான் இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிடுகிறேன். ஓர் உறுப்பினரைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வாறு கருதுவாரானால், அதே முறையில்தான் மற்றவர்களும் தங்களின் உணர்வை வெளிப்படுத்த வேண்டியிருக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்த தகவலுக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தவறாகக் கருதவில்லை. ஆனால் அதில் 'குத்தல்' நடத்தும்போதுதான் பிரச்சினையே எழுகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைமை ஆசிரியருக்கும் அவரோடு பணியாற்றும் இளநிலை எழுத்தருக்கு மட்டும் இந்தச் சலுகையை அளித்தால் போதாது. தலைமை ஆசிரியருக்குத் துணை புரியும் மற்ற ஆசிரியர்களுக்கும், தலைமை ஆசிரியர் யார் யாரைத் தன்னுடைய பணிகளுக்குத் துணையாக வைத்துக் கொள்கிறாரோ அவர்களுக் கெல்லாம் கூட இந்தச் சலுகையை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் அதனை ஒரு துணைச் சலுகையாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழாசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குத் தலைமை ஆசிரியர் பதவி வழங்குவதில் ஒரு குறைபாடு இருந்து வருகிறது. மேல் நிலைப் பள்ளிகளிலும், நடு நிலைப் பள்ளிகளிலும் தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக இருக்க முடியும் என்று அவர்களுக்கு அந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உயர் நிலைப் பள்ளிகளில் துணைத் தலைமை ஆசிரியர்கள் பதவி மட்டுமே வழங்கப்படுகிறது. தலைமை ஆசிரியர் பதவி உயர் நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களுக்கு வழங்கப்படாததற்கு எந்த நியாயமும் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரையில் பேசும்போது, "கண்டிப்பாகத் தமிழாசிரியர்களுக்குத் தலைமை ஆசிரியர் பதவி உயர் நிலைப் பள்ளிகளில் வழங்கப்படும். இதுவரை வழங்காமல் இருப்பது நியாயமற்றது" என்று குறிப்பிட்டார்கள். அவர் அவ்வாறு குறிப்பிட்ட பிறகும் இதைச் செய்யாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்று புரியவில்லை. உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியிருக்கிற இந்தக் கால

கட்டத்தில் தமிழ் மொழிக்காகத்தான் நாங்கள் இருக்கிறோம் என்று சொல்லுகிற இந்தக் காலகட்டத்தில், தமிழால் எதுவும் முடியும் என்று சொல்லிக் கொண்டிருக்கிற கால கட்டத்தில், தமிழாசிரியர்களால் தலைமை ஆசிரியர்களாக உயர் நிலைப் பள்ளிகளில் பணியாற்ற முடியுமா முடியாதா என்பதைப்பற்றிய அரசாங்கத்தின் கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்விக் கொள்கை மீதான இந்த விவாதத்தில் பதில் சொல்லும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து முடிவான கொள்கையை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சரித்திரம் போதிக்கும் பி.டி. ஆசிரியர்கள் எம்.ஏ., பி.டி. பட்டம் பெற்றால் அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கும்போது, முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். தமிழாசிரியர்களாக இருப்பவர்கள் எம்.ஏ., பி.டி.-ஆக பாஸ் செய்யும்போது, இந்த முன்னுரிமையை அளிக்கிறோம்.

செகண்டரி கிரேட் பதவியில் பணியாற்றும் பி.டி. ஆசிரியர்கள் எம்.ஏ. பி.டி. ஆகும்போது அவர்கள் தங்களுக்கு 'அப்கிரடேஷன்' வழங்கப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள். நடுநிலைப் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்களைப் போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது செகண்டரி கிரேடு பதவியில் இருப்பவர்கள் எம்.ஏ., பி.டி. பட்டம் பெற்றாலும், ப்ரமோஷன் வாய்ப்பு இல்லாமலிருப்பது எந்த வகையிலும் நியாயமில்லை. அதையும் அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பரங்கிப்பேட்டையில் உள்ள பள்ளி ஒன்றுக்கு உருது மொழியில் பயிற்சி பெற்ற எம்.ஏ. ஒருவரைப் போட்டார்கள். அவருக்குத் தமிழே தெரியாது. தமிழே தெரியாத ஒருவருக்கு இங்கேயிருந்து 'டைரெக்ட் அப்பாயிண்ட்மெண்ட்' கொடுக்கப்படுகிறது. பி.டி. ஆசிரியர்களில் உருது டிரெய்ன்டு ஆசிரியர் யாரும் இல்லாத நிலையில் நான்கு ஆசிரியர்களை, தமிழ் தெரியாதவர்களை அங்கே போட்டார்கள். அவர்கள் அனைவரும் திரும்பி வந்துவிட்டார்கள். அந்தப் பதவிக்கு செகண்டரி கிரேடு டிரெயின்டு ஆசிரியர் ஒருவர் விண்ணப்பித்தால், உனக்கு எப்படி 'டபிள் பிரமோஷன்' கொடுக்க முடியும் என்று சொல்லி மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது என்ன நியாயம் என்று எனக்குப் புரியவில்லை. இது குறித்து தெளிவான சட்டம் எதுமில்லை என்றாலும், நியாயத்தின் அடிப்படையில் தருமத்தின் அடிப்படையில் அந்த ஆசிரியரை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முழுவதும் தகுதியுள்ள ஒருவர் இருக்கும்போது, அவரை அந்த இடத்திற்கு நியமிக்காமல் இருப்பது எந்த வகையிலும் நியாயமில்லை. இத்தகைய முறையில் ஆங்கிலம் லிட்டரேச்சருக்கு ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியரைப் 'புரமோட்' செய்திருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில்





(முற்பகல் 11-20)

இத்தகைய 'புரமோஷன்' கொடுக்கப்பட்டிருக்கிறது. இதே மாதிரி உருது ஆசிரியர்கள் விஷயத்திலும் 'புரமோஷன்' கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, செகண்டரி கிரேட் ஆசிரியர்கள், எஸ்.ஜி.பி.டி. ஆசிரியர்கள் ஆகும்போது, ஆந்திராவிலே பி.டி. ஆசிரியர் கிரேட் சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதே மாதிரி தமிழ்நாட்டிலும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களைப் பார்த்து நாம் பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றோம். இதையும் ஒரு உதாரணமாக எடுத்துக்கொண்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், இரண்டு வருடங்கள் எஸ்.எஸ்.எல்.சி. பயிற்சி பெறுகிறார்கள். நல்ல மார்க்குடன் இருப்பவர்களைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். எஜுகேஷன் டிப்பார்ட்மெண்டிலேயே தேர்வு செய்கிறார்கள். நீண்டகாலமாக இந்த முறை இருக்கிறது. ஒரு கமிட்டி போட்டுத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். இரண்டு வருடப் பயிற்சிக்குப் பிறகு வருகிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் மணியடித்தார்.)

திரு. செ. முத்துசாமி : இப்போதுதான் உயர்நிலைப் பள்ளி பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இன்னும் ஆரம்பப் பள்ளிக்கு வர வேண்டும். அப்புறம் முடித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : On a point of information, Madam. We are about fifteen Members scheduled to speak on the Policy Note on Education. I have no objection to your giving time of twenty five and twenty minutes, excepting to make it clear that if you give twenty five and twenty minutes today, we shall insist on our right to speak for twenty five minutes tomorrow also.

VICE-CHAIRMAN (THIRUMATHI Mandakini Krishnamurthi) : Tomorrow somebody else will preside.

THIRU A. R. DAMODARAN : But, you may please see my difficulty. Tomorrow, our time will be cut short to five or six minutes. We are all persons who observe time-limits. I request that some sort of an understanding be arrived at in this House, because this is very unequal.

[1981 ஏப்ரல் 27

VICE-CHAIRMAN : (THIRUMATHI Mandakini Krishnamurthi) : The hon. Member could have given his name today to have more time.

THIRU A. R. DAMODARAN : I was told that the teacher-representatives wanted to speak today. So, I said that I would speak tomorrow. I have made that acceptance with the Hon. Chairman. I request that some sort of discipline be observed amongst the hon. Members of the House.

VICE-CHAIRMAN (THIRUMATHI Mandakini Krishnamurthi) : The hon. Member may please try to finish quickly.

**திரு. செ. முத்துசாமி :** இப்படி குறுக்கீடுகளிலேயே ஐந்து நிமிடங்கள் போய்விட்டன. இங்கே கட்சித் தலைவர்கள்கூட இருக்கிறார்கள். பிசினஸ் அட்வைசரி கமிட்டி போட்டு அதிலே இன்னும் ஒரு நாள் கூட அதிகமாக்கிக் கொள்ளலாம். இப்போது நேரம் நாங்கள் அதிகமாக எடுத்துக்கொள்வதால், பிறகு பேசுகின்றவர்களுக்கு ஐந்து நிமிடம் என்று நினைக்க வேண்டாம்.

செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்ற பிறகு, அந்தப் பயிற்சிக்குச் சம்பளம் என்ற வகையிலே, அவர்களுக்கு இரண்டு இன்கிரிமெண்ட்டாவது போட்டுக் கொடுக்கக் கூடாதா ? அது நியாயம் அல்லவா ? அதிலே எந்தவிதமான சிக்கலும் இருக்க முடியாது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, One man commission சிபாரிசு வரவில்லை. இதைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. அதிலே 112 கேட்டகரிகளுக்கு ஊதியத்தை மாற்றியமைக்க சிபாரிசு வந்திருப்பதாகச் சொன்னார்கள். செக்ரட்டரியல் அசிஸ்டெண்ட்களுக்கு, எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு ஸ்டாண்டர்ட் சம்பளமாக ரூ. 150 என்று இருப்பதை ரூ. 255 என்று மாற்றியிருக்கிறார்கள். அதுபோலவே எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு ஸ்டாண்டர்ட் ஆக ரூ. 175 என்று இருந்ததை ரூ. 250 என்று கன்சாலிடேட்டட்டாகக் கொடுத்திருக்கிறார்கள். இதைத் தவிர 'நான்-பார்மல் எடுகேஷனில்' இருக்கக்கூடிய சூப்பர்வைசர்களுக்கு ரூ. 175 என்று இருப்பதை ரூ. 250 என்று மாற்றியிருக்கிறார்கள். மற்ற கேட்டகரியில் உள்ளவர்களுக்கு சிபாரிசு இல்லையா ? அந்த சிபாரிசு பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். One Man Commission ரிப்போர்ட்டை வெளியிட வேண்டும். அப்படி வெளியிட்டால், என்னென்ன சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பு இருக்கும். அப்படி வெளியிடுவதிலே எந்தக் குற்றமும்



1981 ஏப்ரல் 27] [திரு செ. முத்துசாமி]

இல்லை. அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பே கமிஷன் சிபாரிசுகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த பே கமிஷன் சிபாரிசில் உள்ள அனாமலியைக் களைவதற்காகத்தான் இந்தக் கமிஷனின் ரிப்போர்ட்டையும் வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1—1—1971-லிருந்து செலக்ஷன் கிரேட் கொடுக்க வேண்டும் என்று ஹைக்கோர்ட்டிலே தீர்ப்பாயிற்று. 1—4—1971 என்ன அவ்வளவு புனிதமான தேதி ? 1—1—1971-லே இருப்பவர்கள் மட்டும் என்ன தப்பு செய்தார்கள் ? அவர்களுக்கும் செலக்ஷன் கிரேடு கொடுக்க வேண்டுமென்று நீதிபதி திரு. வரதராஜன் அவர்கள் ஒரு வழக்கிலே தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன். நீதி மன்றத்திலேயே தீர்ப்பளிக்கப்பட்ட விஷயமாக இருக்கின்ற காரணத்தினாலேயே, இந்தத் தீர்ப்பின் நகலை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் தருகிறேன். கல்வித் துறைக்கும் இதன் நகல் வந்திருக்கும் என்று நம்புகிறேன். 1—1—1971-லிருந்து 10 ஆண்டுகள் கழித்து செலக்ஷன் கிரேட் கொடுக்க வேண்டுமென்ற தீர்ப்பை ஏற்று கல்வித் துறையில் எல்லோருக்கும் அந்தச் சலுகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இருபது வருடங்கள் கழித்து செலக்ஷன் கிரேட் பெற்றவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் 10 வருடங்கள் கழித்துத்தான் ஸ்பெஷல் கிரேட் கொடுப்பது என்றால், அவர்கள் 20 வருடங்கள் பணியாற்றிவிட்டு, அதற்குப் பிறகும் 10 வருடங்கள் கழித்து என்று சொல்லும்போது, அவர்கள் 30 ஆண்டுப் பணியை முடிக்கும் முன்பே ரிடையர் ஆகின்ற நிலைமைகளும் இருக்கின்றன. ஆகவே அவர்கள் 20 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்களாக இருந்தால், அந்த 'ஸ்பெஷல் கிரேட்' கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஹையர் பி.டி. ஆசிரியர்கள், லோயர் பி.டி. ஆசிரியர்கள் என்று வைத்திருக்கிறார்கள். இதிலே ஹையர் பி.டி. படித்தவர்கள் இரண்டு வருடங்கள் சேர்ந்து டிரெயினிங் எடுக்கிறார்கள். அந்த இரண்டு வருடங்களுக்கு இரண்டு இன்கிரிமெண்ட் கொடுத்துவிட வேண்டும். அவர்களை ஒரே சம்பளத்தில் வைத்தாலும் சரி, கர்நாடகத்திலே இந்த மாதிரி பே கமிஷனிலே ஒரு மெர்ஜர் பண்ணி கொடுத்திருக்கிறார்கள். கீழே இருக்கின்றவர்களை மேலே இருக்கின்றவர்கள் அளவுக்குக் கொண்டு போகிறபோது, மேலே இருக்கின்றவர்கள் அளவுக்குச் சம்பளத்தை உயர்த்தினார்கள். அப்படி மேலே இருக்கின்றவர்களுக்கு என்ன பண்ணினார்கள் என்றால், அவர்களுக்கு இரண்டு இன்கிரிமெண்ட்டு கொடுத்து நிர்ணயம் பண்ணுகிறார்கள். அது மாதிரி

நாமும் செய்ய வேண்டும். ஹையர் பி.டி., லோயர் பி.டி. என்று அவர்கள் போட்டியில் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அந்த மாதிரி சூழ்நிலை ஏற்படாமல், அதிலே அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். 1—1—1971-லிருந்து 'செலக்ஷன் கிரேட்' கொடுக்கின்ற நிலைமை ஏற்பட வேண்டும். அதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், கல்வித் துறை அதிகாரிகளும் பரிசீலிக்க வேண்டும். பல முறைகள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதற்கு முடிவு வராமல் இருக்கிறது. அதைப்பற்றி விரைவில் முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'சி' பிரிவு ஆசிரியர்கள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கவர்ண் மெண்ட்டுக்கு 17 பேர்களை எடுத்தார்கள். அந்த ஆசிரியர்கள் நிலை என்ன என்பது தெரியவில்லை. ஒரு இலாகாவிலிருந்து இன்னொரு இலாகாவிற்குப் போயிருக்கிறார்கள். அது விஷயம் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. உள்ளாட்சித்துறையிலிருந்து 'பி' விங் ஆசிரியர்களாகப் போனவர்களுக்கு டேட் ஆப் அப்பாயிண்ட்மென்ட்டிலிருந்து இன்டர்ன்சி, சீனியாரிட்டி கொடுத்து அவர்களுக்கும் இந்த 'சீனியாரிட்டி'-படி ஏ விங், பி விங்-க்கு வருவதற்கு வேண்டிய ஏற்பாட்டை விரைவில் செய்ய வேண்டும். தற்போது அமுலில் இருக்கக்கூடிய உத்தரவை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்கள்பற்றிச் சொல்கிறேன். பல பள்ளிகள் 'அப்கிரேட்' ஆயிற்று. மிடில் ஸ்கூல்கள், பஞ்சாயத்து யூனியனில் இருந்த பள்ளிகள், தனியார் பள்ளிகள் எல்லாம் அரசில் 'அப்சார்ப்' ஆயின. அதிலே இருந்த டீச்சர்ஸ் எல்லாம் 'அப்சார்ப்ஷன்' என்ற முறையிலே எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். பல டீச்சர்களுக்கு அந்த 'அப்சார்ப்ஷன்' 5, 6 ஆண்டு காலமாக நடக்காமலிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், திருச்சியிலே மேலூர்பட்டியில் உள்ள இடைநிலைப் பள்ளி ஆசிரியர்கள், சேலம் மாவட்டத்தில் கபிலர் மலை இளநிலைப் பள்ளி ஆசிரியர்கள் இவர்களுக்கு 'அப்சார்ப்ஷன்' வராமல் இருக்கிறது. கல்வித் துறையிலே எக்சம்ஷன் கொடுக்கக்கூடிய காலகட்டத்திலேயே 5, 6 வருடங்கள் ஆகியிருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதை விரைவுபடுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இளநிலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே 5 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் வரை செய்யப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே பேச்சுவார்த்தையிலே டைரக்டர் அவர்களும், கல்விச் செயலாளர் அவர்களும் தெளிவாக இரண்டு ஆண்டுகளில் இதை முடிப்பதாகச் சொன்னார்கள். சமீபத்திலே வந்த அறிவிப்புப்படி,



அது 10 ஆயிரம், 10 ஆயிரம் என்ற அளவில் பண்ண இருப்பதாகச் சொல்கிறார்கள். அது என்ன நியாயம்? ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளில் செய்வதாக 'டிஸ்கஸ்' பண்ணும்போது சொன்னார்கள். அப்படி ஒத்துக் கொண்டதை திடீரென்று மாற்றியமைக்கக்கூடிய நிலை வந்திருக்கிறது. ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்குக் குறுகிய காலத்தில் பயிற்சி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆந்திராவிலே ரூ. 400 சம்பளம் என்று இருக்கிறது. அதுவே இங்கே 250 ரூபாய் என்று இருக்கிறது. இங்கே செலக்ஷன் கிரேட் சம்பளம்கூட 400 ரூபாய் வரவில்லை. இங்குள்ள செலக்ஷன் கிரேட் சம்பளம் அங்குள்ள செகன்டரி கிரேட் சம்பள அளவுக்குக் கூட வரவில்லை. அது என்ன நியாயம்? கீழ் மட்டத்திலே இருப்பவர்களைப் பார்க்க வேண்டும். செலக்ஷன் கிரேட் கொடுக்கும்போது, செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 10 ரூபாய் மினிமம் பெனிஃபிட் இருக்க வேண்டுமென்று பட்ஜெட்டிலே இருக்கிறது. பி.டி. ஆசிரியர்களுக்கு மினிமம் பெனிஃபிட் ரூ. 15 இருக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். ஹையர் கிரேடு ஆசிரியருக்கு எவ்வளவு என்று இல்லை. இளநிலை ஆசிரியர்களுக்கு என்ன என்று அறிவிக்கவில்லையே, அது என்ன நியாயம்? மிடில் ஸ்கூல்களிலே பி.டி. ஆசிரியர்களை போட்டால் கெட்டு விடுமா? அரசாங்கம் கிராமப்புறங்களிலே ஹையர் செகண்டரி பள்ளியைக் கொண்டு வருகிறார்கள். மிடில் ஸ்கூலில் இருக்கின்ற 8 ஆம் வகுப்பை எடுத்து ஹையர் செகண்டரியிலே சேர்க்கிறார்கள். அந்த இடங்களிலே பி.டி. ஆசிரியர்களைப் போட நடைமுறையைக் கொண்டுவர வேண்டும். எட்டாம் வகுப்பை அங்கேயிருந்து எடுக்க வேண்டாம் என்பது தான் என் வேண்டுகோள். ஐந்து ஆயிரம் மிடில் ஸ்கூல்கள் இதனால் பாதிக்கப்படுகின்றன. இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அங்கீகாரம்பற்றி ஒரு இரண்டு நிமிடங்கள் பேச விரும்புகிறேன். அங்கீகாரம் பெற்ற சங்கங்கள் இருக்கின்றன. நமது நாடு ஜனநாயக நாடாக ரொம்ப நாட்களாக இருக்கின்றது. ஒரு ஜனநாயக நாட்டிலே போட்டிருக்கின்ற உத்தரவிலே தனிப்பட்ட ஆசிரியர்கள் சங்கங்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படக்கூடாது என்று இருக்கிறது. கல்வி அமைச்சர் அவர்களுக்கு தனிப்பட்ட ஆசிரியர்கள் எத்தனை விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கின்றார்கள்? அவர்கள் அனுப்பிய விண்ணப்பங்கள் மீது தீர்வு கண்டு அனுப்பவில்லையா? அவர்களுக்கு எவ்வளவு கொடுமையான நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன, அக்கிரமங்கள் நடந்திருக்கின்றன. ஒரு ஆசிரியர் வெளியேற்றப்பட்ட போது, 'ஆசிட்' அடித்து கண் போய்விட்டது. அவருடைய துணைவியார் ஏழு வருட காலம் டெம்பரரியாகப் பணியாற்றினார்கள். அவர்களுக்கு உத்தியோகம் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன. தொழிற் சங்கங்களில் ஒரு தனிப்பட்ட தொழிலாளிக்குச் சங்கடம் வரும்போது,

[திரு. செ. முத்துசாமி] [1981 ஏப்ரல் 27

அவருக்காகக் கேட்க சங்கத்திற்கு உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாதிரி உரிமைகள் இவர்களுக்கு இல்லையா ? எங்களுக்கு அங்கீகாரம் வேண்டுமென்றால், அதிகாரிகளைப்பற்றி எதுவும் பேசக்கூடாது, அவர்கள் செய்கின்ற தப்பை எடுத்துச் சொல்லக்கூடாது, அவர்களைப்பற்றி நோட்டீஸ் போடக்கூடாது, அவர்களைப்பற்றிக் கண்டன ஊர்வலம் போகக்கூடாது என்று சொல்கின்ற நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஆசிரியராக இருந்தவர்கள். அவர்கள் சங்கம் அமைக்க எவ்வளவு கஷ்டப்பட்டோம் என்று சொன்னார்கள். அப்படி வந்தவர்கள் இந்த மாதிரியான 'நார்ம்ஸ்' போட்டிருக்கின்றார்களே, அது நியாயம் தானா ? ஒரு ஜனநாயக ஆட்சியிலே சர்வாதிகார மனப்பான்மையோடு இருந்தால், எப்படி ? சர்வாதிகார நாட்டில் அப்படி வரலாம். ஜனநாயக நாட்டிலே அப்படி வரலாமா என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தமாதிரி அரசாணை

(முற்பகல் 11-30)

போட்டிருப்பது சர்வாதிகார மனப்பான்மை உள்ளதாக இருக்கிறது. தனிப்பட்ட அதிகாரியைப் பற்றிச் சொல்லக்கூடாது. நன்கொடை வாங்கக் கூடாது என்று சொல்லுவது அங்கீகாரத்திற்குத் தேவைதானா ? அங்கீகாரம் கொடுக்க வேண்டுமென்றால், இப்படியெல்லாம் விதிகளை வைப்பதா ? இந்த உத்தரவை அரசாங்கம் திரும்பப் பெற வேண்டும். உயர்நீதி மன்றத்தில் தேவையில்லை என்று சொல்லியும், மாற்றியிருக்கிறார்கள். அந்த உத்தரவைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓசூர் பகுதியில் மைனாரிட்டி பள்ளிகள் இருக்கின்றன. அங்கே தெலுங்கு, உருது, கன்னடம் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். அங்கேயுள்ள மைனாரிட்டியினர், தங்களை யாரும் மதிப்பதில்லை என்று கூறுகிறார்கள். தமிழ் நாடு அரசு எதையும் செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். கூடலூரிலும் அப்படித்தான் இருக்கிறது. தமிழ் படிக்கிறவர்களுக்கு இலவசப் புத்தகம் தருகிறோம். அப்படி அவர்களுக்கு வழங்காமல் இருந்தால், அதில் என்ன நியாயம் இருக்க முடியும் ? ஓசூர் பகுதியிலே போராட்டம் பண்ணக் கூடிய அளவிற்கு ஆசிரியர்கள் வந்திருக்கிறார்கள். ஓசூருக்கு நீங்கள் சென்றிருக்கும் சூழ்நிலையில், எல்லாம் தெரியும். அந்த மக்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, அங்கீகார உத்தரவை திரும்பப் பெறுங்கள், திரும்பப் பெறுங்கள், அது ஜனநாயக உணர்வற்றது, ஆசிரியர்களை அடிமைப்படுத்தக் கூடியது, ஆசிரியர்களிடமிருந்து அடிமை சாசனம் எழுதி வாங்கக்கூடியது. மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அப்படி எழுதி வாங்க மாட்டார்களென்று



1981 ஏப்ரல் 27] [திரு. செ. முத்துசாமி]

கருதுகிறேன். அப்படி வாங்கித்தான் ஆக வேண்டுமென்றால், உங்களுடைய மனப்பான்மை மாறிவிட்டதென்று ஆசிரியர்களிடத்திலே தவறான அபிப்பிராயம் வருமென்று தெரிவித்து, விடை பெறுகிறேன்.

THIRUMATHI TARA CHERIAN: Madam Vice-Chairman, I am indeed very grateful to you for giving me this opportunity to speak on the Policy Note on Education. Yesterday, till very late in the night, I studied this Policy Note. It is only for the past nearly one year that I am a Member of this House. But, I am a mother and a grandmother and, as such, I am very much interested in the education policy of the Government. Therefore, whatever remarks I may offer on the policy may kindly be taken in the spirit in which I am trying to offer those remarks.

First of all, I feel the proper functioning of the Education Advisory Board is very essential. In this Policy Note, very many salient features have been mentioned. Still, I feel that the Education Advisory Board should function properly so that the progress in education could be reviewed. Of course, every year many Reports on the progress of education are given to us. Those are all glossy books containing massive statistics about the programme of education, expansion of education, financial allocations therefor, etc. But, sometimes I wonder why there seems to be a universal dissatisfaction about the work or absence of work in our schools and colleges. Innumerable strikes, indiscipline among the students and the teachers, dissatisfaction among those who feel that the present system of education does not benefit them, lack of productive skills among the school-leavers who feel that they cannot make a living, increasing unemployment and many other ills are too disturbing for anyone to feel comfortable. It is no use if we blame anybody for this. We will have to review everything from time to time. Let us identify the problems, examine the defects and give a clear picture of the situation. Let us not leave everything to the Legislators who are generally lost in everyday routine. In the various offices also, files are mounting. Therefore, the Government should bring together devoted public men who are experts in different aspects of education so that there may be a continuous review of both the achievements and failures in different areas of education. Properly constituted education panels and forums can help the Government in evolving all important education programmes.

[Thirumathi Tara Cherian] [1981 ஏப்ரல் 27

The educational policies and programmes should be continuously subjected to public opinion. This is too important a matter to be left entirely to the teachers and the supervisory officers.

Now coming to the Plus Two job-oriented vocational courses, I have my own opinion. We all know that the greatest need today is to make the pupils capable of doing work. The opening in the Higher Secondary Schools of a number of vocational training courses is not very helpful to us. It is doubtful if such a massive programme started overnight will be of any help. 1510 vocational courses have been started in our 1243 Higher Secondary Schools. 25.000 people are being trained and on an average there are 60 students in each course. But it is not correct to fritter away the scarce resources in this manner. Therefore, I think it will be much better and more efficient and more economical to concentrate in selected centres and start agricultural schools, teachnical schools, and commercial schools and they may be in each Panchayat Union Headquarters. It would have been much better because they must have more practical training and it is not sufficient if they have mere book knowledge which they are now having in our Higher Secondary Schools, which are not properly manned by teachers capable of giving practical training. The starting of Higher Secondary Schools overnight has resulted in these courses being located along with the academic courses. Therefore, it has not been possible for us to achieve our real objective.

In my view, the taking of these 95,000 Panchayat Union teachers as Government servants overnight is a hasty action which would affect the standard of our primary educaion very much. Primary education is the major responsibility of local bodies. Now we are going to have elections to the local bodies and the persons who will be elected will have very little power because primary education which is their responsibility is taken away from their control. If the teachers are taken out of their control, then it will be very difficult to control all these teachers from the State Headquarters. The number of elementary schools in the State is 33,306 and the number of teachers is 1,80,000. There is no separate department or any district authority to look after elementary education. The District Educational authorities



1981 ஏப்ரல் 27] [Thirumathi Tara Cherian]

are concerned only with High Schools and they cannot be held responsible for solving the service problems of 95,000 Panchayat Union teachers. The R.D.L.A. Department will not also be able to control them. If teachers are taken out of the control of Panchayat Unions, we must have a separate local education authority which would be statutorily constituted for the management of elementary education as is being done in the United Kingdom. Public men and not politicians should have the dominant role in the management of the affairs of schools. Elementary education should not be left entirely in the hands of bureaucrats and politicians. Policy-making should be in the hands of public spirited people. The transfer of teachers happens very often because of political interference. Some of us may be happy at the elections to local bodies not being held because if the elections are held and representatives of local authorities come to this House, many of the teachers' representatives here will not get even half the time they now get. They talk about remuneration of teachers. It is very essential that they should be paid fair remuneration. My husband was himself a teacher and, therefore, I can understand. But none of them speak about the need for environmental education being imparted to the children. Such education should be included in the books for primary school and then only they will be motivated properly. Therefore, I feel that the children should be taught environmental hygiene, preservation of forests, planting of trees and these should be included in the syllabus of the children's education. This could be done only by motivated teachers.

(முற்பகல் 11-40)

I do not remember the actual sentence that I came across in the Budget Speech, but I do remember that the term 'family welfare' was used by the Hon. the Finance Minister in his Budget Speech. The other day, the Hon. the Health Minister also supported the view that the family welfare programme was a very essential one. In the Planning Commission and other high-level bodies, they hold the view that this programme, whether it is called birth control programme, family planning programme or family welfare programme, is a very big programme. Whatever we may gain by industrialisation or expansion of agriculture will be of no use unless we impress upon the teachers, the parents

and also the students the necessity of having a small family. The family welfare programme should be given a most prominent place in the educational system. Therefore, a chapter on family welfare should be added to the books that we give to the students at every level.

Now, I come to the issue of language. I think that nobody will wholeheartedly say that we should outlaw English on the educational scene. Ban on English as a medium of instruction will cut at the progress of a State in the educational field. Everyday, we hear politicians at all levels talking so much about English being banned or being denigrated. But, when it comes to educating their own children and family members, they think only of convents and English-medium schools. In extending local languages as media for higher education, we must understand that we are still ill-equipped to impart in those languages the knowledge of the breadth and quality that is possible in English. First, let us enrich our vocabulary. I know that there is a proposal to start a Tamil University. I remember that Dr. A. L. Mudaliar once said that the books for children should not be mere translations and that the children must be encouraged to read books themselves. Once, I was trying to preserve the medical books of my husband. My son who belongs to the younger generation told me,' These books can only be preserved now because knowledge is going on expanding and everyday new books are being published '. Therefore, let us enrich the vocabulary before we think of Universities and other things. Let us not attempt to force the pace of introduction of one language because such an attempt may be resisted by the students themselves. Today, English is playing a predominant role in the educational sphere all over the world, especially in spreading knowledge on science and technology. Even in countries like Japan and the Soviet Union they are encouraging the study of English. Therefore, any attempt to push off English language or to denigrate it can certainly harm education in India. The students and the parents have a democratic right to choose the medium of instruction. We have accepted the two-language formula. Therefore, equity demands that English language be given the same prominence as Tamil நான் கூட தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட பெற்றோர்களுக்குத்தான் பிறந்தவள். ஆனாலும் எதைச் செய்வதாக இருந்தாலும் அதற்கு ஒரு செய்யும் முறை இருக்கிறது. தமிழுக்கு எப்போதுமே சிறப்பான இடம் உண்டு.



மற்ற மொழிகளிடமிருந்து, தமிழைப் பொறுத்தவரையில், கடன் வாங்க வேண்டிய அவசியமே இல்லையென்று தமிழ் அறிஞர்கள் சொல்வார்கள். தொடக்கத்திலிருந்தே தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பேசுகிறோம் என்பதற்காக மட்டும் ஆங்கிலத்திற்குக் கொடுக்க வேண்டிய மதிப்பைக் கொடுக்காமலும் இருக்கக் கூடாது. ஆங்கிலத்திற்குக் கொடுக்க வேண்டிய மதிப்பை அவசியம் கொடுத்தாக வேண்டும். English has become an international language. It is the window through which we will be able to keep pace with things that are happening in other places.

I now come to the most heart-burning question of the reservation policy of our Government. Now, there is a reservation of 68 per cent for Scheduled Castes, Scheduled Tribes and backward communities. It is unfortunate that the number of communities classified as backward classes is always increasing. In spite of all the welfare measures of the Government, in the past more than 30 years the Government have not succeeded in making even a single person belonging to a backward community come out through the open quota for high posts. It is not proper for a Government committed to the abolition of castes to increase concessions based solely on caste. Even after attaining high positions, members of the backward classes continue to enjoy the concessions afforded by the policy of reservation based on castes. But, the moment a man belonging to a backward class converts to Christianity, the Government consider him as belonging to a forward community, though he may be a ' Sudra ', Harijan or belonging to one of the backward communities. If he later declares himself to be a Hindu, he once again gets back all the privileges applicable to backward classes. There is no logic or rationale behind this policy. Therefore, I hope that the Hon. the Chief Minister, the Hon. the Finance Minister and the Cabinet will consider this problem. Now, admissions to medical colleges and other professional colleges are going to come up. Let us remember that this policy of reservations is most deceptive even to the people for whom it is intended. It is most disheartening to the so-called backward community and very disastrous to the country. They are not judging the people on merit. If people are selected on merit, their knowledge will be helpful to the country as a whole. Therefore, it is very necessary to have a different outlook on this and we should see that merit is given due consideration and more number of people are

[Thirumathi Tara Cherian] [1981 ஏப்ரல் 27

selected on merit. We had a Brahmin cook in the Raj Bhavan at Bombay and he had eight children. For generations they have been some sort of servants. The same thing must hold good in other places also and they have never enjoyed any privilege. Even though their child gets first class and distinction, he is not selected because of the community, because of the caste and because of the religion. They have become starved of knowledge and they should not be kept away from getting into the colleges to benefit themselves. There is a general over-all lowering of educational standard and consequently, there is no over-all progress. Special education facilities, remedial and otherwise, can be given to backward class, Scheduled Caste and Scheduled Tribe candidates, instead of talking so much on money being allotted for giving tuition to them at the last stage. I think even at the stage of middle school, we should have special schools where these children will be given the best tuition possible so that they may right-royally join the higher educational institutions and compete on equal terms with the other class students who have been able to get better education. This will be better than giving tuition to those backward students at the last level.

Recruitment of teachers is being done through Employment Exchanges. I think the recruitment of teachers should be made by calling for applications through advertisement. Aptitude tests at the time of admission is very necessary in the case of all professional colleges. As in the case of I.I.T. admission, it has to be done so that we may give a fair and just place to those people who have got real merit.

Now, coming to the question of the physically handicapped, I am new to this House but I find that in 1980-81 it was mentioned in a simple sentence, without mentioning any reason or rhyme, that the subject of education of the physically handicapped was transferred to the Social Welfare Department. I want to know how the Social Welfare Board or the Secretary to Government, or the I.A.S. officers who are in charge will be technically qualified to impart education to the physically handicapped. Those handicapped should be given a little more encouragement and should be considered part and parcel of society. We are often overlooking the right of the mentally retarded to be considered as part of the community. They should



1981 April 27] [Thirumathi Tara Cherian]

be accepted in the community as deserving of a little more privilege. 3 per cent of our population are mentally retarded and they are not to be kept as skeletons in the cupboard in the house even by their parents. Society should extend all its encouragement to them. There are 15 million mentally retarded in India. They should be given special treatment and proper education should be given to them. I appeal to the Government to take the responsibility of giving education to them from the control of the Social Welfare Department and give it back to the Education Department. They are normal otherwise. The Government are giving scholarships to the blind and other physically handicapped studying in Post-Graduate courses. They are intelligent. Why should they be taken to the Social Welfare Department? When my husband finds that a boy who is deaf and dumb could not be cured, it is his first duty to ask his parents to take the child to the Deaf and Dumb School where he will be trained in the special way and he will be made a useful

(முற்பகல் 11-50)

citizen. That is what I want to say. I know for certain that the National Society for Schools for the Handicapped, known as NASOH, in Bombay is not isolating the handicapped people. Instead of isolating the handicapped people, the Society is going ahead with normal schemes for providing an integrated education to the handicapped children coming under different categories. The Government of Maharashtra introduced the scheme in 1978 and it works very satisfactorily. The Society also provides the facility, through a College, for teachers to undergo a Post-Graduate diploma course in Special Education. It also trains the handicapped people and makes them fit for rehabilitation. In Japan, there are 1,41,000 handicapped persons and 3,01,000 mentally retarded persons. But, 45 per cent of the physically handicapped persons have been rehabilitated. There, they are having a National Centre for research and development of rehabilitation techniques. In Tamil Nadu also we should have one such Centre where research could be done continuously. In the United States of America also, they do not differentiate between handicapped people and normal people and that is why they are progressing very well in the matter of rehabilitating handicapped people.

[Thirumathi Tara Cherian] 1981 April 27]

We are now in the International Year of the Physically Handicapped. The 22nd of March has gone by but the year is still very much in front of us. Therefore, the Government should launch some special schemes for the handicapped. I find that a big amount is being set apart for sports programmes and other things. But, we must give special coaching in sports to the handicapped people. I hope that the Hon. Minister will set apart a sizable amount for sports activities, hobbies, etc., of the handicapped people.

Now, the Government have an idea of taking over all the nursery schools. Why do they want to take over the nursery schools which impart education to the children in the pre-primary stage? Why do they want to nationalise everything? Of course, there are the Balwadis and other institutions. But none of the Ministers' children would go to those Balwadi's. What is wrong if a person pays Rs. 100 to put his child in a nursery school run by a Ladies Club? He spends that Rs. 100 only to make the child happy. As the Hon. Minister once mentioned on the floor of the House, he should try to bring the Government institutions up to the standard of privately-run institutions. I would very much like the Hon. Minister to bring into being more nursery schools; but let him not nationalise everything. In a democracy, we cannot have culture if everything is controlled by Government.

For the development of sports, the Government are going to spend a lot of money. I hope that they will be able to spend it very wisely. In the City, there should be many playgrounds where the young people could spend their time instead of getting into vices. At the village level also, facilities for sports should be provided. We have got the YMCA College for Physical Education. We cannot expect politicians to be very much interested in sports. Therefore, a committee should be formed to decide how this allotment of Rs. one crore set apart for sports could be usefully spent for the benefit of the people. Thank you.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கைக் குறிப்பின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கல்விக்கு சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மிகக் குறைவாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு சதவீதம் குறைவாக இருக்கிறது என்பதை



1981 ஏப்ரல் 27] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

அனைவரும் ஒப்புக்கொள்கிறோம். நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே மட்டும் அல்லது கல்வித் துறையின் பொறுப்பாளர்களிடத்திலே மட்டும் இந்த வேண்டுகோளை விடுக்கவில்லை. கல்வித் துறையின் பொறுப்பாளர்கள் அதிக அளவு நிதியைப் பெற வேண்டும் என்று முயற்சித்ததையும் நான் அறிவேன். இலக்குமி கடைக்கண்ணாலே பார்த்தால் சரசுவதி சிரிப்பாள். இலக்குமியாகிய நிதி இலாக்காவிலே இருப்பவர்கள் சரசுவதியை சிரிக்கச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் நாடே சிரிக்கும். இல்லையேல் நாடே அழ ஆரம்பித்துவிடும். இதை நிதித் துறை உணர வேண்டும் என்ற வேண்டுகோளை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் இன்னும் கூடுதலாக நிதி பெற வேண்டும் என்ற ஆர்வத்திலே இருப்பதை நான் இந்தத் திங்கள் முதற்பகுதியிலே தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பிலே நடைபெற்ற போராட்டத்தின் போது அனுபவவாயிலாக அறிந்தேன். என்னைப் பொறுத்தவரையில், ஆசிரியர்களில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அதிலும் குறிப்பாக தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தைப் பொறுத்தவரையில், ஏப்ரல் திங்கள் முற்பகுதி மிகவும் வெப்பமாக இருந்தது, பிற்பகுதி மிகவும் குளிர்ந்திருந்தது. மிகவும் வெப்பமாக இருந்த அந்த நிலையையும், பிற்பகுதி குளிர்ந்ததற்கான காரணத்தையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், கல்வித் துறை பொறுப்பாளர்களும் அறிவார்கள். எப்போதும், செய்தவைகளைச் சுட்டிக் காட்டி நன்றி செலுத்துவதும், செய்யாதவைகளைச் சுட்டிக்காட்டி இவைகளைச் செய்யவில்லை என்று பேசுவதும் என்னுடைய வழக்கம். அரசியல் நோக்கு கல்வித் துறையிலே இருக்கக்கூடாது என்ற அளவிலே அரசியலுக்கு அப்பால் நின்று செயல்பட வேண்டும். நம்முடைய கல்வி அமைச்சர் சில நேரங்களில் ஆசிரியராகவே இருக்கிறார். சில நேரங்களிலே அமைச்சராகவே ஆகிவிடுகிறார்கள். அமைச்சராக இருக்கும்போது அதற்குரிய கடமையும், உரிமையும் அவர்களுக்கு இருக்கிறது. அவ்வப்போது ஆசிரியராக ஆகக்கூடிய மனப்பான்மையும் அவர்களுக்கு இருக்கிறது. தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தினர் 10 அம்சக் கோரிக்கைகளையும், சிறப்புக் கோரிக்கை ஒன்றையும் வைத்து கடந்த 30 ஆம் தேதியிலிருந்து போராட்டம் நடத்திய போது 31 ஆம் தேதி இதே அவையிலேயும் 4—4—1981 அன்று பேரவையிலேயும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது போராட தேவையில்லை என்று சொன்னார்கள். 4 ஆம் தேதி சட்டமன்றத்திலே கூட இந்த இயக்கத்தை நடத்துபவர் ஒரு "வெளியார்" என்று சொன்னார்கள். அதையேகூட கொஞ்சம் கோபமாகவே சொன்னார்கள். இதுதான் வெப்பம் மிகுந்த பகுதி. அதற்குப் பின்னாலே காலப்போக்கிலே ஆசிரியர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்று உணர்ந்து, குறிப்பாக

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9 ஆம் தேதியன்று எங்களை அழைத்துப் பேசி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களோடு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்கிறேன் என்று உத்தரவாதம் தந்தார்கள். அவர்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். அதற்குப் பிறகு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 13, 14, 15 தேதிகளிலே எங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி சில அறிவிப்புகளைச் செய்தார்கள். அவைகள் ஆசிரியர் சமுதாயத்திற்கும், கல்வித் துறைக்கும் பயனுள்ளதாக இருக்கின்றன. அந்த அறிவிப்பை ஏப்ரல் 16 ஆம் தேதி செய்தார்கள். 16 ஆம் தேதி அறிவிப்பு செய்ததும், ஆசிரியர் மன்றம் போராட்டத்தை நிறுத்திவிட்டபோதிலும் கூட, மேலும் நான்கு நாட்கள் ஆசிரியர்கள் சிறையிலே வாடும் நிலை ஏற்பட்டது. நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே பேசியபோது சொன்னேன். "புத்தாண்டிலே, நல்ல வெள்ளிக்கிழமை நாளிலே, ஈஸ்டர் நாளிலே ஆசிரியர்கள் சிறையிலே இருக்கிறார்கள், அவர்களை சீக்கிரம் வெளியே அனுப்புங்கள்" என்று சொன்னேன். "பள்ளிக்குச் சென்று அமைதியாகப் பணியாற்ற வேண்டும் என்று நீங்கள் வேண்டுகோள் விடுத்து, அதை நாங்கள் ஏற்றுக்கொண்டு போராட்டத்தைக் கைவிட்ட பிறகும் அவர்கள் நான்கு நாட்கள் சிறையிலே இருக்கிறார்கள். அவர்கள் வயிற்று வலியால், கண் வலியால் சிரமப்படுகிறார்கள்" என்று சொன்னோம். "ஒருவருடைய தாயார் இறந்துவிட்டால், செல்ல முடியாமல் இருக்கிறார். தந்தையாருக்கு உடல் நலம் குறைவு என்று செய்தி வந்தும் செல்ல முடியாமல் இருக்கிறார். ஒரே மகன் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்ட நிலையிலே ஒருவர் அவனைச் சென்று பாராமல் சிறையிலே இருக்கிறார்". ஆசிரியைகளில் சிலர் எல்லாம் பச்சிளம் குழந்தைகளை வீட்டிலே விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னேன். கல்வித் துறையினிடத்திலேயும், ஆசிரியப் பெருமக்களிடத்திலேயும் அன்பாக இருப்பவர்கள் அனைவரும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மன்றப் போராட்டத்தில் அந்த ஆசிரியர்களைக் காப்பாற்ற மிக மிக அக்கறையோடு முனைந்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றிசெலுத்துகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 13, 14, 15 ஆகிய நாட்களில் கல்வித் துறை செயலாளர், இயக்குநர் ஆகியோர்களோடு எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அவர்களுக்கும் எனது நன்றி. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் சிறைக்கே சென்று ஆசிரியப் பெருமக்களைப் பார்த்து நலம் விசாரித்தார்கள். அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, இந்தப் பிரச்சினையில் சீக்கிரம் முடிவுக்கு வர வேண்டுமென்று அரசுக்கு அறிவுறுத்தி மூரசொலியில் கடிதம் எழுதினார்கள். ஆசிரியப் பிரதிநிதிகள், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள்





அத்தனை பேரும் இதிலே ஆர்வம் காட்டி. கல்வித் துறை முன்னேற வேண்டும், ஆசிரியர்கள் நன்றாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே ஒத்துழைப்பு தந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயும் பேசினார்கள். அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு மேலவைத் தலைவர், , நம்முடைய ஆளும் கட்சி கொறடா டாக்டர் சனார்த்தனம் அவர்கள், மாண்புமிகு அவை முன்னவர் திரு. இராசா முகமது உட்பட எல்லோரும் இதிலே நல்ல உதவி செய்தார்கள். என்.ஜி.ஓ. சங்கத்தினர், மற்றும் பிற சங்கங்கள் எல்லாம் உதவி செய்தன. ஆகவே, அவர்களுக்கெல்லாம் நான் நன்றி செலுத்துகிறேன். அந்தப் போராட்டத்தின் விளைவாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்த சில அறிவிப்புகளைப் பற்றி நான் சொல்கிறேன்.

(நண்பகல் 12-00)

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையைப் பொறுத்தவரையில், பேச்சுவார்த்தையின்போது, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அதற்கு ஒப்புக்கொண்டார்கள். 16 ஆம் தேதி அறிவிப்பிலும் கூறினார்கள். 1979 ஆம் ஆண்டில் வேறு ஒரு இயக்கத்தினர் இதற்காகப் போராட்டம் நடத்தியபோது, இது குறித்து சட்டமன்றத்தில் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களால் ஒரு அறிவிப்பு செய்யப்பட்டது. தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிப்பது அரசின் ஆய்வில் உள்ளது என்று அப்போது சொல்லப்பட்டது. இப்போது ஆய்வு முடிவுற்று ஆணையினை வெளியிடும் நிலையில் அரசு இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த ஆணையை அரசு விரைவிலேயே வெளியிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அந்த வகையில் அரசு ஆணை பிறப்பிக்கும்போது, அதற்கு எந்த நிபந்தனையும் விதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது தேசிய நல நிதியில் பணம் இருந்தால்தான் என்றோ அல்லது ஏதாவது வேறு நிபந்தனையைச் சேர்த்தோ அரசாணை வெளியிடப்படாமல், அனைத்துப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி அளிக்கப்படும் என்று நிபந்தனையற்ற ஒரு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்ட பின்னரும், அத்தகைய ஆசிரியர்களுக்கு ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள்ளேயே மாறுதல் செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அத்தகைய உறுதிமொழியை அமைச்சர்

அவர்களிடமிருந்து பெற்றதையே மிகப் பெரிய சாதனையாக நான் கருதுகிறேன். காரணம், இதே அவையில் முன்பொருமுறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, "அரசு ஊழியர்களாகவும் ஆக வேண்டும், அதே நேரத்தில் வேறு இடத்திற்கும் மாறுதல் செய்யக்கூடாது என்று கேட்பீர்களானால் இது கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்று சொல்வதைப் போல் இருக்கிறது" என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒன்றியத்திற்குள்ளேயே இந்த ஆசிரியர்கள் மாறுதல் செய்யப்படுவார்கள் என்று உறுதி மொழி அளிப்பதற்கு உறுதுணையாக இருந்ததற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 1—6—1981-லிருந்து ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட இருக்கிறார்கள். அதற்கு முன்னரேயே செய்ய வேண்டிய மாறுதல்களையெல்லாம் செய்துவிட வேண்டும் என்று சில ஆணையாளர்கள் மாறுதல் உத்தரவுகளைப் போட இருக்கிறார்கள். அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தடை விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இளநிலை ஆசிரியர்களை முதுநிலை ஆசிரியர்களாக இரண்டாண்டுகளுக்குள் மாற்ற வேண்டும் என்ற வேண்டுகோளை நாங்கள் வைத்தபோது, கண்டிப்பாகச் செய்ய இருப்பதாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளித்தார்கள். அவர் அளித்த உறுதிமொழியின் அடிப்படையில், கல்வித் துறைச் செயலாளர் அவர்கள் இரண்டு நாட்கள் நிதிச் செயலாளர் அவர்களோடு வாதிட்டு இந்த ஆண்டு 10,000 ஆசிரியர்களுக்கு மட்டும் இதைச் செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். இந்த ஒப்புதலுக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த ஆண்டே கூட 15,000 அல்லது 20,000 ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாண்டுகளில் முடியவில்லை என்றாலும், இந்தப் பிரச்சினையை மூன்றாண்டுகளுக்குள்ளாக முடித்துவிட முயலுவோம் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தைகளின்போது குறிப்பிட்டார்கள். அதைச் செய்ய முனைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் ஆசிரியர்களாக இருப்பவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்திருந்தால், மூன்று ஆண்டுகள் தொழிலாசிரியர்களாகப் பணியாற்றிய பிறகு, இடை நிலை ஆசிரியர்களுக்கான தேர்வை எழுதுவதற்கு அனுமதிக்கப்படுவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஏழு ஆண்டுக் காலம் பணியாற்றிய பிறகுதான், அவ்வாறு தேர்வு எழுத அனுமதிக்கப்படும் நிலை இருந்தது. எனவே அதற்காகவும் இப்போது நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



நிதிநிலை அறிக்கை அளிக்கப்பட்டபோது, அரசு ஊழியர்களுக்கான பல சலுகைகளை அறிவித்தார்கள். அவைகள் ஆசிரியர்களுக்குப் பொருந்துமா என்று கேட்டபோது, அவைகள் அனைத்தும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளித்தார்கள். அதில் உள்ள ஒரு சிக்கலைப்பற்றி மட்டும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். லீவ் டிராவல் கன்செஷனைப் பொறுத்தவரையில், 15 நாள் ஈட்டிய விடுப்பு எடுத்தால் மட்டும்தான், இந்தச் சலுகையைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஆண்டுக்கு மூன்று நாள்தான் ஈட்டிய விடுப்பு இருக்கிறது. எனவே இந்த லீவ் டிராவல் கன்செஷனை அனுபவிக்க அவர்கள் ஈட்டிய விடுப்பு 15 நாள் எடுப்பதற்கு இயலாத நிலை இருக்கிறது. எனவே ஆசிரியர்களும் 15 நாள் ஈட்டிய விடுப்பு பெறும் வகையில் அரசு ஊழியர்களுக்கு உள்ள மாதிரி வேலை செய்யும் நாட்களுக்கேற்ப விகிதாச்சார அடிப்படையில் ஈட்டிய விடுப்பு அளிக்க வேண்டும் என ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்தோம். குறைந்தபட்சம் நீதித் துறையில் அது 'வெக்கேஷன் டிபார்ட்மெண்ட்' என்று இருந்தாலும் எந்த வகையில் அவர்களுக்கு விடுப்பு அனுமதிக்கப்படுகிறதோ அதைப்போன்ற நிலைமையையாவது உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். எனவே தற்போது ஆண்டுக்கு குறைந்தபட்சம் 15 நாள் ஈட்டிய விடுப்பாவது ஆசிரியர்களுக்கும் கிடைக்கும் வகையில் செய்தால் தான், இந்தச் சலுகையைப் பயன்படுத்திக்கொள்ள இயலும் என்று சொல்லி, அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகர ஈட்டுப் படி, வீட்டு வாடகைப் படி ஆகியவை வழங்கப்படாத பகுதிகளில் அவை வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதோடு சங்க அங்கீகாரத்தைப்பற்றி மீண்டும் பேசலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்ததற்காக நான் அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றித் தந்த மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கும், கல்வித் துறைக்கும், நிதித் துறைக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சில கோரிக்கைகளைப் பொறுத்தவரையில், அவைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டது. அதில் முக்கியமான சிலவற்றைப்பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இருபது ஆண்டுக்காலம் பணி செய்து முடித்த ஆசிரியர்களுக்கு சிறப்பு நிலை வேண்டும் என்று நாங்கள் கேட்டபோது, நீங்கள் கேட்பது ஹையர் கிரேடு, செகண்டரி கிரேடு ஆகியவைகளையும் சேர்த்து அதற்குப் பிறகு

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1981 ஏப்ரல் 27

முதுகலை பட்டம் பெற்றவராக இருந்தால் அந்தப் பணிக்காலத்தையும் சேர்த்து என்று இருக்கிறதே; அதை எங்களால் செய்ய இயலாது என்றும் ஒரே கேட்டிகிரியில் ஒரே நிலையில் இருப்பவர்களுக்கு மட்டும் 20 ஆண்டுகள் முடிந்ததும் சிறப்பு நிலை வழங்குவது குறித்து முயற்சிக்கலாம் என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கல்வி மானியக் கோரிக்கையில் செய்யப்பட இருக்கும் அறிவிப்பில் அனைத்து நிலை ஆசிரியர்களும் இத்தகைய அறிவிப்பை எதிர்பார்க்கிறார்கள். இது தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாமல் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தக்கூடியது. நாங்கள் கேட்ட அளவுக்குத் தரவில்லை என்றாலும், அதைக்கூட காலப் போக்கில் பரிசீலனை செய்யலாம் என்று சொல்லி இப்போது அரசு இதுகுறித்து எடுத்திருக்கிற முடிவை ஓரளவுக்கு உடனடியாக நாளையதினம் பதில் சொல்லும்போதே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரே நிலையில் உள்ள ஆசிரியர்களுக்கு 20 ஆண்டுக் காலப் பணிக்குப் பிறகு சிறப்பு நிலை அளிக்கப் படும் என்ற அறிவிப்பைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1—4—1978 முதல் சிறப்பு நிலை வழங்கப்பட்டதாக நினைக்கிறேன். அந்தத் தேதியிலிருந்தே இது அமுல்படுத்தப்பட வேண்டும் என்று அனைத்து ஆசிரியர்களின் சங்கத்தின் சார்பாகவும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி தலைமை ஆசிரியர்களுக்கு தற்போது பணிப்படி இல்லை என்பதை ஒப்புக்கொண்டு, அவர்களுக்கும் வழங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்று சொல்லப் பட்டது. தமிழ் நாடு முழுவதும் உள்ள நடு நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி தலைமை ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகும். எனவே இதனால் பெரும் தொகை செலவாகாது. ஆகவே இதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்றும் தொழிலாசிரியர்கள் முழு நேரத் தொழிலாசிரியர்களாக மாற்றப்படும் திட்டத்தின் அடிப்படையில், 250 பேர்களை மட்டும் தற்போது மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநிலம் முழுவதும் மொத்தம் மீதி 400 ஆசிரியர்களுக்கு மேல் இருக்க மாட்டார்கள் என்பதால் அவர்களையும் உடனடியாக மாற்றத் தக்க வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் நடு நிலைப் பள்ளிகளில் பணியாற்றினால், அவர்களுக்கு ஹையர் கிரேடு ஆசிரியர் சம்பளமும், உயர் நிலைப் பள்ளிகளில் பணியாற்றினால் மட்டும் செகண்டரி



1981 ஏப்ரல் 27] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

கிரேடு ஆசிரியர்கள் சம்பளமும் கொடுக்கப்படுகின்றது. அவர்கள் ஒரே தகுதியைப் பெற்று, ஒரே பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு இரு வேறு வகையில் ஊதியம் வழங்கப்படுவது எந்த வகையிலும் நியாயமில்லை என்றோம். அதையும் பரிசீலிப்பதாக அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். எனவே அதையும் செய்துதர வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்றப் பேரவையில், உயர் நிலைப் பள்ளிகள மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு மற்றுமோர் உதவி ஆசிரியருக்கு சட்டிய விடுப்பு சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

அவர்களுக்கு, நான்-வெகேஷன் டிபார்ட்மெண்ட் போல் விடுப்பு அளிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இதையே தொடக்க மற்றும் நடு நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தலைமை ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பல்வேறு நல்ல காரியங்களை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதற்காகவும் வேறு சில சலுகைகளை நாளைய தினம் அறிவிக்கப் போகிறார்கள் என்ற நல்ல நம்பிக்கையிலும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அகவிலைப் படி உயர்வைப்பற்றி ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அடுத்த அகவிலைப் படி உயர்வு அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இப்போது இல்லை என்று சொல்லப்படுகிறது. மத்திய அரசு எப்போதெல்லாம் அகவிலைப் படி உயர்வை வழங்குகிறதோ அப்போதெல்லாம் மாநில அரசும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு ஏற்கெனவே ஏற்றுக்கொண்டிருக்கிறது. இப்போது கால தாமதத்தோடு வழங்கப்பட்டு வருகிறது. 1—9—1980-லும், 1—12—1980-லும் மற்றும் 1—2—1981-லும் அகவிலைப் படி உயர்வு வழங்க மத்திய அரசு ஒப்புக் கொண்டு முதல் இரண்டு தேதிகளுக்கு ஏற்கெனவே வழங்கிவிட்டது. ஆனால் நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஒரு அகவிலைப்படி உயர்வு மட்டுமே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும்கூட மூன்று மாதத்திற்குப் பிறகுதான் வழங்கப்பட்டுள்ளது. எனவே மூன்று மாதத்திற்கு முன்பிருந்தே அது வழங்கப்பட வேண்டும் என்றும், மற்ற அகவிலைப் படி உயர்வு அந்தந்தத் தேதிகளிலிருந்தே வழங்கப்பட வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம் ] [1981 ஏப்ரல் 27

பல பிரச்சினைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுமுகமாக முடித்து வைத்திருக்கிறார்கள். ஆனால் ஒன்றிரண்டு சின்னச சின்னப் பிரச்சினைகள் பாக்கி இருக்கின்றன. அவைகளையும் அமைச்சர் அவர்கள் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற ஆசிரியர்கள் நிபந்தனையின்றி வெளியே அனுப்பப்பட்டார்கள். அப்படித் திரும்பிச் சென்றவர்கள் பணியில் சேர்நதிட சில இடங்களில் அனுமதிக்கப்படவில்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. அரசைப் பொறுத்த வரையில், அந்த ஆசிரியர்களை நிபந்தனையின்றி வெளிவிட்டதற்காக நான் பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக தண்டனை இல்லை என்றும், அரசின் சார்பில் அறிவித்த பிறகும், அதுபற்றிய சுற்றறிக்கை கல்வி இலாக்காவிலிருந்து செல்லாத காரணத்தால், தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு ஆணையாளர் ஒரு ஆசிரியரைப் பணியில் சேர்க்க அனுமதி மறுத்திருக்கிறார். நான் அவரோடு தொடர்புகொண்டு அத்தகைய ஆணை அரசிலிருந்து விரைவில் வரும் என்று சொல்லியிருக்கிறேன். அதைப்போலவே முகவை மாவட்டத்தில் வத்திராயிருப்பு என்ற ஊரில் தனியார் பள்ளி ஒன்றில் பணியாற்றும் ஆசிரியர் மன்றத் தலைவர் சிறையிலிருந்து திரும்பப் பணியில் சேரச் சென்றபோது அனுமதிக்கப்படவில்லை. இதற்கெல்லாம் காரணம் கல்வித் துறையிலிருந்து உரிய விளக்கம் அவர்களுக்கு அனுப்பப்படாததாகும். அப்படிப்பட்ட விளக்கத்தை கல்வித் துறை உடனடியாக அனுப்ப வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் நான்கு உறுப்பினர்கள் பேச வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும்

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் 15 நிமிடங்களாகத்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். எனக்கு முன்னே பேசிய உறுப்பினர்கள் அரை மணி நேரம் பேசியிருக்கிறார்கள். இது கல்விப் பிரச்சினை. ஆசிரியர் பிரதிநிதியான நானும் சிறிது நேரம் பேச அனுமதிக்க வேண்டும். குறைந்தபட்சம் கல்வி மானியத்தின் மீது பேசுவதற்கு அதிக நேரம் தேவைப்படுவதால், இன்னும் ஒரு அரை நாள் இதற்காக ஒதுக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதை அவையின் அலுவல் ஆய்வுக் குழு தீர்ணயிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மற்றவர்கள் அரை மணி நேரம் பேசியிருக்கிறார்கள். எனவே நானும் அரை மணி நேரம் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும்.



1981 ஏப்ரல் 27]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் என்ன சொல்கிறார்? ஏற்கெனவே 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஐந்து நிமிடம் பேசினால் 20 நிமிடங்கள் முடிந்துவிடும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** விரைவில் முடித்துக்கொள்கிறேன். ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னார்கள்.

(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** என்ன சொன்னீர்கள் ?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இதற்கு முன்னாலே பேசியவர்கள் அரை மணி நேரம் கூட பேசியிருக்கிறார்கள் என்பதைத் தலைவர் அவர்களுக்குக் கவனப் படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் ஐந்து நிமிடங்கள் பேசினால் 20 நிமிடங்கள் ஆகிவிடும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இந்தக் கல்விக் குறிப்பிலேகூட சொல்லப் பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதத்தைப் பற்றி எனக்கு முன்னாலே பேசியவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். இதிலேகூட ஒரு விஷயம் சொல்கிறேன். ஆரம்பப் பள்ளியிலே 1 : 40 என்று இருக்கிறது. இடை நிலைப் பள்ளியிலே 1 : 36, உயர் நிலைப் பள்ளியிலே 1 : 27, மேல் நிலைப் பள்ளியிலே 1 : 23 என்று இருக்கிறது. அதாவது மேலே போகப்போக குறைந்துகொண்டு போகிறது. லெக்சர் முறையிலே போதிக்கின்ற ஆசிரியர்கள் எத்தனை மாணவர்களை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். அடிப்படைக் கல்விதான் மிக முக்கியமானது. அடிப்படையிலே சிறந்த போதனை செய்யாமல் விட்டால், தொடக்கப் பள்ளியிலே செய்யாமல் விட்டால், அது சரியாக இருக்காது. அடிப்படையிலே அடி மட்டத்திலே இருக்கக்கூடிய கல்வி நிறுவனங்களில்தான் ஆழமான கல்வி இருக்க வேண்டும். அவர்கள் ஒவ்வொரு மாணவனுடைய கவனத்தைத் திருப்பி சொல்லிக்கொடுக்க முடியும். மாணவர்களுடைய விஷமத்தை அடக்கி அவர்களுடைய கவனத்தைத் திருப்பி, பாடத்தைப் போதிக்க முடியும். அப்போது மாணவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்த முடியும் என்பது உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். மேல் நிலைப் பள்ளிகளிலே ஓர் ஆசிரியருக்கு 23 மாணவர்கள், உயர் நிலைப் பள்ளிகளிலே ஓர் ஆசிரியருக்கு 27 மாணவர்கள், இடை நிலைப் பள்ளிகளிலே ஓர் ஆசிரியருக்கு 36 மாணவர்கள், அதே நேரத்தில் தொடக்கப் பள்ளிகளில் ஓர் ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்றால், எப்படி கல்வித் தரத்தை அவர்களால் உயர்த்த முடியும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்

பற்றி நான் ஏற்கெனவே அவையிலே குறிப்பிட்டிருக்கிறேன். முன்னாள் கல்வித் துறை இயக்குநர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் ரஷியாவிற்குச் சென்ற காலத்திலே அவர்கள் ஒரு பள்ளியிலே நுழைந்தபோது, அங்கு 70 ஆசிரியர்கள் 700 மாணவர்களுக்குப் பாடம் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். அதை நான் இங்கே எடுத்துப் பேசியிருக்கிறேன். ஓர் ஆசிரியருக்கு 10 மாணவர்கள் என்ற அளவில் மேலைநாடுகளிலே வைத்திருக்கிறார்கள். அதனால்தான் அங்கே மாணவர்களுடைய கல்வித் தரம் முன்னேற்றமடைய வாய்ப்பு இருக்கிறது. நல்ல முறையிலே அங்கே கல்வியைப் போதிக்க முடிகிறது. ஆகவே ஆசிரியர் மாணவர் விகிதம் நம் நாட்டிலே ஓர் ஆசிரியருக்கு 20 பேர்களுக்கு மேலே இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இதைச் செயல்படுத்தினால், வேலையில்லாத் திண்டாட்டத்தை நாம் நீக்க முடியும் என்பதாலே இந்த நேரத்திலே இதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள் நடத்தியதன் மூலமாக 19.23 கோடி ரூபாய் வருவாய் வந்திருப்பதாக இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை நடத்தியது தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள். இப்படி மேல் நிலைப் பள்ளிகளிலே, உயர் நிலைப் பள்ளிகளிலே நடக்கவில்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாகத்தான் நடந்திருக்கின்றன. ஆனால் பொதுவாக தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அவ்வளவு தொகையைத் திரட்டித் தந்திருக்கிறார்கள். அப்படித் தருகின்ற தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மாணவர்களுடைய விகிதத்தைக் குறைக்கக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். உயர் நிலைப் பள்ளிகளிலே கூட இப்படி பள்ளிச் சீரமைப்பு மகாநாடு நடத்துவதற்குரிய நடைமுறைகளைக் கொண்டுவந்தால், சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லா இடை நிலைப் பள்ளிகளிலும் தமிழாசிரியர்களையும், உடல்நலப் பயிற்சி ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். பல தமிழாசிரியர் படிப்பு படித்துவிட்டு இருக்கிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை. அப்படியே அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். உடல் நலப் பயிற்சி ஆசிரியர்கள் எங்கெங்கு இருக்கின்றார்களோ, அந்த நடுநிலைப் பள்ளிகளில் உடல்நலத் தேர்வுகள் நடத்துவதாக இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி உடல்நலப் பயிற்சி ஆசிரியர்கள் இல்லாத பள்ளிகளில் அது தேர்வுப் பாடமாக இருக்காது என்று சொல்லியிருக்கிறார்கள். இது இரட்டை நிலை. ஆக மொத்தத்தில் அது தேர்வுக்குரிய பாடமாக வரவேண்டும். எனவே உடல்நலப் பயிற்சி ஆசிரியர்களை எல்லா நடுநிலைப் பள்ளிகளிலும் போட வேண்டும் என்பதில்





தாமதம் கூடாது. அந்தத் தாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். எல்லாப் பள்ளிகளிலும் உடல் நலப் பயிற்சி ஆசிரியர்கள் போடப்பட வேண்டுமென்று மீண்டும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

மதிய உணவுத் திட்டம்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே கொண்டுவரப்பட்ட ஒரு திட்டம் இது. அது மிகச்சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. அதற்குப் பின்னால் சென்ற அரசில் மதிய உணவுக்குத் தொகையை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு உயர்த்தப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. 10 காசு அரசு மானியம் என்றும், 5 காசு உள்ளாட்சித் துறை மானியமாகவும் சேர்ந்து 15 பைசா என்றுதான் இருக்கிறது. இது ஒரு விந்தையான ஆச்சரியமான அளவில் இருக்கிறது. இப்படி குறைவான தொகையை வைத்துக்கொண்டு அந்தத் திட்டத்தை நடத்தி பள்ளிகளிலே மதிய உணவு அளித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மானியத்தை ஒரு 40 காசு அளவுக்காவது மாற்ற வேண்டும். குறைந்தது 25 பைசா அளவுக்காவது இப்போது உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம் நாடு ஏழைகள் மிகுந்த நாடு. கல்வி போதிக்கின்ற நாட்களிலே ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு போடப்படுகிறது. அவர்களுக்கு கோடைக்காலத்தில் போடப்படுவதில்லை. அந்த விடுமுறைக் காலங்களிலே அவர்கள் பட்டினி கிடக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட கோடைக் காலத்திலேயும் அவர்களுக்கு பள்ளிகளிலே மதிய உணவு வழங்கக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதிய உணவு சமையல் கூடம் சில மாவட்டங்களில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வேன் மூலம், சைக்கிள் மூலம், வண்டி மூலம் சப்ளை செய்கிறார்கள். இது ஒரு நல்ல ஏற்பாடு. காலத்திலே கிடைக்கின்ற அளவுக்கு பணிகளைச் செய்கிறார்கள். மத்திய அரசு இதற்குத் தடையாக இருந்தாலும், அதிலே மாறுதலைச் செய்து எந்த வகையிலாவது நம் நாட்டிலே, நம் மாநிலமே அதை ஏற்றுச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எல்லா மாவட்டங்களிலும் அத்திட்டத்தை விரிவாக்க கேட்டுக்கொள்கிறேன்.

எட்டாவது வகுப்பை உயர் நிலைப் பள்ளிக்குக் கொண்டு போவதைப் பற்றி அபிப்பிராய பேதங்கள் இருப்பது நன்றாகத் தெரியும். இதிலே இரண்டொரு கருத்துக்களைச் சொல்கிறேன். இப்போது நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உயர் நிலைப் பள்ளிகளில் பணிபுரிகின்ற இடைநிலை ஆசிரியர்கள் தொடக்கப் பள்ளி இடைநிலை ஆசிரியர்களை விட குறைந்த ஊதியம் பெறுகிறார்கள். அதையே சமப்படுத்தக்கூட நம்மால் முடியவில்லை. அதே நேரத்திலே 1—4—1971 லேயிருந்து பட்ட

தாரி ஆசிரியர்களுக்கு நாம் தேர்வு நிலை வழங்கிவிட்டு இடைநிலை ஆசிரியருக்கு 1—4—1974 லேயிருந்து என்று அதிலேயும் தாமதம் காட்டியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் அந்த இடை நிலை ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலை கொடுப்பது என்றால், 1—4—1984 லேதான் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலேயும் இடைநிலை ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் இந்த எட்டாவது வகுப்பு உயர்நிலைப்பள்ளிகட்குப் போவதாலேயும் பாதிக்கப்படுகிறார்கள். அது உயர் நிலைப் பள்ளிக்குச் செல்வதாலே, அங்கேயுள்ள உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இங்கே வருவதால், இடை நிலைப் பள்ளி ஆசிரியர்கள் வேலை இழப்புக்கு ஆளாவார்கள். அவர்கள் பணிக்குப் பாதுகாப்பு கொடுத்தாலும் கூட, ஏற்கெனவே படித்துவிட்டு இருக்கின்ற 40 ஆயிரம் பேர்கள் இந்தத் தலைமுறையில் வேலை கிடைக்காத நிலைமைக்கு ஆளாகிவிடுவார்கள். இதையும் நாம் கவனத்திலே கொண்டு பார்க்க வேண்டும். பொதுமக்கள் கண்ணோட்டத்தில் சொல்ல வேண்டுமென்றால், இதுவரையிலே 8-வது தொடக்கப் பள்ளியிலே இருந்தது. அதை இனி சுருக்கி 7-வது என்று வைத்தால், உயர் நிலைப் பள்ளிக்குத் தூரமாக இருக்கின்றது என்று சொல்லி, கிராமப்புறத்திலே உள்ள மாணவர்கள் தங்கள் கல்வியை 7-வது வகுப்புடன் முடித்துக்கொள்ளக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இதனால் கிராமப்புற மக்களும் பாதிக்கப் படுகின்ற நிலைமைகள் ஏற்படும். பட்டதாரி ஆசிரியர்களை நடுநிலைப் பள்ளிகளிலே நியமிக்க வேண்டும். அங்கே வேண்டிய மற்ற வசதிகளையும் நாம் ஏற்படுத்த வேண்டும். அதைச் செய்யவேண்டுமே தவிர, உயர் நிலைப் பள்ளிகளுக்கு அவ் வகுப்பைக் கொண்டு செல்லக்கூடாது என்ற எண்ணத்தை நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன். அதைப்பற்றி அனைத்து ஆசிரியர்கள் சங்கங்களையும் அழைத்து வைத்துப் பேசவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறுபான்மையினர் பள்ளிகளைப்பற்றி நான் நிறைய பேசியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதிலே நடைபெறுகின்ற அக்கிரமங்களைத் தடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு இருக்கின்றார்கள். அது நமக்குத் தெரியும். என்றாலும்கூட இதிலே ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பீகார் மாநிலத்திலே சிறுபான்மையினர் பள்ளிகள் உட்பட எல்லாப் பள்ளிகளையும் அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கே என்ன சொல்லிச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், மதக்கல்வி போதனையிலே குறுக்கிடக்கூடாது என்பதுதான். அரசியல் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அப்படி பாட நேரத்தில் போக, பள்ளிப் பாட நேரத்திற்கு முன்பாக அல்லது பின்போ பிறகோ இந்த மத சம்பந்தமாக எது வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். அதை ஆட்சேபிக்கவில்லை.





ஆக மற்ற நேரங்களில் கல்வி இலாகா என்ன ஆணை பிறப்பிக்கின்றதோ அதைத்தான் செயல்படுத்த வேண்டும் என்ற வகையிலே வற்புறுத்தி நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகத் தகவல வந்திருக்கிறது. அது உண்மை தானா என்பதைப்பற்றி கல்வி துறை அறிந்து அதைச் செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு, எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி கைத்தறிக் கடன், சைக்கிள் கடன், காது கேட்கும் கருவி, கண்ணாடி வாங்கும் கடன் ஆகியவற்றை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் திருமணக் கடன் வழங்கவில்லை. அதிலே கூட ரூ. 500 அளவுக்குத் தான் பெறக்கூடிய நிலையிருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு ரூ. 2,000, ரூ. 3,000 என்று பெறக்கூடிய நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருமண விஷயத்தோடு முடித்தால், மங்களகரமாக இருக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அதே நிலையை தனியார் பள்ளியாசிரியர்களுக்கும் விரிவாக்கி அரசே வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அடுத்து எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று சொல்கிறோம். அதன்படி காரியங்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இத்துடன் அங்கத்தினர் அவர்கள் பேச்சை முடித்தால், எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தகுதி அடிப்படையிலே தமிழாசிரியர்களைத் தலைமையாசிரியர்கள் பதவிக்கு மாற்றுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுபோலவே உடல்நலப் பயிற்சி ஆசிரியர்களுக்கும் அப்பதவி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய அங்கத்தினர் அவர்கள் அந்த அறிவிப்பு எதுவும் இல்லாததுபோல பேசினார்கள். அதிலே சில சிக்கல்கள் இருப்பதாகக் கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதையும் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, இன்னொன்றைச் சொல்கிறேன். தமிழை வளர்ப்பதற்காக தமிழ் மொழியை மேலும் வளர்ப்பதற்காக, தேவநேய பாவாணர் அவர்கள் தலைமையில் ஒரு அகர முதலி வெளியிட அரசு ஏற்பாடு செய்தது. அந்த அகர முதலி முதல் தொகுதியே முற்றுப் பெறாமல் இருக்கிறது. அது வெளியிடப்படுவதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டும். இதில் நான் சொல்வது என்னவென்றால், மலையாள மொழியில் அப்படிச் செய்வதற்காக ஒரு திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்கு அமைக்கப்பட்டிருக்கின்ற துறை

நிலையான ஒரு துறையாக இயங்கிக்கொண்டிருக்கிறது. அப்படிச் செய்தால் தான், அது சிறந்த முறையிலே வளர்ச்சியடைவதற்கு வாய்ப்பு இருக்கும். அது பெர்மெனன்ட் டிபார்ட்மென்ட்டாக இருக்க வேண்டும். ஏன் என்றால் அப்போதுதான் நாள்தோறும் பெருகிவரும் புதிய வார்த்தைகளை அவ்வப்போது சேர்த்துக்கொள்ள முடியும். முழுபொருள் வளரக்கூடிய அளவில் இருக்கும் கருத்தில் சொல்கிறேன். அதை ஒரு பெர்மனென்ட் துறையாக மாற்ற வேண்டும். பிரஞ்சு நாட்டிலே டிகாலே காலத்திலே, அவர்கள் சொற்களைப் படைக்க, தனிக் குழுவாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களின் அகர முதலி 18 வால்யும்கள் வந்திருக்கின்றன. நாம் வெளியிடுகின்ற அகர முதலி ஒரு வால்யூம் அளவுக்குக்கூட முற்றுப்பெறாமல் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அங்கத்தினர் அவர்களுக்கும் அரை மணி நேரம் ஆகிவிட்டது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இந்த அகர முதலி அலுவலகத்திற்குத் தரப்பட்டிருக்கின்ற இடம் ஒரு குதிரைக் கொட்டகை போல் இருக்கிறது. மிகவும் குறுகிய இடமாக அது இருக்கிறது. அந்த இடத்தை மாற்றி வசதியான இடம் தர வேண்டும். ஆர்ட்ஸ் கேலரியில் கலைக் கூட இணைப்புக் கட்டிடத்தில் கட்டிடம் கட்டுவதாக கேள்விப்படுகிறோம். அதிலே ஒரு 3000 சதுர அடி இதற்கான இடம் ஒதுக்கீடு செய்யலாம். குழந்தைகளுக்காக அருங்காட்சியகம் என்று அரசு ஏற்பாடு செய்கிறது. அதிலேயாவது இடம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களுடைய ஆணைக்கிணங்க **விரை**விலே முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் : மணி அடித்ததும் முடிக்காமல் இருந்தால் என்ன அர்த்தம்?**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, நீங்கள் 15 நிமிடங்கள் பேச அனுமதித்தீர்கள். 20 நிமிடங்கள் பேச அனுமதிக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் கேட்டார்கள். ஆனால் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அரை மணி நேரம் பேசியிருக்கிறார்கள். நான் பேசும்போதுமட்டும்தான் இந்த நெருக்கடி காலம்காலமாக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்களின் பேச்சை முடிக்க வைக்க வேண்டுமென்று நான் வரவில்லை. தற்செயலாகத் தான் நான் வந்தேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அது என்னுடைய நல்ல காலம். மதுரையிலே ஒரு பள்ளியிலே நடந்ததைப்பற்றி நேற்றைய முன்தினம் ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ஆளுகையில் இயங்கும் நிறுவனமான அவ்வை இல்லத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியிலோ, அதற்குப் பக்கத்திலே நடந்த ஒரு நிகழ்ச்சியிலோ மாண்புமிகு முதல்வரவர்கள், கல்விக் கூடங்களை எந்தக் காரணத்தை முன்னிட்டும் அப்புறப்படுத்தக்கூடாதென்று பேசியிருப்பதாக நான் படித்திருக்கிறேன். மதுரையிலே ஒரு பள்ளி 1953-லே இருந்து நடத்தப்படுகிறது. அந்தப் பள்ளி 19 செண்ட்டிலே நடந்துகொண்டிருந்தது. அந்த இடத்திற்குப் பக்கத்திலேயுள்ள 11 சென்ட் நிலத்தை காலி செய்ய வேண்டுமென்று எவிக்ஷன் ஆர்டர் வாங்கிவந்திருக்கிறார்கள். கல்வி அமைச்சரவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு பதிலளித்த போது பல விவரங்களைச் சொன்னார்கள். இரண்டு போலீஸ்காரர்கள் போனார்கள், அவர்களுடன் 200 பேர்கள் அடி ஆட்கள் போனார்கள், பயங்கர ஆயுதங்களைக் கொண்டு போனார்கள்—இதையெல்லாம் சொன்னார்கள். அந்தக் கட்டிடத்தைத் தகர்க்க வந்தவர்கள், வழக்குமன்ற ஆணைக்குப் புறம்பாக பள்ளிக்கூடம் முழுவதையும் அடித்து நொறுக்கி, அங்கே இருக்கிற ஆசிரியர் இல்லத்தையும் நொறுக்கி, தரை மட்டமாக்கியிருக்கிறார்கள். அங்கு, ஏறத்தாழ 3 லட்சம் ரூபாய் அளவிற்கு கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது. கல்வி அமைச்சரவர்கள், பள்ளி நடத்த ஆவன செய்யப்படுமென்று சொன்னார்கள். பள்ளிக்கூடம் தரை மட்டமாக்கப்பட்டு, 3 லட்சம் ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர், அங்கே இருக்கிற காவல் துறையிடம் புகார் கொடுத்தார். காவல் துறையினர், சொல்லத் தகாத வார்த்தைகளைச் சொல்லி அவர்களை மிரட்டியிருக்கிறார்கள்.

(தலைவர் மணியடித்தார்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அடுத்துப் பேச இருக்கும் உறுப்பினரின் பெயரைக் கூப்பிடத்தான் வேண்டும். வேறு வழியில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே. நான் தனித்த முறையிலே சலுகைகளைக் கேட்கவில்லை. மற்ற உறுப்பினர்களுக்குத் தந்த சலுகையைத் தாருங்களென்றுதான் கேட்கிறேன்.

[1981 ஏப்ரல் 27

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேச ஆரம்பித்து 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் முடிக்கவில்லை என்றால் எப்படி ? நான் இல்லாத நேரத்தில் நடந்தவைகளுக்கு நான் பதில் சொல்ல முடியாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** காவல் துறையினர் அதற்குரிய நடவடிக்கை எடுக்கவில்லை. காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல, அங்கே உள்ளவர்களைத் தரக் குறைவாகப் பேசியதோடு மட்டுமல்ல, கொள்ளையடித்தவர்களின் கட்சிக்கு அதாவது ஆளும் கட்சிக்கு ஆள் சேர்க்கும் விதத்திலே, செட்டியார் காலிலே போய் விழு, அவர் கட்சியில் சேர் என்ற முறையிலே மிரட்டியிருக்கிறார்கள். கல்வி இலாக்கா மட்டும் நடவடிக்கைகளை எடுத்துப் பிரயோசனமில்லை. காவல் துறையினரும் இதில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சரவர்கள் மூலமாக மாண்புமிகு முதல்வரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இங்கே பல்வேறு விஷயங்களைத் தெரிவிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** (மணி அடித்து) அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. இராமலிங்கம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, நான் தங்களைக் குறை சொல்லவில்லை. இங்கே எல்லா உறுப்பினர்களும் சமம் என்று சொல்லப் படுகிறது. ஆனால் மற்ற உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப்படும் நேரம் எனக்கு அனுமதிக்கப்படவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மற்றவர்கள் எவ்வளவு நேரம் அனுமதிக் கப்பட்டிருக்கிறார்களோ அவ்வளவு நேரம் மாண்புமிகு உறுப்பினரவர்களும் பேசியிருக்கிறார்கள். அது குறிப்பில் இருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஒவ்வொருவரும் எவ்வளவு நேரம் பேசியிருக் கிறார்கள் என்று குறித்து வைத்திருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் 11.53க்கு பேச ஆரம்பித்தார்கள். இப்போது 12.25. தலைவர் அனுமதிக்கவில்லை, அனுமதிக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுவதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள். நேரத்தைக் கட்டுப்படுத்திதான் அவையை நடத்த வேண்டும். தலைவர் மணி அடித்தவுடன் உட்காரவில்லை என்றால், தலைவரை மீறுகிறார்கள் என்றுதான் பொருள். அப்படிச் செய்தால், அடுத்த வரைக் கூப்பிட நீண்ட நேரமாகாது.



1981 ஏப்ரல் 27]

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நர்சரிப் பள்ளிகளில் கட்டாயம் தமிழ் போத னைப் பாடமாக இருக்க வேண்டும். அது மாத்திரமல்லாமல் அங்கே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும். பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக் கான ஊதியத்தை அந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும். தொடக்கப் பள்ளிகளுக்குத் துணையாக நர்சரிப் பள்ளிகளை, 'பீடர்' பள்ளிகளை அரசே தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அங்கு ஏற்கெனவே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி அளித்து, அவர்களுக்கு வேலை இழப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கிராமங்களிலுள்ள குழந்தைகள் பாதுகாப்பகங்களை நர்சரிப் பள்ளிகளாக கன்வெர்ட் செய்துவிடலாம். அங்கே 90 ரூபாய், 115 ரூபாய் என்று குறைந்த ஊதியம் வாங்குவதால், அவர்கள் இன்று மறியல் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஆசிரியர்களாக மாற்றி, அந்தப் பள்ளி களை நர்சரிப் பள்ளிகளாக மாற்றி அரசே ஏற்க வேண்டுமென்று தெரிவித்து, தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

* **திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு தலைவரவர்களே, கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய புரட்சித் தலைவரவர்களுடைய அரசு கிட்டத்தட்ட 249 கோடி ரூபாயை கல்விக்காகச் செலவிட முன் வந்திருப்பதைப்பற்றி என்னைப் போன்ற ஏழை மக்கள், பாட் டாளி மக்களெல்லாம் பெரிதும் பாராட்டுகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது பாட்டாளி மக்கள் பேச வேண்டியது ரொம்ப அவசியம்தான். இருந்தாலும், சுருக்கமாக முடிக்க வேண்டும்.

**திரு. சி. இராமலிங்கம் :** கிராமப் பகுதிகளிலே உள்ள பள்ளிகளை நினைக்கும்போது, அங்கே எங்களுடைய பிள்ளைகள் சரியான முறையிலே கல்வி பெற முடியாமல் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், மாதந்தோறும் ஆசிரியர் போராட்டம் என்றும், ஆசிரியர்களின் கோரிக்கைகள் என்றும் ஆங்காங்கே ஆசிரியர்கள் கிளர்ச்சி செய்வதால், பிள்ளைகள் அதைப் பார்த்துவிட்டு, நாமும் ஏன் போராட்டம் செய்யக் கூடாதென்று நினைத்து பள்ளிக்குச் செல்லாமல் இருக்கிறார்கள். அதனால் மேல் நிலைப் பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகள், இன்றைக்கு ஆசிரியர்களைப் பார்த்து, பல நல்ல பழக்க வழக்கங்களைப் பெற்று வருகிறார்கள். ஆசிரியர் களுக்கும், மாணவர்களுக்கும் இன்றைக்கு வித்தியாசம் தெரியாமல் இருக்

கிறது. பள்ளிக்கூடங்களுக்கு மாணவர்கள் சீருடையோடு வருகிறார்கள். அதைப்போல ஆசிரியர்கள் சீருடையோடு வரக்கூடாதா என்று கேட்டபோது, சீருடை அணிந்து வர வேண்டுமென்ற முறை இருக்கிறது, ஆனால் பள்ளிக்கூட மாணவர்களுக்கு இருக்கின்ற சீருடையைப் போல ஆசிரியர்கள் அணிந்து வருவதில்லை என்று தெரிந்தது. ஏன் அவர்களை சீருடை அணிந்து வர வேண்டுமென்று கட்டாயப்படுத்தக் கூடாதா என்று அறிய விரும்புகிறேன். மேல் நிலைப் பள்ளி மாணவர்களையும், ஆசிரியர்களையும் பார்க்கும்போது வித்தியாசம் தெரியவில்லை. மாணவர்கள் 'ஸ்லாக்' அணிகிறார்கள். ஆசிரியர்கள் 'பத்திக்' சட்டை அணிகிறார்கள். மாணவர்கள் 'பெல்-பாட்டம்' பேன்ட் போடுகிறார்கள். ஆசிரியர்களும் போடுகிறார்கள். வித்தியாசமே தெரிவதில்லை. ஒரு பள்ளி விழாவிற்கு என்னை அழைத்திருந்தார்கள். நான் போயிருந்தேன். 'என்னடா தம்பி நல்லா படிக்கிறயா' என்று ஒரு ஆசிரியரைப் பார்த்து நான் கேட்டுவிட்டேன். அவர் நான் மாணவரில்லை. ஆசிரியர் என்று சொன்னார். எனக்கு வருத்தமாகி விட்டது.

திரு. ம. சங்கரலிங்கம் : சட்டசபை உறுப்பினர்களுக்கு அவர்கள் பெயரைப் போட்டு, 'ஐடென்டிடி கார்ட்' கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது அவர்களே மறுக்கிறார்கள். ஏன் ஆசிரியர்களைப் போய் போலீஸ் போன்று டிரஸ் போட வேண்டுமென்று உறுப்பினரவர்கள் சொல்லுகிறார்கள் ?

திரு. சி. இராமலிங்கம் : பேராசிரியரும், கல்லூரி முதல்வருமான எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஒரு சந்தேகத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பேருந்திலே வருகிறவர் கண்டக்டர், காவல் புரிகிறவர் போலீஸ்காரர். ஆனால், அறிவுக் கண்ணைத் திறக்கக்கூடிய கடவுள் என்று ஆசிரியர்களை நினைக்கிறோம். அந்தக் கடவுள் எப்படி இருக்க வேண்டுமென்று மாணவன் கற்பனை செய்கிறான். ஆசிரியரைப் பார்க்கும்போது மாணவனுக்கு அன்பு வர வேண்டும், பக்தி வர வேண்டும். அவனுக்கு அருவருப்பு தரக்கூடாது முன்ப குருகுலம் என்று வைத்து, கல்வி போதித்தார்கள். அந்த நிலைமைகள் ஏன் இப்போது வரக்கூடாது ? ஆசிரியரைப் பார்த்து பக்தி வரவில்லை என்றால், அன்பு வரவில்லை. அதனால் அவனுக்குப் படிப்பும் வரவில்லை. எனக்குச் சரியாக ஆங்கிலம் தெரியாது. எனவே என்னுடைய பிள்ளைகளுக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க முடியவில்லை. அவனை டியூஷனுக்கு அனுப்ப வசதி கிடையாது. அவன் பள்ளியில் சொல்லிக் கொடுப்பதை வைத்துத் தான் படித்து முன்னேற வேண்டும். தற்போதுள்ள பள்ளிகளின் நிலைமை சரியாக இல்லை. இந்த நிலையில், வெள்ளைக்காரன் காலத்தைப் பற்றிச் சொல்கிறேன் என்று யாரும் தப்பாக நினைக்கக்கூடாது. டர்பன்





கட்டிக்கொண்டு, கோட்டு போட்டுக்கொண்டு, பஞ்ச கச்சம் வைத்துக கட்டிக்கொண்டு ஆசிரியர்கள் வருவார்கள். அவர்களைப் பார்க்கும்போது பக்தி வரும். அவர்கள் திருநீறு இட்டிருப்பார்கள் அல்லது நாமம் போட்டிருப்பார்கள். அவர்களைப் பார்த்தவுடன் குரு பக்தி பிள்ளைகளுக்கு வரும்.

(பிற்பகல் 12-30)

அந்த நிலையை மீண்டும் தமிழகத்திலே கொண்டு வர வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் நேரம் பிற்பகல் 1 மணி வரை நீட்டிக்கப்படுகிறது.

(திரு. இராமமூர்த்தி இருக்கையிலிருந்து எழுந்தார்)

திரு. சி. இராமலிங்கம் : நான் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கிடுவதை நான் விரும்பவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 1 மணி வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது என்றால், அது வரை உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்க வேண்டும் என்பது அல்ல பொருள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மற்றவர்கள் குறுக்கிடாத வகையில் பேசி சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. சி. இராமலிங்கம் : நான் பிள்ளைகளின் பெற்றோர், தகப்பன் என்கிற நிலையில் இங்கே பேசிக்கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இங்கே இருக்கிற எல்லோருமே பிள்ளைகளைப் பெற்ற தகப்பன்மார் தான்.

திரு. சி. இராமலிங்கம் : பிள்ளைகளின் எதிர்காலத்தைப்பற்றியதாக இருக்கிறது என்பதால் தான், நான் இப்படிப் பேசுகிறேன். ஆசிரியர்கள் நல்லபடியாக, சீருடையில் ஒழுங்காக வந்தால் தான், பார்க்கின்ற மாணவர்களுக்கு அவர்கள் மீது பக்தியும் மதிப்பும் ஏற்படும். ஏன் தமிழகத்திலே உள்ள ஆசிரியர்களிடத்தில் இதைக் கொண்டு வரக்கூடாது ? ஆசிரியர்கள் யார், மாணவர்கள் யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. இப்போது வித்தியாசம் வெளியே தெரியாமல் இருக்கிறது. அதற்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னதைப் போல், போலீஸ்காரர்களைப் போல் சீருடை ஆசிரியர்கள் அணிய வேண்டுமென்று சொல்லவே இல்லை. அவர்களுடைய கல்லூரியிலே நாம் சென்று பார்க்கின்றபோது, அவர் எப்படி கல்லூரிக்கு அழகாக மாணவர்களுக்கு பக்தி ஏற்படும் வகையில் வருகிறார் என்பதை நாம் பார்க்க முடியும். ஆசிரியர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே,

மாணவர்களுக்கு பக்தி ஏற்படும் வகையில் ஆசிரியர்கள் இருக்கவேண்டும். இன்றையதினம் உயர் நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால், அப்படி இல்லை. ஆசிரியர்களிடத்தில் மாணவர்களுக்கு பக்தி ஏற்படும் வகையில் சமுதாயத்தை நாம் மாற்றியாக வேண்டும். மாணவர்களைச் சீர்திருத்த வேண்டுமென்ற அடிப்படையில் இருபபவை தான் பள்ளிக்கூடங்கள். அங்கே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களே சரியாக, அழகாகப் போகாவிட்டால், அங்குள்ள மாணவர்களுக்கு அந்த ஆசிரியர்கள் மீது எப்படி பக்தி வரும்? இத்தோடு அந்தப் பிரச்சினையை விட்டுவிடுகிறேன். அருள்கூர்நது ஆசிரியர்கள் ஆசிரியர்களாக இருக்க வேண்டும். ஆசிரியர்களை நான் கடவுள்கள் என்று சொல்லமாட்டேன். ஆண்டவன் அளவுக்கு நான் ஆசிரியர்களை வைக்கவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்பொழுது தான் சொன்னார்கள். அதற்குள் வாபஸ் வாங்கிவிட்டார்களே! (சிரிப்பு)

திரு. சி. இராமலிங்கம் : சில ஆசிரியர்களே அந்தக் கருத்தை ஒப்புக்கொள்ளும் விதத்தில் நடக்கவில்லை. நானே நேரில் ஒரு சம்பவத்தின் மூலம் தெரிந்துகொண்டேன். நாங்களும் கல்யாணம் பண்ணி ' குழந்தைகளைப் பெற்றிருக்கிறோம், எங்களுக்கும் குடும்பம் இருக்கிறது என்று ஒரு கூட்டத்திலேயே சொன்னார்கள். ஆகவே நான் இந்த நேரத்தில் 'நீங்கள் பெறுகின்ற ஊதியத்திற்கு ஏற்றபடி குழந்தைகளுக்கு கல்வியைக் கற்றுக் கொடுங்கள்' என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு கிராமங்களில் மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. "நான் கட்டிடம் கட்ட நன்கொடை கொடுக்கிறேன், என் பெயரைக் கட்டடத்தில் பொறியுங்கள்" என்று கேட்கிறார்கள். அப்படி யார் கட்டிடம் கட்ட, நன்கொடை வழங்க முன்வருகிறார்களோ அவர்களுடைய நன்கொடையைப் பயன்படுத்தி அவர்களுடைய பெயரை அக்கட்டிடத்திற்குப் பொறிக்க அனுமதிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த எண்ணத்தை ஏற்பதுபற்றி அரசு பரிசீலிக்க வேண்டும். பல பள்ளிகளில் சரியாக பெஞ்சுகள் இல்லை. ஆசிரியர்களுக்குத் தேவையான டேபிள்கள் கூட இல்லை. கல்வி மானியம் என்று வரும்போது, இதற்காக எல்லாம் அதிகமாகச் செலவு ஏற்படுகிறது. அதுபோல் பள்ளிகளுக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டக் கூட செலவு மிகவும் அதிகமாக ஆகும். ஆகவே நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம் மேல் நிலைப் பள்ளிகளில் சேர யாரெல்லாம் முன் வருகிறார்களோ அவர்களிடமிருந்தெல்லாம் ஆண்டுதோறும் கல்வி வளர்ச்சிக்கு என்று





6-வது வகுப்பு என்றால் ஒரு 5 ரூபாய், 7-வது வகுப்பு என்றால் ஒரு 6 ரூபாய் என்று கட்டிடங்களுக்காக நன்கொடை வாங்க வேண்டும். அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் தான், அவர்களுக்கு அக்கறை இருக்கும். பெற்றோர்களுக்கும் "பள்ளிக்குத் தேவையான நன்கொடை கொடுத்திருக்கிறோம், தேவையான காரியங்களைச் செய்திருக்கிறோம்" என்கிற மன நிறைவு உண்டாகும். வசதிக்குத் தகுந்தபடி 4 பெஞ்ச் செய்து கொடு என்று வசதியுள்ளவர்களிடமிருந்து வாங்கலாம். அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் தான், ஒவ்வொருவருக்கும் கல்விபால் பொறுப்பு வரும். ஆனால் இப்போது நன்கொடை வசூல் செய்யக்கூடாது என்று வைத்திருக்கிறோம். அதை மாற்ற வேண்டும். இந்த ஆசிரியர்கள் மூலம் வசூல் செய்ய வேண்டாம். பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் மூலமே அதைச் செய்வதற்கான வாய்ப்பினை அளிக்க வேண்டும்.

அடுத்து, வெளி மாநிலங்களில், வெளி நாடுகளில் தமிழ் படிக்க ஆர்வம் உள்ளவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆந்திராவில் புத்தூர், சித்தூர் போன்ற பகுதிகளில் எல்லாம் நிறைய தமிழர்கள் இருக்கிறார்கள். அங்கேயெல்லாம் படிப்படியாக தமிழ் பள்ளிக்கூடங்களை அரசாங்கம் குறைத்துக் கொண்டே வருகிறது. அனகாபுத்தூரிலுள்ள மேல்நிலைப் பள்ளிக்கூடத்தில் தெலுங்கில் பாடங்களை நடத்த அரசு அங்கீகரித்துள்ளது. இதேபோல் புத்தூர், சித்தூர் போன்ற பகுதியில் உள்ளவர்களுக்கு, தமிழில் விரும்பிப் படிக்க முன் வருபவர்களுக்கு, தமிழில் பேசுகிற பகுதிகளில் வாழ்பவர்களுக்கு தமிழ் பள்ளிகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். இங்கேயிருந்து அங்கே பெண் கொடுக்கிறார்கள். அதுபோல் அங்கேயிருந்து இங்கே பெண் எடுக்கிறார்கள். கர்நூலில் ஆயிரம் தமிழ் குடும்பங்களும், நெல்லூரில் 10 ஆயிரம் தமிழ் குடும்பங்களும் வசிக்கின்றன. அங்கேயெல்லாம் தமிழில் படிப்பதற்குரிய வசதி, வாய்ப்புகள் இல்லை. ஆகவே அதற்குரிய ஏற்பாட்டினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும். அரியானா, கல்கத்தா, பாம்பே, டெல்லி போன்ற பகுதிகளில் நிறைய தமிழர்கள் வாழ்கிறார்கள். அரியானா அரசு தமிழில் படிக்க அங்கீகாரம் கொடுத்திருக்கிறது. ஐந்தாவது வகுப்பு வரை அங்குள்ள தமிழர்கள் தமிழில் படிக்க வழிவகை செய்திருக்கிறார்கள். ஆனால் டில்லியிலிருந்த அத்தகைய வாய்ப்பை எடுத்துவிட்டார்கள். இப்போது டில்லியில் வாழ்கிற தமிழர்களே ஒன்று சேர்ந்து தமிழ் பள்ளிக்கூடம் ஒன்றை நடத்த முன்வந்திருக்கிறார்கள். அதற்கு தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும். அதேபோல் கல்கத்தாவில் வாழ்கிற தமிழர்கள் ஒன்று சேர்ந்து தமிழ்ச் சங்கம் ஒன்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல் பிற நாடுகளிலும் குறிப்பாக மொரீசியஸ், தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்கிற தமிழர்கள் கூட தமிழில் படிக்க

ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இப்போது உலகத் தமிழ் மாநாடு முடிவடைந்த பிறகு, உலகத் தமிழ்ச் சங்கதனை வைத்திருக்கிறோம். அரசே நிதி திரட்டி, மானியம் கொடுப்பதை விட தனியாரிடத்திலிருந்து இதற்கென்று வசூல் செய்து, அதைக்கொண்டு ஒரு நிறுவனத்தின் மூலம் இப்படி உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழர்களின் நலனுக்கென உதவ வேண்டும். குறிப்பாக அங்கீகாரம் வழங்குதல், புத்தகம் அச்சிட்டு வழங்கல் போன்ற உதவிகளைச் செய்யலாம். அப்படிச் செய்தால் உலகம் முழுவதிலுமுள்ள நிறைய பேர் இதன் உதவியைப் பயன்படுத்திக்கொள்ள முன்வருவார்கள். உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்த பல நாடுகளிலுள்ள தமிழ் அறிஞர்கள் இதை என்னிடம் குறிப்பிட்டார்கள். இப்போது மலேசியா, சிங்கப்பூர், சிலோன் போன்ற நாடுகளில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறது. இந்தியாவை எடுத்துக்கொண்டால், தமிழ் நாட்டில் மட்டும் தான் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறது. அதேசமயத்தில் உலகளவில் தமிழை எடுத்துக்கொண்டால், தமிழ் ஒரு சர்வதேச மொழியாக, இன்டர்நேஷனல் மொழியாக இருக்கிறது. எப்படி பிரஞ்சு, ஆங்கிலம் போன்ற மொழிகள் உலக நாடுகளில் எல்லாம் பேசப்படுவதால் உலக நாடுகளின் ஆட்சிமொழிகளாக இருக்கின்றனவோ அதுபோல் தமிழும் உலக நாடுகளில் எல்லாம் பேசப்படுவதால், அது உலக மொழி தான். அப்படி இருக்கும்போது, இந்தியப் பேரரசு ஏன் தமிழை உலக மொழியாக அறிவிக்கக் கூடாது? உலகத்திலுள்ள நாடுகளே தமிழை ஏற்றுக்கொள்ளும்போது, இந்தியாவிலும் ஏன் அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது? டெல்லிக்குச் சென்றால், ஒவ்வொரு தெருவின் பெயரையும் 4 மொழிகளில் எழுதியிருக்கிறார்கள். ஆங்கிலத்தில், உருது மொழியில், பஞ்சாபியில், இந்தியில் எழுதியிருக்கிறார்கள். ஏன் தமிழிலும் எழுதக் கூடாது என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். டெல்லியில் 2, 3 லட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். அங்கு நான் சென்று பார்த்துவிட்டுத் தான் இதை சொல்கிறேன். எனக்கு இந்தியும் தெரியும். உருதுவும் அதை யொட்டி வந்தது தான். ஆங்கிலமும் தெரியும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது சிறைக்குச் சென்றிருந்தார்களே, அப்போது படித்தார்களா? (சிரிப்பு).

**திரு. சி. இராமலிங்கம்:** படித்துத் தெரிந்து அதைப்பற்றிப் பேசலாம் என்று பெரியார் அவர்கள் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா, பெரியார் போன்றவர்களால் நான் அத்தகைய வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன். தமிழை வளர்க்கத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து மொரிசியல் தீவிலே தமிழை இரண்டாவது மொழியாக அந்த நாட்டிலே ஆக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்கள் தரலாம். இங்கிருந்து தமிழ் ஆசிரியர்களை அனுப்பி வைக்கலாம். இதே



நிலைமைதான் தென் ஆப்பிரிக்காவிலும். தமிழை ஓரளவுக்குப் படித்தவர்கள் கூட தமிழில் பேசுவதே இல்லை. அதிலும் நாம் வருங்காலத்தில் கவனம் செலுத்தினால் நன்றாக இருக்கும். அந்தமான் தீவிலிருந்து வந்தவர் ஒரு கருத்தைச் சொன்னார். அங்கேகூட தமிழ் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவாம். ஆனால் பரீட்சை எழுதுவதைப் பொறுத்தவரை, குறைபாடுகள் இருக்கின்றனவாம். அவர்களுடைய பரீட்சையை மத்திய சர்க்கார் டெல்லி கல்வித் துறையோடு இணைத்திருக்கிறார்களாம். ஆனால் அதைத் தமிழ்நாடு கல்வித் துறையோடு இணைப்பதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றனவா என்று அவர்கள் கேட்டார்கள். அதையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழக அரசு தமிழ் வளர்ச்சிக்காக நல்ல பல தொண்டுகளைச் செய்திருக்கிறது. முதலிலேயே சொன்னதுபோல் இன்றைக்கு ஆசிரியப் பிரதிநிதிகள் இங்கே கிட்டத்தட்ட 6 பேர் இருக்கிறார்கள். அதோடு பட்டதாரி பிரதிநிதிகள் இருக்கிறார்கள். நான் கேட்பதெல்லாம் தயவுசெய்து அவர்கள் எல்லாம் கிராமப்புறங்களுக்கு சென்று வரவேண்டும். அங்கே எங்களைப் போன்ற ஏழையெளிய விவசாயிகள், நெசவாளர்கள் எல்லாம் அவர்களுடைய பிள்ளைகளை பள்ளிகளில் படிக்க வைக்கிறார்கள். கிராமப்புறங்களில் எல்லாம் எப்படி ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள் என்றால், கையெழுத்துப் போட்டுவிட்டு தங்களுடைய நிலத்திற்குச் செல்கிற சூழ்நிலை கூட இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ஆசிரியர்கள்பால் மாணவர்களுக்கு பக்தி ஏற்படும்படியான வழிவகையை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆசிரியர்கள் எங்களையும் மனிதர்களாகக் கருத வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** கிராமங்களுக்கு நாங்கள் இனிதான் சென்று பார்த்துத் தெரிய வேண்டும் என்று இல்லை. கிராமத்தில் பணியாற்றிவிட்டுத் தான் இங்கே உறுப்பினராக வந்திருக்கிறேன். ஆசிரியர்கள் கையெழுத்திட்டுவிட்டு நிலத்திற்குச் செல்கிறார்கள் என்று உறுப்பினர் சொல்கிறார் என்றால், இங்கே அமர்ந்திருக்கிற கல்வி அமைச்சர் அவர்களையே கேவலப்படுத்துவதாகத்தான் அர்த்தம். அப்படிச் சொல்வது ஆசிரியர்களைக் குறை கூறுவதாக ஆகாது, கல்வி அமைச்சரையே குறை கூறுவதாகத்தான் பொருள்.

(பிற்பகல் 12-40)

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது பேசுவதற்காக வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சுருக்கமாகச் சில கருத்துக்களைச் சொல்கிறேன். கல்வி வளர்ச்சிக்காக நிதியொதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். அதிலே சில குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகளை நிவர்த்திக்க வேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். கல்வி பற்றிச் சொல்லும்போது, இன்றைக்கு உள்ள சென்னைப் பல்கலைக் கழகத்திலுள்ள சில ஒழுங்கீனங்களைப்பற்றி நான் சொல்கிறேன். 22 ஆம் தேதி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே தட்டம் கட்டி செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய வைஸ்-சான்சலர் அவர்கள் கரஸ்பான்டன்ஸ் கோர்ஸ்க்கு ஒரு டைரக்டர், ஒரு டெப்யூட்டி டைரக்டர் பதவிகளைப் பூர்த்தி செய்து ஆட்களை நியமனம் செய்வதிலே சில ஒழுங்கீனங்களைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொன்னால், இந்த நாட்டிலே ஏறக்குறைய 130 வருஷமாக சென்னைப் பல்கலைக்கழகம் இருக்கிறது. அங்கே வேலை பார்க்கின்ற ஆதி திராவிட மக்களைப் பார்க்கும்போது, இந்த 130 வருஷத்திலே ஆறு பேர்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இது எவ்வளவு கேவலமான நிலைமையை உருவாக்கியிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த டைரக்டர், டெப்யூட்டி டைரக்டர் பதவிகளுக்கு இரண்டு ஆதி திராவிடர்கள் மனு செய்தார்கள். எல்லாவிதமான தகுதியும் இருந்திருக்கிறது. அப்படியிருந்தும் கூட, அவர்களுக்கு 'இன்டர்வ்யூ' கூட தரவில்லை. அவர்களுடைய உரிமைகளுக்காகப் போராடிய பிறகு அவர்களுக்கு கண்துடைப்பிற்காக 'இன்டர்வ்யூ' கொடுக்கப்பட்டிருக்கிறது. வைஸ்-சான்சலருக்கு வேண்டியவர் மதுரை யூனிவர்சிட்டியிலே வேலை பார்க்கிறார். அவரை சிண்டிகேட் நியமனம் செய்தது. சிண்டிகேட்டிலே பலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். மதுரை யூனிவர்சிட்டியிலேயிருந்து அவரை விடுவிக்கவில்லை. இங்கே அவர் நியமிக்கப்பட்டார். உடனே மறுபடியும் தன்னுடைய சொந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தி, திரு. ஷண்முகம் என்பவருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விதமான ஒழுங்கீனங்கள் நடைபெற்றிருப்பதையெல்லாம் திரு. இளையபெருமாள் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் அந்த ஆதி திராவிடர்களுடைய நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன காரணத்தினாலே விட்டுவிட்டார்கள் என்று தெரியவில்லை. ஒருவேளை வைஸ்-சான்சலர் அவர்களுடைய முழுப் பொறுப்பிலே அது இருக்கிறது என்று எண்ணி விட்டுவிட்டாரோ என்று தெரியவில்லை. அங்கே ஆதி திராவிடர்களுக்கு அநீதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த யூனிவர்சிட்டியிலே இன்னொரு தவறும் நடைபெற்றிருக்கிறது. யூனிவர்சிட்டியிலே பொதுவாக ரிஜிஸ்த்ரார் தான் கையெழுத்துப் போட்டு அனுப்புவார்கள். இதிலே வைஸ்-சான்சலர் தான் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். இந்த ஒழுங்கீனங்கள் நடைபெற்றிருக்கின்றன. இன்னொருவருக்கு ரிஜிஸ்தர் செய்யாமலேயே பி.எச்டி. வழங்கப்பட்டிருக்கிறது. இந்த அவல நிலைகளைப் போக்கி அந்த யூனிவர்சிட்டியை நல்லமுறையிலே செயல்படச் செய்ய வேண்டும். மேல்நாடுகளிலே, இந்த யூனிவர்சிட்டியை 'முதலியார் யூனிவர்சிட்டி' என்று சொல்வார்கள். டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள்



வைஸ்-சான்சலராக இருந்தபோது, நல்லமுறையில் நடத்தப்பட்டுவந்த யூனிவர்சிட்டி இது. இன்றையதினம் மிகவும் கேவலமாக பத்திரிகைகளிலே செய்தி வரும் அளவுக்கு இருக்கிறது. இதை அரசு பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. அதற்கு ஒரு கமிட்டி அமைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்து நிமிட நேரம் தலைவர் அவர்கள் கொடுத்திருப்பதை வைத்து மேலும் ஒருசில கருத்துக்களைச் சொல்கிறேன். உயர் நிலைப் பள்ளிகளையெல்லாம் மேல் நிலைப் பள்ளிகளாக மாற்றியிருக்கிறார்கள். அவைகளுக்கு போதுமான அளவுக்கு கட்டிடங்கள் இப்போது இல்லை. பிள்ளைகள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். ஒரு கூட்டிலே போட்டு அடைக்கும் நிலை தான் இருக்கிறது. அண்மையில் நான் ஒரு பள்ளிக்கூடத்திலே விழாவுக்குச் சென்றபோது, அங்கே கட்டிடம் இல்லாமல் இருந்ததைப் பார்த்தேன். அங்கே கட்டிட வசதி, லேப் வசதி இல்லை. இந்த நிலைமை எல்லாப் பள்ளிகளிலும் இருக்கின்றது. ஆகவே, உயர் நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாக மாற்றிய உடனே, இந்த வசதிகளை எல்லாம் அவைகளுக்குச் செய்து கொடுக்க வேண்டும். மாநிலத்தில் ஒன்பது மேல் நிலைப் பள்ளிகளிலே ஒருவர்கூட தேர்விலே தேறவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் மாணவர்களுடைய குறையா அல்லது ஆசிரியர்களுடைய குறையா ? ஒன்பது பள்ளிகள் என்று சொன்னால் பல லட்சம் ரூபாய் செலவிலே நடக்கும் பள்ளிகள் இவை. அரசாங்கம் பணம் ஒதுக்குகிறது. ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறது. அப்படி இருக்கும்போது, ஒரு மாணவர் கூட தேறவில்லை என்று சொன்னால், அதற்குக் காரணம் என்ன ? அது மாணவர்களுடைய குறையா அல்லது ஆசிரியர்களுடைய குறையா என்பதை அரசு கண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சில பள்ளிகளிலே—ஆசிரியர்களின் பிரதிநிதிகள் குறைபட்டுக் கொள்ளக் கூடாது—நான் பெற்றோர்கள் சார்பிலே சொல்கிறேன்—ஒழுங்கீனங்களுக்கு ஆசிரியர்கள் காரணமாக இருக்கிறார்கள். ஆசிரியர்களாக உள்ளவர்கள், கல்வியை அந்தக் குழந்தைகளுக்கு போதிக்க வேண்டும் என்று இருப்பவர்கள். அத்தனை பேரும் வெளியே உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களிலே பிள்ளைகள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரியாக இருக்கும் ஒழுங்கீனங்களைத் தவிர்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசும்போது, பெற்றோர் சார்பிலே பேசியதுபோன்று நானும் பேசுகிறேன். இதற்கு ஆசிரியர்களின் பிரதிநிதிகள் ஒத்துழைக்க வேண்டும். மிகவும் கேவலமாக நடப்பது மாநகராட்சிப் பள்ளிகள். இன்றையதினம் பள்ளிக்கூடங்களிலே

பிள்ளைகளுக்கு இடம் கிடைக்காத நிலை இருக்கும்போதுகூட, மாநகராட்சிப் பள்ளிகளிலே பிள்ளைகளை பெற்றோர்கள் அனுப்பத் தயங்குகிறார்கள். அங்கே ஒழுங்கு இல்லை, கல்வி வளர்ச்சி இல்லை.

நர்சரி பள்ளிகளை இன்றையதினம் அதிகமாக நாட்டிலே வளர விட்டிருக்கிறோம். வளர்ந்து வருகின்றனவே தவிர திறமையான ஆசிரியர்கள் இல்லை. அது வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்குப் போக்குகிறது. பட்டதாரிகளுக்கு இன்றைக்கு அரசு வேலை கிடைக்கவில்லை. ஆனால் நர்சரி பள்ளிக்கூடங்கள் என்று சொல்லி பலருக்கு வேலை கொடுக்கிறார்கள். இன்னொன்று, அவர்கள் அதிகமான கட்டணங்கள் வசூலிக்கிறார்கள். அந்தப் பள்ளிகளுக்கு இருக்கும் விதியை மாற்றி அவைகளை அரசு நேரடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டு, பொதுவாக அரசு இன்னும் கல்வி வளர்ச்சியை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

* திரு. க. அருணாசலம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நமது நாடு விடுதலையடைந்தவுடனே எதிர்காலத்தைப்பற்றி நினைத்து ஒரு பத்து ஆண்டுகளுக்குள்ளே 14 வயது வரை உள்ள பிள்ளைகளுக்கெல்லாம் கல்வி கொடுக்க வேண்டும் என்று ஒரு சங்கற்பம் செய்தோம். முதல் பத்து ஆண்டுகள் கடந்தன. அதற்குப் பிறகு இரண்டு பத்து ஆண்டுகளும் கடந்து விட்டன. இந்தக் கொள்கை விளக்கத்திலேயே இன்னும் 10—20 ஆண்டுகள் ஆகும் என்று இருப்பது போல் தோன்றுகிறது. 14 வயதுக்குக் கீழே உள்ளவர்களைப் பள்ளிக்குக் கொண்டு வருகிறோம். 11 வயதுக்குக் கீழ் உள்ளவர்களின் சேர்க்கை 95 சதவீதம் என்றும் நேற்றுவரை அதிலே 51 சதவீதம் பேர் நின்றுவிட்டார்கள் என்றும் இப்போது 33 சதவீதம் பேர் தான் நின்றுவிடுகிறார்கள் என்றும் இருக்கிறது. இது ஓரளவு மனநிறைவு தருகின்றது. 14 வயதுக்குரியவர்கள் 65 சதவீதம் சேர்க்கப்படுகின்றனர். அதில் எத்தனை பேர் நின்றுவிடுகிறார்கள் என்றால், பலர் நின்றுவிடுகிறார்கள். இதற்குக் காரணம் நம்முடைய கல்வி அமைப்பு முறை. நம்முடைய அமைப்பு முறைதான் அவர்களை வெளியே தள்ளி விடுகிறது. இந்த முறையில் பள்ளிக் கூடங்கள் இருக்கும் நிலைமையிலே, முன்னால் ஜாதி-பேதங்கள் எவ்வளவு கெடுதல் பண்ணிக்கொண்டிருந்தனவோ அவ்வளவு கெடுதல் இவை செய்கின்றன.

மெக்சிகோவில் க்வர்னவாக்கா நகரில் கம்ப்யூட்டர் சென்ட்டர் என்று ஒன்று இருக்கிறது. அங்கே இப்போதைய கல்வி முறைபற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். டாக்டர் ஈவான் லீச் என்ற பேராசிரியர் ஆராய்ச்சி செய்திருக்கிறார். அவர் "சமுதாயம் பள்ளிகளிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும்" "The society must be de-schooled" என்று சொல்லி



யிருக்கிறார். நாம் இப்போது எந்த முறையைக் கல்வி கற்பிப்பதற்காகக் கையாண்டுகொண்டிருக்கிறோமோ அதைத்தான் உலகத்தில் பெரும்பாலான பகுதிகளில் கையாண்டு கொண்டிருக்கிறார்கள். இது உலகில் நிலப் பிரபுத்துவக் காலத்திலிருந்து வருவது. உழைப்பதற்கு என்று சிலர் இருப்பார்கள். அந்நிலையில் அறிவாளிகளாக இருப்பவர்கள் அதிகாரத்திற்கு வருவதற்காக என்று கொண்டுவரப்பட்ட முறை இது. அதுமட்டுமல்ல. பொருளாதார நிபுணர்கள் கூட இது குறித்து ஒரு கருத்து சொல்லுகிறார்கள். அதாவது இப்போது இருக்கிற வளர்ச்சியே வளர்ச்சியின் வளத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். பள்ளிக்கூடங்களை நாம் நிறைய வளர்க்கிறோம். அந்த வளர்ச்சியின் பலனை அங்கேயிருக்கிற ஆசிரியர்களும் மாணவர்களும்தான் எடுத்துக்கொள்கிறார்களே தவிர, அதனால் சமுதாயத்திற்கு எந்தப் பலனும் ஏற்படுவதில்லை என்பது அவர்கள் கூற்று. எனவேதான் பள்ளிக்கூடங்கள் தேவையில்லை என்று ஒருவர் சொல்லுகிறார். டாக்டர் ரீமர் என்பவர் "The school is dead for this age" என்று சொல்லுகிறார். இதுபற்றி ஒரு புத்தகமே அவர் எழுதியிருக்கிறார். நான் ஏற்கெனவே பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவன். எனவே இதைச் சொல்லும்போது, எனக்கு ஏதோ மூளைக் கோளாறு ஏற்பட்டுவிட்டதோ என்று யாரும் தயவுசெய்து எண்ணிவிட வேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

தற்போதைய அமைப்பு முறையை நாம் மாற்ற வேண்டும். திருவள்ளுவரின் கருத்தைப் பார்த்தால்கூட, நாம் ஒன்றை உணர்ந்துகொள்ள முடியும். அவர் தமது திருக்குறளில் "கற்றல்" என்ற வார்த்தையைத் தான் உபயோகப்படுத்துகிறாரே தவிர, "கற்பித்தல்" என்ற வார்த்தையை உபயோகப்படுத்தவே இல்லை. கற்பித்தல் என்பது திணிப்பைப் போல் ஆகும். இந்தித் திணிப்பு கூடாது என்று நாம் எதிர்க்கிறோம். அப்படி இருக்கும்போது, மாணவர்களிடத்தில் அறிவுத் திணிப்பை மட்டும் எப்படி நாம் ஏற்றுக் கொள்ளலாம்? இந்த வகையில்தான் அமைப்பு முறையில் மாற்றம் வேண்டும் என்று நான் சொல்லுகிறேன். இந்தக் கருத்தின் அடிப்படையில் சில பள்ளிக் கூடங்கள் நடைபெறுகின்றன. ஜே. கிருஷ்ணமூர்த்தி பவுண்டேஷன் நடத்துகின்ற ஒரு ஸ்கூல் இருக்கிறது. அங்கு கற்கிற சூழ்நிலையைத்தான் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கற்பிக்கிற சூழ்நிலை என்பது அங்கே மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே கற்பித்தலுக்கு தற்போது எங்கே பார்த்தாலும் கொடுக்கப்படும் முக்கியத்துவம் கைவிடப்பட வேண்டும். மாணவர்கள் கற்றலுக்கு ஏற்ற சூழ்நிலையை நாம் உருவாக்கித் தர வேண்டும். நேரம் கருதி நான் இதை இத்தோடு விட்டுவிடுகிறேன்.

[திரு. க. அருணாசலம்] [1981 ஏப்ரல் 27

அடுத்து, பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் விடுபட்டுப் போனவர்கள் விஷயத்தில் அவர்களுக்கும் கல்வி கற்பிக்க என்று "நான்-பார்மல் எஜுகேஷன்" வைத்திருக்கிறோம். அது உண்மையிலேயே பாராட்டுக்குரியது, என்றாலும் அதுமட்டும் போதாது. அதையும் பார்மலைஸ் செய்திருக்கிறோம். அதாவது அங்கேயும் ஆசிரியரைப் போட்டிருக்கிறோம். அங்கேயும் ஒரு டைம்-டேபிள் போட்டிருக்கிறோம். இத்தனை நாளைக்குள் இதைப் படிக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். அதாவது ஸ்கூல் சிஸ்டத்தில் இருப்பதையே அங்கேயும் நாம் புகுத்திக் கொண்டிருக்கிறோம். உழைப்பதற்காக என்று ஒரு சமுதாயமும், அதிகாரம் செய்வதற்காக என்று இன்னொரு சமுதாயமும் இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் ஆளப்படுகிறவர்களே ஆளுகிறவர்களாக மாற வேண்டும் என்ற வகையில் புதிய சமுதாயத்தைப் படைக்க விரும்புகிறோம். இந்த முறையில் வேலை செய்கிறவர்கள் ஓய்வு கிடைக்கும் போது, திறமையையும் அறிவையும் பெற்றால், அதனால் அவர்களுக்கும் நன்மை, சமுதாயத்திற்கும் நன்மை உண்டாகும். ஆனால் இப்போது என்ன எண்ணம் நாட்டில் இருக்கிறது என்றால், ஒருவர் பள்ளிப் படிப்பை முடித்து எப்படியாவது ஒரு எம்.ஏ. பட்டம் பெற்றுவிட்டால், அவர் எதையும் செய்ய முடியும் என்பது. அனகாபுத்தூர் திரு. இராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், பாட்டாளிமீது படித்தவர் ஏறி உட்கார்ந்துகொள்ளும் நிலை இன்றைக்கு இருக்கிறது. எனவேதான் இத்தகைய அமைப்பு முறையை மாற்ற வேண்டும் என்று சொல்லுகிறேன். இன்றைய தினம் உள்ள "நான்-ஃபார்மல் எஜுகேஷனை" உண்மையிலேயே ஒரு "நான்-ஃபார்மல் எஜுகேஷனாக" மாற்றியமைப்பது குறித்து நாம் யோசிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் படிக்கும்போது, இராப் பள்ளிகள் என்று உண்டு. அவை இரவுப் பள்ளிகள் இப்போது அத்தகைய முறை வேண்டாம் என்று சொல்லி, நாட்டு மக்கள் அனைவருமே அறிவாளிகளாக இருக்க வேண்டும் என்ற தேசிய நோக்கோடு ஒரு முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். எழுத்தறிவு பெறாதவர்கள் யாருமே இந்த நாட்டில் இருக்கக்கூடாது என்று எல்லோருக்குமே எழுத்தறிவைப் புகட்ட "நேஷனல் அடல்ட் எஜுகேஷன் புரோகிராம்" என்ற திட்டத்தை வகுத்தார்கள். அதன் அடிப்படையில் குஜராத் மாநிலத்தில் 4,000 தானியங்கி நிறுவனங்கள் வேலை செய்து வருகின்றன. நாமும் நமது மாநிலத்தில் பெரிய அளவில் வேலை செய்து கொண்டிருந்தோம். புள்ளிவிவரத்தைப் பார்த்தபோது, நாமும் ஏராளமாகச் செலவு செய்து கொண்டிருக்கிறோம் என்று எண்ணிப் பார்த்து சந்தோஷப் பட்டேன். ஆனால் அதற்காக 161 இலட்சம் ரூபாயைத்தான் செலவு செய்கிறோம். 161 கோடி ரூபாய் அதற்காகச் செலவு செய்வதாக நான் முதலில் நினைத்தேன். ஆனால் அது ரூபாய் 161 லட்சம்தான் என்று பின்னால் தெரிந்தது. கல்விக்காக மொத்தம் 249 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். அதோடு வேறு பல வகைகளில் கல்விக்குச் செலவிடும் தொகையைப் பார்த்தால், மொத்தம் ரூ. 255 கோடிக்கு வருகிறது. இந்த ரூ. 255 கோடியில் முதியோர் கல்விக்காக நாம் செலவழிப்பது 161 லட்சம் ரூபாய்தான். அதோடு "நான்-பிளான்" எக்ஸ்பெண்டிச்சர் என்ற வகையில் ரூ. 75 லட்சம் சேர்த்து மொத்தம் ஒரு 2 அல்லது 2½ கோடி ரூபாய் செலவழிக்கிறோம். இந்த அளவுக்குக் குறைந்த தொகை செலவழித்தால், எப்படி நாம் அனைத்து முதியோர்களுக்கும் கல்வி கற்பிக்க முடியும்? நான்கு லட்சம் பேர்தான் முதியோர் கல்வியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அளவுக்குக் குறைந்த தொகையை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்துவிட முடியாது. இந்தத் திட்டமேகூட அண்மைக் காலத்தில் வந்ததுதான். 1912 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் மனிதன் எல்லா நிலையிலும் கல்வி கற்க முடியும் என்ற எண்ணமே ஏற்பட்டது. இதற்கு முன்பெல்லாம் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்று சொல்லி விட்டுவிட்டோம். அதனால் 15 வயதுக்கு மேல் யாரையும் படிக்க வைக்க முடியாது என்று சொல்லிக் கொண்டிருந்தோம். இப்போது சமுதாயத்தின் பல்வேறு அறிஞர்களும் ஒரு புதிய உண்மையைக் கண்டுபிடித்து சொல்லியிருக்கிறார்கள். அதாவது மனிதன் எல்லா நிலையிலும் கற்றுக்கொண்டே இருக்கலாம் என்கிறார்கள். 80 வயதிலும்கூட கற்கலாம் என்று சொல்லுகிறார்கள்.



1981 ஏப்ரல் 27] [திரு. க. அருணாசலம்]

அந்தக் காலத்தில் ஆண்டுக்கு 3 விஷயங்களைக் கண்டு பிடித்தார்கள் என்றால், இப்போது 3,000 விஷயங்களைக் கண்டு பிடிக்கிறார்கள். இப்போது எல்லோரும் வேலை செய்து கொண்டே தங்களுக்குப் பணியிடைப் பயிற்சி கொடுங்கள் என்று கேட்கிறார்கள். வேலை செய்கிற இடத்திலேயே கல்வி கற்றுக் கொள்கிற நிலைமையை நாம் ஏற்படுத்தித் தர வேண்டும். அதைப் போலவே முதியோர் கல்விக்கும் நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இதற்காக மட்டும் சரி பாதித் தொகையை ஒதுக்கியிருந்தால், நன்றாக இருந்திருக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மேல்நிலைக் கல்வியைப் பொறுத்தவரையில், ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் அது சரியாக இல்லை. பழைய கல்வி முறை சரியாக இல்லை என்று சொல்லி வொக்கேஷனல் எஜுகேஷன் முறையைக் கொண்டு வந்தோம். கொண்டு வந்த முறையாவது சரியாக அமுல்படுத்தப்படுகிறதா என்று பார்த்தால், அதுவும் சரியாக இல்லை. மத்தியப் பிரதேசத்தில் சென்ற ஆண்டில் 345 பள்ளியில் உள்ள மாணவர்கள் ரூ. 25 லட்சம் பெறுமானமுள்ள சமுதாயத்திற்குப் பயன்படும் பொருள்களை உற்பத்தி செய்திருக்கிறார்கள். அதில் தங்களுக்கு என்று ஏறத்தாழ 1½

அல்லது 2 லட்சம் ரூபாயை வருவாயாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி பார்த்தேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கிருந்து சிலரை அங்கே அனுப்பி அங்கே எப்படிப்பட்ட முறைகளைக் கையாள்கிறார்கள் என்று பார்த்து வந்து, அவற்றை நாம் பின்பற்றுவது குறித்து யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாநிலத்தில் வொக்கேஷனல் கல்வி முறை என்று சொல்லிக்கொண்டு அரசே கிராண்ட் கொடுத்துக் கொண்டிருக்கிற நிலைதான் இருந்து வருகிறது. இப்படி அரசாங்க மானியத்திலே நடத்துவது என்பது எந்த வகையிலும் சரியில்லை. உண்மையிலேயே பள்ளி நேரத்திலேயே மாணவர்கள் சம்பாதிக்கும் வகையில் அவர்களின் திறமையை வளர்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குஜராத் மாநிலத்தில்கூட இம்மாதிரியான முறையைக் கையாள்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். எனவே நமது அரசு இதைப்பற்றி சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிக் கல்வியைப்பற்றியும் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையில், பல்கலைக் கழகங்கள்தான் அதை நிர்ணயிக்கின்றன. தற்போதைய பல்கலைக் கழகங்களின் சட்டங்கள் மிகவும் ஆழமாகத் திருத்தப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. ஜனநாயக முறையில் மக்களாட்சி வர வேண்டும் என்று விரும்புகிறபோது, தைரியமாக, இந்தச் சட்ட விதிகளைத் திருத்த வேண்டும். எப்போதோ ஒரு குடும்பம் சில ஆயிரக் கணக்கான ரூபாய்களைக் கொடுத்துவிட்டது என்ற காரணத்திற்காக, இந்தக் கல்லூரிகளையும் பல்கலைக் கழகங்களையும் அவர்கள் கையிலேயே விட்டுவைக்கக்கூடாது. ஏற்கனவே ஜமீன்தாரி முறையை ஒழித்துவிட்டோம். அண்மையில் பரம்பரைக் கணக்குப்பிள்ளை முறையைக் கூட ஒழித்துவிட்டோம். நான் கணக்குப்பிள்ளையாக இருந்தவர்களின் பரம்பரையில் வந்தவன். ஆனால் எந்தக் காரணத்தாலோ தனித்தவர்களுக்கு மட்டும் கல்வி உலகில் இந்த உரிமையைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறோம். எதற்காகச் சிலருக்கு மட்டும் இந்த உரிமையை வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பது எனக்குப் புரியவில்லை. யார் மீதும் எனக்குத் துவேஷம் இல்லை. ஆனால் இன்றைய காலத்தின் தேவையைக் கருதி, நாட்டின் நன்மையைக் கருதி, உலக நன்மையைக் கருதி, இந்த மாறுதலைச் செய்ய நாம் முன்வர வேண்டும். மாறுதல்கள் அடுத்தடுத்து வரும்போது அந்த மாறுதல்களை நாமும் ஏற்றுக்கொண்டு செயல்பட்டால்தான், மற்றவர்களுக்கு நாம் வழிகாட்டியாக இருக்க முடியும்.

அடுத்து, மொழிக் கொள்கையைப்பற்றி ஒன்றை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தித் திணிப்பை நாம் எதிர்த்தோம். ஏதோ அஜாக்கிரதையாக இருந்தபோது இருமொழித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். நாமும்



அப்போது அதை ஆதரித்துவிட்டோம். ஆனால் தமிழர்கள் இப்போது விழித்துக் கொண்டுவிட்டார்கள். எதுவானாலும் திணிப்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அனகாபுத்தூர் திரு. இராமலிங்கம் அவர்கள் கூட தமக்கு இந்தி தெரியுமென்பதைக் குறிப்பிட்டார்கள். நாம் அனைவரும் இந்தி கற்றுக் கொண்டாக வேண்டும். என்னால் இந்தியில் பிரசங்கமே செய்ய முடியும். ஆனாலும் இந்தியை நாம் பள்ளிக்கூடத்தில் படித்தால், இன்னும் நன்றாக இருக்கும். நம்மில் பலர் வெளி மாநிலங்களுக்கு வேலைக்காகப் போகிறார்கள். இந்தி தெரியாத நிலையில் அவர்களின் கதி என்ன ? பலர் பல மாநிலங்களோடு வியாபாரம் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் கதியெல்லாம் இந்தி தெரியாமல் என்னாவது ? எல்லோரும் ஜெயிலுக்குப் போய் இந்தியைக் கற்றுக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதற்காகவாவது எல்லோரையும் அனுப்பலாம் என்ற நியாயம் வந்துவிடும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இந்தி பேசுகிற மாநிலங்களுக்குப் போகிறவர்களுக்கு இந்தி தெரிந்திருந்தால் நன்றாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அப்படியானால் வேறு மாநிலங்களுக்குச் செல்ல வேண்டி நேரிடும்போது, அந்த மாநில மொழியும் தெரிந்திருப்பது நல்லது என்றால், தமிழ் நாட்டில் அந்த மாநில மொழிகளும் சொல்லித் தரப்படுவது நல்லது என்று உறுப்பினர் அவர்கள் கருதுகிறாரா ?

(பிற்பகல் 1-00)

**திரு. க. அருணாசலம்:** அப்படி 7, 8 மாநிலங்கள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். மகாராஷ்டிர மாநிலத்திலே இருக்கிறது. அங்கே இந்தி ஓரளவுக்குப் பேசுகிறார்கள். குஜராத் மாநிலத்திலே இருப்பதாகத் தெரிகிறது. இப்படி பல மாநிலங்கள் இருக்கின்றன. ராஜஸ்தான், பீகார், ஹரியானா, பஞ்சாப், இமாச்சலத்தில் கொஞ்சம் இருக்கிறது. ஆந்திராவிலே கொஞ்சம் இருக்கிறது. ஆனால் அதிகமாகப் பேசுகிறவர்கள் இல்லை. அங்கே அவர்கள் எல்லாம் தெலுங்கிலேதான் பேசுகிறார்கள். இரண்டு, மூன்று மொழி இருக்கலாம். இந்தி படிக்கலாம். இந்தி வேண்டாம் என்று நினைக்க வேண்டியதில்லை. இந்தி படிப்பதால் நம்முடைய மொழி பழுதடைந்துவிடும் என்றும் நினைக்க வேண்டியதில்லை. ஆங்கிலம்தான் இங்கே இருக்கிறது. பரந்த தேசமான தென் அமெரிக்காவிலே யாருக்குமே இங்கிலீஷ் தெரியாது. அங்கே ஸ்பானிஷ் மொழி பேசுகிறார்கள். யாரோ ஒருவர் இருவருக்குத்தான் இங்கிலீஷ் தெரிகிறது.

[திரு. க. அருணாசலம்] [1981 ஏப்ரல் 27

கல்வித்துறை பல காரியங்கள் நல்ல முறையில் செய்துகொண்டிருக்கிறது. அவற்றை நான் பாராட்டுகிறேன். மேலும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நேரம் இல்லை என்பதால் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை நாளை காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-01)

### 4. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### A. *Statutory Rules and Orders.*

251. Notification issued with G.O. Ms. No. 218, Home, dated the 3rd February 1981 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

#### B. *Reports, Notifications and Other Papers.*

* 136. Policy Note on Agriculture, 1981-82 (Tamil and English).

* 137. Performance Budget on Agriculture Department, 1981-82 (Tamil and English).

138. Policy Note on Labour in Tamil Nadu, 1981-82 (Tamil and English).

139. Department of Employment and Training Marches Ahead (Tamil).

---

* Circulated to all M.L.C.s on 25th April 1981.



## இணைப்பு I

[96 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாடு பால்வள நிறுவன ஊழியர் சங்கத்தினர் போனஸ் தொகை அதிகரிப்பு, பதவி உயர்வு, பண்டிகை முன்பணம் அதிகரிப்பு, குறைந்தபட்ச மாதச் சம்பள நிர்ணயம், ஆண்டுக்கு 20 நாள் விடுப்பு ஆகிய கோரிக்கைகளை தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்குச் சமர்ப்பித்தார்கள். அக்கோரிக்கைகளின்மேல், சென்னையிலுள்ள இரண்டாம் சரக தொழிலாளர் துறை துணை ஆணையாளர் அவர்கள் முன்னிலையில் சமரசப் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடைபெற்றது. இவ்வாறு சமரசப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கும்போதே எந்தவித முன்னறிவிப்புமின்றி, 19—11—1980 அன்று மாலை 7-30 மணி முதல் சென்னையிலுள்ள தமிழ்நாடு பால்வள நிறுவன ஊழியர் சங்கத்தினர் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (முன்னாள் தமிழ்நாடு பால்வள நிறுவனம்) தொழில் தகராறுகள் சட்டப்படி ஒரு "பொது சேவை" (Public Utility Service) நிறுவனம் ஆகும். வேலை நிறுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் தொழிற் தகராறுகள் சட்டத்தின்படி வேலை நிறுத்த அறிவிப்பு எதுவும் தொழிற்சங்கத்தினரால் கொடுக்கப்படவில்லை. எனவே, இவ்வேலை நிறுத்தம் சட்ட விரோதமும், நியாயமற்றதுமாகும். மேலும் சமரச அலுவலர் முன் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும்போதே வேலை நிறுத்தத்தை மேற்கொண்டது சட்ட விரோதமாகும்.

வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு பணிக்குத் திரும்புங்கள் என்று இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தினசரிப் பத்திரிகைகள் மூலம் விடுத்த வேண்டுகோளுக்கும் நேரடிப் பேச்சுவார்த்தையின்போது மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் செவி சாய்க்கவில்லை. இதற்கிடையில் சென்னை உயர்நீதி மன்றத்தில் அவர்கள் வழக்கு ஒன்றும் தொடுத்து உள்ளார்கள். அவ்வழக்கு இன்னும் முடியவில்லை.

## இணைப்பு II

[97 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அரசு நிதியிலிருந்து, தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோருக்கு பண்டிகை முன்பணம் கொடுக்கும் திட்டம் பற்றி அரசாணை நிலை எண் 2703, கல்வி, தேதி 18—12—1980-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பின்வருபவை அதன் விவரங்களாகும். 'அரசு ஊழியர்களுக்கும் அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் அரசு நிதியில் இருந்து வழங்கப்படும் பண்டிகை முன்பணச் சலுகை தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்களுக்கும் வழங்கலாம். இது 10 தவணைகளில் வசூல் செய்யப்படும் வட்டி இல்லாத முன்பணமாகையால் முன் பணம் வழங்கப்படுவதற்கான உரிமையும் பொறுப்பும் உடையவர் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்களும் மகளிர் பள்ளி ஆய்வாளர்களுமேயாவார்கள். இதற்காகும் செலவு ஒரு புதுத் திட்டமாகையால் 1980-81-க்கான துணை மதிப்பீட்டுடன் சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலாகும் செலவு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து எடுக்கப்படலாம்.

இச்சலுகையை செயற்படுத்துவதற்குரிய எதிர்பாராச் செலவு நிதி ஒதுக்குவதுபற்றிய அரசாணை, நிதித் துறையிலிருந்து, 8—1—81-ல் இடப்பட்டது. மேற்கூறிய விதிமுறைகளை அனுசரித்து ஆணைகள் வழங்குவதற்குள் 1980 கிறிஸ்துமஸ் பண்டிகை முடிந்துவிட்டது. ஆகவே 1980-ம் ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகை முன் பணம் விருதுநகர் கல்வி மாவட்டம் மட்டுமின்றி, மாநிலத்தில் உள்ள எந்த ஒரு தனியார் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கும் வழங்க இயலவில்லை. 8—1—81க்குப்பின் இத்திட்டத்தின்கீழ் பண்டிகை முன்பணம் அளிக்கப்பட்டு வருகிறது. 1981 கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு இம் முன்பணம் தடையின்றிக் கிடைக்கும்.





## இணைப்பு III

[99 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக்காண்க]

### I தோற்றுவாய்

**கல்விச் செலவும் மாநில வரவு—செலவுத் திட்டமும்.**

கல்விக்காக 1981—82 ஆம் ஆண்டில் ''மானியக் கோரிக்கை 17—கல்வி ''-ன் கீழ் ஒதுக்கியுள்ள ரூ. 249 கோடி அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,138 கோடியில் 22 விழுக்காடாகும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின்கீழ் 1981—82 ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு:—

| | 1981—82 வரவு—செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டமல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 259. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்பு செலவு .. | 44 | .. | 44 |
| 277. கல்வி— | | | |
| 1 தொடக்கக் கல்வி | 1,15,73 | 2,51 | 1,18,24 |
| 2 உயர்நிலைப் பள்ளிக் கல்வி .. .. | 64,63 | 2,07 | 66,70 |
| 3 மேல்நிலைப் பள்ளிக் கல்வி .. .. | 12,17 | 7,68 | 19,85 |
| 4 கல்லூரிக் கல்வி .. | 24,45 | 88 | 25,33 |
| 5 சிறப்புக் கல்வி— | | | |
| முதியோர் கல்வி, தமிழ் வளர்ச்சி முதலியவை .. | 76 | 1,69 | 2,45 |
| 6 விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்; தேசிய மாணவர் படை .. .. | 1,86 | 1,18 | 3,04 |

[1981 ஏப்ரல் 27

1981—1982 வரவு செலவு மதிப்பீடு

| 1 | திட்டமில்லாத செலவினம் 2 | திட்டச் செலவினம் 3 | மொத்தம் 4 |
|---|---|---|---|
| | | ரூபாய் இலட்சத்தில் | |
| 7 தொழில் நுட்பக் கல்வி .. .. | 8,17 | 1,64 | 9,81 |
| மொத்தம் "277. கல்வி" — | 2,27,77 அல்லது 2,27,78 | 17,65 | 2,45,42 அல்லது 2,45 43 |
| 278. கலை, பண்பாடு | 34 | 30 | 54 |
| தொல் பொருள் ஆய்வு .. | 16 | 17 | 33 |
| ஆவணக்காப்பகமும் அருங் காட்சியகங்களும் | 37 | 5 | 42 |
| பொது நூலகங்கள் .. | 1,44 | 17 | 1,61 |
| | 2,32 | 69 | 3,00 |
| 288. சமூகப் பாதுகாப்பும் நலனும் .. | 14 | .. | 14 |
| பல்வகை .. .. | 2 | .. | 2 |
| மொத்த "மானியக் கோரிக்கை 27—கல்வி" — | 2,30,69 | 18,34 | 2,49,03 |

3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், முதலியவற்றிற்காக பிற மானியக் கோரிக்கைகளின்கீழ் 1981-82-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம வருமாறு :—

| (1) | திட்டத்தின் கீழ் வராத செலவு. (2) | திட்டச் செலவு. (3) | மொத்தம. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| பொதுக் கல்வி | | | |
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு— | | | |
| "மானியக் கோரிக்கை 28" சமுதாய வளர்ச்சிப் பணிகள்—ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள | | | |



1981 ஏப்ரல் 27]

| (1) | திட்டத்தின் கீழ் வராத செலவு. (2) | திட்டச் செலவு. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| நகராட்சி உயர்நிலைப் பள்ளி கட்டிட மானியம் | .. | 25 | 25 |
| சமூகக் கல்வி .. | .. | 8 | 8 |
| கோரிக்கை 37—பொதுப் பணி—அரசுப் பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள் .. | 3 | 9 | 12 |
| 266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம் .. | 8,98 | .. | 8,98 |
| (ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு— | | | |
| 459. அலுவலகக் கட்டடங்கள் .. .. | .. | 1 | 1 |
| 477. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு—அரசுப் பள்ளிகள், கல்லூரிகள்முதலியவற்றுக்கான கட்டிடங்கள் .. | 5 | 6,26 | 6,31 |
| கடன்கள் | | | |
| 677. தேசியக் கடன் படிப்பு தவித் தொகைகள் | .. | 45 | 45 |
| தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்குக் கடன்கள் .. .. | .. | 10 | 10 |
| தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன்கள் .. .. | 7 | .. | 7 |
| 767 தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கடன்கள் .. .. .. | 1 | .. | 1 |
| மொத்தம் .. | 9,14 | 14,74 | 23,88 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1981–82-ல் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 273 கோடியாகும்.

4. (1) ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், ஆதிதிராவிடர், பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள், முதலியவற்றிற்கான செலவுகளும் சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள், ஊன முற்றோருக்கான பள்ளிகள் போன்றவற்றிற்கான செலவுகளும் மேற்படி செலவினங்களின் கீழ் வாரா. இந்த இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூ, 42 கோடியாகும்.

(2) மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றிற்கு, அந்தந்தத் துறைகளின் கீழ் தனித்தனியாக ஒதுக்கியுள்ள நிதி மொத்தம் சுமார் ரூ. 17 கோடி. மேற்கண்ட இனங்களுக்கு ஆகும் செலவையும் (ரூ. 42 கோடியும் ரூ. 17 கோடியும்) கணக்கில் கொண்டால், 1981—82-ல் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 332 கோடியாக இருக்கும்.

## 1981-82-ல் கல்விப் பணிகளுக்கான திட்ட நிதி ஒதுக்கீடு:

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277. கல்வி; 477. கல்வி மூலதனச் செலவு; 677. கடன் முதலியன) கல்விக்காக 1981—82ம் ஆண்டில் திட்டப் பணிகளின் செலவு விவரம் வருமாறு (கூட்டல் குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்);—

| | பொறுப் பேற்ற செலவினம். | 1981—82ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| பொதுக் கல்வி. | | | |
| 1 பள்ளிக் கல்வி .. | 12,04 | 3,97 | 16,01 |
| (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட). .. | + 2 | | + 2 |
| 2 முதியோர் கல்வி .. | 75 + 75 | 7 | 82 + 75 |



| | | | |
|---|---|---|---|
| 3 கல்லூரிக் கல்வி .. | 97 + 48 | 47 | 1,44 +48 |
| 4 விளையாட்டும் இளைஞர் நலனும். | 73 +28 | 33 | 1,06 +28 |
| 5 தமிழ் வளர்ச்சி | 8 | 5 | 13 |
| 6 கட்டட வகையில் பொதுப் பணித்துறைச் செலவு. .. | 95 | .. | 95 |
| | 15,52 + 1,53 | 4,89 | 20,41 + 1,53 |
| தொழில் நுட்பக் கல்வி | 1,75 + 9 | 43 | 2,18 + 9 |
| கலைப் பணிகள் .. | 72 | 28 | 1,00 |
| பெரு மொத்தம் | 17,99 + 1,62 | 5,60 | 23,59 + 1,62 |

# II பள்ளிக் கல்வி

## (i) பொது.

1. 1981—82 ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 249 கோடியில், பள்ளிக் கல்விக்கு (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூ. 207 கோடியாகும். 1980 அக்டோபர் 1-ம் தேதி அன்றைய நிலவரப்படி தமிழ் நாட்டில் மொத்தம் 36,675 பள்ளிகள் இருந்தன. அவற்றில் முதல் நிலைப் பள்ளிகள் 27,648; நடு நிலைப் பள்ளிகள் 5,658 ; உயர்நிலைப் பள்ளிகள் 3,247 (1,243 மேல்நிலைப் பள்ளிகள் உட்பட). மைய அரசின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்த 122 பள்ளிகளும் (65 உயர்நிலைப் பள்ளிகளும், 57 மேல்நிலைப் பள்ளிகளும்) மொத்தப் பள்ளிகள் எண்ணிக்கையாகிய 36,675-ல் அடங்கும். அனைத்துப் பள்ளிகளிலும் பணி செய்து வந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 2.67 இலட்சம் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை 91·28 இலட்சம். நிருவாக வாரியான விவரங்களை இணைப்பில் காணலாம்.

2. 1981–82 ஆம் ஆண்டில் (6—11 மற்றும் 11—14 வயதுத் தொகுதிகளுக்காக) 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகளும், (நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து) 250 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகளும், நடுநிலைப் பள்ளிகளுக்கு 500 தமிழாசிரியர் பதவிகளும், மற்றும் 200 பி.எட், தர தலைமை ஆசிரியர் பதவிகளும் ; உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 பி.எட், தர பதவிகளும் ஏற்படுத்தப்படும். நடுநிலைப் பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 250 முழு நேரப் பதவிகளாக உயர்த்தப்படும்.

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் :

3. பள்ளிகளில் உள்ள வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் மக்கள் முயற்சியையும் ஆர்வத்தையும் தூண்டும் வகையில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் அத்திட்ட தொடக்க காலம் முதல் 1980 டிசம்பர் முடிய 6.5 நடந்துள்ளன. அவற்றில் பொது மக்களிடமிருந்து ரூ. 19·23 கோடி மதிப்புள்ள பொருள்கள் பெறப்பட்டுள்ளன. இதில் 1980–81–ல் (31—12—1980 முடிய) பெற்றது ரூ. 3·70 கோடி. பொதுமக்களின் நன்கொடையைக் கொண்டு 1980 டிசம்பர்வரை சுமார் 41 இலட்சம் மாணவர்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 1980–81-ல் 31—12—1980 வரை பயன் பெற்றவர்கள் 49,000 பேர்.

கல்வித்துறை நிருவாகம் :

4. தற்பொழுது தலைமைக் கல்வி அலுவலர்கள் 16 மாவட்டக் கல்வி அலுவலர்கள் 51 ; பெண்கள் பள்ளி ஆய்வாளர்கள் 10 ; பள்ளித் துணை ஆய்வாளர்கள் 463 (பள்ளித் துணை ஆய்வாளர் சரகங்களின் பொறுப்பில் 411 பேர்களும், இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூட உந்து வண்டிகள் பொறுப்பு போன்றவற்றில் மீதம் உள்ளவர்களும்) உள்ளனர். 1981–82 ஆம் ஆண்டில் பெண்கள் பள்ளி ஆய்வாளர் பதவிகள் மேலும் இரண்டு புதிதாக ஏற்படுத்தப்படும. பள்ளிகளோடு நல்ல தொடர்பு வைத்துக் கொள்ளும் வகையில் இத்துறை தமிழகக் கல்வி என்னும் காலாண்டு இதழை வெளியிட்டு வருகிறது.

## (ii) தொடக்கக் கல்வி.

மாணவர் சேர்க்கை :

1. வகுப்புகள் 1—5-க்குரிய 6—11 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 95 22 விழுக்காட்டினரும், வகுப்புகள் 6—8-க்குரிய 11—14 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 61·42 விழுக்காட்டினரும், இதுவரை (1980–81) பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்விரு வயதுத் தொகுதிகளின்கீழ் 1979–80ஆம் ஆண்டில் 1·74



இலட்சம் மாணவ மாணவியரும், 1980–81ஆம் ஆண்டில் 1·93 இலட்சம் பேரும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர். 1980–81ஆம் ஆண்டில் இருந்த 36,675 தொடக்கப் பள்ளிகளில் முதல் நிலைப் பள்ளிகள் (1—5 வகுப்புகள்) 27,648 ; நடுநிலைப் பள்ளிகள் (1—8 அல்லது 6—8 வகுப்புகள்) 5,658. படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 69·11 இலட்சமாகும். வேலை பார்த்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,80,587 ஆகும். ஒட்டு மொத்தமான ஆசிரியர், மாணவர் விகிதம் 1:38 ஆகும்.

2. தொடக்கப் பள்ளியில் சேரும் (6—11 வயது) மாணவ மாணவியர் தொடர்ந்து 5ஆவது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியிலிருந்து நின்று விடும் நிலைமை அண்மை ஆண்டுகளில் சீர்பட்டு வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. அவ்வாறு நின்று விடுவோர் விழுக்காடு 1973–74ஆம் ஆண்டில் 51 விழுக்காடு ஆக இருந்தது. 1979–80-ல் 33 விழுக்காடு ஆக குறைந்துள்ளது. தொடக்கப் பள்ளி நண்பகல் உணவுத் திட்டம், இலவசமாகப் புத்தகங்கள், கற்பலகைகள் வழங்கும் திட்டம் போன்றவை மாணவ, மாணவியர் பள்ளியை விட்டு இடையில் நின்று விடாமல் தொடர்ந்து படிக்கச் செய்ய வேண்டுமென்பதையும் நோக்கமாகக் கொண்டவை. இவற்றோடு 1977–78 முதல் இம்மாநிலத்தில் 1—3 வகுப்புகளில் மாணவர்கள் அனைவரையும் மேல் வகுப்பிற்கனுப்பும் முறை செயல்படுத்தப்படுகிறது.

நண்பகல் உணவுத் திட்டம் :

3. முதல்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1–8 வகுப்புகளில் பயிலும் ஏறத்தாழ 20·25 இலட்சம் மாணவர்கள் நண்பகல் உணவு பெறுகின்றனர். ஆதிதிராவிடர் நலத்துறையும் பிற்பட்டோர் நலத்துறையும் நடத்தி வரும் பள்ளிகளில் பயிலும் சுமார் 1·65 இலட்சம் மாணவரும், இவ்வெண்ணிக்கையில் அடங்குவர். மைய சமையற் கூடப் பகுதிகளில் 4 இலட்சம் பேரும், பிற பகுதிகளில் மீதியுள்ளவர்களும் மதிய உணவு பெறுகின்றனர். 1981–82ஆம் ஆண்டில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக ஏறத்தாழ ரூ. 5·55 கோடி செலவிடப்படும்— மைய சமையற்கூட கட்டடங்களுக்கும், கிடங்குக் கட்டடங்களுக்குமான ரூ. 22 இலட்சம் உட்பட.

4. மைய சமையற்கூடங்கள் இல்லாத பகுதிகளைப் பொறுத்த வரையில் மதிய உணவு மானியம் அந்தந்தத் தொடக்கப் பள்ளிக்கே நேரடியாகக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு மாநில அரசு ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 10 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மானியம் அளிக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 5 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டும் என்று உள்ளது (1—10—1979 முதல் அந்த 5 காசு பங்குத் தொகையை உள்ளாட்சி மன்றங்கள் கட்டாயம் உள்ளாட்சி மன்றப் பள்ளிகள்

அல்லாத பிற பள்ளிகளுக்கும் கொடுத்தாக வேண்டும் என்றும். இதற்காக ஆகும் செலவை ஏற்பளிக்கப்பட்டதாகக் கருதி தொடக்கப் பள்ளிக் கல்விக்கான அரசு மானியம் பெறும்பொழுது கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்றும் ஆணையிடப் பட்டுள்ளது.) இவ்வாறு பெறும் 15 காசு மானியத்தோடு ''கேர்'' நிறுவனத்திலிருந்து இலவசமாக ஆண்டுதோறும் கிட்டும் சுமார் 20,000 டன் உணவையும் தொடக்கப் பள்ளி நண்பகல் உணவுத் திட்டம் பயன்படுத்துகிறது. ஓர் ஆண்டுக்கு மதிய உணவு அளிக்கப்படும் 200 நாட்களில், 100 நாட்களுக்குத் தேவைப்படும் தானியமும், 200 நாட்களுக்குமே தேவைப்படும் எண்ணெயும் ''கேர்'' இலவச உணவு மூலம் பெறப்படுகிறது. மீதி 100 நாட்களுக்கான தானியச் செலவுக்கும். 200 நாட்களுக்குமே ஆகும் மசாலா சாமான்கள், விறகுச் செலவு முதலியவற்றிற்கும் அரசு மானியமாகவும். உள்ளாட்சி மன்றப் பங்குத் தொகையாகவும் பெறப்படும், ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு 15 காசு, என்ற தொகை பயன்படுத்தப்படுகிறது.

5. மைய சமையற்கூடத் திட்டம், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. மைய சமையற்கூடங்களில் சமைத்த உணவு சுற்றுப் புறங்களிலுள்ள பள்ளிகளுக்கு சிக்கனமான முறையில், பெரும்பாலும் வண்டிகள்' சைக்கிள்கள் மூலமும் இன்றியமையாத அளவுக்கு மட்டும் உந்து வண்டிகளின் மூலமும் எடுத்துச்சென்று வழங்கப்படுகிறது. இம்மாவட்டங்களில் இயங்கி வரும் 97 சமையற்கூடங்களும் ''கேர்'' நிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையாகும். அவையும் பிற பகுதிகளைப் போல கேர் இலவச உணவு பெறுகின்றன. இம்மாவட்டங்களில் சுமார் 4 இலட்சம் மாணவர்கட்கு அவை பகல் உணவு வழங்கி வருகின்றன. மைய சமையற்கூடங்களுக்கான முழுச் செலவும் நேரடியாக அரசுப் பணத்திலிருந்து செலவாவதால், இம்மாவட்டங்களில் 5 காசு உள்ளாட்சி மன்றப் பங்குத் தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்தப்படுகிறது.

6. மொத்தம் ரூ.144 இலட்சம் செலவில், தருமபுரி மாவட்டத்தில் (90,000 மாணவர்களுக்குப் பயனளிக்கத்தக்க) 16 மைய சமையற்கூடங்களும்; இராமநாதபுரம் மாவட்டத்தில் (1,76,000 மாணவர்களுக்குப் பயனளிக்கத்தக்க) 32 மைய சமையற்கூடங்களும் ஏற்படுத்துவதற்காக, அச்செலவில் 45 விழுக்காட்டை கேர் நிறுவனத்திடமிருந்து நிதி உதவியாகப் பெற அனுமதி கோரி 1979–80-ல் மைய அரசின் சமுதாய நல அமைச்சகத்துக்கு எழுதப்பட்டது. எனினும் 1979–80–ல் 5 சமையற்கூடங்களுக்கு மட்டுமே ''கேர்'' உதவி பெற மைய அரசு அனுமதித்தது. அந்த 5 சமையற்கூடங்களும் இராமநாதபுரம் மாவட்டத்தில் கட்டப்பட்டு வருகின்றன. 1980–81-ல் இவ்வகையில் இம்மாநிலத்துக்கு ''கேர்'' நிதி உதவி எதுவும் ஒதுக்கப்படவில்லை. 1981–82-ஆம்



ஆண்டுக்கான திட்டத்தின்கீழ் மேலும் சமையற்கூடங்கள் அமைப்பதற்கான ''கேர்'' நிதி உதவியை இம்மாநிலத்திற்கு ஒதுக்கிடுமாறு இவ்வரசு மைய அரசை வேண்டியுள்ளது. அவ்வுதவி கிடைத்தால் 1981–82-ல் தருமபுரி மாவட்டத்தில் மைய சமையற்கூடங்கள் தொடங்கப்படும்.

7. நண்பகல் உணவுத் திட்டத்தை மேலும் நன்முறையில் நிர்வகிப்பதற்காக ஏற்கெனவே இருந்த 2 களப்பணி அதிகாரிகளோடு மேலும் 9 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ''கேர்'' உணவைச் சேமித்து வைப்பதற்காக சென்னையில் ஒன்றும் தூத்துக்குடியில் ஒன்றுமாக இரண்டு கிடங்குகளை ''கேர்'' பண உதவியுடன் கட்டுவதற்காக, 1981–82-ல் ரூ. 17 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## இலவசப் புத்தகங்கள் கற்பலகைகள் வழங்குதல் :

8. 1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும், சிலேட்டும்; இரண்டு, மூன்று வகுப்புகளில் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் 13 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர். 1972–73ஆம் ஆண்டிலிருந்து பாட நூல்கள் தருவதற்கு ஆகும் செலவினைத் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்று வருகிறது. இதற்காக அந்நிறுவனம் இப்பொழுது ஆண்டுதோறும் ரூ. 50 இலட்சம் செலவிடுகிறது. முதல் வகுப்பு மாணவர்கட்கு சிலேட்டுகள் இலவசமாக வழங்கும் வகையில் ஆண்டுதோறும் அரசு சுமார் ரூ. 6 இலட்சம் செலவிடுகிறது.

## அறிவியல் கல்வி :

9. தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் போதனையை மேம்படுத்தும் பொருட்டு, அறிவியல் கருவிகளும் பயிற்றுவிப்பு உபகரணங்களும் வாங்குவதற்காக ஒவ்வொரு முதல் நிலைப் பள்ளிக்கும் முன்னூறு ரூபாய், ஒவ்வொரு நடுநிலைப் பள்ளிக்கும் ஆயிரம் ரூபாய்; வீதம் இதுவரை 12,620 முதல் நிலைப் பள்ளிகளுக்கும், 4,200 நடுநிலைப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 1981–82-ல் மேலும் 200 நடுநிலைப் பள்ளிகளுக்கு மொத்தம் ரூ. 7·50 இலட்சம் அறிவியல் கருவி மானியமாக வழங்கப்படும். ஒவ்வொரு நடுநிலைப் பள்ளிக்குமான மானியத் தொகை ரூ. 3,750 ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படும். பள்ளி நிர்வாகத்தினர் பணத்திலிருந்து அல்லது பெற்றோர்-ஆசிரியர் சங்கப் பணத்திலிருந்து மற்றொரு ரூ. 3,750 இவ்வகையில் செலவிட வேண்டும்.

10. தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் கற்பிக்கும் பொழுது சுற்றுச் சூழலையும் ஆங்காங்குள்ள வசதிகளையும் பயன்படுத்துவது குறித்து ஆசிரியர்களுக்கு உதவுவதற்கான கையேடுகள் ''யூனிசெப்'' உதவியுடன் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

11. தொடக்கப் பள்ளி மாணவர்களிடையே உடல் நலக் கல்வி புகட்டுவதற்கான ''கேர்'' நிறுவன உதவி பெற்ற திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

## தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள்:

12. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதற் பொருட்டு உள்ளாட்சி நிறுவனங்கட்கும் தனியார் பள்ளிகட்கும் மானியம் வழங்கப்படுகிறது. 1974–75லிருந்து தொடக்கப் பள்ளிக்கட்டிட மானியம் ரூ. 10,000/17,000 ஆகவும் நிர்வாகத்தினர் தர வேண்டிய குறைந்த பட்ச பங்குத் தொகை ரூ. 5,000/8,000 ஆகவும் உள்ளன. 1981–82ல் தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு கட்டட மானியம் தர ரூ. 3 இலட்சமும் நகராட்சி தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டட மானியம் தர ரூ. 24 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ. 750 இலட்சம் சமுதாய வளர்ச்சித் துறையின் வரவு செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுத் தொடக்கப் பள்ளி கட்டடங்களுக்கு ஒதுக்கியுள்ள தொகை ரூ. 23 இலட்சமாகும்.

## உள்ளாட்சி மன்றப் பள்ளிகள்:

13. தமிழ்நாட்டிலுள்ள 33,306 தொடக்கப் பள்ளிகளுள் ஏறத்தாழ 29,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைந்துள்ளன. அந்த 29,000 பள்ளிகளில் 23,312 பள்ளிகளை (20,199 முதல் நிலைப் பள்ளிகளும், 3,113 நடுநிலைப் பள்ளிகளும்) ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தி வருகின்றன. தொடக்கக் கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்கட்கு மானியம் வழங்குவதற்கான திருத்திய முறைப்படி (ஒரு ரூபாய் நிலவரிக்கு 45 காசு என்று வசூலிக்கப்படும்) உள்ளூர் வரியில் 4/9 பாகம் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்கு வழங்கப்படுகிறது 971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் ஒவ்வொரு 1ட்டாரத்திலுள்ள மக்கள் தொகைக்கு தலைக்கு ரூ. 6 வீதம் கணக்கிட்டு வழங்கும் மானியமும், ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்குச் செல்கின்றது. தொடக்கக் கல்விக்காக ஆகும் செலவில் ஒஞ்சியதை வட்டார வகைப் பாட்டிற்கு ஏற்ப, அரசும் ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து ஏற்கின்றன.



14. தொடக்கப் பள்ளிகள் 1492-ஐ (1,094 முதல்நிலைப் பள்ளிகளும், 398 நடுநிலைப் பள்ளிகளும்) நகராட்சிகளும், சென்னை, மதுரை மாநகராட்சிகளும் நடத்தி வருகின்றன. நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன், அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக்காட்டுக்கு ஈடான தொகையை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள் மதுரை மாநகராட்சி ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கில் துண்டுவிழும் முழுத் தொகையினையும் அரசே ஈடு செய்து வருகின்றது.

## (iii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி.

1. 1980–81ல் தமிழ்நாட்டில் 14–16 வயதுத் தொகுதியினர் 16·87 இலட்சம் பேர்களுள் 40 விழுக்காடாகிய 6·73 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9–10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1980–81-ல் மொத்தம் இருந்த உயர்நிலைப் பள்ளிகள் 3247. அவற்றில் 1,243 பள்ளிகளில் மேல்நிலைப்பள்ளி வகுப்புகளும் இருந்தன. இந்த 3,247 பள்ளிகளுக்கு மேலாக மைய அரசின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்த 122 பள்ளிகளும் (உயர்நிலைப் பள்ளிகள் 65-ம் மேல் நிலைப் பள்ளிகள் 57-ம்) இருந்தன. இவ்வனைத்துப் பள்ளிகளிலும் மேல் நிலைப் பள்ளிகளில் 14·58 இலட்சம் பேரும், உயர்நிலைப் பள்ளிகளில் 7 59 லட்சம் பேரும் ஆக மொத்தம் 22·17 லட்சம் பேர்கள் பயின்று வந்தனர். அந்த 22 17 லட்சம் பேர்களுள்—8-ம் வகுப்பிலும் கீழ் வகுப்புகளிலும் 12 78 லட்சம் பேர்களும், 9–10 வகுப்புகளில் 6·73 லட்சம் பேர்களும், மேல்நிலைப் பள்ளி இரண்டாண்டு வகுப்புகளிலும் 2·66 லட்சம் பேர்களும் பயின்று வந்தனர்.

2. 1980–81-இல் அரசுப் பள்ளிகள் 74, நகராட்சிப் பள்ளிகள் 2, தனியார் பள்ளிகள் 34, (அவற்றுள் சிறுபான்மையினர் பள்ளிகள் 21) ஆக மொத்தம் 110 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன.

## அறிவியல் கல்வி:

3. அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் 1980–81 முடிய 1018 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. இத்திட்டத்தின்கீழ் பள்ளிக்கு ரூ. 18,000 வீதம் அறிவியல் தளவாடங்களை மொத்தமாக பள்ளிக் கல்வி இயக்குநரே வாங்கி அனுப்பி வைக்கிறார். 1980–81லிருந்து அரசு உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை இத்திட்டத்தின்கீழ் ஆய்வுக்கூட கட்டட வகையில் பள்ளிக்கு ரூ. 80,000 செலவிடப்படுகிறது. உள்ளாட்சி மன்ற மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகள் கட்டடச் செலவில் 60 சதவிகிதம் அல்லது ரூ. 48,000,

இதில் எது குறைவோ அது, என்ற அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் ஆய்வுக் கூடக் கட்டிட மானியம் பெறுகின்றன. 1981-82-ல் மேலும் 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடம் அமைக்கப்படும்.

4. இதுவரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர் நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம் கல்வி மாவட்டங்கள் 42-ல் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி செயல்பட்டு வருகிறது. மேலும் நான்கு வண்டிகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1981—82-ல் மேற்கொண்டு 5 வண்டிகள் வாங்கப்படும்.

5. மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை வளர்ப்பதற்கான மாநில அறிவியல் கண்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 59-ல் அறிவியல் பயிற்றுவிக்கும் வசதிகள் யூனிசெப் உதவியுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றிலும் ஆய்வுக்கூட மற்றும் தொழிற்கூட உதவியாளர் பதவி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

6. உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன் பொருத்தமான நூலக புத்தகங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ. 11 இலட்சம் இதற்குச் செலவிடப்பட்டது. 1981—82-ல் இப்பணிக்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஒலி-ஒளிக் கல்வி:

7. பெரும்பாலான பள்ளிகள் சுய முயற்சியின் மூலம் அல்லது வட்டார மக்களின் முயற்சியின் மூலம் வானொலிப் பெட்டிகளைப் பெற்றுள்ளதனால் அவை வானொலி கல்வி ஒலிபரப்பின் மூலம் பயன்பெறுகின்றன. மீதியுள்ள பள்ளிகளுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்கிட இயலும் வகையில் 4,000 வானொலிப் பெட்டிகளை இலவசமாகத் தர யூனிசெப் இசைந்துள்ளது. 750 உயர்நிலைப் பள்ளிகளில் 16 மி.மீ. திரைப்படம் காட்டும் கருவிகளும், 1,300 பள்ளிகளில் துண்டுப்படம் காட்டும் கருவிகளும் உள்ளன. அந்தந்தப் பள்ளிகளில் ஒலி-ஒளிக் கல்விக்கென மாணவர்களிடம் வசூலிக்கும் சிறப்புக் கட்டணத் தொகையைக் கொண்டு ஒலி-ஒளிக் கருவிகள் வாங்கலாம். விலை உயர்ந்தனவும் மிகப் பயனுள்ளவையுமான திரைப்படங்களை அத்தொகையிலிருந்து வாங்க இயலாதாகையால் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தில் உள்ள 'மாநில திரைப்படச் சுருள் சேமிப்பகம்' பள்ளிகளுக்கு திரைப்படங்களையும் துண்டுப் படங்களையும் கடனாக வழங்கி வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் அந்தச் சேமிப்பு நிலையத்தை வலுப்படுத்த கல்வித் திரைப்படங்களுடன் துண்டுப் படங்களும் ரூ. 1·50 இலட்சம் செலவில் வாங்கப்பட்டன. 1981—82 இல் இவ்வகையில் மேலும் ரூ. 50,000 செலவிடப்படும்.



8. சென்னையிலும் அதன் அண்மையிலும் உள்ள பள்ளிகள் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் கல்வி ஒளிபரப்பின் மூலம் பயனடைகின்றன. பள்ளிக் கல்வி இயக்குநரகத்தில் உள்ள 'தொழில் நுட்ப வளர்ச்சியைக் கல்விப் பணிக்குப் பயன்படுத்துவதற்கான அமைப்பு' பள்ளிகள் ரேடியோ மற்றும் தொலைக்காட்சி வசதிகளை கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்த உதவும் வகையில் ஆசிரியர்களுக்குப் பல பயிற்சிகளை நடத்தி வருகிறது. சென்னை நிலைய ஒளிபரப்புப் பகுதியில் உள்ள பள்ளிகள் தம் மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் ரூ. 2 வசூலித்து தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கவும் பராமரிக்கவும் பயன்படுத்திக் கொள்ள அரசு ஏற்கெனவே அனுமதித்துள்ளது. கிராமப்புறங்களிலுள்ள 32 தொடக்கப் பள்ளிகளில் 1979—80 லும், 80-81லும் தொலைக் காட்சிப் பெட்டிகள் அரசின் செலவில் வாங்கி அமைக்கப்பட்டன. 1981—82-ல் மேலும் 20 பள்ளிகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்க ரூ. 1 இலட்சம் செலவிடப்படும்.

## உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் :

9. நகராட்சி மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிட மானியம் தர 1981—82-ல் ரூ. 40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது—நகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களுக்காக ''மானியக் கோரிக்கை-28''ன்கீழ் ஒதுக்கியுள்ள ரூ. 25 இலட்சம் உட்பட. அரசு உயர்நிலைப் பள்ளிகளின் கட்டிடப் பணிகளுக்காக 1981—82-ல் ரூ. 98 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது (முன் ஆண்டுகளில் ஏற்பளித்த பணிகளுக்கு 1981—82 இல் ஆகும் செலவுக்காக ரூ. 58 இலட்சமும், புதிய கட்டிட வேலைகளுக்காக ரூ. 40 இலட்சமும்).

## படிப்புச் சலுகைகளும், படிப்பு உதவித் தொகைகளும்:

10. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி எல்லா நிலைகளிலும் இலவசமாகும். கிராமப் புறத்தைச் சேர்ந்தவர்களும், கல்வியில் சிறந்து விளங்குகிறவர்களுமான மாணவர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டுக்கு நான்கு மாணவர்கள் வீதம் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு முறை உதவித் தொகை பெற்ற மாணவர் பள்ளிக் கல்வியை

(மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகையைப் பெறுவார். இது தவிர பர்மா, இலங்கை அகதிகள், முன்னாள் இராணுவத்தினர், ஆதிதிராவிடர் பழங்குடியினர், அரசியல் தியாகிகள் ஆகியோரது குழந்தைகளுக்கு தாராளமாகக் கல்விச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள் மற்றும் பிற்பட்ட வகுப்பினர்களைச் சார்ந்த மாணவர்களுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறையும், பிற்பட்டோர் நலத்துறையும் படிப்புதவித் தொகைகளும் வேறு பல கல்விச் சலுகைகளும் வழங்கி வருகின்றன.

நடமாடும் மருத்துவ வண்டிகள்:

11. சென்னை தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் மருத்துவ சோதனைக்கென நடமாடும் மருத்துவ வண்டிகள் இயங்கி வருகின்றன.

உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களை ஊக்குவித்தல்:

12. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களைச் சார்ந்த மாணவர்கள் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு 1981–82 ஆம் ஆண்டில் 500 உயர்நிலைப் பள்ளிகளில் 8, 9, 10 வகுப்புகளில் பயிலும் அம்மாணவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் ஆகிய பாடங்களில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் மொத்தம் 1½ மணிநேரம் உரிய ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது. இந்த முன்னோடித் திட்டத்துக்காக 1981–82-ஆம் ஆண்டு ரூ. 12·5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்:

13. ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்திய மாணவர்களிடம் 1978–79 ஆம் ஆண்டிலிருந்து கற்பிப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. அம்மாணவர்களின் பெற்றோர்களுடைய வருமானம் எவ்வளவாக இருந்தாலும் இச்சலுகை உண்டு (அப்பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்தியரல்லாத பிற மாணவர்கள் அக்கட்டணம் செலுத்த வேண்டும்). இச்சலுகையால் ஆங்கிலோ இந்தியப் பள்ளி நிர்வாகங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட மானியம் தரப்படுகிறது. தற்பொழுதுள்ள 43 ஆங்கிலோ இந்திய உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் 38,000 மாணவர்கள் பயிலுகின்றனர்.



மட்ரிகுலேசன் பள்ளிகள்.

14. தமிழ்நாட்டில் 60 மெட்ரிக்குலேசன் பள்ளிகள் உள்ளன. அவற்றில் பயிலுவோர் 41,000 மாணவர்கள். இவை மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்கின்றன. பாடமொழி ஆங்கிலமாகும். இவை அரசு மானியம் பெறுவதில்லை. மெட்ரிக்குலேசன் பள்ளிகளுக்காகத் தனி ஆயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

(IV) பள்ளிப் பாடங்கள், பாடத்திட்டம், பள்ளிப் பாடநூல்கள்

1972–73-லிருந்து 1976–77-க்குள் படிப்படியாக 10 ஆண்டுப் பள்ளிப் படிப்புக்கான புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. கல்வி வல்லுநர்களைக் கலந்து பல்வேறு பாடங்களில் அப்புதிய பாடத்திட்டத்தின் கீழ் உள்ள அதிகப்படி சுமை 1978–79 முதல் அனைத்து வகுப்புகளிலும் குறைக்கப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் 1-3, 6 வகுப்புகளுக்கான கணித பாட புத்தகங்களின் புதிய வடிவங்கள் வெளியிடப்பட்டன. 4—6 வகுப்புகளுக்கு 'நீதிக் கதைகளும்'' வெளியிடப்பட்டன. இனிவரும் ஆண்டுகளில் பின்வரும் அட்டவணைப்படி பல்வேறு வகுப்புகளுக்கான பல்வேறு பாடங்களுக்கான புத்தகங்களின் புதிய வடிவங்களைத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் தயாரித்து வெளியிட இருக்கிறது :—

பாடப்புத்தகங்களின் புதிய வடிவங்கள் அமுலுக்குவர இருக்கும் வகுப்புகள்.

| ஆண்டு. | கணிதம். | புவியியல். | அறிவியல். | வரலாறு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1981–82 | 4, 7, 9 | 4, 6 | 3, 4, 6 | 3, 4, 6 |
| 1982–83 | 5, 8,10 | 5, 7, 9 | 5, 7, 9 | 5, 7,9 |
| 1983–84 | .. | 8, 10 | 8, 10 | 8, 10 |
| 1984–85 | .. | .. | .. | .. |

| ஆண்டு. | ஆங்கிலம், | தமிழ் | ஆங்கில துணைப் பாடம் | தமிழ் துணைப் பாடம் | தமிழ் இலக்கணம். |
|---|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1981–82 | 3 | 1, 3 | .. | 9 | .. |
| 1982–83 | 4, 6 | 4, 6 | 6 | 6 | .. |
| 1983–84 | 5, 7, 9 | 5, 7, 9 | 7, 9 | 7 | 9 |
| 1984–85 | 8, 10 | 8, 10 | 8 | 8 | 8, 10 |

[1981 ஏப்ரல் 27

2. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாட நூல்கள் மொத்த விற்பனையாளர்களாக உள்ள 51 கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மாநிலம் முழுவதும் விநியோகிக்கப்படுகின்றன.

3. தமிழ்நாட்டுக்கு மைய அரசு (ஆண்டுக்கு சுமார் 5,000 டன் வீதம்) ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக் கொண்டு நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் வேலையையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமே செய்துவருகிறது. 1979 அக்டோபர் முதல் 1980 ஆகஸ்டு முடியவுள்ள காலத்தில் மொத்தம் ரூ. 2.31 கோடி மதிப்புள்ள மலிவு விலை நோட்டுப் புத்தகங்கள் தயாரித்து விற்கப்பட்டன.

## (V) ஆசிரிய பயிற்சி

இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்திட, இம்மாநிலத்தில் தற்போது 79 ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் உள்ளன (இளஞ்சிறார் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் நான்கு, ஆங்கிலோ-இந்திய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று, லேடி விலிங்டன் மற்றும் புனித கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் கல்லூரிக்கு ஒன்றாக உள்ள செகண்டரி கிரேடு பயிற்சி வகுப்புகள் இரண்டு ஆகியவை உட்பட). கடந்த பல ஆண்டுகளாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவில் நிலவி வருவதால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஒரு ஆண்டு விட்டு மறு ஆண்டு தான் மாணவர்கள் அதுவும் குறைந்த எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். கடைசியாக 1979-80-ல் மாணவர்கள் சேர்க்கப் பட்டார்கள். மீண்டும் 1981-82-ல் மாணவர்கள் சேர்க்கப்படுவர்.

2. பள்ளி ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழி கற்பிப்பதில் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் ஏற்கனவே இருந்தவை ஒன்பதும், 1981 சனவரியில் புதிதாகத் தொடங்கிய ஒன்றும் சேர்த்து ஆக மொத்தம் பத்து ஆகும். இவை 1980-81-ல் 6—8 மற்றும் 9—10 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத் தரும் ஆசிரியர்கள் 3,900 பேருக்கு மூன்று வார அல்லது நான்கு வாரப் பயிற்சிகள் அளித்தன.

## (VI) தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம்.

பள்ளிக் கல்வி இயக்குநரே தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் இயக்குநரும் ஆவார். இந்நிறுவனம் மேல்நிலைப் பள்ளிக் கல்வி நிலைவரை கல்வியாராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றைக் கவனித்துவருகிறது.



1981 ஏப்ரல் 27]

2. தொடக்கக் கல்வியைச் சார்ந்தவையும், யுனிசெப் உதவி பெற்றுவருவனவுமான பின்வரும் சோதனைத் திட்டங்களை இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது:—

(1) "தொடக்கக் கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பிக்கும் திட்டம்"..

(2) "சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி".

(3) தொடக்கக் கல்வி வாய்ப்புகளை பரவலாக்குதல்: 1980-81-லிருந்து முதல் திட்டம் மேலும் நூறு தொடக்கப் பள்ளிகளுக்கும் இரண்டாவது திட்டம் மேலும் மூன்று மையங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

3. "மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதி" (UNFPA) தரும் சுமார் ரூ. 25 இலட்சம் உதவித்தொகையைக் கொண்டு 1980 ஏப்ரல் முதல் 1983 மார்ச் முடியவுள்ள மூன்றாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியைச் செயல்படுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு ஏற்பளித்துள்ளது. மாநில அரசும் தன் பணத்திலிருந்து இத்திட்டத்திற்காக அம்மூன்றாண்டு காலத்தில் ரூ. 3 இலட்சம் அளவில் செலவிடும். தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனமே இத்திட்டத்திற்கு பொறுப்பு வகிக்கிறது.

4. 1—3 வகுப்புகளில் பயிற்றுவிக்கும் 15,000 இளநிலை (ஹையர் கிரேடு) ஆசிரியர்களுக்கு இந்நிறுவனம் 300 சிறப்பு மறு பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகிறது. பின்வரும் முக்கியமான திட்டங்களையும் இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது—அதாவது (1) இளநிலை ஆசிரியர்களுக்கான "அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப்" பாடமுறைப் பயிற்சியை நடத்துதல், (2) மைசூரிலுள்ள "இந்திய மொழிகளுக்கான மைய அரசு நிறுவன" உதவியுடன் அயல்நாடுகளில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் பயிற்றுவிப்பதற்கான பாட முறைகளை உருவாக்குவதற்கான திட்டம் ஆகியவற்றையும் இந்நிறுவனம் கவனித்து வருகிறது.

5. மைசூரில் உள்ள இந்திய மொழிகளுக்கான மைய அரசு நிறுவன உதவியுடன் இந்நிறுவனம் 1979-80, 1980-81 ஆண்டுகளில் முறையே 8, 9-ம் வகுப்புத் தமிழ் ஆசிரியர்களுக்கு அஞ்சல் பாட வகுப்புக்களை நடத்தியது. 1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டம் 10 ஆம் வகுப்புத் தமிழ் ஆசிரியர்களுக்கு விரிவாக்கப்படும்.

6. சென்னை, மதுரை, காரைக்குடி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ஆசிரியர்களுக்கான "தொடர் கல்வி மையங்கள்" நன்கு நடைபெறுகின்றன அவை ஆசிரியர்களுக்கு ஆலோசனை

தருகின்றன. ஆண்டுக்கு 4,800 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவற்றை நடத்தும் செலவில் பாதியை தேசீய கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனமும் பாதியை மாநில அரசும் ஏற்கின்றன. இத்தகைய மையங்கள் மேலும் நான்கை நிறுவுவதற்கான கருத்துரு உள்ளது.

7. பிரிட்டிஷ் கவுன்சிலின் உதவியுடன் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இந்நிறுவனம் நடத்திவரும் ஆசிரியர் நிலையங்களில் ஆசிரியர்கள் கல்விப் பிரச்சினைகள் குறித்து அவ்வப்பொழுது கருத்தரங்குகள், பயிற்சி முகாம்கள் முதலியன நடத்தி தங்கள் திறனை வளர்த்துக் கொள்கின்றனர்.

## (VII) பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பணியாளர் நலன்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் சுமார் 95,000 பேர்களும் 1—6—1981 முதல் அரசுப் பணியாளர்களாக ஆவார்கள் என்றும் அரசு ஊழியர்களுக்குரிய அனைத்துச் சலுகைகளும் அவர்களுக்கு அந்தத் தேதி முதல் கிட்டும் என்றும் அரசு ஆணை வெளியிட்டு உள்ளது. இது பற்றி மேலும் விரிவான விளக்கங்கள் விரைவில் வெளியிடப்படும்.

2. இடைநிலை (செகண்டரி கிரேடு) தகுதி பெற்ற இளநிலை (ஹையர் கிரேடு) ஆசிரியர்களை அத்தகுதி பெற்றபின் அடுத்த செப்டம்பர் 1-ம் தேதி முதல் உடனுக்குடன் (யாதொரு தனி ஆணையுமின்றி) இடைநிலைக்கு உயர்த்தி இடைநிலைச் சம்பளம் தரவேண்டும் என்ற நிலையான அரசாணை ஒன்று 1979 ஏப்ரலில் வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள இளநிலை ஆசிரியர்களும், இடைநிலைத் தகுதிபெற்று இடைநிலைச் சம்பளம் பெற வகை செய்து தமிழ் நாட்டு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் 5 மாத அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பாடமுறை ஒன்றை நடத்தி வருகிறது. படிப்படியாக இளநிலை ஆசிரியர்கள் அனைவரும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவர்.

### தனியார் பள்ளிகள்.

3. 1978 ஆம் ஆண்டு இயற்றிய தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டமும், அச்சட்டத்தின்கீழ் வகுத்த விதிகளும் 1—12—1974 முதல் அமுலுக்கு வந்தன. அந்தச் சட்டத்தையும் விதிகளையும் எதிர்த்து சிறுபான்மையினர் கல்வி நிலையங்கள் பல உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தொடுத்தன. அச்சட்டத்தின் பல பிரிவுகளும் விதிகளில்



பலவும் சிறுபான்மையினர் கல்வி நிலையங்களுக்கு பொருந்த மாட்டா என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதன் மேல் இவ்வரசு டெல்லி உச்ச நீதிமன்றத்தில் செய்துள்ள மேல் முறையீடுகள் மீது விரைவில் தீர்ப்பளிக்கப்படும் எனக் கருதப்படுகிறது.

4. சிறுபான்மையினர் அல்லாத பிற தனியார் பள்ளிகள் எல்லாம் தங்கள் பணியாளர்களை வேலை வாய்ப்பகங்கள் மூலமாகத் தான் தேர்ந்தெடுத்து நியமனம் செய்ய வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. அப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பதவிகளில் 18 விழுக்காடு பதவிகளை ஆதி திராவிடர் மற்றும் மலை சாதியினருக்கும், 50 விழுக்காடு பதவிகளை பிற்பட்டோருக்கும் ஒதுக்க வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

5. தனியார் பள்ளி ஆசிரியர்களும், அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்படும் விடுப்பு நலன்கள் அனைத்தையும் பெறத் தகுதியுடையவர்களாவர். அரசுப் பணியாளர்கள் ஏற்கெனவே பெற்று வந்த பின்வரும் சலுகைகளும் அண்மையில் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன :—

(அ) அரசு நிதியிலிருந்து பின்வரும் முன்பணங்களைத் தருதல்:

(1) விழா முன் பணம்.

(2) கைத்தறி/காதி துணி வாங்க முன் பணம்.

(3) சைக்கிள் வாங்குவதற்கான முன் பணம்.

(ஆ) சி, டி பிரிவின் கீழ்வரும் ஆசிரியர்களுள் கண்ணாடி தேவைப்படுபவர்கள் தங்கள் பணிக் காலத்தில் ஒரு முறை கண்ணாடி வாங்கும் செலவை ரூ. 40-க்கு மேற்படாமல் அரசுப் பணத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் சலுகை.

தனியார் பள்ளி ஆசிரியர்களில், சி, டி பிரிவுகளைச் சார்ந்தவர்களுள் தேவைப்படுபவர்களுக்கு காது ஒலி வழங்கும் கருவிகளை இலவசமாக வழங்கும் சலுகை 1981—82-ல் விரிவாக்கப்படும்.

6. ஆசிரியர்களுக்கான தேசிய நலநிதியின் பண வசதியைப் பயன்படுத்தி தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வசதி தருவதற்கான திட்டம் ஆய்வில் உள்ளது.

### ஓய்வூதியம்.

7. மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தும் தாராள ஓய்வூதிய விதிகள் தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளில் பணியாற்றி 1—6—1970 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளிகளிலிருந்து

1—4—1972 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களுக்கும் விரிவு படுத்தப்பட்டு உள்ளன. அவர்கள் ஓய்வூதியம், பணிக்கொடை முதலியவற்றை அரசுப் பணியாளர்களைப்போல பெறுகின்றனர். ஓய்வுபெற்ற பிறகு ஓய்வூதியம் பெறுவதற்கான இறுதி ஆணை பிறப்பிக்கப் படுவதில் ஏற்படும் காலத்தாழ்வினால அல்லலுறாமலிருக்க தற்காலிக ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை பெறவும் (அரசு ஊழியர்களைப் போலவே இவர்களுக்கும்) வழி செய்யப்பட்டுள்ளது. 1—4—1972-க்கு முன் தனியார் பள்ளிகளிலிருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும் ஓய்வூதியச் சலுகையை விரிவாக்க அரசு முடிவு செய்துள்ளது.

8. பணியிலிருக்கும் போது ஒருவர் இறந்து விட்டால் அவரது குடும்பத்திற்கு ரூ. 10,000 வழங்குவதற்கான " குழு ஈட்டுறுதித் திட்டம் " தனியார் மற்றும் உள்ளாட்சிமன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்துவதாகும்.

## ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி.

9. ஆசிரியர்களும் அவர்கள் குடும்பத்தினரும் வறுமை முதலியவற்றால் வாடும்பொழுது இந்நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படுகிறது. ஆசிரியர் நாளன்று 1980—81-ல் கொடிகள் விற்பதன் மூலம் 1980 டிசம்பர் வரை வசூல் ஆன தொகை ரூ 4 30 இலட்சம் ஆகும். இப்பொழுது கையிருப்பில் உள்ள தொகை ரூ. 50 இலட்சம் ஆகும். 1980—81-ல் இந்த நிதிப் பணத்திலிருந்து ஆசிரியர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் உதவித் தொகையாக மொத்தம் ரூ. 44,000 வழங்கப்பட்டது.

10. 1977—78-லிருந்து ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு தொழிற் படிப்பு படிக்க படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. பணியிலுள்ள ஓய்வுபெற்ற, மற்றும் இறந்துவிட்ட ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இப்படிப்புதவித் தொகைகள் கிட்டும். பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் ஆகிய படிப்புகளுக்கு மொத்தம் ஆண்டுக்கு 80 படிப்புதவித் தொகைகள் புதிதாக அளிக்கப்படுகின்றன. இப்படிப்புதவித் தொகையின் மதிப்பு ஆண்டுக்கு ரூ. 500 ஆகும்.

## ஆசிரியர்களுக்கான மாநில விருதுகள்.

11. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் உள்ள உயர்நிலை பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும் ஆண்டுதோறும மாநில அரசு விருதுகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. விருது பெறுபவர் ஒவ்வொருவருக்கும் ஒரு



வெள்ளிப் பதக்கமும் ஒரு சான்றிதழும், ரொக்கப் பணம் ரூ. 500-ம் அளிக்கப்படுகின்றன. ஆண்டு தோறும் மாநில முழுவதுமுள்ள ஆங்கிலோ-இந்தியப் பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், மெட்ரிகுலேசன் பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும் விருது வழங்கவும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

# III மேல்நிலைப் பள்ளிக் கல்வி

மேல்நிலைப் பள்ளிக் கல்வி (10+2+3 ஆண்டு முறைக் கல்வியின் +2 நிலை) தமிழ்நாட்டில் 1978—79 முதல் தொடங்கப் பட்டது. இரண்டாண்டு மேல்நிலைப்பள்ளிப் படிப்பின் முதலாண்டு வகுப்பு 1978—79-லும், இரண்டாமாண்டு வகுப்பு 1979—80-லும் தொடங்கப்பட்டன.

2. பின்வரும் விவரப்படி 1980—81-ல், 1,243 மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வந்தன :—

| பள்ளி வகை. | மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்ட ஆண்டு. | | | மொத்தம். |
|---|---|---|---|---|
| | 1978—79 | 1979—80 | 1980 | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| எஸ்.எஸ்.எல்.சி. .. | 870 | 152 | 150 | 1,172 |
| ஆங்கிலோ-இந்தியன் | 24 | 2 | .. | 26 |
| மெட்ரிகுலேசன் .. | 18 | 7 | 6 | 31 |
| தொழில்நுட்பப் பள்ளி | .. | 14 | .. | 14 |
| | 912 | 175 | 156 | 1,243 |

(மைய அரசின் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்த 57 மேல்நிலைப் பள்ளிகளின் மேல்நிலைப்பள்ளி வகுப்புகளில் 8,000 மாணவர்கள் பயின்று வந்தனர். மேற்கண்ட 1,243 பள்ளிகள் என்ற எண்ணிக்கையில் இந்த 57 பள்ளிகள் சேர்க்கப்பட

வில்லை) 1980–81-ல் இந்த 1,243 மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு இருந்தது :—

| (1) | மாணவர். (2) | மாணவியர். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| முதலாண்டு வகுப்பு .. | 88,577 | 49,815 | 1,38,392 |
| இரண்டாம் ஆண்டு வகுப்பு | 75,190 | 44,006 | 1,19,196 |
| மொத்தம் .. | | | 2,57,588 |

கூடுதல் பணியாளர்கள்.

3. 1978–79-ல் மேல்நிலைப் பள்ளிகளில் கலை, அறிவியல் பாடங்களை கற்றுத் தருவதற்கான ஆசிரியர் தேவையில் பெரும்பகுதி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை (முழுத் தகுதி பெற்றவர்களும் பெறாதவர்களும்) மேல்நிலைப் பள்ளிகளில் நியமித்து பூர்த்தி செய்யப்பட்டது. மேற் கொண்டு தேவையாய் இருந்த அப்பாட ஆசிரியர்கள் தேவையை பூர்த்தி செய்ய அவ்வாண்டில் 1,300 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப் பட்டன. மேல்நிலைப் பள்ளிகளுக்கான கூடுதல் ஆசிரியர் பதவிகள் 1979–80-ல் 2,490-ம், 1980–81-ல் 2,100-ம் ஏற்படுத்தப்பட்டன. 1980–81-ல் உடற்பயிற்சி இயக்குநர் பதவிகள் 200 ஏற்படுத்தப் பட்டன. 400 மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்கனவே ஆய்வுக்கூட உதவியாளர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1981–82-ல் மேலும் 500 ஆய்வுக் கூட உதவியாளர் பதவிகள் ஏற்படுத்தப்படும்.

4. கடந்த மூன்று ஆண்டுகளில் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு மொத்தம் ரூ. 28 இலட்சம் செலவில் பணியிருப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. அதில் ரூ. 18 இலட்சத்தை தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் ஏற்றுக்கொண்டது. 1981–82 லும் இவ்வகையில் பாடநூல் நிறுவனம் உதவும்.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள்.

5. மொத்தம் 944 மேல்நிலைப் பள்ளிகளில் 1980–81-ம் ஆண்டில் தொழிற் பாடங்கள் கற்றுத் தரப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற்பாடங்கள் இருந்தன. மொத்தம் 1,510 தொழிற்பாடங்கள் கற்றுத் தரப்பட்டன. மேல



நிலைப்பள்ளிகளில் 1980–81-ல் பயின்று வந்த 2.58 இலட்சம் மாணவர்களில் 22 விழுக்காடு அதாவது 57,093 பேர்கள் பின் வரும் விவரப்படி தொழிற்பாடங்களை பயின்று வந்தனர்:—

| தொழிற்பாடம் எந்தப் பெரும் பிரிவைச் சார்ந்தது என்பது. | மேல்நிலைப் பள்ளிகளில் 1980–81-ல் பயின்ற மாணவ—மாணவியர் எண்ணிக்கை. முதலாண்டு. | | |
|---|---|---|---|
| (1) | மாணவர். (2) | மாணவியர். (3) | மொத்தம். (4) |
| 1. வேளாண்மை .. | 2,829 | 27 | 2,856 |
| 2. மனையியல் .. | 20 | 1,552 | 1,572 |
| 3. வாணிகத்துறை .. | 10,482 | 5,533 | 16,015 |
| 4 பொறியியலும் தொழில் நுட்பவியலும். | 9,113 | 44 | 9,157 |
| 5. உடல்நலம் .. | 170 | 2,153 | 2,323 |
| 6. பலவகை .. | 16 | 39 | 55 |
| மொத்தம் .. | 22,630 | 9,348 | 31,978 |

| தொழிற்பாடம் எந்தப் பெரும்பிரிவைச் சார்ந்தது என்பது. | மேல்நிலைப் பள்ளிகளில் 1980–81-ல் பயின்ற மாணவ—மாணவியர் எண்ணிக்கை. இரண்டாம் ஆண்டு. | | |
|---|---|---|---|
| (1) | மாணவர். (5) | மாணவியர். (6) | மொத்தம். (7) |
| 1. வேளாண்மை .. | 2,201 | 27 | 2,228 |
| 2. மனையியல் .. | 9 | 1,605 | 1,614 |
| 3. வாணிகத்துறை .. | 8,239 | 4,339 | 12,578 |
| 4. பொறியியலும் தொழில் நுட்பவியலும். | 6,232 | 42 | 6,274 |
| 5. உடல் நலம் .. | 152 | 2,181 | 2,333 |
| 6. பலவகை .. | 23 | 65 | 88 |
| மொத்தம் .. | 16,856 | 8,259 | 25,115 |

[1981 ஏப்ரல் 27

6. மேல்நிலைப் பள்ளித் தொழிற் பாடங்களுக்கான ஆசிரியர் தேவையில் ஒரு பகுதி, முன்னாள் உயர்நிலைப் பள்ளிகளில் இருமுனைப் பாடங்களை கற்பித்து வந்த ஆசிரியர்களை மாற்றுவதன் மூலம் நிறைவேற்றப்பட்டது. மேற்கொண்டு தேவைக்கு மாதம் ரூ. 150 ஊதியத்தில் 4,324 பகுதி நேர தொழிற் பாட ஆசிரியர்களை நியமிக்க ஆணையிடப்பட்டது. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலை செய்பவர்களில் பொருத்தமானவர்கள் இருக்குமிடங்களில் அவர்களும், பிற இடங்களில் வெளி நபர்களும் பகுதி நேர தொழிற்பாட ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

7. "படிக்கும் போதே பணம் ஈட்ட வகை செய்தல்" என்ற கொள்கை அடிப்படையில் உருவாக்கப்பட்ட தொழிற்பாட மானிட்டர்கள் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலும் ஒவ்வொரு தொழிற்பாடத்திற்கும் முதலாண்டு வகுப்புக்கு ஒருவரும் இரண்டாவது ஆண்டு வகுப்புக்கு ஒருவரும் ஆக இருவர் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு ஆளுக்கு மாதம் ரூ. 20 வீதம் 10 மாதங்களுக்கு ஊதியம் தரப்படுகிறது.

8. தொழிற்பாடங்களைக் கற்றுத்தரத் தேவையான தளவாடங்களை வாங்க ஒவ்வொரு அரசு/அரசு அல்லாத மேல்நிலைப் பள்ளிக்கும் ரூ. 5,000/2,500 வீதம் செலவுக்கு/மானியத்துக்கு அரசு ஏற்பளித்து வருகிறது. கூடுதலாகத் தேவைப்படும் பணத்தை பள்ளிகள் தங்கள் வசதிக் கட்டண நிதியிலிருந்தும் சிறப்புக் கட்டண நிதியிலிருந்தும் எடுத்துச் செலவு செய்து கொள்ளலாம்.

கட்டடங்களும் தளவாடங்களும்:

9. 1978–79, 1979–80 ஆண்டுகளில் தொடங்கிய 477 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வகுப்பறையும் ஒரு ஆய்வுக்கூடமும் கட்ட மொத்தத்தில் பெருந்தொகையாகிய ரூ. 8 கோடிக்கு மேல் அரசு ஏற்பளித்தது. 400 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மற்றவையும் விரைவில் கட்டி முடிக்கப்படும். 1980–81-ல் தொடங்கிய அரசு மேல்நிலைப் பள்ளிகள் 86-க்கும் மொத்தம் ரூ. 1·93 கோடி செலவில் கட்டடம் கட்டித்தர 1981–82–ல் ஏற்பளிக்கப்பட்டு அவ்வாண்டு அவ்வகையில் செலவு ரூ. 1·45 கோடி அளவில் செய்யப்படும்.

10. இதுவரை தொடங்கியுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்துக்கும் தேவையான ஆய்வுக் கூட தளவாடங்களுக்காக மொத்தம் ரூ. 5 கோடி செலவுக்கு அரசு ஏற்பு அளித்துள்ளது சிறு தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு அரசு நிறுவனமான "தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்" (சிட்கோ) மூலமாகவே இந்தத் தளவாடங்கள் வாங்கப்படுகின்றன.



1981 ஏப்ரல் 27]

11. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) மேல்நிலைப்பள்ளி கட்டடங்கள் கட்டவும், தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டை பள்ளிக்கு ரூ. 1 இலட்சம் என்ற வரம்புக்குட்பட்டு மானியமாகத் தரும் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஏற்பளித்துள்ளது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் மானிய உதவிக்கு சுமார் 310 அரசல்லாத மேல்நிலைப் பள்ளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 1981–82-ல் இத்திட்டத்தின்கீழ் மேலும் பல பள்ளிகள் பயன்பெறும்.

12. கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக் கூட வசதிகளை மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வகை செய்யும் நோக்குடன் "கல்லூரி இணையங்களும்", "பாலிடெக்னிக் இணையங்களும்" இயன்ற இடங்களில் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன.

நூலக வசதிகள் :

13. மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியைப் பெருக்க 1979–80, 1980–81 ஆண்டுகளில் மொத்தம் ரூ. 43 இலட்சம் செலவுக்கு ஏற்பளிக்கப்பட்டது. அரசு மேல்நிலைப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூ. 6,000 செலவுக்கும், அரசல்லாத மேல்நிலைப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் (ரூ. 2,400 என்னும் வரம்புக்குட்பட்டு) 40 சதவீதம் இணை மானியத்துக்கும் ஏற்பளிக்கப்பட்டது. பள்ளிகள் தரமான புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கவும், விரைவில் அவற்றை வாங்கவும் உதவி செய்யும் வகையில் இத்திட்டத்தின் கீழ் வாங்கக்கூடிய பொருத்தமான புத்தகங்களின் பட்டியல் ஒன்று வல்லுநர் குழு ஒன்றைக் கொண்டு தயாரிக்கப்பட்டு பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## IV. அரசுத் தேர்வுகள்.

1975 பிப்ரவரியில் அமைக்கப்பட்ட அரசுத் தேர்வுத்துறையானது முக்கியமான இரண்டு தேர்வுகளான உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.), மேல்நிலைப் பள்ளித் தேர்வு ஆகிய இரண்டு தேர்வுகளை நடத்தி வருகிறது. அத்துடன் தொழில் கல்வி, ஆசிரியர் பயிற்சி ஆகியவற்றைச் சார்ந்த வேறு 38 தேர்வுகளையும் நடத்தி வருகிறது. இவ்வாண்டு இந்த தேர்வுகள் அனைத்தையும் எழுதியவர்கள் மொத்த எண்ணிக்கை 6-1/2 இலட்சம் ஆகும். 1980–81-ல் மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரண்டு வட்டார அலுவலகங்கள் இத்துறைக்கு அமைக்கப்பட்டன. இந்த வட்டார அலுவலகங்கள் எஸ்.எஸ்.எல்.சி., மேல் நிலைப் பள்ளித் தேர்வு ஆகிய தேர்வுகளுக்கான பூர்வாங்க வேலைகளைக் கவனிக்கும்.

<u>மேல்நிலைப் பள்ளித் தேர்வு:—</u>

2. 1980 ஏப்ரலில் மேல்நிலைப் பள்ளித் தேர்வு எழுதியவர்கள் 1,17,013 பேர்களாவர் (தொழிற் பாட மாணவர்கள் 24,827 பேர் உட்பட). அவர்களுள் 59 விழுக்காட்டினரான 69,946 பேர்கள் தேறினர். அத்தேர்வில் வெற்றி பெறாதவர்களுக்காக 1980 செப்டம்பரில் நடத்திய தேர்வில் 38,900 பேர்கள் கலந்து கொண்டனர். 1981 ஏப்ரல் தேர்வை எழுத 1,47,000 பேர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

3. எஸ்.எஸ்.எல்.சி. தேறியுள்ளவர்களுள் 18 வயது முடிந்தவர்கள், 1981 ஏப்ரல் மேல்நிலைப் பள்ளித் தேர்விலிருந்து தொழிற் பாடம் அல்லாத கலைப் பாடங்களில் (அதுவும் செயல் முறைத் தேர்வு இல்லாத பாடங்களில்) தனிப்பட்ட முறையில் மேல்நிலைப் பள்ளித் தேர்வை எழுத அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

<u>எஸ். எஸ். எல். சி. தேர்வு :—</u>

4. 1980 மார்ச்-ஏப்ரலில் பத்தாண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதிய 2,40,000 பேர்களுள் (ஓரியண்டல் பள்ளி இறுதித் தேர்வு எழுதியோர் சிலர் உட்பட) தேறியோர் விழுக்காடு 57 சதவீதமாகும். 1981 மார்ச்சில் எஸ் எஸ்.எல்.சி. எழுத 3,18,000 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.

5. 1978 மார்ச்சில் 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. நடைமுறைக்கு வந்த பின் அதில் தேர்ச்சி பெற்றால் மேல்நிலைப் பள்ளியில் சேரலாம் என்ற நிலை உள்ளது. மேல்நிலைப் பள்ளியில் சேருவதற்கு உள்ள தகுதியே அரசுப் பணிகளில் சேரும்போது கணக்கிடப்படும் "குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதி" யாகவும் இருக்கும் என்று அரசு நிர்ணயித்துள்ளது.

6. பழைய 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி.-யை தனிப்பட்ட முறையில் எழுத 1980 அக்டோபர் வரைத் தரப்பட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்தியும் அத்தேர்வில் தேர்ச்சி பெற இயலாதவர்கள் 1981 அக்டோபர் முதல், 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. எழுத அனுமதிக்கப்பட்டுள்ளனர். "1969 எஸ்.எஸ்.எல்.சி." திட்டத்தின் கீழ் படிக்க வேண்டிய விருப்பப்பாடம் நீங்கலாக மற்றப் பாடங்களில் எவ்வெவற்றில் 35-க்குக் குறைவாக மதிப்பெண்கள் பெற்றுள்ளனரோ அவற்றில் மட்டும் அவர்கள் 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றுவிட்டால் அவர்களுக்கு 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். 1978-ல் இவ்வரசு முதன் முதலாக அமுலுக்குக் கொண்டு வந்த பகுதிமுறைத் தேர்ச்சி (கம்பார்ட்மெண்டல்) முறை அண்மையில் பின்வருமாறு தாராள



மாக்கப்பட்டுள்ளது: பழைய 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி.யில் ஒவ்வொரு பாடத்திலும் (ஒரு தடவையோ பல தடவைகளிலோ) 35-க்குக் குறையாமல் மதிப்பெண்பெற்று இருந்தும் பழைய முறைப்படி எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெறாதவர்களாகக் கருதப்பட்டவர்கள் எல்லாம் 1—10—1978 முதல் எஸ்.எஸ்.எல்.சி தேறியவர்களாகக் கருதப்படுவார்கள். விருப்பப்பாடங்களைப் பொறுத்தவரை (1969-ம் ஆண்டு திட்டத்தின் கடைசி தேர்வான) 1979 அக்டோபர் எஸ்.எஸ்.எல்.சி. அல்லது அதற்கு முன் விருப்பப்பாடத்தில் 35-க்குக் குறையாத மதிப்பெண் பெறாதவர்களும் 1—10—1978 முதல் 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்களாகக் கருதப்படுவார்கள். அதாவது அவர்களைப் பொறுத்தவரை விருப்பப்பாடம் யாதொரு கணக்குக்கும் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

7. தேர்வு முறையைச் சீர்திருத்தும் நோக்குடன் 1981—82-ல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வைப் பொறுத்தவரை கேள்வி வங்கி முறையைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. பள்ளிகளில் பாடம் கற்றுத்தரும் ஆசிரியர்களைக்கொண்டு மாதிரிக் கேள்விப் பட்டியல்களைத் தொகுத்து, வல்லுநர்களையும் கலந்து அப்பட்டியல்களைச் சரிபார்த்து கேள்வி வங்கிகள் அமைக்கப்படும். மாணவர்கள் கல்வித்தரத்திற்கு இசைந்த வகையில் பொதுத் தேர்வில் வினாக்கள் அமைக்கப்பட இம்முறை உதவும்.

பிற தேர்வுகள்—

8. இத்துறை நடத்திவரும் பிற தேர்வுகளுள் முக்கியமானவை ஆங்கிலோ-இந்தியப் பள்ளி இறுதித் தேர்வு, மெட்ரிக்குலேஷன் தேர்வு, ஆசிரியர் பயிற்சிப் பட்டயப் படிப்பு (டிப்ளமா), மர வேலை, நெசவு, தையல் வேலை போன்ற தொழில் தேர்வுகள் ஆகியவையாகும். 14 வயது முடிந்தவர்கள் தனிப்பட்ட முறையில் கலந்துகொள்ளும் வகையில் நடத்தப்பெறும் தொடக்கப்பள்ளி இறுதி பொதுத் தேர்வு (இ.எஸ்.எல்.சி.) ஆண்டுக்கு ஒரு முறை (1980 பிப்ரவரி முதல்) நடைபெறுகிறது. ஆண்டுக்கு 2,000 பேர்கள் இத்தேர்வில் கலந்து கொள்கின்றனர்.

[1981 ஏப்ரல் 27

## முதியோர் கல்வியும் பள்ளி சாராக் கல்வியும்.

முதியோர் கல்விக்கும் பள்ளிச் சாராக் கல்விக்கும் 1981-82 நிதி நிலை அறிக்கையில் ரூ. 1.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### முதியோர் கல்வி.

2. எழுத்தறிவு பெற்றவர்கள் சதவீதம் தமிழ் நாட்டிலும் அனைத்திந்தியாவிலும் பின்வருமாறு இருந்து வருகிறது:—

தமிழ்நாடு.

| சென்செஸ் ஆண்டு. | ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| 1971 .. .. | 51.78 | 26.36 | 39.46 |
| 1981 .. .. | 57.19 | 34.12 | 45.78 |

இந்தியா.

| சென்செஸ் ஆண்டு. | ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| 1971 | 39.51 | 18.44 | 29 34 |
| 1981 | 46.74 | 24.88 | 36.17 |

3. முதியோர் கல்விப்பணி இம்மாநிலத்தில் முனைப்புடன் நடைபெற்று வருகின்றது. பின்வரும் பலவகைத் திட்டங்களின்கீழ் மொத்தம் 13,000 மையங்களில் 4 இலட்சம் பேர்களுக்கு முதியோர் கல்வி அளிக்கப்படுகிறது.

**(1) கிராமப்புற (தொழிற்சார்ந்த) எழுத்தறிவிப்புப் பணி.**—மைய அரசின் முழுப் பண உதவியுடன் நடைபெறும் இத்திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, நீலகிரி தவிர பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 300 மையங்கள் வீதம் 3,600 மையங்கள் செயல்படுகின்றன. இம்மையங்களில் 1980 அக்டோபரில் நடந்து முடிந்த 10 மாத வகுப்புகளாகிய முதல் தொகுதியில் 1,22,000 பேர் (95,000 ஆண்களும், 27,000 பெண்களும்) பயன் பெற்றனர். 1980 நவம்பர் முதல் இம்மையங்கள் அதே மாவட்டங்களில் வேறு ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டாவது தொகுதி வகுப்புகளை நடத்தி வருகின்றன. அவற்றில் பயன் பெறுவோர் 1,11,000 பேர் (57,000 ஆண்களும், 54,600 பெண்களும்). இந்த இரண்டாம் தொகுதி வகுப்புகளுக்கு ஒரு மாவட்டத்திற்கு ரூ. 5.2 இலட்சம் வீதம் மைய அரசு மானியம் கிட்டும்.



1981 ஏப்ரல் 27]

ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புற பகுதிகளில் அருகருகே உள்ள மூன்று ஊராட்சி ஒன்றியங்களுக்குள்ளாக இந்த 300 மையங்களும் செயல்படுகின்றன. 30 மையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் உள்ளார். அந்தந்த வட்டாரத்தி லுள்ள வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளிடையேயிருந்து மேற்பார்வையாளர். நியமிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் முதியோருக்கு கல்வி புகட்டுபவர்கள் பயிற்சி பெற்று வேலை வாய்ப்பின்றியுள்ள ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி. தேறி வேலை வாய்ப்பின்றியுள்ள இளைஞர்கள், பால்வாடி ஆசிரியர்கள், சிவில்/இராணுவப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், மகளிர் மன்ற உறுப்பினர்கள், முறையான பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரிலிருந்து நியமிக்கப்படுகிறார்கள். இதற்காக அவர்களுக்கு இதுபற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. வகுப்புகள் 10 மாதம் நடக்கின்றன. அந்தந்த இடத்துக்கு வசதியான நேரங்களில் இம் முதியோர் கல்வி வகுப்புகள் நடக்கின்றன.

**(2) மாநில அரசுத் திட்டம்—(அ) தன்னிறைவுத் திட்ட வட்டாரங்களில்.**—இம் மாநிலத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் வரும் 61 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 6,100 மையங்களில் இவ்வரசு தன் பணத்திலிருந்து அமுலாக்கிய இந்த முதியோர் கல்வித் திட்டத்தின் கீழ் 1980 நவம்பர்-டிசம்பரில் நடந்து முடிந்த முதல் தொகுதி முதியோர் கல்வி வகுப்புகளில் 1,93,000 பேர் (97,000 ஆண்களும், 96,000 பெண்களும்) பயன் பெற்றனர். அந்த 61 வட்டாரங்களிலும் பழைய இடங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ வேறு முதியோர்கள் மொத்தம் சுமார் 1,75,000 பேர் பயனடையும் வகையில் இரண்டாம் தொகுதி வகுப்புக்கள் 1981 மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்டுள்ளன. 100 மையங்கள் கொண்ட ஒரு ஒன்றியத்திற்கு இந்த இரண்டாம் தொகுதி வகுப்புகளுக்காக ஆகும் செலவு ரூபாய் 1.78 இலட்சமாகும். 61 ஒன்றியங்களுக்கும் சேர்த்து மொத்தம் ரூபாய் 1.08 கோடி செலவாகும்.

மேற்சொன்ன 61 ஒன்றியங்களில் 1980-ல் நடந்த முதியோர் கல்வி வகுப்புகளில் கலந்துகொண்டு எழுத்தறிவு பெற்றவர்களுக்கு எழுத்தறிவுக்கு மேலான நிலையில் அடுத்த கட்டக் கல்வி அளிப்பதற்கான 100 மையங்கள் அந்த ஒன்றியங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் 1981-82-ல் தொடங்கப்படும். ஒரு மையத்துக்கு ரூ. 900 வீதம் இந்த நூறு மையங்களுக்கும் ஓராண்டுக்குச் செலவு ரூ. 90,000 ஆகும். அம்மையங்களில் அவர்களுக்குத் தகுந்த புத்தகங்களும் இதழ்களும் வழங்கப்படும். புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் படிக்கத் தக்க வெளியீடுகளைத் தயாரித்து வெளியிட மொத்தம் ரூ. 3 லட்சம் செலவில் எழுத்தாளர் முகாம்கள் 16-ஐ (மாவட்டத்திற்கு ஒன்று வீதம்) நடத்தவும் அரசு ஏற்பளித்துள்ளது.

[1981 ஏப்ரல் 27

(ஆ) உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் நடத்தும் முதியோர் கல்வி மையங்கள்.—1980-81-ல 600 உயர்நிலை/மேல் நிலைப் பள்ளிகளில் முதியோர் கல்வி மையங்களைத் தொடங்கி மொத்தம் 18,000 பேருக்கு எழுத்தறிவிப்பதற்கான திட்டத்துக்கு ஏற்பளிக்கப்பட்டது. ஒவ்வொரு பள்ளிக்கும் தரப்படும் அரசு மானியம் ரூபாய் 500. அந்தந்தப் பள்ளியின் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் தர வேண்டியது ரூபாய் 500 ஆகும்.

(3) தனியார் அமைப்புகள்.—தமிழ்நாட்டில் தனியார் அமைப்புக்கள் 34, மைய அரசுப் பண உதவியுடன் நடத்திய 1,710 முதியோர் கல்வி மையங்களின் முதல் தொகுதி வகுப்புகளில் 68,000 பேர் எழுத்தறிவு பெற்றனர். அவ்வகுப்புகள் 1980-ல் முடிவு பெற்றன. இரண்டாவது தொகுதி வகுப்புகளை நடத்த மைய அரசுப் பண உதவி நீடித்தால் அவை தொடங்கும்.

(4) பிற திட்டங்கள்.—கல்லூரி மாணவர்கள் நடத்தும் 736 மையங்களில் சுமார் 20,000 பேர்களும், நேரு இளைஞர் நிலையங்கள் நடத்தும் 225 மையங்களில் சுமார் 7,000 பேர்களும் பயன்பெற்றனர்.

4. முதியோர் கல்வி மையங்கள் பயன்படுத்தத் தக்க பயிற்றும் கருவிகள், காட்சிச் சாதனங்கள், விளக்க வெளியீடுகள் ஆகியவற்றை இத்துறை தயாரித்துள்ளது. அவை அச்சிட்டு அம்மையங்களுக்கு வழங்கப்படும். முதியோர் கல்விப் பணியிலும் பள்ளி சாராக் கல்விப் பணியிலும் ஈடுபட்டுள்ளவர்களின் பயனுக்காக மாதாந்திர இதழ் ஒன்றையும், முதியோர் கல்வி பள்ளி சாராக் கல்விப் பாட நூல்களையும் தயாரித்து வெளியிட 1981-82-ல் வெளியீட்டுப் பிரிவு ஒன்று அமைக்கப்படும். முதியோர் கல்வி பயிலுபவர்களுக்கு உதவக் கூடிய கல்வித் திரைப்படங்களைக் காட்டக்கூடிய இயங்கும் உந்துவண்டி ஒன்று (காட்சி—கேள்வி சாதனங்களுடன்) மதுரை மாவட்டத்துக்கு 1981-82-ல் வாங்கித் தரப்படும்.

### பள்ளி சாராக் கல்வி.

5. பள்ளி சாராக்கல்வி மையங்கள் 1976-77-ல் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒன்றியத்திற்கு ஒன்று விதம் தொடங்கப்பட்டன. அவற்றின் எண்ணிக்கை 1977-78-ல் இரண்டு ஆகவும், 1978-79-ல் நான்கு ஆகவும் உயர்த்தப்பட்டது. இம்மையம் ஒவ்வொன்றும் மூன்று ஆண்டு வேலை செய்யும். பத்து மாத வகுப்புகள் மூன்றை நடத்தும்—ஒவ்வொன்றும் ஒரு புதிய தொகுதி மாணவர்களுக்காக. 1976-77-ல் தொடங்கிய முதல் மையம் மூன்று தொகுதி மாணவர்களுக்கு வகுப்புகளை நடத்தி முடித்துவிட்டு 1979 அக்டோபரில் மூடப்பட்டது.



1981 ஏப்ரல் 27]

1977-78-ல் தொடங்கிய இரண்டாவது மையம் 1980-81-ல் முற்றுப்பெற்றது. 1980-81-ல் இரண்டு புதிய மையங்கள் திறக்கப்பெற்றன. ஆக, தற்பொழுது ஒன்றியத்துக்கு நான்கு விதம் 1,496 மையங்கள் உள்ளன. இம் மையங்கள் அனைத்திலும் பயில்வோர் தொகை சுமார் 45,000 ஆகும். 1981-82-ல் தன்னிறைவு வட்டாரங்களில் மொத்தம் ரூபாய் 3.41 இலட்சம் செலவில் மேலும் 240 மையங்கள் தொடங்கப்பெறும். ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களில் இவ் வகுப்புகள் நடக்கின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளி சாராக் கல்வி வகுப்புகளை மாலையில் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர் இதற்கு திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 50 மதிப்பூதியம் பெறுகின்றனர். (அரசு நடத்தும் மேற்சொன்ன பள்ளி சாராக் கல்வி மையங்களோடு ஊராட்சி ஒன்றியங்களும் தங்கள் பணத்திலிருந்து சுமார் 300 பள்ளி சாராக் கல்வி மையங்களை நடத்தி வருகின்றனர்).

6. இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசி பகுதியிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்து வரும் ஏழைச் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக ஆண்டுக்கு ரூபாய் 1.80 இலட்சம் செலவில் 30 பள்ளி சாராக் கல்வி மையங்கள் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையத்திலும் 30 சிறுவர் சிறுமியருக்கு காலை அல்லது மாலை வேலைகளில் கற்றுத் தரப்படும். மூன்று ஆண்டு முடிந்த பின் அவர்கள் தனிப்பட்ட முறையில் ஈ.எஸ்.எல்.சி. தேர்வு எழுத ஆயத்தம் செய்யும் வகையில் அக் கல்வி இருக்கும்.

7. நகர்ப்புறப் பகுதிகளில் 1980 டிசம்பரில் தொழிற் கல்வி பயிற்றுவிக்கும் பள்ளி சாராக் கல்வி மையங்கள் 150 தொடங்கப்பட்டன. இம்மையங்களில் 5 மாத காலம் எண்ணும் எழுத்தும் கற்றுத் தரப்படுவதோடு ஆடை தைத்தல், ஆடைகளில் பூ வேலை செய்தல், பிளாஸ்டிக் பை செய்தல், நீர் இறைக்கும் பொறியைப் பழுதுபார்த்தல், புத்தக பைண்டிங், ஊறுகாய், ஜாம் செய்தல், மின் இயக்கிகள் பின்னுதல் ( Moto wnd ng ) சைக்கிள் பழுதுபார்த்தல் போன்ற தொழில்களிலும் பயிற்சி அளிக்கப்படும்.

### VI கல்லூரிக் கல்வி.

தமிழ்நாட்டில் கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை தற்பொழுது 187 ஆக உள்ளது. அவற்றில் 1979-80 ஆம் ஆண்டில் படித்து வந்தவர்கள் 1,35,700 பேர். 1980-81 ஆம் ஆண்டில் படித்து வருபவர்கள் 1,54,700 பேர் ஆவர். இக் கல்லூரிகளில் 110 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்துடனும், 77 மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துடனும் இணைந்தவையாகும். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒற்றை வகையைச்

சார்ந்தது. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கீழ் செயல்பட்டு வரும் இந்த 187 கல்லூரிகள், மற்றும் பிற கல்லூரிகளைப் பற்றிய விவரங்களை இணைப்பில் காணலாம்.

2. இத்துறையில் 1979-80ஆம் ஆண்டு முதல் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஐந்து ஊர்களில் அந்தந்த வட்டாரத்துக்கு ஒன்று என்ற வகையில் கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அலுவலகங்கள் 5 செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வட்டார அலுவலகத்திலும், ஒருதுணை இயக்குநர் பிற பணியாளர்களுடன் வேலை செய்து வருகிறார். இயக்குநரகத்தையும் வட்டார அலுவலகங்களையும் வலுப்படுத்த மொத்தம் ரூபாய் 2 இலட்சம் செலவில் 1981-82 ஆம் ஆண்டில் கூடுதல் பதவிகள் ஏற்படுத்தப்படும். அவ்வாறு இயக்குநா அலுவலகத்தில் தலைமைக் கணக்கு அதிகாரி பதவி ஒன்றும் ஒரு பிரிவும் ஏற்படுத்தப்படும். சென்னை தவிர பிற வட்டார அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்.

3. திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரண்டு புதிய பல்கலைக் கழகங்களை நிறுவ பல்கலைக் கழக மானியக் குழு இசைவு அளித்துள்ளது. இவை கல்லூரிகளுக்கு இணைப்புத் தரும் வகையைச் சார்ந்தவையாக இருக்கும். தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள கல்லூரிகள் திருச்சிராப்பள்ளி பல்கலைக் கழகத்தின் கீழும், கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி மாவட்டங்களிலுள்ள கல்லூரிகள் கோயம்புத்தூர் பல்கலைக் கழகத்தின் கீழும் வரும். இப்புதிய பல்கலைக் கழகங்களை அமைப்பதற்கான சட்ட வரைவுகள் விரைவில் கொண்டு வரப்படும்.

4. ஒற்றை வகையைச் சார்ந்த பல்கலைக் கழகம் ஒன்றை காரைக்குடியில் அமைப்பதற்கும், தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கும் அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதுபற்றி அரசுக்கு ஆலோசனை கூற இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பல்கலைக் கழகத்துடனும், 77 மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துடனும் நாளான 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாளான்று தொடங்கவிருக்கிறது.

### தன்னுரிமையுள்ள கல்லூரிகள்.

5. கல்லூரிகளுக்குச் சுய ஆட்சி உரிமை தரப்பட்டுள்ள முதல் மாநிலம் தமிழ்நாடு தான். சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள 6 கல்லூரிகளும், மதுரை காமராஜா பல்கலைக் கழகத்தின் கீழுள்ள 4 கல்லூரிகளும் ஆக மொத்தம் 10 கல்லூரிகளுக்கு இவ்வுரிமை தரப்பட்டு அதன் மூலம் கல்வித் தரம் உயர வகை செய்யப்பட்டுள்ளது. அக்கல்லூரிகளில், தாமே பாடத் திட்டங்களை வகுக்கவும் தேர்வு நடத்தவும் உரிமை பெற்றவை. எனினும் பட்டங்களை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே வழங்கும்.





### தொடர் கல்வி.

6. மாலை நேர வகுப்புகளை நடத்தி வரும் கல்லூரிகளின் எண்ணிக்கை 33—மதுரை காமராஜ் பல்கலைக் கழகமும், சட்டக் கல்லூரிகளும் உட்பட. இம் மாலை நேர வகுப்புகளில் பயில்வோர்கள் சுமார் 8,000 பேராவர், பட்ட மேற் படிப்பு வகுப்புகளுள்ள மூன்று அரசுக் கல்லூரிகளில் 1978-79 ஆம் ஆண்டிலிருந்தும், மேலும் ஒரு கல்லூரியில் 1980-81-ம் ஆண்டு முதலும், அறிவியல் பாடங்களில் எம்.எஸ்சி. வகுப்புகள் மாலை நேர வகுப்புக்களாகத் தொடங்கப்பட்டுள்ளன. இவ்வசதியைப் பயன்படுத்தி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் எம்.எஸ்சி. தேர்ச்சி பெற்றுக் கொள்ளலாம். மேல்நிலைப் பள்ளிகளில் இன்னும் பட்ட மேற்படிப்புத் தகுதி பெறாமல் "உட்படுத்தப்பட்ட" இன்டக்டட் ஆசிரியர்களாகப் பணி செய்பவர்கள் சுமார் 3,300 பேருக்கு கணிதத்திலும், அறிவியல் பாடங்களிலும் பட்டமேற்படிப்புத் தகுதி பெற வசதி செய்ய வேண்டியிருக்கிறது. அரசுக் கல்லூரிகளில் மாலை நேர பட்டமேற்படிப்பு வகுப்புக்கள் தொடங்க 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

7. மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் 1972-73 ஆம் ஆண்டிலிருந்தும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1979-80 ஆம் ஆண்டிலிருந்தும் அஞ்சல் முறை வகுப்புகளை நடத்தி வருகின்றன. 1981-82 ஆம் ஆண்டிலிருந்து சென்னைப் பல்கலைக் கழகமும் இவ்வகுப்புகளைத் தொடங்க இருக்கிறது. அஞ்சல் முறை வகுப்புகளில் 1980-81-ல் மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் 58,810 பேர்களும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 14,208 பேர்களும் பயின்றுவந்தனர்.

8. மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் "அனைவரும் படிக்கத்தக்க பல்கலைக் கழக" வகுப்புகளையும் 1977 ஆம் ஆண்டில் தொடங்கியுள்ளது. இந்தியக் குடி மக்களுள் தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் வசிப்பவர்களும், 21 வயதுக்கு மேற்பட்டவர்களுமான எவர் வேண்டுமானாலும் இந்த வகுப்பில் சேரலாம். 1980-81 ஆம் ஆண்டில் இவ்வகுப்பில் 13,000 பேர்கள் பயின்று வந்தனர்.

### கல்வித்தர மேம்பாடு.

9. இம்மாநிலத்தில் கலை, அறிவியல் கல்லூரிகளின் தேவைக்கு இப்பொழுது உள்ள 187 கல்லூரிகள் போதுமானவையாகும். சில குறிப்பிட்ட நகர்ப்புற கல்லூரிகளில் சேருவதற்கு மாணவர்கள் அதிகமாக முன் வருகின்றனர். ஆனால், கிராமப் புறப் பகுதிகளிலுள்ள கல்லூரிகளில் இப்பொழுதே

பல இடங்கள் காலியாக இருந்து வருகின்றன. 1980-81 ஆம் ஆண்டில் இம் மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் 9,200 இடங்கள் (ஆங்கிலப் பாட மொழி—6,440 ; தமிழ்ப் பாட மொழி—2,760) காலியாக இருந்தன. எனவே கடந்த சில ஆண்டுகளாக அரசுக் கல்லூரிகளில் கல்வித் தர மேம்பாட்டுக்கே முதன்மை அளிக்கப்படுகிறது.

10. அண்மை ஆண்டுகளில் அரசுக் கல்லூரிகளில் புதிதாகத் தொடங்க ஏற்பளித்துள்ள வகுப்புகளின் விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு. | | பட்ட வகுப்பு. | பட்ட மேற்படிப்பு வகுப்பு. |
|---|---|---|---|
| 1978–79 | .. | 13 | 5 |
| 1979–80 | .. | 46 | 5 |
| 1980–81 | .. | 36 | 8 |

1981-82 ஆம் ஆண்டில் புதிய பட்ட வகுப்புகளைத் துவக்க ரூபாய் 10 இலட்சமும், புதிய பட்டமேற்படிப்பு வகுப்புகளைத் துவக்க ரூபாய் 5 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

11. அறிவியல் கல்வியை வளர்த்திட அரசுக் கல்லூரிகளில் ஆய்வகக்கூட வசதிகள் பெருக்கப்படுகின்றன. இதற்காக கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் ரூபாய் 21 இலட்சம் ஏற்பளிக்கப்பட்டது. அரசுக் கல்லூரிகளில் மாணவர்கள் பயன்படுத்திட பாட புத்தகங்களைக் கொண்ட புத்தக நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

12. கல்லூரி மாணவர்கள் வசதிக்காக உணவருந்தும் இடம், சிற்றுண்டிச் சாலை, மிதி வண்டி நிறுத்துமிடம் ஆகியவை படிப்படியாக அமைக்கப்படுகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் இவ்வகையில் அரசு கல்லூரிகளுக்கு ரூபாய் 13 இலட்சமும், தனியார் கல்லூரிகளுக்கு ரூபாய் 5 இலட்சமும் செலவிட ஏற்பளிக்கப்பட்டது. அரசுக் கல்லூரிகளுக்குப் புதிய அல்லது கூடுதல் கட்டடங்கள், மாணவர் விடுதிக் கட்டடங்கள், உணவருந்தும் இடம், சிற்றுண்டிச்சாலை, மிதிவண்டி நிறுத்துமிடம், கழிவறை வசதிகள், சுற்றுச் சுவர் போன்றவற்றுக்காகவும், சிறு வேலைகளுக்காகவும், 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 46 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது (புதிய வேலைகளுக்காக ரூபாய் 19 இலட்சமும், முன் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டு முடிவு பெறாமல் உள்ள கட்டட வேலைகளுக்கு 1981–82-ம் ஆம் ஆண்டில் ஆகும் செலவுக்காக ரூபாய் 27 இலட்சமும்). தனியார் கல்லூரிகளுக்கு கட்டட மானியம் தர 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் மூன்று இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

13. கல்லூரி ஆசிரியர் கல்வித்தர உயர்வுக்காக அவர்களை ஆராய்ச்சிப் படிப்புக்கு அனுப்புவதற்கான பல்கலைக் கழக மானியக் குழுவின் திட்டத்திற்கு இவ்வரசு ஏற்பளித்துள்ளது. இது தவிர, மாநில அரசே செயல்படுத்தும்,



தர உயர்வுத் திட்டத்தின் கீழ் கல்லூரிகளிலிருந்து எம்.பில். படிப்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர். புகுமுக வகுப்பு நீங்கி விட்டதால் உபரியான ஆசிரியர்களுக்குள் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் இத்திட்டத்தின் கீழ் 1979-80 ஆம் ஆண்டில் 494 ஆசிரியர்களும், 1980–81 ஆம் ஆண்டில் 132 ஆசிரியர்களும் எம்.பில். படிப்புக்கு அனுப்பப்பட்டனர். மேலும் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி.எச்.டி.) பட்டம் பெறுவதற்காக அரசுக கல்லூரிப் பேராசிரியர்கள் முகாமையில் அனுப்பப்பட்டு வருகின்றனர். 1973-74 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் 29 பேராசிரியர்கள் ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

11. கல்லூரி ஆசிரியர்களுக்கு 1981–82-ல் மொத்தம் ரூ. 1.22 லட்சம் செலவில் மறுபயிற்சி வகுப்புகள் நடக்கும். பட்ட வகுப்புகளுக்கான தாமுயர்த்தப் பட்ட பாடத் திட்டத்தின்படி நன்கு கற்றுத் தருவதில் பட்ட வகுப்பு ஆசிரியர்களுக்கும், பட்ட வகுப்பு மூன்றாம் பிரிவு ஆங்கில ஆசிரியர்களுக்கும் ஆங்கிலம் பயிற்றுவிப்பதிலும், மற்றும் எம்.ஏ. ஆசிரியர்களுக்கும் இம்மறு பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பெறும்.

### படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப் பணமும்.

15. கல்லூரிகளில் செயல்படும் படிப்புதவித் தொகைத் திட்டங்களுள் மிக முக்கியமானவை வருமாறு :—

| திட்டம். | 1980–81-ல் புதிதாகத்தந்த படிப்புதவி தொகைகள் எண்ணிக்கை (மேல் நிலைப் பள்ளி வகுப்புகளில் தரப்பட்டவை உட்பட.) | 1980–81-ல் (புதியவை மற்றும் புதுப்பிக்கப் பட்டவை) எண்ணிக்கை | 1981–82-ல் வரவு—செலவு மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள பணம், (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தேசிய படிப்புவித் தொகைத் திட்டம். .. | 1,618 | 3,703 | 50 |
| தேசிய கடன் படிப்புதவி தொகைத் திட்டம். .. | 1,413 | 5,664 | 45 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய தேசிய படிப்புதவித் தொகை .. | 70 | 91 | 1 |

1978-79-லிருந்து மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு இம் மூன்று திட்டங்களும் விரிவாக்கப்பட்டுள்ளன. 1978-79-ம் ஆண்டின் இறுதியில் தேசிய படிப்புதவித் தொகைத் திட்டத்தின் கீழ் என்ன அளவுக்குச் செலவாகி வந்ததோ அந்த அளவு செலவை (ரூ. 39 லட்சம்) மாநில அரசே 1979-80 முதல் ஏற்று வருகிறது. அந்த அளவுக்கு அதிகமாக ஆகும் செலவை மட்டுமே 1979-80-லிருந்து மைய அரசு ஏற்று வருகிறது. தேசிய கடன் படிப்புதவித் தொகையில் செலவு முழுவதையும் அவ்வரசு ஏற்று வருகிறது. பள்ளி ஆசிரியர் குழந்தைகள் படிப்புதவித் தொகைத் திட்டத்தின் முழுச் செலவையும் மாநில அரசே ஏற்று வருகிறது. விடுதலைப் போர் வீரர்களின் குழந்தைகள், பணியிலிருக்கும் பொழுது இறந்துவிடும் அரசுப் பணியாளர் குழந்தைகள், இராணுவ வீரர்களின் குழந்தைகள் மற்றும் பர்மா, ஸ்ரீலங்கா முதலிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர் குழந்தைகள் போன்றவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டங்களும் மற்றும், மாரிஷியஸ், மலேசியா, பிஜி போன்ற அயல்நாடுகளில் வசிக்கும் தமிழர்களின் குழந்தைகள் பள்ளி இறுதி வகுப்புக்கு மேல் (பட்ட மேற்படிப்பு உட்பட) பயில்வதற்கான படிப்புதவித் திட்டங்களும் உள்ளன.

16. 1977-78-லிருந்து பட்ட வகுப்புகளிலும் அதற்கு மேலான வகுப்புகளிலும் பயிலும் ஆதி திராவிடர் பழங்குடிகள் ஆகியோருக்கு அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருமானம் எவ்வளவாயிருப்பினும் முழுச் சம்பளச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நல இயக்குநர் துறை அவர்களுக்குப் படிப்புதவித் தொகைகளை அளிக்கிறது. பிற்பட்டவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து கிடைக்கின்றன. மேலும் ஆண்டுதோறும் ஆதி திராவிடர், பழங்குடி மாணவர்களுள் மேல்நிலை பள்ளித் தேர்வில் 60 சதவீதம் அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கு அவர்கள் மேற்படிப்பில் சேர உதவுவதற்காக ஆளுக்கு ரூ. 300 உதவிப்பணம் வழங்கப்படுகிறது.

## கல்லூரிகளில் தமிழ்ப்பயிற்று மொழி.

17. 1966-67 ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பில் கலைப் பாடங்களில் தமிழும் பயிற்று மொழியாக ஆனது. 1967-68 ஆம் ஆண்டிலிருந்து பி.ஏ., வகுப்பிலும், 1968-69 ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பில் அறிவியல் பாடங்களிலும், 1969-70 ஆம் ஆண்டிலிருந்து பி.எஸ்சி., வகுப்பிலும், 1979-80-லிருந்து எம்.ஏ. (வரலாறு) வகுப்பிலும் தமிழ் பாட மொழி ஆனது. தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பி.ஏ., பி.எஸ்சி., வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப்பணம், புத்தகப்



படியாக ரூ. 180 தரப்பட்டு வருகிறது. 1980-81-ல் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு, பட்ட வகுப்பில் பயின்ற 18,040 பேர்களுக்கு இவ்வுதவிப் பணவகையில் ரூ. 32.50 இலட்சம் செலவானது. 1981-82-ல் இப்பணிக்கு ரூ. 33 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

18. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இது வரை 901 பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. தொழில் நுணுக்கச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களைக் கொண்ட 13 தொகுப்புகளையும் அது வெளியிட்டுள்ளது. 901 பாட நூல்களில் 172 மொழி பெயர்ப்பு நூல்களும், 729 மூல நூல்களும் ஆகும். 31—12—1980 வரை இத் திட்டத்திற்கு ரூ. 1.15 கோடி செலவாகியுள்ளது. இதுவரை விற்பனையாகியுள்ள புத்தக படிகள் வகையில் வரவு ரூ. 52 இலட்சம். இத்திட்டத்தை மதிப்பிடு செய்ய அண்மையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

## கல்லூரி மாணவர் ஆசிரியர் நலக்குழுக்கள்.

19. கல்லூரி ஆசிரியர்கள், பிறபணியாளர், மாணவர்கள் ஆகிய அனைவரின் குறைகளையும் உடனுக்குடன் தீர்ப்பதற்காக கல்லூரிகளில் பின்வரும் குழுக்களை அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது :—

1. ஆசிரியர் நலக்குழு.
2. ஆசிரியரல்லாத பணியாளர் நலக்குழு.
3. மாணவர் நலக்குழு.

## கல்லூரி ஆசிரியர், பிற பணியாளர்கள் நலன்.

20. கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மை ஆண்டுகளில் செய்துள்ள நன்மைகளில் மிக முக்கியமானவை : பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விதங்களை அளித்தது ; தகுதிபெற்ற பயிற்றுநர்களையும் விளக்குநர்களையும் உதவிப் பேராசிரியர்களாக உயர்த்தியது ; 10 ஆண்டு பணி முடித்த உதவிப் பேராசிரியர்களை 1—4—1980 முதல் பேராசிரியர்களாக உயர்த்தியது ஆகியவையாகும்.

21. கல்லூரி ஆசிரியர்களுள் சிறப்பாக பணியாற்றுபவர்களைப் போற்றுவதற்காக 1979-80முதல் கல்லூரி ஆசிரியர்களுக்கும் மாநில அரசு விருதளிக்கும் திட்டம் தொடங்கப்பட்டு, அதன் கீழ் ஆண்டுதோறும் கல்லூரி ஆசிரியர்கள் 10 பேருக்கு ஆளுக்கு ரூ. 1,000 ரொக்கப்பரிசு, வெள்ளிப் பதக்கம், சான்றிதழ் ஆகியவை அடங்கிய விருது அளிக்கப்படுகிறது.

[1981, ஏப்ரல் 27

22. தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு முழுமையாகவும் காலத் தாழ்வின்றியும் சம்பளம் கிடைக்கச்செய்ய தனியார் கல்லூரிகளுக்கு மானியம் வழங்குவதில் அரசு 1—6—1977-ல் செயல்படுத்தியுள்ள புதிய முறையின் கீழ் அக் கல்லூரிகளின் சம்பளச் செலவில் நிகரப்பற்றாக்குறை முழுவதையும் அரசே ஏற்று வருகிறது. சம்பளம் அல்லாத பிற செலவினங்களில்—அதாவது பழுதுபார்த்தல், சில்லரைச் செலவினம், எழுதுபொருள் போன்றவற்றில்—அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களுக்கு 80 சதவீதம் சம்பளமல்லாத செலவின மானியமும் தனியார் கல்லூரிகளுக்குத் தரப்படுகிறது.

23. தமிழ் நாட்டிலுள்ள தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஓய்வூதியம் போன்ற ஓய்வு காலப் பலன்களை 1—4—1962-லிருந்து ஆசிரியரல்லாத பணியாளர்கள் 1—4—1976-லிருந்தும் பெற்று வருகின்றனர். எனினும் அவர்கள் பெற்று வந்த ஓய்வூதியச் சலுகைகளில் சில கட்டுப்பாடுகள் இருந்தன—அதாவது (1) சாவு மற்றும் ஓய்வு பெறும் கால பணிக்கொடை அவர்களுக்குத் தரப்படாமை ; (2) குடும்ப ஓய்வூதியம் குறைந்த விகிதத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது ஆகியவையே அந்தக் கட்டுப்பாடுகள். அவை 29—7—1980 முதல் நீக்கப்பட்டு, அரசுக் கல்லூரிப் பணியாளர்களுக்குரிய ஓய்வூதியச் சலுகைகள் முழுமையாக தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கும் அந்தத் தேதி முதல் கிடைத்து வரும். தனியார் கல்லூரிகளிலிருந்து 1—4—1976-க்கு முன்னர் ஓய்வு பெற்ற ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் ஓய்வூதியம் தர அரசு இப்பொழுது முடிவு செய்துள்ளது.

24. பின்வரும் தன்மைகளும் தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கு அண்மையில் விரிவாக்கப்பட்டுள்ளன :—

(1) பணியிலிருக்கும் பொழுது ஒருவர் இறந்து விட்டால் அவர் குடும்பத்துக்கு ரூ. 10,000 தர வகை செய்யும் 'குழு ஈட்டுறுதித் திட்டம்' 2—6—1979 முதல் விரிவாக்கப்பட்டுள்ளது.

(2) அரசுக் கல்லூரிகளைப் போலவே விடுப்புச் சலுகைகள்.

(3) அரசு மருத்துவ மனைகளில் இலவசமாக மருத்துவம் செய்து கொள்ளும் சலுகை.

25. தமிழ்நாடு தனியார் கல்லூரி (ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் 38(1) பிரிவின்கீழ் 1979-80-ல் தீர்ப்பாயமாக ஒரு மாவட்ட சேசன்ஸ் நீதிபதி (இரண்டாம் நிலை) நியமிக்கப்பட்டுள்ளார்.

26. பொது நன்மையைக் கருதி பச்சையப்பன் அறநிலைய நிருவாகத்தை இரண்டு ஆண்டு காலத்துக்கு அரசு மேற்கொண்டுள்ளது.



1981 ஏப்ரல் 27]

சட்டக் கல்வி—

27. சென்னை சட்டக் கல்லூரி, 1974-75-ல் தொடங்கிய மதுரை சட்டக் கல்லூரி, 1979-80-ல் தொடங்கிய கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி சட்டக் கல்லூரிகள் ஆகிய நான்கும் சட்டக் கல்வி இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகின்றன. 1980-81-ல் அக்கல்லூரிகளில் பயின்று வந்தோர் எண்ணிக்கை வருமாறு :—

| சட்டக் கல்லூரியின் பெயர். | முறையான பட்ட வகுப்புகள்: மொத்த மாணவர். | முறையான பட்ட வகுப்புகள்: அவர்களுள் தமிழில் பயின்றவர். | மாலை நேர பட்ட வகுப்பு. | பட்ட மேற் படிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சென்னை .. .. | 1,041 | 130 | 743 | 120 |
| மதுரை .. .. | 726 | 44 | 140 | .. |
| கோயம்புத்தூர் .. | 240 | 8 | .. | .. |
| திருச்சிராப்பள்ளி .. | 240 | 46 | .. | .. |

28. 1980-81-ல் கோயம்புத்தூர் சட்டக் கல்லூரிக்கு ரூ. 5 லட்சம் செலவில் கட்டடம் கட்டவும், மதுரை சட்டக் கல்லூரி மாணவியருக்கு ரூ. 1.50 இலட்சம் செலவில் விடுதிகட்டவும் ஏற்பளிக்கப்பட்டது. 1981-82-ல் கோயம்புத்தூர் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு விடுதி கட்ட ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## VII தொழில் நுட்பக் கல்வி

தொழில் நுட்பக் கல்விக்காக 1981—82-ல் சுமார் ரூ. 10.89 கோடி (கட்டடங்கள், கடன்கள் ஆகியவற்றுக்கான செலவுகள் உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கீழ் 6 பொறியியல் கல்லூரிகளும், 44 பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் (மகளிர் பயிலகங்கள் மூன்றும் தனித்தொழில் பட்டயடிப்ளமா-கல்வியகங்கள் எட்டும் உட்பட) 14 (தொழிற்பாட) மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன.

2. இவற்றில் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை பொறியியற் கல்லூரிகளில் (திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரியில் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கியுள்ள இடங்கள் உட்பட) முழு நேரப் பட்ட வகுப்புகளில் 1,350 பேர்கள்; பல்தொழில் நுட்ப பயிலகங்களில் பட்டயப்படிப்புகளில் 5,730 பேர்கள், (தொழிற்

பாட) மேல்நிலைப் பள்ளிகளில் 840 பேர்கள் என்பதாகும். 9 பல்தொழில் பயிலகங்களில் (அரசு 3, தனியார் 6) ஒவ்வொன்றிலும் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை 1980—81 முதல் 120-லிருந்து 180 ஆக உயர்த்தப்பட்டது. பிற பல்தொழில் பயிலகங்களும் எத்தனை மாணவர் சேர்க்கலாமென முன்னர் ஏற்பளித்திருந்ததோ அதற்கு மேலாக 10 விழுக்காடு சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டன. 1980—81-ல் இரண்டு மகளிர் பல்தொழில் பயிலகங்கள் உட்பட ஐந்து தனியார் பல்தொழில் பயிலகங்கள் புதிதாக தொடங்க அனுமதிக்கப்பட்டது.

3. இம்மாநிலத்திலுள்ள பிற 7 பொறியியற் கல்லூரிகளின் விவரம் வருமாறு :—

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்

1 பொறியியல் கல்லூரி, கிண்டி.

2. அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரி, கிண்டி.

3. கட்டடவியல் மற்றும் நகரமைப்புப் பள்ளி, கிண்டி.

4. சென்னை தொழில் நுட்பக் கல்வியகம், குரோம்பேட்டை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

5. பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை.

தன்னுரிமையுள்ள நிறுவனங்கள் :

6. வட்டார பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

7. இந்தியத் தொழில் நுட்பக் கல்வியகம், கிண்டி.

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்.

4. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் 1978-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4-ம் தேதி அன்று நிறுவப்பட்டது. இப்பல்கலைக் கழகத்துக்கு 1980—81-ல் ரூ. 2.10 கோடி மானியம் தரப்பட்டது 1981—82-ல் இப்பல்கலைகழகத்துக்கு மானியம் தர ரூ. 1.80 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



புதிய தொழிற் கல்வி நிலையங்கள்.

5. புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய அரசு பல்தொழில் பயிலகம் 1981—82-ல் செயல்படத் தொடங்கும், திருச்சிராப்பள்ளியில் மைய அரசு உதவியுடன் உணவுத் தொழில் கல்வியகம் ஒன்று 1981—82-ல் தொடங்கப்படும்.

பல்கலைப் பாடப்பிரிவுகளைத் தொடங்குதல்—

6. 1980—81-ல் பின்வரும் புதியபாட முறைகள் தொடங்கப்பட்டன :—

| | |
|---|---|
| அரசு பல்தொழில் பயிலகம், கோயம்புத்தூர். | வார்ப்படப்பொறியியலில் பட்டய மேற்படிப்பு. |
| பி.ஏ.சி. இராமசாமி ராசா பல்தொழில் பயிலகம், இராசபாளையம். | குளிர்ப்பதனம் மற்றும் குளுமை வசதி பட்டயபடிப்பு. |
| இராமகிருஷ்ணா மிசன் தொழில் நுட்பக் கல்வியகம், சென்னை. | நவீன விவசாயக் கருவிகள் தொழில் நுட்பவியல் விருப்பப்பாடம். |

7. 1980—81-ல் பின்வரும் புதிய பாடமுறைகள் தொடங்கப்படும்:—

பட்டய மேற்படிப்புகள்—

| | |
|---|---|
| மைய பல் தொழில் பயிலகம், சென்னை. | கட்டட அமைப்புத் தொழில் நுட்பவியல். |
| நாச்சிமுத்து பல்தொழில் பயிலகம், பொள்ளாச்சி. | தொழில் முறை மின்னணுவியல். |
| சேஷசாயி தொழில் நுட்பவியல் கல்வியகம், திருச்சிராப்பள்ளி. | இயந்திரங்களைப் பராமரித்தல். |
| சங்கர் பல் தொழில் பயிலக கல்வியகம், சங்கர்நகர். | உற்பத்திப் பொறியியல். |

பட்டயப் படிப்புகள்—

| | |
|---|---|
| அரசு பல்தொழில் பயிலகம், கோயம்புத்தூர். | உற்பத்திப் பொறியியல், |
| தியாகராசர் பல்தொழில் பயிலகம், சேலம். | உற்பத்திப் பொறியியல். |
| நாச்சிமுத்து பல்தொழில் பயிலகம், பொள்ளாச்சி. | மின்னணுவியல். |

விருப்பப் பாடங்கள்—

| | |
|---|---|
| பி.ஏ. சி. இராமசாமி ராசா பல்தொழில் பயிலகம், இராசபாளையம். | தொழில் முறை மின்னணுவியல். |
| சி.ஐ.டி. சாண்ட்விச் தொழில் பயிலகம், கோயம்புத்தூர். | பல் கருவியியல். |

கூடுதல் வசதிகள்—

8. 1981–82-ல் கோயம்புத்தூரிலுள்ள அரசுப் பொறியியல் கல்லூரியில் ரூ. 50 இலட்சம் செலவில் மின் கணக்கீட்டுப் பொறி மையம் ஒன்றும், காரைக்குடி அழகப்ப செட்டியார் பொறியியல் கல்லூரியில் ரூ. 22·38 இலட்சம் செலவில் கண்ட்ரோல் சிஸ்டம் ஆய்வுக்கூடமும் அமைக்கப்படும். இக் கல்லூரிகளிலும், பிற தொழில் நுட்பக் கல்வி நிலையங்களிலும் 1981–82-ல் வேறு பல ஆய்வுக் கூடங்களுக்கும் பணிக்களரிகளுக்கும் புதிய கருவிகள் வாங்கித் தரப்பட்டு மேம்படுத்தப்படும்.

9. முத்தையா பல்தொழில் பயிலகம், அண்ணாமலை நகர்; ராஜகோபால் பல்தொழில் பயிலகம், குடியாத்தம்; எஸ். எஸ். மாரிசெட்டியார் நெசவுத் தொழில் நுட்பக் கல்வியகம், குமாரபாளையம்; தியாகராசர் பல்தொழில் பயிலகம், சேலம்; தியாகராசர் பொறியியல் கல்லூரி, மதுரை ஆகியவற்றுக்கு மாணவர் விடுதிகளை கட்டுவதற்காக 1981–82-ல் மொத்தம் ரூ. 7 இலட்சம் கடனாகக் கொடுக்கப்படும்.

சில தன்னாட்சியுரிமையுள்ள கல்வி நிலையங்கள் :

10. தன்னுரிமையுள்ள வேறு சில நிறுவனங்களில் உள்ள தொழில் நுட்பக் கல்வி வசதிகளைப் பற்றிய விவரங்கள் வருமாறு :—

(1) வட்டாரப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி:— இப்பொழுது இக்கல்லூரியில் ஆண்டுதோறும் 220 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதிலுள்ள இடங்களில் பாதி இம்மாநில மாணவர்களுக்கும், பாதி பிற மாநில மாணவர்



களுக்கும் தரப்படுகிறது. தொடரும் செலவை மைய அரசும் மாநில அரசும் பாதி பாதியாக ஏற்றுக்கொள்கின்றன. தொடராச் செலவு முழுவதையும் மைய அரசே ஏற்கிறது.

(2) கணித அறிவியல் நிறுவனம், சென்னை :—அடையாற்றில் உள்ள கணித அறிவியல் நிறுவனம் அடிப்படைக் கணிதம் மற்றும் கணிதம் சார்ந்த இயல்பியல் துறைகளில் உயர் ஆராய்ச்சி நடத்தி வருகிறது. இது இவ்வரசிடமிருந்து ஆண்டுக்கு ரூ. 5 இலட்சம் மானியம் பெறுகிறது.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் அருங்காட்சிகள் :—

11. சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் அருங்காட்சியகங்களை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. சென்னையில் தந்தை பெரியார் ஈ.வே. இராமசாமி பெயரில் அடையாறு மைய தொழில் நுட்பப் பயிலக வளைவில் இவ்வருங்காட்சியகம் அமைக்கப்படும். திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகம் பாரத கனரக மின்கருவிகள் நிறுவன உதவியுடனும், கோயம்புத்தூர் அருங்காட்சியம் அங்குள்ள தொழிலதிபர்கள் உதவியுடனும் அமைக்கப்படும். இந்த அருங்காட்சியகங்கள் அமைக்கும் பணியை ஒருங்கிணைத்து வழி நடத்திச் செல்ல கல்வி வல்லுநர்கள், அறிவியலறிஞர்கள், தொழில்நுட்பவியாளர்கள், இந்தியாவிலுள்ள ஏனைய அறிவியல் அருங்காட்சியகங்களில் பணி மூப்புடைய அதிகாரிகள், தொழிலதிபர்கள், நிருவாகிகள் ஆகியோரைக்கொண்ட ஒரு ''திட்டமிடும் குழு'' அமைக்கப்படும்.

12. திருநெல்வேலியில் மாவட்ட அறிவியல் காட்சியக மையம் ஒன்றை நிறுவ மைய அரசு ஏற்பளித்துள்ளது. இம்மையம் 1981–82-ல் செயல்படத் தொடங்கும்.

தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையப் பணியாளர்களுக்குச் சலுகைகள் :—

13. தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையங்களிலிருந்து 1–1–75 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும், 1–4–77 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியரல்லாத பணியாளருக்கும் ஓய்வூதியச் சலுகைகள் ஏற்கனவே தரப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரியிலிருந்து 1–1–75 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்கும் (ஆசிரியர்களுக்கும், பிற பணியாளர்களுக்கும்) ஏற்கனவே ஓய்வூதியச் சலுகைகள் தரப்பட்டுள்ளன. மேற்சொன்ன தேதிகளுக்கு முன்னர் தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையங்

களிலிருந்தும், வட்டாரப் பொறியியல் கல்லூரியிலிருந்தும் ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கிட அரசு இப்பொழுது முடிவு செய்துள்ளது. தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையப் பணியாளர்களுக்கும் 'குழு ஈட்டுறுதித்திட்டத்தை' விரிவாக்குவது பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

## VIII. விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலனுக்காக 1981–82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பெரும் தொகையான ரூ. 324 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது—கட்டிடங்களுக்கான ரூ. 20 இலட்சம் உட்பட. அதில் தேசீய மாணவர் படைக்கு ரூ. 130 இலட்சமும், தேசீய பணித் திட்டத்துக்கு ரூ. 55 இலட்சமும், சாரண சாரணியருக்கு ரூ. 3 இலட்சமும், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறைக்கு ரூ. 136 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

### (1) விளையாட்டும் இளைஞர் நலனும்.

2. 1979 ஆம் ஆண்டு செப்டம்பரில் புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறையின் இயக்குநரக அலுவலகம், சென்னை சேத்துப்பட்டு நேரு பூங்கா அருகில், அமையவிருக்கிறது. அந்த அலுவலகத்துக்கும், மற்றும் விளையாட்டுகளுக்கான எல்லா வசதிகளும் அமைந்த விளையாட்டுக் கேந்திரம், விளையாட்டு பயிற்றுநர்களுக்கான வட்டாரமையம் ஆகியவற்றுக்கும் சேர்த்து சேத்துப்பட்டு பகுதியில் கட்டிடம் கட்டுவதற்காக 1981–82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் துறையை வலுப்படுத்துவதற்காக 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 1·80 இலட்சம் செலவில் கூடுதல் பதவிகள் ஏற்படுத்தப்படும். விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்றுவதில் உதவி செய்யும் வகையில் திரைப்பட சேமிப்பகம் ஒன்றும் இத்துறையில் அமைக்கப்படும். கட்டிடத்திற்குள் விளையாட்டுக்கள் நடத்துவதற்கான விளையாட்டு அரங்கம் ஒன்றை அடுத்த ஆண்டு சென்னை மாநகரில் இவ்வரசு கட்டக் கருதியுள்ளது.

### விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்கு தனி விடுதிகளும்:

3. 1980–81 ஆம் ஆண்டில் சென்னை (ஒய்.எம்.சி.ஏ.உடற்பயிற்சிக் கல்லூரி), கோயம்புத்தூர் (பெரிய நாய்க்கன் பாளையம் மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி), அண்ணாமலை நகர் (இராணி சீதை ஆச்சி மேல்நிலைப்பள்ளி) ஆகிய மூன்று இடங்களில்



விளையாட்டுப்பள்ளிகள் தொடங்கப்பட்டன. அவை மூன்றிலும் சேர்த்து மொத்தம் சேர்க்க அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 175 ஆகும். அவ்வாண்டில் திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அந்தந்த வட்டாரத்திலுள்ள மாணவர்களில் விளையாட்டுக்களில் வல்லவர்களாக உள்ளவர்கள் முப்பது பேர் தங்க வசதி அளிக்கும் தனி விடுதிகள் அமைக்கப்பட்டன.

4. அனைத்துப் பள்ளிகளிலும் உடற்பயிற்சிக் கல்வி கட்டாயமாகும். எந்தெந்த நடுநிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனரோ அந்தந்த நடுநிலைப்பள்ளிகளில் 6–8 வகுப்புகளிலும் அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் 6—9 வகுப்புகளிலும் உடற்பயிற்சிக் கல்வி தேர்வுக்கான பாடங்களிலும் ஒன்றாகும். ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் உள்ள நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும், பத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளைக் கொண்ட தொகுதி ஒவ்வொன்றுக்கும் தனி விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் இத்துறை நிதி உதவி தந்து வருகிறது.

5. சென்னை, மதுரை காமராஜ், அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் உள்ள விளையாட்டுக் கேந்திரங்களை மேம்படுத்த 1981–82-ல் இத்துறை மொத்தம் ரூ. 1 இலட்சம் மானிய உதவி செய்யும். அக்கேந்திரங்களுக்கும் கல்லூரிகளுக்கும் பல்வேறு விளையாட்டுகளுக்கான பயிற்றுநர்கள் 14 பேர்களுடைய சேவையை இத்துறை தன் செலவில் கிடைக்கும்படி செய்யும்.

6. தஞ்சாவூர், தருமபுரி, புதுக்கோட்டை, பெரியார் மாவட்டங்களில் திறந்த வெளி விளையாட்டரங்கங்கள் கட்ட 1980–81-ல் மாவட்டத்துக்கு ரூ. 1 இலட்சம் வீதம் நிதி உதவி தரப்பட்டது, 1981–82-ல் அந் நான்கு மாவட்டங்களுக்கும் இவ்வகையில் மாவட்டத்துக்கு ரூ 1 இலட்சம் வீதம் மேலும் மானியம் தரப்படும். 1980–81-ல் வட ஆர்க்காடு, சேலம் மாவட்டங்களில் நீச்சல் குளம் அமைக்க நிதி உதவி தரப்பட்டது. மேலும் இரு மாவட்டங்களின் தலைமையிடங்களில் நீச்சல் குளங்கள் அமைக்க 1981–82-ல் ரூ. 14 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

7. ஊராட்சி ஒன்றியத் தலைமையிடங்கள் அனைத்திலும் கிராமப்புற விளையாட்டு மையங்கள் அமைக்க முன்னரே ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1981–82-ல் அத்தகைய மையங்கள் மேலும் 150 அமைக்கப்படும். விளையாட்டுகளில் ஆற்றல் பெற்ற சிறுவர் சிறுமியரை (16 வயதுக்குக் குறைந்தவர்களை) விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து அவர்களுக்கு தீவிரமான பயிற்சி அளித்து அவர்கள் திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை செயல்படுத்தி வரும் திட்டம், வரும் ஆண்டில் மேலும் விரிவாக மேற்கொள்ளப்படும்.

8. மாவட்டத் தலைமையிடங்கள் இரண்டில், மாவட்டத்துக்கு ஒன்றாக இரண்டு இளைஞர் விடுதிகள் கட்ட 1980–81-ல் மானியம் தரப்பட்டது. 1981–82-ல் இளைஞர் விடுதிகள் மேலும் இரண்டு அமைக்கப்படும். கிராமங்களில் இளைஞர் மன்றங்கள் தொடங்குதல், இளைஞர்களிடையே மலையேறுதல் முதலிய தீரமிகு முயற்சிகளை வளர்த்தல் ஆகிய திட்டங்களுக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

9. வறுமையில் வாடும் விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவி தருவதற்கான திட்டத்தின் கீழ் இதுவரை 25 விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

10. தேசீய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களை இத்துறை கவுரவித்து வருகிறது. ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் பெறும் சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனை ஒவ்வொருவருக்கும் சுமார் ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பில் வீடு ஒன்றை தமிழக அரசு வழங்கும் என்று 2—10—1980 அன்று சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கணைகளுக்கும் விருது அளிப்பதற்காக திருச்சிராப்பள்ளியில் நடந்த விழாவில் பேசும் போது முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். 1980–ல் மாஸ்கோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் வெற்றிபெற்ற இந்திய ஹாக்கி அணியின் தலைவரான திரு. பாஸ்கரனுக்கு ரூ. 1,47,000செலவில் வீடு வாங்கித்தர அரசு ஏற்கெனவே ஏற்பளித்து உள்ளது.

தேசிய மாணவர் படை :

11. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையில் தற்பொழுது 21,000 மாணவர், மாணவியர்களைக் கொண்ட 50 முதுநிலைப் பிரிவுகளும், 66,850 மாணவ-மாணவியர்களைக் கொண்ட 667 இளநிலை பிரிவுகளும் உள்ளன. தேசிய மாணவர் படைக்கு இவ்வரசு 1981–82 ஆம் ஆண்டில் செலவிட விருக்கும் தொகை ரூ. 130 இலட்சங்களாகும். இத்துறையின் கீழ் பணியாற்றும் மாநில அரசுப் பணியாளர்கள்—அமைச்சுப் பணியாளர்கள் ஓட்டுநர்கள், கடைநிலை ஊழியர்கள் முதலியோர் எண்ணிக்கை 1,100 ஆகும்.

12. தேசிய மாணவர் படையில் சிறந்த முறையில் பங்கேற்கும் மாணவ மாணவியருக்கு படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம் ஒன்றுக்கு 1980-81 முதல் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 170 படிப்புதவித் தொகைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. முது நிலைப்பிரிவில் மாதம் ரூ. 50 விதமும், இளநிலைப்பிரிவில் மாதம் ரூ. 25 விதமும் இப்படிப்புதவித் தொகை வழங்கப்படும். அம்மாணவ மாணவியர் தங்கள் படிப்பை முடிக்கும் வரை இத்தொகைகள் வழங்கப்படும்.



தேசிய பணித் திட்டம்—

13. தேசிய பணித் திட்டத்தில் பங்கேற்ற கல்லூரி மாணவர் எண்ணிக்கை 1976-77-ல் 20,000 ஆக இருந்தது, 1979-80 முதல் 40,000 ஆக உயர்ந்துள்ளது. 1980-81-லிருந்து மேல்நிலைப்பள்ளி வகுப்பு மாணவர்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. 1980-81-ல் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் 10,000 பேர் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டனர். 1981-82-ல் மேலும் 10,000 மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். ஆண்டுதோறும் இத்திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்களில் பாதி பேர் விடுமுறைக் காலங்களில் சுமார் 10 நாள் அளவுக்கு கிராமங்களில் சிறப்பு முகாம் நடத்தி கிராமப்புற வளர்ச்சிப் பணிகளை (குறிப்பாக எழுத்தறிவிக்கும் பணியை) செய்கின்றனர். இத்திட்டத்திற்கு 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 55 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## IX கலைப்பணிகள்.

### (1) இசை, நடனம், நாடகம், ஓவியம் முதலியவை.

இயல், இசை, நாடக மன்றம்—

தமிழ்நாடு, இயல், இசை, நாடக மன்றம் அரசின் முழு நிதி உதவியுடன் இயங்கி வரும் தன்னாட்சி உரிமையுள்ள ஒரு நிறுவனமாகும். அது நடனம், நாடகம், இசை ஆகிய கலைகளைப் பேணி வருகின்றது. திறம் மிக்க சிறந்த கலைஞர்களை ஊக்குவிக்கிறது; சிறந்த கலைஞர்களுக்கு "கலைமாமணி" பட்டமளித்து சிறப்பிக்கிறது. இம்மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்கும், பிற மாநிலங்களிலிருந்து இம்மாநிலத்திற்கும் போய் வரும் கலைக் குழுக்களை கவனிக்கின்றது. 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இம்மன்றத்தின் வெள்ளி விழா கொண்டாடப்பட்டது.

2. அமைக்கவிருக்கும் நாடகக் கலைத் தனிப்பயிற்சிப் பள்ளிக்கான பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

இசைக் கல்லூரிகள்—

3. சென்னையிலும் மதுரையிலும் உள்ள அரசு இசைக் கல்லூரிகளில் மொத்தம் சுமார் 540 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

வறுமையால் வாடும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம்—

4. வறுமையால் வாடும் ஏறத்தாழ 1,000 கலைஞர்கள் மாதந்தோறும் இத்திட்டத்தின்கீழ் ரூ. 150 ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். ஓய்வூதியம் முதற்கண் 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகின்றது. ஓய்வூதியம் பெறு

பவர் வறுமை நிலையிலேயே தொடர்ந்தால், மீண்டும் மூன்று ஆண்டு, மூன்று ஆண்டாக புதுப்பிக்கப்படுகிறது. அவ்வாறு ஓய்வூதியம் பெறும் கலைஞர் இறந்துவிட்டால் அவரது மனைவிக்கும் அவர் நிலையைப் பொறுத்து, இறக்கும் வரை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்து இந்த ஓய்வூதியம் வழங்கப் படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் இந்த ஓய்வூதிய வகையில் மொத்தம் ரூ.. 21 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஓவியம் நுண்கலைக் குழு—**

5. ஓவியம் முதலிய நுண்கலைகளைப் பேணி வளர்க்கும் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு, தன்னாட்சியுரிமையுள்ள நிறுவனமாகும். அது ஆண்டுதோறும் ரூ. 2 இலட்சம் மானியம் பெறுகிறது. அதன் பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது.

**ஜவகர் பால பவன்—**

6. ஜவகர் பால பவன் ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கலை, இசை, நடனம், முதலியவற்றில் இளஞ்சிறார்களிடம் மறைந்துள்ள திறமைகளை வளர்த்துக்கொள்ள வசதி அளிக்கும்படி, கல்வி மற்றும் மனமகிழ் மன்றமாக அது இருக்கும். திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை முதலிய மாவட்ட தலைமையிடங்களுக்கும் அது தன் பணியை விரிவாக்கியுள்ளது.

### (2) ஆவணக் காப்பகமும் அருங்காட்சியகங்களும்.

**ஆவணக் காப்பகம்.**

1. தமிழ்நாடு ஆவணக் காப்பகம் ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகக் திகழ்வதுடன், அரசு ஆவணக் காப்பகமாகவும் செயல்படுகிறது. 300 ஆண்டு களுக்கு முற்பட்ட பல ஆவணங்கள் அதில் உள்ளன. கடந்த 30 ஆண்டு களுக்கு முந்திய ஆவணங்கள் ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுக்குத் தரப்படு கின்றன. ஆராய்ச்சியாளர் கூடத்தில் ஆராய்ச்சியாளர்களுக்கு சிறந்த வசதி கள் செய்யப்பட்டுள்ளன.

2. 1973 ஆம் ஆண்டு அமைக்கப்பெற்ற 'தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு' தென்னகத்தின் பல்வேறு வாழ்க்கை அம்சங்கள் குறித்த ஆராய்ச்சி களை ஊக்குவிப்பதற்காக இரண்டாண்டுகால ஆராய்ச்சி மாணவப் பணி யிடங்களை வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஆராய்ச்சி மாணவருக்கும் ரூ. 5,000 சில்லரைச் செலவினங்களுக்காக ஆண்டுதோறும் அளிக்கப்படுகின்றது. 1980—82 இரண்டாண்டு காலத்தில் ஆராய்ச்சிப்பணியில் நால்வர் ஈடுபட்டுள் ளனர்.



3. தெரிந்தெடுத்த ஆவணங்களை அச்சிட்டு வெளியிட ஒரு பிரிவு அமைக் கப்பட்டுள்ளது. "திருநெல்வேலி கலவர சதி வழக்கும் ஆஷ் கொலையும்." "சிறைகளிலிருந்து வெளிவரும் கைதிகளுக்கு உதவுவதற்கான மாநில சங்கம்" ஆகிய பொருள்களைப்பற்றிய ஆவணத் தொகுப்புகளை அச்சிட்டு வெளியிட ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட விவரச் சுவடிகளை திருத்தியமைத்து, மீண்டும் எழுதுவதற்கான மாவட்ட விவரச்சுவடிகள் பிரிவும் இத்துறையின்கீழ்தான் செயல்படுகின்றது. புதுக்கோட்டை மாவட்ட விவரச்சுவடி அச்சில் உள்ளது. தருமபுரி மாவட்ட விவரச்சுவடி வெளியீடு விரைவில் ஏற்பளிக்கப்படும். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் விவரச்சுவடிகளை எழுதுவதற்கான விவரங்கள் தொகுக்கப்பட்டு வருகின்றன.

**அருங்காட்சியகங்கள் :—**

5. சென்னை, புதுக்கோட்டை, சேலம், மதுரை ஆகிய இடங்களில் அரசு அருங்காட்சியகங்கள், அருங்காட்சியக இயக்குநரின்கீழ் செயல்படுகின்றன. 1981-82ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் அல்லது வேலூரில் மாவட்ட அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்படும்

6. சென்னையில் ரூ. 29 இலட்சம் செலவில் குழந்தைகள் அருங்காட்சியகம் ஒன்று அமைக்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியகத்தைச் சார்ந்துள்ள தேசிய கலைக் கூடத்துக்கு ரூ. 27 லட்சம் செலவில் புதிய கட்டிடம் ஒன்று கட்டவும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

### (3) பொது நூலகங்கள்.

1. கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். அதில் 3.20 லட்சம் புத்தகங்கள் உள்ளன. உறுப்பினர்கள் 13,700 பேராவர். 1981-82-ல் ரூ. 45,000 செலவில் இந்நூல் நிலையத்தில் புத்தக பைண்டிங் பிரிவு ஒன்று அமைக்கப்படும். 1977 ஆகஸ்டு முதல் நாகர்கோயிலிலுள்ள கவிமணி நிலைய நூலகமும் இத்துறையின்கீழ் செயல்படுகிறது.

2. புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங் களில் மாவட்டத்திற்கு ஒரு நூலக ஆணைக்குழு உள்ளது. மாவட்டத்திற்கு ஒரு நூலகம் வீதம் தற்போது 14 மாவட்ட மைய நூலகங்களும், 1,449 கிளை

நூலகங்களும் உள்ளன. 5,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை இருந்தும் இன்னும் கிளை நூலகங்கள் திறக்கப்படாத ஊர்களில் கிளை நூலகங்கள் திறப்பதற்காக சென்னை தவிர, பிற மாவட்ட நூலக ஆணைக்குழுக்களுக்கு அரசு சிறப்பு மானியமாக 1981-82-ல் மொத்தம் ரூ. 5 லட்சம் தரும். கிளை நூலகம் ஒன்றுக்கு ரூ. 26,000 வீதம் மொத்தம் 20 கிளை நூலகங்கள் தொடங்க மானியம் தரப்படும்.

3. தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948-ஐ 'மாற்றப்பட்ட பகுதி' யாகிய கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்துக்கு விரிவாக்க அரசு கருதியுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மாவட்ட நூலக ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும்.

4. மாவட்ட நூலக ஆணைக்குழுக்களின் கீழுள்ள நிலையங்கள் அனைத்திலும் உள்ள புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை 79 லட்சம். இவையனைத்தின் மொத்த உறுப்பினர்கள் 8.70 லட்சம் பேர்கள். உறுப்பினர்களல்லாதவர்களும் நூல் நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள புத்தகங்களைப் பயன்படுத்தலாம். நூலகப் பணியில் உள்ளவர்கள் எண்ணிக்கை சுமார் 3,520 ஆகும்.

5. மைய அரசுக் கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தன்னாட்சி உரிமையுள்ள அமைப்பாகிய "இராசாராம் மோகன்ராய் நூலக நிறுவனம்" பொது நூலகங்கள் தரும் பங்குத் தொகைக்கு இரு மடங்கு மதிப்புள்ள நூலக புத்தகங்களை அவைகளுக்குக் கொடுத்து வருகிறது. 1981-82 ஆம் ஆண்டில் அவ்வாறு இம்மாநில நூலகங்கள் ரூ. 4 லட்சம் மதிப்புள்ள புத்தகங்களை அந்நிறுவனத்திடமிருந்து பெற வகை செய்வதற்காக ரூ. 2 லட்சம் அந்நிறுவனத்திற்குப் பங்குத் தொகையாகத் தர நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

6. 1979-80-ல் மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள், நூலக மேல் வரியாக ரூ. 146 லட்சம் பெற்றன—(சென்னை மாவட்டக் குழு பெற்ற ரூ. 69 லட்சம் உள்பட). சென்னை தவிர பிறமாவட்டங்களில் உள்ள நூலக ஆணைக் குழுக்கள், நூலக மேல்வரி மூலம் வசூலிக்கப்படும் தொகைக்குச் சமமாக இணைமானியத்தையும் அரசிடமிருந்து பெறுகின்றன. 1973-74 ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய இணை மானியத்தில் 25 விழுக்காடு புத்தகங்களாக கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு 1979-80 ஆம் ஆண்டில் கொடுத்த புத்தகங்கள் 3087, மொத்தம் கொடுத்த படிகள் 4.94 இலட்சம்; செலவு





ரூ. 31 லட்சம். சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு மேற்கொண்டுள்ள ஒரு கட்டிடத் திட்டத்தின்கீழ், வட்டார நூலகக் கட்டிடங்கள் மூன்று முற்றுப்பெறும் நிலையில் உள்ளன. கிளை நூலகக் கட்டிடங்கள் 5 கட்டப்பட்டு வருகின்றன. கிளை நூலகங்களுக்குக் கட்டிடம் கட்டுவதற்காக சென்னை தவிர பிற மாவட்ட நூலக ஆணைக் குழுக்களுக்கு மானியம் தர 1981-82-ல் ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

7. நூலக ஆணைக்குழுக்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியச் சலுகையை அரசு 1—4—1974 முதல் விரிவாக்கியுள்ளது. பணப்பயன் 1—4—1979 முதல் கிடைக்கும். 10—10—1979 முதல் குடும்ப நலத்திற்கான "குழு ஈட்டுறுதித் திட்டமும்" அவர்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது.

## (IV) தொல்பொருள் ஆய்வுத்துறை.

மாநிலத் தொல்பொருள் ஆய்வுத்துறை, இம்மாநிலத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களைப் பாதுகாத்து வருகிறது. தமிழ்நாடு வரலாற்றுச் சின்னப் பாதுகாப்புச் சட்டம் (1966)-ன்படி இதுவரை 75 வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க, இத்துறை மேற்கொண்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் அரண்மனை போன்ற வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கவும், பழுதுபார்க்கவும் ரூபாய் 5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. இந்தத் துறையானது தமிழ் நாட்டிலுள்ள வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களில் அகழ்வாய்வுகளையும் மேற்கொண்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் கோவலன் பொட்டல், கங்கைகொண்ட சோழபுரம், கரூர், கொற்கை, போளுவாம்பட்டி ஆகிய இடங்களில் அகழ்வாய்வுகளை இத்துறை தொடர்ந்து செய்யும்.

3. தமிழ்நாட்டில் பழங்கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகள், சென்னைக்கு அருகில் குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பல இடங்களிலும், புதுக் கற்காலக்கருவிகள் திருநெல்வேலி மாவட்டத்தில் குலசேகரப்பட்டணம் அருகில் தேரி ஆகிய பகுதிகளிலும் கிடைக்கின்றன. இவற்றை ஆய்வதற்கு இத்துறையில் "வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்தை ஆயும் பிரிவு" ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

4. திருச்சிராப்பள்ளி அருகில் கங்கைகொண்ட சோழபுரத்திலும், மதுரை மாவட்டம் கோவலன் பொட்டலிலும், வரலாற்றுக் காட்சிக் கூடங்கள் அமைக்க ஏற்கெனவே ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் மேலும் நான்கு வரலாற்றுக் காட்சிக் கூடங்களை பின்வரும் நான்கு இடங்களில் அமைக்க முடிவு செய்யப்பட்டு இருக்கிறது :—அதாவது (1) செங்கற்பட்டு

[1981 ஏப்ரல் 27

மாவட்டத்தில் உள்ள பூண்டியில் வரலாற்றுக்கு முற்பட்ட பொருட்கள் காட்சிக் கூடமும்; (2) திருநெல்வேலி மாவட்டம் கொற்கையில் அங்கும் அருகி லுள்ள வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களான தேரி, சாயர்புரம், ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களிலும் அகழ்வாய்வில் கிடைத்த வரலாற்றுச் சிறப்புள்ள பொருட்களை உள்ளடக்கிய ஒரு காட்சிக் கூடமும் (3) வட ஆர்க்காடு மாவட்டம் ஆர்க்காட்டில் இசுலாமிய கலையைச் சித்தரிக்கும் ஒரு காட்சிக் கூடமும்; (4) திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் கிராமியக் கட்டிடக் கலைக் காட்சிக் கூடமும்; ஆக நான்கு காட்சிக் கூடங்கள் அமைக்கப்படும். மதுரையில் வேதியியல் முறையில் தொல் பொருட்களைத் தூய்மை செய்யும் ஆய்வுக்கூடப் பிரிவும் அமைக்கப்படும்.

5. தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையான சோழ மண்டலக் கடற்கரையில் குறிப்பாக காவிரிப்பூம்பட்டினத்தில், கோவாவில் உள்ள தேசிய ஆழ்கடல் ஆராய்ச்சி நிறுவனத்தோடு இணைந்து ஆழ்கடல் அகழ்வாய்வு செய்யும் பணியையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

6. அரசு ஓலைச்சுவடி நூலகமும் தற்போது இத்துறையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நூலகத்தில் 65,000 பழமையான ஓலைச்சுவடிகள் உள்ளன. 1981-82-ல் இந்நூலகத்தில் ரூ. 70,000 மதிப்பில் ஓலைச்சுவடிகளைப் படியெடுக்கும் நிழற்படக்கருவி அமைக்கப்படும்.

## X தமிழ் வளர்ச்சி.

### தமிழ்வளர்ச்சி இயக்ககம்.

பிற துறைகளிற்போல அரசுப் பணியிலும் "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்று நடைமுறைக்கு வரவேண்டுமென்பதே அரசின் கொள்கை. அனைத்துத் துறைகளிலும் அரசுப் பணிகள் அனைத்திலும் தமிழைப் பயன் படுத்தச் செய்வதற்கான முனைப்பான நடவடிக்கைகளைத் தமிழ் வளர்ச்சித் துறை எடுத்து வருகிறது. அரசு அலுவலகங்கள் அனைத்திலும் தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை செம்மையாகவும் முழுமையாகவும் நிறைவேற்றுவதற்கான மூவாண்டு முனைப்புத் திட்டம் ஒன்றுக்கு அரசு ஏற்பளித்து முதற்கண் 1981-82-ல் பத்திரப் பதிவுத் துறை, சிறுசேமிப்புப் பணித் துறை, நியமனப்புத் துறை, சிறைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை ஆகிய ஐந்து துறைகளில் அத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

2. 1867-1925 ஆம் ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களின் விவர அட்டவணை 13 தொகுதிகளாக முன்னரே வெளியிடப்பட்டுள்ளது. 1925-க்குப்பின் வெளியான தமிழ் நூல்களுக்கான விவர அட்டவணையைத் தொகுக்கும் பணி நடந்து வருகிறது.



1981 ஏப்ரல் 27]

3. தமிழில் மூல நூல்களை ஆக்கி வெளியிடும் ஆசிரியர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றையும் தமிழ் வளர்ச்சித்துறை செயல்படுத்தி வருகிறது. தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் இரண்டாவது பதிப்பை தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலமாகத் தயாரித்து வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4. சிறந்த தமிழ் நூல்களுக்கு விருது அளிக்கும் திட்டத்தின்கீழ் 1975-80 ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுக்கும் பணி நடந்து வருகிறது.

### தமிழ்நாட்டு வரலாறு.

5. தமிழ்நாட்டு வரலாற்றை எழுதுவதற்காக வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆறு தொகுதிகளுடைய இவ்வரலாற்றில் தொல் பழங் காலத்தைப் பற்றிய முதல் தொகுதி முன்னரே வெளியிடப்பட்டு விட்டது. சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதி இரண்டு பகுதிகளாக வெகு விரைவில் வெளியிடப்படும்.

### மொழி பெயர்ப்புப் பணி.

6. பிறமொழி நூல்களில் சிறந்தவற்றை தமிழில் வெளி யிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்குமான திட்டம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. தமிழிலிருந்து பிற மொழிகளிலும், பிற மொழிகளிலிருந்து தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்ட இலக்கியங்களின் பட்டியல் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. பின்வரும் மூன்று ஆங்கில நூல்களின்—அதாவது ஆனந்த குமாரசாமியின் "சிவன்நடனம்", கலீல்கிப்ரான் எழுதிய "தீர்க்கதரிசி" என்னும் நூல்; "சோவியத் இலக்கியத்திலிருந்து 100 கவிதைகள்"; ஆகியவற்றின் தமிழ் வடிவங்களும், "பதிற்றுப் பத்து", "பாரதியாரின் "ஞான ரதம்" சங்க இலக்கியப் பாடல்களின் தொகுப்பான "அணிலாடு முன்றில்" ஆகியவற்றின் ஆங்கில வடிவங்களும் 1981 சனவரியில் வெளியிடப்பட்டன. வில் டுராண்ட் எழுதிய "நாகரிக வரலாறு" என்னும் 11 மடலம்கொண்ட மாபெரும் புத்தகமும், கிப்பன் எழுதிய "ரோமானியப் பேரரசின் தாழ்வும் வீழ்ச்சியும்" என்னும் வரலாற்று நூலும், தமிழாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இனி வெளியிட இருக்கும் நூல்களில் ஜிம்மர் முதலியோர் நூல்களின் தமிழாக்கங்களும், அறிஞர் அண்ணாவின் "ரங்கோன் ராதாவின்" பிரெஞ்சு மொழி பெயர்ப்பும் அடங்கும்.

## தமிழ் கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் பாராட்டு.

7. இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் உமறுப் புலவர் பெயரில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்றையும், பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக சென்னை பல்கலைக் கழகத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளையும் இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. ''பாவேந்தர் பாரதிதாசன் விருது'' ரூ. 10,000 இதுவரை கவிஞர்கள் திருவாளர்கள் சுரதா, வாணிதாசன், எஸ். டி. சுந்தரம் ஆகியோருக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ் எழுத்தாளர்களுக்கான திரு வி. க. விருது ரூ. 10,000, 1980-ல் திரு. நாரணதுரைக்கண்ணனுக்கு வழங்கப்பட்டது.

## வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஒய்வூதியம்.

8. மாத வருமானம் ரூ. 400-க்கு மேல் இல்லாமல் இருக்கிற தமிழறிஞர்களுக்கு மாதம் ரூ. 250 வீதம் ஓய்வூதியம் தரப்படுகிறது. இதுவரை 92 அறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது.

## பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் தமிழ்க் கல்வியையும் தமிழாராய்ச்சியையும் ஊக்குவித்தல்.

9. பிற மாநிலப் பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் ஆகியவைகள் 24-க்கு இதுவரை நிறுவனத்துக்கு ரூ. 15,000 வீதம் மானிய உதவி அளிக்கப்பட்டுள்ளது. திருவனந்தபுரத்திலுள்ள 'திராவிட மொழிகளின் மொழியியல் ஆராய்ச்சிக்கான பன்னாட்டுப் பள்ளி' யின் ஆராய்ச்சிப் பணிகளுக்காகவும் இவ்வரசு மானியம் தந்துள்ளது.

10. மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் உலகத்தில் பல்வேறு நாடுகளிலிருந்தும் வெளிநாட்டினர் பெருமளவில் கலந்து கொண்டது. வெளிநாட்டினருக்கு தமிழ் மொழியினிடத்து எத்துணைப் பற்று உள்ளது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. தமிழைப் பயிலுவதற்காக இந்நாட்டிற்கு வருகிற வெளிநாட்டு மாணவர்களுக்குத் தாராளமாகப் படிப்பு உதவித் தொகைகள் வழங்குமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொள்ளும். அதே போன்று வெளிநாடுகளிலுள்ள தமிழ் மக்கள் தமிழ் கற்க ஆசிரியர்கள் தேவைப்படும்போது, அத்தகைய ஆசிரியர்களைத் தமிழக அரசு அவர்களுக்கு அனுப்பி உதவிசெய்ய மத்திய அரசு துணை நிற்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளும்.



11. வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்கு தமிழ் கற்றுத் தருவதற்கான பாட முறைகளை உருவாக்குவதற்கான திட்டம் ஒன்றை வகுப்பதற்காக மைசூரிலுள்ள '' இந்திய மொழிகளுக்கான மைய அரசு நிறுவன '' த்தில் தமிழாசிரியர்கள், தமிழ் அறிஞர்கள் ஆகியோர் 28 பேருக்கு பணிமுகாம் ஒன்றை அரசு அண்மையில் நடத்துவித்துள்ளது.

## செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலி

12. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத்தின் இயக்குநர் தமிழிலும், திராவிட மொழிகளிலும் சிறந்த அறிஞர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் மறைவுக்குப் பின் இத் திட்டத்தை தமிழ் வளர்ச்சித் துறையின் ஒரு பிரிவாக தமிழறிஞர் குழு ஒன்றின் உதவியுடன் தொடர்ந்து செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது,

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

13. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தன்னுடைய தமிழ் வளர்ச்சி, ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்கிறது. அதாவது தமிழ்ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு இதழை வெளியிடுதல்; வெளிநாட்டு மற்றும் பிறமாநில மாணவர்களுக்கு தமிழ் கற்றுத் தருதல்; தமிழ் இலக்கியக் கொள்கைகள் பற்றிய மாதாந்திர கருத்தரங்குகளை நடத்துதல்; இலக்கியம், பண்பாடு போன்ற துறைகளில் தமிழரின் மரபுச் செல்வம் பற்றிய கருத்தரங்குகளை நடத்துதல்; தமிழ் இலக்கியம், வரலாறு பற்றிய சிறந்த நூல்களையும் இதுகாறும் வெளியிடப்படாத சில ஓலைச் சுவடிகளையும் வெளியிடுதல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது.

14. ஸ்ரீலங்காவிலிருந்து டாக்டர் ஏ. வேலுப்பிள்ளை, இங்கிலாந்து எக்செடர் பல்கலைக் கழகத்திலிருந்து திரு. கிரிகரி ஜேம்ஸ், ஹாலந்து நாட்டில் உட்ரெக்ட் பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் கமில் சுவலெபில் போன்ற பெயர் பெற்ற தமிழறிஞர்களைக் கொண்டு சிறப்பு விரிவுரைகளை இந்நிறுவனம் நடத்தியுள்ளது. '' இந்தியா-செக்கோஸ்லோவேகியா கலாச்சாரப் பரிமாற்றத் திட்டத்தின் '' கீழ் செக்கோஸ்லோவேகியா நாட்டினர் தமிழ் பயில்வதற்கான தமிழ் பாட நூல் ஒன்றை உருவாக்குவதில் இந்நிறுவனம் ஒத்துழைத்து வருகிறது.

15. இந்நிறுவனத்தில் ''சுவடியியல்'', '' மொழிபெயர்ப்பியல்'' எனும் பட்ட மேற்படிப்புப் பட்டய வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

[1981 ஏப்ரல் 27

## உலகத் தமிழ்ச் சங்கம்.

16. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி அறிவித்த உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு நிறுவப்படும். இந்த நிறுவனத்தில் தமிழ் மொழி வல்லுநர்கள் பணி புரிவர். இவர்கள் தமிழ் ஆராய்ச்சிப் பணியினைத் தீவிரமாக மேற்கொள்வார்கள். இந்தச் சங்கம் ஆராய்ச்சித் துறையில் முழு தன்னாட்சி உரிமை உள்ளதாகச் செயல்படும். அது உலகெங்கணும் உள்ள பல உலகத் தமிழ்ச் சங்கக் கிளை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இயங்கும். இச் சங்கம் நிறுவ இறுதிச் செலவு ரூபாய் ஒரு கோடி ஆகும். தொடக்க நிதி ஒதுக்கமாக 1981–82-ல் ரூ. 5 லட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## தமிழ்ப் பல்கலைக் கழகம்.

17. புதிய தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவது குறித்து அரசுக்கு ஆலோசனை கூற அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. அப் பல்கலைக் கழகத்தைத் தஞ்சாவூரில் தொடங்குவதென அரசு முடிவு செய்துள்ளது. இதனை அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ல் இவ்வாண்டு தொடங்க அரசு முயற்சி செய்து வருகிறது.



1981 ஏப்ரல் 27]

## இணைப்பு 1.

### பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

(மாணவர்கள் இலட்சத்தில்)

அ. வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை—

| (1) | 1973–74 (2) | 1976–77 (3) | 1977–78 (4) | 1978–79 (5) | 1979–80 (6) | 1980–81 (7) |
|---|---|---|---|---|---|---|
| வயதுத் தகுதி 6—11— | | | | | | |
| சிறுவர் .. | 30·45 | 31·93 | 32·39 | 32·84 | 33·27 | 33·69 |
| சிறுமியர் .. | 29·79 | 31·23 | 31·68 | 32·11 | 32·54 | 32·95 |
| மொத்தம் .. | 60.24 | 63.16 | 64.07 | 64.95 | 65.81 | 66.64 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | | | |
| சிறுவர் .. | 13·71 | 14·37 | 14·58 | 14·78 | 14·97 | 15·16 |
| சிறுமியர் .. | 13·40 | 14·05 | 14·25 | 14·45 | 14·64 | 14·83 |
| மொத்தம் .. | 27·11 | 28·42 | 28·83 | 29·23 | 29·61 | 29·99 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| **வயதுத் தொகுதி 14—17—** | | | | | | |
| சிறுவர் .. | 11·31 | 11·86 | 12·03 | .. | .. | .. |
| சிறுமியர் .. | 11·07 | 11·60 | 11·77 | | | |
| மொத்தம் .. | 22·38 | 23·46 | 23·80 | | | |
| **வயதுத் தொகுதி 14—16—** | | | | | | |
| சிறுவர் .. | | | | .. | .. | 8·54 |
| சிறுமியர் .. | | | | .. | .. | 8·33 |
| மொத்தம் .. | | | | 16·32 | 16·51 | 16·87 |

ஆ. பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை—

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| **வயதுத் தொகுதி 6—11** | | | | | | |
| சிறுவர் .. | 30·64 | 32·02 | 33·11 | 33·83 | 34·34 | 34·80 |
| சிறுமியர் .. | 23·74 | 25·50 | 26·74 | 27·38 | 27·94 | 28·66 |
| மொத்தம் .. | 54·38 | 57·52 | 59·85 | 61·21 | 62·28 | 63·46 |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வயதுத் தொகுதி 11—14—** | | | | | | |
| சிறுவர் .. | 9·10 | 9·74 | 10·26 | 10·73 | 11·02 | 11·48 |
| சிறுமியர் .. | 5·09 | 5·76 | 6·12 | 6·29 | 6·65 | 6·94 |
| மொத்தம் .. | 14·19 | 15·50 | 16·30 | 17·02 | 17·67 | 18·42 |
| **வயதுத் தொகுதி 14—17—** | | | | | | |
| சிறுவர் .. | 4·97 | 5·34 | 5·24 | | | |
| சிறுமியர் .. | 2·42 | 2·68 | 2·69 | | | |
| மொத்தம் .. | 7·39 | 8·02 | 7·93 | | | |
| **வயதுத் தொகுதி 14—16—** | | | | | | |
| சிறுவர் .. | | | | .. | .. | 4·45 |
| சிறுமியர் .. | | | | .. | .. | 2·28 |
| மொத்தம் .. | | | | 2·28 | 6·34 | 6·73 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| **இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்—** | | | | | | |
| **வயதுத் தொகுதி 6—11—** | | | | | | |
| சிறுவர் .. | 100·6 | 100·3 | 102·2 | 103·21 | 103·21 | 103·30 |
| சிறுமியர் .. | 79·5 | 81·7 | 84·4 | 85·17 | 85.87 | 86·97 |
| சிறுவரும் சிறுமியரும். | 90·2 | 91·7 | 93·4 | 94·25 | 94·64 | 95·22 |
| **வயதுத் தொகுதி 11—14—** | | | | | | |
| சிறுவர் .. | 66·3 | 67·7 | 70·3 | 72·26 | 73·60 | 75·73 |
| சிறுமியர் .. | 37·9 | 41·0 | 42·9 | 43·39 | 45·44 | 46·79 |
| சிறுவரும் சிறுமியரும் | 52·3 | 54·4 | 56·8 | 58·25 | 59·68 | 61·42 |
| **வயதுத் தொகுதி 14—17** | | | | | | |
| சிறுவர் .. | 43·0 | 44·9 | 43·7 | .. | .. | .. |
| சிறுமியர் .. | 21·8 | 23·1 | 22·9 | .. | .. | .. |
| சிறுவரும் சிறுமியரும். | 33·0 | 34·1 | 33·4 | .. | .. | .. |
| **வயதுத் தொகுதி 14—16** | | | | | | |
| சிறுவர் .. | | | | .. | .. | 52·07 |
| சிறுமியர் .. | | | | .. | .. | 27·40 |
| சிறுவரும் சிறுமியரும் | | | | 38·46 | 38·44 | 39·90 |
| **ஈ பள்ளிகளின் எண்ணிக்கை—** | | | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் | 26,726 | 27,306 | 27,395 | 27,425 | 27,662 | 27,648 |
| நடுநிலைப் பள்ளிகள். | 5,773 | 5,730 | 5,709 | 5,705 | 5,685 | 5,658 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 2,833 | 3,030 | 3,058 | 2,196 | 2,088 | 2,069 |
| மேல்நிலைப் பள்ளிகள் | .. | .. | .. | 912 | 1,138 | 1,300 |
| மொத்தம் .. | 35,322 | 36,066 | 36,162 | 36,238 | 36,573 | 36,675 |

மேல் நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவ எண்ணிக்கை, ஆசிரியர்—மாணவர் விகிதம் போன்ற வகையில் பின்தரப்பட்டுள்ள பள்ளி விவரங்கள் உயர்நிலைப்பள்ளி வகுப்புகளில் (10-ம் வகுப்பும் கீழும்) அப்பள்ளிகளில் பயின்றுவந்த மாணவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியவையாகும்.

| | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| **உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை—** | | | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் | 1,06,382 | 1,11,033 | 1,11,184 | 1,11,808 | 1,12,535 | 1,11,071 |
| நடுநிலைப் பள்ளிகள் | 66,843 | 67,846 | 68,794 | 69,279 | 66,568 | 69,51 |
| உயர்நிலைப்பள்ளிகள் | 65,959 | 72,838 | 73,039 | 75,136 | 34,102 | 32,427 |
| மேல்நிலைப் பள்ளிகள் | .. | .. | .. | | 45,257 | 53,843 |
| மொத்தம் .. | 2,39,134 | 2,51,717 | 2,53,017 | 2,56,223 | 2,58,462 | 2,66,857 |

(Column (5): 75,136 is bracketed against both உயர்நிலைப்பள்ளிகள் and மேல்நிலைப் பள்ளிகள்.)

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| **ஊ. ஆசிரியர்—மாணவர் விகிதம்—(ஆக்ஸ்டு முதல் நாள் உள்ளபடி)—** | | | | | | |
| (1) பள்ளிவாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகையில் சேர்த்து)— | | | | | | |
| முதல்நிலைப்பள்ளிகள் | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| நடுநிலைப் பள்ளிகள். | 32 | 33 | 33 | 36 | 37 | 36 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 24 | 24 | 24 | 24 | 23 | 23 |
| மேல் நிலைப் பள்ளிகள் | .. | .. | .. | .. | 28 | 27 |
| (2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களை, ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)— | | | | | | |
| முதல் நிலைப்பள்ளி வகுப்புத் தொகுதி. | 37 | 36 | 37 | 39 | 38 | 38 |
| நடுநிலைப்பள்ளி வகுப்புத் தொகுதி. | 33 | 33 | 33 | 33 | 32 | 31 |
| உயர் நிலைப் பள்ளி வகுப்புத்தொகுதி. | 29 | 30 | 27 | 26 | 26 | 24 |
| மேல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | .. | .. | .. | .. | 22 | 20 |

**1980—81-ல் (2–10–80-ல் இருந்தவாறு) பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய புள்ளி விவரங்கள்.**

| பள்ளிகள். (1) | பள்ளிகள் எண்ணிக்கை. (2) | மாணவர்கள் (இலட்சத்தில்.) (3) | ஆசிரியர் கள். (4) |
|---|---|---|---|
| முதல் நிலை (பிரைமரி) பள்ளிகள்— | | | |
| அரசு .. .. .. .. | 1,421 | | |
| நகராட்சி .. .. .. | 1,094 | | |
| ஊராட்சி ஒன்றியம் .. .. .. | 20,199 | | |
| தனியார் .. .. .. .. | 4,934 | | |
| | 27,648 | 44.16 | 1,11,071 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| நடுநிலைப் பள்ளிகள்— | | | |
| அரசு .. .. .. .. .. | 181 | | |
| நகராட்சி .. .. .. .. | 398 | | |
| ஊராட்சி ஒன்றியம் .. .. .. .. | 3,113 | | |
| தனியார் .. .. .. .. .. | 1,966 | | |
| | 5,658 | 24·95 | 69,516 |
| மொத்தம் தொடக்கப் பள்ளிகள் .. .. | 36,306 | 69·11 | 1,80,587 |
| உயர்நிலைப் பள்ளிகள்— | | | |
| சாதாரணம்: | | | |
| அரசு .. .. .. .. .. | 1,486 | | |
| நகராட்சி .. .. .. .. | 72 | | |
| தனியார் .. .. .. .. .. | 400 | | |
| | 1,958 | 7·04 | 26,898 |
| ஆங்கிலோ இந்தியன் .. .. .. | 17 | 0·12 | 361 |
| மெட்ரிகுலேஷன் .. .. .. .. | 29 | 0·13 | 535 |
| சி. பி. எஸ். ஈ. முதலியவை .. .. .. | 65 | 0·30 | 1,633 |
| மொத்தம் உயர்நிலைப் பள்ளிகள் .. .. | 2,069 | 7·59 | 32,427 |
| மேல்நிலைப் பள்ளிகள்— | | | |
| சாதாரணம்: | | | |
| அரசு .. .. .. .. .. | 572 | | |
| அரசு (தொழில் நுட்பம்) .. .. .. | 14 | | |
| நகராட்சி .. .. .. .. .. | 57 | | |
| தனியார் .. .. .. .. .. | 643 | | |

| | | | |
|---|---|---|---|
| —— | 1,186 | 13·39 | 49,146 |
| ஆங்லோ இந்தியன் .. .. .. | 26 | 0·26 | 799 |
| மெட்ரிகுலேஷன் .. .. .. .. | 31 | 0·28 | 1,141 |
| சி, பி. எஸ். ஈ. முதலியவை .. .. | 57 | 0·65 | 2 757 |
| மொத்தம் மேல்நிலைப் பள்ளிகள் .. .. | 1,300 | 14·58 | 548.43 |
| மொத்தம் அனைத்து பள்ளிகளும் சேர்த்து .. | 36,675 | 91·28 | 2,66,857 |
| மாணவர் | | 52.44 | |
| மாணவியர் | | 38·84 | |

ஏனைய பள்ளிகள்—

| | எண்ணிக்கை. | மாணவர்கள். | ஆசிரியர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| இளஞ்சிறார் பள்ளிகள் .. .. .. | 31 | 4,709 | 111 |
| கீழ்த்திசை பள்ளிகள் .. .. .. | *18 | 3,346 | 193 |
| ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் .. .. | 79 | 2,162 | 279 |
| கைத்தொழில் பயிற்சி மையங்கள் .. | 7 | 500 | 40 |

* கீழ்த்திசைப் பள்ளிகள் 18-ல் இரண்டு மேல்நிலைப் பள்ளிகள் ஆகும். அவ்விரண்டு பள்ளிகளின் எண்ணிக்கை மேலே தனியார் மேல்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை எனக் கண்டுள்ள 543 பள்ளிகளில் சேர்த்துள்ளது.



1980—81-ல் பள்ளிகளில் பணி செய்து வந்த ஆசிரியர்களின் நிருவாகவாரி விவரம்.

| பள்ளிகள். | அரசு. | நகராட்சி. | ஊராட்சி ஒன்றியம். | தனியார். | மொத்தம். | ஆசிரியர்களில் ஆண் | ஆசிரியர்களில் பெண் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 6,907 | 9,340 | 65,429 | 29,345 | 1,11,071 | 68,372 | 42,699 |
| நடுநிலைப் பள்ளிகள் | 3,461 | 6,996 | 29,279 | 29,780 | 69,516 | 36,647 | 32,869 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 21,220 | 1,449 | .. | 9,758 | 32,427 | 21,404 | 11,023 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 22,721 | 3,018 | .. | 28,104 | 53,843 | 34,330 | 19,513 |
| மொத்தம் .. | 54,309 | 20,803 | 94,708 | 96,987 | 2,66,857 | 1,60,753 | 1,06,104 |

## இணைப்பு II

கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். | 1973-74 | 1976-77 | 1977-78 | 1978-79 | 1979-80 | 1980-81 |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | | | | |
| (1) புகுமுக வகுப்பு | 72,646 | 34,257 | 89,423 | 77,802 | .. | .. |
| (2) பி ஏ. .. | 51,698 | 44,697 | 43,077 | 42,871 | 47,872 | 53,903 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| (3) பி. எஸ்சி. .. | 49,057 | 48,110 | 46,948 | 51,622 | 56,847 | 65,980 |
| (4) பி. காம். .. | 14,859 | 19,195 | 20,451 | 20,725 | 21,744 | 23,834 |
| (5) பட்டமேற் படிப்பு | 6993 | 7,043 | 7,012 | 7,509 | 9,263 | 10,994 |
| மொத்தம் .. | 1,95253 | 2,03302 | 208,911 | 200,529 | 135,786 | 154,711 |
| 2. ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | | | | | |
| (1) அரசுக் கல்லூரிகள் .. | 2,969 | 3,733 | 3,812 | 3,818 | 3,752 | 3,857 |
| (2) தனியார் கல்லூரிகள் .. | 7,090 | 7,883 | 8,394 | 8,329 | 8,438 | 8,713 |
| மொத்தம் .. | 10,059 | 11,616 | 12,206 | 12,142 | 12,190 | 12,570 |
| 3. கல்லூரிகள் எண்ணிக்கை— | | | | | | |
| (1) அரசு .. | 51 | 51 | 51 | 51 | 51 | 51 |
| (2) தனியார் .. | 127 | 138 | 137 | 137 | 136* | 136 |
| மொத்தம் .. | 178 | 189 | 188 | 188 | 187 | 187 |

*அண்ணாமலைப்பல்கலைக்கழக புகுமுகக் கல்லூரி 1979-80 முதல் மூடப்பட்டுவிட்டது.



பிறகல்லூரிக்களுக்கான 1980-81-ம் ஆண்டு விவரங்கள்.

| வகை | கல்லூரிகளின் எண்ணிக்கை. அரசு. | தனியார். | மாணவர் எண்ணிக்கை. | ஆசிரியர்களின். எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள் .. .. | 7 | 16 | 3,354 | 23 |
| (2) உடற்பயிற்சிக் கல்லூரிகள் .. .. | | 3 | 321 | 26 |
| (3) புலவர் கல்லூரிகள் .. .. | .. | 15 | 1,765 | 141 |
| (4) சமுதாயப் பணிப் பள்ளி .. .. | .. | 2 | 191 | 16 |
| (5) கிராமப்புற உயர் கல்வி நிலையம் .. | .. | 1 | 583 | 70 |
| (6) இசைக் கல்லூரிகள் .. .. .. | 2 | .. | 542 | 51 |
| (7) ஆயுர்வேதக் கல்லூரி .. .. .. | .. | 1 | 18 | 6 |
| மொத்தம் | 9 | 38 | 6,774 | 551 |

## இணைப்பு III.

### 1980-81-ல் தொழில் நுட்பக் கல்வி பற்றிய விவரங்கள்.

| | கல்வி நிலையங்களின் எண்ணிக்கை. (1) | மொத்த மாணவர் எண்ணிக்கை (2) |
|---|---|---|
| 1 பொறியியற் கல்லூரிகள்— | | |
| (1) அரசு .. .. .. .. .. .. | 3 | 8,083 |
| (2) தனியார் .. .. .. .. .. | 3 | |
| (3) தன்னுரிமையுள்ளவை .. .. .. .. | 7 | 7,300 |
| 2 பாலிடெக்னிக்குகளும், சிறப்பு பட்டயப் படிப்பு நிலையங்களும்— | | |
| (1) அரசு .. .. .. .. .. .. | 20 | 17,770 |
| (2) தனியார் .. .. .. .. .. .. | 24 | |
| (3) தன்னுரிமையுள்ளவை .. .. .. .. | 1 | 280 |
| 3 தொழிற் பாட மேல்நிலைப் பள்ளிகள்— | | |
| (1) அரசு .. .. .. .. .. .. .. | 11 | 2,094 |
| (2) தனியார் .. .. .. .. .. .. | 3 | |
| மொத்தம் .. | 72 | 35,527 |

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

செவ்வாய்க்கிழமை, 1981 ஏப்ரல் 28.

சித்திரை 16, துன்மதி—திருவள்ளுவராண்டு 2012.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிடாத வினாக்கள்.

### வேலையில்லாதிருக்கும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்.

13 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேலையில்லாதிருக்கும் பயிற்சி பெற்ற ஆசிரியர், நிலை வாரியாக எத்தனை பேர் ?

(இ) அவர்கள் அனைவருக்கும் வேலையளிக்க அரசு புதிய திட்டம் ஏதும் தீட்டியுள்ளதா?

(உ) ஆம் எனில், அவற்றின் விவரங்கள் யாவை?

விடை.—

(அ) 31—10—1980 அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலை வாய்ப்பு அற்றவர்களாக பதிவு செய்திருந்த (செல்லுபடிப் பதிவேட்டில் இருந்த) ஆசிரியர்கள் எண்ணிக்கை வருமாறு:—

| | |
|---|---|
| 1. பட்டதாரி ஆசிரியர்கள் | 10,526 |
| 2. இடைநிலை (செகண்டரி கிரேடு) | 15,075 |
| 3. இளநிலை (ஹையர் கிரேடு) | 450 |
| 4. தமிழாசிரியர்கள் | 3,439 |
| 5. பிறமொழி ஆசிரியர்கள் | 146 |
| 6. உடற்பயிற்சி ஆசிரியர்கள் | 2,122 |
| 7. கைத்தொழில் ஆசிரியர்கள் | 4,148 |

(இ) & (உ) கடந்த பல ஆண்டுகளாகவே வேலை வாய்ப்பற்ற ஆசிரியர்கள் எண்ணிக்கை பெரும் எண்ணிக்கையில்தான் இருந்து வந்துள்ளது. எனினும் அதைப் படிப்படியாகக் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. ஆசிரியர் பயிற்சிக்கென இடங்களை ஓரளவுக்குக் குறைத்தல், நிதி நிலை இடம் தரும் அளவுக்கு ஆண்டுதோறும் பள்ளிகளில் கூடுதல் ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளால் ஆசிரியர்கள் வேலை வாய்ப்பின்மை பிரச்சினையைப் படிப்படியாகத் தீர்க்க அரசு முயன்று வருகிறது.

### சமுதாயக் கிணறுகள்.

14 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சமுதாயக் கிணறுகள் தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக எத்தனை இருக்கின்றன?

(இ) மேலும் சமுதாயக் கிணறுகள் தோண்டும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

விடை—

(அ) தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாகவுள்ள சமுதாயக் கிணறுகள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1. வடாற்காடு மாவட்டம் | 49 கிணறுகள் |
| 2. தென்னாற்காடு மாவட்டம் | 42 கிணறுகள் |
| 3. செங்கல்பட்டு மாவட்டம் | 20 கிணறுகள் |
| 4. கோயம்புத்தூர் மாவட்டம் (பெரியார் மாவட்டம் உட்பட) | 28 கிணறுகள் |
| 5. தர்மபுரி மாவட்டம் | 11 கிணறுகள் |
| 6. கன்னியாகுமரி மாவட்டம் | 22 கிணறுகள் |
| 7. நீலகிரி மாவட்டம் | இல்லை. |
| 8. மதுரை மாவட்டம் | 18 கிணறுகள் |



| | |
|---|---|
| 9. புதுக்கோட்டை மாவட்டம் | 96 கிணறுகள் |
| 10. இராமநாதபுரம் மாவட்டம் | 426 கிணறுகள் |
| 11. சேலம் மாவட்டம் | 13 கிணறுகள் |
| 12. திருச்சிராப்பள்ளி மாவட்டம் | 49 கிணறுகள் |
| 13. தஞ்சாவூர் மாவட்டம் | 62 கிணறுகள் |
| 14. திருநெல்வேலி மாவட்டம் | 328 கிணறுகள் |
| ஆக மொத்தம் | 1,164 கிணறுகள் |

(இ) & (உ) இல்லை. ஆனால் ஊராட்சி ஒன்றியங்களின் உபரி நிதியினைக் கொண்டு ரூ. 40,000-க்கு மேற்படாமல் செலவு செய்து சமுதாயக் கிணறுகள் அமைத்திட, மாவட்ட ஆட்சியாளர்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு அனுமதி வழங்கிட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

### சாலைகள்.

15 வினா.—திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வேலை தொடங்கி 15—6—1980 நாளன்றுள்ளவாறு முற்றுப் பெறாத சாலைகள் மாவட்ட வாரியாக எத்தனை?

விடை—

இது குறித்து விவரங்கள் @ இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

### *Backward Class and Scheduled Caste Candidates Admitted into Medical Colleges.*

16. *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Health be pleased to state the number of Backward Class and Scheduled Caste candidates, who were selected in the general quota for admission into the Medical Colleges in the year 1980?

A.—

| | |
|---|---|
| Backward Classes candidates ... ... ... | 102 |
| Schednled Caste\|Scheduled Tribe candidates ... | 1 |

@ 350 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

### தமிழாசிரியர் பயிற்சி பெற்ற தமிழ்ப் புலவர்கள்.

17 வினா.—திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

புலவர் பட்டமும், தமிழாசிரியப் பயிற்சியும் பெற்று, மாநிலத்திலுள்ள வேலை தேடித் தரும் அலுவலகங்களில் பதிவு செய்துள்ளோர் எண்ணிக்கை, மாவட்ட வாரியாக எவ்வளவு?

விடை.—

6—12—1980 நிலவரப்படி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள தமிழ்ப் புலவர் பட்டமுடன் தமிழாசிரியர் பயிற்சி பெற்ற வர்களின் எண்ணிக்கையும் பயிற்சி பெறாத தமிழ்ப் புலவர் பட்டம் மட்டும் பெற்றவர்களின் எண்ணிக்கையும் மாவட்ட வாரியாக கொண்ட அறிக்கை @@ மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### 2. அரசினர் தீர்மானம்.

### கேள்வி நேரம் கைவிடப்படல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவ ரவர்களே,

"சட்டமன்ற மேலவை விதி 22-ன் கீழ் இன்றைய கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்ற மேலவை விதி 22-ன் கீழ் இன்றைய கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

---

@@ 351 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கழுகுமலையில் இரண்டு சமூகத்தினரிடையே ஏற்பட்ட மோதல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள், கழுகுமலையில் வியாபாரிகளான இரண்டு சமூகத்தினரிடையே ஏற்பட்ட மோதல் குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு அந்த விதியின்கீழ் வருகிறதென்பதை சுருக்கமாக விளக்குமாறு கோருகிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, நெல்லை மாவட்டம், கழுகுமலையில் இரண்டு சமூகத்தினருடைய வியாபாரத்திலே நடைபெற்ற ஒரு மோதலின் காரணமாக, வேறு வகையாக அந்தச் சம்பவம் மாறி, ஆட்களைச் சேர்த்து வந்து, இரண்டு கோஷ்டிகளாக மாறி, அங்கே மோதல் நடந்ததோடு, 40 கடைகளுக்குத் தீ வைத்து, 10 லட்சம் ரூபாய் அளவிற்கு சேதமாகியிருப்ப தாகத் தகவல்கள் வந்திருக்கின்றன. சாதாரணமாக இது போன்ற ஊர் களிலே இருப்பவர்கள் சிறிய சம்பவங்களைக்கூட, ஏற்கெனவே அவை முன் னவர் குறிப்பிட்டதுபோல, சமூகப் பிரச்சினையாக, சாதிப் பிரச்சினையாக மாற்றி, மிகப் பெரிய கலவரங்களை உருவாக்கும் சூழ்நிலை நாட்டிலே பரவிக் கொண்டிருக்கிறது. ஆகவே தொன்று தொட்டு வளர்ந்து வருகிற இந்தச் சூழ்நிலையை மாற்றி, நாட்டிலே இருக்கக்கூடிய இப்படிப்பட்ட நடைமுறை களைத் தவிர்க்க வேண்டும். ஏற்கெனவே ஒரு முறை இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஒரு ஊரிலோ, நகரத்திலோ எந்த ஒரு சம்பவம் நடந்தாலும், அந்தச் சம்பவத்தை உடனடி யாக விசாரித்து, அங்கே எந்தவித அசம்பாவிதமும் நிகழாமல் இருக்க வாய்ப் பாக அனைத்துக் கட்சியினரோடு, ஊரின் பொது நலத்திலே அக்கறையுள்ள பெரியவர்களையும் சேர்த்து, குழு அமைத்து, உரிய நடவடிக்கை எடுக்கலா மென்று கூறினார்கள். மேலும் எந்தெந்த வகையில் இப்படிப்பட்ட சம்பவங் கள் நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கலாம் என்பது குறித்து நாம் கலந்து பேசி, நல்ல முடிவை எடுக்க வாய்ப்பாக, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மேலவைத் தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம், கழுகுமலையில் 24—4—1981 அன்று இரவு சுமார் 9 மணியளவில் திரு. இன்னாசிமுத்து நாடார் என்பவருக்கும் திரு. கருப்புசாமி தேவர் என்பவருக்கும் வாய்த் தகராறு ஏற்பட்டது. இது சம்பந்தமாக புலனாய்வுத் துறையின் மூலமாக தொலைபேசியிலேயே இங்கே யிருந்து தகவல்கள் கேட்டபோது, திரு. இன்னாசிமுத்து நாடார், கடை

[திரு. கா. இராசா முகமது] [1981 ஏப்ரல் 28

வீதியில் சென்று கொண்டிருந்தபோது, திரு. கருப்புசாமித் தேவர் குடி வெறியில் பேசியிருக்கிறார் என்ற தகவல் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு திரு. இன்னாசிமுத்து நாடாரை திரு. கருப்புசாமித் தேவர் தாக்கியிருக்கிறார். இதன் பிறகு நாடார் இனத்தைச் சேர்ந்த சிலர் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு, திரு. கருப்புசாமித் தேவரைத் தாக்க முயன்றனர். திரு. கருப்புசாமித் தேவர் அறிவாளைக் காட்டி மிரட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். பிறகு, திரு. கருப்புசாமித் தேவரும் மற்றும் சுமார் 20 பேர்களும் சேர்ந்து கொண்டு மேரி தீப்பெட்டித் தொழிற்சாலையின்மீது கற்களை வீசி சேதம் ஏற்படுத்தினர். அங்கிருந்தவர்களை அறிவாளைக் காட்டி மிரட்டினர். கடைகளுக்குத் தீ வைத்தனர். பின் தங்கையா நாடார் என்பவர் அறிவாளால் வெட்டப்பட்டு, கையில் காயமடைந்தார். தகவல், அறிந்தவுடன் கோவில்பட்டி உதவி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், காவல் துறையினர் மற்றும் தீ அணைப்புப் படையினருடன் சென்று தீயை அணைக்க நடவடிக்கை எடுத்தார். பல இனத்தவர்களுக்குச் சொந்தமான 43 கடைகள் தீயினால் சேதமடைந்தன. சுமார் 4,87,500 ரூபாய் அளவிற்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. திரு. தேவநாயகம் என்பவர் கொடுத்த புகாரின்பேரில் கழுகுமலைக் காவல் நிலைய குற்ற எண் 30/81 இ.த.ச. 147, 148, 324, 427, 436, 506(2) ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. திரு. கருப்புசாமித் தேவர் உட்பட 7 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரும், கண்காணிப்பாளரும் 25—4—1981 அன்று சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டனர். பலத்த காவல் துறை பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நிலைமை அமைதியாக உள்ளது. எனவே இப்பொருள் குறித்து விவாதிக்க மேலவையின் ஏனைய அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்தப் பொருள் குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு என் அனுமதியை மறுக்கிறேன்,



## 4. கவன ஈர்ப்பு.

**(1) சென்னையிலுள்ள பெயின்ஸ் மெமோரியல் பேப்டிஸ்ட் - சர்ச் மெட்ரிகுலேஷன் பள்ளியில் திடீரென பல ஆசிரியர்கள் நிரந்தரப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளது குறித்து.**

* **திரு. பா. ரா. தாமஸ் (செல்வி அ. லீலாவதி சார்பில்) :** மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

"சென்னை வேப்பேரி நெடுஞ்சாலையில் உள்ள பெயின்ஸ் மெம்மோரியல் பேப்டிஸ்ட் சர்ச் மெட்ரிகுலேஷன் பள்ளியில் திடீரென பல ஆசிரியர்கள் நிரந்தரப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதால் ஆசிரியர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒரு விவர அறிக்கை * அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

* **திரு. பா. ரா. தாமஸ் :** தலைவரவர்களே, சிறுபான்மையினர் பள்ளி என்று சொல்லிக்கொண்டு, நீதி மன்றம் சென்று தடை உத்தரவு பெற்று, கல்வித் துறையின் அங்கீகாரம் பெறாமல் ஆசிரியர்களைப் பணியிலிருந்து பணி நீக்கம் செய்கிறார்கள். எனவே ஆசிரியர்களுக்குத் தக்க முறையில் பாதுகாப்பு அளிக்க கல்வி அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, இந்தப் பள்ளிக்கூடம், பள்ளிக் கல்வி இயக்குநரவர்களால் அங்கீகாரம் செய்யப்படாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. இருந்தாலும் நிர்வாகத்தினர் இப்படி ஆசிரியர்களை வெளியேற்றுவதை நாம் விரும்பவில்லை என்று தெரிவித்து, இந்த மாதிரி நிலைமைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளலாம்.

* **திரு. பா. ரா தாமஸ் :** ஏற்கெனவே இந்தப் பள்ளியானது பல்கலைக் கழகத்திலே ஒப்புதல் பெற்று, அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. எனவே பல்கலைக் கழகத்தினுடைய அதிகாரத்தை வைத்து, இதைக் கட்டுப்படுத்துவதற்கு நமது அரசு முன்வர வேண்டுமென்று சொல்லி, அதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பல்கலைக் கழகத்திற்கு அந்த அதிகாரம் போய்விட்டது. மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் மீது அவர்களுக்கிருந்த அதிகாரத்தை நாம் எடுத்துக்கொண்டு விட்டோம்.

---

*352-353 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(2) தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர் சங்கம், தனியார் பள்ளி நிர்வாகத்தினரால் பழி வாங்கப்படுவதை எதிர்த்து, சிறுபான்மைப் பள்ளிகளில் பாதிக்கப்பட்டவர்களின் முறையீடுகளை சட்டப் பிரிவுகளின்படி ஏற்று, அரசு முடிவு கூற வேண்டுமென்றும், இதுவரை மறுக்கப்பட்ட முறையீடுகளை மறுபடியும் அனுமதித்து ஆணையிடப்பட வேண்டுமென்றும் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தின் முன்னால் 'தர்ணா' நடத்தியது குறித்து.

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

"தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர் சங்கம், தனியார் பள்ளி நிருவாகத்தினரால் பழி வாங்கப்படுவதை எதிர்த்து சிறுபான்மைப் பள்ளிகளில் பாதிக்கப்பட்டவர்களின் முறையீடுகளை சட்டப் பிரிவுகளின்படி ஏற்று அரசு முடிவு கூற வேண்டுமென்றும், மேலும் இதுவரை மறுக்கப்பட்ட முறையீடுகளையும் மறுபடியும் அனுமதித்து ஆணையிடப்பட வேண்டும் என்றும் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தின் முன்னால் 'தர்ணா' நடத்தியதால் மாணவர்கள் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து"

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஓர் விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, விவர அறிக்கையிலே 7—3—1981 அன்று பள்ளிக் கல்வி இயக்குநருடன் பேச்சு வார்த்தை நடத்தியதாகவும், 7—5—1981-ல் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்த இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பேச்சு வார்த்தை நடத்தியவர்கள் இந்தப் பிரச்சினையை 15 நாட்களில் தீர்த்து வைப்பதாக உறுதி அளித்திருக்கிறார்களென்று சொல்லுகிறார்கள். ஆனால் விவர அறிக்கையில் அப்படி இல்லை. மீண்டும் பேச்சு வார்த்தை நடத்த இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. எது சரி?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சிறுபான்மை இனத்தவரால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் இருக்கின்ற ஆசிரியர்களுடைய பணிப் பாதுகாப்புபற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும். இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்த முடியுமே தவிர, இல்லாத அதிகாரத்தை நாம் பயன்படுத்த முடியாது.

---

@354 ஆம் பக்கத்தின் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர் சங்கம் தனியார் பள்ளி நிர்வாகத்தினரால் பழி வாங்கப்படுவதை எதிர்த்து, சிறுபான்மைப் பள்ளிகளில் பாதிக்கப்பட்டவர்களின் முறையீடுக ள சட்டப் பிரிவுகளின்படி ஏற்று, அரசு முடிவு கூற வேண்டுமென்றும் இதுவரை மறுக்கப்பட்ட முறையீடுகளை மறுபடியும் அனுமதித்து ஆணையிடப்பட வேண்டுமென்றும் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தின் முன்னால் "தர்ணா" நடத்தியது குறித்து



(முற்பகல் 9-40)

ஆகவே இருக்கின்ற தன்மைக்கு, வரம்புக்கு உட்பட்டு நாம் என்ன செய்ய முடியும் என்பதைப்பற்றி ஆசிரியர் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். மறுபடியும் பேச இருக்கிறார்கள். ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்படுவதை அரசு எப்போதுமே விரும்பவில்லை. இயக்குநர் அவர்களுடன் இதுபற்றிப் பேசி எந்த முறையில் இதைத் தவிர்க்கலாம் என்பதற்கான யோசனை சொல்லப்படுமானால், அதை நாம் அமுல்படுத்த வாய்ப்பாக இருக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, இந்த முறையீடுகள் எல்லாம் தீர்க்கப்படாமல் இருந்ததாலும், காலா காலத்தில் அவை கவனிக்கப்படாத காரணத்தாலும் தான், அவர்கள் போராட்டம் நடத்தினார்கள். ஒன்றில் இல்லை என்றாவது அல்லது முடியாது என்றாவது பதில் தந்துவிட்டால், இப்படிப்பட்ட போராட்டங்களைத் தவிர்க்கலாம். இன்னும் துரிதமாக கல்வி இலாகா செயல்படுவதற்குரிய ஏற்பாடுகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் செய்வார்களா?

திரு. செ. அரங்கநாயகம் : இலாகாவில் ஏதாவது தவறு இருந்தால், அதை மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தும்போது, சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வலியுறுத்திச் சொல்லலாம். அதற்கு மேலும் அவர்களுடைய பிரச்சினைகள் தீரவில்லையென்றால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். அதுதுடன் ஆவன செய்ய வாய்ப்பாக இருக்கும்.

5. கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது விவாதம்—தொடர்ச்சி.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவரவர்களே, கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். இன்று கல்வித் துறை தமிழகத்திலே மிக்க சீரும் சிறப்புமாக விளங்கி வருகிறது. கல்வித் துறை இந்த அரசிலே ஒரு மிகவும் முக்கியமான துறை. மாணவர்களையும் ஆசிரியர்களையும் மணம் கமிழும் அளவுக்கு மேன்மையடையச் செய்திருக்கிறது இந்தத் துறை. இப்படிப்பட்ட பெருமைக்குரிய கல்வித் துறையைப் புகழ்ந்தால், எங்கே அதனுடைய வேகம் குறைந்துவிடுமோ

என்கிற எண்ணத்திலே இங்கே அமர்ந்திருக்கிற ஆசிரியப் பிரதிநிதிகள் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். குறிப்பாக கல்வியா செல்வமா என்று சொல்லும்போது, கல்வியில் செல்வத்தைப் பெற வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும், விரமும் வேண்டும் என்கிற எண்ணத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களும் சொன்னார்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக விவேகமாக கல்வித் துறையைச் செயல்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை 'சைலன்ட் எபிசியன்ஸி' என்று சொல்லுவார்களே அதேபோல் அவருடைய தனித் திறமை காரணமாக, ஆரவாரமற்ற அற்புதத் திறமை காரணமாக பல நல்ல செயல்களைச் செய்து கொண்டு வருகிறார்கள். 2.67 லட்சம் ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 91.28 லட்சம் மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். 36,675 பள்ளிகளும், 3 பல்கலைக் கழகங்களும் அடங்கிய மிகப் பெரிய அளவிலே கல்வித் துறையை இன்றையதினம் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். கல்வித் துறை ஆற்றி வருகிற பணி மிகவும் பாராட்டத் தக்க அளவுக்கு இன்றையதினம் அமைந்திருக்கிறது.

குறிப்பாக, தொழில் கல்வியை எடுத்துக்கொண்டால், மாணவர்கள் மத்தியில் அதற்கென்று சிறப்பான இடம் இன்றைக்குக் கிடைத்திருக்கிறது. தொழில் கல்விக்காக கல்வித் துறை ஆற்றி வருகிற பணி மிகவும் பாராட்டத் தக்கது. ஏறத்தாழ 52 ஆயிரம் மாணவர்கள் தொழில் கல்வி பயிலுகிறார்கள். அதனால் எதிர்காலத்தில் தமிழகம் தொழில் கல்வியில் முதலிடம் வகிக்கிற நிலைக்கு வரப்போகிறது என்பதையும் என்னால் எண்ணிப் பார்க்க முடிகிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றபோது, வேறு பல மாநிலங்களில் இல்லாத அளவுக்கு மாணவர்கள் நம்முடைய மாநிலத்திலே பயில முன்வரக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக பெண்கள் 33 சதவிகிதத்தினர் படித்து வந்த நிலை மாறி, இன்றைக்கு அது 42 சதவிகிதம் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இது அகில இந்திய அளவிலே பலருடைய பாராட்டினைப் பெற்றிருக்கிறது.

அடுத்து, ஆரம்பப் பள்ளியில் படிப்போர் எண்ணிக்கையைப் பொறுத்த வரை, இடையிலே படிப்பை விட்டுச் செல்வோர் எண்ணிக்கை 51 சதவிகிதமாக இருந்தது, இன்றைக்கு 34 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றபோது, நாம் வகுத்திருக்கிற தொழில் கொள்கை தான் இந்த வெற்றிக்கெல்லாம் காரணம் என்பதையும் உணர முடிகிறது. அந்த முறையிலே அடிப்படைக் கல்வியிலேயே ஆரம்பப் பள்ளியில் 3 வது



வகுப்புவரையிலுள்ள மாணவர்கள் யாரையும் தோல்வி அடையச் செய்யக் கூடாது என்கிற ஒரு நிலையை உருவாக்கியிருப்பது தோல்வி மனப்பான்மை இளம் பிராயத்திலேயே குழந்தைகள் மனத்திலே வரக்கூடாது, தோல்வி மனப்பான்மை வரக்கூடாது என்கிற நல்ல எண்ணத்தில் செய்யப்பட்ட நல்ல காரியம். ஏழையெளிய குழந்தைகளுக்கு இலவசமாக நூல்கள், கற்பலகைகள், உணவு போன்றவை வழங்கி கல்வியில் அடைய வேண்டிய நோக்கத்தை விரைவில் அடைய வழிவகை காணப்பட்டிருக்கிறது. படிக்கின்ற காலத்திலேயே தொழில் கல்வியையும் பயின்று எதிர்காலத்தில் அவர்களுடைய வாழ்வு சிறப்படையும் வகையில் இந்த அரசு வழிவகை செய்திருப்பது பாராட்டத் தக்கது. ஆனால் இப்படிப்பட்ட நல்ல காரியத்தை யாரெல்லாம் இங்கே பாராட்டியிருக்கிறார்கள் என்பதையும் எண்ணிப்பார்க்கிறேன். எதிர் வரிசையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த நல்ல காரியத்தை யாவது பாராட்டினால், அது அனைவருக்கும் பெருமை சேர்ப்பாக இருந்திருக்கும். அதோடு மாத்திரமல்லாமல், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கல்வியாளர். எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு தொழில் கல்வியில் தமிழகம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று அவர்கள் பாராட்டினார்கள் என்றால் அது எங்களைத் தட்டிக்கொடுப்பதாக இருக்கும். திட்டிக்கொண்டே போனால் இந்தப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் எங்கே சோர்ந்து விடுவார்களோ என்கிற பயம் எனக்கு உண்டு. அந்த முறையில் உங்களுடைய பாராட்டுக்கள் இந்தத் துறையிலே இருப்பவர்கள் ஆற்றுகின்ற செயலுக்கு ஊக்கம் தருவதாக இருக்கும். இதில் பாராட்ட என்ன இருக்கிறது என்று சொல்லுவீர்களேயானால், நான் ஒன்றை இங்கே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். டெல்லியில் இருக்கிற என்.சி.இ.ஆர்.டி. என்பது ஒரு அகில இந்திய நிறுவனம். 5 ஆண்டுக் காலமாக கல்வியில் என்னென்ன மாறுதலான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது பற்றி கணக்கெடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை அகில இந்திய அளவில் 7 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டிலே அதன் எண்ணிக்கை 12 சதவிகிதம் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும் தான் அதிக அளவில் கல்வி நிறுவனங்களை நிறுவி கல்விப் பணியை ஆற்றியிருக்கிறார்கள் என்கிற பாராட்டினைத் தெரிவித்திருக்கிறார்கள். 300 மக்கள் கொண்ட ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்பப் பள்ளிகள் தமிழ் நாட்டிலே தான் இருக்கின்றன. 3,500 ஆதித் திராவிட வீடுகள் இருக்கின்ற பகுதிகளிலே 1 மைல் தூரத்திற்குள் கல்வி வசதி அளிப்பதிலும் தமிழகம் உயர்ந்த நிலையில் இருக்கிறது. அந்த வகையிலே, நாம் 95 சதவிகிதம் என்கிற நிலையில் இருக்கிறோம். கல்வித்

துறையிலே உயர்ந்திருக்கிற கேரளாவிலே 75 சதவிகிதத்திலும், பிரதமர் இந்திரா, நேரு, சாஸ்திரி போன்றவர்கள் பிறந்த உத்தரப் பிரதேசத்தில் இது 78 சதவிகிதத்திலும் இருக்கிறது என்கிற நிலையை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், தமிழகம் எந்த நிலைக்கு வளர்ந்திருக்கிறது என்று எண்ணி என்னால் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியவில்லை. அதுபோல் நடுநிலைப் பள்ளிகளுடைய கணக்கைப் பொறுத்தவரையிலும், ஆதி திராவிடக் குடியிருப்புகள் இருக்கிற இடங்களில் 3 மைல்களுக்குள் நடுநிலைப் பள்ளிகள் இருக்க வேண்டுமென்ற கணக்கை எடுத்துக்கொண்டால் கூட, அகில இந்திய அளவிலே தமிழகம் உயர்ந்த நிலையில், பெருமைப்படக் கூடிய நிலையில் இருக்கிறது. அதுபோல் குழந்தைகள் பள்ளிகளுக்குச் செல்கின்ற கணக்கை எடுத்துப் பார்க்கின்றபோது, நாம் 110 சதவிகிதத்திலும், கேரளம் 101 சதவிகிதத்திலும் இருக்க, அகில இந்திய அளவில் 82 சதவிகிதம் என்று இருப்பதை எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில் யார் தான் இதை பாராட்டாமல் இருப்பார்கள் ? பெண்கள் கல்வியிலும் முன்பு 38 சதவிகிதமாக இருந்த நிலை மாறி இன்றைக்கு 45 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. 1 முதல் 12 வகுப்பு வரை 91 லட்சம் பிள்ளைகள் படித்துக்கொண்டிருக்கும்போது, அதில் பெண்களின் எண்ணிக்கை 44 சதவிகிதம் என்று பார்க்கும்போது, தமிழகத்தில் பெண்கள் கல்வி எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது என்பதை நம்மால் உணர முடிகிறது. யுனஸ்கோவில் இருந்து வந்த டைரக்டர்-ஜெனரல் டாக்டர் எம்.ஓ. அவர்களே இதற்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். அண்மையில் கல்வித் துறை பற்றி தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்றதாக ஒரு செய்தி பத்திரிகைகளில் வந்தது. கல்வித் துறை பற்றித் தவறான தகவலை யாராவது தந்தால், அது தவறு. அப்படித் தான் தந்திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலுள்ள 104 பள்ளிகளில் ஆசிரியர்களே இல்லையென்கிற செய்தி பத்திரிகைகளில் வந்தது. அப்படி இருக்குமா என்று நான் ஆராய்ந்து பார்த்தபோது, அங்கே 415 ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்கிற தகவல் எனக்கு வந்தது. ஆனால் அது பற்றிய கணக்கை எழுதும்போது, அதிகாரிகள் மாறி எழுதியிருக்கிறார்கள்.

அண்மையில் வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிற தலைமை ஆசிரியர் சங்கம் ஒரு ஆய்வு நடத்தியிருக்கிறது. அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அரசியல் அடிப்படையிலோ, ஆட்சிக்கு சாதகமாகவோ ஏற்படுத்தப்பட்ட அமைப்பு அல்ல அது. அதிலே தொழில் கல்வி பயின்று வரும் மாணவர்களின் எதிர்காலம் எப்படிப்பட்டது என்பதுபற்றி கணக்கெடுத்திருக்கிறார்கள். அப்படிக் கணக்கெடுத்துப் பார்த்ததிலே 32 சதவிகித மாணவர்கள் அதே பிரிவிலே மேல் படிப்புப் படிக்கச் சென்றிருக்கிறார்கள்



என்கிற தகவலையும், 15 சதவிகிதத்தினர் பி.ஏ., பி.எஸ்.ஸி. போன்ற வகுப்புகளுக்குச் சென்றிருக்கிறார்கள் என்கிற தகவலையும் 49 சதவிகிதத்தினர் இப்போது வேலையில் அமர்ந்திருக்கிறார்கள் என்கிற தகவலையும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வேலைவாய்ப்புப் பாதுகாப்பு அவர்களுக்கு நல்லமுறையில் இருக்கிறது. அவர்களாகவே வேலைவாய்ப்புக்களைத் தேடுகிற வசதியை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இதை எண்ணிப் பார்க்கின்றபோது, தொழில் கல்வி வெற்றி பெற்றிருக்கிறது என்பதையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

அடுத்து, அறிவியலுக்கு நாம் முதலிடம் தந்திருக்கிறோம். அரசு மேல் நிலைப் பள்ளிகளுக்கு 3 லட்சம் ரூபாய் அளவிலே விஞ்ஞானக் கூடங்களுக்காக அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. தனியாருக்கு 40 சதவிகிதம் உதவி செய்து ஆய்வுக் கூடங்களுக்கு வழிவகை செய்திருக்கிறோம். நடமாடும் அறிவியல் கூடங்களைப் பொறுத்தவரை, 42 கல்விக் கூடங்களுக்கு வழிவகை செய்திருக்கிறோம். விஞ்ஞானத்திற்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. நாளைய இளம் தலைமுறையினர் விஞ்ஞானத்திலே, அறிவியலிலே முதலிடம் பெறுவார்கள். இன்றைக்குக் கிராமங்களுக்குச் சென்றால், நம்மை முதலில் மகிழ்ச்சியுடன் வரவேற்பது புதிதாக உருவாக்கியிருக்கிற விஞ்ஞானக் கூடங்கள் தான். கிராமப் புறங்களில் புதிதாக மேல்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தியிருப்பதன் காரணமாக இன்றைக்கு கிராமப்புறங்களுக்குச் சென்று எம்.ஏ., எம்.எஸ்ஸி. போன்ற பட்ட மேற்படிப்புப் படித்த ஆசிரியர்கள் பணியாற்றக் கூடிய நிலை இருக்கிறது. பட்ட மேற்படிப்பு படித்தவர்களுக்கான தேவையும் ஏற்பட்டிருக்கிறது. கிராமங்களுக்குப் போங்கள், கிராம ராஜ்யம் ஏற்பட வேண்டுமென்று மகாத்மா காந்தி, ஜெயப் பிரகாஷ் போன்ற தலைவர்கள் கனவு கண்டார்கள். அவர்கள் கனவு நிறைவேறும் வண்ணம், அவர்கள் எல்லாம் மகிழும் அளவுக்கு கிராமப்புறங்களுக்கு இன்றையதினம் பட்டமேற்படிப்புப் படித்த பட்டதாரிகள் எல்லாம் பணியாற்ற சென்றிருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் இப்படி மேற்படிப்புப் படித்த 10 ஆசிரியர்களுக்கு மேல் பணியாற்றக் கூடிய வாய்ப்பு இருப்பதால், விஞ்ஞான ஆசிரியர்கள் சென்று பணியாற்றக் கூடிய வாய்ப்பு இருப்பதால், கிராமப்புற சாதாரண ஏழையெளிய மக்களுக்குக் கூட நல்ல முறையில் விஞ்ஞான அறிவு ஏற்பட இது துணையாக இருக்கிறது.

அடுத்து, பள்ளிக்கூடங்களில் இருக்கிற நூலகங்கள் வளர்ச்சியடைய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. நூலகங்களுக்கு நூல்கள் வாங்குவதற்காக 45 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது நூலகங்கள் நல்ல முறையில் வளர,

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1981 ஏப்ரல் 28

துணைபுரிவதாக இருக்கும். வேலைவாய்ப்பு என்கிற அடிப்படையில் எம்.ஏ., எம்.எஸ்ஸி. பட்ட மேற்படிப்புப் படித்தவர்கள் எல்லாம்கூட வேலைவாய்ப்பு இல்லாத நிலையில் முன்பு இருந்தார்கள். நான் பட்டதாரி ஆசிரியர்களின் பிரதிநிதி என்கிற நிலையில் பட்டதாரி ஆசிரியர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த துன்பங்கள் எல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால்

(முற்பகல் 9-50)

இந்த அரசு மேற்கொண்ட அரிய பெரிய முயற்சிகளின் காரணமாக கடந்த ஆண்டுகளில் 15 ஆயிரம் ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். அதிலே 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட முதுகலைப் பட்டதாரிகளும், 4,300 பகுதி நேர ஆசிரியர்களும் தொழில் கல்விக்காக நியமிக்கப்பட்டிருப்பதன் மூலம்கூட வேலையில்லாத பட்டதாரிகளின் பிரச்சினையைத் தீர்க்க இந்தக் கல்விக் கொள்கை துணையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சில கருத்துக்களை எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கும்போது ஆலோசனையாக இருக்கும் விதத்தில் சொல்கிறேன். பஞ்சாயத்து யூனியன் ஆரம்ப ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஜூன் 1 முதல் ஆக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளையும் அரசுப் பள்ளிகளாக அறிவிக்க வேண்டும். அங்கே வேறு பணிகளில் பணியாற்றுபவர்கள் அந்தப் பள்ளிகளிலே போய் அமர்ந்துகொண்டு பணியாற்ற வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதைத் தவிர்க்க இது துணையாக இருக்கும். அப்படிச் செய்தால் அந்தப் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தவர்கள் வேறு பணிகளை ஆற்ற வழி வகுக்கும்.

மேல் நிலைப் பள்ளிகளிலே விருப்பப் பாடங்களாக விஞ்ஞானப் பாடங்களை ஏற்று நேர்முகச் சோதனைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. முன்பு இடைக்காலத்திலே இப்படி பிராக்டிக்கல் வகுப்பு தேவையில்லை என்று சொல்லியிருந்தார்கள். அப்படிச் செய்தது நீர் இல்லாமல் நீச்சல் பழகு வதைப் போல இருந்தது. அந்த நிலை மாறி 11 மற்றும் 12-வது வகுப்பு களிலே பயிலும் மாணவர்களுக்கு விஞ்ஞானப் பயிற்சிக்கு வழிவகை கண்டிருப் பதைப் போல 9 மற்றும் 10-வது வகுப்புகளிலேயும் இப்படிப்பட்ட விஞ்ஞான சோதனைகளுக்கு வழிவகைகள் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'விஞ்ஞானத்தை வளர்க்கப் போறேண்டி, சாத்திரம் பார்ப்பது அந்தக் காலம், சரித்திரம் படிப்பது இந்தக் காலம், கோத்திரம் பார்ப்பது அந்தக் காலம், குணத்தைப் பார்ப்பது இந்தக் காலம்' என்று கலைவாணர் அவர்கள் கண்ட கனவு நனவாக இந்த அரசு பாடுபட வேண்டும்.



1981 ஏப்ரல் 28] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

தமிழ்மொழி ஆசிரியர்கள் இப்போது கட்டுரைகளைத் திருத்த வேண்டி யிருக்கிறது. இது அவர்களுக்கு ஒரு பெரிய வேலையாக இருக்கிறது. வாரத்திற்கு ஒரு கட்டுரையாக 2 மாதத்திற்கு குறைந்தது 200 கட்டுரைகளை அவர்கள் திருத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, உயர் நிலைப் பள்ளிகளிலே 4 பிரிவுகள் இருந்தாலும், மேல் நிலைப் பள்ளிகளிலே 2 பிரிவுகள் இருந் தாலும், அங்கெல்லாம் இந்தப் பணிகளைச் செய்ய டியூட்டர்களை நியமிக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாப் பள்ளிகளையும் மேல் நிலைப் பள்ளிகளாக்கும் காலம் விரைவிலே வரவேண்டும். அதற்கு வழிவகை காணும் வகையிலே ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 150 பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல் நிலைக் கல்வியின் வெற்றியை எண்ணிப் பார்க்கும்போது, பி.யூ.சி. இருந்தபோது, 70 ஆயிரம் மாணவர்கள் படித்தார்கள். ஆனால் இப்போது மேல்நிலைப் பள்ளிகளிலே 1½ லட்சம் மாணவர்கள் படிக்கிறார்கள். முன்பு கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் பெரு நகரங்களுக்குச் செல்ல வேண்டும். ஆனால் இப்போது அந்தக் கல்லூரிக் கல்வி அறிவு கிராமங் களுக்கும் வந்திருக்கிறது, அதை மக்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது.

சென்ட்ரல் போர்டு ஆஃப் ஸ்கூல் எட்யூக்கேஷன் செய்கிற காரியங்களைப் பொறுத்து, நாம் சில விஷயங்களைக் கருத்திலே கொள்ள வேண்டும். நாம் இரு மொழிக் கொள்கையை வைத்திருக்கிறோம். அவர்கள் வேறுவித கொள்கையை வைத்திருக்கிறார்கள். அவர்கள் பரவலாக பள்ளிகளுக்கு அங்கீகாரம் கொடுக்கிறார்கள். தனியார் ஒருவர் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க வேண்டுமென்றால், அதற்கு 1 லட்சம் ரூபாய் முன்பணம் வைக்க வேண்டும் என்று நாம் விதி வைத்திருக்கும்போது, அவர்கள் 10 ஆயிரம் ரூபாய் தந்தால் போதும் என்று சொல்கிறார்கள். பள்ளிக்கூடங்களுக்கு எவ்வளவு கட்டிட வசதி இருக்கிறது என்பதுபற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை, அந்தக் கட்டிடங்களிலே நல்ல காற்றோட்டம் இருக்கிறதா என்ற கவலை அவர்களுக்கு இல்லை, ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. இவர்கள் பற்றியெல்லாம் எந்தவிதமான ஒழுங்கு முறைக் கட்டுப்பாட்டையும் அவர்கள் வைக்கவில்லை. கேட்டவர்களுக்கெல்லாம் அனுமதி தருகிறார்கள். அந்தப் பள்ளிகள் எல்லாம் தமிழகத்திலே தனித் தீவுகள் போல இருக்கின்றன. அதனாலே நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன், மத்திய அரசை வலியுறுத்தி, நமது அதிகாரிகள் அந்தப்

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1981 ஏப்ரல் 28

பள்ளிக்கூடங்களைப் பார்வையிடவும், நம்முடைய கல்வி நிலையங்களுக்கு ஏற்ப அவைகள் செயல்படவும் வழிகாணும் வகையிலும், இப்போது இருக்கும் இந்தத் தீவுகளை ஒழிக்க முடியாவிட்டாலும், இனிமேல் இதுபோன்ற பள்ளிகளுக்கு அனுமதி வழங்காமல் இருக்கும் வகையிலும் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பள்ளிகள் தமிழ்நாட்டிலே இருந்தும், அங்கே தமிழில் சொல்லிக் கொடுக்கப்படவில்லை. இந்த நிலைமைகளைப் போக்க வேண்டும்.

அடுத்து, நர்சரிப் பள்ளிகள். அவைகளைப் பொறுத்தவரையிலும் இந்த மாதிரியான கட்டுப்பாட்டை அரசு கொண்டுவர வேண்டும். அந்தப் பள்ளி களுக்கும் சரியான முறையில் கட்டிட வசதியில்லை. அங்கே பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் சரியானமுறையில் ஊதியம் கொடுக்கப்படவில்லை. அவர் களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை. இவைகளையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கிலீஷ் மீடியம் பள்ளிகள் இருப்பதே தவறு என்று சொல்லவில்லை. தங்களுடைய குழந்தைகள் நல்ல ஆங்கில அறிவோடு இருக்க வேண்டும் என்று பெற்றோர்கள் விரும்பினால், அவர்கள் அந்தக் கல்வியைப் பெற நாம் இடையூறாக இருக்கக்கூடாது. அதேநேரத்தில் அந்தப் பள்ளிகளிலே குறைந்த அளவாவது தமிழ் அறிவைப் பிள்ளைகள் பெறுவதற்குரிய வழிவகைகளைக் காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே இருப்பவர்கள் இப்போது என்ன செய்கிறார்கள் என்றால், அவைகள் ஆங்கிலப் பள்ளிகள் என்று அறிவித்துவிட்டு, மாணவர்கள் மனு செய்ய 50 ரூபாய், மாதாமாதம் 50 ரூபாய் என்று ஒரு 200 ரூபாய் அளவுக்கு வசூலித்துவிட்டு, அப்படி 50 மாணவர்கள் இருந்தால் 10 ஆயிரம் ரூபாய் வசூலித்துவிட்டு அங்கே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மாதம் 150 ரூபாய் என்ற அளவிலே சம்பளம் கொடுக்கிறார்கள். மேலும் அவர்களைப் பிடிக்கவில்லை என்றால், நினைத்த நேரத்திலேயே வீட்டுக்கு அனுப்பும் காரியங்களையும் செய்கிறார்கள்.

அடுத்தபடியாக செகண்டரி கிரேட் டீச்சர்களைப் பொறுத்தவரையில், எஸ்.எஸ்.எல்.சி. படித்து முடித்துவிட்டு இரண்டாண்டு காலம் பயிற்சி பெற்றவர்கள் 20 ஆயிரம் பேர் இன்றையதினம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இப்போது மேலும் இந்த வகுப்பிலே 2 ஆயிரம் பேர் சேர்க்கப்படுகிறார்கள். கர்நாடகா அரசு மைசூரிலே தனியார் ட்யூட்டோரியல் கல்லூரி என்ற அமைப்புகள் வைத்து இதற்குப் பயிற்சி அளிக்கிறார்கள். நாம் குறைந்தது 300 மதிப்பெண் இருந்தால்தான் சேருவதற்கு அனுமதி அளிக்கிறோம். 60 சதவீதம் மதிப்பெண்கள் வாங்கினால்தான், அவர்களைத்



1981 ஏப்ரல் 28] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

தேறியவர்களாகக் கருதுகிறோம். ஆனால் அங்கே அப்படி இல்லை. இன்னும் சொல்லப் போனால், 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய் கொடுத்தாலே சான்றிதழ் கொடுக்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. அங்கே சென்று படித்து விட்டு வந்து, அவர்கள் இங்கே இருக்கும் தனியார் பள்ளிகளிலே வேலைகளும் வாங்கிவிடுகிறார்கள். இது ஒரு பெரிய ஆபத்தாக இருக்கிறது. ஆகவே, அங்கே சென்று படித்து வந்து வேலையில் இருப்பவர்களுக்கு ஒரு தேர்வு வைத்து அவர்களைத் தகுதியுடையவர்களாக ஆக்க வேண்டும் என்றும், இனிமேல் அந்தத் தேர்விலே தேறியவர்களை நியமிக்க அனுமதிக்கக்கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறேன். கேரள அரசு அதை தடைசெய்திருக்கிறது, அந்தப் பயிற்சியை 'டி-ரெகக்னைஸ்' செய்திருக்கிறது. இதையும் கருத்திலே கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில், மூன்று நிலையாகக் கருத வேண்டும். 1 முதல் 5 வரை ஒரு பகுதி, 6 முதல் 7 வரை இன்னொரு பகுதி, அடுத்து 8, 9, 10 என்பது மூன்றாவது பகுதி என்று மூன்று வகைப்படுத்த வேண்டும். ஓர் ஆசிரியர் பள்ளிகளை ஈராசிரியர் பள்ளிகளாக்கலாம். பல ஓராசிரியர் பள்ளிகளைப் பார்த்தால், அந்தப் பள்ளிகளிலே அந்த ஆசிரியர்கள் இருக்க மாட்டார்கள். வயலுக்குப் போயிருப்பார்கள். அல்லது வேறு எங்கேயாவது போயிருப்பார்கள். பிள்ளைகள் இன்னொரு பக்கம் போயிருப்பார்கள். ஆகவே, குறைந்த பட்சம் கணவன்-மனைவியாக இருந்து ஈராசிரியாக இருந்தால்கூட நல்லது. அப்படிச் செய்தால், இருவரிலே ஒருவராவது பள்ளிக்கு வருவார் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரிகளைப் பொறுத்தவரையில், கல்லூரி ஆசிரியர்களுக்கு எம்.ஃபில். படிக்க வசதிகளைச் செய்திருக்கிறோம். அவர்கள் 5 ஆண்டுகளிலே அதை முடிக்க வேண்டும் என்று இருக்கிறது. 5 ஆண்டுகளுக்குள் முடிப்பது கடினம். பள்ளிக்கூடங்களிலே பணிபுரியும் ஆசிரியர்கள் ஓய்வு காலங்களிலே எம்.எஸ்ஸி. படிக்க வழிவகை செய்திருப்பதைப் போல, கல்லூரி ஆசிரியர்களுக்கும் எம்.ஃபில். படிக்க தக்க வழிவகை செய்யவேண்டும். அஞ்சல் மூலமாகக்கூட அவர்கள் பயிற்சி பெற்று தங்களைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக்கொள்ளும் வகையில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது உயர்நிலைப் பள்ளிகளிலே எம்.ஏ., எம்.எஸ்ஸி. படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் கல்லூரி ஆசிரியர்களைப் போல எம்.ஃபில். படிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும். இப்போது பள்ளிகளிலே இருக்கும் தேர்வு முறையை மாற்ற வேண்டும். பள்ளிகளிலே தேர்வு முறை

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1981 ஏப்ரல் 28

தேவையில்லை என்று ஒரு பெரியவர் சொன்ன கருத்துக்களை இந்த அவையிலே ஞாபகப்படுத்தினார்கள். நான் அண்மையில் பாரிசுக்குச் சென்றிருந்தபோது, அங்கே மாணவர்கள் 'தேர்வு தேவையில்லை' என்று போராடினார்கள். அவர்களிடத்திலே நான் கேட்டபோது, அவர்கள், "மருத்துவக் கல்லூரிகளிலே 5 ஆண்டுகள் படிக்கிறோம், சட்டக் கல்லூரிகளிலே 4 ஆண்டுகள் படிக்கிறோம். ஆனால் எங்களுடைய தகுதியை நிர்ணயிக்கும் ஆசிரியர்கள் இவர்கள் இல்லை, வெளியே இருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். ஏதோ வெளியே உள்ள ஆசிரியர்கள் என்று நினைத்துக் கொண்டு, 'வெளி ஆசிரியர்களா' என்று நான் கேட்டபோது, அவர்கள் சொன்னார்கள், 'இல்லை, நாங்கள் படித்துப் பட்டம் பெற்று முதல் மாணவராகத் தேறினாலும் கூட, வெளியே வந்த பிறகு எத்தனை பேரை இவர் காப்பாற்றியிருக்கிறார் என்று உள்ள கணக்கைப் பார்த்துத்தான் வைத்தியரைத் தேடி மக்கள் வருகிறார்கள், அந்த வைத்தியர் முதல் வகுப்பிலே தேறிய வைத்தியர் என்று பார்த்து மக்கள் வருவதில்லை, அதுபோலவே முதல் வகுப்பிலே தேறிய வழக்கறிஞர் என்று வருவதில்லை, வழக்காடி எத்தனை கொலைகாரர்களைக் காப்பாற்றியிருக்கிறார் என்று கணக்குப் பார்த்துத்தான் வருகிறார்கள், ஆகவே எங்களது ஆசிரியர்கள் வெளியே இருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். "எங்களுக்குப் பாடம் மட்டும் சொல்லித் தாருங்கள், ஆனால் எங்களுடைய நீதிபதிகள் வெளியே இருக்கிறார்கள்," என்று அவர்கள் சொல்கிறார்கள். நாம் அந்த அளவுக்குப் போகவில்லை என்றாலும், இந்தத் தேர்வுகளை நடத்துகின்ற ஆசிரியர்கள் படும் அவதியைப் பார்க்கும்போது, இந்த முறையை மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவர்களுக்குத் தேர்வு எழுத நேரம் இல்லை, நேரம் இருந்தால்தான் . . . .

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** ஆகவே, தற்போது இருக்கும் முறையை மாற்றுவதுபற்றிப் பரிசீலிக்க வேண்டும். காப்பி அடிக்க வேண்டும் என்று சொன்னால் கூட, பார்த்து எழுதுவதற்கே ஒரு திறமை வேண்டும். ஆகவே, ஒரு விஞ்ஞான ரீதியான அணுகுமுறையைக் கடைப்பிடித்து, இந்த முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ரொம்ப பேர் பேசவேண்டியிருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் நிறைய நேரம் கொடுக்க வேண்டும்.



1981 ஏப்ரல் 28]

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** 1980 பிப்ரவரியிலே இந்த அரசைக் கலைப்பு செய்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அந்தப் பொறுப்பிலேயிருந்து நீங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு உத்தரவு பிறப்பித்தார்கள். 10 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்கள் அனைவரையும் துணைப் பேராசிரியர் ஆக்க வேண்டும் என்பது அந்த உத்தரவு. அது அமுல்படுத்தப்பட வேண்டும்.

கல்வி சுற்றுலாவுக்கு ரயில்வே தருவதைப்போல பேருந்துகளிலும் சலுகை அளிக்க வேண்டும். பாடத் திட்டங்கள் மாற்றப்பட வேண்டும். பல்கலைக் கழக அக்காடமிக் கவுன்சிலிலே ஆசிரியர்களின் பிரதிநிதிகளும் இருக்க வேண்டும். இப்போது கல்லூரி முதல்வர் இருக்கிறார், இருக்கட்டும். அந்த சப்ஜெக்டிலே இருக்கும் ஆசிரியர்களும் இருந்தால் நல்லது. அதற்கும் வழி வகை காணவேண்டும் என்று தெரிவித்து அதே நேரத்தில் மாலைக் கல்லூரி களிலேயும் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 'என்று தெரிவித்து, என்று தெரிவித்து' என்று சொல்வதனாலேயே மட்டும் பேச்சை நீட்டிக்கொண்டே போவதற்கு உரிமை வந்துவிடுகிறதா என்ன ?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** விஞ்ஞான வகுப்பு பகல் வகுப்புகளிலே இல்லை என்பதற்காக மாலை வகுப்புகளிலேயும் இல்லை என்ற நிலை இருப்பதைவிட, மாலை வகுப்புகளிலே அந்த வசதிகள் இருந்தால், அந்தப் பகுதி ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள். இன்றைக்கு கல்வி நிலையிலே நாம் மாபெரும் புரட்சியை தமிழகத்திலே செய்திருக்கிறோம். இதனைப் பாராட்டுகிற நோக்கோடு நண்பர்கள் அணுக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோ சைக்கிளிலே போகும்போது ஆட்டோ ரிக்ஷாவை நினைத்துக் கொண்டே செல்வதும், ஆட்டோ ரிக்ஷாவிலே செல்லும்போது அம்பாசிடர் காரை நினைத்துக்கொண்டே செல்வதும், அம்பாசிடர் காரிலே செல்லும்போது ஹெலிகாப்டரை நினைத்துக் கொண்டு செல்லும் நிலையும், ஹெலிக்காப்டரிலே செல்லும்போது 707 விமானத்தைப் பற்றியும் நினைப்பதுபோல, ஏதோ ஒரு பேராசை உணர்வாலே, ஆற்றும் பணியை மறந்துவிட வேண்டாம் என்று தெரிவித்து, இந்த அரசு ஆற்றும் நற்பணிக்கு உறுப்பினர் தட்டிக் கொடுக்கும் மனப்பான்மை மேலும் துணை புரியும் என்று சொல்லிக் கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

(முற்பகல் 10-00)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது நடைபெறும் விவாதத்தில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கல்வித் துறையில் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. கல்வி முறையில் பல சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கல்வித் துறை அனைத்துக் கட்சியினரும் வரவேற்கத் தக்க வகையில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்றாலும், அதில் குறிப்பிட்டு ஒரு நான்கு முக்கியப் பணிகளை மட்டும் இங்கே சுட்டிக்காட்டுவதை, ஆசிரியர்களின் பிரதிநிதி என்ற வகையில் நான் என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

17 ஆண்டுக் காலத்திற்கு மேலாக நீண்டு கொண்டிருந்த பிரச்சினை ஒன்று தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. அதாவது அரசுப் பள்ளிகளில் ஏ-பிரிவு, பி-பிரிவு என்று இரண்டு ஜாதியை, இரண்டு வர்க்கத்தை ஏற்படுத்தி அதன் மூலம் பல ஏற்றத் தாழ்வுகளையும், சிக்கல்களையும் பிரச்சினைகளையும் ஏற்படுத்தி, ஆசிரியர்கள் மத்தியில் பெரும் மனவிரக்தியை ஏற்படுத்தியிருந்தார்கள். தீராது இருந்து வந்த இந்தப் பிரச்சினையை, இதற்கு முன்பிருந்த அரசு தொட்டால் 'ஷாக்' அடிக்கும் என்று தொடக்கூடத் தயங்கியது. அப்படிப்பட்ட பிரச்சினையை நமது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் மிகத் துணிவோடு அணுகி தீர்த்து வைத்ததோடு மட்டுமல்லாமல், சுப்ரீம் கோர்ட்டிலும் சாதகமான ஒரு ஆணையைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே மெத்தப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, பல ஆண்டுகளாகவே ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை வற்புறுத்தப்பட்டு வந்த நிலையில், அதைப் பலரும் அணுகுவதற்கே அச்சப்பட்டுக் கொண்டிருந்தபோது, அதனையும் மிகவும் தைரியத்தோடு அணுகி, பிரச்சினையைச் சந்தித்து, அந்தக் கோரிக்கையையும் ஏற்று, அதற்குரிய அரசாணையையும் வெளியிட்டதற்காக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பலமுறை பாராட்டிய படி, மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், ஒரு உறுதியான நிலையை இந்த அரசு மேற்கொண்டு, மேல் நிலைக் கல்வி படிப்பு என்பது



பள்ளிக்கூட நிலையில்தான் இருக்க வேண்டும் என்று வைத்ததோடு மட்டுமல்லாமல், கிராமப்புறங்களிலேயே மேல் நிலைப் பள்ளிகள் பரவலாக ஏற்படுத்தப்பட்டு, ஏழை எளிய குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களும், கல்லூரிப் படிப்பில் ஒரு பகுதியைத் தங்கள் பகுதியிலேயே பெறும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது உள்ளபடியே குறிப்பிடத் தக்க சாதனையாகும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நிர்வாகச் சீர்கேடுகளும், பல்வேறு முறைகேடுகளும் மலிந்திருந்த நிலையில் இருந்த நிர்வாகங்களைச் சீர் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் சென்னை, பச்சையப்பன் அறக்கட்டளையை அரசு ஏற்று, அந்த பிரச்சினையையும் தைரியமாகச் சமாளித்த பெருமையையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே சிக்கலான பிரச்சினைகளாக இருந்த மேற்சொன்ன நான்கு பிரச்சினைகளையும் மிகத் தைரியமாகச் சந்தித்து, அவைகளை வெற்றிகரமாக முடித்து வைத்த மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களையும், அவருக்கு உறுதுணையாக இருந்த அதிகாரிகளையும் பாராட்டுவதோடு, ஆசிரியர்களின் சார்பில் அவர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கல்விக் கொள்கைக் குறிப்பைப் பொறுத்தவரை, அதிலுள்ள பல நல்ல அம்சங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். அவர்களோடு நானும் சேர்ந்து இந்த அம்சங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உலகத் தமிழ்ச் சங்கத்தை மதுரையில் நிறுவ இருப்பதைக் குறித்தும், அதைப்போலவே தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தஞ்சையில் நிறுவ இருப்பதையும் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அவ்வாறு அவைகளை அரசு ஏற்படுத்தும்போது, அங்கெல்லாம் தமிழாராய்ச்சிப் பணிகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து, தமிழ் மொழியின் பெருமையை உலக நாடுகளுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும், உலகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழுகிறவர்களும் தமிழ் மொழியை விரும்பிக் கற்றுக்கொள்ளும் வகையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். 30 நாட்களில் ரஷ்ய மொழியைக் கற்றுக் கொடுக்கிறார்கள். அதைப்போலவே 30 அல்லது 60 நாட்களில் உலகத்தில் உள்ள பல்வேறு மொழிகளை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் வகையில் மற்ற நாட்டுக்காரர்கள் நிலைமைகளை உருவாக்கியிருக்கிறார்கள். எனவே பிற மொழிக்காரர்களும் தமிழ் மொழியைப் படித்து, தமிழின் பெருமையை முதலில் அவர்கள் உணர்ந்து, தாங்கள் உணர்ந்ததை தம் நாட்டு

மக்களிடையே பரப்பும் நிலையை உருவாக்க வேண்டும். அத்தகைய நோக்கத்தோடுதான் உலகத் தமிழ்ச் சங்கம் தன்னுடைய பணிகளை அமைத்துக்கொள்ள வேண்டும். அதே வகையில்தான் அமையவிருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகமும் தன்னுடைய பணிகளை அமைத்துக் கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

ஆண்டுக்காண்டு, கல்வித் துறைக்காக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடு குறைந்துகொண்டே வருகிறது. கல்வி என்பது ஒரு தேசிய முதலீடு என்பதை நாம் உணர வேண்டும். இதில் லாப நட்டக் கணக்குப் பார்க்காமல், இப்போதுள்ள சமுதாயம், இனி அடுத்து வர இருக்கிற சமுதாயம் அதற்கு அடுத்து வர இருக்கிற சமுதாயம் ஆகியவற்றின் ஒட்டுமொத்தமான நன்மைகளைக் கருத்தில் கொண்டு, அதன் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யும் கொள்கையை அரசும், நிதித் துறையும் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தற்போது ஆண்டுக்காண்டு கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு குறைந்துகொண்டே வருவது மிகவும் கவலை அளிக்கத் தக்க விஷயமாக இருக்கிறது. எனவே இனி வரும் ஒவ்வொரு ஆண்டிலும் கல்வித் துறைக்காக அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொடக்கப் பள்ளிகள் நிலையிலிருந்து மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் வகையில், பல்வேறு விதமான கோரிக்கைகளை அரசின் முன் வைத்திருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றின்மீது அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. அவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டு தீர்க்கப்பட்ட கோரிக்கைகளைப் பொறுத்தவரை, அரசாங்கத்திற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே, அரசாங்கத்தால் தீர்க்கப்படக் கூடிய கோரிக்கைகளும் இருக்கின்றன. தீர்வு காண்பதற்குச் சற்றுக் கடினமான கோரிக்கைகளும் பல இருக்கின்றன. அவைகளில் எளிதாகத் தீர்க்கப்படக் கூடிய கோரிக்கைகளைப் பொறுத்து மட்டுமாவது அரசு விரைவாகத் தீர்த்து வைக்குமானால், அதன் காரணமாக தற்போது ஆசிரியர்கள் மத்தியில் நிலவி வரும் "தொழில் அமைதியின்மை" நீங்க வழியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பி.டி. பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் கடந்த 10 ஆண்டுகளாகப் பதவி உயர்வு ஏதுமில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் ஏற்கெனவே பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதத்தை எட்டிவிட்டார்கள். அவர்கள் கேட்பதெல்லாம் பிரமோஷன் அல்லது அப்கிரேடேஷன் என்பதுதான். இதனால் அரசாங்கத்திற்கு அதிகமான நிதிச்



சுமை கூட ஏற்படப்போவதில்லை. அண்மையில் உள்ள ஆந்திர மாநிலத்தில் இம்மாதிரி செய்திருக்கிறார்கள். எனவே அந்த முறையைப் பின்பற்றி இங்கே உள்ள பி.டி. பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு பிரமோஷன் அல்லது அப்கிரேடேஷன் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் ஈர்க்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்படும் சிறப்பு ஊதியமான ரூ. 25-ஐ ரூ. 75 ஆக உயர்த்தித் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. அதை அரசு பரிவுடன் ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு ஆசிரியர்கள் பணி புரியும் வேலை நாட்களின் அடிப்படையில் 23 நாட்கள் ஈட்டிய விடுப்பை வழங்க வேண்டும். தற்போது ஆண்டுக்கு 3 நாட்கள் மட்டுமே அவர்களுக்கு ஈட்டிய விடுப்பு வழங்கப்பட்டு வருகிறது. இதைக் கவனிப்பதாக ஏற்கெனவே அரசுத் தரப்பில் உறுதிமொழி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்டதாரி ஆசிரியர்களுக்கும், இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் ஊதிய விகிதத்தில் முரண்பாடுகள் இருக்கின்றன என்றும் இந்த ஊதிய விகிதங்களை மாற்றியமைக்க வேண்டும் என்றும் நாங்கள் கேட்டபோது, அது பற்றிய குறிப்புகள் தமக்குத் தரப்பட்டால், அதைக் குறித்துப் பரிசீலிப்பதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே கருத்துத் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் பல சங்கங்களின் சார்பில் மாண்புமிகு கல்வியமைச்சருக்கும் அரசுக்கும் மனுக்கள் தரப்பட்டிருக்கின்றன. அவற்றை அரசு பரிவோடு பரிசீலனை செய்து, நியாயம் வழங்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி தலைமை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு Duty allowance வழங்கப்படாத நிலைதான் இருந்து வருகிறது. மற்றவர்களுக்கெல்லாம் கொடுக்கும் போது, இவர்களுக்கு மட்டும் மறுப்பது எந்த வகையிலும் நியாயமில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்களுக்கும் Duty allowance வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்பு நிலைபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே அதைப்பற்றி நான் அதிகமாகப் பேச வேண்டியதில்லை என்று கருதுகிறேன். 20 ஆண்டுக் காலம் பணி முடிந்த அனைத்து ஆசிரியர்களுக்கும் சிறப்பு நிலை வழங்க வேண்டும் என்பதுதான் நியாயமாகும்.

இதைத்தான் மூன்றாவது ஊதியக் குழுவும் பரிந்துரைத்திருக்கிறது. எனவே அதை மாற்றும் வகையில் அரசு எதையும் செய்யக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேல் நிலைப் பள்ளிகளின் ஆசிரியர்களின் பணி விதிகளைப் பொறுத்த வரையில், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத்தொடரின் போதே அனைவரும் மகிழத் தக்க வகையில் அறிவிப்பார்கள் என்று கருதுகிறேன். முன்பொரு முறை இதே அவையில் அது குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்போது பதில் அளிக்கும் வகையில், அது குறித்த எல்லாப் பணிகளும் முடிவடைகிற தருவாயில் இருப்பதாகவும் அந்த விதிகள் விரைவில் வெளியிடப்பட்டு அமுல்படுத்தப்பட இருக்கின்றன என்றும் அறிவித்தார்கள். அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

உயர் நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்கள் பல ஆண்டுகளாகப் பணிவரன்முறை செய்யப்படாமல் துவக்க ஊதியத்திலேயே இரண்டு மூன்று ஆண்டுகளாக இருக்கின்றனர். அவர்களுடைய பணியை வரன்முறை செய்து அவர்களுக்கு ஆண்டுதோறும் வழங்க வேண்டிய ஊதிய உயர்வைக் கொடுக்க அரசு உடனடியாக ஆணை பிறப்பிக்க வேண்டும் என்றும், இதெல்லாம் நிர்வாக ரீதியில் மிக எளிதாகச் செய்யக் கூடிய காரியங்கள் என்பதால் மிக விரைவில் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாணவர்களுக்கு வழங்கப்படும் 92 எம்.ஈ.ஆர். விதியைப் பொறுத்த வரையில், ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த விதியின் படி மாணவர்களின் பெற்றோர்களுக்கான வருமான வரம்பின் அடிப்படையில் சம்பளம் கட்டுவதிலிருந்து சலுகை அளிக்கப்படுகிறது. அதற்கான வருமான வரம்பு தற்போது ரூ. 6,000 என்று இருக்கிறது. அண்மையில் வருமான வரி கட்டுவதற்கான வருவாய் வரம்பை ரூ. 15,000 என்று மத்திய அரசே மாற்றியிருப்பதன் காரணமாக, மாணவர்களுக்குக் கல்விச் சலுகை அளிப்பதற்கான வருமான வரம்பை ரூ. 6,000-லிருந்து ரூ. 15,000 ஆக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்னார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 1981-82 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் பட்டியலில் கண்டுள்ளபடி ஒரு மகளிர்ப் பள்ளி ஆய்வாளர் அலுவலகம் ஒன்று திறக்கப்பட இருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது.





(முற்பகல் 10-10)

ஆனால் நம்முடைய கல்விக் கொள்கைக் குறிப்பில் பொதுவாக இரண்டு மகளிர்ப் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்கள் என்று இருக்கிறதே தவிர எந்த இடங்களில் என்று சொல்லப்படவில்லை. குறிப்பிட்ட இடம் என்று இல்லை. தென்னாற்காடு என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மகளிர்ப் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்கள் எங்கே தொடங்க வேண்டுமோ அந்த இடங்களில் தொடங்குவதற்கு உடனடியாக ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் தனியார் பள்ளிகள் அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றன. அந்தக் காரணத்தினால், அங்கே இருக்கின்ற கல்வி அதிகாரிகளுக்குப் பணிச் சுமை அதிகமாக இருக்கின்றது. அதனால் நிர்வாகத் தடங்கல்கள், தாமதங்கள் எல்லாம் ஏற்படுகின்றன. பணியையெல்லாம் விரைவாகச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும். மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அவர்கள் நம்முடைய அரசுக்கு அதைப்பற்றி எடுத்து எழுத வேண்டும். நான்கு ரெவின்யூ வட்டங்கள் இருப்பதால், சிதம்பரத்திற்கு, கடலூருக்கு என்று கல்வி மாவட்டங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்ற அவசியத்தைப் பற்றி அரசுக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். சிதம்பரத்திற்கு என்று மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகம் தொடங்க அரசு அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட காலமாக கடலூரில் ஆசிரியர்கள் இல்லம் சம்பந்தமாக இடம் வாங்கப்பட்டும், அந்தப் பணி அங்கே தொடங்கப்படாமல் இருக்கிறது. அந்தப் பணியை விரைவில் தொடங்குவதற்கு அரசு உறுதுணையாக இருக்க வேண்டும். நீண்ட காலமாக இருந்து கொண்டிருக்கின்ற அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரசுக்குச் சில ஆலோசனைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதைப்பற்றி கல்வி அமைச்சர் அவர்களிடமும் நான் விவாதித்திருக்கிறேன். வகுப்பு மாணவர்கள் ஆசிரியர்கள் விகிதத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். எல்லா வகுப்புகளிலும் முடியாது என்றாலும்கூட, முதல் நிலையாக, முதல் வகுப்பில், foundation -ல் அடிக்கல் நாட்டக்கூடிய அந்த வகுப்பில் அதைச் செய்ய வேண்டும். அந்த மாதிரி முதல் வகுப்பிலேயே குழந்தைகளின் கல்வித் தரம் நன்றாக இருக்க வேண்டும். Individual attention இருக்க வேண்டும். தனிப்பட்ட குழந்தைகளிடம் தனிக் கவனம் செலுத்தக்

கூடிய அளவுக்கு ஆசிரியர்களுக்கு வாய்ப்பு இருக்க வேண்டும். Individual attention என்பது அந்த முதல் வகுப்பிலேயே மிகமிக முக்கியமானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஓர் ஆசிரியருக்கு 50, 60 குழந்தைகள் அங்கே இருப்பது என்றால், நிச்சயமாக அதை நாம் சமாளிக்க முடியாது என்பதைத்தான் எடுத்துச்சொல்கிறேன். அதுதான் ஆசிரியர்களுக்குப் பணிச்சுமை அதிகமாக உள்ள இடம். அந்த இடத்திலே திட்டவட்டமாக 1 : 2 என்ற விகிதத்தில் ஆசிரியர்-மாணவர்கள் விகிதாசாரம் எண்ணிக்கை இருக்கும்படியாக மாற்றியமைக்க வேண்டும். விரைவாகவும் உறுதியாகவும் அமைக்க வேண்டும். மற்ற வகுப்புகளிலே எல்லாம் காலப் போக்கிலே நிதி வசதிகளை அனுசரித்துச் செய்யலாம், ஆசிரியர்-மாணவர் எண்ணிக்கையைப் படிப்படியாக மாற்றியமைத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் முதல் வகுப்பிலே இது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அங்கங்கே Teachers' Councils என்று இருக்க வேண்டும். ஒவ்வொரு Educational District, என்ற அளவிலே, Revenue District, மாநில அளவிலே என்று மூன்று இருக்க வேண்டும். இதைப் பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். அந்த கவுன்சில் விரைவில் அமைக்கப் பட்டுவிட்டால், மேல்வையிலே ஆசிரியர்கள் பிரச்சினைகள்பற்றி அதிகமாகப் பேசுவது தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த Three-tier Teachers' Council என்பது முன்புகூட அரசின் சார்பில் பேசப்பட்டு வந்த கொள்கையாகும். அதையே அமுலாக்குகின்ற வகையிலே அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வி மாவட்டத்திற்கு ஒன்று, ரெவின்யூ மாவட்டத்திற்கு ஒன்று, மாநில அளவிற்கு ஒன்று என்று 3 ஆசிரியர்கள் கவுன்சில் அமைக்கப்படுமானால், பல்வேறு ஆசிரியர்களின் உள்ளூர் பிரச்சினை, அலுவலகப் பிரச்சினைகள் எல்லாம் அங்கங்கேயே தீர்க்கப்பட்டுவிடும். இங்கே அவைகள்பற்றி விவாதத்திற்கு வராத நிலைமைகள் ஏற்படும். ஆகவே அதைப் பொறுத்த ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் கன்சல்டேடிவ் கமிட்டி மாதம் ஒரு முறை கூடவேண்டும். அப்படி மாதம் ஒரு முறை கூட்டம் கூடினால், அங்கே அவர்கள் பிரச்சினைகளுக்கு ஆக்க பூர்வமான ஆலோசனையை அறிந்து அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர முடியும். அதற்கேற்ற வகையில் வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



3 லட்சம் ஆசிரியர்கள் இருக்கின்ற கல்வித் துறையிலே ஆசிரியர்கள் கன்சல்டேடிவ் கமிட்டி அடிக்கடி கூட்டப்பட வேண்டிய ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மைனாரிட்டி வகுப்பு பள்ளியினர் பிரச்சினையில் அரசுக்கு இருக்கின்ற சங்கடங்களை நாங்கள் உணருகிறோம். அரசியல் சட்டத்திலே இருக்கக்கூடிய முட்டுக்கட்டைகளைப்பற்றியும் நமக்குத் தெரியும். இந்தப் பிரச்சினை அரசுக்கு ஒரு பெரிய சவாலாகவே இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் துறையிலே இந்தப் பிரச்சினையின் காரணமாக ஒரு புரட்சியே ஏற்படக்கூடிய அளவிலே நிலைமைகள் போய்விடுமோ என்று கருதுகிறேன். மைனாரிட்டி பள்ளி நிறுவனங்களை ஆரம்பிப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய சட்ட திட்டங்களைக் கொண்டு வருவதற்கு மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதி ஒரு நல்ல கொள்கையை வகுப்பதற்கு அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இஸ்லாமிய சமுதாயத்தினர் பள்ளி நிறுவனங்களுக்கு நாம் அமைத்திருக்கிறோமே அதுபோலவே கிருத்துவ கல்வி நிறுவனங்களுக்கும் அப்படிப்பட்ட ஒரு அமைப்பை நாம் ஏற்படுத்தவேண்டும். அதன் மூலம் ஏதாவது ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவருகின்ற முயற்சியிலே ஈடுபட வேண்டும். அதற்கு சட்டதிட்டங்கள் இடம் தருமா என்பதுபற்றி எனக்குத் தெரியாது. அதைப் பற்றிச் சட்ட நிபுணர்களுடன் கலந்து மைனாரிட்டியினர் பள்ளி நிருவாகத்தினரைப் பொறுத்த அளவில் ஒரு அமைப்பை அமைக்க முடியுமா, அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுத் தேர்வுகள்பற்றி சில வருந்தத்தக்க விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். தேர்வு நடத்த, பள்ளிக் கல்வித் துறையில் கல்லூரிக் கல்வித்துறையில், நான்-ஃபார்மல் தேர்வுத் துறை. டெக்னிகல் எஜுகேஷன் என்று பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. மாண்புமிகு மேல்வைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அரசுக்கு ஒன்றை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அரசு கல்வித் துறையிலே தேர்வுத் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது. அதன் காரியங்களிலே பல முறைகேடுகள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு அதுபற்றிப் பல செய்திகள் வந்திருக்கின்றன. அவைகளை வைத்துக்கொண்டிருக்கிறேன். அதைப்பற்றி விரிவாகச் சொல்ல விரும்பவில்லை. சில விஷயங்களை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். இங்கே இப்போது தேர்வு நடத்துகிறார்கள் 10-வது 11-வது வகுப்புத் தேர்வுகளை அரசு பொறுப்பேற்று நடத்துகிறது. மையத்

தேர்வு முறை, அதாவது Central Valuation முறை என்று வைத்திருக்கிறார்கள். அந்த மைய மதிப்பீட்டு முறையைத்தான் நாம் பின்பற்றி வருகிறோம். அந்த மதிப்பீட்டு நாள் 21 ஆம் தேதி தொடங்குகிறது என்றால், 21 ஆம் தேதி வரையில், அதற்கான நியமன உத்தரவுகள் பல ஆசிரியர்களுக்குப் போய்ச் சேர்வதில்லை. 20 ஆம் தேதி என்று இருக்கும்போது, 20 ஆம் தேதியை ஒட்டி பல ஆசிரியர்களுக்கு ஆணைகள் போய்ச் சேர்வதில்லை. அப்படி இருக்கும்போது அவர்கள் எப்படி அந்த இடங்களுக்குக் குறித்த நேரத்தில் போய்ச் சேர்வார்கள் ? பல ஆசிரியர்களுக்கு பள்ளிக்கூடம் மூடப்பட்ட பிறகு, அந்த உத்தரவு பள்ளிக்கூட முகவரிக்குப் போய்ச் சேருகிறது. 18 ஆம் தேதி அன்று போக வேண்டும் என்று வருகிறது. அந்த ஆணை பள்ளிக்கூடம் மூடப்பட்டு விட்டதால், வீட்டு முகவரிக்குத் திருப்பி அனுப்பப்படுகிறது. அதனால் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் பல பேர்கள் அந்த சென்டருக்குப் போய்ச் சேர்வதற்குக் காலதாமதம் ஆகிறது. அது மட்டுமல்ல. அங்கே இருக்கின்ற ஹையர் செகண்டரி பள்ளியில் ஒரு தேதியை நிர்ணயித்து, அன்றையதினம் Practical Examination என்று வைக்கிறார்கள். ஆனால் அந்தத் தேர்வு அந்தத் தேதியிலே நடத்தப்படாமல் தள்ளி வைக்கப்படுகிறது. காரணம் என்னவென்றால், Nominal Roll தயாரிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். நாமினல் ரோல்களுக்கான விவரங்களை எல்லாம் பள்ளிக்கூடங்களிலேயிருந்து 3 மாதங்களுக்கு முன்பு அனுப்பியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது ஏன் இந்தக் காலதாமதம் ஏற்படுகிறது ?

கல்வித் துறையைப் பொறுத்த வரையிலே, மண்டலக் கல்வி நிறுவனங்கள் என்ற முறையிலே வைத்திருக்கிறோம். அந்தத் தேர்வு முறையைத் தான் வைத்திருக்கிறோம். மதுரையிலேயும், கோவையிலேயும் ஏற்பாடு செய்திருக்கிறோம். Decentralization என்ற அளவில் மண்டல அளவில் ஏற்பாடு செய்தபிறகும் கூட, இன்றைக்குக் காலதாமதம் என்றால், அதிலே அடிப்படையிலே எங்கேயோ கோளாறு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை தயவுசெய்து மேலும் வளரவிடாமல் தடுத்து, அதிலே இருக்கின்ற குறைபாடுகளை கல்வித் துறைச் செயலாளர் அவர்கள் மூலமாக நீக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குரிய ஆதாரங்களைச் சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதையெல்லாம் நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் கல்வித் துறைக்கு நிரந்தரமான களங்கம் ஏற்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே பல குறைகளை



இன்னும் சொல்ல முடியும். ஒரு நாளைக்கு எத்தனை விடைத்தாள்கள் திருத்துவது என்றால், அதற்கும் வரையறை இருக்கிறது. ஒரு நாளைக்கு 50, 50 பேப்பர்கள் திருத்துவது என்று இருந்தால், அதனுடைய தரம் எப்படி இருக்கும் ? அதனுடைய மதிப்பீடு முறையாக இருக்குமா ? வேண்டுமென்றால் central valuation முறையில் திருத்தப்படுகின்ற விடைத்தாள்களைத் திருத்திய பிறகு பார்த்தால், குறைபாடுகள் தெரியும். வேறு ஒருவர் மூலமாக அதையே திருத்தச்செய்தால், அதிலே உள்ள குறைபாடுகள் தெரியும். ஏதோ running race competition போல ஒரு நாளைக்கு 35, 40, 50 பேப்பர்கள் என்று திருத்தக் கொடுத்தால், எப்படிச் செய்ய முடியும் ? இதிலே ஒரு அளவு வேண்டும். மாணவர்களுடைய வாழ்க்கையிலே நாம் விளையாடிக் கொண்டிருக்கிறோம். நாம் விளையாட்டுத்தனமாகச் செய்தால், இதனால் என்ன பின்விளைவுகள் ஏற்படும் என்பதைப் பார்க்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சீனியாரிட்டி அடிப்படையிலே நியமன உத்தரவு வர வேண்டும். சீனியாரிட்டி அடிப்படையிலே நியமன உத்தரவு வந்ததற்குப் பிறகு, renewal order வரவேண்டும். சென்ற ஆண்டு நியமனம் ஆனவர்களுக்கு இன்னும் renewal order வரவில்லை. ஆக இரண்டும் வராமல் பலர் இருக்கிறார்கள். சென்ற ஆண்டு நியமனம் பெற்றவர்களுக்கும் renewal order வரவில்லை. அந்த நிலைமைக்கு ஆசிரியர்கள் ஆளாகியிருக்கிறார்கள். இதற்கு என்று ஒரு விசாரணை வைத்தால், நான் நிச்சயமாக அத்தனையையும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வித் தேர்வுத் துறையிலே அடிப்படையிலேயே ஏதோ ஒரு கோளாறு இருக்கிறது. இதை ஒரு அவசரப் பிரச்சினையாகக் கருதி, இனிமேல் வருகின்ற தேர்வுகளைப் பொறுத்தவரையில், இருக்கின்ற குறைபாடுகளை, குற்றச்சாட்டுக்களை நீக்கி அந்தத் துறை இயங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த நிலைக்கு ஆளாகாமல் இந்தத் துறை நடத்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தேர்வுகளைப் பொறுத்த வரையில், தேர்வு முறைகளை மாற்றியமைக்க வேண்டுமென்ற கால கட்டம் வந்தாகிவிட்டது. பல இடங்களிலே பல பள்ளிக்கூடங்களிலே mass copying, பரவலாக copy அடிக்கின்ற, பார்த்து எழுதுகின்ற பழக்கம் வந்துவிட்டது. அப்படி copy அடிக்க இணக்கம் தராவிட்டால், ஆசிரியர்களைத் தாக்குகின்ற நிலைமைகளும் உண்டாகி

விட்டன. அப்படிப்பட்ட நிலையில் இந்தத் தீய பழக்கங்களை நாம் நீக்க வேண்டும். ஆகவே, எந்தக் காரணம் இருந்தாலும், இந்தத் தேர்வு முறையை மாற்றுவதற்கு வேண்டிய அவசரமும் அவசியமும் வந்துவிட்டது. ஆகவே, அரசு கல்வி நிபுணர்களையும், ஆசிரியர்கள் பிரதிநிதிகளையும் கலந்தாலோசித்து அரசு எங்கெங்கே என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமோ அங்கங்கே அந்தச் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

அதைப்போல, எட்டாம் வகுப்பைப் பொறுத்தவரையிலும் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் முடிக்க இன்னும் எவ்வளவு நேரமாகும் ?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இன்னும் கொஞ்சம்தான் இருக்கிறது. எட்டாம் வகுப்பைப் பொறுத்தவரையில், மைய மதிப்பீட்டு முறைக்கு மாவட்ட அளவில் ஏற்பாடு செய்தால், கல்வித் தரம் உயர உறுதுணையாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள்கூட சொன்னார்கள். பத்து ஆண்டு அனுபவம் பெற்ற கல்லூரி ஆசிரியர்களை 'அப்கிரேடேஷன்' செய்ய ஆணை பிறப்பித்து ஓராண்டாகியும், அரசுக் கல்லூரிகளில் அந்த ஆணையைச் செயல்படுத்த வில்லை. அதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசுக் கல்லூரிகளிலே 33 டியூட்டர், டெமான்ஸ்டிரேட்டர்கள் பட்டப் படிப்பிலே ஒரு பாடத்தையும், மேற்பட்டப் படிப்பிலே ஒரு பாடத்தையும் படித்துவிட்டு, பதவி உயர்வு பெறாமல் இருக்கிறார்கள். அப்படிப் பட்டம் பெற்றவர்களுக்கு மேல் நிலைப் பள்ளிகளிலே பதவி உயர்வு கொடுத்திருக்கிறார்கள். எனவே, கல்லூரிகளிலும் அப்படிப்பட்டவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டும். 1—12—1979-லே பதவி உயர்வு செய்யப்பட வேண்டிய டியூட்டர்களை 1980-லேதான் பதவி உயர்வு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு இடைக் காலத்திற்கு நிலுவைத் தொகை கொடுக்கவில்லை. அதையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

அடுத்து, retrospective regularisation —அதாவது 10 (எ) (1) விதியின்கீழ் கல்லூரி ஆசிரியராகப் பணியில் சேர்ந்த தேதியிலிருந்து பணி வரன்முறை செய்ய வேண்டுமென்று ஆணைகள் வழங்க வேண்டும். தனியார்



கல்லூரிகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் களைய, தக்க திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும். பல்கலைக் கழகங்களிலே பணி புரிகின்ற ஆசிரியர்கள், ஊழியர்கள் இவர்கள் சம்பள விதங்களில் உள்ள முரண்பாடுகளை ஆராய்ந்து, அரசுக்கு அறிக்கை தர பணிக்கர் கமிஷன் என்று ஒரு தனி நபர் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கை என்னவாயிற்று ? அந்த அறிக்கையை வெளிப்படுத்தி, அதை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் போராட்டமென்று அறிவித்தபோது, அதற்கு ஆதரவாக தமிழ்நாட்டிலுள்ள பிற கல்லூரி ஆசிரியர்களும் போராட்டத்தில் இறங்கினார்கள். மாண்புமிகு முதல்வரவர் களின் வேண்டுகோளுக்குப் பிறகு, எல்லோரும் போராட்டத்தை நிறுத்திவிட்டு, கல்லூரிக்குச் சென்றார்கள். ஆனால், அரசுக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்ட நாட்களை விடுப்பாக வழங்கலாமென்று கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆணை வழங்கினார். அதற்குப் பிறகு கல்விச் செயலகத்திலிருந்து, அந்த நாட்களை loss of pay ஆகக் கருத வேண்டுமென்று ஆணை வந்திருக்கிறது. அதைப்பற்றி நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அவர்கள் ஆதரவு தெரிவித்தார்கள் என்பதற்குத் தண்டனை போல கொடுக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் கொடுத்த வேண்டுகோளின்படி சுமுகமான உடன்படிக்கை ஏற்பட கல்லூரி களுக்கு அவர்கள் சென்ற பிறகு, போராட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு விடுப்பு வழங்கப்பட்ட பிறகு, அதற்கு ஆதரவு தெரிவித்தவர் களுக்குத் தண்டனைபோல வழங்கப்பட்டிருக்கிறது. அதனால் மனக் கசப்பு ஏற்படும் நிலைமை உண்டாகும். எனவே, மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நாட்களை விடுப்பாகக் கொடுத்தால் போதும். அதை வழங்கும் வகையிலே ஆணைகளைப் பிறப்பித்தால் போதும்.

புதுக் கல்லூரியும், எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியும் சென்னை நகரத்தில் பெரும் தலைவலியாக விளங்கும் கல்லூரிகளாகும். நாட்டின் பிரதம அமைச்சரவர்களே தலையிடும் வகையில் எஸ்.ஐ.ஈ.டி. விஷயம் பூதாகாரமாக விளங்கியது. அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாக நிலைமைகள் ஏற்பட்டன. ஆனால், அந்தப் பிரச்சினை மீண்டும் கிளம்பியிருக்கிறது. நாளை அந்தக் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டத்தில் இறங்க இருக்கிறார்கள். மாணவிகளுடைய எண்ணிக்கையை ஆண்டுதோறும் குறைத்து, மாணவர்களை அட்மிஷன் செய்யாமலேயே, அதன் மூலமாக ஆசிரியர்களை உபரியாக அறிவித்து, அவர்களை வேறு இடங்களுக்கு

மாற்ற deployment— வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்த முறையிலே ஆசிரியர்களைப் பழிவாங்கும் நிலையில் ஒரு நிர்வாகம் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் 25 நிமிடங்கள் பேசிவிட்டார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** புதுக் கல்லூரியைப் பொறுத்தவரையில், நிர்வாகத்திற்கும், ஆசிரியர்களுக்கும் இடையே பிரச்சினை நீடிக்கிறது. அங்கே நிதி முடக்கம் ஏற்பட்டு, கல்லூரி செயல்படாமல் செய்யப்பட்டிருக்கிறதென்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, பல்கலைக். கழகத்தைப் பொறுத்தவரையில், சுருக்கமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினரவர்கள் உடனடியாக முடிவிற்கு வர வேண்டும். மாண்புமிகு உறுப்பினரும், திரு. பா. ரா. தாமஸ் அவர்களும் நேரத்தை 'டிவைட்' பண்ணிக்கொண்டு பேசுகிறோமென்று சொன்னார்கள். நேரத்தை அவர்கள் 'டிவைட்' பண்ணவில்லை, 'டபுள்' பண்ணுகிறார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** சென்னைப் பல்கலைக் கழகத்தைப்பற்றி நான் ஒன்றும் சொல்லப்போவதில்லை. அதைப்பற்றி பல உறுப்பினர்கள் சொல்லிவிட்டார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், அரசு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் அங்கேயுள்ள ஆசிரியர்களுடைய, ஊழியர்களுடைய கோரிக்கை. 1928 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் அவர்களுடைய கோரிக்கை. 'டேக்-ஓவர்' செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் வைக்கவில்லை. சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும், அதைத் தாமதப்படுத்தக்கூடாதென்பதுதான் அவர்களுடைய கோரிக்கை. அரசு கொடுத்த அந்த வாக்குறுதியை நிறைவேற்றித் தர வேண்டும். சட்டத் திருத்தத்தை நிறைவேற்றி, ஜனநாயக ரீதியிலே இயங்கக்கூடிய அளவிற்கு பல்கலைக் கழக அமைப்பு முறை மாற்றியமைக்கப் பட வேண்டுமென்பதுதான் அவர்களுடைய கோரிக்கை. ஆளுநர் உரையிலே அரசே அறிவித்ததைச் செயல்படுத்த வேண்டுமென்பதுதான் அவர்களுடைய கோரிக்கை. அதைத் தாமதப்படுத்தியதன் மூலம் பல பிரச்சினைகள் வந்தன. மறுபடியும் அப்படிப்பட்ட பிரச்சினைகள் வராமல், பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்க வேண்டியது அரசினுடைய கடமை என்பதை



இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர்கள் சொன்னதுபோல, அனைத்துப் பல்கலைக் கழகங்களும் ஜனநாயக ரீதியிலே, சுயேச்சையான ரீதியிலே இயங்கும் வகையிலே, அதற்கு வேண்டிய சட்டத் திருத்தங்களை எப்போதெல்லாம் தேவையோ அப்போதெல்லாம் நாம் கொண்டுவர வேண்டும். அப்படி நாம் கொண்டுவர முயலும்போது, எப்படிப்பட்ட சக்திகள் அதை எதிர்த்தாலும், அதை முறியடித்து, பல்கலைக்கழக வளர்ச்சிக்காகத் துணிந்து செயல்பட வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** (மணி அடித்து) அடுத்து மாண்புமிகு உறுப்பினர், திரு. வி. வி. வி. ஆனந்தம். சபையை நான் நடத்த வேண்டும்.

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி. கல்வி, மாணவர்களின் அறிவையும், ஆற்றலையும் வளர்ப்பதாக இருக்க வேண்டும். அதோடு ஒழுங்கையும் பேணுவதாக அமைய வேண்டும். மாணவர்களுடைய அறிவும், ஆற்றலும் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும். கல்வியைப் பொருள் ஈட்டுவதற்குப் பின்னணியாகக் கொண்டு பட்டம் பெறுவதை நோக்கமாகக் கொண்ட மாணவர்கள் பல குறுக்கு வழிகளைக் கையாள்கிறார்கள். தேர்வில் காப்பி அடிக்கிறார்கள் என்று கல்வி அமைச்சரவர்கள் வேதனைப்பட்டிருக்கிறார்கள். கல்வி ஒழுங்கைப் பேணுவதாகவும், சமுதாயத்திற்குப் பயன்படுவதாகவும் அமைய, பாடத் திட்டங்களில் பல மாறுதல்களைச் செய்ய இருப்பதாக கல்வி அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். அடுத்து, மாணவர்—ஆசிரியர் விகிதாச்சாரம் குறைக்கப்பட வேண்டும். சிறிய வகுப்புகளில் 50, 60 மாணவர்களை வைத்து ஓர் ஆசிரியர் சமாளிப்பது சிரமமான காரியம். 30 மாணவர்களுக்கு மேல் ஓர் ஆசிரியருக்கு இருக்கக் கூடாதென்ற நிலை இருக்க வேண்டும். அம்மாதிரி செய்யும்போது, பல ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதாகவும் இருக்கும்.

பள்ளிகளில் வகுப்பறைகள் போதிய அளவிற்கு இல்லை. எனவே, அப்படிப்பட்ட பள்ளிகளில் 'ஷிப்ட்' முறையை ஏற்படுத்தலாமென்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். மதுவிலக்கைத் தளர்த்துவதன் மூலமாக மாணவர்கள் குடிப் பழக்கத்திற்கு அடிமையாகாதபடி பாதுகாக்கப் பட வேண்டும். ஏற்கெனவே பல கல்லூரிகளில் கஞ்சா போன்ற பொருள்களை

மாணவர்கள் உபயோகிப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே, மாணவர்கள் இப்படிப்பட்ட தீய பழக்கத்திற்கு அடிமையாகாதபடி தகுந்த பாதுகாப்பு முறைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிற்பட்டோருக்கு சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடுகள், சலுகைகள் அளிக்கப்படுகின்றன! இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு இதை நீட்டித்துக்கொண்டு போவது என்பது விளங்கவில்லை.. இந்தச் சலுகைகளை அளவிற்கு அதிகமாகப் பயன்படுத்திக்கொண்டு, பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் செல்லப் பிள்ளைகளாக இருக்கிறார்கள். இதன் காரணமாக மாணவர்களுடைய சாதி உணர்வுகள் மேலோங்கி, சண்டை சச்சரவுகள் ஏற்பட்டிருக்கின்றன. கொலை செய்யும் அளவிற்கு இந்தச் சச்சரவுகள் மாறியிருக்கின்றன. ஆகவே, படிப்படியாக இந்தச் சலுகைகளைக் குறைக்க வேண்டும். வருமான அடிப்படையில் சலுகைகள் அளிக்கப்பட வேண்டும்.

(முற்பகல் 10-30)

அடுத்து, தமிழ் மொழியை பலரும் கற்கும் வகையில் எளிதாக ஆக்க வேண்டும். இப்போது ஏற்பட்டிருக்கிற விஞ்ஞான மாற்றங்களின் அடிப்படையில் தட்டெழுத்துக்களில், கம்ப்யூட்டர்களில் எளிதாகப் பயன்படுத்தக் கூடிய வகையில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். ஏற்கெனவே இதில் சில மாற்றங்களைச் செய்திருந்தாலும் கூட, மேலும் இகாரம், உகாரம் முதலியவற்றுக்குப் (உயிர் எழுத்துக்குப்) பக்கத்தில் ஒரே சீரான குறிகள் வரும்படியாக மாற்றம் செய்தால், கற்க மிகவும் எளிதாக இருக்கும்.

அடுத்தபடியாக, அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் காற்றின் ஆற்றல், சூரிய ஒளி இவற்றிலிருந்து மின்சாரம் தயாரித்தல், கடல் நீரை குடிநீராக ஆக்குதல் போன்றவைபற்றி விஞ்ஞான ஆராய்ச்சி செய்ய முதலிடம் கொடுத்து முன்னுரிமை அளிக்க வேண்டும். இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. காற்று ஆற்றலிலிருந்து, சூரிய ஒளியிலிருந்து, நாமும் வெளிநாடுகளைப்போல், மின்சக்தியைத் தயாரிக்க ஆய்வு செய்ய வேண்டும். சமீபத்தில் பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்தது. கி.பி. 2000 ஆண்டில் பருவ மழை நல்ல முறையில் பெய்தாலும் கூட, குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் என்று வல்லுநர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே கடல் நீரை, அதாவது உப்பு நீரை, குடிநீராக மாற்றும் ஒரு ஆய்வும் அண்ணா தொழில் நுட்பக் பல்கலைக் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏற்கெனவே இஸ்ரேல், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இது



குறித்து ஆய்வு செய்து, வெற்றிகண்டு, நடைமுறைக்கும் கொண்டு வந்திருக்கிறார்கள். நம் நாட்டிலும் அத்தகைய ஆய்வுகளை நடத்தி வெற்றி பெற்று நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்து, அமைகிறேன்.

* THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: Hon. Chairman, I am very happy to speak on the Policy Note on Education as it is a very encouraging and very progressive report which has made a very great impact on me. I would start with that pre-primary education. As it is the national policy on Education pre-primary education. As it is, the national policy on Education is that pre-primary education should be left to voluntary organisations. The State Government have got only 31 pre-primary schools. Most of the pre-primary schools are Balwadis which are run in urban as well as rural areas. What I would like to suggest is that as far as possible, these Balwadis should be attached to a Primary School. If they want better enrolment of girls, these should be attached to primary schools, otherwise the little girls would always be burdened with the work of looking after their little brothers and sisters. I hope almost all the pre-primary schools or balwadis will be either attained to a primary school or will be located near a primary or middle school.

It is heartening to note that in pre-primary education, the drop-out has come down from 51 per cent to 33 per cent. Here I would like to reiterate my plea, which I raised during my speech on the Policy Note on Education last year, that the general passes should be confined to I and II Standards and there should be an examination for III Standard. I say this because from III Standard, we start giving lessons in Science and English, and the giving of just general passes will sometimes bring down the standard of education.

The aided institutions get only 10 paise per child for midday meals, while the Panchayat and other schools get 15 paise per child. Nowadays we cannot feed a child without at least an expenditure of 20 to 22 paise per child. The Government should make a liberal grant towards midday meals because this is a measure which encourages better enrolment among children of the poorer classes.

[Thirumathi Mandakini Krishnamurthi] [1981 ஏப்ரல் 28

As regards secondary education, I am very much interested in the education of girls. As we go through the statistics, we find that in the higher age-groups, that is, in the middle school, high school and higher secondary school stages, the enrolment of girls is much less than what it is in the elementary education stage. In this connection, I would like to appeal to the Hon. Minister that he should try for the revival of the National Council of Women's Education, a Government-appointed body which has its apex body in Delhi. This National Council of Women's Education, whether it is at the State level or at the Centre, has the capacity to keep track of the progress in girls' education. They go on pleading with the authorities for the provision of better facilities to girls like hostels for girls, special girls schools in areas where prejudices exist, uniform dresses, books, transport facilities, etc. Now, there is not much of enrolment of girls because the work of this Council is not there. But if the Council is there, then it has to be activated. When the State Committee of this Council was active, we used to urge through a number of seminars many facilities to be provided to the girls to encourage higher education among girls.

Regarding Higher Secondary Education, I would like to say that the vocational stream of Higher Secondary Education has been extremely successful in our State. There is a wrong impression among some people that this vocational stream is a terminal course. It is not so. It is a terminal post only for those who do not want to continue their studies or for those who have not got the financial means to continue their higher education. For others who have the capacity to continue their studies, this is a course which lays a strong foundation for better education. Hon. Members would have seen the statement of Thiru L. K. Jha, the Chairman of the Economic Reforms Committee, wherein he has suggested that the highest training in the I.A.S. starts at the plus 2 stage. This means that a very important foundation is laid at the plus 2 stage for better education for our students.



1981 ஏப்ரல் 28] [Thirumathi Mandakini Krishnamurthi]

I would like to say something about the Nursing Course which we have in the School which I am in charge. Of the girls who took the Nursing course, nearly 15 girls who were not able to pursue their studies further took up jobs. Nearly 12 girls joined Regular Nursing Course. Many more girls who aspired to have further qualifications, have joined other collegiate courses. Therefore, this vocational stream is not without further scope and this impression has to go. Here, I would like to plead that there should be hostels for the girls who undergo the vocational courses and especially for the girls who undergo the Nursing Course. During a recent meeting of the Consultative Committee, I mentioned the fact that the plus 2 students who passed the Higher Secondary examination through the vocational stream were sometimes refused admission to Commerce and other courses in Colleges. I suggested that the matter might be taken up with the University by the Education Department so that these students may be admitted to collegiate courses if they are found to be equal in merit, to others who pass the Higher Secondary examination through the academic stream. I am making the same plea again, now. I am sure that the future of the vocational courses will be bright because, from what we see, the success of the courses has so far been found to be very impressive.

(முற்பகல் 10-40)

We have vocational courses for adult persons and there are 150 vocational courses in adult education that are being conducted but what find is that we go on having the same tailoring wire bag making, etc., in all the centres and we do not take note of the requirements of the community. There is a great demand for household servants and house-keepers. Institutions

[Thirumathi Mandakini Krishnamurthi] [1981 ஏப்ரல் 28

like mine get daily very urgent calls from people that they want a person who can run the household when both the husband and wife go for work. We have girls who come for higher education. There are institutions like Asha Niwas which conduct seminars and are devoting their attention to the improvement of household help and to keep up their standards.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

I feel that Adult Education Centres should shift their programme and should not confine themselves to jam-making, wire-bag making but should include courses in house-keeping, etc. We should, if necessary, take statistics from Employment Exchanges and find out the requirements of the community and start courses for which there is demand. This will help them to become useful citizens and unemployment problem will be eased to a great extent. I am very happy our Hon. Chief Minister is here. Under his stewardship, Physical Education Programme has received a great impetus. There are only three Physical Education Colleges and there is need for having one more exclusively for women. I do not mean that women should be taught Karate and all that but they should be taught elementary self-defence methods and this can be done through the Physical Education teachers who come out from these Colleges. I would like to have schools exclusively for women and there is a great improvement and I feel from the way of Physical Education Programme is going on, that we will be able to see its impact on the younger generation as they will be kept engaged all the time in sports and other activities. I would, at the same time, like to suggest that more playgrounds should be made available. If private individuals or institutions are willing to provide play-ground facilities, the Government should come forward to sanction grants for improvement of the playgrounds. The Hon. the Education Minister has visited one of the institutions of which I am the President, Bala Brindavan, which has affiliated itself to the Central Secondary Board of Education and we have got 30 grounds of our own land. We are not running the institution on a commercial basis but for the low income-group people of other States. There are slums surrounding the playground like Kotturpuram, etc., and we are willing to give this playground for the benefit of children who have no playground facilities. Children from schools which have no such facility often come to our school to finish their game. If such private institutions are helped, I feel that we would be able to solve or at least ease the problem of having playgrounds.



1981 ஏப்ரல் 28] [Thirumathi Mandakini Krishnamurthi]

I am enthused to speak on security of life to institution. One of the hon. Members, Thiru Meenakshisundaram mentioned about an institution which suffered and quoted our Hon. Chief Minister's assurance given at the institution, Avvai Home, with which I am connected, that an educational institution would not be disturbed. This is a great satisfaction to us because after he spoke at Our Golden Jubilee celebrations, representatives of a number of institutions rang me up and said that 'we should be really grateful to him for having given such an assurance'. It is a great relief. I feel that there should be a cell in the Education Department so that whenever these institutions are disturbed, rescue would be forthcoming to them.

Before concluding, I would like to make a very humble plea to the Hon. Minister. I am the Presient of the Association of Orphanages and there are 432 orphanages. The statistics themselves will show that the 48,070 children in these 432 institutions get only Rs. 62 lakhs whereas the 632 children in the four orphanages run by the Government get Rs. 82 lakhs. The private certified schools numbering 12, having 3,000 children get three times the amount given to the orphanages and the destitute children who are given a grant of Rs. 76.50 per child per mensem are given 90 per cent grant. The orphanages are still in the days of Oliver Twist in that they face financial difficulties. I would not make a very big claim on the finances of the Government. If the grant could be increased to Rs. 20 per child, we will be very happy. If that is not possible, I would suggest that the Government may give the grant of Rs. 14 per child on an *ad hoc* basis. Now, the Government auditors follow such a cumbersome audit procedure that we have to prepare a number of statements. At the end of their audit, we always find that the grant of Rs. 14 per child actually works out only to Rs. 12 per

child. We are still following the old practices of the British days when it was believed that milk for drinking was not necessary for the Indian children and that milk was to be bought only to provide buttermilk to the Indian children. If the auditors are told that milk was brought for drinking purposes, a cut is made in the grant. There are many such difficulties. I will not take the time of the House by mentioning all of them because the Hon. Deputy Chairman is signalling that the time is up. I know that the Hon. the Chief Minister has been very sympathetic towards the orphanages and he even mentioned once that the amount given as grant was very low. But, when the Government take into consideration the number of these institutions, which is 432, they may think of the financial implications. But, if they could give the grants on an *ad hoc* basis, it would not tell upon the finances of the Government very much. I am placing this view before the House so that the Government may take a decision in a very generous manner.

While concluding, I would like to quote the words of late Dr. Zakir Husain, the great Educationist. In 1950, he came to my institution, Avvai Home, and inaugurated the pre-primary school and also the midday meals scheme. He had a very jocular way of saying things and emphasising his views in such a way that others won't feel that he was pressing his point on others. He used to say, 'There is a lot of politics in education and very little education in politics'. By way of complimenting our Tamil Nadu Government, I would say that he would be happy to know that in Tamil Nadu there is very little politics in our education and there is more of education in our politics. I congratulate the Hon. the Chief Minister and the Hon. the Education Minister on their efforts to further education in the right manner. I convey my best wishes to all the officers of the Education Department, the Secretary, the Directors and other educational officers. I have constantly direct touch with these officers. They have always been very considerate and sympathetic and have followed a constructive approach in solving problems. With these words, I thank the Chair for bearing with me on my exceeding the time-limit by a few minutes. Thank



(முற்பகல் 10-50)

* Thiru A. R. DAMODARAN: Hon. Deputy Chairman, I rise to offer my remarks on the Policy Note on Education and since the time is brief, I shall try to restrict myself to certain important points which, I think, I should cover on this day. First, I would like to compliment the Government on having fulfilled one of our demands which has been made, not now, but for the past 15 years, and that is to increase the outlays on Panchayat Union Elementary Schools and other Schools located in the rural areas. I think the Government deserve our special compliments on having provided Rs. 7.5 crores under community development and Rs. 6.31 crores for Government educational institutions because till now constraints on resources did not permit the Government to spend on improvement of schools. But, after the introduction of the Plus Two course, there has been considerable investment in the Secondary School stage and I think the Hon. Minister can justifiably be proud that in the rural areas we are now attempting—I can only call it an attempt because a sum of Rs. 100 crores will be required —to give the infrastructural facilities that are absolutely essential for education.

Reference has been made to the fact that drop-outs have been reduced from 55 per cent to 33 per cent. This is a matter for sincere congratulation because we are spending Rs. 118 crores on primary education and if there is 33 per cent drop-out, purely in financial statistics one-third of our financial expenditure goes waste and, therefore, it would be necessary for us to ensure that at least in the primary stage, we bring down the drop-out during the next decade to a minimum of 10 per cent or 12 per cent which should be the target that should be aimed at by us. I wish to say that in the field of primary education, in spite of my being misunderstood by some of my hon. Friends from the Teachers' Constituency, supervision at the primary stage is not as efficient as it should be. In fact, we have increased our expenditure on education from Rs. 100 crores 15 years ago to Rs. 249 crores, excluding Medical, etc., etc., and the administrative staff remains at a highly restricted level. We have, I think, 16 Chief Eucational Officers, 51 District

Educational Officers and 400 and odd Divisional Inspectors and my fear is that sufficient supervision is not being exercised, especially in a sector where it is most required. In the urban areas, there are enough number of parents and journals to take care of deficiencies in the educational system but in the rural areas, it is necessary for us to improve the administrative staff so that effective supervision may be exercised at the Panchayat Union level, Panchayat level and at the block level to see that our rural boys get the education they deserve. I request the Government kindly to consider this aspect and provide, to the extent possible, larger resources for supervision of our Panchayat Union schools and other schools in the rural areas.

If we analyse the number of schools in the elementary and middle school stage, we find that we have only 1,602 Government Schools about 1,492 Municipal Schools, 23,313 Panchayat Union Schools and 6,?00 aided schools. Now this raises a very important point because a policy decision has recently been taken by the Government that the teachers in these 23,313 schools will become Government servants. A vague statement has only been made and full facts are not placed before us but they are going to be Government servants or to be made on some such terms. I do not know the exact implication of this. I would like the Hon. Minister, in his reply to spell out clearly the terms under which these schools or the teachers in such institutions are to be considered as Government servants. If they are thinking of marriage loans, housing loans, cycle loans, spectacle loans, salaries, pensions, etc., I have absolutely no quarrel. But my fear is whether they are going to entrust the Government with the supervision of such schools in the Panchayat Union areas. If they are thinking of that, then, they are going back on the entire concept of decentralisation of supervision which is essential if our rural schools are to maintain or improve standards. Whatever financial benefits the Government may give to the primary school teachers is well-deserved in view of the low salary structure of the primary school teachers. But, I would plead with the Government that the control and supervision should be vested in local bodies as it was done under the 1920 Act for the presumable reason that if



the Government take over the powers of supervision, they will increase the Government staff by another 40,000 people. I have already mentioned in this House that the density of civil servants in Tamil Nadu is the highest in the whole of India. Excepting for certain areas like Mizoram and Nagaland, where Defence Services contribute to the extra density, Tamil Nadu has the largest number of public servants. As I said earlier, I am not able to understand the exact implications of this move of the Government to make primary school teachers Government servants. But, I hope that the Government will strengthen the supervisory system inthe Panchayat Union level itself in the field of local administration. Then, whatever improvements have to be effected will be accepted by the local bodies. But, the Government must also consider the fact that the present system of grants-in-aid to Panchayat Unions and Municipalities requires revision. No longer can the Government give as grants to these local bodies only 4/9th of the Land revenue which is collected as cess. The grant of Rs. 6 per head which is given to the Panchayat Union schools is also not at all sufficient. Every time the Dearness allowance or some such allowance is increased, it has an impact on the Panchayat Union finances and if at all the Panchayat Unions are reluctant to employ more supervisory staff, it is because they have no money to employ such supervisory staff. I would request the Government that, simultaneously with financial decisions, they should review their grants-in-aid structure so that our local bodies may not languish and die due to lack of adequate resources.

The hon. Member Dr. Janarthanam, while recognising the importance of English education, came out with a rather strong attack on schools affiliated to the Central Board of Secondary Education, the Anglo-Indian Schools and Matriculation Schools, and particularly on CBSE schools. I would like to remind the hon. Members that society today does not consist of only one type of people, wanting one type of education in one particular medium. We are having 3,300 or 3,400 high schools in Tamil Nadu. The Central Board of Secondary Education has got only 122 schools. The Anglo-Indian schools are only 41 in number and there are only 60 Matriculation schools and these 101 schools are managed by the Government of Tamil Nadu. Why

[Thiru A. R. Damodaran] [1981 ஏப்ரல் 28

is the hon. Member so envious of the 122 schools that are managed by the Central Board of Secondary Education? There is no reason for us to seek another confrontation because a few years ago when the question of language was raised, the Central Government accepted that Tamil should be taught as a second language even in the CBSE schools right from the first standard. As the third language which is studied for a nominal purpose and which is to be studied only in Standards VI, VII and VIII, a student can study any language and it is Hindi as far as the CBSE schools are concerned. We must realise that we have a composite community with a composite culture in our State and we cannot dictate stereotyped patterns of education to suit everybody who lives in Tamil Nadu. We have always adopted a liberal approach. In fact, if I may put it very frankly, people opt for the CBSE pattern only from three considerations. First, they are not sure of the language policy that will be followed by the Tamil Nadu Government even in respect of Matriculation Schools. Secondly, they are not sure whether political pressure will not result in the English medium being withdrawn from Matriculation Schools in spite of the specific promise under which the Matriculation Schools were taken over. Thirdly, there is the reluctance of the Tamil Nadu Government to allow CBSE schools to adopt the Tamil Nadu Plus 2 pattern of education in the Higher Secondary stage.

(முற்பகல் 11-00)

If we allow the CBSE schools to come over to Tamil Nadu pattern of education in the Plus Two stage, then many of these schools will be ready to opt for Tamil Nadu Government's recognition. Dr. Janarthanam mentioned that a security deposit of Rs. one lakh is being collected from Matriculation Schools. I know there are rules and regulations and I am sure the building regulations are equally strict under the CBSE. The buildings in which some of our Government High Schools are located are not good and I can take my hon. Friend Dr. Janarthanam to some of the Government High Schools in our districts and he will collapse on seeing that 30 per cent of our Government High Schools are only in thatched sheds, with hardly any laboratory facility. I would, therefore, plead for a liberal approach to be adopted by the Government. Whatever may be



1981 ஏப்ரல் 28] [Thiru A. R. Damodaran]

the control exercised, the moment the institution is affiliated to the Central Board, they have to adopt the scales of salary that have been fixed by the respective State Governments in which the School is located. I would, therefore, plead that far from adopting an illiberal approach, the Government should adopt a liberal approach, as they have been adopting till now. The number of Matriculation Schools has increased from 31 to 60 during the past 4 or 5 years and this is an indication of the liberal attitude taken by the Education Minister and I hope he will continue to take the same attitude.

The other point that was mentioned was about nursery schools and the need to regulate them by control measures, etc. Here again there is one difficulty. Article 30 (1) of the Constitution gives them the right. It is not known how far we will be able to control the minority institutions which are running the nursery schools and it is a matter which the Hon. Minister can only investigate in consultation with the Law Department. If they are really interested in having trained nursery teachers to teach in about 3,000 nursery schools that are to be started, I would request the Hon. Minister to start more teaching institutions to start courses for training of nursery teachers. We have only four Nursery Training Centres in Tamil Nadu and of these three are for training Nursery Teachers in Tamil Medium and only one in English medium. We have got 3,000 Nursery Schools which require teachers to teach in English medium and I fail to see how we can expect to get qualified teachers. I would request the Education Department to take note of this and to authorise 100 Government Schools to train Nursery Teachers who will be fully equipped to teach in these institutions.

Sir, one word about Colleges. A provision of Rs. 10 lakhs and Rs. 5 lakhs has been made in 1981-82 for starting new courses in Government Colleges. I think it is hopelessly inadequate. We must remember that in modern countries the percentage of post-graduate education to under-graduate education is well over 17 to 18 per cent whereas in Tamil Nadu it is only 6½ per cent. In other words, if we are having 100,000 seats for graduate courses, we are having only 6,500 seats for post-graduate courses. Any modern nation which is interested

in research and development and in the advancement of knowledge in various fields of activity will conscientiously have to create more post-graduate courses. I would request the Directorate of College Education to see that a perspective plan is prepared to increase the proportion of post-graduate courses in all our colleges. I realise that it will require funds. But, nonetheless, extra emphasis only on particular aspects like primary and secondary education, to the neglect of post-graduate education will result in half-educated people in our State and result in denial of opportunity to the younger generation for study in various courses that are available elsewhere.

Sir, so far as grants to Universities are concerned, I would like to make a plea to the Hon. Minister. Excepting for PAUT and the Agricultural University, the amount of grants has been steadily diminishing in respect of the other three Universities, Annamalai University, Madurai Kamaraj University and Madras University. It was Rs. 1.57 crores in 1979–80, Rs. 1.54 crores in 1980-81 and Rs. 1.45 crores in 1981–82. No University can survive unless there is a growth in resources and in grants that are given by the Government. One of the difficulties faced by them in opening new Departments, although the University Grants Commission does give grants, is that we have had to tighten up the grants to Universities. I would request the Hon. Minister to see that there is a certain growth ensured in the item of Grants to Universities. I realise that we are giving Rs. 1.80 crores to the PAUT and that has probably led to a denial of grants to the other universities. I would still plead that giving to one particular University, a technological University, while it is admirable, would still not compensate the other Universities if their grants are cut down.

I would like to mention one general point because this has assumed great importance over the past three or four years. Ever since 1975, there have been serious strains in the educational system. It started with the denial of the UGC scales of pay to University teachers. That delay has cost the educational field dear because right from 1975-76 our entire educational system has been subjected to extraordinary strain. In fact, I have often stressed the aspect that 60 per cent of the Ministers'



and the administrators' time today is spent on settling individual and group grievances of teachers in primary schools and secondary schools as well as in colleges and Universities. It has taken an ugly turn. While I do not wish to apportion any responsibility, may I point out that the administrators, not only in the Education Department but in our colleges and even in our schools—when I say administrators, I am referring to the Principals, the Professors, the Headmasters and those in charge—are so badly demoralised today that discipline cannot be enforced either among the staff or among the students? The hon. Member Thiru Lakshmikandhan pleads that examination reform is necessary because teachers cannot prevent students from copying. I am not blaming the students because with such atmosphere in our schools and colleges you can realise the serious damage that is being caused to our educational system today. We must enforce discipline and we must draw up codes of conduct for students, staff-members and administrators. We must learn to settle our problems at the district level quickly and at the State level equally expeditiously. Somehow, I have a feeling that the whole weight of the system today is crushing the administrators. All that we think of is appointing half-a-dozen Deputy Directors and giving them additional clerical staff. I am afraid that this system is not going to survive especially with new responsibilities which the Government want to take in trying to absorb Panchayat Union Schools, etc. I would make a very strong plea that the State Council for Educational Research and Training should go into this because, while it may have certain theoretical projects, this is a field which it has to study. Every three months before the sessions of the Assembly and the Council, there are two huts put on the Marina, people go on hunger-strike, organise resistance to orders under section 144, Cr. P.C., court imprisonment, and all sorts of ugly incidents are taking place. This is destroying not only the integrity of the teaching profession itself but the morale of the entire educational system. Most of the strain that has developed is because the Hon. the Education Minister has been extremely kind to these associations in the sense that he has developed a very soft corner. I am mentioning this because I do not want them to take advantage of this softness in attitude. I am not pleading for a hard attitude against associations. But, from the

multiplicity of associations, the extravagance of their demands and the frequency of their demands, somehow, we never seem to have given a finis to the whole problem. I would plead with him that some structural alteration in the whole system is necessary if we are to solve these problems and get on with the work of education. We cannot compare ourselves with other States in India because there it is really bad and it is hopeless. They have dacoits infesting Universities, capturing examination halls and even question papers, etc. Regarding the question of examination reform, while many sophisticated improvements have been suggested, I would still like to plead that it is not merely a question of adoption of any modern system but you have to adopt it in the context of the student-world in India and the teacher-world in India. You cannot adopt sophisticated methods from Sourbon University in Paris or California University in San Francisco. In West Germany, people go to work at 7.30 a.m. in winter at minus 10 degrees temperature. Here, we refuse to work till 10-30 in the morning and we prefer to work at 104 degrees temperature than work in the early morning. Even in Delhi, the schools start at 7.30 a.m. and close at 12.30 p.m. So, even simple reforms are impossible in our conditions. I would, therefore, request that the whole structure of the Education Department may be re-examined. Let us have Directors in charge of all these functional lines. But, I would plead whether the time has not come for us to have a Director in charge of

(முற்பகல் 11-40)

personnel administration. Let us entrust all the problems of personnel administration in the field of education to the Director of Personnel Administration so that the Director of School Education, Director of Examinations, Director of Libraries—all these people would not be troubled with all the personnel problems and they would be able to devote their full attention to their functional line of action and this would really benefit the field of education. As I said, it will be very good for the Hon. the Education Minister if such an arrangement is made. My real sympathies are with him. At least the Labour Minister will be having only occasional disputes and he has got very many ways of resolving them and he can also refer them to



Court. Unfortunately, the Education Minister has to bear the whole burden himself. A plea has been made that private institutions are committing crimes and that they should be taken over. I request the Hon. Minister not to be swayed by sentimental approaches in this matter. We must take individual cases on their merits and there is no use of saying that because in a private institution in Tirunelveli, a teacher was asked to give shower bath to the Headmistress, all private institutions are like that. There are very good institutions and there are also bad institutions, just as there are in every aspect of our life. While I fully agree that there should be safeguards to protect teachers from unfair employer practices in private educational institutions, I would like to inform the Government that they would be disturbing the bee-hive, if they try to have any proposal to amend article 30 (1) of the Constitution without consultation with other political parties. I would not like to go into the deeper aspects of that problem, excepting to say that in our judgment of institutions, it is better to restrict ourselves to complaints that come from individual institutions, without making an undue generalisation and without making extravagant pleas which will cause much harm to the country. I would like to compliment the Education Department on the work it has been doing. If at all we have mentioned some grey areas, it is only with a view to helping them because it is made to appear that all problems relate only to teachers in this department. The hon. Member Thiru Ramalingam spoke from the standpoint of a parent. I am very glad that he did it. Unless there is somebody to express the other man's point of view, the real picture is not known. The problems relate not only to teachers, students, and management but also to parents and general society. These problems have to be kept in mind by the Government and I would request the Hon. Minister to bestow particular attention on those matters. I have a feeling that the system has developed cracks and if we do not seal those cracks in time, then the dam will burst and a situation will arise as it has happened in other States in the country. Thank you very much.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது சிலவற்றைச் சொல்லுகின்ற வாய்ப்பைப் பெறுகின்ற நான், துவக்கத்திலேயே கல்வி அமைச்சரவர்களையும், கல்வித் துறையையும் பாராட்டுவதில் பெருமைப்படுகிறேன். இன்றைக்குக் கல்வித் துறையைப் பொறுத்தவரையிலும், நான் பெருமிதத்தோடு ஒன்றைச் சொல்ல முடியும். A really sensitive department— பல்வேறு கருத்துக்களை, குறைகளையெல்லாம் மக்கள் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றபோது, பொதுவாக அதிகாரிகளுடைய அல்லது துறைகளினுடைய ரீ ஆக்‌ஷன் எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இவர்கள் என்ன சொல்லுவது என்பதும், அப்படியே சொல்லியதைச் செய்ய வேண்டுமென்ற நிலை வரும்போது உடனடியாகச் செய்தால், அவர்கள் சொன்னதால்தான் செய்கிறோமென்ற உணர்வை வெளிப்படுத்துவதுபோல இருக்குமே என்ற எண்ணத்தில் செயல்படுவதையும் பல துறைகளிலே காண்கின்றோம். ஆனால் கல்வித் துறையைப் பற்றி மகிழ்ச்சியோடு சொல்ல முடியும். உறுப்பினர்கள் சொன்ன பல கருத்துக்களை அவர்கள் ஏற்றிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல. உண்மையிலேயே அவற்றுக்கான பரிகாரத்தைக் காணும் முயற்சியில் முழுமையாக ஈடுபடுகிறார்கள். அப்படி ஈடுபடும்போது சிலவற்றிலே வெற்றி பெற்றிருக்கலாம். அது வேறு. இந்தத் துறையை மேலும் வளர்க்க வேண்டும். அப்படி வளர்க்கப்படுவதன் மூலமாக தமிழகத்திற்கு நல்ல சேவையைச் செய்ய முடியுமென்ற உணர்வு, இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுள்ள மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும், துறை அதிகாரிகளுக்கும் நிறைந்திருக்கிறதென்பதில் எந்தவிதச் சந்தேகமும் கிடையாது. அதற்காகவும் நான் அவர்களைப் பாராட்ட விரும்புகிறேன். குறிப்பாக கல்வி அமைச்சரவர்களைப் பொறுத்தவரையிலும், அவர் கல்வித் துறையினுடைய கொள்கைக் குறிப்பிலே தெரிவித்திருப்பதுபோல, பிரச்சினைகள் என்று வரும்போது, அதிலே வேகத்தோடு மட்டுமல்ல, ஆணித்தரமாக இதுதான் அரசின் கொள்கை அல்லது இதுதான் என்னுடைய கொள்கை, இதிலிருந்து பின்வாங்க முடியாது, ஒருவேளை இந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தால் எதிர்ப்பு உணர்வுகள் வந்தாலும் பரவாயில்லை, கல்விக்காகச் செய்யும் தொண்டாக அதை ஏற்கிறேன் என்ற உணர்வோடு செயல்படுவதைப் பார்க்கிறேன். கல்விக் கொள்கைக் குறிப்பிலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நான் பேசியபோது, வேதனையோடு ஒன்றைத் தெரிவித்தேன். ஆரம்பப் பள்ளிகளிலே 'ட்ராப்-அவுட்' (drop out) என்ற வகையிலே 2, 3 வகுப்புகளைத் தாண்டுவதற்குள்ளாக, மேற்கொண்டு கல்வியைத் தொடராமல் இருக்கும் நிலைமை ஏற்படும்போது, சமுதாயத்தின் மீது பொதுவான பிரதி





பலிப்பு ஏற்படுகிறது. பொதுவாக இது நகரங்களில் நடைபெறுவதில்லை. கிராமங்களில்தான் இது நடைபெறுகிறது. கிராமங்களில் இது நடைபெறுவதற்கு அர்த்தம் என்ன ? பெரும்பாலும் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள், சமுதாயத்தில் பின் தங்கியவர்கள், தாழ்த்தப்பட்டவர்களுடைய குழந்தைகள்தான் அப்படி கல்வியைப் பெறாமல் இருக்கிறார்கள். அதில் தனியாக கவனம் செலுத்த வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளுக்கு முன் நான் பேசியதாக என் நினைவில் இருக்கிறது. இன்றைக்கு அமைச்சரவர்கள் தந்திருக்கிற புள்ளிவிவரத்தைப் பார்க்கும்போது, மகிழ்ச்சி ஏற்படுகிறது. இடையில் நின்று போகிற மாணவர்களின் எண்ணிக்கையைப் பெருமளவிற்கு குறைத்திருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தைக் காணும்போது, உண்மையிலேயே இந்தத் துறையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வி நிலையங்களைப் பொறுத்தவரையிலும், ஆரம்பக் கல்வியானாலும், நடுநிலைக் கல்வியானாலும், இடைநிலைக் கல்வியானாலும், கல்லூரி ஆனாலும், அநேகமாக ஒரு நிறைவைப் பெற்றிருக்கிறோமென்று கருதுகிறேன். இன்றைக்கு ஊருக்கு ஊர் பள்ளிக்கூடங்கள், அந்தந்தப் பகுதிகளுக்குக் கல்லூரிகள் என்று நிறைவு பெற்றிருக்கிறோம் என்பதை உணர முடிகிறது. இனிமேல் நமக்கு இருக்கின்ற பொறுப்பு, இருக்கின்ற கல்வி நிலையங்களை, கல்லூரிகளை முறையாக, சிறப்பாகச் செயல்படச் செய்வதுதான். கல்விக் கூடங்களுக்கு இன்னும் அதிகமான வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்ற நிலைக்கு வந்திருக்கிறோம். இனிமேல் புதியதாகத் தேவைப்படுகின்ற கல்லூரிகளுடைய எண்ணிக்கை, பள்ளிகளினுடைய எண்ணிக்கை கடந்த ஆண்டுகளைப் போல் நூற்றுக்கணக்கில் இராது. ஆண்டொன்றுக்கு 10, 15 என்றுகூட வராதோ என்று நினைக்கிறேன். அந்த அளவிற்கு, கூடுமான வரையில் அந்தப் பிரச்சினையின் அடித்தளத்தைத் தொட்டிருக்கிறோமென்பதைப் புள்ளிவிவரங்களிலிருந்து காண முடிகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னது போன்று, இன்னும் ஒன்றை நாம் கருத்தில் கொண்டாக வேண்டும். நர்சரிப் பள்ளிகள் பிரச்சினையிலே இருக்கின்ற உணர்வை வெளிப்படுத்தியாக வேண்டும். நர்சரிப் பள்ளிகள் எப்படி இயங்குகின்றன, அதிலுள்ள குறைபாடுகள் என்ன என்பது ஒரு பக்கம், எந்த அளவிற்கு அந்தப் பள்ளிகளிலே குறைந்த ஊதியம் பெற்று ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள் ; அங்கே படிக்கும் பிள்ளைகள் எந்த அளவிற்கு போதிய இட வசதி இல்லாமல் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதெல்லாம் ஒரு பக்கம். இவ்வளவு இடைஞ்சல்களுக்கு இடையிலே, அந்த நர்சரிப் பள்ளிகளுக்குப் பொது மக்கள்

மத்தியிலே ஆதரவு இருக்கிறது. அதற்கான அடிப்படை என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நிச்சயமாக, உறுதியாக ஒன்று தெளிவாகும். நம்முடைய துறையின்கீழ் இயங்கும் பள்ளிகள், மற்ற அரசுத் துறைப் பள்ளிகள் ஆகியவற்றைவிட நர்சரிப் பள்ளிகளிலே கல்வித் தரம் அல்லது சொல்லிக் கொடுக்கும் முறை பெற்றோர்கள், மாணவர்கள் விரும்பும் அளவிற்கு இருக்கிறதென்ற கசப்பான உண்மையை ஏற்றாக வேண்டும். எனவே விரைவாக, மிகுந்த பொறுப்புணர்வோடு கல்வி முறையை மாற்றி அமைக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு குறிப்பிட்ட அடித் தளத்திலேயே இந்தப் பிரச்சினை தீரவில்லை. அந்தப் பிரச்சினை, ஆங்கிலத்திலே கல்வி கொடுப்பதா, இல்லையா என்பது. இந்த நிலையில் நர்சரிப் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாகிறது, அங்கே மாணவர்களின் எண்ணிக்கையும் கூடுகிறது. அந்த எண்ணிக்கை அதிகமாகும்போது, நாம் எதைக் கொள்கையாக அறிவித்தாலும், நாட்டு மக்கள் எந்த அளவிற்கு நமது கொள்கையை ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது. கொள்கை அடிப்படையிலே மாற்றம் தேவை என்றால், மறு சிந்தனை தேவை. முழுக்க முழுக்க ஒரேயடியாக அடைத்து விட்டோம், மறு சிந்தனையே கிடையாது என்று எண்ணுவதைவிட, மீண்டும் அதுபற்றிச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கல்வி நமக்குப் பலன் தர வேண்டும். கல்வி வளர்ந்தால்தான் நாடு முன்னேற

(மூற்பகல் 11-30)

முடியும். கல்வியின் மூலம்தான் குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலத்தை அமைக்க முடியும். அந்த கல்வித் துறை தரமில்லையென்று உணர்ந்ததால் தான், பெற்றோர்கள் வேறு இடங்களுக்குச் செல்கிறார்கள். அப்படி இருந்தும்கூட, எங்கள் கொள்கை இது தான் என்கிற முறையில் கல்வித் துறையின் நடவடிக்கை பிடிவாதமாக இருக்கக் கூடாது. அதுமட்டுமல்ல, நர்சரிப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஒன்றைத் தெளிவுபடுத்தியாக வேண்டும், இன்றைக்கு நர்சரிப் பள்ளிகள் எல்லாம் அநேகமாக "They have come to stay" என்கிற முறையிலே இருக்கின்றன. தொடர்ந்து இனிமேல் எப்படி நடைபெற விடுவது என்பது வேறு. அங்கு பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட வேண்டும். இன்றைக்கு நாம் காண்டிராக்ட் லேபர் முறைக்கு விரோதமாக இருக்கிறோம். அது மட்டுமல்ல. தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று சொல்கிறோம். அப்படி இருக்கும் போது, நர்சரிப் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டாக வேண்டும்.



கிராமப் பகுதிகளைப் பொறுத்தவரை, ஒன்றை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களையெல்லாம் அரசுப் பணியாளர்களாக ஆக்கியிருக்கிறோம். அடுத்து, ஒன்றை நான் கேட்கிறேன். அரசுப் பணியாளர்களாக அவர்களை ஆக்க ஏற்றிருக்கின்ற நிலையில் இனிமேல் அவர்களுடைய கண்ட்ரோல் யாரிடம் இருக்கும்? அரசு ஊழியர்களாகவே, கல்வித் துறை மூலமாக மட்டுமே அவர்கள் கண்ட்ரோல் செய்யப்படுவார்கள் என்கிற நிலை வரும்போது, பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றிய அமைப்பிலுள்ளவர்கள் தங்கள் பொறுப்பிலிருந்து நழுவுகிற நிலை வந்து விடும். கிராமப்புறங்களிலே எங்கேயும் பள்ளிகள் முறையாக நடக்கவில்லை. முன்பெல்லாம் எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகள் கண்காணிக்கக்கூடிய நிலை இருந்தது. அதனை முழுமையாகக் கைவிடுவது சரியல்ல. அதையும் நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கிராமப்புறப் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்கள் பள்ளி நேரத்தில் வகுப்புகளில் இருப்பதில்லையென்று சொன்னார்கள். அதற்காக ஆசிரியப் பிரதிநிதிகள் கோபப்பட்டார்கள். நானும் அதுபற்றிப் பேசுகிறேன் என்பதற்காக என்மீது கோபப்படக் கூடாது. கிராமப்புறங்களில் பள்ளிகளில் பல நேரங்களில் ஆசிரியர்கள் இருப்பதில்லை. கிராமப்புறங்களில் வசதியில்லையென்று சொல்லி அவர்கள் நகரங்களில் குடியிருக்கிறார்கள். அங்கிருந்து கிராமப்புறங்களுக்கு வருகிறார்கள். காலை 10 அல்லது 11 மணிக்கு சைக்கிளில் நகரத்திலிருந்து புறப்பட்டு பள்ளிக்கூடத்துக்கு வருகிறார்கள். பிறகு அவசரமாக சாயங்காலம் ஊருக்குப் புறப்பட வேண்டுமென்ற அவசரத்தில் பள்ளியிலிருந்து 3 மணிக்கெல்லாம் புறப்பட்டு விடுகிறார்கள்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பள்ளிக்கூடங்களில் இருப்பதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். ஆனால் அப்படி ஆசிரியர்கள் பள்ளிக்கூடங்களில் இருக்கவில்லையென்று சொன்னால், இப்போதே அதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரிடம் இருக்கிறது. அவர் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் கல்விப் பணி அல்லாத பணிகளை அவர்களிடம் ஒப்படைத்து விட்டு எப்போது வேண்டுமானாலும் வரலாம், வராமலும் இருக்கலாம், 10 நாட்களுக்குப் பிறகு கூட வந்து கையெழுத்துப்

போடலாம் என்று சொல்கிற ஆணையாளர்களும் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுடைய பட்டியலே என்னிடம் இருக்கிறது. அப்படிச் செய்வது சரியா தவறா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : எனக்கு அமைச்சர் பதவி எப்போது கொடுத்தார் என்பது எனக்குத் தெரியவில்லை.

* திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் ஒரு கருத்தைச் சொன்னார். அவருடைய கவனத்திற்கும் இந்த அவையினுடைய கவனத்திற்கும் ஒன்றை நான் கொண்டு வருகிறேன். நிர்வாகத்தினுடைய கன்ட்ரோல் குறுகிய வட்டத்திற்குள் இருக்கும்போதே, சில ஆசிரியர்கள் விடுப்புக் கடிதத்தை இன்னொரு ஆசிரியரிடத்தில் கொடுத்துவிட்டு யாராவது ஆய்வு செய்ய வந்தால், அவரிடத்தில் காண்பிப்பது, இல்லாவிட்டால் அதைக் கிழித்து எறிவது போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதை நான் மாண்புமிகு உறுப்பினரிடம் காட்டினால், அவர் ஒத்துக்கொள்வாரா ?

திரு. க. இராமமூர்த்தி : இதிலிருந்து ஒன்று தெளிவாகத் தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் ஆசிரியர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள். நான் சொல்லிய குறைபாட்டை அவர் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் மாறாக அதற்கு என்ன காரணம் என்பதை மட்டும் சொல்லியிருக்கிறார். அந்தக் காரணங்களையெல்லாம் அமைச்சரிடத்திலும், துறையிலும் உறுப்பினர் சொல்ல வேண்டும். ஆனால் எங்கள் பிள்ளைகள் என்ன பாவம் செய்தார்கள் ? 3 மணி நேரத்தில் ஒரு மணி நேரம் சாப்பாட்டுக்காக இடைவெளி. கிராமப்புறங்களில் பள்ளிக்கூடங்கள் சரியாக நடைபெறவில்லையென்றால் கிராமப்புறங்கள் வளராது. பின்தங்கிய மக்கள் எந்தக் காலத்திலும் முன்னேற வாய்ப்பு இல்லாமலே போய் விடும். கல்வியின் தரம் அழிந்துவிடும். கல்வியின் தரம், வளர்ச்சி கூட தாழ்ந்து போகிறது. மற்றவர்களோடு அவர்கள் போட்டியிட முடியாத நிலை வந்து விடும்.

இன்னமும் பள்ளிகளில் பயிலும் பின்தங்கிய மாணவர்களுக்குச் சலுகையா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்தம் கேட்டிருக்கிறார். அவர் அப்படிக் கேட்கும் அளவுக்கு அவர்களுடைய கல்வியறிவு வளர்ச்சியடைந்திருக்கிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன். முடிவாக கல்வியைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்குவதற்கேற்ற முறையில் பரிசீலிக்க வேண்டும்.



இன்றைக்கு கல்வித் துறையைப் பொறுத்தவரையில், கல்லூரிகளைப் பொறுத்தவரையில், நான் பெருமிதத்தோடு ஒன்றைச் சொல்கிறேன். ஓரளவுக்கு கல்லூரிகளினுடைய எண்ணிக்கை தனியார் மற்றும் அரசு கல்லூரிகளை சேர்த்து 187 என்கிற அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது. அதற்கான புள்ளிவிவரங்களை இங்கே கொடுத்திருக்கிறார்கள். 187 என்பது சென்ற ஆண்டு புள்ளிவிவரம். இந்த ஆண்டும் ஏறக்குறைய அதே அளவு தான். இதில் சேர்ந்திருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஓரளவு அதிகமாக முறையாக வளர்ந்துகொண்டே இருக்கிறது. ஆகவே இனிமேல் புதிய கல்லூரிகளைத் துவங்குவது என்கிற பிரச்சினை வருகின்றபோது, எங்கோ மாவட்டத்தில் ஒரு கல்லூரி இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டு என்கிற அளவிலே தான் வளரும். ஆகவே இன்னும் பல ஆண்டுகளுக்கு கிட்டத்தட்ட 10 கல்லூரிகள் அமைத்தாலே போதும் என்கிற அளவுக்கு கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையில், மேக்சிமம் என்கிற நிலைக்கு வந்து விட்டோம். இன்னும் சொல்லப்போனால் கல்லூரிக் கல்விச்சாலைகளின் எண்ணிக்கையை வளர்த்து அதனை கிராமப் புறங்களுக்கு நகர்ப்புறங்களிலே இருப்பதை போல் தர முடியும் என்கிற நிலையையும் எய்தியிருக்கிறோம். இனிமேல் நான் இந்தக் கல்வியை முழுமையாக, தரமுள்ள கல்வியாகத் தர முயற்சி செய்ய வேண்டும். ஒன்றை நான் வேதனையோடு சொல்கிறேன். கல்லூரிகளிலே இன்றைக்கு பிரிவினை உணர்வுகளை எல்லாம் வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். பரவலாக இத்தகைய ஒரு நிலை வளர்ந்திருக்கிறது. மதத்தின் பேரால், தாழ்த்தப்பட்டவர்கள் என்ற பேரால், ஜாதி என்ற பேரால், இந்துக்கள் என்ற பேரால், ஜாதி இந்துக்கள் என்ற பேரால் இன்றைக்கு நாட்டிலே பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கிறார்கள். இதன் காரணமாக கல்லூரிகளில் படிக்கக்கூடிய மாணவர்களிடையே விரோதமும், குரோதமும் ஏற்பட்டு நல்ல நடைமுறையே தடைப்பட்டிருக்கிறது. கல்லூரிகளிலே மாணவர் தேர்தல் என்பது ஜாதியின் அடிப்படையில் இப்போது நடைபெறுகிறது. கட்சி அடிப்படையில் நடைபெறுவதெல்லாம் இப்போது போய் விட்டது. அந்தந்த ஜாதியினர் வெளியிலேயிருந்து மாணவர்களை அடிப்பதற்காக உள்ளே அடியாட்களை அனுப்புகிறார்கள். படிக்கின்ற மாணவர்களை ஜாதி அடிப்படையில் அடிக்கிற நிலை இருக்கிறது. எல்லா ஜாதி மாணவர்களும் படிக்கிறார்கள். இதைத் தடுத்து நிறுத்துகிற பொறுப்பு அனைத்து ஜாதிக்கும் இருக்கிறது. அனைத்து ஆசிரியர்களுக்கும் இருக்கிறது. அதற்கு மாறாக அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்களே யார் யார் எந்த ஜாதி என்கிற முறையில் பிரச்சினையை அணுகுகிற நிலையும், அதற்கு தங்கள் பங்காக [illegible] றையாக இருப்பதும் நல்லதல்ல.

[திரு. க. இராமமூர்த்தி] [1981 ஏப்ரல் 28

இதற்கு எல்லோரும் சேர்ந்து உடனடியாக ஒரு முடிவைக் கண்டாக வேண்டும். இதற்கு உடனடியாக நாம் முடிவு காணவில்லையென்றால், நாம் வெற்றிகரமாக கல்லூரிக் கல்வியை விரிவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொண்டிருப்பதெல்லாம் பாழாகி விடும், பல கோடி ரூபாய்களை வீணாகப் பாழாக்கிக் கொண்டிருக்கிறோம் என்கிற நிலை உருவாகிவிடும். இதற்காக நான் ஆளும் கட்சியின் மீதோ அரசின் மீதோ பொறுப்பைச் சுமத்த விரும்ப வில்லை. பூதாகாரமாக இந்தப் பிரச்சினை நாட்டிலே இன்றைக்கு உரு வெடுத்திருக்கிறது. இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விசேஷமாக தனிக் கவனம் செலுத்த வேண்டும். சில காலத்திற்கு கல்லூரிகளிலே மாணவர் தேர்தலே இல்லாமல் இருந்தால் கூட நல்லது. இன்றைக்கு பல கல்லூரிகளிலே அக்காடமிக் இயர் (Academic year) கிடையாது. 20, 30 அல்லது 40 நாட்கள் வேலை செய்கின்ற கல்லூரிகள் கூட இருக்கின்றன. அந்த அளவிற்கு நிறைய நாட்கள் கல்லூரி களை மூடிவிட்டு பிறகு ஏன் யூனியன் தேர்தலை நடத்த வேண்டும்? எப் போது படிக்கப் போகிறார்கள்? மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதுகுறித்து அவசரமாக, துரிதமாக நடவடிக்கை எடுத்தால், நிச்சயமாக நான் மட்டுமல்ல, நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியும் கூட ஒத்துழைப்பதற்கு, கூடுமானவரை பரிசீலிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். இன்றைக்கு கல்லூரிப் படிப்பு இதன் காரணமாகப் பாழாகிக்கொண்டிருக்கிறது. சமுதாயத் தையும் அது பாழ்படுத்திக் கொண்டிருக்கிறது. தமிழகத்திலே மிக அதிக மான அளவுக்குப் பின்தங்கிய மாணவர்கள் படிக்கின்ற ஒரு பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம். அதைப்பற்றி 2, 3 நாட்களுக்கு முன்பு ஒரு செய்தி வந்தது. இந்த ஆண்டு முழுமையாக அங்கே எத்தனை நாட்கள் கல்லூரி நடைபெற்றிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். 'சாக்கிங்' என்ற பெயரில் சைக்கிள் செயின், கோடரி போன்றவற்றை வைத்துக் கொண்டு அங்கே மாணவர்களுக்குள்ளாகவே அடித்துக்

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

(முற்பகல் 11-30)

கொண்டிருக்கிறார்கள். அங்கே எதையெடுத்தாலும் ஜாதிச் சண்டையைத் தவிர வேறு இல்லை. உலகெல்லாம் இந்த ஜாதி ஒழிந்தாலும், இந்தக் கல்லூரிகள் தாண்டிவிடுகின்றன. இதிலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன்தொடர்பாக இன்னொன்றையும் சொல்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தான் இன்றைக்கு மிகவும் அதிக அளவிலே மக்கள்



1981 ஏப்ரல் 28] [திரு. க. இராமமூர்த்தி]

மத்தியிலே உணரப்படுகிறார்கள். அவர்களுடைய சேவையைத்தான் மக்கள் அதிகமாக உணருகிறார்கள் என்ற உணர்வு நம்முடைய சட்ட மன்றத்திற்கு வரும்போது உறுப்பினர்களுக்கு எல்லாம் ஏற்படுகிறது. காரணம், வரும் வழியே நடக்கும் போராட்டங்களைப் பார்த்தால், அந்தப் போராட்டங்கள், உண்ணாவிரதங்கள் எந்தத் துறைக்குச் சம்பந்தப்பட்டவை என்று பார்த்தால், அநேகமாக கல்வித் துறைக்குச் சம்பந்தமான போராட்டங்களாக, உண்ணாவிரதமாக இருக்கின்றன. இந்தப் போராட்டங்கள் அந்த அளவுக்குத் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருப்பது என்பது மட்டுமல்ல, அவைகளை எப்படி முடிவுக்குக் கொண்டுவரலாம் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். கல்லூரி ஆசிரியர்கள் ஆனாலும், பள்ளி ஆசிரியர்கள் ஆனாலும், 5 ஆண்டு காலத்திற்கு வேலைநிறுத்தம் கூடாது என்ற நிலைமை வேண்டும். அதைப்போலவே, அரசைப் பொறுத்தவரையில் கல்விக் கொள்கையிலே ஒரு திட்டவட்டமான முடிவு எடுக்க வேண்டும். சில ஆண்டுகளுக்கு, மிகப் பெரிய அவசியம் இருந்தாலொழிய, அந்த முடிவில் மாற்றம் இல்லை என்ற நிலை இருக்க வேண்டும். மாணவர் தரப்பிலே யிருந்தும் ஒரு 5 ஆண்டு காலத்திற்கு எந்தக் காரணத்திற்காகவும் வேலை நிறுத்தம் கூடாது என்ற நிலையை உருவாக்க வேண்டும். (A moratorium on strikes for five years) மிகவும் அவசியமாகப் போக்கவேண்டிய குறைபாடுகள் இருக்கும்போது, அந்தக் குறைபாடுகளைப் போக்க ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு விசாரணை செய்யலாம். அந்தக் குழுவினிடத்திலே மாணவர்களின் பிரதிநிதிகள் முறையீடு செய்யலாம். வேண்டுமானால் அந்தக் குழுவுக்கு தனியாக அதிகாரங்கள்கூட கொடுக்கலாம். பிரச்சினைகள் தீரவில்லை என்பதற்காக சென்னையிலே இருக்கும் கல்லூரிகளிலே துவங்கி மாநிலம் முழுவதும் இருக்கும் கல்லூரிகள் அனைத்துக்கும் அந்த உணர்வுகள் சென்று அங்கெல்லாம் பிரச்சினைகள் பரவும் நிலை இருக்கிறது. ஏற்கெனவே ஸ்டிரைக்கில் ஈடுபட்டு இரண்டு மாதம் படிப்பு இல்லாமல் இருக்கும் மாணவர் கள், பள்ளிக்குச் சென்றால், சென்ற முதல் நாளே ஸ்டிரைக். அதற்குப் பிறகு ஒரு மூன்று மாதங்களுக்குப் பிறகு மீண்டும் படிக்க வேண்டிய நிலை இருக் கிறது. அவனைப் படிக்க வைக்க பணச் செலவு எவ்வளவு? இவைகளை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பணக்காரர்கள் மட்டும் இன்றையதினம் படிக்கவில்லை. நாம் இப்போது கல்வியை மிகவும் பரவலாக்கியிருக்கிறோம். மிக மிக முடியாதவர்கள் எல்லாம், ஏழைகள் எல்லாம், பின்தங்கியவர்கள்

[திரு. க. இராமமூர்த்தி] [1981 ஏப்ரல் 28

எல்லாம் படிக்க வந்திருக்கின்ற இந்த நிலையிலே இந்த வசதிகள், இந்தச் சலுகைகள் அவர்களுக்கு மறுக்கப்படக்கூடாது. ஆகவே, இந்த நிலைமைகளைத் தடுத்து நிறுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

இன்னொன்று. கல்லூரிகளிலே பயிலும் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். அங்கே படிக்கும் மாணவர்கள் விடுதிகளுக்குப் பணம் கட்டவேண்டி இருக்கிறது. ஸ்காலர்ஷிப் வாங்கியவர்கள்கூட, தாங்கள் விடுதிக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுப்பதில்லை. அப்படி நிலைமை இருக்க, தேர்வுக்கு அவர்களுக்கு 'ஹால் டிக்கெட்' கொடுக்க வில்லை என்றால், அதற்கு 'ஸ்டிரைக்' பண்ணுகிறார்கள். அவர்கள் சாப்பிட்டதற்குரிய பணத்தையே கட்டவில்லை. ஸ்காலர்ஷிப் வரவில்லையோ என்று பார்த்தால், அந்த நிலைமை இல்லை, அது வந்திருக்கிறது. ஆனாலும் பணம் கட்டவில்லை. இப்படியே, ஸ்காலர்ஷிப்களையே கூட அவர்கள் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். ஸ்காலர்ஷிப் பணத்தைக் கொடுப்பதற்குத்தான் ஆசிரியர்களுக்கோ, பிரின்சிபாலுக்கோ அதிகாரம் இருக்கிறதே தவிர, அந்தப் பணத்தின் அடிப்படையிலே, ஹாஸ்டலுக்கு அல்லது கல்லூரிக்குச் செலுத்த வேண்டிய பணத்தை வாங்குவதற்கு அல்லது பிடிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லை. இப்படி இருந்தால் இது எங்கே போய் முடியும்? இதிலே எல்லாம் முறையாக, உடனடியாக, வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் அது தவறான பின் விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும்.

இன்றையதினம் புதிய பல்கலைக் கழகங்கள் வரவிருக்கின்றன. கோயம் புத்தூரிலும், திருச்சியிலும் இந்த ஆண்டு பல்கலைக் கழகங்கள் துவங்க இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வட மாநிலங்களிலே செல்கிறபோது, எனக்கு ஏற்பட்ட உணர்வு, தமிழகத்திலேயும் நிறைய பல்கலைக் கழகங்கள் வந்தாக வேண்டும் என்பது. நிறைய பல்கலைக் கழகங்களை உருவாக்குவதன் மூலம், மத்திய அரசிடமிருந்து நம்மாலே கூடுதலாகப் பணம் பெற முடிகிறது. கல்வி பெறும் வாய்ப்புக்களைப் பரவலாக்க முடிகிறது. புதிய கல்வித் தகுதியையும் உருவாக்க முடியும். ஆகவே, இந்த அரசு இந்த ஆண்டிலே இரண்டு பல்கலைக் கழகங்களைத் துவங்க இருக்கிறோம் என்று அறிவித்திருப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கின்ற விஷயம்.



1981 ஏப்ரல் 28] [திரு. க. இராமமூர்த்தி]

கல்வித் துறையைப் பொறுத்தவரையில், வேறு சில பணிகளிலேயும் இப்போது கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்படி கவனம் செலுத்தும் பணிகளிலே Institute of Mathematical Science. என்கின்ற ஒரு இன்ஸ்டிட்யூட்டையும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அது மகிழ்ச்சிக்குரிய அளவிலே வளர்ந்திருக்கிறது. ஆனால், அதனுடைய வளர்ச்சியும், பெருமையும் வெளியே தெரியவில்லை. வெளியே தெரியும் அளவுக்கு, அதனுடைய முக்கியத்துவத்தை மற்றவர்களுக்குத் தெரிய வைக்க வேண்டுமென்றும், அதனுடைய பலனை மேலும் மற்றவர்கள் பெறும் அளவுக்கு, தமிழகத்து மாணவர்கள் அதன் பலனைப் பெறும் அளவுக்கு நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி தருகின்ற அளவிலே வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அதனுடைய அவசியத்தை அத்தனை பேரும் உணர்ந்து கொண்டிருக்கிறோம். இதையும் பரவலாக்க வேண்டும். இன்னும் அதிக அளவு கல்லூரி ஆசிரியர்களுக்கு இந்த வாய்ப்புகள் ஆண்டுதோறும் கிடைக்கும் அளவிலே விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாடப்புத்தகங்கள் தயாரிக்க ஒரு கமிட்டி இருக்கிறது. எனக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன. அதிலே குறைபாடுகள் இருக்கின்றன. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உணர்வார்கள். அவைகளை மாற்ற வேண்டியது மிகவும் அவசியம். இந்தப் பிரச்சினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அவருடைய கவனத்திற்கும் வந்திருக்கும் என்று நம்புகிறேன். இந்தப் புத்தக சங்கம் Text Book Society முறையாகச் செயல்படவில்லை என்ற குறைபாடுகள் இருக்கின்றன. இந்தக் குறைபாடுகளை 'முறையற்றவை' என்று தள்ளிவிடவும் முடியவில்லை. உதாரணத்திற்குச் சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்களே வெளியிட்ட புத்தகம் என்று கருதுகிறேன், அன்னை தெரசா பற்றி நீலமணி என்பவர் எழுதிய புத்தகம். 1980 லே வெளியிட்டிருக்கிறார்கள். அந்த புத்தகத்தை லைப்ரரிகளிலே வைக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கிறார்கள். பல்வேறு லைப்ரரிகளிலே அந்தப் புத்தகம் இருக்கிறது. அதை Non-detailed புத்தகமாக வெளியிட வேண்டும் என்ற கோரிக்கை வந்தபோது, அந்தப் புத்தகத்தை எழுதியவர் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். ஆகவே அதை Non-detailed புத்தகமாக வைக்க முடியாது என்று பதில் அனுப்பியிருக்கிறார்கள். அதற்குப் பின், சில மாதங்களுக்குப் பிறகு அந்தப் புத்தகத்தினுடைய பல பகுதிகள் அப்படியே திரும்பவும் அச்சிடப்பட்டு வேறொருவருடைய பெயரிலே வெளியிடப்பட்டிருக்கிறது. அவருடைய பெயர் மொய்தீன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1981 ஏப்ரல் 28

இந்த விஷயம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கும் என்று
நினைக்கிறேன். இதுபற்றி அவர்கள் அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கி
றார்கள். 'இது விசாரணைக்கு உரியதல்ல' என்று அமைச்சர் அவர்களுக்கே
பதில் கொடுத்திருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. பொதுவாக
அப்படிப்பட்ட புத்தகங்களைப் பொறுத்தவரையில், கல்வித் துறை சம்பந்தப்
பட்ட நிறுவனங்களைப் பொறுத்தவரையில், அவற்றின் தரம்தான் முக்கியம்.
இப்படிப்பட்ட சூழ்நிலைகளை உருவாக்குவது நல்லதல்ல என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன். பெரும்பாலும் இதுபோன்ற பணிகளைச் செய்ய
retired officials -ஐப் போடுகிறார்கள். அதனுடைய விளைவு என்ன ?
அவர்களுக்கு அரசாங்கத்தின் பல்வேறு துறைகளிலே இருக்கும் பிடிப்பை
வைத்துக்கொண்டு, அவர்களுடைய பணியிலே யாரும் குறை சொல்லக்கூடாது
என்று சொல்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது). இன்னும் நிறைய விஷயங்
கள் பேச இருக்கின்றன. I am not even half-way through மொழி
பெயர்ப்புக் குழுவிற்குக் கூட ஆட்களை

(முற்பகல் 11.40)

நியமிக்கும்போது ஏற்கெனவே ரூ. 4,000 அல்லது ரூ. 5,000 ஊதியம் பெற்றுக்
கொண்டிருந்தவர்களைப் போடுகிற நிலைதான் இருக்கிறது. அவர்களெல்லாம்
பல்வேறு பணிகளை ஆற்றியவர்கள் என்ற பெருமைக்குரியவர்களாக இருக்க
லாம். அது வேறு விஷயம். ஏற்கெனவே ஒரு கார் வைத்திருப்பவருக்கு
இன்னொரு கார். ஏற்கெனவே ஒரு அலுவலகம் வைத்துக் கொண்டிருப்பவ
ருக்கு அரசாங்கச் செலவில் இன்னொரு அலுவலகம். ஏற்கெனவே ரூ. 4,000
ஊதியம் பெற்றுக்கொண்டிருந்தால், 'இதோ அரசாங்கத்திலிருந்தும் ரூ. 4,000
அல்லது ரூ. 5,000 ஊதியம் பெறுங்கள்' என்று சொல்லி, அவர்களுக்கு
ஆனரோரியம் என்ற பெயரில் அளிப்பது சரியல்ல. இவ்வாறு என்றைக்கோ
ஒரு நாளைக்கு அலுவலகத்திற்கு வருகிறவர்கள் அல்லது அப்படிக்கூட வர
இயலாதவர்களையெல்லாம் இந்தத் துறையில் போட்டு நிரப்பிவிட்டு, இந்தத்
துறையிலே பணியாற்றுகிறவர்களின் வாய்ப்புகளை ஏன் குறைக்க வேண்டும்
என்றுதான் கேட்க விரும்புகிறேன். இந்தத் துறையில் பணியாற்றுகிறவர்
களில் தகுதி உள்ளவர்கள் இல்லையா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.
ஆக, இந்தத் துறையில் ஏற்பட்டிருக்கும் இத்தகைய குறைகளை நீக்க
வேண்டும் என்பதற்காகத்தான் இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

விளையாட்டுக்கு என்று ஒரு தனியான துறை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.
விளையாட்டின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்து அதற்கென்று ஒரு
துறையை ஏற்படுத்தி அந்தத் துறையை நிர்வகிக்க என்று தனியான



1981 ஏப்ரல் 28] [திரு. க. இராமமூர்த்தி]

அமைச்சரும் நியமிக்கப்படுவார் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
முன்பு அறிவித்தார்கள். ஆனால் எந்தக் காரணத்தாலோ அது இன்னும் நிறை
வேறவில்லை என்றாலும், நான் அதற்குள் போக விரும்பவில்லை. அமைக்கப்
பட்டிருக்கும் விளையாட்டுத் துறை சிறப்பாகப் பணியாற்றுவதோடு, சில
சிறந்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருப்பதைக் குறித்து மகிழ்ச்சியடை
கிறேன். எனினும் எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், அத்
துறையில் உள்ள சில குறைபாடுகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் பெறும் தமிழக விளையாட்டு வீரர்
அல்லது வீராங்கனைக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் அவர்கள் வெற்றி
பெற்றுத் திரும்பும்போது, குறைந்தபட்சம் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள
வீடு வாங்கித் தரப்படும் அல்லது அதற்கு இணையான மாற்றுக் காரியம்
செய்யப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கருத்துத் தெரிவித்
திருக்கிறார்கள். அதுபற்றி கொள்கைக் குறிப்பிலும் குறிப்பிடப்பட்டிருக்
கிறது. மாஸ்கோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய
ஹாக்கி அணியின் தலைவர் திரு. பாஸ்கரனுக்கு ரூ. 47,000 செலவில் ஒரு வீடு
வாங்கித் தரப்பட்டிருக்கிறது என்ற செய்தி உண்மையிலேயே மகிழ்ச்சியை
அளிப்பதாக இருக்கிறது. அதற்காக நான் அரசைப் பாராட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன். அதோடு அந்தத் துறைக்குப் பல இடர்பாடுகள் வந்து
கொண்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்
திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழ் நாடு பால் பேட்மிண்ட்டன் அசோசியேஷன் என்ற அமைப்பில்
நடைபெற்ற முறைகேடுகளைப்பற்றிய தகவல்கள் எனக்கு வந்துள்ளன.
அந்தத் தவறுகளைப் பொறுத்தவரையில், பணத்தின் அடிப்படையில் பார்க்கக்
கூடாது. காரணம் ரூ. 1,500 அல்லது ரூ. 2,000 அளவுக்குத்தான் தவறுகள்
நடைபெற்றிருக்கின்றன. ஆனால் அவற்றை முறைகேடுகள் என்ற
அடிப்படையில் அரசு பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அந்த
அசோசியேஷனில் ஏற்பட்ட சிக்கல் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறது.
அங்கே இருப்பவர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் கடுமையான வேறுபாடுகள்
காரணமாக அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நீதிமன்றம்
விசாரித்து ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பில் ஒரு கட்டளை
யிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கட்டளையை மீறி, மீண்டும் அந்த
அமைப்பிற்கு இந்தத் துறை பணம் வழங்கியிருக்கிறது என்ற தகவல் என்
கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

நேஷனல் டோர்ன்மெண்ட் நடைபெறும் பத்ராசலம் என்ற இடத்திற்கு பேட்மிண்ட்டன் விளையாட்டில் பங்கு பெறுவதற்கான ஆட்களை ஸ்போர்ட்ஸ் கவுன்சில் தேர்ந்தெடுத்தது. ஆனால் பேட்மிண்ட்டன் அசோசியேஷன் தலைவராக இருந்த திரு. எஸ். ஆர். முத்துக்கிருஷ்ணன் என்பவர் அந்த ஆட்கள் அனைவரையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு தன்னுடைய விருப்பத்திற்கிசைந்தவாறு ஒரு குழுவை அழைத்துச் சென்றிருக்கிறார். அவருக்குச் (Team) செலவுக்கு என்று ரூ. 1,500 தரப்பட்டிருக்கிறது. அது எப்படித் தரப்பட்டது என்பது எனக்குப் புரியவில்லை. நீதிமன்றத்தில் வழக்கு இருந்தபோது, இது குறித்து அந்த எஸ். ஆர். முத்துகிருஷ்ணன் என்பவர் நிபந்தனையற்ற முறையில் மன்னிப்புக் கோரியிருக்கிறார். அதன் காரணமாக அந்த முத்துக்கிருஷ்ணன் என்பவர் ரூ. 1,500-ஐத் தர வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. இருப்பினும் அவர் அந்தப் பணத்தைத் திரும்பச் செலுத்தவில்லை. அதற்குப் பிறகு இன்னொரு போட்டிக்காச் செலவு செய்வதற்காக அவர் பணம் கேட்டபோது, பண ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அந்த ஒதுக்கீட்டிலிருந்து ரூ. 1,500-ஐப் பிடித்துக்கொள்ளலாம் என்று உத்தரவிடப்படுகிறது. இது சரியல்ல என்பது மட்டுமல்ல, இதை நாம் அனுமதிக்கக் கூடாது. விளையாட்டுப் பயிற்சிகளில் தமிழகம் இப்போதுதான் நுழைந்திருக்கிறது. மற்ற மாநிலங்களில் அவர்கள் அதிகமான அளவுக்கு வளர்ந்திருக்கிறார்கள். நாம் இப்போதுதான் முதலாவதாகக் காலடி எடுத்து வைத்திருக்கிறோம். ஆக இப்படிப்பட்ட நிலையிலேயே அரசியல் செல்வாக்கு அல்லது வேறு வகையான செல்வாக்கு இந்தத் துறையில் நுழைந்துவிட்டால், ஆரம்பத்திலேயே வளராத குழந்தையாக, முழுமையாக வளர்ச்சி பெறாத ஒரு அமைப்பாக மாறிவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் தலைமை)

பச்சையப்பன் அறக்கட்டளையைச் சீர்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் அதன் நிருவாகத்தை அரசே மேற்கொண்டிருப்பதற்காக நான் அரசுக்குப் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வகையில் அரசின் துணிவையும் நான் பாராட்டுகிறேன். ஆனால் எனக்கிருக்கிற ஒரே ஒரு ஏமாற்றம் அந்த அறக்கட்டளையை அரசே ஏற்ற பிறகு, அந்த அறக்கட்டளையில் கல்வி தவிர்த்த வேறு தொடர்புடைய விஷயங்களில் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களும், என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்ற தகவல்களும் இந்த அவையின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால், இது மேலும் முழுமை பெற்றதாக அமைந்திருக்கும் என்று கருதுகிறேன். பச்சையப்பன் அறக்





கட்டளையைப் போன்றே வேறு பல இன்ஸ்டிட்யூஷன்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் 'சிறுபான்மை வகுப்பினரைச் சேர்ந்ததா அல்லவா என்றெல்லாம் கவலைப்படாமல் ஏறத்தாழ பச்சையப்பன் அறக்கட்டளை போன்ற நிலைமையில் உள்ள மற்ற நிறுவனங்களின் நிருவாகத்தையும் அரசே மேற்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைச் சொல்லும்போது, அரசே எல்லாக் கல்லூரிகளையும் ஏற்று நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் நான் சொல்லவில்லை. ஆனால் தனியார் கல்லூரி என்ற பெயரிலும், சிறுபான்மையோரின் கல்வி நிறுவனங்கள் என்ற பெயரிலும் சிலர் தனிச்சலுகை பெற்று, அதன் அடிப்படையில் தவறுகளையும் முறைகேடுகளையும் தொடர்ந்து செய்யும்போது, அரசாங்கம் தங்களை ஒன்றும் செய்துவிட முடியாது என்ற ஆணவப் போக்கில் குற்றங்களை மேலும் அதிகரிக்கும்போதும், அரசாங்கம் இவற்றில் தலையிடாமல் தான் இன்னும் இருக்க வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். வேண்டுமென்றால், அவசியமானால் நீதி மன்றங்களின் துணையோடு இவற்றிலெல்லாம் தலையிட வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எதற்கெடுத்தாலும் அரசியல் சட்டம் குறுக்கே நிற்கிறது என்ற பழைய நீதிமன்றத்தின் தீர்ப்பையே திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டிருப்பதை விட்டுவிட்டு, புதிதாக எழுந்துள்ள பிரச்சினைகளை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுபோய், அதன் அடிப்படையில் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். அதைக்கூட வேகமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழன் வளர்ச்சியில் நாம் அனைவருமே முழுமையான அக்கறை கொண்டிருக்கிறோம். தமிழ் வளர்ச்சி என்ற பெயரில் நாம் எத்தனையோ சங்கங்களையும் அமைப்புகளையும் வைத்துக் கொண்டிருக்கிறோம். அதோடு எத்தனையோ துறைகளையும் வைத்துக்கொண்டிருக்கிறோம். தமிழ் வளர்ச்சித் துறை; தமிழ் நாட்டு வரலாறு பற்றிய அமைப்பு, தமிழ் மொழி பெயர்ப்புக்கு ஒரு துறை; செந்தமிழ் சொற்பொருளியல் அகர முதலி; உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அதோடு உலகத் தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழ்ப் பல்கலைக் கழகம் இப்படி எத்தனையோ அமைப்புகளை வைத்திருக்கிறோம். ஆனால் எந்தக் காரணத்தாலோ இதில் தமிழ்ப் பண்பாட்டு மையம் விடப்பட்டிருக்கிறது. கொள்கைக் குறிப்பில் எங்கேயும் அதைப்பற்றி ஒன்றையும் காணோம். ஏதோ ஒரு நேரத்தில் நான் அதைப்பற்றி இந்த அவையில் பேசினேன் என்பதற்காக-உண்மைகள் வெளிவந்துவிட்ட காரணத்திற்காக அதன் அதிகாரிகள் மாற்றப்பட்டார்களோ அல்லது வேறு காரணத்திற்காக மாற்றப்பட்டார்களோ எனக்குத் தெரியாது. இந்தத் தகவல்கள் எப்படி

[திரு. க. இராமமூர்த்தி] [1981 ஏப்ரல் 28

உறுப்பினர்களுக்குக் கிடைத்தது என்று அரசு அக்கறை கொண்டு விசாரிக்கலாம். அந்த வகையில் அரசு எண்ணக்கூடாது என்று நான் சொல்ல முன்வரவில்லை. காரணம் அது அரசின் உரிமை. எனினும் அந்தப் போக்கில் மட்டும் இந்தப் பிரச்சினையை அணுகாமல், சொல்லப்பட்ட கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகளை நீக்க இந்தத் துறை எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று தெரிவித்தால், நலமாக இருக்கும். ஆக, இந்தக் கொள்கைக் குறிப்பில் தமிழ்ப் பண்பாட்டு மையம்பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. அங்கே பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. பலருக்கு நியாயமற்ற முறையில் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. பலர் பெரிய பெரிய சம்பளத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் நீதிமன்றத்தாலேயே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. பல முறைகள்

(முற்பகல் 11-50)

அந்தத் தகவல்கள் எல்லாம் வந்ததாகவும் சொன்னார்கள். அவர்கள் முறைகேடாக அதிகாரத்தைப் பயன்படுத்தினார்கள், அவர்கள் கீழே பணி செய்கின்ற சிப்பந்திகளை வீட்டிற்கு அனுப்பினார்கள் என்றும் ஏதேதோ செய்தார்கள் என்றும் சொன்னார்கள். தனியாகவே பொருள்களை வாங்கினார்கள். குழுவை வைத்துக்கொண்டு வாங்க வேண்டுமென்ற கட்டாயம், சட்டம் இருந்தும்கூட, அதையும் மீறி அவர்கள் செயல்பட்டிருக்கிறார்கள். அப்படி வாங்கப்பட்ட பொருள்களை எங்கே வைத்திருக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியாமல் இருக்கின்றது. அது எல்லாம் என்னவாயிற்று என்று இந்த அவையிலே சொல்ல வேண்டும். அந்தத் துறையிலே சில அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. அந்த அதிகாரி என்ன தவறுகளைச் செய்திருந்தார். அவர் என்ன ஆனார் என்பது தெரியவில்லை. இந்தத் தவறுகள் செய்திருக்கிறார் என்று சுட்டிக்காட்டினோம். அது சரியாக இருந்தது என்றால், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? அந்தப் பொருள்களை மீட்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்தது ? அந்தப் பணம் வீணாயிற்றே, அதன் கதி என்ன ? இந்தச் சட்டத்தை மீறினார்களே, அதனுடைய நிலைமை என்ன ? அதனாலே அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம், லாபம் என்ன ? தமிழ் பண்பாட்டுக் கழகம் தமிழ் வளர்ப்பதற்காக இப்படிப்பட்ட சிறப்பான பணி ஆற்றியிருக்கிறது என்ற தகவல்களையெல்லாம் தரவேண்டாமா என்பதை இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டுவரவேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

கொள்கிறேன். இதையெல்லாம் நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக்



1981 ஏப்ரல் 28] [திரு. க. இராமமூர்த்தி]

அதோடு மட்டுமல்ல, கல்விக்காக நாம் பலவற்றைச் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் பள்ளிக்கூடங்கள் இருக்கின்ற இடங்களைப் பொறுத்த வரையில், எவ்வளவு பொறுப்பற்ற காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இந்த அவையிலேயே கொண்டு வர விரும்புகிறேன். சென்னை தியாகராய நகரில், ஹோலி என்ஜல்ஸ் பள்ளிக்கு (Holy Angels Convent) எதிரிலே ஒரு கட்டிடம் கட்டப்படுகிறது. சினிமா கொட்டகை கட்டுகிறார்கள். இந்த கான்வென்ட் கிட்டத்தட்ட 46 ஆண்டுக் காலமாக இதே இடத்திலே இருந்துகொண்டிருக்கிறது. அந்த கான்வென்டிலே 3 வயது முதல் 15 வயது வரையுள்ள பெண் குழந்தைகள் படிக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடத்திற்கு எதிராகவே இன்றைக்கு ஒரு சினிமா கொட்டகையைக் கட்டுவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அதை வேகவேகமாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு நிலையை வளர்த்துக்கொண்டு போனால், கல்விக்கூடங்களுக்கு எப்படி பாதுகாப்பு இருக்கும், கல்வியின் தரம் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். சினிமா கொட்டகைகள் வரவேண்டியது. ஆனால் பள்ளிக்கூடங்களுக்கு எதிரில்தானா அவைகளைக் கட்ட வேண்டும் ? அந்தக் கட்டிடம் வேறு எந்தத் துறைகளாலும் தடுக்கப்பட முடியாத அளவுக்கு வேகமாகக் கட்டப்படுகிறது. கல்வித் துறைக்கு எதிராக மற்ற துறைகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனவே என்பதை மறந்துவிடுவதற்கில்லை. இதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அடுத்து, மாண்புமிகு அங்கத்தினர்கள் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலே, இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் விஷயத்தில் பல ஆண்டுகளாக முடிவு அறிவிக்கப்படாமல் இருந்த ஒரு பிரச்சினையில் முடிவை அமைச்சர் அறிவித்தார்கள். அந்தப் பிரச்சினை "ஏ" பிரிவு, "பி" பிரிவு ஆசிரியர்கள் பற்றியது. என்னாலே அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதிலே ஒன்று. சிலருக்குச் சில குறைபாடுகள் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். சுப்ரீம் கோர்ட் வரை சென்று அதிலேகூட சில சிபாரிசினைச் செய்திருக்கிறார்கள் என்றும் சொல்கின்றார்கள். அரசு தேவையானால் அதைப் பற்றி ஆசிரியர்களுடன் கலந்து பேசி அவர்களுடைய குறைகளைக் களைய வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதையெல்லாம் அரசு நிறைவேற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் பதவிகளை அதிகரிப்பது என்ற நேரத்திலே பலருக்கு அந்த உத்தரவுகள், தகவல்கள் எல்லாம் போய்ச் சேருவதற்குக் காலதாமதம் ஆகிறது என்று சொல்கின்றார்கள். அந்த உத்தரவுகள் உடனடியாகப் போய்ச் சேரு கின்ற அளவுக்கு, தேவையான அளவுக்கு பணியாளர்களை, அலுவலர்களை அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறையிலே ஓரள வுக்கு, மகிழ்ச்சி தரக்கூடிய அளவிலே அதனுடைய செயலாற்றும் திறமை வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஆனால் கல்விக் கொள்கையினைப் பொறுத்த வரையிலே, அதைப்பற்றி மீண்டும் பரிசீலிக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முழுக்க முழுக்க தமிழிலேதான் படிக்க வேண்டும் என்று இருக்க வேண்டும். ஆங்கிலத் திலேயும் பழக்கம் இருக்க வேண்டும். பணம் இருப்பவர்கள் படிக்கிறார்கள். அப்படிப் படிப்பவர்களுக்கு மட்டுமே பதவிகள் காத்துக் கொண்டிருக்கின்றன என்ற முறையை உருவாக்குவதை மாற்ற வேண்டும். கல்வியிலே நாம் பின் தங்கியிருக்கின்ற நிலைமைகளை மாற்ற வேண்டும். இந்தியாவிலே மற்ற மாநிலங்களோடு ஒருசேர தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய நிலையை நாம் உருவாக்க வேண்டும். ஆகவே கல்விக் கொள்கையை நாம் மீண்டும் பரிசீலிக்க வேண்டும்.

கல்லூரிகளைப் பொறுத்த வரையிலே, இன்றைக்கு ஓரளவுக்கு தேவையைப் பொறுத்த அளவுக்கு ஆசிரியர்கள் மாணவர்கள் வந்திருக்கிறார்கள். கல்லூரி யிலே ஆசிரியர்கள் அதிகமாக இருக்கின்ற நிலைமையிலே, எவ்வளவு மாண வர்கள் வந்தாலும் சேர்த்துக்கொண்டு விடுகிறார்கள். கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களின் தரத்தையும் உயர்த்த வேண்டும். அங்கே இருக்கின்ற ஆசிரி யர்கள், பிரின்சிபால், கல்வித்துறை உயர்தர அதிகாரிகள் எல்லோருக்கும் முழுமையான அதிகாரத்தைத் தர வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பணிக்காலத்திலேயே கல்வியை மிகச் சிறப்பான நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும். அதனுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்ற உணர்வோடு செயலாற்ற வேண்டும். அவருடைய பதவிக்காலம் முடிவதற்குள் நல்ல செயல்திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் இலவசக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இன்று அந்த இலவசக் கல்வியினால் கல்வியின் தரம் தாழ்ந்து போயிருக்கிறது என்ற பேச்சு இருக்கிறது. இலவசக் கல்விக்கு எதிரான பிரச்சாரத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை முறியடிக் கின்ற வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை எடுக்க



வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டுமென்று, கேட்டு, அமைச்சர் அவர்களைப் பாராட்டி அமைகிறேன். வணக்கம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, "On a point of clarification" மாண்புமிகு அங்கத்தினர்கள் திருவாளர்கள் தாமோதரன், டாக்டர் சனார்த்தனம் போன்ற அங்கத்தினர்கள் எல்லாம் கிட்டத்தட்ட ஒரேமாதிரியான கருத்துக்களைச் சொன்னார்கள். இங்கே பேசும்போது அங்கத்தினர் ஒருவர் உள்ளாட்சித் துறையிலே உள்ள ஆசிரி யர்கள் கல்விப் பணியைச் சரியாகச் செய்யாமல் இருக்கிறார்கள், அவர்கள் பல சலுகைகளைக் கேட்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற் காகக் கோரிக்கைகளை வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள்.

திரு. க. இராமமூர்த்தி: I stand by what I said என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : உள்ளாட்சித் துறை ஆசிரியர்கள் சார்பில் நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்ற அளவில் சொல்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: நான் பேசுகின்றபோது என்னுடைய கருத்துக் களைச் சொன்னேன். இப்போது அதைப்பற்றி முடிவு சொல்ல முடியாது. இரண்டு ஆண்டுகள் கழித்து முடிவு சொல்லலாம்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டு கல்வி மானியத்திற்காக 249 கோடி ரூபாய்க்கு கல்வித் துறைக்கு செலவுக்குக் கோருகிற நேரத்தில், தமிழகத்தில் கல்வி எந்த அளவுக்கு வளர்க்கப்பட்டிருக்கிறது, கல்விக்கு என்னென்ன முறையில் என்னென்ன நிலையில் பணி செய்யப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றிய விளக்கம் எல்லாம் கல்விக் கொள்கைக் குறிப்பில் தரப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்கைக் குறிப் பைத் தந்த அமைச்சர் அவர்கள் ஒரு ஆசிரியராக இருந்து, இன்று அமைச்ச ராகப் பணி புரிந்து, கல்வித் துறையை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற ஒரு கல்வியாளர் என்ற நிலையில், இந்தக் கொள்கைக் குறிப்பை நமக்குத் தந்திருப்பதால், நான் உண்மையிலேயே அவரைப் பாராட்டிக்கொள்கிறேன். எல்லா மதிப்பீடுகளுடைய விளைவையும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். விவசாயி ஒருவன் நல்ல முறையிலே

உழுது, நல்ல முறையில் பயிரிட்டு, நல்ல முறையிலே விளைச்சலை எடுத்தான் என்றால், அது பாராட்டக்கூடிய அளவில் இருக்கும். அது நல்ல முயற்சி என்று சொல்லலாம். அதை நாம் பாராட்டவும் வேண்டும். கடைசியாக அவன் அறுவடை செய்யும்போது, எவ்வளவு நெல், எவ்வளவு மூட்டைகள் அறுவடை செய்தான் என்பதைத்தான் பார்க்க வேண்டும். அதிலேதான் அவனுடைய வெற்றி அமைந்திருக்கிறது. அப்படி அறுவடை செய்ததற்கு அவன் காரணங்கள் சொல்கிறான். அதற்கு பல காரணங்கள் சொல்லலாம். எந்தத் துறையில் வெற்றிகரமாகக் காரியங்கள் நடந்துவிட்டாலும், அதை நாம் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் பாதிக்கின்ற அளவுக்கு ஆகிவிட்டால், தோல்வி அடைந்துவிட்டால், அந்தத் தோல்விக்குக் காரணம் யார் என்று கண்டுபிடித்து அவர்களைக் கண்டிக்கிறோம். அதற்கு ஒரு மன்னிப்பும் கொடுக்க வேண்டியிருக்கிறது. அது ஒரு வழக்கமாக இருக்கிறது.

(நண்பகல் 12-00)

கல்வியைப்பற்றி 1981-லே பேசிக் கொண்டிருக்கிறோம். 2000-வது ஆண்டுக்கு மேற்பட்டு இந்தச் சமுதாயம் எப்படி இருக்கப் போகிறது என்பதைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைய கல்லூரிகளிலும் மேல் நிலைப் பள்ளிகளிலும் எந்த விதத்தில் நிலைமையை உருவாக்குகிறோமோ அதுதான் 20, 25 ஆண்டுகளுக்குப் பிறகு பிரதிபலிக்கப் போகிறது. இப்போது எந்த முறையில் நாடு பிரதிபலித்துக்கொண்டிருக்கிறதோ அதற்குக் காரணமானவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்னால் கல்வி கற்பித்தவர்கள், கல்விக் கொள்கையை உருவாக்கியவர்கள் என்பதை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலையில் இருக்கிறோம். நம்முடைய கொள்கையின் வெற்றி தோல்வியெல்லாம் மாணவர்களுடைய கல்வித் தரம் எப்படி அமைந்திருக்கிறது, எப்படி அவர்கள் வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள், எப்படி வாழ்கிறார்கள் என்பதில்தான் அமைந்திருக்கிறது. எனவே, இதை நாம் ஆராய வேண்டிய கோணம், ஆரம்பக் கல்வி, நடுநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி, இவைகளெல்லாம் தொன்று தொட்டு வருகிற முறை, அதிலே சிற்சில மாற்றங்களைச் செய்து வெற்றிக்கும் தோல்விக்கும் இடையிலே நாம் ஊசலாடிக்கொண்டிருக்கிறோம். ஆனால், கல்வித் துறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்ியது மேல் நிலைப் பள்ளிகளைக் கொண்டு வந்ததுதான். இதற்கு முன்னால்கூட இதை நான் சொல்லியிருக்கிறேன். நமது கல்வி அமைச்சரவர்களைத் தவிர வேறு ஒருவர் கல்வியமைச்சராக இருந்தால், மேல் நிலைக் கல்வியைக் கொண்டு வரும் காலத்தில் இருந்த குழப்பத்தில், அது கல்லூரிக்கா அல்லது பள்ளிகளுக்கா என்ற நிலை ஏற்பட்டபோது, கல்லூரிக்குச் செல்லும் நிலைதான் கூடுதலாக இருந்திருக்கும். அறிஞர்கள்கூட அங்கேதான் வைக்க வேண்டுமென்று



சொன்னார்கள். ஆனால் அதில் தெளிவாக, உறுதியாக இருந்து, மேல் நிலை வகுப்புகளை பள்ளிகளுக்குக் கொண்டு சேர்த்த பெருமை நம்முடைய கல்வியமைச்சரவர்களுக்கு உண்டு. அது இன்றைக்குப் பரவலாக்கப்பட்டு கிராமங்களிலும் அந்தக் கல்வி வசதி கிடைக்கிறது. அந்தப் பெருமையோடு நின்றுவிட்டு அதையே பாராட்டிக்கொண்டு 10 ஆண்டுகளுக்கு அதையே சொல்லிக் கொண்டிருந்தால் பலனில்லை. அந்தக் கல்வி சிறப்பாக அமைந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். மேல்நிலை வகுப்பு தொடங்கும்வரை கல்வியிலே இரண்டு முறையைப் பார்க்க முடிகிறது. கோத்தாரிக் கமிஷனின் அறிக்கையின்படி, இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. நம்முடைய இந்தியக் கல்விக் கொள்கையில், சுதந்திரம் பெறுவதற்கு முன்பு 1925-லிருந்து இதைப்பற்றி ஆராய்ந்து பல அறிக்கைகள் வந்திருந்தாலும், 1966-67-லே அமைக்கப்பட்ட கோத்தாரிக் கமிஷன் ஒரு சிறந்த கமிஷனாகச் செயல்பட்டது. அதில் இந்திய நிபுணர்கள் 9 பேர்கள் இருந்தார்கள். வெளிநாட்டு நிபுணர்களும் இருந்தார்கள். அமெரிக்காவிலிருந்து ஒருவர், இங்கிலாந்திலிருந்து ஒருவர், பிரான்சிலிருந்து ஒருவர், ரஷ்யாவிலிருந்து ஒருவர், ஜப்பானிலிருந்து ஒருவர் என்று பல வெளிநாடுகளைச் சேர்ந்த கல்வி நிபுணர்கள் பல முறை கூடி ஆராய்ந்து கடைசியில் இந்தக் கருத்து தரப்பட்டது. அதில் அமெரிக்காவில் உள்ள கல்வித் திட்டம்—டெய்லர்ட் கரிக்குலம்; ரஷ்யாவின் டைவர்சிபைட் கரிக்குலம்—கல்வியைப் பல்வேறு ஸ்டிரீம்கள்பற்றி ஆய்வு செய்திருக்கிறார்கள். அமெரிக்காவின் ‘ டெய்லர்ட் ’ என்று சொல்லும்பொழுது உடம்புக்கு எந்தச் சட்டை பொருந்துகிறதோ, அப்படி தைத்துப் போட்டுக் கொள்ளலாம் என்ற முறையில் எந்த மாணவர் எதை விரும்புகிறாரோ, அதில் சேரலாம். தமிழ்நாட்டில் ‘ செகண்டரி எடுகேஷன் போர்டு ’ வைத்து, ஒரு டைரக்டரை நியமித்து, பாடத் திட்டங்களை வகுத்து எல்லா ஊர்களிலும் கல்வியளிக்கிறோம். அமெரிக்காவில் ஒரு ஊரில் 5 பள்ளிகள் இருந்தால், 5 பள்ளிகளிலும் 5 கரிகுலம் இருக்கும். எந்தப் பாடத் திட்டத்தை மாணவன் விரும்புகின்றானோ அந்தப் பாடத் திட்டம் உள்ள பள்ளியில் போய்ச் சேரலாம். அங்கே அவனுக்கு வேண்டிய கல்வி பெற்று வருகிறான். இங்கே பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் பி.ஏ. ஸ்டாண்டர்ட் தேர்வு வைத்திருக்கிறோம். பி.ஏ. பாஸ் செய்தவர்கள் ‘ அப்ளை ’ பண்ணுங்கள் என்று சொல்லுகிறார்கள். அங்கே 11 வருடப் படிப்பு, 12 வருடப் படிப்பு என்று சொல்லுவார்கள். தேர்ந்தெடுக்கும் ஸ்தாபனங்கள் எல்லாம் இருக்கின்றன. எப்படிப்பட்டவர்கள் தேவையோ அதற்குத் தகுந்தாற்போல் தேர்வு நடத்தி எடுக்கிறார்கள். பாஸ், பெயில் என்பதுபற்றிக் கவலையில்லை. அமெரிக்காவில் ஒரு தொழிற்சாலையை நான் நடத்துகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு இப்படிப்பட்ட மேனேஜர் வேண்டும்,

8 கிளார்க்குகள் வேண்டும், செக்யூரிட்டி ஆபீசர் வேண்டுமென்று நம்முடைய தேவையைச் சொல்லி விட்டால், அவர்கள் அதற்கான பிலை வாங்கிக்கொண்டு, 'டெஸ்டு' வைத்து 'இண்டர்வியூ' நடத்தி தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். இது ஒரு முறை.

ரஷ்யாவில் எட்டாம் வகுப்போடு பொதுக் கல்வியை நிறுத்திவிடுகிறார்கள். அந்த எட்டு ஆண்டுகளிலேயே அவர்களுடைய டேஸ்டைக் கண்டுபிடித்து, பல்வேறு தொழிற் பிரிவுகளுக்கு அவர்களை அனுப்பிவிடுகிறார்கள். ரஷ்யாவிலுள்ள ஆட்சி அமைப்பு முறையில் அங்கு பிறந்தவர்கள் அத்தனை பேருக்கும் பாதுகாப்பு, உணவு, இருப்பிடம், வேலை எல்லாம் கிடைக்கும் நிலை இருந்தாலும், தொழிற் பிரிவில் யாரையெல்லாம் சேர்த்துவிட்டார்களோ அவர்களுக்கெல்லாம் அதே தொழிலில் வேலை பார்க்கும் நிலைமையை ஏற்படுத்துகிறார்கள். மேல் நிலைக் கல்வி வகுப்புகளை இந்தப் பின்னணியை வைத்துக்கொண்டு நாம் ஆராய வேண்டும். சுமார் 1,243 பள்ளிகளிலே மேல்நிலை வகுப்புகளைக் கொண்டு வந்திருக்கிறோம். 2 ஆண்டுகள் வகுப்புகள் முடித்து ஒரு முறை தேர்வு எழுதிவிட்டார்கள். இரண்டாம் முறை இப்போது தேர்வு எழுதியிருக்கிறார்கள். அரசு தந்துள்ள புள்ளி விவரங்களில் முதலாண்டு 81,978 மாணவர்கள் தொழில் பிரிவில் படித்திருக்கிறார்கள். மொத்தம் 2.58 லட்சம் மாணவர்கள் படிக்கிறார்கள். அதில் 31 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் தொழில் பிரிவில் படித்திருக்கிறார்கள். இரண்டாம் வருடத்தில் 25,000 பேர்கள் தொழில் பிரிவில் படித்திருக்கிறார்கள். 1979-80-ல் 2½ லட்சம் மாணவர்களில் 31,000 பேர்கள் தொழில் பிரிவில் படித்திருக்கிறார்கள். இரண்டாம் ஆண்டுக்கு அவர்கள் வரும்போது 25,000 பேர்கள்தான் இருக்கிறார்கள். 6,000 பேர்களைக் காணவில்லை. ஏனென்று தெரியவில்லை. தேர்வில் வெற்றி பெற்றவர்கள் அதே தொழிலில் அமர்ந்துவிட்டார்களா என்று பார்த்து, அவர்கள் அதே தொழிலில் அமர்ந்திருந்தால், மேல் நிலைக் கல்வி கொண்டு வந்து, அமுல் நடத்தியதில் வெற்றி கண்டிருக்கிறோமென்று பொருள். விவசாயி அவன் செய்தவற்றைச் சொல்லும்போது, அதாவது இரவு 12 மணிவரை தண்ணீர் பாய்ச்சினேன் என்று சொல்லும்போது, 500 அடிக்குக் கீழேயிருந்து தண்ணீர் எடுத்திருக்கிறார் என்று பாராட்டினாலும், அறுவடைக்குப் பிறகு 5 மூட்டைதான் கிடைத்தது என்று அவன் சொல்லும்போது அவனைப் பாராட்ட முடியாது. தொழிற் கல்வி கொண்டு வந்ததன் நோக்கம், மாணவர்கள் வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் கியூவில் நிற்காமல், அவர்களே ஒரு தொழில் பார்த்து, வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமென்பதுதான். அந்த நோக்கத்தோடு அமல்படுத்துகிறோம். தொழிற் பிரிவில் படிக்கும் 31 ஆயிரம் மாணவர்களில்



பாதிக்கு மேல் காமர்ஸ் பிரிவில் படிக்கிறார்கள். எனவே முழுக்க முழுக்கத் தொழிற்பிரிவில் படிக்கிறவர்கள் 31 ஆயிரத்திலும் 50 சதவிகிதம்தான். அவர்களுடைய நிலை எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இதில் ஒரு பிரிவைப்பற்றி மட்டும் சொல்கிறேன். தொழிற் பிரிவுபற்றி அரசாங்க கெஜட்டில் என்னென்ன பாடங்கள் நடத்துகிறார்கள் என்ற விவரம் 25-4-1978-ல் வெளியிட்டிருக்கிறார்கள். விவசாயத்தில் 14 பிரிவுகள், ஹோம் சையன்சில் 9 பிரிவுகள், வாணிபத் தொழிலியல் 9 பிரிவுகள், இன்ஜினியரிங் அன்ட் டெக்னாலஜியில் 6 பிரிவுகள் இப்படி பல பிரிவுகளைச் சொல்லியிருக்கிறார்கள். தொழில் நுட்பப் பிரிவில் 'மெஷினிஸ்ட்' என்பது ஒரு பிரிவு. மெஷினிஸ்ட் கோர்சை இரண்டு ஆண்டுகள் படித்த பிறகு, அந்த மாணவனுடைய நிலை என்ன என்பது, இப்போது இருக்கக்கூடிய நிலையை வைத்து ஆராய்ந்து பார்த்தால் தெரியும். அவர்களே சொல்லியிருக்கிறார்கள், ஐ.டி.ஐ. படித்த மெஷினிஸ்டைவிட ஒரு தரம் உயர்த்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள், பாலிடெக்னிக்கில் படித்தவரைவிட ஒரு தரம் குறைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

The persons undergoing these courses should be placed one level higher than I.T.I. trained machinists but below the level of Engineering Diploma holder.

என்று வைத்திருக்கிறார்கள். மெஷினிஸ்ட் டிரேடில் தேர்ச்சி பெற்ற அத்தனை பேர்களும் இரண்டாம் ஆண்டு பாலிடெக்னிக் டிப்ளமா கோர்சில் சேரலாம். முதல் வருஷம் டிப்ளமா கோர்சில் சேர்க்க மாட்டார்கள். பாலிடெக்னிக் ஐ.டி.ஐ-ல் படித்துவந்த மெஷினிஸ்ட் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் டெக்னிகல் டிரேடில் சேர்க்க அனுமதிக்கப்படுகிறார். ஆனால் இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இன்று வரை அவர்கள் அங்கீகரிக்கப்படவில்லை.

(பிற்பகல் 12-10)

எம்பிளாய்மென்டு எக்ஸ்சேஞ்சுக்குப் போனால் நீங்கள் ஜெனரல் பூலில்தான் பதிவு செய்ய வேண்டுமென்றும், அதற்காக தனி ஜி.ஓ. இல்லையென்றும் சொல்லி மறுக்கிறார்கள். ஏதோ ஆரம்பித்து விட்டோம். ரஷ்ய நாட்டினுடைய தத்துவத்தை ஏற்று இந்தத் தொழில் பிரிவை வைத்திருக்கிறோம். ஆனால் கொண்டு வந்ததற்குப் பின்னால் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு இப்போது பாதுகாப்பு இல்லை. அவர்களுடைய பெயர்களைப் பதிவு செய்யவே அங்கீகரிக்கவில்லை. ஐ.டி.ஐ. படித்து, மெஷினிஸ்ட் கோர்ஸ் பாஸ் ஆனால், அவர்கள் எந்த ஒரு பேக்டரிக்கும் சென்று அப்ரன்டிஸ் பயிற்சியைப் பெற முடியும். இவர்களுக்கு அதற்குரிய வாய்ப்பு இல்லை.

அந்தந்த இன்ஸ்ட்டிட்யூஷன் மூலம் வர வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்குரிய ஜி.ஓ.-வும் இல்லை. இப்படிப்பட்ட நிலையிலே அவர்கள் தெருவிலே நிற்கிறார்கள். பாலிடெக்னிக் இரண்டாவது வகுப்பில் சென்று சேருங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அப்படியும் வாய்ப்பு இல்லை. தூத்துக்குடியில் இரண்டாவது வகுப்பில் இரண்டே இரண்டு மாணவர்கள்தான் அவ்வாறு வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். முதல் வருடம் செல்ல வாய்ப்பு கிடைப்பதில்லை. இரண்டாவது வருடமும் அனைவருக்கும் வாய்ப்பு அளிப்பதில்லை. இந்நிலையில் என்னிடம் வந்து அவர்கள் முறையிட்டார்கள். பி.எஸ்ஸி. மேத்சில் சேர முன்வந்தால், மேத்ஸ், பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி எடுத்துப் படித்திருந்தால் சேருங்கள்; இல்லாவிட்டால் ஹிஸ்டரி வகுப்பில் சேருங்கள் என்று சொல்லியதன்பேரில், அனைவரும் ஹிஸ்டரி வகுப்பில் சேர்ந்திருக்கிறார்கள். மேல் நிலைப் பள்ளிகளில் தொழில் நுட்ப அடிப்படையில் வகுப்புகளை ஆரம்பித்ததன் விளைவாக பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். பலர் ஹிஸ்ட்டரி வகுப்பில் சேர்ந்து படிக்கிறார்கள். அதற்காக வேண்டி இவ்வளவு திட்டங்களைப் போட்டு தொழில் பிரிவுகளைத் தொடங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. காமர்ஸ் பிரிவில் சேர்ந்த 50 சதவிகித மாணவர்களைத் தவிர மற்ற அனைவரையும் நாமே 'குவோசாக வாச்' பண்ணி அவர்களை எங்கே சேர்க்க வேண்டுமோ அங்கே சேர்க்காமல் விட்டு விட்டால் இத்திட்டம் தோல்வியுறும். தொழில் பிரிவில் மெஷினிஸ்ட், டெக்னாலஜி போன்று எல்லாப் பிரிவுகளையும் வைத்திருக்கிறோம். ஆனால் பயிற்றுனர்களுக்கு 150 ரூபாய் தான் சம்பளம் தருகிறோம். எங்கள் ஊரில் கையாள் என்று சொல்லுவார்கள், சென்னையில் சித்தாள் என்று சொல்கிறார்கள். இந்த சித்தாளுக்கு தினசரிச் சம்பளம் 10 ரூபாய்க்கு மேல் இருக்கிறது. அது போல் கொத்தனாருக்கு தினசரி 30 ரூபாய்க்கு மேல் சம்பளம் இருக்கிறது. ஆனால் இந்தத் தொழில் பிரிவு மாணவர்களுக்கு தொழில் கல்வி சொல்லிக் கொடுக்கின்ற ஆசிரியர்களுக்கு அளிப்பது 150 ரூபாய் மாதச் சம்பளம். ராஜபாளையத்தில் 'டெக்ஸ்டைல் கோர்ஸ்' வைத்திருக்கிறோம். 150 ரூபாய் சம்பளத்தைக் கொடுத்து டெக்னிக்கல் அசிஸ்டெண்ட்களிடம் சொல்லிக்கொடுக்க வா என்று சொன்னால் அவன் அப்படி முன் வருவானா ? என்றைக்காவது உன் இஷ்டம்போல் வந்து சொல்லிக்கொடு என்று சொன்னால் தான், ஏற்றுக்கொள்வான். அப்படியும் வாரத்திற்கு 2 நாள் சொல்லிக்கொடுக்க வரமாட்டார்கள், மாதத்திற்கு 2 நாள் தான் சொல்லிக்



கொடுக்க வருவார்கள். தகுதி வாய்ந்த ஆசிரியர்களைப் போட்டு அவர்களுக்கு நல்ல ஊதியத்தையும் வழங்கி, தரமான தொழில் நுட்ப மாணவர்களை அவர்கள் உருவாக்க வேண்டும். முன்பு அப்படி அரசு செய்யாவிட்டாலும்கூட, இனிமேலாவது அப்படிச் செய்ய வேண்டும். பகுதி நேர ஆசிரியர்களாக அவர்களை வைத்திருந்தால், குறைந்தது 300 ரூபாயாவது கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால், ஒரே இடத்தில் பக்கத்தில் இருக்கக்கூடிய 2 அல்லது 3 பள்ளிக் கூடங்களை இணைத்து அவர்கள் 2 அல்லது 3 பள்ளிக் கூடங்களை கவனிக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டும். மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தை இவர்களுக்கும் கொடுக்கலாம். அப்படிக் கொடுத்து விட்டு வெகிக்கிளும் கொடுக்கலாம். அல்லது அலவன்ஸ் கொடுக்கலாம். இதே சூழ்நிலையில் அவர்களை வைத்துக்கொண்டு இது குறித்து பாராட்டிப் பேசுவது நம்மை நாமே பாராட்டுவதாகத் தான் அர்த்தம். 'டெக்ஸ்டைல் கோர்ஸ்' என்று எடுத்துக்கொண்டால், நாங்கள் ராஜபாளையத்தில், கோயம்புத்தூரில் டெக்ஸ்டைல் டெக்னாலஜி வைத்திருக்கிறோம் என்று சொல்வதும் நம்மை நாமே ஏமாற்றுவதாகத்தான் இருக்கும். இன்றைக்கு 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் 'பார்ட்-டைம்' ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். தொழில் பிரிவுபற்றி நான் இன்னும் நிறைய தெரிந்து வைத்திருந்தாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைய இதுபற்றி அறிந்து வைத்திருப்பார்கள் என்பதால் இத்துடன் விட்டுவிடுகிறேன்.

அடுத்து, கல்வித் துறையினுடைய பொதுப் பிரிவில் இந்த 31 ஆயிரம் மாணவர்களைத் தவிர, 2½ லட்சம் பேர் பயிலுகிறார்கள். 11-வது வகுப்புப் படிப்பு என்று இருந்ததை 10-வது வகுப்புப் படிப்பு பிளஸ் 2 என்று பிரித்து விட்டோம். 11-வது வகுப்பில் படித்ததை விட 10-வது வகுப்பில் விஞ்ஞானம், கணிதம் போன்றவற்றில் விஞ்சும் அளவு பாடம் இருக்கிறது. அதேபோல் பிளஸ் 1-ல் பழைய பி.யு.சி.-யைவிட அதிகமாக பாடச் சுமை இருக்கிறது. ஆனாலும் படித்து வருகிற மாணவர்கள் தரமான மாணவர்களாக இருக்கிறார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி எல்லாம். 1970-ம் ஆண்டில் படித்து பாஸ் பண்ணியவனுடைய தரத்தை விட 1960-ல் படித்து பாஸ் பண்ணியவனுடைய தரம்தான் உயர்ந்து இருக்கிறது. ஆகவே மொத்தத்தில் கல்வியின் தரம் வீழ்ச்சியடைந்து கொண்டே போகிறது என்பதையும் ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும். மேல் நிலைக் கல்வியை அமலுக்குக் கொண்டு வந்ததால்தான் இந்த வீழ்ச்சி வந்தது என்பதல்ல. மொத்தத்தில் எந்தப் பாடத் திட்டம் இருந்தாலும், கல்வியின் தரம் குறைந்துகொண்டுதான் வந்திருக்கிறது. கல்வியின் தரம் குறைந்தால், அதற்கு யார் பொறுப்பேற்பது

என்கிற பிரச்சினை எழுந்தது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அதற்கு ஆசிரியர்கள்தான் பொறுப்பேற்க வேண்டுமென்று சொன்னார்கள். பொறுப்பேற்பது என்கிற ஒரு நிலை வருமேயானால், ஆசிரியர்களுக்கும் அதில் பாதிப் பொறுப்பு இருக்கிறது. ஆனால் அந்தப் பாதிப் பொறுப்புகூட ஆசிரியர்களுக்கு இருக்கிறது என்கிற நிலை வரும்போது, அப்படிப்பட்ட நிலை இருக்கிறதா என்பது குறித்து பின்னால் சொல்கிறேன். ஆசிரியர்களுக்கு மாத்திரம் அதில் பொறுப்பு இருக்கிறது என்பது சரியல்ல என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு, கல்வி இலாகாவுக்கு, கல்வி அமைப்புக்கு, கல்வித் துறைக்கு, கல்வி அமைச்சருக்கு எல்லாம் இதில் பொறுப்பு உண்டு. ஆனால் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு சதவிகிதம் பொறுப்பு இருக்கிறது என்பதுபற்றிப் பின்னால் பேசுகிறேன். எல்லோருக்கும் பொறுப்பில் சதவிகிதத்துக்குக்கேற்ப மாறுதல் இருக்கும், அவ்வளவுதான். ஆனால் கல்வியின் தரம் உயர அரசு இன்னும் முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு மேல் நிலைப் பள்ளிகள் நிலை பற்றி நான் ஒன்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அரசுத் துறை சார்பிலும், பஞ்சாயத்து யூனியன் சார்பிலும் நடத்தப்பட்டு வருகிற மொத்த ஆரம்பப் பள்ளிகள் 22,704. ஆனால் தனியார் துறையால் நடத்தப்பட்டு வருகிற ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை 4,934. அடுத்து, நடுநிலைப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால் அரசு சார்பிலும், பஞ்சாயத்து யூனியன் சார்பிலும் நடத்தப்படுபவை 3,692. ஆனால் தனியார் பள்ளிகள் 1966. உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால், அரசாங்கப் பள்ளிகள் மற்றும் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் 1,158. ஆனால் தனியார் பள்ளிகள் 400. அரசாங்கப் பள்ளிகளோடு தனியார் பள்ளிகளை ஒப்பிட்டுப் பார்த்தால், கிட்டத்தட்ட 4-ல் ஒன்று தனியார் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் மேல் நிலைப் பள்ளிகள் இந்த அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் வந்தவை. அதன் எண்ணிக்கை அரசு மற்றும் நகராட்சிப் பள்ளிகள் உட்பட 629. அதே நேரத்தில் தனியார் பள்ளிகள் 540. ஆகவே தனியார் துறைக்கு இதிலே அளவு கடந்து முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது என்பதை நாம் காண முடிகிறது. போன வருடம் இதுபற்றி நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து சுட்டிக் காட்டினேன். அப்போது மேல் நிலைப் பள்ளிகளை நடத்த அரசாங்கத்துக்கு அதிகமான நிதி ஆதாரம் தேவை. அரசாலே அவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது. நல்ல நோக்கத்திலேதான் மேல் நிலைப் பள்ளிகளைக் கொண்டு வந்தோம். அதற்குரிய வசதி வாய்ப்பினைப் பெற்ற தனியார்



முன்வந்தாலும், அவர்கள் மேல் நிலைப் பள்ளிகளை நடத்துவதற்கு அனுமதியளிக்கப்படும் என்று அப்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவருடைய கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் தனியார் துறைக்குக் கொடுப்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்ட கருத்திலே நான் மாறுபாடு கொள்கிறேன். பொதுவாக அவருக்கும் எனக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. இந்த ஒரு விஷயத்திலே மட்டும் தான் மாறுபாடு. அத்தனை தனியார் பள்ளிகளையும் மோசம் என்று சொல்ல வேண்டாம் என்கிறார்கள்.

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்."

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். முன்பெல்லாம் 80 சதவிகிதத் தனியார் பள்ளிகள் நல்லபடியாக இருக்கும். இப்போதெல்லாம் 80 சதவிகிதத் தனியார் பள்ளிகள் தவறு செய்கின்றன என்கிற நிலைக்கு அவை வந்து விட்டன. வியாபார நோக்கத்தோடு அவை செயல்படுகின்றன. அதனால் தான் இந்த 20 சதவிகித நல்ல பள்ளிக்கூடங்களைப்பற்றிக் கூட கவலைப் படாமல் பூராவையும் எடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். மேல் நிலைப் பள்ளிகள் இன்னும் தேவைப்பட்டால் அவற்றை அரசாங்கமே நடத்தலாம். இந்த ஆண்டு வேறு மேல் நிலைப் பள்ளிகள் துவக்கப் போவதில்லையென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொள்கை அறிவிப்பாக அறிவித்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அலக்சாந்தர் போருக்குப் புறப்பட்டு சிந்து நதி தீரம் வரை வந்தான். திரும்பிப் போகும்போது, 'The whole world was destabilised' என்கிற முறையில் சொல்லிக்கொண்டே போனான். இந்த ஆண்டு மேல் நிலைப் பள்ளிகளை 'ஸ்டெபிலைஸ்' பண்ணும் வகையில் நிறுத்தி வைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அரசுத் துறையில் 5 மைல்களுக்குள் மேல் நிலைப் பள்ளிகள் இல்லாத இடங்களில் எல்லாம் இதைத் துவக்குவதற்குத் தடை ஒன்றும் இருக்கக்கூடாது. தனியார் பள்ளிகளுக்கு இத்தகைய ஒரு வாய்ப்பை இனிமேல் கொடுக்கக் கூடாது. பள்ளிகளிலே நூலகங்கள் சரியாக இருக்க வேண்டும். நல்ல புத்தகங்கள் நூலகங்களில் இருக்க வேண்டும். நூலகங்களுக்குச் சென்று மாணவர்கள் இரண்டு நாட்களாவது படித்து, படித்ததைப் புத்தகமாக எழுதி, அதன் மூலம் அவர்கள் எழுதியதற்கு மதிப்பீடு பெறுகிற மாதிரி ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேல் நிலைப்

(பிற்பகல் 12-20)

பள்ளிகளிலே இருக்கும் work load ஐப் பார்த்தால், மிகவும் அதிகமாக இருக்கிறது. இன்னும் ஒரு உதவியாளர் மிகவும் தேவையாக இருக்கிறது. நூலகத்திற்கு நூலகக் கல்வி பயின்ற ஒரு உதவியாளர் தேவை. இவைகள் எல்லாவற்றையும் விட, அரசுப் பள்ளிகளிலே மேல் நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியரின் சம்பள விகிதம் ரூ. 750—1350. கல்வித் துறையிலே இருக்கும் டி.ஈ.ஓ. க்களின் சம்பள விகிதம் ரூ. 750—1350. அங்கெல்லாம் யார் பெரிய ஆள் என்பதுபற்றி அடிக்கடி தகராறு இருக்கிறது. நம்முடைய நாட்டிலே ஒவ்வொருவருக்கும் அந்த மோகம் இருக்கிறது; யார் பெரியவர் என்ற உணர்வு. இந்த உணர்வு இருக்கும், வெளியே காட்டமாட்டார்கள். படித்தவர்களிடம் தான் இது அதிகம். டி.ஈ.ஓ. ஒரு பள்ளிக்குச் சென்றால், 'நீர் இங்கே வரவேண்டிய அவசியம் இல்லை, வந்தால் இருந்து விட்டுப் போவும்', என்ற முறையில் தலைமையாசிரியர்கள் நடந்து கொள்கிறார்கள். இதுபற்றி டைரக்டர் அலுவலகத்திலேயிருந்து ஒரு சர்க்குலர் வந்திருக்கிறது. மேல் நிலைப் பள்ளிகளிலே இருக்கும் தலைமையாசிரியரின் சம்பளத்தை டி.ஈ.ஓ.-க்கள் வாங்கினாலும் அவர் "சுப்பீரியர் ஆஃபீசர்", அவர் வரும்போது எல்லாவிதமான வசதியும் அவருக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று அந்த சர்க்குலரிலே சொல்லியிருக்கிறார்கள். திருக்குறளிலே 'கள் உண்ணாமை' என்ற ஒரு அதிகாரம் இருப்பதனாலேயே, கள் உண்பவர்கள் இருந்தார்கள் என்ற நிலைமை இருப்பது போல, இந்தப் போக்கு தலைமையாசிரியர்களிடத்திலே இருக்கிறது என்பதற்கு இந்த சர்க்குலர் தான் சான்று.

பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், பல்கலைக் கழகங்கள் முதலிலே ஆட்டானமஸ் பாடியாக இருந்தன. இப்போது நாம் அதைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். 'அட்டானமஸ்' ஆக இருப்பதற்குத் தகுதியற்றவர்களாக அவர்கள் தங்களை ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் இருந்தபோது, அது பல்கலைக் கழகம், அட்டானமஸ் பாடி. இப்போது அந்த அட்டானமஸ் தன்மை போய்க்கொண்டே இருக்கிறது. இந்தப் பல்கலைக் கழகங்கள் எல்லாம் நடத்தும் தேர்வுதான் மிகவும் முக்கியம். இந்தத் தேர்விலே நடக்கும் ஊழல்களைப்பற்றிச் சொன்னால் ,இதைவிட என்ன தவறு இருக்க வேண்டும்? பாஸ் ஆக வேண்டியவன் ஃபெயிலாகியிருக்கிறான். என்னுடைய கல்லூரியிலே ஒரு ஆதி திராவிட மாணவன் படித்தான். அவன் ஷெண்பகராமன்புத்தூரைச் சேர்ந்தவன். கான்பூர், டெல்லி போன்ற இடங்களுக்கு என்.சி.சி.யில் சென்று





பரிசு வாங்கி வந்திருக்கிறான். அவன் கடந்த ஆண்டு மார்ச்சில் பரிட்சை எழுதினான். அவனுக்கு ரிசல்ட் வரவே இல்லை. உலகத் தமிழ் மாநாடு நடப்பதற்கு ஒரு 10 நாளைக்கு முன்னாலே அவன் என்னிடம் வந்தான். என்னிடம் வந்து ஒரு கடிதத்தைத் தந்தான். அதிலே அவனுடைய வரலாற்றையெல்லாம் எழுதியிருந்தான். தான் தேர்வு எழுதியதாகவும், அந்தத் தேர்வின் முடிவு வெளிவரவில்லை என்றும், பலமுறை இதுபற்றி பல்கலைக் கழகத்துக்கு எழுதியும் எந்தவிதமான பதிலும் வரவில்லை என்றும், ஆகவே, உலகத் தமிழ் மாநாடு நடக்கின்ற அன்று, அந்த உலகத் தமிழ் மாநாட்டின் வாயிலிலேயே தீ குளிக்கப் போகிறேன் என்றும் எழுதியிருந்தான். அந்த மாநாட்டுக்கு 'சீப் மினிஸ்டர்' அவர்கள் வருகிறார்கள், மற்றும் பிரமுகர்கள் வருகிறார்கள், அப்படிச் செய்தால்தான் பல்கலைக் கழகம் பயப்படும் என்று எழுதியிருந்தான். உடனே நான் கன்ட்ரோலருக்குப் ஃபோன் செய்து விஷயத்தைச் சொன்னேன். விஷயத்தைச் சொல்லி, அவனை அனுப்பிவைத்தேன். இவனுக்கு அங்கே ஒரு பெரிய வரவேற்பு காத்திருந்தது. இவன் அங்கே சென்றவுடன் ஒரு சர்ட்டிபிகேட் கையிலே கொடுத்தார்கள். இப்படி ஏதாவது செய்தால், சர்ட்டிபிகேட் தந்துவிடலாம் என்று சொல்கிறார்கள். I and II Parts எழுதியிருந்தால் III Part pass என்று போட்டு சர்ட்டிபிகேட் கொடுக்கிறார்கள். மூன்று பார்ட்ஸ் எழுதிவிட்டு வந்தால், அவன் தேர்வில் absent என்று result வருகிறது. கேட்டால் கம்ப்யூட்டரில் தவறு ஏற்பட்டுவிட்டது என்று சொல்கிறார்கள். நான் நினைக்கிறேன், கம்ப்யூட்டரிலே தவறு இல்லை. வேண்டுமென்றே தவறாக கம்ப்யூட்டரிலே feed பண்ணுகிறார்கள். கம்ப்யூட்டரை எவ்விதம் இயக்க வேண்டும் என்று படித்து வந்து, அதிலே தக்கவாறு பயிற்சி பெற்றவர்கள் தான் அங்கே இருக்கிறார்கள். கம்ப்யூட்டர் வருவதற்கு முன்பு, வேண்டியவர்கள் என்றால், கொஞ்சம் பணம் வாங்கிவிட்டு பாஸ் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போதெல்லாம் பயந்து பயந்துதான் செய்துகொண்டிருந்தார்கள். அப்போது responsibility fix பண்ண முடிந்தது. இப்போது அவர்கள் தவறு செய்துவிட்டு, தப்புவதற்கு வழி கம்ப்யூட்டர். கம்ப்யூட்டரில் யார் சரியான முறையில் feed பண்ணவில்லையோ அவர்களை உடனடியாக வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இது ஒரு சாதாரண பிரச்சினை அல்ல. 12, 15 வருஷம் படித்துவிட்டு, மிகுந்த வறுமையோடு கஷ்டப்பட்டு, வீட்டை ஒற்றி வைத்துவிட்டு, தாயின் நகையை அடைமானம் வைத்துவிட்டு, ஒருவன் பட்டம் வாங்க வரும்போது அவனுக்கு ஒரு நான்கைந்து மாதம் பட்டம் கிடைக்கவில்லை என்று சொன்னால், அவன் இதற்குள்ளே குண்டைத் தூக்கி நம்முடைய தலையிலே போட்டிருக்க வேண்டும்

போட்டாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன். அந்த அளவுக்கு பல மாணவர்கள் பல இடங்களிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல்கலைக் கழகங்களிலே தேர்விலே கம்ப்யூட்டரைச் சரியாகப் பயன்படுத்த, முறைப் படுத்தத் தெரியாதவர்களை ஏன் வைக்க வேண்டும்? சென்னை பல்கலைக் கழகத்திலே இது படுதோல்வி, மதுரைப் பல்கலைக் கழகத்திலே இது படுதோல்வி, அங்கே இருக்கும் கண்ட்ரோலருக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடிக்கும். அவர் அதைப்பற்றி அதிகமாகச் சிந்திக்காததால் அவருக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை, கன்ட்ரோல் பண்ணிக்கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட நிலையிலே செகன்டரி கல்வித் தேர்விலேகூட கம்ப்யூட்டரைப் புகுத்தியிருக்கிறார்கள். அதனுடைய விளைவு என்ன? போன வருஷம் சீனியராக இருப்பவர்களுக்கெல்லாம் தேர்வு கிடையாது என்று வந்தது, இந்த வருஷம் ஜூனியராக இருப்பவர்களுக்கெல்லாம் தேர்வு கொடுத்திருக்கிறார்கள். இப்படியே செய்தால் அவர்கள் போய் கம்ப்யூட்டரை உடைக்கமாட்டார்கள், கம்ப்யூட்டரை இயக்குபவர்களைத்தான் போய் உதைப்பார்கள். சென்னையிலே இருக்கும் பள்ளிகளிலேயிருந்து, அதாவது நந்தனம், மாம்பலம், கோடம்பாக்கம் போன்ற அரசுப் பள்ளிகளிலேயிருந்து சீனியர் பீப்பிள் தேர்வுப் பணிக்கு அனுப்புவதிலிருந்து தவிர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஜூனியர்கள் விடைத்தாள்களைத் திருத்தும் பணிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அப்படி, பாதிக்கப்பட்டவர்கள் அரசுக்கு மெமோராண்டம் கொடுத்திருக்கிறார்கள். எனக்கும் காப்பி வந்திருக்கிறது. போன வருஷம் சீப் எக்ஸாமினர்களாக இருந்தவர்களை இந்த வருஷம் அசிஸ்டென்ட் எக்ஸாமினர்களாக அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் 23, 25 வருஷம் சர்வீஸ் உள்ளவர்கள். 3 வருஷம் சீப் எக்ஸாமினர்களாக இருக்கலாம். இவைகளையெல்லாம் கேட்டால், இவற்றுக்குக் காரணம் கம்ப்யூட்டர் என்று சொல்கிறார்கள். மேலும் இதுபற்றிய விவரங்களைக் கேட்டால், டி.ஈ.ஓ. க்கள் லிஸ்ட் தரவில்லை என்று சொல்கிறார்கள். கல்வி இலாக்கா செயலிழந்திருப்பதற்கு இதுதான் காரணம். சி.ஈ.ஓ. ஆனாலும், டி.ஈ.ஓ. ஆனாலும், குறிப்பிட்ட காலத்திலே ஒரு தகவல் தரவில்லை என்றால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னொன்று, கல்வித் துறையிலே பணிபுரியும் தலைமையாசிரியர்களிலே ஜூனியரைவிட சீனியர் குறைந்த அளவு சம்பளம் வாங்கக்கூடாது என்று 1978-ல் அரசாணை ஒன்று வெளியிடப்பட்டது. அந்த அரசாணை போடப்பட்டவுடன் 25 ஹெட்மாஸ்டர்கள், அரசுப் பள்ளிகளிலே பணியாற்றுபவர்கள், "நான் சீனியர், எனக்கு ஜூனியர் இன்னார், அவர் இவ்வளவு சம்பளம் வாங்குகிறார், அவரைவிட இவ்வளவு சம்பளம் நான் குறைவாக வாங்குகிறேன், ஆகவே, என்னுடைய சம்பளத்தையும் அவருடைய சம்பளத்துக்கு



ஈடாக ஆக்க வேண்டும்" என்று முறையிட்டார்கள். அந்த முறையீடு கொடுத்த பிறகு, இயக்குநர் அலுவலகத்திலேயிருந்து 27—6—1980-ம் நாளன்று அந்தத் தலைமையாசிரியர்களின் சர்விஸ் ரிஜிஸ்தரை அனுப்ப வேண்டும் என்று சி.ஈ.ஓ. க்களுக்கும், டி.ஈ.ஓ. க்களுக்கும் கடிதம் வந்தது. ஹெட்மாஸ்டர்களைப் பொறுத்தவரையில், அவர்களுடைய சர்வீஸ் ரிஜிஸ்தர் அந்தந்த டி.ஈ.ஓக்களிடம் தான் இருக்கும். அவர்கள் தான் அதை அனுப்ப வேண்டும். 27—6—1980 ஆம் நாளிட்ட கடிதத்திற்கு 4—12—1980-லே ரிமைண்டர் அனுப்பியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, இப்போது 25 ஏப்ரல் வரை 4 பேர்களுடைய சர்வீஸ் ரிஜிஸ்தர்தான் வந்ததே தவிர, மற்றவர்களின் சர்வீஸ் ரிஜிஸ்தர் வரவில்லை. அந்த அளவுக்கு கல்வி இலாக்கா செயலற்றுப் போயிருக்கிறது. அங்கே இருக்கும் டி.ஈ.ஓ. க்கள் சி.ஈ.ஓ. வை சமாளித்தால் போதும், சி.ஈ.ஓ. அங்கே டைரக்டர் வரும்போது அவரைச் சமாளித்தால் போதும் என்ற நிலைமைகள் இருக்கின்றன. அவர்களுடைய அலுவலகத்திலே இருக்கும் அந்த சர்விஸ் ரிஜிஸ்தரைக் கொடுக்கவில்லை என்றால், அவர்கள் மீது டிசிப்ளினரி ஆக்ஷன் எடுக்க வேண்டும். அந்த நிலை இப்போது இல்லை. எதற்காகச் சொல்கிறேன் என்றால், இப்போது கம்ப்யூட்டர் என்ற பெயரைச் சொல்லி பலர் தப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை அப்படி தப்பிக்க விடக்கூடாது.

இப்போது அஞ்சல் வழிப் பாடம் நடத்துகிறோம். பல இடங்களுக்கு 'லெசன்ஸ்' ஒழுங்காகப் போவதில்லை. எழுதியனுப்பப்பட்ட 'ரெஸ்பான்ஸ் ஷீட்' ஒழுங்காகப் போவதில்லை. 'மார்க் ஷீட்' வருவதில்லை. கம்ப்ளைன்ட் செய்தால், 'உனக்கு டிகிரி தானே வேண்டும்' என்று சொல்லி டிகிரி கொடுக்கிறார்கள். இப்படி டிகிரி கொடுத்து வேல்யூ இல்லாத அளவுக்கு பல்கலைக் கழகம் போய்க் கொண்டிருக்கிறது. பல்கலைக் கழகத்தின் சட்டங்களைத் திருத்த வேண்டும். நல்லமுறையில் அவைகளைச் செயல்படுத்தும் அமைப்பு முறையை ஏற்படுத்த வேண்டும். காரைக்குடியிலே ஒரு பல்கலைக் கழகம், திருச்சியிலே ஒரு பல்கலைக் கழகம் ஆரம்பிக்கவிருப்பதிலேயெல்லாம் இந்த நிலைமைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். காரைக்குடியிலே ஒற்றைப் பல்கலைக்கழகம் வரவிருக்கிறது. இந்த ஒற்றைப் பல்கலைக் கழகம் மிகவும் ஆபத்தானது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடிந்து, அதன் பின் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை முடியும் வரையில், அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

**திரு. ம. சங்கரலிங்கம்:** ஒற்றைப் பல்கலைக் கழகம் என்பது நமது மாநிலத்திற்குத் தேவைதானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஒற்றைப் பல்கலைக் கழகம் என்று சொல்லும்போது, ஒரு கல்லூரி, ஒரு பல்கலைக் கழகம் என்று செயல்படுகிற நிலை இருக்கிறது. ஏற்கெனவே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை வைத்துக்கொண்டு பல்வேறு இன்னல்களை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். காரைக்குடியில் அரசு அப்படிப் பட்ட பல்கலைக் கழகம் ஒன்றைக் கொண்டுவர இருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. இது தேவைதானா என்று சிந்திக்க வேண்டும். ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தங்களின் சொத்தில் பெரும்பகுதியைப் போட்டு மூலதனமாக வைத்து ஒற்றைப் பல்கலைக் கழகம் அமைக்க அனுமதித்தால், பிறகு அவர்களுக்கு அதிலே தனிச் சிறப்பு ஏற்படுகிறது. அவர்கள் அதை ஒரு வாணிப நிலையமாகக் கருதிக்கொண்டு செயல்படுகிறார்கள். வாணிபத்தில் பொருளீட்டியவர்கள் இந்தக் கல்வி நிறுவனங்களையும் வாணிப நிறுவனங்களாகச் செயல்படுத்தத் துவங்கிவிடுகிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அத்தகைய பல இன்னல்களையும் தொல்லைகளையும் நாம் கண்டோம். பெரிய மனிதர்கள் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதற்காக, தவறை மறைக்க முயன்றால், அது ஆபத்தைத்தான் உருவாக்கும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், எஞ்சினீயரிங் கல்லூரியில் இடம் பெறுவதற்கு ரூ. 15,000 கொடுக்க வேண்டும் என்பதும் அது எங்கே கொடுக்கப்பட வேண்டும் என்பதும் நமக்கெல்லாம் தெரியும். மாணவர்களைச் சேர்ப்பது என்பது சென்ட்ரல் பூலிலிருந்து நடைபெறுகிறது என்றாலும், கல்லூரியை நடத்துகிறவர்களுக்கு 25 சதவீதம் கோட்டா வைத்திருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது அந்த முறையில்லை. முழுவதும் சென்ட்ரல் பூலிலிருந்துதான் போடப்படுகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அப்படியானால் மிகவும் நல்லது. ஆனால் அந்த வசதி இருக்கிற வரை, அவர்கள் வாங்கிக் கொண்டுதான் இருந்தார்கள். அது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ரெகுலராக இருந்தது. யாரிடம் போக வேண்டும், எங்கே பணம் கொடுக்க வேண்டும் என்று எல்லோருக்கும் தெரிந்திருந்ததால், பலர் அங்கே போய் படித்து வந்தார்கள். அங்கே படித்துவிட்டு வெளியே வருகிற எஞ்சினீயர், பணியில் அமர்ந்த உடனே, காண்ட்ராக்டரைப் பார்த்து கையூட்டு கேட்க ஆரம்பிக்கிறார். கேட்டால், "நான் கல்லூரியில் சேருவதற்கு ரூ. 15,000 கொடுத்தேன்; பாஸ் செய்



வதற்கு 25,000 ரூபாய் கொடுத்தேன், வேலை வாங்குவதற்கு ரூ. 35,000 கொடுத்தேன். இப்படி எனக்கு ஒரு லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. ஆகவே உன்னிடத்தில் கேட்கிறேன்" என்று கூறுகிற நிலை இருக்கிறது. எனவேதான் பல்கலைக் கழகங்களின் சட்டங்களை நல்ல முறையில் நாம் திருத்தியாக வேண்டும் என்று கோருகிறோம்.

பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் ஆசிரியர்களின் சம்பளத்தை யு.ஜி.சி. அளவுக்கு நமது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் மாற்றியமைத்திருக்கிறார்கள். 10 ஆண்டுக் காலம் பணியாற்றிய துணைப் பேராசிரியர்கள் பேராசிரியர்களாக ஊதிய உயர்வு பெறுகிறார்கள். இதற்காக ஆசிரியர்கள் அனைவரும் நன்றியோடு அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறார்கள். தமிழ் நாட்டில் 187 கல்லூரிகள் இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளில் பணியாற்றும் கல்லூரி முதல்வர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் இடையில் உள்ள ஊதிய வித்தியாசம் ரூ. 100 மட்டும்தான். பல இடங்களில் இத்தகைய சிக்கல்கள் எழுகின்றன. அதாவது பலர் பொறுப்பை வகிப்பதற்குத் தட்டிக் கழித்துவிட்டு, ஊதியத்தை மட்டும் பெறுகிற நிலை இதன் காரணமாக எழுந்துள்ளது. நான் இது குறித்து செக்ரட்டரி அவர்களோடுகூட விவாதம் செய்தேன். மேல் நிலைப் பள்ளிகளிலும் மற்றும் உயர் நிலைப் பள்ளிகளிலும் ஆசிரியர்கள் தங்களுக்குத் தலைமை ஆசிரியர் பதவி வேண்டாம் என்று சொல்லிவிட்டு, ஸ்பெஷல் கிரேடு என்று சொல்லப்படும் சிறப்பு நிலை ஊதியம் மட்டும் வழங்கினால் போதும் என்று சொல்லுகிறார்கள். பொறுப்பை ஏற்க மறுத்து விட்டு, அந்தப் பொறுப்புக்குரிய சம்பளத்தை மட்டும் கேட்கிறார்களே என்று துறையில் உள்ளவர்கள் சொன்னார்கள். ஆக, தலைமை ஆசிரியரின் சம்பளம் சிறப்பு நிலை ஆசிரியரின் சம்பளத்திற்குச் சமமாக இருக்கிறது. அதைப் பற்றி இலாக்காவில் உள்ளவர்கள் இம்மாதிரிதான் கூறுகிறார்கள். அதற்கு மேல் அதைப்பற்றி நான் இப்போது கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை. கல்லூரி முதல்வருக்கும், கல்லூரிப் பேராசிரியருக்கும் ஊதியத்தில் 100 ரூபாய் தான் வித்தியாசம் இருக்கிறது. அதிலும் அந்தப் பேராசிரியர் டவுன் பகுதியிலிருந்து வருகிறவராக இருந்தால், அவருக்குக் கிடைக்கும் வீட்டு வாடகைப் படியைச் சேர்த்தால், கல்லூரி முதல்வரைவிட அதிகமாக வாங்கும் நிலை இருக்கும். கல்லூரி முதல்வர்களும் இதைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் முறையிட்டுள்ளார்கள். எந்தத் தேதியிலிருந்து கல்லூரிப் பேராசிரியர்களுக்கும், துணைப் பேராசிரியர்களுக்கும் யு.ஜி.சி. ஸ்கேல் கொடுக்கப்பட்டதோ அதே தேதியிலிருந்து கல்லூரி முதல்வர்களுக்கும் கொடுத்திருக்க வேண்டும். போராடுகிற அளவுக்கு அவர்களின் எண்ணிக்கை இல்லை. இப்போது போராடுகிறவர்களுக்கு மட்டும்தான் சலுகை என்றிருக்கிற

நிலையை நாம் மாற்ற வேண்டும். இந்தக் கல்லூரி முதல்வர்களுக்கு ஊதிய விகிதத்தை மாற்றுவதால் அதிகமாக அரசாங்கத்திற்குச் செலவாகிவிடாது. காரணம் 18? கல்லூரிகளில் 180 கல்லூரிகளில் பணியாற்றும் கல்லூரி முதல்வர்கள் ஏற்கெனவே ரூ. 1,500-க்கு மேல் மாத அடிப்படைச் சம்பளமாகப் பெற்று வருகிறார்கள். எனவே புதிய ஊதிய விகிதத்தில் அவர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கும்போது, அதனால் அரசாங்கத்திற்கு அதிகமான செலவாகாது. வேண்டுமானால் பென்ஷன் வாங்குவதற்குக் கொஞ்சம் உதவியாக இருக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள், இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசும்போது, கல்லூரிகளில் உள்ள மாணவர்களிடையே அதிகமான அளவுக்கு இன்றையதினம் ஜாதிச் சண்டைகளும் கலவரங்களும் நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்டார்கள். இதெல்லாம் கல்லூரி முதல்வர்களுக்குத் தெரியாதா என்ன ? தெரியும். இருந்தும் நமக்கென்ன என்று இருக்கிறார்கள். முன்பெல்லாம் வகுப்பில் சத்தம் கேட்டால், உடனே கல்லூரி முதல்வர் எழுந்துபோய் வகுப்பில் ஏன் சத்தம் வந்தது என்று பார்ப்பார். இப்போது வகுப்பில் சத்தம் கேட்டால், உடனே பேராசிரியரைப் போய்ப் பார்க்கச் சொல்லுகிறார். எனக்கும் அவருக்கும் ரூ. 100 தானே வித்தியாசம். அவரே போய்ப் பார்க்கட்டும் என்று இருந்துவிடுகிறார். பேராசிரியர் என்ன செய்கிறார் என்றால், அந்த வகுப்பிற்கு எந்தத் துணைப் பேராசிரியர் பாடம் நடத்துகிறாரோ அவரைப் போய்ப் பார்க்கச் சொல்லுகிறார். இப்படி ஒருவர் மற்றவரைப் போய்ப் பார்க்கச் சொல்லும் நிலைதான் இருக்கிறது. துணைப் பேராசிரியர் வகுப்பிற்குப் போய் மாணவர்களைப் பார்த்து, இந்தச் சத்தம் போதாது, இன்னும் கொஞ்சம் அதிகமாகச் சத்தம் போடுங்கள் என்று சொல்கிறார். இந்த நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். பொறுப்புக்கு ஏற்ப சம்பளம் வழங்க வேண்டும். பொறுப்புக்கு ஏற்ற அதிகாரமும் கொடுக்க வேண்டும், இல்லையென்றால் பொறுப்பை யாரும் நிர்வகிக்க முடியாது. இல்லையென்றால், அமெரிக்காவில் இருப்பது போல், கல்லூரிகளுக்குச் சுதந்திரம் பரிபூரணமாக அளிக்கப்பட வேண்டும். இன்ன தேதியில் இன்ன விரிவுரையாளர் இன்ன பொருள் குறித்து உரை நிகழ்த்துவார் என்று கால அட்டவணை தயாரித்து வெளியிட்டுவிட்டால், அங்கெல்லாம் இஷ்டப்பட்டால் மட்டும் அந்த வகுப்பிற்குச் சென்றால் போதும். கண்டிப்பாகப் போக வேண்டும் என்ற நிலை அங்கெல்லாம் இல்லை. தேர்வை எழுத வேண்டும். அதிலே பாஸ் செய்ய வேண்டும். ஆனால் அத்தகைய கல்வி





முறையை நாம் இங்கே வைத்துக்கொண்டிருக்கவில்லை. நாம் எப்படி ஒரு மிக்சட் கான்ஸ்டிடியூஷன் வைத்துக் கொண்டிருக்கிறோமோ அதைப்போலவே ஒரு மிக்சட் கல்வி முறையையும் வைத்துக்கொண்டிருக்கிறோம். எனவே இதில் பெருத்த மாற்றத்தைச் செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரி ஆசிரியர்களில் பலர் இன்னும் 10-ஏ(1) என்னும் வகையில் தற்காலிக அடிப்படையிலேயே பணியாற்றிக் கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு தேர்வு நடத்தி 4 ஆண்டுகள் ஆகியும் இதே நிலை இருக்கிறது. இந்த நிலைமை அரசுப் பள்ளிகளிலும் இருக்கிறது. இதைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் பல்வேறு இயக்கங்கள் இருந்தாலும், தமிழ் வளர்ச்சியில் அவைகளுக்கு எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆளுகிற கட்சியானாலும் சரி, ஏற்கெனவே ஆட்சி செய்த எங்கள் கட்சியானாலும் சரி, தமிழ் மொழி மூலம்தான் மாணவர்கள் கல்வி கற்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. இது நம்முடைய கருத்து என்று சொன்னால், இங்கே இருப்பவர்களில் சிலர் எதிர்க்கக்கூடும். ஆனால் இந்தக் கருத்தை கோத்தாரி கமிஷன் தெரிவித்திருக்கிறது. பயிற்சி மொழி என்ற தலைப்பில் இந்தக் கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. 691 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையில் 398 ஆம் பக்கத்தில் இந்தக் கருத்து தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாநில மொழிகள்—பிராந்திய மொழிகள் தான் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று அதில் கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அதில் பல்வேறு பகுதியைச் சார்ந்த நிபுணர்கள் பங்கேற்றிருந்தார்கள். அது மட்டுமல்ல. பாலிடெக்னிக் கல்லூரிகளில்கூட தமிழில்தான் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பிற மாநிலங்கள் அமுல்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழ் நாட்டில் மட்டுமே நாம் இன்னும் அமுல்படுத்தவில்லை. டெக்னிகல் எஜுகேஷன் பிராந்திய மொழிகளில் வர வேண்டும் என்று சொன்னால், அதற்கு நாம் முதலாவதாக அவைகளுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை வெளியிட வேண்டும். அது மட்டுமல்ல, பல்கலைக் கழகத்தில் இருக்கும் முதுகலை விஞ்ஞானப் பாடங்களையும்கூட பிராந்திய மொழிகளிலேயே படிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

"The switch-over to Indian languages in Engineering education should be linked with similar changes in science courses at the post-graduate level in the Universities" என்று அவர்கள்

கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இது தி.மு.க. அல்லது அ.தி.மு.க. தெரிவிக்கும் கருத்து என்றால், மற்றவர்கள் எதிர்க்கலாம். ஆனால் இது கோத்தாரி கமிஷன் தெரிவித்த கருத்து. அதோடு நிற்கவில்லை. English will always remain to be an important library language. அதாவது ஆங்கிலம் பயிற்றுவிக்கிற மொழி அல்ல என்றும் அது ஒரு லைப்ரரி லேங்குவேஜ் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போதும் கன்னிமாரா நூல் நிலையத்திற்குள் சென்றால், எந்த மொழியில் வேண்டுமானாலும் புத்தகங்களைப் பெற முடியும். அதாவது தாய் மொழி மூலமாகக் கல்வி பயின்றுவிட்டு, பிற நாட்டோடு தொடர்பு கொள்வதற்குத்தான் ஆங்கிலம் தேவைப்படுகிறது. இந்த வகையில்தான் நமது அரசு இங்கே செயல்பட வேண்டும். அந்த வகையில் அரசு செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டை மட்டும் நான் சுமத்த விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது பல்கலைக் கழகப் பாடத் திட்டங்களில் சேர்க்கப்பட்ட 850 புத்தகங்கள் வெளியிடப்பட்டன. இவைகள் அனைத்தும் ஆர்ட்ஸ் பற்றிய புத்தகங்கள் தானே தவிர, சயன்ஸ்பற்றியவை அல்ல என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதற்குப் பிறகு பொறுப் பேற்றுக் கொண்டவர்கள் இதில் சரியாகச் செயல்படவில்லை என்ற காரணத் தால், அது அதோடு நின்றுவிட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் அதற்குப் பிறகு 800-க்கும் மேற்பட்ட தமிழ்ப் பாடப் புத்தகங்கள், அச்சிடப்பட்டு உபயோகப்படுத்தப்படாமல் அடையாறிலுள்ள அரசாங்கக் கிடங்கில் வைக்கப்பட்டிருப்பதாகவும், இப்போது அவற்றையெல்லாம் எடுத்துவிட்டு அவைகளின் இடத்திலே நோட்டுப் புத்தகங்களை வைப்பதாகவும் செய்தி வருகிறது. எனவே, அமைச்சர் அவர்கள் அதுபற்றித் தகவல் கொடுக்காமல் அடையாறு கிடங்குக்குப் போய்ப் பார்த்தால் உண்மை தெரியும். எங்களுக்கு அதற்கான வாய்ப்பில்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆக எந்த ஒரு நாட்டிலும் தாய் மொழி மூலமாகத் தொழிற் கல்வி பயின்றால்தான், தொழிலில் நிபுணத்துவம் பெற முடியும். பிற மொழியில் பயின்றால், உண்மையிலேயே நிபுணத்துவம் பெற முடியாது என்பதை நாம் உணர வேண்டும். ஆனால் தமிழ் நாட்டில் இன்றையதினம் இருக்கும் அவல நிலை என்னவென்றால், 15 ஆண்டுக் காலம் படிப்பைத் தொடர்ந்து பி.ஏ. பட்டம் பெற்ற பிறகும் ஒரு மாணவர் ஒரு கடிதம் எழுதினால், அதில் எத்தனை பிழைகளைச் செய்கிறார் என்பதைப் பார்க்கும்போது, உண்மையிலேயே அதிர்ச்சியடையத் தக்க நிலையில் நாம் இருக்கிறோம். இதற்குக் காரணம்



ஆரம்பப் பள்ளி நிலையிலிருந்தே தமிழ் அந்த மாணவர்களுக்குக் கற்பிக்கப்படாததாகும். இடை நிலை ஆசிரியர்கள் பி.ஏ. படித்தால் ஊக்க ஊதியம் வழங்கப்படுவதைப் போல ஆசிரியர்கள் புலவர் பட்டம் பெற்றால், அவர்களுக்கும் ஊக்க ஊதியம் வழங்கும் முறையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் தமிழில் ஆசிரியர்களுக்கான தரம்கூட உயரும்.

(பிற்பகல் 12-40)

பி.ஏ., பி.டி., ஆசிரியர்கள், எம்.ஏ. பி.டி. ஆசிரியர்கள் தமிழ் புலமைப் பட்டம் பெற்றிருந்தால் அவர்களுக்கு ரூ. 25 ஊக்க ஊதியம் கொடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், தமிழ் நாட்டில் தமிழ் புலவர்கள் மட்டும் தான் தமிழை ஒழுங்காகப் படித்திருக்கிறார்கள். நானும் எம்.ஏ. (தமிழ்) படித்து ஆசிரியராக இருக்கிறேன். எனக்கும் சந்தேகம் ஏற்பட்டால், நான் பழைய தமிழ்ப் புலவர்களிடம் சென்றுதான் கேட்கிறேன். திருவாரூரிலே, பேரூரிலே போய் அந்தக் காலத்தில் படித்தவர்களிடம் போய் கேட்கிறேன் அப்படி அந்தக் காலத்தில் தமிழ் புலமை பெற்றவர்கள்தான் அகராதிகளாக, லெக்சிகனாக இருந்துகொண்டிருக்கிறார்கள். நான்கு ஆண்டு காலம் படித்து விட்டு சம்பாத்தியம் செய்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : நான்கூட பேரூரில் படித்து தமிழிலே புலமை பெற்றிருக்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள்கூட பேரூரில் உள்ள தமிழ் கல்லூரியில், தமிழ் படித்து புலமை பெற்றிருப்பதாகச் சொல்கின்றார்கள். நாங்கள் எல்லாம் ஏதோ அரசியல் வாதி என்ற அளவில் வாயால் வார்த்தைகளைப் பேசிப் பேசிப் புலமை இருப்பது போல தென்படுகிறோம். அந்தக் கருத்தை அப்படியே விட்டுவிடாமல், அதற்கும் இடம் வைத்து, வரலாறு படிக்கின்ற ஆசிரியர்கள், கணிதம் படிக்கின்ற ஆசிரியர்கள் எல்லாம் புலமை பெற்றிருந்தால், தமிழ் புலவர் படித்திருந்தால், அவர்களுக்கு ரூ. 30, ரூ. 50 என்று ஒரு இன்சென்டிவ் கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்கப்படுமானால், அவர்கள் தமிழ் சொல்லிக் கொடுக்கும் போது, தவறுதலான முறையில் தமிழ் சொல்லிக் கொடுக்கின்ற, எழுதுகின்ற நிலைமையை மாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் நாட்டு வரலாறு எழுதச் சொல்லி ஒரு முயற்சி எடுத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அது வெளியாக இருந்தது. டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையிலே ஏற்பட்டது. திரு.

கே. கே. பிள்ளை அவர்களைத் தலைவராகப் போட்டிருந்தார்கள். அதற்கான முயற்சி எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். திரு. கே. கே பிள்ளை அவர்கள் அப்போது முடியாது என்று சொல்லிவிட்டிருக்கிறார்கள். அதற்குரிய காரணங்களையும் அவர்கள் சொன்னார்கள். போன கூட்டத்திலேகூட அதைப்பற்றி நானும் சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி மீண்டும் நான் சொல்ல விரும்பவில்லை. அதற்குப் பதில் யாரைப் போட்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அதற்காக இப்போது என்ன முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் எழுதுகிறார்களா இல்லையா? இதை ஏன் சொல்கிறேன் என்றால், பாட நூல் எழுதுவது என்பதோ, வரலாறு நூல் எழுதுவது என்பதோ, அந்த உணர்வோடு எழுத வேண்டும். அந்த உணர்வைப் பெற்றிருப்பவர்களிடம்தான் அந்தப் பொறுப்பைக் கொடுக்க வேண்டும். அப்படி இல்லாதவர்களுக்குச் சம்பளம் கொடுத்து, அலுவலகம் கொடுத்து, மற்ற எல்லா வசதிகளும் கொடுத்துச் செய்யச் சொன்னால், அவர்கள் உட்கார்ந்துகொண்டுதானிருப்பார்கள். ஆகவே அந்த உணர்வோடு இருப்பவர்களிடம் அந்தப் பணியைக் கொடுத்தால், குடிசையிலே உட்கார்ந்து கூட அதைச் செய்து முடிப்பார்கள். அந்த அளவில் அவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற முறைகள் அமைய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளியிலே முதல் வகுப்பிலே, இரண்டாம் வகுப்பிலே மாணவர்களை 'டிடெயின்' பண்ணக் கூடாது என்று போட்டிருக்கிறார்கள். தோல்வி என்றவுடன் அவர்கள் படிப்பையே விட்டுவிடுகிறார்கள். முதல் வகுப்பிலேயிருந்து இரண்டாவது வகுப்புக்கு வந்துவிட வேண்டும். இரண்டாம் வகுப்பிலேயிருந்து மூன்றாம் வகுப்புக்கு வந்துவிட வேண்டும். அதற்குப் பிறகுதான் கொஞ்சம் கொஞ்சமாகத் தடுக்க ஆரம்பிக்கிறோம். அப்படி இரண்டாவது வகுப்பிலிருந்து வரும்போது, அவர்களுக்கு முதல் வகுப்பினுடைய தரம் இல்லாமல் இருந்தால், ஒரு பிரிட்ஜ் கோர்ஸ் முறை என்று வைத்துக்கொள்கிறோம். அது ரெக்கார்டிலேதான் இருக்கிறது. அதை யாரும் செயல்படுத்துவதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம், ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளிலே ஆசிரியர்கள் மாணவர்களின் அதிக விகிதாசாரம் தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த விகிதாசாரம் 1 : 20 என்ற அளவில்தான் இருக்க வேண்டும். இப்போது மேல் நிலைப் பள்ளியிலே அந்த நிலைமை வந்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் நாம் இல்லை. அங்கே சில பள்ளிகளில் ஸ்டூடண்ட்ஸ் குறைவாக இருக்கிறார்கள். அந்த இடங்களிலே ஆசிரியர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகையால்



விகிதத்திலே அப்படி இருக்கிறது. கல்லூரியிலே எடுத்துக் கொண்டால் 1 : 17 என்று இருக்கிறது. அங்கேயெல்லாம் மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. இப்போது தொடக்கப் பள்ளிகளில் 1 : 40 என்று இருப்பதை மாற்றியாக வேண்டும். சென்ற கல்விக் கொள்கைக் குறிப்பு விவாதத்தின் போதும் சொன்னேன். தமிழ் நாட்டிலே பல இடங்களிலே 'அன்-எகானமிக் ஸ்ட்ரெங்த்' இருக்கிறது. மாணவர்கள் எண்ணிக்கை 1 : 70, 75 என்று உள்ள கல்லூரிகள்கூட இருக்கின்றன. அந்தப் பள்ளிகளை மற்ற குறைவாக எண்ணிக்கை உள்ள பள்ளிகளில் மெர்ஜ் செய்ய வேண்டும். அதிலே படிப்பதைத் தொடங்குவதற்குரிய ஏதாவது வாய்ப்புகளைச் செய்ய வேண்டும். அதைப்பற்றி 'எஜுகேஷன் சர்வே மேப்' வர வேண்டும். இன்னின்ன இடங்களில் பள்ளிக்கூடம் வேண்டும், இன்னின்ன பள்ளிக்கூடங்களில் இந்தப் பாடங்கள் வேண்டும் என்ற திட்டம் இருக்க வேண்டும்.

இப்போது பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை எல்லாம் அரசு ஏற்றிருக்கிறது. அந்தப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஆசிரியர்களாக அறிவித்திருக்கிறார்கள். அது அரசு அறிவிப்பாகவே இருக்கிறது. இந்த வருடமும் அதைச் சொல்லிவிட்டு, ஜூன் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் என்ன வேலை என்று சொல்லவில்லை.

இந்த அவையிலே ஆறு ஆசிரியர்கள் பிரதிநிதிகள் இருக்கிறோம். ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அந்தக் காலத்தில் நாங்கள் வருகிறபோது 21 பேர்கள் பஞ்சாயத்து யூனியன் பிரதிநிதிகள் இருந்தார்கள். இப்போது உள்ள ஆசிரியர்கள் பிரதிநிதிகள் அலையில்லாத கடலில் நீந்திக்கொண்டிருக்கிறார்கள். நான்கூட சொல்வேன், அவர்களுக்கு எதிர்ப்பே கிடையாது. திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் கொஞ்சம் சொல்வார்கள். அல்லது திரு. ஜேப்பியார் அவர்கள் ஏதாவது சொல்வார்கள். வேறு யாரும் இங்கே ஒன்றும் சொல்வதில்லை. அப்போது அப்படி இல்லை. நான் ஆசிரியர்கள் பிரச்சினையைப்பற்றிச் சொன்னவுடனே, அப்போது அந்தப் பகுதியிலே ஆசிரியர்கள் செய்த தவறுகளைப்பற்றிச் சொல்வதற்கு அந்த 21 பேர்கள், பஞ்சாயத்து யூனியன், மேனேஜர்கள், பிரதிநிதிகள் இருந்தார்கள். அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். நம்முடைய கட்சி உறுப்பினர் திரு. வீரபாண்டி ஆறுமுகம்கூட, கல்வித் துறையைப் பற்றிப் பேசும்போது, பஞ்சாயத்து யூனியன் சார்பில்தான் பேசுவார்கள். அவர்கள் பொறுப்பிலேதான் இருக்க வேண்டும் என்பார்கள். எங்களுக்குள்ளே தனிப்பட்ட முறையில் அந்த விஷயத்தில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்.

அதுவே கட்சியினுடைய கொள்கை என்பதல்ல. இப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகள் நாடு முழுவதும் இருக்கின்றன. அது எப்படி இருந்தாலும், அரசு அறிவித்த பிறகு, அதிலே ஒரு முடிவை சீக்கிரமாக எடுக்க வேண்டும். அதிலே பாடத்திட்டங்களையும், அதனுடைய அமைப்பு முறைகளையும், நடத்துகின்ற முறைகளையும் உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதனுடைய நிர்வாகம் யார் கையிலே, ஆசிரியர்களுடைய கண்காணிப்பு முறைகள் யார் கையிலே என்பதே அறிவிக்க வேண்டும். என்னுடைய சொந்தக் கருத்து, அரசுப் பள்ளிகளாக அனைத்துப் பள்ளிகளையுமே மாற்ற வேண்டும் என்பதுதான். பஞ்சாயத்து யூனியனுக்கும் இந்தப் பள்ளிகளுக்கும் தொடர்பு இருக்கக்கூடாது. இவர்களுக்குக் கொஞ்சம் தொடர்பு, அவர்களுக்குக் கொஞ்சம் தொடர்பு என்ற அளவில் இருக்கக்கூடாது. எப்படி மற்ற இடங்களில் அரசுப் பள்ளிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றனவோ அது போல ஆக்கிவிட வேண்டும். 50 பள்ளிகளுக்கு ஒரு டெபுடி இன்ஸ்பெக்டர் என்று போட வேண்டும். செலக்ஷன் எல்லாம் பொறுப்பாக நடக்க வேண்டும். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பஞ்சாயத்துத் துறையிலே இருக்கக்கூடிய பஞ்சாயத்து செஸ், கல்வி நிதி எல்லாவற்றையும் அரசுக்கு மாற்றச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் இந்த அரசினுடைய எண்ணம் அது அல்ல என்பது எனக்குத் தெரியும் இரட்டை ஆட்சி முறை மாதிரி இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். கொஞ்சம் அதிகாரம் அவர்களுக்குக் கொடுப்பது. அவர்களை Satisfy செய்வது, இவர்களைக் கொஞ்சம் Satisfy செய்வது என்ற முறையில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். அப்படி இருந்தால், கல்வித் துறை சீரழிந்துபோகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரேயடியாக அரசே எடுத்துக் கொள்ள வேண்டும் அல்லது பஞ்சாயத்து யூனியன் எடுத்துக்கொள்ள வேண்டும். அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு எடுத்தாகிவிட்டது. அதிலேயிருந்து பின்னே போகக் கூடாது. ஒரேயடியாக அரசே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

தமிழ்நாடு எழுத்தறிவிலே இரண்டாவது இடத்திலே இருந்திருக்கிறது. அந்த இடத்தை இப்போது மகாராஷ்டிரா எடுத்திருக்கிறது. நாம் மூன்றாவது இடத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள். நான் முதலிலேயே சொன்னேன். நாம் எடுக்கின்ற முயற்சிகளைப்பற்றிச் சொல்வதைவிட, அதன் விளைவைத் தான் பார்க்க வேண்டுமென்று சொன்னேன். 1971-ல் இரண்டாவது இடத்தில்



இருந்து, இன்று மூன்றாவது இடத்திற்கு வந்துவிட்டது. முதியோர் கல்வித் திட்டம் குறித்து கணக்கெடுத்து விட்டார்கள். 'ஸ்டேட்டிஸ்டிக்ஸ்' தப்பு என்று சொன்னார்கள். ஸ்டேட்டிஸ்டிக்கிலே தப்பு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்கு பாராட்டவேண்டியதுதான். ஜனதா அரசாங்கக் காலத்திலே பிரைவேட் ஏஜென்சியில் எடுத்த நிறைய புள்ளிவிவரங்களை வைத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். தமிழ் நாட்டிலே எப்படி குறைந்துவிட்டது என்பதற்குக் காரணம் சொல்கிறார்கள். இருந்தாலும் முதியோர் கல்வித் திட்டம் சரியாக அமுல் செய்யப்படவில்லை. கல்லூரிகளிலே முதியோர் கல்வித் திட்டம் சரியாக அமுல்படுத்தப்படவில்லை. யூ.ஜி.சி. கிராண்ட் சரியாகப் பெறப்படவில்லை. போன வருடம் அந்தத் தொகை வரவில்லை. அங்கே பணியாற்றும் சூப்பர்வைசர்கள் போன்ற யாருக்குமே பணம் பெற முடியவில்லை. ஒரு வருடமாக வேலை செய்கிறார்கள். அரசாங்கம் மத்திய அரசுடனும், யூ.ஜி.சி. யுடனும் தொடர்பு கொண்டு அந்த நிதியை வாங்குவதற்கு முன்வர வேண்டும். பிரைவேட் ஏஜென்சிகளை அதிகப்படுத்தி வேண்டுமானால் முதியோர் கல்வித் திட்டத்தைப் பெருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தக் கல்வித் திட்டத்தை நாம் 150 பஞ்சாயத்து யூனியன்களிலே நடத்துகிறோம். அதன் முதல் நிலையிலேயே நாம் இருக்கிறோம். முதியோர் கல்வியில் வெற்றி பெறவில்லை. முதியோர் கல்வித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அதை நிறைவேற்ற கல்வி இலாகாவில் முயற்சி எடுக்க வேண்டும்.

அடுத்து, கல்வித் துறையில், ஆடிட் முறையிலே பெரிய மாற்றம் ஏற்படுத்த வேண்டும். முன்பெல்லாம் எல்லாப் பள்ளிகளிலும் அக்கவுண்ட்டென்ட் ஜெனரல் ஆபிசிலேயிருந்து வந்து ஆடிட் பண்ணிக்கொண்டிருந்தார்கள். இந்த இன்ஸ்பெக்ஷன் டி.ஈ.ஓ., சி.ஈ.ஓ. அவர்கள் வந்து பண்ண வேண்டும் என்று இருக்கிறது. அவர்கள் அங்கே போய் அகாடமிக் லைன்லை சுற்றிப்பார்த்துவிட்டு, சாப்பிட்டுவிட்டு வர முடிகிறது. அவர்களால் வேறு ஒன்றும் செய்ய முடியாது. இரண்டு கிளார்க்குகள் போகிறார்கள். அங்கே போய் ஆடிட் செய்கிறார்கள். மானேஜர்களை வைத்து சரிசெய்கிறார்கள். பிறகு கையெழுத்துப் போட்டு விடுகிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கல்லூரியானாலும் சரி, பள்ளியானாலும் சரி, அந்த ஆடிட் ரிப்போர்ட்டுகளைப் பார்க்க வேண்டும். அவைகளைச் சரியாக 'பிசிகல் வெரிபிகேஷன்' செய்ய வேண்டும். அங்கே அந்தப் பொருள்கள் நிரந்தரமாக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அப்போதுதான் அந்தப் பொருள்கள் இல்லாமல் இருப்பது தெரியும்

பள்ளிச் சீரமைப்பு மகாநாடு நடத்தி ரூ. 3 லட்சம், ரூ. 4 லட்சம் வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்வதிலே 50 சதவிகிதம்தான் இருக்கும். அந்த ஊரிலேயுள்ள கடைகளிலிருந்து கொண்டு வந்து வைத்திருப்பார்கள். அமைச்சர் வந்து பார்த்துவிட்டுப்போன பிறகு, அவைகளை எடுத்துச் சென்றுவிடுவார்கள். அதுபோலவே பள்ளி அதிகாரிகள் வந்துசென்ற பிறகு எடுத்துச்சென்றுவிடுவார்கள். உண்மையில் அங்கே ஒரு 10 சதவிகிதம் சாமான்கள்தான் இருக்கும். நான் இப்போது உள்ள ஆட்சிக் காலத்திலிருந்து பார்க்க வேண்டும் என்று சொல்லவில்லை. முந்திய ஆட்சிக் காலத்திலிருந்தே கூட கணக்குப் பார்க்கலாம். 1979-லிருந்து 1980 வரைக்கும் ஒரு லிஸ்ட் எடுத்துக்கொண்டு போய்ப் பார்த்தால், ஒவ்வொரு பள்ளிக்கும் எவ்வளவு சாமான்கள் இருக்கின்றன என்பது தெரியும். அதுபோலவே 50 வருடம், 100 வருட காலமாகக் கல்லூரிகள் நடக்கின்றன. அங்கே வாங்குகின்ற 'ஸ்பெஷல் ஃபீஸ்' அப்படியேதான் இருந்து கொண்டிருக்கிறது. அரசுக் கல்லூரிகளிலேதான் அந்த 'ஃபீஸ்' குறைவாக இருக்கிறது. அவர்கள் அதை வாங்கிக்கொண்டு ஆடிட்டர்களை வைத்து கள்ளக் கணக்கு எழுதிக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் 'பிசிகல் வெரிபிகேஷன்' பண்ண வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இதில் எந்த விதமான கட்சி சார்பும் இல்லாமல் செய்ய வேண்டும். சமீபத்தில்கூட பாரதிய ஜனதா கட்சி கான்பரன்சிலே கேரளாவிலே திரு. பேபி ஜான் அவர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் அங்கே பேசியிருக்கிறார்கள். அதைத்தான்

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-50)

அவர்கள் எடுத்துக் காட்டிச் சொன்னார்கள். அந்த மாதிரி அரசியலிலே கல்வி இல்லை, கல்வித் துறையிலே நான் அரசியல் இருக்கிறது. அப்படி இருக்கக்கூடாதென்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஒரு பள்ளியின் கேள்வித் தாளைப் பார்த்தேன். அதில் கட்சி அரசியலைப்பற்றிக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. 'இந்தியப் பிரதமர் யார்? தமிழகத்தின் முதலமைச்சர் யார்?' என்று கேட்டால் பரவாயில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவைத் தலைவர் யார் என்று கேட்கவில்லையா? (சிரிப்பு).

**திரு. ம. சங்கரலிங்கம் :** கல்வி அமைச்சர் யார் என்று கேட்டிருந்தால், நன்றாக இருந்திருக்கும். தமிழ் நாட்டில் இப்போது ஆட்சி அமைத்துள்ள கட்சி எது என்று கேட்டிருக்கிறார்கள். இப்படி கட்சி அரசியலில் புகாமல்



இருந்தால் நல்லது. நாமக்கல் கல்வி மாவட்டத்திலே அரசு உயர் நிலைப் பள்ளி முழு ஆண்டுத் தேர்வு விடைத் தாளில் உள்ளது. நான் இதை அரசியலாக்க விரும்பவில்லை.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** 'பொலிடிகல் சையன்ஸ்' வினாத்தாளாக இருக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 'இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் யார்? இந்தியப் பிரதமர் யார்? தமிழகத்தின் முதல்வர் யார்? கல்வி அமைச்சர் யார்?' இப்படி வினாக்கள் கேட்கும் முறை வர வேண்டும். நம்முடைய கல்வியாளர்களிடையே இந்த நிலை வர வேண்டுமென்ற எண்ணத்தோடு இதைச் சொல்லி, தமிழகத்தின் கல்வி வளர்ந்து, சிறந்து, இப்போது பயில்கின்ற மாணவர்கள் தரமான கல்வி பெற்று, தமிழ் பண்பாட்டையும் பெற்று, 20 ஆண்டுகளுக்குப் பின்னால் சிறந்த பிரஜைகளாக இருந்தால், நாம் இதில் வெற்றி கண்டோமென்று சொல்லலாம். எனவே நாம் பாராட்டப்பட வேண்டியவர்களா, இல்லையா என்பதைப்பற்றி 20 ஆண்டுகளுக்குப் பின்னால் உள்ளவர்கள் தீர்ப்பு அளிப்பார்கள் என்று சொல்லி, கல்வித் துறையின் முயற்சிகளைப் பாராட்டி, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கல்வித் துறையினுடைய கொள்கைக் குறிப்பின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் இங்கே எடுத்து வைத்து, விவாதத்தில் கலந்து கொண்டார்கள். விவாதத்திலே கலந்துகொண்டு, தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த அத்தனை உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டுக்களையும் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிப் பேசுவதும் அல்லது மேம்பாட்டிற்கான பல்வேறு யோசனைகளைச் சொல்வதும் அரசுத் தரப்பில் வரவேற்கக்கூடிய ஒரு நிலை என்பதை நான் முதலிலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கல்வித் துறை கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசுகின்றபோது, இன்றைக்குப் படிக்கின்ற இளைஞர்கள் எதிர்காலத்திலே சிறந்த முறையில் வாழவும், வாழ்வதற்கான சூழ்நிலைகளைப் பெறுவதற்குமான முயற்சியில் கல்வித் துறை ஈடுபட வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் அதைவிட ஒருபடி மேலே சென்று, ஒன்று கூற விரும்புகிறேன். இன்றைக்குக் கல்வித் துறை கொள்கைக்

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 ஏப்ரல் 28

குறிப்பிலே, தொடக்கக் கல்வி, உயர் நிலைக் கல்வி, மேல் நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, பல்கலைக் கழகம் என்பதோடுகூட கலை, கலாச்சாரம், விளையாட்டுத் துறை போன்றவைகளெல்லாம் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதும், இவைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாக வைத்து நாம் பார்க்கின்ற போது, கல்வித் துறையினுடைய பெரு முயற்சி, முழு முயற்சி, ஒரேயொரு முயற்சி, தமிழ் நாட்டின் மனித சக்தியை மேம்படுத்த வேண்டும், உயர்த்த வேண்டும், அதன் தரத்தை உயர்த்த வேண்டும், அந்தச் சக்தியை தமிழ் சமுதாயத்தின் நன்மைக்காக, உயர்விற்காகப் பயன்படுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதுதான் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கல்வித் துறை என்பது, யாரோ ஒருவர் வேலைக்குப் போக வேண்டுமென்பதற் காகவோ, யாரோ ஒருவர் படித்து, பட்டம் பெற வேண்டுமென்பதற்காகவோ செயல்படவில்லை என்பதையும், பொதுவாக நம்முடைய மனித சக்தியை அல்லது அறிவாற்றலை மேம்படுத்துவதற்காக நடைபெறுகிற ஒரு சிறப்பான துறை என்பதையும் நான் முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் துறையினுடைய செயலைப் பொறுத்துத்தான் ஒரு சமுதாயத்தின் முன்னேற்றம் இருக்குமென்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு நாம் எதிர்பார்த்த அளவிற்கு கடந்த 30 ஆண்டுகளில் முன்னேற வில்லை என்றால், கல்வித் துறையில் எடுத்த நடவடிக்கைகளெல்லாம் இந்த அடிப்படையிலே சிறப்பாக எடுக்கவில்லை என்பது ஒரு காரணமாகவும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பல்வேறு பகுதியினரின் ஒத்துழைப்பைப் பெறாமல் தோல்வி அடைந்தது இன்னொரு காரணமாகவும் இருக்குமென்று குறிப்பிட விரும்புகிறேன். எனவே அனைவரும் ஒன்றுபட்டு பல்வேறு மக்களின் ஒத்துழைப்பையும் பெற்று, மனித சக்தியினுடைய மேம்பாட்டிற் காக, கல்வித் துறையை மிகவும் சிக்கனமாகவும், மிகவும் சிறந்த முறையிலும் பயன்படுத்துவது எப்படி என்பது குறித்து நாம் கருத்துக்களைப் பரிமாறி அந்த அடிப்படையிலே நடவடிக்கைகளை எடுத்தால், கல்வித் துறையினுடைய நோக்கம் நிச்சயமாக ஈடேறுமென்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலே தொடக்கக் கல்வியைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிற கல்வித் துறை கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்திலே முதியோர் கல்விபற்றியும் பேசி யிருக்கிறார்கள். மனிதனுடைய வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் எல்லாவிதமான உயர்வான அடிப்படைகளைத் தரவேண்டுமென்ற முயற்சிகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். அத்தனை முயற்சிகளையும் கண்காணித்து செயல்படுத்தும் பெரும் பொறுப்பிலே கல்வித் துறை இன்றைக்கு இருக்கிறது. அந்தக் கல்வித் துறையினுடைய நிதி ஒதுக்கீட்டைப்பற்றி இங்கே கூறப்



1981 ஏப்ரல் 28] [திரு. செ. அரங்கநாயகம்]

பட்டது. சென்ற ஆண்டு 23 சதவிகிதமாக இருந்தது—23 சதவிகிதத்திற்கு மேலேயே இருக்குமென்று கருதுகிறேன், இன்றையதினம் 22 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறதே என்ற குறைபாட்டை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குறைபாடு ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமைகள்—நாட்டிலே இருக்கக்கூடிய வறட்சி நிலைமை, அதோடுகூட, புதிதாக ஆட்சிக்கு வந்த உடனே, தேர்தல் நேரத்தில் நாங்கள் தந்த வாக்குறுதிகள் காரணமாக விவசாயிகளுக்குச் சில நன்மை களைச் செய்ய வேண்டியும், சில நடவடிக்கைகள் எடுத்ததால், அது பல்வேறு துறைகளினுடைய நிதி ஒதுக்கீட்டைப் பாதித்திருக்கிறது. அதில் கல்வித் துறையும் ஓரளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறதென்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், இப்போது எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளுக்கு ஏற்ப, ஒதுக்கப் பட்டிருக்கிற நிதி போதவில்லை என்பதை இந்த அரசு உணருகிறதென்பதையும், மேற்கொண்டு அதிகமான அளவிற்குப் பணத்தைப் பெற்று, கல்வித் துறையில் பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் இருக்கிறதென்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கல்வித் துறையின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேதான் இந்தச் சமுதாயத்தின் முன்னேற்றம் இருக்கிறதென்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடுமில்லை. அந்த அடிப்படையிலே இந்த அரசு செயல்படு மென்று இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கட்டிடங்களுக்குப் பணம் ஒதுக்கியிருப்பதுபற்றி இங்கே பாராட்டிப் பேசி னார்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் ஒரு தவறு இருப்பதாக எடுத்துச் சொன்னார்கள். அதிலே 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கட்டிடங்களுக்குச் செய்துள்ள மொத்த நிதி ஒதுக்கம் 750 இலட்சம் ரூபாயாகும். இதில் 550 இலட்சம் ரூபாய் ரொக்க மானியமும், 200 இலட்சம் ரூபாய் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலைக்குத் தரப்படும் உணவாகத் தரப்படும் தானியத்தின் மதிப்பாகும். 200 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உணவு தானியம் பள்ளிக் கட்டிடம் கட்டும் தொழிலாளர்களுக்குத் தரப்படும். கல்வித் துறைக் கொள்கை விளக்கக் குறிப்பின் இந்த ரூ. 200 இலட்சத்தையும் சேர்த்து ரூ. 750 இலட்சமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே ரூ. 500 இலட்சத்திற்கும் ரூ. 750 இலட்சத் திற்கும் உள்ள வித்தியாசத்திற்குக் காரணம் இதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 ஏப்ரல் 28

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்பற்றி கருத்துக்கள் கூறப்பட்டன. கடைசியில் பேசிய எதிர்க் கட்சித் தலைவரவர்கள்கூட அந்தச் சாமான்கள் எப்படி வந்திருக்கும், எந்தக் கடையிலே கொண்டுபோய் வைத்திருப்பார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அதைப்பற்றி விசாரிக்க அரசுக்கு எந்தவிதத் தடையுமில்லை. அதிகாரிகளைக் கொண்டு விசாரிக்க முயற்சிகளை எடுக்கிறோம். ஆனால் ஒரு கருத்தை வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். பள்ளிச் சீரமைப்பு மாநாடு என்பது இன்றையதினம் ஆசிரியர்கள், அவர்களாகவே ஆர்வத்தோடு செய்கிற ஒரு காரியமாகும். அவர்கள், அதிகாரிகளுடைய வற்புறுத்தலினால் அல்லது அதிகாரத்தைக் காட்டி மிரட்டுவதால் செய்கின்ற காரியமல்ல. நான் கலந்துகொண்ட பல்வேறு மாநாடுகளிலே ஆசிரியர்களை அழைத்துக் கேட்டு, நான் அறிந்த ஒரு விஷயமாகும் இது. அவர்கள் ஊக்கத்தோடு செய்கிறார்கள். எங்கே உற்சாகம், ஊக்கம் இருக்கிறதோ அங்கேதான் மாநாடுகள் நடக்கின்றன. அங்கேதான் நானும் கலந்துகொண்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாநாடுபற்றி ஒரு விவரத்தைக் கூற விரும்புகிறேன். பள்ளிச் சீரமைப்பு மாநாடு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஆரம்பிக்கப்பட்டு, இதுவரையில் நடந்த மாநாடுகளின் எண்ணிக்கை 615 ஆகும். அதிலே வசூலான பணம் ஏறக்குறைய 19 கோடி ரூபாயாகும். அதிலே, இந்த ஆண்டு, நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு வசூலான பொருள்களின் மதிப்பு 3.7 கோடி ரூபாய் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்

(பிற்பகல் 1-00)

கொள்ள விரும்புகிறேன். அதைப்பற்றி ஒருசில விவரங்களை இங்கே சொல்கிறேன். பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலமாக 1980-81 ஆம் ஆண்டு வசூல் ஆனதாகத் தெரிவித்துள்ள 3.70 கோடி ரூபாயில் பின்வரும் இனங்கள் அடங்கியுள்ளன. மேல் நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால் (ஒன்று), மேல் நிலைப் பள்ளியை புதிதாகத் தொடங்க பள்ளிக்கு பொதுமக்கள் பங்குத் தொகையாகத் தரப்பட்ட அல்லது தரப்படும் ரூபாய் 25 ஆயிரம்; (இரண்டு) மேல் நிலைப் பள்ளிகளுக்கு பின் வரும் வசதிகளுக்காக இணை மானியம் அளித்தல், 1 கட்டிடங்கள், தளவாடங்கள், 2. தொழில் நுட்பக் கருவிகள் 3. நூலகப் புத்தகங்கள், 4. மரச் சாமான்கள், வானொலிப் பெட்டிகள், டெலிவிசன், கல்வி சாமான்கள். உயர் நிலைப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால், பள்ளிக் கட்டிடங்கள், தளவாடங்கள், பயிற்றுவிக்கும் கருவிகள் ஆகியவற்றுக்கான பொதுமக்கள் பங்குத் தொகை. தொடக்கப் பள்ளிகளுக்கு என்றால் மதிய உணவுப் பாத்திரங்கள், பயிற்றுவிக்கும் கருவிகள், மரச்



1981 ஏப்ரல் 28] [திரு. செ. அரங்கநாயகம்]

சாமான்கள் போன்றவை. மதிய உணவுத் திட்டம் பற்றியும், பள்ளிச் சீரமைப்புப் பற்றியும் திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் தலைமையில் அமைத்த குழு பொதுமக்கள் சீரமைப்பு மாநாடுகள் மூலமாக பள்ளிகளுக்குத் தேவையான வசதிகளைப் பெறுவதில் ஆசிரியர்களும் பள்ளிக் கல்வித் துறையும் ஆற்றி வரும் பணிகளைப் பாராட்டியுள்ளது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஒரு குற்றச்சாட்டு சொல்லப்பட்டபோது, ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டியும் சீரமைப்பு மாநாடுகள் நிறைய நடைபெற வேண்டுமென்றுதான் பரிந்துரைத்திருந்தது. சீரமைப்பு மாநாடுகள் நிறைய நடைபெற வேண்டுமென்றும், நிறைய பேர் கலந்துகொள்வார்கள் என்றும், அத்தகைய முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்றும் கமிட்டி சிபாரிசு செய்திருந்தது. அதிலே ஒரு நிலையைச் சொல்லியாக வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இதிலே அவ்வளவு ஆர்வம் செலுத்தவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அது எந்த அளவிற்குத் தவறு என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். மேல்நிலை, உயர்நிலைக் கல்வி என்று நாம் பல்வேறு நிலைகளில் கல்வியை சமூகத்துக்குத் தரும்போது அனைத்துச் செலவையும் அரசே முழுமையாக ஏற்றுக்கொண்டு நல்ல தரமுள்ள கல்வியைத் தரக்கூடிய அளவிற்கு இன்றைக்கு நிதிநிலை இல்லை. ஆகவே ஒரு சாரார் ஒன்றைச் சொல்லக்கூடும். அதாவது இருக்கின்ற நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப மேல் நிலைப் பள்ளிகளை, கல்லூரிகளை ஆரம்பியுங்கள் என்று சொல்லலாம். அப்படிச் சொன்னால், நாம் பெரும்பாலான மக்களுக்குத் தரவேண்டிய சமூக நீதியை மறுக்கிறோம் என்று தான் பொருள். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையிலும், இதற்கு முந்திய அரசுகளைப் பொறுத்தவரையிலும், இதிலே ஆர்வத்தோடு செயல்படவில்லையென்று சொல்வார்களேயானால், நிதி ஆதாரம் அரசிடம் போதுமான அளவுக்கு இல்லையென்றாலும் கூட, இருக்கின்ற நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி சமூக நீதியை வழங்க வேண்டும் என்பதிலே அழுத்தந் திருத்தமாக, உறுதியோடு செயல்பட்டிருக்கிறார்கள், செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தான் அது காட்டுகிறது. அந்த அடிப்படையில்தான் நாங்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். இருக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்துக் கொண்டு தரமான கல்வியைத் தாருங்கள் என்று சொன்னால், சமூகத்தின் ஒருசிலருக்கு மட்டும் வசதி வாய்ப்புகளை அளித்து, அவர்கள் நல்லபடியாக வாழவும் அவர்கள் இந்தச் சமுதாயத்தைச் சுரண்டவும் வழிவகை ஏற்படும். எல்லோருக்கும் பொருந்தும் கல்வியை, சமூக நீதியை, நாம் அப்போது தர முடியாது. இருக்கின்ற நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி, பெரும்பாலான அதிலும் குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு இந்த வசதியையும் வாய்ப்பினையும்

கூடுமானவரை தர வேண்டும், எவ்வளவு தான் எதிர்ப்பு வந்தாலும் அதை மீறிச் செய்யத் தயாராக இருக்க வேண்டுமென்ற நோக்கத்தில் நாங்கள் இருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் தான் பொது மக்களுடைய ஆதரவு என்பதையும், பொது மக்களுடைய நன்கொடை என்பதையும், அதுவும் அவர்களுடைய குழந்தைகளுக்காக கல்வியை நாம் தருகிறோம் என்கிற வகையில் அதுவும் அவர்களாகத் தர முன்வரும்போது அதைப் பயன்படுத்திக் கொள்வதில் எந்தவிதமான தவறும் அரசுக்கு இருக்க முடியாது. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம் பொது மக்களுடைய நன்கொடைகளைப் பெற்று அந்தந்த வட்டாரங்களிலே இருக்கிற பல்வேறு பள்ளிகளுக்கு இத்தகைய வசதிகளைச் செய்து தருவதற்கு, இன்னும் சிறப்பாக நாம் அதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். எல்லோரும் இந்தக் காரியத்தில் ஒத்துழைக்க வேண்டும். ஆனால் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆசிரியர்களைக் கட்டாயப்படுத்தவோ, அதிகாரிகளை வைத்து வற்புறுத்தவோ மாட்டோம், நிச்சயம் அப்படிப்பட்ட நிலை தவிர்க்கப்படும் என்கிற உறுதியை நான் இங்கே தருகிறேன். இஷ்டத்துக்கு, ஊக்கத்தோடு, உற்சாகத்தோடு செய்கிற ஒரு நல்ல காரியமாக இந்தச் சீரமைப்பு மாநாடுகள் இருக்கும். மேல் நிலைப் பள்ளிகள் 400-க்கு ஏற்கெனவே ஆய்வுக்கூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1980-81 ஆம் ஆண்டில் மேலும் 500 மேல் நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூட வசதிகள் ஏற்படுத்தப்படும். மேல் நிலைப் பள்ளி மாணவர்கள் பயன்படுத்துவதற்குரிய அறிவியல் பதிவு ஏடுகளை தமிழ் நாடு பாடநூல் நிறுவனத்தின் மூலமாகத் தயாரித்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தனியார் பள்ளி ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் பள்ளிக் கல்வித் துறையே நேரடியாகச் சம்பளம் வழங்குவதற்கான திட்டமொன்றைச் செயல்படுத்துவது பற்றி ஆய்வுசெய்து வருகிறது. நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்க வேண்டுமென்ற கருத்து இரண்டு நாள் நடைபெற்ற விவாதத்திலேயும் இடம் பெற்றிருக்கிறது. அதோடு இதற்கு முன்பு நடைபெற்ற தனி நபர் தீர்மானத்தின்போதும் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது தவிர இதுகுறித்து பல்வேறு நேரங்களில் எல்லோரும் பேசிக்கொண்டு வருகிறார்கள். எல்லாத் தனியார் பள்ளிகளையும் அரசே ஏற்க வேண்டுமென்றும் பேசி வருகிறார்கள். அதோடு அப்படி ஏற்றுக்கொள்வதில் இருக்கிற சிரமங்களையும், தனியாரிடத்திலேயே இருப்பதால் இருக்கிற சில தன்மைகளையும் பற்றிக் கூட இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம். ஆகவே கல்வியைப் பொறுத்தவரை, அந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேசும்போது, ஆசிரியர்கள் பிரச்சினையும் வந்துவிடுகிற காரணத்தால், இதுபோன்ற கருத்துக்கள் வழக்கமாகப் பேசப்



படுகின்றன. ஆனால் கல்விப் பிரச்சினை தனியாக வரும்போது, பிரச்சினையை மட்டும் எடுத்துப் பார்த்தால், தனியார் பள்ளிகளின் மூலம் ஆசிரியர்களுக்கு பல்வேறு பாதகமான நிலை ஏற்படுகிறது என்று கூறப்பட்டால், அதன் மீது இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டு ஒரு நல்ல நிலையை ஏற்படுத்த முடியும். அப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைதான் நேரடியாகச் சம்பளம் வழங்குவது என்பது. பெரும்பாலும் தனியார் பள்ளிகளில், குறிப்பாக எலிமென்டரி ஸ்கூல்களில் எல்லாம் என்னிடம் கூட நேரடியாக எல்லோரும் சொல்கின்ற ஒரு குற்றச்சாட்டு ஆசிரியர்களுக்கு ஒழுங்காக அல்லது முழுமையாகச் சம்பளத்தை தனியார்கள் தருவதில்லை என்பது தான். அதுவும் நான் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலிருந்து இம்மாதிரி சொல்லிக்கொண்டே வந்தார்கள். அந்த உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அந்த அடிப்படையில் தான், "சம்பளத்தை யாரிடத்திலிருந்தும் நீங்கள் வாங்க வேண்டாம். உங்களுடைய கணக்கிலே வங்கியில் கணக்கு வைக்கப்படும்" என்ற நடைமுறையினை நாம் தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரை, கொண்டு வந்திருக்கிறோம். இதை மேற்கொண்டு தனியார் பள்ளிகளுக்கு விஸ்தரிப்பதிலும் சிரமம் இருக்காது என்கிற முறையிலே அங்கும் இதைக் கொண்டுவர அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சூழ்நிலையில் இன்னொன்றையும் நான் கூற விரும்புகிறேன். அரசுப் பள்ளிகளில் கூட ஒரு கிளார்க்கிடத்திலே அல்லது வேறு ஒரு நபரிடத்தில் நின்று ஆசிரியர்கள் சம்பளம் வாங்கக் கூடிய நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். அதைப் பார்க்கும்போது, அவர்களுக்கும் கூட இப்படி நேரடியாகச் சம்பளம் வழங்குவது நல்லது என்று நினைக்கிறேன். ஆசிரியர்கள் ஒருவரிடத்தில் நின்று சம்பளம் வாங்க வேண்டிய நிலை இல்லாமல், அவருடைய வங்கிக் கணக்கிலேயே வரவு வைக்கக் கூடிய நிலையை அரசுப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்குக்கூட கொண்டு வருவது நல்லதுதான். அதை நாம் ஒவ்வொன்றாக ஒவ்வொரு நிலையிலேயும் செயல்படுத்தலாம். கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இத்திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற நிலையில், மற்றவர்களுக்கும் விஸ்தரிப்பதில் எந்தவிதமான சிரமமும் இல்லை.

தொழில் கல்வியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசினார்கள். அதிலே ஒரு புள்ளிவிவரத்தை எடுத்துச் சொன்னார்கள். அதிலே முதலாம் ஆண்டு மேல் நிலைப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்கள் எண்ணிக்கை 31 ஆயிரம் என்றும், இரண்டாம் ஆண்டு படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கை 25 ஆயிரம் என்றும் இருக்கிறது என்றும்,

அப்படியானால் 6 ஆயிரம் மாணவர்கள் எங்கே என்றும் கேட்டார்கள். முதலாம் ஆண்டு இரண்டாம் ஆண்டு என்று சொல்வதைப் பொறுத்தவரை, இரண்டாம் ஆண்டு என்று சொல்வது முதலாம் ஆண்டு படித்து விட்டு இரண்டாம் ஆண்டு வந்தவர்களுடைய புள்ளிவிவரம் அல்ல. 1980-81 ஆம் ஆண்டு முதலாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரம். அதே ஆண்டில் இரண்டாம் ஆண்டிலே படித்துக்கொண்டிருந்தவர் களின் எண்ணிக்கை 25 ஆயிரம். 1979-80 ஆம் ஆண்டிலே தான் முதல் ஆண்டிலே 25 ஆயிரம் பேர் இருந்திருக்கிறார்கள். ஆகவே சென்ற ஆண்டு 25 ஆயிரம் பேர் தான் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு 31 ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்றால், வொக்கேஷனல் கோர்சில் கொஞ்சம் அதிகமான பேர் சேர்ந்திருக்கிறார்கள் என்று பொருள். ஆனால் எங்களைப் பொறுத்த வரை அதிகமான பேர்களை இதிலே சேர்க்க வேண்டுமென்ற ஆர்வத்திலே இப்போது இல்லை. நாங்கள் விரும்புவதெல்லாம் நல்ல தொழில் பிரிவுகள் ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான். அதைச் சிறந்த முறையிலே நடைமுறைப் படுத்த வேண்டும். ஆர்வம் காரணமாகவோ, அதிகாரிகள் கேட்கிறார்கள் என்பதற்காகவோ எந்தத் தொழில் பிரிவையும் ஆரம்பித்து விட வேண்டா மென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போது இருக்கிற வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு நல்ல தொழில் பிரிவுகளை நல்ல முறையில் ஆரம்பிக்க வேண்டுமென்று இருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்கிறேன், இன்றைக்கு

(பிற்பகல் 1-10)

நர்ஸ் பயிற்சி பெற்றவர்கள் தமிழ் நாட்டிலே நிறைய தேவை; அரசு ஆஸ்பத்திரிகளிலே தேவை. தனியார் மருத்துவமனைகளிலே தேவை. அதைப் போலவே வெளி மாநிலங்களிலே தேவை. குறிப்பாகச் சொன்னால், அமெரிக்காவிலே இன்றைக்கு டாக்டர்களும் நர்ஸ்களும் மட்டும் தான் தேவை. அந்த அளவுக்கு உலகம் தழுவிய அளவிலே வேலைவாய்ப்பு உள்ள பயிற்சி நர்ஸ் பயிற்சி. பெண்களுக்கு அந்தப் பயிற்சியைத் தந்தால், 12-வது வகுப்பு படித்து முடித்தவுடன், அதற்கு மேலும் ஒரு பயிற்சி பெற்று, அவர்கள் வேலை வாய்ப்புப் பெற வசதியாக இருக்கும். அந்த அடிப்படையிலே பார்த்தால், நர்ஸ் பயிற்சி என்றாலும், இதுபோன்ற 'ஹெல்த்'-க்குக் கீழ் வரும் பயிற்சிகள் கொடுக்க வசதிகள் நன்றாக இருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்திக் கொண்டு இன்னும் பயிற்சிகள் ஆரம்பிக்கவில்லை என்பது தான் என்னுடைய கருத்தாகும். ஸ்ரீபெரும்புதூர் என்ற ஊரிலே இருக்கும் மேல் நிலைப் பள்ளிக்குப் பக்கத்திலே அறிஞர் அண்ணா மருத்துவமனை இருக்கிறது. அங்கே இருக்கும் மருத்துவ மனையைப் பயன்படுத்தி,



அங்கே பணியாற்றும் டாக்டர்களைப் பயன்படுத்தி, தாராளமாக ஓரிரு பிரிவுகளை ஆரம்பிக்கலாம். ஆனால் அவர்கள் அச்சப்படுகிறார்கள். அப்படி அச்சப்பட்டுக்கொண்டு ஆரம்பிக்கவில்லை என்று சொன்னால், அது நம்முடைய தவறுதான். இருக்கின்ற வசதிகளை நாம் இன்னும் பயன்படுத்திக்கொள்ளவில்லை. அப்படி யோசித்து சிந்தித்து அங்கே இருக்கிற வசதிகளைப் பயன்படுத்தி புதிய தொழில் பிரிவுகளை ஆரம்பிப்பது வரவேற்கக்கூடிய ஒன்று. அப்ரண்டிஸ் கோர்ஸைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே நாம் தான் தொழில் பிரிவிலே மாணவர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது. அண்மையில் நான் டெல்லிக்குச் சென்றிருந்த போது, இதைப்பற்றிப் பேசியபோது நாம் எடுக்கின்ற முயற்சிகளுக்குப் பலன் தரும் அளவுக்கு அவர்கள் ஒரு கமிட்டி போடவிருக்கிறார்கள் என்பதை அறிந்தேன். அந்தக் கமிட்டியிலே, இருக்கின்ற புள்ளிவிவரங்களையெல்லாம் எடுத்து, இந்த கோர்ஸ் படித்து முடித்து வரும் மாணவர்களுக்குப் பலனளிக்கும் வகையில் ஒரு சாதகமான முடிவை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அது வந்தால், மாணவர்களுக்குப் பலன் கிடைக்கும். வட ஆற்காடு மாவட்டத்திலே 'டிஸ்ட்ரிக்ட் ஹெட்மாஸ்டர்ஸ் அசோசியேஷன்' இருக்கிறது. அவர்கள் சர்வே நடத்தினார்கள். அதைக் குறித்து டாக்டர் சனார்த்தனம் அவர்கள் கூட புள்ளிவிவரங்களைச் சொன்னார்கள். அதை மறுபடியும் சொல்வது நல்லது என்பதால், நான் சொல்கிறேன். அவர்கள் 96 மேல் நிலைப் பள்ளிகளிலே சர்வே எடுத்திருக்கிறார்கள். வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர், செய்யார் என்ற இந்த நான்கு பிரிவு களிலேயும் கடந்த மூன்று வருடங்களுக்கு சர்வே எடுத்திருக்கிறார்கள். அதிலே இருக்கிற நிலைமைகளைப் பார்த்தால், உதாரணத்திற்கு வேலூரை எடுத்துக் கொண்டால், 1978-79-லே 647 பேர் தொழில் பிரிவிலே சேர்ந்திருக்கிறார்கள், 1979-80-லே 918 பேர் சேர்ந்திருக்கிறார்கள், ஆனால் இந்த ஆண்டு 1980-81-லே 865 ஆக அவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. குறைந்ததற்காக யாரையும் ஏன் என்று கேட்கவில்லை. யார் மீதும் குற்றம் சாட்டவில்லை. காரணம் இந்தத் தொழில் பிரிவிலே ஒரு தரம் வரவேண்டும் என்பதற்காக தரத்தைத்தான் பார்க்கிறோம். எண்ணிக்கையைப் பார்க்கவில்லை என்ற அடிப்படையிலே அந்தக் குறைபாட்டைப் பற்றி நடவடிக்கை எடுக்கவில்லை. தலைமையாசிரியர்கள் இந்த அடிப்படையிலே செயல்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அந்த சர்வேயில் 47 சதவீதம் மாணவர்கள், இந்த முதல் 'பேச்சில்' படித்தவர்கள், ஒரு தொழில் செய்கின்ற முறையிலே அல்லது வேறு பகுதியிலே தொழில் செய்யும் அளவுக்கு வேலையில் சேர்ந்திருக்

இறார்கள். 47 சதவீதம் பேர் மேலே படிக்கிறார்கள். என்ஜினியரிங் காலேஜ், மெடிக்கல் காலேஜ், ஆர்ட்ஸ் காலேஜ் என்று இப்படி 47 சதவீதம் பேர் படிக்கிறார்கள். நான்கு சதவீதம் பேரைப் பற்றிய விவரம் தெரியவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 47 சதவீதத்தில் 32 சதவீதம் பேர் மெரிட்டிலே தங்களுடைய தகுதியின் அடிப்படையிலே ப்ரொஃபஷனல் காலேஜிலே என்ஜினியரிங் காலேஜ், மெடிக்கல் காலேஜ் போன்றவற்றில் சேர்ந்திருக்கிறார்கள். பத்து சதவீதம் பேர், ஆர்ட்ஸ் காலேஜ்களில் சேர்ந்திருக்கிறார்கள். இந்தப் புள்ளிவிவரம், அந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அவர்களாகவே எடுத்தது. மற்ற மாவட்டங்களைப் பொறுத்த வரையில், ஏறக்குறைய அதிகமாகவும், கூடுதலாகவும் தான் இருக்கும். மற்ற மாவட்டங்களைப்பற்றி துறையின் மூலமாக இத்தகைய விவரங்களைச் சேகரிக்க முயற்சி எடுக்கப்படும்.

யூனிவர்சிட்டி தேர்வு முறையிலே ஏற்பட்டிருக்கிற காலதாமதம்பற்றிச் சொன்னார்கள். காலதாமதம் ஏற்படுவதை யாரும் ஆதரிக்க முடியாது. காலதாமதம் ஏற்படாத வகையில் பல்கலைக் கழகங்களில் இருக்கின்ற தேர்வுத் துறையினர் மிகவும் ஜாக்கிரதையோடு சிந்தித்து காரியங்களைச் செய்ய வேண்டும் என்று இங்கே சொல்லப்பட்ட அந்தக் கருத்துக்களோடு நானும் அவர்களுக்கு துறையின் மூலமாக அறிவுரை தரவிருக்கிறேன். ஆனால் ஏற்பட்டுவிட்ட காலதாமதத்திற்கு கம்ப்யூட்டரைத் தவிர மற்றபடி சொல்லப்படுகின்ற காரணங்கள் என்னவென்றால், 'இன்டர்னல் அசெஸ்மென்ட் மார்க்' வரவில்லை என்பது ஒன்று. கல்லூரிகள் பல்கலைக் கழகத்திற்கு நல்ல ஒத்துழைப்பைத் தருவதன் மூலமாகத்தான் பல்கலைக் கழகங்கள் குறிப்பிட்ட காலத்திலே காரியங்களைச் செய்ய முடியும். 'இன்டர்னல் அசெஸ்மென்ட் மார்க்கை அனுப்ப ஒரு தேதியைக் குறிப்பிட்டு அனுப்பச்சொன்னால், ஒரு மாதம் கழித்து அனுப்பினால், நிச்சயமாக அந்தத் தேர்வு முடிவு தாமதமாகத் தான் செய்யும். எனக்கு வந்திருக்கும் குறிப்பின்படி, ஜனவரி மாதம் இரண்டாவது வாரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது—அன்றைக்குள் அனுப்பிக் கொடுக்கவேண்டிய அந்த விவரங்களை, பிப்ரவரி மாதத்திலே தான் அனுப்பியிருக்கிறார்கள். அனுப்பிக்கொடுப்பதற்கு ஒரு மாத காலம் கூடுதலாக எடுத்திருக்கிறார்கள். அதற்கடுத்து, தேர்வுத் தாள்களைத் திருத்துவதிலே ஆசிரியர்கள் காலதாமதம் செய்கிறார்கள். ஆசிரியர்கள் காலதாமதம் செய்வது என்பது இந்தத் தேர்வு முடிவுகளைத் தாமதமாக வெளியிடுவதற்கு ஒரு காரணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும். வேண்டுமென்றே காலதாமதம் செய்தால், பல்கலைக்



கழகம் அவர்கள் மீது தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுதான் என்னுடைய கருத்தாகும். கம்ப்யூட்டரைப் பொறுத்த வரையில், எஸ்.எஸ்.எல்.சி. தேர்விலேயும், ஹையர் செகண்டரி தேர்விலேயும் பெருமளவிலே அதைப் பயன்படுத்துகிறோம். அதற்காக எடுத்திருக்கும் முயற்சி மிகவும் அதிகம். குறிப்பாக தேர்வுக்கு முன்னதாக சி.ஈ.ஓ. மற்றும் தலைமையாசிரியர்களைக் கூப்பிட்டு, அவர்களுக்குத் தனியாக ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி வகுப்பு நடத்துகிறோம். அவர்கள் பயிற்சி பெற்ற பிறகு, மாவட்டங்களுக்குச் சென்று அங்கே இருக்கும் அத்தனை ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கிறார்கள். ஆண்டுதோறும் அரசின் கவனத்திற்கு வருகின்ற குறைபாடுகளின் அடிப்படையாக வைத்து, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம். கம்ப்யூட்டரைப் பொறுத்தவரையில், அது சரியான முறையிலே தேர்வு முடிவுகளை வெளியிடுகிறது. கம்ப்யூட்டரைக் குறைகூற முடியாது. அதைப் பயன்படுத்துவதிலே இருக்கிற பல நன்மைகளைப் பார்க்கும்போது, கம்ப்யூட்டர் மீது குறைபாடு சொல்வது சரியல்ல. தேர்வுத் தாள்களைத் திருத்துவதிலே ஏற்பட்டுவிட்ட ஓரிரு தவறுகளை வைத்து, கம்ப்யூட்டரை உபயோகப்படுத்துவதைத் தவிர்த்தால், கம்ப்யூட்டரைப் பயன்படுத்தும் நாடுகளோடு நாம் முன்னேற முடியாது. நாமே நம்மைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். கம்ப்யூட்டரைப் பயன்படுத்துவதில் நம்மிடத்திலே இருக்கிற குறைபாடுகளைத் தவிர்க்க முயற்சிக்க வேண்டும். கம்ப்யூட்டர் மீது குறைசொல்லி அதைத் தவிர்க்கக் கூடாது.

பல்கலைக் கழகங்களில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு அதிகமான முக்கியத்துவம் தரப்படவில்லை என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் நேற்றைய தினம் பேசுகையில் குறிப்பிட்டார்கள். பல்கலைக் கழக ஆசிரியர்கள் பதவிகள் இட ஒதுக்கீட்டுபடி தரவேண்டும் என்ற கருத்தை அரசாங்கம் சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதை எந்த அளவுக்கு அவர்கள் ஏற்று நடத்துகிறார்கள் என்பது கேள்விக்குறி தான். அரசு அதில் நிச்சயமாக தீவிரமான கவனத்தைச் செலுத்தி நடவடிக்கை எடுக்கும். சென்னைப் பல்கலைக்

(பிற்பகல் 1-20)

கழகத்தைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஆறு பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்கூட 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்போலவே மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரை, ஐவர் 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணி

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 ஏப்ரல் 28

யாற்றும் ஒரே ஒரு தாழ்த்தப்பட்ட ஆசிரியர்கூட 1980-81 ஆம் ஆண்டில்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தப் புள்ளிவிவரங்களே கூட நாங்கள் பொறுப்புக்கு வந்த பிறகுதான் ஓரிருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கின்றன. என்றாலும் இது மகிழ்ச்சியடையக்கூடிய நிலை என்று நான் சொல்ல மாட்டேன். ஆனாலும் பரிபூரணமாக அனைவரும் மகிழ்ச்சியடையக் கூடிய நிலையை எதிர்காலத்தில் உருவாக்குவோம் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட ஆதிக்கங்களை ஒழிக்க வேண்டும் என்பதற்காகத்தான் பல்கலைக் கழகங்களின் சட்டங்களையே திருத்த வேண்டும் என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். சமுதாயத்தின் மேம்பாட்டுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறவர்கள், சமுதாயத்தின் தலைவர்களாக இருப்பவர்கள் இந்த அடிப்படையில் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, இவற்றையெல்லாம் கேளாக் காதினராக இருந்து கொண்டு, தங்களின் இஷ்டப்படியெல்லாம் எல்லாப் பதவிகளுக்கும் தங்களின் ஆட்களையே போட முடியும் என்று செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் பல்கலைக் கழகங்களின் சட்டங்களில் உள்ள பாதுகாப்புதான் என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. எனவே பல்கலைக் கழகங்களின் சட்டத்தைத் திருத்துகிற போது, இதையெல்லாம் இந்த அரசு கவனத்தில் கொண்டு உரிய முறையில் திருத்தங்களை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதியோர் கல்விபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. அதாவது இரண்டாவது நிலையில் இருந்த தமிழ் நாடு இன்றையதினம் மூன்றாவது இடத்திற்குச் சென்றுவிட்டது என்றும், மகாராட்டிரம் இரண்டாவது இடத்தைப் பிடித்துவிட்டது என்றும் சொன்னார்கள். அது உண்மைதான். 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி, தமிழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தது. ஆனால் 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையில் பார்க்கும் போது, முதியோர் கல்வியில் தமிழகம் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. எனவே இதற்கு யார் காரணம் என்றால், இந்த இடைப்பட்ட காலத்தில், அதாவது 1971 முதல் 1980 வரை பொறுப்பில் இருந்தவர்கள்தான். 1971 ஆம் ஆண்டிலிருந்து பொறுப்பில் இருந்தவர்கள் தாங்கள் செய்யத் தவறிய காரணத்திற்காக இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். எங்களைப் பொறுத்த மட்டில், இந்தக் குறைபாட்டை ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட உடனேயே உணர்ந்தோம். எழுத்தறிவு இல்லாமல் இருத்தல் என்பது சமுதாயத்தில் ஒரு கேவலமான நிலைமை என்பதை நாங்கள் சேர்ந்திருந்த



1981 ஏப்ரல் 28] [திரு. செ. அரங்கநாயகம்]

இயக்கத்தின் வாயிலாக உணர்ந்திருந்த காரணத்தால், நாங்கள் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட உடனே முதியோர் கல்விக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டோம். அதன் காரணமாக 3,600 மையங்கள் "செயல் முறைத் திட்டம்" என்ற அடிப்படையில் அமைந்தன. தொண்டு நிறுவனங்கள் மூலமாக 1,124 மையங்களும், உதவி பெறாத தொண்டு நிறுவனங்கள் மூலமாக 127 மையங்களும், நேரு இளைஞர் மன்றத்தின் மூலமாக 324 மையங்களும், பல்கலைக் கழகத்தின் மூலமாக 720 மையங்களும், மற்ற பிறவற்றின் மூலமாக 296 மையங்களும் ஆக மொத்தம் 6,241 மையங்கள் தமிழ் நாட்டில் தொடங்கப்பட்டன. எழுத்தறிவு தரும் இயக்கம் தீவிரமாக நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் செயல்பட ஆரம்பித்தோம். எழுத்தறிவு இல்லாமல் மக்களுக்கு நாம் எதைச் செய்தாலும், அதனால் பயன் இல்லாமல் போய்விடும் என்று மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. சங்காலிங்கம் அவர்கள் தெரிவித்த கருத்தை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். அந்த அடிப்படையில்தான் மிகுந்த ஊக்கத்தைத் தந்து பல்வேறு காரியங்களை நாங்கள் செய்துகொண்டு வருகிறோம். 1,124 மையங்களுக்கு மட்டுமே நமக்கு மத்திய அரசின் நிதி உதவி கிடைத்தது. ஆனால் மகாராட்டிரத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் 3,900 மையங்களுக்கான நிதி உதவியை மத்திய அரசிடமிருந்து பெற்றிருக்கிறார்கள். அந்த அளவுக்கு நமக்கு மத்திய உதவி கிடைக்கவில்லை. எனவே 1,124 மையங்களுக்கு மட்டுமே நாம் உதவியைப் பெற்றோம். நமது தமிழகத்தைப் பொறுத்தவரையில், இன்னும் அதிகமான நிலையில் மையங்கள் உருவாக வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

எழுத்தறிவித்தலைப் பொறுத்தவரையில், இது ஒரு கவனமாக இருந்து செயல்பட வேண்டிய துறை என்பதையும், அதில் நல்ல ஊக்கத்தோடு பாடுபட வேண்டும் என்பதையும் இந்த அரசு உணர்ந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நர்சரிப் பள்ளிகளைப்பற்றி தொடர்ந்து இங்கே கருத்துக்கள் சொல்லப்படுவதும், அதற்கு எங்கள் தரப்பிலிருந்து பதில் தருவதும் எல்லோரும் அறிந்ததே. இன்றைக்கு அத்தகைய பள்ளிகளை அரசு நடத்தாத காரணத்தால்தான், தனிப்பட்டவர்கள் நர்சரிப் பள்ளிகளை நடத்திக்கொண்டு வருகிற நிலை இருக்கிறது அரசைப் பொறுத்தவரை, சுமார் 30, 40 பள்ளிகளைத்தான் நாம் இந்த வகையிலே நடத்தி வருகிறோம். தொடக்கப் பள்ளிகளைப் போலோ அல்லது உயர் நிலைப் பள்ளிகளைப் போலோ பெரும் எண்ணிக்கையில் நர்சரிப் பள்ளிகளை அரசுத் தரப்பில் நாம் தொடங்கவில்லை.

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 ஏப்ரல் 28

மூன்று முதல் 5—6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் பள்ளிகள் தேவை என்ற வகையில் அரசு சார்பில் பள்ளிகளை அமைத்து, மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யாத காரணத்தால், இதைப் பயன்படுத்திக்கொண்டு தனிப்பட்டவர்கள் இன்றையதினம் நர்சரிப் பள்ளிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நர்சரிப் பள்ளிகளில் இருக்கும் முக்கியமான குறைபாடுகளை நாம் உணர்ந்தாக வேண்டும். அங்கே முதலாவது கட்டிட வசதிகள் இல்லை. கட்டிடங்கள் இருந்தாலும், போதுமான அளவுக்கு இல்லை. இரண்டாவது, அங்கெல்லாம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை. மூன்றாவதாக, அந்தப் பள்ளிகளில் வந்து சேருகிற மாணவர்களிடத்தில் அந்தப் பள்ளியை நடத்துகிறவர்கள் தங்கள் இஷ்டம்போல் பணம் வசூலிக்கின்ற முறை இருக்கிறது. அதோடு இவ்வாறு நம் கண்முன்னே நடைபெறும் இந்தக் கொள்ளைதான் பல உறுப்பினர்களை இங்கே அந்த அளவுக்குப் பேசத் தூண்டுகிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

நர்சரிப் பள்ளிகளை நடத்துகிறவர்கள் இவ்வாறு நடப்பதற்குக் காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். பொதுமக்களிடம் இருக்கும் தவறான எண்ணம்தான் இதற்கு முதற் காரணமாக இருக்கிறது. அரசாங்கத்தில் இத்தகைய பள்ளிகளை நடத்தாத காரணத்தால், மூன்று வயதான குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று ஆர்வம் ஏற்பட்டு எங்காவது கொண்டு போய்ச் சேர்ப்பது என்று முடிவு செய்து இப்படிப்பட்ட நர்சரிகளில் கொண்டு போய்ச் சேர்க்கிறார்கள். அதோடு தங்களுடைய பிள்ளைகள்—குழந்தைகள்—ஆங்கிலம் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் பொது மக்களின் மத்தியில் அதிகமாக இருக்கிறது. ஆங்கிலத்தைப் படிப்பது தான் படிப்பு என்றும், அதுதான் அறிவு என்றும் பொதுமக்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இதன் விளைவு என்ன ஆகிறது என்றால், எந்த நர்சரியில் வேண்டுமானாலும் கொண்டு போய்ச் சேர்த்து அங்கே ஆங்கிலம் கற்றுக் கொடுக்க வழி செய்கிறார்கள். ஆனால் உண்மை நிலை என்னவென்றால், பெரும்பாலான பள்ளிகள் நர்சரிப் பள்ளிகள் என்று பெயர் வைத்துக் கொண்டிருந்தாலும், பல இடங்களில் அவை எலிமெண்டரி பள்ளிகளாகத் தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. எல்.கே.ஜி., யு.கே.ஜி. மற்றும் ஒன்று முதல் நான்கு வகுப்பு வரை அவர்கள் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். அரசுப் பள்ளிகளைப் பொறுத்த வரை, 8 ஆம் வகுப்பு வரை மாணவர்களுக்குப் பரிட்சை வைத்து சேர்த்துக்கொள்ளலாம் என்று முறை வைத்திருப்பதால், அந்த மாணவர்களை அரசுப் பள்ளிகளில் கொண்டு வந்து



1981 ஏப்ரல் 28] [திரு. செ. அரங்கநாயகம்]

பிறகு சேர்க்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. அப்படி மாணவர்களைக் கொண்டு வந்து சேர்க்கும்போது, பெரும்பாலான மாணவர்களுக்குத் தமிழே தெரியாத நிலை இருப்பதைப் பார்க்க முடிகிறது. அரசாங்கத்தின் பள்ளியில் வந்து சேர்ந்த் பிறகு, தமிழ் படிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு மற்ற குழந்தைகளோடு சேர்த்து சரியான முறையில் கல்வியைக் கற்பிக்க முடியவில்லை.

இம்மாதிரி தமிழே தெரியாமல் லட்சக்கணக்கான குழந்தைகள் அறிவு என்ற பெயரில் சில ஆங்கில வார்த்தைகளை மட்டும் கற்றுக் கொண்டிருக்கிற நிலைதான் இன்றையதினம் இருக்கிறது. இதற்காக சரியான முறையில் கண்டனம் தெரிவிப்பது என்றால், அதை நாம் செய்தால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் கண்டிக்கிறார்கள் என்கிறார்கள். ஆனால் இதுபற்றி பத்திரிகையில் ஒரு கேலிச் சித்திரம் வந்திருந்தது. இரண்டு பையன்கள் பள்ளிக்கூடம் சென்று கொண்டிருக்கிறார்கள். அதில் ஒருவனுடைய பையன் "இங்கிலிஷ் மீடியம் ஸ்கூல்" என்று எழுதப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு பையன்களும் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டு போகிறார்கள். அதில் ஒரு பையன் மற்றவனைப் பார்த்து "நான் படித்துப் பெரியவனானதும் ஈஸ்ட் இந்தியா கம்பனியில் வேலைக்குச் சேரப் போகிறேன்" என்று சொல்லுகிறான். இதைவிட வன்மையாக வேறு யாராலும் இந்த முறையைக் கண்டிக்க முடியாது என்று நான் கருதுகிறேன். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில்தான் இத்தகைய கேலிச் சித்திரம் வரையப்பட்டிருந்தது. இந்த அடிப்படையில்தான் இந்த நாட்டில் நர்சரிப் பள்ளிகள் இன்றையதினம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த நர்சரிப் பள்ளிகள் அனைத்தையும் அரசின் மானியம் பெறுகிற பள்ளிகளாக மாற்றக் கூடிய அளவுக்கு நம்மிடத்தில் நிதிவசதியில்லை என்றாலும், இவற்றையெல்லாம் கட்டுப்படுத்தக்கூடிய கடமை இருப்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அதன் காரணமாகத்தான் நர்சரிப் பள்ளிகளைக் கட்டுப்படுத்தும் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு முறையும் நாங்கள் சட்டம் கொண்டுவருகிறோம் என்று சொல்வதுபோல் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தோன்றலாம். ஆனால் ஒவ்வொரு துறையாக அந்தச் சட்ட முன்வடிவு போய் வருவதன் காரணமாக இதில் கால தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது, எனவே பல துறைகளையும் கடந்து வெளியே வரும்போது, இதற்குரிய சட்டம் நிச்சயமாக வரும். அந்தச் சட்டம் நல்ல முறையில் நர்சரிப் பள்ளிகளையெல்லாம் கட்டுப்படுத்தும்

என்பதையும், அந்தப் பள்ளிகளில் எல்லாம் தமிழ் கட்டாயமாக மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படும் என்பதையும் இந்த நோக்கில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தனியார் பள்ளிகளில் தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யப்படும் ஆசிரியர்களுக்கு அந்தக் காலத்திற்கான பிழைப்பூதியம் தருவதில் பல சிரமங்கள் இருப்பதாக இங்கே அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இனி இப்படிப்பட்ட நிலைமைக்கு ஆளாகிற ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கான பிழைப்பு ஊதியத் தொகையை அரசே நேரடியாகத் தந்து விடுவது என்று முடிவு செய்திருக்கிறோம்.

மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், மேல் நிலைப் பள்ளி வகுப்பாசிரியர்கள், மேல் நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர்கள் ஆகியோருக்கான பணி விதிகளை நிர்ணயித்து அரசாணை இன்று வெளியிடப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

அதற்கு அடுத்து உயர் நிலை/மேல் நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர்கள் நியமனம் செய்வது குறித்து வெளியாகியுள்ள சில விதிகள் கீழ்க்கண்டவாறு இருக்கின்றன :—

முன்னாளில் இருமுனைப்பாட ஆசிரியர்களாக இருந்து இப்பொழுது மேல் நிலைப் பள்ளி வகுப்பு முழுநேரத் தொழிற் பாட ஆசிரியர்களாக, பி.டி. சம்பள விகிதத்தில், பணி செய்துவருபவர்களுள் ஆசிரியர் பயிற்சிப் பட்டம் பெற்றுள்ளவர்கள் உதவித் தலைமையாசிரியர்களாக நியமனம் பெறத் தகுதியுள்ளவராவர்,

2. உயர் நிலை/மேல் நிலைப் பள்ளிகளில் பயிற்றுமொழியானது தமிழ் மொழியாக அல்லாமல் வேற்று மொழியாக இருந்தால் குறிப்பிட்ட மொழிப் பண்டிதர்கள் அவர்கள் பணிமூப்பு உடையவர்களாக இருந்து, தமிழில் இரண்டாம் நிலை மொழித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தால் அவர்களும் உதவித் தலைமை ஆசிரியர்களாக நியமனம் பெற தகுதி உடையவர்களாவர்.

3. 1960-க்கு முன் ரூ. 60—4—120 என்ற சம்பள விகிதத்தில் ஊதியம் பெற்றுவந்த முதல் நிலை தமிழாசிரியர் பணிக்காலமும் உதவித் தலைமையாசிரியராக ஆவதற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.



4. உதவித் தலைமையாசிரியர் நியமனம் குறித்த அரசாணை 887/5—6—1979 வெளியிடுவதற்கு முன்னரே உதவித் தலைமையாசிரியர்களாக பணி செய்து வந்தவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டு, அவர்கள் உதவித் தலைமை ஆசிரியர்களாக நீடிக்கின்றனர். அத்தகைய பள்ளிகளில் ஏற்கெனவே உள்ள உதவித் தலைமையாசிரியரோடு அந்த அரசாணைக் கோட்பாடுகளின்படி இரண்டாவதாக ஒரு உதவித் தலைமையாசிரியரை நியமித்துக்கொள்ள அனுமதிக்கப்படும்.

என்ற முடிவுகளை அரசு எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கடைசியாகச் சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்த இட ஒதுக்கீடு பிரச்சினையைப் பற்றியதாகும். ஜாதி வேறுபாடு உணர்வுகளைச் சேர்த்துப் பேசியிருக்கிறார்கள். ஆகவே இட ஒதுக்கீடுகளை எடுத்துவிட வேண்டுமென்று பேசுகின்ற அளவுக்கு இன்றைக்கு நிலைமைகள் வந்திருப்பதை நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இட ஒதுக்கீடு சமுதாயத்திலே ஆண்டாண்டுக் காலமாக இருக்கிறது. படிக்கக்கூடாது என்று சொல்லப்பட்ட ஜாதியினர், ஜாதி அடிப்படையின் காரணமாக, அந்த ஜாதி அடிப்படையிலே உழைக்கின்றவர்கள் படிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டு படிக்க முடியாத நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு வாய்ப்புத்தர வேண்டுமென்ற அடிப்படையிலே, அதுவும் பெரும்பான்மையாக இருப்பவர்களுக்கு சமூக நீதியாக நினைத்து இடம் அளித்து வாய்ப்புத்தந்திருக்கிறோம். சமூக நீதியின் அடிப்படையில் நாம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் அந்த உரிமைகளைப் பெறுகின்ற மாணவர்கள், இன்றைக்கு ஜாதி உணர்வு அடிப்படையிலே நடைபெறுகின்ற பலாத்காரச் செயல்கள், கொலைகள், அடிதடிகள் இவைகளை வைத்து, அந்த இட ஒதுக்கீடு கொடுப்பதால் நிலைமை எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை உணர வேண்டும். அவர்கள் தங்களுடைய பொறுப்பை உணர வேண்டும். இன்றைக்கு அந்த ஒதுக்கீட்டைப் பெற்று அந்த அடிப்படையின் கீழ் அவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வாய்ப்பை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். அவர்கள் அதைச் சரியாகப் பயன்படுத்தவில்லை என்றால், அந்த இட ஒதுக்கீட்டை நீடித்துக்கொண்டிருக்கிறோம். அதிலே நாங்கள் உறுதியாக இருப்போம். அவர்களுக்கு அந்த இடங்களைப் பெறுகின்ற வாய்ப்புகளை அளிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அதன் காரணமாக அடிதடிகள் ஏற்படுவது, தகராறுகள் ஏற்படுவது என்று இருப்பதால், பெரும்பாலும் பாதிப்புக்குள்ளாகின்றவர்கள் மாணவர்கள்தான். உயர் ஜாதிக்காரர்கள், அதற்கு அப்பாற்பட்டு

படிக்க இடம் பெற்று வருபவர்கள் பாதிக்கப்படுவதில்லை. அவர்களுக்குச் சொல்லித் தரப்படவில்லை என்றாலும், வேறுசில முறைகளிலே அவர்கள் தேர்விலே பாஸ் செய்து முன்னுக்கு வந்துவிடுகிறார்கள். நாம் யார் முன்னுக்கு வரவேண்டுமென்று கருதி இடம் ஒதுக்கீடு செய்திருக்கிறோமோ அதைப் பயன்படுத்தவில்லை என்றால், விவரம் தெரியாமல் இத்தகைய நிலைமையில் ஈடுபடுவார்களானால் இதை நிச்சயமாக யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இது குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டப் போகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை விரைவிலே கூட்ட இருக்கிறோம். எல்லாக் கட்சியினரும் ஏற்றுக்கொண்ட ஒரு சமூக நீதியை, குறிப்பிட்ட காலத்திற்காக, இந்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட ஜாதியினருக்குத் தந்து கொண்டிருக்கின்றதால், அது வீணாகிக்கொண்டிருக்கின்றது என்பதை எந்தக் கட்சியினரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். நாம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு, அந்த மாணவர்களைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, இந்த இட ஒதுக்கீட்டினால் அவர்கள் பயன் அடையும் வகையில் நல்ல முறையில் செய்வதற்கு நாம் நிச்சயமாக முயற்சி செய்வோம் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே இருமொழிக் கொள்கையைப்பற்றி மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் பேசினார்கள். அதைச் சொல்வது அவர் சார்ந்திருக்கின்ற கட்சியினுடைய கடமை என்ற அளவில்கூட சொல்லியிருக்கலாம். ஆனால் எனக்குத் தெரிந்திருக்கின்ற விவரங்களின்படி சொல்கிறேன். 1977-ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் (இ), ஜனதா கட்சி, மற்றும் லோக் தல் கட்சி சொல்லியிருக்கின்றன. நான் சொல்வதெல்லாம் அகில இந்தியக் கட்சிகள். வெளிப்படையாக வோட்டுப் போடுகின்ற மக்கள் ஏற்றுக்கொள்கின்ற முறையில் 'நாங்கள் 3 மொழிக் கொள்கையை ஆதரிக்கிறோம்' என்ற அளவில் அந்தக் கட்சிகளுடைய தேர்தல் அறிக்கையிலே இல்லை என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். எல்லோருமே இருமொழிக் கொள்கையைத்தான் தேர்தல் அறிக்கையிலே வெளியிட்டிருக்கின்றார்களே தவிர வேறல்ல. 1977 தேர்தல் பிரகடனத்திலே அப்படி வெளியிட்டிருக்கிறார்கள். அனைத்துக் கட்சிகளும் அப்படி வெளியிட்டிருக்கின்றன. கல்வித் துறையைப் பொறுத்த மட்டில், இது ஒரு மிகமுக்கியமான நன்றாக இருந்தது என்று நான் கருதுகிறேன். இனி அனைத்து இந்தியாவிலே இருமொழிக் கொள்கை அல்லது மும்மொழிக் கொள்கை என்று கொள்கையைப் பற்றி நிர்ணயிப்பது என்று சொன்னால், அதை தேர்தல் பிரகடனத்தைப் பொறுத்து, அதன் அடிப்படையிலேதான் நிர்ணயிக்க முடியும். அந்த முறை



யில்தான் நிர்ணயிக்க வேண்டுமே தவிர, வேறல்ல. வோட்டு வாங்குகிறபோது ஒன்றைச் சொல்லி, அதற்குப் பிறகு இன்னொன்றைச் சொல்வது தவறாகும். அந்தத் தவற்றைச் செய்ய வேண்டாம் என்ற அடிப்படையிலே பார்க்கிறபோது, எல்லாக் கட்சிகளும் அனுபவத்தின் மூலமாகவும், வேறு சில அடிப்படைகள் மூலமாகவும் இருமொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையிலே, மும்மொழித் திட்டத்திலே தெளிவாகவே இருக்கிறது. எந்தக் காலத்திலும் பின்வாங்கவில்லை. அதிலே தெளிவாகவே சொல்லிக் கொண்டிருக்கிறது. எந்த மாறுபாடான கருத்தையும் காங்கிரஸ் (இ) வெளியிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையிலே இருக்கிறதா என்றுதான் கேட்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி: இந்தக் கொள்கைதான் என்று தெளிவாக வந்துவிட்ட பிறகு ஒவ்வொரு முறையும் அதையே திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை. அந்தக் கொள்கையிலே ஏதாவது மாற்றம் செய்யும்போதுதான், அதைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கொள்கையின் அடிப்படையிலே அவர் கருத்தைச் சொல்கின்றார்கள். எங்கள் கொள்கை அளவிலே நான் சொல்கிறேன். தேர்தல் பிரகடனத்தைப் பாருங்கள் என்று சொல்கின்றேன். ஏதோ குற்றம் சாட்டுவதற்காகச் சொல்வதாகக் கருத வேண்டாம். நான் சொல்வது எல்லாக் கட்சியின் தேர்தல் பிரகடனத்தையும் தயவுசெய்து பாருங்கள். அப்படித்தான் உருவாகி வந்திருக்கிறது. அந்த நிலைமையிலே இருந்தால்கூட, அது எங்களுக்கு வெற்றிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மும்மொழியினை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்வதற்குக் காரணம், மூன்றாவது மொழியைப் படிக்க முடியாது என்பதற்காக அல்ல. அந்த மொழியின் மீது துவேஷம் என்பதல்ல. அதன் காரணமாக இல்லை. எந்தக் காரணத்தைக்கொண்டும் எந்த அடிப்படையிலேயும், ஒருவர் இன்னொருவர் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடாது என்கின்ற

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 ஏப்ரல் 28

கின்ற தன்மை இருக்கக்கூடாது என்ற அடிப்படையிலேதான் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். சமூக நீதியைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். ஜாதி அடிப்படையிலே நடைபெறக்கூடாது, பிரதேச ஆதிக்கம் இருக்கக் கூடாது என்கிறோம். முதலாளித்துவத்தை எதிர்க்கிறோம் என்றால், பணத்தை எதிர்க்கவில்லை, அவர்களால் ஆதிக்கம் வருவதை, சுரண்டப்படு கின்ற தன்மை வருவதைத்தான் எதிர்க்கிறோம் என்று சொல்லிக்கொள் கிறேன். ஆதிக்கத்தின் அடிப்படையிலே நடைபெறக்கூடாது. மொழியின் அடிப்படையிலே ஆதிக்கம் கூடாது என்று சொல்கிறோம். உண்மையான ஒருமைப்பாட்டை நாம் உண்டாக்கிய நிலையில் இருக்க வேண்டும். ஒன்று பட்டு ஒருமைப்பாட்டை வளர்க்க வேண்டும். அந்த அடிப்படையிலேதான் இந்தியாவைப் பாதுகாக்க முடியும். இந்தியாவை ஒருமைப்படுத்த வேண்டு மென்றால், அந்தமாதிரி தன்மை இல்லாமல் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்தியா ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றால், இந்தி படிக்க வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள். அப்படிச் சொன்னால் இன்னும் நிலைமை மாறுகின்ற நிலைமைகள் ஏற்படும். இப்போதுகூட பற்ற மாநிலங்களிலே உள்ள நிலைமைகளைப் பார்க்கிறோம். ஒருமைப்பாட்டுக்கு நேர்மாறாக நிலைமைகள் ஏற்படுகின்ற அளவுக்கு இருக்கின்றது. இதை யெல்லாம் பார்த்து மத்திய அரசிலே இருப்பவர்கள் தயவுசெய்து யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 10 ஆண்டு காலம் கழித்த பிறகும் அதைப்பற்றியே பேசிப் பயன் இல்லை. இந்தியாவிலே எந்த பாகத் திலே இருப்பவனாக இருந்தாலும், இந்தியன் என்ற ஒரே உணர்வு இருக்க வேண்டும். எந்த இடத்திலே இருந்தாலும் இந்திய நாட்டைச் சேர்ந்தவன் என்ற உணர்வு இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்தி னால்தான், இந்திய ஒருமைப்பாட்டைக் காக்க முடியும். அதற்கு மாறாக வந்துவிடாது என்ற அடிப்படையிலேதான் இந்தக் கருத்தை சொல்லிக்கொண் டிருக்கிறோம். நாம் பல இடங்களிலே சொல்லிக்கொண்டிருக்கிறோம். அனுபவத்தின் அடிப்படையிலே தான் நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். 1977 தேர்தல் பிரகடனத்தில் அகில இந்திய அடிப்படையிலே நடந்த தேர்தல் பிரகடனத்திலே, காங்கிரஸ் (ஐ) பற்றி மட்டும் சொல்லவில்லை. அனைத்து கட்சிகளின் பிரகடனத்திலேயும் அந்தக் கருத்து இருந்தது என்பதைத்தான் சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் இந்தியை நுழைப்பார்களென்ற குற்றச் சாட்டைச் சுமத்தும் அளவிற்கு ஒரு வாய்ப்பை எந்தத் தேர்தல் பிரகடனமும் தரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருமொழிக் கொள்கை என்பது தமிழ் நாட்டில் கடைப்பிடிக்கப்படும் கொள்கை. எதிர் காலத்தில்



1981 ஏப்ரல் 28] [திரு. செ. அரங்கநாயகம்]

இந்தக் கொள்கை மற்ற கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதுதான் இந்த நாட்டினுடைய சிறந்த மொழிக் கொள்கையாகச் செயல்படுமென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆட்சிமொழிக் கொள்கைக்கும், பயிற்சி மொழிக் கொள்கைக்கும் வித்தியாசம் இருக்கிறது. இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துப் பேசும்போது குழப்பம் வருகிறது. இருமொழிக் கொள்கையில் ஆங்கிலம் என்று சொல்லும்போது, 'ஆங்கிலம்' பயிற்று மொழி என்பது பற்றிப் பேசுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர்கள் இன்னும் நிறைய பேச வேண்டும். அவர்கள் அதிகமாகப் போகாததுதான் அப்படிப்

(பிற்பகல் 1.40)

பேசுவதற்குக் காரணமாக இருக்கும். கல்வியின் நோக்கம் மொழியறிவை மட்டும் பெறுவதுதான் என்றால், பயிற்று மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் கல்வி பெறுவதென்பது அறிவு பெறுவதற்காக என்றால், 40 நிமிடங்கள் வகுப்பு நடக்கிறதென்றால், அதில் இரண்டு முறையாவது மாணவன் சிந்திக்கின்ற வாய்ப்பைப் பெற வேண்டும். அப்போதுதான் அவனுடைய அறிவு வளருமென்று ஏற்றுக்கொண்டால், அதற் கான சிறந்த கருவி தாய் மொழியைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. அது அகில இந்திய அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றுதான். அந்த அடிப்படையிலேதான் கல்லூரிக்குத் தேவைப்படும் புத்தகங்களைத் தமிழில் வெளியிட 1 கோடி ரூபாய் அளவிற்கு யூ.ஜி.சி.தந்தது. அப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்ததால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவ ரவர்கள் சொன்னது போன்று, அவர்கள் 700, 800 புத்தகங்களை வெளியிட்டு விட்டார்கள். இப்போது அப்படிப்பட்ட நிதி உதவி தந்தால், இப்போதும் வெளியிட நாங்கள் தயாராக இருக்கிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்கி றேன். மொழிக் கொள்கை என்று வரும்போது, தாய்மொழி மூலம் அறிவு பெற வேண்டுமென்பதில் உலகத்தில் யாருக்கும் மாறுபட்ட கொள்கையில்லை. ஆனால் ஆட்சிமொழி என்று வரும்போது, எங்களுக்குள்ள கொள்கையைச் சொல்லிக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே தெளிவாக இருந்து, அதற் கேற்ப கல்வித் துறையைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதில் பொதுமக்கள் கருத்து தவறான கருத்தாக இருந்தாலும், தவறான கருத்து என்பதால் பெருமளவிற்கு மோதலை ஏற்படுத்தாமல், நாம் சுமுகமானதொரு கொள்கையை, கல்விக் கொள்கையை வெற்றி அடையச் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம். மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 30 ஆக இருந்தவை இன்றைக்கு 60 ஆகியிருக்கிறது. அந்தக் கொள்கையில் ஆணித்தரமாக இருந்து, மோதல் வந்தால் வரட்டும் என்று எண்ணி, கல்வித் துறையில் மூர்க்கத்

தனமாக, ஆணித்தரமாகச் செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட கட்டாயம் வரும்போது, அனைவருடைய ஒத்துழைப்பையும் பெற்றுச் செய்யலாம் என்று சொல்லி, கல்வித் துறையில் இந்த அளவிற்குக் காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறோமென்று தெரிவித்து, அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, ஒரேயொரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் நம்முடைய தமிழகம் எழுத்தறிவில் 3 ஆம் இடத்திற்குப் போனதற்கு 1971 லிருந்து 1981 வரை ஆட்சியில் இருந்தவர்கள் பொறுப்பு ஏற்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி பொறுப்பு ஏற்பதில் கருத்து வேறுபாடில்லை. மக்கட்தொகை கணக்கெடுப்பில், உன் பெயர் என்ன, வயதென்ன, எழுதப் படிக்கத் தெரியுமா என்று கேட்டார்கள். எழுதப் படிக்கத் தெரியுமென்றால், 'தெரியும்' என்று சொல்லுகிறார்கள். எழுதப் படிக்கத் தெரியாதவன், தெரிந்ததாகச் சொல்வதில்லை. படித்தவர்கள் வேண்டுமானால் பொய் சொல்லலாம், படிக்காதவர்கள் பொய் சொல்வதில்லை. 1977-லே ஜனதா அரசு வந்தவுடன் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கிற முதியோர் கல்வித் திட்டத்தை வகுத்து, நிரம்ப அதற்கு நிதி ஒதுக்கியது. ஒவ்வொரு மாநிலத்திலும் பஞ்சாயத்து யூனியன்கள் முதியோர் கல்வித் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அறிவித்து, அதற்கு 'அப்ளிகேஷன் கால் பார்' பண்ணினார்கள்: பிரைவேட் ஏஜன்சிகள் நிறைய பேர்கள் அப்ளிகேஷன் போட்டார்கள். அதுபோன்று மகாராட்டிர மாநிலத்திலும் அப்ளிகேஷன் போட்டார்கள். தமிழ் நாட்டில அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், நாங்கள்தான் அந்தத் திட்டத்தை நடத்துவோம், நீங்கள் நேரடியாக நடத்தக் கூடாது, அந்தப் பணத்தை எங்களிடம் கொடுத்து, அந்தத் திட்டத்தை நாங்கள் நடத்த வேண்டுமென்று கருத்து தெரிவித்ததால், பஞ்சாயத்து யூனியன்களில் அந்தத் திட்டத்தை அமுல்படுத்த முடியாமல் காலதாமதம் ஏற்பட்டது. அதில் மகாராட்டிர மாநிலம் மிஞ்சிவிட்டது. எனவே, இதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள் 1977-க்கும் 79-க்கும் இடையிலேதான் இருக்கிறார்கள், அதற்கு முன்னால் இல்லை என்பதை விளக்கமாகச் சொல்லி, அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் காலை 9-30 மணிக்குக் கூடும்

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-44)



## 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

255. Notification issued with G.O. Ms. No. 569, Education, dated the 31st March 1981 in regard to nomination of Thiru K. Narayanaswamy, Chief Engineer (General), Tamil Nadu Electricity Board, Anna Salai, Madras-600 002 as a member of the Academic Council with effect on and from 31st March 1981 in the place of Thiru C. Sanjeevi, Chief Engineer (General), Tamil Nadu Electricity Board, Madras who has retired. [Laid on the table of the House under section 43 (2) of the Perarignar Anna University of Technology Act, 1978 (Tamil Nadu Act 30 of 1978).

### B. *Reports, Notifications and Other Papers.*

* 140. Policy Note on Road Transport Services and Shipping. (Tamil and English).

* 141. Note on Review of Performance of Transport and Shipping Corporations. (Tamil and English).

142. Policy Note on Food Situation in Tamil Nadu. (Tamil and English).

143. Answers to Unstarred Question Nos. 13 to 17.

* 144. Policy Note on Fisheries, 1981-82. (Tamil and English).

* 145. Performance Budget on Fisheries, 1981-82. (English).

---

* Circulated to all M.L.Cs. on 27th April 1981.

## இணைப்பு I

[239 ஆம் பக்கத்தில் வினா எண் 15-க்கான அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ் நாட்டில் வேலை தொடங்கி 15–6–80 நாளன்றுள்ளவாறு முற்றுப்பெறாத சாலைகள் குறித்த மாவட்ட வாரியான விவரங்கள்.

| வரிசை எண். | மாவட்டம் | தேசிய நெடுஞ்சாலைகள் — நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறை. | தேசிய நெடுஞ்சாலை நிதியில் இருந்து. | மத்திய சாலை நிதிக்கட்டின் கீழ். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | செங்கல்பட்டு | 6 | 7 | 1 |
| 2 | தென்னாற்காடு | 7 | 7 | 1 |
| 3 | வட ஆற்காடு | 4 | 8 | 3 |
| 4 | திருச்சி | 9 | 12 | — |
| 5 | புதுக்கோட்டை | 10 | — | — |
| 6 | மதுரை | 8 | 8 | — |
| 7 | திருநெல்வேலி | 19 | 20 | 1 |
| 8 | இராமநாதபுரம் | 26 | 17 | 1 |
| 9 | கன்னியாகுமரி | 6 | 2 | — |
| 10 | சேலம் | 3 | 6 | — |
| 11 | பெரியார் | 50 | — | 1 |
| 12 | கோயம்புத்தூர் | — | 1 | 1 |
| 13 | தஞ்சாவூர் | — | — | 1 |
| 14 | தர்மபுரி | — | 6 | 1 |
| 15 | சென்னை (நெடுஞ்சாலை ஆராய்ச்சிப் பணிகள்) | — | — | 2 |



## இணைப்பு II

[240 ஆம் பக்கத்தில் வினா எண் 17—க்கான அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ்நாடு அரசு, சட்டமன்ற மேலவைத்துறை, திரு. ஜி. சுவாமிநாதன், எம். எல். சி. அவர்களின் நட்சத்திர குறியிடாத வினா எண். 821—க்கான விவர அறிக்கை.

| வரிசை எண். | மாவட்டம் | தமிழ் புலவர் பயிற்சி பெற்று உயிர் பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை. — பயிற்சி பெற்றோர். | பயிற்சி பெறாதோர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | சென்னை | 285 | 19 |
| 2 | செங்கல்பட்டு | 144 | 13 |
| 3 | வேலூர் | 263 | 65 |
| 4 | கடலூர் | 313 | 24 |
| 5 | புதுக்கோட்டை | 57 | 14 |
| 6 | திருச்சி | 205 | 8 |
| 7 | தஞ்சாவூர் | 332 | 54 |
| 8 | சேலம் | 232 | 48 |
| 9 | தர்மபுரி | 119 | 14 |
| 10 | கோயம்புத்தூர் | 204 | 148 |
| 11 | உதகமண்டலம் | 48 | 19 |
| 12 | மதுரை | 369 | 13 |
| 13 | இராமநாதபுரம் | 163 | 27 |
| 14 | திருநெல்வேலி | 184 | 46 |
| 15 | கன்னியாகுமரி | 457 | 60 |
| 16 | பெரியார் மாவட்டம் | 117 | 26 |
| 17 | உடல் ஊனமுற்றோர், சென்னை—35. | 2 | 2 |
| | மொத்தம் .. | 3,494 | 600 |

## இணைப்பு III

*[243 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

சென்னை வேப்பேரி நெடுஞ்சாலையிலுள்ள பெய்ன்ஸ் மெமோரியல் பேப்டிஸ்ட் சர்ச் மெட்ரிக்குலேஷன் பள்ளி 1978 ஜுன் திங்கள் முதல் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையால் சென்னை பல்கலைக் கழகத்திடமிருந்து ஏற்கப் பட்ட 28 பள்ளிகளில் ஒன்றாகும். இப்பள்ளி ஏற்கெனவே சென்னை பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருப்பினும், தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை யால் இன்னும் அங்கீகாரம் செய்யப்படவில்லை. இப்பள்ளிக்கு தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையால் முறைப்படி அங்கீகாரம் அளிக்கும் பொருட்டு உரிய படிவத்தில் தேவையான விவரங்களை அனுப்பும்படி இப்பள்ளியின் தாளாளர் கோரப்பட்டபோது, அவர் ஏற்கெனவே இப்பள்ளி பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டதால் மீண்டும் ஒரு முறை தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் அங்கீகாரம் பெறத் தேவையில்லையெனக் கூறி உரிய படிவங்களில் விவரங்கள் அனுப்ப மறுத்து சென்னை நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆயினும் தாளாளரிட மிருந்து அங்கீகாரம் கோரும் விண்ணப்பத்தை இன்னும் அனுப்பவில்லை. இதனால் இப்பள்ளி இன்னும் பள்ளிக் கல்வித்துறையினால் அங்கீகரிக்கப்படாத நிலையிலே இருக்கிறது.

2. இப்பள்ளியில் மொத்தம் 12 ஆசிரியர், ஆசிரியைகள் பணி புரிகின் றனர். அவர்களில் திரு. வி. மாணிக்க குமார் என்பவர் 14—8—1980 முதல் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தார். மெட்ரிகுலேஷன் பள்ளிகள் நெறி முறைகள் அத்தியாயம் 6 விதி 20-ன்படி, தற்காலிகமாக அல்லது தகுதிகாண் பருவத்தினராக (Probationer) நியமிக்கப்படும் ஆசிரியரை வேண்டுமென்றே கடமை செய்யத் தவறுதல், பெரிய ஒழுங்கீனமான செயல் (Serious misconduct) ஆகிய காரணங்களுக்காக முன்னறிவிப்பு ஏதுமின்றி பணி நீக்கம் செய்ய நிர்வாகத்தினருக்கு அதிகாரம் உண்டு. திரு. வி. மாணிக்க குமாரின் பணியில் திருப்தி காணாததால் தாளாளர் அவரை 5—2—1981 முதல் பணி நீக்கம் செய்து ஒரு மாத ஊதியத்துடன் பணியி லிருந்து விடுவித்தார். திரு. மாணிக்க குமார் ஊதியத்தை பெற்றுக்கொண்ட தோடு பள்ளியில் அவரது கணக்குகளையும் முடித்துக்கொண்டு விட்டார். சக ஆசிரியர்களான திருவாளர்கள் வி. டேவிட், டி. ஏ. ராஜாசிங் மற்றும்



ஜி. அகஸ்டின் ஆகிய மூன்று ஆசிரியர்களும் மேற்கூறிய திரு. வி. மாணிக்க குமாரின் பணி நீக்கத்தை எதிர்த்து அன்னாரை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளும்படி நிர்வாகத்தினரை வற்புறுத்தி அவர்கள் வகுப்புகளுக்கு செல்லா மல் இருந்ததால் அவர்களையும் ("Wilful neglect of duty and gross insubordination) வேண்டுமென்றே கடமையாற்ற தவறிய மற்றும் கீழ்படியாமை ஆகிய காரணங்களுக்காக 10—2—1981 முதல் (Suspension) தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். நிர்வாகத்தினர் அவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

3. எனினும் பெயன்ஸ் மெமோரியல் பேப்டிஸ்ட் சர்ச் மெட்ரிகுலேஷன் பள்ளியின் நிர்வாகத்தினருக்கு இது மாதிரியான நிலைமைகள் இனி நேரா வண்ணம் பார்த்துக்கொள்ளும்படி தக்கவாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## இணைப்பு IV

[244 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர் சங்கத்தினர் சிறுபான்மைப் பள்ளிகளில் பணியாற்றும் பல ஆசிரியர்கள் நிர்வாகத்தினரால் பழிவாங்கப்பட்டு பணி நீக்கம் செய்வதை எதிர்த்தும், அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் முறையீடுகளை சட்டப்பிரிவுகளின்படி ஏற்று அரசு முடிவு கூறவேண்டும் என்றும், இதுவரை மறுக்கப்பட்ட முறையீடுகளை மறுபடியும் அனுமதித்து ஆணையிடவேண்டும் எனவும் 7—3—1981 பள்ளிக்கல்வி இயக்குநர் அலுவலகம் முன்பு தர்னா நடத்தினர்.

மேற்கண்ட சங்கப்பிரதிநிதிகளுடன் 7—3—1981 அன்று பள்ளிக்கூட கல்வி இயக்குநர் கலந்துரையாடி அவர்களது கோரிக்கை விண்ணப்பங்களையும் பெற்றுக்கொண்டு, அவர்களுடைய குறைபாடுகளும் கேட்டறிந்துள்ளார். இப்பொருள் தொடர்பாக உள்ள கோரிக்கைகளை பரிசீலனை செய்து மீண்டும் 7—5—1981 அன்று இயக்குநருடன் சங்கப் பிரதிநிதிகள் கலந்து பேசலாம் என தெரிவிக்கப்பட்டு அதில் திருப்தியடைந்த ஆசிரியப் பிரதிநிதிகள் கோரிக்கை மனுக்களை கொடுத்துச் சென்றுள்ளனர். இதன் காரணமாக எவ்விதமான பதட்டநிலையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

### புதன்கிழமை, 1981 ஏப்ரல் 29.

(சித்திரை 17, துன்மதி—2012, திருவள்ளுவராண்டு.)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்று இரண்டு கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம் நடைபெற இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் துணைக் கேள்விகளை குறைத்துக்கொண்டு சீக்கிரம் கேள்வி நேரம் முடிவதற்கு ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

#### ஆத்தூர், அருள்மிகு திரௌபதி அம்மன் அக்கினித் திருவிழா.

*1. கு.கா. வினா—திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் அருள்மிகு தர்மராஜர் திருக்கோயில், அருள்மிகு திரௌபதி அம்மன் அக்கினித் திருவிழாவுக்கு அறநிலையத் துறையினர் ஆரம்பத்தில் முறையான உத்திரவு வழங்கியிருந்தும், தற்போது ஆலய தங்க நகைகளை தங்கள் வசம் வைத்துக்கொண்டு சட்ட விரோதமாகத் தொல்லை கொடுத்து வரும் ஒரு சமூகத்தைச் சார்ந்த கூட்டத்தினரை தடுத்து நிறுத்த தயங்குகின்றனர் என்பதும், நீதிமன்றத் தீர்ப்பினை அமுல்படுத்தத் தயங்குகின்றனர் என்பதும் உண்மையா?

(இ) இதனால், 5—5—1981 வரை நடக்கவிருக்கும் திருவிழா தடைபடும் நிலை உருவாகியுள்ளது என்பதும், மேலும் ஆத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரத்திலுள்ள இந்துமதப் பற்றுள்ள மக்களிடையே பதட்ட நிலை உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதும் உண்மையா?

(உ) ஆம் எனில், இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்தி, திருவிழா தொடர்ந்து நடைபெற, அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவரவர்களே, விவர அறிக்கை@ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சோ. ஆறுமுகம்:** நாற்பது ஆண்டு காலமாக துளுவ வேளாளச் சமூகத்தினர் ஆத்தூர் அருள்மிகு தர்மராஜா மற்றும் அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோவில் திருவிழாவை அவர்களே சொந்த முறையில் நடத்தி வந்தார்கள். இப்போது அரசினுடைய, அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் அது கொண்டுவரப்பட்டதற்குப் பிறகு, அறங்காவலர்களாக திரு. அ. ராசாராம், திரு. எம். வெங்கடாசல நாயக்கர், திரு. எம். மாரிமுத்து ஆகிய மூவர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை சேலம் உதவி ஆணையாளர் நியமித்துள்ளார். இவர்கள் திருவிழா நடத்துவதற்காக இந்த ஆண்டு அனுமதி வேண்டி விண்ணப்பித்து இவர்களுக்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த சிறு பிரிவினர் இப்போது தலையிட்டு 24—4—1981 அன்று கலவரம் ஏற்படுத்தியுள்ளதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இதனுடைய முழு விவரங்களையும் விவர அறிக்கையிலே விளக்கமாகத் தெரிவித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்ததுபோல், அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டதற்குப் பிறகு, இந்தத் திருவிழாவைப் பொறுத்தவரையில், துளுவ வேளாளச் சமுதாயம் அவர்கள் செய்கிற கட்டளையை அவர்களே எல்லோரும் சேர்ந்து, கலந்து செய்ய வேண்டுமென்ற முறையில் அரசுக்கு வேண்டுகோள் வைத்தார்கள். ஆகவே அரசின் தரப்பிலிருந்து இதுபோன்ற மதச் சடங்குகள் சம்பந்தப்பட்ட திருவிழாவிலே கருத்து வேறுபாடு காரணமாக கலவரங்கள் குழப்பங்கள் வந்துவிடக்கூடாது என்ற கருத்தில், அந்தச் சமூகத்தைச் சேர்ந்த எல்லோரையும் ஒரு குழுவாகப் போட்டு அவர்கள் இந்தத் திருவிழாவை நடத்த வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதையும்

@ 465-466 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மீறி, இந்த அறங்காவலர்கள் குழுவை நியமித்ததே தவறு என்கிற முறையில் வழக்குமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். வழக்குமன்றத்திற்குச் சென்றவர்களைச் சேர்த்துக்கொள்ளாத நிலை ஏற்பட்டதால், இதுபோன்ற பூசல் ஏற்பட்டது. ஆனால், உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்போது அமைதியாக விழா நடைபெற்று வருகிறது.

**திரு. சோ. ஆறுமுகம்:** துணை ஆணையாளர் இந்தக் கோவிலுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டதற்குப் பிறகு, 17—3—1981 அன்று ஆத்தூர் மாஜிஸ்ட்டிரேட்டிடத்திலே திரு. எஸ். பொன்னன் மூப்பர், திரு. ஏ. ஜி. ராமு ஆகிய பிரிவினர் அவர்கள் தலையிடக் கூடாது என்று ஒரு தடை உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். அதைமீறி 10—4—1981 அன்று சென்னையிலே இருக்கிற அறநிலையத் துறை ஆணையாளர் அவர்கள் இந்தப் பிரிவினரையும் சேர்த்து விழாவை நடத்த வேண்டுமென்று ஒரு உத்தரவு அனுப்பியிருக்கிறார்கள். இது கோர்ட்டினுடைய தீர்ப்புக்கு முரண்பாடாக நடைபெற்றிருக்கிறது. இப்படி முரண்பாடாக, கோர்ட்டுத் தீர்ப்புக்கு எதிராக உத்தரவு வழங்கிய ஆணையாளர்மீது நடவடிக்கை எடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இதிலே எந்தச் சட்டத்தின்கீழ் அவர்கள் வழக்குமன்றத்திற்குப் போனார்கள் என்பதுதான் அடிப்படைப் பிரச்சினை. ஒரு அறநிலையத் துறை நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், ஒரு உதவி ஆணையாளர் எடுத்திருக்கிற முடிவுமீது அவர்களுக்குக் குறை இருப்பதாக உணர்ந்தால், அவர்கள் மேல் அப்பீல் செய்ய வேண்டுமானால், துணை ஆணையாளரிடத்திலே அப்பீல் பண்ண வேண்டும். துணை ஆணையாளரிடத்தில் குறை இருப்பதாக உணர்ந்தால், அப்போது அவர்கள் ஆணையாளரிடத்தில் வர வேண்டும். அங்கேயும் அவர்கள் குறை கண்டால், அரசிடத்திலே வர வேண்டும். அரசிடத்திலும் குறை கண்டால், நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும். இவர்கள் இடையிலேயே நீதிமன்றத்திற்குப் போய், எல்லாவற்றிற்கும் தடை உத்தரவு கொடுக்கும் பழக்கம் நீதிமன்றத்தில் இருப்பதால், இவர்களுக்கும் நீதிமன்றம் தடையுத்தரவு கொடுத்து விட்டது. ஆனால், இது சட்டப் பிரச்சினை அல்ல. ஒரு திருவிழா நடக்கும்போது, ஒரு குறிப்பிட்ட சமூகத்தின்மீது மனஸ்தாபம் ஏற்பட்டு குழப்பமும், கலவரமும் ஏற்பட வேண்டாம் என்கிற முறையில்தான் அறநிலையத் துறை அறிவுரை வழங்கியுள்ளது. ஆனால் ஆணை பிறப்பிக்கவில்லை. சட்டத்தின்கீழ் அவர்களைச் சேர்ந்தவர்களைத்தான் அறங்காவலர்களாக நியமித்திருக்கிறார்கள்.

இருந்தாலும் அது கூட தவறு என்று சொல்லி நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். திருவிழா என்பது பொதுமக்கள் கலந்துகொள்கிற ஒரு விழா. அதனால்தான் குழு போடப்பட்டது. ஆகவே சமுதாயம் முழுமையாக ஒத்துழைத்து செய்யக்கூடியதுதான் ஒரு திருவிழா என்பது. இதிலே எந்தவிதமான குழப்பமும் வரக்கூடாது என்கிற முறையில்தான், நல்ல எண்ணத்தில்தான் ஆணையரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அவர் ஆணை பிறப்பிக்கவில்லை. இதிலே எந்தவிதமான நீதிமன்ற மீறலும் இல்லை, அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையும் இல்லை. எப்படி சமுதாயத்திலே ஒரு திருவிழாவின் போரால், சமயங்கள் போரால் குழப்பங்கள், கலவரங்கள் நாட்டிலே ஏற்பட்டுவிடக் கூடாது என்கிற ஓர் உணர்வு நமக்கெல்லாம் இருக்கிறதோ இதே உணர்வின் அடிப்படைதான் இதிலும் கவனிக்கப்பட்டது.

### அருள்மிகு திருவாழிமார்பன் கோவில் தங்கக் கிரீடம்.

* 273. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருப்பதிசாரத்தில் திருவாழிமார்பன் கோவிலில் உள்ள, சுமார் மூன்று இலட்ச ரூபாய் மதிப்புள்ள, களவு போன கிரீடத்தை மீட்டுக்கொண்டு வந்தாகிவிட்டது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், மீண்டும் கிரீடம் உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(உ) இல்லையெனில், காரணம் யாது ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ), (இ) & (உ) கன்னியாகுமரி மாவட்டம் திருப்பதிசாரத்தில் கன்னியாகுமரி தேவஸ்வத்தைச் சார்ந்த திருவாழிமார்பன் கோவிலில் 21—2—1973 அன்று இரவு 1,145 கிராம் எடையுள்ள தங்கக் கிரீடம் காணாமல் போய்விட்டது. இது தொடர்பாக திருப்பதி சாரம் தேவசம் அர்ச்சகர் திரு. பி. எஸ். கிருஷ்ணன் நம்பூதிரி என்பவர் கேரள மாநிலக் காவல் துறையினரால் கேரள மாநிலத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். இந்தத் தங்கக் கிரீடம் எட்டு துண்டுகளாக நாகர்கோவில் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலிருந்து 4—2—1975 அன்று பெறப்



பெற்று பூதப்பாண்டி தேவசம் தொகுதி கருவூலப் பிரையில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. 1979 நவம்பர் மாதம் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்ட பிறகு கிரீடத்தை மூன்று கிலோ எடையில் புதுப்பித்து உபயோகத்திற்குக் கொண்டுவர ஆலயச் செயல் அலுவலர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. ம. சங்கரலிங்கம் : இப்போது குறிப்பிடப்பட்ட இந்தக் கிரீடம் 1975 ஆம் ஆண்டிலே மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டிலிருந்து எடுத்து வரப்பட்டு திருப்பதிசாரத்தில் திருவாழிமார்பன் கோவிலில் வைக்கப்பட்டது. இப்போது 1979 ஆம் ஆண்டுக்குப் பிறகு அறநிலையத் துறையால் அறங்காவலர் நியமிக்கப்பட்ட பிறகு, மூன்று கிலோ எடையுள்ள கிரீடம் செய்யப்பட்டு வருகிறது என்று இங்கே சொல்லியுள்ளார்கள். அந்தப் பணி முடிந்து விட்டதா ? இப்போது எத்தனை கிராமில் கிரீடம் செய்யப்பட்டுள்ளது ? கோயிலில், மீண்டும் கிரீடம் கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: இங்கேயிருக்கிற தகவலின்படி புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று இருக்கிறது. பணிமுடிந்துவிட்டதா அல்லது முடிந்து விட்டதற்குப் பிறகு அதனுடைய மதிப்பு என்ன என்பதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால், விளக்கமாகப் பதில் பெற்றுத்தர இயலும்.

### தர்மபுரி மாவட்ட ரிசர்வ் காடுகளில் சுட்டுக் கொல்லப்பட்ட யானைகள்.

* 274.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தர்மபுரி மாவட்டம் ரிசர்வ் காடுகளில், கழிந்த ஆறு மாதங்களில் எத்தனை யானைகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது ?

(இ) அவற்றில் அதிகாரிகள் சுட்டுக் கொன்றவை எத்தனை ?

(உ) அனுமதியில்லாமல் கிராம மக்கள் சுட்டுக் கொன்றவை எத்தனை ?

(எ) அனுமதியின்றி சுடப்படுவதைத் தடுக்க, அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

நடவடிக்கை எடுத்து காரியமாற்றுவதிலேதான் சிக்கல். நிருபர்கள் வந்து விசாரித்து, 'இப்படி இருக்கலாம்' என்று அந்த யூகத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கிருக்கும் யானைகள் கேரள எல்லைக்கோ, கர்நாடக எல்லைக்கோ செல்வதும் அங்கே இருக்கும் யானைகள் நம்முடைய எல்லைக்கு வருவதையும் தொடர்ந்து இப்படிப்பட்ட போக்குவரத்து, ஒரு மைகிரேஷன் என்ற அளவிலே நடக்கும். இது இயற்கை. ஆனால் இந்த யானைகள் தண்ணீர் தேடி காவேரி நதிப் பக்கம் வந்ததா என்பது தெரியாது. வந்ததற்குப் பிறகு இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இன்னும் சொல்லப்போனால், நமக்குத் தேவையான பாதுகாப்பு அதிகாரிகள் கூட இல்லை. அதனால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இந்தச் சம்பவங்கள் நடைபெற்றதையொட்டி தீவிர நடவடிக்கை எடுத்து, பல பேர் கைது செய்யப்பட்டு, வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தக் காரியத்தில் ஈடுபட்ட சிலர் தலைமறைவாகி இருக்கிறார்கள். இதைத் தீவிரமாக அரசு கவனித்துக் கொண்டிருக்கிறது. இனிமேல், இந்தமாதிரி நிகழ்ச்சி நடக்காமல் விழிப்போடு அரசு இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தர்மபுரி பகுதியில் எத்தனை யானைகள் நிரந்தரமாக இருக்கின்றன என்ற கணக்கை வனத் துறை எடுத்திருக்கிறதா? பொதுமக்களால் ஏதாவது இடையூறு ஏற்பட்டிருக்கிறது என்று இந்த யானைகள் முறையீடு ஏதாவது செய்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தனியாகக் கேள்வி கேட்டால், தமிழ் நாட்டிலே எத்தனை யானைகள் இருக்கின்றன, எல்லா மாவட்டப் பகுதிகளிலேயும் எவ்வளவு யானைகள் இருக்கின்றன என்ற விவரங்களைத் தரலாம். பொதுமக்கள் மீது யானைகள் புகார் செய்ததாகத் தகவல் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அசல் கேள்வி குறிப்பிட்ட பகுதியைப் பற்றியது. துணைக் கேள்விகளைத் தவிர்த்தால், மிகவும் நல்லது என்ற நிலைமை இருக்கும்போது, இவ்வளவு விரிவாகப் போகக்கூடாது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** சுவையாக இருக்க வேண்டும் என்றுதான் கேட்டேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இப்போது சுவை தேவையில்லை, நேரம்தான் தேவை.





*Panchayat Union Medical Officers' Association, Thanjavur.*

* 275 THIRU A. R. DAMODARAN (on behalf of) THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) whether any representation has been received by the Government from the Panchayat Union Medical Officers' Association, Thanjavur, during June, 1980;

(b) if so, the details of their grievances; and

(c) the action proposed to be taken by the Government in the matter?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) ஆம்.

(ஆ) அரசாங்க மருந்தகங்களில் பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்குக் கொடுப்பதைப்போல் ஈட்டுப்படி வழங்குதல், ஒன்றிய மருந்தகங்கள் அரசு மருந்தகங்களாக மாற்றுவதற்கு முன்னால் பணியாற்றிய மருத்துவர்களின் பணியை கணக்கில் கொண்டு, பணி நிலை நிறுத்தம் செய்ய வகை செய்தல், மருத்துவப் பட்ட மேற்படிப்புத் தேர்வில் இட ஒதுக்கீடு செய்ய உறுதிப்படுத்தல் முதலிய கோரிக்கைகளாகும்.

(இ) இயக்குநரின் கருத்துரை எதிர்பார்க்கப்படுகிறது.

*Tamil Nadu Compulsory Rotatory Resident Interns Association.*

* 276 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether any representation has been received from the Tamil Nadu Compulsory Rotatory Resident Interns' Association in August, 1980;

(b) if so, the details of their grievances; and

(c) the action proposed to be taken by the Government in the matter?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) தர்மபுரி மாவட்டத்தில் ஓசூர் டிவிஷனில் 10-ம், மற்றும் தர்மபுரி டிவிஷனில் 1-ம் ஆக மொத்தம் 6 மாதங்களில் 11 யானைகள் இறந்ததாக அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

(இ) & (உ) அதிகாரிகளால் ஒன்றும் சுட்டுக் கொல்லப்படவில்லை. இயற்கைக் காரணங்களால் 4-ம், கிராம மக்களால் 7-ம் சுட்டுக் கொல்லப்பட்டு இறந்தன.

(எ) அனுமதியின்றி யானைகளை சுட்டதாக 1972 வன விலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும், 1972 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் கீழும் வழக்கு தொடரப்பட்டு அவை வழக்கு மன்றத்தில் நிலுவையில் உள்ளன. இம்மாதிரியான சம்பவங்கள் இனிமேல் நடைபெறாமல் இருக்க வேண்டுமென்று அதிகாரங்கள் அதிகமாக்கப்பட்டும், ஜீப் மூலம் சுற்றி வந்தும், தணிக்கை செய்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களில் யானைகள் பயிர்களை அழித்தால், அதற்காக அவற்றைக் கொன்று விடாமல் மீண்டும் அவற்றை காட்டுக்குள் கொண்டு போய் விட வேண்டுமென்று கிராம மக்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-40)

திரு. ம. சங்கரலிங்கம் : 1980-ம் ஆண்டு இறுதியில் வனத்திலே வறட்சியால் தண்ணீர் இல்லாததால், யானைக் கூட்டம் காட்டிலிருந்து வந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அதை அரசு அறிந்ததா ? தண்ணீர் கிடைக்காததனால் யானைகள் நாட்டுப்புறங்களுக்கு வரும்போது, வனத்துறை அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுத்து காட்டிலேயே தண்ணீர் கிடைக்கிற ஓர் இடமாகப் பார்த்து அந்த யானைகளைத் திருப்பி விடும் வகையில் நடவடிக்கை எடுக்கும் கருத்தை அரசு ஆராய்ந்ததா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : யானைகள் ஒவ்வொரு காலத்திலேயும் ஒவ்வொரு இடத்திற்குப் போவது வாடிக்கை. சில நேரங்களிலே தண்ணீர் தேடியும் போகலாம் அல்லது வேறு சில இயற்கைச் சூழ்நிலைகளையொட்டியும் போகலாம். அந்த யானைகள் ஒருவேளை தண்ணீர் இல்லாததால்தான், அங்கே வந்திருந்தனவோ என்று கருதப்படுகிறது. இருந்தாலும் அடிப்படைக் காரணங்கள் தெரியவில்லை. என்ன காரணங்கள் என்று யானைகளிடம் விசாரணை செய்ய முடியாது. ஓர் யூகம் வைத்து, ' அப்படி



இருக்குமோ ' என்று எண்ணுகிறோம். யானைகளுக்கு ஒரு குறிப்பிட்ட இடத்திலே தண்ணீர் ஏற்பாடு செய்து, அங்கே சென்று குடிக்க வேண்டும் என்று உத்தரவிட முடியாது. ஆகவே, கிராமப் பகுதிகளுக்கு உள்ளே யானைகள் வரும்போது, கிராம மக்களில் சிலர் பயத்தினாலே சில நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். சில பேர் திட்டமிட்டு அவைகளைக் கொன்று யானைகளுடைய தந்தத்தைப் பெற வேண்டும் என்ற முயற்சியிலே ஈடுபடுகிறார்கள். ஹோசூர் தர்மபுரி மாவட்டமாக இருந்தாலும், அது கர்நாடகாவுக்குப் பக்கத்திலேயிருக்கிறது. அந்தப் பகுதியிலேதான் இப்படிப்பட்ட சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். யானைகளைக் கொன்று தந்தத்தை எடுப்பது, சந்தன மரங்களைத் திருடுவது இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையில், அவர்கள் பாதுகாப்புக்காக வைத்திருக்கும் துப்பாக்கிகளையெல்லாம் கூட பறிமுதல் செய்யும் நடவடிக்கைகளையும் அரசு எடுக்கிறது. பொதுவாக கிராம மக்கள் பயத்தினாலே யானைகளைக் கொல்லக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். திருட்டுத்தனமாக வேண்டுமென்றே திட்டமிட்டு யானைகளைக் கொல்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம்: இப்போது குறிப்பாக 11 யானைகள் ஆறு மாத காலத்திற்குள்ளாக அந்தப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றன.

அதற்குக் காரணம் என்னவென்பதைப்பற்றி, 23—1—1981, 29—1—1981 ஆகிய நாட்களிலே ' இந்து ' பத்திரிகை ரிப்போர்ட்டர்கள் அந்தப் பகுதிக்குச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் வனத் துறை அதிகாரிகள் இவர்களோடு கலந்து பேசி, தண்ணீர் இல்லாததால்தான் அந்த யானைக் கூட்டம் தண்ணீர் தேடி வந்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி வனத் துறைக்குச் சொல்லப்பட்டும், வனத் துறை அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. கர்நாடகா பகுதியிலேயிருந்து வேட்டைக்காரர்கள் இந்தப் பகுதிக்கு வந்து பல யானைகளைச் சுட்டுக் கொன்று அவைகளின் தந்தங்களை எடுத்துச் செல்வதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். இந்த நிலைமைகளைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : பத்திரிகை நிருபர்கள் கூட சம்பவங்கள் எல்லாம் நடைபெற்ற பிறகுதான் அங்கே செல்கிறார்கள். பிரேத பரிசோதனை நடத்துவது என்பது சுலபம். பிரேதமாக ஆவதற்கு முன்பு

[1981 ஏப்ரல் 29

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) ஆம்.

(இ) அவையின் முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(உ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 24 *Hours Fracture Service in Government Rajah Mirasdar Hospital, Thanjavur.*

* 277 *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Health be be pleased to state.

(*a*) whether there is any proposal for offering " 24 Hours Fracture Service at the Government Rajah Mirasdar Hospital, Thanjavur ; and

(*b*) if so, from when the same will be started ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) & (இ) தஞ்சை அரசு இராசா மிராசுதார் மருத்துவமனையில் 25—2—1979 முதல் " 24 மணி நேர எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு " இயங்கி வருகிறது.

## கன்னியாகுமரி-திருநெல்வேலி பாதையில் இரயில் போக்குவரத்து.

* 278 **வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி-திருநெல்வேலி இணைப்பு இருப்புப் பாதையில் போக்குவரத்து எப்பொழுது தொடங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது?

(இ) அதனை விரைவுபடுத்துவதற்கு மாநில அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

(உ) திருநெல்வேலி-சென்னை இருப்புப் பாதையை அகலப் பாதையாக மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறதா ?

---

@ 466-467 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1981 ஏப்ரல் 29]

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி :** (அ) 15-4-1979 அன்று நாகர்கோவில்-கன்னியாகுமரி இணைப்பு இருப்புப்பாதை போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டது. நாகர்கோவில்-திருநெல்வேலி இணைப்பு இருப்புப்பாதை 2—4—1981-ல் பயணிகள் போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(உ) திருச்சி வழியாக சென்னையிலிருந்து திருநெல்வேலி வரையுள்ள முழு இரயில் பாதையையும் அகல இருப்புப் பாதையாக மாற்ற மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இப்போது மத்திய அரசு பல பகுதிகளிலே மீட்டர்-கேஜ் ஆக இருக்கக்கூடிய குறுகிய ரயில் பாதையை அகலப் பாதையாக மாற்றும்போது, திருவனந்தபுரத்திலேயிருந்து திருநெல்வேலி வரை அகல ரயில் பாதையாக மாற்றிய பிறகு, திருநெல்வேலியிலிருந்து சென்னைவரையில் உள்ள ரயில் பாதையை அகல ரயில் பாதையாக மாற்ற, மாநில அரசு ஏன் மத்திய அரசை வற்புறுத்தவில்லை ? தூத்துக்குடி துறைமுகம் உருவான பிறகு தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து பல பொருள்கள் பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதியாகிக்கொண்டிருப்பதால், இந்த நிதியாண்டிலேயே நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் வற்புறுத்தி, அந்த நிலைமையை உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி:** ஏறத்தாழ 6 கோரிக்கைகளை 1979-ம் ஆண்டு மத்திய அரசிடம் வைத்தோம். அதிலே இது சேரவில்லை என்றாலும்கூட, பல்வேறு கோரிக்கைகளை நாம் வைத்திருந்தும் கூட, மத்திய அரசு அதையெல்லாம் தற்போது எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறது. ஏற்கெனவே கொடுத்த அந்தக் கோரிக்கைகளுக்கு அதுதான் பதில் என்று சொல்லும்போது, இதைக் கொடுத்தாலும் அந்த நிலைமைதான் இருக்கும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்க அரசு தயாராக இருக்கிறது.

## பொதுப் பணித் துறையில் பிரிவு அலுவலர்கள்.

* 279 **வினா.—திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு கைத்தறி-கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பொதுப்பணித்துறையில் பிரிவு அலுவலர்களாக ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தும் பணி வரன்முறை செய்யப்படாத பட்டயதாரர் மற்றும் பட்டதாரி பொறியாளர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்கள் பணி நிரந்தரமாக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் யாது ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்:** (அ) பட்டயம் பெற்றவர்கள் (இளநிலை பொறியாளர்)—231. பட்டம் பெற்றவர்கள் (உதவிப் பொறியாளர்கள்)—3.

(இ) பொதுப் பணித் துறையில் பிரிவு அலுவலர்களாகப் பணிபுரியும் பட்டயதாரர் மற்றும் பட்டதாரி பொறியாளர்களின் பணிவரன்முறைப்படுத் தாமைக்கு அவர்கள் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படாமையே காரணம். எனவே, இவர்கள், இளநிலைப் பொறியாளர், உதவிப் பொறியாளர் ஆகிய பதவிகளுக்கு நேரடித் தேர்வுக்கான விண்ணப்பங்களை தேர்வாணைக்குழு கோரும்போது விண்ணப்பித்து, தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்களது பணியை வரன்முறைப்படுத்த இயலும்.

(முற்பகல் 9-50)

**திரு. ம. சங்கரலிங்கம்:** 200-க்கும் மேற்பட்ட பட்டயம் பெற்ற இளநிலைப் பொறியாளர்கள் 5 ஆண்டுகளுக்கு மேலாக இத்துறையில் பணி புரிந்தும், அவர்களின் பணி இன்னும் வரன்முறைப்படுத்தப்படாமல் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதற்கான காரணம், அவர்கள் அனைவரும் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் தேர்ந் தெடுக்கப்படாததுதான் என்றும் குறிப்பிட்டார்கள். அதோடு தேர்வாணைக் குழு விண்ணப்பம் கோரும்போது, இவர்கள் விண்ணப்பம் செய்து, தேர்வு பெற வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. "பொதுப் பணித் துறையில் இத்தனை இளநிலைப் பொறியாளர்கள் தேவைப்படுகிறார்கள், எனவே இத்தனை இடங்களுக்கான ஆட்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுங்கள்" என்று பொதுப் பணித் துறையிலிருந்து, தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிற்குத் தெரிவித்தால்தான், அதற்கான விண்ணப்பங்களைத் தேர்வாணைக் குழு கோரும். எனவே அந்த வகையில் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவுக்கு பொதுப் பணித் துறை தகவல் அனுப்பியுள்ளதா ? அனுப்பப்பட்டு, தேர்



வாணைக் குழுவில் இது குறித்து காலதாமதம் ஏதேனும் ஏற்பட்டுள்ளதா? அதோடு ஓர் அரசுத் துறையில் 5 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்களின் பணியைக்கூட வரன்முறை செய்யாமலிருப்பது நியாயம்தானா ? எனவே இனிமேலாவது இரண்டாண்டுக் காலம் பணியாற்றிய அரசு ஊழியர்களின் பணியையாவது அரசு உடனடியாக பணி வரன்முறை செய்ய, தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்:** அவர்கள் அனைவரும் தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் தேர்வாணைக் குழுவின் தேர்வுக்கு அனுமதிக்கப் படுவர் என்ற நிலை 1977-ல் உருவாகி, அவர்கள் அனைவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டபோது, இளநிலைப் பொறியாளர்கள், பதவி நீக்க ஆணையை எதிர்த்து 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் போராட்டம் நடத்தினார்கள். அதனையொட்டி, அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அரசு இவர்களின் பணியை வரன்முறைப்படுத்த வேண்டுமென்றால், இத் துறையில் பணி புரிகிறவர்களுக்கு மட்டும் ஒரு சிறப்புத் தேர்வை நடத்த வேண்டும். எனவே இதுகுறித்து அரசு உரிய சமயத்தில் பரிசீலனை செய்யும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 1977 ஆம் ஆண்டு போராட்டத்தின்போதே இளநிலைப் பொறியாளர்கள் அரசுக்கு இந்தப் பிரச்சினையைக் குறித்து வலியுறுத்தியிருக்கிறார்கள். 1981 ஆம் ஆண்டிலும்கூட அதனை இன்னும் அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்றால், அவர்கள் வாழ்நாள் பரிசீலனையிலேயே முடிந்துவிடக்கூடாது. போராட்டத்திற்குப் பிறகு அரசாணை எண் 1964-ல் இவர்களின் பணியை வரன்முறை செய்ய வேண்டும் என்று அரசு அறிவித்திருக்கிறது. அதை இன்னும் அந்தத் துறை அமுல்படுத்தாமலிருப்பதற்கு என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** இதுபற்றி, தமிழ்நாடு தேர்வாணைக் குழு அரசுக்குச் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறது. இதனையொட்டி நடைமுறையில் சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதால், அதனை நீக்க, மீண்டும் இவர்களைச் சிறப்புத் தேர்வு மூலம் நிரந்தரப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவில் அதற்கான முடிவை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : ஒவ்வொரு நிறுவனமும எவ்வாறு செயல்படுகின்றது என்பதைக் கொண்டு அரசு பரிசீலனை செயது கொடுத்ததால் காலதாமதம் ஏற்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 20—4—1981 மற்றும் 27—4—1981 ஆம் தேதிய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்ட வினாக்கள். வினா 210.

## Sandalwood Oil

@ * 210 Q.— THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) the quantity of Sandalwood Oil produced by (i) the Public Sector and (ii) the Private Sector in the State; and

(b) the names of the allied industries, if any, based on Sandalwood Oil ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) (1) வடாற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் அருகே சிறிய அளவில் சந்தன மர எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது. இத்தொழிற் சாலையில் வருடம் ஒன்றுக்கு சுமார் 104 டன்கள் எடையுள்ள சந்தன மரங் களை உபயோகித்து சந்தன எண்ணெய் தயாரிக்கலாம். ஆலை ஒன்று ரூ. 22,85,000 மூலதனத்தில் நிறுவுவதற்கு முடிவு செய்யப்பட்டு, இதற்கான பூர்வாங்க வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதைத்தவிர மாநிலத்தில் பொதுத்துறையின் கீழ் இயங்கும் சந்தன மர எண்ணெய் தொழிற்சாலை ஏதுமில்லை.

(2) தமிழ்நாட்டில் தனியார் துறையில் சந்தன மர எண்ணெய் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் 3 உள்ளன. இந்நிறுவனங்களின் உற்பத்தி அளவு பற்றிய விவரங்கள் அரசிடம் இல்லை.

(இ) சந்தன மர எண்ணெய் வாசனைப் பொருட்கள், ஊதுபத்தி முதலியவை செய்ய பயன்படுத்தப்படுகிறது. இப்பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மாநிலத்தில் மிகுந்த அளவில் உள்ளன.

---

@ 20—4—1981 வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.



திரு. க. இராமமூர்த்தி: இரண்டாண்டுகளுக்கு முன்னதாகவே இதே அவையில் திருப்பத்தூரில் இத்தகைய ஆலை ஒன்றை சிறிய அளவில் அமைக்க திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இப்போது நிறுவப்பட்டிருக்கும் இந்த ஆலையில் எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு சந்தன எண்ணெயைத் தயாரிக்க முடியும் ? இந்த ஆலையை நிறுவுவதில் ஏற்பட்ட காலதாமதத் திற்கு என்ன காரணம் என்பதை அரசு வெளியிடுமா ? அதோடு சந்தன எண்ணெயைக் கொண்டு சந்தன சோப்பு போன்ற மற்ற பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளையும் அரசு அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: 8—8—1980 ஆம் நாளன்று தமிழக அரசு இது குறித்து அரசாணையைப் பிறப்பித்தது. அதாவது ரூ. 22,85,000 மூலதனத்தில் தொழிற்சாலையை அமைக்க அங்கீகாரம் செய்து உத்தரவிடப்பட்டது. அதற்கான பணியைத் துரிதப்படுத்த, வனப் பாது காவலர் அவர்கள் 1—9—1980 ஆம் நாளன்று பதவியேற்றுள்ளார். அந்தத் தொழிற்சாலையை நிருவகிக்கிற பொறுப்பை, தமிழ் நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) ஏற்று, ‘ டர்ன் கீ பேசிஸ் ’ முறையில் கட்டிக் கொடுக்க உறுதி செய்யப்பட்டு ஆரம்பப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவில் தொழிற்சாலை அமைப்பது முடிவுறும்.

(முற்பகல் 10.00)

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சந்தன மரத்திலிருந்து பல்வேறு பொருள்களைத் தயாரிக்க மற்ற மாநிலங்களில் தொழிற்சாலைகள் மிகுதியாக வைத்திருக்கிறார்கள். கர்நாடகத்திலேயும் கேரளத்திலேயும் உள்ள தொழில்களுக்கு வேண்டிய அளவுக்கு சந்தன மரம் நம் மாநிலத்திலிருந்துதான் செல்கின்றது. அப்படி இங்கிருந்து சந்தன மரங்கள் போகாத நிலைமைகள் ஏற்படும்போது, அங்குள்ள தொழிற்சாலைகள் நடைபெற முடியாத நிலைமை ஏற்படும் என்று தெரிகிறது. நம்முடைய மாநிலத்திலே இதற்கான தொழிற்சாலை உருவாக்கலாம் அல்லவா ? இதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, தமிழகத்திலே இருக்கின்ற சந்தனக் கட்டைகள் திருட்டைத் தடுப்பதும், அதே நேரத்தில் சந்தனக் கட்டையிலிருந்து சந்தன எண்ணெய் தயாரிக்கின்ற நேரத்தில் அதைக் கட்டுப்படுத்தும் நிலையிலே இருக்கிறோம். இந்த இரண்டு நோக்கங்களின் அடிப்படையிலே பொதுத் துறையிலே, மைசூரிலே இப்போது

## Foster Care Units

* 280 Q.—THIRU A. R. DAMODARAN: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state:

(a) the number of Foster Care Units, that are functioning in Tamil Nadu, as on 1st January, 1981;

(b) whether these units have received any grants for the year 1980-81; and

(c) if so, the amount of such grants and the date of their sanction?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** (அ) 1—1—1981-ல் கீழ்க்காணும் நான்கு நிறுவனங்களும் குழந்தை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் செயலாற்றி வருகின்றன:

(1) பஞ்சாப் அசோசியேஷன், சென்னை-14.

(2) கில்டு ஆப் சர்வீஸ், சென்னை-8.

(3) மெட்ராஸ் ஸ்கூல் ஆப் சோசியல் ஓர்க், சென்னை-8.

(4) ஸ்ரீ சேவாமந்திர், சென்னை-17.

(இ) ஸ்ரீ சேவாமந்திர் தவிர்த்த ஏனைய மூன்று நிறுவனங்களும் 1980-81 ஆம் ஆண்டுக்கான மானியம் பெற்றுக் கொண்டன.

(உ) நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட தொகையும், தேதியும் வருமாறு:

| | | |
|---|---|---|
| (1) பஞ்சாப் அசோசியேஷன், சென்னை-14. | ரூ. 44,180 | 13—3—1981 |
| (2) கில்டு ஆப் சர்வீஸ், சென்னை-8. | ரூ. 44,190 | 13—3—1981 |
| (3) மெட்ராஸ் ஸ்கூல் ஆப் சோஷியல் ஓர்க், சென்னை-8. | ரூ. 44,190 | 13—3—1981 |



**திரு. ஏ. ஆர். தாமோதரன்:** இந்த கிராண்ட்ஸைப் பொறுத்த அளவில், அரசாங்கத்திலிருந்து இந்த நிறுவனங்களுக்கு 'டிஸ்பர்ஸ்' செய்வதில் ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** இந்த மானியங்கள் காலதாமதமாகத் தரப்பட்டதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தகவலில்லை. 1980-81 ஆம் ஆண்டுக்கான மானியங்கள் ஸ்ரீ சேவா மந்திர் என்ற நிறுவனத்தைத் தவிர்த்த மற்ற மூன்று நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. ஏ. ஆர். தாமோதரன்:** மத்திய அரசாங்கத்திலிருந்து இந்த கிராண்ட்ஸ் வந்த தேதி என்ன? நமது அரசாங்கத்திலிருந்து எந்தத் தேதியில் இந்த கிராண்ட்ஸ் 'டிஸ்பர்ஸ்' செய்யப்பட்டன என்பதை மட்டும் தெரிவித்தால் போதும்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** அதுபற்றிய தகவல் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் அறிந்து சொல்லலாம்.

**திரு. க. இராமமூர்த்தி:** 1980-81 ஆம் ஆண்டுக்கான மானியம் அந்த ஆண்டு இறுதியில் அதாவது மார்ச் 13 ஆம் தேதிதான் மூன்று நிறுவனங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த மானியம் மத்திய அரசிடமிருந்து உரிய காலத்தில் மாநில அரசுக்கு வந்துவிட்டதாக எனக்குத் தகவல் இருக்கிறது. இந்த நிலையில் அந்த நிறுவனங்களுக்கு ஆண்டின் இறுதியில் நிதி உதவி செய்யப்பட்டதற்கு என்ன காரணம்? இதற்கென்று தனியான காரணம் ஏதேனும் உண்டா? அல்லது சாதாரண நிருவாகக் காரணம் அல்லது ரெட் டேப்பிசம்தான் இந்தக் காலதாமதத்திற்குக் காரணமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** ஏன் அது கால தாமதமாகக் கொடுக்கப்பட்டது என்பது குறித்து அரசுக்குத் தகவல் ஏதுமில்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** மாநில அரசிலிருந்து இந்த மானியத் தொகைகள் ஏன் காலதாமதமாகக் கொடுக்கப்பட்டன என்பதைத்தான் நான் கேட்கிறேன்.

இருக்கிறது. தமிழகத்திலேயும் முதல் முயற்சியாகச் செய்கிறோம். இன்றைய தினம் ஊதுபத்தி போன்ற பொருள்களைத் தயாரிக்கிறோம். அதற்கு, அந்தச் சந்தன எண்ணெய் உற்பத்தியை விரிவுபடுத்தும் ஆலை உருவாக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன உணர்வுகளை வைத்துக்கொண்டு படிப்படியாக மற்ற திட்டங்களையும் செய்ய அரசு தக்க நடவடிக்கைகளை தக்க நேரத்தில் எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : இந்தச் சந்தன எண்ணெயை அதிக அளவில் தயாரிக்கும் மாநிலம் எது என்பதுபற்றிய விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : என்னிடம் விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : பொதுத் துறையில் ஏற்கெனவே சந்தன எண்ணெய் தயாரிக்கும் ஆலைகள் இருக்கின்றனவா ? இந்த ஆலைதான் பொதுத் துறையில் உள்ள முதல் ஆலையா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் கேள்விக்கு இதுபற்றிப் பதில் சொல்லியிருக் கிறேன். இதுதான் முதல் பொதுத்துறை நிறுவனம், தொழிற்சாலை என்று சொல்லியிருக்கிறேன்.

*Headmasters and Headmistresses of Local Body High Schools.*

@ * 257 *Q*—THIRU P. R. THOMAS: Will the Hon the Minister for Local Administration be pleased to state with reference to the answer to Quesion No. 355, on the floor of the Council on 26th April 1979:

(*a*) whether the Government have since implemented two separate scales of pay for the Headmasters and Headmistresses of High Schools under Local Administration, on the basis of the strength of the pupils, as in the case of their counter-parts in Government High Schools; and

(*b*) if not, the reasons therefor ?

---

@ 27—4—1981 வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(இ) மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஒரே ஒரு சம்பள விகிதம் இருசாராருக்கும் பின்பற்றப்படுவதால் இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : 2—10—1970ல் இரண்டாவது ஊதியக் குழு பரிசீலனை செய்த காலத்தில், மாணவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலே கணக்கிட்டு இரண்டு ஊதிய விகிதங்கள் அளிக்கப்பட்டன. 500 மாணவர்கள் படிக்கின்ற பள்ளிகளிலே இரண்டாம் நிலை ஊதிய விகிதமும் 1,000 மாணவர்கள் படிக்கின்ற பள்ளிகளிலே முதல் நிலை ஊதிய விகிதமும் வழங்கப்பட்டன. ஆனால் உள்ளாட்சித் துறையிலே உள்ள நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளிலே இந்த ஊதிய விகிதம் அமுல்படுத்தப்படவில்லை. இந்த இரண்டு ஊதிய விகிதங்களும் குறைவாகவே இருந்து வருகின்றன. இதைச் சரிசெய்து கொடுக்க வேண்டும். இதற்கு முந்திய காலங்களில் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டிக் கொடுக்க வேண்டும். அப்படிச் சரி செய்து, அதன் அடிப்படையில், ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் அதைத் திரும்பக் கொடுக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா? அதன் அடிப்படையில் ஓய்வு ஊதியத்தை மாற்றியமைக்கக்கூடிய வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மூலக் கேள்வி ஓய்வூதியம் பற்றியது அல்ல. ஆனால் இரு பிரிவினருக்கும் இடையே, இரு சாராருக்கும் ஒரே விதமான ஊதியம் வழங்கப்படுகிறதா என்பதைப் பற்றித்தான் கேள்வி இருக்கிறது. ஆனால் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஓய்வூதியம்பற்றி அரசு பரிசீலிக்க முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : அது தொடர்பான கேள்வியாகத்தான் நான் ஓய்வூதியத்தைப்பற்றிக் கூறினேன். ஆனால் என்னுடைய கேள்வியானது ஊதியத்தைப் பொறுத்துதான் இருக்கிறது. இரண்டாம் நிலை ஊதிய விகிதம் தலைமை ஆசிரியர்களுக்கு உள்ளாட்சித் துறையில் அமுலாக்கப்படவில்லை. அதை அமுலாக்குகின்ற ஆணையை அமைச்சர் அவர்கள் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 5—10—1978 லேயிருந்து ஆணை பிறப்பிக்கப்பட்டு,

சூழ்நிலை இங்கேயும் வரவேண்டுமென்று மத்திய அரசு எதிர்பார்க்கக்கூடாது என்ற அளவில் மாநில அரசு அதை வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** 1977-லேயிருந்து நாம் இதை வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். நாம் வேண்டாம் என்று சொல்லிவிடவில்லை. அந்த வசதி எங்களுக்கும் வேண்டும் என்றும் அதற்கு அனுமதி தேவை என்றும் வற்புறுத்தி வருகிறோம். தற்சமயம் முடியாது, பின்னாலே பார்ப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். முழுக்க முழுக்க 'இல்லை' என்று அவர்கள் சொல்லிவிடவில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** விமான தளம் அமைந்துச் செல்கின்ற அளவுக்கு நிலைமைகள் இல்லாமல் இருந்தாலும்கூட, தற்போது மதுரை, கோடைக்கானல், கோவை, ஊட்டி ஆகிய இடங்களுக்குப் போக ஹெலிகாப்டர் அளவுக்கேனும் வசதி செய்ய ஏற்பாடு செய்யும் நோக்கம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** அப்படிப்பட்ட வசதிகள் செய்வதற்கும் மத்திய அரசு உதவி செய்தால்தான் முடியும். மத்திய அரசு கொடுக்கின்ற நிலையில் இருக்க வேண்டும். இதையும் பின்னாலே செய்யலாம், அதைத் தற்காலிகமாகச் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லிவிடலாம். அப்படிச் சொல்லிவிட்டால், செய்ய முடியாது. அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, மத்திய அரசு அனுமதி அளித்த பின்பு நடவடிக்கை எடுப்பதுதான் பொருத்தமாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Free Bus Pass Facility for PhysicallyHandicapped Students.*

@ * 263 Q.—T !8Z P. R. THOMTS: Will the Hon. the Minister for Transport be pleased to state with reference to the answer given to question No. 80, on the floor of the Council, on 6th November 1979 :

(a) whether the Government have since considered the proposal of extending the free Bus Pass facility to the Physically handicapped students, now available in Buses of the Pallavan Transport Corporation. to Buses of the other State-owned Transport Corporations also ; and

(b) if so, the stage at which the matter now stands ?

@ 27—4—1981 வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) & (இ) 1981-ம் ஆண்டு உடல் ஊனமுற்றோர் ஆண்டு என்ற காரணத்தை முன்னிட்டு இந்த ஆண்டில் தற்போது பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்) பிரிவில் வழங்கும் சலுகைகள், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத் தவிர, ஏனைய அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் வழங்கப்படும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** இந்தச் சலுகையானது நகரப் போக்குவரத்துக் கழகங்களிலிருந்து நகரத்தையும், நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குப் போகும் பேருந்துகளில் மட்டும்தான் கொடுக்கப்படுகிறதா? கிராமப்புறங்களிலிருந்து படிக்கச் செல்லும் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்களுக்கும் அந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறதா ? அப்படி இல்லை என்றால், அந்தச் சலுகை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பள்ளிக்கூடங்களுக்குச் செல்லக்கூடிய குழந்தைகள் போவது என்றிருந்தால், அது எங்கு இருந்தாலும் அந்தச் சலுகை வழங்கப்படும். ஆனால், திருவள்ளுவர் போக்குவரத்திலே மட்டும் அந்த வசதி செய்யப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### விவேகானந்தர் நினைவுச் சின்னத்துக்கு படகுப் போக்குவரத்து.

@* 264. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவுச் சின்னத்துக்குச் செல்வதற்கான படகுப் போக்குவரத்து, 5—12—1980 முதல் நிறுத்தப்பட்டுவிட்டது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இப்பிரச்சினையைத் தீர்க்க, அரசு எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் யாவை?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

@ 27—4—1981 வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

1—4—1978 முதல் மாணவர்கள் எண்ணிக்கையைக் கணக்கில் வைக்காமல், எல்லோருக்கும் ஒரே சம்பள விகித அடிப்படையிலேதான் அளிக்கப்பட்டு வருகிறது. இது ஏற்கெனவே இருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இதைப்பற்றி இந்த மாமன்றத்திலேயே ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதற்கு விடையும் அளிக்கப்பட்டிருக்கிறது.

### *Teachers in Dindigul Municipality.*

@ 258 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether it is a fact that, some teachers have made representations regarding the Juniors being paid more than the Seniors in Dindigul Municipality;

(b) if so, the number of teachers affected; and

(c) the action proposed to be taken thereon?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகள் எழவில்லை.

### குறுகிய தூர விமானப் போக்குவரத்து.

**@* 262. வினா—திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் குறுகிய தூர விமானப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டில் குறுகிய தூர விமானப் போக்குவரத்து சர்வீஸ்களை நடத்துவதற்கு மத்திய அரசின் அனுமதி தேவை. அதனை அளிக்குமாறு மத்திய அரசுக்கு மாநில அரசு கோரியது. மேலும் இதன் தொடர்பாக மூன்றாவது நிலை போக்குவரத்தை அமைப்பதற்கு மத்திய அரசிடம் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று கேட்கப்பட்டது. அதை அமைப்பதற்கு தற்போது சாத்தியமில்லை என்றும் வடகிழக்குப் பகுதியிலே இப்போது அமைப்பதாகவும், எனவே ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதைச் சேர்க்க முடியவில்லை என்றும்தான் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, மாநிலத்தின் பல பகுதிகளிலே அரசும் மக்களுடைய பிரதிநிதிகளும் தொடர்பு கொள்ளக்கூடிய நிலைமைகள் இருப்பதையும் அதன் இன்றியமையாமையை பற்றியும் நாம் அறிவோம். அந்த அளவில் மாநிலத்தில் குறுகிய தூர விமான நிலையம் தொடங்க வேண்டும் என்று அரசு மத்திய அரசுடன் வற்புறுத்திக் கேட்ட போது முதலில் ஏற்றுக்கொண்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இப்போது அப்படி அமைப்பதற்கு நிதி இல்லை என்றும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்க இயலாது என்றும் சொன்னதாகச் சொல்கின்றார்கள். அதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறதா? அதை அமைப்பதற்கான செலவில் ஒரு சதவிகிதத்தையாவது மத்திய அரசு தருமா? அதைப்பற்றி மாநில அரசு மேலும் முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, குறுகிய தூரப் போக்குவரத்து விமான நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி நமக்குத் தேவை. இதை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். 1977-லேயிருந்து இதை வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசினுடைய அனுமதி இதற்குத் தேவை என்று கேட்டிருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்ப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். வடகிழக்குப் பகுதியிலே முதலிலே செய்ய இருக்கிறார்கள். அதற்குப் பிறகு உருவாக்கலாம் என்றும் தற்போது முடியாது என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** வடகிழக்குப் பகுதிகளிலே காரிலும், ரெயிலிலும் போக முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதனால், அந்த அளவிலே அதற்கு முன்னுரிமை கொடுத்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. அதுபோன்ற

@ 27—4—1981 வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தற்போது அந்தப் படகுப் போக்குவரத்து இயங்கிக் கொண்டிருக்கிறதா? அது விட்டுவிட்டு இடர்பாடுகளுடன் இயங்கிக்கொண்டிருக்கிறதா என்பதையும், அப்படி ஒழுங்காக நடைபெற வில்லை என்றால் அந்தச் சுற்றுலாப் பயணிகள் மிகுந்த இடையூறுகள் அடைவதால், அதை அரசே ஏற்று நடத்த முன்வருமா? அல்லது, தனியார் துறை மூலம் அதை நடத்த அரசு அனுமதிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அந்தப் படகுப் போக்குவரத்து தற்போது இயங்கிக்கொண்டுதான் இருக்கிறது. அதிலே எந்தவிதமான இடையூறும் இல்லை. ஆனால், அங்கே பொதுமக்களுக்கும் அவர்களுக்கும் இடையே சில சச்சரவுகள் இருப்பதாகத் தகவல் வந்தது. அதன்மீது நடவடிக்கை எடுக்க நானே இரண்டு முறை சென்று வந்தேன். தமிழக முதல்வர், ஒருமுறை சென்று அதைப்பற்றிப் பேசியதால், அங்கு சுமுகமான நிலைமைகள் இருக்கின்றன. அங்கே படகிற்குச் சில பொருள்கள் கிடைக்க வில்லை, மண் தூர் வாருவதற்கு இயந்திரங்கள் கிடைக்கவில்லை என்று பிரச்சினைகள் இருக்கின்றன. அதை யார் எடுத்தாலும் அந்தப் பிரச்சினைகள் இருந்துகொண்டுதான் இருக்கும். அவர்களுக்கு நடத்துகின்ற சக்தி இல்லாமல் இருக்கிறது. கிடைக்க வேண்டிய பொருள்கள் கிடைக்காத காரணத்தினால்தான் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதற்கு அரசாங்கம் தேவையான அளவுக்கு உதவிகள் செய்துகொண்டிருக்கிறது.

(முற்பகல் 10.10)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அங்கே இருக்கின்ற இரண்டு குழுக் களிடையே ஏற்பட்ட சச்சரவைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தச் சச்சரவு தீர்க்கப்பட்டால்தான், நிரந்தரமான படகுப் போக்குவரத்து சுமுகமாக இயங்கும் நிலைமை உண்டாகுமென்று தெரிகிறது. எனவே இரண்டு சாராருக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவை நிரந்தரமாகத் தீர்க்க அரசு கொடுத்த ஆலோசனையை இரு சாராரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அங்கே இருக்கின்ற சச்சரவுகளைத் தீர்க்க தாற்காலிகமாகத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதைத் தாற்காலிகமாக இரண்டு சாராரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். முழுமை



யாகச் சச்சரவைத் தீர்க்க வேண்டுமென்றால், ஒருவருக்கு தனியாகப் படகுப் போக்குவரத்துக்கு இடம் அமைக்க வேண்டும். இப்போது தற்காலிகமாகப் பிரச்சினையிலே ஓரளவு சுமுகமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

பாலசேவிகாக்கள் 27—4—1981 அன்று தடையை மீறி மறியல் செய்தது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன், திரு. க. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் பாலசேவிகாக்கள் 27—4—1981 அன்று தடையை மீறி மறியல் செய்தது குறித்து, ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு அந்த விதியின்கீழ் வருகிறதென்பதைச் சுருக்கமாகக் கூறுமாறு கோருகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து, நர்சரிப் பள்ளிகள் துவங்க வேண்டுமென்று சிந்தித்துக் கொண்டிருக்கும் நிலையில், அதே பணியை பாலசேவிகாக்கள் கிராமப்புறங்களிலும், நகரங்களிலும் தங்கள் கடமையாகக் கொண்டு செய்துகொண்டிருக்கிறார்கள். 2½ வயதுக்கு மேற்பட்டு 6 வயதிற்குட் பட்ட சிறு குழந்தைகளுக்குத் தமிழிலே நல்ல பயிற்சியைக் கொடுக்கும் நல்ல பணியை அவர்கள் செய்து வருகிறார்கள். அவர்கள் முழு நேர ஊழியர்களாக, காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பணி செய்தும், அவர்களுக்கு அதிகபட்ச ஊதியமாக ரூபாய் 115 தான் தரப்படுகிறது. அவர்களுக்கு விடுப்பு வசதிகள் கிடையாது; மகப்பேறு விடுப்பு கிடையாது.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

Family Benefit Scheme அவர்களுக்குக் கிடையாது. பணிப் பாதுகாப்பும் கிடையாது. அரசு விரும்பும் நல்ல பணியை கிராமப்புறங்களில் அவர்கள் செய்துகொண்டிருக்கும் நிலையில், அவர்களுக்கு மனச் சோர்வு ஏற்படும் வகையிலே, மன விரக்தி ஏற்படும் வகையிலே, பல்வேறு விதங்களிலே தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். மாநாடுகள் நடத்தி, கூட்டங்கள் போட்டு, ஊர்வலங்கள் நடத்தி, உண்ணாவிரதம் இருந்து, அமைச்சரவர்களைப் பார்த்து மனுக்கள் கொடுத்து எந்த விதத்திலும் பிரச்சினைகள் தீராததால், நேற்றைய முன்தினம் தடை உத்தரவை மீறி கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 100 பேர், கோரிக்கைகளை வலியுறுத்தி, மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு, கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கே பணியாற்றும் ஆயாக்களுக்குக்கூட சரியான ஊதியமில்லை; பணிப் பாதுகாப்பு இல்லை என்று சொல்லுகிறார்கள். இதற்கான முக்கியத்துவத்தை அரசு உணர்ந்துள்ளபோது, கடமையைச் செய்யும் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவும், அவர்களுடைய கோரிக்கைகளை விரிவாக விவாதித்து, அவர்களுடைய பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடுவதற்கும், மேலவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பணிபுரியும் பாலசேவிகாக்கள் நேற்றைய முன்தினம் மறியல் செய்து, கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதுபோல, நர்சரிப் பள்ளிகள் நகரங்களில் மட்டும் இருக்கும் நிலைமைகளை மாற்றும் வகையிலே, கிராமப் புறங்களிலும் 2½ முதல் 6 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்குப் பாலசேவிகாக்கள் கல்வியையும், ஒழுங்கையும் போதிக்கிறார்கள். மகப்பேறு நிலையிலே இருக்கக் கூடிய தாய்மார்களுக்கு ஊட்டச் சத்துணவை வழங்கும் பணியையும் அவர்கள் செய்கிறார்கள். எட்டாம் வகுப்பு வரை படித்திருந்தால் போதும், அந்த வேலை உண்டு என்ற நிலைமை மாறி, எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்க வேண்டுமென்று சொல்லி, அப்படிப் படித்தவர்கள் பாலசேவிகாக்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 90 ரூபாய் ஊதியம் பெறுகிறார்கள்; 115 ரூபாய் ஊதியம் பெறுகிறார்கள். ஒரு நாளைக்கு 4 ரூபாய்கூட வரவில்லை. அந்த அலுவலகங்களில் ஆயாக்கள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வேலை செய்தாலும், அவர்கள் 30 ரூபாய்தான் ஊதியம் வாங்குகிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கிடைக்கும் நிலை இருக்கிறது. பெண்கள் அந்த அளவிற்குச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலை எவ்வளவு பரிதாபகரமாக இருக்கிறதென்பதை மாண்புமிகு சமூக நலத் துறை



[திரு. க. மீனாட்சிசுந்தரம்]

அமைச்சரவர்கள் நன்றாக அறிவார்கள் என்று அறிகிறேன். ஆகவே, இந்த நிலையிலே, அவர்கள் மறியல் போராட்டம் செய்து, தடையை மீறி, ஊர்வலம் நடத்தி, அதற்குப் பின்னாலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சுமார் 100 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்படிக் கைது செய்யப்பட்ட அந்தப் பெண்களை, காவல் துறையினர் திறந்த லாரிகளிலே நிற்க வைத்து, அவர்களை அவமானப்படுத்தும் வகையிலே அழைத்துச் சென்றிருக்கிறார்கள். ஆசிரியர்களெல்லாம் போராடும்போது போலீஸ் வேனிலே அழைத்துச் சென்றார்கள் அல்லது பேருந்துகளிலே அழைத்துச் சென்றார்கள். இவர்களைத் திறந்த லாரிகளிலே அழைத்துச் சென்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே அந்தப் பெண்கள் எந்த அளவிற்கு உணர்ச்சிவசப்பட்டிருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மீண்டும் போராட்டம் நடத்த வேண்டுமென்ற சூழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஊதிய உயர்வு, இறந்தால் குடும்பத்திற்குப் பத்தாயிரம் ரூபாய், பிரசவ விடுப்பு, மருத்துவ விடுப்பு, பணிப் பாதுகாப்பு, பதவி உயர்வு, ஆயாக்களுக்கு நியாயமான ஊதியம்—இந்தக் கோரிக்கைகள் நியாயமானவை. அவர்கள் மீண்டும் போராட இருக்கும் நிலையிலே, அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலிக்க ஆவன செய்வதற்கு அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமென்பதை விவாதிக்க, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவரவர்களே, குழந்தைகள் நல அமைப்பாளர் (பாலசேவிகாக்கள்) மத்திய அரசின் பொறுப்பில் ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டு மாநில அரசுக்கு மாற்றப்பட்ட திட்டத்தின்கீழ் 51 பேர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களது சம்பள விகிதம் ரூ. 325-10-445-15-500; தேர்வு நிலை 400-15-490-20--650-25-700. அதேபோன்று குடும்ப மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தின்கீழ் 28 பேர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களது சம்பள விகிதமும் இதே போன்றுதான். இது தவிர சாதாரண பால்வாடிகளில் பணிபுரியும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெறாத பாலசேவிகாக்கள் 2,434 பேர்கள் உள்ளனர். அவர்களுக்கு மாதம் ரூ. 90 மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றவர்கள் 100 பேர்கள் உள்ளனர். அவர்களுக்கு மாதம் ரூ. 100 வழங்கப்படுகிறது. சென்னைப் பெருநகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தாய்சேய் நலத்

திட்டத்தின்கீழ் 1,541 பேர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு மாதம் 115 ரூபாய் வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்தின்கீழ் 300 பேர்கள் உள்ளனர். அவர்களுக்கு மாதம் ரூ. 175 வழங்கப்படுகிறது. இது தவிர பழங்குடியினர் பகுதிகளில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெறாதவர்கள் 14 பேர்கள் உள்ளனர். அவர்களுக்கு மாதம் ரூ. 150 வழங்கப்படுகிறது. இந்தப் பகுதியில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றவர்கள் 150 பேர்கள் உள்ளனர். அவர்களுக்கு மாதம் ரூ. 165 வழங்கப்படுகிறது.

பாலசேவிகாக்களின் கீழ்க்கண்ட இதர கோரிக்கைகள் தனி நபர் குழுவினால் ஆய்வு செய்யப்பட்டது : 1. பாலசேவிகாக்கள் குடும்ப நலத் திட்டம்; 2. விடுப்புச் சலுகைகள்; 3. பணிப் பாதுகாப்பு; 4. பதவி உயர்வு; 5. பாலசேவிகாக்கள் அனைவரையும் அடிப்படைச் சம்பளத்தில் அரசு ஊழியராக்குதல்; 6. இறந்தால் ரூ. 10,000 திட்டம் அமுல்படுத்துதல்; 7. ஆயாக்களுக்கு நியாயமான ஊதியம் வழங்குதல்.

தனி நபர்க் குழுவின் அறிக்கையில் பாலசேவிகாக்கள் பகுதி நேரப் பணியாளராக இருப்பதால், மேற்குறிப்பிட்ட எந்தச் சலுகையும் வழங்க இயலாது என பரிந்துரை செய்துள்ளது.

முதல் மற்றும் இரண்டாவது வகையான பாலசேவிகாக்கள் தவிர மற்ற அனைவரும் பகுதி நேரப் பணியாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர். ஆகவே, தற்போது அவர்களுக்கு வேறு எந்தவிதமான சலுகைகளும் அளிக்க இயலாது என தனி நபர்க் குழு கருத்து தெரிவித்துள்ளது. இருப்பினும் அவர்களது ஊதியத்தை ரூ. 175-ல் நிர்ணயம் செய்ய அரசு முன்வந்துள்ளது. ஆக தற்போது ரூ. 90 ஊதியம் பெறுபவர்கள்கூட ரூ. 175 பெற வழிவகை செய்யப்படுகிறது. தனி நபர்க் குழு ஆயாக்களின் தற்போதைய சம்பளம் ரூ. 30-ஐ, ரூ. 40 ஆக உயர்த்தும்படி பரிந்துரை செய்துள்ளது. மேற்சொன்ன காரணங்களினால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இப்பொருள் பற்றி விவாதிக்கத் தேவையில்லை எனக் கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை எனக் கருதி, என் அனுமதியை மறுக்கிறேன்.



(முற்பகல் 10.20)

### 8. கவன ஈர்ப்பு.

**(1) சிதம்பரம் கூட்டுறவுப் பால் வழங்கும் ஒன்றியத்தில் ஏற்பட்டிருக்கும் இழப்பு மற்றும் பாலுக்கு வரவேண்டிய தொகை வசூலிக்கப்பட நடவடிக்கை எடுக்காதது குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

“ சிதம்பரம் கூட்டுறவுப் பால் வழங்கும் ஒன்றியத்தில் குறுகிய காலத்தில் சுமார் 9 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பது குறித்தும், விநியோகம் செய்யப்பட்ட பாலுக்கு வரவேண்டிய தொகை சுமார் ரூ. 2½ லட்சம் இன்னமும் வசூலிக்கப்பட நடவடிக்கை எடுக்காதது குறித்தும் ”.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவரவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** 31-3-1980 வரை 9½ லட்சம் ரூபாய் நிகர இழப்பு ஏற்பட்டுள்ளது. இயக்குநர்களுடைய கவனக் குறைவால் 1.62 லட்சம் ரூபாய் அந்த ஒன்றியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. தண்டத் தீர்வை மூலம் அதை திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் இங்கே அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுவரை அந்த முறையில் எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது? அப்படி இதுவரை ஒன்றும் வசூலிக்கப்படவில்லையென்றால், அவர்கள் மிகப் பெரிய புள்ளிகளாக, வசதி படைத்தவர்களாக இருப்பதால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து வசூலிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப்போல் தண்டத் தீர்வை மூலம் வசூல் செய்ய இந்த அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. மற்றும் உறுப்பினர் அவர்கள்

---

@ 467-468 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தெரிவித்ததைப்போல் அரசு நிச்சயமாகப் பலவீனப்பட்டு அவர்களிடமிருந்து வசூலிப்பதைத் தவிர்க்கப் பார்க்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இதே ஒன்றியத்திலே பால் பதனிடும் இயந்திரம் ஒன்று 10 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு இனி அது பயன்படாது என்கிற நிலைமைக்குப் பாழாக்கப்பட்டது என்பது உண்மையா? அதற்குப் பொறுப்பானவர்கள் யார் யார்? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போல், பால் பதனிடும் இயந்திரம் பழுதுபட்டு, செயலற்று இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அதனைச் சீராக்க வேண்டுமென்ற முறையில் பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்தப் பணியினை நல்ல முறையில் சிறக்கச் செய்கின்ற வகையில் தற்சமயம் இந்த ஒன்றியத்தில் தமிழ் நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் மேலாண்மையின் கீழ் புதிதாகப் பல பால் சங்கங்கள் அமைத்து, பால் கொள்முதல் செய்கின்ற பணியினைச் செய்ய இருக்கிறோம். அதேசமயத்தில் சிதம்பரம், புவனகிரி போன்ற பகுதிகளில் எல்லாம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். 1981 ஜனவரி 14 ஆம் தேதியிலிருந்து சிதம்பரத்திற்கு இன்றையதினம் ஏறத்தாழ 4 ஆயிரம் லிட்டர் பால் 10 இடங்களிலிருந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதே போல் ஏப்ரல் 17 ஆம் தேதியிலிருந்து புவனகிரியில் ஏறத்தாழ ஆயிரம் லிட்டர் அளவுக்கு 3 இடங்களில் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சிதம்பரத்தில் 1952 ஆம் ஆண்டிலிருந்து இது இயங்கி வருகிறது. 28 ஆண்டுக் காலமாக இயங்கி வருகிறது. விவர அறிக்கையில் சொல்லியிருப்பதுபோல், இந்த ஆட்சி வருவதற்கு முன்பு ஏற்பட்டவை தான் இந்தக் குறைபாடுகள் எல்லாம். குறைபாடுகளைப் போக்க அன்றைக்குப் பொறுப்பிலிருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். பழுதுபட்ட பால் பதனிடும் இயந்திரத்தை விற்றுவிடுவதா, அல்லது வேறு வகையிலே அதை நல்ல முறையில் பயன்படுத்தி, பாலைப் பதப்படுத்தி நெய்வேலி, சிதம்பரம் போன்ற பகுதிகளுக்குப் பயன்படும் வகையிலே குளிர் பதப்படுத்தும் நிலையம் ஒன்றைப் புதிதாக அமைக்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். சிதம்பரம் உற்பத்தியாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் பயன்படுகின்ற வகையில் நான் ஏற்கெனவே சொன்னதைப் போல் சங்கங்களை அமைத்து சிதம்பரம், புவனகிரி போன்ற இடங்களுக்கு விநியோகிக்கும் நிலையையும், அதேபோல்



குளிர்பதன நிலையத்தை ஏற்படுத்தி நெய்வேலி, சிதம்பரம், கடலூர் போன்ற பகுதிகளுக்குப் பயன்பட மையமான இடமாகப் பார்த்து குளிர் பதன நிலையம் அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். ஏற்கெனவே பழுதுபட்ட அந்த இயந்திரத்தை எந்த முறையில் சீர்படுத்திப் பயன்படுத்த முடியுமோ அந்த வகையில் அதைச் சீர்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்துக்கொண்டு வருகிறது. விரைவில் அதுகுறித்து அரசு முடிவு எடுக்கும்.

**(2) மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளத்தை மீண்டும் மாற்றி நிர்ணயிப்பதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதால் அவர்கள் பெறும் ஊதியத்தில் ஏற்பட்டுள்ள இழப்பு குறித்து.**

திரு. பா. ரா. தாமஸ் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"1971 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதி முதல் தேர்வு நிலை அளிக்கப்பட்ட மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு அவர்கள் முந்தைய சம்பள விதத்தில் ஊதிய உயர்வு பெறும் அதே நாளில் இந்தத் தேர்வு நிலைக்கான ஊதிய உயர்வை வழங்குவதிலும், சம்பளத்தை மீண்டும் மாற்றி நிர்ணயிப்பதிலும் கால தாமதம் ஏற்பட்டுள்ளதால் அவர்கள் பெறும் ஊதியத்தில் ஏற்பட்டுள்ள இழப்பு குறித்தும், இன்னல் குறித்தும்."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, விவர அறிக்கை@ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : நான் கேட்டுள்ள கவன ஈர்ப்புக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்துள்ள விளக்கத்திற்கும் ஒரு சிறு வேறுபாடு இருக்கிறது. நான் 1—1—1971 முதல் தேர்வு நிலை அளிக்கப்பட்ட மானியம் பெறும் உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு அவர்கள் முந்தைய சம்பள விதத்தில் ஊதிய உயர்வு பெறும் அதே நாளில் இந்தத் தேர்வு நிலைக்கான ஊதிய உயர்வை வழங்குவதிலும், சம்பளத்தை மீண்டும் மாற்றி நிர்ணயிப்பதிலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால், அவர்கள் பெறும் ஊதியத்தில் ஏற்பட்டுள்ள இழப்பு குறித்து கேட்டிருக்கிறேன். ஆனால், அமைச்சர்

---

@ 468–469 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

Sir, we have already pointed out in the previous Session, that the food situation in Tamil Nadu is causing some concern. We have also learnt that the Tamil Nadu Government have approaihed the Central Government for supply of riie and wheat on more liberal terms during the coming months because it is anticipated that the off-take through the public distribution system is likely to exceed, according to the Government's estimate, 60,000 to 65,000 tonnes per month. But, according to our estimate, it is likely to touch even one lakh of tonnes per month because the demand is there. Although the Hon. Minister has expressed in his Note that the rice position in Tamil Nadu continues to be comfortable, I must confess that, according to our studies in the field, it is not at all comfortable in the sense in which the Government have expressed it. First, the Government cannot judge whether its present stock position of rice is comfortable, judging from the off-take from the Civil Supplies shops and fair price shops. We have found in the rural areas as well as in certain urban areas that the demand is not being met by these fair price shops because of inadequate stock position. In fact, if these fair price shops release stocks of foodgrains according to the demand that exists, the Government will find that within one month their entire stocks are likely to be exhausted. I would, therefore, request the Government to obtain the allotment from the Government of India as early as possible. According to our estimates, a minimum of 6 to 7 lakhs of tonnes of rice would be required because we have to maintain the distribution system till October until the kuruvai harvest starts in Thanjavur district.

The Hon. Minister mentioned—I read from the Debates in the Legislative Assembly—that the family cards that have been issued in Tamil Nadu amounted to 1.07 crores. The point is not whether those cards exist or whether dubious and fraudulent cards exist. Even out of those 1,07 crores family cards that have been issued I accept that a certain number may be fraudulent cards in the sense that those to whom cards have been issued have either disappeared from the scene or have been transferred, etc. The point is that today the number of cards that are being satisfied from the fair price shops is less than 3½ to 4 lakhs cards. So, the Hon. Minister need not feel unduly worried because of the existence of 1.07 crores cards. In fact, we have been pleading that if we are to have a well-maintained public distribution system, there is no escaping from the fact that new family cards based on the 1981 Census will have to be distributed to the population in Tamil Nadu



We are only having a population of 48 million people and, according to an estimate of 1:5, we should have about 9.5 or 9.6 million family cards. I would plead with the Government that even today people in the rural areas do not have family cards. When the Hon. Ministers go on tour in the month of May to inspect the drought situation, I would like them to verify from the villages and find out how many of the weaker sections really have cards. I shall not go into question whether they have sold or mortgaged their cards. They may have done all these. But, having done so, they are faced with a critical situation even today. During the months of May, June, July and August, there will be a tremendous dependence on the fair price shops. Therefore, I would request the Government to set in motion, even now, the work of streamling the system to withdraw all the family cards that have already been issued and to issue new family cards with whatever identity photos, etc. that may be required so that we may have an efficient public distribution system and the weaker sections and the poorer sections in the rural areas who are clamouring for foodgrains from fair price shops may not be denied their fair share of the foodgrains distributed through the public distribution system. In 1979 the Civil Supplies Department did not have much work, because at that time, the sitoation was comfortable in so far as food and other essential commodities were concerned. After that, it has accepted a number of responsibilities such as cement distribution, kerosene distribution, sugar distribution and distribution of edible oils and all articles in short supply. The Hon. Minister has mentioned that even firewood which was in short supply has been taken over by the Civil Supplies Department. I am not, for a moment, questioning the need for an efficient public distribution system. But I would like to point out one thing, which I have already pointed out on many occasions also, namely, when the Government take over the retail trade of a certain commodity the Government are displacing private trade to an enormous extent, whether it be sugar trade or nerosene trade because the Government are only taking about 10 per cent of the total quantity and the remaining 90 per cent is still left to the private sector. But in the case of retail distribution of kerosene, out of 13,500 and odd detail dealers who were licensed prior to 1978, about 5,000 to 6,000 detailers alone have been recoganised and they are allowed to distribute kerosene. I have already pointed out that the running of Civil Supplies shops like Amudham in rural areas will be very expensive for the Government in the future. In the Amudham shops they are paying Rs. 100 per month to the employees and the Government should not except that wages

[திரு. பா. ரா. தாமஸ்] [1981 ஏப்ரல் 29

அவர்களுடைய விவர அறிக்கையில் அனைத்து மேலாண்மையிலுள்ள பள்ளிகளில் 10 வருடம் தொடர்ந்து பணியாற்றியுள்ள பட்டதாரி ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்களுக்கு 1—4—1973 முதல் தேர்வு நிலைப் பதவி வழங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். 1—1—1971 அன்று தேர்வு நிலை பெற்ற ஆசிரியர்கள் 1-1-1972 அன்று ஊதிய உயர்வு பெற வேண்டும். தேர்வு நிலை வழங்கப்பட்ட எல்லா ஆசிரியர்களுக்கும் ஊதிய நிர்ணயம் செய்வதற்கு, அவர்களுக்குச் சாதாரண பணியிடத்தில் கடைசியாக ஊதிய உயர்வு வழங்கப்பட்ட தேதியையே கணக்கில் எடுத்துக்கொள்ளலாம் என்றும் அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இவர்களுடைய நிலையையும் அரசு பரிசீலித்து ஆணை வெளியிடுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசுப் பள்ளிகளிலே பணியாற்றக் ஆசிரியர்களை மனதில் வைத்துக்கொண்டு இதைக் கேட்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் அவர் கேட்கிற நியாயம் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அப்படியே எந்த ஆசிரியருக்காவது இந்த நியாயம் கிடைக்காமல் இருந்தால், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், நான் அதைப்பற்றிப் பரிசீலிக்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** நியாயம் என்பது அரசுப் பள்ளிகளிலே பணியாற்றுகிற ஆசிரியர்கள் அனைவருக்கும் வழங்கப்படுகிறது. ஆனால், தனியார் பள்ளிகளில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை. 1-1-1971 அன்று பணியில் இருப்பவர் 1-1-1972 அன்று ஊதிய உயர்வைப் பெறுகிறார். ஒருவேளை அந்த ஆசிரியர் 1-4-1970 அன்று முன்னாடியே சாதாரண நிலையில் உள்ள ஊதியத்தைப் பெற்றிருந்தால், அவருக்கு ஊதிய உயர்வு 1-4-1971 அன்று கொடுக்க வேண்டும். ஆனால், அது அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அது வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உறுப்பினர் எந்தப் பிரிவு கூடிய ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற சலுகை தனியார் பள்ளிகளிலே பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது இல்லை என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குறையாக இருந்தால், அதுபற்றி விவர அறிக்கையிலே தெளிவாக பதில் தரப்பட்டிருக்கும். இருந்தாலும் இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.



1981 ஏப்ரல் 29]

### 4. அரசின் தீர்மானங்கள்.

(1) தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன்வைக்கப்பட்டுள்ள தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் வினாக்கள்-விடைகள் நேரத்தின்போது நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க கோறுடாவைத் தவிர அனைவரும் துணைக் கேள்விகளைக் கேட்காமல் எனக்கு முழு ஒத்துழைப்பு தந்ததற்கு நன்றி. இரண்டு கொள்கை விளக்கக் குறிப்புகள் குறித்து விவாதம் நடைபெற இருக்கிறது. 16 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒருவர் பேசியது குறித்து மற்றவர் பேசுவதற்கு உரிமை கேட்காமல் ஒவ்வொருவரும் 5 நிமிடத்திற்குள் சுருக்கமாகப் பேச வேண்டியதைப் பேசி ஒத்துழைப்பு கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்படி இருந்தால்கூட பிற்பகல் 1.30 மணிக்குள் கூட முடியாது. கடைசி நேரத்தில் இருந்தால்கூட பிற்பகல் 1.30 மணிக்குள் கூட முடியாது. கடைசி நேரத்தில் தலைவருடன் ஒத்துழையாமல் இராமல், ஒத்துழைக்குமாறு அனைவரையும்

(முற்பகல் 10.30)

* THIRU A. R. DAMODARAN: Sir, I thank the Hon. Minister for planning this brief Policy Note on the food situation in Tamil Nadu and wish to offer my opinion regarding the matters expressed therein.

---

@ 169-493 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது

will always remain at that level. Already there is clamour that they should be paid Government scales of pay and the Government are likely to have a lot of worries. Therefore, my plea is that at least in rural areas—the Government may have them in urban areas—more co-operative societies should be used to the fullest extent possible and where the co-operative movement is not sufficiently well developed, the existing private trade should be preserved to the maximum extent possible to lessen the burden of the Government in maintaining the public distribution system.

Sir, regarding the Civil Supplies Department, I have a few remarks to make about the C.I.D. Food Cell Headquarters in Tiruchirappalli and Madurai, especially in relation to petroleum trade, where the Food Cell is carrying on a series of raids and inspections—I call them only inspections—in Petrol, Disel trade. Now, Sir, I have no objection to any enforcement authority carrying out its legitimate work of inspection. But what is happening is that petroleum products have been brought under the Essential Commodities Act. A Diesel and Motor Spirit Control Order has already been issued and under that order, a procedure has been mentioned for suspension of licence, cancellation of licence and for taking action against those dealer who are, but what is happening is that the Food Cell, the inspectinv authorities are trying to take indepenent action under the Essential Commodities Act and considerable harassment of the Diesel and Petroleum dealers is taking place in places like Tiruchirappalli, Madurai and Coimbatore. There are instances where the Food C.I.D. Cell has made inspection and has insisted that action will be taken under sections 5 and 7 of the Essential Commodities Act, namely, search and seizure provisions, when actually under the Diesel Control Order permission of the Collector would be required for taking action against such dealers. May I request the Government to consider whether action to be taken could be limited to the provisions of the Diesel and M. S. Control Order. Action under section 4 of the Essential Commodities Act is proving extremely harmful to the dealers in the trade because they do not know under which Act they are being prosecuted and in my opinion, it is only to show progress of the Government that the inspection wing is doing its legitimate duty. I would plead with the Government that all action that has to be taken against Petroleum dealers should be taken under the Diesel and M. S. Control order under which the permission of the Collector of the District and the Oil Companies is required before drastic action is taken against dealers. There are many details into which I do not want to go at the present moment. But I would plead with the Government



that strict instructions may be given to the C.I.D. Food Cell to

[முற்பகல் 10.40]

following instructions of the Collectors in this regard. I would also like to state that the diesel position has become considerably easier. Thiru Sethi the Hon. the Minister for Petroleum has relaxed the supply of diesel to all States. In our State, the Diesel Control Order was introduced on the 7th March 1980 when there was no Ministry. Control Orders, there is a remarkabl e reluctance on the part of the Government to da away with this Control Order, when it is no longer necessary. Even if the Government should feel that the Control Order should exist on paper—I know that the Government will try to retain this Control Order—I would still plead with them that, seeing the easy availability of High Speed diesel, instructions may be sent to the Collecors to held the distribution control orders in abeyance. They may insist on price control on diesel oil and I have no objection. But, distribution control causes a great deal of difficulty. Therefore, I would request the Government to see that instructions are sent in respect of this particular Diesel Control Order.

Sir, in the Civil Supplies Department we have a number of inspecting authorities and trade is generally feeling extremely harassed because the number of authorities has multiplied to such an extent. Under the Petroleum Control Order, for example, the officers of the Revenue Department, Civil Supplies Department, Food Vigilance Department, Transport Department, Police Department, etc., are all acting as inspecting authorities and generally there are 5 or 6 inspections per month. I would request the Government to see that we run these businesses as businesses and not as inspection centres for visiting officials. Trade has to operate. When there is no shortage, I do not see any necessity for such endless harassment. I would request the Government to consider this aspect. In fact if I may remind the Hon. Minister of a primise that was made by the Hon. Thiru Ponnaiyan on the 9th February 1980, he promised to have a Petroleum Advisory Committee. Because the trade was not able to represent its grievances to Ministers, he said, on the 9th February 1980 that the Government had considered our suggestions for having a Petroleum Advisory Committee at the State-level and he gave the assurance, on behalf of the Hon. the Chief Minister and the then Government, that such a Committee would be appointed. I accepted the assurance in all good faith. After the Ministry came back to power, I reminded it of the assurance. At that time, in June or July 1980, the Hon. Thiru

S. Ramachandran, the Power Minister also assured that he would carry out the assurance. Now, I wish to remind to Hon. the Finance Minister that this assurance has not been kept up. There is no harm in the Government having an Advisory Committee. The Essential commodities Act in such a stiff Act. Only three days ago, the Rajya Sabha passed an Essential Commodities Amending Bill providing for Special Courts to try offences under the Essential Commodities Act. That Bill ensures that all people who infringe the provisions of the Essential Commodities Act are arrested and the bailable provisions are withdrawn. It is an extremely difficult task. If I venture to explain all these, the immediate reaction of the hon. Members will be to say that economic offenders have to be punished. But, the point is that an economic offender is not an offender until he is proved to have offended an economic law. Until they find a man guilty, there is no point in their saying that he has to prove his innocence and that he should go to jail under the Essential Commodities Act. Anyhow, I realise that this will have to be fought out at a much bigger level by the traders themselves and obviously they will take steps to do it. But, in the matter of application of the inspection provisions, I would request that due consideration may be given by the Government to the fact that these are very harassing provisions. The Hon. Minister mentioned that he was going to have some advisory committee for some other purpose. I think it was for drought relief or for land tenancy, etc. I request that even in the district level, in the matter of application of the Essential Commodities Act, District Advisory Committees may be formed under the District Revenue Officer or the Collector himself so that there could be a montly or quarterly review. In that case, trade and the Chambers of Commerce would be able to represent to the Government the difficulties experienced by the trade in the distribution of the various products.

Last year, the report of the Civil Supplies Corporatiton was much more exhaustive and we were given some information about the possible loss in the distribution of foodgrains through the fair price shops and the public distribution system. This year, no mention has been made about the extent of loss which is likely even after the increase in the issue price which has been raised by 15 paise per kilogram.

I would request full information to be given to the Members of this House so that we could suggest ways and means of



improving the performance of the Civil Supplies Corporation which is embarking on a very ambitious scale of expansion of godowns, etc. and I hope this information will be furnished in the near future.

*திரு. வி. வி. வி. ஆவுந்தம் :* மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டு அளிக்கப்பட்ட கொள்கைவிளக்கக் குறிப்பில், தமிழகத்தில் தாமாகவும் தாராளமாகவும் உணவுப் பண்டங்கள் கிடைத்து வருகின்றன என்று அரசு அறிவித்திருந்தது. ஆனால் இந்த ஆண்டு, தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலை காரணமாக, அரிசிப் பற்றாக்குறை ஏற்படும் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்தில் வறட்சி காரணமாக அரிசி உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தாலும், பொதுவாக அகில இந்தியாவிலும் அரிசி மற்ற கோதுமை போன்ற உணவுப் பண்டங்கள் ஏராளமாக விளைந்திருக்கும் காரணத்தால் அதிகமான கையிருப்பு இருப்பதாகத் தெரிகிறது. மற்ற மாநிலங்களில் அரிசி விளைச்சல் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை காரணமாக அரசு லெவி முறையை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த லெவி முறை உற்பத்தி செய்பவர்களுக்கோ, உபயோகிப்பவர்களுக்கோ உதவிகரமாக இருப்பதில்லை.

லெவி முறையால் உற்பத்தியாளர்களுக்கு அதிகமான விலை கிடைப்பதில்லை. அதைப்போலவே உபயோகிப்பவர்களுக்கும் விலை குறையாத நிலையில் அதிகமாகிவிடுகிறது. அதோடு கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைச் சேர்ந்தவர்கள் அரிசி அல்லது நெல் கொள்முதல் செய்யும்போது அவர்களுக்கு லெவி கிடையாது. ஆனால் வணிகர்கள் மட்டும் 40 சதவீதம் லெவி கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, வணிகர்கள் தாங்கள் லெவி கொடுப்பதால் ஏற்படுகிற நட்டத்தை, அரிசியின் விலையை அதிகரித்து விற்பதன் மூலம்தான் சரிக்கட்ட வேண்டியிருக்கிறது.

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

லெவி முறை காரணமாக மாநிலத்தில் லஞ்ச ஊழல்தான் பெருகி வருகிறது. சிவில் சப்ளைஸ் செக் போஸ்ட்களுக்குத்தான் அதிகமான வருவாய் வருகிறது. லெவி அதிகமாகும்போது, மார்க்கெட் விலைக்கும் லெவி

நீடித்தால், தனியார் மூலமாக விநியோகிப்பதற்கு அரிசியோ நெல்லோ அதிகமாக வராத நிலைமைகள் ஏற்படும். அதன் காரணமாகத்தான் உபயோகிப்பவர்கள் பொது விநியோகத்தை நாடவேண்டியிருக்கிறது. தனியார் விநியோகம் மூலமாக அரிசியோ நெல்லோ வந்திருந்தால், பொது விநியோகத்திற்கு இவ்வளவு டிமான்ட் வந்திருக்காது. தனியார் விநியோகத்திற்கு தாராளமாகத் தடையின்றி நெல்லோ அரிசியோ வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாகச் சொல்வதென்றால், மூந்திய அரசுகள் எல்லாம் அரிசிப் பிரச்சினை காரணமாகத்தான் ஆட்சிப் பொறுப்பினை இழந்தார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மக்களுக்கு உணவுப் பொருள்கள் சிக்கல்கள் இல்லாமல் தாராளமாகக் கிடைப்பதற்கு வேண்டிய வசதிகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக "செல்ப்" பாஸ் போட்டால், அந்த வணிகர்களிடமிருந்து கண்டிப்பாக லெவி பெற வேண்டும் என்று அரசு ஆணையில் இருக்கிறது. அந்த ஆணையை வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சீனி விநியோகம் பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன். சீனி 65 சத விகிதம் பொது விநியோகத்திற்குப் போகிறது. மீதி உள்ளதுதான் வணிகர்கள் மூலமாக வியாபாரத்திற்கு வருகிறது. அந்த 65 சத விகிதம் சீனி குறைந்த விலைக்கு ஆலைகளிலிருந்து அனுப்பப்படுகிறது. மீதம் உள்ளது தான் வியாபாரிகளுக்கு அதிக விலைக்குக் கொடுக்கப்படுகிறது. ஆலைகள் கூட்டுறவுத் துறையின் மூலமாக விநியோகிக்கிறது. இந்த ஆலைகளிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டு விற்கப்படுகிறது. அதற்குப் பிறகு டெண்டர் மூலமாக விலை கோருகிறார்கள். டெண்டர் மூலம் வியாபாரிகள் டெண்டர் விலை கொடுத்தாலும்கூட, அந்த விலைக்கு யாருக்குமே கொடுக்காமல், மொத்தமாக ரிஜெக்ட் செய்துவிட்டு, அதற்குமேல் ஓபன் மார்க்கெட் ரேட் என்று வைத்து, ரூபாய் 775 அளவுக்கு ஓபன் மார்க்கெட் ரேட் என்று கொடுக்கிறார்கள். இந்தக் காரணங்களால்தான் வியாபாரிகள் கூடுதல் விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரியான சூழ்நிலைகளில்தான் வெளி மார்க்கெட்டில் விலை கூடிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் அவர்கள் மணியடித்தார்கள்.)

இன்னும் இரண்டு மூன்று விஷயங்களைப்பற்றிப் பேசி முடித்துக்கொள்கிறேன். இந்த மாதிரியான சூழ்நிலையில் விநியோகம் செய்துகொண்டிருக்கிறார்கள். சீனி உரிமை பெற்ற எல்லோருமே அந்த விநியோகத்தைச் செய்ய முடிய



வில்லை. அப்படி விநியோகம் செய்யாமல் இருப்பதால், உங்கள் உரிமைகளைப் பறிமுதல் செய்கிறோம் என்று சொல்கின்றார்கள். சீனி கொள்முதல் செய்ய முடியாத நிலையில் இருக்கும்போது, அவர்கள் உரிமையைப் பறிமுதல் செய்வது நியாயமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் லைசென்ஸ் முறை கொண்டுவரப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இந்த லைசென்சுகளை ஆண்டுக்காண்டு புதுப்பிக்க வேண்டுமென்று விதி செய்யக்கூடாது. மத்திய சேல்ஸ் டாக்ஸ் உரிமைகள் வைத்திருப்பவர்கள் ஒரே ஒரு முறை உரிமம் பெற்றுவிட்ட பிறகு புதுப்பித்துக்கொள்ளலாம். ஆண்டுக்காண்டு புதுப்பிக்கத் தேவையில்லை என்று இருக்கிறது. ஒரு தடவை அந்த உரிமம் பெற்றுவிட்டால், தொடர்ந்து உரிமத்தைப் புதுப்பிப்பது என்பதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உணவுப் பிரச்சினைபற்றி அரசினுடைய கொள்கைகளை விளக்கும் முகத்தான் என்னுடைய கருத்துக்களைத் தொடர்ந்து பேச அனுமதி அளித்ததற்கு முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உணவுப் பிரச்சினை 1940-க்கு முன்னாலே கிடையாது. அந்தக் காலத்திலேயெல்லாம் தாராளமாக எந்த நாட்டிலேயிருந்தும் அரிசி வரலாம். மூட்டை மூட்டையாக அரிசி வரலாம். ரூபாய்க்கு 6 படி அளவிற்குக் கிடைத்தது. அந்த அளவிற்கு அரிசி வாங்கலாம். 1930-லிருந்து 1935 வரை ஒரு ரூபாய்க்கு 8 படி உளுந்து கிடைத்தது. ஒரு ரூபாய்க்கு பச்சைப் பயறு 8 அல்லது 8½ படி அளவிற்குக் கிடைத்தது. மொச்சை பருப்பு ஒரு ரூபாய்க்கு 9 படி கிடைத்தது. அந்த அளவுக்குத் தடையின்றிக் கிடைத்தது. இந்தமாதிரி பற்றாக்குறை நாட்களிலே வெளியிலேயிருந்து அவைகளை தாராளமாகக் கொண்டுவந்தார்கள். அப்படி தாராளமாகக் கிடைத்துக்கொண்டிருந்த காலத்திலே வாழ்ந்தவர்கள் நாங்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். 1940-க்குப் பின்னால் போர் நெருக்கடி வந்த பிறகு நாட்டிலே வெள்ளைக்காரர்கள் ஆண்டுகொண்டிருந்த காலத்திலே, ரேஷன் முறையைக் கொண்டு வந்தார்கள். ரேஷன் முறை எதற்காக வந்தது என்றால், உணவுப் பொருள்கள் இருப்பு, செலவுக் கணக்குக்களைப் பார்ப்பதற்கும், பற்றாக்குறையை நீக்க வேண்டும் என்ற அளவிலும், அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்ற அளவிலும்தான் ரேஷன் முறை வந்தது. அந்த

ஏற்படுகிறது. எனவே அதற்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் வழுல் அதிகரிக்கிறது. அதன் விளைவு லெவியைச் சரியாக அமுல்படுத்த முடியாமல் போய்விடும். தற்போது 40 சதவீதம் என்றிருப்பதை மாற்றி 10 சதவீதம்தான் லெவி என்றால், வணிகர்கள் ஓரளவுக்கு நட்டத்தைத் தாங்கிக்கொண்டு வியாபாரத்தை முறைப்படி செய்வார்கள். தற்போது முறையாக வியாபாரம் செய்யும் சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் வறட்சி காரணமாக ஏற்பட்டிருக்கும் பற்றாக்குறை நீங்க வேண்டுமென்றால், வெளி மாநிலங்களிலிருந்து அரிசி தாராளமாக வருவதற்கான நடைமுறை இருக்க வேண்டும். வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்குள் வரக்கூடிய நெல்லுக்கு லெவி கிடையாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதோடு வெளி மாநிலங்களிலிருந்து வருகிற அரிசியை 15 தினங்களுக்குள் விற்க வேண்டும் என்று சொல்லியிருந்ததையும் இப்போது ஒரு மாதம்வரை வைத்துக்கொள்ளலாம் என்று நீட்டித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நான் வரவேற்கிறேன்.

இருந்தாலும், வெளி மாநிலங்களிலிருந்து அரிசி தமிழகத்திற்குள் வருவதற்குள் எவ்வளவு இடைஞ்சல்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெளிவாக்க விரும்புகிறேன். வெளி மாநிலங்களிலிருந்து அரிசியை அனுப்புவதற்கு முதலில் அங்கே உள்ளவர்கள் வேகன் வேண்டுமென்று இன்டெண்ட் செய்ய வேண்டும். அரிசி, நெல் முதலியவை பிரையாரிட்டி லிஸ்டில் இருப்பதால், சில நாட்களிலேயே வேகன்கள் கிடைத்துவிடும். அதாவது 10, 15 நாளில் வேகன்கள் கிடைக்கும். வேகன்கள் கிடைத்ததும் அரிசியைத் தங்கள் பெயரிலேயே ஏற்றி, ரெயில்வேயில் ஆர். ஆர். இன்வாய்சில் "செல்ப்" என்று போட்டு அனுப்புவார்கள். இவ்வாறு "செல்ப்" என்று போட்டு அனுப்புவதுதான் எனக்குத் தெரிந்து கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகிற முறையாகும். எந்தப் பொருளானாலும் வெளி மாநிலங்களிலிருந்து அவர்கள் அனுப்பும்போது "செல்ப்" என்று போட்டு அனுப்புவார்கள். தமிழகத்திலிருப்பவர்கள் மற்ற மாநிலங்களுக்குப் போய் அவர்களே கொள்முதல் செய்து, அவர்களே அவர்களின் பெயருக்கு ஏற்றியனுப்புவது வழக்கமில்லை. "செல்ப்" என்று பால் போட்டு அனுப்புவார்கள். அந்த முறையில் இப்போது "செல்ப்" என்று போட்டு தமிழகத்திற்கு அனுப்பினால் அந்த அரிசி இங்கே வந்து சேர்ந்ததும் அதற்கு லெவி கட்ட வேண்டுமென்று





சொல்லுகிறார்கள். வெளி மாநிலத்திலிருப்பவர்கள் நமது மாநிலத்திற்கு அரிசியைக் கொண்டு வந்திருக்கிறார்கள், மொத்த வியாபாரிகளுக்கு அவர்கள் விற்கக்கூடாது என்றாலும், நீங்கள் லெவியை மட்டுமாவது கட்டி விற்பனை செய்வதால் அதற்கு லெவி கொடுக்க வேண்டும் என்று அதிகாரிகள் விற்கிறார்கள். அவ்வாறு அவர்கள் விற்பதற்கு உரிமை இல்லை. சட்டப்படி வற்புறுத்துகிறார்கள். அதுமட்டுமல்ல. வெளி மாநிலங்களிலிருந்து அரிசி இங்கே கொண்டுவரப்பட்டு வெளி மாநில வியாபாரிகள் 'இங்கே' விடுங்கள் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நடைமுறை இருந்தால், நாம் வெளி மாநிலங்களிலிருந்து அரிசியையோ நெல்லையோ இனி தருவிக்க முடியாது. வழக்கமாக "செல்ப்" பாஸ் போட்டுத்தான் வரவழைக்கிறோம். அதிலும் "செல்ப்" பாஸ் போட்டால், அதை முதலில் பேங்கில் கொடுத்து அங்கே பணம் பெற்றுக் கொள்கிறார்கள். பேங்குக்காரர்கள் நம்மிடம் பணத்தை வசூலித்துக்கொண்டு, அதற்குப் பிறகு அதை நம் பெயருக்கு 'என்டார்ஸ்' செய்து கொடுக்கிறார்கள். இதுதான் நடைமுறையாக இருந்து வருகிறது. இங்கே உள்ள கருத்துப்படி பார்த்தால், முதலிலே கொள்முதல் செய்யும் மொத்த வியாபாரி பாங்கு தான். அந்த பாங்கு கொள்முதல் செய்யக் கூடிய நிலையில், அப்படி மொத்தமாகக் கொள்முதல் செய்யும் பாங்குக்கு லெவி கிடையாது. லெவி என்று சொல்லும்போது, அந்த பாங்கிலேதான் அந்த லெவியைச் சட்டப்படி கோர முடியும்.

(முற்பகல் 10.50)

இப்போது வெளி மாநிலங்களிலிருந்து உணவுப் பொருள்கள் வருவதற்கு லெவி கிடையாது என்று அரசு அறிவித்திருந்தாலும் கூட, நடைமுறையில் லெவி வேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள். நம்முடைய மாநிலத்திலே உள்ள வியாபாரிகளுக்கு மற்ற மாநிலங்களிலே உள்ள வியாபாரிகள் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இப்போது இந்த மாதிரியான சூழ்நிலைகள் ஏற்பட்டுவிட்டன. ஆகவே அங்கே உள்ளவர்கள் இப்போது கமிஷன் முறையில் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கமிஷன் கடைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டிருந்தாலும்கூட, அவர்களுக்குக் கொள்முதல் செய்து விற்பதற்குத் தான் லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது என்றும், அந்தக் கமிஷன் வியாபாரத்திற்கு தனியாக லைசென்ஸ் வாங்க வேண்டுமென்றும் சொல்கின்றார்கள். இத்தனை ஆண்டுகளாக அந்த மாதிரியான நிலைமைகள் இல்லை. இப்போது இந்த மாதிரி தொந்தரவுகள் இருக்கின்றன. இந்த நிலையில் நம்முடைய மாநிலத்திற்கு அரிசியோ, நெல்லோ அனுப்புவதற்கு அங்குள்ள வியாபாரிகள் தயங்குகிறார்கள். 10, 15 தினங்களாக அந்த மாதிரியான தொந்தரவுகள் இருப்பதால், அரிசி வரவில்லை. இந்த நிலைமைகள்

[திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து] [1981 ஏப்ரல் 29

முறையிலேதான் ரேஷன் கார்டுகளை வழங்கிக்கொண்டிருக்கிறோம். 1940-லே ரேஷன் முறை அமுலுக்கு வந்து, அதுவே 1981 வரையிலும் தொடர்ச்சியாக இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. துரதிருஷ்டவசமாக இந்தியாவில் மட்டுமல்லாமல், தமிழ் நாட்டிலும் அதிகமான சோதனைகள் ஏற்பட்டு, அதனால் சங்கடங்களுக்கு நாம் ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்பது நாடறிந்த உண்மையாகும். 1945-ல் மீண்டும் இரட்டை ஆட்சி முறையிலே நமது மதிப்பிற்குரிய ஆந்திர கேசரி திரு. பிரகாசம் ஆட்சியிலே இருந்தபோது உணவு வாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு நிலைமை இருந்தது. அந்தக் காலம் அமைச்சர் அவர்களுக்கு ஓர் உணவு இலாகாவே ஏற்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்போது உணவு அமைச்சராக இருந்தவர் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் என்று நினைக்கிறேன். அவர்கள் காலத்திலேயே அதிகமான பற்றாக்குறை ஏற்பட்டு, நாட்டிலே தேவைக்கான உணவுப் பொருள்களை வாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு நிலைமை இருந்தது. அந்தக் காலம் 1945 என்று நினைக்கிறேன். 1945-லேயிருந்து படிப்படியாக 1947, 1948 என்று கருதுகிறேன், மாண்புமிகு திரு. ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, அதிகமான உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு சிக்கலான நிலைமைகள் ஏற்பட்டன. அப்போது தந்தை பெரியார் அவர்கள், "உணவு இலாகாவை இயக்குகின்ற அதிகாரிகள் சரியாக நடைமுறைப்படுத்தவில்லை. அவர்கள் அனுபவம் பெற வேண்டும்" என்று சொன்னார்கள். அந்த முறையில் அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அவர்கள்தான் பொறுப்பில் இருக்க வேண்டும். அப்போதுதான் மக்களுடைய கஷ்டத்தை நீக்க முடியும். அந்த நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் டாக்டர் ராஜன் அவர்கள் உணவு உற்பத்தி செய்கின்ற சமுதாயத்திலிருந்து வந்தவர்கள் அல்ல, அந்தப் பக்கமே தெரியாதவர்கள் என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் ஹாஸ்யமாகப் பேசுவது உண்டு. அந்த மாதிரியான நிலைமைகளில் கஷ்டங்களையெல்லாம் நீக்குவதற்கு ஓரளவுக்கு நம் நாட்டிலே தேவையான பொருள்களை வளர்க்க வேண்டும் என்ற உணர்விலே முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் வறட்சிகள், புயல்கள் எல்லாம் வந்ததால், 1947 முதல் 1952 வரையில் கடுமையான பஞ்சங்கள் வந்திருக்கின்றன. அந்தமாதிரிப் பஞ்சங்கள் வந்தபோது திருநெல்வேலியிலிருந்து தஞ்சைக்குப் பலர் போய்க்கொண்டிருந்தார்கள். காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்திலேயே இப்படி ஏற்பட்டது. அப்போதே தஞ்சாவூரிலிருந்தும் பல ஊர்களுக்கு மாறிப் போய்க்கொண்டிருந்தார்கள். அப்போது "நாட்டிலே காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், மக்கள் பஞ்சம் தீரும், பசி தீரும் என்றெல்லாம் சொன்னீர்களே, இப்போது சாதாரணமாக பச்சைத் தண்ணீர்கூட கிடைக்கவில்லை" என்று சொல்வார்கள். அந்தமாதிரியான நிலைமைகள் எல்லாம் இருந்தன. இப்படிப்பட்ட நிலைமைகளெல்லாம்



1981 ஏப்ரல் 29] [திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து]

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11.00)

நாட்டிலே அதிகமாக வந்து, வயது வந்த பிள்ளைகளையெல்லாம் வீதியிலே கூட்டிக்கொண்டுபோய், பிள்ளையோ பிள்ளை என்று விலைக்கு விற்ற காட்சிகளை அனுபவித்தோம். இதெல்லாம் 1947-லிருந்து 1952 வரை. அந்த நிலைமைகளையெல்லாம் நாளுக்கு நாள் சமாளித்து வந்திருக்கிறோம். 1967 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக்கு முடிவு காலம் வரும்வரை நாட்டிலே உணவு நிலைமையை ஒரு பிரச்சினையாக வைத்து, அரசியல் கட்சித் தலைவர்கள் மேடையிலே அரசியல் பண்ண வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் காரணமாக, நல்லாட்சி நடத்தியிருந்தாலும், அன்றாடத் தேவைகளை மக்களுக்குக் கொடுக்க முடியாத காரணத்தால், கோட்டையைக் காலி பண்ண வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டதென்பதை நாம் அறியாமல் இல்லை. அந்த நிலைமைகள் மாறி, பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி வந்த பிறகு, நாட்டிலே தேவையான மழை பெய்து, ஓரளவிற்கு உணவு கிடைத்தது. இவ்வளவு பஞ்சம், பசி, பட்டினி ஏற்பட்டதற்குக் காரணம் ஆட்சியில் உள்ளவர்களின் கொள்கைதான் என்று அண்ணா அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். நாட்டிலே கட்டாயக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொன்னபோது, விவசாயிகள் தங்கள் வீட்டுக்குத் தேவையானதைக்கூட வைத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாகத்தான், தான் விளைவித்ததைத் தன் வீட்டுக்குக்கூட எடுத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாகத்தான் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே அது குற்றச்சாட்டாகச் சொல்லப்பட்டது. கட்டாயக் கொள்முதல் செய்த அரிசி, சரியான பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டதா என்றால் கிடையாது. அதை யாரிடம் ஒப்படைத்தார்கள்? ரைஸ் மில் அதிபர்களிடம், பெரிய முதலாளிகளிடம் ஒப்படைத்தார்கள். கட்டாயக் கொள்முதல் செய்த அரிசியை, நெல்லை அவர்களுடைய கிடங்குகளில் வைத்தார்கள். கணக்குக் கேட்டபோது, எடைக்கு கணக்குக் கொடுக்க முடியாதென்று சொன்னார்கள். உணவுப் பிரச்சினையில் அப்போதே குறைபாடுகளைச் சொன்னோம். சாதாரணமானவர்கள், கடன் வாங்கி வியாபாரம் செய்தவர்களெல்லாம் பெரிய வியாபாரிகளானார்கள். கள்ள மார்க்கெட்காரர்கள் பெரிய வியாபாரிகளானார்கள். இந்த மாதிரி நிலைமை ஏற்படக் காரணமென்ன? அதற்கு அரசுதான் காரணமென்று சொல்லி, காங்கிரஸ் கட்சியைத் தண்டித்தோம். அந்த நிலைமைகள் ஓரளவிற்கு மாறியிருக்கின்றன. அப்போது, அவர்கள் அதிகாரிகளைத் தங்கள் கையாளாக்கிக்கொண்டார்கள். ஆளும் கட்சி அஜாக்கிரதையாக ஆட்சி நடத்தியதால்தான் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டன. அந்த நிலை இப்போது மாறியிருக்கிறது. பேரறிஞர்

[திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து] [1981 ஏப்ரல் 29

அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, ஓரளவிற்குச் சரியான ஆட்சி நடத்த வேண்டுமென்ற அடிப்படையிலே, இரண்டு ஆண்டுக் காலம் முடிந்த வரையில் திறமையோடு உணவுப் பிரச்சினையை அவர்கள் சமாளித்தார்களென் பதை மறுக்க முடியாது.

(மாண்புமிகு துணைத் தலைவர் மணியடித்தார்.)

துணைத் தலைவரவர்களே, கொஞ்சநேரம் கூட்டிக் கொடுக்க வேண்டும். அவையின் இளம் உறுப்பினர்களுக்கு பழைய காலத்தைப்பற்றித் தெரியாது. அதைப்பற்றி விளக்கம் கொடுக்க வேண்டியுள்ளதால், துணைத் தலைவரவர்கள் சிறிது நேரம் அனுமதிக்க வேண்டும். அண்ணா அவர்கள் காலத்திலே ஓரளவிற்குச் சமாளித்தோம். அதற்குப் பின்னர், அருமைத் தம்பி டாக்டர் கருணாநிதி அவர்களின் ஆட்சியிலே ஓரளவிற்குச் செய்தார்களென்றாலும், அதில் ஏற்பட்ட ஊழல்கள், குறைபாடுகள் எவ்வளவு என்பது நன்றாகத் தெரியும். நேற்றைய தினம் திறப்பு விழா, மறுநாளே மூடுவிழா என்ற முறையில், இடைத் தரகர்கள் கோடிக் கணக்கில் கொள்ளை அடித்தார்களென்பதை நாடறியும். அந்த நிலைமைகள் மாற வேண்டுமென்ற அடிப்படையிலே, நல்லாட்சி அமைய வேண்டுமென்ற அடிப்படையிலே, தமிழகத்திலே புரட்சித் தலைவரின் தலைமையின்கீழ் நல்லாட்சி நடத்த மக்கள் உரிமை கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் நம்முடைய உணவு நிலைமையில் உள்ள கஷ்டங்களைப் போக்கி, ஓரளவிற்குத் தேவையான நேரத்தில் நல்ல அரிசி கிடைக்கிறது, நல்ல உணவு கிடைக்கிறது என்ற முறையில் காரியங்கள் செய்திருக்கிறார்கள். வெளிமார்க்கெட்டில் கிடைக்கிறது. அந்த மாதிரி ஊழல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. வி. வி. ஆனந்தம் அவர்கள்கூட லெவி போடுவது, கன்ட்ரோல் வைப்பது தவறு என்று சொன்னார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், வியாபாரிகளை நம்பிப் பூரணமாக விட்டுவிட முடிவதில்லை. அறுவடைக் காலங்களில் ஏன் ஒரு கிலோ அரிசி மூன்று ரூபாய், நான்கு ரூபாய் அளவிற்குக் கொண்டு வந்தார்கள் ? அறுவடை நடந்திருக்கிறது. ஒரு கிலோ அரிசி 3½ ரூபாய் விற்கிறது. ஏன்? பதுக்கல்காரர்கள் உள்ளே நுழைகிறார்கள். அவர்களை நுழைய விடக்கூடாது. அந்த அடிப்படையிலே லெவி கொள்முதல் செய்வதை அரசு வைத்திருக்கிறது. இல்லாவிட்டால் இதையும் சாதாரணமாக விட்டிருக்கலாம். ஆந்திராவிலிருந்து வருகிற அரிசிக்கு லெவி கிடையாது. ஆகவே, இப்போது தமிழகத்தின் உணவு நிலைமையை மக்கள் பாராட்டுகிறார்கள். விலை கொஞ்சம் கூட இருந்தால்கூடப் பரவா யில்லை. 1930-லே ரூபாய்க்கு 10 படி அரிசி கிடைத்தது.. அப்போது பெற்ற பிள்ளையை வளர்க்க முடியாமல், மலேயா, சிங்கப்பூர் போனார்கள். இன்றைக்குப் பண வீக்கம் இருக்கிறது. வாங்க சக்தி இருக்கிறது. சாதாரண



1981 ஏப்ரல் 29] [திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து]

அரசின் உணவுக் கொள்கையை முழுக்க முழுக்க வரவேற்று, தமிழக அரசின் உணவுக் கொள்கை மக்களின் எண்ணத்தை, நம்பிக்கையை அடிப்படையாக வைத்திருக்கிறதென்று தெரிவித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உணவைச் சேதாரமில்லாமல், சிக்கனப்படுத்தி, உபயோகிக்க வேண்டும். அடுத்து, திரு. செ. முத்துசாமி அவர்கள்.

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலைவரவர்களே, உணவு நிலைமை பற்றியும், விநியோக முறைபற்றியும் இங்கே பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய நாட்டு நிதி அமைச்சர்களை பத்திரிகைகளில் போட்டோ போட்டு சித்தரித்த காலமும் உண்டு. திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் திருவோட்டை ஏந்தி அமெரிக்கா சென்று திரும்புவதுபோல படங்களையும், திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் திருவோட்டை ஏந்தி, யாசகம் கேட்பது போலப் படங்களையும் போட்டு, கேவலப்படுத்தப்பட்டது. இந்தியா என்றாலே, பிச்சை எடுக்கும் நாடு என்று எல்லோரும் கேவலப்படுத்தும் நிலைமை இருந்தது. அதையே சவாலாக ஏற்று, இன்றைக்கு இந்தியாவிலே பசுமைப் புரட்சி ஏற்படுத்தப்பட்டு, நல்ல பொது விநியோக நடைமுறைகள் வந்ததால், இன்றைக்கு உணவிற்கு வெளி நாடுகளிலே கையேந்தும் நிலைமை இல்லாமல், தன்னிறைவு ஏற்பட்டுள்ள சூழ்நிலை இருப்பது பெருமைக்குரியது. அதேபோன்று தமிழ் நாட்டிலும் உணவு உற்பத்தியைப் பெருக்க எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகளுக்குப் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் தமிழ் நாட்டின் சராசரி உற்பத்தி எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். மற்ற மாநிலங்களிலே நெல் உற்பத்தியை எடுத்துக்கொண்டால், சில மாவட்டங்களில் உற்பத்தி நல்ல முறையிலும், மற்ற மாவட்டங்களில் சுமாராகவும் இருக்கும். ஆனால், தமிழ் நாட்டில் நெல் உற்பத்தியைப் பொறுத்தவரையில், முழுமையாக எல்லா மாவட்டங்களிலும் நிறைந்த உற்பத்தி இருக்கிறது. இன்றைக்கு நெல்லை அரைப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய விஞ்ஞான இயந்திரங்கள் இல்லாததால், நிறைய சேதாரம் ஏற்படுகிறது. உமி நீக்கப்பட்ட தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்க முடியாமல் தவிக்கிறோம். இதனால் 80 சதவிகிதம் வீணடிக்கப்படுகிறது. எனவே, ஷெல்லர்கள் மூலம் தவிடு எடுக்கப்பட்டு, அதிலிருந்து எண்ணெய் எடுக்கும் சூழ்நிலை தமிழ் நாட்டில் குறைந்திருக்கிறது என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, பழைய முறையில் அரைத்துக் கொண்டிருக்கும் அரவை மில்களை நவீனப்படுத்துவதன் மூலம், ரப்பர்

ரோலர்கள் போட்டு, ஷெல்லர்கள் போட்டு, தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் முறைகளைச் செய்ய வேண்டும். அந்த நடைமுறையை ஊக்குவிக்க வேண்டும். அதற்கான நடைமுறையை விரைவில் கொண்டு வர வேண்டும்.

(பிற்பகல் 11-10)

[illegible] உடையக் கூடிய பொருள்கள் மாட்டுக்குத்தான் செல்கின்றன, மக்களுக்குச் செல்லவில்லை. சேதாரம் அதிகமாக இருக்கிறது. மேலும் எலிகள் போன்றவைகளால் உணவுப் பொருள்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை இருப்பதால், அவைகள் மூலமும் உணவுப் பொருள்களுக்குச் சேதாரம் ஏற்படுகிறது. ஆகவே நவீன முறையில் தயார் செய்யப்பட்ட கருவிகளை உபயோகிப்பதற்கு ஊக்கப்படுத்த வேண்டும்.

இன்றைக்கு சீனி விலை கன்ட்ரோல் விலை ஒன்றும், வெளி விலை ஒன்றுமாக இருக்கிறது. சீனியினுடைய விலையைப் பொறுத்தவரையில், அதனை உற்பத்தி செய்யக்கூடிய விலைக்கும் உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்குக் கிடைக்கக்கூடிய விலைக்கும் நிரம்ப வேறுபாடு இருக்கிறது. இன்றையதினம் சுகர் மில்லில் இருக்கக்கூடியவர்கள் கொள்ளையடிக்கிறார்கள். வெளி மார்க்கெட்டில் ஆறு ரூபாய்க்குமேல் சில சமயங்களில் 8 ரூபாய், 9 ரூபாய் என்றுகூட விற்கிறது. ஆனால், அதனை உர்பத்தி செய்யக்கூடிய விவசாயிக்குச் சரியாக நியாயமாக விலை போய்ச் சேர்வதில்லை. கன்ட்ரோல் விலைப்படிதான் அவர்களுக்குப் போய்ச் சேர்கிறது. உற்பத்தி பண்ணக்கூடிய விவசாயிக்கு 5 கிலோ சீனி தந்தால் என்ன என்கிற கேள்வியை நான் கேட்க ஆசைப்படுகிறேன். அவ்வளவையும் மில்லில் உள்ளவர்களே சாப்பிடுகிறார்கள். ஆகவே உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிக்குக் கொஞ்சமாகச் சீனியைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு மத்திய அரசு கொடுத்திருக்கக்கூடிய கோட்டா அடிப்படையில்தான் சீனி விநியோகம் செய்யப்படுகிறது. இவ்வளவுதான் சீனி இருக்கிறது என்று சொன்னாலும்கூட, நமது அரசு மத்திய அரசிடத்தில் சண்டை போட்டாவது அதிகமாகப் பெறவேண்டும். அப்படி கோட்டாவின் மூலம் அதிகமான சீனியைப் பெற்று அதை நல்ல முறையில் விநியோகம் செய்ய வேண்டும். இன்றைக்கு விநியோக முறையிலே மக்களைத் தண்டிக்கக்கூடிய நிலை இருக்கிறது. உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த விலையும் இடையிலே இருப்பவர்களுக்குக் கொள்ளை லாபம் கிடைக்கிற நிலையும்தான் இருக்கிறது. விநியோக முறையில் இருக்கிற கோளாறு காரணமாக வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கும் சரியான விலைக்குக் கிடைப்பதில்லை, அதை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கும் சரியான விலை கிடைப்பதில்லை. இரண்டு மடங்கு என்றால்கூட, ஒத்துக்கொள்ளலாம். ஆனால் நான்கு மடங்கு வித்தியாசம் இருக்கிறது. [illegible] உற்பத்தி



செய்பவர்களுக்கும் வாங்கி உண்பவர்களுக்கும் இடையிலே இருப்பவர்கள் கொள்ளை லாபம் அடிக்கக்கூடிய நிலை இருக்கிறது. வினியோகத்தைப் பொறுத்தவரை, பல கோளாறுகள் இருப்பதாகப் பலரும் சொல்கிறார்கள். பொதுவாகவே கொள்ளையடித்துக் கொண்டிருப்பவர்களைக் கண்டு அரசாங்கம் பயந்துகொண்டிருக்க முடியாது. அதிகாரிகள் வேண்டுமானால் சில இடங்களில் தவறுகள் செய்யலாம். பொது வநியோக முறை என்ற ஒன்று மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், நிச்சயமாக மக்கள் பாதிக்கக்கூடிய நிலையில் இருந்திருப்பார்கள். பொது வநியோக முறையை இன்னும் நல்ல முறையில் சீர்திருத்தங்கள் செய்து, நல்ல முறையிலே அட்மினிஸ்ட்ரேஷன் செய்வதன் மூலம் கோளாறுக்கு இடமில்லாமல் செய்யலாம். லெவி முறையும், பொது வநியோக முறையும் நிச்சயம் சமுதாயத்தில் இருந்தே ஆக வேண்டும்.

பொதுவாக அரசின் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பை நான் ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன். இந்தக் கொள்கை மட்டும் அரசாங்கத்திடம் இல்லையென்றால், பொது மக்களைக் காக்க முடியாது, உணவுப் பொருள்களைக் குறைந்த விலையில் அவர்களுக்கு விநியோகிக்க முடியாது.

அடுத்து, இன்றைக்குக் குறைந்த விலையில் ஒரு பிரிவினருக்கு மட்டும் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. உண்மையில் யார் யார் அப்படிச் சலுகை விலையில் உணவுப் பொருள்களைப் பெறத் தகுதியுடையவர்கள் என்று பார்த்தால், இந்த நாட்டிலுள்ள குழந்தைகளுக்குச் சலுகை விலையில் உணவுப் பொருள்களை வழங்க வேண்டும். அவர்கள் நல்ல ஊட்டச்சத்துள்ள உணவுப் பொருள்களை குழந்தைப் பிராயத்திலே சாப்பிட்டாக வேண்டும். அதுபோல் பள்ளி மாணவர்களுக்குச் சலுகை விலையில் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டாக வேண்டும். அதுபோல் ஊதியமில்லாத வயோதிகர்களுக்கு வழங்கப்பட்டாக வேண்டும். அடுத்து, உடல் ஊனமுற்றவர்களுக்கு, உழைக்க முடியாதவர்களுக்குத் தந்தாக வேண்டும். ஆனால், இவர்கள் யாருக்கும் சலுகை விலையில் உணவுப் பொருள்களைத் தராமல், போலீசாருக்கு மட்டும் தந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் தகுதியில்லாதவர்கள் என்கிற எண்ணத்தில் போலீசாருக்கு மட்டும் மலிவு விலையில் உணவுப் பொருள்கள் தருவதுபற்றிக் கவலையில்லை. போலீசார் துணையோடுதான் ஆட்சியை நடத்துகிறார்கள். போலீஸ்காரர்கள் நன்றாக இருக்க வேண்டும். அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதனால் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஏழை ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளுடைய தகப்பன் இருக்கிறான். அவனுடைய இரண்டு பிள்ளைகள் ஹாஸ்டலில் சேர்ந்து படிக்

கிறார்கள். அவர்களுக்குச் சலுகை விலையில் உணவுப் பொருள்களை வழங்கி யிருக்க வேண்டாமா? பழைய காலத்தில் செங்கன் செட்டியார் சத்திரம் போன்ற ஆஸ்டல்களில் 5 ரூபாய்க்கு, 10 ரூபாய்க்கு எல்லாம் உணவு வழங்கிய தால்தான், சமுதாயத்திலுள்ள பல ஏழைகள் படிக்க முடிந்தது. இலவசமாக அங்கெல்லாம் உணவு கொடுத்ததால்தான், பல அரிஜனங்கள் முன்னேற முடிந்தது. போலீஸ்காரர்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருள்கள் வழங்குவது போல் ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இறுதியாக, நாடு விஞ்ஞானத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. பல வெளி நாடுகள் உணவு உற்பத்தி செய்வதில் திறமையாகச் செயல்படுகின்றன. உணவு உற்பத்தியைப் பொறுத்தவரை, இன்றைக்கு அமெரிக்க நாடுதான் பெரிய அளவில் உற்பத்தி செய்வதாகச் சொல்லப்படுகிறது. இன்றைக்கு இஸ்ரேல் நாட்டில் ஒரு ஹெக்டேரில் எவ்வளவு பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறது என்கிற கணக்கைப் பார்த்தால், அந்த நாடு எவ்வளவு உணவு உற்பத்தியில் முத லிடம் வகிக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ள இயலும். பருத்தியும் ஒரு வகையில் உணவுப் பொருள்தான். காரணம் பருத்தியிலிருந்து இன்றைக்கு உணவுப் பொருளைச் சார்ந்த எண்ணெய் எடுக்கப்படுகிறது. அமெரிக்கா பயன்படுத்துகிற நீரில் 10-ல் ஒரு பங்கைப் பயன்படுத்துகிறார்கள். இஸ்ரேல் பாலைவனமாக இருப்பதால், தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. பிறகு அமெரிக்கா பயன்படுத்துவதில் 20-ல் ஒரு பங்கு பெர்ட்டிலைசரை லிக்யூட் ஆக இன்ஜெக்ஷன் மூலம் நேரடியாகப் பயிர்களுக்குச் செலுத்தி அமெரிக்காவைவிட 2½ மடங்கு உற்பத்தி செய்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் கவனத்தில் கொண்டு இன்றைக்கு பல நாடுகள் உணவு உற்பத்தியில் முன்னேறியிருக் கின்றன என்பதையும் மனதில் கொண்டு நமது அரசு உணவு உற்பத்தி செய் வதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். விநியோகத்தை இந்த அரசு நல்ல முறையில் செய்ய வேண்டும், அதற்கு எல்லோரும் ஒத்துழைப்போம், எல்லா மக்களும், அரசியல் கட்சிகளும் கட்சிக் கண்ணோட்டமின்றி ஒத்துழைக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். விநியோக முறையைச் சீர்திருத்த வேண்டும், வெற்றிகரமாக ஆக்க வேண்டும், சலுகை விலையில் உணவுப் பொருள்களை மாணவர்களுக்கு வழங்க வேண்டும், நிதி அமைச்சர் கல்வி அமைச்சராக இருந்து விட்டு தான் நிதியமைச்சராக வந்திருக்கிறார்கள். ஆகவே, அவர் களையும் கொஞ்சம் கண்ணெடுத்துப் பார்த்து சலுகை விலையில் உணவுப் பொருள்களை வழங்க வேண்டும், கிராமப்புறங்களில் உள்ள ஏழையெளிய



குழந்தைகளுக்கும் சத்துணவைச் சலுகை விலையில் வழங்குவதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவரவர்களே, தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பைப் பொறுத்தவரையில், இன் றைக்கு இருக்கிற சூழ்நிலையில், சில விவரங்களை மட்டும் நான் பேசத்தான் நேரம் இருக்கும். ஆகவே அதையொட்டி சில கருத்துக்களை மட்டும் சொல் கிறேன். பொதுவாகவே அரசு இதுகுறித்து எடுத்திருக்கக்கூடிய நடவடிக் கைகள், எடுக்கத் தவறியிருக்கிற நடவடிக்கைகள், இனி எடுக்க வேண்டிய நட வடிக்கைகள் என்கிற முறையில் ஒன்றை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். லெவி முறை பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். எவ்வளவுதான் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் தைரியத்தோடு இந்த உணவு நிலைமையைச் சமாளித்து விடலாம் என்று சொல்லியிருந்தாலும்கூட, அவர்களேகூட மிகவும் வேதனையோடு தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்தபோது, 5 லட்சம் டன் உணவு கையிருப்பில் வைக்கப்பட்டாக வேண்டும், கொள்முதல் செய்தாக வேண்டும், லெவி முறையைக் கட்டாயமாக ஆக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆரம்ப காலத்தில் ஒரு பக்கம் ஆந்திராவிலிருந்து இன்னும் மற்ற மாநிலங்களிலிருந்து நெல் வந்துகொண்டிருந்த நிலை இருந்த போது, என்ன காரணத்தாலோ நம்முடைய மாநிலத்தில் பற்றாக்குறை இருந்த நேரத்திலே வருகிற நெல்லுக்கு லெவி முறையை வைத்தோம். ஆனால் அத னுடைய தீமைபற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது, லெவி முறையை ரத்து செய்தார்கள். இன்றைக்கு ஆந்திராவிலிருந்து மற்றும் பிற மாநிலங்களிலிருந்து எல்லாம் தாராளமாக உணவுப் பொருள் தமிழகத் திற்கு வரலாம் என்கிற ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், உள்ளபடியே தமிழகத்தில் கொள்முதல் செய்திருக்க வேண்டிய நேரத்தில் கொள்முதல் செய்ய அரசு தவறி விட்டது. இன்று வறட்சி ஏற்பட்டிருக்கிறது, உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வறட்சியால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், விலைவாசி உயர்ந்திருக்கிற நிலையில், மக்களிடத்திலிருந்து கட்டாயக் கொள்முதல் செய்வது சரிதானா? எவ்வளவுதான் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இங்கே கடந்த காலத்தைப்பற்றிச் சொல்லி மனத் திருப்திப் பட்டுக்கொண்டாலும்கூட, நான் ஒன்றை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தச் சட்டமன்ற கூட்டத் தொடர் முடிந்த உட னேயே "லெவியை" இந்த அரசு நிச்சயமாக வேகமாகக் கொண்டு வரப் போகிறது என்பதை யாரும் உணராமல் இல்லை. அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கும்போது, எவ்வளவு கடுமையான நிலைமை ஏற்படும் என்பதையும்

நாம் உணராமல் இருக்க முடியவில்லை. லெவி கொள்முதலைப் பொறுத்த வரையில், தமிழகத்தில் அதை நடைமுறைக்குக் கொண்டு வரும்போது, கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். முடிந்த அளவுக்கு அது சம்பந்தமான கெடுபிடி நடவடிக்கைகளைக் குறைக்க முயற்சிக்க வேண்டும். மற்ற மாநிலங்களிலிருந்து அதிக விலை கொடுத்து நெல்லை வாங்கியாவது இங்கு உணவுப் பொருள்களைக் கொண்டு வந்தாக வேண்டும். இங்கே இருப்ப வர்களை அதற்கு மாறாகக் கசக்கிப் பிழிந்து கொண்டிருப்பது இன்றைய சூழ்நிலையில் நல்லதல்ல. அதற்கு ஆளாகாமல் அரசு பார்த்துக்கொள்ள

(முற்பகல் 11-20)

வேண்டும். 20 நாட்களுக்குள்ளாக விற்றுவிட வேண்டும் என்ற நிலை வியாபாரிகளுக்கு இருந்தது என்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்தம் அவர்கள் அதுகூட இப்போது இல்லை. கைவிடப்பட்டது என்றும் சொன் னார்கள். இன்றைக்குப் பொதுவாக இருக்கும் நிலை. 1980 நவம்பர் மாதத்தில் 7,500 டன்னிலிருந்து 11 ஆயிரம் டன் அரிசி சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக மக்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 1980 டிசம்பரிலே 18 ஆயிரம் டன் அரிசி விநியோகிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து ஜனவரி மாதம் 24 ஆயிரம் டன் அரிசி விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. நான் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், மாதாமாதம் எத்தனை ஆயிரம் டன் அதிகமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதோடு மட்டுமல்ல வெளி மார்க் கெட்டிலே வாங்க முடியாத அளவுக்கு விலை ஏறிக்கொண்டிருக்கிறது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அதனை இன்றைக்கு சரி செய்துகொண்டிருக்கிறது. இடையிலே புகுந்த வேண்டியவர்களுக்கு அல்லது ஏழைகளுக்கு அல்லது வாங்க முடியாதவர்களுக்கு அவர்கள் இந்த உதவியைச் செய்துகொண்டிருக் கிறார்கள் என்ற அளவிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், இன்னும் வாழ்கின்ற சில மாதங்களுக்கு இதைச் செய்தாக வேண்டும். அப்படிச் செய்வதற்கு வேண்டிய தைரியமும் நாம் வைத்துக்கொள்ள நடவடிக்கை களை எடுத்தாக வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்கும்போது என் னவோ விளைச்சல் இல்லாமல் விளைந்த நெல்லை, மின்சாரம் இல்லாமல், மழையில்லாமல் ஏதோ கஷ்டப்பட்டு ஏதோ பம்ப்செட்டிலே விளைவித்த நெல்லை, விளைந்தபோது கொள்முதல் செய்கிறார்கள் என்றால், அந்தக் கொள்முதலை மிகவும் கடுமையாகச் செய்கிறார்கள் என்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பொது விநியோக முறையிலே 17,800 கடைகள் மொத்தமாக இருக்கின்றன. இவைகள் கூட்டுறவுக் கடைகள் நீங்கலாக இருக்கின்றன. கூட்டுறவுக் கடைகளும் அளவுக்கு இருக்கின்றன Fair Price Shop) ஃபேர் ப்ரைஸ் ஷாப்களைப் பொறுத்த



வரையில், நான் மெத்த உரிமையோடு சொல்கிறேன், கிராமங்களிலே அவைகள் இயங்கவில்லை. பல கிராமங்களிலே சிபார்சுகளின் அடிப்படையிலே இவ்வளவுதான் சம்பளம் என்று குறைந்த சம்பளத்திலே ஒரு ஆளைப் போட்டு, அந்தத் தனிப்பட்ட ஆளின் பொறுப்பில் அந்தக் கடைகளை நடத்து கிறார்கள். அவன் ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் அந்தக் கடையை நடத்தி விட்டு, வந்த பணத்தை எடுத்துக்கொண்டு ஓடிவிடுகிறான். அதற்குப் பிறகு மாதக் கணக்கிலே கடை மூடிக் கிடக்கிறது. பின்னர் யார் வந்து அந்தக் கடையைத் திறப்பது என்று சண்டை வருகிறது. இது சம்பந்தமாக ஆர்.டி.ஓ.வுக்கோ, ஜில்லா கலெக்டருக்கோ அதிகாரம் இல்லை. ஸ்டாக்கை யார் சரி செய்ய வேண்டும்? அதைச் சரிசெய்யாமல் யாரிடமும் ஒப்படைக்க முடியாது. இந்த நிலையிலே 100 அல்லது 150 ரூபாய் சம்பளத்தில் ஆளைப் போட்டு, கிராம மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகள் எல்லாம் இன்றையதினம் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன், கிராமக் கடைகளுக்குத் தரும் அரிசியை அவர்கள் நகரப் புறங்களிலே வைத்து மூட்டைக்கு இவ்வளவு என்று விற்றுவிட்டுச் செல்கிறார்கள். விற்பனை விநியோகம் இடையே ஒரு கோஆர்டினேஷன் இல்லை. இப்போதுள்ள அதிகாரிகள், தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்பதால், இதிலே தொடுவதில்லை, ஆகவே, அவர்கள் யாருக்கும் பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்ற அளவிலே நிலைமைகள் இருக்கின்றன. 'சர்ப்ளஸ்' இருக்கும்போது நடப்பது வேறு. இன்றைக்கு சர்ப்ளஸ் இல்லாமல் தேவை ( demand ) அதிகமாக இருக்கும்போது கள்ள மார்க்கெட்டிலே விற்றால், அதிக லாபம் வரும் என்ற அடிப்படையிலே சிலர் செயல்பட்டு வருவதால், இந்த ஃபேர் ப்ரைஸ் ஷாப்களின் ( Fair Price Shops ) முழுப் பலனையும் இன்றைக்குக் கிராமங்களிலே இருக்கும் மக்கள் அடைய முடியவில்லை. இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டார்கள், இந்தக் கட்டுப்பாட்டுக்குள்ளே வருகின்ற பொருள்களில் மண்ணெண்ணெய், அரிசிக் கடைகளைப் பொறுத்தவரை, இவைகளைக் கண்காணிக்கும் அதிகாரிகளைப் பொறுத்தவரையில், நான் அனுபவத்தின் அடிப்படையில் சொல்கிறேன். சிவில் சப்ளைஸ் துறையிலே இன்றையதினம் லஞ்சம் நிறைய இருக்கிறது. அந்த அதிகாரிகள் இன்றையதினம் கூட ஜமீன்தார்கள் போல நடமாடு கிறார்கள். அந்த அதிகாரிகள் கடைகளுக்கு வரும்போது எப்படி அவர்களை வரவேற்கின்றார்கள், அவர்களுக்கு என்னவெல்லாம் தருகிறார்கள் என்ற அடிப்படையிலேதான். அந்தக் கடைகள் இயங்க அனுமதிக்கப்படுகின்றன. அந்த மட்டத்திலே நிலவும் லஞ்சத்தைக் குறைக்க முடியாமல் நாம் சங்கடப்

பட்டுக் கொண்டிருக்கிறோம். இதைத் தடுக்க முடியாத நிலை வந்தால் கீழ் மட்டத்திலேயிருக்கிற கடைகள் இந்த நிலையிலே இருந்தால் நிச்சயமாக அவற்றின் பலன் முழுமையாக மக்களுக்குக் கிடைக்காது. சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மென்ட்லே சிமெண்ட் பற்றிச் சொல்லவில்லை. சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மென்ட்லே செய்யப்படும் சிமெண்ட் விநியோகம் எவ்வளவு தரக் குறைவாக மோசமாகப் போயிருக்கின்றது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு, இந்த சிமெண்ட் பல இடங்களிலே என்னுடைய பகுதியிலே திண்டிவனத்திலே—பல கிராமங்களிலே பிடிபட்டிருக்கிறது. பெர்மிட் இல்லாமல் வாங்கிய சிமெண்ட் என்று பிடித்திருக்கிறார்கள். சிலர் 500, 1000 என்று மூட்டை வைத்திருப்பதையெல்லாம் கண்டுபிடித்தார்கள் என்ற விவரங்கள் எல்லாம் வந்தன. அவர்கள் எங்கேயிருந்து அந்த சிமெண்ட் வாங்கினார்கள்? அப்படி வாங்கிய இடம் எது என்று வரும்போது, அது இந்த சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மென்ட் தான். அங்கேயிருந்துதான் லைசென்ஸ் இல்லாமல் வாங்க முடிகிறது. யாருடைய லைசென்ஸ்க்கு இவர்கள் வாங்கிக்கொண்டு போகிறார்கள்? இப்படிப் பட்ட நிகழ்ச்சிகள் நிறைய நடக்கின்றன. ஒன்றிரண்டைத்தான் கண்டுபிடிக்க முடிகின்றது.

நெல் கொள்முதல் செய்யும் இடத்திலே இருக்கும் ஊழலையும் குறைக்க வேண்டும். முன்னேயிருந்த அரசினுடைய உணவுக் கொள்கைபற்றிச் சொன்னார்கள். தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக அரசின் நடைமுறைகளைச் சொன்னார்கள். கடந்த காலத்தைப்பற்றி மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்கு ஆளும் கட்சி உறுப்பினர் அவர்கள் ஒரு எச்சரிக்கை என்ற அளவில் சொல்லியிருப்பாரேயானால்—அவர் சொன்னதுபோல் அது நடந்ததா இல்லையா என்பது வேறு—கடந்த காலம் நமக்குப் பாடமாக இருக்க வேண்டும். நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கடந்த அரசு கொள்முதல் செய்ததிலே எப்படிப்பட்ட ஊழல்கள் நடந்தன என்பதெல்லாம் நமக்குத் தெரியும். அவற்றுக்குக் காரணமானவர்கள் இன்றைக்கு நீக்கமற உங்களிடையேயும் நிறைந்து இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் இதுபோன்ற நேரங்களில் அந்தக் கள்ள வழிகளில் அனுபவம் பெற்ற கொள்ளைக்கூட்டம் திறமையாக வேலை செய்யும். ஆகவே எச்சரிக்கையோடு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்கிறேன்.

அடுக்க. புலனாய்வுத் துறையைப் பொறுத்தவரையில், பதுக்கல் பற்றிய விவரங்கள் எதுவும் வெளியே தெரியவில்லை. பல கோடி ரூபாய் பெறுமானம் உள்ள பாமாயில் ஆயில் பதுக்கல் செய்யப்பட்டது பிடிபட்டது என்று



கொஞ்சம் நாட்களுக்கு முன்பு செய்தி வெளி வந்தது. அதைப்பற்றிய விவரம் பிறகு வெளியாகவில்லை. இதையெல்லாம் நாட்டு மக்கள் விவரமாகத் தெரிந்துகொள்ளும் வகையிலே நாம் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கவில்லை என்றால் அது என்ன நியாயம்? ஏழையெளிய மக்கள் சாதாரண மக்கள் வரி செலுத்தவில்லை என்று சொன்னால், கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை என்று சொன்னால், அவர்களைப் பற்றிய விவரங்களையெல்லாம் படம் போட்டு விளம்பரப்படுத்துவதிலே அர்த்தம் இல்லை. இந்தப் பல கோடி ரூபாய் பெருமானம் உள்ள அத்தியாவசியப் பொருள்கள் பிடிபட்டதென்றால், இது பற்றிய எல்லா விவரங்களையும் நாட்டு மக்கள் தெரிந்து கொள்ளும் விதத்தில் விளம்பரப்படுத்த வேண்டும். இந்த நிலைமைகளையெல்லாம் வெளிச்சத்திற்குக் கொண்டுவராமல், அதே சமயத்தில் விவரம் தெரியாத மக்களைப்பற்றிய விவரங்களையெல்லாம் வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறார்கள். இதிலே அரசு இனியாவது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மென்ட்க்குக் கொள்முதல் செய்வதற்கு வேண்டிய அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். வர்த்தக ரீதியிலே அந்தக் கார்ப்பரேஷன் செயல்படும்போது, உரிமை நடவடிக்கைகளை வேகமாக எடுக்க வேண்டிய அதிகாரத்தையும் தர வேண்டும். முடிவெடுப்பதில் ஒவ்வொரு முறையும் 'பாலிசி' என்ற அளவிலே காலதாமதம் ஏற்படுகிறது. ஒரு பிரச்சினை என்று வரும்போது 'ஃபைல்' 'மூவ்' ஆகிறது. ஒன்றிரண்டு மாதங்கள் கழித்து அந்தப் பிரச்சினைகளிலே முடிவு வரும்போதுதான் அந்த ஃபைல்கள் திரும்ப துறைக்குப் போகின்றன என்ற அளவிலே நிலைமைகள் இல்லாமல் காரியங்கள் ஆற்ற வேண்டும். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், அதை வர்த்தக ரீதியிலே ஒரு கார்ப்பரேஷனாக எப்போது நாம் அங்கீகரித்தோமோ உடனே அவர்களுக்கு on the spot நடவடிக்கை எடுக்க அதிகாரத்தைத் தந்து, ஆண்டு முடிவில் லாப-நஷ்டக் கணக்கைப் பார்த்து அதன் அடிப்படையிலே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனை வளர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.30)

அப்படி இல்லாமல், நாள்தோறும் நம்முடைய அதிகாரத்தைக் காட்டுகிற இடமாக அதை வளர்த்துக் கொண்டிருந்தால், இதைப் போன்ற சங்கடமான வறட்சியும் விலைவாசி உயர்வும் தலைதூக்கி விட்ட நேரங்களில்கூட அதன் முழுப் பயனை நாம் பெற முடியாத நிலைதான் ஏற்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த அடிப்படையில் சில நடவடிக்கைகளை எடுத்து உணவுத் துறையைச் சீர்படுத்த வேண்டும், முறைப்படுத்த வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

Thirumathi MANDAKINI KRISHNAMURTHY: Hon. Deputy Chairman, Sir, I am indeed happy to speak on the Policy Note on food situation in our State.

In November 1980, as a Member of the Joint Select Committee on the Co-operative Societies Bill, I had been to Gujarat and Maharashtra. Then, as is my wont, I asked the local pepole there about the prices of foodstuffs in both the States. When they gave me the details of the prices, I told them that the prices in Tamil Nadu were much less. I need not say more than this to compliment the Food Department. There is an inflationary trend not only in our State and in our nation but also at the international level. Even noted economists are not able to solve this puzzle. But, with a little courage, sense of sacrifice and consideration for the poor people, all the resultant difficulties can be borne. So, rationing has become a necessary evil in our country and it has to remain for some time.

Sir, I will not go, in detail, into all the aspects of the Policy Note. Since I am connected with a number of social welfare institutions, I will mention a few problems that we face. For getting the requirements of our institutions, we are attached to some godown which is far away from our place. We have no money in the Bank and we are, in fact, poor institutions. We do not have much of a staff also. We have to incur a huge cost on transporting the food articles from the godown and sometimes pilferages also occur. Till some time back, we were attached to a ration shop which is very near our place. If that system is again brought back, it would be a great relief to our social welfare institutions.

Another commodity about which we are experiencing some difficulty is sugar. For getting the sugar requirements of our institution, a permit is given at a time only for two months. Going to the Civil Supplies office at Mylapore and also to the Office of the Deputy Commissioner of Civil Supplies every time involves a lot of time and labour. I request that every time the validity of a sugar permit is over a new sugar permit may be issued on the authority of the certificate given by the head of the institution.



Regarding cement, I would like to thank the Hon. Minister because last time I brought it to his notice that the voluntary organisations and those who got aid from the Government might be considered sympathetically and I would like to compliment the Civil Supplies Department because we were able to get cement very easily. But while we were able to get supplies from the Civil Supplies Godowns promptly, when we got one permit for which supply had to be obtained from a private shop, the time-limit was too much and he was saying that he had not received stocks, as the Civil Supplies Department Depots were given preference. I would, therefore, like to suggest that so far as institutions are concerned, supply may be made from Civil Supplies Godowns.

There is another point I want to mention. Most of the office-going people have the tendency to visit hotel for taking meals especially when both husband and wife are employed. If the Government can start canteens like Annapoorna where food will be supplied at subsidised rates, this will ease the burden of the low income-group pepole. With these words I thank the Deputy Chairman for giving me this opportunity.

திரு. ப. மாணிக்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் உணவு நிலைமை மற்றும் சிவில் சப்ளைஸ் சம்பந்த மான கொள்கைக் குறிப்பின் மீது பேசுவதற்கான வாய்ப்பளித்தமைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொண்டு, கொள்கைக் குறிப்பில் குறிப்பிடப் பட்டிருக்கும் விஷயங்களில் இரண்டு அல்லது மூன்று முக்கியமான அம்சங் களைப்பற்றி மட்டும் பேசி முடிக்க விரும்புகிறேன்.

தற்போது சாதாரண மக்களுக்குக் கிடைக்க வேண்டிய "பாமாலின்" சமையல் எண்ணெய் கிடைக்கவே இல்லை. விநியோகத்தில் உள்ள குறை பாடுகள் காரணமாகத்தான் இது கிடைக்காமல் இருக்கிறது என்று நான் எண்ணுகிறேன். அரசு இது குறித்து உரிய காலத்தில் கவனம் செலுத்திச் செயல்பட வேண்டும்.

வருமான அடிப்படையில் தற்போது சர்க்கரை விநியோகம் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது கிராமங்களிலும் நகரங்களிலும் குடும்பங் களுக்குக் கிடைக்கும் வருமானத்தின் அடிப்படையில் இது வழங்கப்படுவதாகக் கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நடைமுறை சரியாகச்

கார்ப்பரேஷனுடைய கொள்கை விளக்கங்களைப் பற்றியும் நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில வார்த்தைகளைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் என்னையும் மணியையும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நான் சொல்கின்ற எண்ணங்களையும் கருத்துக்களையும் அரசு செயல்படுத்த வேண்டுமென்று நான் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி பீடம் ஏற்ற பிறகு, ஓராண்டுக்காலம் கழித்து பத்திரிகையாளர்கள் அவரிடம் பேசுகின்றபோது உணவு நிலைமை இப்போது எப்படி இருக்கிறது என்று கேட்டார்கள். அதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள், "உணவு நிலைமை என் பக்கத்திலே இருக்கின்ற மதியழகனைப் பார்த்தால் தெரியவில்லையா? அவ்வளவு திருப்திகரமாகத்தான் சிறப்பாகத்தான் இருக்கிறது" என்று அன்றையதினம் சொன்னார்கள். அதை இந்த நாடு அறிந்திருக்கிறது என்று நம்புகிறேன். ஆனால் இன்றைய தினம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உணவு நிலைமை மொத்தமாக எப்படி இருக்கிறது என்று சொன்னால், இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் போல்தான் இன்று மெலிந்து இருக்கிறது என்பதை இந்த அவையிலேயே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மெலிந்திருக்கவில்லை. செழிப்போடுதான் இருக்கிறார்கள். கட்டுமஸ்தான உடம்பைப் பெற்றிருக்கிறார்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: நான் 'மெலிந்து இருக்கிறார்' என்றுதான் சொன்னேனே தவிர, அவர் உடல் திடகாத்திரமாக இருக்க வேண்டும் என்று ஆளும் கட்சி உறுப்பினர் விரும்புவதுபோல நானும் விரும்புகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒட்டுமொத்தமாக இந்தக் கொள்கையினுடைய எண்ணங்களிலே உணவு உற்பத்தியில் அரசாங்கத்தின் முறைகளில் குறைகள் இருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், எங்கேயாவது பஞ்சமா என்று



கேட்டால், இல்லை என்றுதான் சொல்வார்கள். மன்னிக்க வேண்டும். இதற்கு முன்னால் முதலமைச்சர் அவர்கள் கலைஞர் அவர்கள் இருந்தார்கள். எத்தனை ஆயிரம் டன் அரிசியை தமிழகத்திலிருந்து வெளிமாநிலங்களுக்குத் தந்தார்கள் என்பதை இந்த நாடு அறிந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்திய நாட்டினுடைய பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் இருந்த காலத்தில், உணவுப் பொருள்களை ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குக் கொண்டு போகின்ற நிலைமைகளை அமைத்தபோது, அந்தக் காலத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அதைக் கண்டிக்காமல் விட்டுவிட்டது. அதனால்தான் இன்றையதினம் நம்முடைய நிலைமையைச் சரிப்படுத்திக்கொள்ள அடுத்தவரிடத்திலே கை ஏந்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆந்திராவிடம் தண்ணீர் கேட்டால், அந்த அரசு ஆத்திரப்படுகிறது. கேரளத்திடம் கரண்ட் கேட்டால், அவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்கிறார்கள். கர்நாடகத்திடம் காவிரி தண்ணீர் கேட்டால், அவர்கள் கருணை காட்டமாட்டேன் என்கின்றார்கள். ஆனால் விவசாயிகள் தங்களுடைய வியர்வை சிந்தி உற்பத்தி செய்யும் உணவுப் பொருளை எல்லா மாநிலங்களுக்கும் கொண்டு போகின்ற ஒரு நிலைமையை இந்த அரசு அன்றையதினம் விட்டுவிட்ட காரணத்தினால்தான், இந்த வறட்சிக் காலத்திலே நாம் பின்தங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மட்டுமல்ல, நம்முடைய நாவலர் அவர்கள் மிக அழகான பாணியிலே தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசு விலைவாசி ஏற்றம் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது என்று தெரிவித்த இந்தக் கொள்கையைப் பற்றி வருத்தப்படுகிறேன். நாங்கள் எல்லாம் அவருடைய பேச்சைக் கேட்டு மயங்கியவர்கள்தான். அப்படிப்பட்ட தம்பிமார்கள்தான் இங்கே இருக்கிறோம். அன்றைக்கு அவர்கள் எங்களுக்குச் சொன்ன கொள்கையிலிருந்து நாங்கள் மாறுபடவில்லை. எந்தெந்த லட்சியங்களுக்காக அவர்கள் பாடுபட்டார்களோ அந்தந்த லட்சியங்களுக்காக இந்த சீத்தாபதி பாடுபட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். அதிலிருந்து மாறுபடவில்லை. நாவலர் அவர்கள் காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே எந்த மாதிரியான புள்ளிவிவரங்களைக் கொடுத்து செல்வாக்கைப் பெற்றார்களோ அதேமாதிரி நானும் புள்ளிவிவரங்களை இந்த அவைக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அரிசியினுடைய விலை ரூ. 1.75, ரூ. 2.15 மோட்டா ரக அரிசிக்கு என்றும் சன்ன ரக அரிசிக்கு என்றும் சொல்கின்றார்கள். தலைவர் அவர்களே, இந்த அரிசி மனிதன் சாப்பிடுகின்ற அளவுக்கு இல்லை என்பதையும் அதே நேரத்தில் ரூ. 5-க்கு வாங்கி

[1981 ஏப்ரல் 29

[திரு. ப. மாணிக்கம்]

செயல்படுத்தப்படவில்லை என்பது மட்டுமல்ல, இதன் அடிப்படையையே மாற்ற வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாதம் ஒன்றுக்கு ரூ. 499-ம் அதற்குக் கீழும் ஒரு நிலை, ரூ. 500-ம் அதற்கு மேல் ரூ. 1000-க்குள் ஒரு நிலை, ரூ. 1,000-மும் அதற்கு மேலும் ஒரு நிலை என்றும் தற்போது இருக்கிறது. இவ்வாறு 3 நிலைகள் இருப்பதையேகூட 4 நிலைகளாக மாற்றினால், சர்க்கரை விநியோகத்தைக் கொஞ்சம் அதிகரித்துக் கொடுக்க இயலும். தற்போது கிராமங்களில் தருவதற்காக அமைக்கப்பட்ட அடிப்படை, நடைமுறையில் செயல்படவில்லை. கிராமங்களில் வழங்கப் படுவதற்காக ஒதுக்கப்பட்ட சர்க்கரை நகரங்களிலேயே தவறான முறையில் விற்கப்பட்டுவிடுகின்றது. இதற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. எனவே இந்த அடிப்படையை மாற்றினால், நல்ல பலன் கிடைக்கும் என்பதோடு, சீரான முறையில் விநியோகம் செய்வதற்கும் உதவியாக இருக்கும்.

வியாபாரிகளிடம் 40 சதவீதம் கொள்முதல் செய்யப்படுவதால், அவர்கள் கொள்முதல் செய்வதையே நிறுத்திக் கொண்டுவிட்டார்கள். இதுவரை வியாபாரிகளிடமிருந்து 40 சதவீதம் கொள்முதல் லெவியாக வாங்கியதில் எவ்வளவு கிடைத்தது என்ற புள்ளிவிவரம் இங்கே குறிப்பிடப்படவில்லை. உண்மையில் அதனால் அரசாங்கத்திற்கு எவ்வளவு கிடைத்தது என்பதையும், அதனால் எந்த அளவுக்குப் பலன் ஏற்பட்டது என்பதையும் அரசுக் குறிப்பில் குறிப்பிட்டிருக்க வேண்டும். 40 சதவீதம் லெவி என்று வைத்ததால், வியாபாரிகளிடமிருந்து போதிய அளவுக்கு அரசாங்கத்திற்கு நெல் கிடைக்க வில்லை. அதன் காரணமாக அரசு இப்போது பதுக்கலை வெளியே எடுக்கக் கூடிய நிலைக்குப் போயிருக்கிறது. இதை அரசு பின்னாலே கூட மேற்கொள்ளலாம். என்னைப் பொறுத்த வரையில், பதுக்கலை வெளியே எடுப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. இவ்வாறு சீரான முறையில் பலனளிக்காத கொள்கையை ஏன் அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதை மட்டும்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் காரணமாக நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, கிராமப்புறங்களில் அமைக்கப்பட்ட "அமுதம்" கடைகள் பல இடங்களில் செயல்படுவதே இல்லை. இதை நான் மிகவும் மிகைப்படுத்திச் சொல்வதாகக் கருதக்கூடாது. 'அமுதம்' கடைகளில் அரிசி இருந்தால், பொதுமக்களுக்குக் கொடுப்பார்கள்.



1981 ஏப்ரல் 29] [திரு. ப. மாணிக்கம்]

அரிசியைத் தவிர, சர்க்கரை அங்கே விநியோகிக்கப்படுவதே இல்லை. அதிலும் அவர்கள் இஷ்டப்பட்டால்தான் கடையைத் திறப்பார்கள். இல்லையென்றால கடையை மூடிவிட்டுச் சென்றுவிடுவார்கள். இதுதான் பல இடங்களில் இருக்கிற நிலை. நானே இதை நேரில் பார்த்துவிட்டு வந்து இங்கே பேசுகிறேன். இத்தகைய நிலையில் நாம் இந்தக் கடைகளைத் தொடர்ந்து நடத்தத்தான் வேண்டுமா என்பதைப்பற்றி அரசு சிந்திக்க வேண்டும்.

இத்தகைய 'அமுதம்' கடைகளையெல்லாம் கூட்டுறவுக் கடைகளுக்கே கொடுத்துவிட்டால், அரசுக்குச் செலவில் மிகுந்த சிக்கனம் ஏற்படும். இந்தக் கடைகளை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனே தொடர்ந்து வைத்துக் கொண்டிருப்பதால், கண்டிப்பாக நட்டம்தான் ஏற்படும். ஆனால் அவசிய மில்லாமல் இந்த நட்டத்தை ஏற்கத்தான் வேண்டுமா என்று அரசு பரிசீலிக்க வேண்டும். அவசியமிருந்தால் நட்டத்தை ஏற்பதுகூட பரவாயில்லை என்று ஒப்புக்கொள்ளலாம். எனவே 'அமுதம்' கடைகள் இன்றையதினம் நடை முறையில் எப்படிச் செயல்படுகின்றன என்பதை அரசு பரிசீலித்து அவைகளின் எண்ணிக்கையையாவது உடனடியாகக் குறைக்க வேண்டும் அல்லது அவற்றை கூட்டுறவுத் துறைக்கு மாற்றி அவற்றின் மூலம் விநியோகத்தைச் செய்யலாம். 'அமுதம்' கடைகளைத் தொடங்கியதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்தோமே அவர்கள் எல்லோருக்கும் வேலை இல்லாத நிலை ஏற்பட்டுவிடும் என்ற அடிப்படையில் பார்க்கக்கூடாது. இவற்றையெல்லாம் தார்மீக ரீதியில்தான் சில நேரங்களில் எடுத்துக் கொண்டாக வேண்டும். இவ்வாறு இந்த 'அமுதம்' கடைகளையெல்லாம் கூட்டுறவுக் கடைகளுக்குக் கொடுப்பதன் மூலம் சரியான முறையில் விநியோகத்தைச் செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அரிசி அல்லது நெல் கொண்டு போகும்போது "சேதாரம்" அனுமதிக்கப்படுகிறது. 2, 3 இடங்களுக்குப் போகிறபோது, அது 5, 6 சதவீதம் ஆகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையிலேயே அந்த அளவுக்குச் சேதாரம் ஏற்படுவதில்லை. உண்மை நிலை என்னவென்றால், தயாரிக்கப்படும் கணக்கில் தில்லுமுல்லுகள் நடைபெறுகின்றன. எனவே இதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுடைய உணவு நிலைமைகள் பற்றியும், சிவில் சப்ளைஸ்

[திரு. ஆர். டி. சீத்தாபதி] [1981 ஏப்ரல் 29

(முற்பகல் 11-50)

சொல்வார்கள். ஆகையால் இதையும் குறித்துக்கொண்டு, அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மொத்தத்தில் உணவுத் துறையிலே நம்முடைய அரசு கொண்டிருக்கும் நிலைமைகளைப் பார்க்கின்ற நேரத்தில், உணவுப் பங்கீட்டுக் கடைகளை நாம் எடுத்துக்கொண்டால், எந்த அளவிற்கு அங்கே ஊழல் நிற்கிறதென்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர், நாவலர் அவர்கள் மன்னிக்க வேண்டும். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைக் கழகமாக இருந்துகொண்டு, தவறுகளைச் செய்கின்றன. மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர்கள் என்னோடு வர வேண்டும். யார் யார், பாமாயின் எண்ணெயைக் கொண்டு போகிறார்கள், யார் யார் கள்ள மார்க்கெட்டில் விற்கிறார்கள் என்பதை நான் சுட்டிக் காட்டாவிட்டால், இந்த அவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன். யார் யார் அந்தக் குற்றங்களைச் செய்கிறார்கள் என்பதைக் காண்பிக்கிறேன். சர்க்கரையைக் கள்ள மார்க்கெட்டில் விற்கிறார்கள். அப்படிச் செய்யும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர்களின் பெயர்களைச் சொல்ல விரும்பவில்லை. தேவைப்படுமானால், போலீஸ் அதிகாரிகளை அனுப்பினால், நான் பட்டியல் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அத்தகைய நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, பொது மக்களுக்குத் தருகின்ற உணவுப் பொருள்களில் கலப்படம் செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களைத் தூக்கில் ஏற்ற வேண்டும். உணவுப் பொருள்களில் கொள்ளை அடிப்பது, லஞ்சம் வாங்குவது போன்றவற்றை, எதிர்க் கட்சி என்ற முறையில், அண்ணா அவர்கள் உருவாக்கித் தந்த பிரகாரம், நாட்டின் நன்மைக்காக அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பசி வந்தால் பத்தும் பறக்கும் என்று சொல்லுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வள்ளிமுத்து அவர்கள், காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலே திட்டம் போட்டார்கள், அரிசி கிடைக்கவில்லை என்றவுடன், அந்த ஆட்சி அகற்றப்பட்டதென்று சொன்னார்கள். ஆனால் இப்போது வெறும் அறிவிப்புகள்தான் வருகின்றன. அறிவிப்புகள் சிறப்பாக இருக்கும். ஆனால் அதை அரசு நிறைவேற்றுவதில்லை. அப்படி அறிவிப்புகளை மட்டும் தருவதாக அரசு இல்லாமல், குறைத்துச் சொல்லி, நிறைவாகச் செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு நல்கிய துணைத் தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.



[1981 ஏப்ரல் 29

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, நுகர்பொருள் வழங்கு துறை பற்றிய கொள்கைக் குறிப்புகளின்மீது இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். நுகர்பொருள் வழங்கு துறை மேம்பாடு எய்துவதற்கும், அதனுடைய பணிகள் செவ்வனே செயல்படுவதற்கும் சீரிய கருத்துக்களை வழங்கிய உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அரசியல் காழ்ப்பு உணர்ச்சியின் அடிப்படையிலே, அரசியல் அழுக்காறு தன்மைகளின் அடிப்படையிலே எடுத்துச் சொல்லப்பட்ட விவரங்களுக்குப் பதில் சொல்லுவதற்கு தனி மேடைகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தாலே, இந்த மன்றம் அதற்கு அவசியப்படாதென்று எண்ணுகிறேன். மேலும் நேரமும் அதற்கு இடம் தராது. இதற்குப் பிறகு தொழிலாளர் நலத் துறை கொள்கைக் குறிப்புப் பற்றிப் பேசப்பட இருக்கிறது. எனவே நான் விரைவிலே முடித்து, அந்தக் கொள்கைக் குறிப்பு மீது நடைபெறும் விவாதத்திற்கு இடம் தர வேண்டிய நிலையில் இருக்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் நுகர் பொருள் வழங்கு துறையின் தன்மைகளை எடுத்துச் சொன்னார்கள். அந்தத் துறையின் பணிகளெல்லாம் கொள்கைக் குறிப்பிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் அதிலே சில குறைகளையும் சுட்டிக் காட்டினார்கள், சில குற்றங்களையும் சுட்டிக் காட்டினார்கள். அந்தக் குற்றங்கள், குறைகள் எங்களுடைய கவனத்திற்கு வராமல் இருக்கலாம். அவைகளை எங்களுடைய கவனத்திற்கு வரச் செய்யும் அளவிற்கு எடுத்துச் சொன்னவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். வேண்டியவைகளைச் செய்யாமல் விட்டால் குறை; செய்யக்கூடாத ஒன்றைச் செய்வது குற்றம். இப்படி குறைகள் சில இடங்களில் இருக்கலாம். குற்றங்கள் சில இடங்களில் இருக்கலாம். அவற்றை நீக்குவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைக் குறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இப்போது இருக்கும் நிலைமைகளைப் பொறுத்துத்தான் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமேயொழிய, ஆட்சியில் யார் இருக்கிறார்கள் என்று பார்த்துச் சொல்லக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சியை விட்டு, அரசியல் அழுக்காறு தன்மையை விட்டு, இருக்கின்ற நிலைமைகளைப் பொறுத்துச் சொல்ல வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியின்போது நான்தான் இருந்தேன், கலைஞர் அவர்கள் ஆட்சியின்போதும் நான்தான் இருந்தேன். அண்ணாவின் ஆட்சிக் காலத்திலே இருந்த உணவு நிலைமை தெரியும். கலைஞர் ஆட்சிக் காலத்திலே இருந்த உணவு நிலைமை தெரியும். ஆக ஆட்சியினுடைய,

[திரு. ஆர். டி. சீத்தாபதி] [1981 ஏப்ரல் 29

சாப்பிட்டால்தான் சாப்பிடக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அஸ்கா ரூ. 3 என்பதையும், இன்றையதினம் அது ரூ. 8.60 பைசா என்பதையும், மிளகாய் ரூ. 6 என்று இருந்தது, இன்றையதினம் ரூ. 10.30 என்பதையும் தனியா ரூ. 5.20 என்று இருந்தது, இன்றையதினம் ரூ. 9.20 என்பதையும் புளி ரூ. 4.25 என்பது இன்றையதினம் ரூ. 8.50 என்பதாகவும், மிளகு ரூ. 20 என்று இருந்தது, இன்றையதினம் ரூ. 24 ஆகவும், கடுகு ரூ. 4 என்பது இப்போது ரூ. 8 என்பதையும், வெங்காயம் ரூ. 3 என்று இருந்தது இன்று ரூ. 5.25 என்பதையும் கடலையெண்ணெய் ரூ. 6.50 என்று இருந்தது இப்போது ரூ. 13.60 என்பதையும், தேங்காயெண்ணெய் ரூ. 14 என்று இருந்தது இப்போது 19 ரூபாய் என்பதையும், நல்லெண்ணெய் ரூ. 8.20 என்று இருந்தது. இப்போது ரூ. 14.90 என்பதையும், பச்சைப் பருப்பு ரூ. 2.80 என்று இருந்தது இப்போது ரூ. 5.40 என்பதையும், உளுத்தம் பருப்பு ரூ. 3 ஆக இருந்தது. இன்றைக்கு ரூ. 4.30 என்பதையும், கடலைப்பருப்பு ரூ. 1.80 ஆக இருந்தது. இன்றையதினம் ரூ. 5.60 என்பதையும், வெல்லம் ரூ. 3 என்று இருந்தது இன்று ரூ. 5.50 என்பதையும், டால்டா ரூ. 9 ஆக இருந்தது, ரூ. 14.20 என்பதையும் அஸ்கா ரூ. 9 ஆக இருந்தது இன்றைக்கு ரூ. 14.20 என்பதையும் முந்திரி ரூ. 18 ஆக இருந்தது இன்றைக்கு ரூ. 55 என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். இந்த சர்க்காருக்கு இவற்றையெல்லாம் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இவ்வளவு விலை ஏற்றத்திற்குப் பின்னாலும் இந்த அரசு தனது கையாலாகாத்தனத்தைத் தான் காட்டிக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல, இன்றையதினம் அரசு தந்திருக்கின்ற கொள்கைக் குறிப்பில், 1979 ஆம் ஆண்டு ஜுன் முதல் நவம்பர் வரையிலான கால அளவில் அரிசி உற்பத்தி 34.67 லட்சம் டன்னாக இருந்தது. 1980-ல் இதே கால அளவில் 32.05 லட்சம் டன்னாகக் குறைந்திருக்கிறது. உற்பத்தியைப் பெருக்க வேண்டிய இந்த சர்க்கார் உற்பத்தியைக் குறைத்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நிலைமையில் நிர்வாகம் உங்கள் கையிலே இருக்கிறது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே இன்றையதினம் இந்த சர்க்கார் 12.60 கோடி ரூபாய் நஷ்டம் என்று அறிவித்திருக்கிறார்கள். லாபத்திலே நடந்துகொண்டிருந்தது. இப்போது இந்த சர்க்கார் அதை நஷ்டத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. தனிப்பட்ட முறையிலே நாவலர் அவர்கள் மன்னித்துக்கொள்ள வேண்டும். ஒருவேளை தனிப்பட்ட இந்த இலாகாவை அவரால் பராமரிக்க முடியவில்லை என்றால், இன்னொரு தனி இலாகா வைத்து அதற்கு அமைச்சர் அமர்த்தி



1981 ஏப்ரல் 29] [திரு. ஆர். டி. சீத்தாபதி]

நிர்வகிக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு அதற்காக போட்டா போட்டிகூட இருந்து கொண்டிருக்கிறது. அது எல்லாம் அந்தக் கட்சியின் உள் விவகாரம். அதைப்பற்றி நான் சொல்லவில்லை. இருந்தாலும் அதில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இது மக்கள் பிரச்சினை. ஆகவேதான் இதை நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் தமிழ் நாடு சேமிப்புக் கிடங்குகளைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இவற்றில் 1977-78 ஆம் ஆண்டிலே ரூ. 42.59 லட்சம் லாபமாக இருந்தது. 1978-79-ல் அதுவே ரூ. 30.63 லட்சம் ஆகக் குறைந்தது. இன்றையதினம் அது ரூ. 22.33 லட்சமாகக் குறைந்திருக்கிறது. இது நியாயம்தானா என்பதை நம்முடைய நாவலர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் எனக்கு வந்திருக்கின்ற தகவல் சரிதானா என்று நாவலர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். 27-12-1980-ல் தேதிய கணக்குப்படி 9.79 லட்சம் டன் அரிசி ஆந்திராவிலிருந்து வாங்கப்பட்டதாக வந்திருக்கிறது. அது உண்மைதானா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் நம்முடைய கொள்முதல் விலையைச் சரி செய்துகொண்டிருந்தால், தமிழகத்திலே ஏறக்குறைய 10 லட்சம் டன் அரிசி அரசு பெற்றிருக்க முடியும். 2 கோடியே 40 லட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால், எத்தனை பேர்கள் பலனடைந்திருப்பார்கள், எத்தனை பேர்களுக்கு வேலை கிடைத்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்:

செங்கற்பட்டு மாவட்டத்திலே இருக்கின்ற கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அங்கே இருக்கின்ற மக்களுக்கெல்லாம் 1979-லிருந்து இதுவரையிலும் சர்க்கரை போன்ற பொருள்கள் விற்பனை செய்து வந்திருக்கிறோம். இப்போது அதை சென்னைக்குத் தலைமை இடத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் அசோக் லேலேண்ட் பேக்டரியில் அதன் மூலமாகக் கொடுத்திருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் மூலமாகக் கொடுத்திருக்கிறார்கள். திரு. எம். ஏ. பொன்னு சங்கம் என்பவர் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார். அவர்கள் இதில் ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் மீது இந்த சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அமைச்சர் அவர்களின் நண்பர் என்று சொல்கின்றார்கள். அவர்களுக்கு வேண்டியவர்களா வேண்டாதவர்களா என்பது எனக்குத் தெரியும். யார் யாருக்கு அவர்கள் செய்வார்கள் என்பது எனக்குத் தெரியும். 'எனக்குத் தெரியாது போ ஐயா' என்றுதான் அவர்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஏப்ரல் 29

அரசியல் கட்சிகளினுடைய நிலைமைகளைச் சொல்லாமல், நாட்டிலே உள்ள பஞ்ச நிலைமை, மழை இன்மையைப் பொறுத்து இந்த நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்காமல், அப்போது நன்றாக இருந்தது, இப்போது நன்றாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த நிலைமைகளை நான் நன்றாக உணர்வேன். இப்போது தெளிவாக நான் உணர்வேன். 1973, 1974, 1975 லே எப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தன என்பதை உணர்வேன். அப்போது ஒரு கிலோ அரிசி 6 ரூபாய், 6½ ரூபாய் அளவிற்கு விற்றதென்பதை நான் உணர்வேன். அதற்காகத் தனிப்பட்ட கட்சியை நான் குற்றம் சாட்டமாட்டேன். அப்போது இருந்த நிலைமைகள் அந்த அளவிற்குக் கொண்டு போய் விட்டது என்பதை உணர வேண்டும். என்னுடைய கையாலாகாத தன்மை என்று சொன்னார்கள். அதே கைதான் இருக்கிறது, வேறொரு கை இல்லை. அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்த கைதான் இருக்கிறது. கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்த கைதான் இப்போதும் இருந்துகொண்டிருக்கிறது. பிரச்சினைகளின் அடிப்படையில் இருக்கிற சீர்கேடுகள், குறைபாடுகளைப் போக்கவேண்டிய நிலையில் தான் இருக்கிறேன். தனி மனிதனைப் பொறுத்து, 4½ கோடி மக்களை ஆளும் அரசாங்கத்தின் தன்மைகள் மாறி விடாது. இந்தக் கொள்கை தவறு, இந்தக் கொள்கை சரியானது என்று வாதிடலாம். இந்தக் கொள்கை தவறு, இதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், இதனால் லாபம் வருமென்று சொன்னால், அதைப்பற்றி நான் சிந்திக்கக்கூடும். இப்போது இருக்கும் நிலைமைகளுக்குக் காரணம் என்னுடைய தவறல்ல. 24 ஆம் தேதி பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். இந்திய நிதி அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தெளிவாகச் சொல்கிறார்.

He said the Government was worried over the general price increase which. he attributed partly to factors inside the country and partly to international inflation.

நான் மட்டும் வருத்தப்படுகிறேன், கவலைப்படுகிறேன் என்றல்ல. 22 மாநிலங்களைக் கட்டி ஆளுகின்ற, 68 கோடி மக்களுக்கு வாழ்வு அளிக்கும் மத்திய நிதி அமைச்சர், "நான் மிக மிக வருந்த வேண்டிய நிலையில் இருக்கிறேன், அதற்குக் காரணம் இப்போதுள்ள நாட்டு நிலைமைகள், உலகத்தில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகள்" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவின் நிலை அப்படி இருக்கும்போது, தமிழகம் மட்டும் அதிலிருந்து தப்பித்துக் கொண்டு, வெறும் வசதியாக எப்படி வாழ்ந்துவிட முடியும்? அவர்கள்



1981 ஏப்ரல் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

விலைவாசி விவரங்களைச் சொன்னார்கள். அப்போது நானும் அங்கே இருந்தேன். இன்னும் கொஞ்சம் தள்ளிப் போனால், பவுன் 13 ரூபாய்க்கு விற்றது, அங்கேயிருந்து தொடங்கினால் தெரியும். 2 ரூபாய்க்கு ஒரு மூட்டை அரிசி கிடைத்த நேரமுண்டு. ஆக, வர வர அப்படி ஏறியிருக்கிறது. பொன், 15 ரூபாய் விற்று, 50 ஆகி, 80 ஆகி, திடீரென்று 400, 500, 600 ரூபாயாகி, 700 ரூபாயாகி, 900 ரூபாயாக உயர்ந்து, திடீரென்று 1,200 ஆகி, சென்ற ஆண்டு 1,450 ஆக மாறி, இப்போது 1,300 ரூபாய் விற்கிற நிலை வந்திருக்கிறது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், இப்படிப்பட்ட சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கும்போது, அவர்களே தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இவ்வளவு கவலை தரும் நிலைமைகள் இருக்கின்றன என்றும் அகில இந்தியாவைப் பொறுத்து 'பிரைஸ் லைன்' இருக்கிறதென்றும் சொல்லியிருக்கிறார்கள். எந்தக் காலத்தில் அகவிலைப் படி உயர்வு 4 முறை சேர்ந்தாற்போல் தந்திருக்கிறோம்? அத்தகைய காலகட்டம் கடந்த 6, 7 மாதங்களில் வந்திருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறை அகவிலைப் படி ஏற்றுமளவிற்கு மத்திய அரசு திட்டம் போடும். இப்போது செப்டம்பரில் கொடுக்கப்பட்டது, டிசம்பரில் கொடுக்கப்பட்டது, மறுபடியும் தரும் அளவிற்கு 8 புள்ளிகள் ஏறியிருக்கின்றன. அகில இந்தியாவிலே அப்படி இருக்கிறது. இதற்குப் பொறுப்பு தமிழகம் மட்டுமல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி, ஆர். வி. அவர்கள் மிகத் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

Remedial mearures—

These measures included incentive to increase the production, imports if necessary to augment supply of essential commodities and emphasis on the public distribution system."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லுகிறார். தென் மேற்குப் பருவக்காற்று, வட கிழக்குப் பருவக் காற்று ஆகியவற்றால் பெய்ய வேண்டிய மழையில் 45 சதவிதம் பொய்த்ததால் வறட்சி ஏற்பட்டு, நாம் எதிர்பார்த்த அளவிற்கு விளைவு ஏற்படாத நிலைமைகள் உள்ளன. சர்ப்ளஸ் மாநிலமான ஆந்திராவில் 13 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு, வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மீதி மாவட்டங்கள்தான் வளமாக இருக்கின்றன. தமிழகத்தில் தஞ்சை, திருச்சி போன்ற சில மாவட்டங்களைத் தவிர, 16 மாவட்டங்களிலே 11

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஏப்ரல் 29

மாவட்டங்கள் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலை இருக்கிறது. விநியோக முறையில் குறைபாடுகள் இருக்கலாம். இல்லையென்று சொல்லவில்லை. 17,300 நியாய விலைக் கடைகள் வைத்திருக்கிறோம். அதிலே போடப்பட்டிருக்கிறவர்களை பார்ட்-டைம் ஊழியர்களாகப் போட்டிருக்கிறோம். ஒருவர் பொறுப்பிலே அந்தக் கடைகளை விட்டிருக்கிறோம்.

(நண்பகல் 12.00)

17,300 இடங்களில் கடைகளை வைத்து பார்ட் டைம் என்கிற முறையில் அங்கு இருப்பவர்களுக்கு மாதந்தோறும் 100 ரூபாய் தந்து கொண்டிருக்கிறோம். அங்கு சர்க்கரை, கோதுமை, ரவை, மைதா போன்றவற்றை வைத்துக்கொண்டு 100 ரூபாய் சம்பளம் தருகிறோம். பார்ட் டைம் என்று சொல்கிறோம் என்றால், வேறு தொழில் மூலம் பணம் ஈட்டுகின்ற நிலை இல்லாதவர்களுக்கு, வேலை வாய்ப்பு இல்லாமல் இருந்தவர்களுக்குத்தான் இந்த வேலையைத் தந்திருக்கிறோம். வேலையில்லாமல் எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச்-ல் பெயர்களைப் பதிவு செய்துகொண்டிருந்தவர்கள் இந்த 100 ரூபாயாவது வருகிறதே என்கிற முறையில் தான் வேலைக்கு வந்திருக்கிறார்கள். இங்கே அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அப்படி உயர்த்த வேண்டுமென்றால், அங்கே விற்பனையாகின்ற உணவுப் பொருள்களின் விலையை உயர்த்த வேண்டியிருக்கும். அப்போது மக்கள் தான் கஷ்டப்படுவார்கள். அதோடு 100 ரூபாய் அளவுக்கு வாடகை இருக்கிற இடத்துக்குக் கூட இந்த வகைக்கு நமக்குக் கடை தேவை என்று கேட்கும்போது அதை 300 ரூபாய், 400 ரூபாய் என்று உயர்த்தி விடுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆகவே சம்பளத்தை உயர்த்திக்கொண்டே போனால், திரும்பத் திரும்ப உணவுப் பொருள்களின் விலையை உயர்த்திக் கொண்டே போக வேண்டிய நிலை வரும். சிலபல கடைகள் திறக்கப்படுவதே இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் சொன்னார். இப்போது நாம் வேலை வாய்ப்பகத்தின் மூலமாக வந்தவர்களைத்தான் விற்பனைக்காக கடைகளில் போடுகிறோம். ஒருவருக்கு அப்படி ஆர்டர் அனுப்பி அவர் வரவில்லையென்று சொன்னால், உடனே அவருக்கு அடுத்தவருக்கு ஆர்டர் அனுப்புகிறோம். அப்படி அவரும் வேலைக்கு வரவில்லையென்று சொன்னால், அவருக்கு அடுத்தவருக்கு அனுப்புகிறோம். இப்படி, 4, 5 பேருக்கு அனுப்பியும் அவர்கள் முன்வராத காரணத்தால், பல இடங்களில் கடைகளைப் பூட்டி வைக்க வேண்டிய நிலை வருகிறது. அப்படிப்பட்ட இடத்தில் வேறு ஒரு கடையைப் பார்ப்பவரே இந்தக் கடையையும்



[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

1981 ஏப்ரல் 29]

பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே அதன்படி அவர் ஒரு கடைக்கு வாரத்தில் 3 நாட்களும் இன்னொரு கடைக்கு 3 நாட்களும் செல்கிறார். அப்படிப் பார்க்கும்போது, சிலபல கடைகள் இம்மாதிரிச் செயல்பட வேண்டிய நிலை இருக்கிறது. அதோடு 200, 300 கார்டுகள் என்று ஒவ்வொரு கடைக்கும் இருக்கின்றன. இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட குடும்ப அட்டைகள் ஒரு நியாயவிலைக் கடையில் இருக்குமேயானால் அதைப் பார்த்து அருகாமையில் உள்ள நியாயவிலைக் கடையில் இணைத்தோ அல்லது கூடுதல் கடை திறப்பதற்கோ அரசு உத்தரவிட்டுள்ளது. தனியார் கடைகளைப்போல் லாபம் ஈட்டுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நாம் இதை ஆரம்பிக்கவில்லை. தனியார் கடைகளைப்போல் லாபம் ஈட்டி அந்த லாபத்தை மற்றவர்களுக்காகச் செலவிட வேண்டிய நிலையும் நம்முடைய நியாய விலைக் கடைகளுக்கு இல்லை. எப்படியும் உணவுப் பண்டங்களை ஏழையெளியவர்களுக்கு, கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்குத் தர வேண்டுமென்ற நிலையில் அவற்றை நாம் நடத்திக்கொண்டு வருகிறோம். இந்தத் துறைக்கு அதனால் தான் நஷ்டம் என்று சொன்னால், சப்சிடி தருகிறோம். லெவி முறையில் வாங்கின அரிசியை 60 காசு குறைத்து கிலோ ஒன்றுக்கு 1 ரூபாய் 60 காசு என்கிற விலைக்கு சாதாரண ஏழையெளிய மக்களுக்கு வழங்கினோம். அதுபோல் சன்ன ரக அரிசியை 1 ரூபாய் 85 காசுக்கு வழங்கினோம். மிக சன்ன ரக அரிசியை 2 ரூபாய்க்குக் கொடுத்தோம். குவிண்டால் ஒன்றுக்கு 74 ரூபாய் என்று இருந்தபோதும், அதே விலைக்குதான் கொடுத்திருக்கிறோம். குவிண்டால் ஒன்றுக்கு 85 ரூபாய் என்று உயர்ந்த போதும், அதே விலைக்குத்தான் கொடுத்திருக்கிறோம். குவிண்டால் ஒன்றுக்கு 95 ரூபாய் என்று உயர்ந்தபோதும் அதே விலைக்குத்தான் கொடுத்திருக்கிறோம். குவிண்டால் ஒன்றுக்கு 105 ரூபாய் என்று ஆகிய பிறகும், அதே விலைக்குத் தான் வழங்கியிருக்கிறோம். ஆனால் இப்போது பிப்ரவரி மாதத்திலிருந்து குவிண்டால் ஒன்றுக்கு 115 ரூபாய் என்று விலை உயர்ந்திருப்பதால் தான் 1 ரூபாய் 60 காசு என்பதை 1 ரூபாய் 75 காசு என்றும், 1 ரூபாய் 85 காசு என்பதை 2 ரூபாய் என்றும், 2 ரூபாய் என்பதை 2 ரூபாய் 15 காசு என்றும் ஆக்கியிருக்கிறோம். இதன் மூலம் நமக்கு 10 கோடி முதல் 12 கோடி ரூபாய் வரை நஷ்டம் வருகிறது. லெவி விலையை விட குறைவாகத் தான் நாங்கள் உணவுப் பொருள்களை இன்றைக்கு வழங்கிக்கொண்டிருக்கிறோம். அடக்க விலையையும், விற்கிற விலையையும் ஒப்பிட்டுப் பார்த்து, லாப நஷ்டக் கணக்கைப் பார்த்து, வியாபார நோக்கில் இதை நடத்தினால், லாபத்தோடு நடத்த முடியும். ஆனால் ஏழையெளியவர்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பண்டங்களைத் தர வேண்டுமென்ற நோக்கத்தில் செயல்படுகிற அரசு

1981 ஏப்ரல் 29]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அவ்வாறு பார்க்க ஆரம்பித்தால், நம்முடைய நோக்கம் நிறைவேறாமலே போய்விடும். லெவி தேவையா என்று இங்கே கேட்டார்கள். லெவியினால் வியாபாரிகளுக்குத் தான் கஷ்டம் என்றும் சொன்னார்கள். பெரும்பாலான வியாபாரிகள் வியாபாரம் செய்வதே லாப நோக்கத்தோடு தான். அவர்களில் எத்தனை பேர் இந்த அரசினுடைய கொள்கையை மதித்து நாட்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணியினை, தொண்டு உள்ளத்தோடு ஆற்றுகிறார்கள் என்பதை உறுப்பினர்கள் சொல்ல முடியுமா? லெவியை எடுத்துவிட்டால் என்ன என்று ஆரம்பத்தில் கருதினோம். ஆனால் புரக்யூர்மென்ட் என்று வந்தவுடன், அறுவடை ஆனவுடன் வியாபாரிகளும், தனிப்பட்ட வியாபாரிகளும், பெரிய வியாபாரிகளும், சிறிய வியாபாரிகளும், தனிப்பட்ட மக்களும் வாங்கத் தொடங்கினார்கள். நுகர்பொருள் வாணிபக் கழகமும் வாங்கத் தொடங்கியது. அப்போது கூட நாங்கள் மத்திய அரசிடத்தில் வாதிட்டோம். சாதாரண ரக நெல்லுக்கு குறைந்தது குவிண்டால் ஒன்றுக்கு 130 ரூபாய் என்று நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டோம். ஆனால் மத்திய அரசு 95 ரூபாய் என்று இருந்ததை 105 ரூபாய் என்று தான் ஆக்கியது. ஆனால் கோதுமைக்கு மட்டும் 117 ரூபாய் என்று இருந்ததை 130 ரூபாய் என்று ஆக்கினார்கள். ஆகவே தான் மறுபடியும் குவிண்டால் கோதுமைக்கு 117 ரூபாயிலிருந்து 130 ரூபாயாக உயர்த்தியிருக்கிறீர்களே, அப்படி இருக்க அரிசிக்கு ஏன் 130 ரூபாயாக உயர்த்தக் கூடாது என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே இறுதியாக முடிவெடுக்க வேண்டியது மத்திய அரசு தான். அண்மையில் கூட மத்திய உணவு அமைச்சரிடத்தில் இப்போது இருக்கிற விலை போதாது 145 ரூபாயாவது குவிண்டால் ஒன்றுக்கு என்று நிர்ணயிக்க வேண்டுமென்று ஆந்திரா போன்ற மாநிலங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால் மத்திய அரசு இதுபற்றி யோசித்துச் சொல்லதாகச் சொல்லியிருக்கிறது. ஆனால் இதுகூட ஐயப்பாட்டுக்குரியது தான். 105 ரூபாய் என்று இருப்பதை நாம் கூடுதலாக்கி நம்முடைய மாநில அரசு தன்னுடைய பணத்தைப் போட்டு 115 ரூபாய் என்று கொடுக்கிறோம். ஆகவே குவிண்டால் ஒன்றுக்கு 10 ரூபாய் விதம் கூடுதலாகக் கொடுத்து வருகிறோம். முந்தைய டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்திலும் இவ்வாறு 10 ரூபாய் கூடுதலாக குவிண்டால் ஒன்றுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டிய நிலை இருந்தது. ஆனால் நாம் 115 ரூபாய்க்குக் கொள்முதல் செய்ய முன்வந்தபோது கூட, வியாபாரிகள் 130 ரூபாய், 140 ரூபாய் என்று கொள்முதல் செய்ய முற்பட்டதால், உற்பத்தியாளர்கள் அவர்களுக்கே நெல்லைக் கொடுத்துவிட்டார்கள். அதனால் நம்மால் 500 டன் நெல்லைத் தான் பெற முடிந்தது.



1981 ஏப்ரல் 29]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஒரு கோடியே 7 லட்சம் கார்டுகாரர்களுக்கு எப்படி இந்த 500 டன்னை வைத்துக்கொண்டு அரிசி தர முடியும்? லெவி ஏன், எதற்கு என்று கேட்கிறார்களே அவர்களைப் பார்த்து நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய அரிசிக் கிடங்குகளில் அரிசி ஸ்டாக் இல்லாமல் நாம் எப்படி இந்த 1 கோடியே 7 லட்சம் கார்டுகாரர்களுக்கு அரிசியைக் கொடுக்க முடியும்? இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் மாதந்தோறும் கார்டு ஒன்றுக்கு 30 கிலோ விதம் தந்து வந்ததை 24 கிலோ என்று இப்போது கொடுக்கிறோம். ஒரு மாதத்திற்கு ஒரு குடும்பத்திற்குக் குறைந்தபட்சம் 24 கிலோ என்ற அளவில் கொடுக்கிறோம். கிலோ ஒன்றுக்கு 1 ரூபாய் 75 காசுக்கு நாம் அரிசியை 1 கோடியே 7 லட்சம் கார்டுகாரர்களுக்கு நம்முடைய கிடங்குகளில் இருப்பு இல்லாமல் எப்படி கொடுக்க முடியும்? இந்த விலைக்கு விற்க வேண்டுமானால், லெவி முறையில், லெவி விலைக்கு இல்லாமல் வேறு எப்படி நாம் வாங்க முடியும்? அவ்வளவு சர்ப்ளசாக இருக்கக்கூடிய ஆந்திராவில் கூட 50 பர்சென்ட் லெவி வாங்குகிறார்கள். நாம் 40 பர்சென்ட் தான் லெவி மூலம் வாங்குகிறோம். இது கூட போதாது. ஆனால் எவ்வளவு லெவி கொடுக்கிறார்கள் என்று சொன்னால், எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். தஞ்சையில் எவ்வளவு விளைந்தது என்பது தெரியும். எவ்வளவு நெல் வரும் என்பதும் தெரியும். எவ்வளவு அவர்கள் விற்கிறார்கள் என்பதும் தெரியும். எவ்வளவு நெல் மாவட்டத்தை விட்டுப் போகிறது என்பதும் தெரியும். ஆனால் அரசு நுகர் பொருள் வாணிபக் கழகம் எவ்வளவு வாங்கியது என்பதும் தெரியும், அதேபோல் கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வளவு வாங்கின என்பதும் எங்களுக்குத் தெரியும். அப்படியும் 2, 3 லட்சம் டன் நம் கண்ணுக்கும், காதுக்கும் அகப்படாமல் இன்றைக்கு இருக்கின்றன. டிரேடர்ஸ் லெவி தான் போட்டிருக்கிறோம். புரடியூசர்ஸ் லெவியை நாம் போடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன், திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் எல்லாம் இதில் கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். "இதன் காரணமாக ஒவ்வொரு வீட்டிலும் நுழைய வேண்டிய நிலை ஏற்படும், இதனால் அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கஷ்டம் ஏற்படும், நண்பர்கள் எல்லாம் சொன்னதைப் போல் லஞ்சம் கொடுத்தார்கள், ஆகவே அவர்களை விட்டு விட்டார்கள், இவர்கள் லஞ்சம் கொடுக்கவில்லை ஆகவே விடவில்லை" என்றெல்லாம் சொல்லும் நிலை ஏற்படும் என்று சொன்னார்கள். அது மட்டுமல்ல பூஜை அறைக்குள் நுழைந்து செருப்பால் அடித்தான், அடுப்பங்கரைக்கு வந்தான் என்றெல்லாம் சொல்லும் நிலை வரும் என்று சொன்னார்கள். புரடியூசர்ஸ் லெவி போட்டால், எப்படி அதன் எபக்ட் இருக்கும் என்றெல்லாம் சொன்னார்

[1981 ஏப்ரல் 29

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கள். 1973-74 ஆம் ஆண்டில் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் புரடியூசர்ஸ் லெவி மற்றும் டிரேடர்ஸ் லெவி இரண்டும் போடப்பட்டது. இரண்டும் போடப்பட்டதன் விளைவாக 1973-74 ஆம் ஆண்டில் புரொடியூசர்ஸ் லெவி, உற்பத்தியாளர்கள் லெவி இரண்டிலுமாகச் சேர்த்து மொத்தம் 7½ லட்சம் டன் நமக்குக் கிடைத்தது.

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.]

(பிற்பகல் 12.10)

1979-80-லே உற்பத்தியாளர்கள் லெவியை எடுத்துவிட்டோம். அப்போது 1½ லட்சம் டன் கிடைத்தது. மீதியிருக்கும் 6 லட்சம் டன்னைப் பொறுத்த வரையில், அவர்களுக்குள்ளே எப்படியோ பேசிக்கொள்கிறார்கள். நாங்கள் விலை பேசுகிறோம், உங்களுடைய வீட்டிலே இருக்கட்டும் என்ற நிலைகள் இருந்தன. உன்னுடைய வீட்டிலே இருக்கட்டும், நான் காசு கொடுக்கிறேன், பின்னாலே எடுத்துக்கொள்கிறேன் என்ற முறையில் இருந்திருக்கும். நான் எல்லோரும் இப்படிப்பட்டவர்கள் என்று பேசவில்லை. நாணயமானவர்கள், நேர்மையானவர்கள் இல்லாமல் இல்லை. நேற்றையதினம்கூட திருவள்ளூர் பக்கத்திலே லெவி கொடுக்காமல் கொண்டு வந்திருந்த நெல்லைப் பிடித்திருக்கிறார்கள். மார்க்கெட் விலையும், நியாய விலைக்கடை விலையும் ஏறக்குறைய ஒன்றாக இருந்தபோது, வெளி மார்க்கெட்டிலே வாங்கினார்கள். அப்போது மார்க்கெட் வசதி இல்லாதவர்கள், ஒரு குறிப்பிட்ட சிலரே நியாய விலைக் கடைகளிலிருந்து வாங்கினார்கள். ஆகவே, அப்போது 7½ லட்சம் டன் தான் தேவை இருந்தது. இப்போது அது உயர்ந்து 11 லட்சம் 12 லட்சம் டன் என்ற அளவிற்கு வந்திருக்கிறது. இப்போது வெளி மார்க்கெட்டிலே விலை அதிகமாக இருக்கிறது. நியாய விலைக் கடைகளிலே 1.75 அல்லது 2 ரூபாய்க்குக் கிடைக்கிறது. ஆகவே, இப்போது கார்டுகளுக்கு அதிகமாக வாங்குகிறார்கள். மாதாமாதம் தேவையின் அளவு உயர்ந்துகொண்டே வருகிறது. இப்போது 40 ஆயிரம், 50 ஆயிரம் டன் என்று தேவை வந்திருக்கிறது. அடுத்த மாதம் 60 ஆயிரத்திற்குப் போனாலும் போகும். ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் வரையில் தாக்குப் பிடிக்க வேண்டும். அதற்கு அப்புறம் குறுவை வந்துவிட்டால், ஓரளவுக்குச் சமாளிக்கலாம். இப்போது போகப் போக 60 ஆயிரம், 70 ஆயிரம், 80 ஆயிரம், 1 லட்சம், டன் என்று ஆகிவிட்டால் கூட ஆச்சரியம் இல்லை. இப்போது சர்க்கரையை



1981 ஏப்ரல் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

எடுத்துக்கொண்டால் கூட, உற்பத்தியாகும் சர்க்கரையில் 65 சதவிகிதம் சர்க்கரைக்கு ஒரு குறிப்பிட்ட விலை நிர்ணயம் செய்து லெவியில் எடுக்கிறோம். மீதி 35 சதவிதத்தைத்தான் அவர்கள் இஷ்டப்படி விற்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். 65 சதவிதம் லெவிக்குக் கொடுப்பதனால் ஏற்படும் நஷ்டத்தை 35 சதவீதம் வெளி மார்க்கெட்டிலே விற்பதிலிருந்து அவர்கள் சரிக்கட்டுகிறார்கள். நாம் லெவியில் சமீபகாலம் வரை 2.65 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்தோம். இப்போது கிலோ 3.50 ரூபாய்க்கு விற்கிறோம். ஆனால் வெளி மார்க்கெட்டிலே 1 கிலோ சர்க்கரை 8.40, 8.50, 8.60 ரூபாய் என்ற அளவிலே விற்கிறது. டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களிலே 10, 12 ரூபாய்க்குக் கூட விற்கிறது. இந்த நிலைமை இப்படியே நீடித்தால், வெளி நாட்டிலேயிருந்துகூட சர்க்கரையை இறக்குமதி செய்ய மத்திய அரசு தயங்காது என்று மத்திய அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்கள் பாராளுமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். இப்படி 35 சதவிதம் சர்க்கரையை வெளிமார்க்கெட்டிலும், 65 சதவிதத்தை நாம் கொள்முதல் செய்து கொள்முதல் செய்ததை 3.50 ரூபாய்க்கும் கொடுக்கிறோம். அதுபோல 40 சதவீதம் நெல்லை லெவிக்குக் கொடுக்கும் போது அவர்களுக்கு நஷ்டம் இல்லை என்று சொல்லவில்லை. இதிலே அவர்கள் அடைந்திருக்கின்ற நஷ்டத்தை மீதியுள்ள 60 சதவீதம் நெல்லிலே சரிக்கட்டித்தான் அவர்கள் விற்க வேண்டும். நம்முடைய மாநிலத்திலே அரிசியே கிடைக்கவில்லை, பட்டினி ஏற்பட்டது என்ற நிலை ஏற்படுவதைவிட, கூடுதலான விலைக்காவது அரிசி கிடைக்கிறது என்ற நிலை வர வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்படுகிறோம். தஞ்சாவூரிலேயிருந்து நமக்கு 3 லட்சம் டன் வரவேண்டும் என்று நாம் எதிர்பார்த்தோம். ஆனால் இதுவரை 1 லட்சத்துச் சொச்சம் டன் தான் வந்திருக்கிறது. இன்னும் அதிகம் எதிர்பார்க்கிறோம். மார்க்கெட்டுக்கு எவ்வளவு வருகிறது, எவ்வளவு உள்ளே இருக்கிறது போன்ற விவரங்கள் நமக்கு வேண்டும். வெளி மாநிலங்களிலிருந்து எவ்வளவு வருகின்றது என்பதும் தெரிய வேண்டும். 13 குவிண்டாலுக்கு மேல் அரிசி வைத்திருப்பவர்கள், 20 குவிண்டாலுக்கு மேல் நெல் வைத்திருப்பவர்கள் தங்களிடம் எவ்வளவு இருக்கிறது என்று தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதை அறிவிக்க வேண்டுமென்று சொல் 'ஆக்ஷன்' எடுக்கவில்லை. எடுக்க வேண்டும் என்ற நிலை வந்தால் எடுப்போம். எவ்வளவு மொத்தம் இருக்கிறது என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இப்போது அவர்கள் மீது கிறோம். அப்படிச் செய்து, மொத்தம் இவ்வளவு இருக்கிறது என்ற

தெரிந்துகொண்டால், இன்னும் நமக்கு இவ்வளவு தேவையிருக்கிறது என்று தெரிந்துகொள்ள உதவுவதோடு, அதன் அடிப்படையிலே மத்திய அரசிடம் வாதாடவும் முடியும். இன்னும் 48, 49 ஆயிரம் பேர்கள் கணக்குக் கொடுக்க வேண்டும். நேற்றையதினம் வரையில் தஞ்சாவூரைப் பொறுத்தவரையில், 7 ஆயிரம் பேர்கள் தான் கணக்கு தந்திருக்கிறார்கள். கணக்கு தராமல் இருந்தால் எப்படி? இன்னும் சொல்லப்போனால் உற்பத்தியாளர் லெவி போடுவதிலே கஷ்டங்கள் இருக்கின்றன. அந்தக் கஷ்டங்களுக்குப் போகாமல் இருக்க வேண்டுமென்றுதான் இப்படி வைத்திருக்கிறோம். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வாங்கியதற்குக் காரணம் நாங்கள் சொல்வதுபோல கேட்பது அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தான் அதிகமாக வாங்கி வைக்க வேண்டும் என்று சொல்கிறோம், எப்போது நாங்கள் சொல்கிறோமோ அப்போதுதான் விற்க வேண்டும் என்றும் சொல்கிறோம். நாங்கள் சொல்வதை அவர்கள்தான் சரியாகக் கேட்கிறார்கள். இப்போது 1 லட்சம் டன் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களும் ஓரளவு அதிக விலை, அதாவது ஏறக்குறைய மார்க்கெட் விலை, கொடுத்து வாங்குகிறார்கள். அந்த அரிசியை மக்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் வரும்போது, அதிக விலையில்தான் கொடுக்க வேண்டும். ஹோட்டல்களுக்கு, அல்லது முக்கிய திருமணங்களுக்கு இதுபோன்ற காரியங்களுக்கெல்லாம் கொடுக்கவேண்டிய அவசியம் வரும்போது, அரிசியைக் கொடுக்க வேண்டும்.

வியாபாரிகளுக்கு இருக்கிற கஷ்டங்களைப் போக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்தம் அவர்கள் பேசும்போது சில கருத்துக்களைச் சொன்னார்கள். வியாபாரிகளுக்கு சங்கடத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. ஆனால் கொள்கை நிறைவேற வேண்டும், நோக்கம் நிறைவேற வேண்டும், இதற்கு வியாபாரிகளுடைய ஒத்துழைப்பு மிகவும் தேவை. நாங்கள் வியாபாரிகளோடு ஒத்துழைக்கத் தயார். அவர்களுடைய ஒத்துழைப்பும் அரசுக்குத் தேவை. நியாயமாக இருப்பவர்களுக்கு சங்கடம் ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை இருந்தால்—நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்தம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்—அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். உத்தரவிலே இருக்கிற கெடுதல் என்னவென்று சொல்லலாம். சங்கடங்களை நீக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆந்திராவிலேயிருந்து வருகின்ற நெல்லுக்கு 40 சதவீதம் லெவி போட்டிருந்தோம். அதனால் ஆந்திராவிலே





யிருந்து கொண்டுவர முடியவில்லை என்று சொன்னதனால், 2 மாதம் பொறுத்ததற்குப் பிறகு ஆந்திராவிலிருந்தோ, பிற மாநிலங்களிலிருந்தோ வருகிற நெல்லுக்கோ, அரிசிக்கோ லெவி தேவையில்லை என்று நடவடிக்கை எடுத்தோம். தமிழகத்திலேயிருந்து வெளி மாநிலங்களுக்குப் போகவேண்டுமென்றால், அதற்கு 40 சதவீதம் லெவி வேண்டும் என்று சொன்னோம். வியாபாரிகளுக்கு மொத்த ஒத்துழைப்பையும் நாங்கள் தருகிறோம், அங்கிருந்துகொண்டு வருவதிலே சங்கடங்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்தம் அவர்கள் சொன்னார்கள். அந்தச் சங்கடங்களை எங்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். ஆகவே, அரசாங்கத்திற்குக் கஷ்டம் இல்லாமல், தம்முடைய நோக்கம் நிறைவேற ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நானும் அதிகாரிகளும் 15 நாட்களுக்கு முன்பு ஆந்திராவுக்குச் சென்று ஆந்திரா முதலமைச்சர் அவர்களையும், உணவு அமைச்சர் அவர்களையும் சந்தித்துப் பேசியபோது, ஆந்திராவிலே உள்ள நுகர்பொருள் கழகத்தின் மூலமாக தமிழகத்திற்கு 1 லட்சம் டன் அரிசி தருவதாக உறுதியளித்தார்கள். நாங்கள் இரண்டு லட்சம் டன் அரிசி வேண்டும் என்று கேட்டபோது, அவர்கள் மிகவும் பெருந்தன்மையாக 1 லட்சத்திற்கு உறுதி தருகிறோம் என்றும், மேற்கொண்டு கொள்முதல் செய்யும் அளவைப் பொறுத்து, 1 லட்சம் தர முயற்சி செய்கிறோம் என்றும் சொன்னார்கள். அந்தப் பெருந்தன்மையை நான் மிகவும் வரவேற்கிறேன். அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாநில நிலைமைகளை உணர்ந்து, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களிலே இருக்கும் கழகங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அரிசியை வாங்கிக் கொண்டு வாருங்கள் என்று சொல்லியிருக்கிறேன். வாங்கிய அரிசியை இங்கே கொண்டுவர வாகன்கள் கிடைக்கவில்லை. ஆந்திராவிலேயிருந்து கொண்டுவரவேண்டிய அரிசியையும், நெல்லையும், மேலும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்திருப்பதையும் கொண்டுவர முடியாமல் அவைகள் தேங்கிக் கிடக்கின்றன. தேவையான வாகன்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இதுபற்றி மத்திய அரசிடம் வற்புறுத்தி வருகிறோம். ஆகவே, இந்த நிலைமைகள் எல்லாம் இருப்பதால், 'சமாளிக்கலாம்' என்று சொன்னேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதுபோல் (comfortable) ஆக இருக்கிறோம் என்று சொல்லவில்லை.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஏப்ரல் 29

(பிற்பகல் 12-20)

"சமாளிக்கலாம்" என்றுதான் சொன்னேனே தவிர "சௌகர்யமாக இருப்போம்" என்று நான் சொல்லவில்லை. கொள்கைக் குறிப்பினைத் தயாரித்தவர்கள் இந்த இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தை உணராமல் போட்டிருக்கலாம். சௌகர்யமாக இருப்பது என்பது வேறு, சமாளிக்கலாம் என்பது வேறு. இப்படி பிற மாநிலங்களிலிருந்தும் நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு உணவு தானியங்களைப் பெறுவோமானால், நிலைமையை ஓரளவுக்குச் சமாளிக்கலாம் என்ற கருத்தைத்தான் நான் சொன்னேன்.

பஞ்சாப், ஹரியானாவைப் பொறுத்த வரை, அங்கெல்லாம் நெல் உற்பத்தி ஒரு கமர்ஷியல் கிராப்பாகத்தான் இருக்கிறதே தவிர அவர்களுக்கு அது ஒரு எசன்ஷியல் கிராப்பாக இல்லை. அவர்களுடைய உணவுப் பொருள் கோதுமையாக இருக்கிற காரணத்தால், நெல்லை அவர்கள் பணப் பயிர் என்ற அடிப்படையில்தான் உற்பத்தி செய்கிறார்கள். எனவே அந்த மாநிலங்களில் அதிகமான அளவுக்குக் கொள்முதல் செய்து, நெல்லையே உணவுப் பொருளாகக் கொண்டிருக்கும் மாநிலத்திற்குக் கொண்டு வரலாம் என்ற கொள்கையின் அடிப்படையில், நமக்குத் தேவையான நெல்லை மத்திய அரசே வாங்கித்தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மத்திய அரசின் உணவு அமைச்சர் அவர்களும் இதற்கு ஓரளவு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். இப்போது மாதம் ஒன்றுக்கு 30,000 டன் முதல் 40,000 டன் வரை ஆந்திரத்திலிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறோம். எனவேதான் அவர்கள் மாதம் ஒன்றுக்கு 65,000 டன் வரை அனுப்பிக்கொண்டிருந்தால், அக்டோபர் மாதம் வரை ஓரளவுக்குச் சமாளிக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். அதற்குள் நிலைமை சீர்படும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, விநியோகத்தில் உள்ள சில்பல குறைபாடுகளைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவைகளை நாம் நிவர்த்தி செய்தாக வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். நியாய விலைக் கடைகளில் திருட்டுப் போவதைப் பற்றியும் எடைக் குறைவு பற்றியும் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. பெரிய அளவில் ஆட்கள் இதில் ஈடுபட்டிருக்கும்போது, சிலர் தவறு செய்யக்கூடும். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஏசு பிரானே 12 சிஷ்யர்களை நம்பினார். அதில் ஒருவர் ஜூதாஸ்



1981 ஏப்ரல் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்பவர் அவரையே ஏமாற்றிவிட்டார். ஏசுவுக்கே இந்த கதி என்றால், நம்மைப்பற்றி நாம் சொல்லவே வேண்டியதில்லை.

**திரு. ஜே. எம். மியாகான்** : அவருக்கு 13 பேர்கள் சீடர்கள் இருந்தார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : அவரோடு சேர்த்து மொத்தம் 13 பேர். அவருடைய சிஷ்யர்களின் எண்ணிக்கை 12 தான். பன்னிருவர்களில் ஒருவரான ஜூதாஸ் என்பவன் ஏமாற்றிவிட்டான். 12 பேர்களை நம்பியவருக்கே இந்தக் கதி என்றால், பல்லாயிரக் கணக்கானவர்களை நம்பியிருக்கும் நம் கதி என்ன என்பதை நான் சொல்லவே வேண்டியதில்லை. ஆகவே சில பல இடங்களில் தவறுகள், குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். சரியாகக் கவனிப்பதற்கு ஆள் இல்லை என்றால் அல்லது சரியான கண்காணிப்பு இல்லை என்றால், இத்தகைய குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். இந்தக் குறைபாடுகளை நீக்கும் வகையில் அந்த ஊழியர்களின் ஊதியத்தைக்கூட அதிகரிப்போமா என்றால், அதற்காக அரசாங்கத்திற்கு மேலும் ரூ. 10 அல்லது 20 கோடி அதிகமாகச் செலவாகும். இதன் காரணமாக ஏற்படுகிற அதிகச் செலவுக்கு அரசாங்கத்தின் சப்சிடியை அதிகரிக்க வேண்டியிருக்கும். இருந்தாலும் பரவாயில்லை, அவர்களின் சம்பளத்தை உயர்த்துவதன் மூலமாகக் குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள முடியுமா என்று யோசித்துக் சொல்லியிருக்கிறேன். அல்லது வேறு ஏதாவது வகையில் இதைச் சரி செய்ய முடியுமா என்பதைப்பற்றியும் ஆலோசிக்கச் சொல்லியிருக்கிறேன்.

தனியாகக் கடை வைத்து நடத்திக்கொண்டு சௌகர்யமாக இருக்கிற வியாபாரிகளிடத்தில் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்றால், அதில் இதைவிட அதிகமான சங்கடம் ஏற்பட்டால், என்ன செய்வது என்பதையும் பார்க்க வேண்டும். நாணயமாக நடந்து கொள்கிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். என்றாலும் சிலர் தவறு செய்தால், அவர்கள்மீது நாம் நடவடிக்கை எடுக்க முடியாமல் போய்விடும். தவறு செய்கிறவர்களை இங்கே நீக்கிவிட்டு வேறு ஒருவரைப் போடலாம். தனியாரிடம் ஒப்படைத்தால், அவர்களை நாம் என்ன செய்ய முடியும்? எனவே இதைக் காட்டிலும் மாவட்ட அளவில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளைக் கண்காணிப்பதற்காக ஒரு குழுவை அமைக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு கடைக்கும் அலுவல் சார்பற்ற முறையில் 5 பேரைக் கொண்ட ஒரு குழு அமைத்தால், அவர்கள் அந்தக் கடைகளில் ஏற்படுகிற தவறுகளை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஏப்ரல் 29

மட்டும் சுட்டிக்காட்டுவதற்கான அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கலாம். தண்டிப்பதற்கான அதிகாரம் அவர்களுக்கு இல்லை என்றாலும், நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் அவர்களுக்கு இல்லை என்றாலும், தங்களைக் கவனிப்பதற்கும் கண்காணிப்பதற்கும் ஒரு குழு இருக்கிறது என்ற எண்ணம் பலரை தவறு செய்யாமல் தடுக்கும். அத்தகைய குழுக்கள் இன்னின்ன இடத்தில் குறைகள் இருக்கின்றன என்று மாவட்ட அதிகாரிகளிடம் சுட்டிக் காட்டினால், அவர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கலாம். இந்த முறையின் மூலம் பல குறைபாடுகளை நிவர்த்தி செய்யலாம் என்று நினைக்கிறேன். ஆக அந்த வகையில் தற்போது யோசித்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் இதுபற்றிய ஒரு முடிவை மேற்கொள்ளலாம்.

குடும்ப அட்டைகளைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள், தமிழ் நாட்டில் மொத்தம் 1,70,00,000 குடும்ப கார்டுகள் இருக்கின்றன. அண்மையில் எடுக்கப்பட்ட ஜனத்தொகையின் அடிப்படையில் பார்த்தால், தமிழ்நாட்டில் மொத்தம் 4,80,00,000 பேர்தான் இருக்கிறோம். ஆனால் வழங்கப்பட்டிருக்கிற குடும்பக் கார்டுகளின் அடிப்படையில் பார்த்தால், மொத்தம் 5 கோடி பேர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் எங்கேயிருந்து வந்தார்கள் என்று நமக்குப் புரியவில்லை. ஆக போகஸ் கார்டுகள் இருக்கின்றன என்பது புரிகிறது. எனவே இனிமேல் சங்கடம் இல்லாத அளவுக்கு புதிதாகக் கார்டுகள் வழங்குகிற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இப்போது சென்சஸ் எடுத்ததிலிருந்து நமக்குப் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே இருக்கிற கார்டுகளோடு, சென்சஸ் மூலம் பெறப்பட்ட புள்ளிவிவங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, புதிதாக கார்டுகள் வழங்க இருக்கிறோம். இப்போது இருக்கிற கார்டையே மாற்றி, வேறு நிறத்தில், அதைக் கொடுத்து பழைய கார்டில் இருக்கிற விவரங்களையும் சேர்த்துக் கொடுத்துவிட்டால், யாருக்கும் சங்கடம் இல்லாமல் போய்விடும் என்று கருதுகிறோம்.

அது மட்டுமல்லாமல், ஒரு மாதத்திற்குத் தேவையான உணவுப் பண்டங்கள் அனைத்தையும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளில் மாதத்தின் தொடக்க நாட்களான முதல் மூன்று தேதிகளின்போது வாங்கும் நிலை தற்போது இருக்கிறது. ஊதியம் வாங்கி 3, 4 நாட்களுக்குள் இவைகளை வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில், அந்தக் கடைகளின் முன் பெரும் கூட்டம் சேருகிற நிலை இருக்கிறது. இதன் காரணமாக ஊரிலுள்ள 16,000 கார்டுதாரர்களும் அதே தேதிகளில் கடைக்கு வந்து படையெடுக்கும் நிலை இருக்கிறது. இதை நாம் மாற்றலாம் என்று யோசித்துக் கொண்டிருக்



1981 ஏப்ரல் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கிறோம். மேலை நாடுகளில் உள்ளது போன்ற முறைகளை இங்கே அமுல் படுத்தலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். திங்கட் கிழமை தோறும் சிலரும், செவ்வாய்க்கிழமை தோறும் சிலரும் என்ற அடிப்படையில் ஒவ்வொரு நாளுக்கும் இவ்வளவு கார்டுகள் என்று போடலாமா என்றும் யோசித்து வருகிறோம். மேல் நாடுகளில் மணிக் கணக்கின் அடிப்படையில் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்கு நேரம் ஒதுக்கப் பட்டிருக்கிற முறைகூட இருக்கிறது. இப்படிப்பட்ட முறைகளுக்கு நமது மக்கள் ஓரளவுக்குக் கட்டுப்பட்டு வருவார்களானால், தற்போதைய விநியோக முறைகளில் இருக்கும் சிலபல குறைபாடுகளையும் நாம் களைய முடியும். ஒவ்வொருவருக்கும் எப்போது ஓய்வு நேரம் இருக்கிறது, எந்த நேரம் அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும், எந்த நேரம் சங்கடமில்லாமல் இருக்கும் என்று அறிந்து, அதன் அடிப்படையில் கார்டுகளுக்குப் பொருள் களை வாங்குவதற்கான நேரத்தைக்கூட குறிப்பிட்டுக் கொடுக்கலாமா என்பதுபற்றிச் சிந்திக்கலாம்.

சர்க்கரை விநியோகத்தைப்பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மத்திய அரசிடமிருந்து நாம் இன்னும் அதிகமான ஒதுக்கீட்டைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். தற்போது 19,500 டன் தருகிறார்கள். அதைக் கூடுதலாக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அகில இந்திய அளவில் இவ்வளவுதான் நமக்குத் தர முடியும் என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசிலிருந்து நமக்குக் கூடுதலாக ஒதுக்கீடு செய்தால், நாம் விநியோகிக்கிற அளவையும் அதிகரிக்க முடியும். இப்போது இருக்கிற முறையில் ஓரளவு நியாயம் இருக்கிறது என்று எண்ணித்தான் அதைக் கடைப் பிடித்து வருகிறோம். சென்னை போன்ற நகரத்தில் சாதாரண ஆளிலிருந்து அனைவருக்கும் 5 கிலோ என்று சர்க்கரையை வழங்கி வந்தோம். சாதாரண நகரங்களில் மாதத்திற்கு 3 கிலோ சர்க்கரையையும், கிராமப்புறங்களில் ஒரு கிலோ சர்க்கரையையும் வழங்கி வந்தோம். அந்த முறையைக் கைவிட்டு விட்டு இப்போது வருமான அடிப்படையில் சர்க்கரையை வழங்கி வருகிறோம். இதைவிட வேறு எந்த வகையிலாவது சிறப்பாகச் செய்ய முடியுமென்றால், அதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தால், அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இது ஒன்றும் நிரந்தரமான முறையல்ல. என்றென்றும் இருக்கக்கூடிய முறையென்று வைத்துக் கொள்ளவில்லை. 1,000 ரூபாய் வருவாய் உள்ளவர்களுக்கு ஏன் 5 கிலோ சர்க்கரை தருகிறோம் என்றால், அவர்களின் குடும்பத்தில்தான் அடிக்கடி காப்பி சாப்பிடுவோர்கள். அவர்களைப்

பார்க்க வரும் விருந்தினர்களுக்கு காப்பி கொடுக்க வேண்டும். அவர்கள் ஒரு நாளைக்கு மூன்று வேளை காப்பி சாப்பிட்டால், அவர்களைப் பார்க்க வருகிறவர்களையும் காப்பி சாப்பிடுகிறீர்களா என்று கேட்டு அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். ஆனால் குடிசையில் இருப்பவர்கள் அப்படிப்பட்ட தேவையுடையவர்கள் என்று சொல்ல முடியாது. எனவேதான் அரிசியைப் பொறுத்தவரையில், இத்தகைய வரம்பு எதுவும் இல்லாமல் எல்லோருக்கும் ஒரே அளவில் அரிசி தருகிறோம். ஆனால் சர்க்கரையைப் பொறுத்த வரையில், இவ்வாறு ஒரு கட்டுப்பாடு தேவைப்படுகிறது.

சென்னையைப் பொறுத்தவரையில், பலர் தங்களுக்கு 5 கிலோ சர்க்கரை தேவைப்படாத காரணத்தால், அதை வாங்கி வெளியே கிலோ ஒன்றுக்கு ரூ. 6 அல்லது ரூ. 7 என்ற அளவில் விற்று லாபம் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். கிராமங்களில் எல்லோருக்கும் சகட்டு மேனிக்கு ஒரு கிலோ என்று கொடுத்து வந்தோம். இதற்கு மேல் தேவைப்படுவதை அவர்கள் வெளி மார்க்கெட்டில் வாங்கிக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு பேரவை உறுப்பினர்களும் மேலவை உறுப்பினர்களும் இனி ஆயிரம் ரூபாய்க்கு மேல் வாங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து சர்க்கரையே கொடுக்கக் கூடாது என்றும், அவர்கள் எப்படியாவது வாங்கிக் கொள்ளட்டும் என்றும் முடிவெடுத்து, அல்லது ரூ. 500க்கு மேற்பட்ட வருவாய் உள்ளவர்கள் எப்படி யாவது சர்க்கரை வாங்கிக்கொள்ளட்டும், அதற்குக் குறைவான வருவாய் உள்ளவர்களுக்கே அரசு சர்க்கரை வழங்க வேண்டும் என்றும் முடிவெடுத்தால் அதையும் நான் ஏற்றுச் செயல்படுத்தத் தயாராக இருக்கிறேன். இப்போது ஒருவர் கோர்ட்டில் ஒரு ரிட் போட்டிருக்கிறார். அதன் முடிவு இன்னும் தெரியவில்லை. ஆக எந்த முடிவினை உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து எடுத்துத் தெரிவித்தாலும், நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அல்லது நமக்குக் கிடைக்கிற 19,500 டன் சர்க்கரையை 1,70,00,000 கார்டு களால் வகுத்து வருவதை ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொடுக்கலாம் என்றால் ஒரு குடும்பத்திற்கு 1⅛ கிலோ அளவுக்குத்தான் கொடுக்க முடியும். அதைக் கொடுக்கச் சொன்னால், அதைக்கூடச் செய்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** தற்போது சர்க்கரை விநியோகத்தைப் பொறுத்த வரையில், 3 ஸ்லாப்கள் இருக்கின்றன. ரூ. 500-க்கும் குறைவான வருவாய் உள்ளவர்கள், ரூ. 500-க்கு மேற்பட்டு 1,000 வரை வருவாய் உள்ளவர்கள், ரூ. 1,000-க்கும் மேற்பட்ட வருவாய் உள்ளவர்கள் என்று 3 பிரிவுகளாக



வைக்கப்பட்டிருக்கின்றன. இதையே 4 ஸ்லாப்களாக மாற்றி அமைக்கலாம். ரூ. 250-லிருந்து ஒரு பிரிவை வைக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எப்படிச் செய்தாலும், நமக்குக் கிடைக்கிற 19,500 டன் சர்க்கரையை மட்டும்தான் பிரித்துக் கொடுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல், ரூ. 250-க்கும் குறைவாக வருவாய் உள்ளவர்கள் ஒரு பிரிவு, ரூ. 250-க்கு மேல் ரூ. 500 வரை வருவாய் உள்ளவர்கள் ஒரு பிரிவு என்று வைக்கலாம். அரசு இதையும் யோசிக்கும் என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை முடிந்து, அடுத்து எடுத்துக் கொள்ளப்பட இருக்கும் தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதம் முடிவடையும் வரை, அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, மற்றைய நிலைமைகளைப் பற்றி அவ்வப்போது கேள்விகளுக்குப் பதில் சொல்லுகின்றபோது எடுத்துச்சொல்கின்றேன்.

மண்ணெண்ணெயைப் பற்றிச் சொன்னார்கள். நாம் எதிர்பார்த்த அளவுக்கு அது வரவில்லை. ஓரளவுக்குத்தான் வந்திருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் சொல்கின்றபடி இப்போது விநியோகிக்கின்ற முறையிலே எந்த அளவுக்கு சீர்திருத்த முடியுமோ அந்த அளவுக்குச் செய்யலாம். அவர்கள் தெரிவித்த கருத்துக்களை வைத்து யோசிக்கலாம்.

சிமெண்ட் வருகின்றதை வைத்துத்தான் சொல்கின்றேன். அதிலே சிலபல தவறுகள் ஏற்பட்டாலும், அதைச் சுட்டிக்காட்டினால், அதைத் திருத்திச் செய்ய அரசு தயாராக இருக்கிறது. 3,28,500 மெட்ரிக் டன் தேவை. ஒதுக்கீடு என்ற அளவில் 3,38,300 மெட்ரிக் டன் தேவைப்படுகிறது. இதர ஒதுக்கீடு என்பதற்கு ஒரு லட்சம் டன் தேவைப்படுகிறது. ஆகமொத்தம் 7,67,300 டன் ஒரு கால் ஆண்டுக் காலத்திற்கு நம் மாநிலத்திற்குத் தேவைப் படுகிறது. 3,38,500 மெட்ரிக் டன் தேவைப்படுகின்ற இடத்திலே ஒரு லட்சம் டன்தான் கிடைக்கிறது. அதாவது 83,800 டன் அளவில் கிடைக்கிறது இதர ஒதுக்கீடுகளுக்கு ஒரு லட்சம் டன் என்றால், அதற்கு 48 ஆயிரம் டன் தான் கிடைக்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டி ருக்கிறோம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஏப்ரல் 29

இங்கே விற்பனையிலே சில இடங்களிலே தகராறு வருகிறது என்று சொல்கின்றார்கள். கள்ள மார்க்கெட்டிலே விற்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். மேற்பார்வை இடுபவர்கள் அதைக் கண்டுபிடிக்க வேண்டும். அல்லது கண்டுபிடிக்கக்கூடிய அளவிலே முறைகளை வைக்க வேண்டும். தவறு செய்பவர்களைச் சுட்டிக்காட்டினால், அரசு நடவடிக்கை எடுக்கும்.

பாமாயின் எண்ணெயைப்பற்றிச் சொன்னார்கள், மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அதைத் தேக்கி, பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அது அல்ல. ஓரளவுக்கு வைத்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. அதற்கு லைசென்ஸ் கொடுப்பது மத்திய அரசுதான். குறிப்பிட்டவர்களுக்கு லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அப்படி வந்து கேட்பவர்களுக்கு, இறக்குமதி செய்வதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். மாநில அரசைக் கேட்டுக்கொடுப்பது என்பதில்லை. அவர்கள் இவ்வளவுதான் வைத்துக்கொள்ளலாம் என்று வரையறை செய்திருக்கிறார்கள். அதற்கு மேலே வைத்திருந்தால், பிடிக்கலாம். அந்த வகையிலேதான் பிடிக்கப் பட்டிருக்கிறார்கள். அதற்கான முழு விவரங்களும் இப்போது என்னிடம் இல்லை. அவர்களை விட்டுவிடவில்லை. ஒரு கோடி ரூபாய் அளவுக்கு வைத்திருந்தார்கள் என்று சொல்கின்றார்கள். அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. கீழ்க்கோர்ட்டு, ஹைக்கோர்ட் என்று போனார்கள். அதை அரசே ஏலம் போட வேண்டும், அதற்கு அனுமதி வேண்டும் என்று கேட்டோம். அப்படி வாதாடும்போது ஹைக்கோர்ட்டு அவர்களிடமே எண்ணெயை திருப்பிக்கொடுத்து அவர்கள் மூலமே ஏலம் போட்டு அந்தத் தொகையை பிக்சட் டெபாசிட்டிலே பாங்கிலேயே வைக்கின்ற அளவிலே செய்யலாம் என்றார்கள். அவர்கள் அந்தப் பணத்தை எடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. அரசு அதிகாரிகள் அவர்களுக்கு சட்டப்படி தக்க தண்டனை கொடுக்க வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அவர்கள் வாதாடிக்கொண்டிருக்கிறார்கள். வழக்கின் முடிவுக்குப் பிறகு அந்தத் தொகையை என்ன செய்வது என்பது தெரியும். அந்தத் தொகைக்கு ஆபத்து இல்லை. இன்றைய நிலைமையில் வழக்கு முடிவு வந்த பிறகுதான், அதுபற்றித் தெரியும்.

உறுப்பினர்கள் பலரும் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒருவர் ஒரு கருத்தைச் சொன்னார். செங்கற்பட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கம் பற்றிச் சொன்னார்கள். அதில் மோகனரங்கம் என்பவர் பற்றிச் சொன்னார்கள்.



1981 ஏப்ரல் 29]

திரு. ஆர். டி. சீத்தாபதி: மோகனரங்கம் அல்ல, பொன்னுரங்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சரி. பொன்னுரங்கம் என்பவர். எனக்கும் அவருக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. ஏற்கெனவே நான் இருந்த சாதியைச் சேர்ந்தவராக இருக்கலாம். எனக்கு ஒரு சாதி என்று கிடையாது. என்னுடைய சாதியைச் சேர்ந்தவர் என்பது மட்டுமல்ல, எனக்கு 'பிரண்ட்' என்றுகூட சொல்ல முடியாது. திரு. சீத்தாபதி அளவுக்குக்கூட எனக்கு அவர் 'பிரண்ட்' அல்ல. பொன்னுரங்கம் என்ற பெயரே கிடையாது. அவர்களிடம் நான் பேசவும் இல்லை. அவர் என்ன நிலை என்பதே தெரியாது. எங்கே இருக்கிறார் என்றும் தெரியாது. அதுவும் கோ-ஆப்பரேடிவ் துறை என்று சொல்கின்றார்கள். அவர் நிதித் துறையிலோ, நான் வைத்திருக்கின்ற பிற்பட்டவர் நலத் துறையிலோ, மீன் துறையிலோ, உணவுத் துறையிலோ இருந்தால், என் கவனத்திற்கு வந்திருப்பார்கள். என்னுடைய அதிகாரத்தின்கீழ் இருக்க வேண்டும். கோ-ஆப்பரேடிவ் சொசைட்டி. எனக்கும் அவருக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. அவர்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும். அது பொன்னுரங்கமாக இருக்கட்டும், வெள்ளிரங்கமாக இருக்கட்டும், பித்தளைரங்கமாக இருக்கட்டும். அது யாராக இருந்தாலும், அவர்மீது நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும். தவறு செய்பவர்களைக் காப்பாற்றும் எண்ணம் கிஞ்சிற்றும் எனக்குக் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட எண்ணம் எனக்கு இல்லை என்பதைத் தெளிவாக, வெளிப்படையாகவே கூறிக்கொள்ள விரும்புகிறேன். யார் தவறு செய்தாலும், தண்டிக்கப்படவேண்டியதுதான். இந்த விவரத்தைப் பொறுத்தவரையிலும், அதைப்பற்றி அடிப்படையே எனக்குத் தெரியாது. சில பேர்கள் தவறு செய்கிறார்கள் என்று சொன்னால், அப்படிச் செய்பவர்களைப் பற்றி வேண்டுமென்று கேட்டால் தகவல் சொல்வதாகச் சொல்கிறார். கேட்கவே வேண்டாம், சட்டமன்ற உறுப்பினர் பதவி இழக்கவேண்டியதாக இருக்கும் என்கின்றார்கள். அப்படியெல்லாம் இழக்க வேண்டாம். மேல் சபையிலே உறுப்பினராக இருக்க வேண்டும். பதவியை இழந்துவிட வேண்டாம். உண்மையை மட்டும் எடுத்துச் சொன்னால், முடிந்த வரையிலே செய்கிறோம். அவர்களைச் சுட்டிக்காட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் காட்டினால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். இன்னின்ன குற்றங்கள் என்று எடுத்துச் சொல்லுங்கள், விசாரிக்கலாம். தவறு இருந்தால், யாரையும் விட்டுவிடுகிற நிலைமைகள் இல்லை. நண்பர்கள் சிபாரிசு பண்ணிவிட்டாலும், அதைப்பற்றிப் பார்ப்ப

இல்லை. மாட்டிக்கொண்டிருப்பவர்கள் மாட்டிக்கொள்ள வேண்டியதுதான். யாரையும் விட்டுவிடுகின்ற நிலையிலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: நான் சொல்வது 'ஃபுட்' இலாகாவுக்கு காவல் துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களை வைத்து சென்னை மாநிலத்திலே இருக்கின்ற எல்லா சிறிய அங்காடிகளில் யார் யார் இருக்கிறார்கள் என்று இரகசியமாகக் குறிப்புகள் எடுத்தால், லிஸ்ட் எடுத்தால் அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ள முடியும். அப்படிச் செய்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நானும் செய்கிறேன். உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்த அளவுக்கு இன்னின்னார் என்று சொன்னால், நான் 'கான்சென்ட்ரேட்' செய்ய முடியும். அதிகம் கண்டுபிடிக்க முடியும். அங்கே இருக்கின்ற எல்லாக் கடைகளையும் பாருங்கள் என்றால், என்ன பதில் வரும், ஒன்றும் இல்லை என்றுதான் பதில் வரும். குறிப்பிட்ட ஆட்கள் என்று சொன்னால், குறிப்பிட்ட ஆளைக் கொண்டு வா என்று கேட்கலாம். இரகசியமாகக் கொடுக்கலாம். நான் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க முயற்சிகளை மேற்கொள்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

காலம் அதிகமாகிறது. மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மேற்கொண்டு பல அங்கத்தினர்கள் பல கருத்துக்களைச் சொன்னாலும்கூட, அவ்வப்போது கேள்விகள் விடைகளிலே தேவையான விளக்கங்களைத் தெளிவாகச் சொல்கிறேன். அதற்கு வாய்ப்பு இருப்பதால், இந்தக் கொள்கை விளக்க விவாதத்திலே கலந்துகொண்டு இந்தத் துறை மேலும் குறைகள் களையப்பட்டு மேம்பாடு அடைய வேண்டும் என்பதைச் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இதிலே சில குறைபாடுகளைச் சொன்னாலும்கூட, இந்த 22 மாநிலங்களிலே 'டிஸ்ட்ரிபியூஷன் சிஸ்டம்' நம் மாநிலத்தில்தான் சிறப்பாக இருக்கிறது என்று சொல்கின்றார்கள். 'பெஸ்ட் சிஸ்டம்' என்ற அளவில் தமிழ் நாடுதான் அந்தப் பெயர் எடுத்திருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். மத்திய அரசு 15 நாட்களுக்கு முன்னாலே ஒரு கடிதம் எழுதியிருக்கிறது. "டிஸ்ட்ரிபியூஷன் சிஸ்டம், பங்கீட்டு முறைபற்றி ஒரு டாக்குமெண்டரி படம் எடுத்து இந்தியா முழுவதும் காட்ட விரும்புகிறோம். தமிழ் நாட்டில் உள்ள முறைதான் சீராக இருக்கிறது என்றுபடுவதால், அதையே படம் எடுத்து



இந்தியா முழுவதும் படம் எடுத்து காட்டலாம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியே செய்யலாம் என்று சொல்லியிருக்கிறோம். அதிகாரிகள் கூடிய மகாநாட்டில் மத்திய அரசாங்க செயலாளர் அவர்கள்கூட தமிழ் நாட்டிலே கடைப்பிடிக்கின்ற நடைமுறைகளை மற்ற மாநிலங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி தமிழ்நாடு மாநில அதிகாரிகளிடமும் மற்றவர்களிடமும் விவாதித்து முடிவுக்கு வர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கிருந்து அமைச்சர்களும் வந்து விவாதித்திருக்கிறார்கள். சில அதிகாரிகளும் வந்து விவாதித்திருக்கிறார்கள். சில குறிப்புகளையும் இங்கேயிருந்து அனுப்பியிருக்கிறோம். ஆக இந்தத் துறையிலே குறைகளே இல்லை என்று சொல்லவில்லை. சிலபல குறைகள் இருக்கக்கூடும். கூடுமானவரையிலே சரியாகத்தான் நடத்தி வருகிறோம். மேலும் மேம்பாடு எய்த வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். மேலும் உள்ள குறைகளை நீக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதற்கு அங்கத்தினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் பயன்படும் என்று கூறி, நல்ல பல கருத்துக்களைச் சொன்ன அங்கத்தினர்கள் யாவருக்கும் என் நன்றியைத் தெரிவித்து, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**(2) தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.**

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

* திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு தொழிலாளர்கள் நிலைமைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது சுருக்கமாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் rnational Labour Organisation பரிந்துரைகளின்படி நாம் நாட்டிலே கிராமப்புறங்களிலே இருக்கின்ற, ஒரு அமைப்பின்கீழ் வராத unorganised Labourers -ஐக் குறிப்பாக கிராமப்புறங்களிலே குவிந்திருக்கின்ற பாட்டாளிகள் இவர்களை எல்லாம் ஒரு

@ 494-604 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1981 ஏப்ரல் 29

அமைப்பின்கீழ் கொண்டுவர தமிழக அரசு முன்வந்து முயற்சிகளை எடுத்து தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் அரசை, அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும், ஆண்களுக்கு ஒருவிதமான கூலியும் பெண்களுக்கு ஒருவிதமான கூலியும் என்ற அளவில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்ற வகையிலே இருக்கிறது. ஆண்களுக்கு ஒருவிதமான கூலி என்றும், பெண்களுக்கு ஒருவிதமான கூலி என்றும் வேறுபாடுகள் இருக்கக் கூடாது. அப்படிப்பட்ட விதி முறைகளை மாற்றி இருபாலாருக்கும் ஒரே விதமான ஊதியம் வருவாய் என்ற வகையிலே இருக்கின்றவாறு சட்ட அமைப்புகளை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த சமயத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அதோடு மட்டுமல்லாமல், வேலை வாய்ப்பைப் பொறுத்த வரையில் சில நியதிகளைப் பின்பற்றுகிறோம். SC, BC, OC என்று பிரிவுகளை ஏற்படுத்தி, percentage வைத்து, அதிலும் சில பிரிவினருக்கு முன்னுரிமை (priority) கொடுக்கிறோம். அதுபோன்று முன்னுரிமை கொடுக்கும்போது, கிராமங்களிலிருந்து வருகின்றவர்களுக்கு, கிராமங்களிலே நிலையாகத் தங்கி, படித்து வருகிறவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கலாமா என்பதைச் சிந்தித்து, அந்த வகையிலே சட்ட திட்டங்களை மாற்ற முடியுமா என்று பார்த்து, மாற்ற முடியுமானால் மாற்றத்தை ஏற்படுத்தி, கிராமப்புற மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஒரு சமுதாய நீதியை வழங்கி, அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னுமொன்று, தமிழகத்தில் பல உணவு விடுதிகள் ( hostels இருக்கின்றன. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, ஆதி திராவிட நலத் துறை உணவு விடுதிகள் நடத்துகின்றன. பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றுடன் இணைந்த உணவு விடுதிகள் தனியார் நடத்துவதாக இருந்தாலும், அரசுத் துறைகளில் இருந்தாலும், அங்கே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இன்றைய தினம் எந்தவித பாதுகாப்பும் இல்லை. உணவு விடுதிகளிலே அவர்களுக்குச் சரியான ஊதிய விகிதமும் இல்லை. ஆனால் அவர்களிடம் கடுமையான உழைப்பை மட்டும் வாங்கும் நிலைமைகள் இருக்கின்றன. அவர்கள், சீரான ஊதிய விகிதமும், பணிப் பாதுகாப்பும், ஓய்வு பெற்ற பிறகு ஓய்வு காலப் பயனும் இல்லாமல், பரிதாபத்திலே சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட உணவு விடுதிகளிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பைத் தரும் அளவிற்கு ஒரு சட்டத்தைக்



1981 ஏப்ரல் 29] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

கொண்டுவர வேண்டும். இன்றையதினம் அப்படிப்பட்ட சட்டமில்லை. அதை அரசு பரிசீலனை செய்து, தகுந்த சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, ஆசிரியர் சங்கங்களுக்கு (Labour Union Status) தொழிற்சங்க உரிமைகள் கொடுக்கப்பட வேண்டுமென்று நீண்டகாலமாகக் கோரி வருகிறோம். தொழிற் சங்க உரிமைகளைக் கொடுக்க முடியாத அளவிற்கு சட்டத்திலே தடைகள் இருந்தால், அந்தத் தடைகளை மாற்றி, ஆசிரியர்களுக்குத் தொழிற் சங்க உரிமைகள் கொடுக்கும் வகையில் சட்டங்களை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்மையிலே தமிழக அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. பிழைப்பு ஊதியத்தைப் பொறுத்தவரையில், ( Subsistence Allowance ) கொண்டு வந்துள்ள அந்தச் சட்டத்தினால் தொழிலாளர்களுக்கு நல்ல அனுகூலம் கிடைக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அந்தச் சட்டத்தின் பலன், தொழிலாளர்கள் அந்தஸ்து பெறாத ஆசிரியர்களுக்கும் கிடைக்கின்ற வகையிலே, தொழிலாளர் நல அமைச்சரவர்கள் கல்வித் துறையோடு தொடர்பு கொண்டு, நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

Thirumathi TARA CHERIAN: Mr. Deputy Chairman, Sir, I thank you for giving me some time to speak on this Policy Note which is of great interest. It is a fairly general satisfaction that I got on going through this Policy Note on Labour in Tamil Nadu.

Sir, I am genuinely interested in the labour movement for more than one reason. I congratulate the Hon. Minister, who is well-versed in matters relating to Labour and who is an authority on the subject, on his maintaining industrial peace in our State. The rapport between the employers and the employees has been generally very good. There has been only one strike and that was also expeditiously settled. There are so many things to be commended in the Report. Particularly, the work done by the Tamil Nadu Labour Welfare Board, not only for the labourers but also for the welfare of women in their families, is very commendable. The starting of tailoring units, provision of a ward in the T.B. Sanatorium at Tambaram, payment of tuition fees and grant of scholarships, holding of annual sports and things like these are all to be commended.

[Thirumathi Tara Cherian] [1981 ஏப்ரல் 29

Sir, coming to the other side of the picture, I am very sorry to say that there is one glaring omission and that relates to child labour. The statistics for child labour reveal the fact that India has the largest child labour in the world. So, this problem of child labour is not something pecular to Tamil Nadu alone.

Sir, thousands of small boys are employed in tea shops tinkering shops, in the Moore Market, Fruit Market in George Town, Mint Street and some such places. On the way to the airport, I have seen them working in such tea shops and they are being exploited because their labour is cheap. I want to say that they are taking up such jobs only because of poverty. As long as poverty is there, such exploitation will continue. I have been insisting upon a kind of package deal for the welfare of such boys. The Labour Department, the Education Department and all the concerned Departments of the Government should join together and find a shelter for such boys including destitute children and they may be given education also. Because of poverty, the parents will not send them to schools. Thousands of destitute children are sleeping on the roadsides and they have no shelter. The Government should come forward to provide them shelter, where they can be given non-formal education and even vocational training and provided medical check-up and nominal charges could be collected from such boys who are earning. Such a thing should be done for these abandoned children who have no home and who belong to labour class. I hope the Hon. the Chief Minister will be able to get all the departments together and with the help of the voluntary organisations, such children could be looked after and given non-formal education.

திரு. ப. மாணிக்கம்: அவைத் தலைவரவர்களே, கொள்கைக் குறிப்பிலே எடுத்த எடுப்பிலேயே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. கையிலே ஆங்கிலப் பிரதி இருப்பதால், ஆங்கிலத்தில் சொல்கிறேன்.

"The Government recognised the right of the labour to strike; but in the event of strike through timely intervention, effective conciliation and peaceful settlements, they have been able to resolve the problems of the working classes smoothly and thus avert prolongation of these strikes"

இதிலே சொல்லப்பட்டிருப்பதற்கும், நடப்புக்கும் எந்தவித உறவுமில்லை இந்த ஒரு அம்சத்தை மட்டுமே, ஓரிரு உதாரணங்களோடு சொல்ல விரும்புகிறேன். ஒருபுறம் வேலை நிறுத்த உரிமை தொழிலாளர்களுக்கு வழங்கப்



1981 ஏப்ரல் 29] [திரு. ப. மாணிக்கம்]

பட்டிருக்கிறது. இந்திய முழுவதுமுள்ள நிலைமைதான் அது. எனவே மாநில அரசும் அந்த உரிமையை அங்கீகரித்திருக்கிறது. ஆனால் திடீரென்று வேலை நிறுத்தம் வந்தால், அதைத் தடுக்க அத்தியாவசியத் துறைகள் வேலை நிறுத்தத் தடைச் சட்டம் கொண்டு வருகிறது. முன்பு ஒரு ஆர்டினன்ஸ் வந்தது. பிறகு அது பின்வலிக்கப்பட்டது. இப்பொழுது ஒன்று வந்தது. கடுமையான எதிர்ப்பின் காரணமாக அது ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப் பட்டிருக்கிறது. கொள்கை நிலையில் வேலை நிறுத்த உரிமையை அங்கீகரிக்கிறோமென்று சொல்லிவிட்டு, இப்படி அவசரச் சட்டங்கள் மூலமாக வேலை நிறுத்தங்களைத் தடை செய்வது என்று சமூகப் பொது நலன் பேரில் சொல்வது இருக்கிறதே, இது கொள்கைக்கும் நடப்புக்கும் சம்பந்தமில்லை என்பதைக் காட்டுகிறது. இன்னொன்று சொல்லப்படுகிறது. வேலை நிறுத்த காலங்களிலே அரசு தலையிட்டு, பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்கும், வேலை நிறுத்தம் நடக்காமல் பார்த்துக்கொள்ளப்படும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அனுபவம் என்னவென்று சொன்னால், எந்த வேலை நிறுத்தம் நடந்தாலும், எவ்வளவு காலம் அதை நீட்டிக்க வைக்க முடியும்; தொழிலாளியை எவ்வளவு களைக்க வைக்க முடியும், அவனாகக் களைத்து ஓய்ந்துவிட வேண்டும் என்ற முறையில்தான் இருக்கிறது. தமிழ் நாட்டில் ஒரு பழமொழி சொல்லுவார்கள். 'சும்மாவிட்டு ஓய வைப்பா' என்று சொல்லுவார்கள். பிச்சைக்காரன் எவ்வளவுதான் சத்தம் போட்டாலும், சும்மாயிருந்தால், அவனே களைத்துப் போய், போய்விடுவான். இத்தகைய நடைமுறையை அரசு மேற்கொண்டிருக்கிறது.

இன்னொன்று 'கன்சிலியேஷன்' சிறப்பாகச் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அரசின் கீழுள்ள பால் வள நிறுவனத்திலே, மதுரையிலே பிரச்சினை எழுந்து, அதற்கு ஆதரவாக வேலை நிறுத்தம் சென்னையில் நடந்தது. 1,200 பேர்கள் வெளியில் இருக்கிறார்கள். தொழிலாளர் நல இலாக்காவுடன் பேச்சு வார்த்தை துவங்கி, அப்படியே இருக்கிறது. 1,800

(பிற்பகல் 12.50)

பேர் இன்றையதினம் வெளியே நிற்கிறார்கள். அரசு தலையிட்டு உடனடியாக சுமுகமான முறையில் தீர்வு காணவில்லை. அரசின் கீழ் உள்ள நிறுவனம் தான் அது. இன்னமும் தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நிலைமை சீர்படவில்லை. பெரிய குறைபாடுகள் இருக்கின்றன. இப்படி ஒட்டுமொத்தமாகப் பழி வாங்கும் நினைப்பு அரசாங்கத்திற்கு இருப்பது சரியில்லை. 'கன்சிலியேசன்' என்பதும், தவறு நடக்காமல் பார்த்துக்கொள்கிறோம் என்பதும் உண்மை அல்ல. பல சந்தர்ப்பங்களில் பல உதாரணங்களை

நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். வேலை நிறுத்தம் நடைபெற்றால், அதை தொடர்ந்து நீட்டிக்க விடுவது சரியில்லை. காலத்தில் தலையிட்டு பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க இந்தத் துறை சரியாகக் கவனம் செலுத்தவில்லை. அப்படி கவனம் செலுத்தியிருந்தால், பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்திருக்க முடியும். இப்படிச் செய்வதன் மூலம் தொழிலாளர்களை வேண்டுமானால் களைப்பு அடையச் செய்யலாம். இது இன்றைக்கு வெற்றிகரமாக அரசுக்குத் தெரியலாம். ஆனால் பின்னால் பல தோல்விகள் ஏற்பட, இந்த ஒரு வெற்றி படிக்கட்டாக மாறிவிடும். தொழிலாளர்களுக்கு எந்த இடத்தில், எந்த சந்தர்ப்பத்தில் பிரச்சினை தோன்றிவிட்டாலும், உடனடியாக இந்தத் துறை காலா காலத்தில் தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். ஏற்படும் பிரச்சினைகளுக்கு இந்தத் துறை காலா காலத்தில் தீர்வு காணவில்லை. வருங்காலத்திலாவது இப்படிப்பட்ட போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும். இன்னும் பல உதாரணங்கள் இருக்கின்றன. வேறு பல சந்தர்ப்பங்களில் இப்படிப்பட்ட தொழிலாளர் பிரச்சினைகள் கடந்த காலத்தில் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஊறுகாய் பானையில் போடப்பட்டவைகளைப் போல் போய்விட்டன. அப்படிப்பட்ட நிலை வருங்காலத்தில் இருக்கக் கூடாது. இந்த இலாகாவுக்கு தொழிலாளர்கள் மீது உள்ள நம்பிக்கை குறைந்திருக்கிறது. இந்தப் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கூறி, தொழிலாளர்களுடைய பிரச்சினைகளுக்குக் காலா காலத்தில் தீர்வு காண வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டில் தொழிலாளர் நிலைமைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு குறித்து இரண்டொரு கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே மனித உழைப்பை எந்த அளவுக்கு நாம் இழந்திருக்கிறோம் என்பதற்கான புள்ளிவிவரத்தைத் தந்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு மனித உழைப்பின் இழப்பை வெகுவாகக் குறைத்திருக்கிறார்கள். ஒரு மகிழ்ச்சிக்குரிய நிலையை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில், தொழில் துறையைப் பொறுத்தவரையிலும், எந்த அளவுக்கு உற்பத்தித் திறன் அதிகரித்திருக்கிறது அல்லது வேகம் அதிகரித்திருக்கிறது என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தொழிலாளர் அளவிலே எந்த அளவிற்கு ஒரு சுமுகமான சூழ்நிலையை



உருவாக்கியிருக்கிறார்களோ அதே அளவுக்கு தொழிற்சாலைகளை நடத்துபவர்களுக்கிடையே உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்குரிய நிலையை உருவாக்கவில்லையோ என்கிற ஒரு ஐயம் ஏற்பட்டிருக்கிறது. உற்பத்தித் திறனையும் நாம் இன்றைக்கு முழுமைப்படுத்தியாக வேண்டும். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அமைச்சர் பொறுப்பேற்றதிலிருந்து தொடர்ந்து சட்டமன்ற கூட்டத்தொடர் நடக்கும்போதெல்லாம் புதிய புதிய சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வருவதன் மூலம் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட இந்தத் துறையை சீர்படுத்துகிறார்கள். இதிலுள்ள சில தீமைகளைப் போக்குகிறார்கள். அல்லது அவர்களுடைய கடமைகளை முறைப்படுத்துகிறார்கள். இது வரவேற்கத்தக்கது. ஆனால் எவ்வளவு தான் சட்டங்களை இயற்றினாலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு நல்ல நிர்வாக அமைப்பு தேவை. சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய, செயல்படுத்த வேண்டிய அளவிற்கு அதிகாரிகளுடைய எண்ணிக்கையும் இருந்தாக வேண்டும். இன்றைக்கு இருக்கிற அதிகாரிகளுடைய எண்ணிக்கையை வைத்துக் கொண்டு தொழிலாளர் நலத் துறை, சட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்திவிட முடியாது. எந்தத் துறையில் அதிகாரிகளுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்துகிறோமோ இல்லையோ, ஆனால் இந்தத் துறை மட்டும் தொழிலாளர்கள், பொது மக்கள் சம்பந்தப்பட்ட துறையாக இருப்பதால், அவசியம் அதிகாரிகளுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தியாக வேண்டும். கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினையைப் பொறுத்தவரை, ராஜாசுப்பிரமணியம் கமிட்டியினுடைய ரிப்போர்ட் பல ஆண்டுகளுக்கு முன்பு அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை அரசுக்குக் கொடுக்கப்பட்டு, அரசால் அது ஏற்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், அந்த ரிப்போர்ட்டினுடைய அடிப்படையில் அதை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டங்கள் இன்னும் இந்தத் துறையால் கொண்டுவரப்படவில்லை. இது சம்பந்தமாக குழுக்கள் அமைக்கப்பட்டு அந்தக் குழுக்களும் இடையிலே கலைந்துவிடுவதால் இதுபற்றிய சட்டங்கள் இன்னமும் கொண்டுவரப்படவில்லை. பாதியிலே நின்றிருக்கும் இந்தப் பணியை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். இது சம்பந்தமான சட்ட முன்வடிவுகளைக் கொண்டுவரும்போது அல்லது நிறைவேற்றும்போது, ஹேண்ட்லூம் டைரக்டருக்கும், தொழிலாளர் நலத் துறையின் சமமாகப் பங்கு கொடுத்தாக வேண்டும். ஹேண்ட்லூம் துறையைப் பொறுத்தவரை நெசவாளர்களைப் பொறுத்தவரை, மாஸ்டர் வீவர்லை அடையாளம்

காட்டுவதற்காக அவசியம் கைத்தறித் துறையும் தொழிலாளர் நலத் துறையோடு சேர்ந்து இயங்க வாய்ப்பளிக்க வேண்டும்.

அடுத்து, பி அண்டு சி மில்லைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் இருக்கிற தொழிற்சாலைகளில் மிகப் பெரிய தொழிற்சாலை அது. அது இன்றைய தினம் முடங்கியிருக்கிற நிலையில் மத்திய அரசு தலையிடுமோ, தலையிடுமோ தலையிடாதோ, என்ன செய்யுமோ என்றெல்லாம் மத்திய அரசுக்கு எதிராக பலர் பிரச்சாரம் செய்தார்கள். ஒரு நல்ல தொழிற்சாலை மூடப்படுவது குறித்து, தொழிலாளர் உணர்வுகளைத் தூண்டிவிட்டு பிரச்சாரம் செய்தார்கள். மத்திய அரசின் திறமையால், நல்ல நடவடிக்கையால், தமிழகத்து மக்கள்பால் மத்திய அரசு கொண்டிருக்கிற நல்ல எண்ணத்தினால் இந்தப் பிரசினைக்குத் தீர்வு கண்டிருக்கிறார்கள். விரைவிலே திறக்கவிருக்கும் அந்த ஆலையின், நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களின் பிடிவாதத்தால் அந்த ஆலை இப்போது திறக்காமல் கொஞ்ச காலம் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரையில், தொழிலாளர் நல அமைச்சரைப் பொறுத்தவரையில், மத்திய அரசு அதைத் திறக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதால், அவர்களே தான் திறக்க வேண்டு மென்கிற நிலையில் இல்லாமல் மாநில அரசிடத்திலிருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி மானேஜ்மெண்ட்டை நிர்பந்தப்படுத்தியாவது விரைவிலே பி & சி மில்லைத் திறப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். பொதுவாக தொழிலாளர் நலத் துறை தொழிலாளர்களிடையே ஒரு நல்ல சுமுகமான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது என்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்து அமைகிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு பற்றிப், பேசும்போது, குறிப்பாக இன்றைய தொழிலாளர்களுடைய நிலைமைகளை நான் இந்த அவைக்குத் தெரிவிப்பதன் மூலமாக சர்க்கார் நாங்கள் சொல்வதை செவி மடுத்து, கேட்டு அதன் வாயிலாக தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பையும், ஆரோக்கியமான வாழ்வையும் அளிக்க வழிவகை செய்ய வேண்டுமென்று நான் முதற்கண் கேட்டுக்கொண்டு பேச முற்படுகிறேன். இந்த அவையிலே ஏறக்குறைய ஓராண்டு காலமாக நான் பங்கேற்றிருக்கிறேன் என்கிற ஒன்றை நான் தருகிறேன். ஆனால் நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் நான் எப்போது வந்து அமர்ந்தாலும் வந்திருக் கிறாரா என்கிற சந்தேகத்தில், அவர் வந்திருக்கிறாரா என்று நான்





பார்ப்பதுண்டு. இந்தச் சந்தர்ப்பத்திலாவது நாங்கள் சொல்வதையெல்லாம் சற்று கவனமாகக் கேட்டு அவற்றையெல்லாம் நிறைவேற்ற வேண்டும்.

முதலிலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குமாரபாளையத்திலே இருக்கின்ற சுப்பிரமணியம் யூனிட் என்கிற தொழில் நிறுவனம் பற்றிச் சொல்கிறேன். அதன் நிர்வாகி அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு நன்மைகள் செய்வதை விட தன்னை இந்த அரசு ஒன்றும் செய்துவிட முடியாது என்கிற உணர்வோடு 18 ஆயிரம் தொழிலாளர்களைப் பழி வாங்கிக் கொண்டிருக்கிறார். அதிலும் முறைப்படி பார்த்தால், 18 ஆயிரம் தொழிலாளர்கள் இருப்பார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும் போது, இன்னொரு உறுப்பினர் நாதஸ்வரம் வாசிப்பது போல் பேசிக் கொண்டிருப்பது முறைதானா?

திரு. சே. ஆறுமுகம்: துணைத் தலைவரவர்களே, நான் நாதஸ்வரம் வாசிப்பதுமாதிரி ஏதாவது பேசிக்கொண்டிருந்தால், அது தங்களுக்குத் தெரிந்திருக்கும். நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போது, நீங்கள் பார்க்காத ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது முறைதானா?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நாதஸ்வரம் வாசிப்பது கேட்க நன்றாக இருக்கும். (சிரிப்பு)

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவருக்குத் தெரியாமலே அவையில் நடக்கின்ற ஒன்றை தலைவரின் கவனத்திற்கு ஓர் உறுப்பினர் கொண்டு வருவதில் ஒன்றும் குற்றமில்லை.

(பிற்பகல் 1.00)

திரு. ஆர். டி. சீத்தாபதி: தொழிலாளிகளுக்கு அவர் தரவேண்டிய உரிமை களைக்கூட மறுத்திருக்கிறார். ஏழு பேர்கள் பணியாற்றினார்கள். அவர் களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கு எஸ்.எஸ்.எம். சுப்ரமணியம் யார் என்று தெரிவிப்பது நலம் என்று கருதுகிறேன். இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராக இருந்தபோது, அவர் 7, 8 லட்சம் ரூபாயை வாங்கிக்கொண்டு ரூ. 1 லட்சத்தைத்தான் காட்டு கிறார். அவர் இன்கம்டாக்ஸ் சரியாகக் கட்டுவதில்லை, ஆகவே, அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதியவர். அதை

கலைஞர் அவர்கள்கூட கண்டித்திருக்கிறார். இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு 'அவர் வேண்டுமா? நான் வேண்டுமா?' என்றெல்லாம் வாதாடியதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படிப்பட்ட மனிதர்தான் எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் என்பவர். அவர் எந்த அளவுக்குத் தீமைகள் செய்கிறார் என்று சுட்டிக்காட்டத்தான் இவைகளைச் சொல்கிறேன். அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்கரன்கோவிலிலே இருக்கும் நெசவாளர்கள் தங்களுக்கு ஊதிய உயர்வு வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாஸ்டர் வீவர்கள் போராடுகிறார்கள். கலெக்டர் அவர்கள் இதில் பரிகாரம் காண வேண்டுமென்று சொல்லியும் இதுவரையில் பரிகாரம் காணப்படாமல் இருக்கிறது. அதிலே அரசியல் குறுக்கீடுகள் இருக்கின்றன. யாரோ அரசியல்வாதிகள் என்றுகூட அல்ல, ஆளும் கட்சியினரின் குறுக்கீடு இருக்கிறது. போலீஸுக்கும், கலெக்டருக்கும் உத்தரவுகள் வழங்கியிருக்கிறார்கள். அங்கே ரூ. 30 லட்சத்திற்கும் மேற்பட்ட பொருட்கள் சேதமடைந்திருக்கின்றன. இருந்தாலும் நடவடிக்கைகள் எடுக்கவிடாமல் ஆளும் கட்சி உறுப்பினர்கள் தலையிடுகிறார்கள். அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு நல்ல காரியம் செய்ய வேண்டும்.

சென்ற ஆண்டு தொழிலாளர்களுக்கான கொள்கைக் குறிப்பில், தொழிலாளர்களுக்கு ஓய்வு இல்லங்கள் கட்டுவதற்காக ரூ. 8.11 லட்சம் ஒதுக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கொள்கைக் குறிப்பிலே அதுபற்றி ஒன்றும் இல்லை. இந்த நேரத்தில் அரசு அதுபற்றி அவர்களுக்குச் சொல்ல வேண்டும். ஆனால் அறிவிப்புதான் இருக்கிறது. தொழிலாளர்களுடைய குடும்பங்கள் எல்லாம் இந்த இல்லங்களிலே தங்கும் என்று இருக்கிறது. இப்படி ஓர் 'அறிவிப்பு' சர்க்காராகவே இந்த அரசு இருக்கிறது. அந்த நிலையை மாற்றி, தொழிலாளர்களுடைய நலனைக் காக்க வேண்டும்.

சென்ற ஆண்டு, 1980-81-லே, கலைஞர் கருணாநிதி நகரிலே இருக்கும் தொழிலாளர் நல மருத்துவமனையில் இருக்கும் 266 படுக்கைகளின் எண்ணிக்கையை, 600 ஆக ஆக்குவோம் என்று அறிவித்தார்கள். இந்த ஆண்டு அது 400 ஆக ஆக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு தொழிலாளர்களை ஏமாற்றுகிற அரசு. கலைஞர் கருணாநிதி நகரில் இருப்பதாலேயே அந்த மருத்துவமனையின் படுக்கை வசதியை அதிகப்





படுத்தவில்லை என்றால், வேண்டுமானால் அந்தப் பெயரையேகூட மாற்றுங்கள். அந்தப் பெயர் இருப்பதால் அந்த மருத்துவமனையில் செய்து கொடுக்கப்படும் வசதிகளைக் குறைக்க வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், அங்கே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நிறைய குறைபாடுகள் இருக்கின்றன. அங்கே இருக்கும் பேருந்துகளின் எண்ணிக்கை 885. அதிலே பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2,830. இவ்வளவு பெரிய போக்குவரத்துக் கழகத்தில் அவர்களுக்கு மருத்துவ வசதி சரியாக இல்லை. அங்கே ஒரு அதிகாரி இருக்கிறார். அவர் சம்பளம் மட்டும் வாங்கிக்கொண்டிருக்கிறார். உடனடியாக மருத்துவம் செய்ய தேவைப்படும் 'மருத்துவ பாக்ஸ்' இல்லை. மேலும் அங்கே பணியாற்றும் தொழிலாளர்கள் தங்குவதற்குரிய வசதியும் இல்லை. தொழிலாளர்கள் படுக்க வேண்டும் என்றால், அவர்கள் பிளாட்பாரத்திலே தான் படுக்க வேண்டும். இன்றைய தினம் போக்குவரத்திலே பேருந்துகளின் நிலையைப் பார்த்தால், டீக்கடைக்கு உள்ளே டீ குடித்துக்கொண்டிருந்தாலே ரோட்டிலே போகின்ற போக்குவரத்து வண்டிகள் அந்த டீக்கடைக்கு உள்ளே புகுந்து அங்கிருப்பவர்களைப் பதம் பார்த்துக்கொண்டு போகின்றது என்றால், ரோட்டிலே படுக்கும் தொழிலாளர்களின் நிலை எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, அவர்களுக்குத் தங்கும் இடமும், மருத்துவ வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களிலே பணிபுரிபவர்களுக்கு டி.பி. போன்ற பெரிய நோய்கள் வந்தால், அவர்களைக் கடுமையான வேலையிலிருந்து 'லைட்' வேலைக்கு மாற்றுவார்கள். அப்படி பாதிக்கப்பட்ட ஒருவர் தனக்கு லீவு வேண்டும் என்று கேட்டால், அவரது கோரிக்கை மறுக்கப்பட்டது. அவர் அங்கேயே பிணமானார். அவருடைய பெயர் அன்வர் பாட்சா. இந்தப் பிரச்சினையில் கேளாகாதினராக இல்லாமல், சீத்தாபதி கேட்கிறேன் என்று பார்க்காமல், தொழிலாளர் நலனுக்காகப் பணியாற்ற வேண்டும் என்ற உணர்வோடு அமைச்சரவை செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவருடைய எண் 3826. அவர் விடுமுறை கேட்டு அது மறுக்கப்பட்டதால், அவர் உயிரிழந்தார். உடனே அங்கே இருக்கிற அதிகாரிகள் ஒரு வண்டியைக் கொடுத்து, மாலையைப் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். இது எப்படி நியாயம்? இந்த பேரவையில் இதைப்

பேசுவதன் மூலமாக மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சிந்தித்து இதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: துணைத் தலைவர் வாயிலாகச் சிந்திக்கச் சொல்லலாமே தவிர, துணைத் தலைவரையே சிந்திக்கச் சொல்லக்கூடாது.

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, எந்தப் போராட்டம் வந்தாலும் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்துகள்தான் தாக்கப்படுகின்றன. ஊழியர்கள் தாக்கப்படுகிறார்கள். காவல் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள், அவர்கள் போலீசாக இருந்தாலும், எஸ்.பி.யாக இருந்தாலும், டி.ஐ.ஜி.யாக இருந்தாலும், அவர்களுக்கு அடிபட்டுவிட்டால் பதவி உயர்வு, பணம் கொடுக்கிறார்கள். அதே நேரத்திலே போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலே பணிபுரியும் ஊழியர்கள் காயமடைந்தால், . . .பதவி உயர்வு என்றுகூட அல்ல, ஏனென்றால் பஸ் ஓட்டுகிறவன் திடீரென்று விமானமா ஓட்ட முடியும்—ஒரு மதிப்பும் மரியாதையும் கூட காட்டப்படுவதில்லை. இப்படிப்பட்ட காரியங்களைப் பார்த்து, இந்த சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னிடம் இருக்கும் புள்ளிவிவரங்களை வைத்துப் பேசினால் பேசிக்கொண்டே போகலாம். ஆனால் நேரம் இல்லை. தொழிலாளர் நலத் துறையைப்பற்றி விமர்சிக்க வேண்டும் என்றால், ரொம்ப நேரம் ஆகும். ஏதோ அமைச்சரவையிலே இருக்கிறோம், வந்துவிட்டுப் போகிறோம் என்றில்லாமல், காரியங்கள் ஆற்ற வேண்டும். இன்னும் சொல்லப் போனால் அந்த அமைச்சர் அவர்களால்தான் பிரச்சினைகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன என்று நினைக்கிறேன். உதாரணத்திற்குச் சொன்னால் . . . (மணியடிக்கப்பட்டது) மாண்புமிகு துணைத் தலைவர் சீக்கிரம் முடிக்க வேண்டும் என்று சொல்கிறார். நான் சுருக்கமாகச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கெங்கேயோ செல்கிறார்கள். ஆனால் [illegible] சென்றுவிட்டு . . .

மாண்புமிகு திரு. என். இராகவானந்தம்: எங்கெங்கேயோ செல்கிறார் [illegible] சொன்னால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: எங்கெங்கே என்று விளக்க [illegible] சொன்னால் நல்லது என்று கருதுகிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: அவருடைய மனச்சாட்சிக்கு விட்டுவிடுவது நல்லது என்று கருதுகிறேன். இந்தக் கொள்கைக் குறிப்பிலே,



பி. & சி. மில் பிரச்சினை மிகவும் முக்கியமானது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று வந்தார்கள். ஆனால் வேறுபல பிரச்சினைகளைப்பற்றிப் பேசிவிட்டு வந்தாரே தவிர, இந்தப் பிரச்சினை பற்றிப் பேசவில்லை. இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமானது. ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.10)

ஒரு காலத்தில் இங்கே தொழிலாளர் நலத் துறை அமைச்சராக வீற்றிருப்பவரும் நாங்களும் இணைந்து இருந்தபோது அவருக்கு நாங்களெல்லாம் மாலை போட்டு, பி. & சி. மில்லுக்காக அவர் பாடுபட்ட உணர்வை நான் நினைவு கூர்வது நல்லது என்று நினைக்கிறேன். அப்போது அவர்மீது மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் எத்தகைய எண்ணத்தைக் கொண்டிருந்தார்கள் என்பதும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அப்போது தொழிலாளர்களுக்காக உழைப்போம் என்று சொன்ன அவரே இன்றையதினம் தொழிலாளர் நலத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார். அந்த அண்ணாவின் தம்பி இன்றையதினம் அந்தத் தொழிலாளர்களின் நன்மைக்காக முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறாரா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தொழிலாளர்களின் வியர்வையில் சிலர் பணக்காரர்களாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். உழைக்கின்றவனோ தன் தங்கைக்குத் தாலிகூட வாங்க முடியாத நிலையில் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறான். உழைக்கிற வர்க்கம் பொருளாதாரத் துறையில் சீரழிந்து கொண்டே போகிறது. இதை உடனடியாகத் தீர்க்கவில்லை என்றால் நிலைமை மோசமாகிவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உழைக்கும் தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்தால் என்ன ஆகும் என்பது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியாததல்ல. எனவே பசி வந்துவிட்டால் தொழிலாளி என்ன செய்வான் என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியாததல்ல. தொழிலாளர்கள் பொங்கி எழுந்த காரணத்தாலே வீழ்ந்துபட்ட நாடுகளைப்பற்றி வரலாற்றில் நாம் நிறைய அறிந்திருக்கிறோம். எனவே தொழிலாளர்களின் நலனைக் காக்க நல்ல காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று சொல்லி, பி. & சி. மில்லை விரைவில் திறப்பதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பு தந்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

***மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலக் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பல்வேறு கருத்துக்களையும் தெரிவித்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் பேசும்போது குழந்தைகள் நலன்பற்றிக் குறிப்பிட்டார்கள். தொழிலாளர்களுடைய நலனைக் காக்கவும், தகுந்த ஆலோசனைகளைக் கூறவும் மாநில அளவில் ஒரு ஆலோசனைக் குழு அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் நிறைய குழந்தைகள் வேலையில் அமர்த்தப்படுகின்றனர். இதன் காரணமாக அந்தப் பகுதிக்கு மட்டும் தனியாக ஒரு ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் சட்டப் பேரவை உறுப்பினர்களும், தொழில் அதிபர்களின் பிரதிநிதிகளும், சமூக சேவை புரிபவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thirumathi TARA CHERIAN: I want to know what they have done. Have they been able to stop children from working? They are used as domestic servants and even an eight-year old girl is asked to work and is not even given proper food. What are the measures taken for implementation of the policy of the Government?

***மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப்பற்றி மட்டும் தான் நான் இங்கே குறிப்பிட்டேன். அதில் ஏதேனும் குறைபாடு இருக்கிறது என்றாலோ அல்லது தொடர்ந்து தவறு நடக்கிறது என்றாலோ அதுபற்றி தனியாகக் கேள்வி கேட்டால் நான் அனைத்து விவரங்களையும் சேகரித்து பதில் சொல்வதற்கோ அல்லது தகவல் தருவதற்கோ வாய்ப்பாக இருக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, தற்போது மாநில அளவில் ஒரு ஆலோசனைக் குழுவும் அதிகமான அளவில் குழந்தைகள் வேலைக்கு வைத்துக் கொள்ளப்படும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு என்று ஒரு ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் குழந்தைகளின் நலனைப் பாதுகாக்கவும் . . . .



Thirumathi TARA CHERIAN: In the meantime, before anything is done by the Government to bring in any compulsory measure, I wish to make one appeal that until such time, the Government may consider the starting of some shelter to look after the children who have no home, and who are loitering in the streets and who are exploited by the vicious people. Cannot they be given some shelter with subsidies and also given non-formal education including vocational training?

***மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் பணியாற்றும் சிறு குழந்தைகளாக இருக்கும் தொழிலாளர்களுக்கும் படிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளிலேயே அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வசதி செய்ய வேண்டுமென்பது குறிக்கோள். இதைப்பற்றி அகில இந்திய ரீதியில் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். நமது இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கூட கலந்து கொண்ட கூட்டத்தில் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் மனதில் கொண்டு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அன்-ஆர்கனைஸ்டு லேபர் என்று ஒரு அமைப்பின்கீழ் வராத தொழிலாளர்களைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதற்காகவும் இந்த அரசு ஒரு திட்டத்தைக் கொண்டு வர இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே வேலைக்கு ஒரே விதமான கூலி கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். "ஈக்வல் ரெம்யூனரேஷன் ஃபார் ஈக்வல் வொர்க்" என்பதற்கான ஒரு சட்டம் மத்திய அரசாங்கத்தால் இயற்றப்பட்டிருக்கிறது. அவ்வாறு ஒரே விதமான பணிக்கு ஆண் பெண் இருவருக்கும் ஒரேவிதமான ஊதியம் வழங்கப்படவேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. எங்காவது அப்படியில்லாமல் இருக்கிறது என்பது குறித்து அரசியல் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்தால் அதுபற்றி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிரியர்களைப்பற்றியும் இங்கே கருத்துத் தெரிவித்தார்கள். Bangalore Water Supply and Sewerage Board V. Rajappa. என்ற வழக்கில் மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள், ரிசர்ச் இன்ஸ்டிடியூட் ஆகிய

இம்மூன்றையும் இண்டஸ்ட்ரீஸ் என்ற வகையில் ஒன்றாக்கித் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் பள்ளியாசிரியர்களும் தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் வருகிறார்கள். ஆனால் மத்திய மாநில தொழிலாளர் நல அமைச்சர்கள் அனைவரும் ஒன்றுகூடி சுப்ரீம் கோர்ட் அளித்த இந்தத் தீர்ப்பின் அடிப்படையில், இந்த மூன்று தொழிலிலும் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தனிப் பாதுகாப்பு அளிக்க ஒரு சட்டம் கொண்டு வரலாமா என்று யோசித்தோம். விரைவில் மத்திய அரசின் சார்பில் அத்தகைய சட்டம் ஒன்று கொண்டு வரப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசையும் இந்த மாநில அரசையும் பொறுத்தவரையில் ஒன்றோடொன்று போட்டியிட்டுக்கொண்டு தொழிலாளர்களுக்காக நல்ல சட்டங்களைக் கொண்டு வருவதில் ஈடுபட்டிருக்கின்றன என்பது, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தெரிவித்த கருத்திலிருந்து புரிந்திருக்கும். எனவேதான் மிக முக்கியமான கட்டிடத் தொழிலாளர்கள் குறித்தும் மத்திய அரசு விரைவில் ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வர இருக்கிறது. அதற்கு மாநில அரசும் தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நேற்றைக்குக்கூட மத்திய தொழிலாளர் அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களின் நலனுக்காக மேலும் ஒரு சட்டம் கொண்டு வரப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இப்படி மாநில அரசும் மத்திய அரசும் ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டு தொழிலாளர்களுக்கு நல்ல சட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

திரு. சொ. ஆறுமுகம் : மத்திய அரசும் மாநில அரசும் தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை கொண்டு பல்வேறு பாதுகாப்பான சட்டங்களைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானால் சட்டங்களின் அடிப்படையிலேயே பல தொழில் அதிபர்கள் தொழிலாளர்களுக்கு உரிய உரிமைகளை வழங்க மறுக்கிறார்கள் என்ற புகார் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறதே. இதற்கு என்ன காரணம்?

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அந்த வகையில் ஒப்பந்தத்தை மீறிய தொழில் அதிபர்கள் மீது எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்ற தகவலைக்கூட கொடுத்திருக்கிறோம். எங்காவது எந்த முதலாளியாவது இப்படித் தவறு செய்கிறார் என்றால் அரசு நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. என்னுடைய பேச்சை முழுவதும் கேட்டுவிட்டு பிறகு கேள்வி கேட்டால் நன்றாக இருக்கும்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசும்போது இந்த அரசு வேலைநிறுத்தங்களை நீடித்துக்கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார். தமிழகத்தில் ஏறத்தாழ 6 லட்சத்திற்கு மேற்பட்ட ஆர்கனைஸ்டு லேபர் கொண்ட தொழிற் சங்கங்கள் இருக்கும்போது எங்காவது ஒரு இடத்தில் வேலை நிறுத்தம் நடந்து கொண்டுதான் இருக்கும். வேலை நிறுத்தமே இல்லை என்று சொல்ல முடியாது. போலண்டில் கூட வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமை வேண்டும் என்று போராடிப் பெற்றார்கள். இப்போது தடை செய்திருக்கிறார்கள்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் வேலை நிறுத்தத்திற்கான உரிமையைக் கொடுக்கிறது. வேலை நிறுத்தத்தை நிறுத்துவது என்பது அரசின் கையில் இல்லை என்பதை மட்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தொழிலாளர்கள் ஒரு கோரிக்கையை வைத்துப் போராட்டம் நடத்துகிறார்கள் என்றால், முதலாளி என்னால் இவ்வளவுதான் செய்ய முடியும் என்று சொல்கிறார். அரசின் சார்பில் நாங்கள் இருவரையும் அழைத்து சமரசம் செய்கிறோம். இந்தச் சமரசத்தை யாராவது ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொன்னால் வேலை நிறுத்தம் ஏற்படத்தான் செய்யும். அதை அரசாங்கத்தால் தடுக்க முடியாது.

ஆனால் ஒன்றை மட்டும் அரசு செய்யலாம். அதாவது வேலை நிறுத்தத்தைத் தடை செய்து விட்டு கோரிக்கைகளை வழக்கு மன்றத்திற்கு அனுப்பி வைக்கலாம். ஆனால் புரட்சித் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு எந்த வேலை நிறுத்தத்தையும் இந்த அரசு தடை செய்யவில்லை. ஆனால் திரு. ஆர். டி. சீத்தாபதியின் தகவலுக்கு ஒன்றை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் 20 முறை, நடந்து கொண்டிருந்த வேலை நிறுத்தத்தைத் தடை செய்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அப்படித் தடை செய்வதில்லை என்ற கொள்கையை

(பிற்பகல் 1-20)

வைத்திருக்கிறார்கள். எல்லாத் தொழிற் சங்கத் தலைவர்களும் வேலை நிறுத்தத்தை 'பேன்' செய்து, அந்த 'இசுவை' 'ரெஃபர்' செய்து விடுங்கள் என்று சொன்னால், அதைச் செய்வதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது. அவர்கள் வந்து சொன்னால், எங்களைப் பொறுத்தவரையில், அனுப்பத் தயாராக இருக்கிறோம். தலைவர்கள் சொல்வார்கள். "நாங்கள் அதிகமான கோரிக்கைகளை வைத்திருக்கிறோம். வேறு சில கோரிக்கைகளையும் வைத்திருக்கிறோம்" என்று. இது பேச்சுவார்த்தைகளின் மூலமாக வெற்றி பெற முடியும். இந்த வேலை நிறுத்தம் நீடிக்குமானால், ஒரு வாரம் கொடுத்தால், நாங்கள் நல்ல

வெற்றி பெற முடியும் என்று சொல்கிறார்கள். நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட வேண்டாம் என்று அவர்களே வந்து கேட்டுக்கொள்வார்கள். இதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நடத்துகொண்டிருக்கின்ற வேலை நிறுத்தத்தை 'ரெஃபரன்ஸ்' செய்துவிட்டு 'பேன்' (ban) பண்ணி விடலாம். அதற்குச் சட்டத்திலே இடம் இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகத்திலே வேலைநிறுத்தம் கொல்லூஷனோடு (Collusion) நடைபெற்று வருகின்றது என்று சொல்கிறார். அதுதான் உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அப்படிச் சொல்லவில்லை. அப்படிப் பட்ட நிலைமை உருவாகியிருக்கின்றது. தொழிலாளர்கள் தலைவர்கள் வரும்போது 'வழக்கு மன்றத்திற்கு இப்போது அனுப்பிவிடாதீர்கள்' என்று சொல்கிறார்கள். இந்த வேலை நிறுத்தம் நீடித்தால், முதலாளிகள் இறங்கு வார்கள் என்று சொல்கிறார்கள். அதனால்தான் கொள்கை அளவிலே ஸ்ட்ரைக்-ஐ 'பேன்' செய்வதில்லை என்ற முடிவெடுத்திருக்கிறோம். வேலை நிறுத்தம் எதையுமே 'பேன்' செய்வதில்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வேலை நிறுத்தங்களை நிறுத்திக்கொள் வது என்பது தொழிற் சங்கத் தலைவர்கள் கையிலே, முதலாளிகள் கையிலே தான் இருக்கிறது. இதை ஏன் சொல்கின்றேன்? பப்ளிக் செக்டார் அண்டர்டேகிங்ஸ், பொதுத் துறை நிறுவனத்திலே 77 நாட்கள் வேலை நிறுத்தம் நடந்தது. பெங்களூரில் நடந்தது. அரசு ஆலோசனை சொன்னது. கடைசி யாக தொழிலாளர்கள் தலைவர்கள் ஒரு கூட்டம் போட்டார்கள். "அந்த வேலை நிறுத்தம் நம்முடைய சக்தியை விரயம் ஆக்குவதாக இருக்கிறது. எனவே வேலை நிறுத்தத்தைப் பின் வாங்கிக்கொண்டு பிறகு பேச்சு வார்த்தை கள் நடத்தலாம்" என்று முடிவெடுத்தார்கள். அப்படிச் செய்தார்கள். அதற்குப் பிறகு 'அட்வான்ஸ்' கொஞ்சம் அதிகமாக வாங்கினார்கள். ஆனால் கோரிக்கைகள் வேறு எதுவும் அவர்களுக்கு நிறைவேறவில்லை. 77 நாட்கள் வேலை நிறுத்தம் என்று ஆகிவிட்டால், அதை இன்னும் தொடர்ந்து செய்தால் அது தொழிலாளர்கள் நலனுக்கு நல்லதல்ல. ஒரு வருடம், எட்டு மாதம் என்று ஒரு வேலை நிறுத்தம் செய்து விடுவார்களானால், அடுத்து 2, 3 ஆண்டுகளுக்கு அவர்களுக்கு வேலை செய்ய 'எனர்ஜி' இருக்காது. எனர்ஜியை 'கன்சேர்வ்' பண்ணுவதற்கு, அவர்கள் வேலை நிறுத்தம் 80 நாட்களுக்கு மேல் செய்தால், வாய்ப்பு இருக்காது. சைக்கிளில் ஏறி ஓட்டத் தெரிந்தவனுக்கு இறங்கவும் தெரிய வேண்டும். அப்படித் தெரியாதவனை ஏற்றி ஓட்டிவிட்டால், அவன்



திடீரென்று விழுகின்ற நிலைமைதான் ஏற்படும். அப்படி விழுபவர்களாக இருந் தால், நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. நானேகூட இதுமாதிரி பல போராட் டங்கள் நடத்தியிருக்கிறேன். அதற்கு என்று ஒரு ஸ்டேஜ் வரும். வாதாடிக் கிடைக்காமல் கூட இருக்கும். அப்படி இருக்கும்போதும் ஸ்ட்ரைக்கை நிறுத்த வேண்டியிருக்கும். It will be unwise to prolong. In stages withdrawals will be there. அதுவும் ஒரு தந்திரம்தான். பிறகு எனர்ஜியை 'மொபிலைஸ்' செய்து கொள்ள வேண்டும். எனர்ஜியை 'கன்சர்வ்' செய்துகொள்ள வேண்டும். அதுவும் ஒரு தந்திரம்தான். பிறகு எனர்ஜியை 'மொபிலைஸ்' செய்து கொள்ள வேண்டும். எனர்ஜியை 'கன்சர்வ்' செய்துகொள்ள வேண்டும். அப்படி "மொபிலைஸ்" பண்ணிக்கொள்ளச் சொல்வதற்குக் காரணம், 'ஒரு இரண்டு ஆண்டுகள் கழித்து திரும்பவும் போராடப் போகிறோம். ஒரே காலத்தில் தொடர்ந்து 10 மாதம் போராடிவிட்டால், 10 வருட காலம் நம்மால் எழுந்திருக்க முடியாத நிலைமைகள் ஏற்பட்டு விடும். அது சிறந்த போராட்ட முறை அல்ல' என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதிலே நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். "அரசு ஒரு ஸ்ட்ரைக்-ஐ "பேன்" செய்து மறுபடியும் அந்த இஸ்யூவை ரெஃபர் செய்து விடுகிறது. அவர்களில் சிலர் பலன் பெறவில்லை. அப்படி சிலர் இருக்கி றார்கள் என்றால், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துவிட முடியுமா?" மீதி உள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதால்தான் ஸ்ட்ரைக்-ஐ 'பேன்' செய்து அந்த இஸ்யூவை 'ரெஃபர்' செய்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், இந்தச் சிறந்த கொள்கையை வைத்திருக்கின் றார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய நம் அருமை சகோதரர் திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்களுக்கு எதிரும் புதிருமாகப் பேசவேண்டிய நிலைதான் இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதனாலேதான் அப்படிப் பேசினார்கள். எஸ். எஸ். எம். யூனிட்டைப் பற்றி அவர்களுக்குத் தெரியும், மற்றவர்களைப் பற்றியும் மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்களுக்கு நன்கு தெரியும் என்று சொன்னார்கள். அதைவிட எனக்கும் அதிகமாகத் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். காரணம் என் வயதுதான் காரணம். நான் சுய மரியாதை இயக்கம் இருந்த காலத்திலிருந்து இருக்கிறேன். அவர்கள் அநேகமாக திராவிட முன்னேற்றக் கழகம் வந்த காலத்திலிருந்து இருக்கலாம்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: திராவிட முன்னேற்ற இயக்கக் காலத்தில்தான்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் சுய மரியாதை இயக்கக் காலத்திலே இருந்து இருக்கிறேன். முதலில் திராவிட இயக்கம், பிறகு திராவிட

முன்னேற்றக் கழகம், பிறகு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். இடையிலே மோதலின் காரணமாக காங்கிரஸில் இருந்திருக்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குப் பின்னாலே என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். அந்த ஆர்டர் தான் மாண்புமிகு அங்கத்தினர் திரு. பியாகான் அவர்கள் இதற்கு அடுத்தது எந்த இடம் என்று கேட்கிறார்கள்.

இதற்குப் பிறகு சுடுகாடுதான். இதைத்தான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள வேண்டும். இன்றையதினம் பிற்பகல் 3½ மணிக்கு எஸ். எஸ். எம். தொழிலாளர்கள் பற்றிய பிரச்சினைகளுக்காக நானே அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன். 'மினிஸ்ட்டிரியல் இன்டர்பியரன்ஸ்' என்பது, அதாவது மந்திரிகளே தலையிடுவது என்பதல்ல. ஆங்காங்கு லேபர் ஆபீசர்கள் பேசுகிறார்கள். பிறகு ஏ. சி. எல். பேசுகிறார்கள்; பிறகு டீ. சி. எல். பேசுகிறார்கள்; பிறகு ஜாயின்ட் கமிஷனர் பேசுகிறார்கள். அதற்குப் பிறகு லேபர் கமிஷனர் பேசுகிறார்கள். அதற்குப் பிறகு அந்த அதிகாரிகளின் உதவியுடன், அந்தக் குறிப்புகளையெல்லாம் வைத்துத்தான் நானும் பேசி அவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். I am not the repository of all knowledge. எல்லாம் தெரிந்த அறிவுக் களஞ்சியம் என்று நான் நினைத்துக்கொள்வதில்லை. ஜாயின்ட் கமிஷனர். வேண்டுமென்றால் டீ.சி.எல். இவர்களையெல்லாம் அழைத்து வைத்துப் பேசி, அநேகமாக முடிக்க முயற்சி செய்வோம். அது போல இன்றையதினம் 3½ மணிக்குப் பேச ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். சங்கரன்கோயில் பற்றிக்கூட சொன்னார்கள். அவர்களின் தலைவர் அவர்களிடம் பேசியிருக்கிறேன். அங்கே சரியான முடிவுக்கு வர கலெக்டரிடம் பேசியிருக்கிறார்கள். அப்படி முடிவுக்கு வரவில்லை என்று சொன்னால், நானே அழைத்துப் பேசுகிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

சில தகவல்களை வைத்துக்கொண்டு, தான் ஒரு அரசியல் கட்சியிலும், ஆளுபவர்கள் வேறு கட்சியிலும் இருப்பது என்பதால் கருத்து வேறுபடுவது போல அங்கத்தினர் அவர்கள் பேசுகிறார்கள். ஏதாவது ஒரு கிரிட்டிசிசம் ஃபார் ஷேக் ஆஃப் கிரிட்டிசிசம்ஸ் criticism for the sake of criticisms என்பதுபோல பேசுவது என்பது நல்லதல்ல. இதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நான் எல்லா விவரங்களையும் சொல்லிவிட்டால்,





அங்கத்தினர் அவர்களுக்கு அதிகமாகப் பேசுகின்ற வேலை இருக்காது. நான் இப்போது உட்காரத் தயாராகத்தான் இருக்கிறேன். முதலில் விவரங்களையெல்லாம் நான் சொல்லிவிடுகிறேன். பிறகு அங்கத்தினர் அவர்கள் கேட்கலாம்.

**திரு. சோ. ஆறுமுகம் :** எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சொன்னது தொழிலாளர்கள் போராட்டங்கள் என்று வருகின்றபோது, அரசு சீக்கிரமாக அந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காணுவதில்லை என்ற கருத்தின் அடிப்படையில்தான். அவர்கள் அந்தப் பக்கம், இவர்கள் இந்தப் பக்கம் என்ற அளவில் குற்றம் சொல்லவில்லை. எஸ்.எஸ்.எம். சங்கரன்கோயில் பிரச்சினைகள் பற்றிச் சொன்னார்கள். அதிலே சில தொழிலாளர்கள் 2 மாத காலமாக பிரச்சினையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இப்போது நேரமாகிவிட்டது என்று சொல்கின்றார்கள். நேரத்தைப்பற்றி ஒன்றுமில்லை, நேரம் இருக்கிறது, அதைப்பற்றிப் பரவாயில்லை. இங்கே நாங்கள் கேட்டுக் கொள்வது, இன்றைக்காவது அந்தப் பிரச்சினையிலே ஒரு முடிவு காண வேண்டும். தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பைத் தேடித்தர வேண்டும் என்றுதான் நானும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அந்த நம்பிக்கையோடுதான் நானும் அவர்களை அழைத்திருக்கிறேன். நான் சொல்லவந்ததை நடுவிலேயே கட்டுப்படுத்திவிட்டார்கள். கே. கே. நகரில் உள்ள ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி பற்றிச் சொன்னார்கள். அது அவ்வளவு சரியல்ல என்பதற்காகச் சொல்ல வந்தேன். பட்ஜெட்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றார்கள். அங்கே 206 பெட்கள் என்று கூறியிருக்கிறார்கள். அதை 400 பெட்களாக உயர்த்தி, ஒரு ஸ்டேஜிலே அதை 500 பெட்களாக உயர்த்தப் போகிறோம். ஸ்டேஜ் பை ஸ்டேஜ் ஆக 500 பெட்களாக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறோம்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** தலைவர் அவர்கள் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். சென்ற ஆண்டு 500 என்று சொல்லிவிட்டு இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பிலே 400 என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகத்தான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** 500 பெட்கள் என்று உயர்த்துவதை உடனடியாகச் செய்ய முடியாது. ஒரு நாளிலேயே செய்துவிட முடியாது. அந்த அறிக்கையிலே இருந்த கருத்து, 500 பெட்கள் போடுவது என்பதிலே கருத்துவேறுபாடுகள் எதுவும் நமக்குக் கிடையாது. இன்றைக்கு 206 பெட்கள் என்று இருப்பதைத்தான் 400 பெட்கள் என்று ஆக்கி, பிறகு 500 ஆக ஆக்கு

கிறோம் என்றுதான் சொல்லியிருக்கிறோம். அதைத்தான் நான் இந்த நேரத்திலே அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** நான் சென்ற ஆண்டு கொள்கைக் குறிப்பிலேயே பார்த்தேன். 206 பெட்கள் என்றும் அதை 500 ஆக ஆக்க முயற்சிக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு 400 ஆக ஆக்க முயற்சிக்கிறோம் என்று சொல்கின்றார்கள். அதைத்தான் நான் இப்போது எடுத்துச் சொல்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்று நான் சொல்லவில்லை, எனக்குத்தான் சரியாக அவர்களுக்குப் புரிந்துகொள்ளும்படியாகச் சொல்லத் தெரியவில்லை என்று சொன்னேன். நான் அப்படித்தான் நினைக்கிறேன். அன்றைக்கு 500 என்று சொன்னது, அதிலே 400 படுக்கைகளை ஏற்படுத்திய பிறகு ஒரு ஸ்டேஜில் 500 என்று உயர்த்துவது என்று சொன்னேன். எப்படி காலையிலே மாஞ்செடி நட்டு, சாயந்திரத்திலேயே மாங்காய் அறுவடை செய்ய முடியும்? அதுபோல செய்ய முடியுமா? ஸ்டேஜிலே, ஸ்டேஜ் பை ஸ்டேஜ் என்று வைத்து 500 பெட்கள் கே. கே. நகரில் உள்ள எஸ். எஸ் எம் ஈ எஸ் ஐ ஆஸ்பத்திரியில் உயரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதைத்தான் அவருக்குச் சொல்கிறேன். அங்கத்தினர் அவர்கள் ஏதோ இன்னும் பேச நினைக்கிறார்கள். அவர்கள் கடைசியிலே என் பேச்சுக்குப் பிறகு பேசலாம்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** அமைச்சர் அவர்கள் எனக்குப் புரிந்துகொள்கின்ற சக்தியிருக்கிறதா இல்லையா என்பதுபோல சொல்கிறார். அதைப் பற்றிக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதைப்பற்றியெல்லாம் மேலும் விவாதம் செய்ய நேரமில்லை. அதற்கெல்லாம் விவாதம் வேண்டாம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** எனக்குத் தெரியவில்லை என்றுதான் சொன்னேன். அதையேதான் நான் சொல்கிறேன். அங்கத்தினர் அவர்கள் அவசரப்படுகிறார்கள். உறுப்பினரவர்களுக்கு அவர் புரிந்து கொள்ளும்படியாக சொல்ல என்னால் முடியவில்லையே என்றுதான் சொன்னேனே தவிர வேறல்ல. 20 வருடங்களுக்கு முன் பார்த்த அதே வீரம் இன்னும் அவரிடம் இருந்துகொண்டிருக்கிறது.

அடுத்து, மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் பேசும் போது, அதிகமான அதிகாரிகள் இருப்பது நல்லது என்று சொன்னார்கள்.



தொழிலாளர் நல அமைப்பில் மாறுதல்கள். தொழிலாளர்களுக்கு தொழிலாளர்கள் நலச் சட்டத்தில் நன்மைகள் அதிகரிக்க தொழிற்சாலைகளை எல்லாம் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தில் அரசு சமீபத்தில் தொழிற்சாலைகள் பிரிவில் அதிக அதிகாரிகள் நியமித்துள்ளது. கோவையில், இணை தலைமைத் துணை தொழிற்சாலைகள் ஆய்வாளர் நியமிக்கப்பட்டுள்ளார். கோவை, நீலகிரி, பெரியார், சேலம், தர்மபுரி மாவட்டங்களில் தொழிலாளர்கள் நலச் சட்டங்களைப் பொறுத்த வரையிலே,

(பிற்பகல் 1-30)

தலைமைத் தொழிற்சாலைகள் ஆய்வாளர் பணியை நிறைவேற்றுவார். இந்த மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களும், உரிமையாளர்களும் தங்கள் குறைகளையும் தேவைகளையும் துரிதமாக நிவர்த்தி செய்து கொள்ளலாம். இது தவிர, சென்னையிலும், ஈரோட்டிலும் இரண்டு துணைத் தலைமை தொழிற்சாலை ஆய்வாளர்களும், சென்னை, கோவை, திருச்செங்கோட்டில் மூன்று தொழிற்சாலை ஆய்வாளர்களும், சென்னை, கோவையில் இரண்டு உதவி தொழிற்சாலை ஆய்வாளர்களும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு ஏற்படும் விபத்துக்களைத் தடுப்பதற்கு பாதுகாப்பு விதிமுறைகளைக் கடைப்பிடிக்க ஆலோசனை வழங்கவும் மதுரையில் ஒரு பாதுகாப்பு மையம் நிறுவ அரசு முன்வந்துள்ளது. எந்தவித அமைப்புகளிலும் சேராத தொழிலாளர்களுக்குக்கூட இலவச மருத்துவப் பரிசோதனை, மருத்துவ வசதி செய்து தர வேண்டுமென்ற எண்ணத்தில் முதல் கட்டமாக மதுரையில் மருத்துவ பாதுகாப்புப் பிரிவு ஏற்படுத்த அரசு முன்வந்துள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் பேசும்போது 'ஹாலிடே ஹோம்ஸ்' பற்றிச் சொன்னார்கள். 7 லட்சம் என்றார்கள், ஒன்றுமே தெரியவில்லை என்று சொன்னார்கள்.

The construction of Holiday Home at Courtallam (Rs. 11.25 lakhs) and at Mamallapuram (Rs. 7.58 lakhs) have been taken up and will be completed before the end of December 1981.

இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் மாமல்லபுரத்திலும், குற்றாலத்திலும் ஓய்வு இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.

The Tamil Nadu Labour Welfare Board has also decided to construct holiday homes at Uthagamandalam, Kodaikanal, Valparai and Rameswaram.

அங்கேயும் நாம் ஓய்வு இல்லங்களைக் கட்டுவதாக இருக்கிறோம். land has been taken possession of at Uthagamandalam

உதகமண்டலத்தில் நிலத்தை வாங்கிவிட்டோம். Plans and estimates are awaited from the Public works Department. Land has been selected at Kodaikanal.

கொடைக்கானலில் செலக்ட் செய்து விட்டோம். (The Collecrors of Coimbatore and Ramanathapuram districts have been addressed for allotment of land at Valparai and Rameswaram). எதிர்பார்த்ததற்கு மேலே

அதிகமாக இந்த அரசு வேலை செய்திருக்கிறதென்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, 20-4-1981 அன்றுதான் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், பட்டு நூல் நெசவுத் தொழிலாளர்கள் என்று இரு கூறாகப் பிரித்து, ஒவ்வொருவருக்கும் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்க கமிட்டி அமைத்து, உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலாளர்களுக்கு சட்டம் எப்போது வருமென்று கேட்டார்கள். இங்கே இப்போது உட்கார்ந்திருந்தபோதுதான், கையெழுத்திட்டு, சட்ட மன்ற ஆய்விற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எழுதி அனுப்பிவிட்டேன். சட்டமன்றத்தில் என்றைய தினம் நிர்ணயிக்கிறார்களோ, அன்றைய தினம் அது ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும். இந்தத் தொடர்க் கூட்டத்திலேயே அதைப்பற்றி மேலவையில் விவாதிக்கிற வாய்ப்பு ஏற்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்போது அதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம், அப்போது பேசுங்கள்.

தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டால்—removal, dismissal, termination, retrenchment செய்யப்பட்டால், அவர்கள் 2 (ஏ) பெட்டிஷன் போட்டால்கூட, அரசாகப் பார்த்து தொழில் கோர்ட்டுக்கு அனுப்பலாமே தவிர, அவர்களாகப் போக முடியாது. அப்படி தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டால், நேரடியாகத் தொழில் கோர்ட்டுக்குப் போக அவர்களுக்கு உரிமை வேண்டும், என்று சொல்லி, அதற்காக சட்டம் கொண்டு வர மத்திய அரசு முயற்சி எடுத்திருக்கிறது. தமிழக அரசு அதை முந்திக் கொண்டு, இந்த தொடர்க் கூட்டத்திலேயே தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டால், நேரடியாக லேபர் கோர்ட்டுக்கு மனுச் செய்து, அவர்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதற்கு 'கன்சிலியேஷன்'. இது குறித்து மத்திய அரசு, மாநில அரசு—இதில் யார் முன்னால் கொண்டுவருவது என்பதில் தமிழக அரசு முந்திக்கொண்டு இருக்கிறது. கன்சிலியேஷன் ஆபிசர்ஸ், சமரச அதிகாரிகள் நோட்டீஸ் அனுப்பி, வர வேண்டுமென்றால், பல நேரங்களில் முதலாளிகள் வருவதில்லை. எனக்கே இதில் பெர்சனல் எக்ஸ்பீரியன்ஸ் இருக்கிறது. மைலாப்பூரில் லேபர் ஆபீஸ் இருந்தது. இன்றைய தினம் அந்தத் துறையினுடைய பெரிய அதிகாரிகள் எல்லாம், அப்போது நான் உள்ளே போனால், வெளியே உட்காருங்கள் என்று சொன்னவர்கள்தான். அவர்கள் இன்றைக்கு வளர்ந்து பெரிய அதிகாரிகளாக இருக்கிறார்கள். நான் வளர்ந்திருக்கிறேனோ, இல்லையோ; புரட்சித் தலைவரவர்களின் கருணையால் அமைச்சராகியிருக்கிறேன். நல்ல ரிலேஷன்ஷிப், உறவு முறை இருந்துகொண்டிருக்கிறது. 10½ மணிக்கு பேச்சு வார்த்தை என்று போட்டிருப்பார்கள். நாங்கள் போய் உட்கார்ந்திருப்போம். 12½ மணிக்குக் கூப்பிடுவார்கள். முதலாளி நாளை மறுநாள் வருகிறேன் என்று சொல்லுகிறார் என்று சொல்லுவார்கள். இரண்டு நாட்கள் கழித்துப் போவோம். லேபர் ஆபிசர் கூப்பிடுவார். மேனேஜர் ஊரில் இல்லை, அவரைக் கலந்து செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள், இன்னும் 3 நாட்கள் கழித்து வாருங்கள் என்று சொல்லுவார்கள். இப்படியே கடைசி வரை அவர்கள் வாரமல் இருந்துவிட்டால், அவர்களை வரவழைக்க சட்டத்தில் இடமில்லை. எனவே சம்மனிங் பவர் அவர்களுக்குக் கொடுப்பதற்காக இப்போது ஒரு சட்டத்தை இந்தத் தொடர்க் கூட்டத்திலேயே அறிமுகப்படுத்தலாமென்று முடிவு எடுத்திருக்கிறோம். அது குறித்தும் சட்டமன்றச் செயலாளருக்கு கடிதம் எழுதியுள்ளேன். அவர்கள் நிர்ணயிக்கும் தேதியில் அந்தச் சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் கூர்மையாக நடவடிக்கைகளைக் கவனித்து, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான சட்டங்களை மத்திய அரசு கொண்டுவருவதுபோல, மாநில அரசும் கொண்டு வருகிறதென்று பாராட்டினார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாகச் சொன்ன ஒருசில கருத்துக்களுக்குப் பதில் சொல்லவில்லை என்றாலும், குறித்து வைத்திருக்கிறேன். அவை குறித்து அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்குமென்று சொல்லி, அமைகிறேன்.

**திரு. செ. முத்துசாமி**: தலைவரவர்களே, சுப்ரீம் கோர்ட், ஆசிரியர்கள், ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் ஊழியர்கள் எல்லாம் 'தொழிலாளர்கள்' என்று தீர்ப்பளித்திருக்கிறது. எனவே அவர்களுக்கு எப்படி சட்டப்

பாதுகாப்பு கொடுக்கலாமென்று மைய அரசும், மாநில அரசும் யோசித்துக் கொண்டிருக்கிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒரு தீர்ப்பு வந்த பிறகு, தொழிலாளர்கள் தாற்காலிக வேலை நீக்கம் செய்யும்போது, குறிப்பிட்ட மாதங்களுக்கு 50 சதவிகிதம், அதற்குப் பின்னால் 75 சதவிகிதம், அதற்குப் பின்னால் முழு அளவு ஊதியம் கொடுக்க சட்டம் வந்திருக்கிறது. அந்தச் சட்டம் ஆசிரியர்களுக்கும் பொருந்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது சம்பந்தமாக நான் ஒரு கேள்வி போடுகிறேன், நீங்கள் பதில் கொடுங்கள் என்று உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே உறுப்பினரவர்களின் கேள்வி வரும்போது, அதற்கு தெளிவான பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் 12-5-1981 செவ்வாய்கிழமை காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-36)

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

256. Notification issued with G.O. Ms. No. 347, Revenue, dated the 7th February 1981 in regard to an amendment to the Tamil Nadu Money-lenders Rules, 1959. [Laid on the table of the House under section 22(3) of the Tamil Nadu Money-lenders Act, 1957 (Tamil Nadu Act XXVI of 1957). ]

257. Notification issued with G.O. Ms. No' 627, Agriculture, dated the 23rd March 1981 in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

258. Notification issued with G.O. Ms. 970, Rural Development and Local Administration, dated the 20th June 1980 making the Tamil Nadu Municipal Servants Conduct Rules, 1979. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920].



## B. Reports, Notifications and Other Papers.

* 146. Performance Budget on Tamil Nadu Port Department, 1981-82. (Tamil and English).

---

* Circulated to all M.L.Cs on 28th April 1981

இணைப்பு- I.

(356 ஆம் பக்கத்தில் குறுகியகால வினா எண் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

சேலம் மாவட்டம், ஆத்தூர் அருள்மிகு தர்மராஜா மற்றும் அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோவில், சேலம் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையாளரின் நிர்வாக எல்லையில் உள்ளது. இக்கோவிலுக்கு வட்டாரக் குழுவின் பரிந்துரையின்பேரில் 7-8-1980-ல் கீழ்க்கண்ட நபர்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் :—

1. திரு. எம். வெங்கடாசல நாயக்கர்
   த/பெ. மாராச்சி நாயக்கர்
2. திரு. ஆ. ராசாராம்,
   த/பெ. ஆறுமுக நாய்க்கர்
3. திரு. எம். மாரிமுத்து,
   த/பெ. மருதமுத்து நாயக்கர்

இந்த நியமன உத்திரவினை எதிர்த்து திருவாளர்கள் ஏ. ஜி. ராமு, ஏ. வெங்கடாசல நாயக்கர் மற்றும் எஸ். அருணாசல நாயக்கர் ஆகிய மூவரும் கோவை துணை ஆணையர் முன்பாக 1959 ஆம் வருடத்திய இந்து சமய அறநிலையச் சட்டப் பிரிவு 21-A-ன் கீழ் மாற்று மனு 10/81 தாக்கல் செய்து அந்த மனு 30-3-1981ல் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையரால் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த உத்திரவினை எதிர்த்து அரசிடம் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டு அது நிலுவையில் உள்ளது.

2. 5-4-1981 முதல் 5-5-1981 வரை நடக்கவிருக்கும் திருவிழாவினை ஆத்தூர் துளுவ வேளாளர் மன்றத்தினர் கட்டளைதாரராக இருந்து நடத்த அறங்காவலர்கள் அனுமதி வேண்டி ஆத்தூர் ஆய்வர் பரிந்துரை செய்தபடி சேலம் உதவி ஆணையர் 30-3-1981 அன்று அவ்வாறே செய்ய அறங்காவலர்களுக்கு அனுமதி அளித்தார். ஆத்தூர் நகர் திரு. எ. பி. கோவிந்தராஜ் செய்து கொண்ட மனுவின் மீது துளுவ வேளாளர் சமூக மக்களையும் சேர்த்துக் கொண்டு விழாவினை நடத்த வேண்டும் என்று அறங்காவலருக்கு அறிவுரை ஆணையரால் வழங்கப்பட்டது. யாரையும் ஒதுக்கி வைக்க வேண்டாமென்றும்

அறிவுறுத்தப்பட்டது. உதவி ஆணையருக்கு தொலைபேசி மூலமாக ஆணையரால் அறிவுரை கொடுக்கப்பட்டது. ஆலய நிர்வாகத்தில் திருவிழா நடக்கும் நாட்களில் குறுக்கிடு செய்யக்கூடாது என ஆலய அறங்காவலர்களால் திரு. பொன்னன் மூப்பர் மற்றும் ஏ. ஜி. ராமு (அறங்காவலர் நியமனத்தினை எதிர்த்து மனு செய்தவர்) ஆகிய இருவர் மீது தடை ( Injection ) பெறப்பட்டுள்ளது. திருவிழா 23-4-1981 வரை நல்ல முறையில் நடத்திட அறநிலையத்துறையினரால் • நியமனம் செய்யப்பட்டுள்ள அறங்காவலர் குழுவால் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு திருவிழா நல்ல முறையில் நடந்தேறியது.

3. எனினும், 23-4-1981 அன்று இரவு 8.00 மணியளவில் திரு. எஸ். பொன்னன் மூப்பர் மற்றும் ஏ. ஜி. ராமு மற்றும் இவர்களை சார்ந்தவர்கள் கரக நிகழ்ச்சியின் போது, தாங்கள் தான், கரகமாட வேண்டுமென்றும் குழப்பம் செய்தனர் என்றும் அறங்காவலர் திரு. ஏ. ஜி. ராஜாராம் புகார் கொடுத்து, 23 நபர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வருகிறது. தற்பொழுது ஆலய அறங்காவலர்களும் ஆத்தூர் அறநிலையத்துறை ஆய்வரும் திருவிழா நல்ல முறையில் அமைதியாக தொடர்ந்து நடத்திட அனைத்து ஏற்பாடுகளும் செய்து வருகின்றனர். திருவிழாவும் தற்சமயம் சுமுகமான சூழ்நிலையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## இணைப்பு II

[364 ஆம் பக்கத்தில் வினா எண் 276-க்கான அடிக்குறிப்பைக் காண்க]

## ANSWER

(b) Details of their grievances:

(i) Increase of stipend to Rs. 500 per mensem.

(ii) Early implementation of the Junior Doctor Scheme and absorption into the Government Service directly after one year.

(iii) Applications for selection by Tamil Nadu Public Service Commission should be called at least once in a year and conducted by the Medical pepole.

(iv) Provision of well furnished quarters for Compulsory Ratatory Resident Internts in all Medical College Hospitals in Tamil Nadu.



(v) Weekly one day off for each Compulsory Rotatory Resident Internee in addition to the leave he is entitled to take during each posting.

(vi) Immediate filling up of the present vacancies in the Government Hospitals of Tamil Nadu.

(vii) Increased percentage of seats for freshers.

(viii) Immediate cancellation of the fee for special trainee of Rs. 50 per mensem for the special trainees.

(ix) Re-introduction of October selection for Post-graduate courses (both Clinical and Non-clinical) and Diploma courses.

(x) to allot Post-graduate seats for Tamil Nadu Medical Graduates in the various National Medical Institutes.

(xi) Supply of food grains at concessional rate to all the compulsory Rotatory Resident Internee quarters.

## இணைப்பு

[383 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

சிதம்பரம் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம் 1952-ம் ஆண்டு கூட்டுறவு சட்டத்தின் கீழ் சங்கமாக பதிவு செய்யப்பட்டு அந்த ஆண்டிலேயே செயல்பட தொடங்கியது. சிதம்பரம் நகரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் பால் கொள் முதல் செய்து, சிதம்பரம் நகர பொது மக்களுக்கு பால் விநியோகம் செய்யும் பணியை மேற்கொண்டு செயல்பட்டு வந்தது. ஒன்றியத்தில் பால் உற்பத்தியைப் பெருக்கவும், உபரிப் பாலை அரசு மூலம் சென்னை நகரத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்யவும், தமிழ்நாடு அரசு 1964-65 ஆம் ஆண்டு சிதம்பரம் பால் வழங்கும் ஒன்றியத்தில் ஓர் பால பதனிடும் நிலையம் அமைக்க கடனாக ரூ. 3,05,000-மும் மானியமாக ரூ. 2,95,000-மும் அனுமதிக்கப்பட்டது. இந்நிதி உதவியினை கொண்டு பால் வழங்கும் ஒன்றியத்தில் பால் பதனிடும் இயந்திரம் ஒன்று நிறுவப்பட்டது.

இந்த ஒன்றியத்துடன் இணைக்கப்பட்ட 62 கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்திடம் இருந்து பாலைப் பெற்று, பதப்படுத்தி, சென்னை அரசு பால் பண்ணை திட்டத்திற்கு அனுப்பி, ஒன்றியம் 1965-66 முதல் செயலாற்றி வந்தது.

இம்மாதிரி பாலை சிதம்பரத்தில் இருந்து கொள்முதல் செய்து அரசுக்கு அனுப்பியதில் அரசு பாலை பரிசோதனை மூலமாக விலை நிர்ணயம் செய்த தாலும், ஒன்றியம் சங்கங்களில் பரிசோதனை இல்லாமல் அளவு அடிப்படையில் கொள்முதல் செய்ததாலும் விலை வித்தியாசத்தினால் நஷ்டம் ஏற்பட்டது. ஒன்றியம் 1971 ஆம் ஆண்டு முதல் பால் பதனிடும் வேலையை நிறுத்தியுள்ளது. மேலும் அரசு கடனை செலுத்த முடியாத நிலையும் ஏற்பட்டு, வட்டி-பின் வட்டி சகிதம் 31-3-1980 வரைக்கான ஆஸ்தி பொறுப்பு பட்டியல்படி சிதம்பரம் பால் வழங்கும் ஒன்றியம் ரூ. 9.35 லட்சம் நிகர நஷ்டம் அடைந்துள்ளது. மேலும் சங்கங்கள் முழு அளவு பாலை ஒன்றியத்திற்கு அனுப்பாததாலும், பதனிடும் இயந்திரம் மிகக் குறைந்த அளவே வேலை செய்ததாலும், பதனிடும் செலவு அனுமதிக்கப்பட்டதற்கு மேல் அதிகமாகி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. சென்னை அரசு பால் பண்ணை திட்டத்திற்கு விநியோகம் செய்த வகையில் வர வேண்டிய தொகை ரூ. 56,000 ஆகும். இது பால் தரம் பற்றி நிர்ணயிக்கப்பட்ட விலை வித்தியாசமாகும். ஆதலால், அரசு இத்தொகையை திரும்பித்தர இசைய வில்லை. இயக்குநர்கள் கவனக் குறைவால் ஏற்பட்ட பாதிப்பு ரூ. 1.62 லட்சம் ஆகும். இதற்குப் பொறுப்பான முன்னாள் இயக்குநர்கள் மீது தண்ட தீர்வை மூலம் இதனை வசூல் செய்ய கடலூர் துணைப் பதிவாளர் (பால்பதம்) நடவடிக்கை எடுத்து வருகிறார்.

தற்சமயம் இந்த ஒன்றியத்தை வலுப்படுத்த தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் மேலாண்மையின் கீழ் இயங்கும் பால் சேகரிப்பு குழு, சிதம்பரம் வட்டத்தில் ஆய்வு நடத்தி புதிதாக சங்கங்கள் ஆரம்பித்து கொள்முதலை அதிகரித்து விநியோகப் பணியையும் சீராக்க திட்டங்கள் வகுக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதன் மூலமாக கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள நிதி நிலைமை பாதிப்புகள் சீராக்கப்படும்.

## இணைப்பு V

[385 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அரசாணை நிலை எண் 1245, கல்வி, தேதி 22-4-1974-ல் கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மேலாண்மையிலுள்ள பள்ளிகளில் 10 வருடம் தொடர்ந்து பணி யாற்றியுள்ள பட்டதாரி ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர் களுக்கு 1-4-1973 முதல் தேர்வு நிலைப் பதவி வழங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. தேர்வு நிலை பதவி வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ளபடி ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.



(அ) சாதாரண நிலைப் பணியிடத்திற்கு உள்ள ஊதியத்தில் தேர்வு நிலை ஊதிய விகிதத்தில் உள்ள நிலைக்கு இணையான நிலை;

(ஆ) அவ்வாறு இல்லையெனில், தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் அதற்கு அடுத்த உயர்ந்த நிலை.

மேற்கூறியுள்ள ஊதியம் நிர்ணயித்தல் மூலம் சில தேர்வு நிலைப் பதவி வழங்கப் பட்ட ஆசிரியர்களுக்கு, அவர்கள் சாதாரண பணியிடத்திலேயே தொடர்ந்து பணியாற்றியிருந்தால் கிடைக்கப்பெறும் ஊதிய உயர்வு கிடைக்காமல் போய் விட்டது. எனவே தேர்வு நிலை வழங்கப்பட்ட எல்லா ஆசிரியர்களுக்கும் ஊதியம் நிர்ணயம் செய்வதற்கு அவர்களுக்கு சாதாரண பணியிடத்தில் கடைசியாக ஊதிய உயர்வு வழங்கப்பட்ட தேதியே கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

மேற்படி ஆணை 1-1-1971லிருந்து அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறு தேர்வு நிலை அளிக்கப்பட்ட ஆசிரியரிடமிருந்து தாமதமாக ஊதிய உயர்வு வழங்கப்பட்டு வருவதாக புகார்கள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை. தனிப்பட்ட முறையில் புகார்கள் கிடைக்கப் பெற்றால் அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

## இணைப்பு

[387 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### தமிழகத்தில் உணவு நிலைமை.

அரிசி நிலைமை :—கொள்முதலும், விற்பனையும்.

1. அரிசி நிலைமை—

தமிழகத்தில் அரிசி கிடைக்கும் நிலைமை தொடர்ந்து திருப்திகரமாகவே உள்ளது. வெளி அங்காடியில் அரிசி கிடைக்கவில்லை என்று யாரும் புகார் செய்யவில்லை. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் பொது விநியோகத்திற்குப் போதுமான அரிசி கையிருப்பில் உள்ளது. வெளி அங்காடியில் அரிசி கிடைப்பதுடன் குடும்ப அட்டைகளுக்கு சில்லறைக் கடைகள் மூலமாக பொது விநியோக முறையில் அரிசி விற்கப்பட்டு வருகிறது. பொது விநியோக முறையில் விற்பனையாகும் அரிசியின் அளவு உயர்ந்து வருகிறது. 1980 நவம்பர் வரை பொது விநியோக முறையில் மாதம் ஒன்றுக்கு சுமார் 7,500 டன்கள் முதல் 11,000 டன்கள் வரை விற்பனையாகி வந்த அரிசியின் அளவு முக்கியமாக இம் மாநிலத்தின் சில பகுதிகளில் மோசமான பருவ நிலையும் வறட்சியும் நிலவி வருவதன் காரணமாக 1980 டிசம்பர் மாதத்திலிருந்து அதிகரித்துள்ளது.

2. கொள்முதல்—

வணிகர்களிடம் லெவி விதித்து அரிசியைக் கொள்முதல் செய்யும் முறை 1979 ஜுன் முதல் நாளிலிருந்து கைவிடப்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அதன் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமாக விவசாயிகள் முன்வந்து அளித்த நெல்லை வாங்கியது. இம்முறையினால், பொது விநியோக முறையில் வழங்குவதற்குப் போதுமான அரிசி அரசுக்குக் கிடைக்காததால், வர்த்தக லெவி முறையில் அரிசியைக் கொள்முதல் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. மாநிலம் முழுவதிலுமுள்ள மொத்த விற்பனை வணிகர்கள் முதல் தடவையாக நெல் அல்லது அரிசி வாங்கும்போது அவர்களுக்கு 40 சதவீதம் லெவி விதிக்கப்பட்டுள்ளது. அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சில்லறை விற்பனை வணிகர்களுக்கும் லெவியிலிருந்து விலக்களித்துள்ளது. மாநிலத்தில் எந்த இடத்திலும் நெல் அல்லது அரிசி வாங்க வணிகர்களுக்கு வசதி அளிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாநிலங்களிலிருந்து இம்மாநிலத்திற்குள் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு லெவியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. எனினும் இந்த அரிசியை மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் சென்றால் அல்லது மற்ற மாநிலத்தவர் இங்கு வந்து இந்த நெல்லை வாங்கி வேறு மாநிலத்திற்கு எடுத்துச் சென்றால் லெவி கொடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு, லெவி விதிக்கப்படுவது இல்லை.

மாநிலத்திற்குள் அல்லது மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு நெல்லை அல்லது அரிசியை எடுத்துச் செல்வதற்குத் தடை ஏதும் கிடையாது. சொந்தமாக நிலம் வைத்துள்ளவர்கள் தங்கள் நிலத்தில் விளைந்த நெல்லை அல்லது அரிசியை வட்ட வழங்கல் அதிகாரியிடமிருந்து அனுமதி பெற்று தங்கள் சொந்த உபயோகத்திற்கு அல்லது தங்கள் குடும்பத்திலுள்ளவர்கள் சொந்த உபயோகத்திற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் ஆறு மாதங்களுக்குத் தேவையான நெல் அல்லது அரிசியை ஒரு தடவையில் எடுத்துச் செல்லலாம்.

3. நெல் கொள்முதல் விலை—

விவசாய விளைபொருள் விலைவாசி ஆணைக் குழுவின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசு நெல்லுக்கான கொள்முதல் விலையை நிர்ணயிக்கிறது. உழவர்களுக்கு ஆதாயம் கிடைக்கின்ற வகையில் நெல்லின் விலையை நிர்ணயிக்க இவ்வரசு முயற்சி செய்து வருகிறது. சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால்



ஒன்றுக்கு ரூபாய் 130 என்றாவது அல்லது கோதுமைக்குரிய கொள்முதல் விலைக்கு சமமாகவாவது நிர்ணயிக்குமாறு இவ்வரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி வந்துள்ளது. இவ்வரசின் இடைவிடா முயற்சியால், மத்திய அரசு 1980-81 பயிர் ஆண்டுக்கு சாதாரண ரக நெல்லின் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 95 லிருந்து ரூபாய் 105 ஆகவும், சன்ன ரக நெல்லின் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 99 லிருந்து ரூபாய் 109 ஆகவும், மிகச் சன்ன ரக நெல்லின் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 103 லிருந்து ரூபாய் 113 ஆகவும் உயர்த்தியுள்ளது. என்றாலும் மத்திய அரசு இவ்வாறு நிர்ணயித்த கொள்முதல் விலைகள்கூட போதுமானதல்ல. எனவே, விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்கும் பொருட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடிக் கொள்முதல் விற்பனை நிலையங்களில் வந்து விற்கும் விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும் விலையாக சாதாரண ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 115-ம் சன்ன ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 119-ம் மிகச் சன்ன ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 125-ம் கொடுப்பதாக மாநில அரசு அறிவித்துள்ளது. இதனால் குவிண்டால் ஒன்றுக்குக் குறைந்தது ரூபாய் 115 கிடைக்கும். நடப்பு ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து மத்திய அரசு கோதுமை விலையை குவிண்டால் ஒன்றுக்கு 130 ரூபாய்க்கு மேலும் உயர்த்தும் வரை இவ்விலை கோதுமை கொள்முதல் விலைக்கு (ரூபாய் 117.50) மிக அடுத்திருந்தது.

4. அரிசியின் சில்லரை விற்பனை விலை.

குடும்ப அட்டைகளுக்கு 1981 சனவரி இறுதிவரை நியாய விலைக் கடைகளில் சாதாரண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூபாய் 1.60 ஆகவும், சன்ன ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூபாய் 1.85 ஆகவும், மிகச் சன்ன ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2.00 ஆகவும் விற்கப்பட்டன. மோட்டா ரக நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 74 ஆக இருந்தபோது மேற்சொன்ன விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. நெல் கொள்முதல் விலை மேலும் அதிகரித்திருக்கும்போது இந்த விலைகளில் அரிசி விற்பதால் அரசுக்கு ஏற்படும் இழப்பு மிக அதிகமாக இருக்கும். எனவே, மாநில அரசு, அரிசி விற்பனை விலைகளை 1—2—1981 லிருந்து பின்வருமாறு அதிகரித்துள்ளது.

| | |
|---|---|
| சாதாரண ரகம் | கிலோ ஒன்றுக்கு ரூபாய் 1.75. |
| சன்ன ரகம் | கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2.00. |
| மிகச் சன்ன ரகம் | கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2.15. |

அரிசி விலை விகிதத்தை இவ்வாறு அதிகரித்த பின்னரும்கூட வெளி அங்காடியில் விற்கும் விலையைக் காட்டிலும் இது மிகவும் குறைவே. சில்லறை விற்பனை

விலை கொள்முதல் விலையையொட்டியே நிர்ணயிக்கப்பட வேண்டும். சில்லறையில் வழங்கப்படும் அரிசிக்குரிய விற்பனை விலையை அதிகரித்த போதிலும், விற்பனை விலையைவிட அடக்க விலை அதிகமாய் உள்ளதால் அரசிற்குப் பெரும் இழப்பு ஏற்படுகிறது.

II. பொது விநியோக முறையில் இன்றியமையாப் பொருட்களை வழங்குதல்.

5. தமிழ்நாடு முழுவதிலும் பொது விநியோக முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தில் தற்போது 17,300 நியாய விலைக் கடைகள் உள்ளன. இவற்றில் 15,400 கடைகள் கிராமப் பகுதிகளிலும், 1,900 கடைகள் நகர்ப் பகுதிகளிலும் உள்ளன. இந்த நியாய விலைக் கடைகள் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தாலும் கூட்டுறவுச் சங்கங்களாலும் ஏனைய நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன. தனிப்பட்ட வணிகர்கள் இதிலிருந்து முற்றிலும் நீக்கப்பட்டுள்ளனர். இதுவே இந்த விநியோக முறையின் சிறப்பாகும். மற்ற நிறுவனங்களால் 83 நியாய விலைக் கடைகள் நடத்தப்படுகின்றன, இவற்றில் தொழிற்சாலைகளும் மலைத் தோட்ட நிர்வாகத்தினரும் நடத்தும் தொழிலாளர் பண்டகசாலைகளும் அடங்கும். 1—1—1980 ஆம் நாள் நிலவரப்படி 17,000 நியாய விலைக் கடைகள் இருந்தன. 1980 ஆம் ஆண்டில் 300 புதிய கடைகள் திறக்கப்பட்டன. மாநிலம் முழுவதிலும் 107 இலட்சம் குடும்ப பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. பங்கீட்டு அட்டை வைத்திருப்பவர்களுக்கு, நியாய விலைக் கடைகள் மூலமாக அரிசி, லெவி கோதுமை, கோதுமைப் பொருட்கள், லெவி சர்க்கரை, மண்ணெண்ணெய், பாமோலின் எண்ணெய், பருப்பு வகைகள் முதலியவை வழங்கப்படுகின்றன.

6. அரிசி.

பொது விநியோக முறையில் நியாய விலைக் கடைகள் மூலமாக அரிசி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுத் தொடக்கத்தில் அரிசி அதிக அளவிற்கு இக்கடைகளில் விற்பனையாகவில்லை. 1980 நவம்பர் வரை மாதம் ஒன்றுக்கு 7,500 டன்கள் முதல் 11,000 டன்கள் என்ற அளவிலேயே அரிசி விற்பனையாயிற்று. 1980 டிசம்பரில் அரிசி விற்பனை 18,000 டன்களாகவும், 1981 சனவரியில் 24,000 டன்களாகவும் அதிகரித்துள்ளது. நியாயவிலைக் கடைகளின் மூலமாக 1979 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட 1.5 இலட்சம் டன்களோடும், 1978 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட 0.93 இலட்சம்



டன்களோடும் ஒப்பிடுகையில் 1980 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட மொத்த அரிசி 1.5 இலட்சம் டன்களாகும். மாநிலத்தின் சில பகுதிகளில் வறட்சி நிலவுவதால் இக்கடைகளில் வாங்கப்படும் அரிசியின் அளவு அதிகரித்துள்ளது.

7. கோதுமை, கோதுமைப் பொருட்கள்.

குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 1.55 வீதம் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 5 கிலோ லெவி கோதுமை வழங்கப்படுகிறது. மத்திய அரசு 1980 சூலை வரை மாநிலத்திற்கு கோதுமையைத் தாராளமாக ஒதுக்கி வந்தது. 1980 ஆகஸ்டிலிருந்து மாதம் ஒன்றுக்கு 3,000 டன்கள் கோதுமை ஒதுக்கப்பட்டது. இவ்வரசு பலமுறை வேண்டிக்கொண்டதன் பேரில் மத்திய அரசு ஏப்ரல் திங்களுக்கு 4,000 டன்கள் கோதுமை ஒதுக்கீடு செய்துள்ளது. இக்கோதுமை நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்குவதற்கு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒதுக்கப்பட்டது. பின்னர், குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு லெவி கோதுமை அதிக அளவு தேவைப்பட்டதால், திங்கள் ஒன்றுக்கு 10,000 டன்கள் கோதுமையை ஒதுக்குமாறு நாம் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளோம்.

மத்திய அரசு கோதுமையை கோதுமைப் பொருட்களாக மாற்ற மாநிலத்திலுள்ள கோதுமை உருளை மாவு ஆலைகளுக்கு வழங்குவதற்காகவும் கோதுமையை ஒதுக்குகிறது. இம்மாநிலத்தில் 31 உருளை மாவு ஆலைகள் இருக்கின்றன. 1980 சூலை வரை மத்திய அரசு உருளை மாவு ஆலைகளுக்கு மாதம் ஒன்றுக்கு சுமார் 65,000 டன்கள் கோதுமையை ஒதுக்கியது. ஆனால் இது பின்னர் குறைக்கப்பட்டது. தற்போது மாதம் ஒன்றுக்கு சுமார் 30,000 டன்கள் கோதுமை ஒதுக்கப்படுகிறது. கோதுமைப் பொருட்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டபோது பொது விநியோகத்திற்காக தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேவைப்படும் அளவு மைதா, ரவை இவற்றை வழங்குமாறும் எஞ்சியுள்ள இருப்பை மட்டுமே வெளி அங்காடியில் விற்குமாறும் மாவு ஆலைகளுக்கு சட்டப்படிக்கான கட்டளையிடப்பட்டது. கோதுமைப் பொருட்கள் விநியோகத்தின்மீது கட்டுப்பாடு எதுவும் இல்லையென்றாலும் அதிக அளவில் கோதுமை பயன்படுத்தும் ரொட்டிக் கடைகள், பிஸ்கட் தொழிற்சாலைகள், சேமியா தயாரிப்பவர்கள், உணவு விடுதிகள், மாணவர் விடுதிகள் ஆகியோருக்குத் தேவைப்படும் கோதுமைப் பொருட்களை நிர்ணயித்துள்ள விலையில் வாங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. குடும்ப அட்டை வைத்திருப்பவர்கள் எவ்வாறு

வருக்கும் நியாய விலைக் கடைகள் மூலமாக மாதம் ஒன்றுக்கு 5 கிலோ மைதா, 5 கிலோ ரவை வழங்கப்படுகிறது.

8. சர்க்கரை விநியோகம்.

லெவி சர்க்கரை வழங்குமுறை மீண்டும் கொண்டு வரப்பட்டதால் மத்திய அரசு சர்க்கரை ஆலைகளிடமிருந்து லெவிக்காக உற்பத்தியில் 65 சதவீதத்தை எடுத்துக்கொண்டு அவற்றைப் பொது விநியோகத்திற்காக மாநிலங்களுக்கு ஒதுக்குகிறது. இம்மாநிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு சுமார் 19,790 டன் லெவி சர்க்கரை கிடைக்கிறது.

1981 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ஆம் நாளுக்குமுன் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு லெவி சர்க்கரை நியாய விலைக் கடைகள் மூலமாகப் பின்வருமாறு வழங்கப்பட்டது:

| | | | கிலோ. |
|---|---|---|---|
| 1. | சென்னை மாநகரம் அதன் புறநகர்ப் பகுதி, மாவட்டத் தலைமையிடங்கள். | திங்கள் ஒன்றுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு | 5 |
| 2. | ஏனைய நகராட்சிகள், மாவட்டத் தலைமையிடங்களையொட்டிய புறநகர் பகுதிகள் நகரியங்கள். | டை | 3 |
| 3. | பேரூராட்சிகள், ஊராட்சிகள். | டை | 1 |

கிராமப் பகுதிகளில் குடும்ப அட்டை வைத்திருப்போருக்கு லெவி சர்க்கரை வழங்கப்படுவது போதுமானதாயில்லை என்றும், அந்த அளவு, நகர்ப் பகுதிகளில் உள்ள அளவிற்குச் சமமாக உயர்த்தப்பட வேண்டுமென்றும் அரசுக்குப் பல முறையீடுகள் வந்தன. லெவி சர்க்கரை வழங்கப்படும் அளவு, குடும்ப அட்டை வைத்திருப்போரின் மாதாந்திர வருமான அடிப்படையில் இருக்க வேண்டும் என்றும் முறையீடுகள் வரப்பெற்றுள்ளன. 1981 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ஆம் நாளிலிருந்து வருமான அடிப்படையில் லெவி சர்க்கரை பின்வரும் அளவுகளில் வழங்கப்படுகிறது:

| நகர்ப் பகுதிகள். | அட்டை ஒன்றுக்கு திங்கள் ஒன்றுக்கு (கிலோ) |
|---|---|
| திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 1,000-மும் அதற்கு மேலும் வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர். | 5 |



| நகர்ப் பகுதிகள். | அட்டை ஒன்றுக்கு, திங்கள் ஒன்றுக்கு (கிலோ) |
|---|---|
| திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 1,000-மும் அதற்கு மேலும் வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர். | 5 |
| திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 500 முதல் ரூபாய் 999 வரை வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர். | 3 |
| திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 499 வரை வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர். | 3 |
| **கிராமப் பகுதிகள்.** | |
| திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 1,000-மும் அதற்கு மேலும் வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர். | 3 |
| திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 500லிருந்து ரூபாய் 999 வரை வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர். | 2 |
| திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 499 வரை வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர். | 1 |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மாநிலத்தில் சர்க்கரை பற்றாக்குறை ஏற்படுகையில் அந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு வெளிச்சந்தையில் சர்க்கரையை வாங்கி முடை இருப்பு வைத்து வருகிறது.

பொது விநியோக முறையில் சர்க்கரை தங்குதடையின்றிக் கிடைப்பதற்காக 960 ஆகஸ்டு முதல் 1980 செப்டம்பர்வரையில் 15,020 மெட்ரிக் டன்கள் சர்க்கரை இறக்குமதி செய்யப்பட்டது. தீபாவளி, பொங்கல் பண்டிகைகளின் போது பல மாநிலங்களில் சர்க்கரை கிடைக்காதபோது, குடும்ப அட்டை வைத்திருப்போருக்கு நமது அரசு இடைவிடாமல் சர்க்கரையை விநியோகிக்க முடிந்தது. வெளிச்சந்தை சர்க்கரையை பெருமளவில் வாங்குவோர் சர்க்கரையை அதிகமாகப் பயன்படுத்துவோராவர். உணவுப் பொருள் வாணிபக் கழகம், கிலோ ஒன்றுக்கு ரூபாய்

6.25 என்ற வீதத்தில் அவர்களது தேவையை நிறைவு செய்வதால், வெளிச்சந்தை சர்க்கரை விலை உயராமல் தடுக்கப்படுகிறது. இதன் காரணமாக சர்க்கரை கிடைக்கவில்லை என்றோ, வெளிச்சந்தையில் விலை உயர்வாக உள்ளது என்றோ புகார்கள் எவையும் வரவில்லை.

கட்டுப்பாடின்றி விற்பதற்கான சர்க்கரை முழுவதையும் மாநிலத்திடம் ஒப்படைக்க இந்திய அரசு முடிவு செய்தபோது பிற மாநிலங்களில் பின்பற்றப்பட்டதுபோன்று நமது மாநிலத்தில் தனிப்பட்ட மொத்த விற்பனையாளர்களைச் சேர்க்காமல் முழு இருப்பும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, 1980 செப்டம்பர் முதல் 1980 நவம்பர் வரையில் பெருமளவு பயன்படுத்துபவர்களுக்கும் குடும்ப அட்டை வைத்திருப்போருக்கும் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 6 வீதம் மாநிலம் முழுவதும் ச்ர்க்கரை கிடைக்கச் செய்யப்பட்டது. இச்செயல் அவைக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஒன்றாகும்.

9. மண்ணெண்ணெய் விநியோகம்—

விளக்கு எரிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படுகிற ஓர் இன்றியமையாப் பொருள் மண்ணெண்ணெய். உலக நாடுகள் அனைத்திலும் பெட்ரோலியம் பொருட்கள் பற்றாக்குறையாக உள்ளன. 1979 ஆம் ஆண்டில் மண்ணெண்ணெய் பற்றாக்குறை ஏற்பட்டபோது மண்ணெண்ணெயைப் பயன்படுத்தும் மக்களுக்கு அதனைக் கி டைக்கச் செய்வதற்காக பொது விநியோக முறையின் கீழ் மண்ணெண்ணெய் வழங்க அரசு முடிவு செய்தது. பின்வரும் அளவில் மாநிலத்தில் குடும்ப அட்டை வைத்திருப்போருக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

| | | குடும்ப அட்டை ஒன்றுக்கு திங்கள் ஒன்றுக்கு லிட்டர். |
|---|---|---|
| 1 | சென்னை மாநகரமும், அதன் புறநகர்ப் பகுதியும், மாவட்டத் தலைமை யிடங்கள் உள்ள நகராட்சிகளிலும் | 10 |
| 2 | ஏனைய நகராட்சிகள் .. .. .. | 5 |
| 3 | நகரியங்கள் மற்றும் பேரூராட்சிகள். | 5 |
| 4 | ஊராட்சிகள் .. .. .. | 3 |

பொது விநியோக முறையின்கீழ் மண்ணெண்ணெய் வழங்கப்படுவது தவிர தங்கள் பிழைப்பிற்கு இத்தொழிலையே நம்பியுள்ள கை வண்டிக்காரர்களுக்கும் தனிப்பட்ட வணிகர்களுக்கும்



விற்பனை செய்வதற்காக ஒவ்வொரு வேலை நாளுக்கும் சென்னை நகரிலும் அதன் புறநகர்ப் பகுதியிலும் உயரளவு 100 லிட்டர் வரையிலும் வெளியூர்களில் 50 லிட்டர் வரையிலும் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. தொழிற்சாலைகள், அச்சகங்கள், உணவகம் நடத்துபவர்கள், மாணவர் விடுதிகள் முதலியன போன்ற பெருமளவு மண்ணெண்ணெய் பயன்படுத்தும் நிறுவனங்களின் தேவைகளும் நிறைவு செய்யப்படுகின்றன. தற்போது வழங்கப்படும் அளவின்படி பார்த்தால், மாநிலத்தில் மொத்த மண்ணெண்ணெய் தேவை மாதம் ஒன்றுக்கு சுமார் 44,000 டன்களாகும். ஆனால் இந்திய அரசு திங்கள் ஒன்றுக்கு 27,000 முதல் 30,000 டன்கள் வரை இம்மாநிலத்திற்கு ஒதுக்கி வருகிறது. இம்மாநிலத்திற்குத் திங்கள் ஒன்றுக்கு குறைந்தளவு 30,000 டன்களாவது ஒதுக்குமாறு இந்திய அரசை இவ்வரசு வலியுறுத்தி வருகிறது.

மண்ணெண்ணெய் விநியோகத்தில் மொத்த விற்பனை நிலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தையும் கூட்டுறவுச் சங்கங்களையும் சேர்த்துக் கொள்வதன் அவசியம் குறித்து இவ்வரசு இந்திய அரசிடம் வற்புறுத்திக் கூறி வருகிறது. இது பொது விநியோக முறையின்கீழ் மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதற்கு மிகவும் அவசியமாக உள்ளது. எண்ணெய் நிறுவன வணிகர்களாக நியமிக்க ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்காக ஒதுக்கப்படும் 35 சதவீதம் பங்கீட்டளவு நீங்கலாக எஞ்சிய அளவை விற்பனை செய்வதற்காக நுகர் பொருள் வாணிபக் சழகத்தை நியமிக்க முதலில் இந்திய அரசு ஒப்புக் கொண்டது. பின்னர், எண்ணெய் நிறுவனங்களின் வணிகர்களை நியமிப்பது குறித்து தனது கருத்தை இந்திய அரசு மாற்றிக் கொண்டு பொதுத் துறை நிறுவனங்களை அல்லது கூட்டுறவுச் சங்கங்களை வணிகர்களாக நியமித்திட பங்கீட்டளவு எதனையும் அது ஒதுக்கவில்லை. இந்த நிறுவனங்களும் மண்ணெண்ணெயை விற்பனை செய்யும் உரிமையைப் பெறுவதற்காக ஏனைய தனிப்பட்ட நபர்களுடன் போட்டியிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே மத்திய அரசு தனது முடிவினை மறு ஆராய்வு செய்து மண்ணெண்ணெய் மொத்த விற்பனையாளர்களாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தையும் கூட்டுறவுச் சங்கங்களையும் நியமிக்குமாறு இவ்வரசு வேண்டியுள்ளது. மண்ணெண்ணெய் மொத்த விநியோகம் செய்யும் வியாபாரிகளுக்கான காலியிடங்களில் எப்பிரிவினருக்கும் ஒதுக்கப்படாத பொதுப்பங்கீட்டளவில் 30 விழுக்காடு இடங்களை விளம்பரமின்றி மாநில நிறுவனங்களுக்கு அளிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மண்ணெண்ணெய் விநியோகம் சமையல் வாயு விநியோகத்துடன் தொடர்புடையதாயிருப்பதால், சமையல் வாயு விநியோகம் செய்வதில் மாநில அரசையும் சேர்த்துக்கொள்ளுமாறு இந்திய அரசிடம் இவ்வரசு வற்புறுத்தி வருகிறது. சமையல் வாயு வழங்குவதில் பற்றாக்குறையோ தாமதமோ ஏற்படும்போது, அதைப் பயன்படுத்துபவர்களுக்கும் மண்ணெண்ணெய் தேவைப்

படுவதால், திடீரென அதன் தேவை அதிகரிக்கிறது. ஆனால், இது குறித்து, நமது கோரிக்கைகளுக்கு மத்திய அரசிடமிருந்து இதுவரை ஆதரவான பதில் கிடைக்கவில்லை.

10. சமையல் எண்ணெய்கள் :

தமிழ்நாட்டில் கடலை எண்ணெய் மட்டுமே உபரியாக உற்பத்தியாகிறது. நல்லெண்ணெய்க்கும், தேங்காய் எண்ணெய்க்கும் இங்கு பெரிதும் பற்றாக்குறை உள்ளது. கடலை எண்ணெய்க்கும்கூட இம்மாநிலத்தில் மாரிக்காலப் பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்டுவிட்டதால், கடலை எண்ணெய் கிடைப்பது பெரிதும் கடினமாயுள்ளது. ஆனால் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு கிலோகிராம் ஒன்றுக்கு ரூ. 8.25 வீதம் இறக்குமதி செய்யப்பட்ட 'பாமோலின்' எண்ணெய் பொது விநியோக முறையில் வழங்குவதனால் இந்நிலை ஓரளவிற்குச் சீர்பட்டுள்ளது. 1979 ஆகஸ்டு முதல் 1981 சனவரிவரை மத்திய அரசு 24,000 மெட்ரிக் டன்கள் எண்ணெய் ஒதுக்கீடு செய்துள்ளது. மத்திய அரசு, திங்களொன்றுக்கு 2,500 முதல் 3,000 டன்கள் வரை ஒதுக்கீடு செய்து வருகிறது. திங்களொன்றுக்கு குறைந்தது 5,000 டன்களாவது வழங்கவேண்டுமென நாம் வலியுறுத்தி வருகிறோம். 1981 மார்ச் மாதத்திற்கு 3,500 மெட்ரிக் டன்கள் அளவு எண்ணெய் மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட 'பாமோலின்' எண்ணெயின் பயன் குறித்துப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்ல மாநில அரசு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் பயனாகவும், அதன் விலை மலிவு காரணமாகவும் 'பாமோலின்' எண்ணெயைப் பொதுமக்கள் தற்போது பெருமளவில் வாங்குகின்றனர். குடும்ப அட்டை வைத்திருப்பவர் அனைவரின் தேவைகளுக்கும் இவ்வொதுக்கீடு போதுமானதாக இல்லை. நடப்பு ஆண்டு மே மாதம் முதல், திங்களொன்றுக்கு, அட்டை ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் வழங்கப்படும். 'பாமோலின்' எண்ணெய் வழங்கப்படுவதால், வெளி அங்காடியில் சமையல் எண்ணெய்களின் விலை, அதுவும் குறிப்பாக கடலை எண்ணெயின் விலை ஏறாமல் தடுப்பதற்கு மிகவும் உதவியாயுள்ளது.

## III. கிராம நியாய விலைக் கடைகள்

11. வருவாய்க் கிராமம் ஒவ்வொன்றிலும் ஒரு நியாய விலைக் கடை திறப்பதற்கு அரசு எடுத்த முடிவுகளையொட்டி, கிராம மக்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் வழங்குவதை உறுதி செய்வதற்காக, எல்லா கிராமங்களிலும் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. கிராம மக்களின் நலனைக் கருதி இக்கடைகளை நடத்துவதில் ஏற்படும் இழப்பை ஈடு செய்வதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், ஆண்டொன்றுக்கு சுமார் நாலு கோடி ரூபாய் உதவித் தொகையை அரசு வழங்கி வருகிறது. நியாய விலைக்



கடைகளில் பணி செய்பவர்கள் தற்செயல் விடுப்பில் செல்லும் போது, அக்கடைகள் மூடப்படுவதாகப் புகார்கள் வந்தன. குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு எல்லா நாட்களிலும் பொருட்களை வழங்கும் பொருட்டு 1,000 கடைகளுக்கு இருபது பதிலிப் பணியாளர்கள் வீதம் நியமிக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த நியாய விலைக் கடைகள் நெடுந் தொலைவிலுள்ள கிராமங்களிலும் கூட செயல்படுகின்றன. இக்கடைகள் தினமும் திறக்கப்பட்டு, குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு விநியோகம் செய்வதற்காகப் போதுமான அளவில் பொருட்கள் இருப்பில் வைக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்காக, கடைகள் தொடர்ந்து மேற்பார்வை செய்யப்படுகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுச் சங்கங்களால் நியமனம் செய்யப்பட்ட தல அதிகாரிகள் தவிர, உணவுப்பொருள் வழங்கு துறை, வருவாய்த் துறை அதிகாரிகள், வளர்ச்சிப் பணி அதிகாரிகள், கிராம சேவகிகள் போன்ற பிற உள்ளூர் அதிகாரிகளும் கிராமங்களைப் பார்வையிட வரும்போது இந்நியாயவிலைக் கடைகளுக்குச் சென்று பார்வையிட்டு, இக்கடைகள் செம்மையாக நடைபெறுகின்றனவா என்றும், இன்றியமையாப் பொருட்கள் இக்கடைகளில் உள்ளனவா என்றும் தெரிவிக்கும்படியாகவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## IV. வணிகத்தை முறைப்படுத்தும் ஆணைகள்.

12. பொதுமக்கள் அனைவருக்கும், இன்றியமையாப் பொருட்களை நியாயமான விலையில் சமமாகப் பகிர்ந்தளிப்பதை உறுதி செய்யும் நோக்குடன், நெல், அரிசி, சர்க்கரை, பருப்பு வகைகள், வனஸ்பதி, வேர்க்கடலை, கடலை எண்ணெய், கோதுமை, கோதுமைப் பொருட்கள், மண்ணெண்ணெய் ஆகிய பொருட்களின் வணிகத்தை ஒழுங்குபடுத்தவும், முறைப்படுத்தவும் இந்திய அரசின் ஒப்புதலுடன் 1955-ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ், வணிகத்தை முறைப்படுத்தும் ஆணைகளை மாநில அரசு பிறப்பித்துள்ளது. முறைப்படுத்தும் இந்த ஆணைகளின்கீழ், உரிமம் வழங்கும் முறை வரையறுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இன்றியமையாப் பொருட்களில் வணிகம் செய்யவிரும்பும் ஒவ்வொருவரும், சம்பந்தப்பட்ட கட்டுப்பாடு ஆணையில் வரையறுக்கப்பட்ட அளவை விட அதிக அளவில் வணிகம் செய்தால் அவர் உரிமம் ஒன்றைப் பெற வேண்டும். பதுக்கலையும், அதனால் உருவாகும் செயற்கைப் பற்றாக்குறை நிலையும், அதன் விளைவாக ஏற்படும் விலையேற்றத்தையும் தடுக்கும் பொருட்டு, நெல், அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய், பருப்பு வகைகள் போன்ற பொருட்களை எந்த அளவிற்கு வைத்திருக்கலாம் என்பது வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆண்டில் கிலோ ரூ. 2 ஆக இருந்த புழுங்கல் அரிசி (நடுத்தரம்) இப்போது ரூ. 2.80 வரை விற்கப்படுகிறது. வெளிச்சந்தை விலை அதிகமாக உள்ளபோதிலும் சாதாரண ரக அரிசி கிலோ ரூ. 1.75 என்கிற மிகக் குறைந்த விலையில் பொது விநியோக ஏற்பாட்டின் மூலம் வழங்கப்படுகிறது. பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசி விலைகள் 1—2—1981 முதல் பின் வருமாறு உயர்த்தப்பட்டுள்ளன:—

| ரகம். | கிலோ ஒன்றுக்கு ரூபாய். |
|---|---|
| (1) | (2) |
| சாதாரண ரகம் .. .. .. | 1.75 |
| சன்னரகம் .. .. .. | 2.00 |
| மிகச் சன்னரகம் .. .. .. | 2.15 |

அரிசி விலை உயர்ந்ததாலும், சாகுபடி செலவுகள் அதிகரித்ததாலும் பயிர்கள் சாவியானதாலும் கடந்த ஆண்டில் கிலோ ரூ. 1.25 என விற்று வந்த சிறு தானியங்களின் விலைகள் தற்போது கிலோ ஒன்றுக்கு ரூ. 1.80 என விற்கப்பட்டு வருகின்றன.

கோதுமை:

1980 பிப்ரவரியில் வெளி அங்காடியில் கிலோ ரூ. 1.60 ஆக இருந்த விலை கோதுமை தற்போது ரூ. 2.15 ஆக உள்ளது. கோதுமை விளைச்சல் தவறியதாலும், வட இந்திய மாநிலங்களிலிருந்து, கோதுமையைக் கொண்டுவர சரக்கு ரயில் பெட்டிகள் கிடைப்பதில் இடர்ப்பாடுகள் இருப்பதாலும் இவ்வாறு விலை உயர்ந்துவிட்டது. பொது விநியோக முறையில் வழங்க மத்திய அரசு நடப்பு ஆண்டு ஏப்ரல் திங்களுக்கு 4,000 டன்கள் கோதுமை ஒதுக்கீடு செய்துள்ளது. கோதுமை உருளை மாவு அரைவை ஆலைகளுக்கு ஒதுக்கப்படும் கோதுமையின் அளவு மாதம் ஒன்றுக்கு 65,000 மெட்ரிக் டன்கள் என்றிருந்தது. இப்போது 30,000 மெட்ரிக் டன்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.



பருப்புவகைகள்:

பருப்பு வகைகளைப் பொறுத்தவரையில் இம்மாநிலம் மொத்தம் 5.35 இலட்சம் டன்கள் அளவிற்குக் கீழ்க்கண்டவாறு பற்றாக் குறையாக உள்ளது.

| பருப்பின் பெயர். | தேவை. | உற்பத்தி. | பற்றாக் குறை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (இலட்சம் டன்களில்.) | | |
| 1. துவரம் பருப்பு | 2.00 | 0.16 | 1.84 |
| 2. உளுத்தம்பருப்பு | 1.50 | 0.34 | 1.16 |
| 3. பச்சைப் பருப்பு | 0.50 | 0.11 | 0.39 |
| 4. கடலைப் பருப்பு | 2.00 | 0.04 | 1.96 |
| மொத்தம் | | | 5.35 |

இவ்விதமாக எல்லாவகையான பருப்பு வகை உற்பத்தியிலும் தமிழ்நாடு மிகவும் பற்றாக்குறையாக உள்ளது. இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் போன்ற பருப்பு உற்பத்தி செய்யும் வடமாநிலங்களையே நமது மாநிலம் நம்பியுள்ளது. அம்மாநிலங்களில்கூட பயிர் விளைச்சல் தவறிவிட்டது. இதனால் அம்மாநிலங்களில் விலை மிகவும் உயர்ந்துள்ளது. தவிர, போக்குவரத்துச் செலவு அதிகரித்துள்ளதாலும், போதிய அளவு சரக்கு ரயில்பெட்டிகள் கிடைக்காததாலும், வெளி அங்காடியில் பருப்பு வகைகளின் விலைகள் உயர்ந்துள்ளன.

துவரம் பருப்பின் விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 5.35 வரை விற்கிறது. கடந்த ஆண்டின் விலையை விட இது கிலோவுக்கு 70 காசு அதிகம். உளுத்தம் பருப்பு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 4.45 வரை விற்கிறது. கடந்த ஆண்டின் விலையை விட இது 25 காசு அதிகம். பச்சைப் பருப்பு கிலோவுக்கு 60 காசு உயர்ந்து தற்போது ரூபாய் 5.45 வரை விற்கிறது.

உணவுப் பொருள் வழங்கு துறையின் செயல் பிரிவும், அத் துறையைச் சேர்ந்த புலனாய்வுப் பிரிவும் உரிமதாரர்களின் கடைகளை திடீரெனச் சோதனையிடுகின்றனர். அவர்கள் கணக்குகளை ஆய்வு செய்து, பொருட்களை நேரடியாகச் சரி பார்த்து முறைகேடுகள் கண்டறியப்படும் போது நடவடிக்கை எடுக்கின்றனர். 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (இருப்புகளையும், விலைகளையும் விளம்பரப் படுத்தல், கணக்குகளை எழுதி வைத்தல்) ஆணையின்படி இருப்பையும் அவற்றின் விலைகளையும் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக, ஆணையின் விவர அட்டவணையில் குறிப்பிடப் பட்ட பொருட்களின் இருப்பு, அவற்றின் விலை விபரம் ஆகியவை எழுதப்பட்ட அறிவிப்புப் பலகை ஒன்றை கடைக்கு முன்னால், எல்லோரும் காணக் கூடிய ஓரிடத்தில் வணிகர்கள் வைத்து வர வேண்டும். நுகர் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அதி காரிகளும், உணவுப் பொருள் வழங்கு துறை அதிகாரிகளும் இதை னைச் செயல் படுத்துகின்றனர். மண்ணெண்ணெய், சர்க்கரை ஆகியவை நீங்கலாக மற்ற பொருட்கள் அனைத்திற்கும் ஒரே உரிம முறை கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது. இது குறித்து மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. விரை வில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

## V. அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்குதல்.

13. அரிசி அரைவை ஆலை உரிமையாளர்கள் தங்களது அரிசி ஆலைகளை சட்டப்படி நவீனமயமாக்க வேண்டும். மத்திய அரசின் தற்போதைய ஆணைகளின்படி, இருக்கின்ற அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்குவதற்கு அனுமதிக்கப்பட்ட காலவரைமுறை, 1975 ஆம் ஆண்டு ஏப்ரலுக்கு முன்பாக ஏற்படுத் தப்பட்ட ஒரே அரைவை இயந்திரம் உள்ள ஆலைகள் நீங்கலாக ஏனைய ஆலைகளைப் பொறுத்தவரை 30—4—1981-க்குள்ளும் ஒரே அரைவை இயந்திரத்துடன் ஏற்கெனவேயுள்ள ஆலைகளை பொறுத்தவரை 6—9—1981-க்குள்ளும் முடிவடைந்துவிடும். அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்குவதற்குரிய காலக் கெடுவை மேலும் நீட்டிப்பளிக்குமாறு மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்துள்ளது.

இம்மாநிலத்தில் உள்ள சுமார் 16,000 அரிசி ஆலைகளில் சுமார் 900 அரிசி ஆலைகள் மட்டுமே நவீன மயமாக்கப்பட்டுள் ளன. அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்கும் பணியை விரைவு படுத்தும் பொருட்டு ஆலை உரிமையாளர்களுக்கு வழி காட்டவும், நிதி முதலியவற்றைப் பெற உதவி செய்யவும் குழு ஒன்றை மாநில அரசு அமைத்து அக்குழுவில் மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கங்களையும் உறுப்பினர்களாக சேர்த்துக்கொண்டுள்ளது. இக்குழு இதுவரை ஐந்து கூட்டங் களை நடத்தி அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர்



களையும் அவரவர் சங்கங்களில் உறுப்பினராக உள்ள ஆலை அதிபர்களிடம் அவர்களின் ஆலைகளை இனியும் காலதாமத மின்றி நவீனமயமாக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி எடுத்துக் கூறுமாறு இக்குழு கேட்டுக் கொண்டுள்ளது. நெல்லிலிருந்து அதிக அளவு அரிசியைப் பெற அரிசி அரைவை ஆலைகளை நவீன மயமாக்குவது மிக அவசியமாகும்.

## VI. விலைவாசி நிலைமை.

14. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மழையும் பயிர் விளைச்சலும் வழக்கமான அளவிற்கு உள்ள ஆண்டில், தானி யங்கள், கடலை எண்ணெய், கரும்பு, மிளகாய் ஆகியவை ஓரளவு உபரியாகவும், ஏனைய இன்றியமையாப் பொருட்கள் பற்றாக் குறையாகவும் இருக்கும். ஆனால், நடப்பாண்டில் வறட்சி நிலைமை காரணமாகப் பல மாவட்டங்களில் பயிர் சாவியாகி விட்டது. தவிர, சரக்கு ரயில்பெட்டிகள் கிடைப்பதில் இடர்ப் பாடு, சாலை மூலம் சரக்குகள் ஏற்றிச் செல்வதற்காகும் அதிகச் செலவு, உபரியாக உள்ள மாநிலங்களில் ஊகவாணிகம் நிலவுதல், பயிர் விளைச்சலுக்கு ஆகும் உயரிய செலவுகள், உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் சில மாநிலங்கள் விதிக்கும் கட்டுப்பாடுகள் ஆகிய வ காரணமாக இன்றியமையாப் பொருட் களின் விலைகள் பொதுவாக உயர்ந்துவிட்டன. எனினும், இம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் இருப்புநிலை போதுமான தாகவே இருக்கிறது.

அரிசி:

1979 ஆம் ஆண்டு ஜூன் முதல் நவம்பர் வரையிலான கால அளவில் அரிசி உற்பத்தி 34.67 இலட்சம் டன்களாக இருந்தது. 1980 ஆம் ஆண்டில் ஜூன் முதல் நவம்பர் வரையிலான கால அளவில் அரிசி உற்பத்தியளவு 32.05 இலட்சம் டன்களாகக் குறைந்துவிட்டது. குறுவைச் சாகுபடி மனநிறைவளிக்கும் வகையில் இருந்தபோதிலும், கணிசமான ஒரு பகுதி கேரளத் துக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. அதே நேரத்தில் ஆந்திர மாநிலத்திலிருந்து இம்மாநிலத்திற்கு வழக்கம் போல் வரவேண்டிய அரிசி, அங்குள்ள விலை உயர்வினாலும் போக்கு வரத்து அனுமதிச்சீட்டு வழங்குவதில் உள்ள கட்டுப்பாட்டினாலும் போக்குவரத்து இடர்ப்பாடுகளினாலும் வரவில்லை. வழக்கமாக அரிசி உபரியாக இருக்கும் வட ஆற்காடு, செங்கல்பட்டு தென் ஆற்காடு மாவட்டங்களில் நெற்பயிர் விளைச்சல் தவறி விட்டதும், வெளி அங்காடியில் அரிசி விலை ஏற்றத்திற்கு மற்றொரு முக்கிய காரணமாகும். மாநிலத்தில் சில பகுதி களில் வறட்சி நிலைமை நிலவுகிறது. இவையும் அரிசி விலை ஏற்றத்திற்குக் காரணங்களாகும். அதன் விளைவாக, கடந்த

கடலைப்பருப்பு விலை, விளைச்சல் தவறியதாலும், உற்பத்தியாகும் மாநிலங்களில் ஊர் வாணிகம் காரணமாகவும் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. முன்பு கிலோவுக்கு ரூபாய் 3.25 ஆக விற்ற இப்பருப்பு தற்போது ரூபாய் 5.85 வரை விற்கிறது. பருப்பு வகைகள் நீண்டநாள் இருப்பில் வைக்க ஏற்றவையல்ல என்றபோதிலும் அங்காடி விலையைக் காட்டிலும் குறைந்த விலைகளில் பருப்பு வகைகள் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் பொருட்டு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் குறைந்த அளவு வாங்கி விநியோகம் செய்தன.

**சர்க்கரை :**

நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் மொத்த சர்க்கரையில் 65 விழுக்காடு மத்திய அரசு லெவி சர்க்கரையாக எடுத்துக் கொள்கிறது. இச்சர்க்கரை, மத்திய அரசு நிர்ணயித்த விலையில் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படுகிறது. எஞ்சிய 35 விழுக்காடு உற்பத்தியை சர்க்கரை ஆலைகள் வெளி அங்காடியில் விற்க அனுமதிக்கப்படுகின்றன. அச்சர்க்கரைக்கு விலைக்கட்டுப்பாடு கிடையாது. 1981-82 சர்க்கரை ஆண்டில் கரும்பு விலையும் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் இதே மாதத்தில் மற்ற சர்க்கரை விலையைக் காட்டிலும் தற்போதுள்ள விலை அதிகமாயுள்ள போதிலும், 1980 நவம்பரில் சர்க்கரை கிலோ ரூபாய் 8.40 ஆக விற்று வந்ததை விட இப்போது குறைவாகவேயுள்ளது. கடந்த ஆண்டில் வெளி அங்காடியில் சர்க்கரை கிலோ ரூபாய் 5.50 ஆக விற்கப்பட்டு வந்தது தற்போது வெளி அங்காடியில் சர்க்கரை கிலோ ரூபாய் 7.30 ஆக உள்ளது. வெளி அங்காடியில் சர்க்கரையின் விலையைக் கட்டுப்படுத்த, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சர்க்கரையை அதிக அளவில் பயன்படுத்துவோருக்கு கிலோ ரூபாய் 6.25-க்கு விற்று வருகிறது.

**சமையல் எண்ணெய் :**

தமிழ்நாட்டில் கடலை எண்ணெயைத் தவிர மற்ற சமையல் எண்ணெய்கள் மிகவும் பற்றாக்குறையாக உள்ளன. கடலை எண்ணெய், நமது மாநிலத்தில் ஓரளவு உபரியாக உள்ளது. ஆனால் மாரிக்காலப் பயிர் நம் மாநிலத்தில் சாவியாகி விட்டது. 1979 மழைக் காலத்தில் வணிக மதிப்பீட்டில் 2.27 இலட்சம் டன்கள் மணிலாப் பயிறு விற்பதற்கு உபரியாக இருந்தது ஆனால், 1980 மாரிக்காலத்தில் 1.31 இலட்சம் டன்கள் மட்டுமே விற்பனைக்கு வந்த உபரியென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது, கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகக் குறைந்த அளவாகும். 1980 மாரிக்காலத்தில் நம்



மாநிலத்தில் வேர்க்கடலைச் சாகுபடி நல்ல விளைச்சலைத் தரவில்லை. நல்லெண்ணெயைப் பொறுத்தவரையில் நம் மாநிலம் எள்ளை இறக்குமதி செய்வதில் ஆந்திரப்பிரதேசம், இராஜஸ்தான் மற்ற வட இந்திய மாநிலங்களையே பெரிதும் நம்பிவருகின்றது. எள்ளை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் எள்ளின் விளைச்சல் நல்ல பலனைத் தராததால், நல்லெண்ணெயின் விலை உயர்ந்துள்ளது. தேங்காய் எண்ணெயைப் பொறுத்த மட்டில், நமது தேவை முழுவதும், கேரள மாநிலத்திலிருந்து நிறைவு செய்யப்படுகிறது. வேர்க்கருகல் நோய் காரணமாக அம் மாநிலத்தில் தென்னை நல்ல பலனைத் தரவில்லை. அதனால், அம் மாநிலத்திலுங்கூட, தேங்காய் எண்ணெயின் விலை மிக அதிகமாக உள்ளது. எண்ணெய் வித்துப் பயிர்கள் சாவியானதாலும், மாநிலத்திற்குப் போதிய அளவு பாமோலின் எண்ணெய் ஒதுக்காததாலும் சமையல் எண்ணெய்களின் விலைகள் ஆண்டு முழுவதும் ஏறுமுகமாகவே இருந்தன. கடலை எண்ணெயின் தற்போதைய நடப்பு விலை கிலோ ரூபாய் 14.10 ஆகும். இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபாய் 3.75 அதிகமாகும். நல்லெண்ணெயின் நடப்பு விலை கிலோ ரூபாய் 14.45 ஆகும். இது கடந்த ஆண்டைவிட ரூபாய் 1.90 அதிகமாகும். தேங்காய் எண்ணெயின் நடப்பு விலை கிலோ ரூபாய் 19.85 ஆகும். இது கடந்த ஆண்டைவிட ரூபாய் 3.55 அதிகமாகும்.

இம்மாநிலத்தில் சமையல் எண்ணெயின் நிலவரம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :—

| எண்ணெயின் பெயர். | தேவைப்படும் அளவு. | கிடைக்கும் அளவு. | பற்றாக் குறை |
|---|---|---|---|
| | (இலட்சம் டன்களில்) | | |
| 1 கடலை எண்ணெய் | 1.74 | 1.44 | 0.30 |
| 2 நல்லெண்ணெய் | 0.96 | 0.59 | 0.37 |
| 3 தேங்காய் எண்ணெய் | 0.30 | 0.15 | 0.15 |
| | | மொத்தம் | 0.82 |

இப்பற்றாக்குறையை ஈடு செய்ய 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் வரையில் பொது விநியோக முறையில்

பாமோலின் எண்ணெய் கிலோ ஒன்றிற்கு ரூபாய் 8.35 வீதம் 20,018 டன் வழங்கப்பட்டது. பாமோலின் எண்ணெய் ஒதுக்கீட்டளவைக் கூடுதலாக்கு மாறு நாம் மத்திய அரசைக் கேட்டுள்ளோம்.

உணவு துணைப் பொருட்கள் (நறுமணப் பொருட்கள்):

கடந்த ஆண்டில், ஒரு கிலோ மிளகாய் விலை ரூபாய் 7.26 ஆக இருந்தது. இவ்வாண்டில் அது கிலோ ஒன்றிற்கு ரூபாய் 8.10 வரை விற்கிறது. கடந்த ஆண்டில் ஒரு கிலோ புளியின் விலை ரூபாய் 5.30 ஆக இருந்தது. இவ்வாண்டில் அது ரூபாய் 6.50 வரை விற்கிறது. இம்மாநிலத்தில் ஆண்டொன்றுக்கு தேவைப்படும் புளியின் அளவில் சுமார் 70 விழுக்காடு பற்றாக் குறையாக உள்ளது. புளி விளையும் உபரி மாநிலங்களில் புளியின் விலை உயர்ந்துள்ளது. கொத்தமல்லிப் பயிர் விளைச்சல் தவறியதன் காரணமாகவும், இம்மாநிலத்தில் கொத்தமல்லி குறைந்த அளவு நிலப் பரப்பிலேயே பயிரிடப்பட்டிருப்பதாலும் கடந்த ஆண்டில் கிலோ ரூபாய் 4.70 ஆக இருந்த அதன் விலை தற்போது ரூபாய் 6.95 ஆக உயர்ந்துள்ளது.

15. உணவு விடுதிகளில் பண்டங்களின் விலை.—உணவு விடுதிகளில் விற்கப் படும் உணவுப் பண்டங்களின் விலைகள் உயர்ந்துள்ளன. இந்நிலை அரசுக்குப் பெரும் கவலை அளிப்பதாக உள்ளது. குறிப்பிட்ட சில உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க வாய்ப்பு உள்ளது என்றும், உணவு விடுதி உரிமை யாளர்கள் அரசின் இக்கருத்தை ஏற்று உணவுப் பண்டங்களின் விலையைக் குறைத்து விட வேண்டுமென்றும் அரசு அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. உணவு விடுதி உரிமையாளர்கள் சங்கம், 15—9—1980 ஆம் நாள் முதல், பின்வரும் உணவுப் பண்டங்களை குறைந்த விலைக்கு விற்பனை செய்யத் தாமாகவே முன்வந்தது.

உணவு விடுதிகளின் வகைப்பாடு.

| | ஏ | பி | சி |
|---|---|---|---|
| | (காசுகள்.) | | |
| இட்டலி | 35 | 30 | 30 |
| காப்பி | 50 | 45 | 40 |
| தேநீர் | 35 | 30 | 25 |



அரசு நிர்ணயம் செய்துள்ள விலைக்கு மண்ணெண்ணெயும் அங்காடி விலையை விட குறைவான விலைக்குச் சர்க்கரையும் உணவு விடுதிகளுக்கு வழங்கப்பட்டன. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து மேற் சொன்ன உணவுப் பண்டங்களின் விலைகளை இச் சங்கம் தன்னிச்சையாக உயர்த்திய போது அதிகாரிகள் அவர்களோடு கலந்துரையாடி அவர்கள் முன்னர் விற்பதற்காக ஒப்புக் கொண்ட விலைக்கே பண்டங்களை விற்க வேண்டுமென்று வலியுறுத்தினர். ஆனால் உணவுவிடுதி உரிமையாளர்கள் சங்கம், விலையின் ஒரு பகுதியை மட்டுமே குறைத்து உள்ளது. இவ்வாறு, மேற்சொன்ன தாமாகவே முன்வந்து விற்பனை செய்வதற்கு ஒப்புக் கொண்ட குறைந்த விலைக்கு விற்பனை செய்யத் தவறிய உணவு விடுதிகளுக்கு குறைந்த விலைக்கு வழங்கப்பட்டு வந்த இன்றியமையாப் பொருட்களை அவ்வாறு குறைந்த விலைக்கு தொடர்ந்து வழங்குவது நிறுத்தப்பட்டுவிட்டது. மேற்சொன்ன விலை விதங்களைக் கடைப்பிடித்து வரும் உணவுவிடுதிகளுக்கு இன்றியமையாப் பொருட்கள் தொடர்ந்து குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போதைய நிலையை அரசு கூர்ந்து கவனித்து வருகிறது. உணவு விடுதிகளில் உணவுப் பண்டங்கள் தொடர்ந்து அதிக விலைக்கு விற்கப் பட்டுவருமானால் பொது நலனைக் கருத்தில் கொண்டு உணவுப் பண்டங்களின் விலையை நிர்ணயம் செய்து ஆணையிட வேண்டிய கட்டாய நிலை அரசுக்கு ஏற்படும்.

## VII உணவுப் பொருள் வழங்குதுறையின் குற்றப் புலனாய்வுத் துறை.

16. உணவுப் பொருள் வழங்கு துறையின் குற்றப் புலனாய்வுத் துறை, காவல்துறைக் கூடுதல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருவரின் தலைமையில் செயற்பட்டு வருகிறது. உணவுப் பொருட்களைப் பதுக்கல் செய்வதையும், கடத்தல் செய்வதையும் தடுக்கும் பொருட்டு திருச்சிராப்பள்ளியைத் தலைமை யிடமாகக் கொண்டு 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து பதுக்கல் தடைத் தனிப் பிரிவு ஒன்று செயற்பட்டு வருகிறது.

1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் பிறப் பிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளை, குறிப்பாக அரிசி, சர்க்கரை பருப்பு வகைகள், சமையல் எண்ணெய்கள் ஆகியவற்றின் இருப்பு அளவுகள் மற்றும் கணக்குகள் முதலியவற்றை எழுதி வருதல் தொடர்பான விதித் துறைகளை உணவுப் பொருள் வழங்கல் துறையின் குற்றப் புலனாய்வுத் துறைப் பிரிவு செயற்படுத்திவருகிறது. பொது மக்களின் தகவலுக்காக பொருட்களின் விலைகள், கைவசமுள்ள பொருட்களின் இருப்புகள் ஆகிய

வற்றைக் குறிப்பிட்டு அறிவிப்புப் பலகைகளை வணிகர்கள் வைத்து வருவதை உறுதி செய்யும் பொருட்டு பொருட்களின் விலைகள், அவற்றின் இருப்புகள் ஆகியவற்றை அறிவித்து வரவேண்டும் என்பதை இப் பிரிவு செயல்படுத்தி வருகிறது.

1980 ஆம் ஆண்டில் இப் பிரிவு 1,522 வழக்குகளைப் பதிவு செய்துள்ளது. இது, 465 இனங்களில் வழக்குகளைத் தொடர்ந்துள்ளது; இவற்றில் 255 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. ஆறு வழக்குகள் விடுதலையில் முடிந்தன. குற்றஞ் சாட்டப்பட்டவர் ஒருவர் இறந்து விட்டதால் ஒரு வழக்கு முடிக்கப்பட்டுவிட்டது. ஏனைய வழக்குகள் அனைத்தும் புலனாய்வில் உள்ளன.

1980 ஆம் ஆண்டில் இப் பிரிவு, சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு இன்றியமையாப் பொருட்களைக் கைப்பற்றியுள்ளது; இச்சாதனை, 1964 ஆம் ஆண்டில் உணவுப்பிரிவு அமைக்கப்பட்டதிலிருந்து இதுவரை சாதித்த செயல்களில் மிகச் சிறப்பானதாகும்.

## VIII. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம்.

17. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் முழுவதும் மாநில அரசுக்குச் சொந்தமான ஒரு நிறுவனமாகும். இக்கழகம் 1972 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. உணவுப் பொருள் வழங்கு துறையிடமிருந்து இன்றியமையாப் பொருட்களைக் கொள்முதல் செய்தல், இருப்பு வைத்தல், விநியோகித்தல் போன்ற பணிகளை இக்கழகம் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ளது. மாநில அரசு விதிக்கின்ற லெவியின் கீழ் அல்லது தனது நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலம் ஆதார விலையில் வெளி அங்காடியில் நெல், அரிசி இருப்புகளை கொள்முதல் செய்து பொது விநியோக முறையைச் செயல்படுத்துவதற்காக அரிசியை வழங்குவதே தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் முக்கிய பணியாகும். நெல் அறுவடையும், பருவ மழையும் ஒரே காலத்தில் ஏற்படும் குறுவைப் பருவத்தில் விவசாயிகள் தங்களது விளை பொருட்களை கட்டுப்படியாகும் விலையில் விற்பதில் உள்ள இடையூறுகளைத் தவிர்க்கும் பொருட்டு இக்கழகம் தனது நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமாக, விவசாயிகளிடம் இருந்து, தஞ்சாவூர், தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் பெரும் அளவில் நெல்லைக் கொள்முதல் செய்கிறது. 1980 ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தின் போது இக்கழகம், சுமார் 80,000



டன்கள் நெல்லைக் கொள்முதல் செய்துள்ளது. இந்திய அரசு இம்மாநில அரசுக்கு மத்தியத் தொகுப்பிலிருந்து ஒதுக்கிய அரிசியையும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் பெற்று வழங்கி வருகிறது. இக்கழகம், இந்திய உணவுக் கழகத்தின் இருப்பிலிருந்து சுமார் 1,75,000 டன்கள் அரிசியை இரயில் மூலமாகவும் சாலைப் போக்குவரத்து மூலமாகவும் ஆந்திர மாநிலத்திலிருந்து கொண்டு வந்தது. இக்கழகம், ஆந்திரா நுகர் பொருள் வணிகக் கழகத்திடமிருந்தும் பச்சரிசியைக் கொள்முதல் செய்து, தனது "அமுதம்" விற்பனைக் கூடங்கள் மூலம் வெளி அங்காடியில் விற்கும் விலையை விடக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது. இந்த அரிசிக்கு வாடிக்கையாளர்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் 1980 ஆம் ஆண்டில் பொது விநியோக முறையின் கீழ் 1.50 இலட்சம் டன்கள் அரிசியை விற்பனை செய்துள்ளது.

நெல், அரிசி மட்டுமின்றி, இக்கழகம், மாநில அரசின் மொத்த விற்பனை முகவராக லெவி சர்க்கரையையும், கொள்முதல் செய்து விநியோகித்து வருகிறது. இந்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ள லெவி சர்க்கரை இருப்புகளை விலை கொடுத்துப் பெற்று அவற்றை சர்க்கரை ஆலைகளிடமிருந்து மாநிலம் முழுவதுமுள்ள தனது சேமிப்புக் கிடங்குகளுக்கு எடுத்துச் சென்று பின்னர் சில்லறை நியாய விலைக் கடைகளுக்கு வழங்குகிறது, நீதிமன்ற ஆணைகளின் காரணமாக இக்கழகம், லெவி சர்க்கரைக்கு இந்திய அரசு வரையறுத்துள்ள விலைகளை விட அதிக விலை கொடுத்துள்ளது. இந்த வகையில் 1980—81 ஆம் ஆண்டிற்கு மட்டும் இந்திய அரசிடமிருந்து சுமார் 736 இலட்சம் ரூபாய் வரவேண்டியுள்ளது. லெவி சர்க்கரை மட்டுமின்றி இக்கழகம், அதிக அளவு சர்க்கரை பயன்படுத்துவோர்க்கும் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கும் வழங்கப்படும் லெவி சர்க்கரைக்குக் கூடுதலாகத் தேவைப்படும் சர்க்கரையை விற்பனை செய்வதற்காக 1980—81 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட 15,020 டன்கள் சர்க்கரை உட்பட 42,000 டன்கள் அளவுக்கு வெளி அங்காடி சர்க்கரையை வாங்கியுள்ளது இக்கழகம் வாங்கிய வெளி அங்காடி சர்க்கரையின் மதிப்பு சுமார் ரூபாய் 20 கோடி ஆகும். இக்கழகம் வெளி அங்காடி சர்க்கரையை போதிய அளவிற்கு முடையிருப்பில் வைத்திருந்ததால் தீபாவளி, பொங்கல் பண்டிகைக் காலங்களில் நாட்டின் பல பகுதிகளில் சர்க்கரை கிடைக்காதபோது இம்மாநிலத்தில் பொது மக்களுக்குத் தேவையான சர்க்கரையை இவ்வரசால் வழங்க முடிந்தது. இக்கழகம், சிமிட்டி, மண்ணெண்ணெய், பாமோலின் எண்ணெய் போன்ற ஏனைய இன்றியமையாப் பொருட்களை வழங்கவும் தொடங்கியது. இந்த அரசு தொடர்ந்து செய்து வந்த வேண்டுகோளின்

விளைவாக சென்னை மாநகரில் ஜார்ஜ் டவுன், கோபாலபுரம் பகுதிகளில் மண்ணெண்ணெய் விற்கும் மொத்த விற்பனையாளராக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை, இந்திய எண்ணெய் நிறுவனம் நியமித்துள்ளது. இக்கழகம், 1980-81 ஆம் ஆண்டில் சுமார் 1.9 இலட்சம் டன்கள் சிமிட்டியைக் கொள்முதல் செய்து, அனுமதிச் சீட்டு வைத்துள்ளவர்களுக்கு வழங்கியுள்ளது.

இந்திய அரசு, பாமோலின் எண்ணெயை ஒவ்வொரு திங்களிலும் இம் மாநிலத்திற்கு ஒதுக்கி வருகிறது. இதனை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், மாநில அரசின் முகவராக பாரத வணிக நிறுவனத்திடமிருந்து இருப்புகளை வாங்கி, சில்லரைக் கடைகளுக்கு வழங்கி வருகிறது. 1980-81 ஆம் ஆண்டில், 1981 சனவரி வரையில், இக்கழகம் 9.6 கோடி ரூபாய் மதிப்புள்ள சுமார் 14,000 மெட்ரிக் டன்கள் "பாமோலின்" எண்ணெயை கொள்முதல் செய்து வழங்கி வந்துள்ளது. பாரத வணிக நிறுவனம் இவ்வெண்ணெயை சென்னைத் துறைமுகத்தில் மட்டுமே வழங்கி வருகிறது. இதனைத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் இம்மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கொண்டு சென்று குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு இக்கழகத்தின் நியாயவிலைக் கடைகள் மூலமும் வழங்கி வருவதோடு, கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தி வருகின்ற நியாயவிலைக் கடைகள் மூலமும், வழங்கி வருகிறது.

சென்னை மாநகரில் விறகுப் பற்றாக்குறை ஏற்பட்டபோது, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் வனத் துறையிலிருந்து விறகை வாங்கி, அதனுடைய நியாய விலைக் கடைகள் மூலமாக விற்றது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்த 32 நியாய விலைக் கடைகள் விறகு விற்பனையில் ஈடுபட்டுள்ளன. இச்சில்லறை விற்பனைக் கடைகள் மட்டுமின்றி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோக முறையின்கீழ் 49 "அமுதம்" கடைகளையும் நடத்தி வருகின்றது. "அமுதம்" கடைகளில் ஒப்பனைப் பொருட்கள்; நறுமணப் பொருட்கள் முதலியவை உட்பட எல்லாப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. 1980-81 ஆம் ஆண்டுக் காலத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகம் ரூபாய் 75 இலட்சம் மதிப்புள்ள 2,750 மெட்ரிக் டன்கள் உளுந்து வாங்கியுள்ளது மேலும் ரூபாய் 80 இலட்சம் விலை மதிப்புள்ள 2,000 மெட்ரிக் டன்கள், துவரம்பருப்பு வாங்குவதென திட்டமிட்டு அதில் இதுகாறும் சுமார் 1,000 டன்கள் துவரம்பருப்பை கொள்முதல் செய்துள்ளது.

நியாய விலைக் கடைகளுக்கு இன்றியமையாப் பொருட்களை வழங்கும் பொருட்டு அவற்றைச் சேமித்து வைப்பதற்காக இம்மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலும் சேமிப்புக் கிடங்குகளை அமைக்க வேண்டியது அவசியம்.



தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ரூபாய் 7.20 கோடி மதிப்புள்ள 110 சேமிப்புக் கிடங்குகளை சொந்தமாக கொண்டுள்ளது. அச்சேமிப்புக் கிடங்குகளின் சேமிப்புத் திறன் 2.06 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். கூடுதலாக 19,000 டன்கள் சேமிப்புத்திறன் கொண்ட 8 கிடங்குகளை ரூபாய் 76 இலட்சம் செலவில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 43,000 டன்கள் சேமிப்புத் திறன் கொண்ட 32 சேமிப்புக் கிடங்குகளை ரூபாய் 1.72 கோடி செலவில் கட்டுவதென இக்கழகம் முடிவு செய்துள்ளது. சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்காகும் செலவைத் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை தனது நிதியிலிருந்து மட்டுமே செலவிட்டுள்ளது.

நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம், கூட்டுறவுப் பிரிவிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட பதின்மூன்று நவீன அரிசி ஆலைகள் உள்ளன. நுகர் பொருள் வாணிபக் கழகம் வாங்கும் நெல், நவீன அரிசி ஆலைகள் மூலமாகவும், தனிப்பட்ட அரிசி அரவை ஆலை முகவர்களின் ஆலைகள் மூலமாகவும் அரிசியாக மாற்றப்படுகிறது. நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கென கூடுதலாக நெல்லரைக்கும் திறன்கொண்ட ஆலையை அமைக்கும் பொருட்டு, ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 180 இலட்சம் செலவில், நாளொன்றுக்கு 120 டன்கள் நெல்லரைக்கும் திறன் கொண்ட நவீன அரிசி ஆலை ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஒன்றுள்ளது.

காவல்படைப் பணியாளர்கள், தீயணைப்புத்துறைப் பணியாளர்கள் ஆகியோருக்கு இன்றியமையாப் பொருட்களை குறைந்த விலையில் வழங்கவும் முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்கள், விதவைகள், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு இலவசமாக அரிசி வழங்கவும் மாநில அரசு அனுமதி அளித்துள்ளது. மேற்கூறிய அனைத்துத் திட்டங்களின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் இன்றியமையாப் பொருட்களை வழங்குகிறது. திங்கள் ஒன்றுக்கு இத்திட்டங்களின்கீழ் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் மதிப்பு சுமார், ரூபாய் 60 இலட்சங்களாகும்.

கிராமந்தோறும் நியாய விலைக் கடை திறக்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், திருநெல்வேலி, தஞ்சாவூர், தருமபுரி, தென் ஆற்காடு மாவட்டங்களில் மொத்தம் 4,053 நியாய விலைக் கடைகளைத் திறந்து நடத்தி வருகின்றது. இக்கடைகள் மூலமாக, 1980—81 ஆம் ஆண்டு

காலத்தில், 1980 டிசம்பர் வரையில் ரூபாய் 15.39 கோடி பெறுமான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இக்கழகம் 1973-74 முதல் 1977-78 வரை ஆதாயத்தில் நடைபெற்று வந்தது. நெல்லையும், அரிசியையும் முடைவிருப்பில் வைத்திருந்ததாலும், மத்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலையைக் காட்டிலும் அதிக விலைக்கு நெல்லை சாகுபடியாளர்களிடமிருந்து வாங்கியதாலும், அரசு நிர்ணயித்த கட்டுப்படியாகக்கூடிய விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கு அரிசியை விற்பனை செய்ததாலும் குறிப்பாக 1978-79 ஆம் ஆண்டிலிருந்து இழப்பு ஏற்பட்டது. 1978—79 ஆம் ஆண்டுக் காலத்தில் ஏற்பட்ட இழப்பு சுமார் ரூபாய் 995 இலட்சங்களாகும். 1979—80 ஆம் ஆண்டுக் காலத்தில், கழகத்தின் பணிகள் விரிவாக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட இழப்பு 265 இலட்சங்களாகக் குறைந்தது. இதனால் ஏற்பட்ட மொத்த இழப்பு ரூபாய் 12.60 கோடியாகும்.

## IX தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்.

18. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 51 மையங்களில் சேமிப்புக் கிடங்குகளை பராமரித்து வருகிறது. சொந்தமாகக் கட்டப்பட்ட கிடங்குகளின் கொள்திறன் 1.97 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். 1980-81 ஆம் ஆண்டுக் காலத்தில், சுமார் 35,100 மெட்ரிக் டன்கள் கொள்திறனுடைய 13 சேமிப்புக் கிடங்குகள் கட்டும் பணியை மேற்கொண்டுள்ளது. 1981—82 ஆம் ஆண்டுக் காலத்தில் ரூபாய் 50 இலட்சம் செலவில் 18,600 மெட்ரிக் டன் திறனுடைய சேமிப்புக் கிடங்குகளைக் கட்டக் கருதியுள்ளது. இவ்வாறு சொந்தமாகச் சேமிப்புக் கிடங்குகளை வைத்திருப்பதோடு, 54,505 மெட்ரிக் டன்கள் திறனுடைய தனியார் சேமிப்புக் கிடங்குகளையும் வாடகைக்கு எடுத்துக் கொண்டுள்ளது. "ஸ்பிக்" நிறுவனம், சென்னை உரத் தொழிற்சாலை, இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றின் சேமிப்பு வசதி தேவைகளையும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் நிறைவு செய்துள்ளது.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஆதாயத்தில் நடைபெறுகிறது என்பதை பின்வரும் விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:—

| ஆண்டு. | சேமிப்புக் கட்டணமாகக் கிடைக்கும் வருமானம். (ரூபாய் இலட்சத்தில்.) | நிகர ஆதாயம் (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1975-76 | 56.80 | 28.96 |



| ஆண்டு. | சேமிப்புக் கட்டணமாகக் கிடைக்கும் வருமானம் (ரூபாய் இலட்சத்தில்) | நிகர ஆதாயம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1976-77 | 62.01 | 18.52 |
| 1977-78 | 96.71 | 42.59 |
| 1978-79 | 99.94 | 38.43 |
| 1979-80 | 79.68 | 23.35 |

இக்கழகத்தில் 1979—80 ஆம் ஆண்டு வரையிலான கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன. சேமிப்புக் கிடங்குகளில் ஒழுங்கீனங்களும் முறைகேடுகளும் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு, 1979, ஏப்ரல் முதல் சேமிப்புக் கிடங்குகளை அடிக்கடி திடீர் சோதனை செய்யும் நோக்கத்துடன், நிர்வாக இயக்குநரின் நேரடி கட்டுப்பாட்டில் ஒழுக்கக் கண்காணிப்பு ஆய்வுப் பிரிவொன்று தனியாக நியமிக்கப்பட்டுள்ளது. உணவு தானியங்களை அறிவியல் முறையில் சேமித்து வைப்பதற்கான வசதியை அளிப்பதன் மூலமாகத் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் பயனுள்ள பணியாற்றி வருகிறது.

## இணைப்பு VI.

(439ஆம் பக்கத்தில் இனம் (2) கூறும் அடிக்குறிப்பைக் காண்க.

### பாகம் A

### தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்.

1980ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தொழில் அமைதியும், நட்புறவும் தொடர்ந்து நிலவின. நாட்டின் நலனையும் தொழில் வளத்தையும் கருத்தில் கொண்டு, தொழிலாளர் நலனுக்காக அரசு மேற்கொண்ட கொள்கையே இதற்குக் காரணம் ஆகும்.

மாநிலம் முழுவதும் மலைத் தோட்டத் தொழிலாளர்களால் ஆறு நாட்கள் நடத்தப்பட்ட வேலை நிறுத்தத்தைத் தவிர, இம்மாநிலத்தில் வேறு பெருந் தொழில் அமைதியின்மை ஏதும் நிலவவில்லை. இவ்வேலை நிறுத்தம் கூட, தொழிலாளர் நல அமைச்சரின் நன் முயற்சியால், தொழிலாளர்களுக்கும் மலைத் தோட்ட அதிபர்களுக்குமிடையில் திருப்திகரமான முறையில் சிறந்த உடன்பாட்டின் மூலம் உடனே தீர்த்து வைக்கப்பட்டது.

நியாயமான ஊதியத்தையும் மன நிறைவு தரும் பணி நிபந்தனைகளையும் தொழிலாளர்களுக்குப் பெற்று தரவும், தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அரசு பின்பற்றி வந்த கொள்கை காரணமாகவே தொழிலதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே எப்போதும் நல்லுறவு நீடித்து வந்தது.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு அவர்களுக்குரிய உரிமையை அரசு ஏற்றுக் கொள்கிறது ; ஆனால், வேலை நிறுத்தங்கள் நடைபெறுகையில் உரிய காலத்தில் தலையிட்டு திறம்பட இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தி அமைதியான முறையில் தீர்வு காண்பதன் மூலம் தொழிலாளர்களின் பிரச்சினைகளை சுமூகமாகத் தீர்க்கலாம் என்பதோடு, அதன் மூலம் நீண்ட காலத்துக்கு வேலை நிறுத்தங்கள் நீட்டிக்க விடாமல் தடுக்கலாம். தொழில் அமைதியைக் கட்டிக் காக்கும் முயற்சியில் நிருவாகத்தினரும் தொழிற்சங்கங்களும் நல்கிய ஒத்துழைப்புக்கு அரசு தம் பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது. நிறுவன அமைப்பின்கீழ் வரும், நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனை பாதுகாப்பதோடு, நிறுவன அமைப்பின்கீழ் வராத நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சட்டப்படிக்கான குறைந்த அளவு ஊதியங்களை வழங்கச் செய்வதன் மூலம், அவர்களின் நலன்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.



இம்மாநிலத்தில் தொழிலாளர் நலன்-வேலைவாய்ப்புத் துறையின் நிர்வாகம் பற்றி இவ்வறிக்கையில் இப்பகுதியில் கீழ்க்காணும் தலைப்புகளின்கீழ் ஆய்வு செய்யப்படுகிறது :—

(1) தொழில் உறவுகள் குறித்த சட்டம்.

(2) பணி மற்றும் வேலை நிபந்தனைகள் பற்றிய சட்டம்.

(3) ஊதியங்கள் குறித்த சட்டம்.

(4) சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

(5) தொழிலாளர் நல நடவடிக்கைகள்.

(6) எடைகள்-அளவைகள் குறித்த சட்டம்.

இவற்றோடு, வேலைவாய்ப்புப் பணி, கைத்திறப் பணியாளர் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்துதல் தொடர்பான பணி குறித்து தனி அத்தியாயங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

### 1. தொழில் உறவுகள் குறித்த சட்டம்.

#### 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

1979, 1980 ஆம் காலண்டர் ஆண்டுகளில் எழுந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கையும் அவை தீர்த்துவைக்கப்பட்ட விவரங்களும் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1979 (1—1—1979 முதல் 31—12—1979 முடிய). | 1980 (1—1—1980 முதல் 31—12—1980 முடிய). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (அ) ஆண்டு தொடக்கத்தில் நிலுவையாக இருந்த புகார்கள் தகராறுகளின் எண்ணிக்கை | 2,679 | 1,844 |
| (ஆ) வரப்பெற்ற புகார்கள் எழுந்த தகராறுகள் குறித்த எண்ணிக்கை | 7,808 | 8,383 |

| (1) | 1979 (1—1—1979 முதல் 31—12—1979 முடிய). (2) | 1980 (1—1—1980 முதல் 31—12—1980 முடிய). (3) |
|---|---|---|
| (இ) முந்தைய ஆண்டுகளில் புலனாய்வு செய்யப்பட்ட புகார்கள், தகராறுகள் உட்பட தற்போது புலனாய்வு செய்யப்பட்ட புகார்கள் தகராறுகள் ஆகியவை குறித்த எண்ணிக்கை .. | 8,643 | 8,457 |
| (ஈ) இணக்க முறையில் தீர்க்கப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. | 1,826 | 1,667 |
| (உ) இணக்க அதிகாரிகளின் தலையீட்டினால் தீர்க்கப்பட்ட தகராறுகள் .. | 6,088 | 5,748 |
| (ஊ) சமரசத்திற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை | 719 | 1,036 |
| (எ) நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. | 10 | 6 |
| (ஐ) ஆண்டு இறுதியில் நிலுவையாக இருந்த தகராறுகளின் எண்ணிக்கை .. | 1,844 | 1,779 |

வேலையை நிறுத்தி விடுதல்.

அறிக்கை ஆண்டிலும், முந்தைய ஆண்டிலும் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் ஒப்பு நோக்கு விவரங்கள் பின்வருமாறு :—

| | 1979 (1-1-79 முதல் 31-12-79 முடிய) | 1980 (1-1-80 முதல் 31-12-80 முடிய |
|---|---|---|
| (அ) கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை .. | 331 | 293 |
| (ஆ) இழந்த உழைப்பு நாட்கள் | 82,73,236 | 35,01,022 |



1979, 1980 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற, நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்த தொழில் வாரியான பகுப்பாய்வு வருமாறு :—

| தொடர் எண், தொழில். (1) | வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கை. 1979 (1-1-1979 முதல் 31-12-1979 முடிய). (2) | 1980 (1-1-1980 முதல் 31-12-1980 முடிய). (3) | இவற்றில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. 1979 (1-1-1979 முதல் 31-12-1979 முடிய). (4) | 1980 (1-1-1980 முதல் 31-12-1980 முடிய). (5) | இதனால் இழந்த உழைப்பு நாட்கள். 1979 (1-1-1979 முதல் 31-12-1979 முடிய). (6) | 1980 (1-1-1980 முதல் 31-12-1980 முடிய). (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 துணி ஆலைகள் | 135 | 107 | 1,86,289 | 78,916 | 63,77,315 | 15,69,824 |
| 2 பொறியியல் .. | 67 | 70 | 25,161 | 14,099 | 9,59,051 | 4,23,884 |
| 3 தோல் பதனிடும் தொழிற் சாலைகள் .. | 1 | 8 | 28 | 728 | 56 | 13,392 |
| 4 புகையிலை பீடித் தொழில் .. | 3 | 5 | 3,714 | 50,377 | 32,493 | 5,16,184 |
| 5 மலைத் தோட்டத் தொழில்கள் .. | 21 | 13 | 17,661 | 90,643 | 2,02,481 | 3,66,216 |
| 6 ஏனையவை .. | 104 | 90 | 42,295 | 47,021 | 7,01,840 | 6,11,522 |
| மொத்தம் .. | 331 | 293 | 2,75,148 | 2,81,784* | 82,73,236 | 35,01,022 |

* 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள சுமார் 50,000 பீடித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததன் காரணமாக, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

5. கெம்பிளாஸ்ட், மேட்டூர்.

மேட்டூர் கெம்பிளாஸ்ட் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு எதிராக கெம்பிளாஸ்ட் தொழிலாளர்கள் சங்கம் தொழிற் தகராறு ஒன்றினை 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாளன்று எழுப்பியது. சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் முன் 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்படிக்கை 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாளன்று ஏற்பட்டது. அடிப்படை ஊதியங்கள், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, இரவு முறை மாற்றுப் பணிப் படி, சீருடைப் படி, முதலியவைகள் தொடர்பான பிரச்சினைகள் இவ்வுடன்படிக்கையில் அடங்கும்.

...

மேற்கூறப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகளின் அடிப்படையில், 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11 ஆம் நாளிலிருந்து மாதமொன்றுக்கு ரூ. 60 ஒவ்வொரு தொழிலாளிக்கும், அதிகப்படியான ஊதியமும், 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11 ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு தொழிலாளிக்கும். மாதமொன்றுக்கு அதிகப்படி ரூ. 150-ம், 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11 ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு தொழிலாளிக்கும் மாதமொன்றுக்கு இன்னும் அதிகப்படி ரூ. 15-ம் அத்துடன் அகில இந்திய நுகர்வோர் விலை பட்டியலில் முதல் 300 புள்ளிக்கு ரூ. 1.30 வீதம் அகவிலைப்படி அதிகமும் பெறுவர். வீட்டு வாடகைப்படியும் அதிக அளவு திருத்தியமைக்கப்பட்டது. இவ்வாறு உடன்பாடு சுமூகமான முறையில் ஏற்பட்டதன் விளைவாக, வேலை நிறுத்தம் உடனடியாக கைவிடப்பட்டது.

6. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பீடித் தொழிற்சாலை.

வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த சுமார் 50,000 பீடி சுற்றும் தொழிலாளர்கள், ஊதிய உயர்வு, பணிக்கொடை முதலிய கோரிக்கைகளை வைத்து, 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் நாளன்று வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை தொழிலாளர் நல இணை ஆணையர் முன்பு இணக்கப் பேச்சு வார்த்தை நடைபெற்றதன் விளைவாக 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் ;9 ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்படிக்கையின் விளைவாக 1,000 பீடி சுற்றுவதற்கு பைசா 50 வீதம் ஊதிய உயர்வும், 1,000 பீடி சுற்றுவதற்கு பைசா 10 வீதம் பணிக்கொடையும் பெற்றனர்.

7. பாரி கன்பெக்ஷினரி லிமிடெட், நெல்லிக்குப்பம்.

நெல்லிக்குப்பம் பாரி கன்பெக்ஷினரி லிமிடட்டை சார்ந்த சுமார் 500 தொழிலாளர்கள் தங்களின் ஊதிய நிலுவைகளை கொடுக்கும்படி கோரி, 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம்



நாளன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதனால் நிர்வாகம் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18 ஆம் நாளில் இருந்து கதவடைப்புச் செய்தது. தொழிலாளர் நல துணை ஆணையாளர்-II முன் ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவாக நிர்வாகம், 1979 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 1980 பிப்ரவரி வரையுள்ள காலத்திற்கு உரிய நிலுவையாக உள்ள செயலூக்கத் தொகையை வழங்க ஒப்புக் கொண்டதோடு, 23 நாட்களுக்குரிய ஊதியத்திற்கு சமமான ஒரு தொகையை முன் பணமாக வழங்கவும் இதில் 13 நாட்களுக்குரிய ஊதியத் தொகையை 5 சம தவணைகளில் வசூலிக்கவும், நிர்வாகம் ஒப்புக் கொண்டது. இந்த உடன்படிக்கையின் பயனால் நிர்வாகம் கதவடைப்பை நீக்கியதோடு 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் நாளிலிருந்து தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

8. தென்னிந்தியா கூட்டுறவு நூற்பாலைகள், பேட்டை.

1974-ஆம் ஆண்டு கையெழுத்தான உடன்படிக்கையின் பயனாக வழங்க வேண்டியிருந்த ஊதிய நிலுவைத் தொகைகளை வழங்குவது தொடர்பாத எழுந்ததே இப்பிரச்சினையாகும். 1980ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் நாளன்று தொழிலாளர் நல் இணை ஆணையாளர் முன்பு இது தீர்த்து வைக்கப்பட்டது. சுமார் 250 தொழிலாளர்கள் ரூ. 500லிருந்து 1,500 வரை நிலுவையாக இருந்த ஊதியங்களைப் பெற்றனர்.

9. ஸ்ரீராமகிருஷ்ணா ஸ்டீல் தொழிற்சாலை லிமிடெட், காரமடை.

ஸ்ரீ ராம கிருஷ்ணா ஸ்டீல் தொழிற்சாலையைச் சார்ந்த சுமார் 1,050 தொழிலாளர்கள் பல்வேறு தினங்களில் பல கோரிக்கைகளை நிர்வாகத்தினரிடம் எழுப்பினர். அதன்பிறகு தங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் 1980ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்யப் போவதாகக் கூறி 1980ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14ஆம் நாளிட்ட வேலை நிறுத்த அறிவிப்பைக் கொடுத்தனர். 1980ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28ஆம் நாளன்று வேலை நிறுத்தம் செய்தனர். இணக்கப் பேச்சு வார்த்தை தொழிலாளர் நல அதிகாரி-2 (கோயம்புத்தூர்), கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்றன. மீண்டும் இணக்கப் பேச்சுவார்த்தைகள் தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்றதன் விளைவாக 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ், 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 14ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இது ஊதிய உயர்வு, அகவிலைப்படி உயர்வு, மாறத்தக்க அக

1980-ஆம் காலண்டர் ஆண்டில் எழுந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்துத் தீர்வு காணப்பட்ட வழிமுறைகள் வருமாறு :—

| | |
|---|---|
| (அ) இணக்க அதிகாரிகள் பேச்சு வார்த்தைகள் நடத்திய பிறகு நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட்டவை .. | 56 |
| ஆ) தாங்களாகவே முன் வந்து வேலை தொடங்கப்பட்டவை .. .. .. | 35 |
| (இ) தொழிலாளர் நலத்துறை/அரசு அதிகாரிகள் தீர்த்து வைத்தவை .. .. .. | 178 |
| (ஈ) காலவரையறை அற்றவை .. .. .. | .. |
| (உ) நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டவை .. .. | .. |
| (ஊ) மூடப்பட்டவை .. .. .. .. | 2 |
| (எ) ஆண்டின் இறுதியில் பேச்சு வார்த்தையில் இருந்தவை. | 22 |
| மொத்தம் .. | 293 |

**இவ்வாண்டில் செய்து கொள்ளப்பட்ட சில முக்கிய உடன்பாடுகள்.**

**1. செட்டிநாடு சிமெண்ட் லிமிடெட், புலியூர்.**

ஒரு தொழிலாளியை வேலை நீக்கம் செய்ததை முன்னிட்டு, 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8 ஆம் நாளன்று இந்நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ், 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25 ஆம் நாளன்று தொழிலாளர் சிறப்புநலத் துணை ஆணையாளர் முன் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. வேலை நிறுத்தமும் உடனடியாக கைவிடப்பட்டது. வேலை நிறுத்த காலத்தில் தொழிலாளர்களுக்கு நிர்வாகம் ஊதியக் குறைப்பு செய்ததை முன்னிட்டு, இப்பிரிவில் மற்றொரு வேலை நிறுத்தம் ஏற்பட்டது. இணக்கப் பேச்சு வார்த்தையின் விளைவாக, 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29 ஆம் நாளன்று வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

**2. கோயம்புத்தூர் புறநகர் போக்குவரத்துத் தனியார் லிமிடெட் கோயம்புத்தூர்.**

இப்போக்குவரத்து கம்பெனியின் பெயரை மாற்றம் செய்த காரணத்தை முன்னிட்டு 1980 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாளிலிருந்து இப்போக்குவரத்துக் கம்பெனியின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நலத்துறை துணை ஆணையாளர் ஆலோசனை நல்கிய பிறகும்,





தொழிலாளர்களிடையே மன அதிருப்தி நிலவியதால், வேலை நிறுத்தம் நீடித்தது. எனவே மீண்டும் சமரசப் பேச்சு வார்த்தைகள் தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளரின் முன் நடைபெற்றதின் விளைவாக, 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ், 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6 ஆம் நாள் அவர் முன்னிலையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிலாளர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்பினர்.

**3. அலெக்ஸாண்டிரா நூற்புப் பிரிவு, மேட்டூர்.**

அலெக்ஸாண்டிரா நூற்பு தொழிற்சாலையைச் சார்ந்த சுமார் 162 தொழிலாளர்கள் 1980 ஆம் ஆண்டு ஈட்டிய விடுப்பிற்கு உரிய தகுதிக்கால அளவைக் கணக்கிடுவதற்காக 1979 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாளிலிருந்து, வேலை நிறுத்தம் செய்த 57 நாட்களை கணக்கில்கொள்ள வேண்டும் என்னும் கோரிக்கையை முன்னிட்டு, 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். சேலம் தொழிலாளர் துறை அதிகாரி முன் நடைபெற்ற இணக்கப் பேச்சில் உடன்பாடு ஏற்படவில்லை. 1980 ஆம் ஆண்டு மார்ச் 7 ஆம் நாள் கோயம்புத்தூர் தொழிலாளர் நலத்துறை துணை ஆணையாளரால் மீண்டும் இணக்கப் பேச்சு வார்த்தை நடத்திய போதிலும், உடன்பாடு ஏற்படவில்லை. எனவே, சென்னை தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளரால் இத்தகராறு இணக்கப் பேச்சு வார்த்தைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

**4. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட், நெய்வேலி.**

"பெல்" நிறுவனத்தில் ஊதியங்கள் உடன்பாடு ஏற்பட்டதன் விளைவாக 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18 ஆம் நாள் ஏற்பட்ட உடன்பாட்டின் பகுதி 3, 5-ன் நிபந்தனைகளை செயல்படுத்தக் கோரி நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்திலுள்ள பல்வேறு சங்கங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தனர். தொழிலாளர் நல ஆணையாளரின் முன் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் விளைவாக, 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளன்று 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ், ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

விலைப்படி, வேலைப்பளு, சில் பிரிவுகளில் மாற்றியமைத்தல், கணப்பு அடுப்பு, உதவிப்படி, தற்செயல் விடுப்பு, பதவி நிலைகளை மாற்றியமைத்தல் ஆகியவைகள்குறித்து வகை செய்கிறது.

10. கைத்தறிதீவிர வளர்ச்சித் திட்டங்கள்.

காஞ்சிபுரம், கரூர், சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களிலுள்ள இத்திட்டங்களைச் சார்ந்த தொழிலாளர்கள், பணியாளர்களை ஆள்குறைப்பு செய்தல், தொழிலாளர்களின் பணிகளை முறைப்படுத்தல், விடுப்பு வசதியளித்தல், துணி வெளுப்புப்படி அளித்தல் ஆகியவைகள் அடங்கிய பல கோரிக்கைகளை 17–12–1979ஆம் நாளன்று எழுப்பினர். தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் (சென்னை) முன்னிலையில் 1947ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் 1980ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 10ஆம் நாள் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

11. ஸ்ரீஹரி நூற்பாலைகள் லிமிடெட், ஒண்டிப்புதூர் கோயம்புத்தூர்.

கோயம்புத்தூர், ஒண்டிப்புதூர், ஸ்ரீஹரி நூற்பாலை லிமிடெட்டை சார்ந்த தொழிலாளர்கள், அன்றாடம் வேலை செய்யும் தொழிலாளர்களை தற்காலிகமாக வேலையில் அமர்த்தும் போக்கை எதிர்த்து, 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். 1980ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11ஆம் நாளன்று தொழிலாளர் நல சிறப்பு துணை ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்ற சமரசப் பேச்சு வார்த்தைகள் விளைவாக, 1947ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிலாளர்கள் உடனே— வேலை நிறுத்தத்தை கைவிட்டனர். இருசாராரும் தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளரின் முடிவுக்குக் கட்டுப்பட்டு, அன்றாடத் தொழிலாளர்களை தற்காலிகமாக வேலை செய்யும் தொழிலாளர்களாக ஆக்கும் இக்கோரிக்கையை அவரிடம் விட்டனர். அதன் பிறகு 1980ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 21ஆம் நாள் தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் தன் முடிவைத் தெரிவித்தார்.

12. ஆரோபுட் பிரைவேட் லிமிடெட், ஆரோவில்.

இந்நிறுவனத்தைச் சார்ந்த சுமார் 600 தொழிலாளர்கள் ஊதியத்தை திருத்தியமைத்தல், அகவிலைப்படி ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 5ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். அதன்



பிறகு, நிர்வாகம், 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 11ஆம் நாளிலிருந்து பாதி கதவடைப்புச் செய்தது. சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் எடுத்துக் கொண்ட நன் முயற்சியின் காரணமாக, 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11ஆம் நாள் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிலாளர் நல ஆணையாளரின் (சென்னை) முன் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் விளைவாக, 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11ஆம் நாள் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் (சென்னை) முன் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. இதனால் ஒவ்வொரு தொழிலாளியும் குறைந்தது ரூ. 125 அதிகப்படி ஊதியம் தற்காலிகமாகப் பெற்றனர். 1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1ஆம நாளிலிருந்து கருணைத் தொகையாக ரூ. 4·50 மற்றும் 95 ரூபாய் ஊதிய உயர்வு நிலுவைத் தொகையை, ஒவ்வொரு மாதமும், கொடுக்க நிர்வாகம் ஒப்புக் கொண்டது. இந்த உடன்படிக்கையினால், தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தையும் கைவிட்டனர். இவ்வுடன்பாட்டின் பயனாக 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12ஆம் நாளிலிருந்து நிர்வாகம் கதவடைப்பை நீக்கியது.

13. காவேரி பொறியியல் தொழிற்சாலைகள், திருச்சிராப்பள்ளி.

இந்நிறுவனத்தைச் சார்ந்த 250 தொழிலாளர்களை ஆட் குறைப்பு செய்ததன் காரணமாக, தொழில் அமைதியின்மை ஏற்பட்டதை தவிர்க்க, திருச்சிராப்பள்ளி கலெக்டர் அவர்களோடு விவாதித்து இத்தகராறில் ஓர் உடன்பாடு காணும் முறையைக் கண்டறிந்தார். மீண்டும் சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் விளைவாக, 1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3ஆம் நாளன்று, தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ், ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10-எ பிரிவின்கீழ் 245 தொழிலாளர்களை ஆள் குறைப்பு செய்யப்பட்ட கோரிக்கையை நடுவர் தீர்ப்புக்கு விடவும், 161 பயிற்சியாளர்கள் தொடர்பான பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவும், தொழிலாளர் நல இணை ஆணையாளர் மேற்கொண்ட முடிவிற்கு சம்மதம் தெரிவித்தனர்.

14. பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட், மதுரை.

ஊதியங்களை மாற்றியமைத்தல், அகவிலைப்படி அளித்தல், தொழிலாளர்களை வேலையில் நிரந்தரமாக்குதல் ஆகிய கோரிக்கைகளை முன் வைத்து, இந்நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு 6ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். 1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25ஆம் நாள் தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணை

யாளரின் முன் நடைபெற்ற இணக்கப் பேச்சு வார்த்தையின் விளைவால் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிலாளர் நல இணை ஆணையாளரால் இத்தகராறைத் தீர்த்து வைக்க அவர்கள் சம்மதித்தனர். 1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29ஆம் நாளன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

## 15. பொது போக்குவரத்துக் கழகங்கள்.

பொது போக்குவரத்துக் கழகங்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட நீண்ட கால உடன்படிக்கை, 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31ஆம் நாளன்று முடிவடைந்ததின் விளைவாக இந்நிர்வாகங்களைச் சார்ந்த சங்கங்கள் சில கோரிக்கைகளை நிறைவேற்றும்படி அந்தந்த நிர்வாகத்தினரைக் கேட்டனர். தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே இருதரப்பு பேச்சு வார்த்தைகள் பல்வேறு நாட்களில் நடைபெற்றன. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை அமைச்சர் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 23ஆம் நாளிலிருந்து 26-ம் நாள் வரையில் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பயனாகவும், அவர் ஆலோசனை நல்கியதன் பயனாகவும் மத்திய தொழிற்சங்கங்களின் மத்திய அமைப்பிற்கும் மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களின் நிருவாகத்தினருக்கும் இடையில் உடன்பாடு ஒன்று 26—8—1980 ஆம் நாளன்று ஏற்பட்டது.

அதன் அடிப்படையில் கோயம்புத்தூரில் சமரசப் பேச்சு வார்த்தைகள் சென்னை தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்பு நடைபெற்றது. 1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் தனித்தனியாக உடன்பாடுகளும் ஏற்பட்டன. அவற்றின் பயனாக ஒவ்வொரு தொழிலாளியும் தங்களின் மொத்த ஊதியத்தில் ரூ. 90 லிருந்து ரூ. 120 வரை அதிகம் பெற்றனர். மொத்தம் 60,000 தொழிலாளர்கள் இதனால் பயனடைந்தனர்.

## 16. சேஷசாயி பேப்பர் மற்றும் போர்டு லிமிடெட், பள்ளிப்பாளையம்.

1979–80, 1980–81, 1981–82, 1982–83 ஆகிய கணக்காண்டுகளுக்கு பணிக்கொடை அளிப்பது குறித்து, இந்நிறுவனத்தில் தொழிலாளர்களுக்கும் சேஷசாயி பேப்பர் மற்றும் குழுக்கள் லிமிடெட், பள்ளிப்பாளையம் நிறுவனத்திற்கும் இடையில் எழுந்த பிரச்சினையை 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2 ஆம் நாள் அன்று தொழிலாளர் நல, இணை ஆணையாளர்



சென்னை முன் 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ், ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கை இக் கணக்காண்டுகள் ஒவ்வொன்றிற்கும், 20 சதவீத ஊதியக் கொடை வழங்க வகை செய்கிறது.

## 17. தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், அரியலூர் சிமெண்ட் ஒர்க்ஸ், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

திட்டப்படி, ஊதியக்குழு நிர்ணயித்த 75 சதவீதம் ஊதியம் ஆகியவற்றை 1979ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் நாளிலிருந்து 1979 ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் நாள் வரை கொடுக்க வேண்டும் என்பது குறித்தும், மற்றும் விடுப்பு சலுகைகளை உயர்த்துதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தும் இந் நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இத் தகராறு 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12ஆம் நாளன்று 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளரால் (சென்னை) தீர்த்துவைக்கப்பட்டது.

## 18. பனியன் தொழிற்சாலைகள், திருப்பூர்.

திருப்பூரிலுள்ள 1,500 பனியன் தொழிற்சாலையைச் சார்ந்த சுமார் 20,000 தொழிலாளர்கள் பணிக்கொடை அளிக்கக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டதின் விளைவாக 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5ஆம் நாளிலிருந்து நிறுவனம் கதவடைப்பு செய்தது. கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துறை ஆணையாளர் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் விளைவாக அவர் நல்கிய ஆலோசனைக் கிணங்க, 1980ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாளிலிருந்து கதவடைப்பு நீக்கப்பட்டது. முந்தைய ஆண்டில் அளிக்கப்பட்ட ஊதியக் கொடைக்கு மேலாக ரூ. 44 ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் அதிகமாக அளிக்க ஒப்புக்கொண்டது; இந்த ஊதியக் கொடை குறைந்த அளவு 200 ரூபாய்க்கு உட்பட்டிருக்க வேண்டுமெனவும் வரையறுத்தது.

## நடுவர் தீர்ப்பு.

1980ஆம் ஆண்டில் 3 வழக்குகள் தனிப்பட்ட முறையில் நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டன.

## நீதிமன்றத் தீர்ப்பு.

1979–80ஆம் காலண்டர் ஆண்டுகளில் சென்னை தொழில் நடுவர் மன்றம், தொழிலாளர் நீதிமன்றங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பப்பட்ட வழக்குகள், அவை அளித்த தீர்ப்புகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் பின்வருமாறு :—

| | தீர்ப்புக்காக அனுப்பப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | | தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | 1979 | 1980 | 1979 | 1980 |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| தொழில் நடுவர் மன்றம், சென்னை .. | 52 | 94 | 85 | 97 |
| தொழிலாளர் நீதிமன்றங்கள் .. .. | 662 | 943 | 494 | 792 |

மேற்சொன்ன வழக்குகளோடு, தொழிலாளர் நீதிமன்றங்கள் 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-சி (2) பிரிவின்கீழ், தொழிலாளர்கள் தாக்கல் செய்த 1,554 மனுக்களை விசாரணை செய்து தீர்ப்புக் கூறியுள்ளன.

## வசூல்.

1979–80ஆம் ஆண்டுகளில் 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-சி (1) ஆம் பிரிவின்கீழ் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பாக்கித் தொகையை கீழ்க்கண்டுள்ளவாறு வசூல் செய்யுமாறு அரசு ஆணையிட்டது :—

| வழக்குகளின் எண்ணிக்கை. | | தொகை. | |
|---|---|---|---|
| 1979 | 1980 | 1979 | 1980 |
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. |
| 56 | 124 | 1,65,469·58 | 6,76,322·22 |



### தொழிற்சங்கங்கள்:

1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் நாளன்றைய நிலவரப்படி 3,031 பதிவு பெற்ற தொழிற்சங்கங்கள் இருந்தன. நடப்பு ஆண்டில் 548 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 78 தொழிற்சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டன. ஒரு சங்கத்தின் பதிவு ரத்து செய்யப்பட்டது; அது பின்னர் நீக்கி விடப்பட்டது. மூன்று சங்கங்கள் கலைக்கப்பட்டன. ஒரு தொழிற்சங்கம் இணைக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு இறுதி நிலவரப்படி பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 3,498.

### 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம்:

1965ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம், 1980ஆம் ஆண்டு 10ஆம் அவசரச் சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்டு, 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21ஆம் நாளிலிருந்து அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. அந்த அவசரச் சட்டத்தின் படி குறைந்த அளவு ஊதியக் கொடை 8–1/3 சதவிகிதம், கூடுதல் அளவு ஊதியக் கொடை 20 சதவிகிதம் என்பது நிலையான அம்சங்களாகும்.

1976ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தில் இடம் பெறாத வங்கிக் கம்பெனிகள், பொதுத் துறையைச் சேர்ந்த இந்திய தொழிற்சாலைச் சீரமைப்புக் கழகங்கள் ஆகியவைகளில் பணி புரியும் தொழிலாளர்கள், 1978 கணக்காண்டிலிருந்து ஊதியக் கொடை பெறத் தகுதி வாய்ந்தவர்களாக ஆக்கப்பட்டனர் என்பதும் இவ் அவசரச்சட்டத்தின் மற்றொரு முக்கிய அம்சமாகும். 10 முதல் 20 வரையிலுள்ள தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள தொழிற்சாலைகள், கடைகள், நிறுவனங்கள், வாகன போக்குவரத்து நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள், உணவக நிறுவனங்கள், மற்றும் செய்தித்தாள் நிறுவனங்களுக்கும் இச் சட்டத்தின் விதித்துறைகள் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன.

### முத்தரப்பு ஆலோசனைக் குழுக்கள்:

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் உள்ள சட்ட விதித்துறைகளைச் செயல்படுத்துவதுடன், தொழிலதிபர்கள் தொழிலாளர்களின் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் அரசு பெருமளவு பெற்றுள்ளது. ஆகவே அவர்கள் இதற்காக பல்வேறு தொழிலாளர்கள் நலச் சட்டங்கள் செயற்படுத்தப் படுவதைக் கண்காணிப்பதற்கும், அவற்றைச் சிறந்த முறையில் செயல்படுத்தும் பொருட்டு அவ்வப்போது ஆலோசனைகளை நல்குவதற்கும் பல குழுக்களை அமைத்தனர். இக்குழுக்கள் இரு பெரும் பிரிவுகளாக அதாவது, சட்ட அடிப்படையில் அமைந்த குழுக்கள், சட்ட அடிப்படையில் அமையாத குழுக்கள் என பிரிக்கப்பட்டுள்ளன.

செய்யும் வேலை அளவுக்கேற்ப கூலி பெறும் தொழிலாளர்களுக்கு அவர்களின் பணிச்சுமைக்கேற்ப ஊதியங்களை நிர்ணயிப்பது தொடர்பான பிரச்சினை, கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் முன்னிலையில் மேற்கொண்டும் விவாதத்திற்காக விடப்பட்டது.

## 19. ஸ்ரீ அம்பாள் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட், சோமனூர்.

சில பொதுக் கோரிக்கைகளை முன்வைத்து, ஸ்ரீ அம்பாள் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தைச் சார்ந்த (சோமனூர், கோயம்புத்தூர் மாவட்டம்) தொழிலாளர்கள் 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல உதவி ஆணையாளர் (இணக்கம்-2) (கோயம்புத்தூர்) இது பற்றிய பேச்சு வார்த்தை நடத்தினார். மீண்டும் பேச்சு வார்த்தைகள், 1980ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் நாளன்று, சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்பு நடைபெற்றது. 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ஆம் நாளன்று சென்னை தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன் மேற்கொண்டும் நடந்த பேச்சு வார்த்தையின் விளைவாக 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ஆம் நாளிலிருந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். தொழிலாளர்கள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், நிர்வாகம் ஐந்து தொழிலாளர்கள்மீது வேலைநீக்கம் செய்த உத்தரவை நீக்க ஒப்புக் கொண்டது. மற்ற கோரிக்கைகளை பேச்சு வார்த்தைகளில் தீர்த்துக் கொள்ள இருசாராரும் ஒப்புக்கொண்டனர். மேலும் இக் கோரிக்கைகளின் பேரில் உடன்படிக்கை ஏற்படவில்லையென்றால், இதனை நடுவர் தீர்ப்புக்கு விடலாம் என தீர்மானித்தனர்.

## 20. மலைத் தோட்டங்கள்.

நீலகிரி, மற்றும் வயநாடு மலைத் தோட்டங்களில் வேலை செய்யும் மலைத் தோட்டத் தொழிலாளர் சங்கங்கள், தங்களின் நீண்ட கால உடன்படிக்கை முடிவடையுமுன், ஒரு புதிய உடன்படிக்கை செய்துகொள்ள, தங்களுடைய மலைத் தோட்ட அதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தின. நேரடிப் பேச்சு வார்த்தை தோல்வியடைந்ததால், இத் தொழிற் தகராறை கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை ஆணையாளரும் பின்னர் சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளரும் பல்வேறு தினங்களில் பேச்சு வார்த்தை நடத்தினர்,



தொழிலதிபர்கள் ஊதிய உயர்வை ஒப்புக் கொள்ளாத காரணத்தால் 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். சுமார் 75,000 தொழிலாளர்கள் இவ் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதாக கணக்கிடப்படுகிறது. தொழிலாளர் நல அமைச்சரின் நன் முயற்சியின் பயனாக, தொழிலாளர் நல இணை ஆணையாளர் மற்றும் தொழிலாளர் நல ஆணையாளர் ஆகியோர் தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையில் நடத்திய பேச்சு வார்த்தைகளின் விளைவால், 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20ஆம் நாளன்று ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டின்படி நாளொன்றுக்கு ரூ. 1·54 அதிகப்படி ஊதியம் கொடுக்க வகை செய்கிறது. 1980ஆம் ஆண்டு டிசம்பர் 22ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

## 21. தமிழ்நாடு தேயிலை மலைத்தோட்டங்கள் கழகம் லிமிடெட் குன்னூர்.

தமிழ்நாடு தேயிலை மலைத் தோட்டங்கள் கழகத்தை சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் மலைத் தோட்டத் தொழிலாளர்களுடன் சேர்ந்து ஊதிய உயர்வு, அகவிலைப்படி ஆகிய கோரிக்கைகள் குறித்து 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15 ஆம் நாளன்று வேலை நிறுத்தம் செய்தனர். இக் கோரிக்கைகள் குறித்து முன்னோடிப் பேச்சு வார்த்தைகள், தமிழ்நாடு அரசு தொழிலாளர் நல அமைச்சரின் முன்னிலையில் 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19ஆம் நாளன்று நடைபெற்றன. கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்பு 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20 ஆம் நாள் நடைபெற்ற இணக்கப் பேச்சின்போது, 1947ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டின் அடிப்படையில் நாளொன்றுக்கு ரூ. 4·70 என தற்போதிருந்த ஊதிய விகிதத்துடன் ரூ. 1·44 அதிகப்படியாக நாளொன்றுக்கு வழங்கப்பட்டு நாளொன்றுக்கு ரூ. 6·14 ஆகக் கொடுக்கப்பட்டது. நாளொன்றுக்கு ரூ. 1·60 என்றிருந்த அகவிலைப்படி நாளொன்றுக்கு ரூ. 0·10 அதிகப்படியாக கொடுக்கப்பட்டு நாளொன்றுக்கு ரூ. 1·70 ஆக கொடுக்கப்பட்டது. மேலும் 1,645 இலக்குகளாக கோயம்புத்தூர் வாழ்க்கை செலவுப் புள்ளிக்கு மேலாக புள்ளி ஒன்றுக்கு 32 பைசா வீதம் அவர்களது மாற்று அகவிலைப்படி நிர்ணயிக்கப்பட்டன. (1936 அடிப்படை 100) இவ்வுடன்படிக்கையின் பயனாக நாளொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளியும் குறைந்த அளவு ரூ. 9·09 மொத்தமாக சம்பாதிக்க இயலும். 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22ஆம் நாளன்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர்.

சட்ட அடிப்படையில் அமைந்த குழுக்கள்.

**(1) குறைந்த அளவு ஊதிய மாநில ஆலோசனைக் குழு.**

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின், 7 ஆம் பிரிவின்படி இக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு இவ்வாண்டு மும்முறை கூடி, பீடி தயாரிப்புத் தொழில் உட்பட புகையிலை தொழிலில் ஈடுபட்டுள்ள பீடி சுற்றுவோருக்கு வழங்க வேண்டிய பழைய ஊதிய வீதங்களைத் திருத்துவது குறித்து இக்குழு பரிசீலனை செய்து அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

**(2) குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழு.**

கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களுக்கு, குறைந்த அளவு, ஊதியங்களை நிர்ணயிக்கவும், திருத்தியமைக்கவும் ஆலோசனை கூறுவதற்குத் தொழிலாளர் நலத் துணை ஆணையாளரைத் தலைவராகக் (குறைந்த அளவு ஊதியங்கள்) கொண்டு அரசால் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது :—

(1) காப்பிக் கொட்டை பதப்படுத்தும் பணி.

(2) வெளுத்தல், சாயம் தோய்த்தல், தொழிலில் வேலை.

(3) தங்க நகைகள் செய்யும் தொழில்.

(4) வெட்டு மரத் தொழில்.

மேற்கூறிய ஒவ்வொரு குழுவும் அத் தொழில்களில் தொடர்புள்ள தொழிலாளர்களின் பிரதிநிதிகள் இருவரையும் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் இருவரையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

**(3) மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டுவசதி ஆலோசனைக் குழு.**

இக்குழு, மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதிகளின்கீழ் அமைக்கப்பட்டது. வீட்டு வசதி குறித்தும் தொழிலாளர்கள் நலச் சட்டத்தின் விதித்துறைகளை முறையாகச் செயல்படுத்துவதற்கு வழிவகைகளைக் கூறுவது குறித்தும் விவாதிக்க இக்குழு அமைக்கப்பட்டது. இதுவரை 38,754 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எனவே, இலக்கில் 83 சதவிகிதம் சாதனையை அடைந்துள்ளது.



**(4) 1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நலச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைக்குழு.**

1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் இச்சட்டத்தின் விதிகளை நிர்வகிப்பது பற்றியும் மற்றும் பீடித் தொழிலாளர் நல நிதியை அவர்களுக்காகப் பயன்படுத்தப்படுவது பற்றியும் ஆலோசனை நல்கும் நோக்கத்திற்காக, மாநில தொழிலாளர் நல அமைச்சரைத் தலைவராகவும், தொழிலதிபர்கள் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்டு 1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் ஆலோசனைக் குழு ஒன்றை மத்திய அரசு அமைத்தது. தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (ஆய்வு) இக்குழுவின் உறுப்பினராவார். 1981 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 13 ஆம் நாள் அன்று தொடக்கக் கூட்டமொன்று தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

**(5) மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனைக் குழு.**

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல்-நீக்குதல்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் இக்குழு அமைக்கப்பட்டது. இம் மாநிலத்தில் பொறியியல் தொழிற்சாலைகளில் ஒப்பந்தத் தொழிலாளர் முறை, தொடர்ந்து இருக்க வேண்டியது பற்றி ஆய்வு செய்யும் பொருட்டு துணைக் குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்றும் துணைக் குழு கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் காகிதம் மற்றும் சிமிட்டி தொழிற்சாலைகளில் குறிப்பிட்ட சில பணி முறைகளில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை அகற்ற வேண்டுமென்றும் கோரி இக்குழு 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாள் நடந்த கூட்டத்தில் பரிந்துரைத்துள்ளது.

சிமிட்டி தொழிற்சாலையிலுள்ள கட்டும் பிரிவிலும் சிப்பம் செய்யும் பிரிவிலும் பைகளில் அச்சிடும் பிரிவிலும் நிலவும் ஒப்பந்த தொழிலாளர் முறையை ஒழிக்க அரசு தற்போது ஆணை பிறப்பித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் காகிதத் தொழிற்சாலையில் இருக்கும் ஒப்பந்த தொழிலாளர்கள் முறையை ஒழிக்கும் நோக்கம் அரசின் பரிசீலனையில் உள்ளது. ஒப்பந்தத் தொழிலாளர் முறை பொறியியல் தொழிற்சாலையில் தொடர்ந்து இருக்கும் நிலையைக் கண்டறிய ஒரு துணைக் குழுவை அரசு நியமித்துள்ளது.

(6) 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்ட ஆலோசனைக் குழு.

1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின் நிபந்தனைகளின்படி மாநில அளவிலான ஆலோசனைக் குழுவைத் தற்போது அரசு புதுப்பித்து அமைத்துள்ளது. இக்குழு 5—10—1979, 18—12—1980 மற்றும் 18—2—1981 ஆகிய நாட்களில் கூடியது. இக்கூட்டங்களில் கீழ்க்காணும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன :—

(1) பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்பு அளிப்பது மற்றும் பாரபட்சமின்றி ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம ஊதியம் அளிக்க உறுதி செய்வது.

(2) மருத்துவமனைகள், கிராமப்புற வளர்ச்சி, வருவாய் மற்றும் சுற்றுலாத் துறைகளில் பெண்களை அதிக அளவில் வேலையில் அமர்த்த வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்துவது.

(3) பல்வேறு நிறுவனங்களில் பெண்களுக்கு உரிய அதிக அளவு வேலைவாய்ப்புகள் பற்றி அறிந்து, குறிப்பாக அரசுக்குப் பரிந்துரை செய்வதற்காகப பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளோரை உறுப்பினராகக் கொண்ட 'துணைக் குழுக்களை அமைத்தல்.

சட்ட அடிப்படையில் அமையாத குழுக்கள்.

1. மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழு:

இக்குழு மாநில அளவிலான முதல் நிலை ஆலோசனைக் குழுவாகும்; தொழிலாளர் சம்பந்தப்பட்ட கொள்கை குறித்த எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஆலோசனை பெறும் பொருட்டு அப்பிரச்சினைகள் அக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இக்குழுவிற்குத் தொழிலாளர் நல அமைச்சர் தலைவராவார். இக்குழுவில் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர். தொழிலாளர் நல ஆணையாளர் இக்குழுவின் செயலாளராவர். அறிக்கை ஆண்டில் (1980-ல் இக்குழு 23—1—1980, 29—8—1980 மற்றும் 19—12—1980 ஆகிய நாட்களில்) மூன்று முறை கூடி, தொழில் உறவுகளைப் பற்றி விவாதித்தது. அக்கூட்டங்களில் கீழ்க்காணும் முக்கிய முடிவுகள் இக்குழுவால் எடுக்கப்பட்டன :—

(1) குறைந்த அளவு ஊதியம் (மாநில) ஆலோசனைக் குழுவைக் கலந்தாலோசித்தபின், 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 1 ஆம் விவர அட்டவணையில் நிப்பு தொழில், கம்பளத்தொழில், மேலாடைத் தொழில், சிறிய பொறியியல் தொழில், கோயில் பணி ஆகியவைகளை இணைப்பது.



(2) கைத்தறி தொழிலாளர்களுக்கு விரைவில் சட்டமியற்றுதல்.

(3) பொது மற்றும் தனியார் துறைகளில் உள்ள தொழிற்சாலைகளின் வாயில்களின் முன், பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சங்கங்கள் கூட்டங்களை நடத்துவதற்கு உரிமை வழங்குவது.

2. மாநில மதிப்பீடு செயல்படுத்தும் குழு.

தொழிற்சாலைகளில் ஒழுங்கு முறை விதிகளைச் செயல்படுத்துவது குறித்தும், தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பது குறித்தும் தீர்மானிப்பதே இக்குழுவின் முக்கிய பணியாகும். இக்குழுவில் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் எழுவரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் எழுவரும் உறுப்பினர்களாக உள்ளனர். தொழிலாளர் நல இணை ஆணையாளர் இக்குழுவின் தலைவராகவும் தொழிலாளர் நல தனித் துணை ஆணையாளர் இதன் செயலாளராகவும் உள்ளனர்.

இக்குழு 1980 ஆம் ஆண்டு நான்கு முறை கூடியது. தொழிற்சாலைகளில் ஒழுங்குமுறை விதிகளை மீறிய ஆறு வழக்குகளை விசாரணை செய்ததோடு மட்டுமல்லாமல், 11 தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிப்பதற்கும் பரிந்துரை செய்தது.

3. மாநில நடுவர் மன்ற மேம்பாட்டுக் குழு.

பணியிலிருந்து ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரின் தலைமையின்கீழ் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய நிறுவனங்களில் தொடர்பு கொண்டுள்ள தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் ஐவரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஐவரும், தொழிலதிபர்களையோ, தொழிலாளர்களையோ சாராத தனிப்பட்ட உறுப்பினர்கள் இருவரும் உள்ளனர். இக்குழுவிடம் ஏனையவற்றோடு பின்வரும் முக்கியப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன :—

(அ) தொழிலதிபர்களும், தொழிலாளர்களும் தாங்களாகவே முன் வந்து நடுவர் இணக்கத் தீர்ப்பின் மூலம் தீர்த்துக் கொண்ட வழக்குகள் தொடர்பாக, குறித்த காலத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்தல்;

(ஆ) நடுவர் மன்றத்தின் மூலம் தகராறுகளை விரைவில் முடிப்பதில் கட்சிக்காரர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தேவையான வழக்குகளில் நடுவர் மன்ற நடைமுறைகளைத் துரிதப்படுத்துதல் ;

நிர்வாகத்தினரிடமிருந்தும், தொழிற் சங்கங்களிடமிருந்தும் வரப் பெற்ற விண்ணப்பங்களில் ஒவ்வொரு பரிசு ஆண்டிற்கும் உரிய வெற்றி பெற்றோரைத் தெரிந்தெடுக்க குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் உயர்நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரைத் தலைவராகக் கொண்டு தொழிலதிபர்கள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் எழுவர் உள்ளனர். தொழிலாளர் நல தனித் துணை ஆணையாளர், இதன் செயலாளர் அமைப்பாளராவார். 1979 ஆம் பரிசு ஆண்டில் வெற்றி பெற்றவர்களுக்கு சுழற்கோப்பையும் முதற் பரிசிற்குரிய கேடயமும், இரண்டாம் பரிசுக்குரிய சான்றிதழும் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் ஒன்றாம் நாளன்று நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

## II. வேலை நிபந்தனைகள், பணி நிபந்தனைகள் குறித்த சட்டங்கள் (1948 ஆம் ஆண்டு தொழிற் சாலைகள் சட்டம்).

1980 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 9,139 தொழிற்சாலைகள் இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. ஆனால் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் (31–12–1980) 9,681 தொழிற்சாலைகள் இருந்தன. கூடுதலாக 953 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதே நேரத்தில் 411 தொழிற்சாலைகள் நீக்கப்பட்டுள்ளன.

பதிவேட்டில் காணப்பெறும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை :

| | 1979. | 1980. |
|---|---|---|
| பிரிவு 2m (i) .. .. .. | 8,598 | 9,146 |
| பிரிவு 2m (ii) .. .. | 541 | 535 |
| பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை .. .. .. | 5,72,718 | 6,75,222 |

1979 டிசம்பர் 31 ஆம் நாள் வரையில் உரிமக் கட்டணமாக ரூபாய் 48,60,246.20 வசூலிக்கப்பட்டிருக்க, 1980 ஆம் ஆண்டில் அதாவது 1–1–80 முதல் 31–12–80 முடிய ரூபாய் 62,75,124 உரிமக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

**ஆய்வுகள்:**

அறிக்கை ஆண்டில், தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்களாலும், ஆய்வாளர்களாலும் 1,981 தொழிற்சாலைகள் ஒரு முறை ஆய்வு செய்யப்பட்டன. 8,268 தொழிற்சாலைகள் இரு முறை ஆய்வு செய்யப்பட்டன. 254 தொழிற்சாலைகள்



மும்முறை ஆய்வு செய்யப்பட்டன. இவ்வாண்டில் மொத்தம் 19,279 ஆய்வுகள் நடத்தப்பட்டன. மேற்சொன்னவற்றோடு, 1,254 ஞாயிறு ஆய்வுகளும், 2,164 சிறப்பு ஆய்வுகளும், 655 திடீர் ஆய்வுகளும், 813 இரவு ஆய்வுகளும், 3,990 சோதனை ஆய்வுகளும் நடத்தப்பட்டன.

**வழக்குகள் தொடருதல்:**

தொழிற்சாலை சட்ட விதித்துறைகளை வேண்டுமென்றே தொடர்ந்து மீறும் நிர்வாகத்தினரை திருத்துவதற்குரிய கடைசி வகைமுறையாக மட்டுமே அவர்கள் மீது வழக்கு தொடர இச்சட்டத்தின் விதித்துறைகள் பயன்படுத்தப்படுகின்றன. தொழிலதிபர்கள் மீது வழக்கு தொடர்வதற்கு முன்னர், இச்சட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பயன்களை அளிப்பதற்கும், விடுபாடுகள், குறைகள் ஆகியவற்றைச் சரிசெய்து கொள்வதற்கும் தொழிலதிபர்களுக்குப் போதுமான அவகாசம் கொடுக்கப்படுகிறது. தொழிலதிபர்கள் குறைகளைச் சரிசெய்து கொண்டு நல்லெண்ணத்துடன் நடந்து கொண்டால் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது கைவிடப்படுகிறது. ஆனால் சட்ட விதிமுறைகளை மீறும் தொழிலதிபர்கள் மீது அடிக்கடி திடீர் ஆய்வுகள் நடத்தப்பட்டு அவர்கள் குறைகளைச் சரி செய்து கொள்ளும் வரையில் வழக்குகள் தொடரப்படுகின்றன.

இவ்வாண்டில் (1980) தொழிற்சாலைகள் சட்ட விதித்துறைகளை மீறியதற்காகத் தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது 3,155 வழக்குகள் தொடரப்பட்டன. இவ்வாண்டில் 2,752 வழக்குகள் குறித்து முடிவெடுக்கப்பட்டது. 2,54,507 ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டது.

**விபத்துக்கள்:**

1979, 1980 ஆம் ஆண்டுகளில் தொழிற்சாலைகள் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றில் நடைபெற்ற விபத்துக்கள் பற்றிய ஒப்பீட்டு விவரங்கள் பின்வருமாறு :—

| ஆண்டு. | உயிர் இழப்பு ஏற்பட்ட விபத்துக்கள். | உயிர் இழப்பு ஏற்படாத விபத்துக்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1979 .. .. .. .. | 57 | 28,478 |
| 1980 .. .. .. .. | 47 | 27,386 |

(இ) தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் தாங்களாகவே முன்வந்து வழக்குகளை இணக்கமாகத் தீர்த்துக் கொள்வதற்கு வேண்டிய மனப்பக்குவத்தை ஏற்படுத்த அரசு எடுக்க வேண்டிய சிறப்பு நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை நல்குதல்.

**4. மலைத் தோட்டத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு.**

மலைத்தோட்டத் தொழிலாளர்கள் கூட்டம் விதிகளின் விதித்துறைகளைச் செயல்படுத்துவது குறித்து அரசுக்கு ஆலோசனை நல்கும் பொருட்டு இக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு மலைத்தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் எழுவரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் எழுவரும், தொழிலதிபரையோ தொழிலாளர்களையோ சாராத தனிப்பட்ட உறுப்பினர் ஒருவரும் உள்ளனர். தொழிலாளர் நல ஆணையாளர் இக்குழுவின் தலைவராவார். மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளர் இக்குழுவின் செயலாளர் ஆவார்.

**5. மோட்டார் போக்குவர்த்துத் தொழிலாளர்கள் சட்டத்தை செயல்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஆலோசனை கூறும் முத்தரப்புக் குழு.**

1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தையும், அச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதிகளையும் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்கு ஆலோசனை கூறும் பொருட்டு இக்குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் தலைமை ஆய்வாளரான தொழிலாளர் நலத் துணை ஆணையாளரே (ஆய்வுகள்) இக்குழுவின் தலைவராவார். போக்குவரத்து தொழிலைச் சார்ந்துள்ள தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஐவரும், தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் ஐவரும் இக்குழுவின் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழு 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 ஆம் நாளும், செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாளும், டிசம்பர் திங்கள் 29 ஆம் நாளும் மும்முறை கூடி, இச்சட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்துவது குறித்தும் மோட்டார் போக்குவரத்து பணியாளர்களுக்கு பயன் அளிக்கும் நல நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் விவாதித்தது.

**6. 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளை கவனிக்கும் முத்தரப்புக் குழு.**

பீடித் தொழில் நிறுவனங்களின் தலைமை ஆய்வாளராகிய தொழிலாளர் நல துணை ஆணையாளரே (ஆய்வுகள்) இக்குழுவின் தலைவராவார். பீடித் தொழில் சார்பாக, தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் நால்வரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் நால்வரும் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 15 ஆம் நாள் இக் குழு கூடி, இச்சட்டத்தையும் அதன் விதிகளையும் செயல்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து விவாதித்தது.



**7. தொழிலாளர் நலச் சட்டங்களுக்கான குழு.**

சட்டப் பிரிவுகளில் விதித்துறைகளை ஏற்படுத்துவதன் வாயிலாகத் தொழிலாளர்களுக்கு எல்லா நலன்களும் பாதுகாப்பும் கிடைப்பதற்கு உறுதி செய்வதே அரசின் கொள்கையாகும். இதனை எய்துவதற்கு, சட்ட மன்ற உறுப்பினர்கள், முன்னணித் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர்களை உறுப்பினராகக் கொண்டு, தொழிலாளர் நல வேலைவாய்ப்புத் துறை அரசுச் செயலாளரின் தலைமையில் இக்குழு அரசால் முதன் முறையாக அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு ''தொழிலாளர் நலச் சட்டங்களுக்கான குழு'' எனப்படுகிறது. தொழிலாளர்களின் உரிமைகள், கடமைகள், அவர்களது பாதுகாப்பு ஆகியவற்றைப் பாதிக்கும் தொழிலாளர்கள் நலச் சட்டங்களை ஆய்வு செய்யும் பொறுப்பும், சட்டங்களைப் பரிசீலனை செய்து தேவையான இடங்களில் திருத்தங்களைச் செய்ய கருத்துத் தெரிவிக்கும் பணியும் இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை இக்குழு 15 முறை கூடி பல சட்டங்கள் குறித்து விவாதித்தது. இக்குழுவின் கருத்துரையும் பரிந்துரைகளும், கருதிப் பார்க்கப்பட்டு தேவையான இடங்களில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**8. உயரிளவு நிலைக்குழு (தொழிலாளர்களும் தொழிலதிபர்களும்).**

இன்றியமையாப் பணிகளில் ஏற்படும் தொழிலாளர் வேலை நிறுத்தங்களில் ஏற்படும் பிரச்சினை குறித்து ஆலோசனை நல்க, இரு உயரளவு நிலைக்குழுக்களை, அதாவது தொழிலதிபர்களுக்காக ஒன்றும், தொழிலாளர்களுக்காக ஒன்றும் என அரசு அமைத்துள்ளது. ஒவ்வொரு குழுவிலும் எழுவர் அங்கம் வகிக்கிறார்கள். தொழிலாளர் நல ஆணையர் இக்குழுக்களின் நடத்துனராவார்.

**சிறந்த தொழில் உறவுக்கான பரிசு வழங்கும் திட்டம்.**

சிறந்த தொழில் உறவுகளை வைத்து வரும் நிர்வாகத்தினருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் சிறப்புப் பரிசுகளை வழங்குவதன் மூலம் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கு மிடையே சிறந்த தொழில் உறவை ஏற்படுத்தி அதைத் தொடர்ந்து பாதுகாத்து வரவும் ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு அரசு 1978 ஆம் ஆண்டில் சிறந்தொரு நடவடிக்கையை எடுத்தது.

தொழிற்சாலை ஆய்வகத்தின் துரித முயற்சியால், உயிர் இழப்பு ஏற்பட்ட, உயிர் இழப்பு ஏற்படாத விபத்துக்கள் குறைந்துள்ளது கவனிக்கத்தக்கது.

**மாநில பாதுகாப்புப் பரிசுகள்:**

தொழிலாளர்கள், நிர்வாகத்தினரிடையே தொழில் பாதுகாப்பை மேம்படுத்தவும், புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும் மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள், சிரமவீர் பரிசுகள் ஆகிய இரு தனி பரிசு வழங்கும் திட்டங்களை அரசு கொண்டு வந்துள்ளது.

1978 ஆம் ஆண்டில், மாநிலப் பாதுகாப்புப் பரிசுகளைப் பெற 785 விண்ணப்பங்களும், சிரமவீர் பரிசுகளைப் பெற 70 விண்ணப்பங்களும் வரப் பெற்றன. 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

1979 ஆம் ஆண்டில் மாநிலப் பாதுகாப்புப் பரிசுகளைப் பெற 766 விண்ணப்பங்களும், சிரமவீர் பரிசுகளைப் பெற 94 விண்ணப்பங்களும் வரப் பெற்றன. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் நாளன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

1980 ஆம் ஆண்டிற்குரிய பரிசுகள் பெறுவதற்கான விண்ணப்பங்கள், பரிசுத் திட்ட பாதுகாப்பு வகுப்புகளில் பரிசீலனை செய்யப்படுவதற்காக தொழிற் சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

1980 ஆம் ஆண்டில் (1980 நவம்பர் வரை) தொழிற்சாலைப் பாதுகாப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்து தொழிலாளர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் தொழிற்சாலைப் பாதுகாப்பு வகுப்புகள் பதிமூன்று நடத்தப்பட்டன. இதனால் 398 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

**திரைப்படங்கள்:**

ஒவ்வோர் ஆண்டும் பாதுகாப்பு-சுகாதாரம் குறித்த திரைப்படச் சுருள்கள் இத்துறையினால் வாங்கப்படுகின்றன. தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில், தற்போது தொழிற்சாலை பாதுகாப்பு-சுகாதாரம் ; குறித்த 32 திரைப்படச் சுருள்கள் உள்ளன. அவை பாதுகாப்பு வகுப்புகள் நடத்தப்படும் போது திரையிடப்படுகின்றன. தொழிலாளர்களின். நலனுக்காக அவற்றைத் திரையிட, அவை தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன.



**உற்பத்தித் திறன்.**

தமிழ்நாட்டில், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் ஒவ்வோரிடத்திலும் ஒன்றாக மொத்தம் ஆறு உற்பத்தித் திறன் குழுக்கள் உள்ளன. இக்குழுக்கள் முந்தைய ஆண்டில் வசூலித்த பங்குத் தொகையில் 50 சதவீதத்திற்கு நிகரான ஒரு தொகை பொது மானியத்தின் மூலம் ஆண்டுதோறும் இக்குழுக்களுக்கு நிதி உதவியாக வழங்கப்படுகிறது. இத்தொகை ஆண்டொன்றுக்கு 3,000 ரூபாய் என்னும் உயரளவிற்கு உட்பட்டதாகும்.

1980 ஆம் ஆண்டில், 1980–81 ஆம் ஆண்டுக்குரிய பொது மானியமாக இந்த ஆறு உற்பத்தித் திறன் குழுக்களுக்கும் மொத்தம் 17,455 ரூபாய் வழங்கப்பட்டது.

மேற்சொன்ன நிதி உதவியோடு, 1970 ஆம் ஆண்டை ஆசிய உற்பத்தித் திறன் ஆண்டாகக் கொண்டாடப்பட்டதையொட்டி ''தரம்-நம்பத்தகுந்த தன்மை'' என்னும் பொருள் குறித்து செய்தித் திரைப்படம் ஒன்றும் எடுக்கப்பட்டது. இத்திரைப்படத்தை எடுப்பதற்கு 1980 ஆம் ஆண்டுக் காலத்தில் ரூ. 4,839.50 செலவிடப்பட்டது. உற்பத்தித் திறன் குறித்த திரைப்படங்களைக் கொண்டுள்ள திரைப்பட சேகரிப்புப் பிரிவு ஒன்றும் உள்ளது. தொழிலாளர்களின் பயனுக்காக இத்திரைப்படங்களைத் திரையிட்டுக் காட்ட தொழிற்சாலைகள், உற்பத்தி திறன் குழுக்கள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றிற்கு இச்செய்தித் திரைப்படங்கள், இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன

**சுகாதாரம்.**

**தொழிற்சாலையில் உடல் நலம் பேணும் பிரிவு.**

மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் ஆய்வுக் கூடத்துடன் இணைந்த தொழிற்சாலைச் சுகாதாரம் உடல் நலம் பேணும் பிரிவு ஒன்றை அரசு நிறுவி உள்ளது. இந்த ஆய்வுக் கூடத்தை நிர்வகிக்கும் பொறுப்பை மருத்துவத் தலைமை அதிகாரி (தொழிற்சாலைகள்) ஏற்றுள்ளார். தொழிற்சாலையில், உடல் நலம் பேணும் பிரிவு–ஆய்வுக்கூடம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விவரம் வருமாறு :—

(1) தொழிற்சாலைகளில் ஆய்வு நடத்துதல் ;

(2) அபாயகரமான பணியிலும் அபாயத் தன்மை வாய்ந்த இரசாயனத் தொழிலிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்தல்.

பணியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து இச்சட்டத்தின் 41ஆம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடுகள் முடிவு செய்யப்பட்டது பற்றி கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன:—

| (1) | 1979 (2) | 1980 (3) |
|---|---|---|
| ஆண்டு தொடக்கத்தில் முடிவுறா நிலையில் இருந்த மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 223 | 168 |
| இவ்வாண்டில் வரப்பெற்ற மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 168 | 191 |
| மேல் முறையீடுகளின் மொத்த எண்ணிக்கை. | 391 | 359 |
| இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 223 | 213 |
| இவ்வாண்டு முடிவில் முடிவுறா நிலையில் இருந்த மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 168 | 146 |

1980ஆம் ஆண்டில் பொருட்காட்சிகள், திருவிழாக்கள் நீங்கலாக நிலையான விதிவிலக்கு ஒன்றும் தற்காலிகவிதிவிலக்குகள் 3-ம் அரசு வழங்கியது. தொழிலாளர் நலத் துறை ஆணையாளர் பொருட்காட்சிகள் திருவிழாக்களுக்குரிய தற்காலிக விலக்கு உட்பட 24 தற்காலிக விதிவிலக்குகளை வழங்கியுள்ளார்.

தொழிலாளர் நல துணை ஆணையாளர் 113 இனங்களில் தற்காலிக விலக்குகளை அளித்துள்ளார். 37 இனங்களில் இச்சட்டம் செயல்படுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அனுமதித்துள்ளார்.

இவ்வாண்டின் இறுதியில், இச்சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் ஏழு விண்ணப்பங்கள் வரப்பெற்று அவை முடிவுறாத நிலையில் உள்ளன.

சட்டத்தின் விதித்துறைகள், பெருங்களத்தூர், சிட்லப்பாக்கம் (சைதாப்பேட்டை வட்டம்) விக்கிரவாண்டி (விழுப்புரம் வட்டம்) ஆகிய இடங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.



## தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம்.

1981ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1ஆம் நாளன்றுள்ளபடி 67,378 தொழிலாளர்களைக் கொண்ட 28,285 உணவகங்கள் இச்சட்டத்தின் கீழ் வருகின்றன. இவற்றில் 10,305 நிறுவனங்களில் தொழிலாளர்கள் இருந்தனர்; 17,980 நிறுவனங்கள் தொழிலாளர்கள் இல்லாமல் இருந்தன.

1980ஆம் ஆண்டில் பதிவு/புதுப்பித்தல்/மேல்வரி கட்டணமாக ரூ. 2,20,860.05 வசூலிக்கப்பட்டது.

இந்த ஆண்டில், ஆய்வாளர்கள், இச்சட்டத்தின் கீழ் 39,629 தடவை முறையான ஆய்வுகளையும், 748 தடவை திடீர் ஆய்வுகளையும், 993 தடவை விடுமுறை நாள் ஆய்வுகளையும், 389 தடவை சிறப்பு ஆய்வுகளையும், 429 தடவை இரவு ஆய்வுகளையும், நடத்தினர்.

1980ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இச்சட்டத்தின் விதித்துறைகளையும், விதிகளையும் மீறியது குறித்த 789 குற்ற வழக்குகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன. இந்த ஆண்டில் 2,513 வழக்குகள் அனுமதிக்கப்பட்டன. அவற்றில் 2,261 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. 4 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 24 வழக்குகளில் மன்னிப்பு அளிக்கப்பட்டது. 9 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 1 வழக்கில் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டில், 1,16,639 ரூபாய் அபராதத் தொகையாகப் பெறப்பட்டது. ஆண்டு இறுதியில், 1,003 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன.

உணவகங்களில் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதை அல்லது வெளியேற்றப்பட்டதை எதிர்த்து உணவகங்கள் சட்டத்தின், 19ஆம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடுகளை, மேல்முறையீட்டு அதிகார மன்றம் முடிவு செய்தது குறித்த விவரங்கள் வருமாறு.—

| (1) | 1979 (2) | 1980 (3) |
|---|---|---|
| ஆண்டின் தொடக்கத்தில் முடிவுறாத நிலையில் இருந்த மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 43 | 32 |
| இவ்வாண்டில் வரப்பெற்ற மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 88 | 114 |
| இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 99 | 124 |
| ஆண்டின் இறுதியில் முடிவுறாத நிலையில் இருந்த மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 32 | 22 |

[1981 ஏப்ரல் 29

(3) உயிரின மாதிரிகளை ஆய்வுக்கூடத்தில் பரிசோதனை செய்தல் ;

(4) அத்தொழிலாளர்கள் தொழில் சார்ந்த நோய் எவற்றாலும் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்றும் ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை நடத்துதல் ;

(5) தொழிற்சாலைகளில் பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல் ;

(6) சிறப்புப் பணிகளில் ஈடுபடுதல்.

தொழிற்சாலை சுகாதார உடல் நலம் பேணும் ஆய்வுக் கூடம் தற்போது நந்தனத்திலுள்ள குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் புதிய கட்டிடத்தில் செயலாற்றுகிறது.

அறிக்கையாண்டில், 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ், 49 தொழிற்சாலைகளை தலைமை மருத்துவ அலுவலர், பார்வையிட்டுள்ளார். மேலும் 10 தொழிற்சாலை களில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இரத்தமும் சிறுநீரும் குறித்து 38 மாதிரிகள் பரிசோதனைச் செய்யப்பட்டன. 26 தொழிற்சாலைகளில் அபாயகரமான தொழில்களில் வேலை செய்யும் 514 தொழிலாளர்கள் மருத்துவ பரிசோதனைச் செய்யப்பட்டனர். ஈயம் சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபடுவதால் ஏற்படும் நச்சுத் தன்மை வாய்ந்த நோய் ஏற்படுவதை அறிய 605 இரத்த மாதிரிகள் சேகரிக்கப் பட்டு, பரிசோதனை செய்யப்பட்டன. ஆய்வு செய்வதற்காக 614 மாதிரி சிறுநீர் பரிசோதனை செய்யப்பட்டன.

முந்திரிக் கொட்டைகள் பதப்படுத்தப்படும் தொழில் உட லுக்குத் தீங்கு விளைவிக்கும் தொழில் ஆகையால் வல்லுநர் குழுவின் பரிந்துரைகளை இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழி லாளர்கள் உறுதியாக கடை பிடிக்கும்படி ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

தொழிற்சாலை தொழிலாளர்களுக்கும் தொழிற்சாலை மேற் பார்வை அலுவலர்களுக்கும், தொழிற்சாலை உடல் நலக் கோட் பாடு, தொழில் சார்ந்த நோய்களிலிருந்து பாதுகாப்பு பற்றி பதினோறு வகுப்புகள் நடத்தி சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பட்டன. பொதுச் சுகாதாரத் துறை, மாநிலத் தொழிலாளர் நல காப்புறுதித் திட்ட அதிகாரிகளின் உடனுழைப்புடன் மருத் துவத் தலைமை அதிகாரியும் சுகாதாரக் கேடு, தொழில் சார்ந்த நோய்கள் ஆகியவை குறித்து ஆய்வுகள் நடத்த ஏற்பாடு செய் கிறார். பொதுச் சுகாதாரத் துறையில் பணிபுரியும் மருத்துவப் பணியாளர்கள், மருத்துவத் துறை பயிற்சியாளர்கள், பயிற்சித் திட்டத்திற்காகத் தொழிற்சாலை சுகாதாரப் பிரிவைப் பார்வை யிடுகிறார்கள்.



1981 ஏப்ரல் 59]

தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் சான்றிதழ்கள் அளிக்கும் மருத்துவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மருத் துவர்கள் மற்றும் அலுவலர்கள் அடங்கிய ஆறு மருத்துவப் பிரிவுகளை அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

**தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டம்.**

1980 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் வரும் கடைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, அவற்றில் வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| இச்சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை. | 2,86,420 |
| வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை .. | 2,61,527 |

தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட் டத்தின் பல்வேறு விதித்துறைகளை செயல்படுத்துவதில், எல்லா நிறுவனங்களுக்கும் சென்று பார்வையிடுவது, தொடக்க அறி விப்பினைக் கொடுத்து, அதன் வாயிலாக தொழிலாளர்களின் உரிமைகளைப் பற்றியும், நிர்வாகத்தினரின் கடமைகளைப்பற்றி யும் கடைச் சொந்தக்காரர்களுக்கு எடுத்துரைத்து அறிவுறுத்தும் பணியை இத்துறை மேற்கொண்டுள்ளது. தொழிலதிபர்கள் தங்கள் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி குறைபாடுகளைத் திருத்துவதில் கவனம் செலுத்துவார்களேயானால் அவர்கள் மீது மேல் நடவடிக்கை எடுப்பது கைவிடப்படுகிறது. விதிகளை மீறுகின்ற தொழிலதிபர்களுடைய நிறுவனங்களை அடிக்கடி சோதனை செய்து தொழிலதிபர்கள் தங்கள் குறைகளைத் திருத்திக் கொள்ளும் வரையில் அவர்கள் மீது அடுத்தடுத்து வழக்குகள் தொடரப்படும்.

1980 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள் 3,47,649 தடவை முறையான ஆய்வுகளையும், 8,055 தடவை திடீர் ஆய்வுகளையும், 32,383 தடவை விடுமுறை ஆய்வுகளையும், 13,943 தடவை இரவு ஆய்வுகளையும், 3,584 தடவை சிறப்பு ஆய்வுகளையும் நடத்தினர். 1980 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 3,072 வழக்குகள் முடிவுறாத நிலையில் இருந் தன. 11,504 வழக்குகளுக்கு இவ்வாண்டு அனுமதி அளிக்கப் பட்டன. 14,576 வழக்குகளில் 10,457 வழக்குகள் (சுமார் 73 விழுக்காடு) தண்டனையில் முடிந்தன. 14 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 59 வழக்குகளில் மன்னிப்பு அளிக்கப் பட்டன. 32 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 10 வழக்கு கள் நிறுத்தி வைக்கப்பட்டன. 1980 ஆம் ஆண்டில் அப ராதத் தொகையாக ரூ. 3,89,635 வசூலிக்கப்பட்டது. இவ் வாண்டின் இறுதியில் 4,004 வழக்குகள் முடிவுறாநிலையில் இருந்தன.

(3) பீடித் தொழிலாளர்களுக்கு பெருந்துறை (கோயம் புத்தூர் மாவட்டம்), பென்னத்தூர் (வட ஆற்காடு மாவட்டம் தாம்பரம் (செங்கல்பட்டு மாவட்டம்), திருச்சிராப்பள்ளி (திருச்சி மாவட்டம்), ஆசாரிப்பள்ளம் (கன்னியாகுமரி மாவட்டம்) ஆகிய இடங்களில் உள்ள மருத்துவ மனைகளில் ஒவ்வொன்றிலும் பீடித் தொழிலாளர்களுக்கு 10 படுக்கைகள் ஒதுக்குவதன் மூலம் மருத் துவ வசதி அளிக்கப்படுகின்றது.

(4) 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6 ஆம் நாளன்று வேலூருக்கு அருகாமையில் உள்ள சத்துவாச்சேரியில் வேலூர், தொழிலாளர் நல அதிகாரியின் தங்கும் இடத்தில் பீடித் தொழி லாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கும் மருத்துவச் சிகிச்சை அளிக்க ஆங்கில முறை மருந்தகம் ஒன்று தொடங்கப் பட்டது.

(5) 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி, 18 ஆம் நாளன்று நிலை யான நடமாடும் ஆங்கில முறை மருந்தகம் ஒன்று திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தென்காசியில் தொடங்கப்பட்டது.

(6) 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களிலிருந்து நிலையான நடமாடும் மருந்தகம் ஒன்று ஈரோட்டில் தொடங்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் பீடித் தொழிலாளர்களுக்கென கட்டப்பட விருக்கும் மருத்துவ மனைக்கு இடத்தைத் தெரிவு செய்வதற்காக மத்திய அரசு ஒரு குழுவை நியமித்துள்ளது.

1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் படி பீடித் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு மத்திய அரசு படிப்புதவித் தொகை வழங்குகிறது. 1979-80 ஆம் ஆண்டில், 1,026 மாணவர்களுக்கு ரூபாய் 50,930 படிப்பு உதவித் தொகை யாக வழங்கப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டிற்கு படிப்புதவி தொகை வழங்கக் கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் பெங்களூரில் உள்ள பீடித் தொழிலாளர்கள் நல ஆணையாளரால் பரிசீலிக்கப் பட்டு வருகின்றன.

**1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம்:—**

இவ்வாண்டில், தமிழ்நாட்டில், தொழிலாளர் நல துணை ஆணையாளர் (ஆய்வுகள்) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின்படி தொடர்ந்து தலைமை ஆய்வாளராக இருந்து வருகிறார். இம்மாநிலத்தில் இச் சட்டமும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளும், 12 தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும், 28 தொழிலாளர் நலத் துணை ஆய் வாளர்களாலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மோட்டார்



போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின்படி தொழிலாளர் நலத் துறை ஆய்வாளர்கள் நேரடியாகச் சென்று ஆய்வுகளை நடத்துகின்றனர். மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் 5 சதவீத நிறுவனங்களை தொழிலாளர் நல ஆய்வாளர்கள் சென்று பார்வையிடுகின்றனர்.

**பதிவு.**

1980 ஆண்டுத் தொடக்கத்தில் 1,543 பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இருந்தன. 119 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் புதிதாகப் பதிவு செய் யப்பட்டன. இதனால், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை மொத்தம் 1,662 ஆக உயர்ந்தது. இந்த நிறுவனங் களில் 98 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இந்த ஆண்டு பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டன. பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனத்தின் எண்ணிக்கை இந்த ஆண்டின் இறுதியில் 1,564 ஆக இருந்தது. இவ்வாண்டின் இறுதி யில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 55,077 ஆக இருந்தது. அறிக்கை ஆண்டில் பதிவுக் கட்டண வகையில் ரூபாய் 4,406·50 வசூலாகியது.

அறிக்கை ஆண்டில் பதிவைப் புதுப்பித்தல் கட்டண வகையி லும் ரூபாய் 66,525·19 வசூலாகியது.

**வழக்குத் தொடர்தல்.**

1980 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 129 வழக்குகள் முடி வடையாமல் இருந்தன. 444 வழக்குகளுக்கு அனுமதி வழங்கப் பட்டது. அதனால் மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 573 ஆகும். இந்த 573 வழக்குகளில் 372 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. ஒரு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இரு வழக்குகளில் மன்னிப்பு வழங்கப்பட்டது. ஒரு வழக்கு திரும்பப் பெறப்பட்டது. எஞ்சிய 197 வழக்குகள் ஆண்டு இறுதியில் முடிவடையாமல் இருந்தன. அபராதத் தொகையாக ரூபாய் 37,819 வசூலிக்கப்பட்டது.

**ஆய்வுகள்.**

அறிக்கை ஆண்டில், 3,652 தடவை முறையான ஆய்வு களும், 26 தடவை விடுமுறை ஆய்வுகளும், 32 தடவை திடீர் ஆய்வுகளும், 283 தடவை சிறப்பு ஆய்வுகளும் ஆய்வாளர்களால் நடத்தப்பட்டன.

இச்சட்டத்தின் 27 (2)-ன் பிரிவின் கீழ், ஒரு விண்ணப்பம் வந்தது. இவ்வாண்டில் ஒரு உணவகத்திற்கு இச்சட்டத்தின் விதித்துறைகளிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டது.

அறிக்கை ஆண்டில், உணவகச் சட்டத்தின் விதித்துறைகளை பேரூராட்சிகளுக்கும், பெருங்களத்தூர் (சைதாப்பேட்டை வட்டம்), சிட்லப்பாக்கம் (சைதாப்பேட்டை வட்டம்) விக்கிரவாண்டி (விழுப்புரம் வட்டம்) ஆகிய இடங்களுக்கு நீட்டித்து அரசு அறிவிக்கைகள் வெளியிட்டது.

1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர் (பணி நிலமைகள்) சட்டம், தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள்.

செயல்படுத்துதல்,

பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின்படி, தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (ஆய்வு கள்) தொடர்ந்து தமிழ்நாட்டில் தலைமை ஆய்வாளராகப் பணி யாற்றி வருகிறார். 206 தொழிலாளர் நல உதவி ஆய்வாளர் கள் இச்சட்டத்தை செயல்படுத்தி வருகிறார்கள். வட்டாரத் தொழிலாளர் நலத்துணை ஆணையாளர்களும் அவரவர் அதி கார வரம்பின் கீழ் வரும் இடத்தில் ''ஆய்வாளர்களாக'' நியமிக்கப்பட்டுள்ளனர். 1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழி லாளர் (பணி நிலைமைகள்) சட்டத்தின்படி தொழிலாளர் நல உதவி ஆய்வாளர் நேரடியாகச் சென்று ஆய்வுகளை நடத்து கிறார்கள்.

பதிவு செய்தல்.

தமிழ்நாட்டில் 1,397 தொழில் வளாகங்களைக் கொண்ட 328 வணிகக்குறி உரிமையாளர்கள் உள்ளனர். அறிக்கை யாண்டில் இந்தத் தொழில் வளாகங்களில் 12,935 பணியாளர் கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். சுமார் இரண்டு இலட்சம் பேர் வீடுகளிலிருந்தபடி பீடி தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

1,397 தொழில் வளாகங்களில் 1,209 தொழில் வளாகங்கள் தங்களது உரிமங்களைப் புதுப்பித்துக் கொள்ள விண்ணப் பித்துள்ளன ; எஞ்சிய 188 தொழில் வளாகங்கள் உரிமம் கோரி இன்னும் விண்ணப்பிக்கவில்லை. தவறு புரிந்தோர் மீது தண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டில் உரிமக் கட்டண வகையில் ரூபாய் 38,145·50 வசூலிக்கப்பட்டுள்ளது.



ஆய்வுகள் :

இவ்வாண்டில் 2,690 தடவை முறையான ஆய்வுகளும், 48 தடவை விடுமுறை ஆய்வுகளும், 102 தடவை திடீர் ஆய்வுகளும், 15 தடவை சிறப்பு ஆய்வுகளும் ஆய்வாளர்களால் நடத்தப் பட்டன.

வழக்குத் தொடர்தல் :

1980ஆம் ஆண்டின் தொடக்கத்தில், 70 வழக்குகள் நீதி மன்றத்தில் முடிவுறாத நிலையில் இருந்தன. பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், விதிகளை மீறியதற்காகத் தொழில் அதிபர்கள் மீது 182 வழக்குகள் தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த 252 வழக்குகளில் 150 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஒரு வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டார். 12 வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எச்சரித்து விடப் பட்டனர். ஆண்டின் இறுதியில் 89 வழக்குகள் முடிவுறாமல் நிலுவையில் இருந்தன. விதிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை ரூபாய் 11,995 ஆகும்.

பீடித் தொழிலாளர் நலன் :

பீடி-சுருட்டு தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் நலன் கருதி, மத்திய அரசு, மேல் வரி (செஸ்) வசூலிப்பதுடன், அவர்களுடைய நலன் காக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஓர் அமைப்பையும் ஏற்படுத்தி உள்ளது. அந்த அமைப்பின் மூலமும் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளின் உடனுழைப்புடனும் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழிலாளர் நலத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன :—

(1) 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13ஆம் நாளிலி ருந்து மேலப்பாளையத்தில் (திருநெல்வேலி மாவட்டம்) பீடித் தொழிலாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் நோக்கத்தில் ஒரு நிலை யான நடமாடும் மருந்தகம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது.

(2) கோயம்புத்தூர் மாவட்டம், பெருந்துறையில் உள்ள இராமலிங்கம் காசநோய் மருத்துவ மனையில் பீடித் தொழிலாளர் களுக்காகவும் அவர்களைச் சார்ந்திருப்போர்களுக்காகவும் 10 படுக்கைகள் ஒதுக்கப்பட்டு வருகின்றன.

**சிமெண்ட், காகிதத் தொழிற்சாலைகள்.**

தொழிற்சாலைகளுக்கு தொழிலாளர் நலன்-வேலைவாய்ப்புத் துறையில் 28—10—1977 ஆம் நாளிட்ட 769 ஆம் எண். அரசாணையில் துணைக்குழு அமைக்கப்பட்டது. காகிதத் தொழிற்சாலையைப் பொறுத்த மட்டில், ஏழு பிரிவுகளில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை ஒழிப்பதற்கு இத்துணைக் குழு பரிந்துரைத்தது. இவற்றை அரசு பரிசீலித்து வருகிறது.

சிமெண்ட் தொழிற்சாலைகளுக்காக அமைக்கப்பட்ட துணைக் குழுவின் பரிந்துரையின் பேரில், 1981 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 1-ஆம் நாளிலிருந்து சிமெண்ட் தொழிற்சாலையில் கீழ்க் காணும் பிரிவுகளில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படுவதை தடைசெய்து, தொழிலாளர் நலன்-வேலைவாய்ப்புத் துறையில் 12—2—1981 ஆம் நாளிட்ட 340 ஆம் எண். அரசாணையில் அரசு ஆணை பிறப்பித்தது :—

(1) கட்டும் பிரிவில் சிமெண்ட் உறையிடும் முறை.

(2) பைகளை அச்சிடும் முறை.

**துணி நூல் தொழிற்சாலை.**

இத்தொழிற்சாலைக்காக தொழிலாளர் நலன்-வேலைவாய்ப்புத் துறையில் 22—8—1978 ஆம் நாளிட்ட 937 ஆம் எண். அரசாணையில் துணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இக்குழுவின் பரிந்துரைகள் மாநில ஒப்பந்தத் தொழிலாளர் மாநில ஆலோசனைக் குழுவின் முன் பரிசீலனைக்கு வைக்கப்பட்டன.

இக்குழு இத்தொழிற் சாலையின் நிதிநிலையைக் கருத்திற் கொண்டு, துணைக்குழு பரிந்துரைத்தபடி ஒப்பந்த முறையில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் பணியை முறைப்படுத்த இயலும் வகையில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும், நீக்கலும்) சட்டத்தின் விதித்துறைகளையும் செயல்படுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆணையாளரை கேட்டுக்கொள்ளும்படி அரசுக்கு ஆலோசனை வழங்குவதென மாநில ஆலோசனைக்குழு ஏகமனதாக முடிவு செய்தது. அரசு பிறப்பித்த ஆணைகளுக்கிணங்க தொழிலாளர் நல ஆணையர், இத்தொழிற்சாலைகளில் ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணியை முறைப்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கும்படி சார்நிலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.



திருச்சிராப்பள்ளியிலுள்ள " பெல் " நிறுவனத்தின் துணைப் பிரிவுகளில் ஒப்பந்த முறையில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் நிலையை கண்டறிய ஒரு துணைக்குழு அமைக்க ஒப்பந்தத் தொழிலாளர் மாநில ஆலோசனைக் குழுவின் 4-வது கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, தொழிலாளர் நலன்-வேலைவாய்ப்புத் துறையில் 23—2—1979 ஆம் நாளிட்ட 312 ஆம் எண். அரசாணையில் அரசு துணைக்குழுவை அமைத்தது. அத்துணைக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**1946 ஆம் ஆண்டு தொழில் வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம்.**

1980-ஆம் ஆண்டில் 53 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகள், சான்றளிக்கும் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டன. 18 இனங்களைப் பொறுத்த மட்டில் இந்த நிலை ஆணைகளில் திருத்தங்களும் இந்த ஆண்டில் சான்றளிக்கப்பட்டன. மேல முறையீட்டு அதிகார மன்றங்களாக உள்ள தொழிலாளர் நல நீதி மன்றங்கள், இவ்வாண்டில், இச்சட்டத்தின் கீழ் ஐந்து மேல் முறையீடுகளை விசாரித்து தீர்ப்பு அளித்துள்ளன.

**தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம்.**

இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறியமைக்காக அறிக்கை ஆண்டில் தொழிற்சாலை நிர்வாகங்களுக்கெதிராக 3,952 வழக்குகள் தொடரப்பட்டன. 3,652 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டனர். மூன்று வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 40 வழக்குகளில் மன்னிப்பு வழங்கப்பட்டது. 15 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. இவ்வாண்டில் அபராதமாக ரூ. 1,06,863 வசூலிக்கப்பட்டது. ஆண்டின் இறுதியில், 1,446 வழக்குகள் நீதிமன்றங்களில் முடிவுறாமல் இருந்தன.

இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள், இவ்வாண்டில், 1,68,993 தடவை ஆய்வுகளை நடத்தினர்.

**1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம்.**

1980-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலிருந்து தொழிலாளர் நலத்துறை இணை ஆணையாளர், மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளராகப் பணியாற்றுகிறார்.

**1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிக்கையாளர், ஏனைய செய்தித்தாள் பணியாளர்கள் (பணி நிலைமைகளும் பல்வேறு விதித்துறைகளும் சட்டம் :—**

இச்சட்டத்தின் கீழ் '' ஆய்வாளர்கள் '' என அறிவிக்கப் பட்ட 12 தொழிலாளர் நல ஆய்வாளர்கள், 28 தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள் இச்சட்டத்தின் விதித்துறைகளை செயல்படுத்தி வருகின்றனர். 1980 ஆம் ஆண்டின் இறுதியில் 3,278 தொழிலாளர்களைப் பணிக்கமர்த்தி 45 நிறுவனங்கள் இச்சட்டத்தின் வரம்பிற்குள் இருந்தன.

**1976 ஆம் ஆண்டு விற்பனை மேம்பாட்டுப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் :—**

மருந்து தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக் குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ள இச்சட்டம், 1976 ஆம் ஆண்டு மார்ச் 6 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. தொழி லாளர் நல ஆணையர், தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (ஆய்வுகள்) தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையாளர்கள் தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் ஆகி யோர் இந்தச் சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் '' ஆய்வாளர் களாக '' அறிவிக்கப்பட்டுள்ளனர்.

**1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும், நீக்குதலும்), சட்டம்.**

தொழிலாளர் நல ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளர் (ஒப்பந்தத் தொழிலாளர் கள்) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப் படுத்தலும் நீக்கலும்) சட்டம் தொடர்புடைய பணியைக் கவனித்து வருகிறார்.

தொழிற்சாலை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல ஆய் வாளர்கள் முறையே தொழிற்சாலைகளையும், தொழிற்சாலை அல்லாத மற்ற நிறுவனங்களையும் பொறுத்த மட்டில் இச் சட்டத்தை செயல்படுத்தும்படி உத்திரவிடப்பட்டிருக்கிறார்கள்.

இச்சட்டத்தின்கீழ் 435 பேர் பிரதான தொழில் அதிபர்களாக வும் 1,314 பேர் ஒப்பந்தக்காரர்களாகவும், 1980 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டனர். மொத்தம் 762 தடவை சார்நிலை பணியாளர்களால் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.



**வழக்குத் தொடர்தல்.**

இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறியதற்காக அறிக்கை ஆண்டில் 24 நிர்வாகங்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன. 17 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகளென தீர்ப்பளிக்கப்பட்டனர். இவ்வாண்டு ரூபாய் 645 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது. இவ்வாண்டின் இறுதியில் 7 வழக்குகள் நீதி மன்றங்களில் முடிவுறாமல் இருந்தன.

**1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும் நீக்கலும்) சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள துணைக் குழுக்கள்.**

**பொறியியல் தொழிற்சாலை.**

சென்னை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள பொறி யியல் தொழிற்சாலையில் கையாண்டு வரும் ஒப்பந்தத் தொழி லாளர்கள் முறையை ஒழிக்க தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறையில் 28—10—1977ஆம் நாளிட்ட 769ஆம் அரசாணையில் துணைக் குழு நியமிக்கப்பட்டது. அக்குழு கீழ்க்கண்டவாறு பரிந்துரைத்தது :—

(1) ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு அதிக அளவு ஊதிய விகிதங்கள் நிர்ணயித்தல்.

(2) பெரும் தொழிலதிபர்களால் பணியில் அமர்த்தப்பட் டிருக்கும் தொழிற்சாலைக் களப்பணியாளர்களுக்கு அளிக்கப் படும் ஊதியம் போன்று மற்றவர்களுக்கும் சம ஊதியம் அளித்தல்.

(3) உணவகத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களை யும் தொழிற்சாலைத் தொழிலாளர்களாகக் கருதுதல்.

மேற்கூறப்பட்ட பரிந்துரைகளை அரசு பரிசீலித்து வரு கிறது.

**பொறியியல் தொழிற்சாலை.**

இம்மாநிலத்தில் பொறியியல் தொழிற்சாலையில் உள்ள ஒப்பந்தத் தொழிலாளர்களின் நிலையையும் , பணி நிலைமை களையும் ஆராய தொழிலாளர் நலன்-வேலைவாய்ப்புத் துறையில் 24—1—1981 ஆம் நாளிட்ட 177ஆம் அரசாணையில் அரசு துணைக் குழு ஒன்றை அமைத்தது.

1980-ஆம் ஆண்டு தொடக்கத்தில், 90,291 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள 419 மலைத் தோட்டங்கள் இருந்தன. 1980-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1-ம் நாள் முதல் டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் முடிய 514 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியிருந்த 2 மலைத் தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. 205 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியிருந்த 2 மலைத் தோட்டங்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில், 419 மலைத் தோட்டங்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தன. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் நிலவரப்படி தோராயமாக 90,600 தொழிலாளர்கள் பணியாற்றினர்.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் 60 வழக்குகள் நீதிமன்றத்தில் முடிவு செய்யப்படாமல் இருந்தன. இந்த ஆண்டில் 141 வழக்குகளுக்கு அனுமதி வழங்கப்பட்டன. 113 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டனர். அவர்களுக்கு ரூ. 16,380 அபராதம் விதிக்கப்பட்டது. அதாவது சராசரியாக வழக்கு ஒன்றுக்கு ரூ. 163 அபராதம் விதிக்கப்பட்டது. 10 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. மூன்று வழக்குகள் நீதிமன்றங்களிலிருந்து திருப்பிப் பெறப்பட்டன. 1980-ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் நீதி மன்றங்களில் 75 வழக்குகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன.

மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளரிடம் ஏற்பளிப்பை பெற்ற பின்னர், மலைத் தோட்ட அதிபர்கள், மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டும் கம்பளி ஆடைகளையும், கணப்பு அடுப்பிற்கு முன் போடப்படும் தரை விரிப்புகளையும் வழங்கினர்.

1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் ,மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் இலவசமாக மருத்துவ வசதி அளிக்க வகை செய்ய வேண்டியது மலைத் தோட்ட அதிபர்களின் கடமைகளில் ஒன்றாகும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

மலைத் தோட்டங்களிலுள்ள தோட்ட மருத்துவ மனைகளிலும் மருந்தகங்களிலும், உள்ள மருத்துவ அதிகாரிகள் 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தில் மருத்துவ வசதி தொடர்புடைய விதித்துறைகளின் கீழ் அறிக்கை ஆண்டில், 535 தடவை முறையான ஆய்வுகளையும் 5 தடவை திடீர் ஆய்வுகளையும் நடத்தினர்.



இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள் அறிக்கை ஆண்டில் 1,402 தடவை முறையான ஆய்வுகளையும், 75 தடவை சிறப்பு ஆய்வுகளையும், 49 தடவை திடீர் ஆய்வுகளையும் ஞாயிற்றுக் கிழமைகளில் 123 தடவை ஆய்வுகளையும் நடத்தினர்.

**ஊதியங்கள் குறித்து சட்டமியற்றுதல்.**

1. 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்.

1980 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் வேலைகளுக்கான குறைந்த அளவு ஊதியங்களை அரசு நிர்ணயித்துள்ளது/திருத்தியமைத்துள்ளது :—

(அ) சலவை செய்யும் இடங்களிலும், சாயம் தோய்த்தல் இடங்களிலும் வேலை (கம்பளி, பட்டுத்துணி உட்பட) ;

(ஆ) எண்ணெய் ஆலைகளில் வேலை ;

(இ) அரிசி, மாவு, பருப்பு ஆலைகளில் வேலை ;

(ஈ) கயிறு தயாரிக்கும் தொழிலில் வேலை ;

(உ) கடை, வர்த்தக நிறுவனங்களில் வேலை ;

(ஊ) பாட் லீப் (Bought-leaf) தேயிலைத் தொழிற்சாலையில் வேலை.

அறிக்கையாண்டில், கீழ்க்காணும் வேலைகளுக்காக குறைந்த அளவு ஊதியங்கள் குறித்த ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன :—

(அ) காப்பிக் கொட்டை பதனிடும் தொழிலில் வேலை ;

(ஆ) தங்க நகைகள் செய்யும் தொழிலில் வேலை ;

(இ) வெட்டுமரத் தொழிலில் வேலை ;

(ஈ) வெளுத்தல், சாயமிடுதல் தொழிலில் வேலை ;

(உ) திரைப்படத் தொழிலில் வேலை.

கீழ்க்காணும் தொழில்கள் 1948ஆம் ஆண்டு குறைந்த அளவு
ஊதியங்கள் சட்டத்தின் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன :

(அ) சோப்பு தயாரிக்கும் தொழிலில் வேலை ;

(ஆ) வனத்தில் வேலை .

இச்சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள ஆய்வு அதிகாரி
கள் இவ்வாண்டில் 49,635 தடவை ஆய்வுகள் நடத்தியுள்ளனர்.
இச்சட்டத்தையும் விதிகளையும் மீறியமைக்காகத் தொடரப்
பட்ட வழக்குகளின் விபரம் வருமாறு :

| | |
|---|---|
| (1) ஆண்டின் தொடக்கத்தில் நீதிமன்றங்களில் விசாரணையில் இருந்த வழக்குகள் | 393 |
| (2) இவ்வாண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் .. .. .. .. | 1,174 |
| (3) தண்டனை வழங்கப்பட்டு முடிந்த வழக்குகள் .. .. .. .. | 1,140 |
| (4) விடுதலையில் முடிந்த வழக்குகள் .. | [illegible]3 |
| (5) திரும்பப் பெறப்பட்ட வழக்குகள் .. | 2 |
| (6) மன்னிப்பு அளிக்கப்பட்ட வழக்குகள் .. | 10 |
| (7) ஆண்டின் இறுதியில் விசாரணையிலிருந்த வழக்குகள் .. .. .. | 412 |

(8) அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 43,450.

தொழிலாளர் நீதிமன்றங்களில் தலைமை தாங்கும்
அதிகாரிகள் 1948ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள்
சட்டத்தின் 20ஆம் பிரிவின் கீழ் ''அதிகாரமன்றத்தினராக''
அறிவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இவ்வாண்டில் குறைந்த
அளவு ஊதியம் கொடுக்கப்படாதது பற்றித் தாக்கல் செய்த
23 கோரிக்கை மனுக்களை விசாரித்துத் தீர்ப்பு அளித்தனர்.

கிராமப்புற மக்களில் சுமார் 80 சதவீதத்தினர் வேளாண்
மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால், வேளாண்மையில்
ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனைக் காக்கவேண்டி
1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தில்
அவர்களுடைய ஊதியத்தை திருத்தியமைக்க அரசு தனி நட
வடிக்கை எடுத்துள்ளது. மாவட்டங்களில், வேளாண்மைத்



தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான் குறைந்த அளவு ஊதி
யங்களின் சட்டத்தை வருவாய்த்துறை அதிகாரிகளால் நிருவ
கிக்கப்படுகிறது. சுமார் 1,097 பிர்கா வருவாய் ஆய்வாளர்
களிடம், அவரவர்களின் பிர்காக்களில் இச்சட்டத்தைச்
செயல்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்கள்
மாவட்ட ஆட்சித் தலைவர், கிராம வளர்ச்சி அதிகாரிகள்,
வட்டாட்சியர்கள், துணைவட்டாட்சியர்களின் கண்காணிப்பில்
உள்ளனர். குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 19(1)
பிரிவின்படி எல்லா வருவாய்த்துறை அதிகாரிகளும் ''ஆய்
வாளர்கள்'' என அறிவிக்கப்பட்டுள்ளனர். ஊதியம் குறைத்துக்
கொடுப்பவர்கள் மீது அவர்கள் ''20 அம்சத் திட்டத்தின்''
படி தாமாகவே நடவடிக்கை எடுக்கின்றனர். வேளாண்மை,
வேளாண்மைச் சார்ந்த துணைப்பணிகளில் குறைந்த அளவு
ஊதியங்கள் சட்டம் செயல்படுத்தப்படும் விதத்தினை அரசு
பரிசீலனை செய்து பின் மத்திய அரசுக்குத் தகவலும் அனுப்பு
கிறது.

**1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்:**

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, தொழிற்சாலை
ஆய்வாளர் அலுவலகமும் ஏனைய தொழில் நிறுவனங்களைப்
பொறுத்தவரை தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகமும்
இச்சட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன.

இச்சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காகத் தொழில்
அதிபர்கள் மீது 1,025 வழக்குகள் தொடர அனுமதி வழங்கப்
பட்டது. அவற்றில் 939 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட
வர்கள் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டனர். (ஆண்டுத்
தொடக்கத்தில் விசாரணை முடிவாகாமல் இருந்த வழக்குகளும்
இதில் அடங்கும்). ஐந்து வழக்குகள் விடுதலையில் முடிந்தன.
7 வழக்குகளில் மன்னிப்பு வழங்கப்பட்டன. இரு வழக்குகள்
திரும்பப்பெறப்பட்டன. 474 வழக்குகளில் விசாரணை முடி
வாகாமல் உள்ளன. ரூ. 32,880.00 அபராதமாக வசூலிக்கப்
பட்டது.

1936ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ்
''அதிகாரிகள்'' என்று அறிவிக்கப்பட்டுள்ள கூடுதல் ஆணை
யாளர்கள் (தொழிலாளர் இழப்பீடு) 1979-80 ஆண்டில்
விசாரித்துத் தீர்ப்பளித்த வழக்குகளின் விபரம் கீழே
கொடுக்கப்பட்டுள்ளது :

| | 1979 | 1980 |
|---|---|---|
| இவ்வாண்டு ஆரம்பத்தில் விசாரணையிலிருந்த உரிமைக் கோரிக்கைகள் | 320 | 204 |
| இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் .. .. | 404 | 481 |

| | | |
|---|---|---|
| இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட கோரிக்கைகள் .. .. .. | 520 | 40ꞅ |
| இவ்வாண்டு இறுதியில் முடிவுசெய்யப் படாமலிருந்த கோரிக்கைகள் .. | 204 | 216 |

இச்சட்டத்தின் கீழ் வரும் தொழில் நிறுவனங்களில் ஆய்வாளர்கள் 48,464 தடவை ஆய்வுகளை நடத்தினர்.

## IV. சமூகப் பாதுகாப்பு.

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி பலவகை விதித்துறைகள் சட்டம் :

சட்டத்தை நீட்டித்தல் :

1980 ஆம் ஆண்டில், பின்வரும் ஆறு புதிய தொழில்கள் இச்சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டன:

(1) வைரம் வெட்டி எடுக்கும் தொழில் ;
(2) வெங்கச் செங்கல் (Quartizite Mine) ;
(3) உள்நாட்டு நீர் வழிப் போக்குவரத்து நிறுவனங்கள்;
(4) கட்டிடம் கட்டுமானப் பணி தொழில்கள் ;
(5) கடுக்காய் பவுடர் தயாரித்தல் (Myrobalan Extract Powder).
(6) செங்கல் தொழில்கள்.

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி-பல்வகை விதித்துறைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகள் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 1979 ஆம் ஆண்டில் 157 ஆகும். 1980 ஆம் ஆண்டில் 163 ஆகும்.

இச்சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்கள்/சந்தாதாரர்கள்:

30–9–1980 ஆம் நாள் நிலவரப்படி இச்சட்டத்தின்கீழ் வரும் தொழில் நிறுவனங்கள், தொழிலாளர்களின் எண்ணிக்கை சந்தா செலுத்துவோர்களின் எண்ணிக்கை விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | விலக்களிக்கப் பட்டது. | விலக்களிக்கப் படாதது. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை .. .. .. | 420 | 11,666 |
| தொழிலாளர்களின் எண்ணிக்கை | 324,648 | 1,057,22 |



| | | |
|---|---|---|
| சந்தா செலுத்துவோரின் எண்ணிக்கை .. .. .. | 307,802 | 964,472 |

தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வரும் சந்தாதாரர்கள் :

| | | |
|---|---|---|
| சந்தாதாரர்களின் எண்ணிக்கை | 195,480 | 656,721 |

1976 ஆம் ஆண்டு தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டத்தின் கீழ்வரும் சந்தாதாரர்களின் எண்ணிக்கை:

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்குச் சந்தா செலுத்தும் அனைத்து சந்தாதாரர்களும், 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி–பல்வகை விதித்துறைகள் சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்ட தொழிற்சாலை தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதிக்குச் சந்தா செலுத்துபவர்களும், தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டத்தின் சந்தாதாரர்கள் ஆவர். அவர்கள் இத்திட்டத்தின் பயன்களைப் பெறத் தகுதி உடையவராவர்.

இச் சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளின் கீழ் கேட்பு/வசூல்/நிலுவைகள் குறித்த விவரம் வருமாறு :—

| நிலுவைத் தொகைகளின் தன்மை. | 30–9–1980 ஆம் நாள் நிலவரப்படி நிலுவை. | 1–1–1980 முதல் 30–9–1980 வரை வசூல். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்திய சந்தாத் தொகை .. .. .. | 1,43.98 | 31,46.05 |
| குடும்ப நல ஓய்வூதிய நிதிக்குச் செலுத்திய சந்தாத் தொகை. | 6.78 | 1,65.04 |
| தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை இணைந்த காப்புறுதித்திட்டத்திற்குச் செலுத்திய சந்தாத் தொகை .. .. | 7.95 | 125.44 |

[1981 ஏப்ரல் 29

வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை முடித்து இறுதியாகப் பணம் கொடுப்பது :

1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை 35,452 கோரிக்கைகள் தொடர்பாக வருங்கால வைப்பு நிதி கணக்குகள் முடிவு செய்யப்பட்டு ரூபாய் 9,59.26 இலட்சம் வழங்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாள் நிலவரப்படி பெறப்பட்ட முடிவு செய்யப்பட்ட திருப்பப்பட்ட கோரிக்கைகள் குறித்த விவரத்தை பின்வரும் விவர அட்டவணையில் காணலாம்:—

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டம்:

| | |
|---|---|
| 1. 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள் நிலவரப்படி நிலுவையாக இருந்த கோரிக்கைகள். | 6,747 |
| 2. 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை பெறப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 40,211 |
| 3. முடிக்கப்பட வேண்டிய கோரிக்கைகள் .. | 46,958 |
| 4. 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் நாள் வரை முடிவு செய்யப் பட்ட கோரிக்கைகள். | 35,452 |
| 5. தவறுகளை திருத்துவதற்காகத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட கோரிக்கைகள். | 6,058 |
| 6. 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் நிலவரப்படி நிலுவையாக இருந்த கோரிக்கைகள். | 5,448 |



1981 ஏப்ரல் 29]

இறுதியாகத் தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளின் விபரம் வருமாறு :

| இறுதியாகத் தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளின் வகைப்பாடு. | இறுதியாகத் தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கை களின் எண் ணிக்கை. | கொடுக்கப் பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1. இறப்பு .. .. .. | 2,249 | 85.62 |
| 2. வயது முதிர்வு பெற்றமை .. | 5,549 | 453.44 |
| 3. நிரந்தரமாக இயலாமையுறுதல் | 723 | 44·32 |
| 4. பதவி விலகல் .. .. | 22,162 | 291·23 |
| 5. ஆட்குறைப்பு .. .. | 4,611 | 83·36 |
| 6. இடம் பெயர்தல் .. .. | 11 | 0·51 |
| 7. பல்வகை .. .. .. | 147 | 0·78 |
| மொத்தம் .. | 35,452 | 959·26 |

1971ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியத் திட்டம்:

| | |
|---|---|
| 1. 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப்பெறாமல் இருந்த கோரிக்கைகள். | 4,446 |
| 2. 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாள் வரை பெறப்பட்ட கோரிக்கை களின் எண்ணிக்கை. | 27,010 |

| | |
|---|---|
| 3. முடிக்கப்பட வேண்டிய கோரிக்கைகள் .. | 31,456 |
| 4. 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாள் வரை முடிவு செய்யப்பட்ட கோரிக்கைகள். | 19,084* |
| 5. தவறுகளை திருத்தும்படி திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைகள். | 8,036 |
| 6. 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் நாள் நிலவரப்படி நிலுவையாக இருந்த கோரிக்கைகள். | 4,336 |

* 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் நிலவரப்படி இத் திட்டத்தின்கீழ் 540 கோரிக்கைகளின் பேரில் ரூபாய் 26.12 இலட்சம் மாதாந்திர ஓய்வூதியமாக வழங்கப் பட்டுள்ளது.

1976 ஆம் ஆண்டு தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டம்:

| | |
|---|---|
| 1. முடிக்கப்பட வேண்டிய கோரிக்கைகள் .. | 2,585* |
| 2. 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை முடிக்கப்பெற்ற கோரிக்கைகள். | 974 |
| 3. தவறுகளை திருத்துவதற்காகத் திருப்பி அனுப்பப்பட்ட கோரிக்கைகள். | 1,112 |
| 4. 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை நிலுவையாக இருந்த கோரிக்கைகள். | 499 |

* சம்பந்தப்பட்ட தொகை ரூபாய் 43.66 இலட்சம்.

இத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட முன்பணம்:

1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் சந்தாதாரர்களுக்கு





அவர்களுடைய வைப்பு நிதிக் கணக்கில் இருந்து, கீழ்க்கண்ட இனங்களுக்கு முன்பணம் (திருப்பிச் செலுத்தத்தக்கதல்ல) கொடுக்கப்பட்டது :—

| (1) | முன் பணம் கொடுக்கப் பட்ட இனங்களின் எண்ணிக்கை. (2) | கொடுக்கப் பட்ட தொகை. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| குறைந்த வருவாய் தொகுதியினருக்கான வீடு கட்டும் திட்டம். | 2,729 | 77·75 |
| 15 நாட்களுக்கு மேல்பட்டு கதவடைப்பு செய்யப்பட்ட அல்லது மூடப்பட்ட நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள். | 1,444 | 5.64 |
| சந்தாதாரர்கள்/அவர்களது குடும்பத்தினருக்கு மருத்துவச் செலவு. | 247 | 2.32 |
| மகன், மகள், தன்னைச் சார்ந்திருக்கும் சகோதரன், சகோதரி திருமணம்/சந்தாதாரர் குழந்தைகளின் மெட்ரிகுலேஷன் படிப்பிற்கு மேற்பட்டப் படிப்பு. | 3,905 | 69.07 |
| எதிர்பாராத நிலநடுக்கம், வெள்ளம் போன்ற நிலைமைகள். | 30,282 | 116.02 |
| ஆயுள் ஈட்டுறுதி பாலிசிகளுக்குப் பணம் செலுத்துதல். | 16,016 | 22·20 |

பாக்கியாக உள்ள மொத்தத் தொகை துணி நூல் தொழிற்சாலைகளிடம் இருந்து வரவேண்டியுள்ளது. பாக்கித்தொகையை வசூலிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூரில் உள்ள துணை வட்டார அலுவலகத்துடன் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் அடங்கிய பகுதிக்கு மதுரையில் மேலும் ஒரு துணை வட்டார அலுவலகம் 1980-ல் அமைக்கப்பட்டது. இப்பகுதிகளிலுள்ள சந்தாதாரர்களின் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்துடன் இது அமைக்கப்பட்டது.

தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் :

1948 ஆம் ஆண்டு தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்டத்தின்படி தமிழ்நாட்டில் 1955 ஆம் ஆண்டு சனவரி திங்களிலிருந்து தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தன்னாட்சி உரிமை பெற்ற தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் இத்திட்டத்தை நிர்வகிக்கிறது. இக்கழகம் சமூகப் பாதுகாப்பு மத்திய அமைச்சகத்தின்கீழ் நிர்வாகப் பொறுப்பில் உள்ளது. இத்திட்டத்திற்குத் தொழிலாளர், தொழிலதிபர் ஆகியோரிடம் இருந்து தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகத்தால் வசூலிக்கப்படும் சந்தா தொகையே வருவாயாகும். இத்திட்டம் தற்போது தருமபுரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்றெல்லா மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 4,50,000. இத்திட்டம், மின் விசையைப் பயன்படுத்தி இயங்குவனவற்றில் 10 பேர்களும் அதற்கு மேலும் பணிபுரிகின்ற தொழிற்சாலைகளுக்கும் மின் விசையைப் பயன்படுத்தாதவற்றில் 20 பேர்களும் அதற்கு மேலும் பணிபுரிகின்ற தொழிற்சாலைகளுக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,000-க்கு மேற்படாமல் ஊதியம் பெறுகின்ற தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இத்திட்டத்தின்கீழ் பின்வரும் உதவிகள் அளிக்கப்படுகின்றன :—

1 மருத்துவ உதவி (மருத்துவப் பொருள் வடிவில்).

2 நோய் கால உதவி (பணமாக).

3 பேறு கால உதவி (பணமாக).

4 இயலாமையுற்றோருக்கு உதவி (பணமாக).

5 சார்ந்துள்ளவர்கள் நல உதவி (பணமாக).

6 இறுதிச் சடங்குகளுக்கான செலவுத் தொகை (பணமாக).

மேற்கூறப்பட்ட உதவித் திட்டங்களில் முதலாவது இனம் தவிர ஏனைய பணமாகக் கொடுக்கப்படும் இவ்வைந்து திட்டங்களையும், தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம், மாநிலம் முழுவதும் உள்ள வட்டார அலுவலகங்கள் மூலம் நேரடியாக



நிர்வகித்து வருகிறது. மருத்துவ உதவியளிக்கும் திட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பு மாநில அரசைச் சார்ந்ததாகும். மருத்துவ உதவியளிக்கும் திட்டத்தின்கீழ் மருத்துவச் செலவு 1 : 7 என்ற விகிதத்தில் முறையே மாநில அரசும் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகமும் பகிர்ந்து கொள்ளுகின்றன. ஆயினும் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் இவ்வாறு ஓர் ஆண்டுக்குப் பகிர்ந்து கொள்ளத்தக்க செலவிற்கு உச்சவரம்பை வரையறுத்துள்ளது.

1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து செலவுத் தொகை கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | விரிவாக்கப்பட்ட மருத்துவச் சிகிச்சை. | ஒரு தொழிலாளியின் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 85. |
| 2. | முழு மருத்துவச் சிகிச்சை .. | ஒரு தொழிலாளியின் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 120. |

1979 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதியிலிருந்து இம்மாநிலத்தில் அமுலாக்கப்பட்ட எல்லா இடங்களில் உள்ள காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்களின் குடும்பங்கள் அனைத்திற்கும் முழு மருத்துவ வசதிகள் கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, மருந்துகள், மருத்துவ வசதிக்காகும் மற்ற செலவு வகையில் ஒரு தொழிலாளிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 25-க்கு அதிகமாகவும் ரூ. 50-க்கு மிகாமலும் செலவுத் தொகை அனுமதிக்கப்படும். இது மேற்படி உச்சவரம்பில் அடங்காது. இச்செலவையும் மாநில அரசும், புதுடில்லி தொழிலாளர் நலக்காப்புறுதிக் கழகமும் ஒப்புக்கொண்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும்.

மேலும், இம் மாநிலத்தில் தொழிலாளர் நலக்காப்புறுதிக்கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களுக்கான வாடகைச் செலவு 1–4–80-லிருந்து 1:7 என்ற அதே விகிதாச்சாரத்தில் பகிர்ந்து கொள்ளப்படும். இது மேற்படி உச்சவரம்பில் அடங்காது.

இந்த மருத்துவச் செலவு அனைத்தும் முதலில் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது. பின்னர் இந்தச் செலவு தமிழ்நாடு மாநிலக் கணக்குத்துறைத் தலைவர்-II கொடுக்கும் சான்றிதழின் பேரில் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகத்திடமிருந்து மீண்டும் பெறப்படுகிறது.

தற்போது சென்னையிலுள்ள அயனாவரம், கலைஞர் கருணாநிதி நகர், மதுரை, கோயம்புத்தூர், வேலூர் ஆகிய

ஐந்து இடங்களில் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகள் உள்ளன. தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் நிலையான 107 மருந்தகங்களும், ஒன்பது நடமாடும் மருந்தகங்களும், மூன்று பயன்பாட்டு மருந்தகங்களும், இரண்டு பகுதி நேர மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

ஐந்து தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகளில் உள்ள படுக்கையின் எண்ணிக்கை வருமாறு :—

| | |
|---|---|
| தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, சென்னை. | 625 |
| தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனை, மதுரை. | 202 |
| தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனை, கோயம்புத்தூர். | 500 |
| தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனை, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை. | 206 |
| தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனை, வேலூர். | 50 |

கீழ்க்காணும் இடங்களில் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் மருந்தகங்களை ஆரம்பிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது :—

1 சிவகாசி சுற்றுப்புறப் பகுதி.

2 குமாரபாளையம்.

3 திருவரம்பூர், துவக்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4 கொடுங்கையூர்.

தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் இடங்களையும் கொண்டு வருவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது:—

1 ஆறுமுகனேரி



2 சேலம் சுற்றுப்புறம்

3 கன்னியாகுமரி சுற்றுப்புறம்.

கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனையில் உள்ள 206 படுக்கைகளின் எண்ணிக்கையை 400 ஆக உயர்த்தவும், கோயம்புத்தூரில் உள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனையில் தீவிர இதய மருத்துவச் சிகிச்சை (I.C.C Unit) பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. ஐந்து தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகளும், காப்புறுதி நலக் கழகத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகின்றன. தொழிலாளர் நல காப்புறுதி திட்டத்தின் கீழ் இயங்கும் நிலையான 107 மருந்தகங்களில் 45 தொழிலாளர் நல காப்புறுதி கழகத்திற்குச் சொந்தமான கட்டடத்திலும், மீதமுள்ளவை தனியார் வாடகைக் கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. தாம்பரத்தில் உள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகம் 29–4–1980-ல் இருந்து புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

இரு மருத்துவர்கள், அதற்கு மேற்பட்டவர்களுடன், வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டு வரும் 45 தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்களுக்குச் சொந்தமாக கட்டிடம் கட்ட தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது. தனியார் வாடகைக் கட்டிடங்களில் அமைந்துள்ள இந்த 45 மருந்தகங்களுக்கு கட்டிடம் கட்ட நிலத்தை அரசு வசம் எடுத்துக்கொள்வதற்கான செயற்குறிப்புகள் பல்வேறு நிலைகளில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

சந்தா வசூல் .—

1980–81 ஆம் ஆண்டு (30–9–80 வரை) தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 7,40,57,761.38 சந்தாவாக வசூலிக்கப்பட்டது.

பண உதவி .—

காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கு 1980–81 ஆம் ஆண்டில் (30–9–80 வரை) ரூ. 4,19,82,145.87 பணம் உதவியாகக் கொடுக்கப்பட்டது. பல்வேறு தொழிலதிபர்களிடம் இருந்து சந்தா தொகையாக வரவேண்டிய ரூ. 30,14,395.30-ஐ வசூலிக்க வரிவசூல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1–1–80 முதல் 30–9–80 வரை சந்தாத் தொகையை வசூலிக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன:—

| | |
|---|---|
| சந்தாத் தொகை அட்டையை கொடுக்காதவர்களின் மேல் தொடரப்பட்ட வழக்குகள். | 66 |
| தண்டிக்கப்பட்டவை .. .. .. | 38 |
| தண்டிக்கப்பட்ட வகையில் அபராதமாக வசூலிக்கப்பட்ட ரூபாய். | 4,280 |

1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம்.—

1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் கீழ்க்கண்ட சமயங்களில் இழப்பீட்டுத் தொகை வழங்க வகை செய்கிறது.—

(அ) தொழிற்சாலைகளில் வேலை காரணமாகவும் வேலை செய்யும் போதும் ஏற்படுகின்ற விபத்துக்கள்,

(ஆ) மரணத்தை உண்டாக்குகின்ற அல்லது பணியாற்ற இயலாவண்ணம் செய்துவிடுகிற தொழில் சார்ந்த சில நோய்கள், தொழிற் சாலைகள், சுரங்கங்கள், மலைத் தோட்டங்கள், போக்குவரத்து கட்டுமான பணிகள், இரயில்வே, அபாயம் விளைவிக்கிற சில குறிப்பிட்ட தொழில்கள் ஆகியவற்றில் பணி புரிகின்ற தொழிலாளர்களுக்கு (தொழிலதிபரின் வாணிபம் அல்லது தொழிலுக்கு அன்றி வேறு விதத்தில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நாட்கூலி பெறும் தொழிலாளர்கள் நீங்கலாக) இது பொருந்தும்.

1979–80 ஆம் ஆண்டுகளில் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட, தீர்த்துவைக்கப்பட்ட வழக்குகள் பற்றிய புள்ளிவிவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | 1979 | 1980 |
|---|---|---|
| ஆண்டுத் தொடக்கத்தில் நிலுவையாக இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 589 | 449 |
| இவ்வாண்டில் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 855 | 798 |



| | 1979 | 1980 |
|---|---|---|
| தீர்த்துவைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 995 | 908 |
| ஆண்டு இறுதியில் நிலுவையாக இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 449 | 339 |

தொழிற்சாலை விபத்துக்கள்—துயர் துடைப்பு நிதி.—

ஆண்டொன்றிற்கு 15,000 ரூபாய் தொடர்மானியத்துடன் அரசால் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல் உடைத்தல், வெடி வைத்து தகர்த்தல், கிணறு தோண்டுதல் அல்லது பிற தொழில்களில் பணிபுரியும்போது காயமேற்பட்டு அதனால் என்றுமே பணியாற்ற இயலாமற்போன தொழிலாளர்களுக்கு அல்லது மரணமடைந்த தொழிலாளர்களை நம்பியிருப்பவர்களுக்கு இந்நிதியிலிருந்து உதவியளிக்கப்படும். 1923 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்குவதற்கு தொழிலதிபர்களிடம் நிதி வசதி இல்லாதிருந்தால் அல்லது வேறு காரணங்களை முன்னிட்டு தொழிலாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோர் இழப்பீட்டுத் தொகை பெற இயலாது போனால் இந்நிதியிலிருந்து துயர் தணிப்பு உதவித் தொகை அளிக்கப்படும். இழப்பீடு வழங்கப் போதுமான நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் அல்லது காயமடைந்தால் அவர்களும் இந்நிதியிலிருந்து உதவித் தொகை பெறுவர். 1979 ஆம் ஆண்டில் இரண்டு பேருக்கு ரூ. 3,000 துயர் துடைப்பு நிதியாகக் கொடுக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு ஆறு தொழிலாளர்களுக்கு 5,750 ரூபாய் துயர் துடைப்பு நிதியாகக் கொடுக்கப்பட்டது.

1972 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டம்.—

இச்சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு அதிகாரிகளாலும், மேல் முறையீட்டு அதிகாரிகளாலும் 1979, 1980 ஆம் ஆண்டுகளில் முடிவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | 1979 | 1980 |
|---|---|---|
| கட்டுப்பாட்டு அதிகாரிகள் .. | 1,413 | 1,272 |
| மேல்முறையீட்டு அதிகாரிகள் .. | 408 | 298 |

V. தொழிலாளர் நலப் பணிகள்.—

தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம் (அரசு உதவி பெறுவது) தனியார் தொழிலதிபர் திட்டம்.—

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களின் நன்மைக்காகத் தொழிலதிபர்கள் வீடுகள் கட்டிக் கொடுக்க இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதி உதவியை விரிவுபடுத்த கீழ்க்காணும் உச்சவரம்புகள் விதிக்கப்பட்டுள்ளன. இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (இரண்டடுக்கு மாடி கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 5,350 ரூபாயும், இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (பல அடுக்கு மாடிக்கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 6,050 ரூபாயும் வழக்கமான இரு அறைகள் கொண்ட வீடு (இரண்டு மாடிக்கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 7,600 ரூபாயும், வழக்கமான இரண்டு அறைகள் கொண்ட வீடு (பல மாடிக்கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 8,500 ரூபாயும் நிதியுதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

1980—81 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தில், இத்திட்டங்களுக்கு கடனாக 5.26 இலட்சம் ரூபாயும் உதவித் தொகையாக 2.50 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

1980-81-ஆம் ஆண்டின் வரவு—செலவுத் திட்டத்தில், இத்திட்டங்களுக்கு கடனாக 5.26 இலட்சம் ரூபாயும் உதவித்தொகையாக 2·50 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் கீழே கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| 1. மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, படாளம். 16 வீடுகள் கட்டுதல். | ரூபாய் 60,800 கடனாகவும் ரூபாய் 15,200 உதவித் தொகையாகவும் வழங்கல். |
| 2. நாங்குநேரியில் உள்ள சுந்தரம் துணி ஆலை (12 வீடுகள் கட்டுவதற்கு முழுவதும் உதவித் தொகையாக). | உதவித் தொகையாக ரூபாய் 16,050 அளித்தல். |

1980-81-ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 3. ஸ்ரீ. இராமலிங்கா ஆலை லிமிடெட், அருப்புக் கோட்டை. | இரண்டு அறைகள் கொண்ட இரண்டு மாடிக் கட்டிடம் 140. கடனாக ரூபாய் 3,74,500 உதவித் தொகையாக ரூபாய 1,87,250 வழங்கல். |



1979-80 ஆம் ஆண்டு, ஒப்புதல் அளித்துள்ள திட்டத்தின் கீழ் நாங்குநேரியில் உள்ள சுந்தரம் துணி ஆலைக்கு 32,100 ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வேலைகள் 1980-81 ஆம் ஆண்டு முடிவுறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது:—

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, படாளம்—16 வீடுகள்.

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மோகனூர்—72 வீடுகள், அடிப்பீடம்வரை கட்டுதல்.

1981-82 ஆம் ஆண்டின் கீழே கொடுக்கப்பட்டுள்ள மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. தேசீய கூட்டுறவு சர்க்கரை ஆலை, அலங்காநல்லூர். | 48 வீடுகள் (இரண்டாவது கட்டமாக) கட்டி முடிக்க எதிர்பார்க்கப்படுகிறது. |
| 2. மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, படாளம். | 40 வீடுகள் (இரண்டாவது கட்டமாக) கட்டி முடிக்க எதிர்பார்க்கப்படுகிறது. |
| 3. சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மோகனூர். | 72 வீடுகள் கூரை மட்டம் வரை கட்டி முடிக்க எதிர்பார்க்கப்படுகிறது. |
| 4. ஸ்ரீ இராமலிங்கா மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட், அருப்புக்கோட்டை. | 140 வீடுகள் அடிமட்டம் வரைகட்டிமுடிக்க எதிர்பார்க்கப்படுகிறது. |

**மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்.—**

இத்திட்டம் மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் தங்களது தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதை நோக்கமாகக் கொண்டதாகும். 1979 ஆம் ஆண்டில் ஓர் அறை கொண்ட குடியிருப்பு ஒவ்வொன்றும் 4,000 ரூபாய் உச்சவரம்புச் செலவில். கட்டப்படுகின்றன. அத்தொகையில் 50 சதவீதம் கடனாகவும் 37.5 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்படும். அறிக்கை ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான புதிய திட்டம் எதற்கும் அரசு ஏற்பளிக்கவில்லை.

மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் தற்போதைய நிலைமை கீழே கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. வீடுகள் தேவைப்படுகின்ற தனித் தொழிலாளர்கள் உட்பட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை. | 46,372 |
| 2. வழங்கப்பட்ட தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை. | 38,754 |
| 3. வழங்கப்படவிருக்கும் தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை. | 7,618 |
| 4. தற்போதுள்ள தரமற்ற வீடுகளின் மொத்த எண்ணிக்கை. | 3,600 |

பொதுவானவை.

தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் வரும் தொழிலாளர்களின் புள்ளி விவரத்தைக் கணிக்கும் பொருட்டு, 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் ஒரு கணக்கெடுப்பை நடத்த ஆய்வாளர் அலுவலகம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இக்கணக்கெடுப்பு பல்வேறு தொழிலாளர் நலச் சட்டத்தின்கீழ் வரும் தொழிற்சாலைகளில் 25 சதவீத வளர்ச்சியையும், தொழிலாளர் நலச் சட்டங்களினால் பயனடையும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 30 சதவீதம் என்றும் இந்த ஆய்வு எடுத்துக் காட்டியது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தமிழ்நாடு, 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது. இது சட்ட வரம்புக்கு உட்பட்ட ஒரு அமைப்பாகும். இவ்வாரியத்தின் தலைவர் தொழிலாளர் நல அமைச்சராகும். இவ்வாரியத்தில் அரசு, தொழிலதிபர், தொழிலாளர்கள் ஆகியோரின் பிரநிதிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும், சுயேச்சையாளர்களும் உறுப்பினராக உள்ளனர். இவ்வாரியம் தொழிலாளர்களின் நலனுக்காக பல நல நடவடிக்கைகளைத் தமிழ்நாட்டில் அமுல் படுத்தி வருகிறது.

1. தொழிலாளர் நல நிலையங்கள்.

இவ்வாரியம் தற்போது 14 தொழிலாளர் நல நிலையங்களை நடத்தி வருகிறது. தொழிலாளர் நல நிலையத்தில் இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒரு பிரிவில் தொழிலாளர்களின் மகளிர்க்கும் மனைவியருக்கும் தையல் வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது.



ஒவ்வொரு தையல் கலை வகுப்பிலும் 50 பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 30 பயிற்சி உதவித் தொகையாக கொடுக்கப்படுகிறது. மற்றுமொரு பிரிவில் 2 வயது முதல் 5 வயது வரையிலான தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பாலர் வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பாலர் வகுப்பிலும் 50 குழந்தைகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். 1980-81 ஆம் ஆண்டு இதற்கென ரூபாய் 89,499 தொழிலாளர் நல வாரியத்தால் செலவிடப்பட்டிருக்கிறது. இவ்வாரியம் தொழிலாளர் நல நிலையங்களை கிண்டி, விக்கிரமசிங்கபுரம், சேலம், பெரிய நாய்க்கன் பாளையம், தாராபுரம், மேட்டூர், எண்ணூர், பெரம்பூர் பேரக்ஸ் லேன், வில்லேஜ் காலனி (சென்னை), பழனி, உடுமலைப்பேட்டை, தூத்துக்குடி, ஈரோடு, டால்மியாபுரம், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூரிலும் திறக்க தீர்மானித்துள்ளது. இத் தொழிலாளர் நல நிலையங்களில் தொழிலாளர்களை சார்ந்திருக்கும் மாணவர்களுக்கு படிப்பறைகளை அமைத்துக் கொடுக்கவும் தீர்மானித்துள்ளது.

2. தையல் பயிற்சி நிலையங்கள்.

இவ்வாரியம் தற்போது கூடலூரில் ஒரு தையல் பயிற்சி நிலையத்தை நடத்தி வருகிறது. இதைத் தவிர, தையல் பயிற்சி நிலையங்களை கோத்தகிரியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாஞ்சோலை தோட்டத்திலும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கீழ் கோதையார் என்னும் இடத்திலும் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. படிப்பகங்கள்.

இவ்வாரியம், பெரம்பூர் (சென்னை), தண்டையார்பேட்டை (சென்னை), மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நான்கு படிப்பகங்கள் நடத்தி வருகிறது. வாசகர்களின் பயனுக்காக செய்தித் தாள்கள், வார, மாதாந்திர இதழ்கள் வழங்கப்படுகின்றன. படிப்பகங்களில் அறிவியல், கணிதப் பாடங்களில் பார்வைப் புத்தகங்கள், தொழில் தகராறு சட்டப் புத்தகங்கள் ஆகியவற்றைக் கொண்ட சிறு நூலகம் ஒன்று அமைக்கப்படலாம் என்றும் வாரியம் முடிவு செய்துள்ளது.

4. தாம்பரம், காசநோய் மருத்துவ மனையில் தொழிலாளர்களுக்கு காசநோய் வார்டுகள்.

இவ்வாரியம், தாம்பரம் காச நோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்கு என 26 படுக்கைகள் கொண்ட காச நோய் வார்டை ரூபாய் 3·64 இலட்சம் செலவில் கட்டியுள்ளது. இவ்வாரியம் தொழிலாளர்களுக்கென வேலூர் காசநோய் மருத்துவ

மனையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆசாரிப்பள்ளம் என்னுமிடத்திலும்; பெரியார் மாவட்டத்தில் உள்ள பெருந்துறை என்னுமிடத்திலும், மதுரை மாவட்டத்தில் உள்ள ஆஸ்தினம்பட்டி என்ற இடத்திலும் மற்றும் திருப்பூர் அரசு மருத்துவ மனையிலும் காசநோய் வார்டுகளை கட்ட தீர்மானித்துள்ளது. இவ்வாரியம் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கென 20 படுக்கைகள் கொண்ட சிறார் நலத் தனி மருத்துவ பிரிவு ஒன்றினை சிவகாசியில் ஏற்படுத்த உத்தேசித்துள்ளது.

5. தொழிலாளர்களுக்கு விடுமுறை ஓய்வு இல்லம்.

ஏற்காட்டில் தற்பொழுது தொழிலாளர் ஓய்வு இல்லம் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மாமல்லபுரத்திலும், குற்றாலத்திலும் ஓய்வு இல்லங்களைக் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. உதகமண்டலத்தில் ஒரு ஓய்வு இல்லம் கட்டுவதற்கு 0·25 ஏக்கர் நிலம் தொழிலாளர் நல வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டு உள்ளது. வால்பாறை, கொடைக்கானல் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் ஓய்வு இல்லங்கள் கட்டுவதற்கு இவ்வாரியம் உத்தேசித்துள்ளது.

6. குழந்தைகள் காப்பு நிலையம்.

சென்னையில் திரு. வி. க. நகரிலும், சென்னை, பாரக்ஸ் லேன் வில்லேஜ் காலனியிலும் உள்ள மகளிர் மன்றங்களும், கோயம்புத்தூர் எஸ். ஐ. எச். எஸ். தொழிலாளர் மகளிர் மன்றமும், இராஜபாளையத்திலுள்ள மகளிர் மன்றமும், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திடமிருந்து மன்றம் ஒன்றுக்கு பெறும் ரூபாய் 8,000 ஆண்டு மானியத்துடன் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாரியம் பல்லடத்தில் குழந்தைகள் காப்பு நிலையம் ஒன்றினை நடத்தி வருகிறது. சங்ககிரி, கூனூர், சாத்தூர், திருச்சிராப்பள்ளி, முக்கூடல், தூத்துக்குடி, பவானி மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆலங்குளத்திலும் ஒவ்வொரு குழந்தைகள் காப்பு நிலையங்களை தொடங்க இவ்வாரியம் தீர்மானித்துள்ளது. 1980-81 ஆம் ஆண்டு இவ்வாரியம் இதற்கென ரூபாய் 23,670 செலவு செய்துள்ளது.

7. தொழிற் சங்கத் தலைவர்களும், தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் சென்னை தேனாம்பேட்டையில் தங்குவதற்கான இட வசதிகள்.

இதன் கட்டுமானப்பணி நடந்து வருகிறது. இது 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் திறக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தேனாம்பேட்டையில் உள்ள இந்த ஓய்வு இல்லத்தில் தொழிற்சங்கத் தலைவர்களின் உபயோகத்திற்கென பார்வைப் புத்தகங்கள் அடங்கிய நூலகம் ஒன்றினைத் தொடங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.



8. புத்தக வங்கிகள்.

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டம் ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகள், பள்ளிகளில் படிக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உதவும் வகையில் புத்தக வங்கிகளைத் தொடங்க வாரியம் முடிவு செய்தது. இத்திட்டத்தின் கீழ் ஏழாம் வகுப்பு பயிலும் தொழிலாளர்களின் குழ்ந்தைகளுக்கு திருப்பித்தர வேண்டப்படாத பாடப்புத்தகங்களை இலவசமாகவும் எட்டாம் வகுப்பும் அதற்கு மேலும் படிக்கும் மாணவர்களுக்கு திருப்பித்தரப்படவேண்டிய பாடப் புத்தகங்களை இவ்வாரியம் வழங்கி வருகிறது. புத்தகங்கள் வாங்கிய வகையில் செலவழிக்கப்பட்ட பணத்தை ஈடுசெய்யக் கோரி வந்த 161 விண்ணப்பங்களை இவ்வாரியம் பெற்று இதற்கென ரூபாய் 2,074.50 இதுவரை வழங்கி உள்ளது.

9. தொழிலாளர்களின் பிள்ளைகள் தட்டெழுத்து, சுருக்கெழுத்து கற்றுத்தேற படிப்புக்கட்டணம், தேர்வுக் கட்டணம் செலுத்துதல்.

இத்திட்டத்தின் கீழ் 193 தொழிலாளர்களின் குழந்தைகளுக்குச் செலுத்திய தொகை திருப்பித் தரப்பட்டது. இதுவரையில் ரூபாய் 15,681 கொடுக்கப்பட்டுள்ளது.

10. பார்வைக் கோளாறினால் அவதிப்படும் தொழிலாளர்களுக்கு இலவசமாகக் கண்ணாடி வழங்குதல்.

இக்கால அளவில் 544 பார்வை குறைந்த தொழிலாளர்களுக்கு கண்ணாடி வாங்கியதற்கான செலவை இவ்வாரியம் ஏற்றுள்ளது. இதுவரை இதற்கென ரூ. 22,922.38-க்கும் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

11. படிப்புதவித் தொகை.

கீழே விளக்கிக் காட்டியுள்ளபடி தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இவ்வாரியம் படிப்பு உதவித்தொகை வழங்குகிறது :—

| | |
|---|---|
| (அ) 10+2 : | ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல், இரண்டாவது மாணவர்களாக வருபவர்களுக்கு படிப்புதவித் தொகைகள் அளித்தல். |
| (ஆ) பொறியியல் : | 15 மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை அளித்தல். |

(இ) மருத்துவம் : 10 மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை அளித்தல்.

(ஈ) சட்டம் : 9 மாணவர்களுக்கு படிப்புத்வித் தொகை அளித்தல்.

(உ) தொழிற் பயிற்சி நிலையங்கள். 15 மாணவர்களுக்கு படிப்புதவித் •தொகை அளித்தல்.

### 12. இதர திட்டங்கள்.

ஆண், பெண் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கும் வாரியம் ஒவ்வொரு ஆண்டும் விளையாட்டுப்போட்டியை நடத்தி வருகிறது. தொழிலாளர்களிடையே குடிப்பதினால் ஏற்படும் தீமையை தவிர்க்கும்பொருட்டு, தொழிலாளர்கள் நிறைந்துள்ள இடங்களிலும், தொழிலாளர்கள் வசிக்கும் இடங்களில் மனமகிழ் "மன்றங்களை நிறுவ இவ்வாரியம் தீர்மானித்துள்ளது. பணியில் இருக்கும்போது தொழிலாளர்கள் இறந்து விட்டால் அவர்களின ஈமச் சடங்கிற்கென ரூ. 200-ஐ அவர்களின் குடும்பத்திற்கு இவ்வாரியும் வழங்குகிறது. ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு செயற்கை அவயவங்கள், வேறு எந்த வகையிலேயும் அவர்களுக்கு கிடைக்கவில்லையானால் இவ்வாரியம் வழங்குகிறது. திருவொற்றியூர் அல்லது எண்ணூர் (சென்னை) மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் பலநோக்கு தொழிலாளர் நல நிலையங்களை நிறுவ இவ்வாரியம் தீர்மானித்துள்ளது. வடசென்னையில், கலையரங்கத்துடன் கூடிய ஒரு சமூகக் கூடத்தையும், அம்பத்தூரில் ஒரு சமூகக் கூடத்தையும் தொழிலாளர்கள் குறைந்த செலவில் திருமணம், காதணி விழா, ஏனைய சமய நிகழ்ச்சிகளை நடத்த இவ்வாரியம் கட்ட தீர்மானித்துள்ளது. ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் வராத தொழிலாளர்களின் நலத்திற்கென இவ்வாரியம் ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி முனைப்புத் திட்டத்தைச் செயல்படுத்தத் தீர்மானித்துள்ளது.

### 13. சட்ட உதவி.

தொழிற்சங்கங்கள், உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட்மனு அல்லது ரிட் முறையீடு தாக்கல் செய்வது தொடர்பாக ஏற்படும் சட்ட சம்பந்தமான செலவுகளுக்காக ஒரு சில நிபந்தனைகளுக்குட்பட்டு ரிட்மனு அல்லது மேல்முறையீடு ஒன்றுக்கு ரூ. 150 என்ற வீதத்தில் நிதியுதவி வழங்கும் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சட்ட நிதி உதவிக்கு அனுமதி வழங்க தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டில், நிவாரணம் வேண்டி ஒரு கோரிக்கை வந்தது. இந்தத் திட்டத்தின் கீழ் ரூ. 150 வழங்கப்பட்டது. அறிக்கையாண்டில் இத்திட்டத்தின் கீழ் சட்ட உதவி கோரி எந்த விண்ணப்பமும் வரப்பெறவில்லை.



தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகையாகக் கோரும் தகுதி வாய்ந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கு அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000-ஐ அரசு ஒதுக்கியுள்ளது. காயமுற்ற தொழிலாளர்கள் கோரிய இழப்பீடு குறித்து கூடுதல் ஆணையாளர் பிறப்பித்த ஆணைகளுக்கெதிராக நிர்வாகத்தினர் உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளும்போது, அத்தொழிலாளர்களும் உயர்நீதி மன்றத்தில் தங்கள் தரப்பை எடுத்துரைக்க சட்ட உதவிபெறுவதற்கு தகுதி வாய்ந்தவராவர். ஆனால், தொழிலாளர் இழப்பீடு குறித்து கூடுதல் ஆணையாளர் முன் உள்ள நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கு இந்தச் சட்ட உதவி அளிக்கப்பட்டது.

### தொழிலாளர் சட்ட ஆலோசனைப் பிரிவுகள்.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று சட்ட ஆலோசனைப் பிரிவுகள் செயல்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் ஓய்வு பெற்ற நீதித்துறை அதிகாரியாலும் ஓய்வு பெற்ற ஒரு தொழிலாளர் நல அதிகாரியாலும் நிர்வகிக்கப்படுகின்றன. போதிய நிதி வசதியில்லாத மக்களுக்குச் சட்ட உதவியை வழங்குவதற்குரிய திட்டமொன்றை வகுப்பது பற்றி ஆய்வு செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழு செய்த பரிவுரைகளின் பேரில் அரசு இப்பிரிவுகளை அமைத்துள்ளது. இப்பிரிவுகள் தொழிலாளர்களின் முறையீடுகளை கனிவோடும் பரிவோடும் கேட்டறிந்து, அவர்கள் தம் குறைகளைக் களைவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பல்வேறு தொழிலாளர்கள் சட்டங்களின் கீழ் நிவாரணம் பெறுவதற்குரிய முறைகள் ஆகியவை குறித்து கருத்துத் தெரிவிக்கின்றன.

1979 ஆம் ஆண்டு இம்மூன்று பிரிவால் விசாரணை செய்த 274 முறையீடுகளுடன் ஒப்பிடுகையில் 1980 ஆம் ஆண்டு இம்மூன்று பிரிவுகளும் 350 முறையீடுகளை விசாரணை செய்துள்ளன.

### தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத் திட்டம்.

இம்மாநிலத்தில் தொழிலாளர்களின் பயனுக்காக, 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் குடும்பங்களிலுள்ள பள்ளிக்கு செல்லும் வயது அடையாத குழந்தைகளும், கருவுற்ற மகளிரும, பாலூட்டும் தாய்மார்களும் இத்திட்டத்தினால் பயனடைகின்றனர். இத்திட்டத்தின் கீழ் 106 தொழிற் பிரிவுகளைப் பொறுத்தமட்டில் (தமிழ்நாடு தொழி

லாளர் நல வாரியத்தின் தொழிலாளர் நல நிலையங்கள் உட்பட), தற்போது 29,982 பேர் பயன் அடைகின்றனர். தற்போதுள்ள தொழிலாளர் சத்துணவுத் திட்டத்தோடு, ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி முனைப்புத் திட்டத்தையும் செயற்படுத்தவேண்டியது அவசியம் என உணரப்பட்டுள்ளது. இதனால், வழங்கப்படும் சத்துணவிற்கேற்ப மருத்துவ உதவியையும் இத் தொழிலாளர்கள் பெறுவர்.

**தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை.**

நல்ல, சிறந்த தொழிற்சங்க அமைப்புகளின் வளர்ச்சிக்கும் நிர்வாகத் திறமையைப் பெருக்குவதற்கும் திறமையான தொழிலாளர் நிர்வாகப் பணியை உருவாக்குவதற்கும் தமிழ்நாடு அரசு தென்னிந்தியாவிலேயே தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தை 1973 மார்ச்சு திங்களில் அமைத்தது. தென் இந்தியாவிலேயே இத்தகைய கல்வி நிலையம் முதன் முதலாக இங்குதான் நிறுவப்பட்டுள்ளது. மேற்கூறிய நோக்கங்களை எய்தும் வகையில் பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அப்பாடத் திட்டத்தில் பின்வரும் திட்டங்கள் அடங்கியுள்ளன:—

(1) பொதுத்துறை, தனியார் துறை தொழில் நிறுவனங்களில் பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கு (உடனுழைப்பாளர்கள், எழுத்தர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள்) தொழிலாளர் நலச் சட்டத்தின் அனைத்து அம்சங்கள் குறித்து அறிவுறுத்துதல், அவர்களே தொழிற் சங்கங்களுக்குத் தலைமை வகிப்பது பற்றி சிறப்பாக வலியுறுத்துதல்.

(2) தொழிலாளர் நலம் குறித்த மனப்பான்மையில் மாற்றங்களைக்கொண்டு வருதல், தொழிற்சாலையில் சுமுகமான உறவை ஏற்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் உள்ள தொழிற்சாலைகளில் நிர்வாகத்தரத்தில் பணியாற்றும் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

(3) தொழிலாளர் சட்டங்களை செயல் படுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும் பொறுப்புள்ள தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல்.

(4) கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றில் தொழிலாளர்களின் நலனைக் கவனிக்கிற அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

இந்த கல்வி நிலையம் இதுவரையில் 99 வகுப்புகளை நடத்தியது. இதனால் 2,912 பேர் பயனடைந்தனர்.

இக்கல்வி நிலையம் செய்துவரும் பயனுள்ள நடவடிக்கைகளைப் பாராட்டி, தமிழக அரசு இக்கல்வி நிலையத்தை 1978-79 ஆண்டு முதல் தர கல்வி நிலையமாக உயர்த்தி உள்ளது.



**தொழிலாளர் நிர்வாகத்திலே பகுதிநேர பட்டயப்படிப்பு வகுப்புகள்.**

இந்த கல்வி நிலையம் தொழிலாளர் நிர்வாகம் பற்றிய பட்ட மேற்படிப்பு பட்டய வகுப்புகளை நடத்துவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. தொழிலாளர் நிர்வாகத்தின் இரண்டாவது பட்டய வகுப்பை தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 1980ம் ஆண்டு செப்டம்பர் 19-ஆம் நாள் அன்று தொடங்கி வைத்தார். இதில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 30-ல் இருந்து 40ஆக உயர்ந்துள்ளது.

**தொழிலாளர் நல மாதாந்திர சட்டப் பத்திரிகை (தமிழில்).**

இக்கல்வி நிறுவனம் "உழைப்பவர் உலகம்" என்ற சட்டப் பத்திரிகையை எளிய தமிழில் செப்டம்பர் திங்கள் 1978-ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகிறது. இப்பத்திரிகையில் எளிய தமிழில் புகழ்மிக்க வல்லுநர்களின் கட்டுரைகளும் தொழிலாளர் நீதி மன்றங்கள், உயர்நீதி மன்றங்கள், தலைமை நீதிமன்றம் ஆகியவை தொழில் தகராறு குறித்து எடுத்த முடிவுகளின் விவரங்களையும், வாழ்க்கைச் செலவுப் புள்ளி, வேலை நிறுத்தம் பற்றிய விவரங்களையும், கதவடைப்பு, உடன்பாடுகள் குறைந்த அளவு ஊதியம் பற்றிய அறிவிக்கைகளையும் தொழிலாளர்களின் நலனுக்கென இப்பத்திரிகை வெளியிட்டு வருகிறது.

**பிற நடவடிக்கைகள்.**

தமிழைத் தவிர்த்து மற்ற மொழி தெரியாத தொழிலாளர்கள் மற்றும் தொழிற் சங்கத் தலைவர்களின் நலனுக்கென இப்பத்திரிகை தொழிலாளர் நலச் சட்டங்களை தமிழில் வெளியிட உத்தேசித்துள்ளது. இக்கல்வி நிறுவனத்தால் தொழிலாளர்களின் பிரச்சினை, தொழிலாளர் வாழ்க்கைப்புள்ளி விவரங்கள் ஆகியவை பற்றி கூர்ந்து ஆராய ஒரு ஆராய்ச்சிக் குழுவினை நிறுவ எதிர்பார்க்கப்பட்டு வருகிறது.

## VI. எடைகள்-அளவைச் சட்டம்.

### தமிழ்நாடு எடைகள் அளவைகள் செயல்படுத்தும் சட்டம். 1958.

தொழிலாளர் நலத்துணை ஆணையரே (ஆய்வுகள்) எடைகள் அளவைகள் செயல்படுத்தல் சட்டத்தின்கட்டுப்பாட்டு அதிகாரியும் ஆவார். 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு எடை-அளவை (செயற்படுத்துதல்) சட்டத்தின் விதித்துறைகளை இவரே நிர்வகித்து வருகிறார். தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும், தொழிலாளர் நல துணை ஆய்வாளர்களாலும் தொழிலாளர் நலஉதவி ஆய்வாளர்களாலும் மற்றும் சென்னை மாநகர், செங்கற்பட்டு, மற்றும் மதுரை மாவட்டங்களிலுள்ள முத்திரைத்தாள் ஆய்வாளர்களாலும், மற்றும் சென்னை மாநகர் செங்கற்பட்டு மாவட்டம் ஆகியவற்றில் உள்ள இரண்டு துணை ஆய்வாளர்களாலும் இச்சட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சென்னை மற்றும்

2. சுகாதார நிலையங்கள்.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் நிறுவப்பட்டு உள்ள பல்வேறு தொழிற் சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சுகாதாரமான முறையில் வேலை செய்ய உத்திரவாதம் அளிக்கும் முறையில் மருத்துவ சிகிச்சைப் பிரிவு ஒன்றினை மதுரையில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. எண்ணெய் லாரிகள் அளவைச் சரிபார்க்க மேடை நிறுவுதல்.

தொட்டி லாரிகளின் அளவை கொஞ்சங்கூட காலதாமதம் இல்லாமல் சரிபார்க்க அளவுகள் குறிக்கப்பட்ட மேடைகளை துருப்பிடிக்காத எஃகினால் ஆன அளவுகள் குறிக்கப்பட்டுள்ள மேல் நிலைத் தொட்டிகள் ஆகியவற்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. பாதுகாப்புக் குழு அமைத்தல்.

தொழிற் சாலைகளில் ஏற்படும் தொழில் விபத்துக்களை குறைப்பதற்கும், தொழிலாளர்களுக்கு ஏற்படும் இன்னல்களைப் போக்குவதற்கும் அவர்களது உடல்நலத்தை பாதுகாப்பதற்காகவும், தொழிற் சாலைகள் தலைமை ஆய்வாளரின் கீழ், தொழில் நுட்ப அறிவும் வேண்டிய சாதனங்களும் கொண்ட அதிகாரிகள் அடங்கிய பாதுகாப்புக் குழு ஒன்று மதுரையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5. தொழிலாளர் கல்வி நிலையத்தில் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றினை அமைத்தல்.

தொழில் தகராறுகளுக்கான காரணங்கள், தொழில் அமைதி இன்மைக்கான காரணங்கள், மேலும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான வழிமுறைகள் முதலியனவற்றை அறிந்து கொள்ள ஓர் ஆராய்ச்சிக் குழுவை தமிழ் நாடு கல்வி நிறுவனத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. ஆறுமுகனேரி, சேலம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் தொழிலாளர் காப்புறுதி மருந்தகங்களை அமைத்தல்.

தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளின் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களுக்கும் அவர் தம் குடும்பத்ினருக்கு மருத்துவ வசதி, அதாவது உள்ளிருப்பு சிகிச்சை, வல்லுந



சேவை, எக்ஸ்ரே, சோதனைச் சாலை வசதிகள் கிடைக்க ஆறுமுகனேரி, சேலம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் காப்புறுதி மருந்தகங்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7. தொழிலுறவு அலுவலகத்தை பலப்படுத்துதல்.

இம்மாநிலத்திலுள்ள தொழிலுறவு அலுவலகத்தைப் பலப்படுத்தும் பொருட்டு தொழிலாளர் நல அலுவலர் பதவிகள் நான்கைக் கூடுதலாக ஏற்படுத்தவும், பத்து தொழிலாளர் நல அலுவலர்களின் பதவிகளை தொழிலாளர் நல உதவி ஆணையாளர் பதவிகளாக உயர்த்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள அனைத்து திட்டங்களுக்கும் ரூபாய் 8·49 இலட்சம் 1981-82 ஆம் ஆண்டில் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள முத்திரைத்தாள் ஆய்வாளர்களோடு, மதுரை மாவட்டத்தில் உள்ள முத்திரைத்தாள் ஆய்வாளர்களோடு மதுரை மாவட்டத்திற்கு பத்து கூடுதல் முத்திரைத்தாள் ஆய்வாளர்களுடன், துணைப் பணியாளர்களுக்கும் அரசுஒப்புதல் அளித்துள்ளது. இவர்கள் சென்னை, செங்கற்பட்டு மற்றும் மதுரை மாவட்டங்களில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் எடைகள்-அளவைகளை முத்திரை இடுவார்கள்.

எடைகள் அளவைகள் உபயோகப்படுத்துவதில் குறைந்த எடைகளைப் பயன்படுத்துதல், குறைபாடுடைய போலி எடைகளைப் பயன்படுத்துதல் போன்று உள்ள முறைகேடுகளை ஒழிப்பதற்காக கிராமப்புற ஆய்வுகள் உட்பட, குறித்த கால ஆய்வுகள் திடீர் சோதனைகள், கூட்டுச் சோதனைகளை நடத்தி இத்துறை பல்வேறு நீதி மன்றங்களின் துணையுடன் தொடர் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு செம்மையான முறையில் செயலாற்றி வருகிறது.

1980ஆம் ஆண்டில் எடை-அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறி நடந்துகொண்டதற்காக 16,204 வழக்குகள் தொடரப்பட்டன. முன்பு நிலுவையிலுள்ள வழக்குகள் உள்பட இதுவரை 14,152 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. ரூபாய் 6,11,652 அபராதமாக விதிக்கப்பட்டது.

எடைகள்-அளவைகள் கட்டுப்பாடு அதிகாரி 1980ஆம் ஆண்டில், விற்பனையாளர்கள் 521 பேர், பழுதுபார்ப்போர் 304 பேர், உற்பத்தியாளர் 106 பேர் ஆகியோருக்கு உரிமங்கள் வழங்கினார்.

1979-1980ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பு நோக்குப் புள்ளி விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு. | பழுது பார்ப்போர். | வணிகர்கள் | உற்பத்தியாளர்கள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1979 .. .. .. | 403 | 613 | 125 |
| 1980 .. .. .. | 304 | 521 | 106 |

வணிகர், உற்பத்தியாளர்கள், பழுதுபார்ப்போர் ஆகியோரைப் பொறுத்தமட்டில், அறிக்கையாண்டில் உரிமக் கட்டணங்களாக ரூபாய் 1,22,872 வசூலிக்கப்பட்டுள்ளது.



எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, எடைகள்-அளவைகள் சட்டத்தின் விதித்துறைகளைச் செயற்படுத்தும் பணி பற்றி மாவட்டத்தில் உள்ள சார்நிலை அதிகாரிகளுடன் அவ்வப்போது கலந்து பேசி வருகிறார். தவறான முறைகளில் ஈடுபடும் வணிகர்களைக் கண்டறிவதற்காக, இவர், அலுவலில் சுற்றுப் பயணம் செய்கையில் திடீர் சோதனைகளையும் மேற்கொண்டார்.

1980 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் 1,655 கூட்டு சோதனைகள் நடத்தப்பட்டன.. 45,630 வணிகர்கள் சோதனை செய்யப்பட்டனர். இதனால் 3,664 வணிகர்கள் மீது வழக்கு தொடரப்பட்டன. கிராமங்களில் எடைகள்—அளவைகள் சட்ட விதிகள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதை தீவிரப்படுத்த, முறையான வாலாய நடைமுறைச் சோதனைகள், சார்பு அதிகாரிகளால் நடத்தப்பட்டன. 1980 ஆம் ஆண்டில் 43,372 வணிகர்கள் குறித்து 8,111 கிராமச் சோதனைகள் சார்நிலை அதிகாரிகளால் நடத்தப்பட்டன.

கூட்டுச் சோதனைகள் மற்றும் தீவிர ஆய்வுகளின் விளைவாக வெவ்வேறு உலோகங்களாலான வெவ்வேறு அளவுகள் கொண்ட சுமார் 18,859 எடைகளும், வெவ்வேறு அளவுகளில் உள்ள சுமார்14,761 அளவைகளும், வெவ்வேறு விதமான எடைபோடும் கருவிகள் 1,063-ம் அளவைக்கருவிகள் 1,064-ம் போலியாக தரமில்லாததாக, முத்திரை இடப்படாதிருந்த காரணங்களுக்காகக் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட பொருள்களைப் பொறுத்த மட்டில், நீதி மன்றங்களின் தீர்ப்புகளின்படி மேல் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. கைப்பற்றப்பட்ட ஏனைய பொருள்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயற்படுத்துதல்) சட்டத்தின் விதித்துறைகள் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் ஆகியவற்றிற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

## VII. கீழே கொடுக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள் 1981-82 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

### 1. குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தை அமுலாக்க தனியான அலுவலகம் அமைத்தல்.

குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் மற்றும் சம ஊதியச் சட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தும் பொருட்டு ஒரு தனி அலுவலகத்தை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாகம் B

## தேசிய வேலைவாய்ப்புப் பணி.

### 1.1 வேலை வாய்ப்புகள்

தமிழ்நாட்டில் 35 வேலை வாய்ப்பகங்கள், 11 துணை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் (தொழில் மற்றும் நிருவாக அனுபவம் பெற்றவர்களுக்கு ஒன்றும் உடல் ஊனமுற்றோர்களுக்காக மற்றொன்றுமாக, சென்னையில்) இரண்டு தனி வேலை வாய்ப்பகங்கள், சென்னை, மதுரை அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றாக பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல்-வழிகாட்டும் நிலையங்கள் மூன்று ஆகியவை இயங்கி வருகின்றன.

*1 1.2. இவ்வாண்டில் தமிழ்நாட்டில் வேலைக்காகப் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள், வேலை அளிக்கப்பட்டவர்கள் வேலைக்காக வேலைவாய்ப்பகங்களில் பதிவேட்டில் காத்திருப்போர், அறிவிக்கப்பட்ட வேலைக் காலியிடங்களின் எண்ணிக்கை, அறிக்கை ஆண்டில் வேலை வாய்ப்பகங்களைப் பயன்படுத்திக் கொண்ட அரசுத்துறை தனியார் துறையைச் சேர்ந்த தொழிலதிபர்களின் எண்ணிக்கை விவரங்களும்; மற்றும் இதே காலத்தில் சென்ற ஆண்டிற்கான நிகரான விவரங்களும் வருமாறு :—

| தொடர் எண். (1) | விபரங்கள். (2) | (1—4—79 முதல் 31—1—80 முடிய முந்தைய ஆண்டின் நிகரான காலத்தில் (3) | 1—4—80 முதல் 31—1—81 முடிய அறிக்கை ஆண்டில் (4) | 1—1—80 முதல் 31—12—80 முடிய உள்ள காலத்தில். (5) |
|---|---|---|---|---|
| 1. | பதிவுசெய்த விண்ணப்பஙள் .. | 3,48,319 | 4,[illegible]5,769 | 4,86,624 |
| 2. | வேலையில் அமர்த்தப் பட்டவர்கள் .. | 45,051 | 40,935 | 55,173 |



| தொடர் எண். (1) | விபரங்கள். (2) | (1—4—1979 முதல் 31—1—1980 முடிய) முந்தைய ஆண்டின் நிகரான காலத்தில். (3) | 1—4—1980 முதல் 31—1—1981 முடிய அறிக்கை ஆண்டில். (4) | 1—1—1980 முதல் 31—12—80 முடிய உள்ள காலத்தில். (5) |
|---|---|---|---|---|
| 3. | அறிவிக்கப்பட்ட வேலை காலியிடங்கள் .. | 65,777 | 61,152 | 73,058 |
| 4. | வேலைவாய்ப்பகங்களைப் பயன்படுத்திய தொழில் அதிபர்கள்.— | | | |
| | (அ) பொதுத்துறை | 11,454 | 12,920 | 15,168 |
| | (ஆ) தனியார்துறை | 6,833 | 6,283 | 7,243 |
| 5. | வேலைக்காக வேலை வாய்ப்பக உயிர் பதிவேட்டில் காத்திருப்பவர்கள் | 9,87,678 | 11,08,777 | 11,07,233 |

* 1, 2, 3, 4, 5 -

1980ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் தேதி, 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் தேதி அன்றுள்ளவாறு, தற்போது வைத்துவரப்படும் பதிவேட்டில் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை வேறுபடுவதன் காரணம் வருமாறு:—

1980—ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் நாளில் உள்ளவாறு தற்போது வைத்து வரப்படும் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள் (+) புதிதாக பதிவு செய்துள்ளவர் எண்ணிக்கை (—) (வேலையில் அமர்த்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை (+) பதிவு செய்துள்ளவர்கள் புதுப்பிக்காத காரணத்தால் பதிவு காலாவதியானவர்கள் எண்ணிக்கை)= 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் நாள் நிலவரப்படி தற்போது வைத்து வரப்படும் பதிவேட்டில் பதிவு செய்துள்ளவர்கள் எண்ணிக்கை.

2. சென்னையில் உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பகம் :—

2.1. உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து அவர்களை வேலையில் அமர்த்தும் நோக்குடன் சென்னையில் சிறப்பு வேலைவாய்ப்பகம் ஒன்றும், மதுரை கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் வேலைவாய்ப்பு நிலையங்களில், ஊனமுற்றோர்களுக்காக நான்கு தனிப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் அரசுத்துறை, தனியார் துறையைச் சேர்ந்த தொழிலதிபர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு எல்லா வித உடல் ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன.

*2 2.2. இந்த உடல் ஊனமுற்றோர்களுக்கான வேலை வாய்ப்பு தனிப்பிரிவுகள் அலுவலகங்கள் ஆகியவற்றில் பணி குறித்த புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| அலுவலகத்தின் இருப்பிடம். | பதிவு செய்யப்பட்டவர் எண்ணிக்கை. | | வேலையில் அமர்த்தப்பட்டவர் எண்ணிக்கை. | | தற்போது வைத்து வரப்படும் பதிவேட்டில் உள்ளவர்கள் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|---|---|
| | 1-4-79 முதல் 31-1-80 முடிய. | 1-4-80 முதல் 31-1-81 முடிய | 1-4-79 முதல் 31-1-80 முடிய. | 1-4-80 முதல் 31-1-81 முடிய. | 31-1-80 | 31-1-81. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| சென்னை | 1,311 | 1,552 | 305 | 481 | 4530 | 5,107 |
| கோயம்புத்தூர் | 206 | 272 | 45 | 47 | 939 | 1,123 |
| மதுரை | 124 | 180 | 17 | 31 | 922 | 1,090 |
| சேலம் | 137 | 146 | 21 | 33 | 594 | 723 |
| திருச்சிராப்பள்ளி | 124 | 115 | 6 | 7 | 929 | 1,067 |



3. தொழில் மற்றும் நிர்வாக வேலை வாய்ப்பகம் :

3.1. இந்த அலுவலகம் உயர்ந்த தொழில் அனுபவம், அறிவியல், பொறியியல், நிருவாகப் மேற்பார்வைப் பணிக்கல்வித் தகுதியுடையவர்களைப் பதிவு செய்து, அரசுத்துறை தனியார் துறையைச் சேர்ந்த தொழிலதிபர்களுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்களைத் தகுந்த வேலையில் அமர்த்த முயற்சி செய்து வருகிறது.

3*

3.2. இவ்வலுவலகம் 1980ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் நாள் முதல் 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் நாள் முடிய செய்த பணி குறித்த புள்ளி விவரங்கள் முன்னைய ஆண்டில் அதாவது 1979ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் நாள் முதல் 1980ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் நாள் முடிய செய்த பணி குறித்த புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| அலுவலகம். | பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. | | வேலையில் அமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கை. | | தற்போது வைத்து வரப்படும் உயிர் பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|---|---|
| | 1-4-1979 முதல் 31-1-1980 முடிய. | 1-4-1980 முதல் 31-1-1981 முடிய. | 1-4-1979 முதல் 31-1-1980 முடிய. | 1-4-1980 முதல் 31-1-1981 முடிய. | 31-1-1980 | 31-1-1981 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| சென்னை தொழில் நிர்வாக வேலை வாய்ப்பகம். | 7,843 | 8,370 | 3,004 | 1,955 | 14,686 | 16,874 |

4. அண்ணாமலை நகர், சென்னை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்—வழிகாட்டும் நிலையங்கள்.

4.1. (சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) பல்கலைக் கழக வேலை வாய்ப்பு தகவல்—வழிகாட்டும் நிலையங்கள் பல்கலைக் கழகங்களில் படித்த பட்டதாரிகளுக்கும் மற்றும் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் வேலை வாய்ப்பு விவரங்களையும், வழிகாட்டுதல் பணியினையும் தொழில்—உயர் பட்டதாரிகளையும் வேலை வாய்ப்பிற்காக பதிவு செய்யும் பணியையும் செய்து வருகிறது.

4.2. 1980ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் நாள் முதல் 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் நாள் முடிய இந்நிலையங்களின் பணி குறித்து விபரங்கள் இவ்வாண்டில் செய்துள்ள பணி குறித்த விவரங்களுடன் ஒப்பிடப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| தொடர் எண்ணும் வேலைவாய்ப்பு நிலையங்களின் இருப்பிடமும். | பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை. | | வேலையில் அமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கை. | | தற்போது வைத்து வரப்படும் பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|---|---|
| | 1-4-1979 முதல் 31-1-1980 முடிய. | 1-4-1980 முதல் 31-1-1981 முடிய. | 1-4-1979 முதல் 31-1-1980 முடிய. | 1-4-1980 முதல் 31-1-1981 முடிய. | 31-1-1980 | 31-1-1981 |
| 1 சென்னை .. | 198 | 91 | 21 | 10 | 315 | 236 |
| 2 மதுரை .. .. | 1,428 | 1,505 | 311 | 220 | 2,628 | 2,859 |
| 3 அண்ணாமலை நகர். | 331 | 256 | 89 | 81 | 590 | 484 |



5 (அ) வேலை நிலவரத் தகவல் திட்டம்.

5 (அ) (1).—இத்திட்டத்தின் கீழ் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள (வேளாண்மை நீங்கலாக) எல்லாத் தனியார் துறை நிறுவனங்களிலிருந்தும் அனைத்துப் பொதுத் துறை நிறுவனங்களிலிருந்தும் வேலை நிலவரத் தகவல் காலாண்டுக் கொருமுறை சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு தகவல் சேகரிக்கும் பணி அமைப்புகளுக்கு மட்டும் வரையறுக்கப் பட்டுள்ளது.

5 (அ) (2).—1980 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 1980 ஆம் ஆண்டு நவம்பர் முடிய இரு காலாண்டு ஆய்வுகள் நடத்தப் பட்டுள்ளன. அதாவது 1980 மார்ச் முடிய மற்றும் 1980 ஜூன் முடிய ஆகிய இரு காலாண்டுகள் கீழ்க்கண்ட அட்டவணை நான்கு காலாண்டுகளில் தகவல் கேட்ட நிறுவனங்கள் தகவலை அளித்த நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை மற்றும் அதன் சதவீத விவரங்கள் வருமாறு :—

| முடிவடைந்த காலாண்டு. | தகவல் கேட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை. | தகவல் அளித்த நிறுவனங்களின் எண்ணிக்கை. | தகவல் அளிக்கப் பட்டவற்றின் சதவீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 30—9—1979 .. | 18,897 | 16,102 | 85·2 |
| 31—12—1979.. | 19,511 | 16,963 | 86·9 |
| 31—3—1980 .. | 19,983 | 17,017 | 85·2 |
| 30—6—1980 .. | 20,209 | 17,563 | 86·9 |

5. (அ) (3).—1980 மார்ச், 1980 ஜூன் திங்களுடன் முடியும் காலாண்டுகளில் இம்மாநிலத்தில் வேலையிலிருப்பவர்கள் குறித்த துறைவாரியான விபரம் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது :

| அன்றைய நாள் நிலவரப்படி. | வேலையில் இருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | பொதுத்துறை. | தனியார்துறை. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| 30—9—1979 .. | 11,01,266 | 6,60,505 | 17,61,771 |
| 31—12—1979.. | 11,30,699 | 6,57,865 | 17,88,654 |
| 31—3—1980 .. | 12,03,556 | 6,62,123 | 18,65,679 |
| 30—6—1980 .. | 12,06,762 | 6,64,532 | 18,71,294 |

**5 (ஆ). பணியாளர்களின் வேலை-கல்வித் தகுதி குறித்து இரண்டாண்டுகளுக்கொருமுறை நடத்தப்படும் ஆய்வு.**

5 (ஆ) (1).—1959 ஆம்ஆண்டு வேலை வாய்ப்பு அலுவலகங் கள் (காலியிடங்களைக் கட்டாயமாக அறிவித்தல்) சட்டத்தின் விதித் துறைகளுக்கிணங்க எல்லாப் பொதுத் துறைத் தொழி லதிபர்களையும் அவர்கள் வேலைக்கமர்த்தியுள்ள தொழிலா ளர்களின் வேலைகளின் வகைப்பாடு அவர்களின் கல்வித்தகுதி ஆகியவைகள் குறித்த புள்ளி விபரங்கள் அனுப்புமாறு இவ்வாய் வின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டனர். எல்லா பொதுத் துறை நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் உட்பட மத்திய, மாநில அரசு அலுவலகங்களைச் சேர்ந்த அனைத்துக் துறைகளில் பணிபுரியும் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் தேதி முடிய பணியாளர்களின் வேலை கல்வித் தகுதி குறித்து இரண்டாண்டுகளுக்கொருமுறை நடத்தப்படும் ஆய்வுக்குரிய விபரங்கள் குறிப்பிட்ட படிவங்களில் சேகரிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் இதுவரை, 9,328 நிறுவனங்கள் இவ்வகையில் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளன.

**5 (இ). ஆழ்ந்தாய்வுப் பிரிவு.—**

5 (இ) (1).—வேலைவாய்ப்பு பற்றிய சிறப்பு ஆய்வுகளை நடத்தவும் புதுடில்லியிலுள்ள, வேலைவாய்ப்பு-பயிற்சி தலைமை இயக்குநரால், மேற்கொள்ளப்பட்ட சிறப்பு ஆய்வுகள் குறித்த களப்பணியை ஒருங்கிணைக்கவும், வேலைவாய்ப்பு பயிற்சி இயக்குநரலுவலகத்தில் சிறப்பு ஆய்வுப் பிரிவு ஒன்று 1971 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 1981 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாள்முடிய கீழ்க்காணும் ஆய்வுகளை இப்பிரிவு முடித் துள்ளது.

1. மெட்ரிகுலேசன் தேறியவர்களும் அதற்கும் குறைவான கல்வித் தகுதி உடையவர்களும் வேலைவாய்ப்புப் பயிற்சிக்காக காத்திருக்கும் கால அளவை அறிய மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

2. தமிழ்நாட்டில் வேலையில் இருக்கும் பெண்கள் வேலை வாய்ப்பில்லா பெண்கள் பற்றிய ஆய்வு.

5 (இ). (2).—மதுரை மாவட்ட வேலை வாய்ப்பகத்திலும், திண்டுக்கல், துணை வேலை வாய்ப்பகத்திலும் தற்போது வைத்து வரப்படும் பதிவேடுகளில் பதிவு செய்துள்ளவர்களில் வேலை வாய்ப்பு பெற்றவர்களின் வீதத்தை கண்டறியும் பணியில் சிறப்பாய்வுப் பிரிவு தற்போது ஈடுபட்டுள்ளது.



**5 (ஈ). புள்ளி விபர பாகுபாட்டுப் பிரிவு :**

5 (ஈ) (1).—வேலை நிலவரத் தகவல் திட்டத்தின் கீழ் வேலையிலிருப்போர், வேலையில்லாதிருப்போர் குறித்த விபரங் கள் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களையும் வகைப்படுத்த இய லும் பொருட்டு 1973 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் புள்ளி விபரப் பாகுபாட்டுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இவ் வறிக்கையாண்டில், இப்பிரிவு மொத்தம் 54 பட்டியல்கள் முடிக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் முடிக்கப்பட்ட சில முக்கிய அட்டவணைப் பட்டியல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள், 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள், 198[illegible]-ம் ஆண்டு ஜூன் திங்கள் 3[illegible] ஆம் நாள் ஆகிய காலாண்டுகளில் மத்திய அரசு/மாநில அரசு/ ஓரளவு மத்திய அரசு நிறுவனங்கள், ஓரளவு மாநில அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங் கள், பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலை வாய்ப்பு நிலைகளில் உள்ள மாற்றங்கள் குறித்த காலாண்டு விபர அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

2. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள், 1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள், 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள், ஆகிய காலாண்டுகளில் தனியார்துறை நிறுவனங்கள் (பெரிய நிறுவனங்கள்) தனியார் துறை நிறுவனங்கள் (சிறிய நிறுவனங்கள்) மற்றும் தனியார் நிறுவனங்கள் (மொத்தம்) வேலைவாய்ப்பு நிலைகளில் உள்ள மாற்றங்கள் குறித்த காலாண்டு விவர அறிக்கைகள் தயாரிக்கப் பட்டன.

3. அறிவிக்கப்பட்ட வேலைக் காலியிடங்கள் அவற்றில் நிரப்பப்பட்டவை, எஞ்சியவை ஆகியவை குறித்த புள்ளி விபரங் கள் கொண்டுள்ள வேலை வாய்ப்பகங்களின் கால முறைப்பதி வேடுகள் தயாரித்தல்.

4. வேலை வாய்ப்பகங்களின் கால முறைப் பதிவேட்டில் உள்ள சிறப்பு விண்ணப்பதாரர்களை அதாவது ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்; தொழில்பழகுவோர் தேசியச் சான்றிதழ்கள்/ தொழில் தேசியச் சான்றிதழ்கள் பெற்றுள்ளோர்; உயர் கல்வித் தகுதி பெற்றவர்கள் ஆகியோர் குறித்த விபரங்களைக் காட்டும் விவர அறிக்கை.

**5 (உ) பட்டுத்திரை அச்சுப்பிரிவு :**

வேலை வாய்ப்பகங்களில் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும், கருத்துப்படங்களையும், சுவரொட்டிகளையும் காட்டிவைக்க வும், இத்துறையில் ஆய்வு செய்யப்பட்டுள்ள கருத்துக்களை

அட்டை வடிவில் சிறந்த முறையில் குறைந்த செலவில் தயாரிக்கவும், இம்மாநிலத்தில் பட்டுத்திரை அச்சுப்பிரிவு ஒன்று 1973ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் நிறுவப்பட்டது.

இவ்வறிக்கையாண்டில் இப்பிரிவு நிறைவேற்றிய பணி, 1979–80-ல் இதே கால அளவில் நிறைவேற்றிய பணி குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1—4—1979 முதல் 31—1—1980 முடிய. | 1—4—1980 முதல் 31—1—1981 முடிய. |
|---|---|---|
| 1 பட்டுத்திரை அச்சிடுவதற்கான ஸ்டென்சில்கள் .. | 17 | 13 |
| 2 தயாரிக்கப்பட்ட மாதிரி வரை படங்கள் .. .. | 8 | 16 |
| 3 தயாரிக்கப்பட்ட விளக்கப் படங்கள்/வரைப் படங்கள்/துண்டு வெளியீடுகள் .. | 148 | 299 |
| 4 அச்சடிக்கப்பட்ட உரை தாள்கள்/சுவரொட்டிகள் .. | 1,322 | 1,951 |
| 5 அச்சிட்ட பட்டுத்திரைகள் .. | 4 | 4 |
| 6 பெயர்ப்பலகை போன்ற ஏனைய சிறப்புப் பணிகள் .. | 21 | 54 |

5 (ஊ) வேலை வாய்ப்பகங்களின் பணியைக் கணக்கிடுதல் பொறி மூலம் கணக்கிடுவது :

சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களிலுள்ள வேலை வாய்ப்பகங்களின் பணிகளைக் கணக்கிடு பொறிமூலம் கணக்கிடுவதற்காகத் தனிப்பிரிவு ஒன்று 1980 ஆம் ஆண்டு மே திங்களில் அமைக்கப்பட்டது. தொழில் நிர்வாகப் பணி வேலை வாய்ப்பகத்தில் கணக்கிடு பொறி வசதி செய்து கொடுக்கும் பணியை அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம் மேற்கொண்டது. அரசு புள்ளி விவரப் பிரிவின் ஒத்துழைப்புடன் இப்பிரிவு இதுவரை 22,853 தகவல் படிவங்களைத் தயாரித்துள்ளது. அரசு



புள்ளி விவரப் பிரிவின் ஆலோசனையின்படி ஒரு கால அட்டவணையை வகுத்துள்ளது. அதனால், இப்பணி விரைவுபடுத்தப்பட்டு வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் முடிக்க முடியும்.

6. வாழ்க்கைத் தொழிலுக்கு வழி காட்டுதலும் வேலைவாய்ப்பு ஆலோசனை அளித்தலும் :

6.1. தமிழ்நாட்டில் நீலகிரி, தருமபுரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் நீங்கலாகப் பிற மாவட்டங்களில் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப்பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இப் பிரிவுகள், தொடர்ந்து தொழில் வேலை வாய்ப்பு, பயிற்சி பெறுவதற்கான வசதிகள், வேலை வாய்ப்பு குறித்த தகவல் ஆகியவை பற்றிய தொழில் பழகு வசதிகள் குறித்த விவரங்களை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள வேலை தேடுபவர்களுக்கு அளிக்கிறது. மாணவர்கள்/பதிவு செய்தவர்கள் இவர்கள் பயனடையும் வகையில் வழிகாட்டுதல் தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. மாணவர்கள்/வேலை தேடுவோரின் பயனுக்காக வேலை வாய்ப்பகங்களிலுள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவு காலாண்டு தோறும் செய்தி அறிக்கைகள் தயாரித்து, பள்ளிகளுக்கும் நூலகங்களுக்கும் அவற்றை அனுப்புகின்றன.

6.2. 1979–80 ஆம் ஆண்டில் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவுகளால் பயனடைந்த விண்ணப்பதாரர்கள் குறித்தும், இவ்வறிக்கை ஆண்டில் பயனடைந்திருப்போர் ஆகியோர்களின் விவரங்கள் குறித்தும் ஒப்பிட்டு அட்டவணை ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | 1–4–1979 முதல் 31–1–1980 முடிய. | 1–4–1980 முதல் 31–1–1981 முடிய. |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட (வழி காட்டுதல்) கூட்டுக் கூட்டங்களின் எண்ணிக்கை .. | 2,670 | 3,092 |
| பதிவு செய்து வழிகாட்டும் தகவல் மூலம் பயன் பெற்றவர் எண்ணிக்கை .. .. | 8,997 | 12,284 |
| கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டவர் எண்ணிக்கை .. .. | 50,817 | 62,037 |

கள், முந்தைய ஆண்டில் இதே கால அளவில் அதன் பணிகள் குறித்த புள்ளி விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | தாயகம் திரும்பியோர். பர்மா. 1–4–1979 முதல் 31–1–1980 முடிய. | தாயகம் திரும்பியோர். பர்மா. 1–4–1980 முதல் 31–1–1981 முடிய. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்யப்பட்டவர்கள். | 1,047 | 687 |
| 2 வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டவர்கள். | 216 | 125 |
| 3 சனவரி 31 அன்றுள்ளபடி வேலைவாய்ப்பிற்காக தற்போதைய பதிவேட்டில் எஞ்சியுள்ளவர்களின் எண்ணிக்கை. | 2,314 | 2,137 |

| | தாயகம் திரும்பியோர். ஸ்ரீலங்கா. 1–4–1979 முதல் 31–1–1980 முடிய. | தாயகம் திரும்பியோர். ஸ்ரீலங்கா. 1–4–1980 முதல் 31–1–1981 முடிய. |
|---|---|---|
| (1) | (4) | (5) |
| 1 வேலை வாய்ப்பிற்காகப் பதிவு செய்யப்பட்டவர்கள். | 4,410 | 3,365 |
| 2 வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டவர்கள். | 239 | 350 |
| 3 சனவரி 31 அன்றுள்ளபடி வேலைவாய்ப்பிற்காக தற்போதைய பதிவேட்டில் எஞ்சியுள்ளவர்களின் எண்ணிக்கை. | 9,926 | 8,274 |





**1. தொழில் பழகு பயிற்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்குரிய தனிப்பிரிவும் அதன் முன்னேற்றமும்.**

11.1. தொழில் பழகும் பயிற்சித் திட்டத்தில் தொழில் பழகுவோரை நியமிக்கும் நடவடிக்கைகளை இப்பிரிவு ஒருங்கிணைக்கிறது.

11.2. இத்துறையின் பயிற்சிப் பிரிவு தொழில் பழகு பயிற்சிக்கான இடங்கள், அமர்த்தப்பட்டுள்ள இடங்கள் ஆகியவை அடங்கிய விரிவான புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| அன்றுள்ளபடி. | பயிற்சியிடங்களின் எண்ணிக்கை பொதுத் துறை. | பயிற்சியிடங்களின் எண்ணிக்கை தனியார் துறை. | பயிற்சியிடங்களின் எண்ணிக்கை மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1–4–1980 .. .. | 3,539 | 7,227 | 10,766 |
| 31–10–1980 .. .. | 3,289 | 7,539 | 10,828 |

| | பயன்படுத்தப்பட்ட பயிற்சியிடங்களின் எண்ணிக்கை. பொதுத் துறை. | பயன்படுத்தப்பட்ட பயிற்சியிடங்களின் எண்ணிக்கை. தனியார் துறை. | பயன்படுத்தப்பட்ட பயிற்சியிடங்களின் எண்ணிக்கை. மொத்தம். | எய்திய சதவீதம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1–4–1980 | 2,708 | 7,212 | 9,920 | 92·14 |
| 31–10–1980 | 2,591 | 7,389 | 9,980 | 92·17 |

தொழில் பழகுவோருக்காக கண்டறிந்த வேலை காலியிடங்கள், அவற்றில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் இடையே உள்ள வேறுபாடு, தொழில் பழகுவோரை வேலைக்கு வைத்துக் கொள்ள தொழிலதிபர்களை இணங்கச் செய்வதில் உள்ள இடர்பாடுகளே காரணமாகும்.

**12. 1959 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு அலுவலகச் சட்டத்தை (வேலை காலியிடங்களை கட்டாயமாகத் தெரிவித்தல்) செயல்படுத்துதல்.**

12.1. 30–9–1979 அன்றுள்ளபடி 12,640 நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் வந்தன. 30–9–1980 அன்றுள்ளபடி 12,710 நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் வந்துள்ளன.

| | 1-4-1979 முதல் 31-1-1980 முடிய. | 1-4-1980 முதல் 31-12-1981 முடிய. |
|---|---|---|
| வேலை, பயிற்சி, தொழில் பழகுதலில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை .. | 1,342 | 725 |
| பள்ளிகள்/கல்லூரிகளில் நிகழ்த்திய வாழ்க்கை தொழில் பற்றிய சொற்பொழிவுகளின் எண்ணிக்கை .. .. | 241 | 328 |
| தொழில் பழகுவோருக்கான உதவித் தொகை/மேற் படிப்பிற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் எண்ணிக்கை .. | 9,711 | 10,616 |

6.3. சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு பயிற்சி இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த மாநில வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவு, மாவட்டங்களில் உள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவுகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்து, சீரமைத்து, பரிசீலனை செய்து வருகிறது. 31 தொழில் பயிற்சி நிலையங்களில், சுமார் 25,000 விண்ணப்பதாரர்களுக்கு திறனாய்வுத் தேர்வு நடத்தப்பட்டது. தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பல்வேறு தொழில்களில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு இத்தேர்வு அவசியமாகிறது. ஆவடியில் உள்ள கனரகத் தொழிற்சாலையில், தொழில் திறன் உள்ளோரைத் தேர்ந்தெடுக்கவும் திறனாய்வுத் தேர்வு நடத்தப்பட்டது.

6.4. 1980 நவம்பர் மாதம் பல்கலைக் கழக பழைய மாணவர்களுக்காக தகவல்கூடம் சென்னை பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்டது.

7. மாநில தொழிற் தகவல் பிரிவு.

தொழில் குறித்து ஆராய்தல், பகுப்பாய்வு, நெறிமுறைக் குறிப்புக்களைத் தமிழில் தயாரித்தல், திருத்தியமைத்தல் ஆகிய பணிகளை மாநிலத் தொழில் தகவல் பிரிவு தொடர்ந்து மேற்கொள்கிறது. உடல் ஊனமுற்றோர்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்தில், அவர்களுக்குத் தகுந்த வேலை வாய்ப்புகள் குறித்து கண்டறிய ஆய்வு ஒன்றை நடத்தவும் இப்பிரிவு கருதியுள்ளது.



8. துறையின் வேலைவாய்ப்புப் பிரிவில் பணியாளர் பயிற்சிப் பிரிவு.

வேலைவாய்ப்புப் பிரிவு இயக்குநர் அலுவலகத்தின் பணியாளர்களுக்கு பணியாளர் பயிற்சிப் பிரிவு வேலைவாய்ப்புக் கொள்கைகள் நடைமுறைகள் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கிறது. 1—4—1980 முதல் 31—3—1981 வரை தேசிய வேலைவாய்ப்புப் பணியைச் சேர்ந்த நிர்வாகப் பணியாளர்களுக்கு 3 பணியாளர் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. அவற்றில், 31 நிர்வாகப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

9. இத்துறையின் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் உள்ள ஆய்வுப் பிரிவு.

இவ்வறிக்கை ஆண்டில் வேலைவாய்ப்பு-பயிற்சித்துறை இயக்குநர் அலுவலகத்தின் அதிகாரிகளால் 27 அலுவலகங்கள் ஆய்வு செய்யப்பட்டன. சார்நிலை அலுவலகங்களைப் பொறுத்தமட்டில் ஆய்வு அதிகாரிகள் இறுதி ஆய்வை மேற்கொள்ள இயலும் பொருட்டு ஆய்வுப் பணியாளர்களின் தொடக்க ஆய்வுக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டன. கள அலுவலகங்களிடமிருந்து பெறப்பட்ட திருத்த அறிக்கைகள், மாவட்ட ஆய்வுத்துறையின் திடீர் சோதனை நடவடிக்கைகளின் பேரில் முடிவு கட்டப்பட்ட ஆய்வு அறிக்கைகள் ஆகியவை இவ்வறிக்கை ஆண்டில் இப்பிரிவால் ஆய்வு செய்யப்பட்டன.

10. வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகத்தின் செயல்கள்.

10.1. இப்பிரிவு, பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியோரின் தேவைகளை நிறைவு செய்து, வேலைவாய்ப்பு பயிற்சி ஆகியவைபெற அவர்களுக்கு உதவுகிறது. அறிக்கையாண்டில், 140 காலியிட அறிவிப்புக்களை தொழிலதிபர்களிடமிருந்து இப்பிரிவு நேரடியாகப் பெற்றது. 832 பர்மா, ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு இவ் வேலை வாய்ப்புகள் பரிந்துரை செய்யப்பட்டன. இதுதவிர தாயகம் திரும்பிய 566 பேருக்கு வேலை வாய்ப்பு உதவியும் பல்வேறு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேருவதற்கான உதவியும் இப்பிரிவால் அளிக்கப்பட்டது.

*5 10.2. 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 1981 ஆம் ஆண்டு சனவரி முடிய வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகத்தின் பணி

12.2. அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கையும் கீழ்க்காணும் ஆண்டுகளில் அந்நிறுவனங்களால் நிரப்பப்பட்ட இடங்களின் எண்ணிக்கையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| அறிவிக்கப்பட்ட காலியிடங்கள். | | நிரப்பப்பட்ட காலியிடங்கள். | |
|---|---|---|---|
| 1-10-1978 முதல் 30-9-1979 முடிய. | 1-10-1979 முதல் 30-9-1980 முடிய. | 1-10-1978 முதல் 30-9-1979 முடிய. | 1-10-1979 முதல் 30-9-1980 முடிய. |
| (1) | (2) | (3) | (4) |
| 56,477 | 59,495 | 38,625 | 42,325 |

தொழிலதிபர்களிடம் நிலுவையாக உள்ள காலியிடங்கள் குறித்து தேர்வு முடிவுகள் கிடைக்கப் பெறாததும், பொருத்தமான மனுதாரர் கிடைக்கப் பெறாததால் காலியிடங்கள் இரத்து செய்யப்பட்டதும், எதிர்பார்க்கப்பட்ட காலியிடங்கள் ஏற்படாததும், அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கைக்கும், நிரப்பப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கைக்கும் ஏற்பட்டுள்ள வேறுபாட்டிற்கு காரணமாகும்.

13. மாநில இயக்குநர் அலுவலகத்திலுள்ள மக்கள் தொடர்புப் பிரிவும், விளம்பரப் பிரிவும்.

13.1. பல்வேறு தொழிலதிபர்களிடமிருந்து வரப்பெறும் காலியிட அறிவிக்கைகள் குறித்து இயக்குநர் அலுவலகத்திலுள்ள விளம்பரப் பிரிவு தகுந்த விளம்பரம் கொடுக்கப்படுகிறது.

13.2. தொழில் நுட்பப் பதவிகள் அல்லாத பல்வேறு பிரிவுகளுக்கு பணியாளர் தேர்வாணைக்குழு மூலமாகச் செய்யும் நியமனம் குறித்து புது டில்லியிலுள்ள தேர்வாணைக் குழுவிடம் இருந்து பெறப்பட்ட விளம்பரங்களுக்கு இம்மாநிலத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக விரிவான விளம்பரம் அளிக்கப்படுகிறது.

13.3. பொருத்தமான மனுதாரர்களின் பணியைப் பெறும் பொருட்டு, வேலை வாய்ப்பு அலுவலகங்களிலுள்ள பதிவேடுகளில் தகுதி வாய்ந்தவர்கள் இல்லை என்பதால், அத்தகைய காலி இடங்களுக்கு செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டது.

13.4. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணி குறித்த விவரங்கள் அடங்கிய அறிவிப்புகள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன.





14. வேலையற்றோர் மறுவாழ்வுத் திட்டம்.

14·1 கட்டுக்கடங்காத அளவில் ஏற்பட்டுள்ள வேலையில்லாத திட்டத்திற்கு தீர்வு காணும் பிரச்சினையை அரசு தீவிரமாக பரிசீலித்து வருகின்றது. படித்த வேலையற்றோர்களிடையே உள்ள அவல நிலையைக் களையும் பொருட்டு "வேலையற்றோர் மறு வாழ்வுக்கான" திட்டம் ஒன்றை அரசு உருவாக்கியுள்ளது. வேலையற்றோர் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் பெருவாரியான மக்கள் நலன்பெறச் செய்யும் பொருட்டு வேலையற்று இருப்போர்களின் பெயர்களை ஆண்டிற்கொரு முறை சேர்ப்பதற்கும், அவர்கள் இத் திட்டத்தின் கீழ் உதவி பெறவேண்டுமாயின் அவர்களின் வருட வருமானம் ரூ. 6,000-க்குள் இருக்க வேண்டும் என்றும் தொழிலாளர் நல வேலைவாய்ப்புத் துறையின் 15—9—1980 ஆம் நாளிட்ட 2143 ஆம் எண் அரசாணையில் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. இந்த நிபந்தனைகள் பின்னர் தளர்த்தப்பட்டன. தகுதியுள்ளவர்களை காலாண்டுக்கு ஒரு முறை சேர்ப்பதற்கும், ஆண்டொன்றுக்கு வருமான வரம்பை ரூ. 24,000 என உயர்த்தவும் வகை செய்து தொழிலாளர் நல வேலைவாய்ப்புத் துறையின் 25—11—1980 ஆம் நாளிட்ட 2680 எண்ணுள்ள அரசாணையில் வகை செய்யப்பட்டது.

14·2. ஏற்பளிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்ட ஏழு பிரிவுகளைச் சேர்ந்தவராய் வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 என்ற விதத்தில் தொகை பெற வேலையில்லாதவர் துயர் துடைப்பு நிதித் திட்டம் வகை செய்கிறது.—

1. எல்லாத் துறைகளிலும் உள்ள பட்டதாரிகள்/பட்ட மேற்படிப்பு பட்டதாரிகள்.
2. தகுதியுடைய இடைநிலை ஆசிரியர்கள்.
3. தகுதியுடைய மேல் நிலை ஆசிரியர்கள்.
4. தகுதியுள்ள உடற்பயிற்சி ஆசிரியர்கள். (உயர் நிலை/கீழ் நிலை).
5. தகுதியுள்ள தமிழ் வித்வான்கள் மற்றும் பிறமொழி ஆசிரியர்.
6. தகுதியுள்ள கைவினை ஆசிரியர்கள்.
7. பொறியியலில் தகுதிப்பட்டயம் பெற்றிருப்பவர்கள்.

1980ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து இத்திட்டத்தின் பயனைப் பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1980-81 ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரொக்கத் தொகை வழங்க ரூ. 125 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது வரை 22,291 பேர் இத்திட்டத்தின் கீழ் பயனடைய தகுதி வாய்ந்தவர்கள் என கண்டறியப்பட்டு அவர்களுக்கு அறிவிப்பு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பகங்களில் பெறப் பட்ட 12,774 மனுக்கள், சரிபார்ப்பதற்காகவும், தகுதி

இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்கள் முதுகெலும்பாக உள்ளன. ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையமும முதல்வரின் பொறுப்பில் இயங்கி வருகிறது. மாநில அளவில் எல்லாத் தொழில் பயிற்சி நிலையங்களும் வேலை வாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநர் மேற்பார்வையில் இயங்குகின்றன. கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ்க்கண்ட வகைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.—

(1) தொழில் பயிற்சி நிலையங்களில் நிறுவனப் பயிற்சி.

(2) 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின்கீழ் தொழில் பழகுவோர் பயிற்சி.

(3) தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்.

(4) தொழிற் பள்ளிகளுக்கான விதிக் கோவையின் கீழ் மானிய உதவி பெறும் தனியார் தொழிற் பள்ளிகளில் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(5) வேலை இழந்த பொற்கொல்லர்கள், மாதிரி அமைப்புத் தயாரிப்பாளர், கைத்தறி நெசவாளர்கள் ஆகியோருக்கு தொழில் பயிற்சி நிலையங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களில் (பகுதி நேரம்) தனிப் பயிற்சித் திட்டம்.

(6) வாழ்க்கைத் தொழில் பயிற்சி முற்போக்குத் திட்டம்.

(7) அம்பத்தூர் தொழில் பயிற்சி நிலையத்தில் பணியாளர் பயிற்சித் திட்டம்.

(8) கிராம இளைஞர்களுக்கு குறுகியகால பயிற்சித் திட்டம்.

(9) சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத் திட்டம்.

1.2. தொழிற் பயிற்சி நிலையங்கள்.—1967-68 ஆம் ஆண்டுத் திட்டத்தில் இறுதியில் 13,112 மாணவர்களைக் கொண்ட 31 தொழிற்பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் இருந்தன. 1977-78-ல் கம்பியர் (பொது மின் அணுவியல்) துறையில் பயிற்சி அளிப்பதற்காக தனித் தொழில் பயிற்சிப் பிரிவு ஒன்று அடையாறு மின்னணுவியல் கூடத்தில் 32 மாணவர்களுடன் தொடங்கப் பட்டது.

1.3. 29 பொறியியல் பிரிவுகளிலும் 8 பொறியியல் அல்லாத பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. 18 தொழில் பிரிவுகளின் பயிற்சிக் காலம் ஓராண்டாகவும், ஏனைய 19 தொழிற் பிரிவுகளில் பயிற்சிக்காலம் ஈராண்டாகவும் உள்ளது மகளிருக்கென தனியாக தொழில் பயிற்சி பள்ளி ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது. சாதி இட ஒதுக்கீட்டு விதிகளைப் பின்பற்றி ஆண்டிற்கு ஒரு முறை தொழிலாளர் பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்கள்



தகுதி அடிப்படையில்தான் சேர்க்கப்படுகின்றனர். 1979 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் 1980-ம் ஆண்டில் சேர்க்கப்பட்ட பயிற்சியாளர்களின் விவரம் வருமாறு :—

| | | 1979 ஜூலை 1979. | 1980 ஜூலை 1980 |
|---|---|---|---|
| 1. | பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்கள். | 1,47,864 | 92,607 |
| 2, | அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள். | 7,728 | 7,891 (10 சதவீத மிகை எண்ணிக்கை உட்பட) |
| 3, | நேரடித் தேர்வு. | 1,556 | 1,292 |
| 4. | ஆதி திராவிடர்/பழங்குடியினர். | 1,344 | 1,393 (18 சதவீதத்திற்கு எதிராக 18 சதவீதம்). |
| 5. | பின்தங்கிய வகுப்பினர் .. | 4,007 | 4,626 (50 சதவீதத்திற்கு எதிராக 59 சதவீதம்) |
| 6. | அகதிகள். .. .. | 224 | 104 |
| 7. | உடல் ஊனமுற்றோர்கள். | 135 | 90 |
| 8. | பெண்கள். .. .. | 321 | 302 |
| 9. | முன்னாள் ராணுவத்தினர். | 75 | 30 |
| 10. | மற்றவர்கள். .. .. | 66 | 54 |
| | | 7,728 | 7,891 |

1.4. தொழிற் பயிற்சி நிலையங்களில் சேருவதற்கான கல்வித் தகுதி, 18 தொழில்களுக்கு " பள்ளி இறுதி வகுப்பு வரை படித்திருக்க வேண்டும் " என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. முன்பு இதற்குக் குறைந்த கல்வித் தகுதி ஒன்பதாம் வகுப்பு படித்திருக்க வேண்டும். எனவே, பயிற்சி பெற்ற கைவினைஞர் அதிக அளவில் இருப்பர்.

1.5. தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சித் திறனை மேம்படுத்தவும் தொழில் பழகுவோர் பயிற்சி திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்தவும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள வட்டார துணை இயக்குநர் அலுவலகங்களுடன், திருநெல்வேலியில் 1980 ஆம்

வாய்ந்தவர்களுக்கு தொகை அளிக்கவும் வட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவர்கள் இதுவரை 442 ஒப்பளிப்பு ஆணைகளை அனுப்பியுள்ளனர்.

**15. ஆதி திராவிடர்/பழங்குடியினர் ஆகியோருக்கு இயக்குனர் அலுவலகத்தில் உள்ள தனிப்பிரிவு :**

**15.1.** ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கான இயக்குநர் அலுவலகத்தில் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து உருவாக்கப்பட்ட இத்தனிப்பிரிவு, ஆதி திராவிடர்/பழங்குடியினருக்காக மத்திய அரசுத் துறைகளில் ஒதுக்கப்பட்ட காலியிடங்களில் அவர்களை வேலையில் அமர்த்துவதற்கு தனி நடவடிக்கை மேற்கொண்டது. எழுத்தர்கள்/சுருக்கெழுத்து தட்டச்சர்கள், தணிக்கையாளர்கள் பதவிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்க தகுதியுள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியினர்களிடமிருந்து பெறப்பட்ட 232 மனுக்கள் பரிசீலனைக்காக மத்திய அரசு பணியாளர் தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டன.

**15.2.** வலுவான அடிப்படைத் தகவல்களைப் பெறும் பொருட்டு எந்தெந்தத் தொழிலதிபர்களிடம் தகுதியுள்ள ஆதி திராவிடர்/பழங்குடியினர் போதிய அளவு இல்லை என்று கருதப்படுகிறதோ அதைப் பற்றிய விவரங்களை இப்பிரிவு சேகரித்துள்ளது. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் ஆகியோருக்காகவே கிடைக்கக்கூடிய பயிற்சி வசதிகள் பற்றிய தகவல் அவர்களுக்குத் தெரிவிப்பதற்காக சேகரிக்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் 8,232 ஆதி திராவிடர்கள், 293 பழங்குடியினர் தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகப் பயன் உள்ள வேலைவாய்ப்பைப் பெற்றனர்.

**15.3.** வேலைவாய்ப்பின் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு சமமாக வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்தோடு சோதனை அடிப்படையில் 2—10—1979 ஆம் நாளிலிருந்து சேலம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்தவருக்கும் வேலை ஒதுக்கீடு பற்றிய ஒருங்கிணைந்த பதிவேடுகளை பராமரிக்கும் பணி தொடர்பான முன்னோடித் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில், சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் உள்ள ஒருங்கிணைந்த பதிவேட்டுப் பிரிவு, சேலம் மாவட்டத்தில் உள்ள மாநில அரசு/ஓரளவு அரசு சார்புள்ள நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் கீழ் உள்ள நிறுவனங்கள் அனைத்திடமிருந்தும் வரப்பெற்ற மொத்த காலி இடங்களுக்கு ஆதி திராவிடர் பழங்குடியினருக்கான காலி இடங்களில் 15 சதவீதத்திற்கும் மேல் ஒதுக்க முடிந்தது. அறிவிக்கப்பட்ட 940 காலி இடங்களில் (இதற். சாதி அடிப்படையிலான ஒதுக்கீடு உண்டு) 180 காலி இடங்கள் (19 சதவீதம்) ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டன. இந்த சிறப்புப் பிரிவு திறமையான முறையில் செயல்பட்டதின் காரணமாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பெயர் பதிவு செய்து கொண்டுள்ள ஆதி திராவிடர்/பழங்குடியினர் தங்களுக்குரிய வேலை வாய்ப்பினைப் பெற முடிந்தது.



**15.4.** பழங்குடியினருக்கு சிறப்பு வாழ்க்கைத் தொழில் பற்றி வழிகாட்டவும், ஒதுக்கப்பட்ட காலியிடங்களுக்கு எந்தெந்த வேலைகளுக்கு தகுந்த பழங்குடியினரை அனுப்பலாமென அந்தந்த வேலைகளில் உள்ள காலியிடங்களைக் கண்டறியவும், நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியினருக்கான தனி வாழ்க்கைத் தொழில் வழிமுறை நிலையம் ஒன்று உதகமண்டலம், மாவட்ட வேலைவாய்ப்பகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு 1930 மார்ச்சிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது. 1,130 பழங்குடியினருக்கு வாழ்க்கை தொழில் வழிமுறைகளை நல்கியது, 30 பழங்குடியினரை வேலையில் அமர்த்தியுள்ளது.

**16. 1980-81 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்.**

கீழ்க்காணும் திட்டங்கள் அறிக்கை ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.—

(1) தொழில் நுட்ப பயிற்சி பெற்றவர்களின் வேலை வாய்ப்பு பிரச்சினையைக் கவனிப்பதற்காகவே திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தனி மாவட்ட வேலைவாய்ப்பலுவலகம் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து இவ்வலுவலகம் செயல்படத் தொடங்கியுள்ளது.

(2) தொழில் மற்றும் நிர்வாக வேலைவாய்ப்பகத்தை வலுப்படுத்துவதற்காக, அதில் கூடுதல் பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த வேலைவாய்ப்பகங்கள் செவ்வனே செயலாற்றும் வகையில், வேலைவாய்ப்பகங்களில் கூடுதல் பணியாளர்களை நியமித்தல், மரச்சாமான்கள் போன்ற பிற வசதிகளை அளித்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**கைவினைஞர் பயிற்சித் திட்டம்.**

**1.1. தொழிற்பயிற்சி நிலையங்களின் பங்கு:**

தொழில் வளம் பெருக தொழில் நுட்பப் பயிற்சிப் பெற்ற கைத்திறப் பணியாளர் அதிக அளவில் தேவைப்படுகின்றனர். இத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்தியாவில் பல பகுதிகளிலும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டன. பயிற்சியை பயனுள்ளதாக ஆக்கும் பொருட்டு, இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியமைகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் கைவினைஞர் பயிற்சித் திட்டத்திற்கு

ஆண்டு அக்டோபரில் வட்டாரத் துணை இயக்குநர் அலுவலகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

1.6. இத்துறையில் இப்போதுள்ள பயிற்சி நிறுவனங்கள், இத்தொழிலில் போதிய பயிற்சி ஆசிரியர்களுக்கான தேவையை முழுவதும் நிறைவு செய்யவில்லை. இதற்கு வழிகாண இத்தொழில் பயிற்சி நிறுவனங்களும் குறிப்பிடத்தக்க பணியாற்றலாம். ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்த்து வைப்பதுடன் மட்டுமின்றி காலணி தயாரிப்பு மையப் பயிற்சி நிலையம், தோல்மைய ஆராய்ச்சி நிறுவனங்கள, தோல் தொழில் நுட்பவியல் நிறுவனம் ஆகிய பயிற்சி நிலையங்கள் இவ்வகையில் மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு உறுதுணையாகவும் தொழில் பயிற்சி நிலையங்கள் பணியாற்றலாம். இதனைக் கருத்தில் கொண்டு 1980-81-ல் வேலூர் தொழில் பயிற்சி நிலையத்தில் "காலணிகள், தோல் பெட்டிகள், ஏனையதோல் தயாரிப்புப் பொருட்கள்" தொடர்பான தோல் தயாரிப்புத் தொழில்கள் இரண்டு தொடங்கப்பட்டுள்ளன.

1.7. பயிற்சி பெறுபவர்கள் பயிற்சி முடிந்த பின்னர் நல்ல வேலைவாய்ப்பு வசதிகளைப் பெறும் பொருட்டு மக்களிடையே குறைந்த ஆதரவு பெற்ற தொழில்களை நீக்கி விட்டு அவற்றிற்குப் பதிலாக அதிக வேலைவாய்ப்பளிக்கும் தொழில்களைப் புதிதாகக் கொண்டு வருவதன் மூலம் தொழிற் பயிற்சி நிலையங்களில் "தொழில்களை பலதிறப்படுத்துதல்" திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் தற்போது பொருத்துநர் (ஃபிட்டர்) தொழிலில் உள்ள 80 இருக்கைகள் குறைக்கப்பட்டு மக்கள் ஆதரவு பெற்ற கம்பியர் (குளிர் பதனம்-சீர்வளி வசதி) கம்பியர் (வானொலி-தொலைக்காட்சி) கம்பியில்லா தந்திக் கருவி இயக்குபவர் தொழில்களை ரூபாய் 8.00 இலட்சம் மொத்த செலவில் கொண்டு வர அரசு ஒப்பளித்துள்ளது. வரப்போகும் பயிற்சி ஆண்டில் இது செயல்படுத்தப்படும்.

1.8. தமிழ்நாட்டில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரம் பின் வருவனவற்றிலிருந்து மதிப்பிடப்படலாம்:—

ஏற்கெனவே நடைபெற்ற 15 அனைத்திந்திய திறமைப் போட்டிகளில் இம்மாநிலம் 8 முறைகள் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடந்த திறமைப் போட்டியிலும் நமது மாநிலம் முழுவதும் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கென குடியரசுத் தலைவரின் சுழற்கேடயத்தை 8-வது முறையாகப் பெறும் வாய்ப்பு கிட்டியுள்ளது. 1980 ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற 9-வது அனைத்திந்திய திறமைப் போட்டியின் முடிவுகள் இன்னும் வரவில்லை.



1.9. அனைத்திந்திய தொழிற் தேர்வில் மதிப்பிட்டு நிலையை தரம் உயர்த்தும் பொருட்டு ஓராண்டு கால அளவிலான 16 தொழில்களின் விடைத்தாள்களை திருச்சி, மதுரை, கோவை, சென்னை ஆகிய வட்டார மைய இடங்களில் திருத்த 1979 ஜூலையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ் வட்டார மைய இடங்களில் திருத்த ஏற்பாட்டில் 2,700 மாணவர்கள் தேர்வு எழுதியதில் 2,455 பேர் தேறினர். அவ்வாண்டின் மதிப்பீடு 91 விழுக்காடுகளாகும். 1980-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஒன்று, இரண்டு ஆண்டு பயிற்சியுடைய 35 தொழில்களுக்கும் இத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற அனைத்திந்திய தொழில் எழுதும் பயிற்சியாளர்கள் தேர்வில் 7,929 பயிற்சியாளர் தேர்வு எழுதியதில் 7,137 பயிற்சியாளர்கள் வெற்றி பெற்றனர். இவ்வாண்டின் மதிப்பீடு 90 விழுக்காடுகளாகும்.

## 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்.

2.1. 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம் 1963 ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் விதித்துறைகளின்படி, தொழில் பழகுவோர் ஆலோசனை வரையறுத்த குறிப்பிட்ட எண்ணிக்கை பயிற்சியாளர்களுக்குக் குறிப்பிட்ட தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிப்பது தொழில் அதிபர்களின் கடமையாகும். இப்பயிற்சித் திட்டம் தொழிற்பயிற்சிப் பள்ளிகளுக்கு அளிக்கும் நிறுவனப் பயிற்சியின் தொடர்ச்சியாகும். தொழிற்சாலைகளின் வளர்ந்துவரும் தேவையைப் பூர்த்தி செய்ய போதிய அளவுக்குப் பயிற்சி பெற்ற கைவினைஞர்களை தேசிய அளவில் உருவாக்கி அவர்களின் திறமையை வளர்ப்பதும் பயிற்சி பெற்றவர்களின் முழு நிலைமையை உயர்த்த இயலும் வகையில் இந்தியா முழுவதும் ஒரே சீரான பயிற்சி வசதியை முறைப்படுத்தி செயல்படுத்துவதும் இத் திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் ஆகும். தொழில் பழகுவோருக்குப் பல்வேறு தொழில்களில் அடிப்படைப் பயிற்சியை தொழில் பயிற்சி நிலையங்கள் அளிக்கின்றன, பயிற்சியின்போது தொடர்புடைய பொருத்தமான அறிவுரையுடன் அவசியமான பட்டறை பயிற்சி அல்லது பணியில் இருக்கும்போது பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. பயிற்சியின் கால அளவு அந்தந்த தொழிலைப் பொறுத்து ஆறு மாதம் முதல் நாலாண்டுகளாகும். தொழிற் பழகுவோர், பயிற்சியின் இறுதியில் அனைத்திந்திய ஆண்டு திறமைப் போட்டிகளில் பங்கேற்கின்றனர். தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு தொழில் பழகுவோர் பயிற்சி தேசியச் சான்றிதழ் அளிக்கப்படுகிறது.

2.2. 30—9—1979 முதல் 31—3—1980 முடிய இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளோர் விவரப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொழில் பழகுவோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | பொதுத் துறை. | தனியார் துறை. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| 30-9-1979 அன்றுள்ள படி .. .. | 3,289 | 7,346 | 10,635 |
| 31-3-1980 அன்றுள்ள படி .. .. | 3,539 | 7,225 | 10,766 |

| | தேர்வு செய்யப்பட்ட தொழில் பழகுவோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | பொதுத் துறை. | தனியார் துறை. | மொத்தம். |
| (1)—தொடர்ச்சி. | (2) | (3) | (4) |
| 30-9-1979 அன்றுள்ள படி .. .. .. | 2,818 | 6,985 | 9,803 |
| 31-3-1980 அன்றுள்ள படி .. .. | 2,708 | 7,212 | 9,920 |

2.3. இன்றுள்ளவாறு தொழில் பழகுவோர் சட்டத்தின் கீழ் 131 தொழில்கள் பயிற்சிக்கென குறிப்பிடப்பட்டுள்ளன. எல்லா தொழில் பழகுவோருக்கும் பயிற்சிக் கால அளவைப் பொறுத்து திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 130 முதல் ரூபாய் 200 வரை பயிற்சி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் அன்றுள்ளபடி தனியார் மற்றும் தமிழக அரசுத் துறையிலும் நிறுவனங்களிலும் 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டம் செயற்படுத்தப்படும் நிறுவனங்கள் 1,548 ஆகும். 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாளன்றுள்ளபடி தொழில் பழகுவோர் சட்டம் செயல்-படுத்தப்பட்ட நிறுவனங்கள் 1,215 ஆகும். 1979 ஆம் ஆண்டு ஏப்ரல், அக்டோபர் திங்களில் நடைபெற்ற அனைத்திந்திய தொழிற் பயிற்சி தேர்வில் 4,104 தொழில் பழகுவோர் தேர்வு எழுதியதில் 3,670 பேர் தேர்வு



பெற்றனர். 1980 ஆம் ஆண்டு ஏப்ரல், அக்டோபர் திங்களில் நடைபெற்ற பயிற்சித் தேர்வில் 4,149 பேர் தேர்வு எழுதியதில் 3,633 பேர் வெற்றி பெற்றனர்.

3. தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாலை நேர வகுப்புகள்.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தொழில் அறை அறிவினை மேம்படுத்தி அதன் மூலம் அவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் ஆகும். ஆகையால், தொழிற்சாலை அதிகமாக இருக்கக் கூடிய இடங்களில் இத்திட்டம் தொழிற் பயிற்சி நிலையங்களின் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. அதன் படி கிண்டி, வட சென்னை, அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட மொத்த பயிற்சி இடங்கள் 1,050 ஆகும். 'பெல்' நிறுவனம் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் பயிற்சித் திறனை அதிகரிக்க, அந் நிறுவனத்திற்குள்ளே இத்திட்டத்தை செயல்படுத்துகிறது. 50 இருக்கைகளுடன் பற்ற வைத்தல், பொருத்துதல் ஆகிய இரு தொழிற் பயிற்சி பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் நடந்த தேர்வில் தொழிற்சாலையில் பணிபுரியும் 25 தொழிலாளர்கள் தேர்வு எழுதினர். 1980 ஆம் ஆண்டு தேர்வில் 569 பேர் தேர்வு எழுதியதில் 415 பேர் தேர்வடைந்தனர். 1979 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்வில் 491 பேர் தேர்வு எழுதியதில் 373 பேர் தேர்வடைந்தனர். 1981-82 ஆம் ஆண்டில் மேட்டூர் அணை, திருச்சிராப்பள்ளியிலுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மாலை நேரத் தொழிற்பயிற்சி வகுப்புகள் ரூபாய் 1,00,000 செலவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

4. நிதி உதவி பெறும் தொழிற் பள்ளிகள்.

வேலைவாய்ப்பு—பயிற்சித் துறை இயக்குநரால் பிறப்பிக்கப்பட்ட, தொழில் பயிற்சி பள்ளிகள் ஒழுங்கு முறை விதிக் கோவையின் கீழ் அங்கீகாரம் அளிக்கப்பட்ட 76 தொழிற் பள்ளிகள் தற்சமயம் தமிழ்நாட்டில் உள்ளன. இப்பள்ளிகள் தச்சுத் தொழில், கருமார் தொழில், பொருத்துநர் தொழில், பற்றவைக்கும் தொழில், பூ வேலை, பின்னல் வேலை, துணி வெட்டுதல், தைத்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கின்றன. இத்தொழிற் பிரிவின் பயிற்சி காலம் ஒன்று முதல் மூன்று வருடங்கள் வரை அமைந்துள்ளது. இப்பள்ளிகளில் பயிற்சிக்கு

அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 5,076. தற்போது 4,326 மாணவர்கள் இப்பள்ளிகளில் பயிற்சி பெறுகிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட எல்லா தனியார் நிறுவனங்களிலும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு எல்லாத் தொழில்களுக்கும் பொதுவான பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டு எல்லாத் தொழில் நிலையங்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. 1975 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் பொதுவான இறுதியாண்டுத் தேர்வும் நடத்தப்பட்டு வருகிறது. தொழிற் பள்ளிகளுக்கான ஒழுங்கு முறை விதிக் கோவையின் விதித் துறைகளின்படி இப்பள்ளிகள் மானியம் பெறத் தகுதியுடையவை. 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்வில் தேர்வு எழுதிய 2,150 பயிற்சியாளர் எல்லோரும் தேர்வு அடைந்தனர். 100 விழுக்காடு வெற்றி கிடைத்தது. 1979-ல் நடைபெற்ற தேர்வினை ஒப்பிடுகையில் தேர்வு எழுதிய 1,950 பேர்களில் 1,910 பேர் தேறினர். வெற்றி 98 விழுக்காடாகும்.

5. சிறப்புப் பயிற்சித் திட்டம்.

வேலை இழந்த பொற்கொல்லர்கள், மாதிரி வடிவமைப்புத் தயாரிப்பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் முதலியோர் தங்களுக்குப் பொருத்தமான வேலையைப் பெறுவதற்கான சில தொழில் நுட்பப் பயிற்சிகளை அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் ஆகும். சேலம், திருச்சி, பேட்டை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட தொழில் பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு கருமார்-தொழில், பொருத்துநர் தொழில், செப்பு வேலைப்பாடு, தகர வேலைப்பாடு ஆகிய இரட்டை தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் திங்களொன்றுக்கு ரூபாய் 10 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட பயிற்சியாளர்களின் மொத்த எண்ணிக்கை 160 ஆகும். 1979 ஆம் ஆண்டில் 62 பயிற்சியாளர்கள் இவ்வகுப்பில் சேர அனுமதிக்கப்பட்டனர். தேர்வு எழுதிய 62 பயிற்சியாளர்களும் வெற்றி பெற்று 100 விழுக்காடு வெற்றியை ஈட்டினர். 1980 ஆம் ஆண்டு நிலைமையை ஒப்பிடுகையில் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டு தேர்வு எழுத தெரிந்தெடுக்கப்பட்ட 68 பேர்களும் வெற்றி பெற்றனர்.

6. வாழ்க்கைத் தொழில் மேல் பயிற்சித் திட்டம்.

6.1. தொழில் நுட்பவியலில் நாள்தோறும் பெருகி வரும் நவீன கருவிகளையும் மாற்றங்களையும் கருத்திற் கொண்டு, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் அல்லது அனைத்து நாட்டு தொழிலாளர் நல நிறுவனத்தின் உதவியுடன் அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத் தொழில் மேல் பயிற்சி திட்டம் கொண்டுவரப்பட்டது. வாழ்க்கைத் தொழில் பயிற்சி முற்போக்குத் திட்டத்தின்கீழ் அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட தொழிற் பிரிவுகள் அதன் எதிராக குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் தொடங்கப்பட்டுள்ளன :—



| | தொழில் பிரிவின் பெயர். | தொடங்கப்பட்ட நாள். |
|---|---|---|
| 1 | இந்திய தர நிர்ணயம் மற்றும் பொறியியல் வரைபடங்களைக் கற்றல். | 15—3—1979 |
| 2 | உலோக பற்ற வைப்பில் சிறப்புப் பயிற்சி | 30—4—1979 |
| 3 | கருவி மற்றும் அச்சு தயாரித்தல் | 30—4—1979 |
| 4 | கம்பியர் (பராமரிப்பு) | 30—4—1979 |
| 5 | மின்சாரம் (பராமரிப்பு) | 30—4—1979 |

6.2. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாளன்றுள்ளவாறு 70 தொழில் நிறுவனங்களிலிருந்து அனுப்பப்பட்ட 510 தொழிலாளர்கள் மேற்கூறிய தொழில்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

6.3. 1930 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24 ஆம் நாள் நடைபெற்ற ஆலோசனைக் குழு கூட்டத்தில் அனைத்து நாட்டு தொழிலாளர் நிறுவனத்தைச் சார்ந்த பிரதிநிதிகளும், முன்னணி நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகளும், அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத் தொழில் மேல்பயிற்சித் திட்டத்தின்கீழ் இத்திட்டத்தை செயற்படுத்தியதால் ஏற்பட்ட வளர்ச்சியை வெகுவாகப் பாராட்டினர்.

6.4. மேற்கூறப்பட்டுள்ளவற்றிற்கு மேலாக, 1931-82 ஆம் ஆண்டில் ரூபாய் 6.00 இலட்சம் செலவில் கோயம்புத்தூரிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தை நவீனப்படுத்தும் திட்டத்தை செயற்படுத்தவும் அரசு கருதியுள்ளது.

7. அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்றுநருக்கான பயிற்சி திட்டம்.

7.1. இத்திட்டத்தின் நோக்கம் பயிற்றுநர்களுக்கு கல்வி கற்பிப்பதில் தொழில் நுட்ப உத்தி குறித்தும், ஒலி, ஒளி கருவிகளை உபயோகிப்பது குறித்தும், நிருவாகம் குறித்தும் தனிப் பயிற்சி அளிப்பதேயாகும்.

இப்பயிற்சித் திட்டம் 1980 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இளநிலை பயிற்சி அலுவலர்கள் இப்பயிற்சி திட்டத்தினால் நவீன தொழில் நுட்ப பயிற்சி முறையால் பயன் அடைகின்றனர். இப்பயிற்சித் திட்டத்தில் நவீன தொழிற் சாலைகளைப் பார்வையிடுவதும் அடங்கும்.

7.2. பயிற்சி முறை நுட்பங்கள் என்பதின்கீழ், கற்பிக்கும் முறையில் பயிற்சி பாடத் திட்டங்களில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள், கற்பிக்கும் முறை குறித்த கோட்பாடுகள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதுடன் இந்த ஆசிரியர்கள் கற்பித்தல் தேர்வு நடத்தி மதிப்பீடு செய்தல் கற்பிப்பதற்கான சாதனங்களை உரிய இடத்தில் காட்டி விளக்கும் முறை ஆகியவற்றையும் தெரிந்துகொள்ளுகின்றனர். நவீன—ஒலி—ஒளிக் கருவிகளைப் பயன்படுத்துவதிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதுவரை, 44 பாடமுறை பணியாளர்கள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

8. புத்தறிவு பயிற்சித் திட்டம் :

8.1. கைவினைஞர் பயிற்சித் திட்டத்தினை சிறந்த முறையில் செயற்படுத்த, தொழிற் பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த முதல்வர்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் போட்டித் திறனை அதிகரிக்கவும், தலைமைத் தகுதியை ஏற்படுத்தவும் இயங்கு திறனை உருவாக்கவும் பயிற்சியாளர்களிடையே, தனித் திறமையை ஏற்படுத்தவும், தேசிய உற்பத்திக் குழுவால் இப்புத்தறிவு பயிற்சித் திட்டம் 1979 ஆம் ஆண்டு கிண்டி தொழிற் பயிற்சி நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டது. 15 தொழிற் பயிற்சி நிலையங்களிலுள்ள முதல்வர்கள் இதில் பங்கேற்றனர்.

8.2. இத்திட்டம் சிறந்த பலனை அளித்திருப்பதால் மற்றொரு வகுப்பு விரைவில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. 25 இளநிலை பயிற்சி அலுவலர்கள் ஒவ்வொரு வருடமும் இந்தியாவிலுள்ள பல்வேறு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சி பெற அனுப்பப்படுகிறார்கள்.

9. கிராம இளைஞர்களுக்கு குறுகிய காலப் பயிற்சித் திட்டம் :

9.1. கிராமப்புறக் கைவினைஞர்கள் திறமையுடனும் பயன்தரத்தக்க வகையிலும் தம் தொழிலை செய்வதை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பயிற்சி பெறாதிருக்கின்றவர்களைப் பயிற்சி பெறச் செய்வதும் இதன்



நோக்கமாகும். தெரிந்தெடுக்கப்பட்ட கிராமப்புறப் பகுதிகளில் எந்தத் தொழில்களில் கைத்திறன் மேம்பாடு அடையச் செய்ய வேண்டுமோ அந்தத் தொழில்களில் கைத்திறன் அதிகரிக்கச் செய்வதை இத்திட்டம் அடிப்படையாக கொண்டிருக்கிறது. எனவே திறமை மிக்க கைவினைஞர்கள் நகர்புற குடிசைகளுக்குச் செல்வதைத் தடுத்து அவர்களை கிராமப்புறங்களிலேயே இருக்கச் செய்து தொழில் புரிவதை ஊக்குவிப்பதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்பயிற்சித் திட்டம் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14 ஆம் நாளிலிருந்து 19 தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. தெளிப்பான், துடைப்பான், டிராக்டர்கள் டீசல் மூலம் இயங்குகின்ற விசையேற்றங்கள் போன்றவைகளைப் பழுதுபார்த்தல், சீரமைத்தல், மின்சார சாதனங்களை பழுதுபார்ப்பது போன்ற வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுடன் இரு சக்கர வண்டி பழுதுபார்த்தல், சைக்கிள் பழுது பார்த்தல், வானொலிப் பெட்டி பழுது பார்த்தல், மின்சாரக் கம்பி வேலை, மின் சாதனம் பழுதுபார்த்தல், தச்சு வேலை, கருமார் வேலை போன்ற தொழில்களும் பயிற்றுவிக்கப்படுகின்றன. மாலை 6 மணியிலிருந்து இரவு ஒன்பது மணி வரை மூன்று திங்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு திங்களொன்றுக்கு ரூபாய் 75 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில், ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூபாய் 100 மதிப்புள்ள ஒரு கருவிப் பெட்டி, அதன் அடிப்படை விலையில் பாதி விலைக்கு வழங்கப்படுகிறது. இதுவரை இப்பயிற்சி திட்டத்தினால் (அதாவது 31—1—1981 முடிய) 5,300 கிராமப்புற கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

9.2. இத்திட்டத்தின் வெற்றியைக் கருத்தில் கொண்டு 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ரூபாய் 41.63 இலட்சம் செலவில் 10 தொழிற் பயிற்சி நிலையங்களில் அதாவது தேனி, திருவண்ணாமலை, தூத்துக்குடி, ஈரோடு, நாகர்கோவில், மேட்டூர் அணை, உளுந்தூர்பேட்டை, புதுக்கோட்டை, வேலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வந்த பகுதி நேர வகுப்புக்களை முழு நேர வகுப்புகளாக அரசு மாற்றி அமைத்துள்ளது. 1981 பிப்ரவரியிலிருந்து தொடர்ந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு 4,200 கிராம இளைஞர்கள் பயன்பெறுவர்.

10. சென்னை பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம் :

உலக வங்கியின் உதவியுடன் குடிசை வளர்ச்சி திட்டத்தின்கீழ், சென்னை நகர் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சென்னை பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம் பொறுப்பு ஏற்கும் திட்டமாகும்.

1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து, இத் திட்டம் கிண்டி, அம்பத்தூர், வடசென்னை தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. மாலை 6 மணியிலிருந்து இரவு 9 மணி வரை பகுதி நேரத் தொழிலாக தச்சு வேலை, ஒட்டவைப்பு உட்பட இருசக்கர வண்டி வேலை சாதாரண மின் கம்பி வேலை பழுது பார்த்தல், கட்டிட வேலை, வண்ணம் பூசுதல், சைக்கிள் பழுது பார்த்தல், குறைந்த அழுத்த பற்றவைப்பு ஆகிய தொழிற் பிரிவுகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழிற் பிரிவுகளுக்கு ஏற்ப பயிற்சிக் காலம் மூன்று திங்களிலிருந்து ஆறு திங்கள் வரை மாறு பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் ஆண்டொன்றுக்கு பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 640 ஆகும். இதுவரை 470 பயிற்சியாளர்கள், இத்திட்டத்தின் கீழ் பயிற்சி, பெற்றுள்ளனர்.

11. பொதுவானவை :

11.1. நாட்டிலுள்ள பல்வேறு தொழிற் பயிற்சி நிலையங்களில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ் வகுத்துள்ள ஆசிரியர் அமைப்பை செயல்படுத்த, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கான தேசியக் குழு பரிந்துரை செய்துள்ளது. இத்திருத்த ஆசிரியர் அமைப்பின்கீழ் பயிற்சியின் தரத்தை மேம்படுத்தவும் சிறந்த முறையில் மேற்பார்வையிடவும் முடியும். மேற்சொன்ன கூற்றினைக் கருத்தில் கொண்டு, இம்மாநிலத்திலுள்ள அனைத்து தொழிற் பயிற்சி நிலையங்களிலும் தேசியக் குழுவின் பரிந்துரையின்படி வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கான ஆசிரியர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ் வமைப்பை ஏற்படுத்தியதன் மூலம் 65 புதிய பயிற்சி அலுவலர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. 379 இளநிலை பயிற்சி அலுவலர்கள், உதவி பயிற்சி அலுவலர்களாக பதவி உயர்வு பெற்றனர். அவ்வாறே வாழ்க்கைத் தொழில் பயிற்சிக்கு தேசியக் குழு அமைத்த அமைப்பு முறை நிர்வாகப் பணியாளர் களைப் பொறுத்தமட்டிலும் 1981-82 ஆம் ஆண்டில் படிப்படியாகச் செயற் படுத்தப்படும்.

11.2. எதிர்காலத் திட்டங்கள்பற்றிய விவரங்கள் கீழ் பாகம் 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன :—

**வேலை வாய்ப்பு பயிற்சியின்கீழ் எதிர்காலத் திட்டங்கள் :**

இத்துறையால் செயல்படுத்த தயாராக உள்ள பல்வேறு திட்டங்களுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களும் 1981-82 ஆம் ஆண்டு நிறைவேற்றப் படும்.





1. தொழில் நுட்ப தகுதி பெற்றவர்களுக்கு மதுரையில் தனியாக ஒரு வேலை வாய்ப்பு அலுவலகம் அமைத்தல்.

மதுரையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பல தொழிற்சாலைகள் அமைந் திருப்பதைக் கருத்திற்கொண்டும், ஏராளமான தொழில் நுட்ப தகுதி பெற்ற வர்கள் இருப்பதைக் கருத்திற்கொண்டும், 1981-82 ஆம் ஆண்டு மதுரையில் தொழில் நுட்பத் தகுதி படைத்தவர்களுக்கென ஒரு தனி வேலை வாய்ப்பு அலுவலகம் நிறுவ கருதப்பட்டுள்ளது. இந்தத் தொழில் நுட்ப வேலை வாய்ப் பலுவலகம் இந்நிறுவனத்தின் ஒரு மொத்த திறமையை வளர்க்க உதவுவதோடு, தொழிலதிபர்கள் தங்கள் நிறுவனத்திற்குத் தேவையான தொழில் நுட்ப தகுதி படைத்தவர்களைத் தெரிந்தெடுக்கவும் வகை செய்கிறது.

2. கூடுதல் பணியாளர்களைக் கொண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களைப் பயன்படுத்துதல்.

வேலை தேடுபவர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் விரைவாகவும் திறமை யாகவும் பணிபுரிய வேலைவாய்ப்பு அலுவலகங்களை ஊக்குவிக்கும் பொருட்டு 1981-82 ஆம் ஆண்டு பல்வேறு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 20 இளநிலை உதவியாளர்களைக் கூடுதலாக நியமித்து பலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. கூடுதல் பணியாளர்களைக் கொண்டு சென்னை-35-ல் உள்ள தொழில் நிர்வாக வேலை வாய்ப்பலுவலகத்தை பலப்படுத்துதல்.

சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களிலுள்ள ஒன்பது வேலைவாய்ப் பலுவலகங்களின் பணியைக் கணக்கிடு பொறி மூலம் செயல்படுத்தப்பட்டு வருவதைக் கருத்தில் கொண்டு தொழில் நிர்வாக வேலைவாய்ப்பகங்களை பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. கணக்கிடு பொறி மூலம் விண்ணப்பதாரர்களைத் தெரிந்தெடுப்பதில் தவறுகளோ அல்லது முறைகேடு களோ ஏற்பட வாய்ப்பில்லையாதலால், கணக்கிடு பொறி பணியை விரைவு படுத்தும் நோக்குடன் தொழில், நிர்வாக வேலை வாய்ப்பகங்களை 1981-82 ஆம் ஆண்டு கூடுதல் பணியாளர்களைக் கொண்டு பலப்படுத்த கருதப்பட்டுள்ளது.

**4. வேலைவாய்ப்பு, பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்திற்கும், வேலை வாய்ப்பகங்களில் உள்ள வேலை நிலவரத் தகவல் பிரிவுக்கும் கூடுதல், தட்டச்சருக்கு ஒப்பளித்தல்.**

வேலைவாய்ப்பு, பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தில் உள்ள வேலை வாய்ப்பகப் பிரிவில் நகல் எடுக்கும் பகுதியை பலப்படுத்தும் பொருட்டும் நகல்களை விரைவில் அனுப்பவும் 1981-82 ஆம் ஆண்டு இப்பிரிவில் இரண்டு தட்டச்சர்களுக்கு ஒப்பளிக்கக் கருதப்பட்டுள்ளது. மேலும் கடலூர், நாகர் கோவில், உதகமண்டலம், இராமநாதபுரம், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டையில் உள்ள வேலை வாய்ப்பகங்களைச் சேர்ந்த வேலை நிலவரத் தகவல் திட்டப் பிரிவில் நகல் எடுக்கும் வேலையைத் துரிதப்படுத்த 1981-82 ஆம் ஆண்டு ஆறு தட்டச்சர்களுக்கு ஒப்பளிக்கக் கருதப்பட்டுள்ளது.

**5. வேலை வாய்ப்பகங்களுக்கு 12 அறைகள் கொண்ட இரும்பு அலமாரிகள் வழங்குதல்.**

வேலை வாய்ப்பகங்களின் செல்திறன் பதிவேட்டிலுள்ள, விண்ணப்பதாரர் களின் முழுவிவரங்கள் அடங்கிய பதிவு அட்டைகளும் ஏனைய விவரங்களும் தூசி, ஈரம் அல்லது கரையான் அரிக்காமல் பாதுகாக்க 12 அறைகளைக் கொண்ட இரும்பு அலமாரிகளில் பாதுகாத்து வரப்படுகின்றன. வேலை வாய்ப்பலுவலகங்களில் அத்தகைய இரும்பு அலமாரிகள் போதுமான அளவு இல்லாததால், 1981-82 ஆம் ஆண்டு 12 அறைகளைக் கொண்ட 20 இரும்பு அலமாரிகளை வழங்கக் கருதப்பட்டுள்ளது.

**6. சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூரிலும் இராமநாதபுரத்தில் உள்ள விருதுநகரிலும் துணை வேலை வாய்ப்பகங்களை அமைத்தல்.**

தொழிலாளர் நல தேசிய குழுவின் பரிந்துரைக்கிணங்கவும், வளர்ந்து வரும் மக்கள் தொகை, வளர்ந்து வரும் வேலை வாய்ப்பு தகவல் நடவடிக்கைக் கேற்பவும், தொழிலதிபர்களின் எண்ணிக்கை, முதன்மை வேலை வாய்ப்பகங் களை அணுக முடியாத நிலையில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த வேலை வாய்ப்பற்றோரின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, 1981-82 ஆம் ஆண்டு, சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூரிலும், இராமநாதபுரம் மாவட்டத் தில் உள்ள விருதுநகரிலும் இரண்டு துணை வேலை வாய்ப்பகங்களை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.



**7. வட்டார துணை இயக்குநர் அலுவலகத்தை மதுரையில் ஏற்படுத்துதல்.**

பல்வகைப் பகுதிகளை பயனுள்ள முறையில் மேற்பார்வையிடவும், கட்டுப் பாட்டின்கீழ் வைத்துக்கொள்ளவும், வேலை தேடுவோரின் குறைகளை விரைந்து தவிர்க்க தற்போது தலைமை அலுவலகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அதிகாரங்களை வட்டார அலுவலகங்களுக்கு மாற்றும் செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. இவ்வழியில் முதற்படியாக, 1981-82 ஆம் ஆண்டு ஒரு வட்டார துணை இயக்குநர் அலுவலகத்தை மதுரையில் ஏற்படுத்தி அதில் நியமிக்கப்படும் துணை இயக்குநருக்கு அதிகாரத்தை ஒப்படைக்கவும் கருதப் பட்டுள்ளது.

**8. மதுரை, கோயம்புத்தூர் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வகுப்புவாரியாக வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்யும் ஒருங்கிணைந்த பதிவேட்டை நிர்வகிக்க ஒரு தனி பிரிவை அமைத்தல்.**

சேலம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தற்போது செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த பதிவேட்டு திட்டத்தால் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த வர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலை ஒதுக்கீடு அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர் களுக்கு கிடைப்பதில் உறுதி ஏற்பட்டுள்ளது. இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுவதைத் தொடர்ந்து 1981-82 ஆம் ஆண்டு மதுரை, கோயம்புத்தூர் மாவட்ட வேலை வாய்ப்பலுவலகங்களில் அத்தகைய பிரிவுகளை ஏற்படுத்தவும், வகுப்பு வாரியாக வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்யும் ஒருங்கிணைந்த பதிவேட்டைப் பராமரிக்கவும் கருதப்பட்டுள்ளது.

**9. சென்னை, மதுரை, அண்ணாமலை நகரிலுள்ள பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டு நிலையங்களைப் பலப்படுத்துதல்.**

சென்னை, மதுரை, அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டு நிலையங்கள் பல்கலைக் கழகங்களில் படித்த பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்கள், வாழ்க்கை தொழில் முறைகள் போன்ற தகவல்களை வழங்குவதில் தகுந்த முறையில் வழிகாட்டி வருகிறது. பல்கலைக் கழக வேலை வாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் போதிய பணியாளர்கள் இல்லாமையால், அவர்களால் அத்துறையில் அதிகரித்துள்ள வேலை பளுவிற்கு ஈடு கொடுக்க முடியவில்லை. 1981-82 ஆம் ஆண்டில் சென்னை, மதுரை, அண்ணாமலை நகரிலுள்ள பல்கலைக் கழக வேலை வாய்ப்பு மற்றும் வழிகாட்டு நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு கூடுதல் உதவியாளர்களைக் கொண்டு பலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10. செங்கற்பட்டு, கிண்டி, புதுக்கோட்டையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆதரவு குறைந்த சில தொழிலுக்குப் பதிலாக வேறு தொழிலை மாற்றியமைத்தல்.

தொழில் நுட்பவியலில் ஏற்பட்டிருக்கும் விரைவான முன்னேற்றத்தின் காரணமாகவும் மாற்றங்களின் காரணமாகவும் சில தொழில்களுக்கு தொழில் பயிற்சி நிலையங்களில் கொடுத்து வரும் பயிற்சி ஆதரவு குறைந்துள்ளது. இதைக் கருத்தில் கொண்டு செங்கற்பட்டு தொழில் பயிற்சி நிலையத்திலுள்ள "பற்றவைத்தல்" தொழிலுக்குப் பதிலாக "பண்ணை சம்பந்தப்பட்ட கம்மியர்" தொழிலையும், கிண்டி, புதுக்கோட்டையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூபாய் 5.00 இலட்சம் செலவில் கம்மியர் (மோட்டார் வண்டிகள்) தொழிலை மாற்றி அமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

11. தருமபுரியில் பெண்களுக்கென புதிய தொழிற் பயிற்சி நிலையமொன்றை ஏற்படுத்துதல்.

தற்போது சென்னையில் மட்டும் பெண்களுக்கென ஒரு தொழிற் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. தருமபுரி பின் தங்கிய மாவட்டமாக இருப்பதால் அங்கு பெண்களுக்கு மட்டும் பயிற்சி அளிக்கக்கூடிய பல்வேறு தொழிலைக் கொண்ட ஒரு புதிய தொழில் பயிற்சி நிலையத்தை தருமபுரியில் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கென 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் நிலத்தைக் கையகப்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

12. அரக்கோணத்தில் ஒரு புதிய தொழிற் பயிற்சி நிலையத்தை ஏற்படுத்தல்.

அரக்கோணம் பகுதியில் தொழிற்பேட்டை தொகுதி ஒன்று வேகமாக வளர்ந்து வருகிறது. வேலூர், திருவண்ணாமலையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்கள் வெகுதூரத்தில் இருப்பதால் அவைகளால் அரக்கோணப் பகுதியில் உள்ள தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிற் வல்லுநர்களுக்குத் தேவைப்படும் போதிய வசதிகளை அளிக்க முடியாத நிலையில் உள்ளன. அரக்கோணத்தில் பல்வேறு தொழிற் பயிற்சியில், 288 இடங்களைக் கொண்ட புதிய தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

13. ஈரோட்டில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு விடுதி ஒன்றை கட்டுதல்.

ஈரோட்டிலுள்ள தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்களின் தற்போதைய விடுதி, இத் தொழில் பயிற்சி நிலையத்தில் இருந்து வெகு தொலைவில், வாடகைக் கட்டிடத்தில் உணவு வசதியின்றி இருக்கிறது. ஆகையினால், ஈரோட்டில் இருக்கும் தொழிற் பயிற்சி நிலையத்தில் நிலையான விடுதி ஒன்றினை கட்ட கருதப்பட்டுள்ளது. இதற்கென 1981-82 ஆம் ஆண்டில் தொடக்கச் செலவுக்கென ரூபாய் 2.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது.



14. தற்போதுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களைக் காலத்திற்கேற்ப மாற்றி அமைத்தலும் ஏ.வி.டி.எஸ். திட்டத்தை கோயம்புத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் அறிமுகப்படுத்துதலும்.

திட்டக் குழுவின் பரிந்துரைக்கேற்ப பல முக்கிய மாநிலங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட சில நிரந்தரமான தொழிற் பயிற்சி நிலையங்களை ஒருங்கிணைக்கும் பொருட்டு கோயம்புத்தூரில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத் தொழில் மேல் பயிற்சி திட்டத்தை ஆண்டு ஒன்றுக்கு 768 பயிற்சியாளர்களுக்கு முற்போக்கு தொழில்களில் பயிற்சி அளிக்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூபாய் 6.00 இலட்சம்.

15. நிர்வாகப் பணியாளர்களுக்கும் தேசியக் குழு வகுத்துள்ள பயிற்சி திட்டத்தை அமுல்படுத்தும் முறையில் தொழிற் பயிற்சி நிலையங்களை பலப்படுத்தல்.

தமிழ்நாட்டில் தொழிற் பயிற்சி நிலையங்களில் தற்போது உள்ள நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக்கை, தேசியக் குழுவிற்கு, மைய அரசால் வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட அளவிற்கும் குறைவாகவே உள்ளது. தொழிற் பயிற்சிக்கான தேசியக் குழு அமைத்துள்ள மாற்றி அமைக்கப்பட்ட வாழ்க்கைத் தொழிற் பயிற்சித் திட்டத்தை, தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு மட்டுமாவது செயல்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசின் இந்த ஆணையை கருத்தில் கொண்டு நிர்வாகப் பணியாளர்களின் இடையேயும், 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 3.00 இலட்சம் செலவில் இம்மாதிரியான பணியாளர் அமைப்புக்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

16. தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள உபயோகமில்லாத இயந்திரம் மற்றும் கருவிகளை மாற்றி அமைத்தல்.

1956 ஆம் ஆண்டு பெரும்பான்மையான தொழிற் பயிற்சி நிலையங்களில் 20 ஆண்டுகளுக்கு மேலாக, பழுதடைந்த இயந்திரங்கள் மாற்றப்படாமலேயே இருந்து வருகின்றன. மேலும் சில தொழில் பாடத் திட்டத்தை வேறு தொழிற் பாடத் திட்டத்துடன் இணைத்தும், மாற்றியும், 'கம்மியர்' தொழிற்

ருள்ளதால் இடநெருக்கடியாகவும் உள்ளது. இதனால், பயிற்சி தொடர்பான அறிவுரை வழங்கும் வகுப்புகளுக்கு வரும் தொழில் பழகுவோர் பயிற்சியாளர்களுக்கு போதிய இட வசதி செய்து கொடுக்க முடியவில்லை. ஆகையால், வட சென்னை தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆறு வகுப்பறைகளையும், தொழிற் பயிற்சி தொடர்பான அறிவுரை வழங்கும் மைய பணியாளர்களுக்கு தனி அறைகளும் 1981-82 ஆம் ஆண்டில், ரூபாய் 1.00 இலட்சம் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**19. அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர், தொழிற் பயிற்சி நிலையங்களில் மூன்று உற்பத்தி நிலையங்களைத் தொடங்குதல்.**

உற்பத்தி சார்ந்த பயிற்சித் திட்டம், பயிற்சியாளர், சுய வேலைவாய்ப்பில் ஈடுபடும்போது அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டுகிறது. இத்திட்டம் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள பூனா, கோலாப்பூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் கொடுக்கும் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 0.50 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**20. மேட்டூர் அணை திருச்சிராப்பள்ளியில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மாலை நேர வகுப்புகளைத் தொடங்குதல்.**

இத் திட்டத்தின்கீழ், தற்போது உள்ள நிலையங்களில் நடத்தப்படும் மாலை நேர தொழிலாளர் வகுப்புகள், முக்கிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளில், பணி புரியும் தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் இல்லை. இம் மாலை நேர வகுப்புகள், தொழிலாளர்களுக்கு தாங்கள் சார்ந்திருக்கும் தொழிலில் கொள்கை அளவிலான அறிவை வளர்க்கிறது. ஆகையால், வியாபார கொள்கை பற்றிய தொழில், படம் வரைதல், கணிதம் பற்றிய தொழில்களை, மேட்டூர் அணை, திருச்சிராப்பள்ளியில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 1.00 இலட்சம் செலவில், தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

21. மேலே சொல்லப்பட்ட, பலவகையான தொழில்களுக்கும், 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 29.18 இலட்சம் மொத்த நிதி ஒதுக்கம் தேவைப்படும். 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் மதிப்பீட்டில், இவ்வாறு தேவைப்படும் தொகையை ஒதுக்கீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.



**IV ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு வேலை கொடுத்தல்.**

தமிழ்நாடு மாநில திட்டக் குழு, இம்மாநிலத்தின் மக்கள் தொகையில் தோராயமாக கிராமப்புறப் பகுதியில் வசிக்கும் மக்களில் 62 சதவீதத்தினரும், நகரப் பகுதியில் வசிக்கும் மக்களில் 53 சதவீதத்தினரும் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்வதாக கணக்கிட்டுள்ளது. அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க தேவை ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. அவர்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள, உதவும் ஒரே வழி, ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு வேலை கொடுப்பதே ஆகும். வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழும் மக்களின், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கேனும் வேலை கொடுக்கும் திட்டம், ஒன்று பரிசீலனையில் உள்ளது.

ஆய்வுகள்.

**V. கோரிக்கை 55. பல்வகை மூலதன செலவு 495—ஏனைய சமூக சமுதாய நலப்பணிகள் குறித்து மூலதனச் செலவு—A ஏனைய சமூக சமுதாய நலப் பணிகள்.—AB வேலைவாய்ப்பு.**

கைவினைஞர்கள் பயிற்சித் திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக, கீழ்க்காணும் துணை திட்டப் பணிகள் குறித்த மூலதனச் செலவுக்காக, 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 23.98 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1. தொழில் பயிற்சி நிலையப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.

இம்மாநிலத்திலுள்ள 25 தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களில், தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு, நிலையான குடியிருப்புகள் உள்ளன. 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் பேட்டையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தின் மின் கம்பிகளை மாற்றி அமைக்கவும், செங்கல்பட்டில் உள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் ஒரு மேல்நிலை நீர்த் தொட்டி கட்டவும் ரூபாய் 2,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

2. தொழிற் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் விடுதி கட்டிடத்தைக் கட்டுதல்.

இம்மாநிலத்திலுள்ள 24 தொழில் பயிற்சி நிலையங்களில், நிலையான மாணவர் விடுதி கட்டிடங்கள் உள்ளன. 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1,000 அடையாள நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

பயிற்சித் திட்டமாக மாற்றியுள்ளதாலும், சில முக்கிய கருவிகளையும் சாதனங்களையும் மாற்றி அமைக்கவேண்டியது இன்றியமையாததாகிறது. 23 தொழிற் பயிற்சி நிலையங்களில், சில முக்கிய கருவிகள், சாதனங்கள், பற்றாக்குறையாக உள்ளன. முதற்படியாக, வட சென்னை, திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை ஆகிய இடங்களில் உள்ள நான்கு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 2.00 இலட்சம் செலவில் கருவிகளும், சாணை பிடிக்கும் இயந்திரமும் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளன.

### 17. மத்திய தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு, இளநிலை அதிகாரிகளை பயிற்சி பெறும் பொருட்டு முகமையில் அனுப்புதல்.

பயிற்சித் துறையில் தங்களைத் தாங்களே ஆழ்ந்த அனுபவமுள்ளவர்களாகவும், பயிற்சி முறைகள் தொழில் நுட்ப உத்திகள் போன்றவற்றை அறிந்து கொள்ளவும், ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் இளநிலை பயிற்சி அதிகாரிகள் மத்திய தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சி பெறுவதற்காக முகமையில் அனுப்பப்படுகிறார்கள். இவ்வாறு பயிற்சி பெறுவதற்காக புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களை, நேரடியாகப் பயிற்சிக்கனுப்பும் வகையில், 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 1.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 18. தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்.

#### (அ) அம்பத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் தொழிற் பயிற்சி தொடர்பாக அறிவுரை வகுப்பு மையங்களை அமைத்தல்.

தற்போது அம்பத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் வாழ்க்கைத் தொழிற் பயிற்சித் திட்டத்தின்கீழ், பயிற்சி பெறுவதற்காகவுள்ள இடவசதி, முறையே 352, 1,024, 1,016 ஆகும். மேலும், அத் தொழிற் பயிற்சி நிலையங்களில் வாழ்க்கை தொழிற் பயிற்சி சிறப்புத் தொழிலாளர்களுக்கு மாலை நேர வகுப்புகள் மாநிலச் சிறப்புத் திட்டங்கள் போன்ற சிறப்புப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சி நிலையங்களில், தொழில் பழகுவோர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை முறையே 318, 392, 618 ஆகும். இரண்டாவது கட்டமாக, தொழிற் பயிற்சி பழகுவோர் திட்டத்தின்கீழ், அம்பத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் தொழிற் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் சிறப்பு நிலையங்களை 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 1.94 இலட்சம் செலவில் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.



#### (ஆ) தாராபுரத்தில் தொழில் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் நிலையத்தை அமைத்தல்.

கோயம்புத்தூரில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சியாளர்களின் கூட்டம் அதிகமாக இருப்பதாலும், தொழில் பழகுவோர் உணவிற்கு தங்களுடைய செலவினங்களை தங்களுக்குக் கொடுக்கப்படும் உதவிப் பணத்தைக் கொண்டு சரிக்கட்ட முடியாத நிலையில் இருப்பதாலும், தாராபுரத்தில் ஒரு தொழிற் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் நிலையத்தை பின்வரும் பணியாளர்களைக் கொண்டு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| 1. தொழிற் பழகுவோர் உதவி ஆலோசகர் (இளநிலை) | 1 |
| 2. பயிற்சி உதவி அதிகாரி | 1 |
| 3. பகுதி நேர பயிற்சியாளர் | 3 |
| 4. இளநிலை உதவியாளர்/தட்டச்சர் | 1 |

1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

#### (இ) கடலூரில் தொழிற் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் நிலையத்தை பலப்படுத்துதல்.

வேலைப்பளு அதிகமாக இருப்பதால், இந்த நிலையத்தின் தலைவர், தற்போது தொழிற் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் வகுப்புகளை தகுந்த முறையில் மேற்பார்வையிட முடியவில்லை. மேலும் அவர் தனது வட்டாரத்தில் உள்ள 29 நிறுவனங்களில் நிறைவேற்றப்பட்டுவரும், தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டத்தையும், பார்வையிட வேண்டியுள்ளது. எனவே, அவரது வேலை பளுவை சிறிதளவு குறைக்கவும், பயிற்சியின் தரத்தை உயர்த்தவும், 1981-82 ஆம் ஆண்டிலே ஒரு தொழில் பழகுவோர் உதவி ஆலோசகர் பதவியை ஏற்படுத்த (இளநிலை) ஒப்புதல் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

#### (ஈ) வட சென்னையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் ஒரு தனி வகுப்பறை கட்டுதல்.

வட சென்னை தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ள வகுப்பறைகள் கைவினைஞர் திட்டத்தின்கீழ் தொழிற் பயிற்சி பயில்வோர்களுக்கு போதுமானதாக இல்லாமலும் தற்போது அதிக அளவில் பயிற்சி பெறுவோர் சேர்ந்

### 3. தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்.

கிண்டி தொழிற் பயிற்சி நிலையத்தில் தேவையான கருவிகள் தளவாடங்கள் வாங்குவதற்காகவும் அடிப்படை பயிற்சி வசதிகள் செய்து கொடுக்கவும், 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 50,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### 4. மேலும் பல்வகைத் தொழில் பயிற்சிகளை அறிமுகப்படுத்துதல்.

இரண்டாம், மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழில் பயிற்சி நிலையங்களில்/மையங்களில் தொடங்கப்பட்ட சில தொழில்களுக்கு மக்கள் ஆதரவு அவ்வளவாகக் கிடைக்கவில்லை. குறிப்பிட்ட பகுதியில் அத்தொழில்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காததே இதற்குக் காரணமாகும். இதன் விளைவாக, இத்தொழில்களில் சேருவதற்கு மாணவர்கள் முன் வரவில்லை. தொழில் பயிற்சி வசதிகள் வீணாவதைத் தடுக்கும் பொருட்டும், ஒவ்வொரு தொழில் பயிற்சி நிலையத்திலும் அனுமதிக்கப்பட்ட இடங்கள் முழுவதையும் பயன்படுத்தவும், மக்களிடையே குறைந்த ஆதரவு பெற்ற தொழில்களை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக அதிக வேலைவாய்ப்பளிக்கும் தொழில்களை புதிதாகக் கொண்டு வருவதன் மூலம் பல்வகைத் தொழிற் பயிற்சிகளை அறிமுகப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1970-71 முதல் 1975-76 வரையில், தமிழ்நாட்டில் தற்போதுள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் உள்ள 768 இடங்கள் இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டன. கோயம்புத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தற்போது பொருத்துநர் (ஃபிட்டர்) தொழிலில் உள்ள 82 இருக்கைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு, மக்கள் ஆதரவு பெற்ற கம்மியர் (குளிர் பதனம்-சீர்வளி வசதி) தொழிலுக்காக அவை ஒதுக்கப்பட்டு, 16 பயிற்சி பெறுபவர்களுக்கு ஒரு பிரிவு என்ற வீதத்தில், இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, 1978 ஆகஸ்ட் மாதம் முதல் அப்பிரிவுகளில் மாணவர்கள் சேர்ந்து பயிற்சி பெற அரசு அனுமதி வழங்கியது. ஒப்பளிக்கப்பட்ட ரூபாய் 8.00 இலட்சத்திலிருந்து, வெவ்வேறு தொழில் பயிற்சி நிலையங்களில் முக்கியமாக நாகப்பட்டிணம், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள, குறைந்த ஆதரவு பெற்ற தொழிலான பொருத்துநர் (ஃபிட்டர்) தொழிலுக்கு பதிலாக மூன்று புதிய மூக்கிய தொழில்களாகிய, கம்மியர் (வானொலி மற்றும் தொலைக்காட்சி), கம்மியர் (குளிர்பதனம்-சீர்வளி வசதி), கம்பியில்லாத தந்தி இயக்குபவர், தொழில்களை 1981-82 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தும் வகையில், கருவிகள், சாதனங்கள் வாங்க ரூபாய் 2,69,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கட்டிடம் கட்டும் பொருட்டு ரூபாய் 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



### 5. சாதனங்கள் வாங்குதல்.

பல்வேறு தொழில்களுக்காக மத்திய அரசு வரையறுத்த கருவிகள், சாதனங்கள் குறித்த தரப்பட்டியலைத் திருத்தியமைத்ததனால் கம்மியர் (மோட்டார் வாகனங்கள்), கம்மியர் (குளிர் பதனம்-சீர்வளி வசதி), கருவிகளும், சாதனங்களும் வாங்க வேண்டியுள்ளது. இதற்காக 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 23,000 மதிப்புடைய பற்றவைக்கும் சாதனம் வாங்க நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### 6. தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல்.

1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சாட்டியச் செலவின்கீழ் ரூபாய் 1,000 அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழிற் பயிற்சி நிலையங்களில் பழுதடைந்த விசையின் இணைப்புகள், பழுதடைந்த மின் பம்புகள் போன்றவற்றை மாற்றி அமைக்கும் பொருட்டும், மேல்நிலை நீர்த்தொட்டிகள் கட்டும் பொருட்டும் 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 77,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர, பராமரிப்பு மேற்பார்வையாளர்களின் பயனுக்காக, கருவிகள், சாதனங்கள் வாங்க, 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 5,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### 7. கம்மியர் தொழில் (பொது மின்னணுவியல்) பயிற்சி.

கம்மியர் (பொது மின்னணுவியல்) தொழில் பயிற்சி அளிப்பதற்காக அடையாறு மின்னணுக் கருவிகள் தொழில் வளாகத்தில் தொழில் பயிற்சிப் பிரிவு ஒன்று 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. சுற்றுப்புற வசதிகள் பயிற்சி பெறுபவர்களுக்கு தேவைப்படுமாதலால் இப்பிரிவு அடையாறு மின்னணுக் கருவிகள் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. புதிதாகத் தொடங்கப்பட்ட இப் பிரிவிற்குத் தேவைப்படும் இயந்திரமும், சாதனமும் வாங்குவதற்காக, 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 10,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**8. தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் நவீன வசதிகள் செய்து கொடுத்தல்.**

8.1. நவீனக் கருவிகளை அதிகமாகப் பயன்படுத்துவது தொழில் நுட்பவியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவற்றைக் கருதி, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் அனைத்து நாடுகள் தொழிலாளர் அமைப்பின் உதவியுடன், அம்பத்தூர் தொழில் பயிற்சி நிலையத்தில், வாழ்க்கை தொழில் பழகுவோர் மேம்பாட்டுப் பயிற்சிப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. 'ஏ.வி.டி.எஸ்.' (Advanced Vocational Training System) இத்திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் தொழில்கள் அம்பத்தூரில் தொடங்கப்பட்டுள்ளன :—

(1) இந்தியத் தர நிர்ணயம், பொறியியல் வரைப்படங்கள் வரைதல்.

(2) பற்றவைப்போர் சிறப்புப் பயிற்சி.

(3) கருவி மற்றும் அச்சுவார்ப்பவர்.

(4) கம்மியர் (பராமரிப்பு).

(5) கம்மியர் (மின்சாரப் பராமரிப்பு):

8.2. இதுவரை 70 தொழில் நிறுவனங்களிலிருந்து அனுப்பப்பட்ட 494 தொழிலாளர்கள், மேற்கூறிய தொழில்களில் பயிற்சி பெற்றுள்ளனர். கட்டிடங்கள் கட்டுவதற்கான 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 2,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நவீனப்படுத்தப்பட்டுள்ள திட்டத்தை, அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் செயல்படுத்தும் பொருட்டு இயந்திரங்கள் மற்றும் தளவாடப் பொருள்கள் வாங்கவும், மேலும் வேலூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் இரண்டு தோல் சம்பந்தப்பட்ட தொழிலை ஆரம்பிக்கவும், 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1,00,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**9. கிராம இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம்.**

9.1. கிராமங்களிலுள்ள கைவினைஞர்களுக்குப் பல்வேறு தொழில்களில், குறுகிய கால அளவில் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பயிற்சித் திட்டம், உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14 ஆம் தேதியிலிருந்து 19 தொழிற் பயிற்சி நிலையங்களில், 11 கைவினைத் தொழில்களில் பயிற்சி அளிக்கும் வகையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இத் திட்டம், கிராமப்புற கைவினைஞர்களின் கைத்திறனை வளர்த்து, அவர்கள் தொழிலை மேலும் செவ்வனே செய்ய உதவி செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இது வரையில், பயிற்சி அற்றவர்களாக உள்ள கைவினைஞர்களுக்குக் கைத் தொழில் பயிற்சி அளிப்பதையும், இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதனால், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பகுதிகளில், தேவைப்படும் தொழில்களில் கைத்திறனை மேம்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

9.2. இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டதாலும் கிராமப் பகுதியிலுள்ள இளைஞர்களிடையே இத்திட்டத்திற்கு நல்ல ஆதரவு கிட்டியுள்ளதாலும், 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் 10 தொழிற் பயிற்சி நிலையங்களில் தற்போது அளிக்கப்பட்டுவரும் பகுதி நேரப் பயிற்சித் திட்டத்தை ரூபாய் 41.63 இலட்சம் செலவில் முழுநேர பயிற்சித் திட்டமாக மாற்றி அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் பணிமனைகள், விடுதிகள், குடியிருப்பு வசதிகளுடன் கூடிய விடுதிகள் போன்றவற்றைக் கட்ட 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 17.13 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர, இத்திட்டத்தை செயல்படுத்த தேவைப்படும் கருவிகள், சாதனங்கள், மேசை நாற்காலிகள் போன்றவற்றை வாங்க ரூபாய் 1.43 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்.**

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (தமிழக அரசைச் சார்ந்தது) 1956 ஆம் ஆண்டின் வணிக நிறுவனச் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ந் தேதி அன்று நிறுவப்பட்டது. இந் நிறுவனம் ரூபாய் 50 லட்சத்தை அங்கீகரிக்கப்பட்ட மூலதனமாகக் கொண்டுள்ளது. இத்தொகையில் இதுவரை ரூபாய் 10 இலட்சம் இந் நிறுவனத்திற்கு வழங்கப் பெற்றுள்ளது. இந் நிறுவனத்தின் நோக்கங்கள் : (1) வெளி நாட்டில் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவது, (2) வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களால் சேமித்து அனுப்பிவைக்கப்பெறும் தொகையினை முதலீடு செய்வது, (3) இந்தியாவிலும் வெளிநாட்டிலும் கூட்டுத் தொழிற் நிறுவனங்கள் நிறுவுவது, (4) இந்தியப் பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவது ஆகியவையாகும். இந்நிறுவனம் தன் மூலமாகத் தேர்வு

செய்யப் பெற வேண்டிய அனுபவமும் பல்வேறு தொழிலில் திறமை வாய்ந்தவர்களின் புள்ளிவிவரத் தொகுப்பு ஒன்றை அமைத்துள்ளது. 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28 ஆம் நாள் வரை இவற்றில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 2,903 ஆகும். இந்நிறுவனம் ஐக்கிய அரபு குடியரசு, ஈராக் ஆகிய நாடுகளுக்கு 106 பணியாளர்களை அனுப்பி வைத்துள்ளது. அவர்கள் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக ரூ. 16 இலட்சம் அன்னியச் செலாவணியாகக் கிடைக்குமென்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 102 பேர்களை இந் நிறுவனத்தின் மூலமாக ஈராக் நாட்டில் பணிபுரிய அனுப்பும் முன்னேற்பாடுகள் முடிவுறும் நிலையில் உள்ளன. இந்நிறுவனம் மேலும் 120 தொழிலாளர்களை ஈராக் நாட்டிற்கு அனுப்ப தேர்வு செய்வதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறது.

# Index to Tamil Nadu Legislative Council Debates

FIFTY-NINTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

VOLUME CLXXIX (Nos. 1 to 4)

25th and 27th to 29th April 1981.

## A

| | PAGES |
|---|---|
| ADJOURNMENT MOTION *re*— | |
| Balasevikas, picketing by—on 27th April 1981 ... | 379—382 |
| Clash among the general public in Virudhachalam and non-plying of Buses ... ... ... | 20—26 |
| Clash between two groups of merchants in Kalugumalai ... ... ... ... ... | 241—242 |
| Co-operative loans, collection from agriculturists in Kanyakumari and other drought-hit districts ... | 85—95 |
| Kalaimani Middle School, Madurai, demolition of building of ... ... ... ... ... | 29—30 |
| AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959— | |
| Control over purchase and sale of tapioca chips, flour and starch and its by-products in South Arcot District, notification laid on the table ... ... | 62 |
| AGRICULTURAL PRODUCE MARKETS RULES, 1962— | |
| Amendment to—, notification laid on the table ... | 464 |
| AGRICULTURE— | |
| Policy Note on—, 1981-82, laid on the table ... | 166 |
| AGRICULTURE DEPARTMENT— | |
| Performance Budget, 1981-82, laid on the table ... | 166 |

## C—*cont.*

CHAIRMAN, MR.—*con*.

Adjournment Motion *re—cont*.

PAGES

Clash between two groups of merchants in Kalugumalai ... ... ... ... 241, 242

Co-operative loans, collection from agriculturists in Kanniyakumari and other drought-hit districts ... 85, 87, 88, 95

Kalaimani Middle School, Madurai, demolition of building of ... ... ... 27, 28, 30

Bill—Town and Country Planning (Amendment) Bill, 1981 ... ... ... 41

Policy Note on Education discussion on ... ... 99, 142, 143, 147, 148, 149, 159, 151, 153, 154, 156, 165, 254, 255, 266, 268, 269, 326, 345

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... 387

Question Hour, dispensation with ... ... 240

CHIDAMBARAM CO-OPERATIVE MILK SUPPLY UNION—

*See* Co-operative Societies

COLLEGES—

Question *re* Professors in Siddha in College of Indian Medicine, Palayamkottai, number of posts not filled up ... ... ... 82—84

COMMITTEES—

Estimates Committee, action taken on recommendations of—contained in its report on Fire Service, 1980-81, laid on the table ... ... ... 62



## C—*cont.*

PAGES

COMMUNITY WELLS—

Question *re* number of—in Tamil Nadu and number of—proposed to be dub ... ... ... 238—239

CO-OPERATIVE SOCIETIES—

Losses incurred and non-recovery of dues by Chidambaram Co-operative Milk Supply Union, Minister's attention called to ... ... 383—385

## D

DAMODARAN, THIRU A. R.—

Bill—Town and Country Planning (Amendment) Bill, 1981 ... ... ... ... 41, 51, 53—54

Policy Note on Education, discussion on ... 121, 122, 277—285, 327

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... 387—393

DEPUTY CHAIRMAN, MR.—

Bill—Town and Country Planning (Amendment) Bill, 1981 ... ... ... ... 44, 61

Policy Note on Education, discussion on ... ... 315, 321

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... 401, 435

Policy Note on Labour in Tamil Nadu, discussion on 447, 450, 460

DOSS, THIRU A. J.—

Policy Note on Education discussion on ... ... 157—106

A—*cont.*


[illegible] PAGES

AIR SERVICE—

Question *re* provision of—between short distances in the State ... ... ... ... ... 374—376

ANANDAM, THIRU V. V. V.—

Policy Note on Education, discussion on ... 269—271

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... 393—397

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—

Adjournment motion *re* Kalaimani Middle School, Madurai, demolition of building of ... ... 29—30

Festival Advance for Christmas to teaching and non-teaching staff in aided High Schools and Higher Secondary Schools in Virudhunagar Educational District, statement *re* ... ... ... 97, 98

Policy Note on Education, discussion on ... ... 99, 118, 316, 327—348

Tamil Nadu Private School Teachers Association, statement *re* dharna staged by—in front of Directorate of School Education protesting against victimisation of teachers of Minority Schools ... 224—245

Tamil Nadu Public Library Employees' Union, statement *re* Demand Week observed by ... ... 34,35

Teachers in Aided Schools, statement *re* loss in emoluments due to delay in re-fixation of pay of 385, 386

Teachers of Bains Memorial Baptist Church Matriculation School, statement *re* termination of services of many ... ... ... ... ... 243

Trained Graduate B.T. Teachers, eligible for appointment as Headmasters of Middle Schools, statement *re* denial of rights under G.Os. Nos. 1297 and 1298, dated 21st July 1979 ... ... ... 33, 34




A—*cont.*


PAGES

ARUMUGAM, THIRU S.—

Policy Note on Education, discussion on ... 290

Policy Note on Labour in Tamil Nadu, discussion on 454, 459

ARUNACHALAM, THIRU K.—

Policy Note on Education, discussion on ... ... 160—166

B

BALASEVIKAS—

Adjournment motion *re* picketing by—on 27th April 1981 ... ... ... 379—382

BILL—

Town and Country Planning (Amendment) Bill, 1981—Considered and passed ... ... ... 41—61

BOOKS AND PUBLICATIONS—

Question *re* Text Books for Higher Secondary Classes, payment of Rs. 10 and Rs. 2 per page for writing in English and translating in Tamil respectively ... 13—14

BUSINESS OF THE HOUSE—

Change in the order of ... ... ... ... 30

Question Hour, dispensed with on 28th April 1981 240

Transaction of Government Business on a Private Members' day ... ... ... ... 39—40

C

CEMENT—

Question *re* fixation of charges for transport of—from production centres to distribution centres ... 19—20

CHAIRMAN, MR.—

Adjournment motion *re*—

Balasevikas, picketing by—on 27th April 1981 379 382

Clash among the general public in Virudhachalam and non-plying of buses ... ... ... [illegible]

E

PAGES

EDUCATION—

Performance Budget on School Education, Collegiate Education and Technical Education, 1981-82 (English), laid on the table ... ... 62

Policy Note on—, discussion on ... ... 99—166, 245—348

Policy Note on—, laid on the table ... ... 62

ELEPHANTS—

Question *re* number of—shot dead in Dharmapuri district Reserve Forests during the last six months 359—362

EMPLOYMENT AND TRAINING—

'Department of—marches ahead', laid on the table 166

F

FESTIVAL ADVANCE—

*See* Loans and Advances

FIRE ENGINES—

Question *re* number of—in each Fire Station in South Arcot district as on 1st June 1980, number under disrepair and period for which not repaired ... 1—3

FIRE SERVICE—

Action taken on recommendations of Estimates Committee contained in its report on—land on the table 62

FIRING—

Question *re*—in Kadambathur cinema theatre in September 1980, action taken on ... ... 3—5

FISHERIES—

Performance Budget on—1981—82, land on the table ... ... ... ... ... 349

Policy Note on—, 1981-82, laid on the table ... 349



PAGES

FOOD—

Policy Note on—situation in Tamil Nadu, laid on the table ... ... ... ... ... 349

FOOD SITUATION IN TAMIL NADU—

Policy Note on—, discussion on ... ... ... 387—439

FOSTER CARE UNITS—

Question *re* number of—in Tamil Nadu as on 1st January 1981 and amount of grants received by ... 368—370

G

GOMATHI SRINIVASAN, THE HON THIRUMATHI—

Adjournment motion *re* Balasevikas, picketing by—on 27th April 1981 ... ... ... ...381—382

GOVERNMENT RAJAH MIRASDAR HOSPITAL, THANJAVUR—

*See* Hospitals and dispensaries.

H

HANDLOOM WEAVERS—

Fast strike and dharna observed by—of Sankarankoil, Minister's attention called to ... ... ... 35—37

HARIJAN COLONY—

Gutting of hundred huts in—near Aralvaimozhi, Thovalai Taluk, Kanyakumari District, Minister's attention called to ... ... ... 31—32

HEADMASTERS AND HEADMISTRESSES OF HIGH SCHOOLS UNDER LOCAL BODIES—

*See* Teachers.

HIGH SCHOOLS UNDER LOCAL BODIES—

*See* Schools.

PAGES

HOSPITALS AND DISPENSARIES—

Question *re*—

Government Hospital, Tindivanam, improvement of—by organisation of Blood Bank and construction of new post-mortem theatre and out-patient ward ... 80—82

Government Rajah Mirasdar Hospital, Thanjavur, 24 Hours fracture service in ... ... 364

J

JANARTHANAM, DR. T. R.—

Bill—Town and Country Planning (Amendment) Bill, 1981. ... ... ... ... ... 364, 51—52

Policy Note on Education, discussion on ... ... 116, 165, 245—255

Policy Note on Food situation in Tamil Nadu discussion on ... ... ... ... ... 411

Policy Note on Labour in Tamil Nadu, discussion on 447

K

KRISHNASWAMI, THE HON. THIRU K. A.—

Chidambaram Co-operative Milk Supply Union, statement *re* losses incurred and non-recovery of dues by ... ... 383—385

Strike by employees of Tamil Nadu Dairy Development Corporation Limited, statement *re* ... ... 96—97

L

LABOUR—

Policy Note on—in Tamil Nadu, 1981-82, laid on the table ... ... ... ... 166

LABOUR IN TAMIL NADU—

Policy Note on—, discussion on ... ... ... 439—464

LAKSHMIKANDHAN, THIRU C. R.—

Adjournment Motion *re*—

Balasevikas, picketing by—on 27th April 1981 ... 379—380



PAGES

LAKSHIMIKANDHAN, THIRU C. R.—cont.

Adjournment Motion *re—cont.*

Clash among the general public in Virudachalam and non-plying of buses ... ... ... 22

Chidambaram Co-operative Milk Supply Union, calling Minister's attention to losses incurred and non-recovery of dues by ... ... ... ... 383, 384

Policy Note on Education, discussion on ... ... 116, 256—269, 289—290, 303

Policy Note on Labour in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 439—441

Strike by employees of Tamil Nadu Dairy Development Corporation Limited, calling Minister's attention to ... ... ... ... 96—97

LAW AND ORDER—

Question *re* firing in Kadambathur Cinema Theatre in September 1980, action taken on ... ... 3—5

LEGISLATORS HOSTEL—

Rules to be observed by visitors to—and for accommodation in ... ... ... 37—38

LIBRARIES—

Demand Week observed by Tamil Nadu Public Library Employees Union, Minister's attention called to ... ... ... 34—35

LOANS AND ADVANCES—

Adjournment motion re Co-operative Loans, collection from agriculturists in Kanyakumari and other drought-hit districts ... ... 85—95

Festival Advance for Christmas to teaching and non-teaching staff in aided High Schools and Higher Secondary School in Virudhunagar Educational District, Minister's attention called to non-payment of ... ... 97—98

## M

PAGES

MANDAKINI KRISHNAMURTHI, THIRUMATHI—

Bill—Town and Country Planning (Amendment) Bill, 1981 ... ... ... ... 42—44

Policy Note on Education, discussion on ... ... 271—276

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... 410—411

MANICKAM, THIRU P.—

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... 411—413, 434—435

Policy Note on Labour in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 442—444

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—

Chidambaram Co-operative Milk Supply Union, calling attention to losses incurred and non-recovery of dues by ... ... ... 383—385

Festival advance for Christmas to teaching and non-teaching staff in aided High Schools and Higher Secondary School in Virudhunagar Educational District, calling attention to non-payment of ... 97—98

Gutting of hundred huts in Harijan Colony called Azhagia Nagar near Aralvaimozhi, Thovalai taluk, Kanyakumari district, calling attention to ... 31—32

Handloom Weavers of Sankarankoil, calling attention to fast, strike and dharna observed by ... 35—37

Strike by employees of Tamil Nadu Dairy Development Corporation Limited, calling attention to ... 96—97

Tamil Nadu Private School Teachers Association, calling attention to dharna staged by—in front of Directorate of School Education protesting against victimisation of teachers of minority schools ... 244—245

Tamil Nadu Public Library Employees Union, calling attention to Demand Week observed by ... 34—35

## M—cont.

PAGES

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—cont.

Teachers in Aided Schools, calling attention to loss in emoluments due to delay in refixation of pay of 385—386

Teachers of Bains Memorial Baptist Church Matriculation School in Vepery High Road, Madras, calling attention to termination of services of many ... ... ... ... ... 243

Trained Graduate B.T. Teachers eligible for appointment as Headmasters of Middle Schools, calling attention to denial of rights under G.Os. Nos. 1297 and 1298, dated 21st July 1979 ... 32—34

MEDICAL COLLEGE(S)—

Question re number of Backward Classes and Scheduled Caste candidates selected for admission in—for the year 1980 ... ... ... ... 239

MEDICAL OFFICERS—

Question re Panchayat Union—Association, Thanjavur, representation from ... ... 363

MEENAKSHISUNDARAM, THIRU K.—

Adjournment motion re—

Balasevikas, picketing by—on 27th April, 1981 380—381

Clash between two groups of merchants in Kalugumalai ... ... ... ... ... 241

Kalaimani Millde School, Madurai, demolition of building of ... ... ... ... 27—29

Business of the House, transaction of Government business on a Private Members day ... ... 39, 04

Policy Note on Education, discussion on ... ... 134—151

Tamil Nadu Private School Teachers Association, calling Minister's attention to dharna staged by—in front of Directorate of School Education protesting against victimisation of teachers of Minority Schools ... ... ... 244—245

PAGES

MEENAKSHISUNDARAM, THIRU K.—*cont.*

Tamil Nadu Public Library Employees Union, calling Minister's attention to Demand Week observed by ... ... ... ... 34—35

MIDDAY MEALS SCHEME—

Question *re* Districts in which—implemented and districts to which it is proposed to be extended ... 14—16

MONEY-LENDERS RULES, 1959—

Amendment to—, notification laid on the table ... 464

MOTOR VEHICLES RULES, 1940—

Amendment to—, notification laid on the table ... 166

MUNICIPAL SERVANTS CONDUCT RULES, 1979—

Making of—, notification laid on the table ... ... 464

MUTHUSWAMY, THIRU S.—

Policy Note on Education, discussion on ... ... 111—127, 157

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... 401—405

Policy Note on Labour in Tamil Nadu, discussion on 463, 464

N

NALLASIVAN, THIRU A.—

Adjournment motion *re* clash among the general public in Virudhachalam and non-plying of buses 21—22, 26

Handloom Weavers of Sankarankoil, calling Minister's attention to fast, strike and dharna observed by ... 35—36, 37

NEDUNCHEZHIYAN, THE HON. DR. V. R.—

Policy Note on Education, discussion on ... 134—151
sion on ... ... ... ... ... ... 387
419—439



PAGES

PALLAVAN TRANSPORT CORPORATION—

*See* Transport

PANCHAYAT UNION MEDICAL OFFICERS' ASSOCIATION—

*See* Medical Officers

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Agriculture Department, Performance Budget, 1981-82, ... ... ... ... 166

Agricultural Produce Markets Act, 1959—

Control over purchase and sale of tapioca chips, flour and starch and its by-producats in South Arcot District [G.O. Ms. No. 2357, Agriculture, dated 11th December 1980] ... 62

Agricultural Produce Markets Rules, 1962, amendment to—(G.O. Ms. 627, Agriculture, dated 23rd March 1981) ... ... ... 464

Books and Publications—

'Department of Employment and Training Marches ahead' ... ... ... 166

Committees—Estimates Committee, action takes on recommendations of—contained in its report on Fire Service (1980-81) ... ... ... 62

Fisheries Performance Budget, 1981-82 ... ... 349

Money Lenders Rules, 1959, amendment to—(G.O. Ms. No. 347, Revenue, dated 7th February 1981) ... ... ... 464

Motor Vehicles Rules, 1940, amendment to—(G.O. Ms. No. 218, Home, dated 3rd February 1981) 166

Municipal Servants Conduct Rules, 1979, making of—(G.O. Ms. No. 970, Rural Development and Local Administration, dated 20th June 1980) ... 464

PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Policy Note on Agriculture, 1981-82 ... ... 166

Policy Note on Education ... ... ... 62

Policy Note on Food Situation in Tamil Nadu ... 349

Policy Note on Food Situation in Tamil Nadu ... 349

Policy Note on Labour in Tamil Nadu, 1981-82 ... 166

Policy Note on Road Transport Services and Shipping (Tamil and English) ... ... 349

Policy Note on Urban Development in Tamil Nadu 1981-82 ... ... ... 62

Port Department, Performance Budget, 1981-82 ... 465

Questions and Answers—

Answers to Unstarred Questions 13 to 17 ... 350—351

School Education. Collegiate Education and Technical Education, Performance Budget, 1981-82 ... 62

Town and Country Planning Act, 1971—

Approval of detailed development Plan for Chepauk area. Triplicane (G.O. Ms. No. 915, Housing and Urban Development, dated 17th July 1980) 62

Transport and Shipping Corporations, Note on Review of Performance of ... ... 349

Universities—

Perarignar Anna University of Technology Narayanaswamy, Thiru K. Chief Engineer (General) Electricity Board, Tamil Nadu, nomination of—as a Member of Academic Council with effect from 31st March 1981 in the place of retiring Chief Engineer (G.O. Ms. No. 569, Education, dated 31st March 1981) ... ... ... ... 349




P—*cont.*


PHYSICALLY HANDICAPPED STUDENTS—

Question *re* extension of free bus pass facility to—in Pallavan Transport Corporation buses ... 376—377

PAGES

POLICE—

Adjournment motion *re*—

Clash among the general public in Virudhachalam and non-plying of buses ... ... ... 20—26

Clash between two groups of merchants in Kalugumalai ... ... 241—242

POLICY NOTE ON—

Agriculture, 1981—82, laid on the table ... ... 166

Education—

Discussion on ... ... ... ... 99—166, 245—348

Laid on the table ... ... ... ... 62

Food situation in Tamil Nadu, discussion on ... 387—439

Labour in Tamil Nadu, Discussion on ... 439—464

Labour in Tamil Nadu 1981-82, Laid on the table ... ... ... ... ... 166

Urban Development in Tamil Nadu, laid on the table ... ... ... ... ... 62

POLLUTION—

Question *re* action against Sugar Industries, Breweries, Leather Tanneries and other Industries concerned to prevent—of nearby rivers, canals and environment by effluents ... ... ... ... 73—80

PONNAIYAN, THE HON. THIRU C.—

Adjournment motion re Co-operative loans, collection from agriculturists in Kanyakumari and other drought-hit districts ... ... ... 90—95

PORT DEPARTMENT—

Performance Budget on—, 1981-82, laid on the table ... ... ... ... ... 465

PAGES

QUESTIONS AND ANSWERS—

Answers to Unstarred Questions Nos. 13 to 17, laid on the table ... ... ... 350—351

ARUMUGAM, THIRU S.—

Question *re* Dharmaraja and Drowpathiamman Temple, Attur, impediments to celebration of Agui festival in ... ... 355—358

DAMODARAN, THIRU A. R.—

Question *re*—

Cement, fixation of charges for transport from production Centres to distribution Centres 19—20

Foster Care Units in Tamil Nadu number as on 1st January 1981 and amount of grants received by ... ... ... ... ... 368—370

LAKSHMIKANDHAN, THIRU C. R.—

Question *re*—

Community Wells in Tamil Nadu, number of—district-wise, and number of—proposed to dig. 238—239

School Committees in Private Schools, constitution of ... ... ... 9—12

Sugar Factory, establishment of—in Thanjavur district ... ... ... ... ... ... 17—19

Vivekananda Rock Memorial, Kanyakumari, ferry service to ... ... ... 377—379

LEELAVATHI, SELVI A.—

Question *re* School Committee in Private Schools, constitution of ... ... ... 9—12

MEENAKSHISUNDARAM, THIRU K.—

Question *re*—

Specialist Teachers, viz., Drawing Masters and Craft Instructors, regulation of service of—from the date of their joining duty as in the case of Graduate Teachers and Secondary Grade Teachers ... ... ... 6—8

Unemployed B.T. Teachers, number of ... 237—238



QUESTIONS AND ANSWERS—*cont.*

PAGES

MUTHUSAMY, THIRU S.—

Question *re* Midday Meals Scheme, districts in which implemented and districts to which it is proposed to be extended ... ... 14—16

RAMAMOORTHY, THIRU K.—

Question *re*—

Admission in Medical Colleges in 1980, number of Backward Class and Scheduled Caste candidates selected for ... ... 239

Fire engines in South Arcot District, number of—as on 1st June 1980, number under disrepair and period for which not repaired .. 1—3

Government Hospital, Tindivanam, improvement of—by organisation of Blood Bank and construction of new Post-mortem theatre and out-patient ward ... ... ... ... 73—80

Pollution of rivers, canals and environment by effluents; action against Sugar Industries, Breweries, Leather Tanneries and other Industries concerned ... ... ... 73—80

Roads undertaken for repair, number of unfinished—as on 15th June 1980 ... 239

Sandalwood oil produced by Public and Private Sectors in the State, quantity of ... 370—372

SANKARALINGAM, THIRU M.—

Question *re*—

Air Service between short distances in the State, provision of ... ... ... 374—376

Elephants shot dead in Dharmapuri district Reserve Forests during the last six months, number of ... ... ... ... 359—362

Q.—*cont.*


PAGES.

QUESTIONS AND ANSWERS—*cont.*

SANKARALINGAM, THIRU M.—*cont.*

Question *re*—*cont.*

Firing in Kadambathur Cinema Theatre in September 1980, action taken on ... 3—5

Kanyakumari—Tirunelveli Railway Line, opening of traffic in ... ... ... ... 364—365

Section Officers in Public Works Department, non-regularisation of services of ... 365—367

Text Books for Higher Secondary Classes, payment of Rs. 10 and Rs. 2 per page for writing in English and translating in Tamil respectively ... ... ... 13—14

Thiruvazhimarban Temple at Thirupathisaram, Kanyakumari district, recovery and use of golden crown stolen from ... ... 358—359

SWAMINATHAN, THIRU G.—

Question *re*—

Government Rajah Mirasdar Hospital, Thanjavur 24 Hours fracture service in ... ... 364

Panchayat Union Medical Officers' Association, Thanjavur, representation from ... 363

Professors in Siddha in College of Indian Medicine, Palayamkottai, number of posts, not filled up ... ... ... ... 82—84

Pulavar and Tamil Pandits, registered in Employment Exchanges, number of—district-wise ... ... ... ... ... 240

Tamil Nadu Compulsory Rotatory Residents Interns Association representation from 363—364

THOMAS, THIRU P. R.—

Question *re*—

Headmasters and Headmistresses of High Schools under local bodies, implementation of two separate pay scales to—as in the case of their counterparts in Government High School based on strength of pupils ... 372—374




P—*cont.*


QUESTIONS AND ANSWERS—*cont.*

THOMAS, THIRU P. R.—*cont.*

PAGES.

Question *re*—

Physically handicapped students, extension of free bus pass facility to—in Pallavan Transport Corporation buses ... ... ... 376—377

School Committees in private schools, constitution of ... ... ... ... ... 9—12

Teachers in Dindigul Municipality, representations regarding Juniors getting more pay than Seniors ... ... ... ... 374

R

RAGHAVANANDAM, THE HON. THIRU S.—

Bill—Town and Country Planning (Amendment) Bill, 1981 ... ... ... ... ... 41, 46 59—60, 61

Handloom Weavers of Sankarankoil, statement *re* fast, strike and dharna observed by ... ... 36, 37

Policy Note on Labour in Tamil Nadu, discussion on 452—464

RAILWAY(S).—

Question *re* Kanyakumari—Tirunelveli Railway Line, opening of traffic in ... ... 364—365

RAJA MOHAMED, THE HON. THIRU K.—

Adjournment motion *re* clash among the general public in Virudhachalam and non-plying of buses 24—26

Business of the House, change in the order of ... 30

Business of the House, transaction of Government business on a Private Members day ... ... 39

## S


PAGES

SANDALWOOD OIL—

Question *re* quantity produced by Public and Private Sectors in the State ... ... ... 370—372

SANKARALINGAM, THIRU M.—

Adjournment motion *re* Co-operative loans, collection from agriculturists in Kanyakumari and other drought-hit districts ... ... ... 85, 86, 87—88

Bill—Town and Country Planning (Amendment) Bill, 1981 ... ... ... 53—56

Gutting of hundred huts in Harijan colony called Azhagia Nagar, near Aralvaimozhi, Thovalai Taluk, Kanyakumari District, calling Minister's attention to 31—32

Policy Note on Education, discussion on ... 152, 303—327

SCHOOLS—

Adjournment motion *re* Kalaimani Middle School, Madurai, demolition of building of ... 27—30

Question *re* School Committees in Private Schools, constitution of ... ... ... 9—12

SECTION OFFICERS IN PUBLIC WORKS DEPARTMENT—

Question *re* non-regularisation of services of ... 365—367

SEETHAPATHI, THIRU R. D.—

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... 413—418, 437, 438

Policy Note on Labour in Tamil Nadu, discussion on 441—442, 457, 458, 459, 460

SUGAR FACTORY—

Question *re* establishment of a—in Thanjavur district 17—19




## T


PAGES.

TAMIL NADU COMPULSORY ROTATORY RESIDENTS INTERNS ASSOCIATION—

Question *re* representation from ... ... 363—364

TAMIL NADU DAIRY DEVELOPMENT CORPORATION—

Strike by employees of—Minister's attention called to 96—97

TAMIL NADU PUBLIC LIBRARY EMPLOYEES UNION—

*See* Libraries

TARA CHERIAN, THIRUMATHI—

Bill—Town and Country Planning (Amendment) Bill, 1981 ... ... ... ... 44—45, 60

Policy Note on Education, discussion on ... 127—134

Policy Note on Labour in Tamil Nadu discussion on 441—442, 452, 453

TEACHERS—

Question *re*—

Headmasters and Headmistresses of High Schools under local bodies, implementation of two separate pay scales to—as in the case of their counterparts in Government High Schools based on the strength of pupils ... ... 372—374

Regularisation of services of Specialist—, viz., Drawing Masters and Craft Instructors from their date of joining as in the case of Graduate—and Secondary Grade ... ... ... 6—8

Representation by—of Dindigul Municipality regarding Juniors getting more pay than Seniors. 374

Text books for Higher Secondary classes, payment of Rs. 10 and Rs. 2 per page for teachers writing in English and translating in Tamil respectively ... ... ... ... 13—14

PAGES.

RAJA MOHAMMED THE HON. THIRU K.—

Gutting of hundred huts in Harijan colony called Azhagia Nagar, near Aralvaimozhi, Thovalai Taluk, Kanyakumari District, statement *re* ... ... 31—32

Legislators' Hostel, statement *re* rules to be observed by vistors to—and for accommodation in ... 31—32

Question Hour, dispensation with ... ... ... **240**

RAMALINGAM, THIRU C.—

Bill—Town and Country Planning (Amendment) Bill, 1981 ... ... ... ... 41, 42

Policy Note on Education, discussion on ... ... 151—157

RAMAMOORTHY, THIRU K.—

Adjournment motion re clash among the general public in Virudhachalam and non-plying of buses 22—24

Co-operative loans, collection from agriculturists in Kanyakumari and other drought-hit districts ... 89—90

Bills—Town and Country Planning (Amendment) Bill, 1981 ... ... ... 42, 45—50

Policy Note on Education, discussion on ... ... 286—289, 290—303, **345**

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... 406—409

Policy Note on Labour in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 444—446, **456**



PAGES

ROAD TRANSPORT—

Policy Note on—Services and Shipping (Tamil and English), laid on the table ... ... ... 349

ROADS—

Question *re* number of unfinished—, undertaken for reppair, district-wise ... ... ... 239

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—

Adjournment motion *re*—

Clash among the public of Vriddhachalam and non-plying of buses—Consent to raising of the matter withheud after the statement of the Leader of the House ... ... ... ... 20, 26

Clash between two Communities in Kazhugumalai—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House ... 241, 242

Collection of co-operative loans—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Law and Co-operation ... 85, 95

Demolition of the building of Kalaimani Middle School on Travellers' Bungalow Road, Madurai—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Education ... ... ... ... ... 27, 30

Picketing by Balasevikas on 27th April 1981 defying the prohibitory order—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Social Welfare ... ... ... 379, **382**

PAGES

TEACHERS—*cont*.

Question *re*—*cont*.

Unemployed B.T. Teachers, number of ... 237—238

Tamil Nadu Private School Teachers Association, Minister's attention called to dharna staged by—in front of Directorate of School Education protesting against victimisation of teachers in Minority Schools 244—245

Teachers in Aided Schools, Minister's attention called to loss of emoluments due to delay in refixation of pay of ... ... ... ... 385—386

Termination of services of many—of Bains Memorial Baptist Church Matriculation School in Vepery High Road, Madras, Minister's attention called to 243

Trained Graduate B.T. Teachers eligible for appointment as Headmasters of Middle Schools, Minister's attention called to denial of rights under G.Os. Nos. 1297 and 1298, dated 21st July 1979 ... 31—34

TEMPLE(S)—

Question *re*—

Dharmaraja and Drowpathiamman Temple, Attur, impedmients to celebration of Agni festival in 355—358

Thiruvazhimarban Temple at Thirupathisaram, Kanyakumari district, recovery and use of the gold crown stolen from ... ... 358—359

TEXT BOOKS FOR HIGHER SECONDARY CLASSES—

*See* Books and Publications

THOMAS, Thiru P. R.—

Festival Advance for Christmas to teaching and non-teaching staff in aided Higher Schools and Higher Secondary Schools in Virudhunagar Educational district, calling Minister's attention to non-payment of ... ... ... **97—98**



PAGES

THOMAS, Thiru P. R.—

Policy Note on Education, discussion on ... 99—111, 117

Teachers in Aided Schools, calling Minister's attention to loss in emoluments due to delay in refixation of pay of ... ... ... ... 385, 386

Teachers of Bains Memorial Baptist Chruch Matriculation School in Vepery High Road, Madras, calling Minister's attention to termination of services of many ... ... ... ... 243

Trained Graduate B.T. Teachers, eligible for appointment as Headmasters of Middle Schools, calling Minister's attention to denial of rights under G.Os. Nos. 1297 and 1298, dated 21st July 1979 ... ... ... ... 32, 33—34

TOWN AND COUNTRY PLANNING ACT, 1971—

Approval of detailed Development Plan for Chepauk area, Triplicane, notification laid on the table ... ... ... ... 62

TOWN AND COUNTRY PLANNING (AMENDMENT) BILL, 1981—

*See* Bills

TRANSPORT—

Question *re* Pallavan Transport Corporation, extension of free bus pass facility to physically handicapped students in ... ... ... 376—377

TRANSPORT AND SHIPPING CORPORATIONS—

Note on Review of—laid on the table ... ... 349

## U

| | PAGES |
|---|---|
| UNIVERSITIES— | |
| Perarignar Anna University of Technology, nomination of Narayanasamy, Chief Engineer (General), Electricity Board as a Member of Academic Council with effect from 31st March 1981, notification laid on the table ... ... ... ... | 349 |
| URBAN DEVELOPMENT— | |
| Policy Note on—in Tamil Nadu, 1981-82, laid on the table ... ... ... | 62 |

## V

| | |
|---|---|
| VALLIMUTHU, Thiru E. V. A.— | |
| Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... | 397—401 |
| VICE-CHAIRMAN (THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHY— | |
| Policy Note on Education, discussion on ... ... | 109 116. 121, 122 |
| VIVEKANANDA ROCK MEMORIAL, KANYAKUMARI— | |
| Question *re* plying of ferry service to ... ... | 377—379 |

Y211,32 N81 D
N82.179
122039